தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1982 மார்ச் 12, 13, 15 மற்றும் 16-ம் நாட்கள்.

தொகுதி XXXIII (எண்கள் 1 முதல் 4 வரை)

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i— iii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்) | ix—xvi |
| அரசினர் தீர்மானம்— | |
| விதி 31-ஐத் தளர்த்தல் | 19 |
| அரைமணி நேர விவாதம்— | |
| கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கலவரம் | 316—336 |
| அறிக்கை அளித்தல்— | |
| துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் | 918 |
| அறிவிப்பு— | |
| இறுதித் துணை நிதிநிலை அறிக்கை | 213 |
| உரிமைப் பிரச்சினை— | |
| மின்சாரத் துறை அமைச்சர் மீது | 904—909 |
| ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கச்சத் தீவு திருவிழா நிறுத்தப் பெற்றுள்ளது | 28—35 |
| தமிழ்நாடு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக தமிழ் தெரியாத ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளது | 638—655 |
| மதுரை மாநகராட்சி மின்சாரத்துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம் | 909—917 |


2 C 275—1

| | பக்கங்கள். |
|---|---|
| **ஒழுங்குப் பிரச்சினை—** | |
| பேரவையின் கூட்டம் நடைபெறுகையில் நீதி விசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது, வெளியில் அறிவிப்பது | 636—638<br>902—903 |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| அரபு நாட்டில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னதை நம்பிச் சென்றவர்கள் | 36—42 |
| உயிர் காக்கும் மருந்துகளைப் பாதுகாப்பது | 922—926 |
| கிழக்குக் கடற்கரைச் சாலை பணியினை முடிப்பது | 919—922 |
| தொழு நோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகள் உண்ணாவிரதம் | 658—660 |
| பம்மல் தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரால் குடி தண்ணீர் கெடுவது | 43—45 |
| வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரி மூடப் பெற்றுள்ளது | 655—658 |
| **தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 212—214<br>900—902 |
| மாநில அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்துவது | 900. |
| பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 120—121,<br>412;<br>750—751,<br>1101 |
| **வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு—** | |
| கல்வி | 926—1101 |
| சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 249—316<br>336—411 |
| தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | |
| வீட்டு வசதி | |
| நகர்ப் பகுதி வளர்ச்சி | 661—750 |
| மீனளம் | |
| பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 46—119 |
| நுகர் பொருள் வழங்கல் | 214—249 |
| **வினாக்கள்—விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—28,<br>605—635,<br>863—899 |


## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கிய தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கிய தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும். எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்டமுன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைபடுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கிய தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவைமுன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:—

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ. வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| கு. வி. | .. | குறுகிய கால விவாதம் |

| | | |
|---|---|---|
| பொ. வி. | .. | பொது விவாதம் |
| ஆ. உ. | .. | ஆளுநர் உரை |
| உ. பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ. பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க. ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க. ஈ. அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச. அ. நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச. ஆ. நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை இந்நிலையில்,— (1) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச. பிரி. ஆ. | .. | சட்ட முன்வடிவு-பிரிவுவாரியாக ஆய்தல் |
| ச. பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச. மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த. கோ. | .. | தகவல் கோரல் |
| த. வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ. தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ. தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த. தீ. | .. | தனித் தீர்மானம் |
| து. மா. கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி. மா. கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே. அ. | .. | பேரவையின் அலுவல் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1982 மார்ச் 12, 13, 15 மற்றும் 16-ம் நாட்கள்.
(தொகுதி XXXIII—எண்கள் 1 முதல் 4 வரை.)

### அ

**பக்கங்கள்.**


**அண்ணாதாசன், திரு. எம்.—**

உறுப்பினர் பத்திரிகை நிருபர்களோடு பேசியதாக (ஒ.பி.) 706

மருத்துவமனை, திருவரம்பூரில் 23—24

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—கல்வி 984—992

**அப்பாதுரை, திரு. மு.—**

உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638

கச்சத்தீவு திருவிழா (ஒ.தீ.) 28

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—கல்வி 964—969

**அரங்கநாதன், திரு. மு.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்

சாலைகளும், பாலங்களும்

சாலைகள், பாலங்கள் குறித்து மூலதனச் செலவு 377—378

**அரங்கநாதன், திரு. எஸ்.—**

தருமபுரி, நூற்பு ஆலை 623—624

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்

சாலைகளும் பாலங்களும்

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச்செலவு 379—380

பக்கங்கள்.

- அரங்கநாயகம், திரு. செ.—
  - கன்னியாகுமரி மாவட்டம், வகுப்புக் கலவரம், (ஒ.பி.) — 979
  - வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
    - கல்வி — 926—927, 933—935, 1013—1064, 1099
  - வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரி மூடியிருத்தல் (க.ஈ.அ.) — 656—657, 658
- அரை மணி நேர விவாதம்—
  - கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் — 316—336
- அலுவலகங்கள்—
  - கட்டிடங்கள் — 891—892
- அழகர்சாமி, திரு. சோ.—
  - உயர்நீதிமன்றம், தலைமை நீதிபதி நியமனம், (ஒ.தீ.) — 638
  - கச்சத்தீவு திருவிழா (ஒ.தீ.) — 28
  - கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ.வி.) — 322—324
  - தூத்துக்குடி, 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை மானியம் — 24—28
  - வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
    - மீனளம்
    - பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
    - நுகர்பொருள் வழங்கல் — 337
- அன்பழகன், திரு. க.—
  - வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
    - கல்வி — 1038—1064, 1076
    - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
    - சாலைகளும் பாலங்களும்
    - சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 301—302, 303—305
    - மீனளம்
    - பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
    - நுகர்பொருள் வழங்கல் — 242



பக்கங்கள்.

- அன்பில் தர்மலிங்கம், திரு.—
  - வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
    - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
    - சாலைகளும் பாலங்களும்
    - சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 380—393

## ஆ

- ஆண்டி அம்பலம், திரு. மெ.—
  - இரசாயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி, கடன் — 627
- ஆண்டித்தேவர் திரு. எஸ்.—
  - உயர்நீதிமன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) — 638
  - கச்சத்தீவு திருவிழா (ஒ.தீ.) — 28, 30—31
  - கன்னியாகுமரி மாவட்டம் கலவரம் (க. வி.) — 327—328
  - வரவு-செலவுத் திட்டம், 1982-83; வாக்கெடுப்பு—
    - மீனளம் — 99—106
    - பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் — 230,
    - நுகர் பொருள் வழங்கல் — 231—232
- ஆதி திராவிடர் நலம்—
  - சத்துவாசல், மாணவர் விடுதி — 628
  - தீண்டாமை ஒழிப்புச் சட்டம், கைது செய்யப்பட்டோர் — 628—630
  - நெல்லை மாவட்டம் கழிவுப் பஞ்சாலை — 634—635
  - முன்னேற்றத் திட்டம் — 631—634
  - விவசாயக் கிணறுகள், மானியம் — 627—628
- ஆலயங்கள்—
  - நிர்வாக அதிகாரிகள் கூடுதல் பொறுப்பு — 871—875
  - பராமரிப்பு — 868—871

ஆ— தொடர்ச்சி.


பக்கங்கள்.

ஆறுமுகம், திரு. எம்.—

குடிநீர், அன்னூர், அவிநாசி யூனியன்கள், ... 18—20

ஆறுமுகம், திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—

சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்து மூலதனச் செலவு 256—261

ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 959—964

இ

இரத்தினம், திரு. எம்.பி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 283—288

இராகவானந்தம், திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 301, 302, 303, 304, 305

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 661, 662, 663, 664, 704, 724—747

பம்மல் பேரூராட்சி, குடிநீர் (க. ஈ. ஆ.) ... 43—44, 45




இ— தொடர்ச்சி.


பக்கங்கள்.

இராசமாணிக்கம் திரு. இரெ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 250—251, 365—367

தஞ்சை, புதிய பேருந்து வழித்தடங்கள் 891

இராசரத்தினம் திரு. து.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 305, 338—342

இராசாராமன் திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 252

இராமச்சந்திரன் திரு. ச.—

உயர் நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ. தீ.) 644—645

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ) 901

தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு முன்மொழியும் நேரத்தில் விவாதத்தை அனுமதிப்பது குறித்து (ஒ. பி.) 748—749

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (அறி.) 918

நீதி விசாரணை, பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஒ.பி.) 636—638, 903

பக்கங்கள்.

இராமச்சந்திரன் திரு. ச.—தொடர்ச்சி
புளியந்தோப்பு காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர் இருக்கும் இடம். (ஒ.பி.) 1068
மின்சாரத் துறை அமைச்சர் மீது (உ.பி.) 907—909

இராமசாமி திரு. எஸ். என்.—
உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638
கச்சத்தீவு திருவிழா (ஒ.தீ.) 28—29

இராமலிங்கம் டாக்டர் கே. பி.—
இராசிபுரம், பொது மருத்துவமனை 884—886

இராமலிங்கம் திரு. செ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 973—979

இராஜசேகரன் திரு. வே—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ) 214
மின்சாரத்துறை அமைச்சர் மீது (உ. பி.) 904—907

இளையபெருமாள் திரு. எல்—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 901
நீதி விசாரணை பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஒ.பி.) 903
புளியந்தோப்பு, காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர் இருக்கும் இடம் (ஒ.பி.) 1068
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 950—951, 1088, 1091, 1099—1100
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 398, 409





பக்கங்கள்.

இளையபெருமாள் திரு. எல்—தொடர்ச்சி.
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும் வீட்டு வசதி
நகர்ப் பகுதி வளர்ச்சி 671—676, 745, 746
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர்பொருள் வழங்கல் 246

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி—
உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம், (ஒ.தீ.) 638
கச்சத்தீவு திருவிழா (ஒ.தீ.) 28—29
சீட்டுக் கழகம், துவக்குதல் 866—868
மதுரை மாநகராட்சி, மின்சாரத்துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம் (ஒ.தீ.) 909—910, 914—915
மருந்துகள், பாதுகாப்பு (க. ஈ.) 922—925
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 927
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 250—251, 252—253
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 661—662, 668

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர்பொருள் வழங்கல் 46, 47, 48, 79—88, 248

பக்கங்கள்

உகம்சந்த் திரு. எஸ். டி—

கதர், கைத்தறித் துணிகள், விற்பனை — 616—618

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 307—312

உச்சி திரு. கே—

உதகமண்டலம், தலைமை மருத்துவமனை — 882—884

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 342—346

உத்திராபதி திரு. பொ—

உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம், (ஓ. தீ.) — 638—643, 644

கச்சத்தீவு திருவிழா (ஓ. தீ.) — 28

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு — 251

மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்கல் — 48

உமாநாத் திரு. ரா—

உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி நியமனம், (ஓ.தீ.) — 638

ஒத்தி வைப்புத் தீர்மானம், விவாதிப்பது குறித்து — 34

மின்சார ரயில் பாதை சென்னை கடற்கரை-லஸ் — 21—23




உ—தொடர்ச்சி.


பக்கங்கள்.

வரவு-செலவுத்திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர்பொருள் வழங்கல் — 239, 240, 241

உரங்கள்—

யூரியா, தட்டுப்பாடு — 877—878

உரிமைப் பிரச்னைகள்—

பார்க்க—தலைவர்

ஏ

ஏடுகள்—

அவை முன் வைக்கப்பெற்றவை — 120—121, 412, 750—751, 1101

ஓ

ஒத்திவைப்புத் தீர்மானம்—

பார்க்க—தலைவர் — 28—33

ஒழுங்குப் பிரச்னைகள்—

பார்க்க—தலைவர்

க

கணபதி திரு. கே. ஆர்—

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்து மூலதனச் செலவு — 358—359

பக்கங்கள்.

கதர், கிராமக் கைத் தொழில்கள்—
  கதர், கைத்தறித் துணிகள் விற்பனை 616—618
கருணாநிதி டாக்டர் மு.—
  மதுரை மாநகராட்சி, மின்சாரத் துறை தொழிலாளர்கள், வேலை நீக்கம் (ஓ. தி.) 911
  வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  கல்வி 1080, 1081, 1083, 1084, 1085
கருப்பையா திரு. இரா.
  உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த. கோ.) 900, 901
  வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
  தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
  நகர்ப்பகுதி வளர்ச்சி 662, 696—708, 742, 743—744
கல்விக் கூடங்கள்—
  ஆரம்பப் பள்ளிகள் உடற்பயிற்சி ஆசிரியர்கள் 11—13
  கல்லூரிகள் சுயாட்சி 616
  பணிபுரிவோர் 615—616
  பள்ளிக் கட்டடங்கள், கடன் 7—10
  வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரி மூடியிருத்தல் (க.ஈ.) 655—658
கலிதீர்த்தான் திரு. சோ.—
  வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  சாலைகளும் பாலங்களும்
  சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 368—369
கலையரசன், நன்னிலம் திரு. அ.—
  வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  சாலைகள், பாலங்களும்
  சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 270—276





பக்கங்கள்.

கவன ஈர்ப்புகள்—
  கிழக்குக் கடற்கரைச் சாலை, வேலைகள் 919—922
  தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள் நோயாளிகள் உண்ணாவிரதம் 658—660
  பம்மல் பேரூராட்சி, குடிநீர் 43—45
  மருந்துகள் பாதுகாப்பு 922—926
  வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரி மூடியிருத்தல் 655—658
  வேலைவாய்ப்பு, ஏமாற்றம் 36—42
கனிமங்கள்—
  இராஜபாளையம், சங்கரன்கோவில், சுண்ணாம்புக் கற்கள் 622—623
கால் நடைகள்—
  திருச்சி, கோழி உற்பத்திக் கழகம், குளிர்சாதனக் கிடங்கு 894
கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—
  வரவு செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு
  மீனளம்
  பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
  நுகர் பொருள் வழங்கல் 106—109, 110—118, 233, 241—242
  வேலை வாய்ப்பு ஏமாற்றம் (க.ஈ.) 36, 38, 39, 41
கிருஷ்ணன், திரு. ரா.—
  உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம் 638
குடிநீர்—
  அன்னூர், அவினாசி யூனியன்கள் 18—20
  பம்பல் பேரூராட்சி (க.ஈ.) 43—45
  ஜெயங் கொண்டம் தொகுதி 21

பக்கங்கள்

குமரி அனந்தன் திரு.—
உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638, 647—650
கச்சத் தீவு திருவிழா (ஒ.தீ.) 28
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (க.பி.) 324—327
வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு
கல்வி 992—1001
வெள்ளைப் பூண்டு, வரி விலக்கு 611—612

குலசேகர் திரு. ஏ. டி.—
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
நகர்ப் பகுதி வளர்ச்சி 664—668

குலசேகரபாண்டியன் திரு. ந.—
வாணியம்பாடி, இஸ்லாமியர் கல்லூரி மூடிவிடுத்தல் (க.ஈ.) 655, 656, 657

குழந்தைவேலு திரு. ப.—
கிழக்குக் கடற்கரைச் சாலை வேலைகள் (க.ஈ.அ.) 919—922
மதுரை மாநகராட்சி,
மின்சாரத் துறை தொழிலாளர்கள்,
வேலை நீக்கம் (ஒ.தீ.) 915—917
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள்,பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 249,250,252 253—254, 393—410

கைத்தறி, விசைத்தறி—
கைத்தறி துணிகள், ஏற்றுமதி 618—619
கைத்தறி பாலிஸ்டர் துணி உற்பத்தி 620—621

கோபால் திரு. சி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு
கல்வி 935—940





பக்கங்கள்.

கோபால கிருஷ்ணன் திரு. கா.—
முகவை மாவட்டம், முந்திரி ஆலை 863—865

கோபாலன் திரு. ஆர். டி.—
வரவு செலவுத் திட்டம் 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 292—396

கோமதி சீனிவாசன் திருமதி—
தொழு நோய் மறுவாழ்வு இல்லங்கள் நோயாளிகள் உண்ணாவிரதம் (க.ஈ.அ.) 658,659, 660

கோவைத் தம்பி திரு.—
வரவு செலவுத் திட்டம் 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும், பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 267,299
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
நகர்ப் பகுதி வளர்ச்சி 708—712

ச

சங்கரய்யா திரு. என்.—
உயர்நீதி மன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638, 639—641, 645
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 213,214
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ.வி.) 319—322
நீதி விசாரணை, பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஓ.பி.) 637

ச—தொடர்ச்சி.


**பக்கங்கள்.**

சட்டம்-ஒழுங்கு—
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ.வி.) 316—317

சண்முகம் திரு. இரா—
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
கல்வி 1032—1037

சமூக நலன்—
குழந்தைகள், நலத்திட்டம் 893—894

சாகுல் ஹமீது திரு. ஏ.—
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ. வி.) 3[illegible]
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்,
சாலைகளும் பாலங்களும்,
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவுகள் 373—374
மீனளம்,
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்,
நுகர் பொருள் வழங்கல் 75—79

சாலைகள்—
கிழக்குக் கடற்கரை சாலை, வேலைகள் (க.ஈ.) 919—922

சித்தன், திரு. என். எஸ். வீ.—
அலுவலகங்கள், கட்டிடங்கள்— 891—892
உயர் நீதிமன்றம், தலைமை நீதிபதி நியமனம் 638, 644, 645, 646, 647
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ.வி.) 318—319
தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள் நோயாளிகள் உண்ணாவிரதம் (க. ஈ.) 658, 660
நிலங்கள், இனாம் ஒழிப்புச் சட்டம், சிவந்திபுரம் 1-4 3
நீதி விசாரணை, பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஓ.பி.) 636
மதுரை மாநகராட்சி, மின்சாரத் துறை தொழிலாளர்கள், வேலை நீக்கம் (ஓ.தீ.) 909—910, 911—91




ச—தொடர்ச்சி


**பக்கங்கள்**

சிவசாமி திரு. செ.—
உயர் நீதிமன்றம் தலைமை, நீதிபதி நியமனம், (ஓ.தீ.) 638
கச்சத் தீவு திருவிழா (ஓ.தீ) 28, 29, 30
மருந்துகள் பாதுகாப்பு (க.ஈ.) 922, 924
வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 927
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்,
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 250,252
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 662, 668
மீனளம்,
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்,
நுகர்பொருள் வழங்கல் 46, 93—97

சிவஞானம், திரு. ந—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 370—371
மீனளம்,
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்,
நுகர்பொருள் வழங்கல் 46, 63—69

சிவப்பிரகாசம் திரு. சி—
ஏரூர், ஆரம்பச் சுகாதார நிலையம் 879
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 367—368

ச—தொடர்ச்சி


பக்கங்கள்

சின்னசாமி திரு. எம்.—
கருர், விவசாய மார்க்கெட்டிங் குழு நிலம் 879
கருர் தாலுக்கா பிரித்தல் 605—606
தூத்துக்குடி—திண்டுக்கல்—கருர் அகல இரயில் பாதை 895—899
வரவு-செலவுத் திட்டம் 1982—83, வாக்கெடுப்பு—
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 668—671
வெளியீடுகள் தேவநேயப் பாவணர் நூல்கள் 14—15
சின்னராசு திரு. க. இரா—
வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 1005—101
சின்னராசு திரு. மா—
வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 945—951
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 359—360
சீட்டுக் கழகம்—
துவக்குதல் 866—868
சுந்தரம் திரு. கே. ஆர்.—
மதுரை மாநகராட்சி, மின்சாரத் துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம் (ஒ.தீ.) 909—910
வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 276—283
சுந்தரம் திரு. ப.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்கல் 48




ச—தொடர்ச்சி


பக்கங்கள்

சுந்தரம் திரு. மு.—
வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 346—351
சுந்தரமூர்த்தி திரு. ஆர்.—
வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 940—945
சுந்தரராஜ் திரு. நா—
உயர் நீதி மன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 644—645
நீதி விசாரணை, பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஒ.பி.) 902
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 250
சுப்பிரமணியன், திரு. உ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 927
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்கல் 48
சுப்பிரமணியன், திரு. மா. —
பாலிஸ்டர் நூலிழை, வரி குறைப்பு 610
செம்மலை, திரு. செ.—
தீண்டாமை ஒழிப்புச் சட்டம்
கைது செய்யப்பட்டோர் 628—630
பல்லவன் போக்குவரத்துக் கழகம், விளம்பரம், வருமானம் குறித்து 890
செல்வராசன், திரு. அ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 296—300, 306—307

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

கலவரம் நடைபெற்ற பகுதியை நேரில் பார்வையிடச் சென்ற முதலமைச்சர் அப்பகுதியில் மேற்கொண்டு கலவரங்கள் நடக்காமல் இருக்க நீதி விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்யும் என்று அந்த மக்களிடையே அறிவித்துள்ளது அமைதியை ஏற்படுத்த உதவுவதற்குத்தானே தவிர, பேரவைக்கு மதிப்புத் தரக்கூடாது என்ற காரணத்தால் அல்ல என மாண்புமிகு மின்துறை அமைச்சர் விளக்கம் அளித்தார். இதுபற்றிப் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பாவது.

"மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்ததைப் போல் இது வரவேற்கக் கூடியது; சமுக சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடியது. விவாதத்திற்கு உரியது அல்ல." 636—638

குறுக்கீடு—

திடீரென்று இடையில் குறுக்கிட்டு விளக்கம் சொல்லக் கூடாது. பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் பேசி முடித்தவுடன் இறுதியில் கேட்க முற்பட வேண்டும். (வ. செ.) 749

நடைமுறை—

அவையிலே ஒரு நாளிலே ஒரு ஒத்தி வைப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப் பெறுகிறது. (த. கோ.) 902

பேரவைத் தலைவரின் அறையில் நிராகரிக்கப்பெற்ற ஒரு பொருள் குறித்து பேரவையில் எழுப்புதல் கூடாது. (ஒ. நீ.) 35

வினாக்கள்—விடைகள்.

சுருக்கமாகக் கேட்க வேண்டும். (து. வி.) 896

மூல வினாவோடு தொடர்பில்லை என அனுமதி மறுக்கப் பெற்றது. (து. வி.) 869





பக்கங்கள்.

தங்கமணி, திரு. கே. எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்

சாலைகளும் பாலங்களும்

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 265—270

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

வீட்டு வசதி

நகர்ப்பகுதி வளர்ச்சி 661

மீனளம்

பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

நுகர் பொருள் வழங்கல் 47

தங்கவேலு திரு. பி.—

குடிநீர், ஜெயங்கொண்டம் தொகுதி 21

தாமரைக்கனி திரு. இரா.—

சென்னை, கிண்டி குதிரைப் பந்தய மைதானம் வரி ஏய்ப்பு 613—615

சென்னை மற்றும் போரூர், கேஞ்சஸ் அச்சிடும் மை 865—866

பள்ளிக்கட்டிடங்கள், கடன் 7—10

திருமாறன் திரு. பெ.—

வெளியீடுகள், தேவநேயப் பாவாணர் நூல்கள் 14—15

திருவேங்கடம் திரு. பெ. சு.—

உரம், யூரியா, தட்டுப்பாடு 877—878

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மீனளம்

பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

நுகர்பொருள் வழங்கல் 46, 47

வேலை வாய்ப்பு, ஏமாற்றம் (க.ஈ.) 36, 42

திரைப்படங்கள்—

நிதி உதவிக் கழகம் 875—876

தீர்த்தராமன் திரு. ப.—

சென்னை மற்றும் போரூர், கேஞ்சஸ் அச்சிடும் மை 865—866

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தீர்மானங்கள்—
ஒத்தி வைப்புத் தீர்மானம் (பார்க்க—தலைவர்) விதி 31-ஐத் தளர்த்தல் 119

துரை முருகன் திரு—
அமைச்சர், குறிப்புகளைப் படித்தல் (ஒ.பி.) 1071
உறுப்பினர் பத்திரிகை நிருபர்களோடு பேசியதாக (ஒ. பி.) 706
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 927—935, 1082, 1083, 1084—1085
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி 736
வேலை வாய்ப்பு, ஏமாற்றம் (க. ஈ.) 36

துரைராஜ் திரு. பி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 1001—1005

தொழிற்சாலைகள்—
இராசயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி, கடன் 627
சிம்சன் போர்டு டிரக்கு 626—627
சென்னை மற்றும் போரூர், கேஞ்சஸ் அச்சிடும் மை 865—866
தருமபுரி, நூற்பு ஆலை 623—624
தூத்துக்குடி, 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை மானியம் 24—28
முகவை மாவட்டம், முந்திரி ஆலை 863—865
விழுப்புரம், தொழிற்பேட்டை 624—626

ந

நரசிம்மன் திரு. பூ. மு.—
ஆரம்பப் பள்ளிகள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் 11—13

நல்லப்பன் திரு. தி. கா.—
மருந்துகள், பாதுகாப்பு (க. ஈ.) 922



ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நவநீத கிருஷ்ணபாண்டியன் திரு. ஆர்.—
உயர்நீதிமன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ. தீ.) 638
கச்சத்தீவு திருவிழா (ஒ. தீ.) 28
வரவு-செலத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் 251—252
சாலைகளும் பாலங்களும் சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 312—316

நிதி அலுவல்கள்—
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு
கல்வி 926—1101
சமுதாய வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் 249—316
சாலைகளும் பாலங்களும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்செலவு 336—411
மீனளம் பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் 46—119
நுகர் பொருள் வழங்கல் 214—249
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி 661—750

நிலங்கள்—
இனாம் ஒழிப்புச் சட்டம், சிவந்திபுரம் 1—3
உச்ச வரம்பு சட்டம் 4—6
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பு 607—610

நீக்கம் 299, 316, 318, 384, 385, 396, 397, 402, 644, 645, 740, 746, 748, 1085

## ந—தொடர்ச்சி


பக்கங்கள்

நீதி மன்றங்கள்—
  தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள், ஒதுக்கீடு 15—18.

நெடுஞ்செழியன் டாக்டர் இரா.—
  ஒத்திவைப்புத் தீர்மானம், விவாதிப்பது குறித்து (ஒ.பி.) 34, 35
  கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (க.வி.) 332—336
  வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு
  மீனளம்
  பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
  நுகர் பொருள் வழங்கல் 46, 47, 49, 52, 109—110, 118, 119, 214—248
  விதி 31-ஐத் தளர்த்தல் (தீ) 119
  வேலை வாய்ப்பு, ஏமாற்றம் (க.ஈ.அ.) 36—38, 39—41—42

நெடுமாறன் திரு. ப.—
  கன்னியாகுமரி மாவட்டம் கலவரம் (க.வி.) 328—329
  கிழக்கு கடற்கரைச் சாலை வேலைகள் (க.ஈ.) 919, 920, 921—922
  உயர் நீதிமன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638, 641—643

வரவு செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு
  கல்வி 1010—1021, 1071
  தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல இரயில் பாதை 895—899
  மதுரை மாநகராட்சி, மின்சாரத் துறை தொழிலாளர்கள், வேலை நீக்கம் (ஒ.தீ.) 909—910


## ப


பட்டாபிராமன் திரு. செ.—
  வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
  சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  சாலைகளும் பாலங்களும்
  சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 361—363




## ப—தொடர்ச்சி


பக்கங்கள்

பம்மல் நல்லதம்பி, திரு.—
  பம்மல் பேரூராட்சி குடிநீர் (க.ஈ.) 43, 44, 45

பலராமன் திரு. இல.—
  ஆலயங்கள், பராமரிப்பு 868—871
  சந்தவாசல், ஆதிதிராவிட மாணவர் விடுதி 628
  வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
  கல்வி 1025—1032
  சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் 251
  சாலைகளும் பாலங்களும்
  சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச்செலவு

பழனிசாமி திரு. சு—
  வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
  சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  சாலைகளும் பாலங்களும்
  சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 351—353

பழனியப்பன் திரு. கு. பா—
  தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள் நோயாளிகள் உண்ணாவிரதம் (க.ஈ) 658, 659
  வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
  சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
  சாலைகளும் பாலங்களும்
  சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 375—377
  தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
  வீட்டு வசதி
  நகர்ப்பகுதி வளர்ச்சி 661
  விழுப்புரம் தொழிற்பேட்டை 624—626

பழனிவேல் திரு. என்—
  ஆதிதிராவிடர் முன்னேற்றத் திட்டம் 631—634
  உயர்நீதி மன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 638
  கல்லூரிகள், சுயாட்சி 616

ப—தொடர்ச்சி


பக்கங்கள்

பழனிவேல் திரு என்.—தொடர்ச்சி

பள்ளிக் கட்டிடங்கள் கடன் 7—10

மதுரை மாநகராட்சி, மின்சாரத்துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம் (ஒ.தீ.) 909—910

மருந்து மற்றும் மாத்திரைகள், தயாரிப்பு 880

பாபுஜனார்த்தனன் திரு.—

ஆலயங்கள், நிர்வாக அதிகாரிகள், கூடுதல் பொறுப்பு 871—875

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ) 900

கண் நோய் (ஒ.பி.) 1021

வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 926

பாரமலை, திரு. க.—

ஆதி திராவிடர்கள், விவசாயக் கிணறுகள் மானியம் 627—628

நீதித்துறை தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் ஒதுக்கீடு 15—18

மதுரை மாநகராட்சி, மின்சாரத்துறை தொழிலாளர்கள், வேலை நீக்கம் (ஒ.தி.) 909—910

பாலகிருஷ்ணன், திரு. ச—

கைத்தறி துணிகள், ஏற்றுமதி 618—619

பாலகிருஷ்ணன், திரு.வி.—

இராஜபாளையம், சங்கரன் கோயில் சுண்ணாம்புக் கற்கள் 622—623

வரவு செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு
கல்வி 1022—1025

பாலசுப்பிரமணியன் வேடசந்தூர் திரு.வி.பி.—

ஆரம்பப் பள்ளிகள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் 11—13

சைக்கிள் ரிக்ஷா, உரிமம் 888—889




ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

பாலன் திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம்; 1982-83 வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—
சாலைகளும். பாலங்களும்—
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 249. 252

புருஷோத்தமன், திரு. து.—

சிம்சன் போர்டு டிரக்கு தொழிற்சாலை 626—627

திருச்சி, கோழி உற்பத்திக் கழகம், குளிர்சாதனக் கிடங்கு 894

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—
சாலைகளும், பாலங்களும்—
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 302—303

வெளியீடுகள், தேவநேயப் பாவாணர் நூல்கள் 14—15

பூங்காவனம் திரு. என்.ஏ.—

வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—
சாலைகளும்,பாலங்களும்—
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 288—292

பெரியசாமி திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—
சாலைகளும் பாலங்களும்—
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 336—337

பெருமாள் திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம்,1982-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—
சாலைகளும் பாலங்களும்—
சாலைகள் பாலங்கள் குறிந்த மூலதனச் செலவு 363—365

பெருமாள் திரு. ரா. கு.—

நெல்லை மாவட்டம் ஆதி திராவிடர்கள் கழிவுப் பஞ்சாலை 634—635

ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

பொன்னம்மாள் திருமதி. ஏ.எஸ்.—
கண் நோய் (ஒ.பி.) 1021
குழந்தைகள், நலத்திட்டம் 893—894
மதுரை மாநகராட்சி, மின்சாரத்துறை தொழிலாளர்கள், வேலை நீக்கம் (ஒ.தீ.) 909—910

பொன்னுரங்கம் திரு. ப.—
வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—
மீனளம்—
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்குதல் 49—56

பொன்னையன் திரு. சி.—
உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி நியமனம் (ஒ.தீ.) 654—655

போக்கு வரத்து—
அண்ணா என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன், தொழிலாளர் நலநிதி 886—887
சைக்கிள் ரிக்ஷா, உரிமம் 888—889
தஞ்சை மாவட்டம் புதிய வழித்தடங்கள் 891
தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர்—அகல இரயில் பாதை 895—899
பல்லவன்—போக்குவரத்துக் கழகம், விளம்பரம் 890
மின்சார இரயில் பாதை, சென்னை கடற்கரை—லஸ் 21—23

ம

மருத்துவமனைகள்—
இராசிபுரம், பொது மருத்துவமனை 884—886
உதகமண்டலம், தலைமை மருத்துவமனை 882—884
ஏரூர், ஆரம்ப சுகாதார நிலையம் 879
திருவரம்பூர் இ. எஸ். ஐ. (E.S.I.) 23—42
தொழு நோய் மறு வாழ்வு இல்லங்கள் நோயாளிகள் உண்ணா விரதம் (க. ஈ.) 658—660
மருந்துகள் பாதுகாப்பு (க. ஈ.) 922—926
வானூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை 881—882

மருத்துவம்—
மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிப்பு 880


ம— தொடர்ச்சி


பக்கங்கள்

மாணிக்கம் திரு. எம். எஸ்—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 692—696

மாவட்ட நிர்வாகம்—
கரூர் தாலூகா பிரித்தல் 605—606

மின்சாரம்—
துணை வினாவிற்கு அளித்தவிடைக்கான திருத்தம் (அறி.) 918

முகமது இஸ்மாயில் திரு. பி.—
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ. வி.) 329—331

முத்துக்கிருஷ்ணன் திரு. சு.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர்பொருள் வழங்கல் 88—93

முத்துராமலிங்கம், திரு. இ—
கச்சத்தீவு திருவிழா (ஒ. தீ.) 28

முனுசாமி திரு. மு. ப.—
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 939

மூர்த்தி திரு. ஜி—
கன்னியாகுமரி மாவட்டம், கலவரம் (அ. வி) 331
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பு 607—610
வரவு-செலவுத் திட்டம், 1983-83 வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 374—375
வானூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை 881—882

ர

பக்கங்கள்

ரகுமான்கான் திரு. அ—.
ஒத்திவைப்புத் தீர்மானம், விவாதிப்பது குறித்து 33—35
உயர்நீதிமன்றம், தலைமை நீதிபதி நியமனம் (ஒ. தீ.) 638, 650—653
கன்னியாகுமரி மாவட்டம், வகுப்புக் கலவரம் (ஒ. பி.) 979
மதுரை மாநகராட்சி, மின்சாரத்துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம் (ஒ. தீ)) 909—910, 913—914
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 1076
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 712—723, 724, 728, 746

ரமணி திரு. கு.—
அண்ணா எஞ்ஜினியரிங் கார்ப்பொரேஷன் தொழிலாளர் நல நிதி 886—887
அரசு ஊழியர்கள், கிராக்கிப்படி உயர்வு (த. கோ.) 900
ஆதி திராவிடர் முன்னேற்றம், திட்டம் 631—634
உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம், (ஒ. தீ.) 638
பள்ளிக் கட்டிடங்கள், கடன் 7—10
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 952—959
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்பகுதி வளர்ச்சி 676—692, 732, 738, 739, 740, 748

இராமசாமி திரு. எஸ். என்.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்கல் 98—99



ர— தொடர்ச்சி

பக்கங்கள்

ராஜமாணிக்கம் திரு. எம். கே.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 261—265

ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் திரு.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கல்வி 979—984

வ

வரதராஜன் திரு. என்.—
உயர்நீதி மன்றம், தலைமை நீதிபதி நியமனம், (ஒ. தீ.) 638

வரிகள்—
சென்னை, கிண்டி குதிரைப் பந்தய மைதானம் ஏய்ப்பு 613—615
பாலியஸ்டர் நூலிழை, குறைப்பு 610
வெள்ளைப்பூண்டு, விலக்கு 611—612

வின்சென்ட் திரு. மி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மீனளம்
பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்
நுகர் பொருள் வழங்கல் 56—63

வெங்கட சுப்பிரமணியம் திரு. ப.—
கைத்தறி பாலியஸ்டர் துணி, உற்பத்தி 620—621
திரைப்படங்கள், நிதி உதவிக் கழகம் 875—876

வெள்ளைச்சாமி திரு. ஆ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்
சாலைகளும் பாலங்களும்
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 356, 371—373

வெளியீடுகள், தேவநேயப் பாவாணர் நூல்கள் 14—15

வ— தொடர்ச்சி

பக்கங்கள்

வேணுகோபால் திரு. த.—
நிலங்கள், உச்சவரம்புச் சட்டம் 4—6

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
நகர்ப்பகுதி வளர்ச்சி 662—663

வேளாண்மை—
கரூர், விவசாய மார்க்கெட்டிங் குழு
நிலம் 879

வேலைவாய்ப்பு—
ஏமாற்றம் 36—42

ஜ

ஜான் வின்சென்ட் திரு. மு.—
கல்லூரிகள், பணிபுரிவோர் 615—616

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
கல்வி 969—973

ஹ

ஹண்டே டாக்டர் எச். வி.—
கச்சத்தீவு திருவிழா (ஒ. தீ.) 31—33
மருந்துகள், பாதுகாப்பு (க. ஈ. அ.) 923, 924, 925—926

ஹாஜா செரீப் திரு. கே. எஸ். ஜி.—
ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி விவாதிப்பது குறித்து 641

நீதி விசாரணை, பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது (ஒ. பி.) 637

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்புத் திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர்' இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி,

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15, மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள். நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் ட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் ஒப்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister, Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Tecnology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture Agricultural Refinance, Agricultural Engineering Wing

9. Hon. Thiru C. PONNAIAN (Minis er for Co-cperatic nd Law)—Law, Courts' Prisons, Legislatic ns on Weigths an Measurest) Regisiation of Companies, Debt. Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister fcr Loc Administration)—Municipal Administration, Panchayats an Panchayat Unicns, Commui i y Developmen., Rural Indeb. edne Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister f Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommcdation Contiol.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irriga tion)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor , Na.ionalised Transpor , Mo or Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Irdustries)—Large Scale Indus.ries, Mines and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis er for Public Works and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant cf Liquor permi.s, Passpor s, Public Works Deparmen and Es abltshment ma. er rela ing to Public Works Depar men .

17. Ho . T iru M. M. VIJAYASA ATHI (Minis er for Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, Prin ing Gcvernmen Press, News Prin Control, Hill Trit Bonded Labour and Emplo ment and Training

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minis er f Social Welfare)—Social Welfare including Women and Childr Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanag ians Overseas, Refugees and Evacuees and correctional Adminis tion.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியச .

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பால்சுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்),
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி ஏ. (சார்புச் செயலாளர்).
திரு, டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்),

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

9. Hon. Thiru C. PONNAIAN (Minis er for Co-cperatic nd Law)—Law, Courts' Prisons, Legislatiens on Weigths an Measurest) Regisration of Companies, Debt. Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Loca Administration)—Municipal Administration, Panchayats an Panchayat Unicns, Commui iy Developmen, Rural Indebiedne Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister f Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommcdation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irriga ion)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor , Na ionalised Transpor , Mo or Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Indus ries, Mines and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis er for Public Works and Khadi)—Handlcoms, Khadi, Prohibition excluding grant cf Liquor permits, Passpor s, Public Works Deparimen and Es abltshment ma er rela ing to Public Works Depar men .

17. Ho . T iru M. M. VIJAYASARATHI (Minis er for Adi Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, Prin ing Gcvernmen Press, News Prin Control, Hill Trit Bonded Labour anq Employmen and Training

18. Hon. Tairumathi GOMATHI SRINIVASAN (Minis er f Social Welfare)—Social Welfare including Women and Childr Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanag Indians Overseas, Refugees and Evacuees and correctional Adminis tion.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பால்சுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி ஏ. (சார்புச் செயலாளர்).
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2–2–1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் [தமிழ் அகர வரிசைப்படி] தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். .. | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ. |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன் திரு. தி. .. | தாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில்தர்மலிங்கம், திரு. .. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. .. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. .. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. .. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |

| தொடர் எண்ணும் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 | இராசு, திரு. ஜெ. எஸ். | பெரம்பலூர் வ. |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி (செ.) |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் [செ.வ.] |
| 39 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ, | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. | இராதகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையப்பெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பீ. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | இணைத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜீ. | சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான். |
| 95 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.). |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டணம். |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர். |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம். |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி. |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி. |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர். |
| 105 | சிவராமன், திரு. எ. எஸ். | சின்னசேலம். |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர். |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர். |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர். |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம். |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர். |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர். |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி. |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம். |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.). |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர். |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர். |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. | ஜெயங்கொண்டான். |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.). |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.). |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம். |
| 142 | திருச்சி சௌந்திரராசன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி. |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.). |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பொன்னகரம். |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர். |
| 149 | துரைமுருகன், திரு. இரா | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 151 துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.) |
| 152 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 நடராஜன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 நவநீத கிருஷ்ண பாண்டியன். திரு. .. | ஆலங்குளம் |
| 157 நாச்சிமுத்து, திரு. கே.பி. .. | மேட்டூர் |
| 158 நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. | திருநெல்வேலி |
| 161 நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். .. | பல்லடம் |
| 166 பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 175 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176 பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 181 பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183 புருஷோத்தமன், திரு. நு. .. | சைதாப்பேட்டை |
| 184 பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 188 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 190 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம் |
| 195 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 முகமது இஸ்மாயில், திரு. பி. .. | பத்மநாபபுரம் |
| 197 முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம் |
| 201 முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 202 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210 ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (தெற்கு |

| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. .. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. .. | வீரபாண்டி |
| 217 | வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ. வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 223 | வீரானம்பலம், திரு. க.வெ. .. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 225 | வெங்கட ரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி.எம். .. | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. .. | நாங்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு.வே.இரா. .. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1982, மார்ச் 12, வெள்ளிக்கிழமை.

மாசி 28, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

பசித் தீயின் அளவின்படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டு விடும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 441, 442, ஆகியவைகள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

### இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சிவந்திபுரம் கிராமம்.

*வினா எண் 443—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில், சிவந்திபுரம் கிராமம் 1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் நாள் முதல் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டும் அந்த சட்டத்தின் பயனை விவசாயிகள் அடைய முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1982 மார்ச் 12

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) தெரியும்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாளில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து திருவாடுதுறை ஆதீனம், மதுரை நிலவரித் திட்ட அலுவலர், திருநெல்வேலி இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் ஆகியவைகளில் செய்த மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் இக்கிராமத்தில் தன்னிச்சை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, நிலவரித் திட்டம் 1389 ஆம் பசலியில் அறிமுகப்படுத்தியதோடு தூயக் கணக்குகள் வருவாய்த்துறைக்கு 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாளில் ஒப்படைக்கப்பட்டன. மேற்குறித்த சட்ட ரீதியான விசாரணைகளின்போது மதுரை நிலவரித் திட்ட உதவி அலுவலர் பிறப்பித்த ஆணையின் பேரில் சுமார் 215 ஹெக்டேர் பரப்பளவு உள்ள கைப்பற்று நிலங்களுக்கு திருவாடுதுறை ஆதீனத்தின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையை எதிர்த்து திரு. ஆர். பால்சுவாமி மற்றும் 37 நபர்கள் திருநெல்வேலி இனாம் ஒழிப்பு மன்றத்தில் செய்துள்ள மேல்முறையீட்டு மனு, அம்மன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட பல ஆண்டு காலமாக இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு அரசு முனைந்து இந்த வழக்கை விரைவில் விசாரிப்பதற்கு எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அவர்கள் மீது வழக்கைப் போட்டிருக்கிறார்கள். அதனால், அது நீடித்த வழக்காக தள்ளிக்கொண்டே வருகிறது. அவர்கள்தான் அதை முடித்துக் கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது தனியார் கேஸ் போட்டிருப்பதால், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்வது சரியா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்பதோடு, இனாம் ஒழிப்புப் சட்டம் தமிழக அரசால் 1965 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டு, அதற்குப் பிறகு மூன்று அரசாங்கங்கள் மாறி விட்டது. 65-லிருந்து இப்போது 17 ஆண்டு காலம் கழித்துக்கூட, அரசு போட்ட சட்டத்தை சிவந்திபுரம், கோடளங்குளம் மக்கள் அனுபவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசே விசேஷ சிரத்தை எடுத்து, அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா?



1982 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது 65-ல். 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் நாளில் சில நிலங்கள் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் மற்றவர்கள் அனுபவித்துக் கொண்டு, இன்றைக்கு வழக்குப் போடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு எந்த அளவுக்குத் தலையிட முடியும் என்று கேட்டிருக்கிறீர்கள். நான் அதைப்பற்றி சட்டத் துறையிடம் ஆலோசனை செய்து, எந்த அளவுக்கு தலையிட முடியுமோ அந்த அளவுக்குத் தலையிட இந்த அரசு முயற்சி செய்யும்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தின் விதிகள் என்ன கூறுகிறது என்று சொன்னால், அந்தச் சட்டத்தை நிறைவேற்றி அமுலாக்குவதன் மூலமாக அந்த நிலத்தில் யார் யார் சாகுபடி செய்து கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இனாம்தார்கள் அதிலே தாங்கள் சாகுபடி செய்ததாக ஒரு பொய்யான ரிக்கார்டுகளை, தவறான ரிக்கார்டுகளைக் காட்டியதன் காரணமாக, அதற்கு நம் ரெவின்யூ அதிகாரிகள் சாதகமாகச் சொல்லக்கூடிய தகவல்களின் காரணமாகத்தான், இவ்வளவு ஆண்டுக் காலமாக 10, 12 ஆண்டுகள் ஆகியும், இதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டும்கூட, அந்த விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்காமல், அதன் உரிமையை அடைய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே ஒரு சரியான திருத்தத்தை இந்தச் சட்டத்திற்குக் கொண்டு வந்து ஏழை விவசாயிகள் பலன் அடைவதற்கு அமைச்சர் அவர்கள் வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டத்திலே இருக்கிற சிக்கல்களினால் பலன் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். சட்டத்தில் சிக்கல் இருந்தால் திருத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நகர்ப்புற உச்சவரம்புச் சட்டம் மூலம் அரசால் கைப்பற்றப்பட்ட நிலங்கள்**

***வினா எண் 444—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் அரசு இதுவரை கைப்பற்றியுள்ள நிலத்தின் அளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 106 இனங்களிலே—386 ஏக்கர் இதுவரைக்கும் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பதிலில் இதுவரைக்கும் கைப்பற்றி இருக்கக்கூடிய இடங்களின் விஸ்தீரணம் மிகவும் குறைவாக இருக்கிறது. எவ்வளவு சர்ப்பிளஸ்சாக இருக்குமென்று அரசு ஏதாவது எஸ்டிமேட் வைத்திருக்கிறதா? இரண்டாவது நகர்ப்புறங்களில் எடுத்திருக்கிற இந்த நிலங்களை அரசு எந்த பர்ப்பசிற்காக யூஸ் பண்ணுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் சேலம், திருநெல்வேலி போன்ற சில நகரங்களிலே மட்டும் தான் இன்றைக்கு உச்ச வரம்பு இருக்கிறது. குறைவாக இருப்பதற்கு இதுதான் காரணம். எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் முதலில் அரசினுடைய தேவையென்றால் அதற்கு பயன்படுத்துகிறோம். அதற்குப் பிறகு அரசினுடைய நிறுவனங்கள் அதாவது பப்ளிக் செக்டார், அதற்குப் பிறகு மருத்துவ மனைகள் போன்றவற்றிற்கு கொடுக்கிறோம் பிறகு ஓப்பன் ஆக்ஷனில் போட்டு கொடுக்கிறோம். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கைப்பற்றி இருக்கிற நிலங்கள் தவிர வேறு நிலங்கள் எடுக்க வேண்டிய நிலங்கள் அந்த நகரங்களில் இல்லையா? அப்படி இருந்து எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் இருக்கிறதா? அடுத்து எடுக்கப்பட்ட நிலங்களை நகரங்களில் வீடு இல்லாதவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரைக்கும் எடுக்கப்பட்ட நிலம் தான் தெரிவித்தேன். யாருடைய நிலங்களையும் எடுக்காமல் இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், தெரிவித்தால் அதைத் திருத்திக் கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கிற போது இது வரையில் கைப்பற்றிய நிலங்கள் என்று சொன்னார்கள், அதற்குப் பின்னால் பதில் சொல்கிற போது இனிமேல் எடுக்கப்படாமல் இருப்பதற்கு எந்த விதமான காரணமும் இல்லை யென்று சொன்னால் கைப்பற்ற வேண்டிய நிலம் இவ்வளவுதானா? வேறு யாரிடமும் அதிகமான நிலம் இல்லையா? அதிகமான நிலங்கள் வைத்திருக்கிறவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் இருக்கிறார்களே, இந்த நிலையில் இன்னும் முனைப்புடன் ஆராய்ந்து அதிகமான நிலங்களைக் கையகப்படுத்த அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு யார் யார் நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் ஒரு டிக்ளரேஷன் கொடுக்க வேண்டும். அதை வைத்துக் கொண்டு ஒன்றின் பின் ஒன்றாக அரசு முடிவெடுக்கிறது. தப்பிக்கும் வரையில் தப்பித்துக் கொள்ளலாம் என்று சில பேர்கள் கொடுக்காமலும் இருக்ககூடும். அவைகளைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். தொழிற்சாலைகளுக்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று நீங்களே சட்டமன்ற உறுப்பினர்களே சொல்கிறீர்கள். அவர்கள் உச்ச வரம்புச் சட்டத்தின்படி எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாமோ அதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் நிலங்களை வைத்து தொழிலை விருத்தி செய்யப்போகிறோம் என்று. அப்படி சொன்னால் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள், வேண்டிய வசதி இருக்கிறதா என்கிற விவரங்களை எல்லாம் வாங்கி, அது சரிதானா என்று பார்த்து அதற்குப் பிறகு அவர்கள் அதை இரண்டு வருடத்திற்குள் செய்ய வேண்டும். ஆறு மாதங்களுக்கொரு முறை இன்னென்ன செய்திருக்கிறோம் என்று புரோக்கிரஸ் ரிப்போர்ட் கொடுக்க வேண்டும், என்று சொல்லி கொடுத்து வருகிறோம்.

(முற்பகல் 9–10)

**திரு. எம். சின்னசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சேலம், மதுரை, கோவை போன்ற மாவட்டத் தலைநகரங்களிலே மட்டும்தான் எடுக்கப்பட்

[1982 மார்ச் 12

டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் போன்று தாலுகா தலைநகர்களிலும் சில பேர்கள் பினாமியாக அதிகப்படியான நிலங்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே, தாலுகா மட்டத்திலேயும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? இல்லையெனில் எதிர்காலத்திலாவது அப்படிச் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தாலுகா பக்கம் உச்சவரம்புச் சட்டமே இல்லை. தாலுக்காக்களிலே யார் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி நெல்லை ஆகிய இடங்களிலே தான் இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறோம். நடைமுறையிலே அமுல் படுத்திக் கொண்டிருக்கிறோம். மற்ற நகரங்களுக்கு இதை நீட்டிப்பது பற்றி யோசிக்கப்படும். தாலுக்காக்களுக்கு நிச்சயமாக வராது.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, கோவை மாநகரிலே மில்கள் பல அதிகமாக உள்ள இடம். நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தால் தொழில் வளர்ச்சி பலமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சருடைய மேலான கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து நகர்ப்புற நில உச்சவரம்பின் மூலமாக எடுக்கப்பட்ட நிலங்கள் நகர்ப்புறங்களிலே வெறுமனே கிடக்கிறது என்பதையும் அதனால சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன என்பதையும் வீட்டு வசதி.வாரியம் என்ற ஒரு வாரியம் ஏழை நடுத்தர விவசாயிகளிடமிருந்து நிலங்களை எடுத்து வீட்டு வசதி வாரியத்தில் வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக அரசு நகர்ப்புற உச்ச வரம்பு சட்டத்தினால் கையகப்படுத்தப்பட்ட இடங்களை வீட்டு வசதி வாரியத்திடம் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கேள்வியினுடைய இரண்டாவது பகுதிககு முதலில் பதில் சொல்கிறேன். வீட்டு வசதி வாரியத்திற்கு அந்த நிலம் கொடுத்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கோயம்புத்தூரில் மட்டுமல்ல, இந்த ஆறு நகரங்களிலேயும் தொழிற்சாலைகளை உண்மையாக அந்த இடங்களில் அபிவிருத்தி செய்யவும் பெரிதாக கட்ட வேண்டுமென்றும் சொல்லுகிற போது அவர்கள் மனுக்கள் கொடுத்தால் ஆராய்ந்து ஆன் கண்டிஷன் கொடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



82 மார்ச் 12]

அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட கடனுதவி பெறும் திட்டம்.

*வினா எண் 445—திரு. இரா. தாமரைக்கனி, திரு. கு. ரமணி, திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அரசினர் பள்ளிக் கூடங்களுககு கட்டிடம் கட்டுவதற்கும் கட்டப்பட்ட கட்டிடங்களை விரிவுபடுத்துவதற்கும் இன்சூரன்ஸ் கம்பெனி தேசியமயமாக்கப்பட்ட பேங்க் ஆகியவைகளிடம் கடன் வாங்கி கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாட்டிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கென மைய அரசின் திட்டக் குழுவின் அங்கீகாரத்துடன் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து ரூ. 95 கோடி கடன் பெற இம்மாநில அரசு முயன்றது. 1980—85 திட்டக்காலத்தைப் பொறுத்தவரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து பெறககூடிய நிதி வசதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால், பள்ளிக் கட்டிடங்கள கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்புகள் தற்போதைக்கு இல்லை என மைய அரசு திட்டக் குழு தெரிவித்துள்ளது. ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரு தொகையைக் கடனாகப் பெறுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள அரசினர் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்கப்படும்போதே கட்டடங்கள் பற்றி திட்டமிடுவது உண்டா? அது மட்டுமல்ல, உலக வங்கியின் மூலமாக கடன் பெற்று அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படுகிறபோது அதற்கேற்றாற் போல் கட்டடங்களை கட்டுவது என்பது செய்யப்படாமையின் விளைவு தான் இப்போது இவ்வளவு பெரிய தொகையை நாம் செலவிட வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்போது அப்படிப் பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். எல்.ஐ.சி. நிறுவனத்திடமிருந்து கடன் பெற முயற்சித்ததில் கடன் கிடைக்காத நிலையில் தேசிய வங்கியினிடத்திலே பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கட்டடங்கள் கட்டுமான கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை சொல்லி இருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்த

முயற்சித்தால் 5 கோடி ரூபாய் கடன் தரலாம் எனவும் சொல்கிறார்கள். இது குறித்த நடவடிக்கையை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் லீட் பேங்காக இருக்கின்ற இண்டியன் ஓவர்சீஸ் பேங்க், எடுத்து வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை அரசுப் பள்ளிக்கூடங்கள் எந்தவிதமான வசதியும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது—இது ஒரு பகுதி. இன்னொரு பகுதி, கட்டிடங்களே இல்லாமல், வாடகைக் கட்டிடங்களிலும் அல்லது கொட்டகைகளிலும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, மேல்நிலைப் பள்ளிகளில் இன்றைக்கு ஆய்வுக் கூடங்கள் கிடையாது; எந்தவிதமான வசதியும் கிடையாது. அம்மாதிரி இருக்கிற சூழ்நிலைகளின் அரசே, அதற்கு ஒரு கணிசமான தொகை ஒதுக்கி, அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி அரசின் எல்லா உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் கட்டிடங்கள் கிடையாது, ஆய்வுக் கூடங்கள் கிடையாது, ஒரு வசதியும் கிடையாது என்பதைப் போல் அமைந்திருக்கிறது. அது உண்மைக்கு மாறானது. நாமே 400-க்கு மேற்பட்ட ஆய்வுக் கூடங்களை, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே கட்டியிருக்கிறோம். எத்தனையோ கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதுவல்ல பிரச்னை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்தில், ஒவ்வொரு வசதிக்குறைவு இருக்கிறது. சில பள்ளிக்கூடங்களில், ஒன்றுமே இல்லாமலிருக்கிறது. அவற்றையெல்லாம் அரசே சர்வே பண்ணி, அதை ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையிலேதான் எவ்வளவு செலவாகும் என்று சொல்லிக் கொண்டிருப்பதுதான், இந்த ரூ. 95 கோடி. ரூ. 95 கோடி அளவுக்கு நாம் செலவு செய்தால், குறைந்த பட்சம் கட்டிடமே இல்லையென்ற நிலைமையையும், சில இடங்களில் கழிவறைகள் இல்லையென்பது போன்ற இந்த வசதிக்குறைவான நிலைமைகளை எல்லாம் நாம் தவிர்க்க முடியும் என்பதை உணர்ந்துதான் ரூ. 95 கோடி அளவிற்கு ஒரு திட்டத்திற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே எல்.ஐ.சி. நிறுவனத்திடம் நாம் திட்டம் அளிக்கின்றபொழுது, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இவை இடம் பெறவில்லையென்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆகவே, பாங்குகளிடம் கடன் கேட்டிருக்கிறோம். அவர்கள் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வட்டி விகிதம் போன்ற வேறு சிலவற்றில் அவர்கள் யோசனை சொல்லியிருப்பதால், அவை பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த முயற்சியை அரசே எடுத்துக் கொண்டிருக்கிறது.



**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, பெரும் பணக்காரர்கள் எல்லாம் மேல்நாடுகளில் ஏராளமான செல்வத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெரும் செல்வந்தர்களை அரசு அணுகி, வசதியற்ற பள்ளிகளைத் தத்து எடுத்துக்கொள்ளும்படி செய்ய ஆவன செய்யுமா? அது மட்டுமல்லாது, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு பணக்காரர்களை அணுகி ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எதுவும் தெரியாத நிலையில், பாவம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்களானால், அவர்களை என்னிடத்திலே அனுப்பினால், தேவையான அறிவுரைகளைச் சொல்லி பயன்படுத்திக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டிடம்தான் கேட்கிறார்கள். கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது நியாயமான ஒன்று என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வோம். இன்றைக்கு நகர சபைகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்திருப்பதைப் போல், இது ஒரு நியாயமான தேவையாக இருப்பதால், அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு ரூ. 95 கோடி செலவழித்துக் கட்ட வேண்டுமென்பதிலே, ஏதாவது ஒரு சிறப்புத் திட்டமாக வைத்து, இந்த ஆண்டிலோ அல்லது இன்னும் ஓராண்டுக் காலத்திலோ, இரண்டாண்டுக் காலத்திலோ எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலைமை வருமேயானால். ஷிப்ட் சிஸ்டம் என்று சொல்லி, வெளியிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குப் பெரிய உபகாரம் செய்தவர்கள் ஆவோம். அரசாங்கம் அந்த முறையிலே விசேஷ கவனம் செலுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் பல்வேறு முறைகளிலும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சித்து வருகிறோம். ஆகவே, கடன் கிடைத்து விடுமேயானால் அதை வைத்துக் கொண்டு, ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் அல்லது 3 ஆண்டுக் காலத்திலே பெரு முயற்சி எடுத்து—தன்னிறைவுத் திட்டம் என்று குறிப்பிட்டதைப் போல்தான் இந்தத் திட்டம் அமைந்

[1982 மார்ச் 12

திருக்கும்—பெரும் தொகையை வைத்துக் கொண்டு, எந்த எந்தப் பள்ளிக்கூடத்திற்கு, என்ன என்ன தேவையோ அதை செய்யக் கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றலாம். ஆகவே, அந்த முயற்சியிலேதான் அரசு இப்பொழுது இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பள்ளிக் கட்டி டங்களே இல்லாதது போல் உறுப்பினர்கள் அவர்கள் சொல் கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அப்படிச் சொல்ல வில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகள், அங்கு வசதிகள் மிகவும் குறைந்த அளவே இருக்கின்றன. இன்னும் கட்டிடங்களே இல்லாமல், குடிசைகளிலே இருப்பதால், பல இடங்களில் தீப்பிடித்து விடுகிறது. அதனால், பல இலட் சங்கள் சேதம் ஏற்படுகின்றது. தீப்பிடித்த கட்டிடங்களைப் புதுப்பிக்க வெகுநாள் ஆகிறது. அதனால், மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவேதான் அதை நான் சொன் னேன். எனவே, அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு ரூ. 95 கோடி என்பது ஒரு பெரிய தொகை அல்ல. மாநில அரசு இன்றைக்கு மதிய உணவிற்காக ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்போகிறது. ஆகவே, இதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயித்து, ஒன்றிரண்டு வருடங்கள் அல்லது 5 வருஷம் என்று நிர்ணயித்து இம்மாதிரி குறைகளை நீக்குவதற்கு அரசு திட்டமிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா பள்ளிக்கூடங்களிலும் வசதியில்லை யென்று சொன்னதுபோன்று அந்த வாசகம் வந்ததால்தான் அதை நான் சொன்னேன். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறை பாடு இருக்கிறது என்பதைத்தான் இந்த ரூ. 95 கோடி காட்டிக் கொண்டிருக்கிறது. ரூ. 95 கோடி அளவிற்குக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத்தான் அந்தத் தொகையினுடைய அளவு நமக்குக் காட்டுகின்றது. ஆகவேதான் நாம் அந்த அடிப்படையில், உடனடியாக கடனைப் பெற்றிட முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் குறைபாடுகளுக்கு இரண்டு காரணங்கள். ஒன்று, பள்ளிக்கூடங்களைத் திறக்கின்ற முயற் சியிலே ஈடுபட்ட அரசு, அதற்குக் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியிலும் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அதை எடுக்கவில்லை. அடுத்தது, கட்டிடம் கட்டித் தரு கிறோம் என்று தெரிவித்த அந்தக் கட்டிடக் குழுவினர் அந்த முயற்சியிலே ஈடுபட்டு, குறைந்தபட்சக் கட்டிடத்தைக் கட்டித் தரவில்லை. ஆனால், நாம் இப்பொழுது யார், ஏன் செய்யவில்லை யென்கின்ற குறைபாடுகளைச் சொல்லிக்கொண் டிருந்தால் காரியம் நடைபெறாது. ஆகவேதான் அரசு இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.



982 மார்ச் 12]

ஆரம்பப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 446—திரு. பூ. மு. நரசிம்மன், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : 1—5 வகுப்புகளைக் கொண்ட முதல்நிலை—பிரைமரி— பள்ளிகளில் உடற்பயிற்சிக்கு என்று தனியாக ஆசிரியர்கள் நியமிக்கும் எண்ணம் இல்லை. நடுநிலைப் பள்ளிகளில் மட்டும் படிப்படியாக ஆண்டுதோறும் அரசு நிதிநிலை இடம் தரும் அளவுக்கு உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் கூடுதலாக ஏற் படுத்தப்பட்டு வருகின்றன. 1981–82-ல் அவ்வாறு நடுநிலைப் பள்ளிகளில் 150 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. 1982–83-ல் மொத்தம் (நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து) 150 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படவிருக் கின்றன. அவற்றில் ஏறத்தாழ பாதி நடுநிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்படும்.

(முற்பகல் 9-20)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளிலே உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது இல்லை என்றாலும் கூட, உண்மையிலேயே ஆரம்பப் பள்ளி மாணவர்கள் விளையாடுவதற் கான விளையாட்டு மைதானங்கள் பெரும்பாலான பள்ளி களில் இல்லை. ஆசிரியர்களுடைய கணக்கிலே வேண்டுமானா லும் விளையாட்டு மைதானம் இருப்பதாகக் கணக்கிட்டு இருக் கிறார்கள். எனவே அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலே உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிட்டாலும் அந்த மாணவர் களுக்கு முறையான விளையாட்டுப் பயிற்சியினை அங்கே இருக் கின்ற ஆசிரியர்களே வழங்க வகை செய்யும் வகையில் விளை யாட்டு மைதானத்தை அரசே வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கின்ற பள்ளிகளுக்கு எவ்வளவு இடம் நாம் பெற முடியுமோ அந்த அளவுக்கு இடத்தைப் பெற்று,

பொது மக்கள் மூலமாகப் பெற்று, அந்த பள்ளிகளுக்கு நாம் தந்திருக்கிறோம். உடற் பயிற்சி ஆசிரியர்கள் இல்லை என்றாலும், மற்ற ஆசிரியர்களுக்கும் அந்த உடற் பயிற்சிக் கல்வியில் ஓரளவுக்குப் பயிற்சி தந்து தான் அந்த ஆசிரியர் பயிற்சி முழுமை ஆகின்றது. ஆகவே அவர்கள் இந்த விளையாட்டுகளை அந்தச் சிறு குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆகவே அவர்கள் இதைச் சொல்லித் தருவார்கள். எங்கெங்கு உடற் பயிற்சி ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அங்கு அந்த உடற் பயிற்சி ஆசிரியர்கள் உடற் கல்வியை போதிப்பார்கள். ஒரு ஊரிலே எந்த அளவுக்கு மைதானத்தை நாம் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பெற்றுத் தருவதிலே அரசு முயற்சி எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் (சால்லியதைப் போல உயர்நிலைப் பள்ளிகளிலே 8-ம் வகுப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு முறையாகப் பயின்ற உடற் பயிற்சி ஆசிரியர்கள் மூலம் உடற் பயிற்சி பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. படிப்படியாக நடுநிலைப் பள்ளிகளுக்கும் நியமனம் செய்யப்படுவதைத் தவிர்த்து மாணவர்கள் எண்ணிக்கையிலே இதிலெல்லாம் பார்க்காமல், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் உடனே உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கும் ஏற்பாட்டை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் இந்த உடற் பயிற்சி ஆசிரியர்களைப் போட வேண்டும் என்பது தான் அரசினுடைய ஆசை. அதற்கான முயற்சிகளை நாம் எடுக்கிறோம். ஆனால் நிதி ஆதாரங்களை வைத்துப் பார்க்கிற போது இது தான் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே வருடம்தோறும் ரூ. 150, 200, 250 என்கிற அளவில் உடற் பயிற்சி ஆசிரியர்களைப் போட்டுக் கொண்டு இருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளிலே உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கப் படவில்லை என்றும், நடுநிலைப் பள்ளிகளிலே உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு 150 உடற் பயிற்சி ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். தமிழகத்தில் 378 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இப்படி 378 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கிற போது ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பதவியையாவது நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது உடல் பயிற்சி ஆசிரியர்கள் எண்ணிக்கை மட்டுமல்ல. செகண்டரி கிரேடு பி.டி. போன்ற பல்வேறு வகையான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எவரெவர்களுக்கு எவ்வளவு பதவி என்று ஒதுக்கித்தான் நாம் வந்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே நிதி ஆதாரங்களைப் பொறுத்த வரையில் நமக்கு இருக்கிற வசதிகளுக்கு ஏற்ப, இந்த ஆசிரியர்களை நாம் நியமிக்கிறோம். இன்றைய நிலையில் இதற்கு மேல் போடுவதற்கு இல்லை.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக பள்ளிக் கூடங்களில், யோகாசன பயிற்சி பயிற்றுவிப்பதற்கான அறிவுரைகளை அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது. கல்வித் துறையும், மருத்துவத் துறையும் கோ-ஆர்டினேட் செய்து, யோகாசனப் பயிற்சியை ஆரம்பப் பள்ளிகளில் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. யோகாசனத்தை நாம் தடை செய்யவில்லை. அது உடற் பயிற்சியில் ஒன்றாகக் கருதப்படுவதால், எங்கெங்கே உடற் பயிற்சி ஆசிரியர்கள் அதைத் தெரிந்து வைத்துக் கொண்டு இருக்கிறார்களோ அங்கே அவர்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, உடற் பயிற்சி பாடத் திட்டத்தில் வெறும் டிரில், விளையாட்டு மட்டுமே கற்றுத் தரப்படுகிறது. நீச்சல் தெரியாத காரணத்தால் பல சிறுவர்கள் உயிரிழக்கிற நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. அந்த வகையில் நீச்சல் ஒரு சிறந்த உடற் பயிற்சியாகவும், உயிர் காக்கும் மருந்தாகவும் இருக்கிறது. ஆகவே, எல்லாப் பள்ளிகளிலும் நீச்சல் கட்டாயப் பாடமாக ஆக்கப்படுமா? எல்லா இடங்களிலும் நீச்சல் குளம் ஏற்படுத்தியோ அல்லது பெரிய கிணறு அமைத்தோ நீச்சல் கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் நீச்சல் குளங்களிலே போதுமான அளவிற்கு மாணவர்கள் வந்து பயிற்சி பெறுவது இல்லை என்பது தான் நாம் அனுபவத்தில் கண்டு வரும் உண்மையாகும். ஆகவே, முதலில் இஷ்டப்படுபவர்கள் அந்தப் பயிற்சியைப் பெறுவதற்கான முறையில் நாம் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அது குறித்து அந்த விளையாட்டுத் துறையும் புதிதாக நீச்சல் குளங்களை அமைக்க ஆங்காங்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கட்டாயமாக்குவது என்பது இன்றுள்ள சூழ்நிலையில் சரியாக வராது.

தேவநேயப் பாவாணரின் நூல்களை வெளியிடும் திட்டம்.

*வினா எண். 447—திரு. பெ. திருமாறன், திரு. எம்.சின்னசாமி, திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதி வைத்திருக்கும் மொழி நூல்களை அரசு வெளியிட திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாவாணர் அவர்கள் எழுதியுள்ள வெளியிடப்பட்ட வெளி வராத நூல்களின் விவரங்கள் அவைகளின் பதிப்புரிமையாளர்கள் ராயல்டி முதலிய தகவல்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சேகரிக்கப்படுகின்றன. அவ்ரது அறிக்கை கிடைத்தவுடன் நூல்களை அரசே வெளியிடுவது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, அது எவ்வளவு நாளில் வெளியிடப்படும் ? அதற்காக ஒரு தனிக்குழு அமைக்க அரசு முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே விவரங்களைப் பல்வேறு தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்று நாம் செயல்படுத்தி வருகிறோம். அது வந்தவுடன், அந்த விவரங்களைச் சேகரித்து பரிசீலிக்கப்படும். இதற்காகத் தனிக் குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தமிழில் எழுத வேண்டும், பேச வேண்டும் என்ற கருத்தில் தனித் தமிழை வைத்துக் கொண்டே தமிழ்ப் பேரறிஞர் தேவனேயப் பாவணர் பெயரில் நூல் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்று அவருடைய இரங்கல் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த முயற்சி மேற் கொள்ளப் பட்டு, அவர் பெயரால் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாவட்ட நூலகக் குழுவால் அமைக்கப் பட்டுள்ள மாவட்ட நூலகத்திற்கு தேவனேயப் பாவணர் பெயரிடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழுஞாயிறு தேவனேயப் பாவணர் அவர்கள் வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள கோமதிபுரத்தைச் சேர்ந்தவர். அங்கே அவருக்கு ஒரு நினைவாலயம் ஏற்படுத்த அரசு முன்வருமா ? அவரது வொர்க்ஸ் பூராவையும் ரிசர்ச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆகவே, தனியாகக் கேள்விகள் கேட்க வேண்டும். இருந்தாலும் அவர் எழுதிய நூல்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற அடிப்படையில், இது வரையில் வெளி வராத நூல்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த வகையில் அவரது நூல்கள் பாதுகாக்கப்பட்டு ஆராய்ச்சிக்கும் பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதித் துறையில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்குச் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள்.

*வினா எண். 448—திரு. க. பாரமலை : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதித்துறையில் Ministerial Service State Judicial Service Higher Judicial Service ஆகியவற்றிற்கான நேரடி தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட மற்றும்மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடுகள் செய்ய தமிழ்நாடு உயர்நீதிமன்றம் ஒப்புக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு இதுவரை எத்தனை நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஏற்கனவே பணி விதிகளில் இதற்கான வழிவகைகள் உள்ளன.

| | தாழ்த்தப் பட்ட வகுப்பு. | மலைவாழ் மக்கள். |
|---|---|---|
| (ஆ) 1. தமிழ்நாடு உயர்நீதித் துறைப்பணி (Tamil Nadu State Higher Judicial Service) | 1 | .. |
| 2. தமிழ்நாடு நீதித் துறைப்பணி. (Tamil Nadu State Judicial Service) | 28 | .. |
| 3. தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுட் பணி (Tamil Nadu State Judicial Ministerial Service) | 498 | 77 |

[1982 மார்ச் 12

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான கமிஷனின் பரிந்துரையின் மீது மத்திய அரசு மாநிலங்களுக்குப் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் முதன்முதலாக நம்முடைய மாநில அரசாங்கம் அதை அமல் படுத்தஓப்புக் கொண்டு இருப்பதாக கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே அது நடைமுறையில் உள்ளதாகவும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எந்தெந்த தரத்தில் எவ்வளவு அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சொல்லப்பட்டு இருக்கின்ற எண்ணிக்கை அந்த மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கின்ற 18 சதவீதம் அளவிற்கு இருக்கிறதா ? அப்படியில்லையென்றால், அந்த அளவிற்கு அவர்களின் விகிதாச்சாரத்தை உயர்த்துகின்ற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றதா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-க்குப் பிறகு சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமான நீதித் துறை பணிகளுக்குத் தேர்வுகள் நடக்காமல் இருந்த காரணத்தினால், ஏற்கனவே பதவியில் இருக்கின்றவர்களே தொடர்ந்து இருந்து வந்த காரணத்தினால் 18 சதவீதம் என்ற அளவிற்கு வராத நிலை இருக்கிறது. ஆனால் தற்போது அரசு ஒரு முடிவைச் செய்திருக்கிறது. உயர்நீதி மன்றமே, 1965-லேயிருந்த தற்காலிகமாக உள்ள சர்வீஸ் கான்டிடேட்ஸிலிருந்து இவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து அந்தப் பதவிகளிலே அமர்த்தி அப்படி அந்தத் தேர்வை நடத்துகிறபொழுது பல கட்டங்களிலே உயர்நீதிமன்றம் கம்யூனல் ஜி.ஓ. வை பாலோ பண்ணாத நிலையும் இருந்த காரணத்தால் அந்தக் குறைபாடு அங்கு இருக்கத்தான் இருக்கிறது. அதைச் சரி செய்வதற்காக சர்வீஸ் கமிஷன் மூலமாக ரெகுலரைஸ் செய்ய வேண்டுமென்று புதிய தேர்வு நடக்க வைக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது அந்தப் பிரச்னைகள் தீர்ந்து விடும்.

**திரு. க. பாரமலை :** தலைவரவர்களே, ஏற்கனவே அது நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்ற குறைபாட்டை நீக்குவதற்கு அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஹையர் ஜூடிஷீயல் சர்வீஸ் என்று சொல்லப்படும் இந்த அளவிற்கு மாவட்ட நீதிபதிகள் நியமனங்களிலும் இந்த நியமன முறை கடைப்பிடிக்கப்படுமா ? ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் விரைவில் அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு அரசு முன் வருமா!



1982 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட நீதிபதிகளின் நியமனத்திலும் கூட இந்த கம்யூனல் ஜீ. ஓ. பின்பற்றப்படுகிறது. அண்மையில் கூட இருக்கின்ற மூன்று காலி இடங்களுக்காகத் தேர்வினை நடத்திய உயர்நீதிமன்றம் தகுதி மிக்கவர்கள் ஷெட்யூல்ட் காஸ்ட் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட முடியவில்லை என்ற நிலையில் தேர்ந்தெடுக்காமல் அரசுக்குப் பரிந்துரை செய்த பொழுது மீண்டும் விளம்பரம் செய்து தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று தாழ்த்தப்பட்டவர்களுக்கான கோட்டாவை ஃபில் அப் செய்ய வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு அரசு கோரியுள்ளது.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாதிரி ஒதுக்கீடுகளில் இதுவரையில் பல துறைகளிலும் உள்ள அனுபவம் ஒதுக்கீட்டுக்கும் குறைவாகவே நியமனம் செய்யப்படுகிறது என்பது. பல்வேறு காரணங்களால் அப்ளிகேஷன்கள் ரிஜெக்ட் ஆகி காலிஸ்தானங்கள் அப்படியே நின்று கொண்டேயிருக்கிறது. ஆகவே, ரிசர்வேஷனுடைய பர்ப்பசே டிஃபீட் ஆகிறது. எனவே, இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த அப்பிளிகேஷன்களை பரிசீலனை செய்யும்பொழுது இதுவரை இருக்கும் ஸ்டாண்டர்டை ரிவிஷன் செய்து இன்னும் அக்காமடேட் பண்ணுவதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினவர்கள் அவர்களை அக்காமடேட் செய்ய வேண்டுமென்பதற்காக ஸ்டாண்டர்டை ரிவிஷன் செய்ய வேண்டுமென்று சொல்லும்பொழுது தரம் குறைந்துவிடும். ஆனால் 1965-வாக்கிலே, அதற்கு முன்னாலே இருந்த முறையை நான் சொன்னேன். தற்பொழுது பல துறைகளிலும் ஸ்டாண்டர்ட் இன்க்ரீஸ் ஆகியிருக்கிறது. அண்மையிலே நடத்தவிருக்கின்ற அந்தத் தேர்வுகளில் விரைவிலே அந்தக் கோட்டா முழுமையாக நிரப்பப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதித் துறை அதிகாரிகளுடைய நியமனம் சர்வீஸ் கமிஷன் மூலம் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படிச் செய்யப்படும் பொழுது வாய்மொழித் தேர்வு மட்டுமல்லாமல் சர்வீஸ் கமிஷனிலே குரூப் 1, போன்றவற்றிற்கு நடத்துவதைப் போன்று போட்டி தேர்வு என்ற அடிப்படையில் தேர்வு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 12

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்குரைஞர்களிடமிருந்தும், சர்வீஸில் இருக்கின்றவர்களிடமிருந்தும் நீதித் துறைக்கு இது போன்ற பலரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது ஓரல் இண்டர்வியூ தான் மிகச்சிறந்த முறையாக இருக்கும் என்ற கருதப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. Whether he is in possession of thorough and profound knowledge can be instantly tested during the interview என்ற அடிப்படையில் செய்யப்படுகிறது. அதுவே சிறந்த முறையாக இருக்கும் என்பதால் அதை மாற்ற அரசுக்கு உத்தேசமில்லை.

அன்னூர், அவிநாசி யூனியன்களில் அமைக்கப்பட்டுள்ள கைப் பம்புகள்

*வினா எண். 449—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னூர், அவினாசி யூனியன்களில் உள்ள 148 கைப்பம்புகளுள் 48 பம்புகள் வேலை செய்யாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 149 கைம்பம்புகளில் 24 கைப்பம்புகள் நிலத்தடி நீர் பற்றாக்குறையின காரணமாக இயங்காமல் உள்ளன. 10 கைப்பம்புகள் பழுது அடைந்துள்ளன.

(ஆ) 24 கைப்பம்புகள் உள்ள இடத்தில் ஆழ்த்துறை கிணற்றுடன் கூடிய மாற்று கைப்பம்புகள் அமைக்கும் வேலைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்யப்பட்டு வருகின்றன. அன்னூர், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 10 கைப்பம்புகள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த அன்னூர், அவினாசி யூனியன்களில் 149 கைப்பம்புகளில் 24 கைப்பம்புகள் நிலத்தடி நீர்பற்றாக்குறையின் காரணமாக இயங்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதலில் கைப்பம்புகளைப் போடும்போதே 300 அடி ஆழம் வரையில்



1982 மார்ச் 12]

எந்த அளவுக்குத் தண்ணீர் இருக்கும், வறட்சியாக இருக்கும்போதும் எந்த அளவுக்கு சப்ளை இருக்கும் என்று பார்த்துத்தான் போடுகிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படி நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்பட்டது ? எப்படி அதனால் பழுது அடைந்தது ? பொதுவாக பழுதுபார்க்கும் வேலையில் ஒரு சீரான ஏற்பாடு இல்லாத காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் ஒரு சீரான உடன்பாடு இல்லாத சர்ரணத்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. ரிப்பேர் ஆனால் சீக்கிரமாக பழுதுபார்த்து, செயல்படுத்தும் ஏற்பாட்டை அரசாங்கம் உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர்ர்களே, நிரம்ப தண்ணீர் இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் ஆழ்துளைக் கிணறுகள் வெட்டி, கைப்பம்புகள் பொருத்தப்படுகின்றன. சில இடங்களில் நாம் எதிர் பார்த்த அளவுக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. நாளை அவைக்கு வருவோம் என்ற நம்பிக்கையோடுதான் போகிறோம். சிலர் இடையிலே போய்விட்டால் என்ன செய்வது ? (குறுக்கீடுகள்) எப்படியும் வருவோம் என்ற நம்பிக்கையில்தான் போகிறோம். ஆக அந்த அடிப்படையில்தான் இடத்தைப் பார்த்து, நீரின் அளவைப் பார்த்துதான் செய்கிறோம். சில நேரங்களில் தவறு ஏற்பட்டுவிடுகிறது. அந்த 24 கைப்பம்புகளுக்கும் தண்ணீர் சப்ளை வரவில்லை என்பதால் மாற்று கைப்பம்புகள் 24 போடும் வேலை நடைபெற்று வருகிறது, விரைவில் வேலை முடிந்துவிடும்.

திரு. ரு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், நிலத்தடி நீர் இல்லாததால் சில பம்புகள் வேலை செய்யாத நிலையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த ஏரியா முழுவதும் வறண்டுபோய் இருக்கிறது. அங்கே தண்ணீர் வசதி இல்லை. இந்த நிலையில் எவ்வளவு ஆழத்தில் பம்பு செட்டைப் பொருத்தினாலும் நிலத்தடி நீர் இல்லாமல் இருக்கும்போது அங்கே விசேஷமான ஒரு குடிநீர் விநியோகத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மேட்டுப்பாளையம் ஆற்றில் இருந்தோ மற்ற பகுதிகளிலிருந்தோ ஒரு திட்டத்தைப் போட்டு, இந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியுமா ? அல்லது வேறு எந்த வகையில் குடிநீர் திட்டத்தை செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 24 பம்புகளுக்குப் பதிலாக மாற்று பம்புகள் போடப்படுகின்றன. அந்த வேலை நடைபெறுகிறது. 10 பம்புகள் ரிப்பேர் செய்யப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகின்றன. தண்ணீர் வராத 24

இடங்களைப்
பு செட்டுகளுக்கும் எஞ்சினீயர்கள் மாற்று
த்து பம்பு செட்டுகள் பொருத்தும் வேலையில் ஈடுபட்டு
க்கிறார்கள். இதில் வெற்றி பெறுவோம் என்று நம்பலாம்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, மாண்புமிகு
முகம் அவர்கள் பலமுறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்
பம்புசெட்டுகள் பழுதடைந்து இருக்கின்றன என்று சொல்
தும், மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லை என்று சொல்வது
ாக இருந்தது. அதனால்தான் இந்தக் கேள்வியே இங்கே
பந்தது. எப்படி இருந்தாலும் பம்செட் மோட்டார் ரிப்பேர்
செய்யும் பணியை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட
ன்னால் அது சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பதை நாங்
ள் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உள்
ாட்சி நிறுவனங்களுக்கே குறைந்தபட்சம் பழுதுபார்க்கும் பணி
யையாவது ஒப்படைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
இதுபற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அந்தந்த
சமயத்திற்கு ஏற்றாற்போல் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து
மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கருத்தைப் பற்றியும்
அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9—40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, பம்ப் செட்டு
களின் மெயின்டனன்ஸைப் பொறுத்தவரையிலே அதனைக் குடி
நீர் வாரியத்திலிருந்து எடுத்துவிட்டு, மீண்டும் பஞ்சாயத்து
போர்டுகளிலே கொடுப்பதற்காக உத்தரவுகள் போட்டதாகவும்
அரசு அதை உடனடியாக அம[illegible]படுத்தி இருப்பதாகவும் நம்
முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகப்
பத்திரிகையிலே வந்திருக்கின்றது. முதலமைச்சர் அவர்கள்
அப்படி ஏதாவது ஒரு கருத்தினைச் சொல்லி அதற்கான உத்தரவு
கள் போடப்பட்டிருக்கின்றதா என்பதை அறிவிப்பார்களா ? அந்
தப் பொறுப்புக்கள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்க வேண்
டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகை
யிலே வந்திருக்கின்ற செய்தி உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.
ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விரிவான பதில் தரப்படும்.



ஜெயம்கொண்டம் தொகுதியில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம்குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 450—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதியில் குடி தண்ணீர் வசதிக்காக எத்தனை ஆழ் குழாய்க் கிணறுகள் இதுவரை பூர்த்தியாகியிருக்கிறது ?

(ஆ) பூர்த்தியான ஆழ் குழாய்க் கிணறுகளிலிருந்து உடனடியாகப் பம்பு செட்டுகள் பொருத்தி அப்பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 33 ஆழ் துளைக் கிணறுகள்.

(ஆ) 32 ஆழ்துளைக் கிணறுகளில் இறைப்பான்கள் பொறுத்தப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மீதமுள்ள ஒரு ஆழ்துளைக் கிணறு உப்பு நீரானதால் வேறு ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை மின்சார இரயில் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 451—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை மின்சார இரயில்பாதை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து மயிலாப்பூர் லஸ் வரை மின்சார இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது. இந்த இரயில் பாதையின் மொத்த நீளம் 8·45 கி. மீ. இது கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து சென்னை மத்திய சிறை வரை 2·93 கி. மீட்டருக்கு தரைமட்டத்திலும், மிகுதி

புள்ள 5·52 கிலோ மீட்டருக்கு சுமார் 18 அடி உயர மேல் மட்டத்திலும் இருக்கும். இத்திட்டத்திற்காக சுமார் ரூபாய் 60 கோடி வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு, இத் திட்ட வேலையை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியை 1981-82 ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டம் மத்திய திட்டக் குழுவிடமும், மத்திய இரயில்வே அமைச்சகத்துடனும் கலந்து ஆராய்ந்து வரப்படுகிறதென்று மத்திய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக குறிப்பிட்டபோது மத்திய அரசிடம் இருந்து இதற்கு சேங்ஷன் வெகு விரைவிலே கிடைக்கும் என்று நம்புகிறேன் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தற்போது இரயில்வே பட்ஜெட்டும் வெளியாகிவிட்டது. அந்த இரயில்வே பட்ஜெட்டிலே இதுபற்றி இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் அதிலே புதிய பாதைகளைப் போடுவதைப் பொறுத்தவரையிலே ரொம்ப ரெஸ்ட்ரிக்ஷன்கள் போடப்பட்டிருக்கின்றன. மேலும் இரயில்வே பட்ஜெட்டைத் துண்டுவிழுந்த பட்ஜெட்டாக டிக்ளேர் பண்ணி இருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தக் குறிப்பிட்ட திட்டத்திற்கு மத்திய சர்க்கார் சாங்ஷன் தரும் விரைவிலே என்று அமைச்சரவர்கள் சொல்வது எதை வைத்து ? அப்படி அதற்கான இண்டிகேஷன்ஸ் ஏதாவது ஸ்பெசிஃபிக்காக வந்திருக்கின்றதா ? அப்படி என்றால் அது என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை மத்திய திட்டக் குழுவிற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது என்றும், இத்திட்டத்திற்கு விரைவிலே ஒப்புதல் மத்திய திட்டக் குழு இரயில்வே அமைச்சகத்திற்கு அளிக்கும் என்றும் மத்திய இரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் பற்றி மத்திய திட்டக் குழுவிடமும் மத்திய இரயில்வே அமைச்சகத்திடமும் கலந்து ஆராய்ந்து வரப்படுவதாக மத்திய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளித்து அதற்குத் தேவையான நிதியினை நடப்பு நிதியாண்டிலே ஒதுக்கக் கோரி மத்திய திட்டக் குழு அமைச்சர் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் 31—1—1982 அன்று ஒரு நேர்முகக் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் மனதிலே வைத்துத்தான் நல்ல முறையிலே நடைபெறும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.



திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய அந்த ஃபேக்ட்ஸ்களைப் பொறுத்தவரையில் சந்தோஷம். ஆனால் ஜனவரி மாதத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பதாகக் கூறினார்கள். அரிசி, கோதுமை போன்றவற்றில் தேவையைப் பற்றிக் கூட கடிதம் எழுதியும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதேபோன்று இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுதியும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்று இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரும் சொல்லி இருக்கிறார். ஆகவே கடிதம் எழுதுவதைப் பொறுத்தவரையிலே பிரயோஜனம் இல்லாமல் இருக்கின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்களே நேராகப் போய் பிரதம அமைச்சர் அவர்களிடம் சொல்லி ஏற்பாடுகள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய மின்சார ரயில் பாதைத் திட்டம் நிச்சயமாக வரும் என்று அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதைப்போலவே மதுரை நகரத்தைச் சுற்றி, சர்க்குலர் மின் ரயில் திட்டம் அமைப்பதற்கு மத்திய அரசிடம் இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## திருவரம்பூர் பகுதியில் E.S.I. மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 452—திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவரம்பூர் பகுதியில் E.S.I. மருத்துவமனை நிறுவ இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அம் மருத்துவமனை கட்டிடங்கள் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) திருவரம்பூர் பகுதியில் இ. எஸ். ஐ. மருந்தகம் கட்ட இடம் முதல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தை கூட்டு ஆய்வுக்குழு (Joint Inspection Team) பார்வையிட்டு ஒப்புதல் அளித்த பின்பு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 453, 454, 455, 456 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

### ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கான மானியம்.

*வினா எண் 457—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன உர விலைகள் மலிவாக இருக்க வேண்டுமென்பதற்காக தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் உரத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு மானியமாக நிதி கொடுத்துள்ளதா—

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு எவ்வளவு தொகை கொடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

| (ஆ) வருடம். | ரூபாய் கோடியில். |
|---|---|
| 1978–79—(ஜூலை 1978 முதல் ஜூன் 1979 வரை). | 18·46 |
| 1979–80—(ஜூலை 1979 முதல் ஜூன் 1980 வரை). | 27·93 |
| 1980–81—(ஜூலை 1980 முதல் ஜூன் 1981 வரை). | 8·47 |



திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரசாயன உரத் தொழிற்சாலைக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு 20 கோடி ரூபாய் வரையில் மானியமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறது. இதனால் விலை ஏதாவது குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. மற்ற இடங்களில் உரங்களின் விலை என்ன விலைக்கு ஆலோசித்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூறுவாரா ? விற்கப்படுகிறதோ, அதே விலைக்குத்தான், இந்த தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகும் உரங்களின் விலையும் விற்கப்படுகின்றன. ஆகவே இப்படி ஆண்டுதோறும் 20 கோடி 30 கோடி ரூபாயை இந்தத் தொழிற்சாலைக்கு மானியமாகக் கொடுப்பதை விட, இதை நேரிடையாக விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படும் வகையில் வேறு ஏதாவது முறைகளில் உபயோகப்படுத்த முடியுமா என்பதைக் குறித்து அமைச்சர் அவர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாநில அரசினுடைய பங்கு எதுவும் இல்லை. ஒவ்வொரு ஆலையிலும் உற்பத்தியாகிற பொருள்களுக்கு மத்திய அரசு ஒவ்வொரு விலையை நிர்ணயிக்கிறது. இந்த இரு விலைகளுக்கும் இருக்கும் வித்தியாசத்தை மத்திய அரசு உதவித் தொகையாக, மானியமாக அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிறது. உற்பத்தி செய்கிற தொழிற்சாலையின் உற்பத்தி விலையை விட, மத்திய அரசு நிர்ணயிக்கிற விலை குறைவாக இருந்தால், அந்த ஆலைகள் நஷ்டப்பட்டுவிடாமல் இருப்பதற்காக, ஒரு இழப்பீடு தொகையாக மத்திய அரசு மானியமாக, உதவித் தொகையாக வழங்குகிறது. ஆகையினால் இதிலே மாநில அரசு தலையிட்டு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரத் தொழிற்சாலையில் மாநில அரசின் பங்கு எத்தனை சதவீதம் ? இதிலே தனியாருடைய மூலதனம் எத்தனை சதவீதம் ? அதனுடைய நிர்வாகம் தனியாரினால் நடத்தப்படுகிறது என்பது உண்மையா ? இதிலே மாநில அரசு தன்னுடைய பங்குத் தொகை சதவீதத்தை அதிகமாக்கி, தானே அந்த நிர்வாகத்தை எடுத்து நடத்த ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய தலைவராக எம். ஏ. சிதம்பரம் அவர்கள் இருக்கிறார்கள். வைஸ்-சேர்மேனாக வெங்கட்டரமணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் இருக்கிறார்கள். எக்சிகியூட்டிவ் வைஸ்-பிரசிடெண்ட்டாக ஏ. சி. முத்தையா அவர்கள் இருக்கிறார்கள். இந்த நிறுவனத்தின் மொத்த மூலதனம்—ஆரம்பிக்கிறபோது 105 கோடி ரூபாய். இது ஒரு ஜாயின்ட்

செக்டார் நிறுவனம். ஒரு ஜாயின்ட் செக்டார் நிறுவனத்தில் அரசினுடைய பங்கு எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவுதான் இருக்கிறது. இதன் மூலக் கேள்வியில் மத்திய அரசினுடைய உதவித் தொகையைப் பற்றிக் கேட்டிருப்பதால், விரிவான விளக்கங்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அளவுக்கு என்னிடத்தில் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–50.)

திரு. சோ. அழகர்சாமி : நம் அரசு பலவகைகளில் 51 சதவீதம் மூலதனம் போட்டிருக்கிறது. தனியார் 49 சதவீதம் மூலதனம் போட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தனியாரிடம் இந்த நிறுவனத்தை ஒப்படைக்க வேண்டிய அவசியமென்ன? அதை அரசாங்கமே ஏற்று நடத்தி, மத்திய அரசு மானியத்தைப் பெற்று, விவசாயிகளுக்கு மலிவான விலையில் உரம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் நிறுவனத்திற்கும் ஜாயின்ட் செக்டாருக்கும் வித்தியாசம் இருக்கிறது. இது ஒரு ஜாயின்ட் செக்டார் நிறுவனம். 51 சதவீதம் அரசாங்கம் மூலதனம் போட்டிருக்கிறது. தனியார் 49 சதவீதம் போட்டிருக்கிறார்கள். ஜாயின்ட் செக்டார் நிறுவனத்தை நடத்தும்போது அதன் விதிமுறைகளுக்கேற்ப அரசுச் சார்பில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி வைஸ்-சேர்மனாக இருக்கிறார். சேர்மன் தனியாராக இருக்கிறார் அவ்வளவுதான்.

திரு. எல். இளையபெருமாள் : நம் அமைச்சர் அவர்கள் நம் மாநில அரசுக்கு ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். நாம் மூலதனம் 51 சதவீதம் போட்டிருக்கிறோம். மத்திய அரசும் மானியம் கொடுக்கிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய கோடிக் கணக்கில் செலவு செய்கிறோம். நான் ஏற்கனவே சொல்லியிருப்பதைப்போல் ஒரு மூட்டை நெல்லை விற்றால் கூட ஒரு மூட்டை உரம் வாங்க முடியவில்லை. அந்த அளவிற்கு விவசாயிகள் வசதியற்ற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே நமக்கு மூலதனம் 51 சதவீதம் இருக்கும்போது ஏழை விவசாயிகளுக்கு உதவக்கூடிய முறையில் குறைந்த விலையில் உரம் கொடுக்க எதிர்காலத்திலாவது பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாநில அரசுக்கு அங்கே எதுவுமே இல்லை என்று நான் சொல்லவில்லை. பைனான்ஷியல் பாட்டர்னை தெளிவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் அதைச் சொல்கிறேன். டிட்கோ சார்பில் ஏறக்குறைய 440 இலட்சம் ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. ப்ரைவேட் ப்ரொமோட்டர்ஸ் 309 இலட்சம் ரூபாய் போட்டிருக்கிறார்கள். பப்ளிக் அன்ட் அதர்ஸ் ஏறக்குறைய ரூ. 950 இலட்சம் போட்டிருக்கிறார்கள். ப்ரபரன்ஸ் ஷேர்ஸ் ரூ. 200 இலட்சம். டேர்ம் லோன்ஸ், வங்கிகள் மூலம், 5,134 இலட்சம். பைனான்ஷியல் இன்ஸ்ட்யூஷன்ஸ் ஏறக்குறைய 2,875 இலட்சம் பப்ளிக் டெப்பாஷிட்ஸ் 327 இலட்சம் ரூபாய். டீலர் டெப்பாஷிட்ஸ் 382 இலட்சம். மொத்தம் ரூ. 10,508 இலட்சம் மூலதனத்தில் இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உற்பத்தி செய்கிற உரத்தை மலிவு விலையில் மாநில அரசு கொடுக்க இயலாது. அது ஒரு தொழிற்சாலை. ஜாயின்ட் செக்டார் தொழிற்சாலை. அரசாங்கம் மூலதனம் போட்டிருக்கிறது, தனியார்களும் மூலதனம் போட்டிருக்கிறார்கள். அங்கு ஆகிற செலவைக் கொண்டு என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று மைய அரசு முடிவு செய்கிறது. தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்பட்டால் மானியமாக மைய அரசு கொடுக்கிறது. திரு. இளையபெருமாள் சொன்னது மைய அரசுக்குச் சொல்லப்படவேண்டிய யோசனை.



திரு. உ. சுப்பிரமணியன் : ஸ்பிக் உரச் சாலையில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய மாநில அரசு பல கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் எவ்வளவு கோடி ரூபாய் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாநில அரசு எதையும் தள்ளுபடி செய்யவில்லை. உர விலையை மைய அரசு நிர்ணயிக்கிறது. மைய அரசு நிர்ணயிக்கிற விலை, உற்பத்திச் செலவைவிட குறைவாக இருக்குமானால் அந்த நஷ்டத்தை ஈடுகட்ட மைய அரசு மானியம் கொடுக்கிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். 1978–79-ல் 18 கோடி, 1979-80-ல் 27 கோடி, 1980–81-ல் எட்டரைக் கோடி.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதில் மாநில அரசுக்கு ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். நான் கேட்கவிரும்புவது, உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் சரியாக பதில் சொல்லவில்லை. 105 கோடி ரூபாய் மூலதனத்தில் 51 சதவீதம் அரசு போட்டிருக்கும்போது ஏன் தனியார் அந்த நிறுவனத்தை நடத்தவேண்டும்? தனியார் நடத்துகிற காரணத்தினால்தான் அவர்கள் அதிகமாக அதிகாரிகளைப் போட்டு ஓவர்ஹெட் சார்ஜஸ் என்று சொல்லி நஷ்டத்தைக் காட்டுகிறார்கள். அதை ஏன் அரசாங்கமே நடத்தக் கூடாது?

[1982 மார்ச் 12

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மன்னிக்க வேண்டும். புரியாமல் கேள்வியைக் கேட்டுவிட்டு, அமைச்சர் சரியாக பதில் சொல்லவில்லை என்று சொல்லக்கூடாது. ஜாயின்ட் செக்டார் என்று சொன்னால், இப்படித்தான் அந்த அமைப்பு இருக்கும். அரசின் சார்பிலே ஐ.ஏ.எஸ். அதிகாரி அதிலே வைஸ்-சேர்மனாக இருக்கிறார். சேர்மனாக அதன் ப்ரமோடர் இருப்பார். ஜாயின்ட் செக்டார் என்றால் இப்படித் தான் இருக்கும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசு எடுத்தால், அது பொதுத் துறை நிறுவனமாகிவிடும். அது கூட்டு நிறுவனமாக இருக்காது. அதை முதலிலேயே புரிந்து கொள்ள வேண்டும். எல்லாக் கேள்விகளுக்கும் ஒழுங்காகத் தான் பதில் சொல்லியிருக்கிறேன். தேவைப்பட்டால், திருப்பி அவற்றையெல்லாம் படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 458, 459, 460 ஆகியவைகள் அமைச்சர் அவர்களின் உடல்நிலை காரணமாகத் தள்ளிவைக்கப்படுகின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கச்சத்தீவு திருவிழா நிறுத்தப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், இ. முத்துராமலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எஸ். ஆண்டித்தேவர், செ. சிவசாமி, பொ. உத்திராபதி, சோ. அழகர்சாமி, மு. அப்பாதுரை ஆகியோர் ''கச்சத் தீவில் நடைபெறவிருக்கின்ற திருவிழா நிறுத்தப் பட்டு உள்ளதைக் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. எஸ். என். இராமசாமி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 12]

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கச்சத் தீவு பிரச்சினையை வைத்து ஏற்கனவே நமது அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் 1974 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இன்று கச்சத் தீவிலே நடைபெற இருக்கின்ற திருவிழா நடைபெறாமல், அங்கே காலரா நோய் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்து, நமது அரசாங்கம் அங்கே காலரா நோய் இல்லை என்று சொல்லியும், மீண்டும் அந்தக் கச்சத் தீவிலே நடைபெற வேண்டிய விழா நடைபெறவில்லை. மேலும் இங்கிருந்து செல்பவர்கள், அங்கே சென்று அந்தத் திருவிழாவைக் கண்டுகளிப்பதற்காக இராமேஸ்வரத்திலிருந்து மக்கள் அடிக்கடி அங்கு சென்று இந்தத் திருவிழாவிலே பங்குகொள்வது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறவேண்டிய இந்தத் திருவிழா, இன்று நடைபெறாமல், இலங்கை அரசாங்கம் நம்முடைய ஒப்பந்தத்தை மீறி தடைவிதித்திருப்பது பற்றி, நமது தமிழக அரசாங்கம், மத்திய அரசோடு உடன் தொடர்புகொண்டு, இந்த கச்சத்தீவு பிரச்சினையை உடனடியாக, அங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திருவிழா நடைபெறுவதற்கான நடவடிக்கை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கச்சத் தீவிலே நடைபெற வேண்டிய திருவிழா காலரா என்ற ஒரு காரணத்தைக் காட்டி, அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே காலரா இருக்கிறது என்று யாரோ சிலர் சொன்னார்கள் என்பதற்காக, அது இப்படி காலம் கடந்தபிறகு, அது காலரா இல்லை என்று அறிவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக, இந்தத் திருவிழாவை நிறுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம், காலாகாலத்தில் கவனித்து, நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால், இவைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆகவே, இதைப் பற்றியெல்லாம் விவரமாகப் பேச இருப்பதன் காரணமாக, இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு திருவிழாவானது கடந்த ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இது நம்முடைய நாட்டை மட்டும் சேர்ந்தது அல்ல; இலங்கை அரசாங்கமும்

இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணமாக, அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் திருவிழா நடத்தப்பட வேண்டும். ஆனால், எனக்குக் கிடைத்த தகவல் என்ன வென்று கேட்டால், அங்கே இராமேஸ்வரம் தீவையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே உள்ள கிட்டத்தட்ட 300 பேர்களுக்கு மேல் காலரா பாதித்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் முன்னோடி நடவடிக்கை எடுத்து விட்டார்கள். ஆனால், காலரா இருக்கிறதோ, இல்லையோ, நாமும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உதாரணமாக, இன்றைக்கு தனுஷ்கோடியில் கிட்டத்தட்ட 5000, 6000 மீனவர்கள் அங்கே மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த விதமான சுகாதார ஏற்பாடும் செய்யப்படவில்லை. அங்கு சுகாதார வசதி செய்யப்படவில்லை. இன்றைக்கு காலரா வந்தால் இராமேஸ்வரம் தீவானது மிகவும் பாதிக்கப்படும். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பேர்கள் அங்கே வந்து போகிறார்கள். அவர்களும் பாதிக்கப்பட்டு தென் மாவட்டங்களுக்கு சீக்கிரமாக பரவக் கூடிய நிலை அங்கே இருக்கிறது. மிகப்பெரிய ஆபத்தை உண்டாக்கும்.

(முற்பகல் 10-00)

அது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் அன்னிய கப்பல்கள் உலாவிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதன் காரணமாக பெரிய ஆபத்து இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே டீகா காசிகா போன்ற பகுதிகளிலே இன்றைக்கு அன்னிய ஏகாதிபத்தியம் கப்பல்கள் இருப்பதால் அந்த பகுதியிலே ஆபத்தான நிலை வந்து கொண்டிருக்கிறது. தென் இந்தியாவில் இருக்கிற மக்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள். இவைகளிலிருந்து தமிழகத்தை காப்பாற்ற வேண்டுமென்ற முறையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கச்சத் தீவானது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், ஆண்டிற்கு ஒருமுறை அங்கே நடக்கிற அந்தோனியார் கோவில் திருவிழாவிலே கலந்து கொள்ள இந்தியாவிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் போய் வருகிறார்கள். அந்த விழாவை இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறி தடை செய்திருக்கிறார்கள். இது வெளிநாட்டு பிரச்சினை என்ற அளவுக்கு இல்லாமல் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இருக்கிற உரிமைகள் வரையறுக்கப்பட வேண்டும். கச்சத் தீவு பகுதியிலே மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால் கூட அங்கே அவர்கள் போர்க் கப்பலை வைத்து இந்திய மீனவர்களுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கிறார்கள். அவர்களது படகுகளையும் எடுத்துச் சென்று விடுகிற அளவிற்கு இலங்கை அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த பகுதியிலே





வாழ்கிற மீனவர்கள், தமிழ் மக்களுக்கு ஆபத்து விளைவிக்கிற அளவிற்கு அந்த அரசு நடவடிக்கை எடுக்கிறபோது நம் தமிழக அரசு மத்திய அரசிற்கு எழுதி நல்ல நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியிலே அமைதி நிலவ, இருக்கிற பதட்ட நிலையை மாற்ற ஏற்பாடு செய்கிற நிலையிலே இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நேற்றைய தினம் கூட விரிவாக நாம் இங்கே பேசியிருக்கிறோம். இராமேஸ்வரம் தீவை பொறுத்தவரையில் எந்தவிதமான காலரா நோயும் அங்கே பாதிக்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் டீகா காசிகா என்று சொன்னார்கள். அது பாராளுமன்றத்திலே பேசவேண்டிய பேச்சு. இந்தப் பிரச்சினையை பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் இரண்டாம் வாரத்தில் கச்சத் தீவில் உள்ள தூய அந்தோனியார் திருவிழாவிற்கு கிறிஸ்துவர்கள், கிறிஸ்துவர்கள் அல்லாதவர்கள் இந்திய நாட்டிலேயிருந்து சென்று வருவது வழக்கம். கச்சத் தீவை ஸ்ரீலங்காவிற்கு ஒப்படைத்த பிறகு 1974-ம் ஆண்டிலேயிருந்து, இந்தியா ஸ்ரீலங்கா ஒப்பந்தப்படி இந்திய யாத்ரீகர்கள் தடையின்றி சென்று வருவது அனுமதிக்கப்பட்டுள்ள ஒன்றாகும். அந்தத் திருவிழா 1974லேயிருந்து 80 வரை முறையாக நடைபெற்று வந்தது. ஆனால் 1981 லே ஸ்ரீலங்காவிலே சில பகுதிகளிலே காலரா பரவி இருந்ததால் அந்தத் திருவிழா நடைபெறவில்லை. அந்தத் திருவிழா எப்போதும் ஜாப்னா பேராயர், பிஷப் அவர்களின் தலைமையில் நடைபெற்றுவருவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

சென்ற சில ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டும் வழக்கம் போல் திருவிழாவிற்காக இராமநாதபுரத்திலிருந்து கச்சத் தீவிற்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி போன்ற எல்லா வகையான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்து விட்டது. இதற்கிடையில் 9—3—1982-ல் ஸ்ரீலங்காவிலுள்ள இந்திய தூதரகம் ஜாப்னாபேராயர் இந்தத் திருவிழாவை இந்த ஆண்டு ரத்து செய்து விட்டார் என்ற விவரத்தை டெலக்ஸ் மூலம் டெல்லிக்கு அறிவித்தார்கள். மேலும் 9—3—1982 அன்று ஸ்ரீலங்காவிலுள்ள இந்தியத் தூதரகம் வேறு ஒரு டெலக்ஸ் மூலமாக ஸ்ரீலங்கா அரசு சுகாதாரத் துறை 18—2—1982 நாளிட்ட உலக தொற்றுநோய் அறிக்கைப்படி தமிழ்நாட்டில் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் காலரா நோயால் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுவதை எடுத்துக்காட்டி இந்தச் சூழ்நிலையில் இந்தியப் பயணிகள் கச்சத் தீவுக்கு, அந்தத் திருவிழாவிற்கு வருவதை விரும்பவில்லையெனவும் தெரிவித்தது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தத் தகவல்கள் கொடுக்கப்பட்டு விட்டன. அது பற்றி மாண்புமிகு தமிழக

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 12

முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு நேற்றைய தினம் அனுப்பியிருக்கக்கூடிய ஒரு டெலக்ஸ் செய்தியில் இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு வழக்கம்போல் இந்த ஆண்டும் திருவிழா நடத்த ஸ்ரீலங்கா அரசு ஒப்புதல் வழங்க வற்புறுத்த வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அந்த டெலக்ஸ் மெஸேஜை மட்டும் நான் சுருக்கமாக படித்து விடுகிறேன்.

From the Chief Minister of Tamil Nadu to the Prime Minister of India.

Kacha Theevu festival, scheduled from 11th March to 14th March at Kacha Theevu has been cancelled by Sri Lanka Government according to information received on the 9th from the Indian High Commission. This has caused considerable anguish to thousands of familians and other pilgrims who look forward to attending the festival every year. Pilgrims had gathered at Rameswaram already, and the sudden cancellation has created a tense situation. The reason for the cancellation is reported to be prevalance of Cholera. Health authorities of the State had, after personal visits, reported that the whole of Ramanathapuram District and particularly Rameswaram Island are free from Cholera Measles. The authorities also are taking preiautionery measures to chlorinate water sources and disinfect the areas. Indo-Srilanka agreement of 1974 provides free access to Kacha Theevu Islands during festivals and depriving the pilgrims of this privilege wounds their religious sentiments and also cause considerable inconvenience. Main festival is reported to be on the 14th March. In these circumstances I shall be grateful for your kind immediate intervention to persuade Sri Laaka Government to permit to conduct of the festival and allow our pilgrims to participate in the festival.

With Regards, M. G. Ramachandran, Chief Minister

என்று பிரைம் மினிஸ்டருக்கு ஒரு தந்தியை அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய சீப் செக்கரட்டரி மிஸ்டர் கே. திரவியம்

The Secretary, Minister of External Affairs, New Delhi.

அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய அந்தத் தந்தியினுடைய நகல் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலே பொதுவாக இராமநாதபுரம் மாவட்டத்திலே காலரா எதுவும் இல்லை என்பதையும் ஏற்கனவே இராமேஸ்வரத்தில் கூடிவிட்ட பல பயணிகளுக்கு திருவிழாவை ரத்து செய்துவிட்டது பெரும் ஏமாற்றத்தையும் ஆழ்ந்த வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்கள் முதலமைச்சர் அவர்கள். அதே போன்று தலைமைச் செயலாளர் அவர்களும் மத்திய வெளி விவகாரச் செயலாளர் அவர்களுக்கும் ஸ்ரீலங்காவிலுள்ள இந்திய



1982 மார்ச் 12] [டாக்டர் எச். வி. ஹண்டே]

தூதரகத்திற்கும் இரண்டு டெலக்ஸ் செய்திகள் மூலம் அந்த விவரங்களைத் தெரிவித்துள்ளார்கள். இந்தத் திருவிழாவின் முக்கியமான நாள் 14 ஆம் தேதி என்பதால் இதில் இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள்.

நேற்றைய தினம் கூட நம்முடைய மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசி திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னவுடனே நாம் எல்லாம் சிந்தித்துப் பார்த்து உடனடியாக டெலக்ஸ் அனுப்பியிருக்கிறோம். ஆகவே பேசுவதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும் கூட நல்ல முறையிலே இப்போது திருப்தி அடைவார்கள். நல்லவிதமாக நாம் திட்டவட்டமான நடவடிக்கைகளை துரிதமாக எடுத்திருக்கின்ற காரணத்தினால் எனவே இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை. எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

Now the ball in the court of Delhi.

வேறு வேலைகள் செய்வதற்கு இல்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதால் இது பற்றி விவாதிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார் மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இங்கே வாதிக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து இந்தச் சபையிலே எப்படி வாதிக்கப்படுகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. காரணம், நான் சொல்ல விரும்புவது கச்சத் தீவு என்பது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு விவாதிக்கலாமா வேண்டாமா என்பது பற்றித் தான் பேசப்பட்டு ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். கச்சத் தீவை இந்தியா தாரை வார்த்துக் கொடுத்து

விட்டது. அது தமிழ்நாட்டுக்கும் சொந்தமானது அல்ல ; மத்திய அரசாங்கத்திற்கும் சொந்தமானது அல்ல ; அது இலங்கைக்குச் சொந்தமானது. அப்படியிருக்கும்போது, இந்த அவையிலே இந்தப் பிரச்சினையைப் பற்றி ஒத்தி வைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுக்கப்பட்டு வாதிப்பதற்கு உரிமை கிடையாது. வேண்டுமானால் அரசாங்கமே ஒரு தீர்மானம் கொண்டு வரலாம் ; மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதலாம். நான் 1—2—1982 ஆம் தேதியன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இராமேஸ்வரம் கடலில் ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்திற்கு விளக்கம் என்ற வகையில் போக வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : அதே சப்ஜெக்டைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் ரிஜெக்ட் ஆகியிருக்கிறது. அதை நான் வாசித்து விடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வரும்பொழுது ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்று பேச வேண்டும். அவ்வாறு பேசிய பிறகு ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : உங்களுக்கு அதிகாரமே கிடையாது ; விதியே கிடையாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியவர் பேரவைத் தலைவர் ; தலைவரவர்கள் விளக்கம் கேட்டு பிறகு தீர்ப்பளித்த பிறகு அதைப் பற்றிப் பேசக் கூடாது. வேறு பல பிரச்சினைகள் இருந்தால் பேரவைத் தலைவரின் அறையிலே பேசித் தீர்க்க வேண்டுமே தவிர மீண்டும் இங்கே எழுப்புவது முறையல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, உங்கள் ரூலிங்கிற்குக் கட்டுப்படுகிறேன். ஆனால் ........

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் நமக்கு அதிகாரம் கிடையாது என்று பேசி முடிந்த விஷயத்தைப் பற்றிச் சொல்வது எதிர்க்கட்சி என்ற முறையில் அவ்வாறு சொல்வது சரியல்ல. ஒரு சந்தர்ப்பம் கொடுத்த பிறகு அவ்வாறு சொல்வது சரியல்ல. அவர்களுக்கு ஏதாவது அநியாயம் நடந்து இருந்தால் ஸ்பீக்கரோடு பேசி முடித்துக் கொள்ள வேண்டுமே தவிர கொடுத்த விஷயத்தைப்பற்றி கொடுத்திருக்கக் கூடாது என்று வாதிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கூடக் கேட்டேன் கச்சத் தீவு பற்றிய விஷயங்களை ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விளக்கம் கேட்டேன். கச்சத் தீவிலே நடக்கும் விழாவிற்கு நாமும் போகிறோம், காலரா போன்ற விளைவுகள் ஏற்படுவதால் என்ன விளைவு என்று அறிந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் அதைத் தப்பு என்று சொல்லவில்லை. இதே மாதிரி ஒரு பிரச்னையை நான் முன்பு கொடுத்திருக்கிறேன், ஆனால் அது ரிஜெக்ட் ஆகியிருக்கிறது என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி என்னுடைய அறையிலே வந்து விவாதியுங்கள். இங்கே உள்ள மரபுகளை மாற்றாதீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இதே சப்ஜெக்ட். ஆனால் இதை எடுத்துக் கொள்கிறோம் ; அதை மறுக்கிறோம். அதுபற்றி விளக்கம் சொல்வதற்கு ஒரேயொரு நிமிஷம் கொடுக்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி நாம் விவாதிப்பதே இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேரவைத் தலைவரவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசித்தான் முடிவெடுக்க வேண்டும். இங்கே இவ்வாறு சொல்வது முறையல்ல. அந்த முறையைக் கையாளக் கூடாது. அதைத் தனியாகத்தான் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் அறையிலே வந்து கேட்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : அறையிலே ஆடுவது அம்பலத்திற்குத் தெரிய வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெரிய வேண்டியதில்லை.

## (3) கவன ஈர்ப்புகள்.

### (அ) அரபு நாட்டில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னதை நம்பிச் சென்றவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் துரை முருகன், வி. கிருஷ்ணமூர்த்தி, பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து உள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரபு நாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஜார்ஜ் சாமுவேல் என்பவர் 119 பேரிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களை ஏமாற்றிக் காட்மண்டுவிற்கு அழைத்துச் சென்று அங்கு விட்டு விட்டு வந்துவிட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

9—3—1982 அன்று திரு. நாகராஜன் என்பவரின் மனைவி திருமதி எம். ஜகஜோதி நகர காவல் ஆணையரிடம் தன்னுடைய மகன் சொர்ணராஜா காட்மாண்டுவில் உள்ள '' ஹோட்டல் மஸ்தாங் ''-ல் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும், சென்னையைச் சேர்ந்த திரு. ஜார்ஜ் சாமுவேல் என்பவர் அரபு நாட்டில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னதை நம்பி அவர் சென்றதாகவும், புகார் செய்து அவரை மீட்டுத் தரும்படியும் வேண்டுகோள் ஒன்றை அளித்தார். அதன் பேரில் 9—3—1982 அன்று சென்னை நகர ' எக்ஸ் ' ஸ்டேஷனில் குற்ற எண். 115/82 இ. பி. கோ. பிரிவு 20-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த 120 ஆண் நபர்கள் (இதில் 42 பேர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்) சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள ஜார்ஜ் சாமுவேல் என்பவரிடம் அரபு நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னதின் பேரில் ரூபாய் 3,000 முதல் ரூபாய் 10,000 வரை பணம் கொடுத்துள்ளனர் என்றும், அவர்கள் பகுதி, பகுதியாக 3—1—1982 முதல் கல்கத்தாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து காட்மாண்டுவிற்கு அனுப்பப்





பட்டனர் என்றும் அங்குள்ள ஹோட்டல் மஸ்தாங்கில் 19-1-1982 முதல் தங்க வைக்கப்பட்டு தற்போது கைவசம் பணம் இல்லாததால் இந்தியாவிற்கு திரும்பமுடியாமல் ஆதரவற்ற நிலையில் துன்புறுகின்றனர் என்றும் கொடுக்கப்பட்ட புகாரின் மீது விசாரணை செய்தபோது தெரிந்து கொண்டதாக நகர காவல் ஆணையர் கூறியுள்ளார். ஹோட்டல் மஸ்தாங்கிற்கு ரூபாய் $1\frac{1}{2}$ லட்சம் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்று 11—3—1982 அன்று அங்கிருந்து திரும்பி வந்த நபர்களில் ஒருவரான சென்னையைச் சேர்ந்த திரு. மாசிலாமணி என்பவர் கூறியுள்ளார். இந்தப் பணம் கட்டப்படாவிட்டால் அங்கிருக்கும் நபர்கள் இந்தியாவிற்கு வர இயலாது என்றும் அவர்கள் பாஸ்போர்ட் அனைத்தும் ஹோட்டல் முதலாளியிடம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தீவிர புலன் விசாரணை காவல் துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. வேறு ஒரு நாட்டில் ஆதரவின்றி அல்லலுறும் இந்த 120 பேர்களையும் தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வர மாநில அரசு, விவரம் தெரிந்தவுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மைய அரசு வெளி விவகார துறைச் செயலாளருக்கு 11—3—1982 அன்று இது பற்றி ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. காட்மாண்டுவிலுள்ள இந்திய தூதரகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு இந்த 120 பேர்களும் சென்னைக்கு திரும்பி அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தலைமை செயலாளர் மைய அரசு வெளி விவகாரத் துறை செயலாளருக்கு ஒரு டெலக்ஸ் மூலமாக 11—3—1982 அன்று கேட்டுக் கொண்டுள்ளார். காட்மாண்டுவில் அவர்கள் தங்கிய ஹோட்டல் செலவுகளையும், அவர்கள் சென்னைக்கு திரும்பி வருவதற்கு ரயில், பேருந்து, பிரயாணச் செலவுகளையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும், அதை எதிர்பார்த்து உடனடியாக மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்களுடைய செலவை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளும். கேரளாவில் இருந்து சென்ற 42 பேர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கான செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு, பின்னர் கேரள அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கும். அதேபோல் மாநில அரசு உள்துறை செயலாளர் மைய அரசு வெளி விவகார துறை இணைச் செயலாளர் (திரு. ஜா) அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார். மைய அரசு உடனடியாக தக்க ஏற்பாடுகளைச் செய்வதாக இணைச் செயலாளர் பதில் அளித்துள்ளார்.

3. ஆகவே, தமிழ்நாடு அரசு இதற்கான தீவிர முயற்சிகளை ஏற்கெனவே எடுத்துக் கொண்டுள்ளது. வெளி நாடுகளில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாகச் சொல்லி ஆசை காட்டி ஏமாற்ற முயலும் நிறுவனங்கள் மீது அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்கும். அதே தருணத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை விரும்பி தீர விசாரியாமல் விளம்பரங்களால் கவரப்பட்டு மக்கள் ஏமாறாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் ஒரு விரிவான அறிக்கையினை இந்த மன்றத்திலே வைத்து இருக்கிறார்கள். எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இது சம்பந்தமாக நேற்றைய தினமே இதே மன்றத்திலே எடுத்துச் சொல்ல முயற்சித்தார்கள். அப்படிச் சொல்லிய சமயத்தில், முதலமைச்சர் அவர்கள் இங்கேயிருந்து, இது சம்பந்தமாக, ஒரு கவன ஈர்ப்புப் பிரச்சினையாகக் கொண்டு வந்தால், உடனடியாக எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதன் பேரில், கவன ஈர்ப்புப் பிரச்சினையாக அது மாற்றப்பட்டு, இன்றைய தினம் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையைப் பற்றி இங்கே விரிவான அறிக்கையை வைத்துள்ளார்கள்.............

திரு. செ. சிவசாமி : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். கச்சத்தீவு சப்ஜக்டை டிஸ்கஸ் செய்யக் கூடாது என்று சொல்லும்போது, காட்மண்ட் சம்பவத்தைப்பற்றி எப்படி விவாதிக்கலாம்? (குறுக்கீடுகள்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் ஏற்கெனவே கூறியபடி, எங்களுடைய தலைவர் எடுத்த முயற்சியின் காரணமாக, நேற்றைய தினமே உடனடியாக, தமிழக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை, உள்துறைச் செயலாளர் மூலமாக எடுத்திருக்கிறது. தக்க ஏற்பாடு செய்து அரசாங்கத்தினுடைய செலவிலேயே, அங்கே இருக்கக்கூடியவர்களை அழைத்து வருவதற்கு முயற்சி செய்ததற்காக முதன் முதலிலே நன்றியையும் பாராட்டுதலையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமை மேலும் தொடராமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்கின்ற வகையில் என்ன வழிமுறைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று வினவ விரும்புகிறேன். குறிப்பாக, இந்த அப்பாவி மக்கள், பத்திரிகையிலே வருகிற ' வெளி நாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம்' ன்ற ஆசை வார்த்தை விளம்பரங்களை நம்பி, 'அரபு நாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம், துபாய் நாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம், மாதத்திற்கு ரூ. 10,000, ரூ, 15,000 கிடைக்கும், என்ற விளம்பரங்களை நம்பி, தமிழ் நாட்டிலே உள்ள கிராமங்களிலே இருக்கக்கூடியவர்கள், நகரங்களிலே இருக்கக்கூடியவர்கள், எல்லா பொருள்களையும் விற்று விட்டு, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 20,000 கட்டி, ஏமாறக்கூடிய நிலை தமிழ் நாட்டிலே அடிக்கடி இருக்கிறது. அதைத் தடுப்பதற்காக, தடுப்பு நடவடிக்கைகளாக, அரசாங்கம் என்ன என்ன உத்திகளை மேற்கொள்ள இருக்கிறது. பத்திரிகைகளிலே விளம்பரம் வருகின்ற சமயத்திலே, அவைகளைப் பின் தொடர்ந்து போலீசார் அந்த விளம்பரம் கொடுக்கக்கூடியவர்களைக் கண்காணித்திருந்தால் இந்த நிலைமை ஏற்படாமல் இருந்திருக்கும். அதேபோல், இப்படி வெளி நாடுகளுக்கு ஆட்களை நியமித்து அனுப்புகின்றோம் என்று சொல்லக்கூடிய ஏஜெண்டுகளைக் கண்காணித்திருந்தால், தமிழ் நாட்டில் உள்ள இந்தச் சம்பவங்கள் நிகழாமல் இருந்திருக்கும். அதைப் போல், பல சம்பவங்கள் ஏற்கெனவே நிகழ்ந்திருக்கின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சம்பவங்கள் இனி ஏற்படாமல் இருக்கும் வகையில் தமிழ் நாடு அரசாங்கம் நல்ல வழி முறைகளை இனி மேற்கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.





(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போன்று இப்படி அரபு நாடுகளுக்கும், பிற நாடுகளுக்கும் அழைத்துச் சென்று வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, பலமுறை ஏமாற்றி பெரும் பொருள் சம்பாதிக்கின்ற வகையில் சில பலர் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்ற குறிப்புகள் வந்து அது பற்றி அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் எடுத்துக் கொண்டு இருக்கின்ற நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏற்கனவேகூட 28—11—1981-லேயே வெள்ளையன் என்பவரும், புருஷோத்தமன் என்பவரும், ஏ. ஜே. நாயர் என்பவர் இப்படி ஏமாற்றிவிட்டார் என்று ஒரு புகார் கொடுத்ததற்குப் பிறகு திருவாளர்கள் வெள்ளையன் என்கின்ற முகவை வளவன் என்பவரும் மற்றும் கே.புருஷோத்தமன் ஆகியோர் கொடுத்த புகாரின் பேரில் சென்னை நகர மத்தியக் குற்றப் பிரிவின் குற்ற எண் 603/81-லே இ,பி. கோ. 406, 420 பிரிவின் கீழ், தேனாம்பேட்டை ஜெயம்மாள் சாலையில் வசிக்கின்ற ஏ. ஜே. நாயர் என்பவர் பேரில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு, ஏ. ஜே. நாயர் வெள்ளையப்பன் என்பவரிடம் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் புருசோத்தமன் என்பவரிடம் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்களும் வாங்கிக் கொண்டு அவர்களை ஏமாற்றி விட்டார் என்பது. அவர் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டுபிடிப்பதிலே அரசாங்கம் தீவிரமாக இருக்கின்றது. அவர் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்

கான பெரு முயற்சிகளை அரசு மேற் கொண்டிருக்கின்றது என்பதைத் கூறிக் கொள்கிறேன். தவிரவும் மேலும் 3 கேஸ்கள் மேற் கொண்டு சிலரின் பேரில் கிரைம் பிராஞ்சு சி. ஐ. டி. யினர் இப்போது பதிவு செய்து அந்த வழக்குகளையும் இப்போது நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

விஜயவாடாவைச் சேர்ந்த ஜோசப் என்பவரும், இதே மாதிரி 3,500, 4,000, 5,000 ரூபாய்கள் என்று பலரை ஏமாற்றி பொருள் வாங்கியதாக ஒரு குறிப்பு வந்து நடவடிக்கை இருக்கிறது. நாராயணன் என்பவரும் இது மாதிரி மற்றவர்களை ஏமாற்றிப் பணம் வாங்கியதால் அவர் மீதும் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு நடந்து கொண்டு வருகிறது. விக்டர் மோகன் என்பவரும் பிறரை ஏமாற்றி , 90 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மோசடி செய்திருக்கிறார் என்று அவர் மீதும் வழக்கு நடை பெற்று வருகிறது. இதைத் தவிர இன்டர்நேஷனல் எக்ஸ்போர்ட்ஸ் அண்டு ஏர்விங்ஸ் டிராவல்ஸ் என்கிற பேரில் ஒரு நிறுவனம் அமைத்து 4 ஆயிரத்திலே இருந்து 12 ஆயிரம் வரையில் பலரிடத்திலே பணம் வாங்கி இருப்பதாக அப்படி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற் கொண்டு வருகிறது என்றாலும், பொது மக்கள் இங்கே பேசப்பட்ட பேச்சிலிருந்தும் பத்திரிகைகளிலே வருகிற செய்திகளில் இருந்தும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது மிக மிக நல்லது. ஆகவேதான் இதைப் பொறுத்தவரையிலே ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்று ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த அவையின் மூலம், இங்கே எடுத்துச் சொல்வதன் மூலம் நாட்டு மக்கள் இதைப் புரிந்து கொண்டு வேறு தனிப்பட்டவர்களிலும் மற்றவர்களிலும் யார் சொல்வதையும் கண்டு ஏமாறாமல், இந்த ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் இடத்தில் அணுகி, பிற நாடுகளில் வேலை வாய்ப்புகள் மற்றவைகள் இருக்குமானால் அதன் மூலமாக போகின்ற முயற்சியைப் பொதுமக்கள் செய்வார்களேயானால் அது அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும், அப்படிப்பட்ட ஏமாற்றங்கள் ஏற்படாமல் இருக்கும். இந்த நிறுவனம் இது வரையில் 5,517 பேர்களுக்கு இப்படிப்பட்ட மனுக்களை வாங்கி அனுப்பி வைக்கின்ற பெருமுயற்சியிலே, இன்ஜினியர்கள் ஆபிஸ் ஒர்க்கர்ஸ் பிட்டர்கள், டர்னர்கள், வெல்டர்கள், செமி ஸ்கில்டு கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்கர்ஸ்—என்ற அளவிலே விண்ணப்பம் வாங்கி பலரை அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தவகையிலே 423 பேர்களை பிற நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதிலே 356 பேர்கள், ஈராக்குக்கும், 36 பேர்கள் யு.ஏ.ஐ.க்கும், 31 பேர்கள் லிபியாவுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிறுவனத்தினிடம் மட்டுமே தொடர்பு கொண்டு இந்த நிறுவனத்தின் மூலம் போகின்ற பழக்கத்தை வைத்துக் கொள்வோமானால் இப்படிப்



பட்ட மோசடிகளுக்கு எல்லாம் இடம் ஏற்படாது. ஆனால் இந்த மோசடிகள் செய்கின்றவர்கள் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுத்து, அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான முறைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த அவையிலே எடுத்துத் தெரிவித்ததன் மூலம் பொது மக்கள் புரிந்து கொண்டு அந்த நிறுவனத்தின் மூலம் தொடர்பு வைத்துக் கொள்ள முயல்வார்களேயானால் இந்த மோசடி செய்கின்றவர்களுடைய எண்ணிக்கை குறையும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, தினந்தோறும் பத்திரிகைகளிலே, வெளிநாடுகளிலே வேலை வாங்கித் தருகிறோம் என்று அறிவிப்புகள் வருகின்றன. இப்படி அறிவிப்புகளை வெளியிடுகின்றவர்களை போலீஸ் துறையிலே இருக்கக்கூடிய கிரைம் இன்டலிஜென்ஸ் மூலமாக அப்போதைக்கப்போது கண்காணிக்கப்படுமானால் இந்த நிலைமை வராமல் இருக்கும். அதிலே பல கன்சர்ன்கள் நியாயமாக, போனோபைடியாகக் கூட இருக்கலாம். ஆனால் போலியாக ஒன்றுமே இல்லாமல் இப்படி விளம்பரத்தைக் கொடுத்துவிட்டு, சிலபேர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக் கொண்டு, பல பேர்கள் கொலை செய்யப்பட்டு விடுகிறார்கள். வெளிநாடுகளிலே, கப்பல்களிலேயும், போட்டுகளிலேயும் அன்-ஆதரைஸ்டாக ஏற்றிச் சென்று அங்கே விட்டுவிடுகிறார்கள். துபாய் போன்ற நாடுகளிலே இறக்கி விட்டுவிட்டு அந்த சிறைச்சாலைகளிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இது தமிழ் நாட்டுக்கு மட்டுமல்லாமல், இந்தியா பூராவிலும் தடுக்க வேண்டிய விஷயமாக இருந்தாலும் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நம்முடைய போலீஸ் இலாகா மூலமாக கிரைம் இன்வெஸ்டிகேஷன் மூலமாக இப்படி விளம்பரம் வருகிற சமயத்திலேயே அந்த விளம்பரத்தை வைத்துக் கொண்டு அது சம்பந்தமாக புலன் விசாரணை செய்து, தவறு ஏற்படுமானால் அதை முன் எச்சரிக்கையாக தடுப்பதற்கு அரசாங்கம் தக்க ஆலோசனைகளை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற நிகழ்ச்சிகள் அண்மையில் வந்ததன் காரணமாக. காவல் துறையினருக்கு ஆணைகள் இடப்பட்டு, அவர்கள் இப்படிப்பட்டவைகளைக் கண்டுபிடித்து சிலபல வழக்குகளைப் போட்டுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போலவே பத்திரிகைகளில் வெளி வருகின்ற விளம்பரங்களை வைத்துக்கொண்டே அவர்கள் எந்தெந்த வகைகளில் செயல்படுகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும் என்று ஏற்கனவே காவல்துறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 2—3 பேர் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதைத் தீவிரப்படுத்துவதன் மூலம்

பொதுமக்கள் ஏமாறாமல் இருப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே ஜார்ஜ் சாமுவேல் மட்டுமல்ல, இன்னும் பல நிறுவனங்களைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லப்பட்டது. திருச்சியிலும் மாரிஸ் டிராவல்ஸ் என்ற கம்பெனி ஒரு 17 நபர்கள்—கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்—இடமிருந்து கிட்டத்தட்ட 2 இலட்ச ரூபாய்க்கு மேல் வாங்கிக்கொண்டு அவர்களை பம்பாய் வரை அழைத்துச் சென்று விட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்படி பல்வேறு இடங்களில் நடந்து கொண்டு இருக்கின்றன, அவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த காத்மாண்டுவிற்குச் சென்ற 119 பேர்களுக்கு உணவுக்கு ஏதாவது வகை செய்யப்பட்டுள்ளதா ? ஏனென்றால் அவர்கள் இடத்தில் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு உணவு அளிக்க வசதி செய்ய மைய அரசுக்கு சொல்லப்பட்டுள்ளதா ? அவர்களை இங்கே அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அவர்கள் இங்குவர எவ்வளவு நாள் ஆகும். ஜார்ஜ் சாமுவேல் என்பவர் கைது செய்யப்பட்டு உள்ளாரா ? அது பற்றிய விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கத்தின் மூலம் காட்டுமாண்டுவிலே இருக்கின்ற இந்தியத் தூதுவரின் மூலமாக தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் இன்னும் தொடர்ந்து அந்தப் பிரச்னையிலே ஈடுபட்டு வருகிறார்கள். 119 பேருக்கு அங்கே ஏற்பட்ட செலவையும் தமிழகம் ஏற்றுக்கொள்ளும். அவர்களைப் பேருந்து மூலமாகவும், ரயில் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும் செலவையும் நாமே ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதிலே 42 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் செலவையும் நாமே இப்போது ஏற்றுக்கொண்டு, பின்னர் கேரள அரசோடு தொடர்பு கொண்டு அதை வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறோம். அந்த அடிப்படையில் மத்திய அரசின் அதிகாரிகளும், அங்கே இருக்கின்ற தூதுவர்களும் ஈடுபட்டு இருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு நாட்களில் இந்தப் பிரச்னை முடிந்துவிடும் என்று கருதுகிறேன். நேற்றும் பேசியிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஜார்ஜ் சாமுவேல் என்பவரைக் கைது செய்வதற்கான எல்லா முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இன்னும் கைது செய்யப்படவில்லை. விரைவில் கைது செய்வதற்கான முயற்சிகள் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.





## (ஆ) பம்மல் தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரால் குடிதண்ணீர் கெடுவது.

**திரு. பம்மல் நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடி தண்ணீர் கெடுவது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

### அறிக்கை.

பம்மல் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு பேரூராட்சியாகும். அதன் தினசரித் தேவைக்கான குடிநீர் தோண்டப்பட்ட கிணறுகள் மூலம் பெறப்படுகிறது. அவற்றுள் இரண்டு கிணறுகளில் நீர் இறைப்பான்கள் பொருத்தப்பட்டு, தண்ணீர் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு, பொதுக்குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மேற்கண்ட கிணறுகள் கோடைக்காலத்தில் வறண்டுவிடுகின்றன. அந்த கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீர் தன்மையும், அளவும் குடிக்கும் வகையிலும், போதுமானதாகவும் இல்லை.

மேற்கண்ட காரணங்களால் பம்மலுக்கு அவசர குடிநீர் திட்டம் தேவையென அறியப்பட்டு பம்மல் ஒரு வழியிடை நகரமாக ஆலந்தூர் பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப் பம்மல் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 12.12 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலான தேவைகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. ஆலந்தூர் பல்லாவரம் கூட்டுக் குடிநீர் புதுப்பிக்கும் திட்டம் முடிவுற்றவுடன் இந்த பம்மல் குடிநீர்த் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

தற்சமயம் இந்த பேரூராட்சியின் உடனடி குடிநீர் பிரச்னையைப் போக்க பல்லாவரத்திற்கான அவசர குடிநீர்த் திட்டத்திலிருந்து மூன்று ஒற்றைப் பொதுக் குழாய்கள் மூலம் பம்மலுக்குத் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 12

தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் குடிநீருடன் கலக்காதவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டியது அத்தொழிற்சாலைகளின் பிரத்தியேகமான கடமையாகும். வடிகால் சுத்திகரிப்பு முறைகளை அமைப்பதற்காக தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு 31—12—1981 வரை காலம் கொடுக்கப்பட்டு அதற்குப் பின்னும் வடிகால் சுத்திகரிப்பு முறைகளை அமைக்கத் தவறியவர்களுக்குப் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்யப்படும் என்று எச்சரிக்கப்பட்டனர். இருப்பினும் தோல் பதனிடும் தொழிற்சாலையினர் மேலும் காலம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் அவர்களுக்கு 30—6—1982 வரை காலத்தை நீடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் காலம் நீடித்துக் கொடுக்கப்பட மாட்டாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. பம்மல் நல்லதம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் பம்மல் பேரூராட்சியில் 100 ஆண்டு காலமாக பச்சைத் தோலை சுத்தப்படுத்தியும், பதப்படுத்திய தோலுக்கு கலர் ஏற்றுவதிலும் ஏறத்தாழ 60 தொழிற்சாலைகள் ஈடுபட்டுவருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளின் மூலமாக வருகின்ற கழிவு நீர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள குடிநீர் பாதிக்கப்படுவது தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த விவர அறிக்கையில் அந்த தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் சுத்தப்படுத்தி அந்த நீரை வெளியே அனுப்பவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதைக் காலதாமதம் செய்து கொண்டு வருகின்றார்கள். போன ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. இந்த அறிக்கையில் இந்த வருஷம் 6-ஆவது மாதம் வரையில் அந்த அனுமதி நீட்டிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, மேலும் இத்தகைய நிலைமைகள் நீடிக்காமல் அவர்கள் அந்தக் கழிவு நீரை சுத்தப்படுத்தி அனுப்பாவிட்டால் அந்தத் தொழிற்சாலை நடத்துவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் உரிமத்தை ரத்துசெய்ய அரசுமுன்வருமா ? அல்லது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த காரியம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து 16 இலட்சம் ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறாரே, அதில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 12]

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, குடிநீரைப் பொறுத்தவரையில் அங்கே கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அது அன்னியில் ஆலந்தூர் பல்லாவரம் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படும்போது இந்த பம்மல் குடிநீர் திட்டமும் செயல்படும். இடையிலே 3 பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அந்தத் தொழிற்சாலை கழிவுநீர் நேராக குடிதண்ணீரில் கலந்துவிடுகிறது என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்காது என்று கருதுகிறேன். 30—6—82 வரை வடிகால் சுத்திகரிப்பு முறையை அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்குமேல் காலத்தை நீட்டித்துக் கொடுக்க மாட்டோம் 'நோஃபர்தர் எக்ஸ்டன்ஷன் ஆஃப் டைம்' என்றும் சொல்லியிருக்கிறோம். உடனே தொழிற்சாலையை மூடுவது என்பது நடக்கக்கூடியது அல்ல. ஏனென்றால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். ஆனால் அவர்களை செய்ய வைக்க எந்த அளவுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நிர்ப்பந்தம் செய்து, அதைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பம்மல் நல்லதம்பி :** தலைவரவர்களே, குடியிருப்புப் பகுதிகளிலே இன்றும் அந்தக் கழிவுநீர் சென்று கொண்டிருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பினார். அந்தப் பகுதியிலுள்ள தண்ணீரை 'கிங் இன்ஸ்டிட்யூட்' பரிசோதனைசெய்து பார்த்ததில் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் மூடப்பட்ட கால்வாய் மூலமாக அந்தக் கழிவுநீரை அப்புறப்படுத்த அரசு ஒரு திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த முயலுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. ஆனாலும் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் குடிநீருடன் கலக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அந்தத் தொழில் அதிபர்களின் கடமை. எனவே, அதைச் செய்வதற்கு அவர்களை வற்புறுத்த வேண்டும், அதைச் செய்யலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை.

[1982 மார்ச் 12

4. வரவு செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு.

அ. கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் பின் கீழ் ரூ. 3,78,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுக்கு இலவசமாக குடியிருப்புகள் கட்டித்தருவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, மீன் வளர்ப்பு திட்டத்தில் (எப்.எப்.டி.ஏ.) தனியார்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்களின் குளங்களை கொடுக்கக்கூடாது என்ற கொள்கையைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78, 83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, கடலில் சென்ற மீனவர்கள் இறந்தால், இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 நஷ்டஈடு வழங்குவதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, வாலிநோக்கத்தில் மீன் பிடித்துறைமுகம் பெரியதாக விரிவுப்படுத்தப்படுவதன் மூலம் பிடித்த மீன்களை கொண்டுவரவும், கருவாடுகளை ஏற்றுமதி செய்யவும் பிற மாநிலங்களுக்கு அனுப்ப தக்க நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1982 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மீனளம், பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன், நுகர்பொருள்வழங்கல் ஆகியவை பற்றிய விரிவான குறிப்புக்கள் * இங்கே அறிக்கையாக தரப்பட்டிருக்கின்றன. அவற்றை நான். படித்ததாக ஏற்றுக்கொண்டு இவற்றின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கருத்துக்களைப் கொடுப்பதன் அடிப்படையிலே இறுதியிலே என்னுடைய கருத்தினை வழங்குகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் கோரி இருக்கின்ற இந்த 3 மானியக் கோரிக்கைகளின் மீது நான் சேர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் 3 மானியக் கோரிக்கைகளை இங்கே வைத்து இருக்கிறார்கள். முதலிலே அவருக்கு என்னுடைய டிமான்ட்ஸை வைக்க நான் விரும்புகிறேன். சென்னைத் துறைமுகத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் மீன்பிடித் துறைமுகத்திற்கு பொது உடமைவாதியும், பகுத்தறிவுவாதியுமான சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று மத்திய அரசினை மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த அரசு விவசாயிகளுக்குப் பல கோடி ரூபாய்களைத் தள்ளுபடி செய்கின்ற அதே நேரத்தில் தங்கள் உயிரையே பணயம் வைத்து இந்த நாட்டிற்குச் சத்துள்ள உணவும், அன்னியச் செலாவணியும் ஈட்டித் தருகின்ற அந்த மீனவப் பெருங்குடி மக்கள் இதுநாள்வரை பட்டிருக்கின்ற கூட்டுறவுக் கடன்களையும் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருப்பதைப் போல தள்ளுபடி செய்ய வேண்டும் என்று என்னுடைய அடுத்த கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு கோரிக்கை. கடலோரப் பகுதி அற்ற இடங்களில் உட்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் மீன் பிடிக்கின்ற உரிமங்களை நம்முடைய இலாக்காக்களிலே தந்தாலும் ...ட காட்டிலாக்கா, அறநிலையத்துறை போன்றவற்றுக்குச் சொந்தமாக இருக்கின்ற நீர் நிலைகளில் அவ்வாறு மீன் பிடிக்கின்ற அந்த வாய்ப்பு அவர்களுக்குத் தரப்படவில்லை. எனவே மீனவர்களுக்கு அந்த வாய்ப்பினைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும், இந்தியத் துணைக் கண்டத்திலே மீனவர்கள் வருவாய் இன்றி வாடுகிறார்கள். நேச்சுரல் ஃபெய்லியர் என்ற இயற்கையினுடைய மோசமான நிலைமையின் காரணத்தால், இப்போது

*122-211ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

மீனவர்கள் வருவாய் இன்றி வாடிக் கொண்டிருக்கிறார்கள். மீனவர்களுக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும், கழக ஆட்சிக் காலத்திலேயும் தரப்பட்ட அந்த மீன்பிடி படகுகள் இன்று உருப் படாமல் போய்விட்டது. அதனால் அவர்கள் கடனாளியாக ஆகி விட்டார்கள். மீதமுள்ள கடனை அவர்கள் கட்டவில்லை என்பதற்காக கிரிமினல் ஆக்ஷன் எடுக்கப்படுவதாக நான் அறிகிறேன். அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து தமிழ்நாட்டிலே 4 படகு கட்டும் தளங்கள் இருக்கின்றன. நான் இது குறித்து பல முறை கோரிக்கை வைத்திருக்கிறேன். என்னிடத்திலே கூட சொல்லி இருக்கிறார்கள். அந்தப் படகு கட்டும் தளத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஒரு அச்சம் இருக்கின்றது. தங்களை எந்த நேரத்திலேயும் வேலையிலிருந்து நிறுத்திவிடுவார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கின்றது. அவர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்ற கருத்தைச் சர்க்கார் வைத்திருந்தாலும் போக்குவரத்துத் துறையிலே அப்படிப்பட்ட வாய்ப்புக்களை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சலவைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே 1974-75—லே தீட்டப் பட்டது. அதற்காக அப்போதிருந்த சர்க்கார் அதற்கான வரை படங்களை எல்லாம் அளித்ததாக அறிகிறேன்.

ஆனால் இப்போது அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. அவர்களுக்கு வீடு கட்டித் தரப்படவில்லை என்று குறிப்பிடுவதுடன், அந்த சலவைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் அந்தத் திட்டத்தை சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10·40)

துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மூன்று கோடியே 78 லட்சம் சில்லரை அளவிற்கு மீனளத்திற்காக நிதி கோரி கேட்டிருக்கிறார்கள். நான் போன மானியக் கோரிக்கையில் கூட நாவலர் அவர்களுக்குச் சொன்னேன். அதற்கு அவர் பொன்னுரங்கம் தவறாகக் கணக்குப் போடுகிறார், வேறு டிமாண்ட்ஸ்களுக்கும் சேர்த்து அதிகமான தொகையாக வருகிறது என்று சொன்னார். இப்பொழுது 3 கோடியே 78 லட்சம் சில்லரை ரூபாய் அளவு மீனளத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படியே மற்ற டிமாண்ட்ஸ்களிலும் இருந்து சேர்த்தால் கூட 5 கோடியே சொச்சம்தான் வருகிறது. நான் நிதியமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது, எதை



அடிப்படையாக வைத்து இந்த நிதியைக் கோரியிருக்கிறார்கள் என்பதுதான். மீனவர்கள் என்று பார்க்கிறபோது அவர்கள் பிற்பட்ட வகுப்பினர். அவர்கள் மிக மிக ஏழையாக இருக்கிறார்கள் ; பிற்பட்ட வகுப்பினராய் இருக்கிறார்கள், நாட்டிற்குத் தேவையான புரதச் சத்துணவைக் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் நம்முடைய நிதியமைச்சர் அவர்களே அவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஏழை மீனவர்களுக்கு அவர்களுடைய சோஷியல் ஸ்டேட்டஸ் அல்லது எக்கனாமிக்கல் ஸ்டேட்டஸ் என்ற அடிப்படையில் வைத்து நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா அல்லது மக்கள் தொகை எண்ணிக்கையில் ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடு என்று வைத்துக் கொண்டாலும் அவர்கள் 7 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அந்த 7 லட்சம் என்ற எண்ணிக்கையை வைத்துப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டு மக்கள் தொகையில் கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ சதவீதம் அல்லது 2 சதவீதம் வருகிறது. அப்படிப்பட்ட மீனவ சமுதாயத்தினருக்கு, தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிற மக்களுக்கு அவர்களுடைய தொழில் வளர்ச்சிக்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிற இந்த 5 லட்சம் தொகை என்பது எந்த அளவுக்கு போதும் என்பதை தயவுசெய்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, ஒன்று மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் வைத்துப் பார்த்து ஒதுக்கீடு செய்யுங்கள் ; அல்லது ஏதாவது பொசிஷன் எக்கனாமிக்ஸ் ஸ்டேட்டஸ் போன்று ஏதாவது பொசிஷன் அடிப்படையில வைத்து ஒதுக்கீடு செய்யுங்கள். எதுவும் இல்லாமல், பொத்தாம் பொதுவாக ஒரு தொகையை அப்படியே ஒதுக்கீடு செய்வது சரியல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு 9,931 வீடுகள் கட்டித்தரப்படும் என்று பாலிஸி நோட்டிலே கூறியிருக்கிறீர்கள். ரொம்ப மகிழ்ச்சிகரமான ஒன்று. ஆனால் இது இப்பொழுது மட்டும் அல்ல, சென்ற ஆண்டும் பாலிஸி நோட்டிலே, இப்பொழுது இதிலே சொல்லியிருப்பதைப் போலவே, மீனவர்களுக்கு 9,931 வீடுகள் கட்டப்படும் என்றும், அதன் தொடர் நடவடிக்கைகளுக்காக 1981-82க்கு என்று 100 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பெறுகிறது என்றும் போன ஆண்டிலேயே கூறியிருக்கிறீர்கள். அப்பொழுதே 9,931 வீடுகள்—அதுமட்டும் அல்லாமல் மேற்கொண்டு 100 லட்சம் இதற்கென்று ஒதுக்கீடு. மீண்டும் 9,931 வீடுகள் கட்டப்படும் என்றும், சென்ற ஆண்டு சொன்னதைப் போலவே 1982-83க்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு என்றும் கூறியிருக்கிறீர்கள். அப்படி என்றால் சென்ற ஆண்டு ஒதுக்கிய 100 லட்சம் ரூபாய் என்ன ஆயிற்று? 9,931 வீடுகள் என்பதை 10,000

வீடுகள் என்று சொல்லியிருந்தாலும், வீடுகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதே எனறு கணக்கை சரி செய்துக் கொள்ளலாம். ஆனால் ஒன்றும் இல்லை. வீட்டினுடைய எண்ணிக்கையும் உயராமல் அப்படியே இருக்கிறது. ஒதுக்கீடும் சென்ற ஆண்டைப் போலவே செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு என்ன சந்தேகம் என்றால், சென்ற ஆண்டு ஒதுக்கிய 100 லட்சம் ரூபாய் என்ன ஆயிற்று என்பதுதான். நாவலர் அவர்கள் சொல்லலாம் கணக்குகள் இருக்கின்றன; ஆடிட் செய்கிறார்கள், அக்கவுண்டென்ட் ஜெனரல் அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள் என்றெல்லாம்பதில் சொல்லலாம். அது எல்லாம் எங்களுக்கும் தெரியாதா? தெரிந்துதான் கேட்கிறோம். அதை தயது செய்து நாவலர் அவர்கள் விளக்கம் வேண்டும் என்று கேட்கிறேன். சென்ற ஆண்டு பாலிசி நோட்டில்..........(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு இப்பொழுதே விடை கூறிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். ஒன்பதாயிரத்து சில்லரை வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நாம் திட்டமிட்டு, ஆறாயிரம் ரூபாய் அளவீற்கு ஒரு வீடு என்ற கணக்கில், ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகத்திடம் இந்தப் பணியை ஒப்படைத்தோம்.

அதற்குப் பிறகு ரூ. 6,000க்கு கட்டமுடியாது என்றளவிற்கு அவர்கள் திட்டமிட்டு, ரூ. 9,860 இருந்தால்தான் கட்டமுடியும் என்றளவிற்கு கடிதப் போக்குவரத்து எல்லாம் நடந்த பிறகும் கூட 6000 சில்லரை வீடுகள் கட்டி3,000 சில்லரை கட்ட வேண்டி இருக்கிறது. சென்ற ஆண்டு 100 இலட்சம், இந்த ஆண்டும் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆறாயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் முதலில் ஒதுக்கி இருந்தோம். ஏற்கனவே எந்தெந்த ஊர்களில் வீடுகள் கட்ட திட்டமிட்டு ஒப்புதல் வழங்கியிருக்கிறோமோ அந்த வீடுகளைக் கட்டித்தீர வேண்டும் என்பதற்காக சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் 100 இலட்சம், 100 இலட்சம் என்றளவில் ஒதுக்கி ரூ. 9,860 ஆனாலும் பரவாயில்லை என்று அந்த வீடுகளை கட்டித் தீர வேண்டும் என்று தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் இப்போது கூடுதலாக வீடுகள் கட்ட முடியவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். பாலிஸி நோட்டில் சொல்லியிருக்கிறார்கள். முக்கால் பாகம் கட்டி முடித்தாகிவிட்டன என்றும் இன்னும் கால் பாகம்தான் கட்டப்படவேண்டியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு கூடுதலாக 200 இலட்சம் ரூபாய் தேவையா என்று கேட்கிறேன். இந்த பிகர்ஸ் இம்ப்ராப்பர் என்பதை ஒத்துக் கொள்ளுங்கள்.



அடுத்து, புது துறைமுகங்கள் அமைப்பது பற்றி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறு என்ற இடத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கத்திலும் துறைமுகங்கள் அமைக்க பரிசீலிக்கப்படுகிறது, மத்திய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று 1977-ல் சொல்லப்பட்டுள்ளது. 1978—லும் பரிசீலிக்கப்படுகிறது, மத்திய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பாலிஸி நோட்டில் சொல்லியிருக்கிறார்கள். 1979-80ஆம் ஆண்டு பாலிஸிநோட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், பழையாறையில் 28 இலட்சத்திற்கும், வாலி நோக்கத்தில் 24.045 இலட்சத்திற்கும் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இது உங்கள் பாலிஸி நோட்டில் உள்ள வேர்டிங். 1979-80 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றிருக்கிறது. 1980-81 ல் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால் தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கத்திலும் அடிப்படை வசதிகள் செய்ய மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள் என்றால், பழையாறில் 28 இலட்சத்திலும், வாலிநோக்கத்தில் 24 இலட்சத்திலும் அமைக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்குத்தெரிந்த வரையில் இதுவரை ஒரு கல்கூட எடுத்து வைக்கப்படவில்லை. ஒரு பள்ளம் கூட அங்கு தோண்டப்படவில்லையென்றுதான் கேள்விப்படுகிறேன். மத்திய அரசு உதவி செய்ய மறுத்துவிட்டதா? 78-79-ல் 79-80ல் அனுமதி அளித்துள்ளது என்று சொல்கிறீர்கள். பின் ஏன் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை?

(முற்பகல் 10-50)

போன பட்ஜெட்டிலே அறிவிப்பு தந்தீர்கள். 2 இலட்சம் ரூபாய் கில் நெட்டிற்கு கொடுக்கப் போவதாகச் சொன்னீர்கள். அப்படிக் கொடுத்தீர்களா? கில் நெட்டிற்கு 2 இலட்சம் கொடுப்பதாக ஸ்கீம் சொன்னீர்கள். ஆனால், அதைக்கொண்டு வந்தீர்களா? அந்த ஸ்கீமையே காணோம். நான் அதைப் பற்றிக் கேட்டேன் என்பதற்காக அதை விட்டு விட்டீர்களா? விட்டு விட்டுப் போங்கள், பரவாயில்லை.

அதற்குப் பிறகு, இயற்கையின் சீற்றத்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் உதவி செய்வதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால், என்ன கொடுக்கப்படுகிறது? பெருமையாக மட்டும் சொல்லுகிறீர்கள். தலா 200 ரூபாய் கொடுப்பதோடு, எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழைகளுக்கு உதவுகின்ற வகையில் புடவை கொடுக்கிறார், 5 கிலோ அரிசி கொடுக்கிறார் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் என்ன கொடுத்திருக்கிறீர்கள். தினத் தந்தியிலே 2-1-82 அன்று

வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் ஆறுதல் அளித்திருக்கிறார். இந்த ஆண்டு, ஜனவரி மாதத் திலே கடலரிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, செங்கற்பட்டு திருவொற்றியூருக்கு அருகே கடலரிப்பால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு திரு. எஸ். டி. சோமசுந்தரம், அவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினார். அப்போது 133 பேர்களுக்கு தலா ரூ. 100ம், மற்றும் வேஷ்டி, சேலைகளையும் அமைச்சர் வழங்கி னார் ; அப்போது மாவட்ட கலெக்டரும் உடனிருந்தார் என்றிரு கிறது. ஏன்? தலா ரூ. 100 கடலரிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லவா? அது செயற்கையின் சீற்றமா? இதிலே ரூ. 200 என்பதை ரூ. 100 என்று குறைத்து விட்டீர்கள். அது என்ன முறை? இந்தச் சமு தாயத்திலே யாரும் கேட்பாரில்லை என்று, அவர்கள் தலையிலே கை வைக்க வேண்டுமா? ஆகவே, இதுபோன்று முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அடுத்து, மத்திய சர்க்கார் சில துறைகளுக்கு மானியம் வழங்கு கின்றது. வெப் வலை நூல்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அந்த மானியம் வழங்குகின்ற நேரத்தில், இந்த மீனவர் சமு தாயத்தைப் பொறுத்தவரையில், முறையாகப் பயன் படுத்தப் படாமல் விட்டு விட்டிருக்கிறீர்கள். நான் கேட்க விரும்பு கிறேன். ஆடிட்டர் ஜெனரல் ஒரு ரிப்போர்டு தந்திருக்கிறார். அதிலே என்ன சொல்லுகிறார் தெரியுமா? ·88 இலட்சம் ரூபாயை மத்திய சர்க்கார் டியுடி டாக்ஸ் பிரியாகக் கொடுத்தும் கூட, மாநில சர்க்கார் அதிகாரிகள் முறையாக கவனிக்காத காரணத்தால், அது பெரும் பாரமாக மீனவர்கள் தலையில் விழுந் திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதனால் 1977-78 ல் ·88 இலட்சம் நஷ்டம். ஆனால், இங்கே அதிகாரிகள் என்ன பதில் சொல்லுகிறார்கள்? இதனால் சர்க்காருக்கு நஷ்டமில்லை. ஏனென்றால், பர்சேஜரிடமிருந்து டாக்ஸ் வசூலித்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஆடிட்டர் ஜெனரல் விட வில்லை. நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார். எனவே, இது ஏழை மீனவர்கள் தலையில் விழுகிறது.

அது மட்டுமல்ல, இராமேஸ்வரத்திலே வீடுகள் கட்டியிருக் கிறார்கள். அந்த வீடுகள் கட்டியதில்........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1977-78 ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்டா? அல்லது 1977-78 ஆம் ஆண்டுக் கணக்கா?

திரு. ப. பொன்னுரங்கம் : 1977-78ம் ஆண்டு கணக்கு : 1979-80 ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்டு : அதிலே இப்படிக் கொடுத்திருக்கிறார்.





இராமேஸ்வரத்தில் 104 வீடுகள் கட்டப்பட்டன. அதிலே 39 வீடுகளில் குடியேற மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஏனென்று சொன்னால், அந்த வீடுகளில் பூசிய சிமெண்டு கீழே கொட்டி விட்டது. பூட்டிய கதவு, முறுக்கிக் கொண்டது. ஜன்னல்கள் எல்லாம் எங்கோ போய்விட்டது. இப்படி உருப் படாமல் போய் விட்டதால், நாங்கள் குடியேற மாட்டோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டாவதாக, மழை பெய் தால், மழைத் தண்ணீர் அவ்வளவும் உள்ளேதான் வருகிறது. அவ்வளவு லோ லையிங் ஏரியா. அதனால், 39 வீடுகளுக்கு குடி போக மாட்டோம் என்கிறார்கள். அந்த குடியேறாத வீடுகளுக்கு என்ஜினியர் இன்ஸ்பெக்ஷனுக்குச் செல்லுகிறார். என்ன சொல்லுகிறார் அவர்? இன்னும் 1·12 இலட்சம் செலவில் அதை ரிப்பேர் செய்ய வேண்டும் என்கிறார். விநோதமாக இருக்கிறது, புதிதாகக் கட்டிய வீட்டுக்கு, ரிப்பேர் பண்ண வேண்டும் என்பதற் காக ரூ. 1·12 இலட்சம் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி ஆடிட்டர் ரிப்போர்டில் உள்ளதைப் படித்து விடுகிறேன்.

In the Report of the Comptroller and Auditor General of India for the year 1979–80 (Commercial), it has been stated as follows :

> "Of these, 39 houses constructed by the Company (Company means Government Corporation) and allotted in August 1978 were refused to be occupied by the allottees due to water-logging during monsoon as the houses were constructed in a low lying area, and due to non-provision of lighting and water supply arrangements, defective plastering and wood work.
>
> The Executive Engineer of the Division after inspection (June 1979) suggested repairs and improvements at an estimated cost of Rs. 1·12 lakhs. Repairs and improvements has yet to be carried out (March 1981)"

இன்னொன்று மார்ச் 1979-லே பார்த்த என்ஜினியர் ரிப்பேர் பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். 1981 வரைக்கும் ரிப்பேர் ஆகவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று நீங்கள் மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். மீனவர்கள் அரும்பாடுபட்டு அன்னியச் செலவாணியைப் பெற்றுத் தருகி றார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். 1977–78 இல் மீனவர் கள் ஏற்றுமதி மூலமாக இந்த மாநிலத்திற்கு சம்பாதித்துக் கொடுத்த தொகை 24 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கி றீர்கள். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் மீனவர்களுக்கு பல் வேறு கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகள் மூலமாக, மற்றும் பல் வேறு வழிகளில் நிதியுதவி செய்தது எவ்வளவு தெரியுமா? என் னிடம் புக்கே இருக்கிறது, ஒரு இலட்சம் ரூபாய். அவர்கள்

வேண்டிய முக்கியத்துவத்தை இந்த அரசு தவறாமல் வழங்கிருவதால் நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்றேன்.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகள் நம்மிடமிருந்து இரால் மீன்களைப் பெறுவதன்மூலமாக அன்னியச் செலவாணியை இந்த நாட்டிற்கு மீனவர்கள் அதிகமாகத் தருகிறார்கள் என்பதை நம் அரசு உணர்ந்து கல் இரால் என்ற மீன் இந்தியாவிலே மகாராட்டிரத்திலும், குஜராத்திலும், தமிழ் மாநிலத்திலே கன்னியாகுமரியிலும்தான் கிடைக்கிறது என்பதை நம் அரசு உணர்ந்திருக்கிறது. குமரி மாவட்டத்திலே கல் இராலை அதிகமாகப் பிடிப்பதற்கு திட்டத்தை வகுத்திருப்பதற்காகவும் அதற்காக். ஆக்கப் பணிகளை மேற்கொண்டிருப்பதற்சாகவும் நான் அரசைப் பாராட்டுகிறேன். அதைப் போலவே உலகத்திலேயே இந்தியாவிலிருந்துதான் அதிகமாக இரால்மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இரால் மீன்களை பிடிக்க உப்பங்கழிகள் இருக்கின்ற இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்றும் அந்த இடங்களில் இரால் மீன்களை வளர்க்க வேண்டுமென்றும் இந்த அரசு எண்ணுகிறது. அதற்குத் தேவையான இடம் நாகர்கோவில் பகுதியில் உள்ள கீழ்மணக்குடியையும் மேல் மணக்குடியையும் இணைக்கின்ற அந்த உப்பங்கழிகளில் இரால் மீன்களைப் பெருவாரியாக வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குமரி மாவட்டத்திலே ஏ.வி.எம். கால்வாயை சீரமைத்து கொடுத்தால் போக்குவரத்திற்கும் இரால் மீன்கள் வளர்ப்பிற்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்லாயிரம் மீன்கள் பிடிக்கும் குமரி மாவட்ட மீனவர்களுக்கு குளிர் பதன சாதனங்களை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் அவர்களுக்கு அந்த வசதிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் கேரள மாநிலத்தில் கொச்சிக்கு எடுத்துச் செல்கிற நிலைமை இருக்கிறது என்பதை அரசு உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் செய்யும் போது இயற்கையின் சீற்றத்தால் மீனவர்கள் உயிருக்குப் போராடுகிறபோது அவர்களை மீட்க சக்திவாய்ந்த நவீன விசைப்படகுகளை அரசு குமரி மாவட்டத்திலே உள்ள மீன் துறைக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடலோரக் கிராமங்கள் தோறும் மருத்துவ மனைகளும் அவர்களுக்குத் தேவை. வீடுகளையும் கட்டிக் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் மீன்களைப் பிடிப்பவர்கள் மீனவர்கள் ; அந்த மீன்களை விற்பவர்களும் மீனவர்கள். மீனவப் பெண்கள் அந்த மீன்களைத் தலையில் ஏற்றிச் சென்று கிராமம் கிராமமாகவும், சந்தைக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். அந்தக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து மீன்களைச் சந்தைக்கு



எடுத்துச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் அதற்கான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

100-க்கு 62 சதவீதம் பொருட்களை இன்றையதினம் கடத்துவது எது என்றால், டிரெயின், கார், பஸ், லாரி, விமானம் போன்ற நவீன வாகனங்கள் என்று இருந்தாலும்கூட, 62 சதவீதம் பொருட்களை இன்றைய தினம் வண்டிகள்தான் கடத்துகின்றன. இதுபோன்றுதான் இன்றையதினம் 70 சதவீதம் மீன்களைக் கட்டுமரத்திலே மீனவர்கள் பிடித்து வருகிறார்கள் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, மீனவர்கள் உபயோகப்படுத்தும் கட்டு மரங்கள் எளிதில் கிடைக்க அவர்களுக்கு இலவு ஐபிசியா, அஜந்தா, முறுக்கு போன்ற தடிகள் அதிகமாகக் காடுகளிலிருந்துகொண்டுவரப்பட்டு, கடற்கரைப் பகுதி இணைந்த மாவட்டங்களில் அரசு டெப்போக்களைத் திறந்து இந்தக் கட்டுமரங்களுக்கான மரங்களை இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவற்றைத் தவணை முறையிலும், மானியமாகவும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று மைல் தூரம் கட்டுமரக்காரர்கள்தான் மீன் பிடிக்க வேண்டும் என்று ஒரு ஒழுங்குமுறை இருந்தாலும்கூட விசைப்படகுக்காரர்கள் ஊடுருவி வந்து விசைப்படகுக்காரர்களுக்கும், கட்டுமரப் படகுக்காரர்களுக்கும் இடையே வேறுபாடுகளும், சண்டைகளும் வருகின்றன ; கலவரங்களும் இன்றைய தினம் சில இடங்களிலே நடந்து வருவதையும் அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். இதைத் தீர்ப்பதற்காக ஒப்பந்தம் போடுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், கண்காணிப்பாளரும் சேர்ந்து ஒப்பந்தம் போடுகிறார்கள். ஆனால், ஒப்பந்தம் மீறப்படுகிறது. அப்படி மீறிய விசைப்படகுக்காரர்களை தண்டிப்பதற்குச் சட்டத்தில் இடமிருக்கிறதா என்றால் இடமில்லை. அதனால் அவர்கள் தண்டிக்கப்படாமல் போய்விடுகிறார்கள். ஆகவே இத்தகைய கட்டுமரக்காரர்களுக்குத் தொல்லைதரும் விசைப்படகுகாரர்களையும், அந்த ஒழுங்கு முறைகளை மீறுகின்றவர்களையும் கண்டிப்பதற்கும், அவர்களது விசைப்படகுகளைப் பறிமுதல் செய்வதற்கும் சட்ட வடிவில் ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். இதைப்பற்றித் தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால் அதனுடைய உரிமையை உடனடியாகப் பெறுவதற்கு வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கத்தும் கடலில் கலன் ஓட்டும் மீனவர்கள் இறந்து விட்டால் அவர்களது குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கிட வேண்டுமென்று மீனவ நண்பர் புரட்சித் தலைவரவர்கள் அறிவித்தார்கள்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1982 மார்ச் 12

24 கோடி அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகிறார்கள். நீங்கள் 1 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். இது முறை தானா? இது சரிதானா ? இதற்கு இப்படிப்பட்ட ஒரு இலாக்கா இருக்க வேண்டுமா? நான் கேட்கிறேன். இது இவ்வளவு மோசமான பட்ஜெட்டாக, மானியமாக இருக்கிற காரணத்தால் என்னுடைய அதிருப்தியை தெரிவிக்கும் முகத்தான் நான் இந்த மானியத்தைக் கிழித்து எறிகிறேன்.

திரு. மி. வின்செண்ட் . மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளம், பிற்பட்டோர் நலன், நுகர் பொருள் வழங்கல் ஆகிய மானியங்களின் மீது நான் என்னுடைய கருத்துக்களை பாராட்டும் வகையிலே இங்கே தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். மீனவர்களை தன் கண் போலே காத்திட வேண்டுமென்று வகுக்கப்பட்ட இந்த மானியத்தை நான் பாசத்தால் ஒரு முத்தத்தைக் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

402 மீனவர் கிராமத்தையும், 4 இலட்சம் கடற்கரை மீனவர்களையும், $1\frac{1}{2}$ இலட்சம் உள்நாட்டு மீனவர்களையும், சுமார் 8 மாவட்டங்களையும் இணைக்கிற 648 மைல் கடற்கரை தூரத்தையும் கொண்ட தமிழ் மாநிலம் இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்தில் மீன் வளத்தில் இரண்டாவது நிலையில் தான் இருப்பதை முதல் நிலைக்கு கொண்டு வர வேண்டுமென்ற அக்கறையோடு இந்த மானியம் இங்கே தரப்பட்டு இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவிற்கு 648 மைல் கடற்கரை இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மகாராஷ்டிரத்திற்கும் இல்லை. குஜராத்திற்கும் இல்லை, கேரளத்திற்கும் இல்லை. இங்கேயுள்ள கடற்கரையிலே ஜப்பான்காரர்கள், தைவான்காரர்கள், சீனாக்காரர்கள் போன்றவர்கள் பசிபிக் கடலை தாண்டி அரேபிக் கடலிலும், வங்காளக் கடலிலும், இந்துமகா சமுத்திரத்திலும் மீனை பிடிக்கிற அளவிற்கு வளமான மீன் வளத்தைப் பெற்றிருக்கிற கடற்கரை வளத்தை இந்த அரசு உணர்ந்து இந்திய துணைக் கண்டத்தில் இந்த உலகில் முதல் இடத்திலே மீன் வளத்தைப் பெற்றிட வேண்டும் என்ற அக்கறை தமிழ் மாநிலம் வழிகாட்டியாக இருக்கிற அளவிற்கு இந்த மானியம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடல்மீன்கள் பிடிப்பதில், இந்த மாநிலத்தில் 70 சதவீதம், நாட்டுப் படகுகள் வைத்திருக்கின்ற சிறு மீனவர்கள் மூலம்தான் பிடிக்கப்படுகின்றது. தனியாருக்குச் சொந்தமான பெரிய விசைப் படகுகளைப் பயன்படுத்தினால் வசதிபடைத்தவர்கள்தான் பலன் பெற முடியும். எனவே, நாட்டுப் படகுகள் பயன்படுத்தும் சிறு மீனவர்களின் மீன்பிடிப்புத் திறனை தொழில் நுட்ப உதவியுடன் அதிகரிக்கச் செய்ய இந்த அரசு திட்டங்கள் தீட்டுவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 12] [திரு. மி. வின்செண்ட்]

அதற்கான கண்ணாடிகளைக் கொண்டு வலுவூட்டப்பெற்ற பிளாஸ்டிக் படகுகள் வழங்குவது என்பதும், கட்டுமரங்களிலே வெளிப்புறம் உள்புறம் பொருந்தும் மோட்டார்கள் வழங்குவது என்பதும் நைலான் நூல் வழங்குவது என்பதும் பிடித்த மீன்களை கரை சேர்க்க வசதிகள் செய்துகொடுக்கப்படுவது என்பதும் படகுகளை கரைகளிலே நிறுத்திவைக்க வசதிகளைச் செய்து கொடுப்பது என்பதும் மீன்பிடிப்பு வசதிகளைப் பலப்படுத்துவது என்பதும் கடலோரக் கிராமங்களிலே அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருவது என்பதும் அண்மைக் கடலில் ஆய்வு நடத்துவது என்பதும் வழிகாட்டி விளக்குகளை அமைப்பது என்பதும் இப்படிப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற இந்த நல்ல அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். பிடிக்கப்படும் மீன்களை கரை சேர்க்கவும் கலன்களை நிறுத்தி வைக்கவும் திட்டங்களைத் தீட்டியிருப்பது மீன்வளம் பெருகுவதற்கு உதவுகின்றவையாகும்.

[முற்பகல் 11—00]

முக்கியமான இடங்களில் மீன்களை கரையிறக்கவும் வசதிகள் பருகும் அளவுக்கும் செய்து கொடுத்தால் மீனவர்களுடைய ஆற்லையும் திறனையும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள முடிம். இந்தப் பிரச்சினையை உணர்ந்து அரசு மீன்பிடி துறைமுகங்கள், தோணித்துறைகள் ஆகியவற்றை அமைக்கும் திட்டங்ளை மத்திய அரசின் உதவியுடன் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். சுமார் 11 கோடி ரூபாய் செலவில் பெரிய மீன்பிடி துறைமுகம் ஒன்றை சென்னையிலே அமைத்துத் தரவும் குமரி மாவட்டத்திலே சின்னமுட்டத்திலே 2.3 கோடி ரூபாய் செலவிலே மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அண்மையிலே மத்திய அரசு ஒப்புதல் அளித்ததையும் அதற்கான ஆக்கப் பணிகளிலே தமிழக அரசு நிறைவேற்றியிருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980—81 ஆம் ஆண்டிலே 3 இலட்சத்து 82 ஆயிரம் டன் மீன் கிடைத்தது, 1981—82 ஆம் ஆண்டிலே அது 4 இலட்சத்து 15 ஆயிரம் டன் என்ற அளவுக்கு உயர்வதன் மூலமாக இன்னும் 25 ஆயிரம் டன் அதிகமாகக் கிடைக்கும் என்ற நிலையும் 1984—85 இல் அது 5 இலட்சத்து 10 ஆயிரம் என்ற அளவுக்கு உயர்ந்து 1 இலட்சத்து 18 ஆயிரம் டன் அதிகமாகக் கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மீன்வளத்தைப் பெருக்குவதில் இந்த அரசு காட்டியுள்ள அக்கறையைக் காட்டுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 4 இலட்சம் கடற்கரையோர மீனவர்களைக் கொண்ட இந்த தமிழகம் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்களை கன்னியாகுமரி மாவட்டத்திலே கொண்டிருக்கிறது. அந்த குமரி மாவட்டத்திலே உள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட

ஆனால், அந்தப் பத்தாயிரம் ரூபாய் வழங்குவதில் இன்றைய தினம் அதிகார மட்டத்தில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தாசில்தார் அத்தாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், தாசில்தார் எப்படி அத்தாட்சியம் வழங்குவார் என்றால் டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும். பிணம் கிடைத்து போஸ்ட் மார்ட்டம் செய்து டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுத்தால்தான் தாசில்தார் அத்தாட்சியம் கொடுப்பார். தாசில்தார் அத்தாட்சியம் கொடுக்காவிட்டால் இறந்த மீனவரின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் கிடைப்பதில்லை. ஆனால், பெரும்பான்மையான மீனவர்கள் கடலில் அடித்துச் செல்லப்படும் நேரத்தில் கடலிலேயே மீன்களுக்கு இரையாகிவிடுகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது ஊரில் உள்ள பெரியவர்களோ அது உண்மை என்று அத்தாட்சியம் அளித்து, இரண்டு சாட்சிகளுடன் கொடுப்பார்களேயானால் அந்தத் தொகையை வழங்குவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கட்லா என்ற ஒருவகை மீன் குமரி மாவட்டத்திலே பேச்சிப் பாறை அணையில் இப்பொழுது வளர்க்கப்படுகிறது. அந்த மீன் நான்கு வருடங்களில் முப்பது கிலோ வரைக்கும் வளர்கிறது. ஆகவே, பேச்சிப்பாறையில் இந்த மீன்களை அதிகமாக வளர்க்க வேண்டும். மேலும், இதை அதிகமாக மாற்றார் பிடித்து விடாமல் இருக்க இயந்திரப் படகுகளை அங்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மிர்க்கால் என்ற ஒருவகை மீன் ஐந்து வருடங்கள் வளர்ந்தால் இருபது கிலோ அளவிற்குப் பருமன் அடையும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. குமரி மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான வற்றாத குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களில், குறிப்பாக பரக்கைக் குளம், புத்தேரிக் குளம் போன்ற வற்றாத குளங்களில் இத்தகைய மீன்களை வளர்ப்பதற்கு அரசுமுன் வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

புயலின்பொழுது கட்டு மரங்களும், வலைகளும் சேதமடைகின்ற நேரத்தில் அந்த மீனவர்களுக்கு முழு நஷ்டஈட்டையும் அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புயல் நேரத்திலும், வறட்சி நேரத்திலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதில்லை. அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் பஞ்சத்தால் அடிபடும் நிலையை இந்த அரசு மாற்ற வேண்டும். அவர்களுக்கு ப்ரீ ரேஷன் கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ்நாடு மாநிலத்திற்கு மத்திய அரசு அரிசி வழங்குவதில் மாற்று மனப்பான்மையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் 6,10,000 டன்னை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்தது. இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமான இரயில்வே வேகன்களைத் தராமல் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி முழுவதையும் இந்திய உணவுக் கழகத்தால் தர முடியவில்லை.

(முற்பகல் 11-10)

1981ஆம் ஆண்டு முழுமைக்கும் 4,07,818 டன்கள் அரிசியே, தந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்குத் தேவைக்கேற்ற அரிசியும் தரவில்லை ; ஆண்டுதோறும் தரும் அரிசியின் அளவிலே 1981-82 ஆம் ஆண்டு குறைவாகவே அரிசி வந்திருக்கிறது. அந்த அரிசியையும் எடுத்து வர வேகன்கள் தரவில்லை. தராமலே இருந்துவிட்டு அந்த அரிசியை எடுத்துச் செல்ல தமிழக அரசு முன் வரவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினர் டென்னிஸ் லோக்சபாவில் கேட்ட கேள்விக்கு மைய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்கள், மாநில அரசு எடுத்துச் செல்ல முன் வரவில்லையென்று சொல்லியிருக்கிறார். இத்தகைய நிலைமை சரியல்ல என்பதை மைய அரசிடம் மாநில அரசு வலியுறுத்த வேண்டும் ; முறையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மைய அரசுக்குத் தமிழ் மக்களிடம் பாசம் இருக்குமானால், உணவு நிலைமையிலாவது பாரபட்சம் காட்டாமல் இருக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இராஜ்ய சபாவில் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகனரங்கம் அவர்கள் கோதுமைக்கு அதிக விலை கொடுப்பதைப் போல், நெல்லுக்கும் நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டும் ; அத்தகைய ஆர்வம் உங்களுக்கு வரவேண்டுமென்று கேட்ட நேரத்தில், you do not know how o cultivate paddy என்ற அளவுக்கு மைய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங், இங்குள்ள விவசாயிகளைக் குறிப்பிட்டது நியாயம்தானா என்பதை இன்றையதினம் நம்முடைய இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் மனதிலே வைத்து செயல்பட வேண்டுமென்றும் நான் அன்பு வேண்டுகோளாக இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உணவு நிலைமையைச் சீராக்க அரசு எந்த அளவு தனி அக்கறை செலுத்துகிறது என்பதையும் அதில் எந்த அளவு வெற்றி கண்டிருக்கிறது என்பதையும் கண்டு நான் இந்த நேரத்தில்

பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1974 ஆம் ஆண்டில், வறட்சி நிலைமை ஏற்பட்டபொழுது, அவ்வாண்டு டிசம்பர் மாதத் தில் வெளிச் சந்தையில் நடுத்தர ரக அரிசியின் விலை கிலோ ஒன்று ரூபாய் 4.20-ஐ எட்டியது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இதே மாதிரி வறட்சி ஏற்பட்ட நிலைமையிலே கூட, அதே ரக அரிசியின் விலை கிலோ ரூபாய் 2.70-ஐத் தாண்டிய தில்லை. வறட்சிக் காலத்தில் அரிசி கிடைக்கவில்லையென்றோ அல்லது வெளிச் சந்தையில் அதிக விலையில் விற்கிறது என்றோ புகார் வராத அளவுக்கு, உணவு நிலைமையைச் சமாளித்ததை இம்மாமன்றம் பாராட்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப் பிட கடமைப்பட்டிருக்கிறேன். இது எதைக் குறிப்பிடுகிறது என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நல்ல திறமையான அரசு என்பதைத்தான் காட்டுகிறது. அதை நான் மனப்பூர்வ மாகப் பாராட்டுகிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலனைப் பொறுத்தமட்டில், குமரி மாவட்டத் தில், மீனவர் அத்தனை பேரும் ஒரே ஜாதி, ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களுடைய சர்ட்டிபிகேட்டில் முக்குவர்கள் என்றும், பரதர்கள் என்றும், அரசர்கள் என்றும் லாட்டின் கத்தோலிக்கர்கள் என்றும், லாட்டின் முக்குவர்கள் என்றும் கொடுக்கப்படுகின்றது. ஆனால், அவர்கள் அத்தனை பேரும், all are belonging to one and same category என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். லாட்டின் கத்தோலிக்கர்கள் முக்குவர்கள் என்று சில வற்றில் போடப்பட்டிருக்கிறது. ஆனால், முக்குவர்கள் கிறிஸ் தவர்கள் என்று சர்டிபிகேட் கொடுத்தால் மட்டுமே அவர்களை பார்வர்ட் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். மற்றவர்கள் உரிமை கள், சலுகைகள், கல்வி போன்றவற்றில் பெறமுடியாமல் மறுக் கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் நாடார் குலத்தில்கூட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் லாட்டின் கத்தோலிக், ரோமன் கத்தோலிக் என்று பிரிக்கப்படுகிறார்கள். ரோமன் காத்தோலிக் பார்வார்ட் என்றும், லாட்டின் காத்தோலிக் பாக்வார்ட் என்றும் ஒரே குடும் பத்தில், அண்ணன் தம்பிகளில் ஒருவர் முற்பட்டவராகவும் ஒருவர் பிற்படுத்தப்பட்டவராகவும் இருக்கும் முறையைத் தவிர்க்க அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல்தான் குமரி மாவட்டத்தில் சவரத் தொழில் செய் யும் இந்து யாதவர்கள் 25 வருடங்களாகத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருந்தார்கள். அவர்களுக்குப் பல கல்வி வசதிகள்





கிடைத்தன. ஆனால், இப்பொழுது இரண்டு ஆண்டுகளாக, அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறவில்லை யென்று சொல்கின்ற அளவுக்கு இன்றையதினம் அவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்க தாசில்தார் மறுக்கிறார் என் பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தப் புரட்சித் தலைவர் அரசு, ஏழை மீனவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டத்தை அளிக்கும் அரசு என்றும், உணவுத் துறையில் அது தன்னிறைவு பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், வருங்கால நிலைமையை உணர்ந்து, நல்ல திட்டங்களை அவ்வப்போது செயல்படுத்துகின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரி வித்து, அதற்காக நம்முடைய அமைச்சர் டாக்டர் நாவலர் அவர் களையும் பாராட்டி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டுக்கான மீனளம், நுகர் பொருள், பின்தங்கியோர் நலன் ஆகிய மானியக் கோரிக்கை களின் மீது சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நல இலாகாவை நம்முடைய நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என்னுடைய ஆட்சேபணை என்பதை முதற்கண் தெரி வித்துக் கொள்கிறேன். அந்த இலாகா ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு அமைச்சரிடம்தான் இருக்க வேண்டும். எப்படி ஆதிதிராவிடர் நலன் இலாகா ஒரு ஆதி திராவிட சமு தாயத்தைச் சேர்ந்த அமைச்சரிடம் இருக்கிறதோ அதேபோல இந்த பிற்படுத்தப்பட்டோர் நலன் இலாகா ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரிடம்தான் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மீனளத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கடற்கரைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுவது. இரண்டாவது உள்நாட்டிலே உற்பத்தி செய்யப் படுவது. கடற்கரையை எடுத்துக் கொள்வோமேயானால், குஜராத் கடற்கரைதான் அதிகமான பரப்பைக் கொண்டதாகும் ஆனால் உற்பத்தியில் கேரளா கடற்கரையில்தான் அதிகமான மீன் உற்பத்தி ஆகின்றது. இன்றைக்கு உலகத்திலேயே நமது மெரினா கடற்கரைதான் இரண்டாவதாக இருக்கின்றது. அப்படி இருந்தும் தமிழ்நாட்டிலே மீன் உற்பத்தி அவ்வளவாக அதிகமாக இல்லை. வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதைப்போல, இந்த மீனளத்திற்கும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் மீன் துறைக்கு 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. பெரிய கொள்கை கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 5.5 விழுக் காடு உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது மிகக் குறைவானதாகும். சாதாரணமாக இன்றைக்கு பத்து விழுக்காடு இருந்தால்தான் இந்தக் கொள்கை நிச்சயமாக தமிழக மக்களுக்குப் பயன்படும். அவர்களுக்கு மீனை உணவாகத் தர முடியும். மீன் குழம்பு வைத்தால் சாப்பாடு அதிகமாக ஏற்பதைப்போல இந்தத் துறைக்கும் அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறால் மீன் வளர்ப்புத் திட்டம் மிகவும் நல்ல திட்டம். அன்னிய செலாவணி ஈட்டிக் கொடுக்கும் திட்டம். கடற்கரை ஓரங்களில் படல்களை அமைத்து உவர் தண்ணீரைக் கொண்டு வந்து நல்ல முறையில் நிறைவேற்றினால், தஞ்சை, ராமநாதபுரம், தென்னார்க்காடு மாவட்டத்தில் நல்ல பெரிய அபிவிருத்தி ஏற்படும். இந்தத் திட்டத்திற்கு 1.13 கோடி ரூபாய் மத்திய அரசிடம் இருந்து வாங்கி அதற்கான ஒரு முனைப்பான திட்டத்தைசெய்ய இருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. இது போதாது. அதனுடைய நிலைமை இந்தத் துறைக்கு அதிகமாக செய்ய வேண்டும. மீன் வளர்ப்புத் திட்டங்களைச் செய்யும்போது பல்வேறு சங்கடங்களை அதிகாரிகள் கொடுக்கிறார்கள். அந்தச் சங்கடங்களைக் களைந்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

கடலிலே தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து மீனைக் கரையிலே சேர்க்கும் மீனவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இது அரசினுடைய பொறுப்பு. சமீபத்திலே சென்னையிலே மீனவர்கள் ஒரு பேரணி நடத்தி, தங்களுடைய கோரிக்கையை அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசியதைப்போல இந்த சென்னை கடற்கரைக்கு மறைந்த சிங்காரவேலர் பெயரை வைக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக மீனவர்கள் பகுதிக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அந்த வசதியை செய்து கொடுப்பதோடு, அங்கே அவர்கள் நல்ல தமிழிலே பேசக்கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் பேசுகின்ற தமிழ் வருங்காலத்திலே வேறு மொழியாக மாறிவிடுமோ என்று ஐயப்பட வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே, அந்த மீனவப் பகுதியிலே தமிழ் ஆசிரியர்களை நியமித்து, கன்னித் தமிழிலே, நல்ல முறையிலே சொல்லிக் கொடுத்து ஒழுங்கான முறையிலே படிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும்.





உள்நாட்டிலே இன்றைக்கு மீன் உற்பத்தி செய்யப்படுகின்றது. மீன் வள மேம்பாட்டுக் கழகம் மூலம், மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும் இது மிக நல்லமுறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அது தனியார்களுக்குத் தரப்பட்டதாக சொல்லுகிறார்கள். அப்படி தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் நான் அதை எதிர்க்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மற்றும் ஊராட்சிகளுக்குக் கொடுக்கும் நிலை ஏற்படவேண்டுமே தவிர, தனியார்களுக்குக் கொடுத்தால் பல சங்கடங்களை, கஷ்டங்களை இந்த அரசு சந்திக்க வேண்டி இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த எப். எப். டி. ஏ. என்றால் அது ஆளுங்கட்சியினருக்கு மட்டும்தான் சிபாரிசு செய்கின்றது. எப்.எப்.டி.ஏ. ஆக இருந்தாலும் அரசு அதிகாரிகளாக இருந்தாலும் ஆளும் கட்சி சொல்வதை மட்டும்தான் கேட்கிறார்கள். அதைக் கடுமையாக எதிர்க்கிறேன். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அந்த உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

பிஷர்மென் சொசைடியிலும் இந்த மாதிரி ஒரு நிலைமை இருக்கிறது. அதிலே வெளிநபர்களை—மீனவர்களாக இருந்தாலும்—சேர்க்கப்படுவது இல்லை. இதனால் உண்மையான மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்லது ஆளும் கட்சி மேலிடத்தில் இருந்து சொல்லியவர்கள்தான் இதிலே சேர்க்கப்படுவதாக பலர் பல புகார்களைக் கொடுத்து இருக்கிறார்கள். இதிலே ஆளும் கட்சியின் குறுக்கீடுகள் இருக்கின்றன. இந்தக் குறுக்கீடுகள் அதிகமாக இருப்பதால் மீனவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்ய அந்தச் சங்கங்களால் முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்சொள்கிறேன். அது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டில் செயற்கைமுறையில் முத்து செய்கிறார்கள். அந்த முத்துச் சிப்பியை எடுத்து, அதிலே இன்ஜெக்ட் செய்து, அதை மீண்டும் ஒரு பாதுகாப்பான இடத்தில் வளர விட்டு அந்த முத்தை எடுக்கிறார்கள். நம்முடைய நாட்டில் முனைப்பாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, நம் நாட்டிலும் அதிக அளவில் முத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தமிழ் நாட்டில்தான் இயற்கைக் கடற்கரை பகுதி ...கமாக இருப்பதால், மீன் உற்பத்திக்கு அடிப்படையான ...திகள் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் ...ற்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல திட்டத்தை காங்கிரஸ் பேரியக்கம் தான் முதன்முதலில் ஆரம்பித்து, பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் எல்லா நீர்நிலைகளிலும் அணைக்கட்டு கட்டி, அதை விவசாயத்தின் ஒரு அடிப்படையான திட்டம் என்கிற வகையில் செய்யப்பட்டது. 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியார் அவர்கள் சொன்னார்கள். அவர் உழவையும் தொழிலையும் ஒன்றாக இணைத்துச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தொழில் துறையில் ஈடுபட்டு இருப்பவர்கள் தான் நல்ல வாய்ப்புகளைப் பெற்று இருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரு குவிண்டால் ரூ. 115 என்று தான் மத்திய அரசு விலை நிர்ணயித்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போனஸ், வண்டி சத்தம் என்று குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 12 வரை அதிகமாகக் கொடுத்தார்கள். ஆகவே, மைய அரசு குறைந்த விலை கொடுத்தாலும், இந்த அரசு போனஸ், வண்டிச் சத்தம் என்கிற வகையில் அதிகப்படியான அளவிற்கு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் இன்றைக்குப் பெரும் கடனாளிகளாக ஆகியிருக்கிறார்கள். $2\frac{1}{2}$ ஏக்கர் நிலம் வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு மட்டும் தான் இயற்கை சீற்றத்தின் காரணமாக பாதிக்கப்பட்டால் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையில் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதால், 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு எல்லாக் கடன்களையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கெடுபிடி வசூல் செய்வதற்கு அதிகாரிகள் இப்போதே தயார் நிலையில் இருந்து வருகின்றனர். சட்டசபை முடிந்தவுடன் அதற்கு நடவடிக்கை எடுத்து விடுவார்கள். ஆகவே, அதற்கு முன்னாடியே அரசாங்கம் இது குறித்து சிந்தித்து விவசாயிகளுக்கு உள்ள அந்த இன்னல்களைப் போக்க, அந்தக் கடன்கள் ரத்து செய்வது குறித்து முடிவு செய்ய வேண்டும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். அது சம்பந்தமாகக்கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்த முடிவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு வினியோகத்தைப் பொறுத்தவரையில் பொது வினியோக முறை மிகவும் சரிந்தது. கொள்முதல் செய்வதையும் அரசு ஏற்றுக்கொள்வதும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் அதை நடத்திடவும் மிகவும் நல்ல முறை. தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல்லை சிவில்சப்ளைஸ் கார்ப்பரேஷன்



அதிகாரிகள் கொள்முதல் செய்கிறார்கள். அந்த இடத்தில் வடகிழக்குப் பருவ மழை பெய்ததன் காரணமாக அறுவடை செய்ய நெல்லை அவர்கள் வீட்டுக்குக் கொண்டு வரமுடியவில்லை. நேரடியாக கொள்முதல் நிலையங்களுக்கும் கொண்டு செல்ல முடியவில்லை. அப்படி மிகுந்த சிரமமான நிலையில் இருக்கிறார்கள். அப்படியும், விற்பனை நிலையங்களுக்கு நெல்லைக் கொண்டு வந்து கொடுத்தால், 22 சதவிகிதம் மேல் ஈரப்பசை இருந்தால் எடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதை 22 சதவிகிதம் என்பதில் இருந்து 25 சதவிகிதம் என்று உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்து கொடுத்தால் ஏழை எளிய மக்கள் மிகவும் பயன் அடைவார்கள். அவர்கள் உற்பத்தி செய்த நெல்லையும் விற்க முடியாமல் இருக்கின்ற பல்வேறு இன்னல்கள் களையப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல இடங்களில் உற்பத்தி செய்த நெல்லை வைப்பதற்கு இடவசதி இல்லை. ஆகவே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் திட்டமிட்டு எங்கெங்கே கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்கு கொடோன்கள் இல்லையோ அங்கெல்லாம் கொடோன்கள் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் நிலையங்கள் அதிகமாக இருப்பதால், அரசாங்கம் அங்கேயெல்லாம் கொடோன்கள் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கோதுமை, எண்ணெய், பருப்பு வகைகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எல்லாம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் நியாயமான விலையில் மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கும்.

சென்ற தேர்தலில் நாம் கூட எல்லா மக்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்களை வழங்குவோம் என்று சொன்னோம். ஆனால் இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படவில்லை. 1,000 மக்கள் தொகைகொண்ட எல்லாக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை திறந்து மக்களுக்குத் தேவையான பொருட்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் இருந்தால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யலாம். இன்றைக்கு அவர்கள் 4, 5 மைல் தூரம் சென்று வாங்க வேண்டியிருக்கிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கோதுமை, ரவை, மைதா கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக உருளை மாவு ஆலைகளை ஏற்படுத்தி இந்தப் பொருட்கள் தாராளமாக நியாயவிலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிற்பட்டோர் நல மானியத்திற்காக 9,22,67,000 ரூபாய் வேண்டுமென்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் முன்னாலே சொன்னதைப்போல, இன்றைக்கு 5,000 ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவர்களுடைய குழந்தைகளுக்குத்தான் கல்வி வசதி, புத்தக வசதி போன்ற வசதிகள் கிடைக்கின்றன. இந்த வரம்பை மாற்றியமைக்க வேண்டும். வருமான வரம்பை ஏறத்தாழ 10,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய எல்லாப் பள்ளிகள் இருக்கின்ற இடங்களிலும் பிற்பட்ட மாணவர்களுக்கு ஆஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படியானால்தான் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முன்னேற வாய்ப்பு இருக்கும்.

பிற்பட்ட வகுப்பினருக்கு கல்விக் கூடங்களில் இட ஒதுக்கீடு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு இப்போது இருக்கிற 50 சதவீதம் என்பதை 60 சதவீதமாக உயர்த்த வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்கும்.

நேற்றையதினம் இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் டெபுடி கலெக்டர், டெபுடி சூப்பிரண்டு, டெபுடி ரெஜிஸ்திரார் ஆஃப் கோவாப்ரேடிவ் சொசைட்டீஸ் போன்ற பதவிகளில் ஏறத்தாழ 80 சதவீதம், 85 சதவீதம் பிற்பட்ட வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அதைப்போல இந்த அரசும் அந்த அளவுக்கு வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாவட்டங்களிலும் பிற்பட்ட சமுதாயத்தினரை தொழில் வளர்ச்சியில் முன்னேற்ற தக்க வகையில் அமைப்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் மேலையூரில் நரிக்குறவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதைப்போல குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே ஒரு பிற்பட்டோர் நல ஆஸ்டல் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு மருத்துவம், பொறியியல் வேளாண்மை போன்ற துறைகளில் அதிகமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இந்திய அரசியல் சாசனத்தில் சமூக நீதியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த சமூக நீதியை ஏற்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அடிப்படை உரிமை சரத்து மூலமாக தடங்கல் ஏற்படாத வண்ணம் அரசியல் சட்டம் 15(4), 16(4) பிரிவுகள் விதிவிலக்கு அளித்துள்ளன. அரசியல் சட்டம் 16(4)ல் உள்ள சலுகைகளை பிற்பட்டோர் பட்டியலில் உள்ள சமூகத்திற்கு தனியாக ஒதுக்கீடு செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே 1982—83ஆம் ஆண்டுக்கான உணவுத்துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 1981-82ஆம் ஆண்டு கூட்டுறவு கடைகள் மூலம் 78,000 டன் அரிசியை பொதுமக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 75 காசுக்கும், அதற்கு அடுத்த ரகம் 2 ரூபாய்க்கும், அதைவிட சற்று உயர்ந்த ரகம், பச்சை அரிசி போன்றவைகள் 2 ரூபாய் 15 காசுக்கும் வறட்சி காலத்திலே கூட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் வழங்கி, வறட்சியை சமாளித்தோம். அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை எங்கும் இல்லை. அந்த அளவுக்கு அரசு ஏழை எளிய மக்களுக்கு அதிலும் குறிப்பாக கிராமத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் அரிசியை கொடுக்கச் செய்து ஒரு பெரிய அபார காரியத்தைச் செய்தார்கள். அதை பாராட்ட வேண்டியது நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் 1974 அல்லது 1975ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்ட போது பொதுவாக பொது விநியோகத்தில் குறைகள் ஏற்பட்டு, மக்கள் கியூவில் நின்று அரிசி வாங்கவேண்டியிருந்தது; கியூவில் நின்ற பலர் இறந்திருக்கிறார்கள்.

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1982 மார்ச் 12

கியூ வரிசையிலே நின்று அரிசி வாங்கி பலர் இறந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஒரு படி அரிசியின் விலை வெளி மார்க்கெட்டிலே 6 ரூபாய் 7 ரூபாய் என்ற அளவுக்கு விற்கப்பட்டது. ஆனால் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்குப் பிறகு மத்திய சர்க்கார் ஒத்துழைப்போடு இந்த அரசு விலை ஏற்றம் இல்லாமல் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுத்துக்கொண்ட முயற்சியின் அடிப்படையிலே மிகக் குறைந்த விலையிலே அரிசி விற்கப்பட்டது. ஆகவே பொதுமக்கள் நல்ல அனுகூலத்தைப் பெற்றார்கள்.

[முற்பகல் 11-30]

நியாய விலைக் கடைகள் மொத்தம் 17,536 இருக்கின்றன என்று இங்கே குறிப்பிலே கூறப்பட்டிருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே 17 ஆயிரம் நியாயவிலைக் கடைகள் வரும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கும் மேலாக 17,536 கடைகளைக் கொண்டுவந்த இந்த சர்க்காரையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நியாயவிலைக் கடைகளிலே அரிசி, கோதுமை ரவா, மைதா, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கொடுக்கவேண்டும் என்ற கொள்கையிலே கொடுக்கப்படுன்றபோது, அப்படி அதிகமாக வினியோகிக்கப்பட்டும் கூட சில இடங்களில் நிர்வாகத்திலே கீழ்மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளின் நிர்வாகக் குறைபாட்டின் காரணமாக சில தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதை மேலதிகாரிகள் தயவுசெய்து கண்காணிக்க வேண்டும். கீழ்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கின்ற காரணத்தால் கெட்ட பெயர் ஏற்படக்கூடும். ஆகவே, அந்தக் கீழ்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளைக் கண்காணிக்கவேண்டும். வடாற்காடு மாவட்டத்திலே உபரியாக உள்ள நெல், அதிகமான மூட்டைகளை அங்கே உள்ள வியாபாரிகள் சங்கத்தின் மூலமாக 19,551 மூட்டை நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இடையிலே சில தனிப்பட்ட வியாபாரிகள் சேர்ந்து கொள்முதல் செய்யப்பட்ட பில்லைத் தனியாக எடுத்துவிட்டு அதன்மூலம் 13 ஆயிரம் மூட்டைகள்தான் கொள்முதல் செய்ததாகக் காட்டி இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பேசப்படுகிறது. நான் இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கூட தெரிவித்திருக்கிறேன். இதுபோன்ற குறைபாடுகள் எல்லாம் சிறிய அதிகாரிகள் செய்துவிடுகின்ற காரணத்தால் அரசாங்கத்தின் மீது தவறான கருத்துக்கள் வருவதற்குரிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஒரு வருடத்திலே நியாய விலைக் கடைகளின் மூலமாகவும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் மொத்தமாக 1981 ஆம் ஆண்டு 115 கோடி ரூபாய் விற்பனை ஆகி



1982 மார்ச் 12] [திரு. ஏ. எம். சேதுராமன்]

இருக்கின்றது. அதை வரவேற்கிறேன். ஆனால் அதன்மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை ஆகவே இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்க வேண்டும். அரிசி விற்பனையில் 1980-81 ஆம் ஆண்டு இழப்பு 2·28 இலட்சம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இப்போது 300 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றபோது இந்த 1981-82 ஆம் ஆண்டிலே 35 கோடி இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது எழுதி இருப்பது சரியான புள்ளிவிவரமா என்பது சந்தேகமாக இருக்கின்றது. 202 கோடி ரூபாய் விற்பனையில் 2·28 இலட்சம் நஷ்டம் வந்திருக்கின்றது என்று சொன்னால் 300 கோடி ரூபாய் விற்பனையில் 35 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொல்வது மிக அதிகமாகத் தெரிகிறது.

அடுத்து கிராமங்களிலே புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தினை அடிப்படையாக வைத்து 500 பேர்களுக்கு ஒரு நியாய விலை கடை இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை பிரதிபலிக்கின்ற வகையிலே அந்த நோக்கத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நெல் வாங்கி இருப்பு வைக்கின்ற ஒரு நிலைமை ஓரளவுக்குத் தமிழகத்தில் இப்போது இருக்கின்றது. மகாராஷ்டிரா, குஜராத் போன்ற இடங்களிலே மார்க்கெட்டிலே நெல் அதிகமாக இருக்கின்றபோது வாங்கி வைத்து பிறகு விற்கின்றபோது அவர்கள் அரசாங்க விலைக்கு மட்டுமல்லாமல் 5 சதவீதம், 10 சதவீதம் குறைந்த லாபம் வைத்து ஸ்கேர்சிட்டி ஏற்படுகின்றபோது விற்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அந்த நிலைமைகளை தமிழக சர்க்காரும் கண்டிப்பாக கொண்டுவர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் அரங்சாங்க விலைக்குத்தான் விற்க வேண்டும் என்ற நிலைமை இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சங்கங்கள் விரும்பினால் அல்லது அதன் உறுப்பினர்கள் விரும்பினால், வெளி மார்க்கெட்டிலே எந்த அளவுக்கு விலைகள் இருக்கிறதோ அதை அடிப்படையாக வைத்து, போதுமான அளவு இருப்புகள் வைத்துக் கொண்டு, தக்க நேரத்திலே, அரசாங்கத்திற்கு ஸ்கேர்சிட்டி ஏற்படும்போது, அவைகள் முன் வந்து உதவும் வகையில், பொதுமக்களுக்கு தக்க சமயத்தில் உணவு இருப்புகளில் கைகொடுக்கும் வகையில் அவைகள் செயல்பட அரசாங்கம் அந்தச் சங்கங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும், ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதில், அதை குவிண்டாலுக்கு 147 ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு, மாநில சர்க்கார் அனுமதி கேட்டு இருப்ப

தாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இது மகிழ்ச்சிகரமான ஒன்று. சென்ற ஆண்டு உணவு மானியக் கோரிக்கையிலே பேசும்போது கூட நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். அதேபோல 147 ரூபாயாவது நெல்லின் விலை இருக்க வேண்டும் என்ற கருத்தில் அரசு முனைந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். வரவேற்கிறேன். ஆனால் மத்திய அரசை கட்டாயமாக வற்புறுத்தி இதை பெறும் வகையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் நேரில் சென்றாவது அந்த விலையைப் பெற்றுக் கொண்டு வந்து, நமது விவசாயிகளுக்கு கொடுப்பார்களேயானால், மருந்து போன்ற பல விவசாயப் பொருள்களின் விலைவாசிகளுக்கு ஏற்ப, அவர்களுக்கு நெல்லுக்கு நல்லவிலை கிடைக்க ஏதுவாகும். அதற்காக நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் நம்முடைய அரசை பாராட்டுவர்கள், வரவேற்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 109 இலட்சம் குடும்ப அட்டைகள் மாநில அளவிலே வழங்கப்பட்டுள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த குடும்ப அட்டைகளுக்கு பாஸ்-புக் வழங்கி, அவைகளை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வகையில் ஒரு நல்ல பாதுகாப்பான முறையை ஏற்படுத்தி அதன்மூலம் நுகர் பொருள்கள் மக்களுக்கு வழங்கப்படும் நிலையை உண்மையிலேயே மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள்.

அடுத்து, 1981 ல் 6 கோடியே 70 இலட்சத்து 955 டன்கள் அரிசியை குடும்பக் கார்டுகளுக்கு கொடுத்துள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. கோதுமையைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் தற்போது 4,000 டன்கள் அளவில் ஒதுக்கீடு செய்திருப்பதால் அது மிகவும் குறைவு என்றும் 11 ஆயிரம் டன்கள் அளவிலாவது தேவைப்படுகிறது என்றும், அந்த அளவில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதாகவும் தெரிகிறது. இருந்தாலும் 4,000 டன்கள் என்பதை 6 ஆயிரம் அல்லது 7 ஆயிரம் டன்கள் அளவிலாவது கொடுத்தால், ஓரளவிற்கு நம் மாநிலத்தில் நிலைமைகள் சரியாகும் என்றும் நான் கருதுகிறேன்.

அடுத்து சர்க்கரையைப் பொறுத்தவரையில், முதலில் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் அல்லது அதற்கு மேற்கொண்டு வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ சர்க்கரை என்ற அளவில் கொடுக்கப்பட்டது. அதை மாற்றி நபர் ஒன்று 425 கிராம் என்ற அளவில் கொடுப்பதாக உள்ளது நல்ல முறைதான் என்றாலும் கூட, அது மிகவும் குறைவாக இருப்பதால், ஒரு நபருக்கு ஒரு கிலோ வீதம் அளவில் வைத்து, அதே சமயத்தில் மாதம் ஒன்றுக்கு





5 கிலோவிற்கு மேல் ஒரு குடும்பத்திற்குப் போகாத அளவிற்கு நிலைமையை சரிசெய்தால் எல்லா வகையிலும் சரியாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்கள் நம் அரசை வாழ்த்தும்; அவர்களை திருப்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மண்ணேண்ணெயைப் பொறுத்தவரையில்; எப்படி பட்டுத் துணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 5 சதவீத வரியை குறைத்து நெசவாளர்களுடைய கஷ்டத்தை அரசு போக்கியிருக்கிறதோ, அதேபோல, மண்ணெண்ணெய்க்கும் 8 சதவீத வரியிலிருந்து 4 சதவீதமாகக் குறைத்து தள்ளுபடி செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் நான் இன்னொன்றைக் கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால் அடுத்த ஆண்டில் வேறு எந்தப் பொருள்களுக்காவது வரியைக் கூட்டி வைத்து சரி செய்துக் கொள்ளுங்கள்; ஆனால் தயவுசெய்து மண்ணெண்ணெய்க்கு, மாநில சர்க்கார் போட்டிருக்கிற அந்த 4 சதவீத வரியைக்கூட வேண்டாம் என்று தள்ளுபடி செய்துவிடுங்கள். அப்படிச் செய்வீர்களேயானால், ஏழை எளிய மக்கள் பாராட்டுவார்கள். அவர்களுடைய பாராட்டுதலுக்கு நம் சர்க்காரர் ஆளாகும் என்பதையும் கூறி, அந்த மக்களுக்கு உதவி செய்கிற வகையில் இதனைமேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரைஸ் மில்களைப் பொறுத்தவரையில் 16,476 மில்கள் மொத்தமாகத் தமிழகத்தில் இருப்பதாகவும், அதிலே 13,000 மில்கள் கூலி அரவை மில்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அதில் மலை வாழ்மக்கள் வாழும் பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் உள்ள முன்பே உரிமம் பெற்ற கூலி அரவை மில்களுக்கு மட்டும், குறிப்பிட்ட நாட்களுக்குள் அதாவது 1982–83 ஆம் ஆண்டு வரைக்குள், நவீனமயமாக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்ட திட்டத்திலிருந்து, மத்திய அரசின் அனுமதி பெற்று விலக்கு வாங்கிக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். கிராமங்களில் கூலி அரவை மில்களை நவீனப்படுத்தும் முறையில் இருந்து விலக்களித்தால் நல்லது.

[முற்பகல் 11-40]

அதேபோல் நுகர்பொருள் வாணிபக்கழகம், இன்று அறுவடை நேரத்தில் கொள்முதல் செய்யும்போது தஞ்சையில் 25 சதவீதம் ஈரப்பதம் இருந்தால்கூட நெல் வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நவரை வர இருக்கிறது. அந்த மாவட்டத்தில் 18 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே நல்ல தரமான நெல் கிடைக்கிறது. எனவே, அங்கேயிருந்து 20 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லையாவது வாங்க முன்வரவேண்டும் என்று நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உத்தரவிடவேண்டும்.

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1982 மார்ச் 1

லெவி வாங்கும்போது செக் கொடுக்கப்படுகிறது. 18 சதவீதம் லெவி கொடுக்கும்போதே கஷ்டப்படுகிறார்கள். அதையும் கொடுத்து விட்டு அவர்களுக்குச் செக்காகக் கொடுக்கும்போது, அதை வாங்க திருவண்ணாமலையிலிருந்து, வந்தவாசியிலிருந்து, செய்யாற்றிலிருந்து, ஆற்காட்டிலிருந்து, திருப்பத்தூரிலிருந்து வேலூருக்கு வரவேண்டியிருக்கிறது. வேலூருக்கு வந்து ரீஜினல் மானேஜரிடமிருந்து வாங்கும்போது செக் மாற்ற குறைந்தது பத்து நாட்கள் ஆகின்றன. அதுவரை வியாபாரிகள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. இதனால் வியாபாரிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, நெல் விளையும் ஒவ்வொரு சென்டரிலும் அங்கேயே செக் வழங்க தாற்காலிகமாக ஒரு அலுவலகத்தை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் லெவி கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் வியாபாரிகளுக்கு வரும்.

கோடவுன்ஸ் பொறுத்தவரையில் நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆண்டுக்காண்டு கோடவுன்ஸ் வாடகைக்காக அதிகப்படியாக செலவு செய்து வருகிறது. அதிகமாக அதிகமாக வைக்க வைக்க கோடவுன்ஸ் அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த வகையில் அதிகமான அளவில் கோடவுன்ஸ் வசதி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் கோடவுன்ஸ் கட்ட முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. ஆகவே, அதை விரைவில் அமலுக்குக் கொண்டு வந்து கோடவுன்சுகளுக்காக அதிகப்படியான கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 100 கோடி ரூபாய் அளவில் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கும் அடிப்படையில் இந்த ஆண்டு நிறைய அரிசி தேவைப்படும். அந்த அளவிற்கு கையிருப்பை வைத்துக்கொண்டு கட்டுப்பாடு இன்றி அரிசி வழங்க முன்வர வேண்டும்.

நவீன அரிசி ஆலையை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் 200 இலட்சம் ரூபாய் செலவில் பல வசதிகளோடு கூடிய ஒரு நவீன அரிசி ஆலை அமைக்க வேண்டும் என்று இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பாராட்டுகிறேன். அந்த அளவிற்கு ஒன்றைக் கொண்டுவரும்போது அது தஞ்சையில் வரவேண்டுமா, அல்லது வட ஆற்காட்டு மாவட்டத்தில் வரவேண்டுமா என்ற கேள்வி வருகிறது. தஞ்சை, வட ஆற்காடு மாவட்டங்கள்தான் தன்னிறைவு மாவட்டங்கள். தொழில்களைப் பொறுத்து பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற வடஆற்காடு மாவட்டத்தில் அந்த நவீன அரிசி ஆலையை அமைக்க வேண்டும் என்றும், அதற்குப் பாரதியின் பெயரை இட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 12] [திரு. ஏ. எம். சேதுராமன்]

இந்த நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும், நிர்வாகச் சீர்கேடுகள் இருந்தாலும் தன்னிறைவுத் திட்டத்தில் உணவுப் பொருள் வழங்கும் முறையில் ஈடுபட்டுள்ள இந்தக் கழகத்தை போற்றி, பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனளம், பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன், நுகர்பொருள் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு இந்தியன் யூனியன் முஸ்லீம்லீக் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று பிற்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் பிற்பட்ட சமுதாயம், பின்தங்கிய சமுதாயம் இவற்றிற்கு அரசு செய்கிற சாதனைகளைப் பற்றியெல்லாம், அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்குரிய வழிவகைகளை எல்லாம் பற்றி இந்த கொள்கை விளக்கக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பின்தங்கிய வகுப்பினராக உள்ள மைனாரிட்டி சமுதாயங்களாகிய முஸ்லீம்கள், கிருத்தவர்கள் இவர்களுக்கு என்ன சலுகைகள் அளிக்கப்பட்டன, இதுவரை அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு என்ன உதவிகள் அளிக்கப்பட்டன என்பது பற்றிய குறிப்புகள் அதிலே இல்லை.

மொத்தத்திலே பிற்பட்டோர் சமூக நலன் என்றிருக்கிறதே தவிர, ஆண்டுக்கு ஆண்டு நிதிகள் ஒதுக்கப்பட்டு, பின்தங்கிய சமுதாயத்தின் நலனுக்கு, வளர்ச்சிக்கு என்று எடுத்துக் கொள்ளுகின்ற நல்லெண்ணம் இருந்தாலும், அதிலே எந்த அளவுக்கு மைனாரிட்டி சமுதாயத்திற்குப் பயன்படுகிறது, பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியாமல் இருக்கின்றது. அதேபோல், இன்றைக்கு வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், சிறுபான்மை சமுதாயத்தினருக்கு அரசுத்துறைகளில் பிற்பட்டோர் நலனுக்காக என்று 50 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 50 சதவீதத்தில் சிறுபான்மை சமுதாய்த்தினருக்கு எத்தனை விழுக்காடு அளவு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை நீங்கள் சொல்ல முடியுமா ? நாங்கள் கருதுகிறோம், மைனாரிடி சமுதாயமான முஸ்லீம்களுக்கும், கிறுத்துவர்களுக்கும் ஒரு விழுக்காடுகூட எல்லாத் துறைகளிலும் கொடுக்கப்படவில்லை என்று. இது எங்கள் குற்றச்சாட்டு. அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரத்தைத் தர முடியுமா ? என்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பின்தங்கியோர் நலனுக்கு என்று நிதி ஒதுக்கி விட்டு, பின்தங்கிய மைனாரிடி வகுப்பினருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை எந்த அளவுக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், கல்வித் துறை, காவல் துறை, பேருந்துக் கழகங்கள், கூட்டுறவு மில்கள்

உறவுகள் கூறி அழைக்கிறோம். இன்றைக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழகத்திலேபரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரு சமுதாயத்தின் மீது வன்முறையைத் தூண்டுகிற அளவிற்கு வால் போஸ்ட்டர்கள் அச்சடிக்கப்பட்டு, கூட்டங்கள் எல்லாம் நடத்தப்படுகின்றன. இந்த அரசு ஏன் பாரர்முகமாக இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. இந்த நாட்டினுடைய குடிமகனாக கிறுத்துவ, முஸ்லீம் சமுதாயத்திலே இருக்கிறவர்கள் அதிக சிநேகபாவத்தோடு வாழ்கிறோம். ஆனால் சில சக்திகள் ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து முண்ணணி போன்ற, இந்து பரிஷத் போன்ற இயக்கங்கள் இன்றைக்கு இஸ்லாமியர் கடைகளிலே சாமான் வாங்க வேண்டாமென்று பகிஷ்கரிக்கிறார்கள். வன்முறையை தூண்டுகிற அளவிற்கு அவர்களுடைய பேச்சும், நடவடிக்கையும் இருக்கிறது. எங்களைப் பார்த்து துரோகி என்று கூட போஸ்டர்கள் அடித்திருக்கிறார்கள். நாங்கள் இந்த நாட்டிற்கு என்ன துரோகத்தைச் செய்து விட்டோம். இந்த நாட்டினுடைய நிலத்திலே பிறந்து, இந்தியாவை எங்களுடைய தாய் நாடாகக் கொண்டு இந்த மண் செழிப்பிற்கு நாங்கள் இருக்கிறோமே தவிர இந்த நாட்டிற்காக எந்த ஒரு துரோகத்தையும் இஸ்லாமியர் சமுதாயமும் கிறித்துவர் சமுதாயமும் நினைத்ததில்லை. சிந்திக்கவும் சிந்திக்காது. ஒரு சௌஜன்யத்தைக் குறைக்கிற முயற்சிக்கு இந்த அரசு நிச்சயமாக ஆதரவு அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஆர். எஸ். எஸ். போன்ற இயக்கங்கள் பள்ளிவாசல்கள்— துர்க்கா முன்பு மறியல் செய்யப்போகிறோம் என்று பத்திரிகைகளிலே கூட செய்திகள் வருகின்றன. கிரிமினல் சட்டம் இருக்கிறது., மற்ற சட்டங்கள் எல்லாம் இருக்கிறது. அந்த சட்டதிட்டங்களின்படி வன்முறையைத் தூண்டும் இம்மாதிரியான இயக்கங்களை தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்திற்கு துணை போகிற எண்ணத்தை கைவிட வேண்டும். மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டிகளுக்கு உரிய உரிமைகளை முறையாக வழங்க முன்வரவேண்டும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசி இருக்கிறேன். எங்களுடைய தொழுகை நடக்கும் இடங்கள் அடக்கத் தலங்கள் பல்வேறு இடங்களில் தாக்கட்பட்டு வருகின்றன. அவை முன்னவர்அவர்கள் இதிலே கவனம் வைத்து இம்மாதிரி நிலை தமிழகத்திலே வராத அளவிற்கு சுமூகமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசு மானியம் வாங்குகிற பள்ளிக்கூடங்களில் R.S.S. ஷஹாக்கல்— சில பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இம்மாதிரி பயிற்சிகள் நடத்தப்படக்கூடாது என்று மத்திய அரசிடமிருந்து கூட மாநில அரசுக்கு தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு இதுவரையில் அமல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்து அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, மீனவர்களைப் பற்றி குறிப்பிட வேண்டும் அவர்கள் கடலோடிகள். அதன் மூலம் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பல கோரிக்கைகளை இந்த அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அவர்களுடைய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விரும்பத்தகாத மண்டைக்காடு சம்பவங்கள் எல்லாம் இனியாவது நடக்காமல் இருக்கின்ற முறையில் அரசு பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும்பான்மை வாக்குகளால் சிறுபான்மையோர், தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை அடக்கும் ஆயுதமாக ஜனநாயகம் பயன்படுத்தப்படுகிறது. ஜனநாயகம் ஜனநாயகமாக இருக்க வேண்டும். நம் நாட்டிலே எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எல்லாத் துறைகளிலும் முன்னேறுகின்ற சமவாய்ப்பு உண்டு என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை இந்த அரசு காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்று சொல்வார்கள். உழக்கு என்றால் உழக்கு நெல் கூட மிஞ்சாது என்பதுதான். உழக்குகூட மிஞ்சாது என்பது பழமொழி, அது இப்போது பழம் பொய்யாகி விட்டது. நியாயமான விலை கிடைத்தாலே உழக்கு மிஞ்சாது. நியாயமான விலை என்பது இப்போது கேள்விக்குரியதாக இருக்கிறது. உணவு அளிக்கக்கூடிய மானியம், அடுத்து கடலிலே மீன்பிடிக்கப் போகிற மீனவர்கள் நிலை. கடலிலே செல்லுகின்ற மீனவர்கள் பாடுகின்ற ஒரு பாட்டு இருக்கிறது.

உயிரைத் துச்சமென மதித்து, அச்சம் சிறிதுமின்றி
அலைகடலிலே வலைவிரித்துத் திரும்பினாலும்
மச்சம் பிடிப்பவனுக்கு மிச்சமில்லை, மிச்சமில்லை,
மிச்சமில்லை.

என்ற ஒரு பாட்டு இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இப்படி இரண்டு துறைகளும் போனபிறகு பாக்கி என்ன இருக்கிறது என்று பார்த்தால் பிற்பட்டோர் நலன் என்பது பின்னாலே சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டையும் பிற்பட்டோர் நலனிலே ஏன் சேர்க்கக்கூடாது என்பதை நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இவைகளைப் பற்றியெல்லாம் நான் மார்க்ஸீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போன்றவைகளிலும் மற்றும், கிட்டத்தட்ட 150 அரசு துறைகள் இருக்கின்றன. அத்தனைத் துறைகளிலும் சிறுபான்மையோருக்கு பிரதிநிதித்துவம் எந்த அளவுக்கு கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது, அது உண்மையிலேயே மெத்த வருத்தத்தைத் தருகிறது. அதே போல், மைனாரிட்டி வகுப்பினருக்கு பதவி உயர்வுகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மருத்துவத் துறை, பொறியியல் துறை, வேளாண்மைத் துறை போன்ற கல்லூரிகளில் சிறுபான்மையோருக்கு எத்தனை சதவிகிதம் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, சிறுபான்மையோருக்கு, முஸ்லீம்களுக்கும், கிறித்துவர்களுக்கும் மருத்துவத் துறை, பொறியியல் துறை, வேளாண்மைத் துறை ஆகியவைகளில் அதிகமான இடங்களை ஒதுக்கீடு செய்தார்கள். அடுத்துவந்த கலைஞர் ஆட்சியிலே, அந்த விகிதாச்சாரம் பாதுகாக்கப்பட்டு வந்தது. அண்ணா தி.மு.க. ஆட்சியிலே மைனாரிட்டிகளுக்கு இந்த மருத்துவத் துறை, பொறியியல் துறை, வேளாண்மைத் துறை ஆகிய கல்லூரிகளிலே இதுவரைக்கும் ஒதுக்கியுள்ள இடங்களைக் கணக்குப் பார்த்தால் 2 சதவிகிதம் கூட கொடுக்கப்பட வில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளிலே எல்லாம், இந்த சிறுபான்மையினருக்கு உதவி மறுக்கப்படுகிறது. குறிப்பாக ; டிபுடி கலைக்டர், ஐ.பி.எஸ். போன்றவைகளில் இந்த விகிதாசாரம் இன்னும் கொடுக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தமிழகத்தை எடுத்துக் கொண்டால், 10 சதவிகிதம் வாழ்கின்ற இந்த மைனாரிட்டி சமுதாயத்தினருக்கு, நீங்கள் 10 சதவிகிதம் ஒதுக்கிக் கொடுக்க சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்டையிலே உள்ள கேரளாவிலே, சிறுபான்மையோருக்கு உதவ வேண்டும் என்பதற்காக, எல்லா தரப்பினருக்கும் 10 சதகிதம் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே முறையில் தமிழகத்திலே இருக்கக்கூடிய மைனாரிட்டி வகுப்பினருக்கு உரிய உரிமைகள் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்திலே, கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், மைனாரிட்டி ரைட் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் ஆர்டிகிள் 30ல். I-வது பிரிவில் அதற்கான உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கிறது.





The Tamil Nadu schools Recognition and Payment of Grant Rules 1977, G. O. Ms. No. 2080. 1977-ல் இது வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஜி.ஓ.வி-லே மைனாரிட்டி சமுதாயத்தினராகிய முஸ்லீம்களுக்கும், கிறுத்துவர்களுக்கும் கல்வி நிலையங்கள் நடத்துவதற்கு பூரண அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அனுமதி அளிக்கப்பட்ட கல்வி நிலையங்களுக்கு கிராண்டுகள் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த கடந்த ஓராண்டு காலத்தில் ஏறக்குறைய 30, 35 மனுக்கள் பள்ளிகள் நடத்துவதற்கான அனுமதி கேட்டும், இன்னும் அனுமதி கொடுக்கப்படவில்லை. மைனாரிட்டி வகுப்பினர், கோர்ட்டுக்குச் சென்று, ஹைகோர்ட்டில் அவர்களுடைய உரிமையை வலியுறுத்தி தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்த தீர்ப்புகூட இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. கிறித்துவர்கள், முஸ்லீம்கள் ஆகியோரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், இந்த உரிமைகள் அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு கல்வி நிலையங்கள் நடத்த வேண்டுமென்று அவர்களால் கொடுக்கப்பட்ட அந்த மனுக்களின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வக் போர்டு இருக்கிறது. ஆனால், இந்த வக் போர்டு இன்றைக்கு செயலற்ற தன்மையில் இருக்கிறது. இன்றைக்கு வக் போர்டில், இஸ்லாமிய அறக்கட்டளைகள் சம்பந்தமான எல்லாப் பணிகளும் முடக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11-50)

கடந்த ஆண்டிலே தேர்தல் சமயத்திலே வாக்குறுதி அளித்தார்கள். முஸ்லீம்களுடைய உலாமாக்களுக்கு பெண் இமாம்கள்—மோதினார் ஆகியோருக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வகையிலே ஒரு ஜி.ஓ. போடப்பட்டது. பென்ஷன் அண்ட் கிராண்ட் ஆப் பென்ஷன் டு உலாமாஸ், ஜி.ஓ. எம்எஸ். எண் 684, நாள் 19—6—1981. இந்த ஜி.ஓ. வின்படி அந்த உலாமாக்களுக்கு மாதம் 250 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கப்படுமென்று கூறப்பட்டது. அந்த ஜி. ஓ.-படி ஒரு நிதி கமிட்டி போட வேண்டும். இந்த நிதி கமிட்டி மூலம் தான் பென்ஷன் வழங்க வேண்டுமென்று சட்டம். இதுவரையில் அந்த கமிட்டி அமைக்கப்படவில்லை. 7 ஆயிரம், 8 ஆயிரம் மனுக்கள் தமிழகத்திலே இருந்து வந்திருக்கின்றன. ஆகவே புறக்கணிக்கிற நிலையிலே இல்லாமல், அவர்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கு அந்த கமிட்டியை அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாமியச் சமுதாயம் இந்து சமுதாயம் இணைந்து வாழ்கிறார்கள். உதாரணமாக மாமா, மச்சான் என்ற முறையிலும் சாச்சா என்ற முறையிலும்

முதலிலே கடற்கரைச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று—இன்னும் சொல்லப்போனால் காசியிலிருந்து கன்னியாகுமரி வரை மாத்திரமல்ல கடற்கரையோரமாக இருக்கின்ற சாலைகளை நல்ல முறையிலே பராமரிப்பதன் மூலம் அவைகளை விரிவு படுத்துவதன் மூலம் அவைகளைப் போடுவதன் மூலமாக மக்கள் நகரங்களுக்குப் போவது மாத்திரமல்ல, அதன் காரணமாக கடற்கரைகளிலே வாழுகின்ற மீனவர்கள் நலன்களும் பாதுகாக்கப்படும் என்பதை அரசு கொள்கை ரீதியாக ஏற்று அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட கடற்கரை சாலை கடற்கரைசாலையாகப் போகவில்லை. அவரவர்கள் விரும்பிய சாலையாகப் போய்க் கொண்டிருக்கிறது. மீன் கிடைப்பதில்லை. சகுந்தலை என்ற படத்திலே துரைராஜ் ஒரு பாட்டுப் பாடுவார் தூண்டிலைப் பிடித்திழுத்தால் பாசிதான் தொங்கிக்கொண்டு வருகிறது. மீன் கிடைக்க வில்லை. அதை மீறிக் கிடைத்தால் கூட அந்த மீனை நல்ல முறையிலே விற்பதற்கான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை. அவை பற்றாக்குறையாக இருக்கின்றன. ரோடு வசதிகள் இல்லாததால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிடிக்கப்பட்ட மீன்களை காலாகாலத்தில் கொண்டு போய் நல்ல மார்க்கெட்டிலே விற்கக்கூடிய வசதி இல்லாமல் இருக்கிறது. கடற்கரை சாலைகள் இருந்தாலாவது அவர்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும், அதுவும் இல்லை. ஆகவே கடற்கரை சாலைகளுக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து எங்கெங்கே இல்லையோ அங்கே போடுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

அடுத்து இராலைப் பற்றி இங்கே பல முறை பேசியிருக்கிறோம். அன்னியச் செலவாணியை ஈட்டித்தருகிற இரால் மீன் இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்களே கூடச் சொன்னார்கள். அது யதார்த்தம் அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள், அவைகளைப் பிடிப்பதற்கு விசேஷ ஏற்பாடுகளைச் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் இதற்காக ஒதுக்கியிருக்கிற பணம் போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்கி இரால் மீன்களை அதிகமாக பிடிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி அவற்றை முறையாக விற்க குளிர் சாதனங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மற்ற மீன்களைப் போலல்ல மீன்சள் கொஞ்ச நாட்கள் கழித்தால் கூட கருவாடு ஆகிவிடும், ஆனால் இந்த இரால் அப்படி மாற முடியாது. ஆகவே விசேஷமான ஏற்பாடுகளைச் செய்தால்தான் அன்னியச் செலவாணி கிடைக்கும். அந்த அன்னியச் செலவாணியைக் காட்டி, மத்திய அரசாங்கத்திடம் கொஞ்சம் அதிக அளவு நிதி பெற வாய்ப்பிருக்கிறது. ஒழுங்காகக் கேட்டாலே கொடுக்க மாட்டேன் என்று ஏமாற்றுகிற



நிலைமை இருக்கிறது. அதற்குப் பின்னாலே வருகிறேன். இப்போது அதற்குள் போகவில்லை. ஆகவே, இந்த இரால் மீன்களை நல்ல முறையிலே ஏற்றுமதி செய்து நிதியைப் பெறலாம் இந்த ஏற்றுமதி பூராவும் தனியார்களிடம் போய் மாட்டிக் கொண்டிருக்கிறது. முழுவதும் சொல்ல முடியாவிட்டாலும், 'கடல் மீன்' என்ற சினிமாவிலே எப்படி ஏமாற்றி விற்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிறிதுசொல்கிறார்கள். அதைப்போல் மீன்பிடிக்கிற தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். இடைத்தரகர்கள் பயன் அடைகிறார்களே தவிர, அந்தத் தொழிலாளர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்குகிறார்கள். அந்த நிதி கூட அங்கே போய் சேருகிறதா என்றால், அங்கே போய் சேருவதில்லை. அதற்குப் பதிலாக என்ன நடக்கிறது என்றால், அவர்கள் பெயரை சொல்லி படகுகள் வாங்கப்படுகின்றன. ஆனால் படகுகள் பூரா யாருக்குச் சொந்தமாக இருக்கின்றன? ஏகபோக முதலாளிகளிடம் இருக்கிறது. தொழிலாளியாக இவர்களெல்லாம் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒழுங்கான கூலியும் கொடுக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட சில நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அவர்களைப் பொறுத்த வரையில் கட்ட வேண்டிய பணத்தில் பல சிக்கல்கள் ஏற்படுவதால் பயந்து போய் ஒதுங்கி விடுகிறார்கள். ஆகவே அந்த மீனவர்களைப் பாதுகாப்பதிலே மீனவ நண்பனாக நடித்த முதல்வர் ஆட்சியிலே, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

யார் உண்மையாகச் சென்று கடலிலே மீன் பிடிக்கிறார்களோ அவர்களுக்கு நம்முடைய மானியம், இன்னும் சொல்லப் போனால் உயர்ந்தபட்சம் 75 சதவீத மானியம் கொடுத்து, அவர்களைப் படகுகளிலோ அல்லது கட்டு மரங்களிலோ மீன் பிடிக்கச் சொல்லி, கிடைக்கக்கூடிய வருமானத்திற்குத் தகுந்தாற்போல் கடனைத் திரும்ப வாங்கும் முறையில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தாலும் கூட சில சமயங்களிலே வருஷம் பூராவும் அவர்களுக்கு வருமானம் கிடைக்காது. அப்படி வருமானம் கிடைக்க ஏதாவது தடங்கல் ஏற்பட்டால்—விவசாயிகளுக்கு ஓரளவு நிவாரணம் கொடுத்திருக்கிறோம். அதைக் கொடுக்க வேண்டாமென்று மிரட்டுகிற நிலைமை இருக்கிறது. அது ஒரு பக்கத்தில் நடந்துகொண்டிருக்கிறது. அதை மீறிக் கொடுத்தால் உடனே பிளாக் லிஸ்ட் செய்வோம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்து, முன்னேற்றத்திற்கான வழிவகைகளைக் காண வேண்டும். அவர்களுக்கு வருஷம் பூராவுக்கும் வேலை கொடுக்க உத்தரவாதம் தரவேண்டும். வேலை இல்லாத காலங்களில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்து விசேஷ சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். அந்த முறையிலே அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1982 மார்ச் 12

நைலான் நூல் வகைகளைப் பொறுத்த மட்டில் மானியத் தொலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டுமரங்களுக்கான மரத்தைப்பொறுத்தவரை மாண்புமிகு வனஇலாகா அமைச்சருக்கு ஒன்றைச் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. முன்பெல்லாம் அந்தக் கட்டுமரத்திற்கெல்லாம் மதகிரி வேம்புகளை வெட்டிக் கொண்டு வருவது உண்டு. இப்பொழுது அப்படிப்பட்ட மரங்களையெல்லாம் வெட்டக்கூடாது என்று உத்தரவு போட்ட வுடனே (குறுக்கீடு) கொடுத்து விட்டால் பரவாயில்லை. அந்த மாதிரி முறையிலே அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். எவ்வளவோ மானியம் கொடுக்கிறோம். அதே போல், இதிலும் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னால், இந்த மீனளத் துறையைப் பொறுத்த வரையில் இன்னும் விஷேசமான கவனம் செலுத்த வேண்டும். மீண்டும் சகுந்தலைப் படத்தைத்தான் நினைவூட்ட வேண்டியிருக்கிறது. அதிலே என். எஸ். கிருஷ்ணன் பாடுகிறார். 'கடல்மேலேபோனானே, காணாமல் போனானே' என்று. காணாமல் போனவனைத் தேட என்ன நிலைமை? ஹெலிகாப்டர் எல்லாம் கொடுத்து உதவுகிறோம். ஆனால் என்ன விவகாரம் என்றால், காற்றின் போக்கிலே எப்படி அடித்துச் செல்லப்பட்டிருப்பான் என்பதை கண்டுபிடிக்கிற அளவுக்கு அந்த அடிப்படையைத் தெரிந்த மீனவர் யாரையாவது அழைத்துச் சென்று அந்தப் பக்கத்திலே தேடினால் கண்டு பிடிக்க முடியும். ஆகவே, அந்த முறையிலே உதவியோடு நீங்கள் கண்டுபிடித்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மீனளத் துறையில் உயர்ந்த அதிகாரிகள் கூடுமான வரைக்கும் அந்தப் பகுதியிலிருந்து கொண்டு வரவேண்டும். அவர்களுக்குப் படிப்பு வசதி செய்து கொடுத்து, கொண்டு வர முயற்சி செய்யவேண்டும். ஏன் சொல்கிறேன் என்றால், சமீபத்தில் பம்பாய் கடற்கரையிலே சில விஷயங்களைப் பார்க்க ஒரு தூதுகோஷ்டி போயிற்று என்று நினைக்கிறேன். கடற்கரைக்குள்ளே போகிறபோது பெரும்பான்மையான அதிகாரிகள், இன்னும் சொல்லப் போனால், அதிகாரிகள் பூராவும், மீன் வாடை பிடிக்காமல் வாந்தி எடுக்க, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஏற்கனவே, பிற்பட்டவர்களில் கிறிஸ்தவர்கள் ஒரு ஜாதி, கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் ஒரு ஜாதி என்றிருக்கிறது. என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. வின்சென்ட் சொன்னார், முன்னால் 5, 6, பிரிவுகள் வருகின்றன; பின்னால் 5, 6, பிரிவுகள் வருகின்றன; இடையிலே 5, 6 வருகின்றன என்று. ஒன்றுமே நமக்குப் புரியவில்லை, பிற்பட்டோர் நலத்தைப் பற்றி வருவதால் இதைச் சொல்கிறேன். ஏன் என்றால், பிற்பட்டோர் நலனில் இப்பொழுது ஒரு அடி எடுத்து வைத்துள்ளார்கள். கிராமத்தில் ஒன்று சொல்வார்கள். சான் ஏறினால் முழம் சறுக்குகிறது என்று.



1982 மார்ச் 12] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

பிற்படுத்தப்பட்டோர் நலனும் சேர்ந்திருப்பதால் அதையும் சேர்த்து பேசிவிடலாம் என்று நான் நினைக்கிறேன். பிற்பட்டோர் என்று வரும்போது அங்கே ஒரு வரைமுறை வைக்கிறார்கள். எவ்வளவு வருமானத்திற்கு குறைவாக இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு யாருக்கு வாய்ப்பு கிடைக்கிறது. சாதாரண ஆட்கள் போய் கேட்டால், இன்றைக்கு வா, நாளைக்கு வா என்று அலைக்கழிக்கிறார்கள். அவன் ஓய்ந்து போய் உட்கார்ந்து விடுகிறான். ஆனால் அதே நேரத்தில் வசதி படைத்தவர்கள் அங்கே போன் பண்ணினாலே அந்த சர்ட்டிபிகேட் வீடு தேடி வருகிறது. பல சர்ட்டிபிகேட்டுகள் அப்படி போகின்றன. இன்னும் சொல்லப்போனால், ஏற்கனவே 9 ஆயிரம் ரூபாய் வருட வருமானம் வந்தால் அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கொடுப்பதற்கான முறையிலே கொண்டுவர வேண்டும் என்று ஒரு திட்டம் போட்டு, அதைப் பலர் எதிர்த்த உடனே நமக்கு ஏன் வம்பு என்று விட்டுவிட்டார்கள். சான் ஏறினால் முழம் சறுக்குகிறது. அதனுடைய விளைவு என்ன? எங்களையும் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பிராமணர்கள் கேட்கின்றார்கள். அந்த நிலை வந்தாகி விட்டது. பிராமணர்களிலும் பிற்படுத்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள். ஜாதியிலே அல்ல. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்திலே. அன்றைக்கே சொன்னேன். கோவிலிலே மணி அடிக்கிறான். அவருக்கு 10 ரூபாய், 15 ரூபாய் கிடைக்கமாட்டேன் என்கிறது. நாமும் எவ்வளவோ தள்ளிப் பார்க்கிறோம். அந்த சாமியே ஏழை சாமி. பணக்கார சாமியாக இல்லை. ஏழை சாமியிடம் இருப்பவனும் ஏழை பிராமணர் என்பதற்காக அவனை பின்னுக்குத் தள்ளலாமா? எனவே வருமான அடிப்படையிலே கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கொடுக்க வேண்டுமே தவிர, இன்னின்ன ஜாதி பிற்பட்டோர்கள் என்று ஜாதியை மாத்திரம் காட்டி பின்னாலே தள்ளுவது சரியாக இருக்காது என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்களைப் பொறுத்த வரையில் தென் மாவட்டங்களிலே அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையிலே பாதுகாப்பதற்காக முன் முயற்சி எடுக்கப்பட வேண்டும். கடல் அரிப்பு என்ற பேரால் பல சேதங்கள் ஏற்படுகின்றன. அவைகளை கடல் அரிப்பு என்று மாத்திரம் எடுத்துக் கொள்ளாமல், தடுப்புச் சுவரைக் கட்டி அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுடைய நலனைக் காப்பதற்காக கட்டுமரங்கள் கட்டக்கூடிய அமைப்புகள் அரசாங்கத்திற்குக் கோரிக்கைக் கொடுத்து இருக்கிறார்கள். இராமேஸ்வரத்திலே, நாகப்பட்டினத்திலே இப்படிப்பட்ட இடங்களிலே உள்ள இந்தக் கட்டுமரம் கட்டும் தொழிலிலும் விசைப் படகு கட்டும் தளங்களும் உள்ளன. அந்தத் தளங்கள் இருக்குமா, போகுமா, அவைகளும் கடலோடு போகுமா என்ற சந்தேகம் அந்த மக்களுக்கு இருக்கிறது. அவர்களுடைய அந்தப் பதட்டத்தைப் போக்குகின்ற முறையிலே அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்துவந்த வேலைகளை தொடர்ந்து கொடுக்கின்ற முறையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.) ஒரு மானியம் பற்றி தான் பேசியிருக்கிறேன். இன்னும் கொஞ்சநேரம் தரவேண்டும்.

அடுத்து நெல் விலையை சர்க்கார் ஒத்துக்கொண்டு 147 ரூபாய் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறது. தட்டுங்கள் திறக்கப்படும் என்று பேச்சுக்குத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே கேட்டால் நானும் கொடுக்கமாட்டேன் உன்னையும் கொடுக்க விட மாட்டேன் என்று மத்திய அரசு சொல்கிறது. கிராமத்திலே விவசாயிகள் ஒரு பழமொழி சொல்வார்கள். உன்னையும் கெடுப்பேன், உன் ஏரையும் கெடுப்பேன் என்று. அதாவது அவர் தன்னுடைய ஏரையும் நிறுத்திப்போட்டுவிட்டு அடுத்தவனிடம் பேசிக்கொண்டிருப்பான். அதனால் இரண்டு பேர்களுடைய வேலையும் கெடும். அதேமாதிரி மத்திய சர்க்கார் சொல்லுகிறது.உன்னையும் விலைகொடுத்துபிடிக்கவிடமாட்டேன் நானும் பிடிக்கமாட்டேன் என்று சொல்லுகிறது. அதையும் மீறி நாம் பிடித்தால் உனக்கு பாங்கிலே கடன் கொடுக்க மாட்டேன், எப்படி இருக்கிறது பாருங்கள். கடன் கொடுப்பது எதற்கு, திருப்பிக் கட்டுதவற்குத்தானே ஒழிய,தள்ளுபடி பண்ணுவதற்கல்ல. சில சமயங்களில் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்கிறோம். அது வேறு விஷயம். ஆகவே 115 நிர்ணயிக்கிறோம். அதற்கு மேல் கிடையாது என்றால் எப்படி சரியாக இருக்கும்.

இன்னும் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் கவனமாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற முறை மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் உணவு அமைச்சராக இருந்த போது ஒரு பிரச்சினை வந்தது. அரசாங்கம் பிடித்து ஸ்டாக் பண்ணினால்தான் அந்த சர்க்காருடைய விலையைக் கொடுக்கமுடியும்.நாம்சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தனியாக வைத்திருக்கிறோம். சர்க்கார் அதற்கு சில மானியங்களைக் கொடுத்தாலும் கூட, அவர்கள் பிடிப்பதற்





கான வாய்ப்புகள் உண்டு என்று ஒரு சர்ச்சை வந்து அப்படி பேசப்பட்டதாக எனக்கு ஞாபகம். அப்படி என்று சொன்னால் நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மார்க்கெட் ரேட்டுக்கு ஏன்நெல்லைவாங்கக்கூடாது.இன்னொருபடிதாண்டியாகிவிட்டது. சென்ற ஆண்டு நம்முடைய கூட்டுறவு ஸ்தாபனங்களிலே—அது நம்முடைய ஒரு பாகம்தான்—அவர்கள் மார்க்கெட் ரேட்டுக்கு வாங்கி குறைந்த பட்சம் லாபம் வைத்து வருடம் பூராவும் ஸ்டாக் வைத்திருந்து, அறுவடை காலத்திலே வாங்கி ஸ்டாக் வைத்திருந்து, ரூபாய்க்கு2 பைசா,3 பைசா அடக்க விலை மீது லாபத்தில் வைத்து குறைந்த விலைக்கு அரிசி கொடுத்து வந்தார்கள். 2.30,2.40க்கு கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.இந்த ஆண்டிலே போடப்பட்ட ஒரு உத்தரவு, மார்க்கெட்டு ரேட்டுக்கு நீயும் பிடிக்காதே என்று கூறுகிறது. அதனுடைய விளைவால் ரொம்ப பாதிக்கப்பட்ட தொகுதி என்னுடையது. நான் மாத்திரமல்ல, நம்முடைய முதலமைச்சர் தொகுதி மதுரை மேற்குத் தொகுதியும் அடிபட்டு இருக்கிறது. அந்தத் தொகுதியில் உள்ள மதுரா கோட்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் 10,000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு ஒரு மணி அரிசி கூட வந்து சேரவில்லை. எப்படி அந்த ஸ்டோர்ஸ்ஸுக்கு வரும்? வெளியே வியாபாரிகள் பூராவும் ஒரு குவிண்டால் 140, 145 ரூ. என்று வாங்குகின்றபோது 115 ரூபாய்க்கு கொண்டு வா என்று கூட்டுறவு சங்கம் சொன்னால், விவசாயி எப்படிக் கொண்டு வருவான்? அவன் வியாபாரியிடம் தானே போவான், ஆகவே, அந்த உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு மனு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது குறித்த முடிவு காலாகாலத்தில் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த உத்தரவை சீக்கிரமாக ரத்து செய்வதன் மூலமாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் அறுவடை காலங்களில் வாங்கி ஸ்டாக் வைத்துக் கொள்ள முடியும். ஆகவே,அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—10)

கூட்டுறவுச் சங்கங்களில் சென்று எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. அரிசி கேட்டால் வந்து சேரவில்லை, கோதுமை கேட்டால் வந்து சேரவில்லை, அறவை ஆலைகளுக்கு கோதுமை, மைதா வேண்டும் என்று கேட்டால் வரவில்லை, இப்படி எது கேட்டாலும், வரவில்லை என்று சொல்லப்படுகிறது. இவ்வளவுக்கும் காரணம் யார்? மத்திய சர்க்கார். கேட்ட அளவிற்கு கொடுப்பது கிடையாது. அப்படி வந்ததையாவது சரியானபடி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறதா? ஆங்காங்கு சில இடங்களில் கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும், அமுதம் அங்காடிகள் மூலமாகவும் இந்த விநியோகம் செய்யப்படுகிறது.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்] [1982 மார்ச் 12

கூட்டுறவு அமுதம் அங்காடிகளுக்கு ஒரு உத்தரவு போடப்பட்டுள்ளது. இரண்டாயிரம் கார்ட்டுகளுக்கு ஒருகடை என்று வைக்கப்பட்டுள்ளது. ஒரு கடையின் தன்மையை வைத்து 2,000 கார்டா, 1,000 கார்டா, 500 கார்டா அல்லது 400 கார்டா என்று முடிவு செய்வது சரியாக இருக்கும். 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்பது சரியாக இருக்கும். அந்த அடிப்படையில் எவ்வளவு கடை தேவைப்படுகிறதோ அவ்வளவு கடைகள் கூட்டுறவு மூலமாக அல்லது சிவில் சப்ளைஸ் மூலமாக விநியோகம் செய்ய உத்திரவாதம் வைத்தால் தான் ஒழுங்காகப் போய்ச் சேரும்.

எண்ணெயை எடுத்துக்கொண்டால், கடலையெண்ணெய் 17 ரூபாய், 18 ரூபாய் விற்கிறது. பாமாயில் 8.25 ரூபாய். இருக்கின்ற வறுமையில், இருக்கின்ற பற்றாக்குறையில், இருக்கின்ற கஷ்ட நிலைமையில் இந்த எண்ணெயை வாங்கலாம் என்றுபோனால், ஒருமாதத்திற்கு ஒரு கிலோ தான்கொடுப்போம் அதுவாவதுஅனைவருக்கும் கொடுத்தால் பரவாயில்லை. அதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் கேட்ட அளவிற்கு கொடுக்கவில்லை 50 சதவிகிதம் தான் கொடுத்தார்கள் என்று சொல்லி போடுகிறார்கள். அதனால முந்தியவனுக்குக் கிடைத்த பணியாரம் போல, முந்தியவனுக்கு கிடைக்கிறது, பிந்தியவனுக்குக் கிடையாது. ஒருவனுக்கு ஒருவன் முண்டியடித்துக் கொண்டு இருக்கவேண்டியிருக்கிறது. அதன் காரணமாகக் கலவரம். ஆகவே, 500 குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக்கடை, ஒரு அமுதம் அங்காடி, அல்லது கூட்டுறவ அங்காடி ஏற்பாடு செய்து அவைகளை முறையாக விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்வார்கள். இப்போது தட்டுங்கள் திறக்கப்படும் என்பது இல்லை. கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். யாரும தப்பாக நினைத்துக் கொள்ளக்கூடாது. தற்காலிக சபாநாயகர் அவர்களும் தப்பாக நினைக்கக்கூடாது. ''ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும், பாடுற மாட்டைப் பாடி கறக்கணும், அடித்துக் கறக்கிற மாட்டை அடித்துத்தான் கறக்கவேண்டும்.'' அந்த முறையில் அரிசி கேட்பதற்கும், கோதுமை கேட்பதற்கும் அப்படி அடித்துக் கேட்க வேண்டிய நிலைமைக்கு வந்தாகிவிட்டது.

அண்மையில் இலங்கைத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக மத்திய அரசை வற்புறுத்துவதற்காக நாம் ஒரு இயக்கம் நடத்தினோம். அந்தப் பிரச்னை குறித்து, மத்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒருபந்த்நடத்தினோம்அல்லவா? அதைப்போலவே, விளைப் பொருளுக்கு நியாயமான விலைகொடுப்பதற்கும்,



1982 மார்ச் 12] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்]

குறைந்த பட்சம் மக்களுக்குத் தேவையான அளவிற்கு அரிசி, மைதா, ரவை, கோதுமை கிடைக்கச் செய்வதற்கு— மண்ணெண்ணெய் கிடைக்கச் செய்வதற்கு— மண்ணெண்ணெய் வாங்கச் சென்றால்— எங்கண்ணே என்று கேட்கிறது— அதைப் போன்று அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கச் செய்வதற்கு அவைகள் நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகம் செய்வதற்கு ஒரு இயக்கம் நடத்தவேண்டும். சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்று சொல்லலாம். தேவையான அளவிற்குச் சட்டியில் கொண்டு வருவதற்கு அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து மத்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக— எப்படி இலங்கைத் தமிழர் பிரச்னையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரண்டு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தினோமோ— அதைப்போலவே ஒரு இயக்கத்தை நடத்துவதற்கு முன்வரவேண்டும். அனைத்துக் கட்சிகளும் இதிலே ஈடுபட வேண்டும். அதனால் கிடைக்க வேண்டியதை வாங்கி. கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்க வாய்ப்பு ஏற்படும் ; அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். அறுவடை பல இடங்களில் நடந்துகொண்டிருக்கிறது. ஆங்காங்கே செக் போஸ்ட் போட்டிருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படுகிறது, அது கூடாது. நான் சிவந்திபுரத்தில் குடியிருக்கிறேன். எனக்கு நிலங்கள் எல்லாம் இரண்டு கிராமங்களுக்கு அப்பால் இருக்கின்றன. அறுவடையாகி, அந்த இரண்டு கிராமங்களையும் கடந்துதான் நெல்லைக் கொண்டுவர வேண்டும். அப்படி வரும்போது அதிகாரிகள் அந்த நெல்லை தடுக்கிறார்கள், பெர்மிட் வாங்கவில்லை. எம்.எல்.ஏ. நெல் என்றதால் தப்பித்தது. இல்லை என்றால் பறி போயிருக்கும்.

அதைவிட இன்னொரு வேடிக்கை. நம்முடைய துணை சபாநாயகர் தொகுதியிலுள்ள வீரவநல்லூர். விவசாயத் தொழிலாளர்கள் பாளையங்கோட்டையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிற வீரவநல்லூருக்குச் சென்று அறுவடை செய்கிறார்கள். கூலி வாங்குகிறார்கள். 15 நாள், 20 நாள் தங்கி அறுவடை செய்து சுமார் 8 கோட்டை நெல் சேர்கிறது. அந்த நெல்லை அவர்களால் கொண்டுவர முடியவில்லை. அவர்கள் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. போய் கேட்டால ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் கையெழுத்து வாங்கச் சொன்னார்கள், கையெழுத்து வாங்கச் சென்றால் அவர்

[திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1982 மார்ச் 12

ல்வில் போயிருக்கிறார். அவருக்கு மேலே இருக்கிறவரிடம் வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். கடைசியில் அவர்கள் அந்த நெல்லைக் கொண்டுவர முடியாமல் அங்கே என்ன ரேட்டோ அந்த ரேட்டுக்கு விற்றுவிட்டு, தன்னுடைய ஊருக்கு வந்து, அங்கே என்ன ரேட்டோ அந்த ரேட்டுக்கு நெல்லை வாங்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலை ஏற்படக்கூடாது. பெரிய ஆட்களிடம் போங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சாதாரண மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் வீட்டுக்கு நெல் கொண்டு வரும்போது, அறுவடை செய்து ஒருவேளை கஞ்சிக்கு வீட்டுக்கு நெல் கொண்டு வரும்போது அதைத் தடுக்கக்கூடாது; அதற்கு ஏற்ற முறையில் இருக்கிற நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான உணவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வறட்சி ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் மக்கள் அஞ்சிய நேரங்களில் எல்லாம் உணவு விலை கட்டுக்கு அடங்காமல் போய்விடுமோ என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருந்த நேரங்களில் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உணவு விலையைக் கட்டுப்படுத்தி நியாயமான விலையில் ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்ததை என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

வரலாறு காணாத வறட்சி எல்லாம் ஏற்பட்ட நேரத்திலே எல்லாம் அதை சமாளித்த ஆட்சி புரட்சித் தலைவர் ஆட்சி. அதே நேரத்தில் படி அரிசி 10 ரூபாய்க்கு விற்ற நேரத்தை எல்லாம் தமிழக மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பல்வேறு ஆட்சிகள் நடைபெற்றன. அந்த ஆட்சிகளிலே உணவுப் பிரச்சினை யாருடைய ஆட்சிக் காலத்தில் படி அரிசி 10 ரூபாய்க்கு விற்றது என்பதை மக்கள் இன்றைய தினம் உணர்ந்து இருக்கிறார்கள். ஆகையால்தான் புரட்சித் தலைவர் ஆட்சியிலே வறட்சி ஏற்பட்ட நேரமாக இருந்தாலும், இக்கட்டுகள் ஏற்பட்ட நேரமாக இருந்தாலும் சாதாரணமான ஒரு விவசாயி, ஒரு குடிமகன் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 75 காசு, இரண்டு ரூபாய், 2 ரூபாய் 15 காசு என்ற விலையிலே பெற்றுக்கொண்டிருப்பதால் இந்த அரசுக்கு தமிழக மக்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்,



1982 மார்ச் 12] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

ஆனால் இங்கே குறை சொல்லும்போது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அரிசி விலையைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் இந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்றிருக்கிற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் குறிப்பிட்டு, நீங்கள் இந்தத் துறையை நிர்வகிக்கலாமா என்று கூட சொன்னார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய ஆட்சியிலே இருக்கிற மாண்புமிகு ராவ் பீரேந்திரசிங் அவர்கள் விவசாயத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். அந்த அரசில் அதிகாரம் செலுத்துகின்ற ராவ் பீரேந்திரசிங் அவர்கள பக்கம் உங்கள் கவனம் செல்லவில்லையா? விவசாயத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அவர்கள் விவசாயத்திலே பணியாற்றியவர்களா என்று அருமை நண்பர்களை பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

குறைந்த விலையிலே தமிழக மக்களுக்கு அரிசி கொடுக்க வேண்டும் என்பது ஒன்று. இன்னொரு பிரச்சினை விளைகின்ற நெல்லுக்கு நல்ல விலையினை கொடுக்கவேண்டும் என்பது. இந்த அரசினைப் பொறுத்த வரையில் ஒரு குவிண்டால், நெல்லுக்கு 147 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மத்திய அரசினை வலியுறுத்தி இருக்கின்றது. ஆனால், என்ன சொன்னாலும் மத்திய அரசு 115 ரூபாய்க்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு அதிகமாகத் தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். மேலும் விலையையும் உயர்த்த மாட்டோம் என்று சொல்லி விட்டு, சலுகைகளையும் அளிக்கக் கூடாது என்று ஆணித்தரமாக பதிலை இந்த அரசுக்கு தந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. போனஸ் கொடுக்கக் கூடாது என்று சொல்லப்படுகின்றது. நெல்லைக் கொண்டு செல்வதற்காக கொடுக்கப்படுகின்ற அந்த வண்டி வாடகையைக் கூட அதிகப்படுத்திக் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்கிறது. இதனைப்பற்றி மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்வது நல்லது. இங்கே பேசுகின்ற நீங்கள் உங்களுடைய கட்சியின் அருமை நண்பர்கள் மூலமாக ஏன் மத்திய அரசினிடத்திலே கேட்கக் கூடாது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே மத்திய அரசினிடத்திலே சொல்லி ஏன் நீங்கள் நெல்லுக்கு அதிகமான விலையினை வாங்கித் தரக்கூடாது? அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினையும் சேர்ந்த 15 அங்கத்தினர்களுக்கு மேற்பட்டவர்கள் அங்கே இருக்கிறார்கள். நீங்களும் அவர்கள் மூலமாக எடுத்துச் சொல்லி அதிகமான விலை வாங்கித் தரக் கூடாதா? மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே சென்ற அவர்கள் இதுபற்றி அங்கே எடுத்துச் சொல்லி வாங்கித் தந்தால் தான் மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியதற்குக்

பொருத்தமாக இருக்கும். நீங்களும் மக்களுக்காகப் பேசுகிறீர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். ஆகவே நீங்கள் பாராளுமன்றத்திலே ஒன்றைச் சொல்கிறீர்கள். இங்கே சட்டமன்றத்திலே இன்னொன்றைச் சொல்கிறீர்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு எடுத்துச் சொல்கிறேன்.

இந்த அரசினைப் பொறுத்தவரையிலே 50 சதவீதம் நெல்லுக்கு லெவி என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதனை அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு உத்தரவு பிறப்பித்திருந்தபோதிலும் இந்த நேரத்திலே என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே குமரிமாவட்டத்தை பொறுத்தவரையிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற மாவட்டம் அது. அங்கே 50 சதவீதம் லெவி என்பது மிகவும் கூடுதலாக இருக்கின்றது. ஆகவே இதனைச் சிறிது குறைத்து 30 சதவீதம் என்ற அளவிலே திருத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த மாவட்டத்திலே 5 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகள்தான் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டம் போன்று 50 ஏக்கர் 100 ஏக்கர் என்று அங்கே மக்கள் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கவில்லை 5 ஏக்கருக்கு குறைவாகத்தான் நிலங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் நெல் கொண்டு செல்கின்றபொது அதிலே கூட இப்படிப்பட்ட நெருக்கடியான நிலமை ஏற்படுகின்றது என்றால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் என்ற முறையினை மாற்றி ஒரு ஆவரேஜ் சிஸ்டத்தைக் கொண்டு வந்து ஒரு 500 யூனிட் மின்சாரம் மாதத்திற்கு செலவாகின்ற அந்த அரிசி மில்களுக்கு இப்படிப்பட்ட நிலைமையினை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய யோசனை.

அது மட்டுமல்ல. இன்று தமிழ்நாட்டிலே நியாயவிலைக் கடைகள் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் பல்வேறு அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையிலே பொருட்கள் எல்லாம் நியாயவிலையிலே வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக இந்த அரசுக்கு நான் நன்றியினைச் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இவ்வாறு நெருக்கடியான நிலைமையிலே கூட பல்வேறு பிரச்சினைகள் இருக்கக்கூடிய சூழ்நிலையிலே கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச சத்துணவுத் திட்டத்தை அறிவித்திருக்கின்றது. உலகத்திலேயே இங்கிலாந்திலே சத்துணவு அளிக்கிறார்கள். ஃப்ரான்சிலே சத்துணவு அளிக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலே தமிழகத்திலேதான் ஏழைக்குழந்தைகளின் பசியைப் போக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் புரட்சி



கரமான திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே நலிவுற்ற குழந்தைகள் எங்கே இருந்தாலும் அத்தனை குழந்தைகளுக்கும் சத்துணவு என்ற திட்டம் மிகப் பெரிய திட்டம். இன்று இந்திரா காங்கிரஸ் கட்சி ஆண்டு வரும் மாநிலங்களில் கூட, அவர்கள் இது போன்ற திட்டத்தைக் கொண்டு வரவில்லை என்பதை எடுத்துக் கூறி, இந்த மாநிலத்திலேதான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலேதான், இந்த சர்க்காருடைய நிர்வாகத்திலேதான், இதுபோன்ற ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால், இந்த அரசை தாய்மார்களெல்லாம், தமிழக ஏழை மக்கள் எல்லாம், போற்றி வாழ்த்துகிறார்கள் என்றும், புரட்சித் தலைவர் அவர்களைத் தங்களுடைய தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னால் அது மிகவும் 100க்கு 100 உண்மை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாகப் பிற்பட்டோர் நலத்துறையை எடுத்துக் கொண்டால் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வெள்ளாளர் என்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் அளவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், துளுவ வெள்ளாளர் கொங்கு நாட்டு வெள்ளாளர் போன்ற வெள்ளாளர் இன அமைப்புகளையெல்லாம் பிற்பட்டோர் இனப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெள்ளாளச் சமுதாயத்தினர், தமிழ்நாடு பூராவும் பரவியிருக்கின்ற ஒரு இனத்தவர். குமரி மாவட்டத்தில் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் நலிந்த நிலைமையிலே இருந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அவர்களுடைய இனத்தை பிற்பட்டோர் இனப் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஏற்கெனவே இது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை வழங்கியிருக்கிறது என்றும் நினைக்கிறேன். ஆகவே அவர்களை இது குறித்து மீண்டும் வற்புறுத்தி, வெள்ளாள இன மக்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சமுதாய ரீதியிலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பின் தங்கியவர்கள் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் சலுகைகளையும் பிற்பட்டோர் நலத்திற்கு அளிக்கப்படுவதுபோன்று அளித்து அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், பிற்பட்டோருக்கு சலுகை அளிப்பதில், 9,000 ரூபாய் என்ற அளவில் ஒரு வருமான வரம்பை நிர்ணயித்தார்கள். அப்படி நிர்ணயித்து ஒரு அருமையான திட்டத்தை சென்ற ஆண்டு கொண்டு

வந்தார்கள். பொருளாதார ரீதியிலே நலிந்தவர்களுக்கு முதலிலே உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இப்படிப்பட்ட திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட நேற்று மாலையிலே பேசியபோது, இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்த அரசு அதைக் கைவிட்டு விட்டது என்று சொன்னார்கள். ஆனால் சென்ற ஆண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில், அதை திராவிட முன்னேற்றக் கழகத்தினர்எதிர்த்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நேரத்திலே எதிர்த்தார்கள்—ஆனால் நேற்று ஆதரித்தார்கள். ஆகவே, தயவு செய்து இந்த அரசு அதுபோன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த முன்வரும்போது, வருமான வரம்பின் அடிப்படையில் சலுகைகளை அளிப்பது என்று செயல்படுத்த முன் வரும்போது, அந்த வருமான வரம்பினை குறைந்த பட்சம் 12 ஆயிரம் ரூபாய் என்று வருட அளவில் வைத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் சலுகைகளை வழங்கவேண்டும் என்பதை என்னுடைய பணிவான வேண்டுகோளாக, இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக சென்னையிலிருந்து குமரி வரையிலே சாலை வழிப்போக்குகள் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு திட்டம் நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் அதை நிச்சயமாக செயல்படுத்த முன் வரவேண்டும் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனளத்தை எடுத்துக் கொண்டால், சின்னமுட்டத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு, இந்த அரசு மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறது என்று செய்தியிருக்கிறது. அதற்கான வேலைகளை தொடங்குவதற்கு, சின்ன முட்டத்திலேயே மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைப்பதற்கு விரைவில் அனுமதி பெற்று, அதற்கான பணிகளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பணிகள் இந்த ஆண்டே துவங்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக தைவான், சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் படகுகள்—மீன் பிடிப் படகுகள் கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரங்களில் வந்து மீன் பிடித்துச் செல்கின்றன. இது குறித்து பல முறை நாங்கள் முறையீடு செய்திருக்கிறோம். ஆகவே, இந்த அரசு மத்திய அரசுக்கு உடனடியாக இது குறித்து எழுதி, இதுபோன்ற வெளிநாட்டுப் படகுகள் நம் நாட்டின் எல்லைக்குள், இந்திய கடற்கரைப் பகுதிகளுக்குள் வந்து மீன்பிடித்துச் செல்லுவதை அனுமதிக்கக் கூடாது—தடுக்கப்பட வேண்டும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதி



அதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுத்து, வெளிநாட்டு மீன்படகுகளை அந்த இடத்தில் நுழைய விடாமல் தடுத்து நம் மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்களுடைய, வாழ்க்கை முன்னேற்றம் அடையச் செய்வதற்கும் உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12-30)

* திரு. செ. சிவசாமி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மீனளத்துறைக்கு ரூ. 3,78,83,000ம், பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,22,67,000-ம், நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ்ரூ.6,57,70,000-ம் ஆகமொத்தம் ரூ. 19,59,20,000 அளவிற்கான நிதிக் கோரிக்கைகளை நிதி அமைச்சர் அவர்கள் நம் முன்னால் வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இவைபற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நுகர்பொருள் வழங்கல் என்றமுறையில் ஜெனரல் பட்ஜெட்டில் சொன்னார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் இதன் மூலம் 37 கோடி ரூபய் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்று. இந்தளவிற்கு ஆண்டு ஒன்றுக்கு இந்த வகையில் 37 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன என்று தமிழ்நாட்டு விவசாய மக்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். ஏனென்றால், அதில் பெருச்சாளிகள் நுழைந்து விட்டனவோ என்று நினைக்கும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே எந்தக் காரணத்தால் அதில் ஏன் இந்த அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கடைசியில் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணெண்ணெயை எடுத்துக் கொண்டால் சென்னையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.87 என்று விற்கப்படுகிறது. இராமநாதபுரத்தில் ரூ. 2.50 காசு என்று விற்கப்படுகிறது. தொலை தூரத்திற்குப் போவதால் இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அத்தியாவசியப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவை டெல்லியிலானாலும், ஒரு விலைதான் இருக்கிறது. பம்பாய் என்றாலும் ஒரு விலைதான் இருக்கிறது, சென்னை என்றாலும் ஒரு விலைதான் இருக்கிறது. ஆனால் இந்த மண்ணெண்ணெய் பொறுத்த வரையில் சென்னையில் ரூ.1.87 காசுக்கு விற்கப்படுவது இராமநாதபுரத்தில் 2.04 என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியானதல்ல. தமிழ்நாடு முழுவதும் மண்ணெண்ணெய் எங்கே சப்ளை செய்யப்பட்டாலும் ஒரே விலைதான் இருக்க வேண்டும் என்றளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வனஸ்பதியை எடுத்துக் கொண்டால், கிராமப் புறங்களில் வனஸ்பதி என்று ஒன்று இருப்பதே தெரியாத நிலை இருக்கிறது.

லெவி முறை இருப்பதால் இன்று எங்கு பார்த்தாலும் செக் போஸ்ட்ஸ் போடப் படுகின்றன. இளையான்குடியிலிருந்து பரமக்குடி வரை மூன்று இடங்களில் செக் போஸ்ட்ஸ் போடப் பட்டிருக்கின்றன. இது தேவையா ? இந்த செக் போஸ்ட்ஸ் இருப்பதன் காரணமாக கிராமங்களிலிருந்து டவுனுக்கு விவசாயிகள் விற்பதற்காக நெல் போன்றவற்றைக் கொண்டு போகும் போது மிகவும் கஷடப்படுகிறார்கள். அவர்கள் மிகுந்த கஷடத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே இதை வேண்டுமென்றே செய்ததாகக் கருதுகிறோம். விவசாயிகள் தங்கள் நெல்லை ஒழுங்காக விற்க முடியாமல் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், பல்வேறு ஸ்தாபனங்களும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150ம், கரும்புக்கு ரூ. 280ம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு நான்கு ஆண்டுகளாக தொடர்ச்சியாக முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர் மட்டக் குழுவும் இந்த ரூ. 150 என்பது நியாயமானது, அதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இன்று வரை அவ்விதம் கொடுக்கப்படவில்லை. நாம் கொடுக்கலாம் என்றாலும் மத்திய அரசு நந்தி போல் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எந்த நந்தியாக இருந்தாலும் விலகும் பிள்ளாய் என்று விலக்கி விட்டு ரூ. 150 கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்தளவிற்குக் கொடுப்பதன் மூலம் நாம் விவசாயிகளுக்கு ஓரளவிற்கு நன்மை செய்ய முடியும்.

லெவியை பொறுத்தவரையில் சாலிக்கிராமத்தில் 47 மூட்டை விதை நெல்லை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இன்று வரை அது திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அன்று அமைச்சர் அவர்கள் காரண்டி கொடுத்து, திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியும் இன்று வரை எந்த விதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இன்று வரை அந்த நெல் அந்த விவசாயிக்குப் போய்ச் சேரவில்லை.

வேறு மாவட்டங்களிலிருந்து நெல் கொள்முதல் செய்யும் போது பல குறைபாடுகள் இருக்கின்றன. லெவி கொடுக்கவில்லை என்று நெல் முட்டைகள் பறி முதல் செய்யப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் அராஜகமான நிலையில் ஆங்காங்கு இருக்கக் கூடிய அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் நடவடிக்கை எடுத்து வருவதால் அரசின் மீது வீண் பழி ஏற்படுகிற ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நிலைகளை எல்லாம் கணக்கில்





கொண்டு நல்ல முறையில் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது சோஷலிஸ அரசு. நாங்கள் சோஷலிஸத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று அடிக்கடி சொல்லி வருகிறீர்கள். சோஷலிஸ அரசாங்கம் என்றால் உற்பத்திப் பொருள்களையும் உற்பத்தி ஸ்தாபனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒழுங்கான முறையில் விநியோகம் செய்யா விட்டால் சோஷலிஸத்தைக் கொண்டு வர முடியாது. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று அமைச்சர்கள் சொல்கிறார்கள். ஆனரல் நாம் வேறு ஒரு திசையில்தான் சென்று கொண்டிருக்கிறோம். இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்டோர் நலனைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 50 சதவீதம் வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி 50 சதவீதம் கொடுக்கப்படுகிறது. 50 சதவீதத்தை 60 சதவீதம் ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையிலே பலதரப்பட்ட ஜாதியினரும், மேலும் மேலும் தங்களைச் சேர்க்க வேண்டுமென்ற ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கைகளின் காரணமாக, அந்த அளவுக்குக்கொடுக்க வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, பிற்பட்ட பகுதிகளிலே இருக்கக் கூடிய ஒரு சில கல்லூரிகள், அதற்கான சலுகைகள் அத்தனையும் பெற்று வருகின்றன. அத்தனை சலுகைகளையும் அரசாங்கத்திலே இருந்து அந்தக் கல்லூரிகள் பெற்றுக் கொண்டு, அங்குள்ள மாணவர்களுக்கு எந்த விதமான உதவியும் செய்யாமல் இருக்கிறது. சரியான சாப்பாடு போட முடியாமல், ஆஸ்டலிலே இட வசதி செய்து கொடுக்காமல் இருக்கின்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. தொடர்ச்சியாக இது பற்றி கல்வி அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இளையான்குடியிலே இருக்கின்ற ஒரு கல்லூரி கடந்த ஒரு மாத காலமாக திறக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பிற்பட்ட பகுதியிலே இருக்கின்ற கல்லூரியைத் திறக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டும், இன்று வரைக்கும் அது திறக்கப்படவில்லை. அதற்குக் காரணம், அங்கே பிற்பட்ட பகுதியிலே உள்ள அந்த மாணவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சாப்பாடு, உதவித் தொகை அனைத்தும் ஒழுங்கான முறையிலே கொடுத்து செயல் படாததால்தான், இந்தச் சிக்கலே வந்திருக்கிறது. கடந்த ஆண்டிலேயும் இது பற்றிக் கேட்டேன். எனவே, அங்கிருக்கக் கூடிய மாணவர்களுக்கு போதிய ஆஸ்டல் வசதியும், போதிய இட வசதியும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான்,

[திரு. செ. சிவசாமி] [1982 மார்ச் 12

அங்குள்ள ஆஸ்டலிலே உள்ள மாணவர்கள் நிம்மதியாகப் படிக்கின்ற சூழ்நிலை ஏற்படும். அந்த அளவுக்கு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பல பகுதிகளில் வலையர் ஜாதியினர் இருக்கின்றனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் அங்கே இருக்கிறார்கள். இந்த வலையர்கள் முன்னேற்றத்தில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு அவர்கள் பிற்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மீனவர்கள் சம்பந்தமாக மிகப் பெரிய அளவிலே திட்டமிட்டிருந்தாலும் கூட, இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமை என்ன ? என்பதைப் பார்க்க வேண்டும். மேற்கு வங்காளத்திற்கு அடுத்து சென்னை இரண்டாவதாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் ; அதே போல் கேரளாவிற்கும், மகாராஷ்டிரத்திற்கும் அடுத்து மூன்றாவது இடத்திலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏன் முதலிடத்திற்கு வரக் கூடாதா ? என்று நான் கேட்கிறேன். பிற்பட்ட நிலையிலே உள்ள மீனவர்களுக்கு நாம் உதவுவதன் காரணமாக. நமது நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய அளவிலே புரதச் சத்துணவும், அந்நியச் செலாவணியும் ஈட்டித் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் எந்த அளவுக் மீனவர்களுக்கு உதவி செய்திருக்கிறோம், அவர்கள் நிலை எப்படியிருக்கிறது என்று பார்த்தால், பழைய நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள். இராமாயணத்திலே குகன் இருந்த காலத்திலே என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலையிலே தான் இன்றைக்கும் அவர்கள் இருக்கிறார்கள். அதே கோவணம், அதே சட்டை, அதே தொப்பி தான் இருக்கிறது. அவர்கள் வாழ்க்கை நிலைமை இன்னும் வளரவில்லை.

அது மட்டுமல்ல, சென்னையிலே இரண்டு போட் தொழிற்சாலைகள் ; மண்டபத்திலே ஒன்று. இப்படியாக நேரடியாக போட் தொழிற்சாலைகள் நான்கு இருந்தும் கூட, பல நூற்றுக் கணக்கானோர் அங்கே வேலை செய்தும் கூட, இன்றைக்கு மூன்று ஆண்டுகளாக வேலையில்லாத நிலைமை, எந்த விதமான போட்டும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அவர்கள் எதிர் காலத்தில் என்ன செய்வோம் ? வேலையில்லாமல் போய் விடுமோ என்ற ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு எதிர் காலத்தில் வேறு தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 12] [திரு. செ. சிவசாமி]

அதுமட்டுமல்ல, இரால்மீன்களால் இன்றைக்கு தமிழகத்திற்கு அதிகமான அளவுக்கு அந்நிய செலாவணி கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், ஒரு சில நேரங்களில் இரால் மீன்கள் கிடைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இரால் மீன்கள் முட்டையிடும் காலத்திலே, அந்த முட்டைகளை இரால் மீன்கள் பிடிப்பவர்கள் அழித்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக, தமிழக எல்லையில் இரால் மீன்களே அழிந்து போய் விடுமோ என்ற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, முட்டைகள் இடுகின்ற இந்தக் காலத்தில் குறிப்பாக அரசாங்கம் தலையிட்டு, அப்போது இந்த இரால் மீன்களைப் பிடிக்கக் கூடாது என்ற ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மிகப் பெரிய சீசன் டைம் என்று சொல்லி, இராமேஸ்வரம், மண்டபம், தனுஷ்கோடி போன்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 5,000, 6,000 பேர்கள் குடியேறி இருக்கிறார்கள். அதே போல், அந்த சீசன் டைம் இருக்கக் கூடிய தூத்துக்குடிக்கு, சென்னையிலே இருந்து அத்தனை மெஷின் போட்டுகளும் அங்கே கேம்ப் அடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 12—40)

இது தான் சீசன் டைம் ; இந்த நேரத்திலே அங்கே மீன்களை பிடித்து அதிகமான அளவில் கொண்டு வருகிறார்கள். கரைக்கு அவைகளை கொண்டு வரமுடியாத நிலை இருக்கிறது. கடற்கரை ஓரத்திலே ரோடுகள் சரியாக இல்லாமல் இருப்பதால் பிடித்த மீன்களை கரைக்கு கொண்டு வர முடியவில்லை. கடற்கரை ரோடு கன்னியாகுமரியிலிருந்து மண்டபம் வரைக்கும் தார் ரோடு இருக்கிறது. சென்னையிலிருந்து மகாபலிபுரம் வழியாக தஞ்சாவூர் வரைக்கும் நல்ல ரோடு இருக்கிறது. தஞ்சாவூருக்கும் மண்டபத்திற்கும் இடையேயுள்ள ரோடு தான் மிக பாதகமான நிலையில் இருக்கிறது. கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் ரோடு முழுவதும் போடாத நிலை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாலிநோக்க துறைமுகத்தைப் பற்றிக் கூட இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த துறைமுகம் இரண்டு விஷயங்களுக்கு பயன் படுவதாக இருக்கிறது. மீன்களை பக்குவப்படுத்தி கொண்டு வந்து சேகரிப்பதற்கு மட்டுமல்ல, அங்கே தயாராகிற உப்பை வங்கத்திற்கு ஏற்றுமதி செய்கிற ஒரு முககியமான துறைமுகமாக உபயோகப்படுகிறது ; (மணியடிக்கப் பெற்றது) அது அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீனவர் நலன், பிற்பட்டோர் நலன், நுகர் பொருள் வழங்கல் இந்த மூன்று மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். கடற்கரை மீனவர்கள் வாழும் பகுதியில் புயல் பாது காப்பு இல்லங்கள் சுமார் 150க்கு மேல் கட்டியுள்ள தமிழக அரசை நான் மிகவும் பாராட்டுகிறேன். மீனவர்கள் வாழ்வு மலர முன்பு வழங்கிய மானியத் தொகையை மத்திய அரசு நிறுத்தி வைத்தது. அதை மீண்டும் அமலாக்கத் மாநில அரசு மத்திய அரசிற்கு சிபார்சு செய்ய கேட்டுக்கொள் கிறேன். மீனவர்கள் கடலில் செல்லும்போது இறந்துவிட்டால் அரசாங்கம் மூலம் ரூபாய் 5ஆயிரம் மானியம் அவர்கள் குடும் பங்கள் கல்வி, தொழில் பெறுவதற்கு வழங்கப்பட வேண்டும். தமிழகத்தில் வாழ்ந்து வரும் மீனவர்கள் அத்தனை பேரையும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். கடலை நம்பி வாழ்ந்து வரும் மீனவர்கள் கடன் வாங்கியிருந்தால் குறுகிய கால கடன் காலத்தை நீட்டித்தும், சில கடன்களை தள்ளுபடி செய்தும் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடற்கரை ஓரங்களில் வாழ்ந்து வரும் மீனவர்களின் நலன் பாதுகாக்கும் வகையில் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு சாலை, தெருவிளக்கு, குடிதண்ணீர் முதலியவை செய்து தரப்பட வேண்டும். விசை படகுகளுக்கும், நாட்டு படகுகளுக்கும் இடையே இருந்து வரும் தகராறுகளை அரசாங்கம் தீர்த்து வைத்து, அதனால் அரசாங்கத்திற்கு விளையக்கூடிய செலவுகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிப கழகம், ஏற்கனவே தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் பல பெரியதாக இருந்தாலும், பஞ் சாயத்துக்கள் 2 ஆயிரம் ஜனத்தொகை உள்ளவையாக இருக் கின்றன. 5 மைல், 6 மைல் சுற்றளவு உள்ள பஞ்சாயத்துகளில் இன்று நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கிறது. அமுதம் அங்காடி 10 மணி முதல் 3 மணி வரையில் தான் திறந்திருக்கி றது. கிராமங்களிலே அதிகமான பேர்கள் வேலைக்கு சென்று இரவு நேரங்களிலே தான் வீடு திரும்புகிறார்கள். மாலை 5 மணிக்கு மேல் நுகர்பொருள் ஏதேனும் வாங்க வேண்டுமென்று சென்றால் கடை பூட்டப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சில பண்டங்களை அவர்கள் வாங்கமுடியாமல் அவதிபடுகிறார் கள். பஞ்சாயத்துகளில் 5 மைல், 6 மைல் சுற்றளவிற்கு ஒரு கடை என்று வைத்திருப்பதை 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அடிப்படையிலேயும், பெரிய பஞ்சாயத்துகளில் 2 கடை கள் வீதம் அமைத்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டும் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே அரசூர் பூச்சிக் காடு என்ற ஊரில் மூவாயிரம் ஜனத்தொகை அந்த ஊரில் இருக்கி



கிறது. அங்கே ஒரு நியாயவிலைக் கடை வேண்டுமென்று வேண்டு கோள் விடுத்து 1½ ஆண்டு காலமாகிறது. அங்கு கடை இன்னும் திறக்கப்படவில்லை. அதேபோன்று அரியநாயகபுரம் என்ற இடத்திலே கடைதிறக்க வேண்டுமென்று பலமுறை கேட்டும் இது வரையில் அது திறக்கப்படவில்லை. ஏற்கனவே அமுதம் கடை களில் கோதுமை வழங்கப்படுவதாக அறிகிறோம். ஆனால் எந்த நியாய விலைக்கடைகளிலேயும் கோதுமை வழங்கப்படுவதாகத் தெரியவில்லை.

விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு உற்பத்திச் செலவு விவசாயச் செலவு அதிகமாகிக் கொண்டிருக் கிறது. நெல்லை மாவட்டத்திலே அதிகமானவர்கள் நெல் உற் பத்தி தான் செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாயாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கரும்பு போன்றவற் றிற்கும் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே உள்ள கிறித்துவர்களை பின்தங்கிய வர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று இந்த மாமன்றத் திலே பேசியிருக்கிறேன். இங்கே பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு அளிக்கிறார்கள், ஆகவே நெல்லை மாவட்டத்திலே உள்ள கிறித்துவர்களையும் அந்தப் பட்டியலிலே சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். பிற்பட்டோர் நல வாரியம் பலவகையான கடன்களைக் கொடுக்கிறது என்று அறிகிறோம். அந்தக் கடன்களை இன்னும் அதிகமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மீன்வளத் துறை பிற்பட்டோர் நலத்துறை நுகர் பொருள் தமிழக உணவு நிலைமை என்ற தலைப்பில் இந்த அவையின் அனுமதியைக் கோரி வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை சொல்லலாம் என்று நினைக் கிறேன். பிற்பட்டோர் நலனுக்கு 9,22,67,000 ரூபாய் என்ற அளவுக்கு அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். 1967–68 ஆம் ஆண்டு 1,61,40,000 ரூபாயாக இருந்தது ஏறத்தாழ 12 ஆண்டுகாலத்திற்குள்ளாக 9 கோடி ரூபாய் என்று சொல்லு கின்ற அளவுக்கு தமிழக அரசு பிற்பட்டோர் நலனிலே அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது என்று இதிலே குறிப்பிட்டிருக்கிறார் கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தா

[திரு. எஸ். ஆண்டித் தேவர்] [1982 மார்ச் 12

...யும் 1967–68-ல் இருந்த பிற்பட்டோர் எண்ணிக்கையையும் அப்போது மாணவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதையும் பார்க்கிறபோது இந்த மானியத் தொகை போதாது என்று கருதுகிறேன். காரணம் பல இனங்களைச் சேர்ந்தவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை வைக்கிறார்கள். அப்படிச் சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துகொண்டு இருக்கிற நேரத்திலே இந்தத் தொகை போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சொர்ணம் அவர்கள் சொன்னார்கள். சாதி அடிப்படையை விட்டுவிட்டு பொருளாதார அடிப்படையைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். எங்கள் இயக்கத்திற்கு அந்தக் கருத்து வேறுபாடானதல்ல. ஆனால் இந்திய அரசியல் சட்டத்திலே அதைக் கொண்டு வர வேண்டும். இந்தியாவிலே சாதி என்பதே எடுக்கப்பட்டு விட்டது என்றால் அதை ஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கிறோம். பள்ளிக்கூடத்திலே சேர்க்கிறபோது எந்த சாதி என்ற அடிப்படையிலே தான் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அப்படி இருக்கிறபோது பிற்பட்டோர் நலன் என்று இருக்கிறபோது பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் குற்றப்பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் அவைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன. மாநில பிற்பட்டோர் குழு இயங்குகிறது என்று சொன்னார்கள்.

இந்தப் பிற்படுத்தப்பட்டோர், அந்த மானியக் கோரிக்கையைப் பார்த்தாலே இரண்டாகப் பிரித்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர், குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் என்று இரண்டு தலைப்புக்களிலே இந்த மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மாநில அளவில் குழு இல்லை. எனவே, அதற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–50)

இன்னும் சில வித்தியாசங்கள் இந்தக் குறிப்பிலே இருக்கின்றன. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற, 9-வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தலைப்பின் கீழ் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. அந்த வித்தியாசங்களை மாற்றியமைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எத்தனை விழுக்காடு விடுதிகளிலே இருக்கின்றன. மற்றவர்களுக்கு எத்தனை விழுக்காடு சேர்க்க வேண்டுமென்று சொல்லும் நேரத்தில் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்



122236

1982 மார்ச் 12] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

கப்பட்டோர் விடுதிகள் 60 விழுக்காடு அவர்களுக்கும், மற்றவர்களுக்கு 40 விழுக்காடு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்தங்கிய வகுப்பினருக்காக விடுதிகள் 65 விழுக்காடு அவர்களுக்கும், மற்றவர்களுக்கு 35 விழுக்காடு என்றும் [illegible]பட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள் அவர்களுக்கு 75 விழுக்காடு என்றும் மற்றவர்களுக்கு 25 விழுக்காடு என்றும் இருக்கிறது. இந்த வித்தியாசங்கள் இருக்கக் கூடாது. அவர்களுக்கு உள்ள விடுதியில் 75 விழுக்காடு அவர்களுக்கு என்று இருக்க வேண்டும் அல்லது 60 விழுக்காடு என்றால் மற்ற விடுதிகளும் 60 விழுக்காடு என்று ஒதுக்க வேண்டும். எனவே, அடுத்த ஆண்டிலாவது இந்த வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்தாவது பக்கத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எந்த அளவிற்குச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. நான் அதைப் பாராட்டுகிறேன். 1969–70 ஆம் ஆண்டு 11 விடுதிகள் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இருந்திருக்கிறது. ஆனால் 1981–82 ஆம் ஆண்டில் 335 விடுதிகளாக உயர்த்தியிருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக 1969–70 ஆம் ஆண்டில் 37 விடுதிகள் இருந்திருக்கின்றன ; அதன் மூலம் பலன் பெற்றவர்கள் 3,619 பேர்கள். ஆனால் 1981–82 ஆம் ஆண்டில் 62 விடுதிகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது 1980–81 ஆம் ஆணடில் இருந்த அதே அளவிற்கு, 62 விடுதிகள் என்ற அளவிற்குத்தான் இருக்கிறது. ஒரு பர்செண்ட் கூட கூட்டப்படவில்லை. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 11 என்பது 335 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, அதைப்போன்ற குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான விடுதிகளையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில், இன்னொரு விநோதம் என்னவென்றால், மாணவர் விடுதிகளில் படிக்கும் எண்ணிக்கையை 1965 இல் அரசாங்கம் என்ன அனுமதித்ததோ அதையேதான் இன்னும் அனுமதிக்கிறார்கள். சேங்க்ஷன்ட் ஸ்ட்ரெந்த் 1965 ஆம் ஆண்டிலே உள்ளதைப்போலவே இன்றும் இருக்கிறது. ஜனத்தொகை வளர்ந்திருக்கிறது. பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. அதற்கு மேல் எவ்வளவு செலவினங்கள் கூடியிருந்தாலும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகள் கூட்டிக் கொடுக்கப்படவில்லை. சேங்க்ஷன்ட் ஸ்ட்ரெந்த் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான டுவிதிகள் இரண்டு மூடப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். ஏன் மூடப்பட்டன ? குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 மார்ச் 12

நீக்கப்பட்டவர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் மிக அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் இந்த விடுதிகளைத் துவக்காமல் நீலகிரி மாவட்டத்திலே துவக்கிவிட்டு, இப்பொழுது மூடிவிட்டோம் என்று சொல்லப்படுகிறது. எனவே அவர்கள் அதிகமாக இருக்கின்ற அந்த மாவட்டங்களில் இவைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்க பட்டோருக்கான விடுதிகளில் பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்க பட்டிருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அந்த விடுதிகளிலே ஒரு மணி நேரம் கூட ஆசிரியர் வேலை பார்ப்பது இல்லை. கணக்குக் காப்பாளராக வேலை பார்த்துக்கொண்டு வருவதாக அறிகிறேன். அந்த விடுதிகளிலே இருப்பவர்களுக்கு அரை மணி நேரம் கூடச் சொல்லிக்கொடுப்பதில்லை. இந்த நல்ல திட்டத்தைச் செம்மையான முறையில் அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அதிகாரிகளும், அமைச்சரவர்களும் ஆலோசனை செய்து அதற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காப்பாளர்களாக இருந்து மாணவர்களுக்கு அளிக்கப்படும் அரிசியை எடுத்துச் சாப்பிடலாமா என்ற வேலையைச் செய்ய வேண்டாமா அவர்கள் மாணவர்களுக்குக் கல்வி சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக மதுரையில் கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 240 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. மற்ற மாவட்டங்களில் இருக்கிற குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு அதிக விடுதிகளையும், பள்ளிகளையும் ஆரம்பித்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோருக்கென்று ஒரு வாரியம் அமைத்து, அது முகவை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட வேண்டுமென்ற் கோரிக்கை



1982 மார்ச் 12] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இருந்து கொண்டிருக்கிறது. அது அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று கருதுகிறேன். அதையும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாணவர்களுக்கு இலவசமாக எழுத்துப் பலகையும் புத்தகங்களும் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்தப் புத்தகங்கள் ஜூன் மாதத்திலே கொடுக்கப்பட வேண்டும். இரண்டு மாதங்களுக்குப் பின்னால் கொடுப்பதால், இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு அது முறையாகச் சேராத காரணத்தினால், அவர்கள் படிப்பிலே பின் தங்கி விடுகிறார்கள் என்ற கருத்தையும் இந்த நேரத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

சீருடை வழங்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். அதற்காக, பல இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் சீருடையை நீங்கள் தைத்துக் கொடுக்கிறீர்கள். ஒரு வகுப்பிலே இருப்பவர்களுக்கு ஒரே மாதிரியாகத் தைத்துக் கொடுத்தால் போதும் என்று ஒரே மாதிரியாகத் தைத்துக் கொடுக்கிறார்கள். இந்த மன்றத்திலே என் போன்றிருப்பவர்களுக்கும் இன்னும் கொஞ்சம் வேறு விதமாக இருப்பவர்களுக்கும் ஒரே மாதிரியாகத் தைத்துக் கொடுத்தால், அதை உபயோகப்படுத்த முடியாது. அதைப்போல் தான் மாணவர்களுக்கும், ஆகவே, அவர்களுக்குத் துணியாக கொடுத்து, கூலியை கொடுத்தால், அவர்கள் தாங்களாகவே தைத்து கொள்வார்கள். இல்லையென்றால் நீங்கள் செலவழிக்கின்ற அத்தனை பணமும் பாழ்—வீணாகிறது. அந்த மாணவர்களுக்கு ஒரே மாதிரியாகத் தைத்து கொடுத்தால், ஒரு வகுப்பில் ஒரே உயரம் உள்ளவர்களும் பருமன் உள்ளவர்களும், இருப்பார்கள் என்று கருதுகிறார்களா? ஆகவே, அந்தத் துணியை—நீங்கள் தைத்து கொடுப்பதால். கான்டராக்டர்கள் செய்கின்ற தவறுகளின் காரணமாக, ஏழை மாணவர்கள் உபயோகிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டி காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தைத்து கொடுக்கின்ற முறையை விடுத்து, அவர்களுக்குத் துணியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனியாகப் பயிற்சிக் கொடுப்பதற்கு 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 40,000 ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பயிற்சி எங்கே கொடுக்கப்படுகிறது? யார் மூலம் கொடுக்கப்படுகிறது என்ற குறிப்பில்லை. அவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று ஒன்றுமே இதில் சொல்லப்படவில்லை. அப்படி ரூபாய் 40,000 செலவழித்து கொடுக்கப்படுகின்ற பயிற்சி முகாம் எங்கே இருக்கிறது? பயிற்சி பெறுவோர் யாரா'? தேர்ந்தெடுக்கப்படுகிறார்

கள் எந்த விதியின் கீழ் எடுக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் தெளிவாகச் சொன்னால், அந்த மாணவர்கள் பலன் பெற வாய்ப்பிருக்கும் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்டோரில் விவசாயிகளுக்கு ரூபாய் 2,500 கிணறு வெட்ட மானியம் கொடுக்கிறார்கள். இட்பொழுதிருக்கிற விலைவாசியில் ஒரு கிணறு வெட்டவேண்டுமென்றால், ரூபாய் 20,000-க்கு மேலாகிறது. ஆகவே, அந்த மானியத் தொகையை ரூபாய் 5,000-ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிணறு வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை, ரூபாய் 1·67 இலட்சம், ஓராண்டுக் காலத்திற்கு. தமிழகத்திலே பிற்படுத்தப்பட்டோர் மூன்றில் இரண்டு பங்கு இருக்கின்றனர். அவர்களுக்கு ரூபாய் 1·67 இலட்சம் மட்டும் தான் தொகை என்று சொல்கிறார்கள். அது எந்த விதத்தில் போதுமானது ? எனவே, அந்தத் தொகையையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனை கையகப்படுத்துவதற்காக, ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த அளவிற்கு பிற்பட்ட சமுதாயத்தினரை முன்னேற்றுவதற்கு இந்த அரசு முனைப்பாக இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, ரூபாய் 16 இலட்சத்தை அதிகமாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். இன்னும், அந்த வீட்டு மனை இல்லாதவர்களுக்குக் கையகப்படுத்திக் கொடுப்பதற்கென்று, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் நாசில்தார்கள் இல்லை. அவர்களையெல்லாம் போட்டு, கையகப்படுத்திக் கொடுக்க நிதி உதவியை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, நுகர்பொருள் வாணிக முறையைப் பற்றி நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். அதிலே செயல்முறையிலே இருக்கின்ற சில தவறுகளை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கொள்முதல் செய்யப்படுகின்றபோது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 50 சதவீதம் லெவி வாங்குமென்று இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால், விவசாயிகள் தங்கள் வீட்டிற்குத் தேவையான நெல்லை, நிலத்திலிருந்து எடுத்துச் சென்றாலே செக்போஸ்ட என்று வைத்துக் கொண்டு கட்டை வண்டிகளை மறித்து, பறிமுதல் செய்கிறார்கள். பறிமுதல் செய்யப்பட்ட பிறகு அவர்கள் பணம் வாங்க என்ன கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்ல ஆ..சப்படுகிறேன். அங்கே வாங்குகின்றவர்கள் மூட்டைக்கு ரூபாய் 1 கொடுத்தால்தான் கிடங்கிலே அளப்பேன் என்று அளவைக் கூலி கேட்கிறார்கள். இது என்ன நியாயம் அ-- மட்டுமல்ல, இறக்கி வைக்க ரூபாய் 1 எடுத்துக் கொள்கி





றேன் என்று சொல்கிறார்கள். இடைத்தரகர்களிடமிருந்து படுகிற பாடு வேறு. உங்களிடம் அளக்கிற தொகையில் ரூபாய் 2 எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். அதை ரீஜினல் ஆபீசர்களிடம் சொல்லியிருக்கிறேன். விவசாயிகள் படாத பாடுபடுகிறார்கள். அவர்கள் உற்பத்திக்குக் கட்டுப்படியான விலை வேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், தமிழ்நாடு முழுவதும் விவசாயச் சமுதாயத்தைக் கொள்ளைக்காரர்கள் போன்று பாவித்துக்கொண்டு, தாலுகா ஆபிசிலே வைத்துக் கொண்டு, அதற்குப் பிறகு 50 சதவீதம் எடுத்துக் கொண்டு 3 தினங்களுக்குப் பின்னால், அந்த விவசாயிகள் வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

[பிற்பகல் 1·00]

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அளந்ததற்குப் பின்னால், பணம் அவனுக்கு எப்போது கிடைக்கிறது என்றால், 6 நாட்கள் கழித்துதான் கிடைக்கிறது. அது ரீஜினல் ஆபீசுக்குப் போய், செக்காக கொடுத்து அது திரும்ப வருகிறது. ஆனால் இந்த விவசாயி களத்திலே இருந்து எடுத்துச் சென்று அங்கே மாற்றுப் பொருள்கள் வாங்குவதற்கு செல்லுகிறான். இப்படிப்பட்டவனுக்கு 6 தினங்கள் கழித்துப் பணம் கிடைக்கிறது என்றால் இது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த விநியோக முறை இருக்கிறதே அது கூட்டுறவு அங்காடியாக இருந்தாலும் சரி, சிவில் சப்ளைஸ் மூலமாக இருந்தாலும் சரி, கிராமப்புறங்களிலே இருக்கின்ற அங்காடிகளில் 500 கார்டுகளை அவர்களே வாங்கி வைத்து ஜீனியை ஒட்டுமொத்தமாக விற்கிறார்கள். அங்கே உள்ள அதிகாரிகள் பிடித்தால் கூட அவர்கள் மீது கடும் நடவடிக்கை இல்லை. அதுமட்டுமல்ல, அளந்து கொடுக்கின்ற பொருட்கள் 100 கிராம் இருக்க வேண்டுமென்றால் 80 கிராம்தான் இருக்கிறது. பாக்கியை அவர்களே கையகப்படுத்திக் கொள்கிறார்கள். இதிலே தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டி அப்படி பிடித்தால் அதிகாரிகள் அவர்கள் மீது போதுமான நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படி நடவடிக்கை இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகின்றன.

தமிழகத்திலே கோதுமையை நாம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறோம். இங்கே 16 ரோலிங் மில்கள் இருக்கின்றன. அந்த விதிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும் போது இது மத்திய அரசு பொறுப்பு என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுப்பதை போராடிப் பெற வேண்டுமென்று சொல்லுகிறேன். 40 சதவீதம் அரசுக்கு கொடுத்து விட்டு 60 சதவீதத்தை அவர்கள் விருப்பப்படி விற்கிறார்கள். ஆனால் ஒரே விலைக்கு விற்கலாம் என்று விதி வைத்திருக்கிறார்கள்.

அரசு என்ன விலைக்கு எடுக்கிறதோ அதே விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏன் அப்படி ஒரே விலைக்கு விற்கவேண்டும் அரைவைக் கூலியைக் கொடுத்து நாமே விநியோகித்தால் நல்லது. மைதாவினுடைய விலையை பிளாக் மார்க்கெட்டில் அதிகமாக விற்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிகாரிகளுக்கும் தெரியும்; அமைச்சருக்கும் தெரியும். இந்த நிலையை களைந்து விநியோகத்தை ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். இந்த 16 ரோலிங் மில்களும் கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பட்டது.)

மீனவர்களைப் பற்றி பேச முடியாவிட்டாலும், மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்கிற நிலை இருக்கிறது. சிலோன் கடற்கரையிலிருந்து அவர்கள் போர்க் கப்பல்களை வைத்து நமது மீனவர்களை அடித்து இழுத்துச் செல்கிறார்கள். நேற்றைய தினம் கூட எனக்கு ஒரு செய்தி வந்தது. இலங்கையில் நமது படகுகளை இழுத்துச் சென்று வைத்துவிட்டு, அவர்களை ஜெயிலில் அடைத்திருக்கிறார்கள். நமது தூதரக அதிகாரிகள் மூலமாகக்கூட அவர்களை வெளியே எடுக்க முடியவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் திருப்பி கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த கடன் வட்டியைக் குறைத்து நீண்ட நாள் தவணையாக பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு நிலைமை சம்பந்தமாகவும் மற்ற துறைகள் சம்பந்தமாகவும் அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அருமை சகோதரர் பொன்னுரங்கம் அவர்கள் மீனவம் பற்றிய துறை சம்பந்தமாக விரிவாக எங்கள் கட்சியின் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.

உணவுத் துறை சம்பந்தமாகவும், பிற்பட்டோர் நலம் பற்றியும் நான் என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே வைத்துள்ள அறிக்கையிலே தமிழ்நாட்டிலே பொதுவாக உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. t e rice s o k is satisfactory and e prices are also reasonable என்று சொல்லியிருக்கிறார்கள் இந்த நிலைமைக்கு உணவை உற்பத்திச் செய்த விவசாயிகளுக்கு நாம் நியாயமான விலைகளை கொடுக்கிறோமா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று



தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலம் ஏற்கெனவே நம்முடைய நிதி அமைச்சர் சொன்னதைப்போல 'மார்ஜினலி செல்ஃப் சஃபிசியண்ட்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொண்ட மாநிலமாக இருக்கிறது என்று இரண்டு தினங்களுக்கு முன்னதாகத்தான் சொன்னார்கள். ஆகையினால் கேரளாவைப்போல அல்லது மற்ற சில மாநிலங்களைப்போல உணவுப் பொருள் பற்றாக்குறை மாநிலமாக நம்முடைய மாநிலம் இல்லை. ஆனால் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது; விலைகள் ரீசனபிளாக இருக்கின்றன என்று சொல்லுகின்ற சமயத்திலேதான் எது ரீசனபிள் எது அன்ரீசனபிள் என்று நாமே முடிவு செய்துவிடுகிறோம். விவசாயிகளையும் சேர்த்து வைத்து, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு விலை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படியில்லாமல் நீங்கள் ஒரு விலை நிர்ணயம் செய்துவிட்டு 'ரீசனபிளாக' இருக்கிறது என்று சொன்னால், விவசாயி அதை 'அன்-ரீசனபிள்' என்று சொல்வார்கள். நீங்கள் சொல்கிறீர்களே, 115 ரூ. ஒரு குவிண்டால் நெல்லுக்கு விலை என்று, அது 'அன்ரீசனபிள்' மிகக் குறைவான விலை என்று விவசாயிகள் சொல்கிறார்கள். நாங்கள் உற்பத்தி செய்த நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்காமல், எங்கள் கஷ்ட நஷ்டங்களை, குறைகளை எடுத்துச் சொல்வதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல், நீங்களே விலையை நிர்ணயம் செய்து இருப்பதால், எங்களுக்கு வரும் வருமானத்தை இப்படி எடுத்துச் சென்று விடுகிறீர்களே என்று விவசாயிகள் குறைபட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கம் அதற்கு எந்த வகையில் சமாதானம் தெரிவிக்கிறது என்றால், நாங்கள் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறார். நெல் உற்பத்தி செய்வதற்கு குறைந்தபட்சம் 144 ரூ. செலவாகிறது. ஆகவே, ஒரு 3 ரூபாய் அவர்களுக்கு இலாபம் கிடைக்கவேண்டும் என்கிற வகையில் ரூ. 147 கொடுக்க வேண்டும் என்று எழுதியிருப்பதாக விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மானியக் கோரிக்கையில் நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டார்கள். இப்படி கேட்டு விட்டால் போதுமா? அல்லது எழுதி விட்டால் போதுமா? நாங்கள் எழுதி விட்டோம் அவர்கள் கொடுக்கவில்லை என்று சொல்லி தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறீர்களா? மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்றால், நீங்களே அதைக் கூட்டிக்கொடுக்க வழியே இல்லையா? விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க இந்த அரசாங்கம் விரும்பவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 19

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில இருந்த நேரத்தில. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், நம்முடைய இன்றைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அன்றைக்கும் அமைச்சராக இருந்து இருககிறார்— நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையை விடக் கூடுதலாகக கொடுத்தது தெரியாதா? ஒரு நிலைமையில் 135 ரூ. கூட கொடுத்து வாங்கியிருக்றோம். ரூ. 140 கூட கொடுத்து அரசாங்கத்தின் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கி இருக்கிறோம். ஒரு நிலைமையை சமாளிக்க அந்த நேரத்தில் விவசாயிகளுக்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்படவில்லையா? அது மட்டுமல்ல. திராவிட முனனேற்றக் கழகம் ஆட்சிககாலத்தில் விவசாயிகளுககு சிலசில சமயங்களில் அதிகமான விலை கொடுக்கும் சூழ்நிலை ஏற்படவில்லையா! அதைப் போல இந்த நேரத்தில் செய்ய முடியாதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

எதற்கெடுத்தாலும் நாங்கள் கேட்டோம். அவர்கள் கொடுக்கவில்லை, ஆகவே நாங்கள் என்ன செய்வது என்று சொலலி தப்பித்து விடமுடியாது என்று நான் மீண்டும் சொலலவிரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கை அறிக்கையிலே என்ன குறிப்பிட்டு இருக்கிறீர்கள் என்றால்

But tie Goverumcnt of India have fixed a price of Rs 115 per duintal of common variety They haxe also informed the State Governments that no bonus or car age etc should be paid in addition to procurement price and if this is not observed he credit facilities from the Reserve Bank at low rate of interest for procurement will not be granted.

ரெஸ்டிரிக்ஷன் அவ்வளவு தானே! ரிசர்வ் பாங்க் கொடுக்கும் கேஷ்-கிரிடிட் பெசிலிடியை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நீங்கள் அவையில் செய்ய முடியாது. அவ்வளவு தான். நீங்கள் உங்களுடைய ஓன் பண்ட்ஸ்லிருந்து அதிகம் கொடுத்து வாங்குவதற்கு ரெஸ்டிரிக்ஷன் கிடையாது. தமிழ்நாடு அரசாங்கம் தன்னுடைய சொந்த நிதியில் இருந்து-ட்ரேடிங் ஆக்டிவிடீஸுக்கு வேஸ் அன்ட் மீன்ஸ அட்வான்ஸ் என்கிற வகையில் கொடுத்து, அதிகமான விலைக்கு நெல்லை வாங்கலாம். அப்படி அதிகம் கொடுத்து வாங்குவதற்கு நீங்கள் உத்தரவு போட்டதை மத்திய அரசு தவறுஎன்று சொல்லி தாக்கீது ஏதேனும் அனுப்பியுள்ளதா! நீங்கள் விவசாயிகளுக்கு அதிகம் கொடுக்க விரும்பவில்லை. அந்த எண்ணம் உங்களுக்கு இல்லை. அதே நேரத்தில் அரிசி விலையைக் குறைத்துக்கொடுக்கிறோம் என்று சொல்லி மக்களையும் திருப்திப் படுத்த முயலுகிறீர்கள். நெல்லுக்கு அதிக விலைகொடுக்கக்கூடாது என்ற உள்கருத்தில் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் நிலையை இங்கே வலியுறுத்திக்கொண்டு இருக்கிறது.



1982 மார்ச் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அதனால் தான் உற்பத்தி விலை 144 ரூ. ஆகிறது என்று தெரிந்து, ரூ. 147 தரவேண்டும் என்று நீங்களே மத்திய அரசுக்கு ஆலோசனை கூறியிருந்தும். அதை நிறைவேற்றாமல இருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் சொல்கின்ற வாதம், சபைக்கு உதவாத வாதம், எடுபடாத வாதம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஒரு உதாரணத்தைச் சுட்டிககாட்ட விரும்புகிறேன்: மின்சார வாரியத்திற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் இருந்து 140 கோடி ரூபாய் ஒதுக்கவிலலையா! மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய நிலுவைகள் வரவில்லை அதற்காக கொடுக்கிறோம் என்று சொல்லவில்லையா! அதைப்போலவே தமிழ்நாடு அரசாங்கத்தின் டிரேடிங் ஆக்டிவிட்டீசுக்காக சிவில் சப்ளை கார்ப்பரேசனுக்கு நீங்கள் ஏன் கொடுக்கக்கூடாது. ரிசர்வ் பாங்க் ரேட் ஆப் இன்ட்ரஸ்ட் குறைவாகக் கிடைக்கிறது என்பதைத்தானே நீங்கள் பார்க்கிறீர்கள் நீங்கள் நிதி அமைச்சராகவும் இருக்கிறீர்கள், சிவில் சப்ளை கார்ப்பரேசனுக்கு அமைச்சராகவும் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் பட்ஜெட் நிதியில் இருந்து கொடுங்கள்.

(பிற்பகல் 1.10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதுபற்றி பின்னாலே விரிவாகப் பேச வேண்டுமென்றால் நேரம் இருக்குமோ இருக்காதோ தெரியவில்லை. இதுபற்றி பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு 115 ரூபாய் விலை நிர்ணயித்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த மாநில அரசு அவர்கள் நிர்ணயித்த விலையைவிட 10 ரூபாய் கொடுத்தார்கள். அந்த மாதிரி 2, 3 ஆண்டுகள் நாங்களும் கொடுத்தோம். ஆனால் இப்போது 115 ரூபாய்க்குமேல் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது. அதை மீறி கொடுத்தால் கிரிடிட் பெசிலிட்டீஸ்' இல்லை என்று சொலலியிருக்கிறார்கள். அதைக் கேட்டுக் கொண்டுதான் கர்நாடகத்தில் கூடுதல் கொடுத்தார்கள். அதனால் அவர்களுக்கு கிரடிட் பெசிலிட்டீஸ் இல்லை என்று சொல்லி விட்டார்கள். பிறகு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் போய் கேட்டு, 12½ சதவீதம் கிரடிட் பெசிலிட்டீஸ் தருகிறார்கள்.

ரிசர்வ் பாங்கில் பணம் வாங்காமல 100 கோடி ரூபாய், 150 கோடி ரூபாய்க்கு நெல் கொள்முதல் செய்யவேண்டுமானால மாநில அரசில் அந்த அளவுக்குத் தொகை இல்லை. இங்கே 50 சதவீதம் லெவி வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால், பஞ்சாப், அரியானா மாநிலங்களில் 90 சதவிதம் லெவி வாங்குகிறார்கள். வேறு பல மாநிலங்களில் எபபடிச் செய்கிறார்கள் என்ற விபரத்திற்குப் பின்னால் வருகிறேன். ஆகவே, நாம் 115 ரூபாய் கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. மற்ற மாநிலங்

களிலும் அந்தவிலைக்குத்தான் வாங்குகிறார்கள். அங்கிருந்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்புகிற காரணத்தால் நால் லெவி வைத்து 115 ரூபாய்க்கு வியாபாரிகளிடமிருந்து வாங்குகிறோம். ஆனால் விவசாயிகளிடம் அந்த லெவியை நாம் வற்புறுத்தவில்லை. அவர்கள் ஒப்பன் மார்க்கெட்டில் விற்றுக்கொள்வதற்கு தனியாக கொடுத்திருக்கிறோம். ஆனால் 1974–75 ல விவசாயிகளுக்கும் லெவி இருந்தது; வியாபாரிகளுக்கும் லெவி இருந்தது. இப்போது விவசாயிகளுக்கு லெவி போடவில்லை. அவர்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காகப் போடவில்லை.

இந்த விலைக்கு வாங்குவதிலே கூட கிலோவுக்கு 55 காசு குறைத்துத்தான் பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறோம். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் காணும்போது மத்திய அரசு ஏதாவது தந்தால்தான் நம்மால் அதிக விலை கொடுக்க முடியும் என்று திட்டவட்டமாக தெளிவாக பலமுறை சொல்லியதை இப்போதும் சொல்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நிதி அமைச்சர் அவர்கள் இறுதியாகச சொல்வார்கள என்று எதிர்ப்பார்த்தேன்; இப்பொதே சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் நீங்கள் ரிசர்வ் வங்கியின் காஷ் கிரடிட் பெசிலிட்டியை பயன்படுத்தும்போதுதான் மத்திய அசுர அலலது ரிசர்வ் வங்கி ரிஸ்டிரிக்ஷன் போடுகிறது. இதிலே 'காப்பிட்டல்' எக்ஸ்பெண்டிச்சராக போடப்போகிறார்கள், 100 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கியதால் ஒரு வாரத்தில் கொளமுதல் செய்து. அடுத்த வாரத்தில் அரிசியாக்கி. விற்று விட்டால் கொடுத்த பணம் திரும்ப வந்து விடுகிறது. இதிலே போட்ட பணம் திரும்பிவர 10 ஆண்டுக் காலமா ஆகும்/ வேய்ஸ் அண்டு மீன்ஸ்' நிதியிலிருந்து 10 கோடி, 20 கோடி ரூபாய் கொடுத்தால் கொளமுதல் ஆகி, ஒரு வாரத்தில் அரிசி ஆகி, அடுத்த ஒரு வாரத்திற்குள் அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வந்துவிடும் அல்லது சிவில சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு வந்துவிடும். ஆகவே, இந்த வியாபாரிகளுக்கு நீங்கள் வட்டியில்லாமல் பணம் கொடுக்கலாம். கொடுத்த பணம் எப்படியும் ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்துவிடும். ஆகையால் இந்த வாதம் செல்லுபடி ஆகாது.

நீங்கள் அரிசி விலை குறைவாக இருக்க வேண்டும்; நெல்லுக்கு விலை கொடுக்கக்கூடாது என்று நினைக்கிறீர்கள். இந்த எண்ணம் உங்கள் மனதிலே இருக்கிறது. ஆனால் வெளியிலே சொல்லும் போது மத்திய அரசு தடுக்கிறது என்று சொல்லுகிறீர்கள். தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு கோடி, கோடியாக கொட்டி கொடுக்கிறீர்கள். அது திரும்பி வரவாப் போகிறது/ திரும்பி வராததற்கே இப்படிக் கொடுக்கிறீர்கள் என்றால் திரும்பி வரக்கூடியதற்கு, ட்ரேடு ஆக்டிவிட்டீசுக்கு ஏன் கொடுக்கக



கூடாது? பணம் கொடுங்கள் ஓப்பன் மார்க்கெட்டில் வாங்குங்கள். அவர்கள் 115 ரூபாய் கொடுக்கச் சொன்னால 147 ரூபாய்க்கு நாங்களே எங்கள் அரசாங்கப் பணத்திலிருந்து வாங்குகிறோம் 30 கோடி ரூபாய், 40 கோடி ரூபாய் கொடுத்து வாங்குகிறோம் என்று சொல்லுங்கள். அதில் கஷ்டம் இருக்கிறது என்றால் அது வேறு விஷயம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் அதற்கு என்னுடைய விளக்கத்தை இப்போதே சொல்லிவிடுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நான் முடித்துவிடுகிறேன். நீங்கள் பின்னால் பதில் அளிக்கும்போது விளக்கமாகச் சொல்லுங்கள். ஆக, மாநில அரசின் பணத்திலிருந்து நெல்லுக்கு அதிக விலை கொடுக்கலாம். அதிக விலை கேட்டால் இன்றைக்கு மத்திய அரசை காரணம் காட்டுகிறீர்களே தவிர உண்மையிலேயே விவசாயிகளுக்கு போதுமான விலை கொடுப்பதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்பதை நாங்கள் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அதே போல் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே இருந்து வரக்கூடியவர்கள். இந்த தஞ்சை மாவட்டம் இருக்கின்றதே, அங்கே இருப்பவர்கள் நெல்லை மட்டும் தான் உற்பத்தி செய்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டம் போன்ற மற்ற மாவட்டங்களிலே இருப்பவர்கள் கமர்ஷியல் க்ராப் தான் செய்கிறோம். ஆகவே கிருஷ்ணாயில் வாங்க வேண்டும் என்றாலும் சரி, துணி வாங்க வேண்டும் என்றாலும் சரி, பருப்பு வாங்க வேண்டும் என்றாலும் சரி தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்கள் நெல்லைத்தான் கொண்டுபோய் விற்க வேண்டி இருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. ஆகவே தொடர்ந்து எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, ரைஸ் பவுல் என்று சொல்லப்படுகின்ற தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயி நெல்லை உற்பத்தி செய்து கொடுக்கிறான், அதை எக்ஸ்ப்ளாயட் பண்ணுவதற்கும், சாப்பிட்டுவிட்டுப் போவதற்கும் மற்ற டிஸ்ட்ரிக்டிலே இருப்பவர்கள் இருக்கிறார்கள், ஆகவே தொடர்ந்து வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து ரைஸ் பவுல் என்று சொல்லப்படுகின்ற காவிரி டெல்டா பகுதியிலே இருக்கின்ற தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்காமல் இருக்கின்றது. அதனால் மற்ற மாவட்டங்களிலே இருப்பவர்களின் பொருளாதார நிலைமை மேம்பட்டு இருந்தாலும் கூட தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்களுடைய பொருளாதார நிலைமை மேம்படவில்லை. அதற்கான முறையிலே நீங்கள் ஈடுபடவில்லை என்பதை என்னாலே சொல்லாமல் இருக்க முடியாது.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 12

அடுத்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே பலவிதமான ஆக்டிவிட்டிஸ் பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்தக் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்ட சமயத்திலே அது சிறிதாக இருந்தது. ஆனால் இப்போது எல்லாமே அதிலே எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. ஒரு பக்கத்திலே சிமெண்ட், ஒரு பக்கத்திலே பாமாலின், ஒரு பக்கத்திலே கடலை எண்ணெய், ஒரு பக்கத்திலே அரிசி என்று இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. எப்படிப் பொதுவுடமை நாடுகளிலே இப்படி உணவுப் பொருட்களை வழங்குவதற்கு ஒரு ஸ்தாபனம் இருக்கின்றதோ அதே போன்று ஏறக்குறைய ஒரு பாதி அளவுக்கு மானோலித்திக் ஆர்கனைசேஷனாக அது வளர்ந்து விட்டது. 100 கோடி, 200 கோடி, 300 கோடி என்று மிகப் பெரிய அளவிலே ட்ரான்ஸாக்ஷன் இருக்கக்கூடிய அளவுக்கு அது வளர்ந்துவிட்டது. அப்படி வளர்ந்துவிட்ட காரணத்தால் I am afric. whether there is any proper cont el on purc aec as well as distribution இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே இப்போது ஒரு ரீஜினல் மேனேஜர் வைத்திருக்கிறார்கள். அந்த ரீஜினல் மேனேஜர்களின் அந்தஸ்துகள் எல்லாம் உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் எல்லாம் ஜெனரல் மேனேஜராக ஆக்கப்பட வேண்டும். அந்தந்த ரீஜினிலே இருக்கக் கூடிய நிலைமைக்கு ஏற்ப அவர்கள் முடிவு எடுக்க வேண்டும். இப்போது உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிதம்பரத்திலே இருந்து உளுந்து வருகின்றது. தஞ்சாவூரிலே இருந்து உளுந்து வருகின்றது என்றால் ஒரு சீசனிலேதான் வரும். அப்படி வருகின்ற சமயத்திலே ரீஜினல் மேனேஜர் ஆஃபீஸிலே இருந்து டெலக்ஸ் அடிக்கப்படுகின்றது—தந்தி கூட அல்ல, டெலிபோன் கூட அல்ல, டெலக்ஸ் அடிக்கப்படுகிறது—அவர்களாலே வாங்க முடியாது. ஒரு சென்ட்ரல் ஆர்கனைசேஷன் இருக்கின்றது. அங்கே பர்சேசிங் மார்க்கெட்டிங் ஆஃபீஸர் இருக்கிறார், அவர் சொன்னால் தான் வாங்கலாம். அவர் சொல்லவில்லை என்றால் வாங்க முடியாது. ஆனால் அந்த மார்க்கெட்டிங் ஆஃபீஸரை வாங்க வைப்பதும் வாங்காமல் இருக்க வைப்பதும் அங்கங்கே இருக்கக்கூடிய வியாபாரிகளின் கண்ட்ரோல்தான். மேனேஜிங் டைரக்டரின் கன்ட்ரோலிலே இல்லை. ஆகவே விலை குறைகின்ற சமயத்திலே அவர்கள் வாங்காமல், வியாபாரிகள் மட்டும் கொள்ளை அடிக்கின்ற நிலைமைகள் நிறைய இருக்கின்றன. We ave go instances ஆகவே இதற்கெல்லாம் இடம் கொடுக்கக் கூடாது. ஆகவே ரீஜினல் மேனேஜர்களை எல்லாம் ஜெனரல் மேனேஜராக ஆக்க வேண்டும். அவர்களே முடிவு எடுக்க வேண்டும் என்ற நிலைமையினை ஏற்படுத்த வேண்டும். விலை குறைவாக இருந்தால் ஆல்ரைட் வாங்கு என்று அந்த விவசாயிக்கு நஷ்டம் வராமல் இருக்கின்ற சமயத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போனால் ஒரு மூட்டைக்கு 10 ரூபாய் ஏறும். அது விவசாயிகளுக்குப் போகலாமே. ஆகவே இதிலே எல்லாம் இருக்கின்ற சில குறைபாடுகளைச் சீர் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.



1982 மார்ச் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அடுத்து சிமெண்டை எதற்காக அனாவசியமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டிருக்கின்றது. உணவுப் பொருட்களை மட்டும் வைத்துக் கொள்ளுங்களேன். உணவுப் பொருட்களுக்கு என்று ஒரு ஸ்தாபனம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வைத்துக் கொண்டிருக்கின்றபோது சிமெண்ட் மற்றும் எல்லாவற்றையும் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும். வேண்டுமென்றால் தமிழ்நாடு சிமெண்ட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அல்லது தமிழ்நாடு சிமெண்ட் என்று அவர்களே டீல் பண்ணட்டுமே. அல்லது வேறு யாரிடமாவது கொடுங்களேன். ஆகவே எல்லாவற்றையும் ஒன்றாக வைத்திருப்பதால்தான் தமிழ்நாட்டிலே ப்ளாக் மார்க்கெட்டிலே சிமெண்டின் விலை ஏறுகின்றது. முக்கியமான காரணம் இதுதான். சரியான டிஸ்ட்ரிபுஷன் கிடையாது. பெர்மிட் சிஸ்டம் இருந்தால் தான் விலை உயர்ந்தது. ஆகவே அது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ். மொத்தம் 17 ஆயிரம் கடைகள் இருக்கின்றன. கிராமத்திலும் நகரத்திலும் மொத்தம் 17 ஆயிரம் கடைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த 17 ஆயிரம் கடைகளிலேயும் வேலை செய்கின்ற ஊழியர்கள் மற்றும் கிராமங்களிலே இருக்கின்ற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை மேனேஜ் பண்ணுகின்றவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறது. 150 ரூபாய் கொடுக்கிறீர்கள். இப்போது ஒரு வேளை ஏற்றி இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆகவே இந்த 150 ரூபாயை வைத்துக்கொண்டு யாராவது வாழ முடியுமா? கிராமத்திலே கூலி வேலைக்குப் போகின்றவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கின்றது. ஆகவே இவனுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தை வைத்து என்ன செய்ய முடியும். அவன் போய் எங்கேயாவது கூலி வேலை செய்தால் கூட அவனுடைய சம்பளம் 30 நாட்களுக்கும் என்ன கிடைக்கும்? ........ (குறுக்கீடு)....... அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூலி வேலை செய்பவர்கள் வெய்யிலிலே காய்ந்தால் தானே சம்பளம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படியானால் வெய்யிலிலே கஷ்டப்படாமல் நிழலிலே இருப்பவர்களுக்கு சம்பள வெட்டு வைத்திருக்கிறீர்களா?

(பிற்பகல் 1-20).

செக்ரட்டேரியட்டிலே இருப்பவர்கள் எல்லாம் சம்பளம் குறைவானவர்கள், கிராமப்புறங்களிலே வெய்யிலிலே வேலை செய்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு சம்பளம் அதிகம் என்று சொன்னால் அது உண்மையில்லை. ஆகவே அவர்களுக்கு 150 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அவன் எப்படி வாழ முடியும். குறைந்த அளவு சம்பளமும் கொடுத்துவிட்டு, அவர்களிடத்திலே மிக ஸ்கேர்சிட்டி

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 12

யான பொருள்களை அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற பொருள்களையும் கொடுத்துவிட்டால் அவன் என்ன செய்வான்? அதை வைத்துக் கொண்டு பிழைக்கத்தான் பார்ப்பான். 150 ரூபாய் சம்பளத்தில் தனியாகக் கூட வாழ முடியாது. குடும்பத்தோடு வாழ்பவன் என்ன செய்வான்? ஆகையினால் தேவையின் காரணமாக, நெசசிட்டியின் காரணமாக இது போன்ற வேலைகளில் ஈடுபடுகிறான் சட்டத்திலே சொல்வார்கள் "Necces iy k ows no law' என்று. ஆகவே நிர்ப்பந்தத்தின் மூலமாக முறைகேடுகள் நடப்பதை தவிர்க்க வேண்டும். அதற்கு அரசே காரணமாகி விடக்கூடாது என்ற வகையில், அவர்களுடைய சம்பளத்தை குறைந்த பட்சம் 300 ரூபாயாவது ஆக்கிக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், நீங்கள் 5 மூட்டை சர்க்கரையை கிராமத்திற்கு எடுத்து செல் என்று அவனிடம் கொடுத்தால், வழியிலேயே வியாபாரியிடம் இரண்டு மூட்டையை 150 ரூ. விலைக்கு விற்று 300 ரூபாய் வாங்கிக் கொண்டு, நீங்கள் கொடுக்கும் 150 ரூபாயையும் வைத்துக் கொண்டு அவன் குடும்பம் நடத்துகிறான்.

Gover me t should not encourage this. அரசாங்கமே திருடுவதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது. ஆகவேதான் அவர்களுடைய நிலைமையை பரிசீலித்து அவர்களுக்கு குறைந்த பட்சம் 300 ரூபாயாவது வழங்குவதற்கு உண்டான நிலைமையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தது ரைஸ் மில்லை எடுத்துக் கொண்டால், அவைகளை நவீனப்படுத்த வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது மிக நல்லத் திட்டம் தான். ஆனால் அதை எப்படி பண்ண வேண்டும் என்றுதான் சொல்லவில்லை. அதை எப்படி பண்ண வேண்டும் என்ற வகையில் நீங்களாகவே ஒரு மாடல் தயாரித்து— உங்களிடம் டான்சி போன்ற நிறுவனங்கள் இருக்கின்றன—அவற்றின் உதவியுடன் மாதிரிகளைத் தயாரித்து இம்மாதிரி ரைஸ் மில்கள் இருக்க வேண்டும் என்று சொல்லிக் காட்டுங்கள் அல்லது அவைகளைத் தயாரித்து நீங்களே விற்பனை செய்யுங்கள். அப்படிச் செய்யாமல், ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர், ஹல்லருடன் கூடிய ஷெல்லர் வைத்து நவீனப்படுத்துங்கள் என்றெல்லாம் சொன்னால், இரண்டு ஹல்லர்களை இணைத்து ஏதோ ஒரு வகையில் ரைஸ்மில் இயந்திரத்தை தயாரித்துக்கொண்டு வந்து, நாங்கள் நவீனப்படுத்திவிட்டோம், சர்டிபிகேட் தாருங்கள் என்று கேட்டு, உங்களிடம் சர்டிபிகேட் பெறும் வகையில் தான், அந்த வேலைகள் நடக்குமே தவிர, உண்மையாக அதனை அமல்படுத்த முடியாது. உண்மையாக அந்த மில்கள் பயன் பெறாது. அவைகளை வாங்கி பூட்டி, ஓட்டும்போது உண்மையிலே அந்த மில்கள் ஒழுங்காக ஓடாத நிலைதான் ஏற்படும். ஆகவே, இதற்கு அரசாங்கமே தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அடுத்தபடியாக பிற்பட்டோர் நலத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால், இது குறித்து அதிகமாகப் பேச விரும்பவில்லை. 5, 6 நாட்களுக்கு முன்னாலே கூட, நேற்றைக்கு முன் தினம் கூட நம்முடைய நிதியமைச்சர் அவர்களோடு இது சம்பந்தமாக நாங்கள் பேச வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த சமயத்தில் தான் பிற்பட்டோர் நலக் குழு என்ற ஒன்றை சட்டநாதன் அவர்கள் தலைமையிலே நிறுவினோம். அப்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எங்களுடைய கழக அரசிலே பங்கேற்றிருந்தார்கள். ஆகவே எல்லோரும் சேர்ந்துதான் அப்போது சட்டநாதன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை நிறுவினோம். அந்தக் குழு சில பரிந்துரைகளைச் செய்தது. அதிலே முதல் பரிந்துரை என்னவென்றால், கல்வி வேலை வாய்ப்புகளில் பிற்பட்டோருக்கு என்று 25 சதவீதம் ஒதுக்கீட்டை போதாது என்றும், அதை 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றும் சொன்னார்கள். இன்னொரு பரிந்துரை என்னவென்றால், அந்த 25 சதவீதத்தை 33 சதவீதமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்தால் மட்டும் போதாது மிகவும் பிற்பட்டோர் என்று சொல்லி ஒரு தனியாக பார்டிஷன் ஏற்படுத்த வேண்டும் என்றும் சொல்லி இருந்தனர்.

அதாவது இப்படி ஏன் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இன்றைக்கு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் நாங்களும் சேர்ந்தவர்கள் என்று சொல்லாமல் இருக்கக் கூடியவர்கள் யார் என்றால் அது பிராமணர்கள் தான். இந்தக் கருத்தை நான் ஆளும் கட்சியின் வரிசையில் இருந்த போதே தெரிவித்திருக்கிறேன், எதிர்க் கட்சி வரிசையில் இருந்து சொல்வதில் எந்தவிதத் தவறு இல்லை என்றே கருதுகிறேன். பிராமணர்களைத் தவிர மற்ற அத்தனை பேரும் நாங்கள் பிற்பட்டவர்கள் தான் என்று சர்டிபிகேட் வாங்கித் தந்து விடுகிறார்கள். திருச்சி மாவட்டதில் இருந்த அதிகாரி ஒருவர் கொண்டா ரெட்டியார் சமூகத்தினர் ஷெட்யூல்ட் காஸ்ட் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி சர்டிபிகேட் வாங்கிவிட்டார். அதற்கு டிஸ்டிரிக்ட் கலெக்டர் என்ன சொன்னார் என்றால் ரெட்டியார் வகுப்பினர்கள் ஷெட்யூல்ட் வகுப்பின் கீழ் வரமுடியாது, இது அதன் கீழ் உட்பட்டது அல்ல என்று சொன்னார். அது எப்படி கிடையாது என்று சொன்னீர்கள், கொண்டா ரெட்டியார் என்ற வகுப்பினர் ஷெட்யூல்ட் வகுப்பின் கீழ் தான் வரும் என்று சொல்லி, ஐக்கோர்ட்டிலே இருந்து கலெக்டருக்கு ஸ்டிரிச்சர்ஸ் பாஸ் பண்ணி அனுப்பி, இருக்கிறார்கள் என்ற செய்திகளை நாம் பத்திரிகைகளிலே பார்த்தோம். ஆகவே தான் பிராமணர்களைத் தவிர மற்ற அத்தனை பேரும், நாயுடுவாக இருந்தாலும், செட்டியாராக இருந்தாலும் வேளாளராக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் என்று தான் சொல்லிக் கொள்கிறார்கள். பெண் கொடுக்கிற நேரத்திலே மட்டும் தொண்டை மண்டலம்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 12

துளுவ வேளாளர் என்று ஜாதிப் பெயர் மிக உயர்வாக வந்துவிடும். ஆனால் சர்டிபிகேட் வாங்குகிற சமயத்திலே அல்லது ஏதாவது ஒரு நிலையிலே அவர்கள் தாங்கள் பிற்படுத்தப்பட்டோர் என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். லிஸ்டிலே சேர்க்கும்படி கேட்டுக் கொள்கிறார்கள். இன்னும் பிராமணர்கள் தான் அப்படிச் சொல்லவில்லை. ஏன் அவர்களையும் தான் பட்டியலில் போட்டுவிடுங்களேன். அதை மட்டும் ஏன் தனியாக வைத்துக் கொள்ளவேண்டும். இந்த நாட்டில் அவர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள் ?

ஆகவேதான், சட்டநாதன் குழுவிலே சொன்னார், முற்பட்டோர் ஜாதிக்காரர்கள் ஏதாவது ஒரு கருத்தை வைத்துக் கொண்டு, பிற்பட்டோருக்கு 'கொடுக்கக் கூடிய சலுகைகளை எக்ஸ்பிளாயிட் செய்கிறார்கள். அதை தடுக்க வேண்டும். பிளாக் பண்ண வேண்டும். 25 சதவீதத்தை 33 சதவீதமாக மாற்றினால் மட்டும் போதாது, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை இன்னொரு பார்டிஷனாக போட்டு அதற்கு தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஃபார்வேடு கம்யூனிட்டி, பேக்வேர்டு கம்யூனிட்டி என்று இரு பிரிவுகளோடு, மிகவும் பின் தங்கியவர்கள் மோஸ்ட் பேக்வர்டு என்று ஒரு பார்ட்டிஷன் வைத்து அதற்கென்று சில பெர்ச்ன்டேஜ்களை ரிசர்வேஷன் பண்ண வேண்டும். பேக்வார்டு என்று சொல்லி 15 சதவீதம், மோஸ்ட் பேக் வார்டு என்று சொல்லி 16 சதவீதம் ஆக மொத்தம் 31 வரும். அல்லது, 16: 17 என்ற விகிதத்திலாவது வைத்தால் 35 சதவீதம் வரும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இதிலே ஒரு தனிப் பிரிவாக வைத்து செய்ய வேண்டும்.

இன்று சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாக்வேர்ட் கம்யூனிட்டி. கொண்டா ரெட்டி இருக்கிறார்கள், அவர்கள் ஷெட்யூல்ட் ட்ரைப் ஆக ஆகிவிடுகிறார்கள். ஆகவே சலவைத் தொழிலாளர்கள், பானை செய்கிறவர்கள், மற்றவர்கள் இவர்கள் எல்லாம் இப்போது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்கள் மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிட்டியில் இருக்க வேண்டும். மோஸ்ட் பாக்வேர்ட் என்று காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது 1977-ல் வைத்திருந்தார்கள். பள்ளிக் கூடங்களில் சேருவதற்காக என்றாலும் சரி அல்லது கல்லூரிகளில் சேர வேண்டுமென்றாலும் சரி மோஸ்ட் பாக்வேர்ட் க்ளாஸ்க்கு என்று ஒரு குறிப்பிட்ட சத விகிதம் வைக்க வேண்டும் என்று அன்றையதினம் திரு. காமராஜ் அவர்கள் உத்தரவு போட்டார்கள். அது கொஞ்ச காலத்திற்கு இருந்தது. ஆனால் இடையில் அதை ரத்து செய்துவிட்டார்கள். இப்போது சர்வீஸ் கமிஷனுக்குச் சென்று மோஸ்ட் பாக்வேர்ட் க்ளாஸ் என்றால், என்ன ஐயா, மோஸ்ட் பாக்வேர்ட், 45 மார்க் வாங்கியிருந்தால் படிக்கலாம், 50 மார்க் வாங்கியிருந்தால்



1982 மார்ச் 12] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

ஸ்காளர்ஷிப் கிடைக்கும் பாக்வேர்ட் கம்யூனிட்டிக்கு, அப்பாயின்ட்மென்ட்க்கு மோஸ்ட் பாக்வேர்ட் க்ளாஸ் என்று ஒன்றும் எங்களுக்கு டைரக்ஷன் கிடையாது, என்று சொல்கிறார்கள். ரெக்ரூட்மென்டில் அப்படி ஒன்றுமில்லை என்று சொல்கிறார்கள். எனவே மருத்துவக் கல்லூரி அட்மிஷன் என்றாலும், பாலிடெக்னிக் என்றாலும், என்ஜினியரிங் கல்லூரி என்றாலும் சரி, பாக்வேர்ட் க்ளாஸ், மோஸ்ட் பாக்வேர்ட் என்றிருந்த டிஸ்டிங்க்ஷனை எடுத்து விட்டார்கள்.

நாம் அண்ணா வழியில் வந்தவர்கள், ஜாதி இல்லாமல் இருக்க வேண்டுமென்று பாடுபடக்கூடியவர்கள். அப்படி ஜாதி இல்லாமல் இருக்கவேண்டும் என்று பாடுபடக்கூடிய இயக்கத்தில் இருந்து நாம் வந்திருக்கிற நேரத்தில் இன்றைய தினம் தமிழ் நாட்டில் என்ன நடக்கிறது ? ஊர்வலம். வண்ணியர் ஊர்வலம், சென்னையில், கோட்டையைக் குலுக்குகிறது. தென் ஆற்காடில் வன்னியர்கள் ஊர்வலம், எங்கள் மாணவர்களுக்கு பள்ளிகளில் படிக்க வாய்ப்பில்லை, மோஸ்ட் பாக்வேர்ட் க்ளாஸ்க்கு ரிசர்வேஷன் இல்லை. மெடிக்கல் காலேஜ்களில் படிக்கும் ஆயிரம் பிள்ளைகளில் பத்து பேர்கள் கூட எங்கள் கம்யூனிட்டியில் உள்ள பிள்ளைகளுக்கு இடம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லக்கூடிய நிலைக்கு ஏன் வர வேண்டும் ? ரிசர்வேஷனை நீங்கள் முன்னாலேயே செய்யலாம் அல்லவா ? மீனவர்கள், வன்னியகுல ஷத்திரியர்கள் போன்ற இனத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் அவர்கள் அத்தனை பேர்களையும் சேர்த்து ஒரு கம்பார்ட்மென்டல் ரிசர்வேஷன் வைத்திருக்க வேண்டும். இன்று கலக்டர் வேலையாக இருந்தாலும், டெப்டி கலக்டர் வேலையாக இருந்தாலும், தாலுகா ஆபீஸ் குமாஸ்தா வேலையாக இருந்தாலும் சரி, ப்யூன் வேலையாக இருந்தாலும் சரி பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லி மேல் ஜாதிக்காரர்கள் நுழைந்துவிடுகிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சத விகிதம் ரிசர்வேஷன் இருந்ததை 50 சத விகிதம் ஆக உயர்த்திருக்கிறது. பாராட்டுகிறேன். 25 சத விகிதம் என்று வைத்திருந்த போதிலும் மோஸ்ட் பாக்வேர்ட் ஆக இருக்கிறவர்களுக்கு ஒன்றும் போகவில்லை, அதை 31 சத விகிதம் ஆக அதிகப்படுத்தியபோதும் கூட அவர்களுக்கு ஒன்றும் போகவில்லை, இப்போது அதை 50 சத விகிதம் ஆக உயர்த்திய போதிலும் அதைவிட கீழ் நிலையில் இருக்கிறார்களே தவிர 1 சத விகிதம் கூட கல்லூரி அட்மிஷன், பாலிடெக்னிக் அட்மிஷன், வேலை வாய்ப்பு இவற்றில் கிடைக்கவில்லை. எனவே தயவு செய்து சட்டநாதன் குழு பரிந்துரைகளை மீண்டும் படித்துப் பாருங்கள். படித்துப் பார்த்து—இந்த நாட்டில் ஜாதிச் சங்கங்கள், ஜாதி ஊர்வலங்கள் வளராமல் தடுக்க வேண்டும். அது ஜனநாயகத்திற்கே ஆபத்து.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 12

இன்றையதினம் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். திரு. தங்கமணி அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள். ஆளும் கட்சியிலும் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் வன்னியர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஊர்வலம் போகும்போது எங்களைப் போன்றவர்கள் கலந்து கொள்ள முடிவதில்லை. அப்படி கலந்து கொண்டால் அது சரியாக வராது. அப்படியே கலந்து கொண்டாலும் கட்சியில் இருக்கிறவர்கள் சந்தேகக் கண்களோடு பார்க்ககூடிய நிலையில் இருக்கிறோம். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவெனில், இது விஷயத்தில் இப்பேர்ப்பட்ட நிலை வராது தடுக்க வேண்டுமென்றால் மோஸ்ட் பாக்வேர்ட் என்பது யார் யார் என்று ஒரு லிஸ்ட் இருக்கிறது. இந்த 50 சத விகிதத்தில் 25 சத விகிதம் மோஸ்ட் பார்வேர்ட் க்ளாஸ்க்கு என்று வைத்துவிட வேண்டும். கல்லூரி அட்மிஷன்களானாலும் சரி, மருத்துவக் கல்லூரிகளானாலும் சரி, என்ஜினியரிங் கல்லூரிகளானாலும் சரி, பாலிடெக்னிக்களானாலும் சரி, அவற்றிற்கான அட்மிஷன்களானாலும் சரி, வேலைவாய்ப்பானாலும் சரி, மோஸ்ட் பாக்வேர்ட் க்ளாஸ்க்கு 25 சதவிகிதம் என்று ஒதுக்கி வைத்து மற்ற பிற்பட்ட வகுப்பினர் அதில் நுழையாதவகையில் ஒரு அடைப்பு, தடுப்புச் சுவர் வைத்து மிகவும் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்தவர்கள் முன்னேற வழிவகை செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். இந்த அளவில், அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களில் பல குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று 3 மானியக் கோரிக்கைகள் இந்த அவையின்முன் வைக்கப்பட்டு, பேரவையிலுள்ள உறுப்பினர்களின் சீரிய கருத்துக்கள் வேண்டப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் அனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி** : இப்போது மணி 1½ ஆகிறது. அமைச்சர் அவர்கள் எப்போது முடிப்பார்கள்? எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : என்னைப் பொறுத்தவரையில் எதற்கும் தயாராக இருக்கிறேன். மூன்று மானியங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1½ மணிக்கு மேலும் பேசலாம்; 1 மணி நேரத்திலும் பேசலாம். ஆனால், கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் சொல்ல வேண்டும்.



(4) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்றுவரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள் 1971–72ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், படிப்பு வகையும். | சென்னையில். | | வெளியூர்களில். | |
|---|---|---|---|---|
| | பி.வ. * | கு.ப.நீ.இ. ** | பி.வ. * | கு.ப.நீ.இ ** |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ஒவ்வொரு மாதத்திற்கான ரூபாய்.) | | | |
| 1. கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 60 | 70 | 50 | 55 |
| 2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை, மருத்துவம் ஆகியவை .. .. | 60 | 75 | 55 | 70 |
| 3. தொழில் நுட்பக் கல்வி .. .. | 50 | 60 | 45 | 50 |

(5) உதவித் தொகை வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

| | செலவு. | மதிப்பீடு. | திருத்திய மதிப்பீடு. | மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | 1980-81 | 1981-82 | 1981-82 | 1982-83 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள் .. | 2,95,85 | 2,99,17 | 2,99,17 | 3,28,78 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் .. | 38,86 | 39,12 | 38,51 | 43,82 |
| மொத்தம் .. | 3,34,71 | 3,38,29 | 3,37,68 | 3,72,60 |

* பி.வ. (=) பின்தங்கிய வகுப்பினர்.

** கு.ப.நீ.இ. (=) குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

[1982 மார்ச் 12

7. **(அ) படிப்புக் கட்டணச் சலுகைகள்.**-மேல்நிலைப் பள்ளிப் படிப்புவரை (ப்ளஸ்.2) சாதிப் பாகுபாடில்லாமல் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் (பிளஸ் 2) தமிழை போதனா மொழியாகக்கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் எந்த விதமான படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால், மேல்நிலைப் படிப்பில் (ப்ளஸ் 2) ஆங்கிலத்தை போதனா மொழியாகக்கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டும். ஆதி திராவிடர், பழங்குடிமக்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த, ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக்கொண்டு மேல்நிலைப்பள்ளி கல்வி கற்கும் மாணவர்கள், தமிழ்நாடு கல்வி விதிகள் 92-ன் கீழ் வழங்கப்படும் படிப்புக் கட்டணச் சலுகைகள் பெறத் தகுதியுடையவராவர்.

மேல்நிலைப் பள்ளி (ப்ளஸ் 2) வகுப்புக்குமேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும், பிற்பட்டோர் நலத் துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது :—

| வருமானப் பிரிவு. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர். | குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | முழுச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன்படி. | முழுச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன்படி. | அரைச் சம்பளச்சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி மிகுந்த அரைச்சம்பளம் இத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | மூன்று பிரிவினருக்கும் அரைச் சம்பளச்சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |



1982 மார்ச் 12]

7. (ஆ) கடன் உதவித் தொகை.—தொழில் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 5,001-லிருந்து ரூ. 10,000-க்குட்பட்டு இருந்தால், வருடத்திற்கு ரூ. 500 வீதம் ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு படிக்கும் காலம் முழுவதற்கும் அதிகபட்சம் ஐந்து வருட காலத்திற்கு ரூ. 2,500-க்கு மேற்படாது இத்துறையின் மூலமாக கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த புதிய வருமான வரம்புகள் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன.

8. அரசு மாணவர் இல்லங்கள்.—மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர் :—

| .... | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான விடுதிகள். | பின்தங்கிய வகுப்பினருக்கான விடுதிகள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (விழுக்காடு) | | |
| பிற்பட்ட வகுப்பினர் .. | 10 | 65 | 20 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் .. | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர். | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் .. | 5 | 10 | 5 |
| மொத்தம்.. | 100 | 100 | 100 |

பெற்றோர்/பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மிகைபடாது இருக்கும் மாணவர்கள் இவ்விடுதிகளில் சேர்வதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

[1982 மார்ச் 12

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

131. 18—3—1970 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் III-86/1970 ஆம் எண். அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 20—12—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1176 ஆம் எண். அறிவிப்பில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

132. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனத்திற்கு சரிகை விற்பனையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 31—10—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1219 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

133. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஏல நிலையங்களில் விற்பனை செய்யப் பெறும் தேயிலையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி வீதத்தினைக் குறைப்பது குறித்து 9—11—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1249 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. சக்தி மீட்புச் சாதனங்கள், கருவிகள் மற்றும் சூரிய சக்தி, ' பயோமாஸ் ' வாயு சக்தி இவற்றைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பெற்ற இயந்திரங்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதன் மீது செலுத்தத் தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 16—11—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1273 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

135. 19—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற II (1)/வ. வ. செ.அ. /397-81 ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று சய்வது குறித்து 20—11—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1288 ஆம்



1982 மார்ச் 12]

எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

136. 3—1—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் II (1) வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள 69/81-ஆம் எண். அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 10—12—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1340 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

137. மூக்குக் கண்ணாடி விற்பனையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து 24—12—1981ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1406 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய திட்டங்கள்

89. கோரிக்கை எண். 32—பிற்பட்டோர் நலத்துறை—விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

90. கோரிக்கை எண். 21—மீனளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1982-83.

91. கோரிக்கை எண். 35—தமிழ்நாடு உணவு நிலைமை குறித்த விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

92. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1982-83 (ஆங்கிலம்).

93. மீனளம் குறித்த செயல் முறைத் திட்டம், 1982-83 (ஆங்கிலம்).

94. ' மெட்ரோ வாட்டர் ' 1982 என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

95. தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம் 1982 என்கிற சிறு புத்தகம்.

96. கோரிக்கை எண். 19-க்கான துணைக் குறிப்பின் மீது அளிக்கப்பட்ட கொள்கை விளக்கத்திற்குப் பிழை திருத்தம்.

97. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 310 மற்றும் 311 முதல் 650 வரை).

இணைப்பு I

(9-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மீனளம்— கொள்கை விளக்கக் குறிப்பு.

முன்னுரை :

எளிய மக்களுக்கு சுலபமாக கிடைக்கும் புரதச் சத்து மிகுந்த உணவைத் தேடும் முயற்சிகளை மேற்கொள்ளும்பொழுதோ அயல் நாட்டு செலவாணியைப் பெருமளவில் ஈட்டுவதற்கு ஒரு வலுவான ஆதாரத்தைத் தேடும்பொழுதோ, நமது பார்வையை நிலத்திலிருந்து சற்றே அகற்றி நீரின்பால் திருப்ப வேண்டிய தருணம் வந்து விட்டது. அது நம்முடைய நீண்ட கிழக்குக் கடற்கரையையும் தெற்கு முனையையும் அணைக்கும் கடலாக இருக்கலாம் அல்லது உள்நாடு முழுவதும் தாராளமாகத் தென்படும் நீர் நிலைகளாக இருக்கலாம். நமது மாநிலத்தில் உள்ள நீர் நிலைகளின் பரப்பு 3,69 000 ஹெக்டேர் ஆகும். பல்வேறு வகைப்பட்ட உயர்தர மீன் இனங்கள் விரைந்து வளர்வதற்கு ஏற்றதான நிலையில் தண்ணீர் பரப்பு அமைந்துள்ளது. தமிழ் நாட்டின் கடற்கரையின் நீளம் 1,000 கிலோ மீட்டர், அதன் அடி தளத்தின் ( Continental Shelf ) பரப்பு 41,412 சதுர கிலோ மீட்டர் ஆகும். இக்கடற்கரைப் பகுதிகளில் மிகப் பரந்த அளவில் பலவகைக் கடல் வாழ் மீன் இனங்கள் வளர்கின்றன. மாநிலத்தின் கடற்கரைப் பகுதியிலும் உள்நாட்டு நீர் நிலைகளிலும் மீன் உற்பத்தி சீராக பெருகி வந்துள்ளது. அடுத்தடுத்த அய்ந்தாண்டுத் திட்டங்கள் வெற்றியாக நிறைவேற்றிய காரணத்தால் மீன் உற்பத்தி பெருகியுள்ளது. கடல் மீன் உற்பத்தி 1951–52 ஆம் ஆண்டில் 45,700 டன்னிலிருந்து 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் 2,27,000 டன்னாக அதிகரித்திருக்கிறது. அதேசமயம் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி 36,000 டன்னிலிருந்து 1,65,000 டன்னாக அதிகரித்தது. இந்தியாவில் கடல்வளத்திலும் உள்நாட்டு மீன் உற்பத்தியிலும் முக்கிய இடத்தைத் தமிழ்நாடு பெறுகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியில் மேற்கு வங்க மாநிலத்திற்கு அடுத்தபடியாகவும் கடல்மீன் உற்பத்தியில் கேரள, மராட்டிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாம் நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டில் ஒருவர் ஆண்டொன்றுக்கு உட்கொள்ளும் மீன் உணவின் அளவு 7.51 கிலோ கிராம் ஆகும். இது அனைத்திந்திய அளவில் சராசரியாக ஒருவருக்காகும் மீன் உணவான 4.13 கிலோ கிராம் அளவை விட அதிகமாகும்.



1.2. 1981–82 ஆம் ஆண்டில் கடற்பகுதியிலிருந்தும் உள் நாட்டு நீர் நிலைகளிலிருந்தும் மொத்த மீன் உற்பத்தி 4.15 இலட்சம் டன்னாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைப்பு :

2.1. அரசின் அமைப்புகளான மீனள இயக்குநரக அமைப்பு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலமாக மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. 1907 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாநில மீனள இயக்குநர் அமைப்பு, இந்தியாவின் மீனளத்தைப் பொறுத்த வரையில், மிகப் பழமையானதாகும். 1974 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பணிகளின் முக்கிய நோக்கங்களாவன —

மீன் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல், பிற தொடர்பான பணிகள், மீன்களை கொள்முதல் செய்தல், மீன்களை விற்பதற்கு சீரான வழி வகை செய்தல், எளியவரும் வாங்கக்கூடிய விலைக்கு மீன்களை விற்றல், மீன் வளர்ப்புக்கு வகை செய்தல், மீன் பண்ணைகளைப் பராமரித்தல் ஆகியவையாகும். அதே நிலையில் மீன் பண்ணைகளை உருவாக்குதல், தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு பொறிக்கச் செய்யும் நிலையங்களை உருவாக்குதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துணர்வு அளித்தல், மீனவர் மேம்பாட்டு முகவரமைப்புகளை நிறுவி அவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் மற்றும் 402 சிற்றூர்களில் வாழும் சுமார் 4,00,000 மீனவருக்கு நலத் திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் மீனள இயக்குநரமைப்பு நாட்டம் செலுத்துகிறது.

2.2. நிருவாக அமைப்பு முறையைச் சீரமைக்கவும் அதன் பணிகளை முனைப்பாகச் செயலாற்றவும் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு துணை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் புதிய மண்டலம் அமைக்கப்படுகிறது. தற்பொழுது நாகப்பட்டினத் துணை இயக்குநரின் ஆட்சி வரம்பு மதுரை மாவட்டம் வரை பரந்துள்ளது. தூத்துக்குடி துணை இயக்குநர் ஆட்சி வரம்பின்கீழ் இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் உள்ளன. அதிகாரத்துக்குட்பட்ட பகுதி விரிவாக இருப்பதோடு கடற்கரை மாவட்டங்களில் பணிகள் அதிகமாகவும் இருப்பதால் இவ்விரு மண்டலங்களின் ஆட்சி வரம்பை மீண்டும் வரையறுக்க வேண்டியுள்ளது. இவ்வடிப்படையில், மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களின் பணிகளை கவனிப்பதற்காக மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலத் துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தப் படவுள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களின் பணிகளை நாகப்பட்டினத்திலுள்ள துணை

இயக்குநர் கவனிப்பார். இந்த ஏற்பாட்டின்படி, தூத்துக்குடியிலுள்ள துணை இயக்குநர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்குப் பொறுப்பு வகிப்பார்.

2.3. தற்போது ஆராய்ச்சிப்பணிகளுக்குப் பொறுப்பு வகிப்பவரான பவானிசாகரிலுள்ள உதவி இயக்குநர், கோயம்புத்தூர், பெரியார், மாவட்டங்களின் வட்டாரப் பணிகளைக் கவனித்து வருகிறார். ஆராய்ச்சிப் பணிகளில் அவர் முழுமையாக ஈடுபட வகை செய்யும் பொருட்டு கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்களில் வட்டாரப் பணிகளை கவனிப்பதற்காக உதவி இயக்குநர் (மண்டலம்) பதவி ஒன்று தனியாக ஏற்படுத்தப்படுகிறது. இதன் தலைமையிடம் ஈரோட்டில் அமைக்கப்படும்.

மேம்பாட்டுக்கான உத்திகள் :

3. கடல்மீன் மீன்வளம் கழிமுகப்பகுதி மீன்வளம் மற்றும் உள்நாட்டு மீன்வளம் என மீனளப் பணிகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பிரிவிற்கும், அதற்கேற்ற திறமைமிக்க அணுகுமுறையும் செயல்முறையும் இருக்க வேண்டியது அவசியம் தொடக்கத்தில் கூறியுள்ளது போல் இயற்கை அன்னை தமிழ்நாட்டுக்கு வாரி வழங்கியிருக்கும் இயற்கை வளத்தையும் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது. அந்தந்தப் பகுதிகளின், புவியியல் அமைப்பிற்கேற்ப பொருத்தமான தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தும் முக்கிய அம்சம் இத்துறைகளிலும் உண்டு. தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்தி அதன் மூலம் ஏராளமான மீன்களைப் பிடித்துக் கரைசேர்ப்பதே கடல் மீனளத்தின் குறிக்கோளாகும், மீன் குஞ்சுகளைப் பெருமளவிற்கு வளர்ப்பதன் மூலம் உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க முடியும். இதன்மூலம் உள்நாட்டு நீர்நிலைகளில் அதிகமாக மீன்பிடிக்க இயலும். இதைப்போலவே இயற்கையான நிலையில் இறால் மீன் வகைகளை ஓரளவுக்கு மேல் பெருக்குவது கடினம். இந்த இடர்ப்பாட்டை களைய உப்பங்கழிகளில் இறால், பால்செண்டை, மடவை போன்ற மீன் இனங்களை ஏற்படுத்த வேண்டும்.

திட்டப்பணிகள் :

4.1. ஆறாம் அய்ந்தாண்டுத்திட்டத்தில் மீனளத் துறைக்காக ரூ. 24 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் வேளாண்மை நிதி உதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுவதோடு வங்கிகளின் உதவியையும் பெற்று தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பொருளாதார வகையில் தனித்தியங்க வல்ல பணிகள் பலவற்றை மேற்கொள்வதனால். இத்துறையில் முதலீடு இன்னும் அதிகமாகவே இருக்கும் ஆண்டுதோறும் மீன்பிடிப்பின் அளவு இந்த அய்ந்து ஆண்டுகளில்



1980–81-ல் இருந்த 3.92 இலட்சம் டன்னிலிருந்து 1984–85-ல் 5.1 இலட்சம் டன்னாக அதாவது 30 விழுக்காடு உயரும். இது ஒவ்வொரு ஆண்டும் 5.5 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டுகிறது. 1984–85இல் ஆண்டொன்றிற்கு 3.00 இலட்சம் டன் மீன் கடலிருந்து பிடிக்கப்படும். உள்நாட்டு நிர்நிலைகளிலிருந்து 2.10 இலட்சம் டன் மீன் பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தில் கடல் மீன் பிடிப்பில் 70 சதவீதம் நாட்டுப்படகுகள் வைத்துள்ள சிறு மீனவர்கள் மூலம் பிடிக்கப்படுகிறது. தனியாருக்குச் சொந்தமான பெரிய விசைப் படகுகளைப் பயன்படுத்துவதால் வசதி படைத்தவர்களே பயனடைய முடியும். எனவே நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தும் சிறு மீனவர்களின் மீன்பிடிப்புத் திறனை தொழில் நுட்பத்தின் உதவியுடன் அதிகரிக்கச் செய்யக் கருதப்பட்டுள்ளது. கட்டுமரங்களுக்குப் பதிலாக உட்புறத்தில் அல்லது வெளிப்புறத்தில் மோட்டார்கள் பொருத்தப்பட்ட ஒட்டுப் பலகையிலான அல்லது கண்ணாடி இழையிலான படகுகளைப் படிப்படியாகப் பயன்படுத்துவது உப்பங் கழிகளில் மீன்வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பது பிடித்த மீன்களைக் கரைசேர்க்க வசதிகள் செய்து கொடுப்பது கரையோர மீன்பிடி கிராமங்களில் நவீன அடிப்படை வசதிகள் சேய்து கொடுப்பது ஆகியவை இத்திட்டப்பணியில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு பணித் திட்டங்களாகும். மீனவர் மேம்பாட்டு முகவர் அமைப்புகள். மீன்குஞ்சு பொறிக்கச் செய்யும் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதன் மூலம் உள்நாட்டு நீர் நிலைகளில் மின்வளத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.2. ஆறாம் அய்ந்தாண்டுத் திட்டக்கால அளவில் முதல் இரண்டாண்டுகளில் மீனளத் துறைக்கு முதலீடு செய்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| ஆண்டு. | முதலீடு (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1980–81 .. .. .. .. | 3.41 |
| 1981–82 .. .. .. .. | 4.53 (திருத்திய மதிப்பீடு) |

1982–83 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 3.79 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இந்த (1982–83) ஆண்டில் 2.60 இலட்சம் டன் கடல் மீன் 1.85 இலட்சம் டன் உள்நாட்டு மீன் ஆக மொத்தம் 4.45 இலட்சம் டன் மீன் பிடிக்கப்படும்.

கடல் மீனளம்

5.1. கீழ்க்காணும் பணித்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் கடல் மீன்வளத்தை நிச்சயமாக பெருக்க இயலும்.

(1) கண்ணாடியிழை கொண்டு வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக் படகுகள் வழங்குவது;

(2) கட்டுமரங்களில் பொருத்துவதற்கு வெளிப்புறம், உட்புறம் பொருத்தும் மோட்டார்கள் வழங்குவது,

(3) நைலான் நூல் வழங்குவது,

(4) பிடித்த மீன்களைக் கரை சேர்க்கவும், படகுகளையும் நிறுத்தி வைக்கவும் வசதி செய்து கொடுத்தல் ;

(5) மீன்பிடி தொழிலைப் பல்திறப்படுத்தல் ;

(6) கடலோர மீன்பிடிக் கிராமங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் ;

(7) அண்மைக் கடல் அளவாய்வு ;

(8) வழிகாட்டி விளக்குகள் அமைப்பது.

படகுகளும் வலைகளும் வழங்குதல்

5·2. ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் 2,000 கட்டுமரங்கள், நாட்டுப் படகுகளுக்குப் பதிலாக புதிய படகுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருபது மோட்டார்களும், 40 கண்ணாடி இழை கொண்டு வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக் படகுகளும் 60 மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இது குறித்த நிதி உதவியில் 20 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. எழுபத்தய்ந்து சதவீதம், வேளாண்மை நிதியுதவி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ் வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் மீனவர், படகின் விலையான ரூ. 60,000-ல் அய்ந்து சதவீதம் மட்டுமே உடனடியாகப் பணமாகச் செலுத்த வேண்டும். இதற்கென, 1981–82ல் ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நாட்டுப் படகுகளில் மீன் பிடிப்பதற்காக நைலான் மீன்வலை பின்னல்கள் வழங்குவதற்காக இதே அளவு தொகை தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982–83ல் படகுகள், வலை தயாரிப்புப் பொருள் ஆகியவற்றை வழங்க ஒதுக்கும் மொத்த நிதியாக 18 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுளளது. இதனைக்கொண்டு கண்ணாடியிழை கொண்டு வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக் படகுகள் 50-ம் வெளிப்புற மோட்டார்கள் 20-ம் போதிய அளவுக்கு நைலான் வலைகளும் வழங்கப்படும். ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்காக மீன்வளப் பாதுகாப்புடன் மீனவர் வாங்கும் நைலான் வலைகள் விலையில் 25 சதவீத அளவுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டமொன்றுக்கு 1979, ஆகஸ்ட் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது.



பிடிக்கும் மீன்களைக் கரை சேர்க்கவும் கலன்களை நிறுத்தி வைக்கவும் வசதி செய்து கொடுத்தல் :

5·3. நம்முடைய மாநிலம் மீனவர் அதிகமாக வாழும் மாநிலமாகும். ஆழ்கடல் சென்று மீன்பிடிக்கும் துணிவும், கடுமையான உழைப்பும் நமது மீனவர்களிடம் இருப்பதால்தான் கடலில் மீன்பிடிப்பதில் குறிப்பிடத்தக்க சாதனையை நாம் எய்தியுள்ளோம். எனினும், முக்கியமான இடங்களில் மீனைக் கரையிறக்கும் வசதிகள் போதிய அளவுக்குச் செய்து கொடுக்கப்பட்டால்தான் அவர்களுடைய ஆற்றலையும் திறமையையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்பிரச்சினையை உணர்ந்து, அரசு, மீன் பிடித் துறைமுகங்கள், தோணித் துறைகள் ஆகியவற்றை அமைக்கும் திட்டங்களை மத்திய அரசின் உதவியுடன் செயலாக்கி வருகிறது. சுமார் 11 கோடி ரூபாய் செலவில் பெரிய மீன்பிடித்துறைமுகமொன்று சென்னையில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முன்னேற்றம் தொடக்க காலத்தில் சற்று மந்தமாக இருந்தாலும் பின்னர், சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் ஒருமித்த முயற்சி காரணமாகவும், ஒவ்வொரு நிலையிலும் தமிழக அரசு உதவி புரிந்தாலும். நன்றாகவே உள்ளது. இத்திட்டம் முடிவுறும் நிலையில் உள்ளது. கட்டிடப் பணிகள் யாவும் பெரும் பகுதி முடிவுற்றுள்ளன. பணிவசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. படகுகள், ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகள் இவ்வசதிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. 500 இயந்திரப் படகுகளும் 50 ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகளும் மீனைக் கரை சேர்ப்பதற்குரிய வசதியும், படகுகளை நிறுத்தி வைப்பதற்குரிய வசதியும் இத்துறைமுகம் கொண்டுள்ளது. நவீன வசதிகளை ஏற்படுத்துவதில் சிறு மீனவர்கள் பாதிக்கப்படா வண்ணம் கவனமாகப் பார்த்துக் கொள்ளப்படும், கட்டுமரங்களுக்குக் கூட போதிய வசதிகள் உள்ளன என்பது சென்னை மீன் பிடித்துறைமுகத்தின் சிறப்புக் கூறாகும். இவற்றோடு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரையில் ரூ. 14 இலட்சம் செலவில் கலன்களை கரை சேர்க்கும் வசதியுடன் கூடிய தோணித்துறை அமைக்கப்பட்டு வருகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் என்னுமிடத்தில் 2·34 கோடி ரூபாய் செலவில், பெரிய மீன்பிடித் துறைமுகமொன்றை அமைப்பதற்குரிய திட்டத்திற்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்

கம் என்னுமிடத்தில் ரூ. 77 இலட்சம் செலவில் மற்றுமொரு மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கும் அண்மையில் மத்திய அரசு ஒப்புதம் அளித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையாறு என்னுமிடத்தில் ரூ. 60 இலட்சம் செலவிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டி என்னுமிடத்தில் ரூ. 90·50 இலட்சம் செலவிலும் தோணித்துறைகள் அமைப்பதற்குரிய செயற்குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டைப்பட்டிணம் என்னுமிடத்தில் 18·5 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் தோணித்துறை கட்டுவதற்காக அண்மையில் மத்திய அரசுக்கு செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளோம்.

5·4. சென்னை, மீன்பிடித்துறைமுகத்திற்கு மத்திய அரசு நிதி உதவியளிக்கும் பிற திட்டங்களுக்காகும் செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்கும். தோணிகளைக் கரை சேர்த்து நிறுத்தி வைக்கும் வசதிகளுக்குரிய திட்டங்களைத் தயாரிப்பதில் பெங்களூரிலுள்ள முதலீட்டு முன்னாய்வு இயக்ககம் இத்திட்டங்களுக்கென்று முதலீடு செய்யுமுன்னரே ஆய்வு நடத்தி திட்டங்களைக் தயாரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது என்பது மன நிறைவளிக்கிறது. பெங்களூரிலுள்ள இந்த அமைப்பிற்கும், மீனளத்துறை இயக்குநர் அமைப்பிற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது.

மீன்பிடித்தலைப் பலதிறப்படுத்தல்-இறால் மீன்பண்ணைகள் :

6. இறால் மீன் நமது கடற்பகுதியில் அமைந்துள்ள தங்கச் சுரங்கம் போன்றதாகும். என்பதும், பெருமளவிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதாகும் என்பதும், மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாவரும் அறிந்ததே. இருப்பினும், இயற்கைச் சூழ்நிலையில் இறால் மீன் கிடைப்பதை ஓரளவுக்கு மேல் பெருக்குவது கடினம். கடலில் காணப்படும் இறால் மீன்கள் இயன்ற வரையில் அதிக அளவிற்குப் பிடிக்கப்பட்டு வருகின்றன என்றே கூறலாம். ஆகவே இறால் மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமாயின் நாம்புதிய வழி முறைகளையும், தொழில் நுட்ப உத்திகளையும் கையாள வேண்டும். ''உவர்நீர் இறால் பண்ணை'' ( Backish Water Prawn Farming ) அமைப்பதென்று, முக்கியமாக இறால் மீன் குஞ்சுகளைப் பிடிப்பது எளிதாகவுள்ள கழிமுகங்களில், இப்பண்ணையை அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. சென்னையில் சாந்தோமிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம், பரங்கிப்பேட்டை, செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காடு ஆகிய இடங்களிலும் சிறு அளவில் இறால் மீன் வளர்ப்புப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றதை மதிப்பிற்



குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். மத்திய அரசு நிதியுதவியுடன் இயங்கும் திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கிள்ளை உப்பங்கழியில் ரூ. 11·82 இலட்சம் செலவில் 'உவர்நீர் இறால் பண்ணை' ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. முக்கியமாக இதற்கென்றே அமைக்கப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அதிராமபட்டினத்தில், அய்ம்பது ஹெக்டேர் பரப்பில் இறால் மீன் பண்ணைகள் உருவாக்கபட்டு வருகின்றன. உவர் நீர் இறால் மீன் விளக்க உற்பத்தி பண்ணைகள் பத்து, செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பிற பண்ணைகள் விரைவில் அமைக்கப்பட்டு முடிக்கப்படும். இறால் மீன் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியின் முக்கிய நடவடிக்கையாக 300 ஹெக்டர் பரப்பில், ரூ. 2·63 கோடி செலவில் உவர்நீர்இறால் மீன் பண்ணை அமைப்பதற்கான திட்டமொன்றை அண்மையில் மத்திய அரசுக்கு நாம் அனுப்பியுள்ளோம். இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் உதவியாக ரூ. 1·13 கோடி பெறப்படும். மாநில அரசும் இதே அளவு செலவை மேற்கொள்ளும். எஞ்சிய தேவைக்கான தொகை வங்கிகளின் மூலம் பெறப்படும். சிறிய அளவிலான உவர்நீர் இறால் மீன் பண்ணைகளைப் பராமரிப்பதில் நமக்குக் கிடைத்த அனுபவம், இப்பெருந்திட்டத்தைச் செலயலாக்குவதற்குப் பேருதவியாக இருக்கும். இத்திட்டம், தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாகச் செயலாக்கப்படும்.

அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் :

7, மீனள வளர்ச்சித் திட்டம், மீனவர்கள் நலனை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு உள்நாட்டு மீன் வகைகளைக் கொள்முதல் செய்து அவற்றைக் கொண்டு செல்லுதல், பதப்படுத்தும் வசதிகள், பணி வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தல், அங்காடிகளைக் கட்டுதல் முதலியவற்றிற்கான அடிப்படை வசதிகள் போதிய அளவில் தேவைப்படுகின்றன என்பதை உணர்ந்து, முக்கியமான இடங்களில் இவ்வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வசதிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பழையாறில் ரூ. 28 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கத்தில் ரூ. 24 இலட்சம் செலவிலும், தொண்டியில் ரூ, 5·6 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. கரைசேரும் மீனைத் துப்புரவான முறையில் கையாள வசதி செய்யும் பொருட்டு, மீன் இறக்கு மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் கொச்சியிலுள்ள கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சிக் கழக உதவியுடன் செயலாக்கப்பட்டு வருகிறது. மீனவர் கிராமங்களை மீன் உட்கொள்ளப்படும் அல்லது சந்தை உள்ள இடங்களுடன் இணைக்கும் வகையில் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. 1979–80 ஆம்

ஆண்டிலிருந்து ரூ. 1·30 கோடி மதிப்புள்ள 52 சாலைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக, 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் நிதியொதுக்கப்படு கிறது. மேலும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் தேசிய கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் மீனவர் கிராமங் களை இணைத்து சாலைகளை அமைக்க, மாவட்ட ஆட்சியர் கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் மீனவர் கள் கடலில் மூழ்கியிருக்கும் பாறைகளினின்றும் விலகி நன் முறையில் கரையை அடைய அரசு, மீனவர் கிராமங்களில் வழிகாட்டி விளக்குகளை அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் அத்தகைய ஒன்பது விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் மேலும் 10 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் 11 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக் கப்படும்.

சிறப்பு நடவடிக்கைகள் :

8. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், மீன் இறால் ஆகிய வற்றைப் பிடிப்பதில் சிறப்பு வகை நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது. ‘தஞ்சை’ ‘நெல்லை’ என்னும் பெயர்களைக் கொண்ட மெக்சிகன் மீன்பிடி விசைப்படகுகளைத் திறம்படப் பயன்படுத்தியதால் நல்ல பலன் கிடைத்து வருகிறது. இவ்விரு விசைப்படகுகளை விசாகப்பட்டினம் கடற்கரைக்கு அப்பால் கடலில் மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தியதால் 1981ஆம் ஆண்டு சூன் திங்களில் முடிந்த ஆண்டில் 92·65 டன் இறால் கிடைக்கப்பெற்றது. இதனால் கிடைத்த மொத்த வருமானம் 43·46 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் பயனாக ஏற்பட்ட நிகர இலாபம் 9·27 இலட்சம் ரூபாய் ஆகும். இது 1979-80 ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன் அளவில் 50 சதவீதம் அதிகரித் துள்ளது என்பதையும் அந்த ஆண்டில் கிடைத்த வருவாயை விட 38 சதவீதமும். ஈட்டப்பட்ட இலாபத்தை விட 73 சதவீதமும் அதிகம் என்பதையும் காட்டுகிறது. நடப்பு ஆண்டில் (1981-82) முதல் ஆறு மாதங்களில் (சூலை திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை) இவ்விரு விசைப் படகுகள் மூலம் 56·03 டன் இறால் மீன் பிடிக்கப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபாய் 33·92 இலட்சம் ஆகும். நிகர இலாபம் ரூ. 14·10 இலட்சம். மங்களூருக்கு அப்பால் மேற்குக் கடலில் 5 சுருக்கிழுப்பு வலைகளைக் கொண்ட விசைப் படகுகள் மீன் பிடிக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. இப்பணி. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கும். கருநாடக மாநில மீன் வளர்ச்சிக் கழகத்திற்கும் இடையே ஏற்பட்ட இரு நிறுவனங் களுக்கும் நன்மை பயக்கக்கூடிய தோர் உடன்பாட்டின் பேரில்





மேற்கொள்ளப்பட்டு வருகிறதும், ஆழ் கடலில் சென்று மீன் பிடிப்பதற்காக மேற்கொண்டும் மீன் பிடி விசைப் படகுகளை வாங்கக் கருதப்பட்டுள்ளது. கன்னியாகுமரியிலிருந்து சுமார் 50 கி. மீ. தூரத்திலுள்ள வேட்ச் பேங்க் (Wadge Bank) என்ற மீன் வளம் செறிந்த இடத்தில் மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் படும். இத்திட்டமும் முன்னர் கூறப்பட்ட இடங்கள் தவிர ஏனைய உப்பங்கழிகளில் இறால் வளர்க்கும் பண்ணைகளை அமைக்கும் திட்டமும் சேர்ந்த ஒருங்கிணைந்ததோர் திட்ட மாகும்.

விற்பனை :

9. மீன்களைச் சில்லறையாக விற்பனை செய்வதற்குரிய வசதிகளைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் விரைவாக விரிவுபடுத்தியுள்ளது. தற்போது சென்னை மாநகர். அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 34 விற்பனை நிலையங்களும், மதுரை யில் 11 விற்பனை நிலையங்களும் பெரியார் மாவட்டத்தில் 4 விற்பனை நிலையங்களும் கோயம்பத்தூரில் 6 விற்பனை நிலையங்களும் உள்ளன. 1982-83-ஆம் ஆண்டில் மேலும் 50 நிலையங்கள் அமைக்கப்படும். மேலும் 9 இடங்கள்மற்றும் அரசு பொருட்காட்சிகளிலும் மீன் உணவு விற்பனை செய்யப் படுகின்றது. இந்த சிற்றுண்டி விடுதிகளின் முன் திரளான கூட்டம் எப்போதும் நிரம்பி வழிவதிலிருந்து, மீன் உணவு நிலையங்கள் மக்களிடையே பிரபலமடைந்து வருகின்றன என்பதற்குப் போதிய சான்றாகும் என்பதை அறியும் போது, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்வர் என்பது உறுதி. இவ் வசதிகள் விரிவாக்கப்பட்டு, சிற்றுண்டி இயலூர்திகூட ஏற்படுத் தப்படும்

உள்நாட்டு மீனளம் :

10. உள் நாட்டு மீன் வளத்தைப் பயன்படுத்த நிறைய வாய்ப்பு உள்ளது. இம்மாநிலத்தில் மீன் முட்டைகளை அதிக அளவிற்கு உற்பத்தி செய்வதன்மூலம் உள்நாட்டு மீனள வளர்ச் சிக்கு உறுதி செய்யப்படும். இம்மாநிலத்தில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகள் அனைத்திலும் வளர்ப்பதற்காக ஆண்டு தோறும் சுமார் 350 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது 60 மில்லியன் மீன் குஞ்சுகள் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றன. இவற்றில் 40 மில்லியன் மீன் குஞ்சுகள் ஆற்று நீர் வாயில்களிலிருந்தும். 20 மில்லியன் மீன் குஞ்சுகள் தூண்டுதல் முறையில் குஞ்சு பொரிப்பு வாயிலாகவும் சேகரிக்கப்படுகின்றன. இயற்கை வாயில்களி

லிருந்து மீன் குஞ்சுகளை அதிக அளவிற்கு சேகரிப்பதற்குரிய வாய்ப்பு குறைவாக உள்ளதாலும், நல்ல இன மீன் வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியமாக உள்ளதாலும் தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு பொரிப்பு வாயிலாக மீன் முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய பெரும் திட்டம் ஒன்றை இந்த அரசு தொடங்கியுள்ளது. இப்போதுள்ள 17 மீன் குஞ்சு பொரிப்பு நிலையங்களில் இயங்கிவரும் தூண்டுதல் இனப் பெருக்க வசதிகள் விரிவாக்கப்படும். மீன் உற்பத்தி தொடர்பான சிறப்புத் திட்டங்களின்படி, புதிய நிலையங்கள் நிறுவப்படும். இதுவரையில், 120 இலட்சம் ரூபாய் செலவில், 12 எக்டேர் பரப்பில் மீன் பண்ணை அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மீன் பண்ணைத் திட்டம். 1982-83-ஆம் ஆண்யில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் விளைவாக, மீன் குஞ்சுகள் உற்பத்தி சுமார் 50 மில்லியன் அளவுக்கு அதிகரிக்கும், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குவதில் இத்திட்டம் மிகப் பெரிய இடத்தை வகிக்கும். 1982—83 இல் இதற்காக ரூபாய் 23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தூண்டுதல் இனப் பெருக்கம் செய்யும் மீன் குஞ்சுகள் உற்பத்தி வாயிலாக அதிக அளவான நன்மையைப் பெற வேண்டுமெனில் இந்த மீன் குஞ்சுகளை நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களிலும் விரைவில் கொண்டு விடுவதற்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, 1982—83ஆம் ஆண்டில், 7 நிலையங்களுக்கு ஸ்டாண்டர்டு 20 ஊர்திகள் வழங்கப்படும். இதற்காக. ரூ. 6·36 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நீர்த் தேக்கம் குறித்த நிருவாகம் :

11. மீன்வளத்துறையினரால் தீவிர மீன் வளர்ப்புத் திட்டத்தின்படி மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் முக்கிய பாசன ஏரிகளில் மீன் வளங்களும் விரிவாக்கப்படும். பெரியார் மாவட்டத்திலுள்ள குண்டேரிப் பள்ளம். வறட்டுப் பள்ளம் ஆகிய நீர்ப் பரப்புகளில் மீன் வளர்ப்பு செய்முறைகள் உருவாக்குவதும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். 1982—83-ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் பாசன ஏரிகளிலும். தீவிர மின் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். 1981—82-ஆம் ஆண்டில் செங்கற்படடு மாவட்டத்தில், இத்திட்டம் தொடங்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பதற்கான வசதிகள் செம்மைப்படுத்தப்படும். இந்நோக்கத்திற்கென 1982—83-ஆம் ஆண்டில் ரூ. 6·75 இலட்சம் செலவில், தெரிந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில். கண்ணாடி இழையிலான 25 சிறு பரிசல்கள் மற்றும் கண்ணாடி இழையிலான 15 படகுகளும் வழங்கப்படும்.



மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

12. உள்நாட்டு மீனள வளர்ச்சிக்கு ஆதாரமாக மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளன. உள்நாட்டு மீனள வளர்ச்சித் திட்டத்தின் உயிர்நாடி என்று மீன் பண்ணைகளைக் கருதினால், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை அதன் இரத்த நாளங்களாகக் கருதலாம். இத்திட்டத்தின்படி, குறிப்பிட்ட ஏரிகட்கான குத்தகைதாரர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நீண்ட கால மீன்பிடி குத்தகை வழங்கப்படுகின்றது. அவர்கள் வங்கிகளிடமிருந்து மூலதனம் பெற்றும் அரசிடமிருந்து இடுபொருள் உதவி பெற்றும். ஏரிகளைச் சீர்செய்து மீன்களை வளர்க்க இயலும் ெங்கிகள் கடனுதவியையும், அரசு உதவித் தொகையையும் வழங்குகின்றன. மொத்தத்தில். 1,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு உடைய 900 ஏரிகள் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டத்தின் கீழ் இதுவரை கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்சொன்ன முகமைகள் செய்த பணிகளின் காரணமாக, இந்த ஏரிகளில் ஹெக்டேர் ஒன்றுக்கு 250 கிலோ கிராமாக இருந்த சராசரி மீன் உற்பத்தி சுமார் 750 கி.கி. வரை அதிகரித்துள்ளது. தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தருமபுரி, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய 7மாவட்டங்களில் கிடைத்த ஆதரவு காரணமாக, ரூ. 26·51 இலட்சம் செலவில் மேலும் பெரியார், புதுக்கோட்டை, வட ஆர்க்காடு. கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் முகமைகள் அமைக்கப்படவுள்ளன. 1982—83-ஆம் ஆண்டில் இந்த இனத்தில் இருபது இலட்ச ரூபாய் செலவிடப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்முகமைகள் உள்நாட்டு மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும், நகர்ப் பகுதிகளில் மட்டுமல்லாது, கிராமங்களிலும் நியாயமான விலையில் மீன்கள் கிடைக்க இவ்வமைப்புகள் உறுதி செய்யும்.

மீனவர் நலம் :

13. 1. நமது நாட்டில் மீனவர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். நமது மீனவர்கள் துணிகர முயற்சியுடன் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் அனைவரின் நலத்திற்காக புரதச் சத்து மிகுந்த மீனை அவர்கள் வழங்குகின்றனர். எனவே, அரசு மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ளது. இந்நோக்கத்தை எய்துவதற்காகப் பல நலத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மீனவர்களை இடைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுவிப்பது முதன்மையான கடமையாகும். அவர்களுக்கு ஆதாயம் கிட்டும் அளவுக்கு அவர்களால் கரையிறக்கப்படும் மீன்களுக்கான விலை வரையறுக்கப்பட வேண்டும். அம்மீன்களை உடனடியாகவும். சீராகவும், நிலையான அடிப்படையிலும், கொள்முதல் செய்ய வேண்டும். இந்த அடிப்

படையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் கொள்முதல் நிலையங்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளன. நல்ல விலையும், நிலையான விற்பனை வசதியும் அளிப்பது அவர்களுடைய இரு முக்கிய பணிகளாகும். முன்பே குறிப்பிட்டபடி மீனவர் கிராமங்களுக்கு அடிப்படையான வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கு படிப்படியான முறையில் 9,931 வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தை அரசு செயல் படுத்தி வருகிறது. இவற்றின் 6.012 வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. ஒரு வீடு கட்டுவதற்காகும் செலவை ரூ. 6,000 லிருந்து ரூ. 9,840 ஆக உயர்த்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீனவருக்கு வீடு கட்டித் தருவதற்காக 1982—83-ல் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழிலில் ஈடுபட்டு இருக்கும்போது இறந்துவிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக மீனவர் நல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீனவச் சிறுவர்களுக்கு இதற்கென தனியாக அமைக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் நவீன முறையில் மீன் பிடித்தல் டீசல்இயந்திரங்களை இயக்குதல் பராமரித்தல் நீர்வழிப்போக்குவரத்து முதலியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. அவர்களுக்கு அன்றாடப் பிரச்னைகள் ஏதும் ஏழாமலிருப்பதற்கும் பயிற்சியில் உரிய கவனம் செலுத்துவதற்காகவும், பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு உதவித் தொகையாக ரூபாய் 75 அளிக்கப்படுகிறது. இதுவரை சுமார் 5,000 மீனவச் சிறுவர்கள், பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். பழைய படகுகளுக்குப் பதிலாகப் புதிய படகுகள் வழங்க அரசு கருதியுள்ளது. பல்திறப் படுத்திய மீன்பிடித் தொழிலில் பயிற்சி பெறுவதற்காகப் பல வகையான புதிய வலைகள் அவர்களுக்கு வழங்கவும் கருதியுள்ளது. 1982-83-ஆம் ஆண்டில் இதற்காகச் செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபாய் 7.4 இலட்சமாகும்.

13.2. 277 கடல் சார்ந்த மீனவ கூட்டுறவுகளும், 194 உள்நாட்டு மீனவ கூட்டுறவுகளும் தற்போது இயங்கி வருகின்றன. அவைகளது நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து, பணி தொடர்பான மூலதனத் தேவைகள் அவசியமாக இருக்கும் சமயத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1982-83-ஆம் ஆண்டில் 37 சங்கங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். பங்கு மூலதனத்திற்காகவும் படகுகள், வலைகள், மீன்பிடிப்பதற்குத் தேவைப்படும் ஏனைய சாதனங்களை வாங்குவதற்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியுதவி தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படுகிறது. பரவலாக அமைந்துள்ள தேசிய வானொலி நிலையங்கள் மூலம் பருவ நிலை பற்றிய அறிவிப்புகள் அவ்வப்போது உரிய நேரத்தில் ஒலிப்பரப்பபட்டு ஒவ்வொரு நாளும் மீனவர்கள் கால நிலை பற்றி அறிய முடிகிறது. இதற்கென 275 வானொலிப் பெட்டிகள் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



13.3. இராமேசுவரத்திற்கு அப்பால் ஆழ்கடலில் மீனவர்களுக்கு ஏற்படுகிற இன்னல்கள் பலவற்றைக்குறித்து ஏற்பட்டுள்ள கவலைகளை இவ்வரசு, மதிப்பிற்குரிய உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்கிறது. ஸ்ரீலங்கா கடல்நிர் எல்லையை மீறியதற்காக, அந்த நாட்டு அதிகாரிகள் நமது மீனவர்களைப் கைது செய்த பல நிகழ்ச்சிகள் உள்ளன. ஆழ்கடற்பரப்பில் மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், நமது கடற்பரப்பு எல்லையைத் தாண்டிவிடாமல் மீன்பிடிக்கும் வகையில் அவர்களுக்கு உரியக் காலத்தில் முன் எச்சரிக்கை செய்யவும் வங்காள விரிகுடாவில் கடற்கரை காவல் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளன. குறுகலாக அமைந்துள்ள வளைகுடாவில் மீனவர்கள் எளிதில் அறியுமாறு எல்லைவரையறை செய்வது கடினமாக உள்ளது. இவ்வகை சிக்கல்களுக்குத் தீர்வு காணும்போது இரு அரசுகளும் பரிவுவுணர்ச்சியோடு இரக்கத்தையும் காட்ட வேண்டியுள்ளது. மீனவர்களின் பிரச்சினைகளை வகைப்படுத்தி, அவர்களது இன்னல்களைக் குறைக்கவும் ஓர் அமைப்பினை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளன. இந்தியக் கடற்கரைக் காவல் படை மீனளத் துறை ஆகிய அமைப்புகளின் அதிகாரிகள் இணைந்த குழு ஒன்றைத் தலைமன்னாரிலும் இலங்கை அரசைச் சேர்ந்த அதேபோன்று குழு ஒன்றை இராமேசுவரம் அல்லது மண்டபத்திலும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி இவ்வரசு மத்திய அரசை அண்மையில் கோரியுள்ளது. இத்தகைய அமைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளை உடனடியாகக் கவனித்து தீர்வுக்காண இயலும், இது தொடர்பாக மத்திய அரசு உடனடி நடவடிக்கைகள் எடுக்கும் என்று நம்புகிறோம்.

சங்கு குளித்தல்—

14.1. 1-6-1981-லிருந்து தமிழ்நாடு கடற்கரையோரங்களில் மீன் துறை மூலம் சங்கு கிடைக்கும் கடல் பகுதிகளைக் கண்டறிவதில் அரசு ஈடுபட்டு வருகிறது. மாநில மீனளத் துறை சங்குக் குளித்தலை நடத்தி வருகிறது. அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலை வீதங்களில் மீனளத்துறை சங்குகளைக் கொள்முதல் செய்கிறது. சங்கு குளிப்பவர்களிடமிருந்து மீன் துறை சங்குகள் அனைத்தையும் கொள்முதல் செய்து கல்கத்தாவிலுள்ள மேற்கு வங்காளத் கைத்திறத்தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு விற்பனை செய்கிறது. அக்கழகம் வளையல்கள், மோதிரங்கள், ஏனைய அணிகலன்களை செய்கிறது. சங்கிலிருந்து தயாரிக்கப்படும் சங்கு வளையல்கள் போன்றவற்றை உள்ளூரில் அவ்வளவாக பயன்படுத்துவோரில்லை. சமீப காலத்தில் சங்குத் தொழிற்சாலைகள் தூத்துக்குடி, கீழக்கரை, சென்னை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,50,000 சங்குகளை வழங்க அரசு ஒப்புதலளித்துள்ளது. தமிழ்நாடு கைவினைப் பொருள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சங்குகளை விற்பனை செய்யக் கருதப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியும் ஆய்வும்—

**15.1.** செயல்முறை மற்றும் அடிப்படை ஆராய்ச்சியின் மூலம் திட்டங்களையும், திட்டப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தை எய்த முடியும். குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்துத் தீவிரமான ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் ஒன்றும் தூத்துக்குடியில் ஒன்றுமாக இரண்டு கடல் வாழ் உயிரின நிலையங்கள் சென்னை, பவானி சாகர் ஆகிய இடங்களில் நன்னீர் ஆராய்ச்சி நிலையங்கள், சென்னை, கோவளம், பழவேற்காடு ஆகிய இடங்களில் உவர்நீர் ஆராய்ச்சி நிலையங்கள், தூத்துக்குடியில் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் தேவையான ஆராய்ச்சி வசதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி, நிலையங்கள் செயல்படுவது குறித்து மாநில மீனள ஆராய்ச்சிக் குழு ஆண்டு தோறும் நுணுக்கமாக ஆய்வு செய்கிறது. இக்குழுவில் இந்திய அரசு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்கள், மீனள இயக்குநர் அலுவலக ஆராய்ச்சிப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். மாநிலத்தில் பெரும் பகுதிகளில் உவர்நீர் இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப்படும் என்று முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பண்ணைகளின் முழுத் தேவையையும் நிறைவு செய்ய இயற்கையாகக் கிடைக்கும் இறால் குஞ்சுகள் போதுமானதல்ல. எனவே, தூண்டுதல் போன்ற செயற்கை முறைகளில் இறால் முட்டைகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு இறால் குஞ்சு பொரிப்பு நிலையங்களை அமைப்பது அவசியமாகும். சென்னைக்கருகில் இறால் குஞ்சு பொரிப்பு முன்னோடி நிலையம் ஒன்று அமைக்கப்படும். இதற்கு ஆகும் மூலதனத்தில் பாதியை கடல் படு பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் ஏற்கும். இறால் முட்டைகளை வழங்கும் இறால் குஞ்சு பொரிப்பு நிலையம், 300 ஹெக்டேர் அளவில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை அமைக்கும் திட்டத்தின் முக்கியமான அங்கமாக இருக்கும். உள்நாட்டு நீர்நிலைகளில் இறால் வளர்ப்பதற்கு வாய்ப்பு உள்ளதென்று தொடக்க ஆய்விலிருந்து தெரிகிறது. இந்த வகையில் ஆராய்ச்சிப் பணி மும்முரப்படுத்தப்படும்.

15.2. அரபிக் கடலில் அளவாய்வு மேற் கொண்டதைப்போல வங்காளவிரிகுடாக் கடலில் மீனள வாயில்கள் குறித்து விரிவான அளவாய்வு ஒன்றை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதை அவசியமாக்கும் தருணம் வந்துவிட்டதும் இந்த ஆண்டில் இந்த ஆய்வைத் தொடங்குவதற்கு முடிவு செய்துள்ளதற்காக பம்பாயிலுள்ள சோதனை அடிப்படையிலான மீனள தொழிற் பிரிவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொ கிறோம். இந்த ஆய்வுக்கான கரையோரப் பணிகளுக்கு மாநில அரசு வகை செய்து தரும்.







15.3. வங்காள விரிகுடா திட்டத்திற்கு ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பு நிதியுதவி அளித்து உணவு-வேளாண்மை நிறுவனத்தால் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே உள்ள படகுகள், கியர்களை மேம்படுத்துவதன் மூலம் நவீன சிறந்த வகைப் படகுகள், கியர்களைக் குறைவான விலையில் வழங்கும் வழிமுறைகளைக் காண்பதன் மூலமும் சிறு மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இத்திட்டம், இந்தியா, வங்காள தேசம், ஸ்ரீலங்கா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் செயல்படுத்தப்படுகின்றது. இந்த நிறுவனத்தால் வரையப்பட்ட திட்டங்கள், செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவை குறித்த தகவல்களையும், புள்ளி விவரங்களையும் நமது மீனள இயக்குநரகம் பெறுவதன் மூலம் நல்ல பயன் ஏற்படுகிறது. இரட்டைப் படகு மீன்பிடித் திட்டம் நடுக்கடல் மீன்பிடித் திட்டம், மீனவப் பெண்டிருக்கான மீன்பிடித் திட்டம், கரையில் மீன்களை இறக்குவதற்குத் தகுந்த இடத்தைக் கண்டறிவதற்கான சோதனைத் திட்டம், கட்டுமரம் மேம்பாடு, மீன்பிடி கியர்கள் மேம்பாடு, உவர்நீர் மீன் வளர்ப்பு, நீர்வாழ் இன வளர்ப்பு போன்ற திட்டங்களை மீனளத் துறை இயக்குநர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடனும் உதவியுடனும் இந்த நிறுவனம் தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளது. வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை இழுவலை (Hig open Bo om trawl) மிகவும் பயனுள்ளதாக காணப்படுகிறது. மீனவர்களிடையே குறிப்பாக தூத்துக்குடி பகுதியில் இந்த வகை வலை மிகவும் பிரபலமடைந்துள்ளது. இறால், ஆதாரங்களைக் கண்டறிவதற்கும், அது குறித்தத் திட்டங்களை வகுக்க உதவுவதற்கும் வல்லுநர் ஒருவரது பணிகளை நமக்கு அளிக்க இந்த அமைப்பு முன்வந்துள்ளது. இது குறித்து நாம் மைய அரசை அணுகியிருக்கிறோம்.

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டம் :

16.1 மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சிறிய அளவில் மீன்பிடித் தொழில் புரியும் மீனவர்களுக்கு கூடுதல் நிதிஉதவி கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மீனவர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பின் அவர்களுக்கு 50 சதவீதம் மானியமும் தனிப்பட்ட மீனவர்களுக்கு 33 1/3 சதவீதம் மானியமும் இயந்திரப் படகுகள், கண்ணாடி இழைப் படகுகள், நாட்டுப் படகுகள் மற்றும் மீன்பிடி விற்பனை சாதனங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள கடற்கரை பகுதியில் உள்ள 25 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் அவற்றின் அங்கத்தினர்களுக்கும் 55 நாட்டுப்படகுகள், 100 கட்டுமரங்கள் 47 கண்ணாடி இழைப் படகுகள் மற்றும் போதிய மீன்

வலைகள், குளிர்ப்பதனப் பெட்டிகள், மீன் ஏற்றிச் செல்லும் பிடி வாகனங்கள் மற்றும் இன்னும் பிற சாதனங்கள் வழங்க ஏது வாக இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

16.2 மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மாநில அளவான இணைப்புக் குழுவின், அண்மையில் நடைபெற்ற கூட் டத்தில் ரூபாய் 80.54 இலட்சம் செலவில் இத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டச் செலவில் ரூபாய் 42.43 இலட்சம் மானியமாக வழங் கப்பட்டு ஏழு மாவட்டங்களில் உள்ள 25 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பயனடைவர்.

16.3. இதைத் தவிர மாநில அளவான இணைப்புக் குழு கீழ்க்கண்ட திட்டங்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது :—

(அ) மீன் விற்பனைக்காக அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 21.65 இலட்சம்.

(ஆ) மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, மீன் முட்டை உற்பத்திப் பண்ணைகள் அமைக்க ரூ. 4 இலட்சம்.

16.4. சிறிய அளவில் மீன்பிடி தொழில் செய்யும் மீனவர் களுக்கு குறிப்பாக மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் கள் பயனடைவதற்கு மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத் திலிருந்து பெருமளவில் நிதியுதவி பெற மீன்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

**தேசிய கடற் பூங்கா :**

17. தமிழ்நாடு கடற்கரை ஓர மன்னார் வளைகுடா பகுதி யில் தேசிய கடற்பூங்கா (Marine National Park) ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என் பதனை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடை



வார்கள். திருநெல்வேலி, இராமநாதபுரம் கடற்கரையோரப் பகுதிகளை ஒட்டி உள்ள 21 சிறிய தீவுகளை உள்ளடக்கி அப் பகுதிகளில் காணும் அபூர்வ தாவரங்கள் மற்றும் உயிரினங்களைப் பேணிப் பாதுகாக்க இப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இது ஓர் சிறந்த சுற்றுலா நிலையமாகவும் அமையும். அமைக்கப்பட உள்ள தேசிய கடற்பூங்காவின் முறையான வளர்ச்சிக்குத் திட்டம் ஒன்று வரைய இத்துறையில் அனுபவமிக்க அறிஞர்களைக் கொண்டு ஒரு நிபுணர்குழு அமைக்கப்பட உள்ளது. உலகின் பிற பகுதிகளில் அமைந்துள்ள இத்தகைய சிறந்த பூங்காக்களில் இதுவும் ஒன்றாக அமையும் என்று கூற ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரியில் மீன் காட்சியகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

முறைப்படுத்தும் நடவடிக்கைகள் :

18. தமிழ்நாட்டிலுள்ள மீனள ஆதாரங்களும் அடிப்படை வசதி அமைப்பும் இம்மாநிலத்தில் மீன்துறை திறம்படச் செயல் படுமென்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்திய அரசு கடலாண் மைச் சட்டத்தை இயற்றியுள்ளது. அது கடலில் 320 கிலோ மீட்டர் தொலைவுக்கு மீன், கடல்படு பொருட்கள் ஆகிய வற்றை பிடிக்கும் அல்லது எடுக்கும் உரிமையை நமது நாட்டிற்கு மட்டுமே ஏற்படுத்தியுள்ளது. இது, இத்துறை மேலும் வளர் வதற்கான வாய்ப்புக்களுக்கு வகை செய்கிறது. முந்தைய பத்தி களில் குறிப்பிட்டுள்ள மாநில அரசு திட்டங்கள், இச்சட்டத்தின் ஆதரவுடன் மீன் உற்பத்தியைப் பெருக்க வகை செய்கின்றன. எனினும், கடலில் மீனள ஆதாரங்களை பயன்படுத்திக் கொள் வதில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டுமென்று கூற விரும்பு கிறேன். நடப்புத் தேவைகளையும் வருங்கால மீன் வளர்ச்சி யையும் விவேகத்துடன் கருதிப் பார்த்து, அதற்கேற்றவாறு கடல் மீன் வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடலோரப் பகுதியில் 60 அடி ஆழம் வரையில் உள்ள மீன்களை பெருமளவு பிடித்து விட்டால் வருங் காலத்தில் அப்பகுதியில் மீன்கள் இல்லாமல் போய்விடும் நிலை ஏற்படும் என்பதை, சில மாநிலங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் வாயிலாக நாம் அறியலாம். எனவே, பொருத்தமானதொரு சட்டத்தின் மூலம் (இது அரசின் பரிசீலனையில் உள்ளது) கடலில் மீன் பிடிப்பதை முறைப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 12

19. வரவு-செலவு கண்ணோட்டம்.

| கணக்குத் தலைப்பு. | | வரவு கணக்குகள், 1980–81. | செலவுத் திட்ட மதிப்பீடு, 1981–82. | திருத்திய மதிப்பீடு, 1981–82. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1982–83. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 288 | சமூகப் பாதுகாப்பும் நலனும். | 100.95 | 100.00 | 100.00 | 100.00 |
| 259 | பொதுப்பணிகள். | 0.01 | 0.30 | 0.14 | 0.15 |
| 298 | கூட்டுறவு .. | 23.26 | 11.79 | 12.72 | 12.31 |
| 308 | பகுதி மேம்பாடு. | .. | 0.14 | 0.14 | 0.14 |
| 312 | மீனளம் .. | 274.34 | 329.01 | 354.24 | 366.33 |
| 483 | அரசு குடியிருப்பு கட்டிடங்கள். | .. | .. | 6.75 | 2.35 |
| 498 | கூட்டுறவு .. | 21.88 | 0.16 | 2.52 | 0.01 |
| 512 | மீனளம் .. | 54.33 | 67.26 | 150.30 | 57.98 |
| 537 | சாலைகளும் பாலங்களும். | 30.23 | 30.00 | 30.00 | 35.00 |
| 683 | வீட்டு வசதி .. | .. | 0.01 | 0.01 | 0.01 |
| 696 | சமூகப் பாதுகாப்பு நலன்கள். | 1.60 | 0.30 | 1.13 | 0.31 |
| 698 | கூட்டுறவு .. | 40.42 | 5.03 | 8.03 | 5.03 |
| 712 | மீனளம் .. | 98.25 | 8.08 | 73.67 | 11.83 |
| மொத்தம் | .. | 645.27 | 552.08 | 739.65 | 591.41 |



1982 மார்ச் 12]

மீனளத் துறையின் வருவாய்.

| கணக்குத் தலைப்பு. | | கணக்குகள் 1980–81. | திட்ட மதிப்பீடு 1981–82. | திருத்தப் பட்ட மதிப்பீடு 1981–82. | திட்ட மதிப்பீடு 1982–83 |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 112 | மீனளம் .. | 44.83 | 60.29 | 126.37 | 61.68 |

முடிவுரை :

20.1. தமிழ்நாடு ஏராளமான அளவுக்கு இயற்கை வளவாயில்களைக் கொண்டுள்ளது. இவை நீண்டகால திட்டத்தின் கீழ் பயன்படுத்த பட வேண்டும். மேலே விவரித்துள்ள அரசுத் திட்டங்களும், திட்ட பணிகளும் மீனள வாயில்களை உரிய அளவுக்கு பயன்படுத்துதல், மீனவர் நலன், நியாயமான விலையில் மக்களுக்குப் புரதச் சத்துள்ள உணவுப் பொருளை வழங்குதல் அந்நியச் செலாவணியைப் பெருக்குவதற்காக விலை மதிப்புள்ள இறால்களை பிடித்தல் போன்றவற்றை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இத்திட்டங்கள் யாவும் திறம்படச் செயல்படுத்தப்படும் வகையில் விளக்கமாக வகுக்கப்பட்டுள்ளன. இத்துறையில் பணிகளைத் தனிப்படுத்தி நிறைவேற்ற இயலாது. மீனள இயக்குநர் அலுவலகமும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் சோதனை அடிப்படையிலான மீனளத் திட்டம், கடல் படுபொருள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம், மத்திய உள்நாட்டு மீனள ஆராய்ச்சிக் கழகம், மத்திய கடல்நீர் மீன்வள ஆராய்ச்சிக் கழகம் மற்றும் கப்பல் துறை பொறியியல் மத்திய மீனவள நிலையம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களுடன் இடைவிடாது நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

20.2 பணியாளர் நலனைப் பேணி பாதுகாப்பது என்பது நிர்வாக அமைப்பின் இணைந்ததோர் கூறு ஆகும். பணியாளர் நலம் தனிவுடன் கவனிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது திட்டங்கள் தொலைநோக்குடன் வகுக்கப்பட்டு கடின உழைப்புடன் செயலாக்கப்படுவதால், வற்றாத வளத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கும் கடலும், தெளிந்த, குளிர்ந்த உள்நாட்டு நீர் நிலைகளும், நிறைந்த நீங்காத செல்வத்தை நமது மாநிலத்தின் மீது பொழியுமென்பதில் ஐயமில்லை.

[1982 மார்ச் 19

## இணைப்பு II

### கோரிக்கை எண் 32.

### பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1982-83 ஆம் ஆண்டுக்கான ரூ. 9,22,67,000 மானியக் கோரிக்கையை நான் இம் மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரின் நலனுக்காக தமிழக அரசு முந்தய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள் 1982-83 ம் ஆண்டில் எடுக்கவிருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைக் கீழே தருகிறேன்.

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்புவரை, பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் ஆணையாளரால் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன், ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 1 ஆம் நாளில் ஆதி திராவிடர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டு ஆதிதிராவிடர்கள், பழங்குடிக்ள், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர், ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவ ர ஆதிதிராவிட நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டுவரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974 ஆம் ஆண்டு, மே திங்கள் 17 ஆம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப்பார்வையில் பணி புரிகின்றனர்.



1982 மார்ச் 12]

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் 'மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு' ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுபோன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக்குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971-72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967-68 பிற்பட்டோர் வகுப்பின நலனுக்கான ரூ. 1,61,40,000 ஆக இருந்த மானியத் தொகை ஆண்டுதே றும் வளர்ந்து 1982–83-ல் ரூ. 9,22,67,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

5. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத்திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்த துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

6. (i) படிப்பு உதவித் தொகை.—பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால்தான் பிற்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கல்வி மேம்பாட்டிற்கு வழி வகை செய்வது மிக விவசியம். எனவே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும், கல்வி வசதிக்காக படிப்பு உதவித் தொகை மற்றும் உண்டி, உறையுள், வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது மேலும், இந்த இனத்து மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப்புத்தகங்கள் இலவசமாக கல்வித் துறை மூலம் அளிக்கப்படுகிறது. இந்த உதவித்தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 5,000-க்குள் இருக்க வேண்டும். இந்தப் புதிய வருமான வரம்பு 1981—82-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

உதவித் தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும் ஆனால், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்

பட்டை அனைத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன், 1948–49-இல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்தது.

பின்னர் இத்தொகை 1949–50-ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960–61-இல் 19,900 மாணவர்களுக்கு ரூபாய் 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டும்.

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

| ஆண்டு. (1) | | உயர்பள்ளிப் படிப்பு. (2) | கல்லூரிப் படிப்பு. (3) | ரூபாய் இலட்சங்களில். (4) |
|---|---|---|---|---|
| 1969–70 | .. | 41,361 | 2,828 | 21.16 |
| 1970–71 | .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971–72 | .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972–73 | .. | 67,772 | 4,638 | 34.29 |
| 1973–74 | .. | 65,876 | 4,338 | 34.38 |
| 1974–75 | .. | 60,661 | 4,673 | 35.66 |
| 1975–76 | .. | 61,845 | 3,964 | 29.64 |
| 1976–77 | .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977–78 | .. | 1,10,639 | 4,183 | 29.80 |
| 1978–79 | .. | 1,84,772* | 3,902 | 31.08 |
| 1979–80 | .. | 1,72,486 | 6,939 | 33.60 |
| 1980–81 | . | 1,65,829 | 6,398** | 35.16 |
| 1981–82 | .. | 1,40,104 | 4,620 | 23.06 |
| 1981 டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை. | | | | |

* இந்த ஆண்டில் 1977–78-ஆம் ஆண்டும் அடக்கம்.

** 1978–79-ஆம் ஆண்டு ஹையர் செகண்டரி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித் தொகைகள். அரசாணை பெறப்பட்ட பின்னர், 1979–80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால், 1979–80-இல் பயன்பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால், 1980–81 இல் அங்ஙனம் உதவித் தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன்பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.



பிற்பட்ட வகுப்பினர்.

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 1969–70 | .. | 42,515 | 48,050 | 160.89 |
| 1970–71 | .. | 74,842 | 59,407 | 201.20 |
| 1971–72 | .. | 92,694 | 76,281 | 290.50 |
| 1972–73 | .. | 1,04,486 | 87,652 | 324·65 |
| 1973–74 | .. | 94,032 | 80,025 | 318.86 |
| 1974–75 | .. | 88,897 | 86,494 | 331.68 |
| 1975–76 | .. | 90,620 | 71,433 | 317.08 |
| 1976–77 | .. | 80,372 | 78,741 | 295.00 |
| 1977–78 | .. | 1,07,501 | 74,469 | 291.53 |
| 1978–79 | .. | 1,02,490 | 66,341 | 264.88 |
| 1979–80 | .. | 1,02,672 | 1,03,911 | 261,61 |
| 1980–81 | .. | 1,07,073 | 94,456 | 275.49 |
| 1981–82 | .. | 71,532 | 66,485 | 177.63 |

(1981 டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.)

குறிப்பு :—(1) 1977–78ஆம் ஆண்டு முதல் பள்ளிக்கல்வி மாணவர்களுக்கான உதவித் தொகை பொருள் வடிவில் வழங்கப் பட்டது. அதாவது சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட பின் எஞ்சியுள்ள உதவித்தொகைக்கு பாடப் புத்தகங்களாக வழங்கப் படுகிறது.

(2) 1978–79ஆம் ஆண்டில் இவ்வுதவித் தொகையின் பயனடைந்தோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் உதவித் தொகை வழங்க +1, +2 வகுப்புகளைப் பாகுபடுத்த மைய அரசின் விளக்கமும், அரசு ஆணையும் காலம் கடந்துபெறப் பட்டவையாகும்.

(3) 1979–80ஆம் ஆண்டில் கல்லூரி வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்துள்ளது. ஆனால், செலவினத்தில் அதன் மாறுதல் காட்டப்படவில்லை. காரணம் முந்தைய ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்த புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு விடுதி வசதியுடனான உதவித் தொகை வழங்கப்பட்டது. ஏனெனில் ப்ளஸ் 1, மற்றும் ப்ளஸ் 2 மாணவர்கள் மேல்நிலைப்பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். மேலும், இப்பள்ளிகளில் அவைகளுக்கான சொந்த விடுதிகள் பொதுவாக நடத்தப்படுவதில்லை.

[1982 மார்ச் 12

(4) 1978—79ஆம் ஆண்டு ஹையர் செகண்டரி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித் தொகைகள் அரசாணை பெறப்பட்ட பின்னர் 1979—80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால் 1979—80-இல் பயன் பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால், 1980—81-ல் அங்ஙனம் எந்த படிப்பிற்கும் உதவித்தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. தகுதி பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்ற மரபினர் பட்டியலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும் படிப்பு உதவித் திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். மேலும், பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்ட்டன்ட்) பயிற்சிக்காக 1973—74 ஆம் ஆண்டு முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| வருடம். | | உதவித்தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1973—74 | .. | 32 |
| 1974—75 | .. | 40 |
| 1975—76 | .. | 47 |
| 1976—77 | .. | 72 |
| 1977—78 | .. | 68 |
| 1978—79 | .. | 67 |
| 1979—80 | .. | 65 |
| 1980—81 | .. | 61 |
| 1981—82 | .. | 28 |

1981, டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.

1982—83ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1982 மார்ச் 12]

(3) மேலே குறித்த 397 விடுதிகளில் 55 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு குறைந்த பட்ச மரச்சாமான்கள் (பர்னிச்சர்) வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 1981-82 ஆம் ஆண்டில் 6000 மாணவர்களுக்கு மரச்சாமான்கள் வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) 1982—83 ஆம் ஆண்டில் மேலும் நாற்பது பிற்பட்ட மாணவர்கள் விடுதிகளும், மூன்று குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் விடுதிகளும் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) இந்த 440 விடுதிகளையும் பராமரிக்க 1982—83 ம் ஆண்டில் ரூபாய் 2,66,68,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

1981—82 ஆம் ஆண்டு முதல் மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | சென்னை | வெளியூர் |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | ரூபாய் | ரூபாய் |
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் | .. | 95 | 80 |
| 2. தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | | 95 | 80 |
| 3. இதர விடுதிகள் | .. .. | 60 | 60 |

குறிப்பு : 1.— (1) அனைத்து மாணவியர்க்கும் மேற் குறித்த தொகையை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மேலும் ஒரு ரூபாய் அதிகம் அளிக்கப்படுகிறது. மேலும் சில்லரைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 2 வீதமும் ஒவ்வொரு மாணவியருக்கும் மாதம் ரூ. 1 வீதமும் அளிக்கப்படுகிறது.

அரசு உணவு இல்லங்களில் இதுநாள் வரை ரூ. 55 மற்றும் ரூ. 65 வீதம் மாதத்திற்கு சம்பளமும்; இலவச உணவும் பெற்று வந்த சமையற்காரர்கள் அனைவருக்கும் 1980—81 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 150—5—200—10—300 என்ற சம்பள விகிதத்தில் எல்லா இதர படிகளும் சேர்த்து சம்பளமும் விடுதிகள்திறந்திருக்கும் காலங்களில் இலவச உணவும் வழங்கவும் உத்தவிடப்பட்டுள்ளது.

(5) மாணவர் விடுதிக்கான கட்டிடங்கள்.—மாணவர் விடுதிக்கான கட்டிடங்கள் கட்டும் பொறுப்பை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 50 விடுதிகளில் 25 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் மூன்று மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்ட ரூ, 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் இவ்வேலைகளை முடிக்க ரூ. 9.05 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. (1) பள்ளிகள்.—குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல் பட்டு வரும் 276 பள்ளிகள் விபரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| மாவட்டங்கள். | மேல்நிலைப்பள்ளி | | உயர்நிலைப்பள்ளி | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | மாணவ மாணவியர் | எண்ணிக்கை | மாணவ/மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 வடாற்காடு .. | .. | .. | .. | .. |
| 2 தென்னாற்காடு .. | .. | .. | .. | .. |
| 3 மதுரை (ச.சீ.) .. | 2 | 1,357 | 8 | 1,609 |
| 4 இராமநாதபுரம் .. | .. | .. | .. | .. |
| 5 திருநெல்வேலி .. | .. | .. | .. | .. |
| 6 சேலம் .. .. | .. | .. | .. | .. |
| 7 பெரியார் .. | .. | .. | .. | .. |
| 8 கோவை .. | .. | .. | .. | .. |
| 9 தர்மபுரி .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 2 | 1,357 | 8 | 1,609 |



| மாவட்டங்கள் | நடுநிலைப்பள்ளிகள் | | ஆரம்பப்பள்ளிகள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர் | எண்ணிக்கை. | மாணவ மாணவியர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 வடாற்காடு .. | .. | .. | 4 | 473 |
| 2 தென்னாற்காடு .. | .. | .. | 1 | 310 |
| 3 மதுரை (க. சீ.) | 30 | 12.628 | 207 | 29,076 |
| 4 இராமநாதபுரம் | 1 | 390 | 5 | 1,041 |
| 5 திருநெல்வேலி .. | 1 | 322 | 9 | 1,482 |
| 6 சேலம் .. .. | 1 | 170 | 1 | 195 |
| 7 பெரியார் .. | 1 | 350 | 1 | 99 |
| 8 கோவை .. .. | .. | .. | 1 | 59 |
| 9 தர்மபுரி .. | 2 | 255 | 1 | 125 |
| மொத்தம் .. | 36 | 14,115 | 230 | 32,860 |

மொத்த பள்ளிகள் .. 276

மொத்த மாணவர்கள் .. 49,941

(2) மதுரை மாவட்டத்தில் கருக்கட்டான்பட்டி மற்றும் கே. பெருமாள் பட்டி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் ஓலைக் கூரையின் கீழ் மற்றும் வாடகைக் கட்டிடத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு ரூ. 7.50 இலட்சம் செலவில் கட்டிடங்கள் 1982–83 ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பொது வாழ்வில் எல்லா நிலைகளிலும் கலந்து கொள்ளவும் அவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கப் பெற வேண்டும் என்கிற கொள்கைக்கிணங்க தற்போது பிற்பட்ட வகுப்பினர் நல இயக்கம் நடத்தி வருகிற அனைத்துப் பள்ளிகளும் கல்வித் துறைக்கு மாற்றப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

[1982 மார்ச் 12

கல்விச் சுற்றுப் பயணம் : ஒவ்வொரு ஆண்டும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பொது அறிவு மற்றும் பாட அறிவு வளர்வதற்காக கல்விச் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்லப் படுகின்றனர்

பகுதி நேரப்போதனை : பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவ/ மாணவியர் உணவு இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவ மாணவியரின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்கள் சமூகத்தில் மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சரிசமமான அறிவினைப் பெறவும் எல்லா உயர்நிலைப்பள்ளி விடுதிகளிலும், பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

10. மதிய உணவு : குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல், இருப்பதற்குத் தூண்டுகோலாக இப்பள்ளிகளில் அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அம்மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு அளிக்கப்பட்டு வருகிறது இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது அரசு இதற்காக அதிகச் செலவினத்தைத் தவிர்க்க அம்மாணவர்களுக்கு (கேர்) நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும் படி உத்திரவிடப்பட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதற்கொண்டு திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி திங்கள் 1976 ஆம் ஆண்டு முதற்கொண்டும் நடைமுறையில் உள்ளது. 1982–83 ஆம் ஆண்டிற்கு ரூ. 10,90,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

11. உணவு மானியங்கள் : (1) தனிப்பட்ட நபர்களாலும், சமூக நல நிலையங்களாலும், நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 1955–56 ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956–57 ஆம் ஆண்டு முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப் புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து தேவையான இடங்களில் அரசே விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப் படாத தனியார் விடுதிகளையும் அரசே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்தி வருகின்றன. தற்பொழுது



1982 மார்ச் 12]

பிற்பட்டோர் நலத்துறை உதவி பெறும் தனியார் உணவு விடுதிகள் 48 உள்ளன. இவைகளுக்கு உணவுச் செலவுக்காக பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது, 1981–82 ஆம் ஆண்டு முதல் சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் உள்ள மாணவர்களுக்கு மாதம் 1-க்கு தலா ரூ. 45 ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு மாதம் 1-க்கு தலா ரூ. 40 ஆகவும் 1981–82 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென 1981–82 ஆம் ஆண்டுக்கு ரூ. 8.41 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளின் விவரம் கீழ் வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| சென்னை .. .. .. | 5 |
| செங்கல்பட்டு .. .. .. | 4 |
| வட ஆற்காடு .. .. .. | 2 |
| தென்னாற்காடு .. .. .. | 3 |
| தஞ்சாவூர் .. .. .. | 14 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 2 |
| மதுரை .. .. .. | 10 |
| இராமநாதபுரம் .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. .. | 3 |
| கோயம்புத்தூர் .. .. .. | 1 |
| பெரியார் .. .. .. | 1 |
| நீலகிரி .. .. .. | 1 |
| மொத்தம் .. | 48 |

உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,500லிருந்து ரூ. 5,000க்கு 1981–82-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டுக்கு ரூ. 10,27,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) கல்லூரிப்படிப்பு, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ்வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்ய விடுதிகளில் தங்கி படித்தாலும் கலவித்துறையினர் அல்லது ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும். அவர்களுககு படிப்பு உதவித்தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீரிசக்கப்பட்ட விடுதிகளின் விபரம் பின் வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டம். | | விடுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | .. | 4 |
| 2 | திருச்சிராப்பள்ளி | .. | 1 |
| | மொத்தம் | .. | 5 |

தற்போது புதிதாக எந்த தனியார் விடுதியையும், அங்கீகரிப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம்மாணவர்களுக்கு உணவு மற்றும் உறையுகு தொகை பத்தி 6(4)ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வழங்கப்படுகிறது.

(3) 1982–83-ல் திருச்சி மாவட்டம் தேவராயனேரியில் உள்ள நரிக்குறவர் காலனியில் உள்ள சமூக கூடத்தில் ஒரு சமையல் அறையும் உண்ணும் அறையும் கட்டப்பட உள்ளது. இதற்காகும் செலவு ரூ. 15,000.

12. புத்தகங்களும், எழுது பலகைகளும், அரசினர் நடத்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும், எழுது பலகைகளும், இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள 1969–70 ஆம் ஆண்டில் 7,600 பேர்கள், இதனால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் எழுது பலகை





களும் 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் அளிக்கப்படுகின்றன. இதனால 1981–82 ஆம் ஆண்டில் பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 48,584 ஆகும். 1982–83 ஆம் ஆண்டில் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50,000 ஆக உயரலாம்.

13. (1) சீருடைகள் வழங்குதல்.— மதுரை மாவட்டம் நீங்கலாக, இதர மாவட்டங்களில் உள்ள குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் முறை பள்ளி ஆரம்பித்தவுடன் அல்லது தீபாவளிக்கு முன்பாகவும், இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதல் முதலாக இவ்வாறு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969–70 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டது. இப்பொழுது இருமுறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டில் ரூ. 3,91,000-ம் 1973–74 ஆம் ஆண்டில் 8,06,000 ரூபாயும், 1974–75 ஆம் ஆண்டில் 6,58,000 ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 10,39,000 ரூபாயும், 1976–77 ஆம் ஆண்டில் 8,94,000 ரூபாயும், 1977–78 ஆம் ஆண்டில் 10,47,000 ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் 9,37,000 ரூபாயும், 1979–80 ஆம் ஆண்டில 9,08,000 ரூபாயும், 1980–81 ஆம் ஆண்டில் 14,25,000 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் நடைமுறையில் இருந்துவருவது போல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் 1981–82 ஆம் ஆண்டு முதல் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 20,86,000 ரூபாயும்., 1982–83 ஆம் ஆண்டில 21,06,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971–72 ஆம் ஆண்டு முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு மாணவர் உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் ஆண்டுதோறும் இரண்டு முறை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973–74 ஆம் ஆண்டில் 1,67,000 ரூபாயும், 1974–75 ஆம் ஆண்டில் 2,16,000 ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 2,38,000 ரூபாயும், 1976–77 ஆம் ஆண்டில் 2,98,000 ரூபாயும், 1977–78 ஆம் ஆண்டில்

[1982 மார்ச் 12

3,03,000 ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில 3,80,000 ரூபாயும், 1979–80 ஆம் ஆண்டில் 4,05,000 ரூபாயும், 1980–81 ஆம் ஆண்டில 5,33,000 ரூபாயும் செலவிடப்பட்டது. 1981–82-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 6,41,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் 7,04,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல்.— கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975–76-ம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டது. 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எட்டாவது மற்றும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் அடுத்த அதிக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியருக்கு முதல் மற்றும் 2-வது பரிசு வழங்க ரூ. 4,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பின் தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் தலா ரூ. 500 மதிப்பில் பரிசு வழங்கப் படுகின்றது. மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு :—

| | ரூபாய். |
|---|---|
| பள்ளி இறுதித் தேர்வு— முதற் பரிசு .. .. | 100.00 |
| இரண்டாவது பரிசு | 50.00 |
| எட்டாம் வகுப்பு— முதல் பரிசு .. .. | 50.00 |
| இரண்டாவது பரிசு | 10.00 |

14. ஆசிரியர்கட்கு வீடுகள் :—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1982-83-ம் ஆண்டில் 13 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1982 மார்ச் 12]

15. ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சிக்கூடம்.—1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப்பணி இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான நேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் நடந்த யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் கலந்துகொண்டு தேறிய மாணவர்கள் விவரங்கள் பின்வருமாறு—

| வரிசை எண். | ஆண்டு | சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை. | யு.பி.எஸ்.ஸி. தேர்விற்குச் சென்றவர்கள். | நேர்முகத் தேர்விற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். | நேர்முகத்தேர்விற்குப்பின் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். | ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். | மத்திய அரசுப் பணிகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 1971-72 | 12 | 8 | 3 | .. | .. | .. |
| 2 | 1972-73 | 57 | 34 | 6 | 1 | .. | 2 |
| 3 | 1973-74 | 46 | 33 | 4 | 1 | 1 | .. |
| 4 | 1974-75 | 55 | 46 | 8 | .. | 1 | 2 |
| 5 | 1975-76 | 60 | 52 | 3 | .. | 1 | .. |
| 6 | 1976-77 | 40 | 35 | 2 | 1 | .. | .. |
| 7 | 1977-78 | 42 | 38 | 1 | .. | .. | 1 |
| 8 | 1978-79 | 48 | 12 | 16 (12+4)* | 4 | .. | 1 |
| 9 | 1979-80 | 49 | *22 | *27 (22+5)* | 6 | .. | 2 |
| 10 | 1980-81 | *42+90 * | 8+4 * | 4+4 * | முடிவுகள் எதிர் பார்க்கப்படுகின்றன | | |

*வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

**துணைப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்டவர்கள்.

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சிபெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க் கண்டவாறு பதவிபெற்றுள்ளனர்.—

| | | |
|---|---|---|
| 1 | துணை ஆட்சியாளர்கள்— | 3 |
| 2 | இணை வணிகவரி அலுவலர்— | 1 |
| 3 | துணைப்பேராசிரியர்கள்— | 7 |
| 4 | ரிசர்வ் வங்கி பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அரசு உடைமை யாக்கப்பட்ட வங்கிகள்— (இளநிலை அலுவலர்) | 3 |
| 5 | வருமானவரி முதல் வகுப்பு அலுவலர்— | 1 |
| 6 | காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர்— | .. |
| 7 | மாவட்டக் கல்வி அலுவலர்— | .. |
| 8 | கல்வெட்டுக்கலை உதவி அலுவலர்— (கர்நாடக அரசு) | .. |
| 9 | எண்ணெய் மற்றும் இயற்கைவாயு கழகம். | .. |

சென்னையில் உள்ள இந்தப் பயிற்சி கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக மதுரை, திருநெல்வேலி, கோவை, திருச்சி ஆகிய ஒவ்வொரு நகரங்களிலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்கத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் துணைப் பயிற்சி நிலையங்கள் 1981 ஆம் ஆண்டில், மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் துவக்கப் பட்டன. போதிய மாணவர் இல்லாததால், திருநெல்வேலியில் துவக்கப்படவில்லை.

துணைபபயிற்சி நிலையங்களில் 1981 ஆம் ஆண்டு பயிற்சி பெற்றவர்களின் விபரங்கள் கீழ் வருமாறு :—

| | |
|---|---|
| கோயம்புத்தூர் .. .. .. | 29 |
| மதுரை .. .. .. | 28 |
| திருச்சி .. .. .. | 33 |
| | 90 |

1982 ஆம் ஆண்டில் கோவை, மதுரை, திருச்சி மற்றும் திருநெல் வேலி ஆகிய நான்கு நகரங்களிலும் துணைப் பயிற்சி நிலையங்கள் செயல்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்திய அரசின் தேர்வாணைக்குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப்



பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக் கும் 15 ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப் படுகிறது. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும், போக்கு வரத்துச் செலவுக்காகவும், மாதம் ரூ. 40 வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியில் பலன் பெற்றவர்கள் எண்ணிக்கை வருமாறு:—

| வரிசை எண். | அணி எண். | வருடம். | அனுமதிக்கப்பட்டவர்கள் | | தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | | | பிற்பட்டவர்கள். | தாழ்த்தப் பட்டவர்கள். | பிற்பட்டவர்கள். | தாழ்த்தப்பட்டவர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 1 | 1973-74 | 6 | 3 | .. | .. |
| 2 | 2 | 1974-75 | 15 | 7 | 2 | .. |
| 3 | 3 | 1975-76 | 15 | 6 | 1 | .. |
| 4 | 4 | 1976-77 | 14 | 2 | .. | .. |
| 5 | 5 | 1977-78 | 15 | 1 | 2 | .. |
| 6 | 6 | 1978-79 | 12 | 3 | 3 | .. |
| 7 | 7 | 1979-80 | 11 | 5 | .. | .. |
| 8 | 8 | 1980-81 | 5 | 1 | .. | .. |
| 9 | 9 | 1981-82 | 13 | 2 | .. | .. |

16. பொருளாதார வளர்ச்சி :—இத்திட்டத்தின் கீழ் முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்துவர தொழில் கருவிகள் இலவசமாக வழங் கப்படுகின்றன. இத்திட்டம் 1971-72 வரை வெளி மாவட்டங் களிலும், 1971-72 முதல் சென்னை உட்பட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகின்றன. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை.

| ஆண்டு. | பயன் அடைந்த நபர்கள். |
|---|---|
| 1969-70 | 1,542 |
| 1970-71 | 1,512 |
| 1971-72 | 1,633 |
| 1972-73 | 1,654 |
| 1973-74 | 4,081 |
| 1974-75 | 3,961 |
| 1975-76 | 3,506 |
| 1976-77 | 3,695 |
| 1977-78 | 4,095 |
| 1978-79 | 7,240 |
| 1979-80 | 8,000 |
| 1980-81 | 8,0[illegible] |

(2) 1981-82 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடு இத் திட்டத்தின்கீழ் ரூ. 19,42,000ம் 1982-83-ம் ஆண்டிற்கு ரூ. 19,42,000ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ. 165 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ரூ. 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன் பெற வசதியாக சலவைத் தொழிலாளர்களுக்கு மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூ. 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் பொருட்டு 1979-80-க்கு ரூ. 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூ. 100 ஆகும். 1981-82 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சேலம் தென் ஆற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டது. இது 1979-80 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, வடாற்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 38,000-ம் 1982-83-ம் ஆண்டிற்கு ரூ. 76,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சென்னை தவிர இதர எல்லா மாவட்டங்களுக்கும் 1982-83ஆம் ஆண்டிலிருந்து பயனடைவோர் எண்ணிக்கை 250லிருந்து 500ஆக உயர்த்தி விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) சலவைத் துறைகள் கட்டுதல்.—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச்செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித் தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 57 உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.



1980-81 ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிகளையும், இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(4) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணிமனைகள் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டம் செக்காணூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் 21-2-1981 வரை இருந்தன, தற்போது இவைகள் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்கள் நேரடி பராமரிப்பின்கீழ் கொணரப்பட்டுள்ளன. இவைகளில் பற்றவைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பயிற்சி கூடங்கள் நடத்தப்படுகின்றன:—

(1) தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக்கூடம் ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

(2) தையற்பயிற்சிக்கூடம், செக்காணூரணி, மதுரை மாவட்டம்.

(3) பிரம்பு மற்றும் நார்ப் பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும் 1978-79-ம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது—

கிருஷ்ணன்கோவில்—கன்னியாகுமரி மாவட்டம்

அஜீஸ்நகர் குடியிருப்பு—தென்னாற்காடு மாவட்டம்

கம்பம்—மதுரை மாவட்டம்

கடலாடி—இராமநாதபுரம் மாவட்டம்

தேவர்குளம்—திருநெல்வேலி மாவட்டம்

இப்பயிற்சிக் கூடங்களையும், பொது நோக்கு பொறியியல் பணிமனைகளையும், பராமரிப்பதற்காக ரூ. 5.79 இலட்சம் 1980-81ல் செலவிடப்பட்டது. 1981-82ல் திருத்திய மதிப்பீட்டில் ரு. 6.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83ல் இதற்காக ரூ. 6·73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. விவசாயம்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றுக்கு ரூ. 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1981-82க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 47 நபர்கள் பயனடைந்தனர். 1982-83 மதிப்பீட்டில் ரூ. 1,67,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

18. வீட்டு வசதி.—1956-57-ம் ஆண்டு முதல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூ. 1.200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300 மானியம் ரூ. 900 975-76 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்காக மொத்தத்



தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 2,025 மானியமாகவும் ரூ. 675 பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ, பயனடைவோர் பங்காகவும், இருந்தது. இத்தொகை 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 4,300 ஆக உயர்த்தப்பட்டது. இதில் மானியம் ரூ. 3,225 ஆகவும் பனயடைவோர் பங்கு ரூ. 1,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் 665 மற்றும் 302 வீடுகள் தாட்கோ நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. கட்டுமான தளவாடங்களின் விலைகள் மற்றும் கூலி உயர்வு காரணமாக ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட தொகையை ரூ. 4,300 லிருந்து மேலும் உயர்த்தும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

19. குழந்தைகள் காப்பகம்.—அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளை சரியாக பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் 1977-78ம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. 'கேர்,' நிறுவனத்தின் உதவியும் இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது' இவைகளில் 350 தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஐந்து பால சேவகிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1981–82 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 17,000-ம் 1982-83-க்கு ரூ. 17,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.—பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 'தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்ற அமைப்பை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூ. 100 வீதம் 10 இலட்சம் சம பங்குகளாக ரூ. 10 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கழகத்

தின் தலைவராக சமூக நலத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் இருப்பார். அக்கழகத்தில் கீழ்க்கண்ட நபர்கள் பொறுப்பாளராகவும் அங்கத்தினர்களாகவும் இருப்பார்கள்:—

(1) பிற்பட்டோர் நல இயக்குநர், சென்னை—நிர்வாக இயக்குநர்

(2) ஆணையர் மற்றும் செயலாளர், நிதித்துறை—அங்கத்தினர்

(3) ஆணையர் மற்றும் செயலாளர், தொழில் துறை—அங்கத்தினர்.

(4) ஆணையர் மற்றும் செயலாளர், விவசாயத் துறை—அங்கத்தினர்.

(5) மற்றும் (6) தனியாக நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் இருவர்—(அரசு சார்பற்றவர்.

இக்கழகத்தின் நோக்கங்கள் பின் வருமாறு:—

(1) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை (மார்ஜின் மனி) அளித்தல்.

(2) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக வர்த்தக வணிக தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற் கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதி உதவி பெற்று இயங்கும். இக்கழகம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் சிறு உழவர் மேம்பாட்டு திட்டம் போன்ற ஏனைய திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

இம்மேம்பாட்டுக்கழகம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 25–2–82 அன்று மேற்படி மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர்களின் முதல் கூட்டம் நடத்தப்பட்டது. கர்நாடக மாநில பின்தங்கிய மற்றும் சிறுபான்மையோர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் ஆந்திரப் பிரதேச பின்தங்கிய வகுப்பினர் கூட்டுறவு நிதிக் கழகம் ஆகியவற்றில்



ஏற்கெனவே அமுலாக்கப்பட்டு வரும் திட்டங்களை விவாதித்து அம்மாதிரித் திட்டங்களை தமிழ்நாட்டின் பின்தங்கிய வகுப்பினருக்கும் சிறந்த வகையில் பயனளிக்குமாறு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

21. வீட்டு மனைகள் கையகப்படுத்துதல்.—பின் தங்கிய வகுப்பினருள், ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்காக வீட்டு மனை கையகப்படுத்தி வழங்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிட மக்களைவிட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலானோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1982–83 ஆம் ஆண்டிற்கும் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே பிற்பட்டோர் நல மானியக்கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 1

அட்டவணை 'அ'.

கொள்கை விளக்கக் குறிப்பு 1982–83 ஆம் ஆண்டு
1982–83 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு
(ரூபாய் ஆயிரத்தில்.)

மொத்தம் 9,22,67.

நிர்வாகத்தில்—53,31 திட்டத்தில்—8,69,36

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,25,65 | | திட்டத்தில் இல்லாதவை 6,43,71 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக | பிற்பட்ட வகுப்பினருக்காக | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| உதவித்தொகை .. | 10,14 | 7,41 | 318,64 | 36,41 |
| பள்ளிகள் .. | .. | 1,32 | .. | 1,20,11 |
| மதிய உணவு .. | .. | 3,52 | .. | 7,38 |
| புத்தகம் மற்றும் துணி | 4,49 | 21,34 | 2,55 | 4,35 |
| உணவு மானியம் .. | 51 | .. | 9,58 | 18 |
| விடுதிகள் .. | 1,08,73 | 22,83 | 1,03,41 | 31,71 |
| பல்கலைக்கழகத்திற்கு மானியம். | .. | .. | 300 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 1,35 | .. | .. |
| விவசாயம் .. | .. | 1,[illegible] | .. | [illegible] |



1982 மார்ச் 12]

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,7062 | | திட்டத்தில் இல்லாதவை 6,74,20 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக, | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| தொழிற்பயிற்சி .. | 27 | 5,09 | 79 | 58 |
| இலவசக்கருவிகள் .. | 20,19 | 31 | .. | .. |
| குடிநீர் .. | .. | .. | .. | 25 |
| சலவைத் துறை | 1,25 | .. | .. | .. |
| தனிப்பயிற்சி நிலையம் | .. | .. | 3,97 | .. |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள். | .. | 1 | .. | .. |
| வீட்டு மனைகள் ஆர்ஜிதம் | 15,00 | .. | .. | .. |
| சிறப்பு பயிற்சி .. | .. | .. | 40 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்கு பரிசு. | 4 | .. | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 17 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல், சில்லறை வேலைகள். | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. | 1.60,63 | 65,02 | 4,42,74 | 2,00,97 |

[1982 மார்ச் 12

'அட்டவணை—'ஆ'

அரசு பிற்பட்டோர் விடுதிகள்.

1981–82.

சென்னை மாவட்டம்.

| | | மொத்தம். |
|---|---|---|
| 1. | கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை .. | 105 |
| 2. | கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் .. | 105 |
| 3. | கல்லூரி மாணவர் விடுதி, வட சென்னை .. | 105 |
| 4. | தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சென்னை-10 | 75 |
| 5. | மாணவியர் விடுதி, திருவான்மியூர் .. | 120 |
| 6. | மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி .. | 70 |
| 7. | கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை .. | 50 |
| 8. | மாணவர் இல்லம், வட சென்னை .. .. | 50 |

செங்கல்பட்டு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 9. | கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சீபுரம் .. | 100 |
| 10. | கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு .. | 50 |
| 11. | கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி .. | 50 |
| 12. | மாணவர் விடுதி, வங்கனூர் .. .. .. | 50 |
| 13. | மாணவர் விடுதி; கனகம்மாசத்திரம் .. | 50 |
| 14. | மாணவர் விடுதி, மதுரமங்கலம் .. .. | 25 |
| 15. | மாணவர் விடுதி, சாலவாக்கம். .. | 25 |
| 16. | மாணவர் விடுதி, பெரியபாளையம் .. .. | 50 |
| 17. | மாணவர் விடுதி, கருங்குழி .. .. .. | 30 |
| 18. | மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிபேட்டை .. | 50 |
| 19. | மாணவர் விடுதி, பாதிரிவேடு .. .. | 50 |
| 20. | மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் .. .. | 40 |
| 21. | மாணவர் விடுதி, சோமங்கலம் .. .. .. | 25 |
| 22. | மாணவர் விடுதி ஓரத்தி .. .. .. | 50 |
| 23. | மாணவர் விடுதி, வாலாஜாபாத் .. .. | 200 |
| 24. | மாணவியர் விடுதி, வாலாஜாபாத் .. | 60 |
| 25. | மாணவியர் விடுதி மதுராந்தகம் .. .. | 40 |
| 26. | மாணவியர் விடுதி, திருத்தணி .. .. | 50 |
| 27. | மாணவர் விடுதி, ஆவடி .. .. .. | 50 |
| 28. | மாணவர் விடுதி, மதுராந்தகம் .. .. | 50 |
| 29. | மாணவர் விடுதி, பேரம்பாக்கம் .. .. | 50 |
| 30. | மாணவர் விடுதி, மானாம்பதி .. .. | 50 |



1982 மார்ச் 12]

வடாற்காடு மாவட்டம்.

| | | மொத்தம் |
|---|---|---|
| 31 | கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் .. | 50 |
| 32 | கல்லூரி மாணவர் விடுதி செய்யார் .. | 60 |
| 33 | கல்லூரி மாணவியர் விடுதி.வேலூர் .. .. | 50 |
| 34 | கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி .. | 50 |
| 35 | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப் பேட்டை | 50 |
| 36 | மாணவர் விடுதி, பொன்னை .. .. | 50 |
| 37 | மாணவர் விடுதி, திருவண்ணாமலை .. | 50 |
| 38 | மாணவர் விடுதி, திருப்பத்தூர் .. .. | 50 |
| 39 | மாணவர் விடுதி, குடியாத்தம் .. .. | 50 |
| 40 | மாணவர் விடுதி, ஜோலார்ப்பேட்டை .. | 50 |
| 41 | மாணவர் விடுதி, ஆரணி .. .. .. | 50 |
| 42 | மாணவர் விடுதி, போரூர் .. .. .. | 50 |
| 43 | மாணவர் விடுதி, செங்கம் .. .. .. | 50 |
| 44 | மாணவர் விடுதி, ஆற்காடு .. .. .. | 50 |
| 45 | மாணவர் விடுதி, வந்தவாசி .. .. .. | 50 |
| 46 | மாணவியர் விடுதி, செங்கம் .. .. .. | 50 |
| 47 | மாணவர் விடுதி, அரக்கோணம் .. .. | 50 |
| 48 | மாணவர் விடுதி, பேரணாம்பட்டு .. .. | 50 |
| 49 | மாணவர் விடுதி, கே. வி. குப்பம் .. .. | 50 |
| 50 | மாணவர் விடுதி, பேரணமல்லூர் .. .. | 50 |
| 51 | மாணவர் விடுதி, சேத்துப்பட்டு .. .. | 50 |
| 52 | மாணவர் விடுதி, வேட்டவலம் .. .. | 50 |
| 53 | மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம் .. | 50 |

தென்னாற்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 54 | கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் .. .. | 75 |
| 55 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் .. | 50 |
| 56 | கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாச்சலம் .. | 150 |
| 57 | கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர்.. .. | 50 |
| 58 | மாணவர் விடுதி, விருத்தாச்சலம் .. .. | 100 |
| 59 | மாணவர் விடுதி, பெண்ணாடம் .. .. | 90 |
| 60 | மாணவர் விடுதி, பெரியகுப்பம் .. .. | 70 |
| 61 | மாணவர் விடுதி, சேத்தியாத்தோப்பு .. | 140 |
| 62 | மாணவர் விடுதி, திருநாவலூர் .. .. | 50 |
| 63 | மாணவர் விடுதி, சிறுபாக்கம் .. .. | 75 |
| 64 | மாணவர் விடுதி, கம்மாவரம்.. .. .. | 50 |
| 65 | மாணவர் விடுதி, தேவபண்டலம் .. .. | 50 |
| 66 | மாணவர் விடுதி, சோமந்தர்குடி .. .. | 50 |
| 67 | மாணவர் விடுதி, வடக்கநேந்தல் .. .. | 50 |

1982 மார்ச் 12]

## தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம் |
|---|---|---|
| 68 | மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி). | 85 |
| 69 | மாணவர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி). | 40 |
| 70 | மாணவர் விடுதி, தியாகதுர்க்கம் | 50 |
| 71 | மாணவர் விடுதி, இல்லோடு | 50 |
| 72 | மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் | 50 |
| 73 | மாணவர் விடுதி, ஆனந்தபுரம் | 50 |
| 74 | மாணவர் விடுதி, சிதார் | 50 |
| 75 | மாணவர் விடுதி, ப. முட்லூர் | 50 |
| 76 | மாணவர் விடுதி, மஞ்சக்கொல்லை | 50 |
| 77 | மாணவர் விடுதி, சின்னசேலம் | 50 |
| 78 | மாணவர் விடுதி, சித்தேரிப்பட்டு | 50 |
| 79 | மாணவர் விடுதி, அன்னியூர் | 50 |

## தஞ்சாவூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 80 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-1 | 175 |
| 81 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-2 | |
| 82 | கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் | 50 |
| 83 | கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் | 50 |
| 84 | கல்லூரி மாணவர் விடுதி, மாயூரம் | 50 |
| 85 | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் | 40 |
| 86 | மாணவர் விடுதி, பேராவூரணி | 50 |
| 87 | மாணவர் விடுதி, மகாதேவப்பட்டிணம் | 50 |
| 88 | மாணவர் விடுதி, மன்னார்குடி | 100 |
| 89 | மாணவர் விடுதி, நீடாமங்கலம் | 175 |
| 90 | மாணவர் விடுதி, உம்பளச்சேரி | 40 |
| 91 | மாணவர் விடுதி, வேதாரண்யம் | 50 |
| 92 | மாணவர் விடுதி, ஆலத்தூர் | 40 |
| 93 | மாணவர் விடுதி, கண்ணத்தான்குடி | 50 |
| 94 | மாணவர் விடுதி, மாயூரம் | 75 |
| 95 | மாணவர் விடுதி, மதுக்கூர் | 50 |
| 96 | மாணவர் விடுதி, செம்பனார்கோவில் | 50 |
| 97 | மாணவர் விடுதி, பூம்புகார் | 50 |
| 98 | மாணவர் விடுதி, களி | 50 |
| 99 | மாணவர் விடுதி, பாபநாசம் | 50 |
| 100 | மாணவியர் விடுதி, வலங்கைமான் | 50 |
| 101 | மாணவியர் விடுதி, நன்னிலம் | 40 |
| 102 | மாணவியர் விடுதி, குற்றாலம் | 50 |
| 103 | மாணவியர் விடுதி, ஈச்சாங்கோட்டை | 50 |
| 104 | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் | 50 |



1982 மார்ச் 12]

## தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம் |
|---|---|---|
| 105 | மாணவர் விடுதி, நாகப்பட்டினம் | 50 |
| 106 | மாணவர் விடுதி, திருவிடைமருதூர் | 50 |
| 107 | மாணவர் விடுதி, வைத்தீஸ்வரன்கோயில் | 50 |
| 108 | மாணவர் விடுதி. திருவோணம் | 50 |
| 109 | மாணவர் விடுதி, முத்துப்பேட்டை | 50 |
| 110 | மாணவர் விடுதி, மணக்குடி | 50 |
| 111 | மாணவியர் இல்லம், பட்டுக்கோட்டை | 50 |

## சேலம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 112 | கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | 100 |
| 113 | கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 114 | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 55 |
| 115 | மாணவர் விடுதி, எலம்பிள்ளை | 90 |
| 116 | மாணவர் விடுதி, கொங்கனாபுரம் | 70 |
| 117 | மாணவர் விடுதி, மகதலேனாசத்திரம் | 80 |
| 118 | மாணவர் விடுதி, கண்ணங்குறிச்சி | 50 |
| 119 | மாணவர் விடுதி, தாராமங்கலம் | 70 |
| 120 | மாணவர் விடுதி, தீவட்டிப்பட்டி | 70 |
| 121 | மாணவர் விடுதி, எடப்பாடி | 70 |
| 122 | மாணவர் விடுதி, எருமைப்பட்டி | 70 |
| 123 | மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் | 70 |
| 124 | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 125 | மாணவர் விடுதி, வாழைப்பாடி | 50 |
| 126 | மாணவர் விடுதி, ராமாபுரம் | 40 |
| 127 | மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி | 50 |
| 128 | மாணவர் விடுதி, ஆதனூர் | 50 |
| 129 | மாணவர் விடுதி, சாத்தப்பாடி | 75 |
| 130 | மாணவர் விடுதி, வரகனூர் | 50 |
| 131 | மாணவர் விடுதி, தாராமங்கலம் | 50 |
| 132 | மாணவர் விடுதி, காரைக்குறிச்சிபுதூர் | 50 |
| 133 | மாணவர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 134 | மாணவர் விடுதி, மங்களாபுரம் | 55 |
| 135 | மாணவர் விடுதி, விட்டம்பாளையம் | 50 |
| 136 | மாணவர் விடுதி, சேலம் | 50 |
| 137 | மாணவர் விடுதி, கொளத்தூர் | 50 |

## தர்மபுரி மாவட்டம்

| | | மொத்தம். |
|---|---|---|
| 138 | கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி .. | 150 |
| 139 | மாணவர் விடுதி, ஹோசூர் .. .. | 50 |
| 140 | மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை .. .. | 50 |
| 141 | மாணவர் விடுதி, பாலக்கோடு .. .. | 60 |
| 142 | மாணவர் விடுதி, போச்சம்பள்ளி .. .. | 50 |
| 143 | மாணவர் விடுதி, ஹரூர் .. .. .. | 50 |
| 144 | மாணவர் விடுதி, தோகரப்பள்ளி .. .. | 40 |
| 145 | மாணவர் விடுதி, காரிமங்கலம் .. .. | 40 |
| 146 | மாணவர் விடுதி, அன்செட்டி .. .. | 50 |
| 147 | மாணவர் விடுதி, பெண்ணாகரம் .. .. | 50 |
| 148 | மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி .. .. | 50 |
| 149 | மாணவர் விடுதி, கோணங்கிநாய்க்கன்ஹள்ளி | 50 |
| 150 | மாணவர் விடுதி, கோட்டப்பட்டி .. | 50 |
| 151 | மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி .. .. | 50 |
| 152 | மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம் .. | 50 |
| 153 | மாணவர் விடுதி, திருமால்வாடி .. .. | 50 |
| 154 | மாணவர் விடுதி, மொரப்பூர் .. .. | 50 |
| 155 | மாணவர் விடுதி, கெலமங்கலம் .. .. | 50 |
| 156 | மாணவியர் விடுதி, லலிகம் .. .. | 50 |
| 157 | மாணவர் விடுதி, பேரிகை .. .. | 50 |
| 158 | மாணவர் விடுதி, சூலகிரி .. .. .. | 50 |
| 159 | மாணவர் விடுதி, குன்னத்தூர் .. .. | 50 |

## கோயம்புத்தூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 160 | கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் .. | 100 |
| 161 | கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் .. .. | 100 |
| 162 | மாணவர் விடுதி, தொண்டமுத்தூர் .. .. | 50 |
| 163 | மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம் .. | 50 |
| 164 | மாணவர் விடுதி, சொக்கம்பாளையம் .. | 50 |
| 165 | மாணவர் விடுதி, உடுமல்பேட்டை .. .. | 50 |
| 166 | மாணவர் விடுதி, பல்லடம் .. .. | 50 |
| 167 | மாணவர் விடுதி, பெத்திக்குட்டை .. .. | 50 |
| 168 | மாணவர் விடுதி, கிணத்துக்கடவு .. .. | 50 |
| 169 | மாணவர் விடுதி, ஆனைமலை .. .. | 50 |
| 170 | மாணவர் விடுதி, கோட்டூர் .. .. | 50 |



## பெரியார் மாவட்டம்

| | | மொத்தம் |
|---|---|---|
| 171 | கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு .. .. | 50 |
| 172 | கல்லூரி மாணவர் விடுதி, கோபிச்செட்டிபாளையம் | 100 |
| 173 | மாணவர் விடுதி, பெருந்துறை .. .. | 50 |
| 174 | மாணவர் விடுதி, சத்தியமங்கலம் .. .. | 60 |
| 175 | மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் .. .. | 40 |
| 176 | மாணவர் விடுதி, அச்யூர் .. .. | 40 |
| 177 | மாணவர் விடுதி, கோபிச்செட்டிபாளையம் .. | 50 |
| 178 | மாணவியர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி .. | 50 |
| 179 | மாணவர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி.. .. | 50 |
| 180 | மாணவர் விடுதி, சிவகிரி .. .. .. | 50 |
| 181 | மாணவர் விடுதி, சென்னிமலை .. .. | 50 |
| 182 | மாணவர் விடுதி, தாராபுரம் .. .. | 50 |
| 183 | மாணவர் விடுநி, காங்கேயம் .. .. | 50 |

## நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 184 | கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் .. | 100 |
| 185 | கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் .. | 50 |
| 186 | மாணவர் வடுதி, கூனூர் .. .. | 30 |
| 187 | மாணவர் விடுதி, தேவர்சோலை .. .. | 40 |
| 188 | மாணவர் விடுதி, அம்பமூலா .. .. | 50 |
| 189 | மாணவர் விடுதி, உதகமண்டலம் .. .. | 50 |
| 190 | மாணவர் விடுதி, எருமடு .. .. .. | 50 |

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 191 | கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர், திருச்சிராப்பள்ளி.. .. .. .. .. | 100 |
| 192 | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 125 |
| 193 | கல்லூரி மாணவர் விடுதி, கரூர் .. .. | 40 |
| 194 | கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் .. .. | 40 |
| 195 | கல்லூரி மாணவியர் விடுதி, உறையூர், திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 40 |
| 196 | மாணவர் விடுதி, கல்லக்குடி .. .. | 50 |
| 197 | மாணவர் விடுதி, திருவெரும்பூர் .. .. | 100 |
| 198 | கல்லூரி மாணவர் விடுதி, புதூர் .. .. | 75 |
| 199 | மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான் .. | 60 |
| 200 | மாணவர் விடுதி, பெரம்பலூர் .. .. | 50 |
| 201 | மாணவர் விடுதி, லாலாப்பேட்டை .. .. | 75 |
| 202 | மாணவர் விடுதி, பஞ்சப்பட்டி .. .. | 50 |
| 203 | மாணவர் விடுதி, கண்ணனூர் .. .. | 50 |
| 204 | மாணவர் விடுதி, துங்காபுரம் .. .. | 50 |

[1982 மார்ச் 12

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம் |
|---|---|---|
| 205 | மாணவர் விடுதி, அரியலூர் .. .. | 75 |
| 206 | மாணவர் விடுதி, மருவத்தூர் .. .. | 100 |
| 207 | மாணவர் விடுதி, மணப்பாறை .. .. | 100 |
| 208 | மாணவர் விடுதி, பொன்பரப்பி .. .. | 50 |
| 209 | மாணவர் விடுதி, வி. களத்தூர் .. .. | 40 |
| 210 | மாணவர் விடுதி, குலக்காந்தம் .. .. | 40 |
| 211 | மாணவர் விடுதி, உடையார் பாளையம் .. | 50 |
| 212 | மாணவர் விடுதி, செட்டிக்குளம் .. .. | 50 |
| 213 | மாணவர் விடுதி, திருமழப்பாடி .. .. | 50 |
| 214 | மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம் .. | 30 |
| 215 | மாணவியர் விடுதி, இராமலிங்கபுரம், திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 80 |
| 216 | மாணவர் விடுதி, தரகம்பட்டி .. .. | 50 |
| 217 | மாணவர் விடுதி, கூத்தூர் .. .. | 50 |
| 218 | மாணவர் விடுதி, நொய்யல் .. .. | 50 |
| 219 | மாணவர் விடுதி, திருமானூர் .. .. | 50 |
| 220 | மாணவர் விடுதி, டி. பழூர் .. .. | 50 |
| 221 | மாணவர் விடுதி, தோகைமலை .. .. | 50 |

புதுக்கோட்டை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 222 | கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை .. | 175 |
| 223 | கல்லூரி மாணவர் விடுதி (கூடுதல்), புதுக்கோட்டை .. .. .. .. | 75 |
| 224 | மாணவர் விடுதி, திருமயம் .. .. | 50 |
| 225 | மாணவர் விடுதி, ஆலங்குடி .. .. .. | 40 |
| 226 | மாணவர் விடுதி, விராலிமலை .. .. | 75 |
| 227 | மாணவர் விடுதி, இலுப்பூர் .. .. | 50 |
| 228 | மாணவர் விடுதி, வடக்காடு .. .. .. | 50 |
| 229 | மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம் .. .. | 50 |
| 230 | மாணவர் விடுதி, மணல்மேல்குடி .. .. | 50 |
| 231 | மாணவர் விடுதி, பொன்பதி .. .. | 40 |
| 232 | மாணவியர் விடுதி, அறந்தாங்கி .. .. | 40 |
| 233 | மாணவர் விடுதி, ஆவுடையார்கோயில் .. | 50 |
| 234 | மாணவர் விடுதி, திருக்களம்புதூர் .. .. | 50 |
| 235 | மாணவர் விடுதி, அண்டக்குளம் .. .. | 50 |
| 236 | மாணவியர் விடுதி, அரிமளம் .. .. | 50 |
| 237 | மாணவர் விடுதி, கீரமங்கலம் .. .. | 50 |
| 238 | மாணவர் விடுதி, கீரனூர் .. .. .. | 50 |
| 239 | மாணவர் விடுதி, கரம்பக்குடி .. .. | 50 |



1982 மார்ச் 12)

மதுரை மாவட்டம்—

| | | மொத்தம் |
|---|---|---|
| 240 | கல்லூரி மாணவர் விடுதி, மதுரை .. | 50 |
| 241 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டுக்கல் .. | 50 |
| 242 | கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் .. .. | 50 |
| 243 | கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை .. .. | 40 |
| 244 | மாணவர் விடுதி, அலங்காநல்லூர் .. .. | 104 |
| 245 | மாணவர் விடுதி, திருநகர் .. .. .. | 80 |
| 246 | மாணவர் விடுதி, தல்லாக்குளம் .. .. | 110 |
| 247 | மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலுகா) .. .. .. .. .. | 60 |
| 248 | மாணவர் விடுதி, பெரியகுளம் .. .. | 80 |
| 249 | மாணவர் விடுதி, சேக்காப்பட்டி .. .. | 75 |
| 250 | மாணவர் விடுதி, திருமங்கலம் .. .. | 50 |
| 251 | மாணவர் விடுதி, மேலவளவு .. .. | 50 |
| 252 | மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் .. | 120 |
| 253 | மாணவர் விடுதி, தி. வாடிப்பட்டி .. | 80 |
| 254 | மாணவர் விடுதி, அச்சம்பட்டி .. .. | 70 |
| 255 | மாணவர் விடுதி, மட்டப்பாறை .. .. | 40 |
| 256 | மாணவர் விடுதி, பாப்பாநாயக்கன்பட்டி .. | 55 |
| 257 | மாணவர் விடுதி, கே. பெருமாள்பட்டி .. | 50 |
| 258 | மாணவர் விடுதி, எழுமலை .. .. | 50 |
| 259 | மாணவர் விடுதி, கருங்காலக்குடி .. .. | 50 |
| 260 | மாணவர் விடுதி, பழனி .. .. .. | 50 |
| 261 | மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி .. .. | 90 |
| 262 | மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி .. .. | 60 |
| 263 | மாணவியர் விடுதி, பேரையூர் .. .. | 50 |
| 264 | மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி .. | 50 |
| 265 | மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி .. .. | 50 |
| 266 | மாணவர் விடுதி, கூடக்கோயில் .. .. | 50 |
| 267 | மாணவர் விடுதி, வெம்பர்பட்டி .. .. | 50 |
| 268 | மாணவர் விடுதி, கொடைக்கானல் .. .. | 50 |
| 269 | மாணவர் விடுதி, சேடப்பட்டி .. .. | 50 |
| 270 | மாணவர் விடுதி, நெய்க்காரப்பட்டி .. .. | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 271 | கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் .. | 50 |
| 272 | கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் .. | 100 |
| 273 | கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை .. | 40 |
| 274 | மாணவர் விடுதி, கண்டரமாணிக்கம் .. | 30 |
| 275 | மாணவர் விடுதி, வடக்கு சமுத்திரம் .. | 50 |
| 276 | மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் .. | 70 |
| 277 | மாணவர் விடுதி. காரியாப்பட்டி .. .. | 40 |
| 278 | மாணவர் விடுதி, புதுவயல் .. .. | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 279 | மாணவர் விடுதி, திருத்தங்கல் .. .. | 60 |
| 280 | மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் .. | 40 |
| 281 | மாணவர் விடுதி. கூமாபட்டி .. .. | 50 |
| 282 | மாணவர் விடுதி. பரமக்குடி .. .. | 50 |
| 283 | மாணவர் விடுதி, பெரியகோட்டை .. | 50 |
| 284 | மாணவர் விடுதி, செயத்தூர் .. .. | 50 |
| 285 | மாணவர் விடுதி, தேவிப்பட்டினம் .. | 50 |
| 286 | மாணவர் விடுதி. சாயல்குடி .. .. | 50 |
| 287 | மாணவியர் விடுதி, பாகனேரி .. .. | 30 |
| 288 | மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை.. | 40 |
| 289 | மாணவியர் விடுதி, தேவகோட்டை .. | 50 |
| 290 | மாணவியர் விடுதி, குள்ளூர்சந்தை .. | 75 |
| 291 | மாணவியர் விடுதி, பிரான்மலை .. .. | 50 |
| 292 | மாணவியர் விடுதி, காரியபட்டி .. .. | 50 |
| 293 | மாணவர் விடுதி. பெருநாளி .. .. | 50 |
| 294 | மாணவர் விடுதி, மண்டபம் .. .. | 50 |
| 295 | மாணவர் விடுதி. நரிக்குடி .. .. | 50 |
| 296 | மாணவர் விடுதி. ராஜபாளையம் .. .. | 50 |
| 297 | மாணவர் விடுதி. திருவாடானை .. | 50 |
| 298 | மாணவியர் விடுதி, இராமேஸ்வரம் .. | 50 |
| 299 | மாணவர் விடுதி. ஜோகில்பட்டி .. .. | 50 |
| 300 | மாணவர் விடுதி, மானாமதுரை .. .. | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 301 | கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி .. | 50 |
| 302 | கல்லூரி மாணவர் விடுதி. திருநெல்வேலி .. | 50 |
| 303 | கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 40 |
| 304 | மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி .. | 150 |
| 305 | மாணவர் விடுதி, ஏருவாடி.. .. .. | 30 |
| 306 | மாணவர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 150 |
| 307 | மாணவர் விடுதி, சாமிநாதபுரம் .. .. | 40 |
| 308 | மாணவர் விடுதி, மோப்பாளையம்.. .. | 40 |
| 309 | மாணவர் விடுதி. இடிந்தகரை .. .. | 50 |
| 310 | மாணவர் விடுதி, மணப்பாடு .. .. | 90 |
| 311 | மாணவர் விடுதி, விளாத்திகுளம் .. .. | 70 |
| 312 | மாணவர் விடுதி, பழவூர் ... .. | 40 |
| 313 | மாணவர் விடுதி, எட்டையாபுரம் .. .. | 50 |
| 314 | மாணவியர் விடுதி, புதூர் .. .. | 50 |
| 315 | மாணவியர் விடுதி, நாங்குநேரி .. .. | 75 |
| 316 | மாணவியர் விடுதி, தூத்துக்குடி .. .. | 40 |
| 317 | மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை .. | 50 |
| 318 | மாணவர் விடுதி, பேட்டை | 50 |





திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 319 | மாணவர் விடுதி, கூட்டபுலி .. .. | 50 |
| 320 | மாணவர் விடுதி, கழுகுமலை .. .. | 50 |
| 321 | மாணவர் விடுதி, இடைக்கல் .. .. | 50 |
| 322 | மாணவியர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 50 |
| 323 | மாணவியர் விடுதி, கருங்குளம் .. .. | 50 |
| 324 | மாணவியர் விடுதி, கூட்டப்புளி .. .. | 50 |
| 325 | மாணவியர் விடுதி, சங்கர்நகர் .. .. | 50 |
| 326 | மாணவர் விடுதி, பேட்டைக்குளம் .. | 50 |
| 327 | மாணவர் விடுதி, ஊவரி .. .. | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 328 | கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில் .. | 50 |
| 329 | கல்லூரி மாணவர் விடுதி, குழித்துறை .. | 50 |
| 330 | கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீஸ்வரம் | 50 |
| 331 | மாணவியர் விடுதி, குளச்சல் .. .. | 50 |
| 332 | மாணவியர் விடுதி, குலசேகரம் .. .. | 50 |
| 333 | மாணவியர் விடுதி, பதப்பாண்டி .. .. | 50 |
| 334 | மாணவியர் விடுதி, தக்கலை .. .. | 50 |
| 335 | மாணவர் விடுதி, ஆரல்வாய்மொழி .. | 50 |

சுருக்கம்.

| | | மொத்தம். |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் .. .. | 3,260 |
| 14 | கல்லூரி மாணவியர் விடுதிகள் .. .. | 665 |
| 231 | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள் .. | 12,813 |
| 48 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள .. | 2,450 |
| 1 | தொழிற்பயிற்சி விடுதி .. .. .. | 75 |
| 335 | | 19,263 |

[1982 மார்ச் 1.

அட்டவணை 'இ'

அரசு குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதிகள்.

1981—82

| | | மொத்தம். |
|---|---|---|
| **செங்கல்பட்டு மாவட்டம்—** | | |
| 1. | மாணவர் விடுதி, பல்லாவரம் .. .. | 50 |
| **வடாற்காடு மாவட்டம்—** | | |
| 2. | மாணவியர் விடுதி, பி.எல். தண்டா .. | 50 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்—** | | |
| 3. | மாணவர் விடுதி, அவினாசி .. .. | 50 |
| 4. | மாணவர் விடுதி, திருப்பூர் .. .. | 50 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | | |
| 5. | மாணவர் விடுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 50 |
| 6. | மாணவர் விடுதி, மேலமாயனூர் .. | 50 |
| **புதுக்கோட்டை மாவட்டம்—** | | |
| 7. | மாணவர் விடுதி, கந்தர்வகோட்டை .. | 50 |
| 8. | மாணவர் விடுதி, புதுக்கோட்டை .. | 44 |
| 9. | மாணவர் விடுதி, பொன்னமராவதி .. | 50 |
| **மதுரை மாவட்டம்—** | | |
| 10. | தொழிற்பயிற்சிப் பள்ளி விடுதி, கே. புதூர் மதுரை .. .. .. .. | 100 |
| 11. | மாணவர் தொழிற் பயிற்சி விடுதி, தேனி | 50 |
| 12. | மாணவர் விடுதி, திருமங்கலம் .. .. | 150 |
| 13. | மாணவர் விடுதி, திண்டுக்கல் .. .. | 18 |
| 14. | மாணவர் விடுதி, உசிலம்பட்டி .. .. | 650 |
| 15. | மாணவர் விடுதி, ஞானஒளிபுரம், மதுரை .. | 60 |
| 16. | மாணவர் விடுதி, செக்காணூரணி .. .. | 200 |
| 17. | மாணவர் விடுதி, நாடார்மங்கலம் .. | 120 |
| 18. | மாணவர் விடுதி, உத்தமபாளையம் .. | 150 |
| 19. | மாணவர் விடுதி, வத்தலகுண்டு .. .. | 140 |
| 20. | மாணவர் விடுதி, கடமலைக்குண்டு .. | 60 |
| 21. | மாணவர் விடுதி, பாப்பாப்பட்டி .. | 80 |
| 22. | மாணவர் விடுதி, ராஜதானி .. .. | 70 |



1982 மார்ச் 12]

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம். |
|---|---|---|
| 23 | மாணவர் விடுதி, அல்லிநகரம் .. | 60 |
| 24 | மாணவர் விடுதி, மேலக்கால் .. | 50 |
| 25 | மாணவர் விடுதி, விளாம்பட்டி .. | 50 |
| 26 | மாணவர் விடுதி, போடி .. | 50 |
| 27 | மாணவர் விடுதி, தும்மக்குண்டு .. | 50 |
| 28 | மாணவர் விடுதி, கம்பம் .. | 50 |
| 29 | மாணவர் விடுதி, ராயப்பன்பட்டி .. | 50 |
| 30 | மாணவர் விடுதி, வெள்ளையம்மாள்புரம் .. | 50 |
| 31 | மாணவியர் விடுதி, உசிலம்பட்டி .. | 650 |
| 32 | மாணவியர் விடுதி, திருமங்கலம் .. | 125 |
| 33 | மாணவியர் விடுதி, சின்னமனூர் .. | 100 |
| 34 | மாணவியர் விடுதி, கம்பம் .. | 50 |
| 35 | மாணவியர் விடுதி, செக்காணூரணி .. | 50 |
| 36 | மாணவியர் விடுதி, கூடலூர் .. | 50 |
| 37 | மாணவியர் விடுதி, திண்டுக்கல் .. | 50 |
| 38 | மாணவர் விடுதி, கூடலூர் .. | 50 |
| 39 | மாணவர் விடுதி, விளாத்தூர் .. | 45 |
| **இராமநாதபுரம் மாவட்டம்—** | | |
| 40 | மாணவர் விடுதி, கோவிலாங்குளம் .. | 50 |
| 41 | மாணவர் விடுதி, கமுதி .. | 150 |
| 42 | மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை .. | 100 |
| 43 | மாணவர் விடுதி, நைனார்கோயில் .. | 75 |
| 44 | மாணவர் விடுதி, முதுகுளத்தூர் .. | 100 |
| 45 | மாணவர் விடுதி, பொம்மநேந்தல் .. | 50 |
| 46 | மாணவர் விடுதி, கடலாடி .. | 60 |
| 47 | மாணவர் விடுதி, மேலக்கிடாரம் .. | 50 |
| 48 | மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை .. | 50 |
| 49 | மாணவியர் விடுதி, கமுதி .. | 50 |
| 50 | மாணவியர் விடுதி, முதுகுளத்தூர் .. | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | மொத்தம். |
|---|---|---|
| 51 | மாணவர் விடுதி, கயத்தார் .. | 50 |
| 52 | மாணவர் விடுதி, கோவில்பட்டி .. | 60 |
| 53 | மாணவர் விடுதி, சங்கரன்கோயில் .. | 110 |
| 54 | மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் .. | 75 |
| 55 | மாணவர் விடுதி, பாளையங்கோட்டை .. | 75 |
| 56 | மாணவர் விடுதி, தென்காசி .. | 60 |
| 57 | மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் .. | 30 |
| 58 | மாணவர் விடுதி, வெள்ளாங்குளம் .. | 30 |
| 59 | மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் .. | 30 |
| 60 | மாணவர் விடுதி, சாயமலை .. | 30 |
| 61 | மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் .. | 50 |
| 62 | மாணவியர் விடுதி, சங்கரன்கோவில் .. | 50 |

சுருக்கம்.

| | | |
|---|---|---|
| 46 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் .. | 3,894 |
| 14 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள் .. | 1,425 |
| 2 | தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் .. | 150 |
| 62 | மொத்தம் .. | 5,469 |



அட்டவணை "ஈ".

அ. பிற்பட்டோர் நலத்துறை மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநரின் கீழ் நடப்பவை.

| தொழிற்பயிற்சிக் கூடங்கள். | துவங்கப் பட்ட வருடம். | பயிற்சி யாளர் களின் எண் ணிக்கை. | உதவிப் பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம். | 1961 | 30 | 45 |
| 2 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, செக்கானூரணி, மதுரை. | 1963 | 15 | 45 |
| 3 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம்புதூர், திருநெல்வேலி. | 1965 | 15 | 45 |
| 4 பிரம்பு பயிற்சி நிலையம், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 5 தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |

ஆ. சமூக நல இயக்குநரின் கீழ் நடத்தப்படுவன.

| | | | |
|---|---|---|---|
| 1 தையல் மற்றும் ஆயத்த ஆடை நிலையம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2 தையல் மற்றும் எம்ப்ராய்டரி நிலையம், செக்கானூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |

| தொழிற்பயிற்சிக் கூடங்கள். | துவங்கப் பட்ட வருடம். | பயிற்சி யாளர் களின் எண் ணிக்கை. | உதவிப் பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 தையல் பயிற்சி நிலையம், ஊமங்கலம், தென்னற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 4 தையல் பயிற்சி நிலையம், கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5 தையல் பயிற்சி நிலையம், கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6 தையல் பயிற்சி நிலையம், தேவர் குளம், திருநெல்வேலி, மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7 தையல் பயிற்சி நிலையம், கிருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |



## இணைப்பு III

### கோரிக்கை எண் 35.

### நுகர்பொருள் வழங்கல்—கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1. தமிழ்நாட்டில் உணவு நிலைமை.

உணவு நிலைமை:

1. தமிழ்நாட்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக அரிசியின் உற்பத்தி குறைந்து 1981 ஆம் ஆண்டு வறட்சி ஆண்டாக இருந்தது. ஓரிரு மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில், நெல் மற்றும் சிறு தானியங்களின் உற்பத்தி பெரும் அளவில் குறைந்து விட்டது. பொது விநியோக முறையில் விற்கும் அரிசியின் அளவு படிப்படியாக உயர்ந்து 1981 ஆகஸ்டில் 78,000 டன்களை எட்டியது. பொதுவாக, மாநிலத்தில் குறுவை அறுவடை துவங்கிய உடன் நியாய விலைக் கடைகளில் விற்பனை ஆகும் அரிசியின் அளவு குறைவது கண்கூடாகத் தெரியும். ஆனால் இவ்வாண்டு நிலைமை வேறு விதமாக இருந்தது. 1981 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் கூட, நியாய விலைக் கடைகளில் விற்பனை ஆகும் அரிசியின் அளவு ஏறத்தாழ 60,000 டன்கள் என்ற அளவில் நிலையாக இருந்தது. இப்போது, சம்பா நெல் அறுவடை தீவிரம் அடைந்துள்ளதால், குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் அரிசி வாங்கும் அளவு குறைந்து வருகிறது. 1981 டிசம்பரில் மாநிலத்தில் மொத்தம் 62,214 டன்கள் அரிசி விற்பனை ஆயிற்று. ஆனால் 1982 சனவரியில் 48,407 டன்கள் அரிசி தான் விற்பனை ஆகியுள்ளது. இப்பாழுது அரிசித் தேவை குறைகிறது என்று தெரிகிறது.

மாநிலத்தின் பல பகுதிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, வழக்கமான உபரி மாவட்டங்களான வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் நெல் மற்றும் அரிசி உற்பத்தி குறைந்த போதும் எந்த நேரத்திலும் நிலைமை கட்டுக்கடங்காமல் போக அனுமதிக்கப்படவில்லை. இந்திய அரசின் மத்திய தொகுப்பிலிருந்து அதிக அளவு ஒதுக்கீடு பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. மாதமொன்றுக்கு ஒரு இலட்சம் டன்கள் ஒதுக்கீடு செய்யுமாறு, இவ்வரசு இந்திய அரசை கேட்டு வந்தது. அவர்கள் மாதமொன்றுக்கு 60,000 டன்கள் என்ற அளவுக்கு ஒதுக்கீடு செய்தனர். இந்த அளவு நாம் கேட்டதைவிட குறைவாக இருந்தாலும், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தக்க தருணத்தில் செய்த உதவிக்கு இவ்வரசு நன்றி கூறிக் கொள்கிறது. இந்திய அரசு ஒதுக்கீடு செய்த அரிசியை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கொண்டு வருவதில், போதுமான வேகன்கள் கிடைக்காமை டிரக்குகளுக்கான சத்த உயர்வு ஆகிய போக்கு வரத்துத் தடைகள் இருந்தன. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு பெருமளவில் கொண்டுவர போதுமான

வேகன்கள் கிடைக்காததால், லாரிகள் மூல்மாகவும் அரிசி கொண்டுவரப்பட்டது. பொது விநியோக முறையில் அரிசி விநியோகம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதற்காக, அதிகப்படியாக போக்குவரத்துச் சத்தம் கொடுக்க வேண்டி இருந்ததையும் பொருட்படுத்தாமல் லாரி மூலமாக அரிசி கொண்டுவருவதில் அரசு ஈடுபட்டது.

3. மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மேலாக ஆந்திரப் பிரதேசம், ஓரிசா, மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற பிற மாநில அரசுகளிடமிருந்தும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் தனியார் வியாபாரிகளிடமிருந்தும் இவ்வரசு அரிசி வாங்கியது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வெளிச்சந்தை வியாபாரத்தின் ஒரு பகுதியாக ரூ. 20·82 கோடி மதிப்புள்ள 90,947 டன்கள் அரிசி வாங்கியது. பிற மாநிலங்களிலிருந்து 72,696 டன்கள் அரிசி ரயில் மூலமும், 18,251 டன்கள் லாரி மூலமாகவும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாட்டிற்கு வெளியில், பல்வேறு இடங்களில் அரிசி வாங்கவும். அதைக் கொண்டு வருவதற்கும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அதனுடைய மூலதனம் முழுவதையும் செலவிட்டது.

4. பிற மாநிலங்களிலிருந்து, தனிப்பட்ட வர்த்தகர்கள் மூலம் அதிக அளவில் நெல் மற்றும் அரிசி தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்த நெல், அரிசிக்கு வர்த்தகர் லெவி வசூலிப்பதை அரசு நிறுத்திவிட்டது. இது மாநிலத்தில் அரிசி கிடைப்பதை அதிகரிக்க உதவியது. தொடர்ந்து இரண்டு பருவமழைகள் பொய்த்து, மிகக் கடுமையான வறட்சி காலத்திலும், நான் மேலே விவரித்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்ததால், இம் மாநிலத்தில் அரிசி நிலைமை சுலபமாக இருந்ததுடன், பொது விநியோக முறையில், நியாய விலைக் கடைகள் மூலம் தடங்கல், ஏதுமின்றி அரிசி விநியோகித்து வெளிச்சந்தையில் அரிசியின் விலையையும் நியாயமான அளவில் கட்டுப்படுத்த முடிந்தது. இம் மாநிலத்தில், 1974 ஆம் ஆண்டில் இது போன்ற வறட்சி நிலைமை ஏற்பட்ட போது, அவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் வெளிச்சந்தையில் நடுத்தர ரக அரிசியின் விலை கிலோ ரூ. 4·20 வரை எட்டியது. 1980 டிசம்பர் மாதத்தில் அதே ரக அரிசியின் விலை கிலோ ரூ. 2·70 தாண்டவில்லை. வறட்சி நேரத்தில் அரிசி கிடைக்கவில்லை என்றோ, அல்லது வெளிச்சந்தையில் அதிக விலையில் விற்கிறது. என்றோ புகார் வராதவாறு உணவு நிலைமையை சமாளித்ததை இம்மாமன்றம் பாராட்டும் என்று நான் நம்புகிறேன்.

5. இப்பொழுது அரசிடம் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது. அரிசி நிலைமை திருப்திகரமாக உள்ளது. சம்பா அறுவடை துவங்கிய பிறகு, அரிசியின் விலைகள் இறங்கத் தொடங்கியுள்ளன.



## II. நெல், அரிசி கொள்முதல்.

6. அரிசியின் தேவையையும், அது கிடைக்கும் நிலையையும் ஆய்வு செய்த பிறகு, 1981 சனவரி முதல் 40 விழுக்காடு வர்த்தகர் லெவியை அரசு விதித்ததும் 1981 சம்பா பருவத்தில் 1,19,560 டன்கள் நெல்லும், 44,538 டன்கள் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டன வறட்சி காலத்தில் நாம் சந்தித்த கடுமையான நிலைமையைக் கருதி, எதிர்பாராத சங்கடங்களை சமாளிக்க போதுமான முடையிருப்பு வைத்துக்கொள்ள நெல், அரிசி கொள்முதல் செய்வது என்று அரசு முடிவு செய்தது. அதிக அளவு கொள்முதல் செய்ய லெவியின் அளவை அதிகரிக்குமாறு இந்திய அரசும் வற்புறுத்தி வந்தது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு 1981 குறுவைப் பருவத்தில் லெவியை 40 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்த அரசு முடிவு செய்தது. இதுவே 1982 சம்பாப் பருவத்திலும் தொடரப்படுகிறது. 1981 குறுவைப் பருவத்தில் 2,23,977 டன்கள் நெல்லும், 8,365 டன்கள் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1981 குறுவை அறுவடை வடகிழக்குப் பருவமழையில் சிக்கிக் கொண்டதால், நெல் அதிகமான ஈரப்பதம் உள்ளதாக இருந்ததும் இந்திய அரசு நிர்ணயித்தபடி 18 விழுக்காட்டுக்கு மேல் ஈரப்பதமுள்ள நெல்லை வாங்கக் கூடாது. தனிப்பட்ட வர்த்தகர்கள், ஈரமான குறுவை நெல்லை வாங்க ஆர்வம் காட்டவில்லை. விவசாயிகளுக்கு பாதகமாக விலையை மிகவும் குறைக்கலாயினர். இந்த நிலையில் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய இடர்ப்பாட்டிலிருந்து அவர்களைப் பாதுகாக்க அரசின் கொள்முதல் விலைகளுக்கு அவர்கள் விற்க முன்வந்த நெல் முழுவதையும் அரசு முழுமூச்சுடன் ஈடுபட்டு வாங்கியது. மாநில அரசு, இந்திய அரசை வற்புறுத்தி 22 விழுக்காடு வரை ஈரப்பதம் உள்ள நெல்லை வாங்க ஒப்புதல் பெற்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில், நிலவிய, தனியான நிலைமையைக் கருதி 25 விழுக்காடு வரை ஈரப்பதமுள்ள நெல்லை இவ்வரசு வாங்கியதற்கு ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை நெல்லை வாங்க தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 316 நேரடிக் கொள்முதல் நிலையங்களை திறந்து 7,66,139 டன்கள் நெல்லும் 8,365 டன்கள் அரிசியும் லெவி முலம் வாங்கியதுடன், ரூ. 6·43 கோடி மதிப்புள்ள 57,838 டன்கள் நெல்லை நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் வாங்கியது.

7. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்த தொடர்ந்த மழையும், தட்பவெப்ப நிலையும் குறுவை நெல்லை அங்கு அரைவை செய்வதற்கு ஏற்றதாக இல்லாததால், நெல்லை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. அவ்வாறு கொண்டு

செல்வதிலும் பல இடர்பாடுகள் இருந்தன. இவ்வாண்டு இரயிலில் கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டது மொத்தத்தில் 1,83, 473 டன்கள் நெல் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இரயில் மூலமாக 30,921 டன்களும், லாரிகள் மூலமாக 1,52,552 டன்களும் கொண்டு செல்லப்பட்டன.

8. கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்கு நியாய விலைகளில் அரிசி விற்க வேண்டும் என்பதற்காக, அவற்றிற்கு லெவியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் வெளிச் சந்தை விலைகளில் வாங்கவும் அனுமதிக்கப்பட்டன. அவைகள் அரசின் கொள்முதல் விலைகளைவிட அதிக விலைகள் கொடுத்தன. விவசாயிகளும் அவர்களுடைய நெல்லை ஆதாயமுள்ள விலைகளில் விற்க முடிந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் முதன் முதலாக பெரிய அளவில், மொத்தத்தில் ரூ. 20 கோடி மதிப்புள்ள 96,170 டன்கள் நெல்லை வாங்கின. இது கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரச்செயலில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். பொது விநியோகத்திற்கு அரிசி தேவைப்படுவதைக் கருதி கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்த நெல்லை எடுத்து அதைப் பொது விநியோக முறையில், நியாய விலைக் கடைகள் மூலம், குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு விநியோகிக்க பயன்படுத்துமாறு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தை அரசு கேட்டுக் கொண்டது. நடப்பு சம்பா பருவத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் அரசு நிர்ணயித்துள்ள விலைகளில் வெளிச் சந்தையில் நெல் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் விலைகள்:

9. நெல்லுக்கு ஆதாயம் கிடைக்கும் விலையை நிர்ணயிக்குமாறு இந்திய அரசை இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. தக்க ஆதாரங்களையும், புள்ளி விவரங்களையும் மத்திய அரசு முன் வைத்து அவர்களை நெல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 147 என்று உயர்த்துமாறும் அல்லது கோதுமைக்கு நிர்ணயித்த விலையை நெல்லுக்கு நிர்ணயிக்க வேண்டுமென்றும் இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. ஆனால் மத்திய அரசு, சாதாரண ரக நெல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 115 என்று நிர்ணயித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலைக்குக் கூடுதலாக போனஸ், வண்டிச் சத்தம் முதலியன மாநில அரசுகள் கொடுக்கக்கூடாது என்றும், இதைக் கடைப்பிடிக்கத் தவறினால் ரிசர்வ் வங்கி மூலம் கொள்முதலுக்காக குறைந்த வட்டிக் கடன் வசதி கொடுக்கப்படமாட்டாது என்றும் மத்திய அரசு கூறியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், நெல்லுக்கு இந்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையைவிட அதிக விலை கொடுக்க மாநில அரசால் இயலவில்லை, எனவே, மாநில அரசு கொள்முதல் விலையை சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 115 என்றும் சன்னரகத்திற்கு ரூ. 119 என்றும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ. 123 என்றும் நிர்ணயித்துள்ளது.





## III. பொது விநியோக முறை.

10. தமிழகத்தில் பொது விநியோக முறை மிகவும் சிறப்புற அமைந்துள்ளது. அரிசி, சர்க்கரை, கோதுமை, கோதுமைப் பொருட்கள், பாமோலின் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் பெறுவதற்கு 109 இலட்சம் குடும்ப அட்டைகள் இம்மா நிலத்தில் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் மொத்தம் 17,536 நியாய விலைக் கடைகள் உள்ளன. அவற்றில் 2,021 கடைகள் நகரப் பகுதிகளிலும், 15,515 கடைகள் கிராமப் பகுதிகளிலும் உள்ளன. இந்த நியாய விலைக் கடைகள் அனைத்தும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும், தொழிலாளர் பண்டக சாலைகள், தோட்டத் தொழிலாளர்கள் பண்டக சாலைகள் போன்ற ஏனைய நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட வணிகர்கள் முற்றிலும் இதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது நம்முடைய பொது விநியோக முறையின் சிறப்பு அம்சமாகும்.

அரிசி :

11. நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1·75 விதமும் சன்னரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2·00 வீதமும் மிகச் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2·15 வீதமும் வழங்கப்படுகிறது. குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில் வாரம் ஒன்றுக்கு வயது வந்த நபர் ஒன்றுக்கு 1 கிலோ வீதமும் குழந்தை ஒன்றுக்கு ½ கிலோ வீதமும், மொத்தத்தில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ அளவுக்கு மிகாமலும் அரிசி வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் நெல் உற்பத்தி மிகக் குறைவாக இருப்பதாலும், அது மலைப் பகுதியில் அமைந்திருப்பதாலும், அங்குள்ள மக்களுக்கு குடும்ப அட்டைகள் மீது வாரம் ஒன்றுக்கு வயது வந்த நபர் ஒன்றுக்கு 1½ கிலோ வீதமும் குழந்தை ஒன்றுக்கு ½ கிலோ வீதமும் மொத்தத்தில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 28 கிலோ அளவுக்கு மிகாமல் அரிசி வழங்கப்படுகிறது.

வறட்சியின் காரணமாக 1981-ஆம் ஆண்டு முழுவதும் நியாய விலைக் கடைகளில் அதிக அளவு அரிசி விற்பனையாயிற்று. 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை மொத்தம் 6,70,955 டன்கள் அரிசி குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டது.

[1982 மார்ச் 12

லெவி கோதுமை :

12. பொது விநியோக முறையின் கீழ் நுகர்வோருக்கு லெவி கோதுமை கிலோ ஒன்று ரூ. 1·55 என்ற விலையில் விற்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் என மிகக் குறைந்த அளவே கோதுமை மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் குடும்ப அட்டைதாரர்களின் தேவை அதிக அளவில் உள்ளது. ஒரு குடும்ப அட்டைதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ கோதுமை என்று கணக்கிட்டால் கூட நம் மாநிலத்தின் மொத்தத் தேவை மாதம் ஒன்றுக்கு சுமார் 11,000 டன்களாகும் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் கோதுமையையும் உண்ண வேண்டும் என்றும் நம் மக்களிடையே தீவிர பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் நுகர்வோர்கள் கேட்கும் அளவுக்கு கோதுமை நம்மால் வழங்க முடியவில்லை என்பது தான் தற்போதைய நிலைமை. பொது விநியோக முறையில் வழங்க கோதுமை ஒதுக்கீட்டை அதிரிக்கும்படி மைய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

கோதுமைப் பொருட்கள் :

13. மைதா, ரவை இவற்றின் மீது விலைக்கட்டுப்பாடு உள்ளது. மைதா, ரவை இவற்றின் சில்லறை விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு முறையே ரூ. 2·30, ரூ. 2·10 ஆகும். கை இருப்புக்குத் தக்கவாறு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் மாதம் ஒன்றுக்கு மைதாவும், ரவையும்—ஒவ்வொன்றும் 5 கிலோ வரை பெற்றுக் கொள்ளலாம்.

14. தமிழ்நாட்டில் 32 கோதுமை உருளை மாவு ஆலைகள் உள்ளன. கோதுமைப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கென இவ்வாலைகளுக்கு வழங்க மைய அரசு மாதந்தோறும் 30,000 டன்கள் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. கோதுமை ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால் கோதுமைப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே நுகர்வோருக்கு கோதுமைப் பொருட்கள் கிடைக்க வகை செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு உருவாகியது. மைதா, ரவை இவற்றின் மீது விநியோகக் கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. இருப்பினும் நுகர்வோருக்கு இப்பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்யும் முகத்தான், உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் மைதா, ரவை இவற்றில் 60 விழுக்காடு அளவை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டில், நுகர்வோருக்கு வழங்குவதற்கென 96,570 டன்கள் மைதாவும் 26,191 டன்கள் ரவையும், உருளை மாவு ஆலைகளிலிருந்து தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் பெற்றுள்ளன.



1982 மார்ச் 12]

15. உருளை மாவு ஆலைகளை ஒழுங்காக ஆய்வு செய்து அங்கு நல்ல தரமுள்ள கோதுமைப் பொருட்கள் தயாரிக்கப்படுவதை கவனிக்க தரக்கட்டுப்பாடு பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்கு ஒத்து வராத கோதுமைப் பொருட்கள் உற்பத்தி செய்த உருளை மாவு ஆலையின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உருளை மாவு ஆலைகளிலிருந்து சேகரித்த மாதிரிப் பொருட்களை பகுத்தாய்வு செய்ய ஆய்வகம் ஒன்று உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

16. 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5-ஆம் நாள் முடிய உருளை மாவு ஆலைகளுக்கு அரைவை உரிமம் வழங்குதல், உரிமத்தை புதுப்பித்தல் ஆகிய அதிகாரங்கள் மாநில அரசின் வசம் இருந்தது. ஆனால், 1982 பிப்ரவரித் திங்கள் 6-ஆம் நாள் முதல் உருளை மாவு ஆலைகளுக்கு புதிய அரவை உரிமம் வழங்கும் அதிகாரத்தை மைய அரசு திரும்ப எடுத்துக் கொண்டது.

லெவி சர்க்கரை :

17. மைய அரசு மாதந்தோறும் சுமார் 19,700 டன்கள் லெவி சர்க்கரையை தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்கிறது. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் குடும்ப அட்டைதாரர்களின் மாத வருவாய் அடிப்படையில் லெவி சர்க்கரை விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த விநியோக முறை சரியில்லை என்று நுகர்வோர் ஒருவர் கொடுத்த வழக்கில் எல்லோருக்கும் சமமான முறையில் விநியோகம் அமையவேண்டும் என்று சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதன் தொடர்பாக, மாநிலம் முழுவதும் உள்ள எல்லா நுகர்வோருக்கும், வருமானம், வசிக்கும் பகுதி ஆகிய எந்த வேறுபாடுமின்றி நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 425 கிராம் வீதம் 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்புதிய விநியோக முறையின் கீழ் எல்லா நுகர்வோரின் தேவையையும் பூர்த்தி செய்ய கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 2,000 டன்கள் சர்க்கரை இம் மாநிலத்துக்கு தேவைப்படும். எனவே இம்மாநிலத்துக்கான லெவி சர்க்கரை ஒதுக்கீட்டை 2,000 டன்கள் அதிகரிக்கும்படி மைய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

பாமோலின் எண்ணெய் :

18. இது ஒரு முக்கிய சமையல் எண்ணெயாகும். கிடைக்கும் அளவைப் பொறுத்து இந்த எண்ணெய் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது வெளி அங்காடிகளில் விற்பனையாகும் சமையல் எண்ணெய்களில் இது மிகக் குறைந்த விலை எண்ணெயாகும். மேலும் இப்பொழுது பரவலாக பொதுமக்கள் இந்த எண்ணெய்யை சமையல் எண்ணெயாக ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே நியாய விலைக் கடைகளில் இந்த எண்ணெய்க்கு அதிக கிராக்கி உள்ளது. ஆனால் மத்திய அரசின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ வீதம் விநியோகம் செய்ய இம் மாநிலத்திற்கு 11,000 டன்கள் எண்ணெய் தேவைப்படுகிறது. எனவே, இம்மாநிலத்திற்கு இந்த எண்ணெயை அதிக அளவு ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. 1981 ஆம் ஆண்டு மாதம் ஒன்றுக்கு 2,500 டன்களிலிருந்து 6,000 டன்கள் வரை படிப் படியாக ஒதுக்கீடு உயர்த்தப்பட்டது. 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 3,547 டன்கள் தான் ஒதுக்கீடு செய்கிறது. இது நம் தேவைக்கு மிகவும் குறைவானது. இந்த எண்ணெய் மாநிலத்திற்குக் கிடைக்கும் அளவு மிகவும் குறைவாகஇருப்பதால், நியாய விலைக் கடைகளில் முதலில் வந்தவர்களுக்கு இருப்பிருக்கின்ற அளவைப் பொறுத்து வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் எண்ணெய் ஆண்டில் அதாவது 1980 நவம்பர் திங்கள் முதல் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்த மொத்தம் 43,400டன்கள் எண்ணெய் முழுவதும் எடுத்து விநியோகம் செய்யப்பட்டது. குறைந்தது மாதம் ஒன்றுக்கு 10,000 மெட்ரிக் டன் எண்ணெயாவது ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. அண்மையில் மத்திய அரசு இந்த எண்ணெயின் மொத்த விலையை உயர்த்தி உள்ளது.

மண்ணெண்ணெய் :

19. மண்ணெண்ணெய் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் எல்லாக் குடும்ப அட்டைகளுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறது. இத்துடன் சென்னை நகரில் 964 கை வண்டிக்காரர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 1,812 கைவண்டிக்காரர்களுக்கும் விடுமுறை நாட்கள் நீங்கலாக நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் முறையே 100 லிட்டர்கள் வீதம் 50 லிட்டர்கள் வீதமும், மண்ணெண்ணேய் பொது மக்களுக்கு வீதிகளில் குடும்பக் கார்டுகள் இல்லாமல் விற்பனை செய்ய வழங்கப்படுகிறது. தங்கள் பிழைப்பிற்கு இத் தொழிலையே நம்பியுள்ள 2,528 தனிப்பட்ட உரிமதாரர்கள் ஒவ்வொருவருக்கும் மனிதாபிமான அடிப்





படையில் 500க்கும் மேற்படாத குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு அவர்கள் மூலம் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

20. தமிழகத்தின் மண்ணெண்ணெய் தேவை மாதம் ஒன்றுக்கு சுமார் 44,000 டன்களாகும். தமிழகத்தின் மண்ணெண்ணெய் தேவையை ஓரளவுக்கு சமாளிக்க மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களுக்குக் குறையாமல் ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு வேண்டியுள்ளது. மத்திய அரசு தற்போது மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை மாத அடிப்படையிலன்றி பருவ கால அடிப்படையில் செய்கிறது. கோடை காலம், மழைக் காலம், குளிர்காலம் என்று நான்கு மாதங்கள் கொண்ட ஒவ்வொரு பருவத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு பருவத்தில் நான்கு மாதங்களுக்கும் ஒதுக்கீடு ஒரே அளவுதான் இருக்கும். கடந்த குளிர் கால பருவத்தில் (நவம்பர் 1981 முதல் பிப்ரவரி 1982வரை) மாதம் ஒன்றுக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 35,000 டன்கள் ஆகும். வரும் கோடை காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அளவு 34,000 டன்களாகும். தமிழ் நாட்டில் தற்போது மண்ணெண்ணெய் பற்றாக்குறை இல்லை.

21. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு அரசும் பிறமாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களும் மண்ணெண்ணெய் மொத்த விற்பனை விலை, சில்லறை விற்பனை விலை ஆகியவற்றை சட்ட ரீதியாக நிர்ணயித்து அறிவிப்பு செய்கிறார்கள். மண்ணெண்ணெய் கிடங்கிலிருந்து எடுத்துச் செல்ல வேண்டிய தூரத்தைப் பொறுத்து ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை சென்னையில் ரூபாய் 1.84 முதல் இராமநாதபுரத்தில் ரூபாய் 2.05 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது மண்ணெண்ணெய் பெரும்பாலும் ஏழை மக்களால் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதால் விற்பனை வரியைக் குறைத்து மேற்கண்ட சில்லறை விலையில் லிட்டருக்கு 6 காசுகள் வீதம் 1982 மார்ச்சு திங்கள் முதல் நாள் முதல் குறைத்து அரசு நிர்ணயித்துள்ளது.

22. தொழிற்சாலைகள் மற்றும் மொத்த நுகர்வோரின் மண்ணெண்ணெய் தேவையை ஆராய்ந்து அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் அளவு குறித்து அறிவுரை வழங்க ஆலோசனைக் குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுக்களில் எண்ணெய் நிறுவன வல்லுநர் ஒருவர் உறுப்பினராக செயல்படுவார். இவையன்றி, மண்ணெண்ணெயை எல்லாப் பகுதி மக்களுக்கும் சீராகவும், சமமாகவும் நியாய விலையில் விநியோகிப்பது குறித்தும், மண்ணெண்ணெய் நுகர்வோர், விநியோகிப்பாளர்கள் பிரச்னைகள் குறித்தும் ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகள், சில்லறை விநியோகிப்பாளர்கள், மொத்த நுகர்வோர் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் அடங்கிய '' ஆலோசனைக் குழு ஒன்றை மாநில அளவில் அரசு அமைத்து உள்ளது.

[1982 மார்ச் 12

வெளிச்சந்தை சர்க்கரை :

23. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வெளி அங்காடி சர்க்கரையை வாங்கி, அதிக அளவில் நுகர்வோர்க்கும், பொதுமக்களுக்கும் வழங்குகிறது. திருமணங்களுக்கு 2 குவிண்டால் அளவுக்கு மேற்படாமலும், இதர நிகழ்ச்சிகளுக்கு 25 கிலோ கிராம் அளவிற்கு மேற்படாமலும் வெளிச்சந்தை சர்க்கரையை இக்கழகம் வழங்குகிறது. கோட்ட வருவாய் அதிகாரிகளும், மாவட்ட விநியோக அதிகாரிகளும், மாவட்ட வருவாய் அதிகாரிகளும், கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், இச்சர்க்கரை வழங்கும் அனுமதிச் சீட்டு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வெளிச்சந்தை சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, வெளிச் சந்தை விலையை விடக் குறைவானது. இவ்வாறு இக்கழகம் வெளிச்சந்தை சர்க்கரை விநியோகத்தை மேற்கொண்டதால் வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை உயராமல் சீராக இருக்க வகை செய்ய முடிந்தது. இவ்வாறு வெளிச்சந்தையில் சர்க்கரை விலை உயராமல் இந்த அரசு தடுத்ததை மத்திய அரசு பாராட்டியுள்ளது.

வனஸ்பதி :

24. வனஸ்பதி உற்பத்தியாளர்களுடன் மத்திய அரசு கலந்துரையாடியதன் விளைவாக, 16.5 கிலோ கொண்ட ஒரு டின் வனஸ்பதியை ரூபாய் 192-க்கு உற்பத்தித் தொழிற்சாலை (ex fac.oiy) விலையிலேயே விற்க அவர்கள் இசைந்துள்ளனர்.

25. நுகர்வோர்க்கு வனஸ்பதி நியாயமான விலையில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகும் வனஸ்பதியில் 70 விழுக்காட்டினை தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளின் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 13.35 என்ற விலைக்கு விற்பனை செய்ய இந்த அரசு ஆணையிட்டு உள்ளது. குடும்ப அட்டை வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 2 கிலோவிற்கு மேற்படாமல் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறது. நுகர்வோர்க்கு வனஸ்பதி விற்பனை செய்ய வேண்டி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் வனஸ்பதி உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.



1982 மார்ச் 12]

IV. கிராமப்புற நியாய விலைக் கடைகள் :

26. கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கும் இன்றியமை
யாப் பொருட்கள் வழங்கும் பொருட்டு, இந்த அரசு 1977ஆம்
ஆண்டு ஜூன் திங்களில் பொறுப்பேற்றதும், ஒவ்வொரு வருவாய்
கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை ஏற்படுத்தும் திட்டத்தை
அறிவித்தது. ஜூன் 1977-க்கு முன்பாக, 8,576 நியாயவிலைக்
கடைகளே இருந்தன. இந்தத் திட்டத்தின்படி, தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகம் 4,082 நியாயவிலைக் கடைகளைத்
தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி, தென் ஆற்காடு மாவட்டங்
களில் திறந்துள்ளது. மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்
கள் 6,660 கடைகளைத் திறந்துள்ளது. ஜூன் 1977 க்கு முன்ன
தாக திறக்கப்பட்ட கடைகள், பருப்பு, எண்ணெய், மிளகாய்
போன்ற பிற இன்றியமையாப் பொருட்களையும் விற்பனை செய்
யும் பலமுனைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன. மாநிலத்தில்
தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 4876
நியாயவிலைக் கடைகளையும், கூட்டுறவுச் சங்கங்கள் 12,593
கடைகளையும், பிற நிறுவனங்கள் 68 கடைகளையும் நடத்து
கின்றன.

27. நியாய விலைக் கடைகளில் இருக்கும் குறைபாடுகளைத்
தவிர்க்கும் பொருட்டு, வருவாய்த்துறை அதிகாரிகளும், உணவுப்
பொருள் வழங்குதுறை அதிகாரிகளும், உணவுப் பொருள் வழங்கு
துறையின் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் மற்றும் விரிவு
அலுவலர்கள், கிராம சேவகர்கள் போன்ற பிற துறை அலுவலர்
களும் இக்கடைகள் குறித்த நேரத்திற்குத் திறப்பதற்கும்
பொருட்கள் நுகர்வோர்க்குக் கிடைக்கவகை செய்யும் பொருட்டும்
இக்கடைகளை, பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வட்ட வழங்கல் அதிகாரியும் மாதம் ஒன்றுக்கு
குறைந்தது 20 கடைகளையாவது ஆய்வு செய்ய வேண்டும் என்
றும், இந்த ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மறு ஆய்வு
செய்ய வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த
நியாயவிலைக் கடைகள் ஒழுங்காக நடைபெறுவதைக் கண்கா
ணிக்க எல்லா மாவட்டங்களிலும் வட்ட அளவில் குழுக்கள்,
அமைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், பொது விநியோக
முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை
வழங்க மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க
ஆணையிடப்பட்டு உள்ளது. மாநில அளவில், தலைமைச் செய
லாளரைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக்குழு ஒன்று அமைக்
கப்பட்டுள்ளது. இக்குழு அவ்வப்போது கூடி, கிராமப்புற நியாய
விலைக் கடைகள் செயல்படும் திட்டத்தை மறு ஆய்வு செய்கிறது.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கிராமப்புற

[1982 மார்ச் 12

நியாய விலைக் கடைகளின் 1981 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை ரூபாய் 37 கோடி. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் கடைகளின் மொத்த விற்பனை ரூபாய் 78 கோடி. இந்த இரு நிறுவனங்களின் மொத்த விற்பனை ரூபாய் 115 கோடி.

*பொது விநியோக முறையில் ஏற்படும்பொதுப் பிரச்சினைகள் :*

28. நியாயவிலைக் கடைகளில் கூட்டம் அதிகம் இருப்பதாகவும், குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் பொருட்களை வாங்க பல மணி நேரங்கள் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் புகார்கள் வந்தன. ஒவ்வொரு கடையிலும் 2,000 குடும்ப அட்டைக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்றும், இந்த அளவுக்கு மேல் உள்ள அட்டைகளுக்குக் கூடுதல் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் கூடுதல் கடைகளைத் திறக்க முயற்சி எடுத்து வருகின்றன. இக்கூடுதல் கடைகளைத் திறக்க தகுந்த கட்டிடங்கள் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளன. மேலும், இக்கட்டிட உரிமையாளர்கள் மிக அதிக வாடகை கேட்கிறார்கள்.

*சென்னை நகரில் கூடுதல் மண்டல அலுவலகங்கள் திறப்பு :*

29. 1981ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்கு முன்பு குடும்ப அட்டை வழங்கவும், கட்டுப்பாடு ஆணைகளை அமல் படுத்தவும் சென்னை நகரம், ஜார்ஜ்டவுன், பெரம்பூர், நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை மற்றும் சென்னை புறநகர்ப் பகுதி என ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மக்கள் தொகை பெருக்கத்தாலும், சென்னைப் புறநகரில் புதுக்குடியிருப்புகள் உருவானதாலும் இந்த ஐந்து மண்டல அலுவலகங்கள் பொது மக்கள் தேவைக்குப் போதுமானதாக இல்லை. எனவே; பொது மக்களுக்கு மிக நல்ல முறையில் சேவை செய்யவும், அலுவல்கள் விரைவில் நடைபெறவும் சென்னைநகரில் கூடுதல் ஐந்து மண்டல அலுவலகங்கள், ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையாளர் தலைமையில் தண்டையார்ப்பேட்டை, புரசைவாக்கம் ,தியாகராயநகர் அண்ணா நகர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் திறக்கப்பட்டு உள்ளன.

30. இப்பொழுது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 1975-ஆம் ஆண்டு வழங்கப்பட்டவை. அவற்றிற்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகள், குடும்பங்கள் இன்றுள்ள நிலைக்குத் தக்கவாறு, வழங்கப்பட வேண்டியது அவசியம். ஆகவே, மாநில முழுவதும் உள்ள குடும்பங்களைக் கணக்கெடுத்து புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. குடும்ப அட்டைகளை ஆண்டு தோறும் புதுப்பிக்கும் முறையைத் தவிர்க்கும்



19 82மார்ச் 12]

பொருட்டு அவைகள் ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்படி புத்தக வடிவில் தக்க உறையுடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள் ளது. இந்த அட்டையில் குடும்பத்தில் உள்ள அனைவருடைய பெயர்களும் இடம் பெறும். எனவே, இந்த அட்டையை பெற் றுக் கொண்டவர் தவிர மற்றவர்கள் தவறாக பயன்படுத்துவதைத் தடுக்க இது வகை செய்கிறது. குடும்பக்கணக்கெடுப்பை விரை வில் துவக்கி, முடிந்த அளவுக்கு துரிதமாக குடும்ப அட்டைகளை வழங்கும் பணி முடிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

V. இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு ஆணைகள் :

31. இன்றியமையாப் பண்டங்கள் நியாயமான விலைகளில் பொதுமக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யும் பொருட்டு பின்வரும் கட்டுப்பாடு ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது :—

1. தமிழ்நாடு நெல், அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

3. தமிழ்நாடு மணிலா, மணிலாப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

4. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

5. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

6. தமிழ்நாடு பயறுகள் (வர்த்தக் கட்டுப்பாடு) ஆணை, 1978.

7. தமிழ்நாடு சர்க்கரை (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1981.

32. மேற்கண்ட கட்டுப்பாடு ஆணைகளின் கீழ் மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் உரிமம் வழங்கும் முறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்றியமையாப் பொருட்களை வர்த்தகர்கள் முடக்கி வைத்துத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, வர்த்தகர்கள் ஒரே

சமயத்தில் கையிருப்பு வைத்துக்கொள்ளும் அளவிற்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வர்த்தகத்தைக் கண்காணிக்க ஒவ்வொரு வர்த்தகரும் தன்னுடைய வரவு, விற்பனை, இறுதிக் கையிருப்புக் காட்டும் அறிக்கைகளை கால முறைப்படி சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. உணவுப் பொருள் வழங்கு துறையில் கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்தும் அலுவலர்களும், உணவுப் பொருள் வழங்குதுறையின் குற்றப் புலனாய்வுத் துறையின் அலுவலர்களும் வர்த்தர்களின் வியாபார இடங்களை பார்வையிட்டு அவர்களில் கணக்குகளையும், இருப்புகளையும் சரிபார்த்து, தவறுகள் கண்ட இடத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். சர்க்கரை, மண்ணெண்ணெய் தவிர மற்ற எல்லா இன்றியமையாப் பொருட்களையும் உள்ளடக்கிய ஒரே உரிமம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்குரிய வரைவு ஆணை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

உணவுப் பொருள் வழங்கு துறையின் குற்றப் புலனாய்வுத்துறை.

33. உணவுப் பொருள் வழங்குதுறையின் குற்றப் புலனாய்வுத் துறைக் கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பைச் செய்கிறது. குறிப்பாக, இன்றியமையாப் பொருட்களின் இருப்பு அளவு, விலை மற்றும் இருப்புப் பட்டியல் வைத்தல், கணக்குகளை நிர்வகித்தல் ஆகியவற்றைக் கண்காணிக்கிறது. 1981 ஆம் ஆண்டில், இப்பிரிவு 1951 வழக்குகளைப் பதிவு செய்தது. அவற்றில் 179 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் 57 வழக்குகள் தண்டனையிலும், .. வழக்குகள் விடுதலையிலும் முடிந்தன. 95 வழக்குகள் இன்னும் விசாரணையிலிருக்கின்றன. மற்ற வழக்குகள் புலன் விசாரணையிலிருக்கின்றன. இதுவன்றி, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்களின் பதுக்கலை வெளிக்கொணர 1980 ஆம் ஆண்டு பதுக்கல் தடுப்புக்குழு ஒன்று இப்பிரிவில் அமைக்கப்பட்டது. சிமெண்ட் விநியோகத்தில் ஒழுங்கீனங்கள் மற்றும் கலப்படம் ஆகிய குற்றங்களைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் இக்குழு கவனிக்கிறது. 1981 ஆம் ஆண்டில் ரூபாய் 2.15 கோடி மதிப்புள்ள பொருட்கள் இத்துறையால் கைப்பற்றப்பட்டன. இதில் 1.16 கோடி மதிப்புள்ள நெல் மற்றும் அரிசியும் ரூபாய் 0.72 கோடி மதிப்புள்ள நிலக்கடலை, நிலக்கடலை எண்ணெய், பிண்ணாக்கு ரூபாய் 0.27 கோடி மதிப்புள்ள மற்ற பொருட்களும் அடங்கும். 1981 இல் அரசு கைப்பற்றிய பொருட்களின் மொத்த மதிப்பு ரூபாய் 16.14 இலட்சங்கள் ஆகும்.



VI. அரிசி ஆலைகளை நவீனமயமாக்குதல்:

34. உணவு தானியங்கள் விரயத்தைத் தவிர்க்கும் பொருட்டும், நெல்லிலிருந்து அதிக அளவில் தரமான அரிசி பெறவும், நெல் அரைவையில் கிடைக்கும் துணைப் பொருட்கள் முழுவதும் வேறு பொருட்கள் உற்பத்தி செய்ய பயன்படுத்தும் பொருட்டும் மத்திய அரசு அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தை 1970 ஆம் ஆண்டு மே திங்களில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்கு சட்ட வடிவம் கொடுப்பதற்காக 1959 ஆம் ஆண்டின் அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல் மற்றும் உரிமம் அளித்தல்) விதிகளில் திருத்தம் செய்தது. இத்திட்டத்தின் கீழ் அரிசி அரவை ஆலை உரிமையாளர் தன்னுடைய அரிசி அரவை ஆலையில் நெல்லிலிருந்து உமியைப் பிரிக்க இரப்பர் உருளைகள் அல்லது உமி நீக்கிக் கருவியும், நெல் சுத்தம் செய்யும் கருவியும், நெல்லைப் பிரிக்கும் கருவியும் நிறுவ வேண்டும். அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்க அனுமதிக்கப்பட்ட காலவரையறையை மத்திய அரசு அவ்வப்போது நீட்டிப்பளித்து வந்தது. இறுதியாக பல்வேறு வகை அரிசி அரவை ஆலைகளையும் கீழ்க் கண்ட நாட்களுக்குள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என ஆணையிட்டுள்ளது:—

| அரிசி அரவை ஆலை வகை. | நவீனப்படுத்த அளிக்கப்பட்ட காலவரையறை. |
|---|---|
| (1) | (2) |
| ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர், ஹல்லருடன் கூடிய ஷெல்லர், ஷெல்லர் வகை ஆலைகள். | 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ஆம் நாள். |
| வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒற்றை ஹல்லர் ஹலைகள். | 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள். |
| கூலி அரவை செய்யும் ஒற்றை ஹல்லர் ஆலைகள். | 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ம் நாள் |

இருப்பினும், மலை வாழ்மக்கள் வாழும் பகுதிகளில், மலைப் பகுதிகளிலும் உள்ள முன்பே உரிமம் பெற்ற கூலி அரவை செய்யும் ஒற்றை அல்லர் அரிசி ஆலைகளுக்கு மட்டும், இத்தகு ஒவ்வொரு ஆலைக்கும் மத்திய அரசின் முன் அனுமதியுடன், இத் திட்டத்திலிருந்து விலக்களிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரிசி அரைவை ஆலைகளை விரைவில் நவீனப்படுத்தவும்

[1982 மார்ச் 12

அதற்குத் தேவையான கடன் மற்ற வசதிகளை அரைவை ஆலை உரிமையாளர்கள் பெற வழிகாட்டும் பொருட்டும் தேவையான மற்ற உதவிகளை அளிக்கும் பொருட்டும் உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையர் அலுவலகத்தில் உணவுப் பொருள் வழங்குதுறை இணை ஆணையரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பலமுறை கூடி அரிசி அரைவை ஆலைகளை விரைவில் நவீனப்படுத்துவதற்குரிய வழி முறைகள் பற்றி விவாதித்துள்ளது. இருக்கின்ற கட்டிடங்களில் மாற்றம் செய்ய கூடுதல் இடவசதியில்லாத அரிசி அரைவை ஆலைகளில் தக்க பாதுகாப்பு வசதிகளைச் செய்திருந்தால் நவீனமய மாக்கத் தேவையான கருவிகளை நிறுவ கட்டிடத்தில் மாற்றம் செய்யுமாறு வற்புறுத்த வேண்டாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

35. இம்மாநிலத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர், அல்லருடன் கூடிய ஷெல்லர், ஷெல்லர் வகை அரிசி அரைவை ஆலைகளின் மொத்த எண்ணிக்கை 392. அவற்றில் 270 ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒற்றை அல்லர் அரிசி அரைவை ஆலைகளின் மொத்த எண்ணிக்கை 3,023. அவற்றில் 338 ஆலைகள் நவீனமயமாக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 2,685 இவ்வகை ஆலைகள் நவீனமயமாக்கப்படவேண்டியவை. தமிழகம் முழுவதும் உள்ள மொத்த அரிசி அரைவை ஆலைகள் 16,476. அவற்றில் சுமார் 13,000 ஆலைகள் கூலி அரைவை ஆலைகள்.

## VII. விலைவாசி நிலைமை.

36. தமிழ்நாட்டில் புழுங்கல் அரிசியே முக்கிய உணவாகும். பிப்ரவரி 1982 இல் சாதாரண ரக புழுங்கல் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.40 முதல் ரூ. 3.60 வரை நிலவியது. அரிசியின் விலை ஓரளவு சீரான நிலையில் உள்ளது எனக் கூறலாம். குறுவை அரிசி கடைக்கு வரத் தொடங்கிய பிறகு சாதாரண ரக புழுங்கல் அரிசியின் விலை தொடர்ந்து இறங்கி வருகிறது. போக்குவரத்துக் கட்டண உயர்வாலும், பயிரிடுவதில் ஏற்பட்டுள்ள மிகுதியான செலவினங்களாலும் வெளிச் சந்தையில் நெல்லின் விலை ஏறியதாலும், 1982 ஆம் ஆண்டில் அரிசியின் விலை சிறிது கூடியிருக்கிறது. சம்பா அறுவடை பெருமளவில் நடைபெற்று வருகிறது. சம்பா அரிசி சந்தைக்கு வரத் தொடங்கியதும் வருகிற மாதங்களில் விலைகள் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிச் சந்தையில் அரிசி போதுமான அளவு கிடைக்கிறது. மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லாமல் திருப்தியளிக்கும் நிலைமையில் உள்ளது.



982 மார்ச் 12]

சிறு தானியங்கள் :

37. சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்களின் விலை 1982 ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.56-லிருந்து ரூபாய் 1.76 வரையில் நிலவியது. சிறு தானியங்களின் விலைகளும் இப்பொழுது இறங்குமுகமாக உள்ளன. சந்தையில் இத்தானியங்கள் கிடைக்கவில்லை என்றோ அல்லது பற்றாக்குறை என்றோ புகார்கள் இல்லை.

கோதுமை :

38. தமிழ்நாடு கோதுமை தேவைக்கு கோதுமை உற்பத்தி செய்யும் வட மாநிலங்களைச் சார்ந்துள்ளது. வெளிச் சந்தையில் கோதுமை கிலோ ஒன்றுக்கு சுமார் ரூபாய் 2.45 என்று விற்கப் படுகிறது. இருப்பினும் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு லெவி கோதுமை கிலோ ரூபாய் 1.55 என்ற விலைக்கு வழங்கப்படுகிறது.

பருப்பு வகைகள் :

39. பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் இம்மாநிலம் ஆண்டொன்றுக்கு மொத்தம் 5.35 இலட்சம் டன்கள் அளவிற்கு கீழ்க்கண்டவாறு பற்றாக்குறையாக உள்ளது.

| பருப்பின் பெயர். | தேவை. | உற்பத்தி. | பற்றாக் குறை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (இலட்சம் டன்களில்.) | | |
| 1 துவரம் பருப்பு .. | 2.00 | 0.16 | 1.84 |
| 2 உளுத்தம் பருப்பு .. | 1.50 | 0.34 | 1.16 |
| 3 பச்சைப் பருப்பு .. | 0.50 | 0.11 | 0.39 |
| 4 கடலைப் பருப்பு .. | 2.00 | 0.04 | 1.96 |
| மொத்தம் .. | 6.00 | 0.65 | 5.35 |

[1982 மார்ச் 12

இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் போன்ற பருப்பு உற்பத்தி செய்யும் வட மாநிலங்களையே நமது மாநிலம் நம்பியுள்ளது. உளுத்தம்பருப்பு தவிர ஏனைய பருப்புகள் உற்பத்தியாகும் மாநிலங்களில் பயிர்கள் நல்லபடி இருக்கிறது என்று வணிக வட்டாரத்திலிருந்து தெரிய வருகிறது. அறுவடையை எதிர்பார்த்து பருப்பு விலைகள் சந்தையில் குறையத்துவங்கியிருக்கிறது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் பருப்பு வியாபாரம் செய்கிறது. பருப்பு உற்பத்தி செய்யும் வட மாநிலங்களிலிருந்து இக்கழகம் மொத்தம் ரூபாய் 217 இலட்சம் மதிப்புள்ள 2,770 டன்கள் துவரம் பருப்பும், 2,605 டன்கள் உளுத்தம்பருப்பும் கொள்முதல் செய்திருக்கிறது. இந்தப் பருப்பு வகைகளை இக்கழகம் தனது நியாய விலைக் கடைகள் மூலம் வெளிச் சந்தையில் விற்கும் விலைகளை விடக் குறைந்த விலையில் விற்று வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் நியாய விலைக் கடைகள் மூலம் விற்க வெளிச் சந்தையில் பருப்பு வகைகளை கொள்முதல் செய்கின்றன. வட மாநிலங்களில் மார்ச்சுத் திங்கள் இடையில் அறுவடை துவங்கியவுடன் இன்னும் பருப்பு வகைகளின் விலைகள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிச் சந்தை சர்க்கரை :

40. வெளிச்சந்தையில் சர்க்கரை கிலோ ரூபாய் 5.76 என்று இப்பொழுது விற்கப்படுகிறது. இருப்பினும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வெளிச்சந்தை சர்க்கரையை கிலோ ரூபாய் 5.00 என்ற விலையில் வழங்கி வருகிறது. சர்க்கரை ஆலைகள் வெளிச்சந்தை சர்க்கரையில் 35 விழுக்காடு வர்த்தகர்களுக்கு விற்று வருகின்றன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் விலையேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு வெளிச் சந்தையில் விற்க போதிய வெளிச்சந்தை சர்க்கரை முடையிருப்பில் இருக்கிறது.

சமையல் எண்ணெய் வகைகள் :

41. சாதாரண ஆண்டில் தமிழ்நாடு கடலெண்ணெய் உற்பத்தியில் ஓரளவு உபரி மாநிலமாகும். கடலெண்ணெய்க்கும் ஏனைய கடலைப் பொருட்களுக்கும் ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதில் தடையேதும் இல்லை.



982 மார்ச் 12]

ற்ற சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்தமட்டில் இம் மாநிலத்தில் மிகுதியாக பற்றாக்குறையே உள்ளது என்பதைக் ழ்க்கண்ட புள்ளி விவரங்கள் மூலம் காணலாம்.—

| எண்ணெயின் பெயர். | தேவை. | கிடைக்கும் அளவு. | பற்றாக் குறை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சம் டன்களில்.) | |
| கடலெண்ணெய் .. | 1.74 | 1.44 | 0.30 |
| நல்லெண்ணெய் .. | 0.96 | 0.59 | 0.37 |
| தேங்காய் எண்ணெய். | 0.30 | 0.15 | 0.15 |
| மொத்தம் .. | 3.00 | 2.18 | 0.82 |

1979-80 ஆம் ஆண்டில் 10.43 இலட்சம் டன்களாயிருந்த நிலக்கடலை உற்பத்தி 1980-81ஆம் ஆண்டில் 7.02 இலட்சம் டன்களாகக் குறைந்துள்ளது. அக்டோபர் 1981 வரையுள்ள மதிப்பீட்டின்படி கடந்த ஆண்டில் இதே காலத்தில் 5.06 டன்களாக இருந்த உற்பத்தி 4.67 இலட்சம் டன்களாகக் குறைந்துள்ளது. கடலை எண்ணெய் நடப்பு விலை கிலோ ஒன்று 13.00 ரூபாயிலிருந்து 14.90 ரூபாய் வரை நிலவி வருகிறது. கடலெண்ணெய் விலையேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கடலெண்ணெயை வாங்கி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடம் விருத்தாச்சலம், திருவண்ணாமலை ஆகிய இரு இடங்களில் கடலெண்ணெய் தயாரிக்கும் இரு தொழிற்சாலைகள் உள்ளன. இந்த இணையம் நிலக் கடலையைவாங்கி எண்ணெய் ஆட்டி நியாயமான விலையில் 'டான்பெட்' (TANFED) என்ற வணிகக் குறியின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்கிறது.

42. நல்லெண்ணெயைப் பொறுத்த மட்டில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து இறக்குமதியை இம்மாநிலம் நம்பியுள்ளது. தற்போது நல்லெண்ணெய் கிலோ ரூபாய் 13.50 முதல் ரூபாய் 14.40 வரை விற்கப்படுகிறது. பிப்ரவரி 1982-ல் இதன் விலை சிறிதளவு இறங்கியிருக்கிறது.

[1982 மார்ச் 12

43. தேங்காயெண்ணெயைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் தேவைக்கு கேரள மாநிலத்தையே நம்பியுள்ளது. தற்போது தேங்காயெண்ணெய் கிலோ ஒன்று ரூபாய் 16.39-க்கு விற்கப்படுகின்றது. கடந்த நான்கு மாதங்களில் இதன் விலை இறங்குமுகமாக உள்ளது.

உணவு துணைப் பொருட்கள் (நறுமணப் பொருட்கள்):

44. மிளகாய் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 13.40 என்ற விலைக்கு தற்போது விற்கப்படுகிறது. இப்பயிர் விளையும் இடங்களில் உற்பத்தித் தவறியதே இந்த விலையேற்றத்திற்குக் காரணமாகும். ஆந்தரப் பிரதேசத்தில் இவற்றின் விளைச்சல் அதிகமாக உள்ளதால், தமிழகத்திற்கு இவற்றின் வரத்து ஓரளவு அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் மார்ச்சு 1982-ல் மிளகாய் அறுவடை இருப்பதால் இதன் விலை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புளியின் நடப்பு விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 7.70. இம்மாநிலம் புளியைப் பொறுத்தமட்டில் மொத்தத் தேவையில் 70 விழுக்காடு பற்றாக்குறையாக உள்ளது. இப்பற்றாக்குறை கர்நாடகம் மற்றும் அதிகமாக விளையும் வட மாநிலங்களிலிருந்து இறக்குமதியின்மூலம் ஈடு செய்யப்படுகிறது. கொத்துமல்லி (தனியா)யின் விலை இறங்குமுகமாக உள்ளது.

உணவு விடுதிகளில் பண்டங்களின் விலைகள்:

45. தமிழ்நாடு உணவு விடுதி அதிபர்களின் சங்கப் பிரதிநிதிகள் தாமாகவே 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஒப்புக்கொண்ட விலைகளில் இட்லி, காபி, தேனீர் ஆகிய மூன்று உணவுப் பண்டங்களையும் விற்க, அவர்களுடன் உணவுப் பொருள் வழங்கு துறை மற்றும் அரசு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பின்னர், உணவு விடுதி அதிபர்கள் மேற்கூறிய பண்டங்களின் விலையைத் தன்னிச்சையாக உயர்த்தி விட்டார்கள். எனவே, அவர்களுக்கு அரசு நிர்ணயித்த விலைகளில் வழங்கப்பட்ட இன்றியமையாப் பொருட்கள் நிறுத்தப்பட்டன. உணவுப் பண்டங்கள் தயாரிக்கத் தேவையான மற்ற செலவினங்கள் கூடிக்கொண்டே போவதால் உணவுவிடுதி அதிபர்கள் உணவுப்பண்டங்களின் விலையேற்றம் தவிர்க்க இயலாததொன்று என முறையிட்டனர். மறுபடி நடத்திய பேச்சு வார்த்தையின்போது மேற்கூறிய மூன்று உணவுப் பண்டங்களையும் ஏற்கனவே ஒப்புக்கொண்ட விலையில் விற்க அவர்கள் ஒப்புக்கொண்டால் அரிசி, வெளிச் சந்தை சர்க்கரை, மைதா, ரவை மற்றும் மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களை அரசு நிர்ணயித்த விலைக்கு மீண்டும் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. இட்லி, காபி, தேநீர் ஆகியவற்றின் விலைகளில் மட்டும் 5 காசு குறைப்பதாக அரசுக்குத் தெரிவித்துள்ளனர். இது அரசின் ஆராய்வில் உள்ளது.



1982 மார்ச் 12]

வாங்கி விநியோக்கிறது. இக் கழகம் போதிய வெளி அங்காடி சர்க்கரையை முடையிருப்பில் வைத்திருந்ததால் வெளிச்சந்தையில் விலையை உயராமல் தடுக்க உதவியது. இந்த இருப்பு அதிக அளவு சர்க்கரை நுகர்வோருக்கும், திருமணம் மற்றும் மதச் சம்பந்தமன நிகழ்ச்சிகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ. 5 என்ற விலைக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

52. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பாமோலின் எண்ணெயை அரசின் மொத்த முகவராகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது. 1981—82 எண்ணெய் ஆண்டில் இக் கழகம் மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்டப்பட்ட 43,400 மெட்ரிக் டன்கள் பாமோலின் எண்ணெய் முழுவதும் கொள்முதல் செய்து விநியோகித்தது. பாரத வணிக நிறுவனம் இந்த எண்ணெயை சென்னை துறைமுகத்தில் மட்டும் வழங்குகிறது. இங்கிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் சென்று இக்கழகத்தின் நியாயவிலைக் கடைகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமும் வழங்கி வருகிறது. சென்னை நகரில் இந்த எண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது பம்பாய்த் துறைமுகத்திலிருந்தும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொண்டுவந்தது.

53. கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருநெல்வேலி, தர்மபுரி, தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களில் 4,082 நியாய விலைக் கடைகளைத் திறந்து நடத்தி வருகிறது. இக்கடைகள் மூலமாக 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்களிலிருந்து டிசம்பர் திங்கள் முடிய இக்கழகம் செய்த மொத்த விற்பனை ரூ. 37 கோடி, அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் கோதுமை, கோதுமைப் பொருட்கள் போன்ற கட்டுப்பாட்டுப் பொருட்கள் மட்டுமல்லாது, பருப்புவகைகள், மிளகாய், புளி ஆகிய பொருட்களையும் கிராமப்புற நியாய விலைக்கடைகள் மூலம் இக்கழகம் வழங்கி வருகிறது.

54. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சேமிப்புக் கிடங்கு வசதிகளைத் தானே அமைத்துக்கொண்டுள்ளது. 2·18 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறனுள்ள 122 கிடங்குகள் சொந்தமாகவும், 2·33 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறனுள்ள 862 வாடகை கிடங்குகளும் இக்கழகம் தன்வசம் வைத்துளளது. இதைத்தவிர தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து நெல் மற்றும் அரிசியை இருப்பு வைக்க சுமார் 43,750 மெட்ரிக் டன்கள் கொள்திறன் சேமிப்புக் கிடங்கு வசதிகளைப் பெற்று பயனடைந்து வருகிறது. 1981—82 ஆம் ஆண்டில் 16,500 மெட்ரிக் டன்கள் கொள்திறனுள்ள கிடங்குகளை இக்கழகம கட்டி

முடித்துள்ளது. மேலும் 1982–83 ஆம் ஆண்டில் 42,600 மெட்ரிக் டன்கள் கொள்திறனுள்ள கிடங்குகளை கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

55. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுப் பிரிவிலிருந்து 13 நவீன அரிசி ஆலைகளை எடுத்து அவற்றில் குறிப்பிடத் தக்க சீர்திருத்தங்கள் செய்துள்ளது. இந்த நவீன அரிசி ஆலைகளின் மொத்த அரவைத் திறன் 1978–79 ஆம் ஆண்டில் 1·10 இலட்சம் டன்களாக இருந்ததை 1981–82 ஆம் ஆண்டில் 1·45 இலட்சம் டன்களாக உயர்த்தியுள்ளது. முன்பு நவீன அரிசி ஆலைகளில் உலர வைப்பதற்கு எரிகலன் எண்ணெய் (Furnace oil) பயன் படுத்தப்பட்டது. பின்னர் எரிகலன்கள் எரிவதற்கு உமி பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக 1981 ஆம் ஆண்டு சுமார் திங்கள் வரை ரூ. 1·53 கோடி சேமிப்பு கிடைத்தது. நவீன அரிசி ஆலைகளின் மொத்த அரவைத்திறனில் சுமார் 92 விழுக்காடு திறன் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் இக்கழகம் கொள்முதல் செய்யும் நெல்லை அரைப்பதற்கு பெருமளவு தனிப்பட்ட அரவை முகவர்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அவ்வாறின்றி தன்னிடமே போதிய அரவை வசதியை ஏற்படுத்திக்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் தனக்குச் சொந்தமாக மிகப் பெரிய நவீன அரிசி ஆலை ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 200 இலட்சம் செலவில் மணிக்கு 4 மெட்ரிக் டன்கள் நெல் அரைக்கும் அரைவைத் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது.

56. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுமுதல் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் 1·88 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட சேமிப்புக் கிடங்குகளைச் சொந்தமாகக் கட்டியுள்ளது.. உதகமண்டலம், தர்மபுரி, கடலூர்., மதுரை, நாகர்கோயில் ஆகிய இடங்களில் தனக்குச் சொந்தமாக அலுவலகக் கட்டிடங்களையும் கட்டி முடித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சீபுரம், ஆகிய இடங்களில் சொந்தமாக அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நுகர்பொருள் வாணிபக்கழகம் உத்தேசித்துள்ளது.

57. மேலும் இக்கழகம் சென்னையில் 90,000 லிட்டர் மண்ணெண்ணெய் இருப்பு வைப்பதற்கு சேமிப்புத் தொட்டிகள் கட்டியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிலும் வட ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 30,000 லிட்டர் கொள்ளளவிற்கு மண்ணெண்ணெய் சேமிப்புத் தொட்டிகள் அமைக்கப்படும். 1982–83 ஆம் ஆண்டில் நெய்



வேலி மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் அதிவேக எண்ணெய் விற்பனைக் கிடங்குகளையும், பட்டுக்கோட்டையில் பெட்ரோல் கிடங்கு ஒன்றையும் துவக்க இக்கழகம் உத்தேசித்துள்ளது.

58. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை அறுவடைப் பருவத்தில் தேவைப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்கத் தேவையான கட்டிடங்கள் வாடகைக்கு கிடைப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்குத் தகுந்த கட்டிடங்களைக் கட்டுவதற்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் உத்தேசித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் 75 இடங்களில் போதிய சேமிப்பு மற்றும் உலரவைக்கும் வசதிகளுடன் கூடிய நேரடிக் கொள்முதல் நிலையங்களை கட்டுவதற்கு இக்கழகம் உத்தேசித்துள்ளது. அந்நேரடிக் கொள்முதல் நிலையங்களில் சில்லறை அங்காடிகளும அமைக்கப்படும்.

59. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1976–77 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1977–78 ஆம் ஆண்டின் கணக்குகளின் தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. 1978–79 ஆம் ஆண்டு கணக்குகளின் தணிக்கை நடைபெற்று வருகிறது. 1979–80, 1980–81 ஆகிய இரண்டு ஆண்டுகளின் கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்களை நியமனம் செய்யுமாறு, கம்பெனி சட்ட வாரியத்திடம் கேட்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டு இறுதிவரை உள்ள கணக்குகள் தொகுக்கப்பட்டு தணிக்கை செய்வதற்கு ஆயத்தமாக உள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மொத்த விற்பனை ரூ. 202·89 கோடி. அவ்வாண்டில் இழப்பு ரூ. 2·28 கோடி. இந்த இழப்பிற்குக் காரணம் இக்கழகம் அரிசியை பொது வினியோக முறையில் கட்டுப்படியாகும் விலைக்குக் குறைவாக அரசு ஆணைப்படி விற்று வருகிறது. அரிசியின் கட்டுப்படியாகும் விலைக்கும் சில்லறை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியமாக வழங்கினால் இந்த இழப்பு இன்றி இலாபம் கிடைக்கும். 1981–82 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ. 300 கோடியைத் தாண்டும் என்றும், 7 இலட்சம் டன்கள் அரிசியை கட்டுப்படி ஆகும் விலைக்குக் குறைவாக விற்பதால் ரூ. 35 கோடி இழப்பு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[1982 மார்ச் 12

## IX. தமிழ்நாட்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

60. விவசாயிகள், வர்த்தகர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் இன்றியமையாப் பொருட்களை இருப்பு வைப்பதற்கும், இருப்பு இழப்பைத் தடுப்பதற்கும் சேமிப்புக் கிடங்கு வசதிகளை தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அளித்து வருகிறது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் ஆறுகோடி, மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் தமிழக அரசும் தலா 50 விழுக்காடு என்ற அடிப்படையில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மொத்தம் ரூ. 351 இலட்சங்கள், மேற்கண்ட இரு பங்குதாரர்களும், 1981–82 ஆம் ஆண்டில் மேலும் 36 இலட்சங்கள் வழங்கியுள்ளார்கள். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய இந்த நிறுவனத்திடம் 51 இடங்களில் மொத்தம் 2·15 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறன்கொண்ட 78 கட்டப்பட்ட கிடங்குகள் உள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் கூடுதலாக 25,750 மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட சேமிப்புக் கிடங்குகளை கட்டத் திட்டமிட்டு இதுவரை 15,000 மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட கிடங்குகளை இந்த நிறுவனம் கட்டி முடித்துவிட்டது. எஞ்சிய கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1981–82 ஆம் ஆண்டு இறுதியில் இந் நிறுவனத்திடம் 2·26 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட சேமிப்புக் கிடங்குகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 84 இலட்சம் செலவில் 20,500 மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

61. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வசம் மொத்தம் 2·83 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்திறன் கொண்ட சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. அவற்றில் சொந்த கிடங்கு வசதியின் அளவு 2·15 இலட்சம் மெட்ரிக் டன்கள் வாடகைக்குக் கிடங்குகளின் கொள்திறன் 68,000 மெட்ரிக் டன்கள் ஆகும். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று பயன்படுத்தப்பட்ட கொள்ளளவு 2·50 இலட்சம் டன்கள் ஆகும். சேமிப்புக் கிடங்குகளில் முறைகேடுகள் நடப்பதைத் தடுக்கும் பொருட்டு திடீர் சோதனைகள் செய்யவும், இருப்பை நிறுத்து சரிபார்க்கவும் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்முதல் ஒழுக்கக் கண்காணிப்பு ஆய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.



82 மார்ச் 12]

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1975–76 ஆம் ஆண்டு முதல் ஆதாயம் ஈட்டி வருகிறது என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். :—

| ஆண்டு. | நிகர இலாபம். |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) |
| 1975–76 .. .. .. .. .. | 28·85 |
| 1976–77 .. .. .. .. .. | 18·52 |
| 1977–78 .. .. .. .. .. | 42·59 |
| 1978–79 .. .. .. .. .. | 38·63 |
| 1979–80 .. .. .. .. .. | 22·35 |
| 1980–81 .. .. .. .. .. | 24·62 |
| 1981–82 .. .. .. .. .. | 58·00 (மதிப்பீடு) |

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கணக்குகள் 1980–81 ஆம் ஆண்டு வரை தணிக்கை செய்யப்பட்டு விட்டன. 1981–82 ஆம் ஆண்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுகிறது.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

**சனிக்கிழமை, 1982 மார்ச் 13.**

துன்மதி, மாசி 29, திருவள்ளுவர் 2013.

சென்னை (சயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினை யும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

### 1. அறிவிப்பு

### இறுதித் துணை நிதி நிலை அறிக்கை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1981—82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையை, 22—3—1982 ஆம் தேதி திங்கட்கிழமை சட்ட மன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. தகவல், கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான பிரச்னைகள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம் மண்டைக்காட்டில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இன்றைக்கு விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல நீதிமன்றங்களில் தமிழ் மொழி பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம். இதுபற்றி மாமன்றத்திலே இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது, அரசாங்கம் உள்பட. அதை விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா எதிர்க்கட்சிக் காரர்களும் ஒரு கருத்தினை சொல்லியிருக்கிற காரணத்தினாலே ஒரு மணிக்கு இராஜக்காமங்கலம் பிரச்னையை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 13

திரு. வே. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 ஆம் தேதி சென்னை விமான நிலையத்தின் முன்பாக நடைபெற்ற போலீஸ் தாக்குதல் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் என்னுடைய உரிமை மீறப்பட்டிருப்பதாக ஒரு பிரச்னையைக் கொடுத்திருக்கிறேன். அதைச் சபையிலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் தமிழ் மொழி குறித்த பிரச்னையை திங்கள் கிழமையாவது எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## (3) வரவு-செலவுத் திட்டம் 1982–83—வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 21—மீனளம்

(ஆ) கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர்முதலியோர் நலன்.

(இ) கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. அடுத்து மானியக் கோரிக்கைகள் 21, 32 மற்றும் 35 ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம், பிற்பட்டோர் நலம், உணவு வளம் பற்றிய மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த மன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டன. அவை பற்றிய விரிவான விளக்கக் குறிப்புகளை அறிக்கைகள் மூலமாகப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். அறிக்கைகளிலே அந்தந்த துறைகள் பற்றிய, இதற்கு முன்னாலே நடைபெற்ற பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும், எடுத்த முடிவுகள் பற்றியும், இனி எடுக்கவிருக்கிற முடிவுகள் பற்றியும், அவற்றிலே விரிவாகவும் விளக்கமாகவும், மிகத் தெளிவாகவும் திட்பமாகவும் பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அறிக்கைகள் உறுப்பினர்களுடைய உடைமையாக இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதும், பார்க்காமல் இருப்பதும், அவற்றைப் படிப்



1982 மார்ச் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பதும், படிக்காமல் இருப்பதும், அவற்றை ஆராய்வதும், ஆராயாமல் இருப்பதும், அவற்றைக் கிழிப்பதும், எரிப்பதும் அவரவர்களுடைய இயல்பையும், மன நிலைமையையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, நான் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால் ஒருவருக்கு உடைமையாகக் கொடுத்ததற்குப் பிறகு அதை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பது அவரவர்களுடைய இயல்பையும், தன்மையையும் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது. மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்........

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, என்னுடைய இயல்பு அல்ல ; அதில் ஒன்றுமில்லை என்பதற்காகத்தான் கிழித்தேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீங்கள்அந்தச் செயலைச் செய்தபொழுது நான் பொறுமையாக இருந்தேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : என்னுடைய மனோபாவம் இயல்பு அல்ல. அதிலே ஒன்றுமில்லை என்பதற்காகக் கிழித்தேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைச் சொல்லி விட்டீர்கள். கிழித்து எரிவதும் எரியாமல் இருப்பதும் அவரவர்களுடைய மனோபாவத்தைப் பொறுத்தது. அவர்கள் கிழித்தெறிந்தார்கள். அந்தச் செயலை அவர்கள் செய்தபொழுது நான் பொறுமையோடு பார்த்துக்கொண்டு இருந்தேன். எனவே, அதுபற்றிய கருத்து விளக்கம் தரும்பொழுது அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருப்பதுதான் முறை.

மீன்வளம் பற்றிய அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கிழித்துப் போட்டார். அவரிடமிருந்து அவ்வளவைத்தான் நான் எதிர்பார்க்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்றால், இந்த நிதி நிலை அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்றும், மீனவர் நலனில் இந்த அரசு அக்கறை கொள்ளவில்லை என்றும் முடிவுக்கு வருவதற்கு ஒரு உறுப்பினருக்கு உரிமையிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்டவருக்கு விளக்கங்கள் அளித்துத் தெளிவுபடுத்துவதுஎன்பதுஎன்னைப் பொறுத்தவரையில் இயலாத ஒரு காரியம் என்பதை நான் குறிப்பிட்டு, என்றாலும் அத்தகைய செயல்கள் அவையினுடைய பாங்குக்கு ஏற்றதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படிக் கூறுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்ற முறையிலே அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லிவிட்டார். இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தவரையில், இல்லை என்று எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருப்பது மாதிரி இந்த அறிக்கையிலே என்னென்னவெல்லாம் இருக்கின்றன என்று கூறுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. அவைகளையெல்லாம்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 13

ஆராய்ந்து பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவையில் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் நாட்டுமக்கள் அவைகளைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கும் அது மிகச் சிறப்பாக அமையக்கூடும். ஆனால் இத்தகைய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஆழ்ந்து சிந்தித்துப் பல்வேறு கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். எடுக்கப்பட்ட முடிவுகளைப் பாராட்டியிருக்கின்ற பல உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இங்கு எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்துத் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருப்பது மட்டுமல்லாமல் பரிந்துரைகள் பலவற்றையும் செய்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து தக்க முடிவெடுக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும் கடற்கரையின் நீளம் கிட்டத்தட்ட 1,000 கிலோ மீட்டர். அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல, அதன் அடித்தளத்தின் பரப்பு 41,412 சதுர கிலோ மீட்டர் ஆகும். கடற்கரைப் பகுதிகளில் மட்டும் கிட்டத்தட்ட $4\frac{1}{2}$ இலட்சம் மீனவப் பெருங்குடி மக்கள் வாழ்வதாகவும், உள்நாட்டு மீனவர்கள் என்ற முறையிலே $1\frac{1}{2}$ இலட்சம் பேர் வாழ்வதாகவும் அறிகிறோம்.

ஆனால் இதன் நிலைமைகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு வருகிறது என்பது மட்டும் உறுதி. ஆண்டுக்காண்டு, படிப்படியாக மீன்வளத்துறை வளர்வதும், அதனுடைய முயற்சிகள் நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் பெருந்துணை புரிந்து வருகிறது என்பதை மட்டும் நாம் பல்வேறு தன்மைகளின் மூலமாக நன்றாக அறிய முடியும். நான் விளக்க உரையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். 1950-51 இல் கடல் மீன் உற்பத்தி 1951-52 ஆம் ஆண்டில் 45,700 என்றால் ஆண்டுக்காண்டு பல்வேறு முயற்சிகளையெடுத்து இன்று வரையில் கணக்கிடுகின்றபொழுது 1980-81 ஆம் ஆண்டு 2,27,000 டன் பெறுகின்ற தன்மையைப் பெற்றிருக்கிறோம். அதேசமயம் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி 36,000 டன் அளவிலே இருந்தது என்றால் அது அதிகமாகப் பெருகவில்லையா?

[முற்பகல் 9.10]

இங்கே பல்வேறு கருத்துக்களைப் பலரும் எடுத்துச் சொன்னார்கள். அதிலே, சென்னையிலே மத்திய அரசால், ரூ. 11 கோடி செலவில் கட்டப்படுகிற மீன்பிடி துறைமுகத்திற்கு மறைந்த



1982 மார்ச் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று பல்வேறு மீனவர் சங்கங்கள் தெரிவித்திருக்கின்றன. அது போன்றே இங்கே மாண்புமிகு உறுப்பினர்களும் அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஆவன செய்ய மாநில அரசு முற்படும் என்று இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாளுக்கு நாள் மீன்வளத் துறையிலே அரசு அக்கறை கொண்டு வந்திருக்கிறதா, இல்லையா என்பதையும் இந்தத் துறை வளம் காண்கின்ற அளவுக்கும் பல்வேறு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துகிற அளவுக்கும் முன்னேறி வந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

1974-75-வது ஆண்டில் மீனளத் துறையினுடைய தன்மைக்கு ரூ. 89·65 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால், 1976-77-ல் ரூ. 1 கோடியே 64 இலட்சத்து 79 ஆயிரம் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 1977-78-ல் ரூ. 2 கோடியே 19 இலட்சம் அளவுக்கு உயர்ந்து 1981-82-ல் ரூ. 3 கோடியே 32·6 இலட்சம் அளவுக்கு உயர்ந்து, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே இந்த மீனளத் துறையினுடைய பணிகளுக்காக ரூ. 3 கோடியே 69 இலட்சத்து 38 ஆயிரம் அளவுக்கு உயர்ந்திருக்கிற தன்மையை நாம் இங்கே அறிக்கையின் மூலமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். கிட்டத்தட்ட 7 ஆண்டுக் காலத்திற்கு முன்பு ரூ. 89 இலட்சம் மட்டுமே துறைக்குச் செலவழிக்கப்பட்டு, வளர்ச்சி பெற்றிருப்பதன் காரணமாக, பல்வேறு நன்மைகள், பல்வேறு வகையிலே செய்கின்ற பெரு முயற்சியிலே ஈடுபட்டதன் காரணமாகத்தான் ரூ. 3 கோடியே 69 இலட்சத்து 38 ஆயிரம் ஒதுக்கீடு செய்கின்ற அளவு இந்தத் துறை வளர்ந்திருக்கிறது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மீனளத் துறைத் திட்டங்களுக்காக ரூ. 24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கேற்ப ஆண்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1982-83-ல் திட்டங்களுக்கு வரவு-செலவு கணக்கில் ரூ. 3 கோடியே 79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஊரக வளர்ச்சித் திட்டம் ஐ.ஆர். டி.பி. போன்ற அமைப்புகளின் மூலம் செயலாக்கப்படும் பணிகளுக்கான கூடுதல் நிதி இதில் சேராது. அண்மையில் கொண்டுவரப்பட்ட ரூ. 1 கோடியே 5 இலட்சம் திட்டம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் விசைபடகுகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீட்டில் அரசு மானியம் மட்டுமே வரவு செலவு கணக்கில் காண்பிக்கப்படுகின்றது. இதற்காகக் கடன் வசதி வங்கிகளில் வழங்கப்படும். மானியத்தைப் போலவே 4 மடங்கு கடன் இருப்பதால் திட்டத்தின் அளவு வரவு செலவு கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதைவிட அதிகமாகவே

இருக்கும். மேலும் மீன்வளர்ச்சிக் கழகம், வங்கிகள், மற்ற நிதிக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி உதவியுடன் சில திட்டங்களை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சில பல மாற்றங்கள் இருக்கின்றன, வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் 1979–80 கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டு இருப்பதற்கும், 1982–83-லே குறிப்பிட்டிருப்பதற்கும் இருக்கிற வேறுபாட்டை உணர்தல் வேண்டும். அதிலே, கரைப்பகுதியிலே வசதிகள் செய்வது என்பது ஒன்று. மீன்பிடித் துறைமுகம் கட்டுவது என்பது மற்றொன்று. தோணி துறைமுகம் கட்டுவது என்பது மற்றொன்று. 1979–80 கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலி நோக்கத்திலும் தஞ்சை மாவட்டத்தில் பழையாறிலும் இன்றியமையா அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக ரூ. 52·045 இலட்சத்திற்கு இந்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்றுவதற்காகச் சென்னை மாநிலத் துறைமுக அதிகாரியிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதிலே சொல்லப்படுகிறது என்னவென்றால் கரையோர வசதிகளைப்பற்றிய தனித்தன்மைகள்தான். கரையோரங்களில் மீன்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் அவைகளை விற்பதற்கு அங்காடிக்களைக் கட்டுவதற்கும் பதப்படுத்துவதற்குமான வசதிகளைப் பொறுத்தது. அவை துறைமுக வசதிகளைப் பொறுத்தது அல்ல.

**திரு. ப. பொன்னுரங்கம் :** அதிலே இரண்டு ஸ்கீம்கள் இருக்கின்றன, ஒன்று ஹார்பர் பற்றியது, இரண்டாவது பெசிலிட்டிஸ் பற்றியது. கடந்த நான்காண்டுகளாகவே...........

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1979-80இல் சொன்னதுதான் 1982-83இல் சொல்லப்பட்டிருப்பது. வேறுபாடு இல்லை. நான் பேசி முடித்துவிட்டபிறகு விளக்கம் வேண்டுமானால் கேளுங்கள்.

இதுபோன்ற பணிகளுக்கு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசு 75 சதவீதம் தரவேண்டும் என்றும் மாநில அரசு 25 சதவீதம் போட வேண்டுமென்ற முறையிலே திட்டம் இருந்தது. அதை மத்திய அரசுக்கு அனுப்பியபோது இந்தத் திட்டத்திற்கான செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியது. நாம் அனுமதி கேட்டபோது இந்தத்



திட்டத்திலே 75 சதவீதம் மத்திய அரசு கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது இப்போது அவர்கள் 100 சதவீதத்தையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டிய தன்மைக்கு மாநில அரசு ஆளாக்கப்பட்டது. ஆகவே நாமே எடுக்கவேண்டிய இன்றியமையாத தன்மைகள் ஏற்பட்டன. இவைதான் கரையோர வசதிகளைப் பற்றி நாம் குறிப்பிடுகிறோம்.

1982-83இல் எட்டாவது பக்கத்தில் ''மீனள வளர்ச்சித் திட்டம் மீனவர்கள் நலனை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு உள்நாட்டு மீன்வகைகளைக் கொள்முதல் செய்து அவற்றைக் கொண்டு செல்லுதல், பதப்படுத்தும் வசதிகள், பணி வசதிகள், ஆகியவற்றை ஏற்படுத்துதல், அங்காடிகளைக் கட்டுதல் முதலியவற்றிற்கான அடிப்படை வசதிகள் போதிய அளவில் தேவைப்படுகின்றன என்பதை உணர்ந்து முக்கியமான இடங்களில் அவ்வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வசதிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பழையாறில் ரூ. 28 இலட்சம் செலவிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கத்தில் ரூ. 24 இலட்சம் செலவிலும் தொண்டியில் ரூ. 5·6 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1982-83வது ஆண்டிலே 6வது பக்கத்திலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் என்னுமிடத்தில் 2·34 கோடி ரூபாய் செலவில் பெரிய மீன்பிடித் துறைமுகமொன்றை அமைப்பதற்கு உரிய திட்டத்திற்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வூட்டும் செய்தியாகும். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் என்னுமிடத்தில் ரூ. 77 இலட்சம் செலவில் மற்றுமொரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கும் அண்மையில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பழையாறு என்னுமிடத்தில் ரூ. 60 இலட்சம் செலவிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டி என்னுமிடத்தில் ரூ. 90·50 இலட்சம் செலவிலும் தோணித்துறைகள் அமைப்பதற்குரிய செயற்குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சின்ன முட்டத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு பற்றி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இங்கே திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்காக வந்தபோதுகூட இதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை, நீண்டநாட்களாக பரிசீலனையில் இருந்துவருகிறது என்று அந்த அம்மையாரிடம் எடுத்துச்சொன்னோம். மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம், விரைவிலே அனுப்பவேண்டும் என்று சொன்னோம். அவர்களும் குறித்துக்கொண்டு சென்றார்கள். அதற்குப்பிறகு மத்திய அரசு 2·34 கோடி ரூபாய் செலவில் சின்ன முட்டத்தில் அமைக்கும் திட்டத்திற்கு அண்மையில் அனுமதி வழங்கியது. அதைப்போலவே வாலிநோக்கத்திலே 77 லட்சம்

ரூபாய் செலவிலே உள்ள அந்த திட்டத்திற்கும் அனுமதி வழங்கியது அண்மையிலே. அதற்காக மற்றப் பணிகளைத் தொடர்ந்து செய்யவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம்.

அதற்கு அடுத்த வரியிலே ''தஞ்சாவூர் மாவட்டத்திலேயுள்ள பழையாறு என்னுமிடத்தில் ரூ. 60 இலட்சம் செலவிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டி என்னுமிடத்தில் ரூ.90.50 இலட்சம் செலவில் தோணித்துறைகள் அமைப்பதற்குரிய செயற்குறிப்புகள் மத்திய அரசின்பரிசீலனையில்உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டைப் பட்டினம் என்னுமிடத்தில் 18·5 இலட்சம் செலவில் மீனபிடி தோணித் துறை கட்டுவதற்காக அண்மையில் மத்திய அரசுக்கு செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளோம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவைகள் இரண்டும் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. ஆகவே மீன்பிடித் துறைமுகங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தனியாக வருகின்றன, அதற்கான நடவடிக்கைகள் தனியாக எடுக்கப்படுகின்றன. கரையோர வசதிகள் தனியாக வருகின்றன, எனவே, இந்த வேறுபாட்டை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள்தான் நேற்றைய தினமே கிழித்துக் போட்டுவிட்டீர்களே பின் ஏன் விளக்கம்?

**திரு. ப. பொன்னுரங்கம் :** நிதியமைச்சர் அவர்கள் பழையாறு பற்றியும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்தின் திட்டம் பற்றியும் சொன்னார்கள். 1978-79இல் மத்திய அரசு அனுமதி கொடுத்து 52 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். 1980-81ஆம் ஆண்டு அனுமதி பெறப்பட்டது என்று சொன்னார்கள். 1982-83 இல் சொல்வது துறைமுகம் பற்றியது. 'நாட் பெசிலிட்டிஸ்' நான் தெரிந்து கொள்ள விரும்புவது, பெசிலிட்டிஸ் என்று 4 வருடங்கள் வருவது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறதா?

[முற்பகல் 9-20]

ஆனால் அதை விட்டுவிட்டு புதிதாக மத்திய சர்க்காருக்கு அனுப்பி துறைமுகம் அமைப்பதற்கு மாநில சர்க்கார் முயற்சி செய்கிறதா? கடந்த 4 ஆண்டுகளாக எந்த பெசிலிட்டிகளும் வாலி நோக்கத்திலும் பழையாற்றிலும்-நிதி ஒதுக்கியும் கூட, மத்திய சர்க்கார் அனுமதித்தும் அங்கே வேலை ரம்பிக்கவில்லை. இப் போது சொல்வது புதிய திட்டம். இரண்டும் வேறு வேறு என்று எனக்குத் தெரியும்.



**மண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய விளக்கத்தைக் குறிப்பிட்டேன். சின்ன முட்டத்தில் துறைமுகம் கட்டவேண்டும் என்று 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே துவங்க அனுமதிக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே வளர்ந்து இப்போதுதான் அதற்கு அனுமதி வந்திருக்கிறது. ஆகவே இந்தக் கரையோர வசதிகளைப் பொறுத்தவரையில் அனுமதி வந்தபோது, 75 சதவிகிதம் அவர்கள் நமக்கு உதவி செய்வதாக இருந்தது. 25 சதவிகிதம் நாம். பிறகு மத்திய அரசு அந்தத் திட்டத்தை மாற்றிவிட்டது. 100 சதவிகிதமும் நாமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டது. மாநில அரசு, இல்லை இல்லை முதலிலே சொன்னது போல 75 சதம் நீங்கள் தரவேண்டும் என்று கடிதப் போக்குவரத்து நடைபெற்று வந்தன. இறுதியாக மத்திய அரசு 75 சதவிகிதம் தருவதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு இப்போது இந்த 100 சதவிகிதத்தையும் போட்டுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதற்குப் பிறகு மத்திய அரசு அறவே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, நாமே ஏற்றுக் கொள்ள வேண்டிய காரணத்தினாலே தான் இந்த 4 ஆண்டுகள் இழுத்துக்கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர. அப்போதே 75 சதவிகிதம் கொடுத்திருப்பார்களேயானால், இது முடிந்து இருக்கும் என்பதுதான் இந்தப் பிரச்சினை.

இங்கே வீட்டு வசதிகளைப் பற்றியும் பல பேர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1958-59 முதல் 1975-76 வரையில், 17 ஆண்டுகளில் 1,721 வீடுகள் கட்டித் தரப்பட்டன. அந்த வீடுகள் கட்டுகின்ற போது ஒரு பகுதி கடனாகவும், ஒரு பகுதி மானியமாகவும் வழங்கப்பட்ட நிலை இருந்தது. 1975-76-லே இலவச வீடுகள் கட்டுதவற்காக முதல் முறையாக 1,851 வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டன. 1976-77-லே இலவச வீடுகள் 1,840 அனுமதிக்கப்பட்டன. 1977-78 முதல் தொடர்ந்து கட்ட அனுமதிக்கப்பட்டவை 6,240. இப்போது கட்டுமான நிலையில் உள்ளவை 3,747. முன்பு ஒரு வீடு கட்டுவதற்கு திட்டம் இடப்பட்டபோது 6 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டு நாம் பணம் ஒதுக்கீடு செய்து வந்தோம். ஆனால் விலைவாசி மற்றவைகளும் ஏறிவிட்டதன் அடிப்படையில் இப்போது ஒரு வீடு கட்ட தலைமைப் பொறியாளர் கணக்குப்படி 9,840 ரூபாய் ஆகிறது. ஆகவே மேற்கொண்டு வீடுகள் கட்டுவதற்கு ஆண்டு தோறும் 100 இலட்சம் என்று ஒதுக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். 1982-83-லேயும் 100 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அந்த வகையிலேதான் நாம் இப்போது 9,840 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இந்த அனுமதிக்கப்பட்ட வீடுகளைத் தொடர்ந்து கட்டி முடிப்பது என்று முடிவெடுத்ததன் காரணமாக, கூடுதல் செலவையும் தாங்கிக் கொண்டு நடத்துவது என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது.

இராமநாதபுரம் தேவிப்பட்டினத்திலே 104 வீடுகள் கட்டப்பட்டன. அதிலே 65 வீடுகளில் மீனவர்கள் குடியேறி உள்ளனர். 39 வீடுகள் பழுது பார்க்க வேண்டி உள்ளதால், இப்பணியை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம் அறிவுறுத்தப்பட்டது. கட்டப்பட்ட 104 வீடுகளில் 1965-லே குடியேறி இருக்கிறார்கள். 39 வீடுகள் பழுது பார்க்க வேண்டிய நிலை இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம் இது குறித்து அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்தப் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது (குறுக்கீடு).

**திரு. ப. பொன்னுரங்கம்** : தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கின்ற தகவல் ............. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பொன்னுரங்கம் அவர்கள் தயவுசெய்து உட்கார வேண்டும். நேற்றே அவர் கிழித்து எறிந்து விட்டார்கள் ; இப்போது எதை வைத்துக் கேட்கப் போகிறார் ?

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, நான் நேற்று விளக்கம் தந்தபோது என்னை வேண்டாம் என்று உட்கார வைத்தார்கள். நான் 3 மானியக் கோரிக்கைகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏதாவது சந்தேகம் இருந்தால் பின்னாலே கேட்கட்டும், நேரம் இருந்தால் பதில் சொல்கிறேன். நேற்றைய தினம் விளக்கம் தரும்போது அவர்கள் வேண்டாம் என்று சொன்னார்கள்.

ஆகவே நேற்று அவர்களுக்குத் தெரிந்த கருத்துக்களை, அவர்கள் நோக்கங்களைச் சொன்னார்கள். நான் என்னுடைய கருத்துக்களை நோக்கங்களை சொல்லுகிறேன். இதிலே ஏதாவது ஐயப்பாடுகள் இருந்தால் பின்னால் தனியே கேள்வி போட்டால் அதற்கான விளக்கங்களைத் தருகிறேன். இந்த பதிலுரை நேற்றே நடைபெறுவதாக இருந்து, இன்றைக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 3 மானியக் கோரிக்கைகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டி இருப்பதன் காரணமாக, நான் சொல்லுகிறேன். நீங்கள் பேசும்போது நான் குறுக்கீடு செய்யவில்லை. அதை முழுவதும் கேட்டிருந்து இப்போது என்னுடைய விளக்கத்தை சொல்லுகிறேன், கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

நைலான் வலையைப் பொறுத்த வரையில் 1978-79 ஆம் ஆண்டில் 47 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 2,150 பேர்களுக்கு அந்த நைலான் வலை தரப்பட்டிருக்கிறது. அதிலே 77 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மானியமாக அந்த வகையிலே தந்தோம்.





1979-80-லே ரூ. 46.21 லட்சம் அளவிற்கு நைலான் வலைகளுக்காக வழங்கப்பட்டன. 2,294 மீனவர்கள் பயனடைந்தனர். அதற்கு ரூ. 16.01 இலட்சம் மானியமாகத் தந்தோம், மீதம் உள்ள தொகை கடனாக குறைந்த வட்டியில் கொடுக்கப்பட்டது. 1980-81-லே ரூ. 30.47 இலட்சம் அளவிற்கு நைலான் வலைகளுக்காக வழங்கப்பட்டன. 2,165 மீனவர்கள் பயனடைந்தனர். இதற்கு மானியமாக ரூ. 10.59 இலட்சம் அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இறந்துபடும் மீனவர் குடும்பத்திற்கு உதவித் தொகையைப் பொறுத்தவரையில், அவர்கள் மீன் பிடிக்க கடலில் செல்கிறபோது சுறா மீனுக்கோ அல்லது சுழற்காற்றுக்கோ அகப்பட்டு அல்லது கடலில் சென்றவர்கள் மீண்டும் திரும்பி வர இயலாத சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கின்ற சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக்கழக அரசு இருந்த போது ரூ. 1,000 வழங்கியது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அந்த 1,000 ரூ. என்பதை 5,000 ரூ. என்று ஆக்கினார்கள். அப்படி அந்த 5,000 ரூ. தருவதோடு மட்டுமல்லாமல், இறந்துபட்டவரின் மனைவி, அல்லது அவரின் குழந்தைகளின் மறுவாழ்விற்கும், மீனவரின் குழந்தைகளின் மீன்வளம் பற்றிய தொழிற் நுட்ப பயிற்சிக்கு படிக்கவும், கூடுதலாக உதவித் தொகை ரூ. 5,000 வழங்கிட அரசு வழி செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கட்டுமரங்களில் யந்திரங்கள் பொருத்துகின்ற அளவிற்கு நாம் திட்டங்கள் தீட்டியிருந்த போதிலும், இருக்கின்ற வசதிகளை வைத்துத்தான் மெல்ல மெல்ல அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 33,000 கட்டுமரங்கள் இருக்கின்றன. 7,000-க்கு மேற்பட்ட வள்ளங்கள் இருக்கின்றன. [illegible]க்கு மேற்பட்ட விசைப்படகுகள் இருக்கின்றன விசைப் படகுகள் வாங்குவது என்பது நம்முடைய நாட்டிலுள்ள மீனவர்களின் பொருளாதாரத் தன்மையைப் பார்க்கிற போது, அவ்வளவு பேருக்கும் வாங்குவது என்பது இயலாத ஒன்று. வசதி படைத்தவர்கள் தான் வாங்குகிறார்கள் என்கிறபோது மீனவ சமுதாயத்தைச் சாராத பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் விசைப் படகுகள் வாங்கி அதன் மூலம் பயன்பெறும் அளவிற்கு சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், டிராலர் வாங்குவது என்றால் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து வாங்கினோம். நாம் இப்போது இரண்டு டிராலர் வைத்து இருக்கிறோம். விசாகப்பட்டிணத்தில் அதை நிறுத்தி வைத்து, பக்கத்திலே இருக்கின்ற கடலில் இருந்து இரால்மீன் மற்றும் பிறவகை மீன்கள் எடுக்கப்படுகின்றன. அந்த வகையில் இந்த 7, 8 மாத காலத்தில் அந்த டிராலர்கள் நல்ல முறையில் வேலை செய்து கிட்டத்தட்ட 34 முதல் 36 இலட்சம் அளவிற்கு மீன்கள் விற்கப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 13

பட்டு, அதிலே செலவு போக ரூ. 16 அல்லது 17 இலட்சம் லாபம் கிடைத்து இருக்கிறது. அவற்றை எல்லாம் தனியாரோ அல்லது மற்றவர்களோ வாங்குவது இல்லை. ஆகவே, இப்போது புதிதாக பொறியியல் துறையில் சொல்லி இருக்கும் யோசனைப் படி குறைந்த அளவிற்கு ஓரளவுக்கு கட்டுமரங்களில் மோட்டார் பொருத்தினால், அது அதிகமான அளவிற்கு கடலில் செல்லலாம், அதன் மூலம் அவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து வரலாம், அதன் மூலம் அவர்களின் வருமானம் பெருகும் என்று திட்டமிட்டு, அதற்காக கிட்டத்தட்ட 10,000 ரூ. ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த முயற்சியைச் செயல்படுத்தும் வகையில் 20 கட்டுமர மீனவர்களுக்கு 20 சதவீதம் அரசு மானியத்தில் 20 வெளிப் பொருத்தும் இயந்திரங்களும் வலைகளும் வாங்க தலா ரூ. 10,000 வீதம் மொத்தம் இரண்டு இலட்சம் ரூபாயும், 24½' கண்ணாடி இழைப் படகுகளையும், வலைகளையும் 20 சதவீதம் அரசு மானியத்தில் 40 வழங்க தலா ரூ. 75,000 வீதம் ஆறு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 80 சதவீதத் தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

1982-83-ல் மீனவர்கள் மேலும் 50 கண்ணாடி இழைப் படகுகள் வலைகள் மற்றும் 20 வெளிப் பொருத்தும் இயந்திரங் களும் வாங்குவதற்கு கடனும் மானியமும் வழங்க ரூ. 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில், வாலிநோக்கத்தில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு இந்திய அரசு ரூ. 77·00 இலட்சத் திற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் பேசுகின்ற போது அதை வேறு வகைகளில் பயன்படுத்தலாமா என்று கேட்டு இருக்கிறார்கள். இந்தத் துறைமுகம் கட்டுவதற்கு 1982 பிப்ரவரி மாதக் கடைசியில் தான் ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தை 2 ஆண்டுகளில் கட்டி முடிக்க வேண்டும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

தற்போது மாநில அரசு செலவில் மீன் பதப்படுத்தும் கூடம், வலை பின்னும் கூடம், இணைப்புச் சாலைகள் மற்றும் மின்சார வசதி போன்ற பல வசதிகள் ரூ, 24 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படவிருக்கின்றன. இத்துறைமுகத்தில் சுமார் 150 விசைப் படகுகளுக்கு தங்குதள வசதியும், மீனைக் கரை இறக்கும் வசதியும் செய்து கொடுக்கப்படும். இந்தத் துறைமுகம் கட்டப்பட்ட பின்னர் முழு அளவு மீன்பிடிப் படகுகள் செயல்படும் போது இந்த கிராமத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 6,500 டன் மீனும் இறாலும் பிடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. துறைமுகக் கட்டுமானப் பணி முடிந்த பின்னர் இம் மீன்பிடித் துறைமுகத்தின் மூலம் அண்டை மாநிலங்களுக்கு



1982 மார்ச் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உலர்த்திய மீன், உப்பு ஆகிய பொருட்கள் சிறிய படகுகள் மூலம் அனுப்பலாம் என்றாலும் இம்மாதிரி மீன்பிடித் துறை முகங்கள் மீன்களை இறக்குவதற்கும் ஏலமிடவும் உறைய வைக்க வும், உள்நாட்டிற்கு அனுப்பவும் முக்கியமாக பயன்படும் வகையில் அது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவிற்கு அதிகமான பயனைத் தருமா என்பது தெரியவில்லை. போகப் போக அனுபவத்தில் தான் அதைக் காண வேண்டும்.

[முற்பகல் 9.30].

மீனளத் துறையின் பணிகள் பற்றி இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் குறிப்பிட்டார்கள். பொதுப்பணித் துறை, ஊராட்சி மன்றங்கள் மற்றும் மீனளத் துறையினர் பராமரித்து வருகின்ற நீர்நிலைகளில் பாசிக் குத்தகைவிடும் போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று 3, 4 மாதங் களுக்கு முன்னால் உத்தரவிட்டிருக்கிறோம். கடந்த பிப்ரவரியில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஊராட்சி மன்றங்களும், பொதுப்பணித் துறையும் ஆணை பிறப் பித்திருக்கின்றன.

ஆனால் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் மீனவர் மட்டுமே இருக்க வேண்டும். மீனவர் அல்லாதவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்தால் அவர்களை அதிலிருந்து நீக்கிவிட வேண் டும். மீனவர் அல்லாதவர்களும் உறுப்பினராக இருக்கலாம் என்று சங்கத்தின் பைலா இருந்தால் அந்த பைலாவில் மாற்றம் செய்ய வேண்டும். மீனவர்கள் மட்டும் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே இருக்கிற மனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அதனால் பயனடையும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மீன்குஞ்சுகளை வளர்க்கிறபொறுப்பை மீனளத் துறை சிறப்பாகச் செய்து வருகிறது. மீன குஞ்சுகளை பலவேறு வகைகளில் அணைக்கட்டுகளில் வளர்த்து, ஆங்காங்கே இருக்கிற நீர்நிலைகள், குட்டைகள், ஏரிகளில் விட்டு அவை வளர்ந்த பிறகு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அவைகளைப் பிடித்து பயனடைகின்ற வகையில் 6 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. மேற்கொண்டும் 5 கோடி மீன் குஞ்சுகளை வளர்த்து குளம், குட்டை, ஏரிகளில் விடுவதன் மூலம் மேலும் அவர்கள் பயனடைவார்கள் என்பதால் அற்கான ஏற்பாடுகள் தீவிரமகாச் செய்யப்படுகின்றன.

மீனவர் மேம்பாட்டு முகவர் அமைப்புகளின் உறுப்பினர் களுக்குக் கொடுக்கப்படும் குத்தகைக் காலம் 1—4—1982 முதல் 15 ஆண்டிலிருந்து 10 ஆண்டாகக் குறைக்க ஆணை யிடப்பட்டுள்ளது. இதனால் முகமைகளினால் ஏற்படும் பலன் பரவலாக்கப்பட்டிருக்கிறது.

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 80 இலட்சம் மதிப்புள்ள பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அவற்றின் மூலம் 25 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் அவற்றின் அங்கத்தினர்களுக்கும் 55 நாட்டுப் படகுகள், 100 கட்டுமரங்கள் 47 கண்ணாடி இழைப்படகுகள் கொடுக்கப்பட உள்ளன. மேற்கூறிய திட்டத்தின் கீழ் 42 இலட்சம் ரூபாய் மீனவர்களுக்கு மானியமாகக் கிடைக்கும். இது தவிர இத்திட்டத்தின் கீழ் 40 கண்ணாடி இழைப்படகுகள் வழங்கப்படும்.

வரும் நிதியாண்டில் சுமார் 37 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நடைமுறை மூலதனக் கடனாக வழங்கப்படும்.

தற்போது மீனவர் மேம்பாட்டு முகவர் அமைப்புகள் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி, திருநெல்வேலி, செங்கற்பட்டு மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் செயல்படுகின்றன. வரும் நிதியாண்டில் வடார்க்காடு, கன்னியாகுமரி, பெரியார் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் முகவர் அமைப்புகள் அமைக்கப்பட உள்ளன.

மன்னார் வளைகுடாப் பகுதியில் தேசிய கடற்பூங்கா அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது

தமிழ்நாடு மீனவர் வளர்ச்சிக் கழகம் தற்போது 72 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இவை சென்னை, கோவை, மதுரை, பெரியார் மாவட்டம் ஆகிய இடங்களில் உள்ளன. வரும் நிதி ஆண்டில மேலும் 50 விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். திருச்சி, நெய்வேலி ஆகிய ஊர்களிலும் தேவையைப் பொறுத்து மற்றும் ஊர்களிலும் கடைகள் அமைக்கப்படும்.

மீன் வளர்ச்சிக் கழகம் தற்போதுள்ள விற்பனை நிலையங்கள் 30—6—1981 முடிய ஓர் ஆண்டில் 32 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 401 டன் மீனை விற்பனை செய்துள்ளன. முந்திய ஆண்டில் 1—7—1979 முதல் 30—6—1980 வரையில் 200 டன்களே விற்பனை செய்யப்பட்டன. வரும் ஆண்டில் விற்பனை 600 டன்னாக உயர்ந்து 50 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீன்வளத்துறை மீன்வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலம் 1979-80-ல் 1,300 டன் மீன் மொத்த வியாபாரம் செய்யப்பட்டது. இது 1980-81-ல் 1,900 டன்னாக அதிகரித்தது. இந்த ஆண்டும், வரும் ஆண்டுகளிலும் இது இன்னும் கணிசமாக அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீனவர்கள் இலங்கை எல்லைக்கு தவறுதலாகச் சென்றுவிடாமலிருக்க இந்திய கப்பல் படையின் ரோந்துப்படை ரோந்து செய்து வருகிறது. ஆனால் அந்த ரோந்து படையை அவ்வப்போது எடுத்துவிடுகிறார்கள். அதனால் பல இன்னல்கள் ஏற்படுவதால் அந்த ரோந்துப்படையை அங்கே நிரந்தரமாக வைக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறோம். நிரந்தரமாக இருந்தால்தான் இலங்கை மீனவர்களுக்கும் நம்முடைய மீனவர்களுக்கும் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும். மத்திய அரசிடம் அதை வற்புறுத்துகிறோம்.

மீனவர் அமைப்புகள் நான்கு இருக்கின்றன. அதனுடைய வரவு-செலவு திட்டம் பற்றி எல்லாம் அவ்வப்போது சொல்லியிருக்கிறோம் அந்த வரவு-செலவுத் திட்டங்களை பரிசீலித்து, ஆராய்ந்து அந்த அமைப்புகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாமல் ஒரு மாற்றுத்திட்டத்தை வகுக்க வேண்டுமென்ற முறையில் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபற்றிய உணர்வுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆராய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் வாங்கிய கடன், வட்டி பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். விவசாயிகளுக்குச் சில கடன்களை தள்ளுபடி செய்து இருக்கிறோம்; அதைப் போல மீனவர்களுக்கும் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சிறு விவசாயிகளுக்கு சில சலுகைகளை அளித்திருக்கிறோம், கடன் தள்ளுபடி செய்திருக்கிறோம், ஆனால் டிராக்டர், டிரில்லர் போன்றவைகளுக்கு வழங்கப்பட்ட கடனை நாம் யாருக்கும் தள்ளுபடி செய்யவோ வட்டியைக் குறைக்கவோ செய்யவில்லை அந்த மீனவர்களைப்பொறுத்தவரையிலும் அவர்கள் படகுகளுக்காகவும், விசைப்படகுகளுக்காகவும் மற்றவைகளுக்காகவும் வாங்கிய கடன்களைப் பற்றி ஆராய்ந்து அவர்களுடைய வசதி வாய்ப்புகளைப் பற்றியும் ஆராய்ந்து பார்த்து எந்த அளவுக்கு சலுகைகளை அவர்களுக்குத் தரமுடியும் என்பதையும் ஆராய்ந்து தனித்தனியாக ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. யார் யார் எவ்வளவு எவ்வளவு தரவேண்டும் அவர்கள் வசதி படைத்தவர்களா இல்லையா, அல்லது வசதி படைத்தவர்களாக இருந்தாலும் கட்ட முடியாத நிலைமையிலே இருக்கிறார்களா இல்லையா என்பதையும் ஆராய்ந்து கட்ட முடியாத நிலைமைகள் இருக்குமேயானால் அவர்களைப் பற்றி ஒரு சில முடிவுகளை எடுத்து வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டு அசலை மட்டும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைப் பற்றியும்

ஆராய்ந்து அதற்குப் பிறகு விரைவிலே நல்ல முடிவுகளை எடுத்து நல்ல நிலைமையை ஏற்படுத்தலாம் என்று நான் கருது கிறேன்.

அடுத்து கடல் அரிப்பைத் தடுப்பதற்காக தடுப்புச் சுவர் கட்ட கன்னியாகுமரி மற்றும் பலவேறு பகுதிகளிலே 2,32,91,000 ரூபாய் செலவிலே பல்வேறு கட்டங்களிலே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில கட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. சில கட்டங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிலைமையிலே ஒரு நான்கு இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. மற்ற இடங்களிலே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

அடுத்து இரால் மீனை வளர்க்கவேண்டும் என்று செயற் குறிப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். இரால மீனை உவரி நீரிலே வளர்க்கின்ற வசதிவாய்ப்புக்கள் நம்முடைய மாநிலத்திலே இருந்தாலும் கூட ஃப்ரெஷ் வாட்டரிலேயே இரால் மீன்களை வளர்ப்பதிலே பலன்கள் ஏற்படமுடியும் என்பதால் செங்கற்பட்டிலே பரீட்சார்த்தமாக செய்யப்பட்டு ஓரளவுக்கு அதிலே வெற்றியும் அடைந்திருக்கிறோம். இதனைப் பரவலாகச் செய்யலாம் என்ற எண்ணம் வருகின்றபோது குட்டைகள், ஆற்று மதகுகள், கலிங்குகள் ஆகிய இடங்களிலே கூடச் செய்யலாம். அது மட்டுமல்லாமல உவரி நீர்ப் பகுதிகளிலும் இரால் மீன்கள் வளர்ப்பதற்காக 10 இடங்களிலே பண்ணைகள் அமைக்கப்பட்டு பொதுமக்களைத் தொடர்பு கொள்ளச் செய்து அதுமட்டு மல்லாமல தனியார் பணணைகள் வைத்திருந்தாலும் அதற்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையிலே சிலபல திட்டங்கள் வகுக்கப் பட்டு பரீட்சார்த்தமாக பல இடங்களிலே நடைபெற்று வரு கின்றன. இந்தக் குளங்கள், ஏரிகளிலே ஹெக்டேருக்கு 15 ஆயிரம் மீன் குஞ்சுகளை இருப்பு வைத்துக்கொண்டு பின தேவையற்ற மீன் வகைகளை வேக வைத்து தினமும் அவற் றிற்கு இரண்டு முறை உணவாகக் கொடுக்கின்ற நிலைமை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அது தொடர்ந்து கடைப் பிடிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் இரண்டு கிராம் எடை உள்ள குஞ்சுகளை 5 மாதக் காலத்திலே 35 கிராம் முதல் 50 கிராம் வரையிலான எடையுள்ள குஞ்சுகளாக்க முடியும் இந்த வகையிலே ஒரு வருடத்திலே இரண்டுமுறை அறுவடை செய்ய முடியும் என்றும் அப்படிச் செய்தால் சுமார் 400 கிலோ முதல 500 கிலோ வரையிலே இரால் மீன் உற்பத்தி செய்ய லாம் என்றும் செலவு போக ஒரு ஹெக்டேருக்கு ஒரு வருடத் திலே கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியும் என்றும் சோதனையின்படி கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதைப் பரவலாக ஆக்குவதன் மூலம் நலலதொரு சூழ்நிலையினை ஏற்





படுத்தலாமா என்பது பற்றி அரசு கவனத்தில் கொண்டு வருகின்றது. மேலும் பலவேறு பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள்.

மீன்துறை வளர்ச்சியினைப் பற்றியும், அதிலே பல, சீர்திருத்தங்களைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை எல்லாம் கவனத்தில் கொண்டு அரசு தக்க முடிவுகளை மேற்கொள்கிறது. அப்படி மேற்கொள்ளப்படுகின்ற முடிவுகள் பற்றி அவைக்கு அவ்வப் போது வழங்கப்படுகின்றன என்பதையும் கூறிக்கொண்டு இந்தக் கருத்துக்களுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் தர வேணடும் என்று எல்லா மாண்புமிகு உறுப்பினர்களையும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து பிற்பட்டோர் நலத்துறையினைப் பொறுத்தவரை யிலும் நாம் பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறோம். இங்கே பல்வேறு சூழ்நிலைகளைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். 1981-82-லே 8 கோடியே 27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது, இந்த ஆண்டு 1982-83-லே 9 கோடியே 41 இலட்சம் ரூபாய் ஒதுக் கீடு செய்யப்பட்டிருக்கின்றது. 1969-70-லே 1 கோடியே 61 இலட்சம் செலவழிக்கப்பட்டிருந்தாலும் கூட இந்த ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகின்ற காரணத் தாலே 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவழித்து வருகி றோம்.

அடுத்து குற்றப்பரம்பரையிலே இருந்து நீக்கப்பட்ட இனத் தினருக்காக 1969-70-லே 21 இலட்சம் செலவழிக்கப்பட்டது. இப்போது 35 இலட்சம் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

அடுத்து மிகவும் பின்தங்கியவர்கள் என்ற நிலைமையிலே முடி திருத்துபவர்கள், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள, ஒட்டர்கள் ஆகியவர்களுக்கு இனாமாக, அவர்கள் தொழில் நடத்துவதற்கு வசதி செய்கின்ற வகையிலே 4,000 முடி திருத்து வோருக்கும் 4,000 சலவைத் தொழிலாளருக்கும் இப்போது உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. கல்லூரிகளிலும், கோயில்களிலும் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற போயர் களைப் பொறுத்தவரையிலே ஒரு செட்டுக்கு 150 ரூபாய் ஆகிறது, எனவே அந்த 150 ரூபாய் செட்டினை வாங்கிக் கொடுத்து அவர்களுடைய தொழிலுக்கு ஊக்கம் தருகிற வகையிலே முயற்சிகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1977-78-லே 4,095 பேர்களுக்கும், 1978-79-லே 7,249 பேர் களுக்கும் பிறகு 1979-80-லே 8 ஆயிரம் பேர்களுக்கும் 1981-82-லே 8 ஆயிரம் பேர்களுக்கும் இப்படி இதுவரை 4,15363 பர்கள் பலனடைந்து இருக்கிறார்கள்.

இயங்குகின்ற அத்தகைய சலவை அகத்தை வைக்க முன் வருபவர்களுக்கு 825 ரூபாய் மொத்தச் செலவு ஆகிறது. அதிலே நாம் மானியமாக 125 ரூபாய் கொடுத்து, அதை வைக்க முன் வருபவர்களுக்கு உதவி செய்து வருகிறோம். அது மட்டும் அல்ல, சலவை அகங்களும் வைக்க முன் வருபவர்களுக்கு, அதற்கு 1,050 ரூபாய் செலவு ஆகிறது, அதிலே 20 சதவீதத்தை மானியமாகக் கொடுத்தும், மிச்சத்தை வங்கிகளிலிருந்து கடனாக குறைந்த வட்டியில் கொடுப்பதற்கும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டே வருகிற சூழ்நிலையைப் பார்த்து, 1948-49ல் ஆரம்பிக்கப்பட்ட அந்த பிற்பட்டோர் நலத்துறை அப்போது 1 இலட்சம் ரூபாய் அளவு செலவழிக்கிற தன்மையிலே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கூட, படிப்படியாக வளர்ந்து இப்போது 1982-83ல் 3 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவழிக்கின்ற நிலைமைகள் வருகின்றன.

(முற்பகல் 9-40)

இதிலே பெரும்பகுதி பிற்பட்டோர் நலனுக்காகவும், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காகவும் செலவழிக்கின்ற நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக இந்த அரசு 197-8க்குப் பிறகு விடுதிகள் துவங்குவது பற்றிச் சொன்னார்கள். 1978க்குப் பிறகு 5 விடுதிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 1982-83 ல 3 விடுதிகள் துவங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, 197-8க்குப் பின்னால் குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக இருந்த விடுதிகள்ளில் இரண்டு மூடப்பட்டிருக்கிறது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தான் நான் குறிப்பிட்டேன். ஏன் மூடப்பட்டிருக்கிறது என்பதற்கு காரணம் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்களை தனியாக ஆராய்ந்து அதற்கு என்ன முடிவு எடுக்கச் செய்யலாம் அல்லது என்ன செய்யலாம் என்பது பற்றி கவனிக்கலாம். ஏனெனில் அது பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

வருகிற ஆண்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக 40 விடுதிகள் கட்டுகிற திட்டங்களை மேற்கொள்ளவிருக்கிறோம். 3 விடுதிகள் குற்றப்





பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காகவும் கட்டுவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளவிருக்கிறது. இவர்களுக்குச் சலுகைகள் வழங்குவதற்கும், மற்றவைகளுக்கும் வருமான உச்ச வரம்பு ரூ. 2,500 ஆக ஆண்டு ஒன்றுக்கு இருக்க வேண்டும் என்பதை மாற்றி, அதை ரூ. 5,000 அளவுக்கு உயர்த்தி, 5,000-க்கு உட்பட்ட வருமானம் உள்ள அத்தனை பிற்பட்டோர் குடும்பங்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அது மட்டும் அல்லாமல் கடன்களும் அவர்களுக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இலவசமாக வழங்கப்படும் சலுகைகளில் தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், தொழிற் கல்வி பயிலுகிற பிற்பட்டோர் மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ 5,000 என்று வரம்பு வைத்திருந்ததை ரூ 10,000 வரையில் அந்த ஆண்டு வருமானத்தை வைத்து, தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பயிலுகின்ற மாணவர்களுக்கு உதவி செய்கிற முயற்சிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக நடத்தும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சீருடை வழங்குவது பற்றி எடுத்துச் சொன்னார்கள். பிற்பட்டோர் நலத்துறை நடத்தும் பள்ளிகளில் தங்கிப்பயிலும் எல்லா மாணவர் மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் தீபாவளியின் போதும், பொங்கலின்போதும் இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன. அந்த ஆடைகள் கைத்தறி அல்லது கதர் துணிகளினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அது வயது வாரியாக சமுக நலத்துறை நடத்தும் தையற் கூடங்களில் தைக்கப்படவேண்டும் என்றும் நடைமுறை உள்ளது. எங்காவது கிடைக்கப்பெறாமல் இருக்கும் நிலை இருக்குமேயானால் அதைக்கவனித்துச் செய்யலாம். எல்லா இடங்களுக்கும் அந்த சீருடைகள் வழங்கப்பட வேண்டும் என்பதினால்தான் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை போட்டிருக்கிறோம்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது சீருடைகள் வழங்குவதிலே ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரே அளவாக தைத்துக் கொடுக்கிறார்கள். அது அந்த மாணவர்களுக்கு பொருந்ததுவாக இல்லை. ஆகவே அவர்களிடமே துணிகளைக் கொடுத்து, தைத்துக் கொள்வதற்குத் தையற்கூலியையும் கொடுத்தால் அது மிக நன்றாக இருக்கும். இல்லையென்று சொன்னால், ஒரு வகுப்பில் இருப்பவர்களுக்கு ஒரே விதமாக தருகிறபோது, சிறிய மாணவர்களும் இருக்கிறார்கள் பெரிய மாணவர்களும் இருக்கிறார்

கள், ஆகவே அது அவர்களுக்கு உபயோகப்படாமல் போகிற் என்பதைத்தான் எடுத்துக் கூறினேன். அதை அரசு பரிசீலிக்குமா என்று கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதில் ஒரு சில சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளையும் நாம் கவனிக்க வேண்டும். துணியையும் எடுத்துக் கொண்டு, தையற்கூலியையும்எடுத்துக் கொண்டுபோய், உடையே தைக்காமல் போய்விட்டார்களேயானால் என்னசெய்வது என்றும் யோசிக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, தைத்துக் கொடுக்கிற உடைகள் அவர்களுக்குப் பொருத்தமானவகையில் செய்வதற்கு என்ன செய்வது என்பது பற்றி ஆராயந்து தக்க நடவடிக்கையை எடுக்கலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது பிற்பட்டோருக்காக வழங்கப்பட்டுள்ள சலுகைகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கல்லூரிகளிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் மற்ற இடங்களிலும் அல்லது வேலை வாய்ப்புகளிலும் 31 சதவிகிதம் என்றிருந்தது 50 சதவிகிதமாக மாற்றப்பட்டிருக்கிறது. அதை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்றளவிற்கு பிரித்துப் பார்த்துத் தரப்படுமானால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன் பெறுவார்கள் என்ற கருத்தை அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட அந்தக் கருத்தை அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி சட்டநாதன் குழு அளித்த அறிக்கையிலும் அவர்கள் தெளிவுபட, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்டோர் நலன்கள், யார் யார் நிலைமைகள் வளர வேண்டும் என்று கருதி சலுகைகள் எல்லாம் செய்தோமோ அதிலிருக்கிற பல்வேறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் கணக்கில் வருகிறபோது பிற்பட்ட வகுப்பினர்களிடையே உள்ள குறிப்பாக அதிலே முற்போக்கடைந்த, வசதிவாய்ப்புகள் உள்ள சமூகத்தினர் போடுகின்ற வகையில் கொடுக்கப்பட்ட சலுகைகள் முழுவதையும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகிறது, அதை மாற்றி அமைத்து திட்டம் வகுத்தால் நல்லது என்ற கருத்தை அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்டுச் சொல்லாமல் 10, 15 வகுப்புக்களை அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள்—ஆகவே இந்த பட்டியலிலிருந்து எடுத்துவிட்டால் நல்லது என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சட்டநாதன் குழு சொல்லியிருப்பதைச் சொல்கிறேன். சட்டநாதன் குழு, அப்படி சில வகுப்புக்களை இந்தப் பட்டியலிலிருந்து எடுத்து விட்டால் நல்லது என்ற கருத்தைச்சொன்னார்கள். அப்படி அந்த வகுப்புகளை எடுத்து விட்டால் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் மீதி உள்ளவர்களுக்குப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு இருக்கும்





...ற கருத்து ஒன்றையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன என்ன வகுப்புக்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லாத காரணத்தால் நமக்கு ஒரு இடர்ப்பாடு இருக்கிறது.

50 சதவிகிதம் என்று வருகிறபோது பிற்பட்டோர் பட்டியலில் இருக்கக்கூடிய அவ்வளவு பேர்களும் அதில் சேருகிறார்கள். அதோடு கூட ஓப்பன் காம்பெட்டிஷன்களிலும் அவர்கள் போட்டி போடலாம். இந்தப் பிற்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த 50 சதவிகிதம் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் அது எனக்கு உடன்பாடான கருத்து என்பதை அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது குறிப்பிட்டிருக்கிறேன். இந்த 50 சதவிகிதம் என்பதை இன்னொரு காம்பார்ட்மெண்டாகப் பிரிக்கலாம் என்ற அளவிற்கு ஒரு கருத்து சொல்லப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்று ஒதுக்கிவிட்டு 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்பதில் 39 மோஸ்ட் பாக்வேர்ட் என்று தொடர்ந்து இருந்துவரக்கூடிய பட்டியலைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த மக்கள் எண்ணிக்கையையும் மற்ற பிற்பட்டவகுப்பினரின் மக்கள் எண்ணிக்கையையும் கணக்கில் கொண்டு ஓரளவு கணக்குப் பார்த்து அந்த ரேஷியோவை வகுத்து இந்த 50 சதவிதத்தில் அந்த ரேஷியோபடி பிற்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றும் ஒதுக்கி வைப்பதன் மூலம் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கிணங்க பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றும் ஒதுக்கிவைப்பதன் மூலம் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துச் சென்னை கருத்துக்கிணங்க ஒரு நியாயம் கிடைக்க வழி ஏற்படும் என்றார்கள். அதை ஆராயும்படி துறையினரை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இது சட்டத்தின் படி பொருந்தும் சட்டத்தில் இடர்பாடுஇருக்காது என்று சொன்னல் இதை எளிதல் செய்யலாம். உயர்நீதி மன்றத்தில் அல்லது உச்சநீதிமன்றத்தில் இதைத் தடுத்து நிறுத்திவிடாத அளவிற்கு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** கேரளாவில் ஈழவர்களுக்கு அப்படி வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன் :** எல்லாவற்றையும் கவனித்து தக்க ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு முயலும்.

வீட்டு மனைப் பட்டாக்களைப் பொறுத்து சலவைத் தொழிலாளர்கள் நரிக்குறவர்கள் மற்றும் நலிவுற்றோருக்கு ஆங்காங்கே நில ஒப்படை செய்ய, நிலம் கையகப் படுத்த 1981–82-ல் 15 இலட்சத்திற்கு அதிகமாக ஒதுக்கப்பட்டு

பல்வேறு இடங்களைக் கையகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. 1982–83–ல் 15 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சாகுல்ஹமீது அவர்கள் பேசும்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முஸ்லீம்கள் பிறபடுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இருந்தாலும் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். என்ற கருத்தைச் சொன்னார்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று இடங்கள் ஒதுக்கப்படும்போது மற்றும் சலுகை, கள் அளிக்கும்போது நாம் ஜாதிவாரியாக பார்ப்பதில்லை மதவாரியாகப் பார்ப்பதில்லை. பிற்படுத்தப்பட்டோர் என்ற அந்தப் பட்டியலில் வருகிறார்களா என்றுதான் பார்க்கிறேன். அப்படிப்பார்த்தாலும்கூட மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற ஸ்காலர்ஷிப்ஸ் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ரூபாய் 9 லட்சத்து சில்லரையில் 3·37 இலட்சம் ஸ்காலர் ஷிப்பிற்காக ஒதுக்குகிறோம்.

(முற்பகல் 9.50)

இதிலே 25 இலட்சம் ரூபாய் முஸ்லீம்களுக்கு, இதிலே இன்னும் யார்யார் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு, அந்த முஸ்லீம் மக்களுக்கு செலவழிக்கின்ற அளவுக்கு தன்மைகள் இருக்கின்றன. தமிழ்நாடு ஜனத்தொகையைக் கணக்கிட்டு பார்ப்போமேயானால், மொத்த மக்களில் 5 சதவிகித அளவுக்கு முஸ்லீம்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 8 சதவிகிதம் ஸ்காலர் ப்தரப்பட்டு வருகிறதே தவிர, நண்பர் சாகுல்ஹமீது அவர்கள் சொல்வது போல், அவர்கள் புறக்கணிக்கப்படவில்லை. ஆகவே 5 சதவிகிதம் இருப்பவர்களுக்கு 8 சதவிகித ஸ்ககாலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு, கிறேன். அரசுத் துறையிலே நியமனங்கள் பற்றியும் அவர்கள் சொன்னார்கள் 50 சதவிகிதம் என்று பொதுவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1971 ஆம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கின்படி முஸ்லீம்கள் ஜனத்தொகை 21,40,000 என்றும் அதில் சுமார் 14,71,000 பேர்கள் ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். ஆக மொத்தம் இருக்கின்ற மக்களில் 21,40,000 பேர்களில், 14,71,000 பேர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அந்த அளவுக்கு அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றது. எனவே, அவர்கள் புறக்கணிக்கப்படவில்லை ான்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

லப்பைகள், மாப்பிளாஸ், தெடிகுளாஸ், பட்டான்ஸ், ்சயத்ஸ், இஸ்மாயில்ஸ், ஷேக்ஸ், மேமான்ஸ், போராஸ் காஜாஸ், ஷையாஸ், அஹமடையாஸ், தெக்கான்ஸ்



ஆகியோர் இந்தப் பிரிவினிலே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, சலுகைகள் பெற, வாய்ப்பும் வசதியும் தரப்பட்டு வருகின்றது. இதன் தன்மையின் அளவிலே ஆங்காங்குள்ளவர்களைப் பார்த்து, ஆங்காங்குள்ளே விடுதிகளிலும் அவர்களுக்குச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு, மற்ற வசதிகளையும் கூட்டிக் கொடுக்கின்ற முயற்சியை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இது போதுமா என்றால் போதாது என்றாலும்கூட, இருக்கின்ற நிதி வசதியை வைத்து செய்திருக்கிறோம். நிதி வசதி ஏற்பட மேற்கொண்டு இத்தகைய நிலைமைகளில் வசதிகளைப் பெருக்க முயற்சிகள் **மேற்**கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையிலும் நாம் பல பிரச்சினைகளைச் சமாளித்து பல சமயங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். என்பதை அடிக்கடி இங்கே கேட்கப்படுகின்ற வினாக்கள் மூலம் தெளிவுபடுத்தி வருகிறேன். லெவி கொள்முதலின் அவசியத்தைப் பற்றி நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் 66 இலட்சம் டன் அரிசி 1982–83-ல் இந்த ஓராண்டு என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரை என்று கணக்கிடப்படுகிறது. எனவே இந்த ஆண்டு 66 இலட்சம் டன் இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. அதிலே கிட்டத்தட்ட 36 இலட்சம் டன்னை அவர்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வதாக ஒரு தாராளமான கணக்குப் போட்டாலும் 30 இலட்சம் டன் வியாபாரிகளுக்கு வந்து தீரவேண்டும். அப்படி வெளி மார்க்கெட்டிற்கு வந்து தீரவேண்டுமென்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது. அந்த முறைப்படி கணக்குப் பார்த்தாலும் அவர்கள் நமக்கு 15 இலட்சம் டன் தரவேண்டும். ஆனால் இப்போதுள்ள பிரச்சினை என்னவென்று சொன்னால் குறுவை சம்பா ஆகியவைகளில் இதுவரை 3,50,000 டன்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆக மேற்கொண்டு 6 இலட்சம் டன் இருந்தால் தான் 1 சோடியே 9 இலட்சம் கார்டுகளுக்கு நாம் நியாய விலைக் கடைகளில் அரிசி விநியோகம் செய்ய முடியும். ஆகவேதான் நாம் அந்த லெவி முறையிலே 50 சதவீதம் உணவைப் பெற்றாக வேண்டியிருக்கிறது.

குவிண்டால் ஒன்று ரூ. 115 என்று நாம் வாங்கி ரூ. 55·50-ஐ குறைத்துத் தான் நியாய விலைக் கடைகளில் நாம் கிலோ ஒன்று ரூ. 1·75 என்ற முறையில் கொடுத்து வருகிறோம். ஆகவே அந்தத் தன்மையின் அடிப்படையில் கொள்முதல் செய்து தான் தீரவேண்டும். நமக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால் மத்திய அரசிடம் கேட்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் பிற மாநிலங்களில் குவிண்டால் ரூ. 115 என்றுகொள்முதல் செய்து நமக்குத் தரவேண்டிய

நிலைமை ஏற்படுகிறது. இதைத் தான் சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்ட வினாவிற்கு விடையாகத் தந்திருக்கிறேன். நாம் அவர்களை வற்புறுத்திக் கேட்டு அவர்கள் ஒதுக்குகின்ற நிலைமை இருக்கிறது. அப்படி நிலைமையைச் சமாளிக்கின்ற காரணத்தால் மத்திய அரசு லெவி கொள்முதலை நாம் தீவிரப்படுத்த வேண்டும், நம்முடைய மாநிலத்தில் குறைந்த அளவு 6½ இலட்சம் டன் செய்து தீரவேண்டும் என்று ஒரு இலக்கைப் போட்டிருக்கிறார்கள். நாம் இதுவரை 3½ இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். எனவேதான் நாம் மேற்கொண்டு பெற வேண்டிய தன்மை இருக்கிறது.

லெவியைப் பூராவும் எடுத்து விடலாம், குறைத்து விடலாம் என்கிறார்கள். லெவியை குறைத்து விடலாம் எடுத்து விடலாம் என்றால், வெளியிலே நல்ல அரிசியின் விலை கூடுதலாக இருக்கும். அப்படி கூடுதலாக இருக்கின்ற நிலைமையில், நாம் நியாய விலையில் வாங்குவது என்பது முடியாது.

ஆகவே அகில இந்தியா முழுவதும் இருக்கிற தன்மையை குறித்து மத்திய அரசு முடிவு செய்திருக்கிற வகையிலே உத்திர பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 60 சதவீதம் கொள்முதல் செய்கிறார்கள். பஞ்சாப், அரியானாவில் 90 சதவீதம் செய்கிறார்கள். ஆந்திராவில் 50 சதவீதம் ; கர்நாடகத்தில் 50 சதவீதம் ; மத்திய பிரதேசத்தில் 60 சதவீதம் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அஸ்ஸாமில் 60 சதவீதம், மேற்கு வங்கத்தில் 60 சதவீதம். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 60 சதவீதம் கொள் முதல் செய்ய வேண்டுமென்று தான் மத்திய அரசு வற்புறுத்தி வந்தாலும் இருக்கிற நிலைமைகளை எடுத்துத் தெரிவித்து சென்ற ஆண்டு 40 சதவீதம் கொள்முதல் செய்தோம். இந்த ஆண்டு 50 சதவீதம் கொள்முதல் செய்து நம்முடைய தேவையான இருப்பை கட்டிவிடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். இப்போது 50 சதவீதம் செய்து கொண்டிருக்கிறோம்.

அதற்கு மத்திய அரசு சொல்கிற காரணம் விலையை பொறுத்தவரையில் நிர்ணயிக்கிறபோது ஒவ்வொரு மாநிலமும் நாம் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறோம். மற்றவர்களும் கேட்கிறார்கள். கொள்முதல் விலையை 147 ரூபாய் அளவிற்கு கொண்டுபோனால் தான் ஓரளவிற்கு கட்டுப்படியாகும் என்பதை சொல்லியிருக்கிறோம். பிற மாநிலங்கள் 150, 155, 160 என்று அவரவர்கள் கணக்கை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு கொள்முதல் விலையை நிர்ணயிக்கிறபோது விலைவாசிகள் ஏறாத அளவிற்கு கன்ஸூமர்ஸ் பிரைசையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒரு குழுவை அமைத்து அந்த குழுவின் மூலமாக நிர்ணயிக்கிற விலையை அகில இந்தியா முழுவதும் கடைபிடிக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ராவ்பிரேந்திர சிங் அவர்கள் சொல்கிறபோது கூட கொள்முதல் விலை 115 ரூபாய்க்கு அதிகமாக வைத்தால் தான் இங்கே இருக்கிற விவசாயிகளுக்கு கூடுதலான விலை கிடைக்கும் என்பது எங்களுக்குத் தெரியும் ; ஆனால் இரண்டையும் நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. கொள்முதல் விலையை கவனிக்க வேண்டும், விற்பனை செய்கின்ற போது விலைவாசி ஏறாத அளவிற்கு தடுக்கவும் வேண்டும். ஒருவர் வீட்டிலே உணவு கொள்கிறபோது 60 சதவீதம் பங்கை கிட்டத்தட்ட அரிசி மட்டுமே எடுத்துக் கொள்கிறது. புளி, உப்பு, பருப்பு போன்ற மற்றவை எல்லாம் மீதி சதவீதத்தை எடுத்துக் கொள்கிறது. பெரும் பகுதியாக இருக்கும் போது விலைவாசி ஏறும், அதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது என்ற காரணத்தை மத்திய அரசு நமக்கு தருகிறது. இன்னொன்றையும் சொல்கிறார்கள், பஞ்சாப், அரியானா முதலிய இடங்களில் அரிசி கமர்சியல் கிராப் என்கிற அளவிலே இருக்கிறதே தவிர பயன்படுத்துகிறவர்கள் அங்கே இல்லை. பயன்படுத்துகிற மாநிலங்கள் வங்காளம், தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் தான். ஆகவே பயன்படாமல் கமர்ஷியல் கிராபாக இருக்கிறபோது 140, 145 என்று உயர்த்தினாலும் பஞ்சாப், அரியானா மாநிலங்களுக்கு அதிகமாக கொடுத்து கொள்முதல் செய்து உபயோகிக்கிற மாநிலங்களுக்கு அதிக விலைக்கு விற்க வேண்டி வரும் 90 சதவீதம் பஞ்சாப்பிலே கொள்முதல் செய்கிறோம் என்றும், அந்த வகையிலே வங்காளத்திற்கு மட்டும் 2 லட்சம் டன் கொடுத்தால் தான் பற்றாக்குறை தீரும். கேரளத்திற்கு தர வேண்டும் என்று இது போன்று அவர்கள் சொல்கிற காரணங்களை உங்களுக்குத் தருகிறேன். மத்திய அரசை பொறுத்தவரையில் தூக்குகிற போது அதற்கான வசதி வாய்ப்புகளையும் அமைத்துத் தருகிற பொறுப்பு அவர்களுக்கு அமைகிறது.





திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க வேண்டுமென்றும், அதே நேரத்தில் வாங்கி சாப்பிடுகிறவர்களுக்கும் விலை உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது நியாய விலைக் கடைகளிலே அதிகப்பட்சமாக 20 கிலோ தான் கொடுக்கிறார்கள். மேற்கொண்டு வெளி மார்க்கெட்டிலே 30, 40, கிலோ வாங்கி சராசரியாக அவர்களுக்கு 3 ரூபாய் அளவிற்கு ஆகிறது. ஆகவே தான் நாங்கள் சொல்வது 150 ரூபாய் என்று ஒரு குவிண்டால் நெல்லை வாங்கினாலும் 2·50க்கு மேல் போகாமல் தேவையான அத்தனை அரிசியும் கிடைத்து விடுமே, அப்படி செய்தால் விவசாயிகள் முழுமையாக அரசாங்கத்திற்கு அந்த நெல்லை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். அதை செய்வதற்கு அரசு முயற்சி செய்தால் வாங்குபவர்களுக்கும் நியாயமான விலையில் அரிசி கிடைக்கும், உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைத்துவிடுமே, இது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 13

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விலை நிர்ணயிக்கிற உரிமை முழுவதும் நம்மிடத்திலே இல்லை. விலையை நிர்ணயிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நாம் எடுத்துச் சொல்லலாம். தூக்குகிற போது அதனோடு சேர்ந்து இருக்கிற வசதிகளை நமக்கெல்லாம் தருகிற பொறுப்பை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் தான் நாம் இதிலே அந்த வரைமுறைகளுக்கு உட்பட்டு சிலபல காரியங்கள் செய்ய வேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகிறோம். ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றை சொல்கிறார்கள், கோதுமையை பொறுத்தவரை 130 ரூபாய் அளவிற்கு நிர்ணயித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-00)

கோதுமை உற்பத்தி செய்கிற மாநிலங்களைப் பார்த்தால் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், ஜம்மு—காஷ்மீர் 142க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும், வங்காளம் 150க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும், அரியானா 160க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும் பஞ்சாப் 161க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும் உத்திரப் பிரதேசம் 164க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும் மத்தியப் பிரதேசம் 175க்கு உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் ஓரளவுக்கு நிர்ணயிக்கிறார்கள். கோதுமைக்கும் அரிசிக்கும் இடுகின்ற இரு பொருள்களினுடைய செலவு, காஸ்ட் ஆப் புரடக்ஷன் கிட்டத்தட்ட சரியாகத்தான் வருகிறது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். கோதுமைக்கு எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு அரிசிக்கும் உயர்த்த வேண்டுமென்று நாம் சொன்னால், ஏதோ முன்னாலே ஒரு குழு இரண்டுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டுமென்று சொன்னதாகவும் அந்த அடிப்படையிலே அந்த வித்தியாசம் இருந்து வருகிறது என்றும் சொல்கிறார்கள். அந்த வித்தியாசம் இருக்கக்கூடாது என்று தான் நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

இதை உயர்த்திவிட்டு நம்முடைய பணத்திலிருந்து செலவிட்டால் என்ன என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். நாம் கிரடிட் பெசிலிட்டிஸ் இல்லாமல் செலவழிக்க முடியாது. நாம் இப்போது கொள்முதல் செய்து வாங்குவதற்கே 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ரிசர்வ் பேங்க் தான் 100 கோடி ரூபாய் அளவுக்கு நமக்கு வசதியைத் தரமுடியும். விலைக் கொள்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மத்திய அரசினிடத்திலே இருக்கிறது. வங்கியிலிருந்து அவர்கள் 12½ சதவீதத்திற்கும் குறைத்து நமக்குத் தருகிறார்கள். அகில இந்தியக்



1982 மார்ச் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொள்கையை இதிலே நீங்கள் ஏற்காமல் மாறுபாடாக வழங்குவீர்களானால் நாங்கள் கிரடிட் பெசிலிட்டில் தரமாட்டோம் என்று ஸ்குவீஸ் பண்ணுவோம் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் அரசாங்கம் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே அவர்கள் மாறுபாடாக வழங்கியதால் ஸ்குவீஸ் பண்ணிவிட்டார்கள். ஆனால் காங்கிரஸ் அரசாங்கமாக இருப்பதன் காரணத்தினாலும் திரு. குண்டுராவ் அவர்கள் முதலமைச்சராக இருப்பதன், காரணத்தினாலும் 4 நாட்கள் அவர்கள் இருந்து வாதாடிய பிறகு ஸ்குவீஸை எடுத்துவிட்டு தரலாம் என்று அவர்கள் சொன்னாலும் இப்போது 18 சதவீதம் கூடுதலாக தரவேண்டுமென்று சொல்கிறார்கள். கூடுதல் விலையாக 10 ரூபாய் உயர்த்தியதால் கன்சஷனிலே ரேட் தரமுடியாது, 18 சதவீதம் தர வேண்டுமென்று சொல்லி 18 சதவீதம் அவர்கள் தந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, நியாயமான விலை விஷயமாக இப்போது அவை முன்னவர் அவர்கள் முன்னாலே சொல்லி இருக்கின்ற காரணம் பற்றி விளக்கம் கொடுக்க விரும்பினாலும் கூட நாம் மீறி நம் செலவில் கொடுத்தால் கூட ஆர். பி. ஐ. கிரடிட்ஸ் குவீஸ் செய்து விடுவார்கள் என்று சொன்னார்கள். தேர்தல் காலத்திலே ஆளுங்கட்சியின் சார்பாக வாக்குறுதி நியாயமான விலை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் என்று கொடுக்கப்பட்டது, அதன்படி 147 ரூபாய் என்று இப்போது சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் ஆளுங் கட்சியினுடைய கொள்கை 115 தான். இப்போது 115 என்று தான் அமல்படுத்துகிறீர்கள், ஆகவே உங்கள் கொள்கையை அமல் நடத்தாமல் இருக்கிறீர்கள். காரணம் ஸ்குவீஸ் பண்ணிவிடுவார்கள் என்று சொல்கிறீர்கள் என்று பொருளாகிறது. அதன்படி நீங்கள் 115 என்று ஏற்றுக் கொண்டதால் உங்கள் கொள்கையை கைவிட்டுவிட்டு மத்திய அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக் கொள்கிறீர்களா ? அதே மாதிரி மத்திய அரசாங்கத்தின் கொள்கை மும்மொழிக் கொள்கை, மாநில அரசின் கொள்கை இருமொழிக் கொள்கை தான். மத்திய அரசின் கொள்கை மும்மொழிக் கொள்கை தான் இருக்க வேண்டுமென்றும் தொடர்ந்து மாநில அரசு இருமொழிக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் எஜுகேஷனிலே கொடுக்கக்கூடிய அந்த அலாக்கேஷன் ஆப் பண்ட்ஸிலே குறைப்போம் என்று மத்திய அரசு சொன்னால் நீங்கள் உங்களுடைய இரு மொழிக் கொள்கையை கைவிட்டுவிடுவீர்களா ? மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவீர்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது வைத் போத்தடிக்கல் குவஸ்டின். வரும்போது பார்த்துக் கொள்ளலாம் இப்போது இருக்கின்ற நிலைமைகளின் காரணமாக இதைச்செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றுதான் சொன்னேன். இது விலையைப் பொறுத்து இருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** விலையைப் பொறுத்து இருந்தாலும் கூட..........................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். முடிந்துவிட்டது.

**திரு. ரா. உமாநாத் :** அஸ் எ மேட்டர் ஆப் பாலிசி கேட்கிறேன். கிரடிட் ஸ்குவீஸ் இருப்பதால் அரசாங்கம் செலவழிக்கத் தயாராக இல்லை என்று சொன்னார்கள். இப்போது மட்டுமல்ல, முன்னாலேயும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஸ்டேட் கவர்ன்மென்டின் பாலிசி என்ன ? அந்த மாதிரி ஒரு ஸ்குவீஸ் வந்தால் நம்முடைய கொள்கை கைவிடப்படும் என்றால், அது தான் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கொள்கை பற்றி அல்ல. நிதியைப் பொறுத்தவரையில் சிலபல தன்மைகள் இருக்கின்றன என்பதைத்தான் சொன்னேன். இரு மொழிக் கொள்கை மும் மொழிக் கொள்கை என்று வருகிறபோது என்ன என்று கேட்டார்கள். கல்வித் துறையைப் பொறுத்தவரையில் முக்காலே மூன்றுவீசம், துவக்கப் பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள் மற்றவைகளை ஏற்று இருக்கின்ற பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் நேரடியாகத் தராமல் யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன் என்று வைத்து, ரிசர்வ் பேங்க் மாதிரி அவர்கள் சில பல கொள்கைகளை வைத்து, அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்பவர்களுக்கு யூனிவர்சிட்டி, இதர மற்றவைகளுக்கு இவ்வளவு தருவோம் அந்தப்படி நடந்தால் என்று வைத்துள்ளார்கள். அதையும் டிக்டேட் செய்யக்கூடாது என்றுதான் நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். அவர்கள் யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன் என்று வைத்துத் தருகிறார்களே தவிர, அப்படியிருந்தாலும் இருமொழிக் கொள்கையை நாம் கடைப் பிடிப்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்தியது மாதிரி வற்புறுத்துவதால் நிதியிலே தகராறுகள், அதிகக் கஷ்டங்கள் கூட வராது. ஆனால் இதிலே என்ன வருகிறது என்றால் தனிப்பட்டு வாங்கலாமே என்று எடுத்துச் சொன்னார்கள். ஆக எதிர் பாராச் செலவு என்ற வகையிலே கூட நாம் வேஸ் அன்ட் மீன்ஸ் என்பதியிலேயிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்றாலும்கூட 30 கோடி ரூபாய்தான் எதிர்பாராச் செலவுகள். ஆனால் 100





கோடி, 150 கோடி ரூபாய் என்று வருகின்ற நேரத்தில் ரிசர்வ் பேங்கை எதிர் பார்த்துத்தான் இந்தக் காரியத்தை நடத்த முடியும், இல்லாவிட்டால் நடத்த முடியாது. நாம் மட்டும் அல்ல பாண்டிச்சேரியிலேயும் அதே நிலைமைதான் ; 115 ரூபாய்க்குத் தான் கொள்முதல் செய்ய முடிகிறது. எனவே, யார் வந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டாலும் சரி, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டாலும் சரி, காங்கிரஸ் கட்சி ஆண்டாலும் சரி, இதைத்தான் ஜோதிபாசு அவர்கள் நான்கு நாட்களுக்கு முன்னாலே குறிப்பிட்டிருக்கிறார் கள். தேர்தல் காலத்திலே நாங்கள் கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கும், நிதி ஆதாரங்களை யெல்லாம் கட்டுப்படுத்தி ஓவர் டிராப்ட் வாங்க முடியாத ஒரு நிலையைச் செய்வதற்கும் இன்றைக்கிருக்கிற அரசமைப்புச் சட்டம்தான் எங்களுக்குக் குறுக்கீடாக இருக்கிறது ; ஆகவேதான் அரசமைப்புச் சட்டத்தை மாற்றியமைத்து இந்த அதிகாரங்கள் மற்றவைகளை வகுத்தாலொழிய இந்தச் சங்கங்களிலிருந்து மாநிலத்தைத் திருத்தித் கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லை என்று ஜோதிபாசு அவர்கள்..................

**திரு. ரா. உமாநாத் :** அப்படிச் சொல்லிய ஜோதிபாசு அவர்கள் 115 என்று நிர்ணயித்திருப்பதை 125 ஆகக் கொடுக் கிறார். அதையும் செய்கிறார்.

**மாண்மிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கஷ்டத்தை அவர்கள் தாங்கிக் கொண்டு இருநூற்றுச் சில்லரை கோடி ரூபாய் அளவிற்கு ஓவர் டிராப்டில் போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஓவர் டிராப்டுக்குப் போகாத நிலைமையில் காப்பாற்றுகின்ற சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் நேற்றைய தினம் நிறைய விளக்கினார்கள். இன்றைய தினமும் அதையே அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கு ரிசர்வ் பேங்கின் மூலமாக 100 கோடி, 110 கோடி கேஷ் கிரெடிட் நாம் வாங்குகிறோம். நாம் வாங்கிய நிலையில் ஹைபாத்திகேட் பண்ணி, கேஷ் கிரெடிட்டாக அதாவது 80 பர்சென்ட், 90 பர்சென்ட்தான் அவர்கள் லோன் தருகிறார்கள் ; மீதியுள்ள 10 பர்சென்ட் நம்முடைய ஃபண்டிலிருந்துதான் நாம் தருகிறோம். ஆனால் 150 ரூபாய் குவின்டாலுக்கு கொடுத்து வாங்கினாலும், கேஷ் கிரெடிட்டை 115 ரூபாய் என்று பிரைஸ் வாங்கிக்கொள்ளுங் கள் ; மீதியை உங்களுடைய ஸ்டேட் பண்டிலிருந்து வாங்கிச் செய்யலாம். நீங்கள் 150 ரூபாய் கொடுத்து வாங்குங்களேன்.

115 ரூபாய்க்கு மேல் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகின்ற அந்த ரெஸ்ட்ரிக்ஷனைத்தான் ரிசர்வ் பேங்க் சொல்லுகிறதே தவிர நீங்கள் 150 ரூபாய் கொடுத்து வாங்குங்களேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நிதி ஆதாரம்தான் பிரச்னை எதிர்பாராத செலவுக்கு ஒதுக்கித் தந்திருப்பது 30 கோடி ரூபாய்தான். எதிர்பாராத செலவுகளுக்கும் மற்ற இனங்களுக்கும் ஒதுக்க வேண்டுமே தவிர இதற்கு எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லை. ஆகவே தான் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தி உயர்த்தச் சொல்கிற காரணமே விலையை உயர்த்துகின்ற இதே நேரத்திலேயே மற்ற வசதி வாய்ப்புகளையும் சேர்த்து உயர்த்தித் தருகின்ற நேரத்தில் அவர்களிடத்தில் இருப்பதால் தான் இதைத் தொடர்ந்து நாம் வற்புறுத்தி வருகிறோம் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, முன்னவரவர்களின் விளக்கத்தின்படி மத்திய அரசு விலையை உயர்த்தினாலுங்கூட தமிழகத்திற்கு அதிகப் பலன் இருக்காது என்ற கருத்து இங்கே சொல்லப்பட்டது. இங்கே, மத்திய அரசு உயர்த்த வேண்டுமென்று வலியுறுத்துவதால் தமிழகத்திற்கு அதனால் கிடைக்கும் பலன் அதிகம் இல்லை என்கிற கருத்து முன்னவரவர்களின் கருத்திலே பெறப்படும் காரணமாக தமிழகத்தில் மட்டும் நம்மால் இயன்ற அளவுக்கு உயர்த்துவதன் மூலமாகப் பிரச்னைகளைச் சமாளிக்க முடியுமா என்று ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மத்திய அரசு உயர்த்துவதால் நமக்கும் பலன் ஏற்படவில்லை என்று சொல்லவில்லை. மத்திய அரசு உயர்த்துவதால் அகில இந்தியாவிலும் 22 மாநிலங்களையும் கட்டுப்படுத்தும் அளவிற்கு அது உயரும். ஆகவே, விலை அந்த அளவிற்குக் கொஞ்சம் உயரும். கொள்முதல் விலை எந்த அளவிற்கு உயர்கிறதோ அந்த அளவிற்கு கன்ஸ்யூமர்ஸ் பிரைஸ்ம் உயரும். இருந்தாலுங்கூட அதனை ஒட்டி வருகின்ற செலவு வாய்ப்புகளையும் நமக்குச் சரியாக அளிக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசு 22 மாநிலங்களையும் சேர்த்து முடிவெடுக்கிற நிலையில் எல்லோருமே சேர்ந்து வற்புறுத்தும் அத்தகைய சூழ்நிலை வருகிறது. நம்முடைய பணத்திலிருந்து நாம் கொடுத்து 150 ரூபாய் கொடுக்கக் கூடாதா என்று கேட்டால் அதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் வருகின்றன; சமாளிக்க முடியாத நிலைமைகள் வருகின்றன என்பது மட்டும் அல்லாமல் அதை எடுத்துச் செய்வதற்குப் பணம் வேண்டும். நம்மிடத்தில



எதிர்பாராத செலவு என்ற வகையில் 30 கோடி ரூபாய்தான் இருக்கிறது, எதிர்பாராத செலவு, வேறு பல செலவில், அடுத்த துணை மானியக் கோரிக்கை வரும்பொழுதுதான் அவையினுடைய உரிமையைப் பெற்று அதையும் நாம் மறுபடியும் பெற முடியும்.

ஆக, அந்த வகையிலே 100 கோடி, 150 கோடி ரூபாய் செலவழிக்கும் சூழ்நிலைமைகள் இல்லை. ஆகவே, அத்தகைய தன்மையே தவிர கொடுக்கக் கூடாது என்பது அல்ல; மனம் இல்லாமல் இல்லை; மார்க்கம் இல்லை என்பதுதானே தவிர மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களேகூட இங்கே வந்து உட்கார்ந்தாலும் இதையேதான் செய்வார்கள், வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் கூட பலமாகக் கூட இருப் பார்கள். ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற பாண்டிச்சேரியிலேயும் கூட முடியவில்லை. முடியவில்லை என்றால், இந்தியா முழுவதும் அத்தகைய சூழ்நிலைகள் இருப்பதால்தான். நாம் அளவுக்குச் சமாளித்து வருகிறோம். மத்திய அரசு நமக்கு ஒதுக்கித் தருவது 60,000 டன் என்றாலும், 40,000, 46,000 டன்தான் தருகிறார்கள். அவர்கள் ரூ. 115—க்கு கொள்முதல் செய்த அரிசியைத்தான் நமக்குத் தருகிறார்கள். பஞ்சாபிலும், வேறு இடங்களிலும் ரூ. 115—க்குக் கொள்முதல் செய்து, வங்காளத் திற்கும் கேரளாவிற்கும் பற்றாக்குறை ஏற்படும் போது தரு கிறார்கள். நமக்கும் பற்றாக்குறை ஏற்படும் போது அதைத்தான் தருகிறார்கள். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்து உயர்த்தும்போது சேர்ந்து வசதி ஏற்படும் என்பதால்தான் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.10)

குடும்பக் கார்டுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 17,536 நியாய விலைக் கடைகள் வைத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 1 ரெவினியூ கிராமத்திற்கு ஒன்று என்று வைத்தாலுங்கூட, வருவாய்க் கிராமங்கள் 16,543 இருக்கின்றன. என்றாலுங்கூட, சிலபல தேவையான இடங்களில் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டு வந்து 17,536 என்று ஆக்கி யிருக்கிறோம். ஊராட்சிமன்ற கிராமங்கள் என்றாலும் 12,604 இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்து என்று எடுத்துக் கொண்டால் 605 இருக்கின்றன. ஆகவே, 13,209 பஞ்சாயத்துக்கள் இருக் கின்றன; 16,543 ரெவினியூ கிராமங்கள் இருக்கின்றன. இருக் கின்ற கடைகள் 17,536.

ஒவ்வொரு கடைக்கும் கார்டுகள் அதிகமாக இருப்பதால், ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைப் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய உரைகளிலே குறிப்பிட்டார்கள். அதனுடைய அளவை மட்டும் சொல்கிறேன், இருக்கிற 17,536 கடைகளிலே, 500

கார்டுக்கும் குறைவாக உள்ள கடைகள் 10,818 இருக்கின்றன. அவைபற்றி கவலை இல்லை. 500-க்கும் 1,000-க்கும் இடையில் உள்ளவை 3,767 இருக்கின்றன. 1,000-லிருந்து 1,500 வரை கார்டுகள் உள்ள கடைகள் 1,402 இருக்கின்றன. 1,501 லிருந்து 2,000வரை உள்ள கடைகள் 1,331 இருக்கின்றன. 2,000 கார்டுகளுக்கு மேல் 487 கடைகள் இருக்கின்றன. 2,000-க்கு மேல் இருப்பதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று உத்தர விட்டு அதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் நகர்ப்புறங்களில், மாநகரப்புறங்களில்தான் உள்ளன. அதற்கு இடம் கிடைப்பது போன்ற வகைகளின் காரணமாகத்தான் தாமதமே தவிர, அதைக் கட்டாயமாக இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். 2,000க்கு மேல் இருப்பவைகளை இரண்டாகப் பிரித்து விட்டு, அதற்குப் பிறகு படிப்படியாக, ஆயிரத்துக்கு மேற்பட்டவற்றை ஆயிரமாகக் கொண்டு வந்து, பிற்கு 500 கார்டுகள் என்று கொண்டு வரலாம் என்றால், இப்பொழுதே செலவு ஏராளம் ஆகிறது. இப்பொழுதே, ரூ. 4, $4\frac{1}{2}$ கோடி அளவுக்கு நிர்வாகச் செலவு ஆகிறது. இப்பொழுதே நாம் ரூ.36கோடி, நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள், மூலம் விநியோகிப்பதில் ஏற்படுகின்ற இழப்பை, அரசு நிதியிலிருந்து தந்து ஈடு கட்ட வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் இந்த நிர்வாகத்தை ஓரளவு சமாளித்து வருகிறோமே தவிர, அதிக மாகக் கார்டுகள் இருப்பதை இரண்டாகப் பிரித்து, அதிகமாகக் கூடுதலாகக் கடைகள் வைக்க வேண்டுமென்ற நிலையிலேதான் இருக்கிறோம்.

பற்றாக் குறையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறேன், கோதுமை, பாமாலின், லெவி சர்க்கரை, போன்றவைகள் நமக்குத் தேவையான அளவுக்கு கிடைப்பதில்லை. கோதுமையைப் பொறுத்தவரை, தேவை 11,000 டன், 1 கிலோ கொடுப்பதற்கு. ஆனால், 4,000 டன் தான் அனுப்புகிறார்கள். பற்றாக்குறை 7,000 டன்னாக இருக் கிறது. பாமாலின் எண்ணெய் 11,000 டன் தேவை, ஒரு கிலோ கொடுப்பதற்கு. அவர்கள் அனுப்புவது, 2,547 கிலோதான். ஃபர்ஸ்ட் கம் ஃபர்ஸ்ட் சர்வ்ட் என்று கொடுக்கும் முறைதான் இருக்கிறது. கூடுதலாகப் பிற நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டுமென்று கூடச் சொல்லியிருக்கிறோம். அவர்கள், அன்னியச் செலாவணி அதிகம் ஆகிறது என்பதாலே தயக்கம் காட்டுகின்றார்கள். ஆனாலுங்கூட இந்த எண்ணெய், மற்ற எண்ணெய்களோடு பயன்படுகின்ற வகையில் இருப்பதால், குடும் பத்திற்கு 2 கிலோவாவது கிடைக்கின்ற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். இருந்தாலும், 1 கிலோ கொடுக்க வேண்டுமென்றாலும் நமக்குத் தேவை 11,000 டன்.



லெவி சர்க்கரை 19,700 டன்தான் எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஏற்கனவே இந்த முறையை மாற்றியதற்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புதான் காரணம். தீர்ப்புப்படி சரிசமமாகத் தர வேண்டுமே தவிர, வேறுபாடு காட்டக்கூடாது; கிராமத்திற் கும் நகரத்திற்கும் வேறுபாடு காட்டக் கூடாது; வருமானம் உடையவர்களுக்கும் வருமானம் இல்லாதவர்களுக்கும் வேறுபாடு காட்டக் கூடாது என்று சொன்ன அடிப்படையில்தான் ஒருவருக்கு 425 கிராம் சர்க்கரை—கிட்டத்தட்ட 1/2 கிலோ கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 4 பேர் இருக்கிற இடத்திலே 2 கிலோதான் வருகிறது. 425 கிராம் என்று கணக்குப் போட் டாலும் நமக்குத் தேவை 21,000 டன். இப்பொழுதே 2,000 டன் பற்றாக்குறை. அந்த 2,000 டன்னைத் தாருங்கள் என்று எழுதிக் கேட்டபொழுது, 2 நாட்களுக்கு முன்னாலே அதற்குப் பதில் வந்திருக்கிறது, அந்த 2,000 டன்னைத் தருவதற்கில்லையென்று. ஆகவே, அந்த 2,000 டன்னை எப்படிச் சமாளிப்பதென்றால், கார்டுக்குச் சர்க்கரை வாங்காமல் இருக்கிறார்களே? அதன் மூலமாகத்தான் நாம் நிர்வகிக்கின்றோம். இத்தன்மைகளில் இதனை நடைமுறைப்படுத்துகிற அளவுக்குத் தன்மைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே வேறு பல பிரச்சினைகளைப் பற்றியும் பல்வேறு தன்மைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 22 சதவீதம் அனுமதித்தாலும் கடந்த மழைக் காலத்திலே நாம் 25 சதவீதம் வரையிலும் அனுமதித்தோம். ஓரளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதற் காகதான் லெவி கொள் முதலிலே விவசாயிகள் எந்தக் காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது என்றும் வியாபாரிகள் ஏமாற்ற கூடாது என்றும் பார்க்கிறோம். வியாபாரிகள் பல பேர்கள் விவ சாயிகளாக வேஷம் போட்டு வருவதால் சில பல சங்கடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை உள்ளத்திலே கொண்டு இந்த இடர்பாடு களை எல்லாம் களைவதற்கான முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து செய்யும் என்று கூறிக்கொள்கிறேன். இன்னும் பல குறிப்புகள் இருக்கின்றன என்றாலும் இன்னும் ஒரு முக்கால் மணி நேரம் வேண்டும் என்றாலும், காலத்தினுடைய அருமையைக் கருதி அடிக்கடி எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்று கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் வினாக்கள் எழுப்ப வாய்ப்பு இருக்கிறது என்று கருதி அதற்குப் பதில் சொல்லும் வாய்ப்பு இருக்கின்றது என்றும் கருதி, இந்தக் கருத்துக்களுக்கு எல்லாம் நல்ல ஆதரவு தெரிவித்து இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மனதிலே கொள்ளப்பட்டு அவைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆகவே ஏப்ரல் திங்களில் இருந்து புதிய கார்டுகளை வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டு, கார்டுகளாக இல்லாமல் அது பாஸ்போர்ட் சைசிலே கிராமத்திற்கு ஒரு வண்ணமும், நகரத்திற்கு ஒரு வண்ணமும் போட்டு, ஒரு 4, 5 ஆண்டுகளுக்கு வரும்படியாக முழுக் குறிப்பையும் வைத்துகொடுக்கிற அளவுக்கு, பாஸ்போர்டு போன்று கொடுக்கும் ஏற்பாடுகளை ஏப்ரல் 1-ந் தேதியில் இருந்து, சில பல மாவட்டங்களில் தொடங்கி ஜூன் கடைசிக்குள் எல்லா மாவட்டங்களிலும் முடித்து விடலாம் என்று கருதி இருக்கிறோம், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் கூறிக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே பலவற்றை ஆதரித்துபரிந்துரை வழங்கிய இந்தத் துறை சீராகவும் செம்மையாகவும் நடைபெறுவதற்கு உறுதுணை புரிந்து ஆக்கமும் ஊக்கமும் பயத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து, இந்தத் துறைகள் எல்லாம் சீராகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெறுவதற்கு எனக்கு ஒத்துழைப்புத் தந்த அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இந்த அளவோடு உரையை முடிக்கிறேன்.

—

திரு. எம். இளையபெருமாள் : தலைவர் அவர்களே பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த நரிக்குறவ மக்கள் லட்சக்கணக்கான பேர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். அந்த நரிக்குறவர்களுக்காக சின்ன சேலம். விருத்தாசலம், பண்ருட்டி போன்ற இடங்களில் கொடுக்கப்பட்ட நிலங்கள், கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் போன்றவைகள் மற்றவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு பாசிமணி போன்ற சிறு தொழில்கள் செய்வதற்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் 200 ரூபாய் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு அரசு என்ன செய்யப்போகிறது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விருத்தாசலத்திலே நிலங்கள் கொடுக்கப்பட்டன. வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர்களை மிரட்டி எடுத்துக் கொண்ட நிலைமை இருக்கின்றது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த நரிக்குறவர்களை பின்தங்கியவர்கள் பட்டியலில் இருந்து எடுத்து விட்டு (குறுக்கீடு) அருமை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்வதைப்போல தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் எழுப்பிய பிரச்சினை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து நரிக்குறவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றும், அவர்களுடைய நிலையை உயர்த்தவேண்டும் என்றும் அவர்கள் மீண்டும் நரிக்குறவர்களாக இருக்கவேண்டாம், அவர்களும் மற்றவர்களோடு சமமாக வரவேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டம் போட்டு





பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டன. நிலங்களும் கொடுக்கப்பட்டன. ஆனால்அவர்களுக்கு அதிலே சுவையே இல்லை. அவர்கள் அந்த வாழ்க்கையை நடத்த விரும்பவில்லை. விருத்தாச்சலத்தில் கட்டப்பட்ட வீடுகள் அத்தனையும் காலி செய்துவிட்டு, நிலங்களை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டார்கள். வேறு இடங்களிலே வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகளிலும் அவர்கள் இல்லை. அவர்களுடைய பழக்கவழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ப அவர்களை நிலையாக வைப்பதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்து, அவர்களுக்கு தொழில் ஆரம்பித்து 8 மணி நேரம் அங்கே உட்கார வைத்து அவர்களிடம் வேலை வாங்கி, அது மாதிரி ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்து, முடியுமானால் செய்யலாம். அதைவிட்டு வீடுகள் கட்டிக் கொடுத்து, நிலங்களை கொடுப்பதாலே பல இடங்களில் பார்ப்போமானால் மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு போகிற அளவுக்கு விட்டுவிட்டு சென்று விடுகிறார்கள், அந்த நிலை இருப்பதன் காரணமாகத்தான் அதை சிந்தித்து செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நாம் புரிந்துகொள்வோம். அவர்களிடம் கலந்து பேசி என்ன செய்தால் நல்லது என்று செய்யவேண்டுமே தவிர, நாம் இதுவரையில் செய்து இருப்பதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

### கோரிக்கை எண் 21—மீனளம்

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம் : ந. சிவஞானம் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,78,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 10.20]

கோரிக்கை எண் 32.

(ஆ) பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லவில்லை. கூட்டுறவு ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் மார்க்கெட் ரேட்படி வாங்கவேண்டும் என்று சொன்னேன். அதற்கு பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முன்னாலே கேட்ட கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். நீங்கள் கையெழுத்துப் போட்டு மனு கொடுத்த பிறகு, அரசாங்கத்திலிருந்து கூட்டுறவு முறை மூலமாக ஒப்பன் மார்க்கெட் ரேட்டில் வாங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அது நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: அவர்களின் வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,22,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்

திருவாளர்கள் ப. சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மற்றும் பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. உ. சுப்பிரமணியம் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,57,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 28

சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 28, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,25,98,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு க பாலன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் நிர்வாக முன்னேற்றத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒரு சில பெரிய பதவிகள் நகராட்சிக்கு வீண் செலவு என்பதால் அப்பதவிகளை நீக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும், என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,25,98,33,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு ந. சுந்தரராஜ்:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் ஒரு மக்கள் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,25,98,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவர் அவர்களே, பெண்களுக்கும், அரிசன மக்களுக்கும் பிரதிநிதித்துவம் என்ற புதிய சட்ட அடிப்படையில் சீக்கிரமாக, உள்ளாட்சிகளின் தேர்தலை உடனடியாக நடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,25,98,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

**திரு செ. சிவசாமி:** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் ரோடுகளும், பாலங்களும் நிர்மாணிப்பதற்கு ஆவன செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,25,98,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

### கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 63,15,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**திரு இரெ. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றிய எல்லையில் வடமட்டம் கூத்தனூர் சாலையில் அரசலாறு, முட்டையாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—



''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,15,28,000-ல் 100 குறைக்க வேண்டும்''.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, வேலூர் அமர்தி சாலையில் நாக நதி குறுக்கே பாலம் அமைக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,15,28,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவர் அவர்களே, சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,15,28,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. பொ. உத்தராபதி:** தலைவரவர்களே, முத்துப்பேட்டை ஒன்றியம், முத்துப்பேட்டை ஜாம்புவானோடை வழியாக தில்லை விளாகம் சாலையில் தற்போது பேருந்து சென்றுகொண்டிருப்பதால் அந்த சாலைய தார்சாலையாக மாற்றுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,15,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் குத்திகுளத்திற்கும் சிவலிங்க குடியிருப்புக்கும் இடையில் மானூர் கால்வாயில் ஒரு பாலம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை என் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,15,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**ஊ. கோரிக்கை எண். 52—சாலைகள் பாலங்கள் குறித்து மூலதன செலவு.**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை என் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,20,35,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, சொன்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 20,20,35,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். இராசாராமன் :** தலைவரவர்களே, குடிந்தை—மன்னார்குடி நெடுஞ்சாலையில் " சாக்கோட்டை " அரசலாறு பாலமும் " கொருக்கை " பாலமும் இடிந்து மாதங்கள் பலவாகியும் முக்கிய வழித்தடம் பாதிக்கப்பட்டது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

" மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 20,20,35,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, அம்பா சமுத்திரம் தொகுதியிலுள்ள அப்பர்டாமிலிருந்து கேரளா செல்லும் பாதையை செப்பனிட எஸ்டிமேட் தயார் செய்திருந்தும், நிதி பற்றாக்குறையென்று கூறி வேலைகள் தடைபடுத்தப்பட்டதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;



" மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூபாய் 20,20,35,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

**திரு. செ. சிவசாமி :** தலைவரவர்களே, ரோடுகளை நிரந்தரமாக பராமரிப்பதற்காக அதிகமாக காங்கு கூலிகள் நியமிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 20,20,35,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்ளே, மூன்று மானியக் கோரிக்கைகளையும் ஒன்றாக எடுத்துக் கொள் வதற்காக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் கோரிக்கை எண். 28-ல் பக்கம் 4-ல் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங் களில் சில தவறுகள் இருக்கின்றன. இதிலே நான் இப்போது குறிப்பிடுகின்ற திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட் டுக் கொள்கிறேன்.

வரிசை எண். 5-ல் இறுபாசன வசதி மேம்பாடு என்பதில் 3457 என்று இருப்பதற்குப் பதிலாக 8023 என்றும்; வரிசை எண். 6-ல் ஊரக மருந்தகங்கள் என்பதில் 8023 என்று இருப்பதற்குப் பதிலாக 192 என்றும் ; வரிசை எண். 7-ல் தாய்சேய் நல விடுதி

கள் என்பதில் 192 என்று இருப்பதற்குப் பதிலாக 539 என்றும் ; வரிசை எண். 8-ல் பள்ளிக் கட்டிடங்கள் என்பதில் 539 என்று இருப்பதற்குப் பதிலாக 3457 என்றும் இருக்க வேண்டும். இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இந்த மூன்று கோரிக்கைகள் பற்றிய கருத்துக்கள் புத்தக வடிவிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் கருத்துக்களை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இறுதியில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய விவாதத்தில் பங்குகொள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஏறத்தாழ 20 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பிற்பகல் ஒரு மணிக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்த அரைமணி நேர விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, ஒரு மணிக்குள் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தை முடித்துக் கொள்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்கு மேற்படாமல் கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இவை முக்கியமான மானியக் கோரிக்கைகள். பேசுவதற்கு நிறைய வாய்ப்புத் தரவேண்டும். கதி [illegible] ருத்துக்களைச் சொல்ல முடியும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி அவையை நடத்துவதற்கு எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். அடுத்த நாள் வைத்துக்கொள்வதாக இருந்தால் ஒவ்வொரு நாளும் இப்படித் தள்ளிக்கொண்டே போய்விடும். அதனால் இன்றைக்கே விவாதத்தை முடிக்க வேண்டும்.





**திரு. அன்பில் தர்மலிங்கம் :** உள்ளாட்சித் துறை மானியங்கள் மிகவும் முக்கியமானவை. வேண்டுமானால் இன்று மாலையிலும் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** அநேகமாக எல்லோரும் இன்று ஊருக்கு போவதற்கு டிக்கட் எல்லாம் வாங்கிவிட்டோம். அதனால் மாலையில் வைத்துக்கொள்ள வசதியாக இருக்காது.

**திரு. கே. எம். தங்கமணி :** கருத்துக்களைச் சொல்ல கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுங்கள். தேவைப்பட்டால் மாலையிலும் வைத்துக்கொள்ளலாம்.

[முற்பகல் 10-30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கே கேள்வி நேரம் இல்லை. அப்படிக் கேள்வி இல்லாமல் போவதற்கே பல உறுப்பினர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். ஆகவே நாம் எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டி இருக்கின்றது. ஆகவே நேரம் இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் ஐந்தைந்து நிமிடங்களிலே பேசி முடித்துவிட்டால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தை 1 மணி வரையிலே தான் நடத்தவேண்டி இருக்கின்றது. அதற்குப் பிறகு வேறு ஒரு விவாதம் நடத்தப்பட வேண்டி இருக்கின்றது. எனவே மாலையிலேயும் வைத்தால் முடித்துவிடலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே. இன்றைக்குச் சனிக்கிழமை. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. பலபேர் ஊருக்குப் போவதற்காக டிக்கட் வாங்கிவிட்டார்கள்...........

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு கேள்வி நேரம்இல்லாததால் சாதாரணமாக கேள்வி நேரம் முடிந்து ஆகின்ற நேரம்தான் இப்போது ஆகியிருக்கின்றது. ஆகவே நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்தமுடிவின்படி காலை

[திரு. எ. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 13

யிலேயே முடித்துவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்னொரு அரைமணி நேரம் விவாதத்திற்காக ஒதுக்கி இருப்பதால் வேண்டுமானால் ஒரு அரை மணி நேரம் அதிகமாகப் போகக் கூடும். ஆகவே இரண்டு மணிக்குச் சரியாக முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு மணிக்குள்ளாக சபையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிந்தாக வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.

*திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1982-83 ஆம் ஆண்டுக்கான சமுதாய நல வளர்ச்சி மற்றும் சாலைகள் பாலங்கள் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நம்முடைய கிராமங்கள் முன்னேற வேண்டும் என்றால். நகரங்கள் முன்னேற வேண்டும். நகரங்கள் முன்னேற வேண்டும் என்றால் நாடு முன்னேற வேண்டும். நாடு முன்னேற வேண்டும் என்றால் தேசம் முன்னேற வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதற்கேற்ப இன்றைக்கு தமிழகத்திலே 4 ஆண்டுக் காலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. பல திட்டங்களை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களை செயல்படுத்தப்படுகின்றதா என்று கேட்டால் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது பற்றி மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரையிலே அனைத்து மாநிலங்களையும்விட தமிழகம்தான் தலைசிறந்து இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் தன்னிறைவுத் திட்டம் என்பது தேவைதான். அதில் எவ்விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் அந்தத் திட்டத்திலே முதற் கட்டமாக 69 ஒன்றியங்களையும் இரண்டாவது கட்டமாக 150 ஒன்றியங்களையும் 3-வது கட்டமாக 159 ஒன்றியங்களையும் இந்தத் திட்டத்திலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் நல்ல முறையிலே செயல்படுகின்றதா என்றால் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர், இணைப்புச் சாலைகள். சிறு பாசனங்கள், ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்பு மனைகள். சாலை வசதி, பள்ளிக்கூடங்கள் கட்டுவ. , ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்



1982 மார்ச் 13] [திரு. த. ஆறுமுகம்]

கட்டிக்கொடுப்பது இப்படி பல்வேறு திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டாலும் கூட அவை அனைத்தும் நல்ல முறையிலே செயல்படுகின்றதா என்றால் இல்லை.

முதல் கட்டமாக அரியலூர் கோட்டத்தில் ஜெயம்கொண்டான் ஒன்றியம் ஆலத்தூர் ஒன்றியம், வேப்பூர் ஒன்றியம் ஆகியவைகளை தன்னிறைவுத் திட்டத்தில் கீழ் எடுத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அந்த வேலைகள் சரிவர நடைபெறவில்லை. தயவு செய்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்து, அந்த வேலைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றனவா என்பதை கண்காணித்துப் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் ஆலத்தூர் ஒன்றியத்தில் 21 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சரிவர செயல்படவில்லை. ஆலத்தூர் ஒன்றியத்தில் புஜங்கராய நல்லூர் என்ற ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளே தெரியவில்லை. உள்ளே புதைத்து வைத்திருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நடைபெறுகிற வேலைகளில் சாலைகளும் எடுக்கப்படுகின்றன. அந்த சாலைகளுக்கு 500 சி. எம். ஜல்லி அடிக்க வேண்டும் என்று சொன்னால் அப்படியே 500 சி.எம். அடிக்காமல் 300 சி.எம். மட்டும் அடித்து விட்டு. 500 சி.எம். அடித்ததாக கணக்கு எழுதி 10,000 ரூபாய்க்கு பில் அனுப்புகிற முறைகேடுகள் இருக்கின்றன. அதையெல்லாம் சற்று பார்க்க வேண்டும். அது மட்டும் அல்ல. ஆலத்தூர் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஏ.இ. ஒருவரிடம் ஒரு டன் சிமெண்ட் கொடுக்கப்பட்டதில், அதை அவர் வெளியிலே விற்றார் என்பதற்காக அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலை இந்த ஒன்றியத்தில் மட்டும் அல்ல, எல்லா இடங்களிலும் இருக்கிறது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது பள்ளிக் கட்டிடங்கள் கட்டியிருக்கிறோம், மருந்தகங்கள் கட்டியிருக்கிறோம், என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். அரியலூர் தொகுதியில் மூளைக் காய்ச்சல் நோய் வந்து பாதிக்கப்பட்டபோது திருமானூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அதற்குத் தேவையான மருந்தே இல்லை. அதற்குப் பிறகு தந்தி கொடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாங்குவதற்கு அனுமதி கொடுத்தார்கள்.

அடுத்ததாக திருச்சி மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கக் கூடிய கொள்ளிடம் பாலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அந்தப் பாலத்திற்கு மின் விளக்குகள் அமைத்துத்தர வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். அதே போல அரியலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டபோது அது அவ்வாறு அமைக்கப்படும் என்று சட்ட மன்றத்தில், அப்போதிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அறிவித்த பிறகும். இதுவரையில் அரியலூர் பேரூராட்சி நகராட்சியாக அமைக்கப்படவில்லை. அதை விரைவில் மாற்றியமைக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல. அரியலூர் தீ அணைப்பு நிலையம் ஒன்று வருகிறது என்று சொன்னார்கள். அப்போது நான் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராக இருந்தேன். அப்படி ஒன்றியத்தினுடைய பொறுப்பில் இருந்த நேரத்தில் அதற்கான இடம் எல்லாம் ஒதுக்கப்பெற்று. அந்த இடத்தில் தீ அணைப்பு நிலையம் வரும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே அறிவித்த பிறகும்கூட இதுவரையில் அந்த தீயணைப்புநிலையம் வரவில்லை. ஆகவே அதை விரைவில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைக்கக் கூடிய பாலம் ஒன்றை அமைக்க வேணடும். அதே போல இன்றைக்கு சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஏராளமாக இருக்கின்றன. லப்பைகுடிகாட்டில் ஒன்று இருக்கிறது. காட்டூர் ஷுகர் பேக்டரி என்று ஒன்று இருக்கிறது. அதிலேயெல்லாம் வரக்கூடிய செஸ் தொகைகளை உபயோகித்து நல்ல சாலைகளை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் காட்டுப் பிரிங்கியம். ரெட்டிப்பாளையம் குவாரியிலிருந்து. டால்மியாவுக்கு ஒரு நாளைக்கு 200 லாரிகளை டிரைவர்களை வைத்து ஓட்டி அடிக்கிறார்கள். அதன் விளைவாக அந்தப் பாதைகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பாதையை. டால்மியாக்காரர்களிடம் தெரிவித்து. நல்ல முறையிலே அகலப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒரு நாளைக்கு ஆயிரம், இரண்டாயிரம் டன்கள் அளவில் லோடுகள் அடிக்கிறார்கள். அதே போல இன்றைக்கு பல சாலைகளை அமைக்கும் பணியெல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு நடைபெற்றுக் கொணடு வருகிறது. ஆனால் ஒட்டக்கோவில் உள்ள மயானச் சாலை அமைக்கப்பட்ட ஒரே முறையிலேயே போய்விட்டது. அடுத்ததாக. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தன்னிறைவுத் திட்டத்திற்காக என்று 6, 7 கோடி ரூபாய்களும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தில் 5 கோடி ரூபாய்களும் ஆக 11 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்குகிறார்கள். ஆனால் அந்தத் தொகை நல்ல முறையில் செலவழிக்கப்படுவதில்லை. அது நல்ல





முறையில் செலவழிக்கப்படவேண்டும் என்றால் வட்டார வளர்ச்சி பி.ஏ. என்பவர் ஒருவர்தான் இருக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு அலுவலரை நியமிக்கவேண்டும். ஏனென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அத்தனை வேலைகளையும் கவனிக்க முடியாது. ஆகவே. அந்தப் பணம் நல்ல முறையில் செலவழிக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

அதே மாதிரி இன்றைக்கு மேல்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் எல்லாம் பாதியிலேயே அப்படியே நிற்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்கிறார்கள். அதேபோல குடிநீருக்காக பைப்புகள் வாங்குகிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தில் அந்த பைப்புகளின் விலை ரூ. 7.50 அல்லது 8 என்று இருக்கும்போது. ஒன்றியத்திலே 17 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இவைகளை இவைகள் எல்லாம் முறைகேடுகள் இல்லையா? இவைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல பாலங்கள், சாலைகள் எல்லாம் முன்பு கட்டப்பட்டவை, எல்லாம் இடிந்துக்கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நல்ல முறையில் சீர்திருத்தி செப்பனிட வேண்டும். தன்னிறைவுத் திட்டம் நல்ல திட்டம் தான். ஆனால் அந்த திட்டத்தை நல்ல முறையில் அதிகாரிகள் செயல்படுத்துகிறார்களா என்பதுதான் கேள்வி. நல்ல முறையில் அந்தப் பணிகள் நிறைவேற வேண்டும் என்று சொன்னால் ஊராட்சி ஒன்றியத்தில் பெருந்தலைவர்கள் இல்லை.

(முற்பகல் 10-40)

நகராட்சித் தலைவர்கள் இல்லை. ஆகவே, யாரிடம் போய்ச் சொல்வது, அதிகாரிகளிடம் சொல்லவேண்டியிருக்கிறது. கோட்ட வளர்ச்சி அதிகாரியிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒன்றிய ஆணையரிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்கள் வந்து பார்ப்பதற்குள் கிராமங்கள் பூராவும் இருள் அடையக்கூடிய சூழ் நிலை இருக்கிறது.

ஒன்றியங்களுக்கு ஆண்டுக்கு இவ்வளவு என்று வருவாய் வருகிறது. அந்த வருவாயைக் கொண்டு எது எதற்கோ செலவு செய்கிறார்கள். ஒன்றியத் தலைவர்கள் இல்லாத காரணத்தால் எந்த நேரத்திலும் எந்தச் செலவையும் அதிகாரிகள் அவர்கள் இஷ்டம்போல் செய்து வருகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்று கொடுக்கப்பட்ட வானொலிப் பெட்டிகள் தலைவர்களிடம் இருந்தது. அவை எந்த ஊரிலும் பாடுவது கிடையாது. மக்கள் நாட்டில் நடக்கிற விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்று மக்கள் தொகையில் 80 சதவீத பேர்கள் கிராமங்

களில்தான் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், இந்த 80 சதவீதம் மக்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. ஆகவே, இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டத்திலிருந்து மதனத்தூருக்கு கொள்ளிடத்தில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் கிராம மக்கள் சந்தைக்கு மாடுகளைக் கொண்டு செல்லவும் கிராம மக்கள் முன்னேற்றம் அடையவும் அது வழிவகுக்கும். எனவே, அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்ப்பழுவூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகள் நல்ல முறையில் வழங்கவும், டாக்டர் தங்குவதற்கு வசதியும் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சுண்டக்குடி பகுதியில் 18 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள டாக்டர் இராஜிநாமா செய்து விட்டார்கள். காரணம் அது ஒரு தீவுபோல் இருப்பதால் போக்குவரத்து வசதி அங்கே இல்லை.எனவே, அந்த டாக்டர் இராஜிநாமா செய்து விட்டார்கள். அந்த மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கீழ்ப்பழுவூரில் ஒரு மருந்தகம் இருக்கிறது. அதற்கு கட்டடம் இல்லை. கிராம மக்கள் நலன் கருதி அந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் அலுவலர்கள் கூட்டத்தைக் கூட்டி தவறுகள் நடைபெறுவதாக புகார்கள் வருகின்றன, யார் தவறு செய்கிறார்களோ அதைக் கண்காணிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், ஒரு தவறு செய்தால் அது தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டோம் என்று. ஆகவே, தவறு யார் செய்திருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தில் இன்று கோடிக்கணக்கான தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அந்தத் தவறுகளைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து 378 ஊராட்சி ஒன்றியங்களில் எந்த எந்த ஒன்றியங்களில் நல்ல முறையில் வேலை செய்திருக்கிறார்கள், எந்தெந்த ஒன்றியங்களில் சாலைகள் பழுதடைந்திருக்கின்றன, எந்தெந்த ஒன்றியங்களில் மேல்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்திருக்கின்றன, எந்தெந்த ஒன்றியங்களில் பள்ளிக்கூடக் கதவுகள் விழுந்திருக்கின்றன என்பவைப்பற்றியெல்லாம் கண்காணிக்க வேண்டும்.



இன்று அரியலூரில் குடிக்க தண்ணீர் இல்லை. எனவே, குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேல்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி கொள்ளிடத்திலிருந்து நீர் கொண்டுவரும் திட்டம் தீட்டப்பட்டிருந்தும் அது செயல்படவில்லை. அதை இந்த ஆண்டாவது செயல்படுத்தித்தர வேண்டும். அரியலூர் வியாபாரத்திற்கு முக்கியமான இடமாகும். பத்து ஒன்றியங்களுக்கு அது தலைமையிடமாக இருக்கிறது. அங்கே 80, 82 அலுவலகங்கள் உள்ளன. மாதம் ஒன்றுக்கு வாடகையாக ஒரு இலட்சத்திற்கு மேல் அரசு வாடகையாகக் கொடுக்கிறது. எனவே, ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து நல்ல கட்டடங்களைக் கட்டி எல்லா அலுவலகங்களையும் ஒரே இடத்தில் அமைத்தால் அந்த பத்து ஒன்றியங்களிலிருந்து வரக்கூடியவர்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்க வசதியாக இருக்கும். எனவே, அந்த வசதியைச் செய்து தரவேண்டும் என்று கேட்டு நேரம் இல்லாத காரணத்தால் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். கே. இராஜமாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கைகளை ஆளும் கட்சித் தரப்பில் பாராட்டிப் பேசுகிற அதே நேரத்தில் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற வேறு எந்த மாநிலமும் சிந்தனை செலுத்தாத, சிந்திக்க மறந்த நலிந்த ஒரு பிரிவினரான கிராம மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், காவிரிக் கரையின் அருகிலே அமைந்திருந்தாலும்கூட, முசிறியில் மண்ணச்சநல்லூரைத் தலைநகரமாகக் கொண்ட இரண்டு ஒன்றியங்களில் குடிநீர்ப் பிரச்னை மிகவும் பெரும் பிரச்னையாக இருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டு, குடிநீர் வாரியம் வாயிலாக நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி, இந்தப் பகுதி மக்களுடைய இடர்பாடுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்த அளவில், சாலைகளைப் போடுவதற்கு, முன்னாலேயே, அங்கே சாலைகளைப் போடுவதற்கான கற்களை, 6 மாதங்களுக்கு பின்னாலே போட வேண்டிய சாலைக்கு முன்னதாகவே கற்களைப் போட்டு, கான்ட்ராக்டருக்கு முழுப்

[திரு. எம். கே. இராஜமாணிக்கம்] [1982 மார்ச் 13]

பணத்தையும் கொடுத்து விடுகிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு சாலைகளுக்குத் தேவையான கற்களைப் போடுவதில்லை. ஆகவே, சாலைகளைப் போடுகின்ற காலத்திலே, தார் போடும்போது, அதற்குத் தேவையான அளவுக்கு கற்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், நல்ல சாலைகளை உருவாக்க முடியாத ஒரு நிலைமையை உருவாக்குகிறார்கள். எனவே, இந்த நிலைமையைத் தவிர்க்கின்ற வகையிலே, இப்போது சாலைகளை பெரிய அளவில் சென்ட்ரல் மிக்சிங் பிளாண்ட் மூலம், தமிழக அரசே அந்தச் சாலைகளைப் போடுகின்ற அளவிற்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சாலைகளைப் போடும்போது, மழைக் காலத்திலே தார் சாலைகளைப் போடுகிறார்கள். அதனால், தார் சாலைகள் சரியான முறையிலே இல்லாத ஒரு சூழ்நிலை அமைந்துவிடுகிறது என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே, புத்தனாம் பட்டி, கோட்டாத்தூர் இடையே இரண்டு காட்டாறுகள் குறுக்கே வருகிறது. இந்தத் துறையிலே அங்கே பாலத்தை அமைக்கும் போது, மணல் அதிகமாக கலந்த குழாய்களைப் போட்டு, அங்கே பாலம் அமைத்ததன் காரணமாக அந்தப் பாலங்கள் போட்ட ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, தண்ணீராலே அடித்துச் செல்லப்பட்டு, இன்றைக்கு போக்குவரத்துத் தடைபட்டு, பேருந்துகள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதே நிலைமை எதுமலைக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் ஏற்பட்டிருக்கிறது. அங்கே உள்ள பொறியாளர்கள், எந்த அளவிற்கு தண்ணீர் வந்தாலும், அந்தப் பாலம் உடையாமல் இருக்கின்ற அளவுக்கு திட்டமிட்டு செய்யாததால், இன்றைய தினம் அங்கே இருக்கின்ற மக்கள் பேருந்துகளில் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அண்மையிலே திருவெள்ளரையில் ஏற்கெனவே இருந்தவர்கள், பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்ற முறையிலே, அங்கே கால்கோள் விழாவை நடத்திச் சென்றிருந்தார்கள். புரட்சித் தலைவர் தலைமையில் தமிழக அரசு அமைந்ததற்குப் பின்னால், அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற முறையில் $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாயை ஒதுக்கி, அங்கே பள்ளிக்கூட கட்டிடம் கட்டப்பட வேண்டுமென்று, அதை கான்ட்ராக்டுக்கு விடப்பட்டது. இன்றைய தினம் எந்த ஒரு நல்ல நோக்கத்திற்காக தமிழக அரசு செயல்பட்டதோ, அந்த நோக்கத்தைக் கெடுக்கின்ற வகையிலே அங்கே கான்ட்ராக்ட் எடுத்தவர் மணலை அதிகமாகக் கலந்து அந்தக் கட்டிடத்தைக் கட்டியதாலே, ஆரம்ப காலத்திலேயே இடிந்து விழுகின்ற நிலைமை அங்கே இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



[1982 மார்ச் 13] [திரு. எம். கே. இராஜமாணிக்கம்]

முசிறியில் தினசரி காய்கறி மார்க்கெட் அண்மையில் தீப்பிடித்துக் கொண்டது. முசிறியிலே இருக்கின்ற தீயணைப்புப் படையினர் அந்த இடத்திற்கு நள்ளிரவில் வந்து, பெட்ரோல் இல்லை என்று சொல்லிவிட்டு, தண்ணீர் இருந்தும் தண்ணீரை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது மிகவும் வருந்தத் தக்கது. அந்தத் தீயணைப்புப் படையினருக்கு முன்பணமாக இருக்க வேண்டிய தொகை ரூபாய் 500-ஐ என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இங்கே, இப்படி அடிக்கடி தீ விபத்து ஏற்படுகின்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, உப்பனாறு நீர்த்தேக்கத் திட்டத்தை, அந்தப் பகுதி மக்கள் வளமடைய வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டு, இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட அரசு, 1982—83-ஆம் நிதி ஆண்டில் அது முடிவடைகின்ற அளவிலே, அதை செய்து கொடுத்திருப்பதற்காக தமிழக அரசை எங்கள் தொகுதி மக்கள் சார்பாக பாராட்டுகிறேன்.

முசிறியிலே மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 2.51 இலட்ச செலவில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை பாராட்டுகிறேன். ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களில் ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதற்கு சுமார் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. அவற்றிற்கு இரைப்பான் பொருத்தாத காரணத்தாலே, என்னுடைய தொகுதிகளிலே பல இடங்களிலே கிணறுகளை கல்லை போட்டு மூடியிருக்கிற நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையினால் அக்கிணறுகள் உபயோகப்படுத்த முடியாமல் இருக்கின்றன.

[முற்பகல் 10—50]

குடிநீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில் மேல்நிலைத் தொட்டிகள் சரியாக இயங்கவில்லை என்று சொன்னால் குடிநீர் வடிகால் வாரியம் அந்த மோட்டாரை ரிப்பேர் செய்வதற்கு ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு கழிப்பிடங்கள் கட்டுவதைப் பற்றி, நான்கு அறைகள் ஆண்களுக்கும், 2 அறைகள் பெண்களுக்கும் என்று கட்டுவதற்கு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த கழிப்பிடங்களைப் பொறுத்த வரையில் அங்கே தண்ணீர் வசதி மிக முக்கியமானதாக இருக்கிறது. கிராமங்களில் தண்ணீர் வசதியுள்ள இடங்களாகப் பார்த்து கழிப்பிடங்களைக் கட்டுவது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பத்து கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு வண்டிகள் வழங்க திட்டமிருக்கிறது. முசிறி கோட்டத்தைப் பொறுத்த வரையில் அது அதிகமான சுற்றளவு உள்ள பகுதியாக இருக்கிறது. பத்து வண்டிகள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு ஒதுக்கியிருப்பதல் முசிறி கோட்ட வளர்ச்சி அலுவலருக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு அவருக்கு அலுவலகமும் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சுணைப்போகாநல்லூருக்கும், சிலையாத்திக்கும் இடையில் பங்குனி ஆற்றுப் பாலம் என்று இருக்கிறது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இணைப்புச் சாலையாக ஒன்றை ஏற்படுத்தி இந்த பாலத்தை இந்த நிதி ஆண்டிலேயே கட்டிக் கொடுக்க வழிவகை செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முசிறி தொகுதி காவிரி ஆற்றுக் கரையை ஒட்டிய பகுதியாக இருப்பதாலே அங்கே மயான பாதைகள் அமைப்பதிலே சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு ஊரிலேயிருந்து இன்னொரு ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால் இடையிலே இருக்கிற ஆற்றில் கழுத்தளவு நீரிலே இறங்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்ற தன்னிறைவுத் திட்டத்திலே பாலங்கள் கட்ட திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இவற்றை செம்மையாக நடத்துவதற்கு அங்கே இருக்கிற பி.டபிள்யூ.டி. மற்றும் (R. C. Division) அதிகாரிகளுக்கு உடனடியாக அனுமதி வழங்கி திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறபடி, ஒரு ஆண்டிற்குள்ளாக செய்கிறவகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திட கேட்டுக் கொள்கிறேன்.

டைரி பார்மில் தயாரிக்கிற மாட்டுத் தீவன்ங்கள் தரம் குறைந்து இருக்கின்றன. தனியார்கள் நல்ல முறையில் தயாரிப்பதால் அவற்றை வாங்கி அளித்திட, மக்கள் பயன் அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முசிறி ஒன்றியத்தில் அங்கே இருக்கிற ஆணையரும், ஈ.ஓ.பி.யும், ஈ.ஓ.பி. ராமசாமி என்று நினைக்கிறேன் அவர்களைப் பொறுத்தவரையில் பலமுறை அமைச்சர் அவர்களிடம் புகார்களை சொல்லியிருக்கிறேன். கிராம பஞ்சாயத்திலே 225 ரூபாய் ஒதுக்க வேண்டிய நிதியை முள் வெட்டினோம் என்று சொல்லி அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கையெடுத்து சஸ்பென்ட் செய்து, அவர்கள் குற்றவாளி இல்லை என்று நிரூபிக்கப்பட்டதற்குப் பின்னாலேதான் வேலையில் அமர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.





ஏனென்றால் ஏற்கெனவே பல இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்டு குற்றஞ்சாட்டப்பட்டு பின்னாலே மீண்டும் வந்து அதிகமான ஊழல்களுக்கு வித்திடுகின்ற அளவிலே செயல்படுகிறார்கள். சிறுகாம்பூர், மணச்சநல்லூர் ஆகிய இடங்களிலே வசூலிப்பதற்காக சைக்கிள் வரிக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து விட்டு தண்ணீர் வரி, வீட்டு வரி என்று வசூலித்து விட்டு கணக்கிலே காட்டாமல் பல இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள். அவர்கள் அங்கேயே வேலையிலேயும் இருக்கிறார்கள். இந்த அளவுக்கு நடைபெற்றால் எந்த அளவு பஞ்சாயத்துக்கள் செயல்படும் என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இதுவரையில் முன்னேற்றம் அடையாத கிராமங்களை முன்னேற்றுவதற்காக நல்லமுறையிலே தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து அரசு அமல் நடத்தி அதன் மூலமாக எல்லா கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் செவ்வனே வசதிகளைச் செய்து தருகின்ற தமிழக அரசைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

*திரு. கே. எம். தங்கமணி : சமுதாய நலவளர்ச்சித் திட்டம், நகராட்சி நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்த மானியங்களின் மீது கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி என்னுடைய உரையை நான் துவக்குகின்றேன். உத்தமர் காந்தியடிகள் எண்ணத்திற்கு இணங்கவும், நேரு பெருமகனார் வகுத்திட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலும் அன்றைக்கு ஆட்சி பீடத்திலிருந்து காங்கிரஸ் சர்க்கார் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்ற முறையிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் என்ற உள்ளாட்சி அமைப்புக்களை ஏற்படுத்தியது. அப்படி ஏற்படுத்தப்பட்ட அந்த அமைப்புக்கள் எல்லாம் இன்றைக்கு அதிகாரமிழந்து கொலு பொம்மைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன.

கிராமங்களிலே நடப்பதற்கு நல்ல சாலை, படிப்பதற்கு பள்ளிக்கூடம், குடிப்பதற்கு நல்ல தண்ணீர், ஒளி கொடுக்கும் மின்சாரம், நோய் தீர்க்கும் மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றித் தரும் தன்னிறைவுத் திட்டப் பணிகளை நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன்.

முதல்வர் அவர்களின் புரட்சி சிந்தனையிலே உதிர்ந்த இந்த பார்போற்றும் திட்டம் உரிய முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. திட்டம் போடுவது பெரிதல்ல. திட்டத்தை நிறைவேற்றுவது தான் பெரிது. குடிநீர் வழங்கலில் இருந்து ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் கட்டுவது வரை பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள்.

தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்யும் பொழுது அங்கே மக்கள் தருகின்ற மனுக்களில் காணப்படும் குறைபாடுகள் இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது இந்த அரசாங்கத்திற்கு நிர்வாகத்தை நடத்திச் செல்லுகின்ற திறமை இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. வையகப் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே காணப்பட்ட நிர்வாகம் இன்றைக்கு இல்லை.

எனது தொகுதியைச் சேர்ந்த மயிலம் ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் முதற் கட்டத்திலேயே சேர்க்கப்பட்ட ஒன்றியங்களில் ஒன்று. பெரும்பாலான கிராமங்களில் இன்னும் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இந்த ஒன்றியத்திலே செண்டூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு டுவாட் போர்டால் கட்டப்பட்ட ஓவர்ஹெட் டாங்க் இடிந்து விழும் நிலையில் உள்ளது. குடிநீர்த் திட்டத்தில் 20 சதவீதம் அரிசனக் காலனிகளில் செலவிட வேண்டுமென்று இங்கே சொல்கிறீர்கள். ஆனால் மயிலம், மரக்காணம் ஒன்றியங்களில் எந்த ஒரு கிராம அரிசனக் காலனியும் பயனடைந்ததாகத் தெரியவில்லை.

அடுத்ததாக சாலை வசதிகள். இங்கே ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கொள்கை குறிப்பிலே புள்ளி விவரம் கொடுத்துள்ளீர்கள். இந்தியப் பேரரசினுடைய என்.ஆர்.இ.பி. திட்டம், இதற்காக வருடாவருடம் மத்திய அரசு அரிசியை ஒதுக்குகிறது. 1979–80 ஆம் ஆண்டில் 73,000 மெட்ரிக் டன் அரிசியை மாநிலத்திற்கு ஒதுக்கியது. அதில் செலவு செய்தது 58,232 மெட்ரிக் டன்தான். மீதி 14,768 மெட்ரிக் டன் அரிசியை எடுத்துக் கொள்ளவில்லை. 1980–81 ஆம் ஆண்டில் ஒதுக்கிய 60 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியில் இந்த மாநில அரசு பயன்படுத்தியது 47,378 மெட்ரிக் டன்தான்.

(முற்பகல் 11.00)

ஆக, இப்படி ஒவ்வொரு ஆண்டும் மத்திய சர்க்கார் ஒதுக்குகின்ற அரிசியை மாநில சர்க்கார் பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பிக் கொண்டேயிருப்பதால் 1981–82 ஆம் ஆண்டு 37,624 மெட்ரிக் டன் அரிசிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமை அரசாங்கத்தினுடைய இயலாமையைக் காட்டுகிறது. இந்த லட்சணத்திலே இங்குள்ள மாண்புமிகு மந்திரிகளெல்லாம் மத்திய சர்க்கார் மாநில நலனை புறக்கணிக்கிறது என்று குற்றம் சாட்டுகின்றனர். என்.ஆர்.இ.பி. திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை அறிவித்தீர்கள். ஆனால் அதன்படி எந்த ஒன்றியத்திலும் வேலை நடைபெறவில்லை. காண்ட்ராக்டர்கள் கொள்ளை இலாபம் அடிக்கின்றனர். எனது தொகுதியினைச் சார்ந்த மயிலம் ஒன்றியத்திலே தன்னிறைவுத் திட்டத்



தின் பெரும்பாலான பணிகள் குறிப்பிட்ட ஒரு கூட்டத்திடமே விடப்பட்டது. அலிபாபாவும் 40 திருடர்களும் என்று ஒரு கதை. அது சினிமாவாகக் கூட வெளிவந்தது. நமது முதல்வர் அவர்கள் கூட நடித்தார். அந்தக் கதையில் வரும் திருடர்கள் ஊருக்கு நன்மை செய்ததாகத்தான் கேள்வி. அலிபாபாவும் மூன்று திருடர்களும் என்று சொல்லத்தக்க வகையிலே ஊரை ஏய்த்து உலையிலே போடும் அந்தக் கூட்டம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களா என்றால் இல்லை. மயிலம் ஒன்றியத்திலே வி. நல்லாளம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு சாலை போட இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகின்ற மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் எழுதி வைத்ததை இங்கே படிக்கிறார்கள். பலமுறை நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள்; முழுவதும் எழுதி வைத்துப் படிக்கக் கூடாது என்று தெரிவித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உடல் சுகமில்லை, படிக்கிறேன் என்று கேட்டார்கள். அதற்காகத்தான் அனுமதி கொடுக்கப்பட்டது.

திரு. கோவைத்தம்பி: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் பேசும்பொழுது அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்ற சினிமாப் படத்தைப்பற்றி ஞாபகப்படுத்தினார்கள். என்னுடைய சந்தேகம் என்னவென்றால், இந்தியாவில் இருக்கின்ற 22 மாநிலங்களைச் சேர்ந்த, முதலமைச்சர்கள் ஆளுகின்ற மாநிலங்களில் இந்த மாநில முதலமைச்சரைவிட யோக்கியமானவர் என்று ஒருவரைக் கூறுவார்களேயானால் அவருடைய முகமூடியைக் கிழித்தெறிவதற்கு மதிப்பிற்குரிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் விரும்புகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: துணைத் தலைவரவர்களே, அதற்குப் பதில் சொல்லத்தான் விரும்புகிறேன்; ஆனாலும் நேரம் இல்லாததால் விட்டு விடுகிறேன். நான் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் பற்றிச் சொன்னது முதலமைச்சரவர்களைப் போற்றித்தான். அதை உறுப்பினரவர்கள் சரியாகக் கவனிக்காமல் கேட்டிருக்கிறார்கள்.

அந்தக் கூட்டம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களா என்றால் இல்லை. மயிலம் ஒன்றியத்திலே வி. நல்லாளம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு சாலை போட இவர்களிடம் ஒப்ப

டைக்கப்பட்டது. நான் தொகுதி சுற்றுப் பயணம் செய்தபோது நேரிலே பார்த்தேன். மண் மேடை மட்டுமே கொட்டப்பட்டுள்ளது. ஆனால் ரோடு போடப்பட்டுவிட்டதாக முழு பில்லும் சாங்ஷன் செய்து பணம் வாங்கி விட்டார்கள் அந்த அலிபாபாவும் மூன்று திருடர்களும்.

கிராமங்களிலே தெரு மின் விளக்குகள் எரிவதில்லை. எனது சுற்றுப் பயணத்தில் இதுதான் பெரும் பிரச்சினையாக இருந்தது. நமது நாட்டிலே மாதத்திற்கு ஒரு முறைதான் அமாவாசை வரும். ஆனால் எனது தொகுதியிலோ மாதம் முப்பது நாளும் அமாவாசை தான். இந்த ஆட்சியிலே இருளடைந்து கிடக்கும் கிராமங்களுக்கு ஒளி கொடுங்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை).

மாட்டு வண்டிகளுக்கு இலவசமாக சிவப்பு விளக்குகள், ஒவ்வொரு கிராமத்திலும் தாய்மார்களுக்கென்று கழிப்பிடம்—இப்படி அறிவித்தது யார் தெரியுமா? இந்த மணியான வாசகங்களுக்குச் சொந்தக்காரர் யார் தெரியுமா? நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்தான். திட்டம் ஏட்டளவிலே இருக்கிறது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஐ.ஆர்.டி.பி., எஸ்.எப்.டி.ஏ., ஆகிய திட்டங்களின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் மானியத் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழை மக்களுக்கு வங்கிகள் கடன் வழங்க முன் வராததால் அந்தத் தொகைகள் பயன்படுத்தப்படாமலே உள்ளது. மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு வங்கிகள் தாராளமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.

நகரங்களுக்கும் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்த போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நன்றி. நலிவுற்றிருக்கு திண்டிவனம் நகராட்சியையும் திட்டத்தில் சேர்க்க வேண்டுகிறே நகர தண்ணீர் பிரச்சினை தீர காவேரிப்பாக்கத்தில் 'ட்வாட் போர்டு' மூலம் ஓவர் டேங்க் கட்டித்தர வேண்டுகிறேன். ராட்சி நிதி வசதியைப் பெருக்க திருமணக் கூடம், சினிமா அர போன்றவைகளைக் கட்ட வேண்டுகிறேன். அதற்கு முன்ன ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அந்நகராட்சியிலே பணியாற்று ஆணையாளரின் நிர்வாகமோ ஊழலும் சீர்கேடுமாக உள்ளது வருமானத்தைப் பெருக்க வேண்டிய நகராட்சியிலே புதியதாக கட்டியுள்ள கட்டிடங்களுக்கு வரி விதிக்காமல் இருக்கிறா காரணம், அந்தப் பணம் இவருக்குக் கட்டப்படுகிறது. ஆக்கிமிப்பு இடங்களில் கடை கட்டியவர்களிடம் வரி வசூல் செய்யு பணம் நகராட்சி கஜானாவிலே செலுத்தப்படுவதில்லை. மாறா **அவர்களது கல்லாப் பெட்டியிலே போய்ச் சேருகிறது. மேலு**



இந்த நிர்வாகச் சீர்கேட்டிற்கு, ஏறத்தாழ 15, 20 வருடங்களாக அங்கே பணியாற்றி வரும் ஐந்து அலுவலர்கள் காரணமாக உள்ளனர்.

ஆணையாளர் திரு. நடேசன் மற்றும் அக்கௌண்டன்ட் **வீரமணி** வரதேசிகன், மணி, ஜோன்ஸ், கணபதியென்ற ஆறு பணியாளர்களை வேறு இடத்திற்கு மாற்றல் செய்யவேண்டும் என அண்ணா தி.மு.க. உட்பட எல்லா அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்தும் பலனில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள், அந்த ஆணையாளரை மாற்றி விட்டாகிவிட்டதென்று. ஆனால், அவரோ, நேற்று வரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார், மந்திரியா, எம்.எல்.ஏ.வா, என்னை என்ன செய்ய முடியும் என்று ஆணவமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அடுத்து மயிலம் ஒன்றியத்திலே அமைக்கப்பட்ட நிழற்குடைகள் டான்சியிலிருந்து வாங்கப்படாமல் தனியார் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய மர்மம் என்ன?

எனது தொகுதியின் ரெட்டணை என்ற கிராமத்தில் இடையில் நொண்டியாறு என்னும் நதி ஓடுகிறது. இதனால் சுமார் 15 கிராமங்களுக்குப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல்லாண்டுகளாகக் கோரி வருகின்ற அந்த நதியின்மீது மேம்பாலம் கட்ட வேண்டுகிறேன்.

அதே போல ஓமந்தூர் என்ற கிராமத்தின் அருகில் ஆற்று ஓடையில் பாலம் கட்டித்தர வேண்டுகிறேன்.

தன்னிறவுத் திட்டத்தில் முதல் கட்ட ஒன்றியத்திற்கு ரூ. 10 இலட்சமும், இரண்டாவது கட்ட ஒன்றியத்திற்கு ரூ. 45 இலட்சமும் மூன்றாவது கட்ட ஒன்றியத்திற்கு ரூ. 90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதாக அறிகிறேன். ஏன் இந்தப் பாகுபாடு? ஒரு கண்ணில் சுண்ணாம்பு, ஒரு கண்ணில் வெண்ணெயா?

சென்னை மாநகராட்சியைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் மேம்பாலத்திற்குகருகில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு இன்றையதினம் ஒளி விளக்குகள் இல்லை. அண்ணா, பெரியார் சிலைகளுக்கு இருப்பது போல் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கும் நவீன விளக்கு வசதிகள் அமைக்க வேண்டுகிறேன்.

அடுத்து, பாரிமுனை பர்மா பஜாரில் அமைந்திருந்த பஸ் ஸ்டாண்டை இன்றையதினம் மாற்றியிருக்கிறார்கள். முன்பு பொது மக்களுக்கு அங்கு வந்து தங்குவதற்கு இடம் இருந்தது. இன்றைக்கு அது இல்லை.

[திரு. எம். தங்கமணி] [1982 மார்ச் 13

மாநகராட்சிக் கழிப்பிடத்தையும் அகற்ற முயற்சி செய்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். மீண்டும் அதே இடத்தில் பஸ் ஸ்டாண்ட் அமைக்க வேண்டுகிறேன். அகற்றப்பட்டதினுடைய பின்னனி என்ன? காலியாகும் அந்த இடங்களில் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் கடை அமைக்க முயலுகிறார்கள் என்ற உணர்வு ஏற்பட இடம் இருக்கிறது. ஆளுங்கட்சியினருக்கு மட்டும்தான் சலுகைகள் வழங்கப்படுமா? அல்லது கட்சிப் பாகுபடின்றி மாநகராட்சிச் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து மாநகராட்சியிலே பணிபுரியும் சிட்டி இன்ஜினீயர் அஸ்ராணி என்பவர் ஊழலின் மொத்த உருவமாகத் திகழ்கிறார். சினிமா கொட்டகைகள், லாட்ஜ்கள் இவைகளுக்கான பிளான்கள் வேகமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆனால், தொழிற்சாலைக்கான பிளான்கள் வேண்டுமென்றே காலதாமதப் படுத்தப்படுகின்றன.

பல்வேறு பகுதிகளில் சாலை வசதிகள் இல்லை. சுகாதார நிலைமை சரியான முறையில் இல்லை. தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. குப்பைக் கூளங்கள் அதிகமாகி அவைகள் அள்ளப்படாமல் இருக்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நிலைமைகள் எல்லாம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னவர் யார் தெரியுமா? எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற நாங்கள் இல்லை.—இலாகா பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

இறுதியாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் உங்களால் போற்றப்படுகின்ற ஒப்பற்ற தலைவர், மதிப்பிற்குரிய தலைவர், அறிவுலக ஜீவி பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எத்தனை ஆண்டுகள் பதவியிலே இருந்தோம் என்ற கணக்கை விட எத்தனை பணிகளை மக்களுக்குச் செய்தோம் என்ற கணக்கைத்தான் பார்க்கவேண்டும் என்று சொன்னார். அதன்படி எத்தனை ஆண்டுகள் பதவியில் நீடிக்கிறோம் என்றுதான் கணக்குப் பார்க்கிறீர்களே தவிர எத்தனை பணிகளை மக்களுக்கு நிறைவேற்றினீர்கள் என்று நீங்கள் கணக்குப் பார்ப்பதில்லை. வங்கக் கடலோரம் துயில் கொள்ளும் அந்த அறிஞரின் ஆவி உங்களை மன்னிக்காது என்று கூறி விடைபெறுகிறேன்.

*திரு. நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று



[திரு. நன்னிலம் அ. கலையரசன்]
1982 மார்ச்13]

1982—83-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நன்னிலத்தில் மாவட்ட முன்சீப் கோர்ட் திறப்பதற்கும் நன்னிலத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் கூடுதலாக 16 படுக்கைகளை ஏற்படுத்தவும், புற நோயாளிகள் பிரிவைப் புதிதாகக் கட்டவும், அதேபோல் திருமருகள் ஊராட்சி ஒன்றியத்தில் திருமலைராஜன் ஆற்றில், 'போலகம்' என்னும் இடத்தில் புதிய பாலம் கட்டுவதற்கும் ரூ. 15 இலட்சம் ஒதுக்கியிருப்பதற்காகவும் அதேபோல், ஆண்டிபந்தல் என்னும் இடத்தில் புத்தாற்றின் மீது உள்ள பாலத்தை அகலப்படுத்தவும் நடப்பு நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கியதற்கும் தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கு நான் மனமார நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், இந்தியத் துணைக் கண்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகம் செய்து கிராமங்கள் மேம்பாடடைய வழி வகுத்துள்ள புரட்சித் தலைவரின் பெருமக்கு பெருமை சேர்க்கும் வகையில் திறம்பட செயல்படும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பல்வேறு அம்சங்கள் இன்றைக்குச் செயல்படுவதை மாற்றுக் கட்சியிலே இருக்கிறவர்கள்கூடப் பாராட்டினார்கள். அந்தத் திட்டத்தில் ஆதி திராவிடர்களுக்குப் பல்வேறு சலுகைகள் இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்திலே ஆதிதிராவிடர் துறை மூலமாகத்தான் சிலபல காரியங்கள் நடைபெற்று வந்தன.

(முற்பகல் 11.10)

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால்., ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு ஒரு சிகப்புக் கப்பி போடவேண்டும் என்று சொன்னால் அந்தத் துறை மூலமாக 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய்தான் தாலுகாவுக்கு ஒரு இடத்திலே ஒதுக்கிக் கொண்டு இருப்பார்கள். இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் இப்படிப்பட்ட சாலைகளுக்கு சிகப்புக் கப்பி போட்டு, கருங்கல் ஜல்லி போட்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் முட்புதர்களின் வழியாகவும், வயல்வரப்புகள் வழியாகவும் இறந்த உறவினர்களின் உடல்களை சுமந்து செல்கின்ற வகையில் பல ஆதி திராவிட குடியிருப்புகள் அமைந்து இருப்பது பரிதாபத்திற்குரியதாகும். வேறு சில இடங்களில் சுடுகாடு, இடுகாட்டுக்குப் போகவேண்டும் என்றால், இடுப்பு வரையில் நீரில் செல்லும் நிலை உள்ளது. அந்த வழிகளில் சுடுகாட்டுக்கு இடுகாட்டுக்குப் போகின்ற பாதைகளிலே நல்ல சாலை அமைத்து அத்துடன் பாலங்களையும் அமைத்துக் கொடுக்க தன்னிறைவுத் திட்டம் முயன்றுள்ளது.

[திரு நன்னிலம் அ. கலையரசன்] [1982 மார்ச் 13

ஆதிதிராவிடர் நலனிலே மிகவும் அக்கரைகொண்டு தன்னிறைவுத் திட்டம் மூலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லுகிறபோது பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள், பாலங்கள் போன்றவைகளுக்கு மிக முக்கியமான தேவை சிமெண்டு ஆகும். அந்த சிமெண்டு தமிழகத்திலே உற்பத்தி அதிகமாக ஆகிக்கொண்டிருந்தாலும், மத்திய அரசு கொடுக்கக்கூடிய அந்த அளவு குறைவாக இருக்கின்றது. இந்த மன்றத்திலே மட்டும்தான், இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்ற காரணத்தினாலே இங்கே கூடுதலாக சிமென்ட் தரவேண்டும் என்பதை நம்முடைய துறை அமைச்சரும் முதலமைச்சர் அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு யார் யாரோ எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், எதை வாங்கினாலும் வாங்காவிட்டாலும் சிமென்டைப் பெற முடியவில்லை என்ற நிலையிலே இருக்கிறது. சிமென்டிலே மிகப் பிரசித்த பெற்ற பம்பாயைச் சேர்ந்த பல பெரியவர்களைப் பார்க்கிற நேரத்தில் இங்கே இருக்கக் கூடியவர்களைப் பற்றி இந்திய தேசிய காங்கிரஸில் இருக்கக்கூடிய அருமை நண்பர்கள் பேசுவதைப் பார்க்கிறபோது அதற்காக நான் வருத்தப் படுகிறேன். இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற தரப்பிலே இருக்கக்கூடியவர்கள், பல எம்.பி.க்களை பெற்றிருக்கின்ற அவர்கள், இந்த மாநிலத்திலே உள்ள சட்டமன்றத்திலே உள்ள அத்தனைபேர்களும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் சொல்லி, மத்தியப் பாராளுமன்றத்திலே் சொல்லி இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலேதான். முதன் முதலாக தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது அவர்களுக்கு சிமெண்ட் தரவேண்டும் என்று கேட்டிருக்கலாம். இன்னும் சொல்லப் போனால் இந்த மன்றத்திலே உள்ள பல உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பேசுகிறபோது தன்னிறைவுத் திட்டம் சிறந்த திட்டம் என்று சொல்லிஇருக்கிறார்கள்.

பல பேர்கள் இந்த மன்றத்திலே பல சந்தர்ப்பத்திலே கூட நிதி நிலை சரியில்லை என்ற காரணத்தினாலே திட்டங்களை ஒத்தி வைக்கப்பட்டாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் மிகத் தேவையான அவசியம் என்று கருதக்கூடிய அத்தனை காரியங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலே இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தின் வேலைகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் வசதி செய்து தரப்படுகிறது. அப்படி சில நேரங்களில் குடிநீர் திட்டம் மேற்கொள்ளுகின்றபோது, புதிய குடிநீர் திட்டங்



1982 மார்ச் 13] [திரு. நன்னிலம் அ. கலையரசன்]

களைத்தான் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஏற்கனவே மேல் நிலைத் தேக்கத் தொட்டி இருக்கக்கூடிய இடங்களில் அந்தப் பணியைச் செய்வது கிடையாது. அங்கே ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஊராட்சி மன்றத் தலைவர்கள், செல்வாக்கு படைத்தவர்கள் இருந்த காரணத்தால். ஒரு கிராமத்தில் 1000 பேர்கள் வாழ்ந்தால் 100 பேர்கள் 200 பேர்கள் வாழ்கின்ற இடத்தில் அந்த பிரசிடென்ட் அல்லது சேர்மன் இருப்பார். அந்த இடத்தில் அவருடைய சௌகரியத்திற்காக மேல் நிலைத் தொட்டியைக் கட்டிவிடுவார். அருகில் 500, 600 பேர் வாழ்கின்ற ஆதி திராவிடக் காலனிக்கு கனெக்ஷன் இருக்காது. இன்றைக்கும் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்திலே புதிய திட்டத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதியிருந்தாலும் அதனைத்தளர்த்த வேண்டும். என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ ஒரு ஒன்றியத்தில் 31 தொட்டிகள் உள்ளன. ஏறத்தாழ 5, 6 இடங்களில் — வேறு இடங்களில் — வாழ்கின்ற ஆதி திராவிடத் தெருக்களுக்கு அந்த தொட்டிகளிலிருந்து கனெக்ஷன் கிடையாது. எனவே இந்த விதியைத் தளர்த்தி மேல்நிலைத் தொட்டிகள் இருந்தாலும், அப்படிப்பட்ட இடங்களில் அந்த டாங்குகளின் கொள்ளளவு அந்தத் தெருக்களுக்கு தண்ணீர் செல்லக் கூடிய அளவுக்கு இருக்குமானால் அந்தப் பகுதிகளுக்கும் விஸ்தரித்து நீர்வழங்குவதற்கான முயற்சியை குடிநீர் வடிகால் வாரியம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைய தினம் தமிழகத்தினுடைய உணவு உற்பத்திக்குக் கணிசமான பங்கு செலுத்துவது தஞ்சை மாவட்டம். பொன்னி நதிப்பெருக்காலே வளம் கொழிக்கும் மாவட்டமாகும். நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைக்கு வாழ்வளிப்பது காவிரிதான். அந்தக் காவிரி திருச்சி நகரத்திற்கு வருகிறபோது அகண்ட காவிரி என்று சொல்லப்படுகிறது. அதே காவிரி தஞ்சை மாவட்டத்தின் முன் பகுதிக்கு வருகிறபோது கல் அணை என்று கரிகால் பெருவளத்தான் கட்டி வைத்து இருக்கிறான். அந்த காவிரி ஆறு மாயூரத்திற்கு அருகில் வருகிறபோது ஆடுதாண்டும் காவிரி என்று குறுகிப் போகிறது. இப்படிக் குறுகிப்போகிற அந்தக் காவிரி நீர் வளத்தைத் தஞ்சை முழுவதற்கும் தந்து கடலில் சேர்கிறது. அப்படிச் சேருகிற பகுதிதான் கடைமடைப் பகுதி என்று சொல்கிற எங்கள் நன்னிலம் பகுதியாகும். அந்த கடைமடைப் பகுதி நன்னிலத்திலே வெட்டாறு, அரசலாறு, திருமலைராசன், முடிகொண்டான், புத்தாறு, விழப்பேர், நண்டலாறு, நாட்டாறு வாஞ்சியாறு, நுலார் ஆகிய கிளை நதிகள் வாய்க்கால்களாகவும், வடிகால்களாகவும் அங்கே பாய்ந்து கொண்டுஇருக்கின்றன. அப்படி வயல்சூழ்ந்த பகுதிகளில்வாழ்கின்ற நாங்கள் ஆங்காங்கு இருக்கின்ற நஞ்சை நிலங்களிலே நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வீடுகளை கட்டவில்லை என்று சொன்னால்

இருக்கின்ற வசதிக்கு ஏற்ப வீடுகளை அமைத்து இருக்கிறோம். இடம் கிடைக்காமல் ஆற்றங்கரை ஓரங்களில் ஓலைக் குடிசைகளை கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த இடத்தில் வாழ முடியாதவர்கள். பூர்வீக தொழிலான இந்த விவசாயத்தை விடக்கூடாது என்ற காரணத்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு டிராக்டர்களை வாங்கியிருக்கிறார்கள். அதேபோல், விளைந்த நெல்லை விற்று அடுத்து வரும் விவசாயத்திற்கு மூலதனமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கருதி சிலர் விற்பனைக்கும் எடுத்து வருகிறார்கள். அன்றாடம் மனித வாழ்வுக்குத் தேவையான பொருளை வாங்குவதற்கும் கடைவீதிகளுக்குச் சென்று வருகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கும், இளநிலை கல்விக்கூடங்களுக்கும் செல்லும் மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இடையூறு விளைவிப்பது இந்த ஆறுகள் தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதே நேரத்தில் இந்த நன்னிலம் தாலுக்காவில் மட்டும் இந்த நிலைமை என்று இல்லை, தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதியில் இந்த ஆறுகள் பரவலாக ஓடிக்கொண்டு இருக்கின்றன. இந்த நேரத்தில் நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது எல்லாம் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை மூலமாக 1,500 பேர் வாழும் இடங்களில், ஆயிரம் பேர் வாழக்கூடிய இடங்களில் ஊரக சாலைத் திட்டம் நிறைவேற்றப்படுவது போல், ஒரு குறிப்பிட்ட ஜனத்தொகை உள்ள இடங்களில் அல்லது ஒரு குறிப்பிட்ட ஏக்கர் நிலப்பரப்பு விவசாயம் செய்யக்கூடிய இடங்களில் விவசாயத்திற்குத் தேவையான டிராக்டரோ அல்லது நெல்லையோ கொண்டு வருவதற்கு லாரியோ அல்லது வேறு பல வாகனங்களோ போவதற்கு வசதியாக — அதன் எண்ணிக்கைகளைக் கணக்கிட்டு, இந்த ரூரல் ஹைவேஸ் துறையில் செய்வது போல் — தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா ஆறுகளின் குறுக்கேயும் பாலங்கள் அமைக்க ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கும்பகோணத்திலிருந்து உடையார்பாளையம் செல்லும் சாலையில் நீத்தநல்லூர் என்ற ஊரில் மதனத்தூர் அருகில் பாலம் கட்ட வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். திருச்சி மாவட்டம் டி. பளூர் ஒன்றியம், ஜெயங்கொண்டம் ஒன்றியம் ஆகிய இடங்களில் இருக்கும் விவசாயிகள் தென்னாற்காட்டில் கடைசி பகுதியினர் பயிர் தாங்கள்செய்த நெல் தவிர மற்ற பணப்பயிர்களை கும்பகோணத்திற்கு எடுத்து வந்துதான் விற்பனை செய்ய வேண்டும். அங்கே விளையக்கூடிய முந்திரி, முந்திரி விறகு விற்பதற்கு கும்பகோணத்திற்குத்தான் வண்டி மூலம் கொண்டு வர வேண்டும். அங்கே கரியாக்கப்படுகிற கரியையும் கும்பகோணத்திற்கு வந்துதான் விற்கவேண்டும். அப்பகுதி மாணவர்களும் கும்பகோணத்தில் இருக்கும் கலைக் கல்லூரியை நம்பித்தான் படித்



துக்கொண்டு இருக்கிறார்கள். மாணவர்கள் விடுதியில் தங்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அது நல்ல வகையில் மக்களுக்குப் பயன் அளிக்கும் பெரும் திட்டமாக இருக்கும். திருமானூருக்கு அருகில் ஒரு பாலம் இருக்கிறது. அதேபோல் சென்னை வரும் சாலையில் அணைக்கரைப் பாலம் இருக்கிறது. இந்த இரண்டு பாலத்திற்கும் இடையே வேறு எந்தப் பாலமும் கிடையாது. ஆகவே, இந்த புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேயே மதனத்தூர் அருகில் ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசு கொண்டு இருக்கிறது. தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திலே இன்றைக்குப் பல பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. தமிழக ஊராட்சி ஒன்றியங்களிலே 28,784 பள்ளிக்கூடங்கள் இருப்பதில் 2,000 பள்ளிக்கூடங்களுக்கு என்.ஆர்.இ.பி. திட்டத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதேபோல் தன்னிறைவுத் திட்டத்திலே 949 பள்ளிக்கூடங்கள் 17·36 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

நான் இன்றைக்குப் பெருமையாகச் சொல்லிக்கொள்வேன், ஆதி திராவிடர் நலத்துறையில் அங்கேயிருக்கும் இன்ஜினியரிங் டிப்பார்ட்மென்ட்டிலே 5,000 ரூபாய்க்கு மேல் பணிகள் செய்ய முடியாமல் முன்பு நிலைமை இருந்தது. ஒரு ஓவர்சீர், ஒரு சூப்பர்வைசர் இருப்பார். ஆனால் இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆதி திராவிட மக்கள் மீது கொண்டுள்ள அனுதாபத்தின் காரணமாக, ஏறத்தாழ 60,000 ரூபாய் 70,000 ரூபாய் அளவிற்கு செலவு செய்து, கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்து.

[முற்பகல் 11.20]

இருக்கிறார்கள். அதிலே பெரும்பாலும் ஆதி திராவிடர் நல பள்ளிகளாக மாவட்டந்தோறும் கட்டப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால் பள்ளிக்கூடங்களைக் கட்டுகிறார்கள். ஆனால் அதே பள்ளிக்கூடம் கட்டப்படும் இடத்திற்குப் பக்கத்திலே இருக்கிற ஆதி திராவிடர் தெருவில் 5,000 ரூபாய்க்கு மேல் கட்டமுடியவில்லை. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள், நடத்திக்கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள், இனிமேல் நடத்தப்போகிற ஊராட்சி ஒன்றியங்களில் இந்தப் பணிகள் முடிந்துவிடும். ஆனால் ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் அப்படியே இருந்துவிடும். ஆகையால் இப்போதே இந்த என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ், மத்திய அரசு உதவித் திட்டத்தின்கீழ், தேசீய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 75,000 ரூபாய்க்கு குறையாமல் ஆதி திராவிடர் நலத்

[திரு. நன்னிலம் அ. கலையரசன்] [1982 மார்ச் 13

துறை பள்ளிகளை கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சித் தேர்தல், நகராட்சித் தேர்தல்களை விரைவிலே நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை உயர்நீதி மன்றத்திலே தடை பெற்றிருந்தால்கூட அதை விரைவுபடுத்தி, தேர்தல்களை நடத்த ஏற்பாடுகளைச் செய்யப்போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை விரைவிலே செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவரையில் மக்கள் குழுக்களை நல்லமுறையில் கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு மக்கள் குழு சரியாகக் கூட்டப்படவில்லை. அதிலே ஆர்வம் உள்ளவர்களை இணைத்து சிறந்த முறையில் வேலைகள் நடைபெற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற 1979–80 ஆம் ஆண்டில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சு வார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி பல விஷயங்கள் நகராட்சிகளால் அமுல் படுத்தப்படவில்லை. குறிப்பாக திருமணக்கடன், உடை கடன் போன்றவை அமுல்படுத்தப்படவில்லை. பல கோரிக்கைகள் ஆய்வில் இருப்பதாக அரசு அதிகாரிகள் அறிவித்திருக்கி 'ார்கள். 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் ஆய்வில் உள்ளதாகத் தெரிவித்தார்கள். அந்தக் கோரிக்கைகள் இன்னும் ஆய்வு அளவிலேயே உள்ளன. சொல்லி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இன்னும் ஆய்வில் தான் உள்ளன. ஆகவே, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அழைத்து, முத்தரப்புக் கமிட்டியைக் கூட்டி சம்பள உயர்வு, பஞ்சப்படி உயர்வு போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று 1973 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு ஊதியத்தை உயர்த்தியதாக அரசு அறிவித்திருக்கிறது. அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் வேலை செய்தவர்களுக்கும் இந்தத் திட்டம் பயன்படும் வகையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கடந்த நிதிநிலை அறிக்கையில் ஓய்வூதியம் 100 ரூபாயாக இருந்ததை 125 ரூபாய் என்ற அளவுக்கு உயர்வு செய்யப்பட்டது. ஆனால் 1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள்



1982 மார்ச் 13] [திரு. கே. ஆர். சுந்தரம்]

14 ஆம் நாளுக்கு முன்னால் நகராட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு இந்த 25 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதற்கு இதுவரை உத்தரவு பிறப்பிக்கவில்லை. அவர்களுக்கும் அந்த உயர்வை அளிக்க வேண்டும். அதைப்போன்று அரசுத் துறையில் பணியாற்றியவர்களுக்கு பஞ்சப்படியும் கொடுக்கப்படுகிறது. அதுவும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சிகளில் போதுமான அளவுக்கு ஊழியர்கள் இல்லை. இது எனக்கு நன்றாகத் தெரியும். நான் 23 ஆண்டுகள் பேரூராட்சியில் தலைவராக இருந்திருக்கிறேன். 7,000 ஜனத்தொகை இருந்தபோது எத்தனை ஊழியர்கள் இருந்தார்களோ அந்த அளவுக்குத்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். இன்றைக்கு 7,000 மக்கள் தொகை இருந்த இடத்தில் 15,000, 20,000 மக்கள் தொகை வந்திருக்கும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குடிநீர் கூட்டுத் திட்டங்கள் போன்று பல திட்டங்கள் புதியதாக போடப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு ஏற்றவகையில் ஊழியர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

குடிநீர் திட்டம் மீட்டர் ரீடிங் பார்க்க வேண்டும் ; பில் போட வேண்டும். அதற்கு போதுமான ஊழியர்கள் இல்லாத காரணத்தால் அதற்கான பில் போட்டு, தொகை வசூல் செய்ய முடியவில்லை. வர வேண்டிய வருமானம் வராமல் நிலுவையில் இருக்கிறது. ஆகையால் தேவையான கிளார்க், பில் கலெக்டர் போன்றவர்களை அதிகமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1975–76 ஆம் ஆண்டில் அவசர சட்டம் இருந்த காலத்தில் ஊழியர்களை அதிகமாக நியமிக்கக்கூடாது என்ற தடை இருந்தது. அந்த தடை இன்னும் அப்படியே இருப்பதால் முதலில் அந்தத் தடையை நீக்கவேண்டும்.

அதைப்போன்று அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நகராட்சி, பேரூராட்சிகளுக்கு அளிக்கும் நிதி உதவியை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ரிவிஷன் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அது இன்னும் நடத்தப்படவே இல்லை. ஆகவே அதைச் செய்வதற்குரிய முறைகளைச் செய்யவேண்டும். தேர்தல் வரையில் அதைச் செய்யவேண்டாம் என்று ஏற்கெனவே உள்ள உத்தரவின் காரணமாக நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகியவற்றின் வரி இனங்கள் பெருக்கப்படுவதற்கான வாய்ப்பில்லாமல்

இருக்கின்றது. அதைப் பெருக்குவதற்கான முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும். நகராட்சிகள், பேரூராட்சிகள் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே மிகவும் பின்தங்கி இருக்கின்ற நிலைமையில் அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் நிதிநிலை இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே. அரசு அவைகளுக்கு மானியம் அளிக்கவேண்டும் என்று கடந்த பட்ஜெட் கூட்டத்திலே கூட நான் கேட்டிருக்கிறேன். குடியாத்தம் நகராட்சியிலே ரோடு வசதி கிடையாது, பஸ் ஸ்டாண்ட் வசதி கிடையாது. சாக்கடை வசதி கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே நாள்தோறும் சென்று பார்வையிடுவது போல ஒன்றிரண்டு முனிசிபாலிட்டிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே சென்று பார்வையிட்டால் உண்மையான நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடியும் அதன்படி வடாற்காடு மாவட்டத்திலே என்னுடைய குடியாத்தம் நகராட்சியை அவர்கள் வந்துபார்வையிடவேண்டும், என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இராமேஸ்வரம் இன்றைக்கு நகரியமாக இருக்கின்றது. அதனை நகராட்சியாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்துவருகின்றது. அதன்படி அதனை நகராட்சியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று முகவை மாவட்டத்திலே தளவாய்புரம், முகவூர் ஆகிய கிராமங்களை இணைத்து நகராட்சியாக ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழனி நகராட்சியை நகரியமாக்குகின்ற ஆலோசனை இருக்கின்றது. அது நகராட்சியாக இருந்தால்தான் மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து நல்ல காரியங்களைச் செய்ய முடியும். அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கூட இந்தக் கருத்தினை சர்க்காருக்கு அளித்திருப்பதாக அறிகிறேன். ஆகவே அதனை நகராட்சியாக இருக்கும்படி விட்டு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 21 நகராட்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி பழனி நகராட்சிகளுக்காக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 101 லட்சம் என்று அறிக்கையிலே இருக்கின்றது. ஆனால் செலவு செய்யப்பட்டது இதுவரையிலே 20 இலட்சம் தான். ஆகவே ஏன் இந்தத் தாமதம் என்பதை அறிந்து அதனை விரைவு படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று குடிநீர்ப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் குடியாத்தம நகராட்சி பற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். அங்கே தண்ணீர் இருக்கின்றது. ஆனால் மின்சாரப் பற்றாக் குறையின் காரணமாக அந்தப் பிரச்சினை அங்கே இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே ஜெனரேட்டர் வாங்கிக் கொடுக்க வேண்டும். என்று கேட்டிருக்கிறேன். ஆகவே அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதேபோன்ற நிலைமைதான் திண்டுக்கல்லிலும் இருக்கின்றது. அங்கேயும் அதிகத் தண்ணீர் இருக்கின்றது. ஆனால் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகத்தான் குடிதண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கின்றது. அங்கேயும் இந்தப் பிரச்சினையைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து குறிப்பாக மதுரை மாநகராட்சியினை எடுத்துக் கொண்டால் 7 இலட்சம் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியிலே ஒரு நாளுக்கு 6 கோடி காலன் தண்ணீர் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது கொடுக்கப்பட்டு வருவது 1 கோடி 30 இலட்சம் காலன் தண்ணீர்தான். இது போதுமானதல்ல.

இது மட்டுமல்ல. ஆரம்பபாளையம் குடிநீர் திட்டத்திலே பழுது ஏற்பட்டு அதிலே சாக்கடை கலந்துவிட்டதால் உபயோகிக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே இன்றையதினம் மதுரை மக்கள் குடிநீருக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வைகை அணைத் திட்டத்தை நிறைவேற்றப்போவதாகவும் அதுகுறித்து இந்த பட்ஜெட்டிலே அறிவிப்பார்கள் என்று கமிஷனர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே அந்தத் திட்டத்தினையும் எடுத்துக்கொண்டு மதுரை நகராட்சி மக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோன்றுதான் குமரி மாவட்டம் குழித்துறையிலுள்ள மேல்நிலைத் தொட்டியிலே தண்ணீர் இருக்கின்றது. அந்தத் தண்ணீரைச் சுத்தப்படுத்தாத காரணத்தால் அது கலர் கலராக வருகின்றது. அதனால் மக்கள் பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கின்றது. ஆனால் அங்கே இருக்கின்ற தண்ணீரின் அளவைப் பொறுத்தவரையிலே பக்கத்திலே இருக்கக் கூடிய நகராட்சிகள் பேரூராட்சிகள் ஆகியவற்றுக்குக் கூட தண்ணீர் சப்ளை செய்ய முடியும். ஆனால் அங்கேயுள்ள பைப்புகளும், மோட்டார்களும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால் சரியான முறையிலே மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்குரிய வாய்ப்பு இல்லை. ஆகவே அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழக அரசு நகராட்சிகளிலே உள்ள கடைகளுக்குகான வாடகையை உயர்த்தி இருக்கிறார்கள். அந்த கான்ட்ராக்ட் காலத்தினையும் ஐந்து ஆண்டிலே இருந்து

மூன்றாண்டாகக் குறைத்துவிட்டார்கள். 50 சதவீதம் வாடகையினையும் உயர்த்திவிட்டார்கள். இது எல்லா இடங்களுக்கும் பொருந்தாது. 10 சதவீதம் 12 சதவீதம் உயர்த்தினால் கூட பரவாய் இல்லை. குடியாத்தம் நகராட்சி ஒரு சாதாரண நகராட்சி. பீடித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் போன்றவர்கள் இருக்கின்ற இடத்திலே இவ்வாறு 50 சதவீதம் என்று உயர்த்தி இருப்பது மிகவும் அதிகம். எனவே இந்த உயர்வு குறித்து பல்வேறுபடங்களிலிருந்து முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த உயர்வினைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சி தேர்தல் வருகின்ற வகையிலேயும் இந்த உயர்வு முயற்சியைக் கைவிடவேண்டும். மக்களின் பிரதிநிதிகள் வந்தால் அவர்கள் பார்த்துக்கொள்வது வசதியாக இருக்கும். ஆகவே இப்போது உயர்த்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு வசதியற்ற நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். மாநகராட்சிகளை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் இவற்றையும் எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுகின்ற வகையிலே விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே குடியாத்தம் நகராட்சியினை அந்த வகையிலே முதலாவதாக தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ரோடு வசதிகளை எடுத்துக்கொண்டால், மேம்பாலம்அமைக்கும் திட்டத்திலே என்னுடைய சொந்தக் கிராமத்திலே காட்பாடியிலே ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 126 இலட்சம் ரூபாய் ஒதுக்குவதாக 1980-81, 1981-82, 1982-83ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ரயில்வே இலாகாவினுடைய அனுமதி கிடைக்காத காரணத்தால் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பக்கத்திலே ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இன்னும் பல்வேறு பள்ளிகள் இருக்கின்றன. அது மிகவும் குறுகிய பாலம். நூற்றுக் கணக்கான டவுன் பஸ்கள் போக வேண்டிய இடம். கடலூர்-சித்தூர் வழிகளை இணைக்கிற அந்தப் பழைய பாலம் அபாய நிலையில் இருக்கிறது. ஆகவே அரசு இதில் உடனடியாக அக்கறை செலுத்தி, அந்த மேம்பாலத்தைக் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல் திருவாரூரிலே கூட ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டுவதில் தாமதம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். அதையும் சீக்கிரமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பஸ் போக்குவரத்து ரோடுகள் என்று இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் எடுத்துக்கொண்டால், நேஷனல் ஹைவேஸ் தவிர, தமிழக அரசின் இலாகாவிற்குள்ளே இருக்கிற அந்த ரோடுகளில் பஸ் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது, என்னுடைய தொகுதியிலே குடியாத்தத்திலிருந்து செம்பள்ளி, குடியாத்தத்திலிருந்து மேவாளத்தூர் போன்ற இடங்களில் பஸ்ஸே போக முடியவில்லை. அது மட்டும் அல்ல குடியாத்தத்திலிருந்து வேலூருக்கு போவதற்கு பள்ளிகொண்டா அருகில் ஒரு பாலாறு இருக்கிறது. அந்தப் பாலாறு பக்கத்தில் சரியான ரோடே இல்லை. அரசு போக்குவரத்துகள் கூட அங்கே சரியாகப் போவதில்லை. கேட்டால் அந்தப் பாலாற்றிலே போக முடியவில்லை. அடிக்கடி பழுதடைகிறது. அதை பராமரிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்த பாலாற்றிலே பள்ளிகொண்டான் ஒரு பாலம் கட்டவேண்டும். ரோடுகளை பழுது பார்த்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.30)

அதேபோல் செம்பள்ளியிலிருந்து கொட்டாரக்குடி வரையில் ஒரு பகுதியிருக்கிறது. மழைக் காலங்களிலோ அல்லது மற்ற நேரங்களிலோ அந்தப் பகுதியில் எதுவுமே போக முடியாது. அங்கே ஒரு சிறு பாலம் கட்ட வேண்டும். அங்கே அருகாமையில் இருக்கும் கிராமத்தில் ஒரு முறை தீ பிடித்து கொண்டுவிட்டது. தீ அணைக்கும் எஞ்சின் கூட வர முடியவில்லை. அந்தக் கிராமமே தீய்ந்து போய் விட்டது. அதற்குப்பிறகுதான் அங்கே போய் ஏதாவது செய்ய முடிந்தது. ஆகவே கொட்டாரக்குடி என்ற அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டும்.

அடுத்து நான் சென்றக் கூட்டத்திலே கூட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். இந்த தன்னிறைவுத் திட்டத்திலே கூட எடுக்காத பாதையே போடாத ஒரு கிராமம் எனவென்றால், என் தொகுதியிலே இருக்கிற வீரி செட்டி பள்ளி என்ற கிராமம் தான். குடியாத்தம் சித்தூர் போன்ற பகுதிகளுக்குள்ளேயிருக்கிற அந்த கிராமம் மிகப் பெரிய கிராமம். ஆனால் அதற்கு ரோடே கிடையாது. ஆகவே இந்த தன்னிறைவுத் திட்டத்திலாவது எடுத்து அல்லது தனிப்பட்ட முறையிலாவது எடுத்து அந்த ரோடு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்திலே பல இணைப்புச் சாலைகளும், அருகாமையில் இருக்கிற அரிசன பகுதிகளுக்கெல்லாம் ரோடு வசதிகளும் கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1982 மார்ச் 13

என்னுடைய தொகுதியிலே 7 அரிசன கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளே கிடையாது. சுடுகாட்டுக்கு பாதையே கிடையாது. அதை அரிசன இலாகாவிற்கும் என்னுடைய தொகுதி பஞ்சாயத்து ஆணையாளர் எழுதியிருக்கிறார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தட்டப்பாறை, கொல்லப்பள்ளி, முக்குன்றம், விழுதம்பாளையம், தாட்டிமானபள்ளி—கல்லபாடி போன்ற பகுதிகளிலுள்ள அரிசன மக்களுக்கு சுடுகாட்டுக்குப் பாதையே கிடையாது. இணைப்பு பாதைகளும் இல்லை. காரணம் என்ன என்று கேட்டால், அங்கே தனியார்களுக்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அவர்கள் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களை ஆர்ஜிதப்படுத்துவதற்கு ஏற்கெனவே உயர் நீதி மன்றத்திலே தடை இருப்பதாக அறிகிறேன். விசேஷமாக ஏதாவது சட்டம் கொண்டு வந்தால் தவிர, எத்தகைய நல்ல திட்டங்களை நீங்கள் நிறைவேற்றினாலும் அந்த மக்களுக்கு அது நன்மையை அளிக்காது. ஆகவே அதைச் செய்துகொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னறக்கு பல்வேறு இடங்களில் பாலங்கள் இல்லாமல் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக கீவளூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரு பகுதிகளை இணைக்க வெட்டாற்றில் ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாகப் பிரிக்கும் வெட்டாற்றில் பள்ளிகாரமங்கலம் பக்கத்திலே ஒரு பாலம் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதேபோல கன்னியாகுமரியிலேயிருந்து திருவட்டாறிலே ஒரு பாலம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

அதே போல நான் குறிப்பிட்டதைப் போல இந்த தன்னிறைவுத் திட்டத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த திட்டமும் குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தவர்களால் நிறைவேற்றப்படவில்லை. அவர்களுடைய வேலை அவ்வளவு சுறுசுறுப்பாக நடக்கவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இந்த வாரியத்தினால் எந்தவித வேலையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. காரணம் கேட்டால் ஏற்கெனவே கேட்டகரிசேஷன் பற்றி சொல்லப்பட்டிருப்பதாகவும்.... (மணியடிக்கப் பெற்றது) அதன்படி செய்வதாகவும் சொல்கிறார்கள். ஆகவே அவைகளையெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



[1982 மார்ச் 13] [திரு. கே. ஆர். சுந்தரம்]

அதேபோல பம்பு பராமரிப்பதற்காக, ஊராட்சி ஒன்றியங்களில் ஒரே ஒரு நபரை வைத்திருக்கிறார்கள், அது போதாது. ஒரே ஒரு பிட்டர் தான் இருக்கிறார். அவரே எல்லா சாமான்களையும் தூக்கிக் கொண்டு ஒவ்வொரு இடமாக போகவேண்டியிருக்கிறது. பஸ் வசதிகளும் கிடையாது நடந்துதான் போக வேண்டும். அவருக்கு உதவியாக ஒரு ஹெல்பரை நியமித்தால் தான் அந்த பம்புகளை நல்லமுறையில் பராமரிக்க முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஒவ்வொரு பேரூராட்சியை நிர்வகிப்பதற்கும் இரண்டு டிஸ்டிரிக்ட்டுகளுக்கு ஒரு ஆபீசர் என்ற வீதத்தில ரீஜினல் டைரக்டர்கள் நியமித்திருக்கிறார்கள். இப்போது என்னுடைய தொகுதியில் கிருஷ்ணகிரியில் அவருடைய அலுவலகம் இருக்கிறது. முதலிலே திருப்பத்தூரிலே இருந்தபோது என்னுடைய கிராமத்திலிருந்து 50 மைல்தான். இப்போது கிருஷ்ணகிரிக்குப் போக 100 மைல் போக வேண்டும். மிகவும் சிரமமாக இருக்கிறது, அதனால் மாவட்டத்திற்கு ஒரு ரீஜினல் டைரக்டராக வைத்துக் கொண்டால் மிகவும் சுலபமாக இருக்கும்.

கடைசியாக கிராம அலுவலர்கள் பொறுத்து தஞ்சையில் வேளாண்மை துரிதத் திட்டம் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று அத்திட்டம் கைவிடப்பட்டு, மாற்றப்படும் நிலையில் இருக்கிறது, அவர்களுக்கு அந்த மாவட்டத்திற்குள்ளேயே வேலைவாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் வேலை செய்கிற கிராம நல ஊழியர்கள் பல ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார்கள், அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்,

**திரு. எம். பி. இரத்தினம்**: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 1982—83 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையைப் பாராட்டி ஒரு சில கருத்துக்களை எடுத்துக் கூற விழைகிறேன். என்னுடைய தொகுதியான பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியில் மீன்கரைச்சாலை நாலின்கீழ் ஏழு கிலோ மீட்டரில் ஆளியாறு நதியின் குறுக்கே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலத்தை அமைக்க புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்த ஆண்டு திட்டமிட்டுள்ளதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல ஆண்டுகளாக அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தும்கூட அது நிறைவேற்றப்படாமல் இன்றையதினம் நிறைவேற்றுவதற்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு உள்ளாட்சித் தலைவர் அவர்களையும் வாழ்த்துகிறேன்.

[திரு. எம். பி. இரத்தினம்] [1982 மார்ச் 13

அடுத்து நகராட்சிகளில் தற்போது துப்புரவுப் பணிகளுக்காக மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அப்படி மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக மூன்று சக்கர வண்டிகளைப் பவர் என்ஜின் வைத்துள்ள வண்டிகளைப் பயன்படுத்தினால் நிர்வாகச் செலவும் குறையும். அதோடு கூட அது ஒன்று மூன்று மாட்டு வண்டிகளின் வேலைகளைச் செய்ய முடியும். அதன் காரணமாக மாடுகளுக்கு ஏற்படுகிற செலவுகளைக்கூட குறைக்க முடியும். எனவே அப்படி மூன்று சக்கர வண்டிகளை மாட்டு வண்டி களுக்குப் பதிலாக பயன்படுத்தலாம்.

அடுத்து நகராட்சிகளில் தனியாகப் பொறியியல் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் இவற்றிற்குத் தனியாகப் பொறியியல் பிரிவுகள் அமைக்கப்படவில்லை. அப்படி அமைக்கப்படாததன் காரணமாக நெடுஞ்சாலைத் துறையில் இருக்கக்கூடிய பொறியாளர்களைக் கொண்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக பணிகளைச் செவ்வனே செய்வதற்கு வழிவகை இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் இவற்றிற்குத் தனியாக பொறியியல் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டுகிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டங்கள் நடைபெற்று வருகிற இந்தத் தருணத்தில் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் என்ற பதவியை ஜாயின்ட் டைரக்டர் பதவித் தரத்தில் ஏற்படுத்தி ஊரக வளர்ச்சித் திட்டங்களை நல்ல முறையில் கண்காணிக்கவும் திறம் படச் செயல் படவும் வழிவகை செய்யவேண்டும். காரணம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்று செயல் படுத்த வேண்டிய இந்த சூழ்நிலையில் மாவட்ட வளர்ச்சி அதிகாரி என்ற பதவியை ஏற்படுத்தினால் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நல்ல முறையில் சீரும் சிறப்புமாகச் செய்ய ஏதுவாக இருக்கும்.

அடுத்து மின்சார விநியோகத்தை நகராட்சிகளே நிர்வகிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். உதாரணமாக, பொள்ளாச்சி, கோவை, மதுரை, கரூர், தஞ்சை போன்றயிடங் களில் இந்த மின்சார விநியோகத்தை நகராட்சிகளே பொறுப் பெடுத்து திறம்பட அதை நடத்தி வருகின்றன. வீதி விளக்குகளும் மற்ற இணைப்புகளும் செவ்வனே நல்ல முறையில் அமைந்திருக் கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே ஏனைய நகராட்சிகளிலும் இந்த மின்சார விநியோகத்தை நகராட்சிகளே நிர்வகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. எம். பி. இரத்தினம்]

அதே போல் இந்த மின்சாரத் துறையில் வீதி விளக்குகள் சோடியம் வேப்பர் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருவதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கி றேன். இந்த சோடியம் வேப்பர் விளக்குகளைப் பல கம்பெனிகள் தயாரித்தாலும் பிலிப்ஸ், ஜி. ஈ. சி. போன்ற கம்பெனிகள் தயா ரிக்கின்ற விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. உதாரண மாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியான, உடுமலைப் பேட்டையிலே பிலிப்ஸ் கம்பெனி தயாரித்த விளக்குகள் போடப்பட்டு, திறம்பட, நல்ல வெளிச்சம் கொடுக்கக் கூடியதாகவும், நல்ல நிலையில் உறுதியாக உழைக்கின்ற வகை யிலும், நீண்ட நாட்களாக அந்த விளக்குகள் இருக்கின்றன. அதே போல் கோவை மாநகராட்சியிலும் பொருத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் என்னுடைய தொகுதியான பொள்ளாச்சி நகராட்சியிலே ஜி. ஈ. சி. கம்பெனியால் போடப்பட்ட விளக்குகள் மங்கலாக வும், விரைவில் பழுதுபடக்கூடியதாகவும், பழுது பட்டாலும் அந்த பல்புகளை மாற்றுவதற்கு பல மாதங்கள் ஆகின்ற சூழ்நிலை இருப்பதை நான் பார்த்து வருகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சிகள் அனைத் திலும் எந்த நகராட்சியானாலும், திறம்பட உழைக்கக்கூடிய மக்களுக்குப் பயன் படக்கூடிய விளக்கு எது என்பதை ஆய்ந்து பிலிப்ஸ் கம்பெனி போன்ற பல்புகளை போடுவதற்கு உத்தரவிட வேண்டும். எல்லா நகராட்சிகளிலும் சோடியம் வேப்பர் லைட் பல்புகளை நல்ல கம்பெனியில் வாங்க வேண்டும் என்ற ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் நகராட்சியானா லும் சரி பஞ்சாயத்தானாலும் சரி குண்டு பல்புகள் போடுவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[முற்பகல் 11.40]

அதே போல் இன்றையதினம் ஒருங்கிணைந்த கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் விவசாயத் துறையிலே இருக்கிறது. விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய இந்த ஒருங்கிணைந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை உள்ளாட்சித் துறைக்கு மாற்றி, இன்னும் திறம்பட செயலாற்ற வேண்டுகிறேன். அதே போல், தனி நபர்களால் நடத்தப்பட்டு வருகின்ற சந்தைகளை ஊராட்சித் துறையிலே இருக்கக்கூடிய அமைப்புகளை ஊராட்சியே ஏற்று நடத்த வேண்டுமென்ற கருத்தை நான் சமர்ப்பிக்கிறேன். காரணம் பல இடங்களில் தனி நபர்கள் சந்தைகளை நடத்தி வருகிறார்கள். அந்த வருமானமாவது அந்த தனி நபர்களை சென்றடைகின்றது. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களாக இருந் தால், அந்த ஊராட்சி ஒன்றியமே நடத்த வேண்டும். அதே போல் ஊராட்சியாக இருந்தால், ஊராட்சியும், பேரூராட்சியாக இருந்

[திரு. எம். பி. இரத்தினம்] [1982 மார்ச் 13

தால் பேரூராட்சியும், நகராட்சியாக இருந்தால் நகராட்சியும் அதன் எல்லைக்குட்பட்ட அந்தச் சந்தைகளை மேற்கொண்டு நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் கிராம நல அலுவலர்கள், அவர்களை குரூப் எக்சிகியூட்டிவ் ஆபீசர்களாக மாற்றம் செய்யவேண்டும். 4,5 கிராமங்களுக்கு ஒருவர் என்ற வகையில் நியமித்து அந்தக் கிராமத்தில் எடுக்கப்பட வேண்டிய செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகளைச் செவ்வனே செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கூறிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், பேரூராட்சிகள் . நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற பகுதிகளில் துப்புரவுத் தொழிலாளர்கள் பற்றாக் குறை இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாக அமர்த்தப்பட்ட அந்தப் பணியாளர்களைக் கொண்டே இன்றும் துப்புரவுப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. அன்றைய தினத்திலிருந்து ஜனத் தொகையும், அன்றைய தினத்தில் இருந்த அந்த அமைப்பும், இன்றைய தினத்திலே பல மடங்காக ஜனத்தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதால், அதே பணியாளர்களை வைத்துச் செய்வது என்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் விஷயத்தில் இந்த அரசு உடனடியாக தற்போதைய தேவைக்கு ஏற்ப, துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டும். அதை மேற்கொள்ள வேண்டும். என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நடத்தப்படுகிற பள்ளிகள் அனைத்திற்கும் தன்னிறைவுத் திட்டத்தைப் போன்று ஒரு அவசர கால திட்டத்தைத் தீட்டி கட்டிட வசதி ஏற்படுத்தி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி சாலைகள் அடிக்கடி பழுது பட்டுப் போவதற்கு காரணம் மாட்டு வண்டிகள் பட்டா போட்ட சக்கரங்களாக இருப்பதால் இவ்வாறு ஏற்படுகிறது. அந்த வண்டிகள் அதிகமாக நகராட்சியின் எல்லைக்குள் வந்து செல்கிற சூழ்நிலையில் அந்தப் பாதை அடிக்கடி பழுது பட்டு நகராட்சி எவ்வளவுதான் சிரத்தை எடுத்து பணிகளை மேற் கொண்டாலும், பாதைகள் சரியான நிலையில் இல்லை. ஆகவே, அரசு ஐ. ஆர். டி. பி. திட்டங்கள் வாயிலாக அளிக்கிற அந்த மாட்டு வண்டிகள் டயர் சக்கரங்கள் பொருத்தப்பட்டதாகக் கொடுக்க வேண்டும். நகராட்சிகளுக்குள் வருகிற வண்டிகள் டயர் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்று சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. எம். பி. இரத்திரனம்]

பொள்ளாச்சிக்குத் தெற்குப் பகுதியான கோட்டூர் ரோட்டில் ரெயில்வே பாதை இருக்கிறது. அந்தப் பகுதியில் அதிகமான ஜன நடமாட்டமும், வாகனப் போக்குவரத்தும் இருப்பதால் அதற்கு மேம்பாலம் ஒன்று கட்டித்தர வேண்டு மென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல பொள்ளாச்சியின் பிரதான சாலையான பொள்ளாச்சி மீன்கரை சாலையை தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நகராட்சியினுடைய சுகாதார அதிகாரிகள் அனைவரும் ஆணையர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக ஆக்குவது அவசியம். காரணம் அந்த அதிகாரிகள் தன்னிச்சையாக இயங்குகிற காரணத்தால் ஆணையாளர்களின் உத்தரவை மீறுகிறவர்களாக இருக்கிறார்களே தவிர அவர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. ஆகவே ஆணையாளர்களுக்கு அந்த அதிகாரிகள் உட்பட்டவர்களாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொள்ளாச்சிக்கு சர்க்கார் வழியிலேயிருந்து வருகிற குடிநீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். கோவை மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற கோவைக்கு சிறுவாணித் திட்டத்தை நிறைவேற்றி மாநகராட்சியின் எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்கிற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். குடிநீர் வடிகால் வாரியமும் மாநகராட்சி நிர்வாகமும் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் செய்யாத அளவிற்குத் தமிழகத்திலே தன்னிறைவுத் திட்டம் நிறைவேறி வருகிறது. குறிப்பாக மலைப் பகுதியிலே உள்ள சாலைப்பணிகள் தார் சாலையாக அமையவும், தன்னிறைவுத் திட்டப் பணிகள் காலத்தை அந்தப் பகுதிகளுக்கு இரண்டு ஆண்டுகளாக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தாய்த் திருநாடு தோன்றிய நாளிலிருந்து கிராமப் பகுதிகளிலே செய்யாத வேலைகள், செய்து முடிக்கப்படாத பணிகளை இந்த தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக செய்து, கிராம மக்கள் புகழ்கிற வகையிலே இன்றையதினம் அன்புத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சியினுடைய பொறுப்பிலே செய்யப்பட்டு வருகிற இந்த நேரத்திலே, தங்கமணி அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தைட் பற்றி குற்றம் கூறினார்கள். கூறினாரே தவிர கடைசியில் அவர்கள் தன்னுடைய பகுதியான திண்டிவனத்திற்கு அந்த நகராட்சிக்கு நலிந்த நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்துகிறார்களே. பேரூராட்

[முற்பகல் 11.50]

சிகளுக்கு இன்றைய தினத்திலே தருகிறபோது தன்னிறைவுத் திட்டத்தை எங்களுடைய திண்டிவனத்திற்கும் தாருங்கள் என்று கேட்கிற போது தன்னுடைய வாதத்திற்காக தன்னுடைய கட்சிக்காரர்களை சமாதானப்படுத்துவதற்காக அப்படிச் சொன்னார் என்றாலும் கூட இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைப் பாராட்டுகிற அளவுக்குத்தான் தன்னுடைய பகுதக்கும் வரவேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, கிராம மக்கள் பாராட்டுகிற முறையில் இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* திரு எம். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டம், நகராட்சி நிர்வாகம் என்பதற்கான மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு இது சம்பந்தப்பட்ட நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பிக்கிறபோது தேர்தல் நடந்து முடிந்து இருக்கும் என்று சென்ற ஆண்டு வாக்குறுதி தந்த நிலையில் வந்திருக்க வேண்டிய இந்த அறிக்கை என்ன துரதிஷ்டமோ தேர்தல் நடக்கவில்லை, தேர்தல் உடனடியாக நடத்தப்படுவதற்கு என்னென்ன வழி முறைகளைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து உடனே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கை இந்தச் சபையின் முன் வருவதற்கு முன்னாலே நகராட்சிகளில் உள்ள கடைகளில் குறைந்த பட்சம் என்றைக்குமே இல்லாத வகையில் 50 அளவுக்கு உயர்த்தப்படுகிறது என்று சொல்லியிருப்பது மக்களுக்கு அதிருப்தியையும் ஏற்படுத்தி கடந்த 3 ஆண்டுகளாக தமிழகத்திலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக வியாபாரம் பாதிக்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்திலே உயர்த்தியிருப்பது அந்த மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது என்பதால் தேர்தல் வருகிற வரையில் அந்த வரியை நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியங்கள், நகராட்சிகளிலே ஆலோசனைக் குழுக்கள் என்ற முறையிலே செயல்படுகின்றவற்றில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் இணைத்து புதிய முறையில் அந்த குழுக்களை புனரமைத்து ஆலோசனைக் குழுக்களை அடிக்கடி கூட்ட வேண்டுமென்ற அரசு ஆணையைக் கட்டாயமாக அமுல்படுத்தினால் தேர்தல் வருகின்ற வரையிலும் இடைக்காலத்தில் அந்தக் குழுக்களின் ஆலோசனையோடு நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





தெரு விளக்குகள் என்று சொல்லுகிறபோது மாநிலம் முழுவதும் எந்த மாவட்டத்தை, எந்த நகரத்தை, எந்த ஒன்றியத்தை, எந்த ஊராட்சியை, பேரூராட்சியை, எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், ஒவ்வொரு வீட்டிற்கும் எப்படி தனித்தனி லைட் கொடுக்கிறார்களோ அதைப் போன்ற உதவியைச் செய்தாலும் கூட கிராம மக்களுக்கு மின்சாரம் கிடைக்கிறதா என்றால் இல்லை. தெரு விளக்குகள் முறையாக எரிவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்பாடி தொகுதியில் ஒரு பாலம் கட்டுவதற்கு சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் நிதி ஒதுக்கினார்கள். இந்த ஆண்டும் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த ஆண்டு 126 லட்சம் ரூபாய் செலவில் அந்தப் பாலத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் கூட மத்திய அரசின் வரைபடம் அந்தப் பாலம் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்ற வரைபடம் இல்லை என்று சொல்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி இந்தப் பாலத்தினை உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்திக் கொடுத்தால், சித்தூர்—கடலூர் இடையே பெரிய போக்குவரத்துச் சாலையாக மக்கள் வந்துபோகிற நல்ல சாலையாக இருக்க அந்தப் பாலம் உதவி புரியும். ஆகவே அந்த வேலையை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாக சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். தன்னிறைவுத் திட்டம் போன்ற பல நல்ல திட்டங்கள் மக்கள் நலனுக்காக அவசியமாகிறது என்பதால் நிறைவேற்றப்படுவது வரவேற்கத் தக்கது, பாராட்டக்கூடியதும் கூட. கிராமப் பகுதிகளில் சாலையில்லாத பகுதிக்கு வசதி செய்து கொடுத்தால் இன்னும் மருத்துவம் சம்பந்தமாக அல்லது புதியதாகக் குழந்தைகள் காப்பகம், படிப்பகம் போன்றவைகளுக்கு வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலும் ஓரளவிற்கு நல்ல முறையிலே நடைபெறுகிறது. ஆனால் இவற்றை நிர்வகிக்கின்ற அதிகாரிகள் எப்படிச் செயல் படுகிறார்கள் என்பதை அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நான் ஏன் இதைச் சொல்கிறேனென்றால் இதற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் ஐந்து முதல் பத்து இலட்சம் ரூபாய் வரையில் தான் ஒரு ஆண்டுக்கு அநேகமாகச் செலவழித்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது 45 இலட்சம் 50 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு ஒவ்வொரு திட்டத்திற்கும் தன்னிறைவுத் திட்டம் போன்ற வேறு பல திட்டங்களுக்கும் ஏராளமான பணத்தை மத்திய அரசும், மாநில அரசும் ஆகிய இரண்டும் இணைந்து செயல் படும் திட்டங்களை அமலாக்கும் பொழுது அதை யார் கண்காணிப்பது? எப்படிப் பரிசீலிப்பது என்பது சம்பந்தமாக அரசு ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். இதையொட்டிப் பல்வேறு புகார் மனுக்கள்

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1982 மார்ச் 13

அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. பல முறையீடுகளை அரசுக்கு ஏற்கனவே அனுப்பியிருக்கிறார்கள். அதையெல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலிக்க வேண்டும். அப்பொழுது அந்தந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லது அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கொண்ட குழுவை ஏற்படுத்தி அந்தக் குழுவின் மூலமாக இந்த வேலைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஊர் நல அலுவலர்கள் என்றும், கிராம சேவக்குகள் என்றும் சொல்லுகிறோம். இப்படிப்பட்டவர்கள் நீண்டகாலமாகவே வேலை செய்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் 360 பேர்கள் என்று நினைக்கிறேன், அவர்களுடைய வேலைகள் முடிந்து அவர்களை வெளி மாவட்டத்திற்கு மாற்றும் சூழ்நிலை இருப்பதாகத் தகவல் தெரிகிறது. அரசாங்கம் அதே ஊரில் அந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊர் நல அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளித்தல் அல்லது மற்ற அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் போன்றவைகள் இல்லை. மற்ற அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை போல அந்த ஊர் நல அலுவலர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்காண்டு நகராட்சிகளில் துணி கொடுக்கிறோம். நாமே தைத்துக் கொடுக்கிறோம். அதுவும் கூட இன்னும் வேலூர் நகராட்சிக்குக் கொடுக்க வில்லை. ஏன் என்று கேட்டால் இன்னும் தைத்தாகவில்லை என்று சொல்கிறார்கள் அவ்வாறு தைக்கப்படுவதும் கூட சராசரியாக அளவு ஒரே நிலையில் தைக்கப்படுகிறது. அந்த உடைகளைப் பயன்படுத்துவதால் வெகு குறுகிய காலத்தில் பழுதடைந்து விடுகின்றன எனவே அந்தத் தொழிலாளர்களின் கைகளிலேயே துணியைக் கொடுத்து அதைத் தைப்பதற்கான கூலியையும் கொடுத்து, இத்தனை நாட்களுக்குள்ளாக தைத்து கட்டாயமாகக் காண்பிக்க வேண்டுமென்ற நிபந்தனையோடு துணிகளைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதால் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய அளவிற்கு நல்ல முறையில் தைத்துக் கொள்வார்கள், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் அளிக்கப்பட வேண்டும். சமுதாயத்தில் கீழ்த்தட்டில் உள்ளவர்கள் அவர்கள். மனிதர்களுக்கு எத்தனை வசதிகள் இருந்தாலும் சுகாதாரம் இன்றியமையாததாகும். அதை நல்லபடி செய்யும் ஊழியர்களுக்கு பென்ஷன் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. கொடுப்பதில் தகராறு இருக்கிறது. 73 என்று சொல்லி அந்த நிபந்தனையை



1982 மார்ச் 13] [திரு. என். ஏ. பூங்காவனம்]

வைத்திருப்பதால் பென்ஷன் கிடைக்கவில்லை. எனவே பென்ஷன் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் பம்பு ஆப்பரேட்டர்கள், மோட்டார் ஓட்டும் தொழிலாளர்கள் நகராட்சிகளில் பணி செய்கிறார்கள். அவர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவில்லை. அவர்கள் திருமணக் கடன் பெறுவதிலும், பண்டிகைக் காலத்தில் முன் பணம் பெறுவதிலும் முறையாகக் கிடைக்கவில்லை. மற்ற சக ஊழியர்களுக்கு எப்படித் தருகிறார்களோ அதே முறையில் அவர்களுக்குத் தருவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே கே. வி. குப்பம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அது கேட்டகிரி 6 என்று சொல்கிறார்கள். அங்கு குடிநீர் இருக்கிறதா, பயன்படுத்திக் கொள்ள முடிகிறதா என்று கேட்டால் தண்ணீர் நெருக்கடிதான் இருக்கிறது. பல்வேறு நேரங்களில் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளிலேயெல்லாம் முழுமையாகத் தகவல் பெற்று எந்தக் கேட்டகிரியாக இருந்தாலும் அதை மாற்றி அந்த இடத்திற்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லத்தேரிக்குப் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. திருமணியிலுள்ள அரிசனங்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளக்கூட மறுக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள அரிசனக் காலனியாக இருந்தாலும், வேறு கிராமங்களாக இருந்தாலும் தண்ணீரை எடுத்துக் கொள்ளும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

இன்னொரு விஷயம். வேலூர் நகராட்சி நான் வசிக்கிற நகரம். அந்த நகரத்திலே 1937 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அன்றைக்கு குடிநீர் திட்டம் அமைக்கிறபோது 600 பொதுக் குழாய்களும் 1,000 வீட்டுக் குழாய்களும் அமைத்துத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு 1982 ஆம் ஆண்டு அதே டாங்க்தான் இருக்கிறது. ஆனால், வேறு இரண்டு இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படுவது உண்மை. ஆனால், இப்போது நிலையென்னவென்றால் தண்ணீர் இல்லாதபோது மூடிவிட்ட குழாய்களிலே—சர்க்காரிலிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டதா என்று தெரியவில்லை—தண்ணீர் கனெக்ஷன் வேண்டுமென்றால் மீட்டர் போட்டால்தான் இணைப்புக் கொடுப்பேன் என்று சொல்கிறார்

கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கொஞ்சம் கவ
னிக்கவேண்டும். தண்ணீர் இல்லாத காலங்களிலே மூடிய
குழாய்களுக்கு மீட்டர் இணைத்தால்தான் மீண்டும் இணைப்புக்
கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். புதிய குழாய்கள்
போட்டால் ஏழைகளுக்கு தண்ணீர் தேவையாகிறபோது கொடுப்
பதைவிட நிறைய குழாய்களை அமைத்துக் கொடுக்கவேண்டு
மென்று சொல்கிறோம். அப்படிக் கொடுக்கிற போது மீட்டர்
அமைக்கவேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறதா இல்லையா
என்பதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

அடுத்து இளையான்குடி கிராமத்தில் 25 ஆயிரம் மக்கள்
வாழ்கிறார்கள். அங்கே மிகவும் நெருக்கடியான தண்ணீர்ப்
பஞ்சம் இருக்கிறது. அந்தப் பிரச்சனையைத் தீர்க்க உடனடியாக
உரிய நடவடிக்கை வேண்டும்.

அடுத்து திருத்துறைப்பூண்டி என்ற நகரம் ஏற்கெனவே பேரு
ராட்சியாக இருந்தது. அதை நகராட்சியாக உயர்த்துவதற்கு
அரசு 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே ஆணை பிறப்பித்தது. இன்ன
மும் அது முடிவு செய்யப்படவில்லையென்பது வருந்தத்தக்கது.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அது வந்திருக்காது
என்று நினைக்கிறேன். அந்தப் பகுதி மக்களும் சட்டமன்ற
உறுப்பினரும் இது குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே
அதை நகராட்சியாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற ஊராட்சிகள்,
சாலைகள், பாலங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைக் கூறி என்னுடைய
உரையைத் தொடங்குகிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலையறிக்கையிலே கம்பம் தொகுதியில்
கோம்பையிலிருந்து நாமக்கல் மெட்டு வரை கேரள மாநிலத்
தோடு இணைக்கக்கூடிய இணைப்புச்சாலை அமைப்பதற்கு
70 லட்சம் கொடுக்கப்பட்டது. காஞ்சி மரத்துறை என்கிற
இடத்திலே பாலம் கட்டுவதற்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு
உள்ளது. இந்த ஆண்டு 82-83இல் நிதிநிலையறிக்கையில்
கூடலூர், கருநாகத்தம்பட்டி இணைப்புச் சாலையை அமைக்கவும்
பெரிய பாலம் கட்டுவதற்கும் 26 லட்சம் ரூபாய் ஒதுக்கியமைக்காக
என் தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய இதய தெய்வம்
மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.





மேலும் இந்த நிதிநிலை அறிக்கையில் பாலங்களுக்கும் சாலை
கள் போடுவதற்கும் கிட்டத்தட்ட 63 கோடி ரூபாய் ஒதுக்கி
யிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இதுவரைக்கும் எந்த அரசும்
செய்யமுடியாத ஒரு பெரிய சாதனை இது. அதற்காக தமிழக
அரசை மனதாரப் பாராட்டுகிறேன். அதோடு தன்னிகரில்லாத
தன்னிறைவுத் திட்டத்தை ஏற்படுத்தி கிராம மக்களுக்கு அத்தி
யாவசியத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருப்பதை பொது
மக்கள் அனைவரும் மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள்
அனைவரும் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எனது கம்பம் தொகுதியிலுள்ள கூடலூர் பேரூராட்சியை
நகராட்சியாக மாற்றவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 1978ஆம் ஆண்டிலிருந்து
அது நகராட்சியாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டு வந்தது. கூடலூரின் மக்கள் தொகை 36,754. சராசரி
ஆண்டு வருமானம் 12,64,128 ரூபாய். 1978 ஆம் ஆண்டு
கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நினைத்து
முறைகேடுகள் இருந்தால் 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டு
மென்று அரசு ஆணை எண். 134, ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை 21.1.1979 ஆம் நாளில் பிறப்பிக்கப்
பட்டிருந்தது.

மேலும், கூடலூர் பேரூராட்சி மன்றம் தனது தீர்மானம்—
206, 13.3.1979-ல் ஏகமனதாக முடிவு செய்து, அந்தத்
தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி, அதை
நகராட்சியாக மாற்றவேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.
எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடலூர் பேரூராட்சியை
வெகு விரைவில் நகராட்சியாக மாற்றித் தரவேண்டும் என்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கம்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஹைவேவ்ஸ்
பகுதி இப்போது நகரியமாக இருக்கிறது. அது மதுரை ரீஜனல்
இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிப்பல் கவுன்சில் மற்றும் ஸ்தல ஸ்தா
பனம் அவர்களின் 4.5.1960-ஆம் நாளிட்ட கடிதம் எண். 3396/
60-ன்படி ஊராட்சியாக அமைக்கப்பட்டு உத்தரவு இடப்
பட்டது. 15-7-1960க்கு முன் ஊராட்சியா அது செயல்
பட்டுவந்தது. அதிலே மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 11
அதற்கு ஒரு தோட்டத் தொழிலாளி தலைவராக வந்து
விட்டார் என்று தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினர் வழக்கு
மன்றம் சென்றார்கள். வழக்கு மன்றம் சென்றதற்குப் பிறகும்
அந்த நிர்வாகத்தினர் ஊராட்சித் தலைவருக்கு அந்த நகர
மன்ற உறுப்பினர்களையும் பலாத்காரம் மூலமாக பல
செயல்களைச் செய்து காட்டினார்கள். அவர் ஒரு தோட்டத்
தொழிலாளி என்பதால் நிர்ப்பந்தம் கொடுத்தார்கள். அந்த

நிர்ப்பந்தத்தின் காரணமாக அவர்களுக்குள் ஒரு உடன்பாடு ஏற்பட்டு, தோட்ட நிர்வாகத்தினர் அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டார்கள். பின்னர் அந்தத்தோட்ட நிர்வாகத்தின் நிர்ப்பந்தம் காரணமாக அந்தை ஹைவேஸ் ஊராட்சிமன்றம் 18.9.62-ல் எண் 106-ல் நகரியமாக மாற்றவேண்டும் என்று கோரி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினார்கள். பின்னர் அந்த ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருமே ராசினாமா செய்தார்கள். பின்னர் ஹைவேஸ் ஊராட்சி, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 29.9.64-ம் எண் 2029-ன்படி நகரியமாக அமைக்கப்பட்டு 1.10.64 முதல் நகரியமாக செயல்பட்டு வருகிறது. இங்கேயுள்ள மக்கள் தொகை கிட்டத்தட்ட 9,000. மூன்றாண்டுகளின் வரவுகளின்படி சராசரி ஆண்டு வருமானம் 2,39,955 ரூபாய். 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகளின் சட்டப்பிரிவு 1. (ஏ)-ன்படி மக்கள் தொகை 5,000. ஆண்டு வருமானம் 25,000 ரூபாய்க்குக் குறையாமல் இருப்பின் நகர பஞ்சாயத்தாக ஏற்படுத்தலாம் என உள்ளது. எனவே ஹைவேஸ் நகரியத்தை நகரப்பஞ்சாயத்தாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கேயுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மின்சார வசதி, குடிநீர் வசதி போன்ற அத்தியாவசியமான வசதிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே தெருவிளக்குக் கூட போடாத நிலையில் அந்த நிர்வாகம் இருக்கிறது. மின்சாரக் கம்பங்கள் அமைக்க இடம் தர மறுக்கிறார்கள். ஆகவே, பொதுமக்கள் நலன் கருதியும், தோட்டத் தொழிலாளர்கள் நலன் கருதியும் அந்த ஹைவேஸ் நகரியத்தை நகரப்பஞ்சாயத்தாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பம் நகராட்சி மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறது. நகராட்சிகளையும் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். கம்பம் நகராட்சியில் ஆண்டு தோறும் வரும் வருமா,னம் 20 லட்சம் ரூபாய். அதற்குக் கிட்டத்தட்ட 19 லட்சம் ரூபாய் செலவாகிறது. ஆகவே, மற்ற அபிவிருத்தித் திட்டங்கள் எதுவுமே செய்ய முடியாத நிலையில், அது இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தில் நகராட்சிகளை எடுத்துக் கொள்கிறபோது. முதன் முதலில் கம்பம் நகராட்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் கம்பம் மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

கம்பத்தில் நிலையான பேருந்து நிலையம் இல்லை. அது ஸ்ரீ காசி விஸ்வநாத கம்பராய பெருமாள் கோயில் இடத்தில் 50 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் அந்த நிலத்தை





எடுத்துக்கொண்டு அமைக்கப்பட்டது. ஆகவே, அங்கே நவீன வசதியோடு கூடிய பேருந்து நிலையம் கட்டப்படவில்லை. ஆகவே, இதற்காக தனியயாக இடத்தை வாங்கி, அங்கே நவீன வசதியோடு கூடிய பேருந்து நிலையத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தமிழகத்தில் மலைச் சாலைகள் மிகவும் நல்ல முறையில் நேர்த்தியாகவும், உறுதியாகவும் இருக்கின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ எங்கள் பகுதியில் உள்ள மலைச்சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாக, குமுளி சாலை மிகவும் பயங்கரமான முறையில் இருக்கிறது. அந்தச் சாலை மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையைப் புதுப்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

கம்பம்மெட்டு சாலை போட்டு கிட்டத்தட்ட 11 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் ஒரு ஆண்டு கூட பழுது பார்க்கப் படவில்லை. அதையும் புதிதாகப் போட வேண்டிய சூழ் நிலையில் இருப்பதால், புதிதாகச் சாலை போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சுருளிபட்டியிலிருந்து ராஜபாளையம் சாலை போடப்பட வேண்டும். அந்தச் சாலையைப் போட்டால் கிட்டத்தட்ட 60 முதல் 80 கிலோ மீட்டர் வரை தூரம் மிச்சமாகும். ஆகவே, அந்தச் சாலையையும் போட அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சாலை போட்டால், ராஜபாளையம், குற்றாலம், தூத்துக்குடி போக மிகவும் எளிதாக இருககும்.

மேலும் ராஜபாளையம். குற்றாலம், தூத்துக்குடி, ராமக்கமெட்டு, காஞ்சிமாத்துறை, வேலையை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் ஒரு நிமிடத்தில் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன். உத்தமபாளையம் அம்மாபட்டியில் பெரியாற்றின் குறுக்கே நடைபாதை இல்லாமல் மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. அந்த நடைபாதையை உடனே போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். டி. கோபாலன்] [1982 மார்ச் 13

சேடப்பட்டி, ஆண்டிப்பட்டி தொகுதிகள் பயன்படும் வகையிலும் என்னுடைய பகுதியிலுள்ள வெள்ளிமலை. வரிசநாடு மலைப் பகுதிகள் பயன்படும் வகையிலும் அண்மையில் அமைச்சர் அவர்கள் பார்த்து வந்த மல்லபுரம், மயிலாடுபாறை சாலையை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பெரியகுளம் நகரின் பரப்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பெரிய குளத்தில் கோட்ட வளர்ச்சி அலுவலக கட்டிடம் இல்லை. அதைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பெரியகுளத்தில் பேருந்து நிலையம் ஒன்றையும் புதிதாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுகாவில் ஐயலூரில் இருந்து ஆலம்பட்டி வரை செல்லும் சாலை 20 ஆண்டுகளாக பராமரிக்கப்படவில்லை. காரணம் இது வனத்துறைச் சாலை. ஆனால் தற்போது. அந்த சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 15 கிராம மக்களுக்கு போக்குவரத்துக்குப் போதுமான குறைந்த பட்ச சாலை வசதிகள் இல்லை என்பதை கருத்திற்கொண்டுஅப் பகுதி மக்களின் 15 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு ஐயலூர்—ஆலம்பட்டி சாலையை அமைக்க பணம் ஒதுக்கி. சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. செல்வராசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயகத்தில் உள்ளாட்சித் துறை மிக மிக முக்கியமானது. ஜனநாயகப் பயிருக்கு நாற்றங்கால் போன்றது உள்ளாட்சித் துறை. அந்தக் காலத்தில் வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் உள்ளாட்சித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். மகாத்மா காந்தியடிகள் கூட கிராம ராஜியம் தான் நம் நாட்டுக்கு சிறந்தது என்று கூறினார்கள். இப்போது இங்கே இருக்கிற சென்னை மாநகராட்சியை ரிப்பன் பிரபு பெற்றுத் தந்தார்கள். அதனால்தான் சென்னை மாநகர மக்கள் ரிப்பன் எங்கள் அப்பன் என்று பாராட்டிக்கொண்டிருக் கிறார்கள். அதை இந்த அரசு உணரவில்லை. காரணம் அண்ணா தி.மு.க. இதுவரையில் உள்ளாட்சிகளில் பங்குகொள்ள வில்லை.



1982 மார்ச் 13] [திரு. அ. செல்வராசன்]

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த மக்கள் பிரதி நிதிகள் தமிழ்நாடு எங்கும் இருந்தார்கள். அதனால் ஆங் காங்கே நல்லமுறையில் பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் உங்கள் ஆட்சியில் மக்கள் எண்ணங்களை மக்கள் தேவைகளை புரிந்துகொள்ளாத அதிகாரிகள்தான் அதிகாரத் திற்கு வந்திருக்கிறார்கள். 1976-லிருந்து தேர்தல் நடக்க வில்லை அது அவசர கால நிர்வாகம். அதற்குப் பிறகு தேர்தல் நடந்து, நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். வந்த பிறகு ஓட்டு மொத்தமாக எல்லா உள்ளாட்சி நிறுவனங்களையும் கலைத் தீர்கள்.

இந்த நாட்டில கவர்னர் ஆட்சி தொடர்ந்து நடந்தால் ஜனநாயகம் படுகொலை செய்யப்படும் என்று சொல்லி எல்லோ ரும் அதை எதிர்த்தோம். ஆனால் கவர்னர் ஆட்சியில் நியமிக்கப் பட்ட அதிகாரிகள்தான் இன்றைக்கு அங்கே ஆட்சி செய்து கொண் டிருக்கிறார்கள், அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கு இந்த அரசின் இந்தக் கொள்கைக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார் கள். அதற்குப் பிறகும் தேர்தல் நடத்த முன்வரவில்லை. ஒரு சில பஞ்சாயத்துக்களில் ஊழல் நடைபெற்றிருந்தால் அவை களை கலைக்கலாம். ஆனால் எல்லாப் பஞ்சாயத்துக்களையும் கலைத்தது உங்களுடைய எதேச்சாதிகார போக்கு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல கிராம அதிகாரிகள அத்தனை பேர்களையும் ஒரே நாளில் நள்ளிரவில் வீட்டுக்கு அனுப்பினீர்கள். காரணம் என்ன சொன்னீர்கள் என்றால் கிராம அதிகாரிகள் எல்லாம் லஞ்சம் வாங்கினார்கள் என்று சொன்னீர்கள். சிலர் தவறு செய்திருக்கலாம். அவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம். அதை நீங்கள செய்யவில்லை. அதிலே உங் களுக்கு உள்நோக்கம் இருக்கிறது என்பதால் நியாயமான சிந் தனை, தெளிவான சிந்தனை இல்லாமல் அத்தனை பேரையும் வீட்டுக்கு அனுப்பினீர்கள.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவர் அவர்களே ஏற்கெனவே இந்த சட்டமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது, எந்த உறுப்பினரும் குறிப்புகளை கையிலே வைத்து படித்து, உரையாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அப்படி குறிப் பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது மாண்புமிகு உறுப் பினர் திரு. செல்வராஜ் அவர்கள் கையிலே வைத்து படித்து உரையாற்றுவதை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன.

திரு. அ. செல்வராசன் : இதுவரையில் இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் அனைவரும் குறிப்புக்களை கையிலே வைத்துக் கொண்டுதான பேசினார்கள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அப்போதெல்லாம் தெரியவில்லை; இப்போதுதான் அவர்களுக்குத் தெளிவு பிறந்ததோ என்று எண்ணுகிறேன்.

இதுவரையில் பிறக்காத தெளிவு நான் பேசுகின்றபோது மட்டும் அமைச்சர் அவர்களுக்கு வந்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்போது நீங்கள் நியமித்திருக்கின்ற தனி அதிகாரிகள் மக்களின் வரிப்பணத்தை வீணாக்கி வருகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாததால் இப்போது நீங்கள் போட்ட குழுக்களைக் கூட உங்கள் விருப்பப்படி போட்டு உங்களுக்கு விருப்பப்பட்ட ஆட்களைப் போட்டு எல்லா காரியங்களையும் செய்து......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் அவர்கள் பேசியது கண்டிப்பாக சட்டமன்றக் குறிப்பேட்டிலே இருக்கும். ஆகவே அந்தக் காகிதத்தினையும் சட்டமன்றக் குறிப்பேட்டினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் என்னென்ன பேசி இருக்கிறார்களோ அந்த வார்த்தைகள் எல்லாம் அப்படியே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்....... (குறுக்கீடு)

திரு. அ. செல்வராசன் : மாற்றுத் தலைவரவர்களே, ஜனநாயகத்திற்குக் கிடைத்த முதல் அடி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்களைக் காரணம் இல்லாமல் கலைத்தது. இரண்டாவது அடி சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் கமிட்டி என்ற பெயராலே நுழைத்தது. முதலிலே இருந்த அமைப்பிலே மக்களுக்குப் பங்கு இருந்தது. அதுபற்றிக் கேட்பதற்கு உரிமை இருந்தது. நிர்வாகம் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருந்தது. ஆனால் இப்போது நீங்கள் நியமித்த ஆலோசனைக் குழுவிற்கு மட்டுமே அதில் சொல்ல நிர்வாகம் கடமைப்பட்டிருக்கின்றது. இப்போதுள்ள அமைப்பின்படி மக்களுக்குள்ள ஒரே கடமை வரி கட்டுவதுதான். உங்களுக்குள்ள ஒரே கடமை அதை வாரிக்கட்டுவதுதான். இந்தச் சர்க்கார் பல ஆண்டுகளாகச் சாக்குப் போக்குச் சொல்லி தேர்தலைத் தள்ளி வைத்து வருகிறது. இறுதியாகத் தேர்தலை நடத்துவது என்று ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள். அவசரம் அவசரமாக தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்டது. வேட்பு மனு தாக்கல் செய்த தேதி முடிந்த பிறகு கிராம அதிகாரிகள் வேட்பு மனு தாக்கல் செய்யலாம் என்ற குழப்ப அறிவிப்பு இதிலே கோர்ட்டுக்குச் செல்லக் கூடிய நிலைமையை நீங்களே உருவாக்கினீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இந்தியாவிலேயே வேறு





எந்த மாநிலத்திலும் இல்லாத நடைமுறை இந்த மாநிலத்தில் தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மக்களின் பிரதிநிதிகள் இல்லாமலே கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றிற்கு கோடி கோடியாக பணம் ஒதுக்கினீர்கள். அதை எல்லாம் சுயநலக்காரர்கள் சூழ்ச்சியால் தங்களுக்காக ஒதுக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மோசமான நிர்வாகத்தால், உள்ளாட்சித் துறை மூலம் மேலவைக்கு வரவேண்டிய பல உறுப்பினர்கள் தேர்தல் இல்லாத காரணத்தால் வர முடியவில்லை. ஆகவே, மேலவையிலே, பெரும்பாலான இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்போது குறைந்த அளவுக்குத்தான் மேலவையிலே உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதைவிட மேலவையையே கலைத்திருக்கலாம். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. இராகவானந்தம், திரு. வீரப்பன், திரு. ஹண்டே, திரு. இராஜா முகம்மது போன்றவர்கள் கோபப்படக் கூடாது.

திரு. கோவைத்தம்பி : மாற்றுத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அவர்கள் எழுதி வைத்ததைப் படித்திருந்தாலும் அல்லது சொந்தமாக எழுதிப் படித்திருந்தாலும் மேலவையினை கலைத்துவிடுவதை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறதா என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. செல்வராசன் : மாற்றுத் தலைவரவர்களே, மேலவையைக் கலைக்கும் படியாக நான் சொல்லவில்லை. மேலவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள் இல்லை என்ற காரணத்தாலே சொன்னேனே தவிர மேலவையைக் கலைத்துவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஊராட்சி மன்றங்களில் நிர்வாகத்துறை இல்லாத காரணத்தாலே நிர்வாகத்துறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்கள் அங்கே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். * * *

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்) : 'மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். * * * என்று பேசிய அந்த வாக்கியத்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன்.

திரு. அ. செல்வராசன் : மாற்றுத் தலைவரவர்களே, அவர்கள் சுகாதாரத்தைப் பற்றிக் கண்டுகொள்வதே இல்லை. நாடெங்கும் கொசுப் பெருக்கம், மூளைக்காய்ச்சல், காலரா, போன்ற நோய்கள் பெருகி வருகின்றன. உலகத்திலேயே தொழு நோய்பிச்சைக்காரர்கள் தமிழ் நாட்டிலேதான் அதிகமாக

* மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கிறார்கள். இந்துக் கோயில்கள், கிறிஸ்துவ மதக் கோயில்கள் போன்ற இடங்களில் எல்லாம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அதிகமாகக் கிடக்கிறார்கள். இதனால் கடவுளின் மேலே கூட நமக்குச் சில சமயம் கோபம் ஏற்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்துத் தந்தார். இன்றைக்கு அந்த விடுதிகள்கூட சரிவர பராமரிக்கப்படுவதில்லை. இதனால் அங்கே கூட போராட்டம் உண்ணாவிரதம் போன்றவைகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. நமது அருகாமையில் உள்ள இலங்கை அரசு தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் தந்து அவர்கள் பிச்சை எடுக்கக் கூடாது என்ற நிலைமையை உண்டாக்கியிருக்கிறது, அதை இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12·20)

கொசுத் தொல்லையை ஒழிக்க டி.வி.யிலும் வானொலியிலும் பெரும் அளவில் விளம்பரம் செய்கிறீர்கள். விளம்பரத்திற்காக பணத்தை வீணாக்குகிறீர்களே தவிர உருப்படியாக ஒன்றும் செய்வதில்லை. அந்தப் பணத்தைக் கொண்டு கொசுக்களை ஒழிக்க நல்ல மருந்துகளை வாங்கித் தெளித்து கொசுக்களை போக்குவதற்கு செலவு செய்தால், கொசுக்கள் ஒரளவு ஒழிந்துபோய்விடும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி, சென்னையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையிலே தற்போதுள்ள பாதைகள் எல்லாம் மிகவும் மோசமாக குழியும், பள்ளமுமாக இருக்கிறது. மின் விளக்குகள் பாதிக்கு மேல் பெரிதும் எரிவதில்லை, ஒரு சில பெரிய சாலைகளில் கொஞ்சம் வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறீர்கள். ஆனால், இன்டீரியர் ரோட்ஸ் என்று சொல்லக்கூடிய உள்புறத்திலே இருக்கக்கூடிய பாதைகளில் விளக்குகள் சரிவர எரிவதில்லை. நான் நேற்றைக்கு முன் தினம் மாநகராட்சி அதிகாரியோடு, இரவு 8 மணிக்கு மேல் என்னுடைய தொகுதியைச் சுற்றிப் பார்த்தேன். சுமார் 50, 60, தெருக்களில் உள்ள விளக்குகள் எரியவே இல்லை. அதை இந்த நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக என் தொகுதியில் எங்கே பார்த்தாலும் வாட்டர் பொல்யூஷன் என்று சொல்லப்படுகிறது. குடி தண்ணீரோடு சாக்கடைத் தண்ணீர் கலந்திருக்கிற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது......... (குறுக்கீடு)





**மாண்புமிகு திரு. எஸ். இராகாவானந்தம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கே பார்த்தாலும் குடி தண்ணீர் சாக்கடைத் தண்ணீரோடு கலந்து விடுகிறது என்று ஸ்வீப்பிங் ரிமார்க்ஸ் பாஸ் பண்ணியிருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். எங்கே, எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஆனால் எந்த இடத்திலும் அப்படிப் பட்ட நிலை கிடையாது. சென்னையிலும் சரி, தமிழகத்திலும் எங்குமே சரி, குடி தண்ணீரோடு சாக்கடைத் தண்ணீர் கலந்து போவதில்லை........(குறுக்கீடு)

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில இடங்களில் குழாய் தண்ணீரை பிடிக்க வேண்டும் என்று குழாய்களைத் திறந்து பார்க்கிறபோது, வருகிற தண்ணீர் நிறம் குறைந்து, தரம் குறைந்து காணப்படுகிறது. ஏதோ ஒரு இடத்தில் சாக்கடைத் தண்ணீர் கலக்கிற காரணத்தினாலே தான், இந்தத் தண்ணீர் தரம் குறைந்து இருக்கிறது என்று எங்கள் வீடு உட்பட பேச வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தால் எங்கே எந்த இடத்தில் அப்படி கலக்கிறது என்று கண்டுபிடிப்பது அமைச்சர் அவர்களின் வேலை ; ஆனால் தண்ணீர் அப்படிப் பட்ட நிலைமையில் இருக்கிறது என்று சொல்வதுதான் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத்தலைவர் அவர்களே, பேராசிரியர் எப்போதும் ரீசனபிள் ஜென்டில்மேன் நியாயமாகத்தான் பேசுவார். பதினைந்தாயிரத்து சொச்சம் குழாய்கள் தரை மட்டத்திற்கு கீழே பிரஷருக்காக இருக்கின்றன, அப்படி கீழே இருக்கக்கூடிய பைப்புகளைச் சுற்றி வருகிற தண்ணீரும், அடி மட்டத்திலே சேர்ந்து விடுகிறது. அது கூட கூடாது என்ற காரணத்தால், அவைகளை உயர்த்தி வருகிறோம். கிட்டத்தட்ட 537 குழாய்களை, என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் இது வரையில் உயர்த்தியிருக்கிறோம். அந்த பைப்புகள் இனி தரைக்குக் கீழே இருக்காது. ஆகையினால் இந்தப் பிரச்சினை இனி தீர்ந்து விடும். மேல் சபையை பற்றி மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். மேல் சபையைக் கலைத்தால் உங்களுக்கு எதிராக வந்து போட்டியிடக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அது உங்களுக்கே ஆபத்து.

திரு. க. அன்பழகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, தரை மட்டத்திற்குக் கீழே தண்ணீர் கொடுப்பதற்காக வைத்திருக்கிற அந்த குழாயைச் சுற்றி அழுக்குத் தண்ணீர் இருக்கிற காரணத்தால் அந்த இடத்தில் கலந்து விடுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் மெயின் சீவரேஜில்

[திரு. க. அன்பழகன்] [1982 மார்ச் 1

உள்ள தண்ணீர் அங்கே உள்ள குடி தண்ணீர் பெரிய குழாயில் கலக்கிற காரணத்தால் தான், சென்னையிலே குடி தண்ணீரில் வருகிற கிருமிகளோ மற்றவைகளோ, ஒரு விகித்தாச்சாரம் அதிகமாகவே இருக்கின்றன என்று பொதுவாக ஒரு கருத்து இருக்கிறது. முழு அளவுக்குத் தூய்மையான தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொன்ன பிரச்சினை இது வரையில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட வில்லை. ஆனால் கொண்டு வரப்பட்டவர்களுடைய தன்மையை மனதிலே கொண்டு அது பற்றி பரிசீலனை செய்யச் சொல்லி, மெட்ரோ வாட்டர் அதிகாரிகளுக்குச் சொல்கிறேன். அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குடி தண்ணீரோடு சாக்கடை தண்ணீர் கலப்பதை எந்த இடத்திலே என்று குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார்கள். நேற்றைக்கு முன் தினம் என்னுடைய தொகுதியான காவிரி நகர், காந்தி தெருவிலே 6-வது வீட்டிலே இருக்கிற அபூபக்கர் என்ற தோழர் தன்னுடைய வீட்டிலே குடி தண்ணீர் எடுக்கிறபோது அதனோடு சாக்கடைத் தண்ணீர் கலந்து வந்ததாகச் சொல்லி என்னிடத்தில் எடுத்து வந்தார். அதை உடனடியாக அதிகாரிகளிடம் சொல்லி கவனிக்கச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பணி இரண்டு நாட்களாக நடந்து கொண்டு வருகிறது. இன்னும் கூட அந்த குடி தண்ணீரோடு சாக்கடைத் தண்ணீர் குழாயிலே கலந்து தான் வருகிறது.

என் தொகுதியில், கொத்தவால்சாவடி, தங்கசாலை, மண்ணடி போன்ற இடங்களில் சாக்கடைத் தண்ணீர் வெள்ளம் போல் ஓடுகிறது. இந்தக் குறைகளைக் கண்டு அதைப் போக்குவதற்கு வாட்டர் அன்ட் ஜுவேஜ் போர்டு எம். டி. அவர்களை என்னோடு வந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் அந்த அதிகாரியைக் கூப்பிட்டு எந்த சட்ட மன்ற உறுப்பினரோடும் பார்வையிட செல்லக் கூடாது என்று மிரட்டியிருக்கிறார்கள். என்று நான் அவர்கள் மீது அவர்கள் எதிரிலேயே பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன். நான் அவர்களிடம் கேட்டேன் சட்டம் அப்படிச் சொல்கிறது என்று சொன்னார்கள். எந்தச் சட்டத்தில் அப்படி சொல்லியிருக்கிறது என்று தெரியவில்லை. மக்களுக்குச் சேவை செய்வதில் குறுக்கிடும் எந்தச் சட்டத்தையும் கொளுத்திட வேண்டும் என்று தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன், அப்படிச் சொல்லவில்லை என்று அவர்கள் மறுக்கட்டும், அவர் அந்த அதிகாரியைக் கூப்பிட்டு மிரட்டினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களோடு அதிகாரிகள் செல்லக் கூடாது என்று சொன்னார்களா இல்லையா? இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என் சுபாவம் ஏந்த அதிகாரியையும் நான் மிரட்டுவதில்லை. என்னைப் பார்த்து அவர்கள் பயப்படுகிறார்கள். அது வேறு பிரச்சினை. என்னைப் பார்த்தால் ஒரு 'பியர் காம்ப்ளக்ஸ்' இருக்கிறது. அது இருக்க வேண்டும். நான் யாரையும் மிரட்டுவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் கடமை, அவரவர்கள் தொகுதி பூராவும் சுற்றிப் பார்த்து என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து அதைக் கவனிக்கச் சொல்வது நியாயம். திடீரென்று அப்துல் காதர் சொன்னார் என்று சொன்னால் என்னிடம் கூட சையத் காதர் சொன்னார் என்று சொல்லலாம். அப்படி ஏதாவது இருந்தால் அமைச்சர்களுக்கு போன் செய்யலாம். நாம் எல்லோரும் நண்பர்கள். எதிர் எதிரே உட்கார்ந்திருந்தாலும் கூட நாம் எல்லோரும் நண்பர்கள்தான். அவரும் பாக்ஸர், நானும் ஒரு பாக்ஸர், அதிகாரிகளிடம் புகார் கொடுத்தால் அவர்கள் கவனிப்பார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவது என்னவென்று சொன்னால் உறுப்பினர்கள் போகும் போது, தான் போகும்போது, இன்ஸ்பெக்ஷன் செல்லும்போது ஸ்லம் க்ளியரன்ஸ், அவுஸிங் போர்ட், வாட்டர் போர்ட், அதிகாரிகள், கமிஷனர், என்று அந்த பந்தா கூட வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். It is practically impossible. என்றுதான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர நான் யாரையும் மிரட்டவில்லை. மிரட்ட வேண்டிய தேவையும் இல்லை. அப்படி உறுப்பினர்கள் போகும்போது எல்லா அதிகாரிகளும்கூட வந்தாக வேண்டும் என்று வேண்டுகோள் வந்தால் அதை அமைச்சரவை பரிசீலனை செய்யும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

**திரு. க. அன்பழகன் :** அமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையை இந்த நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் போகிறபோது, எந்தப் பந்தாவோடு எல்லா அதிகாரிகளும் வர வேண்டும் என்ற முறையில் அமைச்சர்கள் செல்கிறார்களோ அந்த முறையில் சட்டமன்ற உறுப்பினர்களும் செல்ல வேண்டுமென்றோ செல்வது அவசியம் என்றோ இந்த மன்றத்தில் நண்பர் செல்வராசன் அவர்களோ மற்ற உறுப்பினர்களோ சொல்லவில்லை. ஆனால் ஒரு தொகுதியில் உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதற்கு தன் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு துறை அதிகாரியை அழைப்பாரேயானால் அந்த அதிகாரி அந்தச் சட்டமன்ற உறுப்பினரோடு போய்

பார்க்கிற அளவிற்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முக்கி
யத்துவம் உண்டு. அந்த முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்கள்
மறுத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமையை மறுக்கிறார்
கள் என்று பொருளாகும். எல்லா அதிகாரிகளும் புடை சூழ
அமைச்சர்கள் செல்வது போல் பவனி வரவேண்டும் என்று
சட்டமன்ற உறுப்பினர்களுக்காக யாரும் வாதாடவில்லை.
ஆனால் கமிஷனரை நீங்கள் வாருங்கள் என் தொகுதியைக்
கவனிக்க என்று அழைத்தால் அல்லது இன்னொரு அதிகாரியை
அழைத்தால், பஞ்சாயத்து யூனியன்களில் சட்டமன்ற உறுப்பினர்
கள் அழைத்தால் அந்த கமிஷனர் போவது என்ற வழக்கம்
இருப்பது போல் மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லாத காரணத்
தால் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால்
சட்டமன்ற உறுப்பினர் அழைத்தால் உரிய அதிகாரி குறிப்பிட்ட
பிரச்சினையைக் கவனிக்கப் போகலாம் என்று இருக்கிறமுறையை
அரசு அந்த முறையை ஒத்துக் கொள்ள மாட்டோம் என்று
தெரிவிக்குமானால் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

மாண்புமிகு திரு. எஸ். இராகாவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் போகும்
போது அதிகாரிகள் வருவது பந்தாவுக்காக அல்ல. 'ஆன் தி
ஸ்பாட் இன்ஸ்பெக்ஷன்'.... (குறுக்கீடு) உங்கள் மனம்
புண்படும் என்றால், நான் அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்
கொள்கிறேன். அமைச்சர்கள் போகும்போது, அதிகாரிகள்
வருவது, 'on the spot inspection, செய்யும் போது,
அங்கேயே அதற்கான உத்தரவைப் போட்டு விடுகிறோம். சட்ட
மன்ற உறுப்பினர்கள் விரும்பினால், தங்கள் தொகுதியில் இருக்
கின்ற நிலைமையைத் தொலைபேசி மூலம் பேசிச் சரிப்படுத்திக்
கொள்ளலாம். நான் என் தொகுதிக்கு இன்ஸ்பெக்ஷன் போகி
றேன், என்னுடன் வாருங்கள் என்று அழைத்தால் அந்த அதிகாரி
போவதற்கில்லை. இதை சீப் செகரட்டரி லெவலிலே செக்
பண்ணி விட்டேன். அப்படி ஆர்டர் இல்லை. பேராசிரியர்
அவர்கள் கூறுவதுபோல், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்தப்
பிரச்சினை இருக்கிறது, வந்து பாருங்கள் என்று சொன்னால்,
அப்போது அந்த அதிகாரி அங்கே வந்தாக வேண்டும். அது
நியாயமாக இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : தயவு செய்து இதைத் தெளிவு
படுத்த வேண்டும். அமைச்சருக்கே இதிலே ஒரு தவறான
கருத்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் 10,12, தெருக்களில்
சாக்கடை வாருவது இல்லை, குப்பையைக் கூட்டவில்லை என்று
நான் ஒரு அதிகாரியை அழைக்கிறேன். வேண்டுமானால்,
என்ன சொல்லலாம் ? எல்லா அதிகாரிகளையும் ஒவ்வொரு சட்ட





மன்ற உறுப்பினரும் அழைத்துச் சென்று விட்டால், மற்ற
வேலைகள் எல்லாம் கெட்டு விடும் என்று சொல்லலாம். ஒரு
குறிப்பிட்ட அதிகாரியை ஒரு சட்டமன்ற உறுப்பினர் அழைத்தால்
அந்த அதிகாரி போகலாம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
ஆனால், அமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருப்பது,
குடிநீர் அல்லது கழிவு நீர்ப் பணிகளை கவனிக்கும் அந்த அதிகாரி
களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அழைத்தால் போகவேண்டாம்
என்று தெரிவித்திருக்கிறார். அப்படித் தெரிவித்திருக்கின்ற
முறையில், அந்த அதிகாரிகளை அழைத்து, தங்கள் தொகுதியி
லுள்ள குறைகளைப் போக்குவதற்கான ஒரு வாய்ப்பு
இல்லாமல் செய்கிறது. எனவே, அந்த முறையை மாற்றி,
அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை மாற்றிக் கொள்
வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன
கருத்தை மாற்றிக் கொள்வதற்கு ஏதுமில்லை. மீண்டும் தெளிவு
படுத்துகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்கிறார்,
இந்தத் தெருவில் சாக்கடை தண்ணீர் அடைப்பு ஏற்பட்டிருக்
கின்றது. உடனே வந்து பாருங்கள் என்று டெலிபோன் பண்ணி
னால் அந்த அதிகாரி வந்து கவனிப்பார். ஆனால், அதற்கு மாறாக
நான் போகிறேன், என்னுடன் வாருங்கள் என்று ஸ்பெஷல்
ஆபீசரையோ கமிஷனரையோ அல்லது எம்.எம்.டபிள்யூ.எஸ்.எஸ்
மானேஜிங் டைரக்டரையோ இப்படி பெரிய அதிகாரிகளை டெலி
போனில் வரவேண்டும் என்று கூப்பிடும்போது, அவர்கள் வருவதற்
கில்லை. ஆனால், இந்த இடத்தில் இன்ன குறை இருக்கிறது,
வந்து பாருங்கள் என்று சொன்னால் அவர்கள் வந்து பார்ப்பார்
கள். டெலிபோனில் சொன்னால் போதும். அதிகாரிகள் இம்மீடி
யட்டாக வருவார்கள். அப்படிச் செய்யவில்லை என்றால்
உள்ளாட்சித்துறை அமைச்சரிடமோ, என்னிடமோ சொன்னால்,
அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற
உறுப்பினர்கள் அனைவருக்கும் எல்லா மரியாதையையும் கொடுக்க
இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. து. இராசரத்தினம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இதுவரையிலே ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக
சட்டமன்ற உறுப்பினர் மாதம் ஒருமுறை தங்கள் தொகுதியைச்
சுற்றிப் பார்பதற்காக 2 நாட்கள் ஜீப்பைக் கொடுத்து,
மாவட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளை வரவழைத்து,
இணைத்து ஆங்காங்கு சென்று குறைகளை அறிவதற்கு
வழிவகை இருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள்
பெரிய அதிகாரிகள் வரமாட்டார்கள், சின்ன அதிகாரிகள்
போகலாம் என்று சொன்னால், அதன் மூலம் எந்த அதிகாரி
களும் வரமாட்டோம் என்று சொல்வதற்கு அடிகோலுவதாக
இருக்கிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கும்படி
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியத்தின்மீது அமைச்சர் அவர்கள் பேசும்போது, பதில் சொல்வார்கள்.

திரு. அ. செல்வராசன் : சென்னையிலே இருக்கிற வீடுகளுக்கு வரியை ஒன்றுக்கு நாலாக உயர்த்தி இருக்கிறார்கள். சென்னையிலே வாழ்கிற மக்கள் இதனால் பெரிதும் அவதிப்படுகிறார்கள். இதற்கு ஒரு ஆலோசனை தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்கிற ஆலோசனையை ஏற்று நடந்தால் சுமார் 10 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரையில் வீடுகளுக்கு வரி கட்டுபவர்களிடம் இருந்து வரி வசூலிக்காமலேயே அந்தப் பணத்தைப் பெறலாம். மது வகையிலே ஒன்றாக இருப்பது பீர். இந்த பீர் தயாரிப்பதை சென்னை மாநகராட்சிக்கு அளித்து விற்பனை செய்வதற்கும் அதிகாரம் கொடுப்போமானால் 6, 7 கோடி ரூபாய் மாநகராட்சிக்கு வரும். மாநகராட்சியிலே இருக்கிறபோது இந்த திட்டத்தைப் போட்டுப் பார்த்தோம். அதை அதிகாரிகள் ஆலோசிக்கிறோம் என்று சொன்னார்கள். சென்னையிலே 10 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரை வரி கட்டும் வீட்டு சொந்தக்காரர்கள் இதில் நன்மை அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் பாதாள சாக்கடைகளுக்கு மூடிகள் இப்போது இரும்பால் செய்யப்பட்டிருக்கிறதாலே அவை அடிக்கடி திருடு போய்விடுகின்றன. இரவு நேரங்களிலே வருபவர்கள் தெரியாமல் அதில் விழுந்து இறக்கின்ற அபாயம் ஏற்படுகின்றது. உதாரணமாக பீச்சிலே பாண்டி பஜாரில் வசித்து வரும் சீனிவாசன் என்ற பையன் விளையாடிக் கொண்டிருக்கும்போது, காந்தி சிலைக்குப் பின்னாலே உள்ள கிணறு மூடப்படாமல் இருந்ததால் அதிலே விழுந்து இறந்திருக்கிறான். இப்படிப்பட்ட குறைகளை அரசாங்கம் நீக்க வேண்டுமென்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியிலே பணிபுரிகின்ற தொழிலாளிகள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பணம் உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் பல் மருத்துவத் துறை ஒன்று இருக்கிறது. அங்கு ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட்ஸ் கிடைப்பதில்லை. என்னுடைய தொகுதியான வட சென்னையிலே தொழிலாளர்கள் மிகுந்த அளவில் இருக்கிறார்கள். அவர்கள் மருத்துவம் பெற ஸ்டான்லி மருத்துவ மனைக்குத் தான் வருகிறார்கள். அங்கே இருக்கின்ற பல் மருத்துவத் துறையிலே





சிறந்த மருத்துவத்தை பெற அந்த துறையை ஸ்பெஷல் ட்ரீட்—மெண்ட்ஸ் அமைந்தத் துறையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தம்பி புருஷோத்தமன் தொகுதியான சைதாப்பேட்டைக்குச் சென்று இருந்தேன். அங்கே பல இடங்களில் குழாய்கள் பொருத்தாமலே இருக்கிறார்கள். சாக்கடை நீர், டிரெயினேஜ் சிஸ்டமே இல்லாமல் இருக்கிறது. கொசு தொல்லை அதிகமாக ஏற்பட்டு காலரா, மலேரியா நோய்கள் அதிகமாக பரவுகின்றன. இவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வைத்துள்ள சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம், சாலைகளும், பாலங்களும், சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் இந்தியா கிராமங்களிலே தான் இருக்கிறது என்று சொன்னார்கள், மகாத்மா காந்தி அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்முடைய இதய துடிப்பும், இருதய ஓட்டமும் கிராமங்களிலேதான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியநாடு சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகியும் எந்தவிதமான திட்டங்களும் கிராமங்களில் இருப்பவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத புரட்சிகரமான தன்னிறைவுத் திட்டம் என்ற தன்னிகரில்லாத திட்டத்தைச் செயல்படுத்தி கிராமங்களின் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே வாழ்கின்ற பல இலட்சக்கணக்கான மக்கள் இந்த திட்டத்தினால், நல்லப் பலன்களை பெற்றுள்ளார்கள். சென்னை போன்ற நகர்ப் பகுதியிலே இருக்கிறவர்கள் இரண்டு, மூன்று வருடங்களுக்குப் பிறகு அவர்களுடைய கிராமங்களுக்கு போய் பார்ப்பார்களானால் தாங்கள் வந்தது உண்மையிலேயே கிராமமா அல்லது நல்ல மேம்பாடு அடைந்திருக்கின்ற நகர்ப்பகுதியா என்று ஆச்சர்யப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12·40)

அதே போன்று தன்னிறைவுத் திட்டத்திலே பல சாலைகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் சில சாலைகள் போடுவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சாலைகள் செல்லுகின்ற அந்தப் பாதைகளிலே, வழிகளிலே ஒரு சிலருடைய அதிகாரத்திற்குட்பட்ட பட்டா நிலங்கள் இருப்பதால் அந்தச்

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1982 மார்ச் 13

சாலைகளைப் போடமுடியாத அபாயகரமான நிலைமை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து அதற்கு யாராவது மறுப்புச் சொன்னாலும், அந்தப் பட்டா நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு யாராவது தடை செய்தாலும் அந்தத் தடைகளையெல்லாம் தகர்த்து எறிவதற்கு அரசாங்கம் உடனடியாக முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போடப்படுகின்ற சாலைகள் எல்லாம் கல் சாலைகளாகவோ அல்லது தார்சாலைகளாகவோ போட்டுத்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றபோது ஒரு அபாயகரமான நிலைமையும் இருக்கிறது. காலம் காலமாக கிராமங்களிலே வாழ்ந்து வருகின்ற மக்களின் உரிமைகளை நசுக்கி அவர்களின் அத்தியாவசியத் தேவைகளை மறுத்து வந்த நிலைமைபோய் எங்கே புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர்களுக்கு அந்த வசதிகள் எல்லாம் கிடைத்துவிட்டால் தங்களை மதிக்கமாட்டார்களோ என்று நினைத்து தாங்களே குறைந்த கான்ட்ராக்டிற்கு அந்த வேலைகளை எடுத்துக் கொண்டு அந்த வேலைகளை முழுவதும் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். இதனால் தன்னிறைவுத் திட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கமே கூட நிறைவேற்றப்படாத அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. அதை மாற்றியமைப்பதற்கு அதுபோன்ற சாலைகளை சரியாக அமைப்பதற்கும் அப்படிச் செய்தவர்களைத் தண்டிப்பதற்கும் அவர்கள் அந்த வேலைகளைச் செய்யாமல் இருப்பதற்காகவும் அவர்களை பிளாக் லிஸ்டிலே சேர்த்து அந்த வேலைகள்மட்டுமல்ல, ஹைவேஸ் வேலைகளைக்கூட செய்யாத முறையிலே சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்திலே பல பள்ளிக் கட்டங்கள் கட்டப்படுகின்றன. அப்படிக் கட்டப்படுகின்ற நேரத்திலே சில கிராமங்களிலே மண்ணானது சரியாக இல்லாத காரணத்தினால் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைச் சீராக அமைத்துக் கொடுக்கவேண்டும். என்னுடைய தொகுதியிலே முள்ளி என்ற கிராமத்திலே அப்படி ஒரு பள்ளி கட்டப்பட்டிருக்கின்றது. சரியாக டெஸ்ட் பண்ணாமல் கட்டப்பட்ட காரணத்தினால் அங்கே மாணவர்கள் தங்கிப் படிக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அதை மாற்றியமைப்பதோடு மீண்டும் அப்படி நடக்காமல் இருக்கின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வசதிகளைப் பொறுத்தவரையில் தன்னிறைவுத் திட்டத்திலே நல்ல முறையிலே செய்யப்படுகின்றது. 1980-ஆம் ஆண்டிலே தேர்தல் வந்தபொழுது நாங்கள் சுற்றுப்பயணம்செய்து வாக்குகளைக் கேட்கின்ற நேரத்திலே அந்த மக்கள் எல்லாம் எங்களுடைய கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பீர்



1982 மார்ச் 13]

களா என்று கேட்டு வேண்டுகோள் வைத்தார்கள்.
மதுராந்தகம் பகுதியிலே 39 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி
கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளிலே 7 தான் இயங்கி
வந்தன. 32 இயங்கவில்லை. வசதி உள்ளவர்கள் இடத்தில்
இருக்கின்றவைதான் இயங்ககூடிய நிலைமை இருந்தது. இப்
போது அதை மாற்றி 39-ல் 38 இயங்குவதற்கு ஏற்பாடு செய்
திருக்கிறார்கள். ஆனால் அதிலே குறை இருக்கத்தான் செய்கிறது
அப்படி ஏற்பாடு செய்த நேரத்திலே டிஸ்ட்ரிபியூஷன் லைன்
சரியாக இல்லை. அந்தக் குடிநீர்த் தொட்டிகள் இருக்கின்ற
பகுதிகளில் ஒரு குழாயைப் போட்டு குடிநீர் கொடுக்கிறோம்
என்று சொல்கிறார்கள். தெருக்களுக்குக் குழாய்கள் மூலமாக
குடிநீர் வழங்கவேண்டுமென்பது அரசின் கொள்கை. அதை நிறை
வேற்றுகின்ற முறையிலே பஞ்சாயத்திலே ஒன்றியத்திலே பணம்
இல்லையென்றாலும் இதுபோன்ற இடங்களுக்கு நிதிவசதியை
அரசே கொடுத்து டிஸ்ட்ரிபியூஷன் லைனைச் சீராக்கவேண்டும்
என்றும் அல்லது மாற்று ஏற்பாடு செய்து சரிசெய்து கொடுக்க
வேண்டுமென்றும் இதன்மூலமாக தெருக்களிலே மக்களுக்கு குடி
நீர்கிடைக்கச் செய்ய ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற பாலங்கள் நல்ல முறை
யிலே போடப்பட்டிருந்தாலும் ஒரு சில பாலங்கள் கட்டுவதிலே
காலதாமதம் ஏற்படுவதாலும், தண்ணீர் இல்லாததால் சரியாகக்
கட்டப்படவில்லை என்ற நிலைமையினாலும் குறைகள் ஏற்பட்டு
இருக்கின்றன. ஒரு சிலஇடங்களில் பாலம் கட்டவேண்டிய நிலை
மைகள் இருந்தாலும்கூட, அதைப்பற்றி டி.டி.சி.கூட்டத்திலும்,
மற்ற இடங்களிலும் சொல்லியிருந்தாலும் உடனடியாகக் கட்டப்
படும் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
தன்னிறைவுத் திட்டத்திலும் அவைகள் எடுக்கப்படவில்லை.

உதாரணமாக பையம்பாடி கிராமத்திற்குச் செல்லும்
சாலையை மூன்று இலட்சம் ரூபாய் செலவில் போட்டிருக்கிறார்
கள். ஆனால் கல்வர்ட் கட்டாத காரணத்தினால் அந்தச் சாலை
வண்டிப் போக்குவரத்திற்கும், பஸ் போக்குவரத்திற்கும் இலாயக்
காக இல்லாமல் உள்ளது. அதனால் இன்றைக்கு மக்கள் நடந்து
செல்லும் கட்டத்தில்தான் இருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டத்திலும் இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம். அவர்
களும் சொன்னார்கள் உடனடியாகச் செய்கிறோம் என்று. ஆனால்
அவைகளெல்லாம் விடப்பட்டிருக்கின்றன. அவைகளைச் கண்டிப்
பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புகளுக்குப் பாதை வசதி
செய்து கொடுக்க வேண்டுமென்ற அருமையான திட்டத்தை
நிறைவேற்றியிருக்கிறோம். அதில் சட்டச் சிக்கல்கள் ஏற்பட்
டிருக்கின்றன. அந்தச் சிக்கல்களை உடனடியாகத் தீர்த்து

[1982 மார்ச் 13

அந்த மக்களுக்குப் பாதை வசதிகளை உடனடியாக அமைத்துக் கொடுக்க நம்முடைய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்..

மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைப் பொறுத்தவரையில் தற்பொழுது யூனியனுக்கு 30 இருக்கின்றன. தன்னிறைவுத் திட்டம் முடிந்த பிறகு 60 அல்லது 70 தொட்டிகள் அளவிற்கு ஒவ்வொரு யூனியனுக்கும் வந்து விடும். அப்படி வந்துவிட்டால் அவைகளைப் பராமரிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் இல்லை என்றால் அவைகள் விரைவில் செயலற்றுப் போகும் அபாயகர மான் நிலைமைகள் இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு யூனி யனுக்கும் அதற்கென்று தனியாக ஏ.ஈ., ஜே.ஈ., ஆகியவர்களைப் போட்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தால் வேலைகள் செய்யப் பட்டிருந்தாலும் அந்த வேலைகளைச் செய்வதற்குக் கிராம சேவக்குகள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களெல்லாம் அந்தப் பணத்தைச் சரியாகச் செலவழிக்கிறார்களா என்ற கணக்கைப் பார்க்க ஒரு குழுவை அமைத்து, அந்த வேலைகள் சீராக நடை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒருசில கிராமங்களில் கிராம சேவக்குகள் 10 ஆண்டுக் காலமாக ஒரேயிடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் போதுமான அளவிற்கு நலப் பணிகளைச் செய்யாமல் அந்தக் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தி விவசாயத்தில் இறங்கி பெரிய நிலச்சுவான்தாரர்களாக மாறியிருக்கிறார்களே தவிர கிராமத்தில் உள்ள மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதில்லை. ஆகவே, மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே ஊரில் இருக்கின்ற கிராம சேவக்குகளை உடனடியாக மாற்றி, அவர்களெல்லாம் மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது ஒரு விளக்கு எரிய வில்லை என்றாலும், குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது என்றாலும், ரேஷன் சரியாகக் கிடைக்கவில்லை என்றாலும், பூச்சி மருந்து கிடைக்கவில்லை என்றாலும் உடனடியாக அவர்கள் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று உத்தர விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

இன்றைக்கு உள்ள நிலைமைகளெல்லாம் உள்ளாட்சித் துறையை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் நிர்வகிக்கின்ற காலத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தாலும் 1974 ஆம் ஆண்டு இந்த உள்ளாட்சித் துறையானது ரெவின்யூவிலிருந்து பிரிக்கப்பட்டு டி.டி.ஓ. மேற்பார்வையில் அமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்தில் இருப்பதால்,



1982 மார்ச் 13] [திரு. எஸ். உகம்சந்த்]

வேறு வேலைகள் அவர்களுக்கு இருப்பதால் சரியான முறையில் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. எனவே, ஜாயின்ட் டைரக்டர் என்று போட்டு, டி.ஆர்.ஓ. விற்கு இணையாக உள்ள பதவியில், மாவட்ட அளவில் நியமித்தால் நிர்வாகம் நல்ல முறையில் செயல்படுவதற்கு வழி வகுக்கும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

இன்றைக்கிருக்கின்ற இந்த நிலைமைகளில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பல்வேறு மாவட்டத் தலை நகரங்களுக்குச் சென்று மக்கள் குறைகளை அறிந்து, அந்த மாவட்டத்திலே தன்னிறைவுத் திட்டம் எப்படிச் செயல்படுகின்றது என்பதை ஆராய்ந்து நல்லமுறையில் செய்து வருவதற்காக அவ்வப்பொழுது ஊக்கத்தை கொடுக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நகராட்சிகளிலும்கூட இந்தத் தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மதுராந்தகம் நகராட்சியைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மதுராந்தகம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்த நிலைமை மாறி இன்றைக்கு அந்த நகராட்சி மிகவும் பின் தங்கிய நிலைமையிலே இருக்கிறது. அந்த நகராட்சியில் எந்தத் தெருவும் நல்ல நிலைமையில் இல்லாமல் ட்ரெயினேஜ் திட்டம் வேலை செய்யாமல் இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் நகராட்சியாக மாற்றிய காரணத்தால் சம்பளத்தைக் கொடுப்பதற்கே நகராட்சியின் வருமானம் சென்று கொண்டிருக்கிறதே தவிர எந்தச் சீர் திருத்தத்தையும் அமல்படுத்த முடியவில்லை, நாங்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட இந்த நகராட்சியிலே இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அதை எடுத்துக்கொண்டு நல்ல பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.50]

அதேபோல் இன்றைக்கு கிராமத் திட்டத்தின் மூலம் பல சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகள் இன்றைக்குப் பல கிராமங்களின் வழியாகச் செல்லுகின்றன. அந்தத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாமல் பழுதடைந்து பல கிராமங்களில் போக்குவரத்து வசதியில்லாமல் அவதிப்படுகின்ற நிலை இருக்கிறது. அந்தத்

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1982 மார்ச் 13

திட்டம் கைவிடப்பட்டாலும் அதன்மூலமாக போடப்பட்ட அந்தச் சாலைகளை ஹைவேஸ் மூலமாகப் பராமரிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு மதுராந்தகம் நகராட்சியில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலை இருக்கிறது. அந்த நகராட்சி பஸ் நிலையம் மிகவும் பழுதடைந்து இருக்கிறது. பத்திரிகையிலே பரவலாக எழுதப்பட்டிருக்கிறது. அந்த பஸ் நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ள காலி மனையை பல்லவன் போக்குவரத்துக் கழகம் பஸ் டெப்போ அமைப்பதற்காகக் கேட்டிருக்கிறது. ஆனால் நகராட்சி சொத்து மற்றவர்களுக்குப் போகின்றது என்ற காரணத்தினால் அதைக் கொடுக்கக்கூடாது என்ற மனப்பான்மை இன்றைக்கு அங்கே இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு டெப்போ கட்ட அதைக் கொடுத்துவிட்டால் அதன் மூலமாக அந்த பஸ் நிலையம் சீரடையக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அப்படிச் செய்யப்பட்டால் அதற்குப் பக்கத்திலே உள்ள இடங்களிலே நல்ல திட்டங்களைக் கொண்டுவர அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதால் அவைகளில் அவர்கள் கடைகளைக் கட்டி ஓட்டல்களை வைக்கலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பக்கத்திலே எந்தவிதமான குடியிருப்புப் பகுதியும் இல்லாததால் மக்கள் அதைப் பயன்படுத்தமுடியாத நிலை இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பாகக்கூட அந்த பஸ் ஸ்டாண்டில் கடைகள் ஏலம் விடப்பட்டது. எதைத்தை யாரும் கேட்க வரவில்லை. யாரும் கேட்க முன்வரவில்லை. அதில் வியாபாரமோ வருமானமோ இல்லையென்ற நிலை இருக்கிறது. அந்த இடத்தில் கடனை வாங்கி விஸ்தரிக்க முயற்சியெடுத்தால் மேலும் அந்த நகராட்சி கடனில் மூழ்கிவிடக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

மாவட்டங்களிலே நடக்கின்ற வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் அந்த அந்தப் பகுதியிலுள்ள பஸ்கள் போகின்ற பாதைகள் மிகவும் பழுதடைந்து கிடக்கின்றன, தார் ரோடுகள்



1982 மார்ச் 13] [திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்]

எல்லாம் செம்மண் ரோடுகளாகக் காட்சி அளிக்கின்றன, உடனடியாகப் பழுது பார்க்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்கிறபோது 2, 3 மாதங்கள் கழித்து எங்களுக்குப் பதில் வரும். நெடுஞ்சாலை கிராமப்புறத் துறையிடமிருந்து வரும். நீங்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை பழுதுபார்த்தாகிவிட்டது என்று பதில் வரும் நாங்கள் மறுபடியும் அந்தச் சாலையிலே சென்று பார்த்தால் எப்படி இருந்ததோ அப்படியேதான் அந்தச் சாலை இருக்குமே தவிர எந்தவித பழுதுபார்ப்பும் நடைபெற்றிருக்காது. காரணம் தார் ரோட்டிலே மண்ணை அள்ளிப் போடுவதினால் காற்றிலேயும் மழையிலேயும் ஒரே நாளில் அந்த மண் அடித்துச் செல்லப்பட்டுவிடும் அந்தக் காரணத்தினாலே அந்த தார் ரோடுகள் மிகவும் சீர்கேடு அடைந்திருக்கின்றன. அதனால் பஸ் போக்குவரத்து அதிகமாக பாதிக்கப்பட்டு இன்றைக்கு பஸ் போக்குவரத்தே கூட நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆலங்குளத்திலிருந்து அழகிய பாண்டியபுரம் சாலைமானூர் ரஸ்தாவிலிருந்து தாழையூத்து வரை உள்ள சாலை, இப்படிப்பட்ட சாலைகள் ரிப்பேர் பார்க்கப்படாத காரணத்தினால் பஸ் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு கிராமத்திற்கு பஸ்ஸே போகாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் போய்க்கொண்டிருந்த பஸ் நிறுத்தப்படுமானால், அதனுடைய பலனை அவர்கள் அனுபவித்து பிறகு அந்தப் பலன் இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. விஸ்வாமித்திரன் இராமனை காட்டிற்கு அழைத்துப் போகிறோம் என்று சொன்ன உடன் தசரதன்

'கண்ணிலான் பெற்றிழந்தா லென உழந்தான்
கடுந்துயரங் கால வேலான்.' என்று

இருந்ததைப்போல இரண்டு கண்ணில்லாத பிறவிக் குருடருக்குக் கண்களைக் கொடுத்து உலகத்தினுடைய, இயற்கையினுடைய அற்புத சிருஷ்டிகளையெல்லாம் பார்க்க வைத்துவிட்டு உலகிலுள்ள அழகான சிற்பங்களையெல்லாம் பார்க்கவிட்டுவிட்டு உலகிலே எவ்வளவு அழகான பொருள்கள் எல்லாம் இருக்கின்றன என்று தெரிய வந்தபிறகு மறுபடியும் கண்களைப் பறித்துக்கொண்டால் அவன் மனம் எவ்வளவு வேதனைப் படுமோ அந்த அளவுக்கு இன்றைக்குக் கிராமப்புற மக்கள் பஸ் போக்குவரத்துப் பாதிப்பினாலே அந்தப் பஸ்கள் நிறுத்தப்பட்டிருப்பதாலே அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பாதிப்புகளை உடனடியாக சரிசெய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தேசிய கிராமப்புற வேலைத் திட்டத்திலே நடைபெறுகின்ற வேலைகள் கிராம சேவக்குகளின் மூலமாகச் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். பெரும்பாலும் அந்த வேலைகள் ஆங்காங்கு உள்ள கிராமசேவக்குகளால் கான்ட்ராக்ட்

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1982 மார்ச் 13

மூலம் விடப்படுகின்றன.வேண்டியவர்கள்வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு கிராமப்புறங்களிலே இருக்கிறது. ஆகவே, இந்த முறை மாற்றப்பட்டு, இந்தத் தன்னிறைவுத் திட்டம், தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை சீலிட்ட டெண்டர் கோரி விடுவதன் மூலம் கான்ட்ராக்ட் விட்டால் அதிலே எந்த விதமானக் குறைபாடும் வராது என்று சொல்லிக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம், தேசீய வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவைகள் நிறைவேற்றப்படுவதிலே பல குறைபாடுகள் இருப்பதைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பல்வேறு பணிகள் இருப்பதால், அந்தப் பணிகளின் காரணமாக அவர்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டம் சரியாக செயல்படுத்தப்படுகிறதா என்று சென்று பார்ப்பதற்கு முடியாத நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் தன்னிறைவுத் திட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கவேண்டும் என்று அவர் நினைத்து இருந்தாலும் கூட அவர்களுக்கு இருக்கும் பணியின் காரணமாக அதைச் செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அவர் வந்து பார்க்க எண்ணுகிற ஏதாவது ஒரு பகுதியில் கலவரம் அல்லது துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு விடுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருப்பதால் அந்த இடத்திற்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குள்ள இந்தப் பளுவைக் குறைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இணை இயக்குநர் ஒருவரைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 3 மாவட்டங்களில் மாவட்ட வளர்ச்சி அலுவலர் பதவிகள்—இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்தப் பணிக்கு எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும் வராத காரணத்தால் அந்த இடம் காலியாகவே இருக்கிறது. ஆகவே, அதிக வேலைப் பளுவால் சிரமப்படுகின்ற ஆட்சித் தலைவர்களின் பணியைக் குறைக்கும் வகையில், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வளர்ச்சித் திட்டம் என்று ஏழைகளுக்கு வாழ்வு அளிப்பதற்காக பல திட்டங்கள் தீட்டி, அதை மேற்பார்வை செய்ய, ஆய்வு செய்ய விவசாயத் துறை, கால்நடைத் துறை, பொறியியல் துறை, கூட்டுறவுத் துறை போன்று பல வளர்ச்சித் துறைகளை இணைத்து நல்லமுறையில் நிறைவேற்ற, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த இணை இயக்குநர் ஒருவரை மாவட்ட வளர்ச்சி அலுவலராக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சியைப் பொறுத்தவரையில், அதனுடைய நிதி நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. எந்த பேரூராட்சியை எடுத்துக்கொண்டாலும் அதற்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி அங்கேயிருக்கும் சிப்பந்திகள்சம்பளத்திற்கே சென்று விடுவதால், கிராப்புறங்களில் அபிவிருத்திப் பணி



1982 மார்ச் 13] [திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்]

கள், அல்லது வேறு எந்தவிதமான சிறப்புப் பணிகளோ முன்னேற்றங்களோ செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆனால் கேரள மாநிலத்தோடு இருந்து, இப்போது தமிழ் நாட்டோடு இணைக்கப்பட்ட பேரூராட்சிகளில் ஒரு பழக்கம் இருக்கிறது, சுகாதாரக் பணியாளர்களுக்கு அத்தனை பேருக்கும் அரசாங்கம் உதவி செய்கிறது, அரசாங்கமே பணம் கொடுக்கிறது. ஆனால் ஏற்கெனவே தமிழ் நாட்டோடு இருந்த பஞ்சாயத்துக்களிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால்—அதாவது பஞ்சாயத்து நிதியில் இருந்து எல்லா அலுவலர்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்கு பதிலாக, துப்புரவுப் பணியாளர்களுக்கு கொடுக்கின்ற பணத்தை அரசே கொடுத்தால் ஓரளவுக்கு அந்த பேரூராட்சி மன்றங்களிலே வேலைகள் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், நான் சொல்லிக் கொள்வது, மிகப் பெரிய திட்டங்கள் 40 லட்ச ரூபாய், 50 லட்ச ரூபாய் திட்டங்கள் வேண்டுமானால் குடிநீர் வடிகால் வாரியத்திடம் கொடுக்கலாம். கிராமப்புறங்களில் இருக்கின்ற, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சிறுசிறு குடிநீர்த் திட்டங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே செய்யவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு சிறு பகுதியிலே ஏதாவது பழுது ஏற்பட்டால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஆணையாளர்கள் அல்லது தலைவர்கள் அதைச் சரிப்படுத்திவிடமுடியும். ஆனால் 50 மைலுக்கு அப்பால் உள்ள குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர்களுக்கு இதைச் சந்தித்துத் தெரிவிக்க வேண்டும் என்றால் அது சிரமமான காரியம். அதுவும் எந்தக் குடிநீர்த் திட்டமும் சரிவர செயல்படுத்தப்படவில்லை. எல்லாம் அரை குறையாகவே இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கங்கை கொண்டான்—வடகரை-கோவில்பட்டி குடிநீர் திட்டத்திற்காக குழாய்கள் போடப்பட்டுள்ளன. ஆனால் குடிநீர் கொடுக்கப் படவில்லை. அதுபோன்று பல இடங்களில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. பைப்புகள் போடவில்லை. இந்தக் குறைகள் போக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீன கழிப்பிடங்கள் பொறுத்த வரையில் என்னுடை தொகுதியில், ஆலங்குளம் தொகுதியில் நவீன கழிப்பிடங்கள் இல்லை. அது மட்டுமல்ல, பொதுக் கழிப்பிடங்களும் இல்லை. இதனால் தாய்க்குலம் படும் கஷ்டம் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கே நவீன கழிப்பிடங்கள் அதிகமாகக் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1982 மார்ச் 13

அதேபோன்று மின்சார விளக்குகளைப் பற்றி பலர் சொன் னார்கள். பல கிராமங்களில் மின்சார விளக்குகள் எரிவது இல்லை. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மாலையில் தொடர்ந்து நடை பெறும்.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்பு மிகு துணைத் தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வாசகங் களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

(பிற்பகல் 1.00)

## 4. அரைமணிநேர விவாதம்.

### கன்னி ாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கலவரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அடுத்து கன்னி யாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கலவரம் குறித்து அரை மணி நேர விவாதம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. என்.வி. என். சோமு அவர்கள்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இராஜாக்க மங்கலம், ஈத்தாமொழி, தர்மபுரம், பிள்ளைதோப்பு, கல்லுக் கட்டி போன்ற பகுதிகளில் பெருத்த கலவரம் ஏற்பட்டு 17 பேர் கள் காயமடைந்துள்ளனர், ஒருவர் கவலைக்கிடமாக இருக்கிறார். தென்னந்தோப்பு ஒன்று அழிக்கப்பட்டுள்ளது. 10,000 ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமடைந்துள்ளன. 25 வீடு கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஆதனால். அந்தப் பகுதி மக்க ளிடையே பெருத்த கலவரமும் பீதியும் மூண்டுள்ளது.

இன்றைக்கு இத்தகைய பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது மட்டு மல்ல; இது அந்த மாவட்டம் முழுவதும் பரவக்கூடிய ஒரு அச்ச நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்காமல் காவல்துறை அங்கே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதிகாரிகள் அங்கே கையைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்களா? இந்தப் பிரச்சினையை முளையிலே

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 13] [திரு. என். வி. என். சோமு]

கிள்ளி எறிந்திருந்தால் இன்று கோடாரி போட்டு வெட்டும் நிலைமை ஏற்பட்டிருக்குமா? எங்களுடைய கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர் கள் கூட செய்தியாளர்களிடம் பேசும்போது இதே கருத்தைத்தான் கூறியிருக்கிறார்கள். அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''யாரும் அவசரப்பட்டு கருத்து கூறி சூழ்நிலையைக் கெடுத்து விடக்கூடாது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமை உருவாவதற் கான புகைச்சல் இரண்டு, மூன்று மாதங்களாக இருந்து வந்தும் போதிய நடவடிக்கை எடுத்து, சுமுக சூழ்நிலையை உருவாக்க அரசு தவறிவிட்டது. இனியாவது தாமதம் செய்யாது அமைதி நிலவ அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற் கிடையே மத வெறி, ஜாதி வெறியைத் தூண்டிவிடாமல் பொறுப் புள்ளவர்கள் நடந்துகொள்ள வேண்டும்'' என்ற கருத்தை தெரிவித்துள்ளார்கள் கலைஞர் அவர்கள்.

வெள்ளம் வரும் முன்னே அணைபோட வேண்டியது அரசின் கடமை. ஆனால் ஒரு முறை வெள்ளம் போன்ற பிரச்சனைகள் வந்தும் அரசு இதைப் போன்ற பிரச்சனைகளில் உடனடியாகச் செயல்பட்டு, புதிய பிரச்சனைகள் உருவாகாமல் நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் வந்து இருக்காது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றியுள்ளதாக செய்தி வந்திருக்கிறது. புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுடன் உடனுக்குடன் தொடர்பு கொண்டு அமைதியை ஏற் படுத்த முயற்சி செய்ய வேண்டும். முதலமைச்சரோ அல்லது அமைச்சரவையைச் சேர்ந்த யாராவது ஒருவரோ சென்று அங்கே அமைதியை நிலைநிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாவட்ட மக்கள் மிகவும் பீதியடைந்து, பதட்டமடைந் திருக்கிறார்கள். அதனுடைய நிலைமை மற்ற மற்ற மாவட்டங் களுக்கும் நீடிக்குமோ என்ற அச்சம் இருக்கிறது. வீடுகளிலே மக்கள் தங்குவதற்குப் பயப்படுகிறார்கள். தொழில் செய்ய வெளியே வர பயப்படுகிறார்கள். வீதிகளிலே மக்கள் நடமாட முடியாமல், ஊரடங்கு சட்டம் செயல்படுவது போல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு முக்கியமான நேரத்தில் இந்த அவையிலே இருந்து கருத்து சொல்வதற்கு முதலமைச்சா இங்கே இல்லை. 140 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட உருக்காலைத் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் இந்தப் பிரச்சனையில் வராது ; இந்தப் பிரச்சனை பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவரவர்களே,

*　　*　　*　　*

இதைப் போன்ற சம்பவங்கள் இனியும் நடக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது குறிப்பிட்ட வாசகங்களை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி இன வேற்றுமைகளை மறந்து தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாக தமிழக மக்கள் ஒற்றுமையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அமைதிக்கும் அழகுக்கும் பெயர்பெற்ற தென் குமரி மாவட்டம் அமளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை நம்முடைய தமிழகத்தின் கவனத்தினை ஈர்த்து இருக்கின்றது. இந்த மாதம் முதல் தேதி அன்று மண்டைக்காடு பகுதியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கின்றது. அதனால் 6 பேர் இறந்தது பற்றி இந்த மாமன்றம் விரிவாக விவாதம்செய்தது. கழிந்தபுதன்கிழமை அன்று ஈத்தாமொழியிலே வன்முறைச் சம்பவங்கள் நடந்து அதன் பிறகு சமாதானம் கூட செய்யப்பட்டது. ஆனால் நேற்று நண்பகலிலே பெரியதொரு கும்பல் ராஜாக்கமங்கலம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நாட்டு வெடி குண்டு, பாஸ்பரஸ் போன்ற பயங்கரமான எண்ணற்ற ஆயுதங்களைக் கொண்டுவந்து தாக்கிவெடிகுண்டுகளை வீசி ஈத்தம்மொழியிலே வீடுகளையும், கடைகளையும் தீ வைத்து கொளுத்தி இருக்கிறார்கள். அதனால் ஏறத்தாழ 16 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதம் அடைந்திருக்கின்றன. தீக்கு இரையாக்கப்பட்டு இருக்கின்றன. கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றன. அரிசி மற்றும் தானியங்கள் எல்லாம் சூறையாடப்பட்டிருக்கின்றன. கிராமமே தீ வைக்கப்பட்டு கிராமத்திலே உள்ள மக்கள் வீட்டைக் காலி செய்து விட்டுப் போகின்ற சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. தர்மாபுரத்திலே ஏறத்தாழ இரண்டு சமுதாயத்தினுடைய மக்களின் வீடுகள் எல்லாம் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தென்னந்தோப்பு முழுமையாக சேதப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் அங்கே ஏற்பட்ட அமளியின் காரணத்தால் 17 பேர்கள் காயம் அடைந்து நாகர்கோவில் அரசினர் பொது மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்தி வந்திருக்கின்றது. சற்று முன்பு கூட இன்னொரு செய்தியும் வந்திருக்கின்றது, அந்த கலவரத்தின் காரணமாக வழக்கறிஞர் சந்திரசேகரன் அவர்கள் வெட்டப்பட்டு படுகாயம் அடைந்திருக்கிறார் என்று. மாசி மகம் திருவிழாவின் போது கடலிலே குளிக்கப் போவது பற்றிக் கூட அங்கே அச்சம் இருக்கின்றது. அந்த மக்கள் அஞ்சிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கழிந்த 3 ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இது தொடர்பான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என்று கூட அரசின் தரப்பிலே மாண்புமிகு முன்னவர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இப்போது அங்கே ஒருபதட்டமான சூழ்நிலை உருவாகி தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு ஏறத்தாழ 6 பேர்களுக்கு மேல் உயிர் துறந்திருக்கிறார்கள். பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். பத்து நாட்களாக அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது ? என்னாலே தெளிவாகச் சொல்ல முடியும். அதிகாரிகளின் திறமையற்ற போக்கும் அரசாங்கத்தினுடைய செயலற்ற தன்மையும் தான் இன்றைக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் சேதம் அடைகின்ற அளவுக்கு நிலைமையினை ஏற்படுத்தி இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றி விட்டால் மட்டும் நிலைமை சீராகிவிடும் என்று சொல்ல முடியாது. தமிழகத்தின் புலனாய்வுத் துறை என்ன செய்து கொண்டிருக்கின்றது ? அவர்கள் அரசுக்கு அறிக்கை கொடுத்தார்களா இல்லையா ? அரசு போதுமான நடவடிக்கையினை எடுக்கவில்லையா ? காவல் துறை சரியான நடவடிக்கையினை எடுத்து இருந்தால் இந்தமாதிரிச் சம்பவம் நடந்திருக்காது.

சில மாதங்களுக்கு முன்பு கிழக்கு இராமநாதபுரத்திலே இந்த மாதிரி இரு சாராருக்கிடையே மோதல் நடந்து கலவரம் ஏற்பட்டபோது முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்று பல்வேறு கட்சியினரின் துணை கொண்டு அங்கே அமைதி நிலவுவதற்கு ஏற்பாடு செய்தார். நான் இந்த அவையின் மூலமாக நமது முன்னவர் அவர்களிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக விரைந்து சென்று, கன்னியாகுமரியிலே கலவரப் பகுதியில் அனைத்துக் கட்சியினரையும் அழைத்துப் பேசி குறிப்பாக அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேசி அங்கே அமைதியான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்குரிய தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி கன்னியாகுமரியோடு முடிந்துவிட வேண்டும், மற்ற பகுதிகளுக்கும் பரவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே எப்போதும்போல இப்போதும் வழக்கமான பதிலைச்சொல்லாமல் இந்த நிலைமை தொடராமல் இருப்பதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே இப்போது நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்கள் இப்போது சாதாரணமாக இருந்து வருகின்ற நிலைமையினைக் கெடுப்பதாக இருக்கின்றது. இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் ஆகிய அனைவரும் ஒற்றுமையாக இருப்

யதை சீர் குலைக்கக்கூடிய ஜனநாயக விரோதமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. இவ்வளவு காலமாக அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை. நீண்ட காலமாக இந்து, கிறிஸ்தவர்கள் ஆகியவர்கள் அனைவரும் அமைதியாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். மண்டைக்காடு பகுதியினைப் பொறுத்த வரையிலே இந்துக்கள் அந்தப் பகுதிகளுக்கு விழாவிற்காக செல்கின்ற நேரத்திலே மீனவர்கள் மீன்களை வழங்கி இருக்கிறார்கள். மாதா கோயில் திருவிழா நடக்கின்றபோது அங்கே இந்துக்களும் வந்து உண்டியலிலே காணிக்கை செலுத்தி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சுமுகமான சூழ்நிலை இருந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே மேலும் மதக் கலவரங்கள் ஏற்படக் கூடிய அளவுக்கு ஜனநாயக உணர்வுகள் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு இந்த நிலைமை வளர்ந்துவிடக் கூடாது. இந்தக் கலவரம் பற்றி மற்ற மக்களுக்கும் பிரசாரம் செய்வது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது.

இன்றைக்கு குறிப்பாக இந்துக் கோயில்களிலே ஒலி பெருக்கிகளை வைத்து நெடுந்தூரம் திருப்பிக் கொண்டு போய், மற்ற கோயிலுக்கு எதிராக அந்தச் சத்தம் கேட்கும்படி செய்ததினால் தான் இப்படி ஏற்பட்டதாக தெரிகிறது. ஆகவே அதைத் தடுப்பதற்கான வழி முறைகளைக் காண்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். மற்றொன்று சாலைகளில் அரசுக்குச் சொந்தமான இடங்களில் திடீர் திடீர் என்று சிலைகளை வைத்து பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் ஒரு நெருக்கடியை உண்டாக்கி விடுகிறார்கள். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

(பிற்பகல் 1.10)

அதேபோல இந்த மாவட்டத்தில் ஆயுத பயிற்சிகளும், அணி வகுப்புகளும் நடைபெற்றதாக தெரிகிறது. எங்களுக்குக் கிடைத்த தகவல்படி இரண்டு தரப்பிலும் இத்தகைய அணி வகுப்பைச் செய்திருக்கிறார்கள். என்றாலும் இரண்டையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஆனால் எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி ஆர். எஸ். எஸ். இயக்கம் தான் கைத்தடிகளும், கம்புகளும் தாங்கி அந்த அணி வகுப்பைச் செய்தது என்று வதந்தி. இதை எல்லாம் அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. அதனுடைய விளைவாகத்தான் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருப்பதாக சொன்னால் அது மிகையாகாது. உதாரணமாக 6 இந்துப் பெண்மணிகள் கடலிலே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற வதந்தியும், ஆர். எஸ். எஸ். இயக்கம் தான் திட்டவட்டமாக அதை செய்தது என்பதன் விளைவாகத்தான் 1 ஆம் தேதி அங்கே துப்பாக்கிச் சூடு ஏற்பட்டிருக்கிறது. அதைகூட அரசாங்கம் முயன்றிருந்தால் எடுத்திருக்கலாம். இன்றைக்கு கலெக்டர்கள்





கூடியிருக்கிற ஒருமகாநாட்டிலே, உயிரிழந்த 6 பேர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டபோது கூட, அந்த யோசனையை ஆர். எஸ். எஸ்.காரர்கள் மறுத்து, அதை செலுத்த விடாமல் செய்திருக்கிறார்கள். ஆகவேதான் கூறுகிறேன் இது பற்றி அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று.

அதேபோல இந்து சமய மாநாடு என்ற ஒன்றில் மதுரையிலே இருக்கிற இந்து சமய ஆதினகர்த்தா அவர்களின் தலைவர் சென்று, ஆர். எஸ். எஸ்.-ஐ சுற்றிமக்கள் திரள வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதே நேரத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு இந்துக்கள் ஒத்துப்போகக் கூடாது என்றும், இந்துக்கள் இல்லாத எந்த அரசியல் கட்சியையும் ஒதுக்க வேண்டும் என்றும் ஒரு ஆதினகர்த்தா பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளினால் தான் அங்கே பதட்டம் ஏற்பட்டிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையான இந்துக்களானாலும் சரி, சிறுபான்மையான கிறித்துவ மதமும் முஸ்லீம் மதமும் சரி அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான். ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்களினால் எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும் சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

நான் பட்ஜெட் உரையிலேயே பேசும்போது குறிப்பிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே இருக்கக் கூடிய கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழுவைக் கூட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மக்கள் அமைதியாக இருக்கும்படியாக ஒரு வேண்டுகோளை இடவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அவர்கள் சென்று, அங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களை, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அந்த மாவட்டத்தில் அமைதியினை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டேன். இன்றைக்காவது அந்த நிலைமைகள் மேலும் முற்றிவிடாமல் இருக்க வேண்டும் என்ற நிலைமை காரணத்தால், அந்த முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் பல நோட்டீஸ்கள் ஒட்டப்படுவதாக தெரிகிறது. அது மட்டும் அல்லாமல் மீனவர்கள் சைக்கிளிலே ஏற்றிக் கொண்டு வந்த மீன்களை தட்டிப் பிரித்து கீழே கொட்டி யாரோ நாசம் செய்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதனால்தான் நேற்றைய தினம் மிக மோசமான சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறுகிறார்கள். 6 பேர்கள் இறந்திருக்கக்கூடிய நேரத்தில் டெபுடி கலெக்டர் அளவில் மட்டும் விசாரணையை வைத்தால் போதாது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது திருப்தியை அளிக்காது. ஒரு நீதிபதியை நியமித்து நீதிமன்ற விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அந்த மக்கள் மத்தியிலே ஒரு அமைதி ஏற்படும். நான் மீண்டும் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பவர்கள்

பல ஆண்டுக்காலமாக, இந்துக்களாக இருந்தாலும், கிறித்துவர்களாக இருந்தாலும் தங்களுக்குள் சம்பந்தம் பேசக் கூடிய அளவுக்கு ஒரு நல்ல பாரம்பரியம் அந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்துவந்தபோது, மதத்தை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா என்பதற்கு ஆதாரபூர்வமாக ஏதாவது அரசு தரப்பில் இருந்தால் சொல்லுங்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அங்கே பலவிதமான போஸ்டர்கள் ஆதாரபூர்வமற்ற, பல போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன என்றும், அப்படி அவைகள் ஒட்டப்பட்டிருக்கிற காரணத்தினால்தான் மக்கள் மத்தியிலே கலவரம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. அதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே மாவட்டக் கலெக்டர் அவர்களை மாற்றியிருக்கிறார்கள். புதிய கலெக்டரைப் போட்டிருக்கிறார்கள்.

இந்த மன்றத்தின் மூலமாக ஒரு வேண்டுகோளை வெளியிட்டு அதை அங்கே செல்லும்போது, மக்கள் மத்தியிலே பரப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். எந்த அரசியல் கட்சிகளிலும் ஜாதி வெறியோ, மத வெறியோ புகுவதற்கு இடமளிக்கக் கூடாது. அப்படி இல்லை என்றால் யாராக இருந்தாலும் அரசியல் கட்சிகளினுடைய அடிப்படையே அங்கே தகர்ந்து விடும். ஆகவே எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் மத வெறியை அனுமதிக்கக் கூடாது. ஆகவே ஒவ்வொரு அரசியல் கட்சியும் தன்னுடைய கட்சியில் மதவெறியோ, ஜாதி வெறியோ புகாமல் பாதுகாத்துக் கொண்டாலே, நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்த முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அல்ல, இதை அனுமதித்தால் இன்றைக்கு மாகாணம் முழுவதும் இந்த நிலைமை பரவி பாதிக்கக்கூடிய தன்மை ஏற்படும். ஆகவே இதன் அவசியத்தை உணர்ந்து, இதிலே அரசாங்கம் தலையிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே செல்லும்போது, அங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து அரசியல் கட்சிகளோடு சேர்ந்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதையும் நான் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த மண்டைக்காட்டில் நடந்த சம்பவங்கள் பற்றி இந்த அவையில் நாம் விவாதித்திருக்கிறோம். அதற்குப் பின்னாலும்கூட மீண்டும் பல அமளிகள் ஏற்பட்டிருப்பதோடு கூட ஒரு பதட்ட நிலையும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. அங்கே இந்துக்கள் கிருத்தவர்கள் சண்டை என்ற பெயரால் இரண்டு பக்கத்திலும் உள்ள மதவெறியர்கள் தூண்டுதல் காரணமாக, வதந்திகளைக் கிளப்பிவிடுவதன் காரணமாக சாதாரண மக்கள் வாழ்க்கையில்





மிகப் பெரியதொரு நெருக்கடி, ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சில குடும்பங்களில் கணவன் இந்துவாகவும் மனைவி கிருத்தவராகவும், கணவன் கிருத்தவராகவும் மனைவி இந்துவாகவும் இப்படி ஒரு நிலை இருக்கிற நேரத்தில் இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் இதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அன்றே சொன்னேன். திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னது போல் இதற்கு ஒரு நீதி விசாரணையை ஆரம்பத்திலேயே போட்டிருந்தால், இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட காரணம் என்ன, அதைத் தடுப்பதற்கு அரசு காலா காலத்தில் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தது என்பதையெல்லாம் அறிந்திருக்க முடியும்.

இந்த பகவதி கோவிலுக்கும் மாதா கோவிலுக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகம் இல்லை, ஒரு கால்வாய்தான் நடுவில் போகிறது. மாதா கோவிலில் உள்ளவர்கள் அங்கே ஒரு மைக் வைத்து இந்துக் கோவிலில் இருக்கிறவர்களுக்குத் தொந்தரவும் இந்து கோவிலில் இருப்பவர்கள் அங்கே ஒரு மைக் வைத்து கிறித்தவர்களுக்கு தொந்தரவும் என்று ஏற்படும் நிலையில் இப்படி அதற்கு அனுமதி அளிக்கக்கூடிய ஏற்பாடு ஏன் வருகிறது? பொது இடங்களில் மத சம்பந்தமான பிரசாரங்கள் செய்யும்போது பொது மக்களுக்கு தொந்தரவு ஏற்படும் வகையில் ஊரையே தூக்கும்படி மைக் வைக்கிறார்கள். இன்றும் பலயிடங்களிலும், நகரங்களில் கூட இப்படி நடக்கிறது.

பொது இடங்களில், நகரசபைக்குச் சொந்தமான இடங்களில், அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவிதமான அனுமதியும் இன்றி யாரையும் கேட்காமல் கோவில்கள் கட்டுகிறார்கள், சிலைகள் வைக்கிறார்கள். அடுத்தவர்களைப் புண்படுத்தக்கூடிய அளவிற்குச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்குக் காரணம் என்ன? . அரசு அதிகாரிகள் சரியாக கடமையாற்றவேண்டும். அரசு அதிகாரிகள் மத உணர்வோடு செயல்படுவதால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. பலயிடங்களில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கோவில்களின் எல்லைகளுக்குள்ளாகவே, காம்பவுண்டிற்குள்ளே பயிற்சி அளிக்கக்கூடிய, கராத்தே போன்ற பயிற்சிகள் அளிக்கக்கூடிய நடவடிக்கை நடந்துவருகிறது. இதை அனுமதிக்கக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாக கேள்விப்படுகிறேன். எதிர்தாக்குதல்களுக்கு வேண்டிய நடவடிக்கையாக அதற்கு ஆயத்தமாக நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இதில் அரசியல் கட்சிகளுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் மத வெறி ஏற்படும் நடவடிக்கைகளில், அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் இருக்க அந்தந்தக் கட்சி கட்டுப்படுத்தி முறைப்படுத்த வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1982 மார்ச் 15

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட கட்சி பிரதிநிதிகளை எல்லாம் அழைத்துப் பேச வேண்டும். அது இந்த கன்னியாகுமரி மாவட்டத்தோடு மட்டும் நின்றுவிடும் என்று சொல்லமுடியாது. மற்ற மாவட்டங்களுக்கும் பரவிவிடும் சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச்சென்று எப்படிச்செய்தாரோ அதேமாதிரி சகல கட்சிகளை சேர்ந்தவர்களை அழைத்து, இதுசம்பந்தமாக ஒரு சமாதானமான சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். அரசு அதிகாரிகளிடத்தில் மத உணர்வோடு எந்தத் தரப்பிலிருந்து செயல்பட்டாலும், அப்படிப்பட்ட அதிகாரிகளை எச்சரிக்கும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிற செய்திகள் உள்ளத்தை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி மிகுந்த வருத்தத்திற்கு உள்ளாக் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. இன்று காலை எனக்கு வந்த செய்திகளின்படி சில வீடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லும் அளவிற்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன் என்ற வகையில் அம்மாவட்டத்தின் பெரும் பகுதியையும் நான் அறிவேன், ஒருவருக்கொருவர் உற்றார் உறவினராக இருந்தவர்கள் மட்டுமல்ல, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு மதங்களில் திருமணம் செய்துகொண்டு வெவ்வேறு மத விழாக்கள் நடைபெறுகிற நேரத்தில் அனைவரும் ஒன்றாகக் கூடியிருந்து மகிழ்கிற ஒரு பழக்கம் அந்த மாவட்டத்தில் உண்டு.

[பிரப ல் 1.2]

கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாடல்களைப் பாடிக்கொண்டு வரும்போது, இந்துப் பெருமக்கள் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு வரவேற்பு அளித்து உபசரிப்பதையும், இந்து கோயில்களிலே நாடகம் போன்றவைகள் நடக்கின்றபோது, கிறிஸ்துவப் பெருமக்கள் முன்வரிசையிலே உட்கார்ந்து கொண்டு பார்ப்பதும் கன்னியாகுமரி மாவட்டத்திலே மூன்று கடல்களும் இணைகின்ற இடமாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்து மதம், கிறிஸ்துவமதம், முகம்மதியமதம் என்று சொல்லுகின்ற மூன்று மதங்களும் கூட இணைந்திருக்கின்ற கோலாகல காட்சியினை நாங்கள் இதுவரை கண்டுகொண்டு வந்தோம். எப்படிக் கடல் பெரியதாக இருந்தாலும் கூட, கட்டுக்கடங்கி, தர்மத்திற்கு அடங்கி நடந்துகொண்டிருக்கிறதோ, அதைப் போலவே



1982 மார்ச் 15] [திரு. குமரி அனந்தன்]

இந்த மதங்கள் எல்லாம் தங்களுக்குள்ளே ஒரு எல்லைக் கோட்டை வகுத்துக்கொண்டு, அன்புக்கோட்டுக்குள்ளே அடங்கிக்கொண்டு வந்த காட்சியினை நாங்கள் கண்டுகொண்டிருந்தோம். அதற்கு நேர்மாறாக இப்போது செய்திகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், ஒரு குறிப்பிட்ட மதத்தவர் மட்டுமே வெறியோடு காரியத்தைச் செய்கிறார் என்று சொல்வதற்கில்லை. சிலர் செய்வது வெளியே தெரிகிறது; சிலர் செய்வது வெளியே தெரியாமல் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொருவருமே அவரவர்களுக்கு வகுக்கப்பட்டிருக்கிற எல்லைக்குள்ளே இருந்து அவர்களுடைய மதத்தை எப்படிப் பரப்புவது என்பதைப் பற்றி சிந்திக்காமல், அடுத்த மதத்தை எப்படி சிதைப்பது என்று சிந்திக்கின்ற ஒரு குறுகிய மனப்பான்மை இப்போது அங்கே பரவி வருவதைக் கண்டு நான் மெத்த வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அந்த வேதனை மட்டுமல்ல. சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய ஊரிலேகூட கிறிஸ்த்துவ சகோதரர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே பிரச்சினை வந்தபோது, ஒரு பத்திரிகை இதைக் குறித்து, இது குமரி அனந்தனுடைய சொந்த ஊராகும் என்று எழுதிக் காட்டியது. நான் அப்போது மருத்துவமனையிலே இருந்தவன். உறவினர்களுக்குள்ளேயே இப்படி தகராறு வருகிறதே, யார் சார்பிலே அங்கே போய் பேசுவது என்று பயந்து போகாமல் இருக்கலாம் என்றால், இந்தச் செய்தியைக் கண்டவுடனே ஓடோடி சென்று, இரு மதத்தவர்களையும் அழைத்து, பொதுவான பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்திலே வைத்துப் பேசி, சமரசம் பண்ணினேன். நான் அந்த சமரச செய்தியை எந்தப் பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டதோ, அதே பத்திரிகைக்கு சொன்னபோது, அங்கே சமரசம் ஏற்பட்டதாக செய்தி வெளியிடவில்லை; நான் அங்கே அமைதியை ஏற்படுத்தினேன் என்ற செய்தியையும் போடவில்லை. எனவே இதனைத் தூண்டி விடுவதிலே முனைந்து நிற்பவர்கள், அமைதிப்படுத்துவதிலே, ஒற்றுமைப்படுத்துவதிலே ஊக்கம் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மதம் ஒரு நெறிதானே தவிர, வெறி அல்ல. சமயம் என்பது மன உணர்வுகளை, மனித உணர்வுகளை பதப்படுத்தி பக்குவப்படுத்தி, சமைப்பது. எனவேதான் அதனுடைய பெயர் சமயம். ஆகவே, மனித உணர்வுகளைச் சமைப்பதைவிட்டு, விட்டு மனிதனை உணவாகச் சமைக்கலாம் என்ற உணர்வு இப்போது வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்ற போது, நான் மெத்த வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக மட்டும் நான் சொல்லவில்லை. மனித இனத்தைச் சேர்ந்தவன் என்பதற்காகச் சொல்கிறேன். நாளை ஒரு ஊர்வலம் புறப்பட

இருப்பதாக 4 மணிக்கு முன்னே செய்தி வந்தது. அசிசீபுரம் என்ற இடத்திலே இருந்து புறப்படும் இந்த ஊர்வலம், இது வரை எங்கே அந்தக் கலவரங்கள் நடைபெற்றதோ, அந்த வழியாகப் போவதாகத் தகவல் சொல்கிறார்கள். அந்த கேமல் ஸ்கூல் போய் சேருவதாகச் சொல்கிறார்கள். இந்த ஊர்வலத்திலே ஒரு மதத்தவர் மட்டுமல்லாமல், சில மதத்தவர் ஒன்று சேர்ந்து, இன்னொரு மதத்திற்கு .எதிராகப் போகின்ற சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, உடனடியாக அங்கே யார் ஊர்வலம் நடத்தினாலும், எந்த சார்பிலே ஊர்வலம் நடத்தினாலும், எவர் பொதுக்கூட்டங்கள் நடத்தினாலும், யார் துண்டு அறிக்கை வெளியிட்டாலும், அவர்களாகவே, ஏற்பாட்டாளர்களே அதைத் தடுத்து நிறுத்திக் கொள்ளுகின்ற நிலைமை இல்லை யென்றால், அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு, இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கோள்ள வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே தயவு தாட்சண்யம் காட்டவே கூடாது. அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அங்கே இம்மியளவுக்குக் கூட அமைதியின்மையைத் தோற்றுவிக்காத அளவுக்கு, அங்கே அமைதி ஏற்பட்டு இருக்கின்றது என்று சொல்லுகின்ற அளவுக்கு ஒரு உறுதிப்பாட்டினை, அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. சென்னையிலே மதத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கூட்டாக அறிக்கை வெளியிடுவதற்கு அரசாங்கம் உடனடியாக முன் வரவேண்டும். எல்லா மதத்திலும் எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருப்பார்கள். எனவே மதவாதிகளிடையே பேதம் வந்தது என்று சொன்னால், அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடி நின்று அமைதிப்படுத்துவார்கள். இப்போது அரசியல் கட்சிகளுடைய எல்லையை மீறி ஒரே அரசியல் கட்சி, இன்ன மதத்தைச் சார்ந்தவன் என்று இல்லாமல் வேறுபட்டு நின்று, போராடுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், தெற்கே இருந்து இந்தியா முழுவதும் ஒற்றுமையைப் பரப்ப வேண்டுமென்று எண்ணுகின்ற நாம், தெற்கே இருந்து இப்படிப்பட்ட காரிருள் வந்து ஒற்றுமையைச் சிதைத்து விட்டது என்று சொல்லுகின்ற வேதனை இருக்கின்ற காரணத்தினால், நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தீவிரமாக சிந்தித்து கொண்டிருப்பதோடு மட்டுமல்ல, சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். அதைவிட இன்னும் வேகமாக, தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அவைகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தை அமைதியின் பீடமாக ஆக்கிவிட்டு, அங்கிருந்து அமைதி எல்லா இடங்களுக்கும் செல்லுகின்ற





சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம், இந்த நாட்டிலேயே அமைதி ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி அப்போது தெற்கேயிருந்து தென்றல் பரவும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கடந்த மூன்றுமாதங்களாகவே மதப் பூசல்கள் ஏற்பட்டு, அதன் தொடர்பாக சென்ற 1-ம் தேதி மண்டைக்காட்டிலே பகவதி அம்மன் கோவில் திருவிழாவிலே கலவரம் நடந்து இந்த மன்றத்திலே 3-ம் தேதி விவாதிக்கப்பட்டது, அரசு தரப்பிலே அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், இந்த மன்றத்திலே விவாதித்ததற்குப் பின்னாலேயும், தொடர்ந்து அன்றாடம் இரு மதத்தினர்களுக்கிடையே பூசல்கள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நேற்றைய தினம் திருமுள்ளி என்ற கிராமத்திலே ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் சென்று 50 கடைகளுக்குத் தீ வைத்திருக்கிறார்கள், 25 வீடுகளை எரித்திருக்கிறார்கள். பல லட்ச ரூபாய்க்குச் சேதம் விளைவித்திருக்கிறார்கள். இதுமட்டுமல்லாமல் தென்னை தோட்டம் ஒன்றையும் அழித்திருக்கிறார்கள். கை குண்டுகளை எல்லாம் வீசியிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்க்கிறோம். பட்டப்பகலிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்ற அளவிற்கு மதப் பூசல்கள் இருக்கிறது என்று தெரிந்தும் போலீஸார் என்னசெய்தார்கள் என்று தெரியவில்லை. பத்திரிகையிலே பார்க்கிறோம், மதுரை, இராமநாதபுரம், அண்டை மாவட்டங்களிலேயிருந்து போலீஸார் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று மூன்று மாதங்களாகவே இரண்டு மதத்தினர்களுக்கிடையே பூசல்கள் இருந்து தொடர் நடவடிக்கையாகவே இருக்கிறது. அங்கே தவறான பிரச்சாரத்தை செய்கிறார்கள். உளவு துறை என்ன செய்தது என்று தெரியவில்லை. இன்றைக்கு தான் போலீஸ் விரைகிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் பரவி எங்கு போய் நிற்குமோ என்று தெரியவில்லை. இதை மனதிலே கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்ற போது அனைத்து கட்சிகளைச் சார்ந்தவர்களையும் அழைத்துச் சென்றது போல இப்போதும் செய்து அந்தப் பகுதியில் நல்ல சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். அரசு அதிகாரிகள் தவறாகச் செயல்பட்டால்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 மார்ச் 13

அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பூசலிலே ஆர். எஸ். எஸ் என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. எந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மதத்திற்கு உள்ளடக்கிய பிரச்சாரங்களைச் செய்வதை நாம் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், அடுத்த மதத்தையும் கட்டுப்படுத்துகிற பிரச்சாரத்தை செய்கிறார்கள். குமரி அனந்தன் அவர்கள் சொல்கிற போது நாளைய தினம் ஊர்வலம் இருக்கிறதைச் சொன்னார்கள். அதைத் தடை செய்யவேண்டும். அந்தப் பகுதியிலே அந்த ஊர்வலம் நடப்பதை இந்த அரசு தடை செய்ய வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் இதைத் தீர்த்து வைப்பதற்கு அனைத்து கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களையும் அழைத்து இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அமைதிக்கு பெயர் போன கன்னியாகுமரி மாவட்டம் கடந்த சில நாட்களாக மதச்சண்டைகள் நிறைந்ததாக மாறி வருவதைப் பார்க்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகள் ஏதோ அந்த ஒரு மாவட்டத்திலே திடீரென்று நடைபெற்று விட்டது என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. முன்னாலே பேசிய பல்வேறு கட்சித்தலைவர்களும் அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மதச் சண்டை தமிழகம் முழுவதும் எதிரொலித்து விடுமோ என்ற அச்சம் எல்லோரையும் ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே இல்லாத அளவிற்கு மத ஒற்றுமை எல்லாம் இருந்தும் கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குமரி மாவட்டத்திலே உருவாகியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த இரண்டு, மூன்று மாதங்களாகவே இதற்கான அறிகுறிகள் இருந்திருக்கின்றன. விவேகானந்த பாறைக்குப் படகு விடுவதிலே ஏற்பட்ட தகராறு, தொடங்கிய உடனே அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருப்போமானால் அது தொடர்ந்து இருக்காது.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு ப. நெடுமாறன் : தொடர்ந்து இரண்டு சமுதாயத்திற்கு இடையே ஒரு மோதலாக வளர்ந்து இருக்கிறது. அங்கே ஆர்.எஸ்.எஸ். போன்ற வகுப்புவாத சக்திகள் எல்லாம் உள்ளே



1982 மார்ச் 13] [திரு. ப. நெடுமாறன்]

புகுந்து அதன் விளைவாக வகுப்புவாத விஷம் அந்த மாவட்டம் பூராவும் விதைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டுமென்பதிலே எந்தக் கட்சிக்கும் வேறுபாடு இருக்கமுடியாது.

அடுத்து பஸ் போக்குவரத்துகழகத்திற்கு பெயர் வைப்பதிலே அரசாங்க மட்டத்திலே ஏற்பட்ட தடுமாற்றமானது சாதிச் சண்டையை ஏற்படுத்திவிட்டது. அந்த மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பிலே இருந்த அதிகாரிகள் உடனடியாக சிறு பிரச்சினைகளாக இவைஆரம்பித்த நேரத்திலேயே தலையிட்டு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதில் இதை வளர்த்துவிட்டார்கள். அவர்களின் நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக, இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்பட்டிருக்கிறார். அது மட்டும் போதாது. அந்த மாவட்டத்திலே உள்ள சகல அதிகாரிகளையும் உடனடியாக மாற்றி சாதி சமய உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட சீனியர் மோஸ்ட் அதிகாரிகள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் ஸ்பெஷலாக அங்கே அனுப்பிவைக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் சாதி சமய உணர்வுள்ள போலீஸ் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் அங்கே அனுப்பி வைக்கப்படுவார்களானால் மீண்டும் தகராறுகளுக்கு அது வழிவகுக்கும் என்பதையும் இந்த அரசு கவனிக்கவேண்டும்.

கன்னியாகுமரிமாவட்டத்திலே இந்துக்களானாலும், கிறிஸ்துவர்களானாலும் முகம்மதியர்களானாலும் அண்ணன் தம்பிகளாக பல ஆயிரம் ஆண்டுகளாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். ஒரே குடும்பத்திலே இந்துக்களும் உண்டு, கிருஸ்துவர்களும் உண்டு என்ற அளவுக்கு வாழ்ந்துகொண்டு வந்த அந்த மாவட்டத்திலே இன்றைக்கு மதச் சண்டைகள் வந்திருக்கின்றன என்றால் உண்மையிலேயே எல்லோரும் முயற்சி செய்தால் அதை மாற்றுவதற்கு முடியும், அந்த மனமாச்சரியத்தை மாற்றமுடியும், அந்தப் பகுதியிலே அமைதியை நிலைநாட்ட முடியும். அதிலே நாம் தவறினால் இந்தச் சண்டை, மனமாச்சரியம் வளர்ந்து திருநெல்வேலிக்கும் பரவி பிறகு அங்கிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பரவக்கூடிய அபாயம் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்த்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு குமரி அனந்தன் அவர்கள் சொன்னதைப்போல் சாதி மதச் சண்டையை மூட்டிவிடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் ஈவு இரக்கமின்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அதற்கு முன்னாலே அரசாங்கத் தரப்பிலிருந்த நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பன்னெடுங்காலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பல சாதி, இன, மத மக்கள் மிகுந்த நட்புடனும் அன்யோன்யத்துடனும் வாழ்ந்து வந்த மக்கள்

மத்தியில் இன்றைய தினம் பரவலாக சிறு சிறு சச்சரவுகள் தோன்றி மிகப் பெரிய கலவரமாக மாறியிருக்கின்ற ஒரு சூழ்நிலை நமக்கு எல்லாம் மிகக் கவலையை அளிக்கக்கூடியதாக இருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலே நடந்திருக்கின்ற கலவரங்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் அவைகளிலே மிகமுக்கியமான முதன்மையான காரணம் என்ன என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அண்மைக் காலமாக சில இடங்களிலே திடீர் திடீரென்று ஆராதனை தலங்கள் தோன்றி வருகின்றன. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று பொது இடங்களிலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலும் திடீர் திடீரென்று ஆராதனை தலங்கள் தோன்றுவதை மாற்ற மற்ற மதத்தினர் முன்வருகிறபோது கலவர சூழ்நிலை ஏற்படுகிறது. இத்தகைய ஆராதனை தலங்கள் திடீர் திடீரென்று தோன்றுவதிலே கண்ணும்கருத்துமாய் அரசாங்கம் இருந்து தடுத்து இருக்குமானால் இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டு இருக்காது. முதலிலே மண்டே மார்க்கட்டிலே இந்த நிலை ஆரம்பமாகி பிறகு மண்டைக்காட்டிலே 6 உயிர்கள் பலியாக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பலியாக்கப்பட்டவர்கள் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அரசாங்கம் அல்லது போலீஸ் தவறாக நடந்து கொண்டிருக்கிறது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. அத்தகைய தவறான எண்ணங்களைபோக்குவதற்கு நீதிவிசாரணை வேண்டுமென்று ஏற்கெனவே எங்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தியிருக்கிறோம். இந்த மன்றத்திலே அதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் அங்கே ஆரம்பித்த சில சில நிகழ்ச்சிகள் ஈத்தாமொழி, இராஜாக்கமங்கலம் போன்ற இடங்களுக்கும் பரவுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் ஏனைய மாவட்டங்களுக்கும் பரவி விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து இத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, ஆராதனை இடங்கள் தோன்றுகின்றபொழுது அங்கே திருவிழாக்களில் நடைபெறுகின்றன. அப்போது மைக் செட்டுகளைப் பயன்படுத்துகிறார்கள். அரசாங்கம் அதற்கு அனுமதி தருகிறது. அப்பொழுது ஒரேயிடத்தில், ஒரே சமயத்தில் மைக்குகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதால் இது போன்ற மோதல்கள் ஏற்படுவதற்கு அது துணை நிற்கிறது. அவ்வாறு மைக்குகளை வைக்கும்பொழுது ஒரே திசையில் ஒன்றுக்கொன்று எதிராக மைக்குகளைத் திருப்பி வைத்து விடுகிறார்கள். அவ்வாறு மைக்குகளை எழுப்பும் ஒலி மோதலில் மோதிக் கொண்டு பிறகு அந்த ஒலியின் காரணமாக சமுதாய மக்கள் மோதிக் கொண்டிருக்கின்ற அபாயகரமான நிலைமை ஏற்படுகின்றது. நமக்குச் சில உரிமைகள் இருந்தாலும் பொதுஜன அமைதியைக் கருதி





மைக் பொருத்துவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதில் கண்ணுங் கருத்துமாகச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கன்னியாகுமரி கலெக்டரை மாற்றியிருப்பதை நான் வரவேற்கவில்லை. திடீரென்று இப்படி மாற்றம் செய்திருப்பதானது பலவிதமான சந்தேகங்களைத் தோற்றுவிக்கக் காரணமாக ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அரசாங்கம் நல்ல உணர்வோடு செய்தாலும்கூட சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அரசாங்க அதிகாரிகள் ஏதேனும் மத உணர்வோடு செயல்படுவதாகத் தெளிவாக இருந்தால் அவர்களை இடம் பெயர்த்துவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நேர்மையாக நடக்கும் அதிகாரிகளைக்கூட மாற்றும் பணியை அரசாங்கம் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே இருந்ததைப் போன்று முழு அமைதியை நிலைநாட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தர்மாபுரம் வட்டத்திலும், அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற சுற்று வட்டாரக் கிராமங்களிலும் இன்றைக்கு இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் காரணமாக அங்கே ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அந்தப் பகுதியிலே இந்துக்களும், கிறித்தவர்களும் தங்களுடைய மதக் கொள்கைகளை வலியுறுத்தவும், மதத்தை ஆழமாகப் பின்பற்றுவதற்குமான நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது இப்படிப்பட்ட மோதல்கள் வருவதாகச் செய்திகள் வந்துள்ளன. அதைத் தவிர்க்கும் விதத்தில். இரண்டு மதத் தலைவர்களையும் அழைத்து, பொது மக்களையும் அழைத்து சமரச உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு இந்த மோதலின் காரணமாக ஏறத்தாழ 16 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சொத்துக்கள் பாழாகியிருக்கிறது ; தென்னந் தோப்பு நாசப்படுத்தப்பட்டிருக்கிறது ; ஏழை மீனவர்கள் வாழும் குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கலவரத்தால், இப்படி இவர்கள் வைத்திருக்கின்ற மத வெறியின் காரணமாக, மதத்தை எப்படியாவது உயிராக மதிக்க வேண்டுமென்று மத வெறியின் காரணமாக ஏற்படும் கலவரத்தால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழை எளிய மக்களாக இருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்களுக்கு இப்பொழுது மதங்கள் கொடுக்கின்ற தொல்லைகளை நீக்கவும், அந்த மதத்தினால் வரும் தீமைகளையும் அந்த உணர்வால் வருகின்ற ஏழை மக்களுக்கான பாதிப்புகளையும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது ஒத்திவைக்கின்ற விவகாரம் அல்ல.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகுதியில் இப்படி நடைபெறுகின்ற கலவரங்களைத் தடுக்க நிலையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் ஆகிய எல்லோருமே சௌஜன்யமாக வாழக்கூடிய அந்த நிலையை உருவாக்க வேண்டும் அந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற கலவரங்கள் மற்ற மாவட்டங்களுக்கும் பரவாத நிலைமையை எடுக்க அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த மதம் என்ற கண்ணோட்டம் இல்லாமல் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டித்து, தண்டித்து அங்கே உடனடியாக அமைதியை ஏற்படுத்துமாறு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள வேதனைக்குரிய வருத்தத்திற்குரிய நிகழ்ச்சிகள் பற்றி இந்த விவாதத்திலே கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் மிக்க ஆழ்ந்த வருத்தத்தின் தன்மையுடன் இங்கே கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். உள்ளபடியே இந்த நிகழ்ச்சிகள் எல்லாம், நமக்குப் பெரும் வேதனையைத் தரக் கூடியதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க தமிழகம் நீண்ட பழங்காலமாகவே சமயப் பொறைக்குப் பெயர்போன இடமாகத்தான் இருந்து வருகிறது. வரலாற்றுக் காலந்தொட்டு, பல நூற்றாண்டு காலமாக, இந்தியாவினுடைய பல்வேறு பகுதிகளிலே மத மாச்சரியத்தினுடைய அடிப்படையிலே கெடுதலான விளைவுகள் பல ஏற்பட்ட காலத்திலேகூட, தமிழகத்திலே பல்வேறு சமயங்கள் புகுந்தாலும் கூட, அப்பொழுதெல்லாம்கூட, சமயப் பொறையைக் காக்கின்ற அத்தகைய முயற்சியில் தமிழகம் சிறந்து விளங்கிற்று என்பதை நாம் நன்கு அறிவோம். அதிலே குறிப்பாக, கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இந்து சமுதாயத்திற்கும் இடையிலே ஒரு சமயப் பொறை, பண்பாடு மிக்க சிறப்பான முறையில், பொதுவாகத் தென் மாவட்டங்களிலே நிலவி வந்ததை எல்லோரும் நன்கு அறிவீர்கள். ஒரே வீட்டிலேகூட, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் கணவனாக இருக்கிற அதே வீட்டிலே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மனைவியாக, இருக்கிற மதத்தைக்கூட மாற்றிக் கொள்ளாமல், குடும்ப வாழ்க்கையை நடத்துகிற அளவுக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க தென் மாவட்டங்களிலே பொதுவாக உண்டு. அதுவும்





கன்னியாகுமரி மாவட்டத்திலே குறிப்பாக உண்டு. அது எதைக் காட்டுகிறது என்றால்—வட மாநிலங்களிலே கூட அத்தகைய நிலைமைகள் அதிகமாக இருப்பதில்லை ; அவ்வளவு பொறையும் மிகுந்த தன்மையில் அது எதைக் காட்டுகிறது என்றால்—மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க ஏதோ ஒரு வேண்டத்தகாத ஒரு தூண்டுதல், வேண்டத்தகாத ஒரு நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. இவ்வளவு காலம் அங்கே கட்டிக் காக்கப்பட்டு வந்த அந்தச் சமுதாயப் பொறை கெடக்கூடிய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய விளைவாக ஏற்பட்டிருக்கிற தன்மைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் எடுத்துத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், இந்த விளைவு எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதற்கும், ஏற்பட்டுள்ள விளைவுகளின் காரணமாக, மேற்கொண்டு மாச்சரியமான விளைவுகள் ஏற்படாமல் இருக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதை எல்லோரும் வற்புறுத்தி எடுத்துச் சொன்னார்கள். இதனைத் தவிர்க்க, அரசு சட்டத்தினுடைய அடிப்படையிலே எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பல எடுத்தாலும், மத மாச்சரியங்களுடைய அடிப்படையிலே இவை அமைந்துள்ளதன் காரணமாக, மத நம்பிக்கையுள்ளவர்களை, அந்தந்த மதத்திற்குத் தலைவராக இருப்பவர்களுமே அதிலே ஈடுபட வேண்டியவர்களாக இருப்பார்கள். அதற்குப் பக்க துணையாக அரசும் அரசாங்கத்தினுடைய அதிகாரிகளும், அரசினுடைய சட்ட திட்டங்களும் விதிமுறைகளும் இருக்க முடியும், நாம் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஏற்கனவே மண்டைக்காடு பகுதியில் இதற்கு முன்னால் மாச்சரியங்கள் தொடங்கி, வெடித்ததற்குப் பிறகு ஏற்பட்ட விளைவுகளில் எல்லாம், பிரச்சினைகள் எல்லாம் இந்த மன்றத்திலே ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அது பற்றி பேசும்போது, நிலைமைகள் எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. அதற்குப் பிறகு தமிழகத்தினுடைய தலைமைக் காவல் துறை அதிகாரியே அங்கே சென்று அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும், மேற்கொண்டும் விளைவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கான பெரும் முயற்சிகளிலே ஈடுபட்டு, அங்கேயிருக்கிற காவல் துறை எண்ணிக்கை போதாது என்று கருதி, பக்கத்திலே நெல்லை மாவட்டத்திலே இருந்து கூட ஒரு பகுயினரைச், சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அங்கேயிருக்கிற அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள், இது பற்றி நடவடிக்கை எடுக்க.

இப்பொழுது, நேற்று—இன்று நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பற்றி, மேற்கொண்டிருக்கிற விளைவுகளை, அவையினுடைய கவனத்திற்கு நான் சுட்டிக் காட்டுகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் ராஜக்கமங்கலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட அரசன்

காவளை என்ற ஊரில் அமைதிக் குழுக் கூட்டம் ஏற்பாடு செய்வதற்கு முன் 10—3—1982 மற்றும் 11—3—1982 ஆகிய நாட்களில் கிறிஸ்தவர் ஒருவருக்குச் சொந்தமான தென்னந்தோப்புகள் சுமார் ரூ. 1,050 மதிப்புக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 12—3—1982 அன்று அழிச்சல் துறையில் இந்துக்களுக்கும் கிறிஸ்தவ மீனவர்களுக்கும் மோதுதல் ஏற்பட்டது. அதில் இந்துக்கள் 4 பேரும் கிறிஸ்தவர்கள் 5 பேரும் காயம் அடைந்துள்ளனர். மேலும், பெரிய காடு துறையைச் சேர்ந்த கிறிஸ்தவ மீனவரும் இந்துக்களின் வீடுகளையும் தென்னந்தோப்புகளையும் தாக்கி சேதம் விளைவித்திருக்கின்றனர். இந்துக்கள் வீடுகள் 20-க்கு தீ வைக்கப்பட்டன. ஒரு நையற்கடை, ஒருசைக்கிள் கடை, ஒரு தட்டச்சு பயிற்சி நிலையமும் ஆலயமும், தாக்கப்பட்டுள்ளன. சேதத்தின் மதிப்பு சுமார் ரூபாய் 2 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ராஜக்க மங்கலத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மீனவர் சிலர் தர்மபுரம் கிராமத்தில் உள்ள இந்துக்களின் 7 வீடுகளுக்கு தீ வைத்தனர். இது சம்பந்தமாக 30 பேர்கள் அந்த ஸ்தலத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றும் ராஜக்கமங்கலத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மீனவர்கள் ஈத்தா மொழி, பால்கிணத்தான்வளை, கல்லரியன்வளை முதலிய கிராமங்களில் இந்துக்களின் வீடுகளைச் சூறையாடினர்.

17 பேர்கள் காயம் அடைந்துள்ளனர். இவர்கள் வன்முறையில் ஈடுபட்டதனால் தகுந்த எச்சரிக்கைக்குப் பின் கண்ணீர் புகை குண்டுகள் வெடிக்கப்பட்டன. வன்முறை கும்பல் கலைந்து செல்ல, கல்குளம், அகஸ்தீஸ்வரம் தாலுக்காக்களில் இ.பி.கோ. 144 பிரிவின்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல்துறை துணை தலைவரும் சம்பவம் நடந்த பகுதிகளுக்கு சென்று அமைதியை ஏற்படுத்தவும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். தேவையான இடங்களுக்குக் காவல் துறை பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. சம்பவங்கள் குறித்து வழக்குகள் போடப்பட்டுள்ளது. நிலைமைகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவில் பிஷப் அவர்கள் 14—3—1982 அன்று நடத்தவிருந்த ஊர்வலத்தை ரத்து செய்து விட்டதாகவும், மீனவர்களிடையே அமைதி ஏற்படுத்த முயன்று வருவதாகவும் இப்போது செய்தி வந்திருக்கிறது. அந்த ஊர்வலம் ரத்து செய்யப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல மாண்புமிகு உறுப்பினர் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இதுவரையில் ஏற்படாமல் இருந்த மாச்சரியத் தன்மையும், மதங்களின் அடிப்படையில் ஏற்பட்டு அதன் காரணமாக சாதாரண பாமர மக்களும் கீழ் நிலையிலே உள்ள மக்களும், ஏழை எளியவர்களுமே இப்படிப் பட்ட பாதிப்புக்கு அதிகமாக ஆளாகி இருக்கிறார்கள் என்ற



விவரங்களைக் காண்கிறோம். இந்த மதமாச்சரியத்திற்கு ஆர்.எஸ்.எஸ்.-ம் ஒரு காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச்சொன்னார்கள். பத்திரிகைகளிலேகூட இப்படிப் பட்டவிளைவுகள் வந்திருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், திடீர் சிலைகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு அந்தச் சிலைகள் காரணமாக நன்மைகள் பயக்க வேண்டிய சிலைகள் துன்பங்கள் பயக்கிற அளவுக்கு நிலைமை கொண்டு வந்ததன் காரணமாகவும், இந்த மத மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல இப்படிப்பட்ட மனப்பான்மை காரணமாக ஒலிபெருக்கிகளை வைப்பதிலிருந்து விளைந்து அதன் காரணமாகவும் மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். இவைகள் அத்தனையும் தடுக்கப்பட்டு எதிர் காலத்தில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தப் பட்டு குமரி மாவட்டத்திலே அமைதி ஏற்படுத்துவதன் மூலமாக வேறு பல மாவட்டங்களுக்கும் பரவாத அளவுக்கு தடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வில் இந்த மன்றத்திலே பேசிய, வாதத்திலே கலந்து கொண்ட உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய கருத்தினை மிகத் தெளிவாக தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களிலே அரசும் ஒன்றிய உணர்வோடு இருந்து பணிகளை கவனிக்கும் என்பது மட்டுமல்லாமல், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இன்று மாலை கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் செல்ல இருக்கிறார்கள் என்பதையும் நாளை அங்கே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற பேரவை மேலவை உறுப்பினர்களையும் கலந்து பேசி விட்டு, இரண்டு மதங்களையும் சேர்ந்த தலைவர்களையும் மற்றவர்களையும் கலந்து பேசி தேவைப்பட்டால், குறிப்பிட்ட சில பல இடங்களுக்கும் சென்று நேரடியாகக் கண்டறிந்து அவர்கள் அத்தனை பேர்களும் செய்கின்ற முடிவுகளை நடைமுறைப் படுத்துகின்ற அளவிற்கு என்னென்ன விளைவுகளைச் செய்தால் எதிர் காலத்தில் அமைதியை ஏற்படுத்த முடியுமோ அந்த அமைதியை ஏற்படுத்துகின்ற முயற்சியை மேற்கொண்டு இருக்கிறார். எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் செயல்பட்டால் அதற்கு அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பும் அங்கே நமக்குக் கிடைக்கும். எல்லா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஒருமித்த உணர்வோடு இதிலே கவலை கொண்டு, எதிர்கால நிலைமைகள் சீர்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தினுடைய அடிப்படையில் எடுத்துத் தெரிவித்து அத்தகைய கருத்துக்களுக்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த, அந்த மத மாச்சரியத்திலே ஈடுபட்டவர்கள் எல்லாம் மதிப்பு தருவார்கள். ஆகவே நம்பிக்கையை அப்படிப்பட்ட தன்மைகளில் வைப்பார்கள் என்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1982 மார்ச் 13

தன்மையின் அடிப்படையில் இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே எதிர்காலத்தில் சமூக விளைவுகள் ஏற்பட வேண்டும். இங்கே அனைவரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அந்த நிலை உருவாகப் பெரிதும் உதவும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்வதும் பல்வேறு அதிகாரிகளும் அங்கே கூடி, சில பல முடிவுகளை எடுத்து, மதத் தலைவர்களுடைய ஒத்துழைப்போடு, பொது மக்களுடைய ஒத்துழைப்போடு, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய ஒத்துழைப்பு, மிகப் பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற பேரவை மேலவை உறுப்பினர்கள் அனைவரின் பொறுப்பு அத்தனையும் இணைத்து செயல் திட்டத்தை நாம் வகுத்து செயல்படுத்துகின்றபோது, இந்த மாச்சரியத்தை ஓரளவுக்கு அடக்கவும், அதைத் தடுத்து நிறுத்தவும் எதிர் காலத்தில் ஒரு அமைதியான, நிம்மதியான சூழ்நிலை ஏற்படுவதற்கு வழிவகை ஏற்படும் என்ற தன்மையில் இந்த விவாதம் பயன்படும் என்ற முறையிலே கூறி என் உரையை முடிக்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1·49 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.*

மாலை.

*மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

***திரு. ஏ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் முன்மொழியப்பட்டுள்ள 1982—83ஆம் ஆண்டுக்கான சமுதாய வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் பற்றியும், தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்து என்னுடைய உரையை துவக்குகின்றேன். முதலில், 1982—83ஆம் ஆண்டுக்கான சாலை மேம்பாட்டுத் திட்டங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு மாபெரும் சாதனை புரிந்துள்ள திட்டங்களில் ஒரு சில திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மக்கள் எவ்வளவு வேகமாகச் செல்ல நினைக்கின்றார்களோ அந்த அளவு வேகமாகச் செல்ல சாலைகளை திறம்பட அமைக்க மாண்புமிகு அமைச்சர் பல லட்சம் ரூபாய்களை ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். 1982—83ஆம் ஆண்டில் பேருந்து வழித்



1982 மார்ச் 13] [திரு. ஏ. பெரியசாமி]

தடங்கள் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 1,100 இலட்சம் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவரின் புனிதத் திட்டமான தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1980—81-லே 69 ஊராட்சி ஒன்றியங்களையும், 1981—82-ல் 150 ஒன்றியங்களையும், 1982—83ல் மீதமுள்ள அனைத்து ஒன்றியங்களில் ஏழை மக்கள் பயன்பெறும் பின்கண்ட பணிகள் செய்வதை வரவேற்கின்றேன். பஸ் வசதிகள், இணைப்புச் சாலைகள் சுடுகாட்டிற்கான வழிப் பாதைகள், சிறு பாலங்கள், பள்ளிக் கட்டிடங்கள், சிறு பாசன வசதிகளை மேம்படுத்துதல், தாய்சேய் நல விடுதிகள், ஊரக மருந்தகங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம், ஆதி திராவிடர்களுக்கு வீடுகளை அமைத்தல் ஆகியவற்றைச் செய்வதை பாராட்டுகிறேன்.

சாலை ஓரங்களில் ஏழை மக்களுக்கும், பாதசாரிகளுக்கும் நிழல் கொடுக்க வசதியாக இருக்க, 1982—83 ஆண்டுக்கு 20 லட்சம் பனைமரங்களும், 1 லட்சம் நிழல் தரும் மரங்களும் வளர்ப்பதன் மூலம் அரசுக்கு வருவாயை கொடுப்பதும் ஏழைகளுக்கு பயனுள்ளதாக இருப்பதையும் வரவேற்கிறேன்.

பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக 171·10 கி.மீ. நீள சாலை அமைக்க 209·25 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க 82—83ஆம் ஆண்டில் 35 இலட்சம் ஒதுக்கியதை வரவேற்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் ஒன்றியத்தில் 35 இலட்சம் ஒதுக்கி ஏழை எளிய மக்கள் சாலை, மருத்துவ வசதி, குடிநீர் வசதி முதலியவைகளை செய்து கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு 82—83ஆண்டில் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை பெரிதும் வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தை ஏழைகளில் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரம் நகரத்தின் அருகில் உள்ள பாலம் கட்டப்பட்டு 65 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அந்தப் பாலத்தை புதியதாக அமைக்கக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1982 மார்ச் 13

(மாலை 4·10)

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் ; சாலைகளும், பாலங்களும் ; சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்புகளிலே வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, சமுதாய வளர்ச்சி ஆட்சி, உள்ளாட்சி என்ற அடிப்படையில் உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் சிறப்படைந்தால் நாட்டில் மக்கள் நலம் பெற ஏதுவாக அமையும், அந்த அடிப்படையிலே இன்றையதினம் பார்க்கின்றபோது, குறிப்பாக அமைச்சரவர்கள் சொல்லுகிறபோது தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர், இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள், ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லக் கூடிய வசதி, சிறு பாசன வசதி, ஊரக வளர்ச்சி, தாய்சேய் நலப்பணிகள், பள்ளிக்கூடங்கள், என்ற அடிப்படையில் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்ற உணர்வோடு ஊரக வளர்ச்சி இயக்ககம் பாடுபட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று பார்க்கும்போது இன்றைய தினம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர்வழங்குகிற பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் அந்த இனத்தில் செலவு செய்கிறார் என்று தெரிகிறதே தவிர அந்த செலவினம் பூராவும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குகின்ற முறையிலே அமைந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுப்பதற்காக ஆங்காங்கே போர் போடப்பட்டிருக்கிறது. தண்ணீர் வழங்க 6 'கேட்டகிரி' என்று பிரித்திருக்கிறார்கள். இதுவரையில் அதில் 3 கேட்டகிரிக்குகூட தண்ணீர் வழங்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்காக ஆங்காங்கே பைப்புகள் வாங்கிப்போடப்பட்டிருக்கின்றன. ஆழப்படுத்த போர் போடப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே செலவினங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்காக செலவிட்டதன் மூலம் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை.

குறிப்பாக கடந்த மாதம் 12-ந்தேதி பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் சோரமாஞ்சேரியில் ஒரு மோட்டார் எரிந்துவிட்டது. ஒரு மாதம் ஆகியும் அது பழுதுபார்க்கப்படவில்லை. அதனால் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. குடிநீர் வடிகால் வாரியம் தந்தப்பணியைச் செய்ய வேண்டியிருப்பதால் இன்னும அந்தப் பணி செய்யப்பட்டு, தண்ணீர் கொடுக்கப்படவில்லை.



1982 மார்ச் 13] [திரு. து. இராசரத்தினம்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அம்பத்தூரில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார்கள். பக்கத்தில் இருக்கிற ரெட்ஹில்ஸிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொடுப்பதா. வீராரணம் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுப்பதா. அல்லது கட்டளைக்கால்வாய் மூலம் தண்ணீர் கொடுப்பதா அல்லது கங்கையிலிருந்து தண்ணீர் கொடுப்பதா என்று சிந்தனை செய்துகொண்டிருக்கிற நேரத்தில், சென்னை நகருக்கு குடிதண்ணீர் பற்றக்குறை இருக்கிற நேரத்தில், அம்பத்தூருக்கும் ஆவடிக்கும் 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி.

இந்த ஆண்டு கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக 42 அங்குலம், 43 அங்குலம் மழை பெய்ய வேண்டிதற்குப் பதிலாக இந்த ஆண்டில் 15 அங்குலம் தான் பெய்திருக்கிறது. அந்த அளவுக்கு தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் ரெட்ஹில்ஸ் தண்ணீரை அம்பத்தூருக்கும், ஆவடிக்கும் கொடுத்தால் சென்னைக்கும் பாதகம் ஏற்படும், அவர்களுக்கும் பாதகம் ஏற்படும். கொடுக்கவேண்டாமா என்றால் கொடுக்கலாம். ஆனால் அதற்காக ஏற்கெனவே திட்டமிடப்பட்ட திட்டம் என்ன ஆனது? உலக வங்கி உதவி மூலம் ஆவடி நகரியத்திற்கும் அம்பத்தூர் நகரியத்திற்கும் குடிதண்ணீர் கொடுக்க போடப்பட்ட திட்டம் என்னாயிற்று ? இப்போது இருக்கிற சூழ்நிலையில் ரெட்ஹில்ஸ் தண்ணீரை அந்த நகரியங்களுக்குப் கொடுப்பதாக இருந்தால் அது அவர்களையும் பாதிக்கும், சென்னை நகர மக்களையும் பாதிக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் பிரச்சனை இப்படி என்றால், பள்ளிக்கூட பிரச்சனையும் இப்படித்தான் இருக்கிறது. பள்ளிக்கூட கட்டிடங்களை ஊராட்சி ஒன்றியங்கள் தான் பராமரிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்தீர்கள், மகிழ்ச்சி. அவர்கள் கேட்ட கோரிக்கையை நிறைவேற்றி இருந்தாலும் ஊராட்சி ஒன்றியத்தில் ஏ.இ.ஓ. வும் அரசாங்கத்தில் டிபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்சும் என்ற இரண்டு நிர்வாகத்தின் கீழ் அவர்கள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். இது தேவைதானா? ஆனால் பள்ளிக்கட்டடங்களை ஊராட்சி ஒன்றியங்கள் தான் பராமரிக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு செலவாகின்ற மின்சாரக் கட்டணத்தை யார் கொடுப்பது? முன்னாலே ஒன்றியத்திலிருக்கிற கல்வித்துறை அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளும். ஆக, அரசு ஒரு முடிவை எடுக்கும்போது இந்த இரண்டையும் சேர்த்து முடிவு செய்திருக்க வேண்டும். ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக இருந்தாலும் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்செயல்பட்டால் சிறப்பாக இருக்காதா? அதற்கு அரசாங்கம் தனியாக ஒரு அதிகாரியை போட வேண்டுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. து. இராசரத்தினம்] [1982 மார்ச் 13

இன்றைக்கு பள்ளிகளிலே 1 முதல் 4 வகுப்புவரை
யிலுள்ள மாணவர்களுக்கு அவர்கள் சரியாகப் பாடம்
சொல்லிக் கொடுப்பதில்லை. சொல்லிக் கொடுக்க
வேண்டிய அவசியமும் இல்லாமல் இருக்கிறது. காரணம் 1 முதல்
4 வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் மார்க் வாங்கினாலும்
வாங்காவிட்டாலும் அவர்களை ப்ரமோஷன் செய்யலாம் என்ற
நிலை இருக்கிறது. அவர்கள் சரியாக, ஒழுங்காக படிப்பைச்
சொல்லித்தருகிறார்களா என்று ஏ.இ.ஒ. சென்று பார்ப்பதற்கு
அவருக்கு வாகன வசதி இருக்கிறதா என்றால் இல்லை. ஊராட்சி
ஒன்றிய ஆணையர் சென்று பார்க்கக்கூடிய சூழ்நிலையும் இல்லை
அவருக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. சிறந்த நிர்வாகம்
இருக்கவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்
படவேண்டும்.

அதுமட்டுமல்ல, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலே
1963 ஆம் ஆண்டு குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டது.
குழந்தைகள் காப்பகம் என்று சொல்கின்றபோது அவர்களுக்கு
போதிய மருத்துவ உதவி தரப்பட வேண்டும். சிறப்பான உணவு
தரப்படவேண்டும். ஊக்கம் அளிக்கக்கூடிய உணவு தரவேண்டும்
அதற்காக ஒரு ஜீப் தனியாக தரப்படவேண்டும். ஒரு மருத்து
வரையும் ஒரு சுகாதார ஆய்வாளரையும் 55 ஆயாக்களையும்
நியமிக்க வேண்டும். அங்கே மூன்று மகப்பேறு இல்லங்கள் உண்டு.
அந்த நிர்வாகம் கூட தற்போது சமூக நலத்துறையிலே இருந்து
சமுதாய நலத்துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. சமூகநலத்
துறை அமைச்சரைப் பார்த்து நான் கேட்டேன். இந்த மூன்று
மகப்பேறு நிலையங்களும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றை
திறப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது? அவர்கள்
இதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்வதாகச் சொன்னாரே
தவிர இதுவரை எதுவும் செய்யப்படாமல் மூடப்பட்ட நிலை
யிலே இந்த மகப்பேறு நிலையங்கள் கிடக்கின்றன. மகப்பேறு
உதவியாளர்கள் கூட வேறு இலாக்காவிற்கு மாற்றப் பட்டிருக்
கிறார்கள். தாய்சேய் நலத்தினைக் கவனிக்கக்கூடிய மகப்
பேறு இல்லம் மூடப்பட்டுக் கிடக்கின்றது.

ஆவடி நகரத்திலே ஒன்று நகராட்சி, இன்னொன்று நகரியம்
திருவேற்காடு ஊராட்சி ஒன்றியம் இவ்வாறு மூன்றாகப் பிரிக்கப்
பட்டு இருக்கின்ற நிலைமையில் இதனை யார் மேற்பார்வை
யிடுவது என்பது பற்றிக் கவனித்து மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். மேலும் இந்தப் பிரச்சினை சமூக நலத்துறையிலே
இருந்து மாற்றப்பட்ட பிரச்சினை.



1982 மார்ச் 13] [திரு. து. இராசரத்தினம்]

அடுத்து சாலைகளும் பாலங்களும் பற்றிச் சொல்கின்ற
நேரத்திலே நேற்றுக்கூட நான் பாலங்கள் பற்றிக் கேட்டபோது
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 55 இலட்சம் ரூபாயிலே தீவிரத்
திட்டத்தின் கீழே சிறப்பான முறையிலே செயல்பட முடியும்
என்ற எண்ணத்தைச் சொல்லி பூவிருந்தவல்லியிலிருந்து பட்டா
பிராம் போகக்கூடிய சாலையில் உள்ள பாலத்தினை கட்டுவதற்
காக 55 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருப்பதற்காக
நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே
நேரத்திலே அங்கே இருக்கக்கூடிய பாதை சீராக்கப்பட்டிருக்
கின்றதா ? ஆகவே அந்தப் பாலம் வருகின்ற அந்தப் பாதையினை
யும் சீராக அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆவடியிலிருந்து பூவிருந்தவல்லிக்கு செல்கின்ற சாலையில்
நெடுஞ்சாலைத்துறையின் ஒரு துணை வழிப்பாதை இருக்கின்றது.
இதுபற்றி நான் கடந்த நிதிநிலை அறிக்கையிலே கூடச் சொன்
னேன். 16 உயிர்கள் அங்கே இறந்திருக்கின்றன. குஜராத்
மகாராஷ்டிரம், போன்ற மாநிலங்களில் இருந்து வந்த சுற்றுப்
பயணிகள் விபத்துக்குள்ளாகி இருக்கிறார்கள் இந்த இடத்திலே.
ஆகவே அந்தத் தீவுத்திடலினைக் கட்டித்தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி பலமுறை சொல்லியும் இன்னும்
செயல்படுத்தப்படாத நிலைமை இருப்பதன் காரணமாக
அடிக்கடி விபத்துக்கள் நடந்துகொண்டு இருக்கின்றன. இதுவரை
யில் 100 விபத்துக்களுக்கு மேல் அங்கே நடந்து இருக்கின்றன.
16 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஏராளமானவர்கள் அடிபட்டி
ருக்கிறார்கள். அப்படிப்பட்ட விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதன்
காரணத்தால் அந்த நெடுஞ்சாலைக்கு வேண்டிய தீவுத்திடலை
கட்டித்தர ஏற்பாடு செய்து விபத்துக்களைத் தவிர்க்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியம், பேருராட்சி நிர்வாகம்
போன்றவை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே
ஒரு பிரச்சினை வருகின்ற போது யாரை அணுகுவது என்பது
புரியவில்லை. அதிகாரிகளுக்குக் கூட போதுமான அளவுக்கு இது
தெரியாத நிலைமை இருக்கிறது. பேரூராட்சியைப் பொறுத்த
வரையிலே அதிகாரி யார் என்றால் கமிஷனர் அவர்களைப்
போட்டியிருக்கிறார்கள். அவருக்கு உதவியாக ஒரு இணை இயக்கு
நர் இருக்கிறார்கள். ஆனால் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத
காரணத்தால் கடந்த 7 ஆண்டுகாலமாக எந்தவிதமான காரியங்
களும் நடைபெறவில்லை. இப்படிப்பட்ட நிலைமையிலே அங்
குள்ள பிரச்சினைகள் பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்
திலே சொல்லப்படுகின்றது. ஆனால் அந்தப் பேரூராட்சி ஏன்
பிரிக்கப்பட்டது என்பது புரியவில்லை. பக்கத்திலே பம்மல்
பேரூராட்சி இருக்கின்றது. அதற்குப் பக்கத்திலே அனகாபுத்தூர்
பேரூராட்சி இருக்கின்றது. திருநீர்மலை பேரூராட்சி இருக்கின்றது

[திரு. து. இராசரத்தினம்] [1982 மார்ச் 13

ஆக இந்த அனைத்து பேரூராட்சிகளையும் இணைத்து ஒரு நகராட்சியாக ஆக்குவதன்மூலமாக அங்கே தேவைப்படுகின்ற பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நகராட்சியாக ஆக்கினால் நிர்வாகத்தினைச் சீராக்கி சிறந்த முறையிலே செயலாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(மாலை 4.20)

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு சமுதாய நலவளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம், சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை பற்றி என்னுடைய கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

இந்தியாவிலே எந்தப் பகுதியிலேயும் இல்லாத அளவுக்கு இங்கே தன்னிறைவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நிறைவேற்றி இருப்பதை நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் இதிலே சற்று வேகத்தோடு சொல்லவேண்டுமானால், நான் சார்ந்துள்ள நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கேயுள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களும் தன்னிறைவுத் திட்டத்தில் எடுக்கப்பட்டு பல்வேறு வேலைகள் செய்திருப்பதற்காக, நீலகிரி மாவட்ட மக்கள் சார்பாக தமிழக அரசை நான் பாரட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக சாலைகளை அமைப்பதில், மலைகளைப் பொறுத்தவரையில் மண் சாலைகள் போடுவதால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அங்கே மண் சாலைகளைப் போட்டால் மழைக் காலங்களில் மழை பெய்யும்போது, மண் சாலைகள் போடப்பட்ட இடம் சில நாட்களில், இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்ற காரணத்தை முக்கியமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அந்த மண் சாலைகளை தார்சாலைகளாக போடக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் என்று எடுத்துச் செல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக ஊராட்சி மன்றங்களின் பராமரிப்பில் இருந்த சாலைகளை அந்த மன்றங்கள் போதிய பணம் இல்லாமல் நலிந்துமிருந்த காரணத்தால் அவைகளை, ரூரல்ரோட்ஸ் என்ற திட்டம் ம்மகாலப பராமரிக்கப்பட்டு தார் சாலைகளாக போடமூட்டுள்ளன.



1982 மார்ச் 13] [திரு. கே. உச்சி]

ஆனால் கடந்த ஒரு ஆண்டு இரண்டாண்டுக் காலத்தில் அப்படிப் போடப்பட்ட தார் சாலைகளை மீண்டும் பராமரிக்க ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டு இருந்ததை தமிழக அரசு மாற்றி, அவைகளை அரசே ஏற்றுக் கொண்டால்தான், அந்தச் சாலைகளை நல்லமுறையில் பராமரிக்க முடியும் என்ற நல்ல எண்ணத்தில் செய்ததை நான் மனதார பாராட்டி வரவேற்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த கால ஆட்சியில் எனக்கு சரியாக நினைவு இருக்குமானால் அண்ணன் அன்பில் அவர்களுடைய காலம் என்று நினைக்கிறேன் கடுவிரைவு திட்டம் என்ற பெயரில் பலகோடி ரூபாய் செலவில், நீலகிரி மாவட்டத்தைச் சுற்றிலும் இணைப்புச் சாலைகள் போடுகிற ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டபோது, நீலகிரி மாவட்டமே இதனால் இணைந்து விடும், சாலை வசதிகள் இல்லை என்ற குறையே இல்லாமல் போய்விடும் என்றெல்லாம் நினைத்தோம். ஆனால் இன்று பலவேறு பகுதிகளில் போய் பார்த்தால், நீலகிரி மாவட்டத்தில் கடுவிரைவுத் திட்டம் என்ற அந்த போர்டுகள் தான் இருக்கிறதே ஒழிய, அந்தச் சாலைகள் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அதற்கு என்ன காரணம்? மலைப் பகுதிகளில் மண் சாலைகள் போடுவதால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை என்பதுதான், இதை நான் முன்பே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதனால், இந்த அரசையும், அமைச்சர் அவர்களையும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் மலைப்பகுதிகளில், நீலகிரி மலைப்பகுதி என்று அல்ல, அது கொடைக்கானல் பகுதியானாலும் சரி, ஏற்காடு பகுதியானாலும் சரி, தார் சாலைகளாகவே அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் 1981–82 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 80·92 லட்சமும் 1982–83 ஆம் ஆண்டுகளில் 99·50 லட்சமும் சாலைகள் செப்பனிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். அப்படி தனியாக ஒதுக்கி நிதி வசதியை ஏற்படுத்தியிருப்பவர்கள் அந்தச் சாலை பணிகளைச் செய்யும் போது அரசோ அல்லது சம்பந்தப்பட்ட இலாகாவோ தீவிரக் கவனம் செலுத்த வேண்டும். அதே சமயத்தில் அதில் வேகமும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மலை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் குன்னூர்–கோத்தகிரி சாலையில் நடுவட்டி சாலை என்று ஒரு சாலை போடப்பட்டு அது அப்படியே முடிக்கப் பெறாமல் நின்று கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஊட்டி, கோத்தகிரி மேட்டுப்பாளையம் பகுதியில் வரும் சாலை மிகவும் மோசமாக இருக்கிறது.

கோத்தகிரி, மேட்டுப்பாளையம் சாலையைச் செப்பனிட ரூ. 235 லட்சம் ஒதுக்கியிருப்பதை நான் நீலகிரி மாவட்ட மக்கள் சார்பில் பாராட்டுகிறேன்.

[திரு. கே. உச்சி] [1982 மார்ச் 13

கல்லம்பாளையம், தெங்கு மரடா, சீகூர் சாலைகளையும் சீகூர், வாளைத்தோட்டம், ஆணைக்கட்டி சாலைகளையும் சீராக்கினால் அந்தச் சாலைகள் மிக்க மேம்பாட்டுடன் இருந்தால் பக்கத்திலுள்ள மரத் திருட்டை, வன அதிகாரிகள் மிக எளிதில் கண்டுபிடிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வேலைகளை மிக விரைவாக முடிக்க முயற்சி செய்ய வேண்டும்.

கூடலூர், பெரிய சோலை சாலை, ஒரு 400, 500 பேர்கள் வாழ்கிற இடம் அந்த சாலை மண் சாலையாக இருக்கிறது. அதை தார் சாலையாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டி. ஆர். பஜார்-டெரஸ் எஸ்ரம் சாலையையும் தார்சாலையாக மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதகை ஊராட்சி தமிழகத்திலே இருக்கிற பல பெரிய பேரூராட்சிகளில் ஒன்றாகும். அந்த ஊராட்சி ஒன்றியத்தை ஒரே ஊராட்சி ஒன்றியமாக வைத்திருப்பதால் நிர்வாகத்திற்கு, மிகவும் சிக்கலாக இருக்கின்றது. அங்கே நடக்கும் வேலைகளை கண்காணிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. உதகை ஊராட்சி ஒன்றியத்தை குந்தா ஊராட்சி ஒன்றியம் என்றும் உதகை ஊராட்சி ஒன்றியம் என்றும் இரண்டாகப் பிரித்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

கூடலூர் பஞ்சாயத்து ஒன்றியத்தையும் இரண்டாகப் பிரித்து கூடலூர் ஒன்றியம், பந்தலூர் ஒன்றியம் என்று ஆக்கித்தரவேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மலைப் பகுதியாக இருப்பதால் குறுகிய நேரத்தில் அங்கு வேலைகள செய்யப்பட வேண்டும். அவைகளை கண்காணிக்க வேண்டும். நிர்வாக வசதிக்காக அதை இரண்டு ஒன்றியங்களாகப் பிரித்தால் மிகவும் நல்லது.

நீலகிரியில் சாலை ஆய்வாளர்கள் 22 பேர் இருக்கிறார்கள். மற்ற சமவெளிப்பகுதியில் உள்ளவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் நீலகிரி மலைப்பகுதி அங்கே சைக்கிள் அலவன்ஸ் கொடுத்தாலும் கூட அவர்களுக்கு பயன்தருவது இல்லை. அவர்களுக்கு தனியாக ஒரு ஸ்பெஷல் அலவன்ஸ் அந்த 22 பேர்களுக்குத் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் ஆதிவாசிகளாகிய கோத்தர்கள், இருளர்கள், தொதுவர்கள், பணியர்கள், ஆதி திராவிடர் வாழும் காலனிகளுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சுடுகாடு வசதி, வைத்திய வசதி, நடமாடும் வைத்திய வசதி, ஆகியவைகளைச் செய்து தர வேண்டும்.



1982 மார்ச் 13] [திரு கே. உச்சி]

ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் அமைப்பதில், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அதிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கும் அளவில் நிதி ஒதுக்குதல் வேண்டும்.

கூடலூர் தொகுதியில் பொன்னூர், தேவலா, கொலப் பள்ளி, குண்டி பகுதிகளில் அதிகமளவில் குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். குடிதண்ணீர் வசதி, பள்ளிக்கூட வசதி, மற்றும் விவசாய நிலம் ஆகியவைகளைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும்.

கூடலூர் பேரூராட்சிப் பகுதியில் பல ஆண்டுகளாக தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. ஹெலன் திட்டம் என்று ஒரு திட்டத்தை அரசு தயாரித்து இருப்பதாக அறிகிறேன். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் பகுதியில் மசினிகுடி குடிநீர் திட்டப் பகுதியில் குடிதண்ணீர் திட்டம் மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. அந்தப் பகுதியில்வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்ய ஒரு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால்போடப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளன.

(மாலை 4-30)

அந்தப் பழைய குழாயை எடுத்து புது குழாய்போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர், மேட்டுப்பாளையம், உதகை வழியாக கிட்டத்தட்ட 60 மைல் செல்ல வேண்டும். அதனால் நேரம் பொருள் விரையமாகிறது. அதைக் தடுக்க கூடலூர் எருமாடு வழியாக கேரளாவையொட்டி ஒட்டிபில்லூர் நெல்லித்துறை வழியாக உதகையை யொட்டி மேட்டுப்பாளையம் வரை 40 மைல் அளவில், ஒரு புதிய சாலையைப் போட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதுமாதிரி சிறுமுகை கீழ்கோத்தகிரிக்குப் புதிய சாலை ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சாலையைப்போட்டால், ஏறத்தாழ 9, 10 மைல் தூரம் குறையும். ஆகவே, அந்தப் பாதையை போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்—பெண்களுக்கு கிராமங்களில் கழிப்பிடங்கள் ஏற்படுத்திக் தரவேண்டும் என்ற திட்டத்தைத் தயாரித்து இருப்பதோடு இப்போது மீண்டும் ஆண்களுக்கும் கழிப்பிடங்

களை கிராமங்களில் கட்டிக்கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். காந்தியார் கிராம ராஜ்யம் ஏற்படுத்த வேண்டும் என்று காந்தியார் அவர்கள் கண்ட கனவை நினைவாக்கும் திட்டத்தை நிறைவேற்றி வரும் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை பாராட்டி, இந்த மானிய கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. மு. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83-வது ஆண்டு சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் சாலைகளும் பாலங்களும் என்ற இந்தத் மசோதாவில் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றி கூறி பேச ஆரம்பிக்கிறேன். இந்த மன்றத்தில் பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் தங்கள் தொகுதியில் பல வேலைத் திட்டங்களைச் சேர்த்திருப்பதைக் கண்டு அமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் நான் பாராட்டுவதற்கு இதிலே ஒன்றும் இல்லை. என்னுடைய தொகுதியில் ஒரு பைசா கூட இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்படவில்லை. இருந்தாலும் நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். தியாகதுர்கம், மணலூர்பேட்டை சாலையில் குறுக்கே ஓடும் பெண்ணையாற்றில் ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நானும் அனங்காபுத்தூர் ராமலிங்கம் அவர்களும் அமைச்சர் அவர்களைக் கேட்டோம். ஆனால் மாண்புமிகு அனங்காபுத்தூர் ராமலிஙகம் அவர்கள் இந்தப் பாலத்திற்கான திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். பொதுவாகப் பார்க்கும்போது எந்த விதமான வேலைத் திட்டமும் இதிலே சேர்க்கப்படவில்லை. அவர்கள் அமைச்சர் அவர்களிடத்திலே அதைப் பற்றிப் சொன்னாரா? அல்லது அமைச்சர் அவர்கள் அதை சேர்த்து விட்டோம் என்று சொன்னதைக் கூறினாரா? என்று தெரியவில்லை. எப்படியோ என்னுடைய தொகுதிக்கு-கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டங்களை எல்லாம் பிற்காலத்திலாவது சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1977 இலே இருந்து நான் இந்த சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்து வருகிறேன். 1977-லே இருந்து எந்தவிதமான வேலையும் என்னுடைய தொகுதியில் நடக்கவில்லை. நான் எதிர் கட்சியில் இருக்கிறேன். என்பதால் நடக்கவில்லையா? அல்லது நான் கேட்டுக் கொண்டேன் என்பதற்காக செய்யவில்லையா? எப்படியிருந்தாலும் என்னுடைய தொகுதிக்கு அந்த வசதிகளையெல்லாம் செய்து தர வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கும் அமைச்சர் அவைக்கும் இருக்கிறது. மேலும் என்னுடைய தொகுதிக்கு இதையெல்லாம் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.





அரசு மக்களுக்கு செய்கின்ற நல்ல திட்டங்கள் எல்லாம் நேரிடையாக மக்களுக்குச் சென்று பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் காந்தியும் நேரு அவர்களும் சமுதாய நலத் திட்டத்தினை அமுல்படுத்தினார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தது நல்ல முறையில் கிராமங்கள் முன்னேற வாய்ப்பாக இருந்தது. 1962 ஆம் ஆண்டு முதல் பத்தாண்டுகள் கிராமங்கள் முன்னேற மக்கள் உற்சாகமாக பணியாற்றினார்கள். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்டதனால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் அங்குள்ள அதிகாரிகளின் ஆதிக்கத்தின் காரணமாக அவர்கள் தன்னிச்சையாக காரியங்கள் ஆற்றி வருகிறார்கள். அதனால் அவர்கள் மக்களிடம் நேரிடையாகச் சென்று அவர்கள் குறைகளைக் கேட்டு அந்த வேலைகளைச் செய்வதற்கான வாய்ப்பில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் இலாகாவாரியாக விஸ்தரிப்பு அதிகாரிகளை நியமித்து கிராம சேவக்குகள் மூலமாக மக்களுக்கு அந்த திட்டங்களைத் தெரிவித்து அவற்றை நிறைவேற்றித் தரவேண்டும். இப்போது அந்த கிராம சேவக்குகளுக்கு எந்தவிதமான வேலையும் இல்லாமல் மக்களோடு அவர்களுக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

கிராம மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்ள வழி இருக்கவேண்டும். இன்று பஞ்சாயத்துக்களை கலைத்த பிறகு நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது. மக்களுக்குத் தேவையான குடிநீர் திட்டம் பள்ளிக்கூட வசதிகள் மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவையெல்லாம் பெறக்கூடிய வாய்ப்பு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இருந்தபோது இருந்தது. யூனியன் கவுன்சில் உத்தரவுகள் மூலம் அவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது அந்த நிலைமை இல்லை. பஞ்சாயத்துக்கள் நிர்வாகம் ஆர்.டி.ஓ. கலெக்டர் தலைமையின் கீழ் இருந்தபோது அதிகாரிகள் அவர்கள் கடமைகளை சரிவர செய்து வந்தார்கள். ஆனால், இன்றைக்கு இவர்கள் தொடர்பு இல்லாமையாலும் அதற்காக தனி அதிகாரிகளை நியமித்திருப்பதாலும் அவரவர்கள் தங்கள் சொந்த இலாக்காக்கள் சொல்வதைத்தான் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைப்போல் செயல்படுகிறார்கள். தனித் தனி குடும்பமாக செயல்படுகிறார்கள்.

[திரு. மு சுந்தரம்] [1983 மார்ச் 13

ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பழைய மாவட்ட கழகங்களுக்கு இருந்ததைப் போல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துச் சொல்லியும் இதுவரை அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொன்றுக்கும் அரசாணையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நிலைதான் இப்போது இருக்கிறது.

நிலைமை இப்படியிருக்கும்போது தேர்தலே தேவை இல்லை என்றும் அதிகாரிகள் பொறுப்பிலேயே எல்லாவற்றையும் ஒப்படைத்து விடலாம் என்றால் அவர்கள்தான் உங்களுக்கு நம்பிக்கையானவர்கள் மக்கள் நிர்வாகத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தான் கருதவேண்டியிருக்கிறது. காந்திஜி, நேருஜி, காமராஜ், கண்ட ராம ராஜ்யம் இன்று கனவாகப் போய்விட்டது. நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இரண்டு ஆண்டுகளும், பேரூராட்சித் தலைவராக இரு முறையும் இருந்திருக்கிறேன். அப்போது இருந்த திருப்தி, பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்து செயல்பட்டு வந்தபோது இருந்த திருப்தி இன்று சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு அந்தத் திருப்தி இல்லை. ஏனென்றால், சட்டமன்றத்தின் மூலம் எந்தவிதமான பிரயோஜனமும் மக்களுக்கு செய்ய முடியவில்லை. யாரை அணுகுவது? யாரைக் கேட்பது? சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளை சந்தித்து ஏதாவது சொன்னால் அவர்கள் பல ஆணைகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. நான் யூனியன் தலைவராக இருந்தபோது நானே தலையிட்டு மக்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க முடிந்தது. செய்து கொடுத்திருக்கிறேன். நகரப் பஞ்சாயத்துக்களில் பல்வேறு முன்னேற்றங்களைச் செய்திருக்கிறோம். நான் யூனியன் தலைவராக இருந்தபோது என் ஒன்றியத்தில் திருமண மண்டபம் கட்டியிருக்கிறேன், பஸ் ஸ்டான்ட் அமைத்துக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இப்போது அந்த நிலைமை இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொன்னால் அதிகாரிகளைப் பார்ப்பது, கூட்டங்களில் பேசுவது, விழாக்களில் கலந்து கொள்வது என்றுதான் இருக்கிறதே தவிர மக்கள் தேவைகளை நிறைவேற்றும் வகையில் இல்லை. அதைத்தான் சொல்லவேண்டும். ஆகவே நான் சொல்லியிருக்கிற குறைபாடுகளைக் கவனித்து அதில் ஏதாவது ஒன்றையாவது நிறைவேற்றுகிற வகையில் செயல்பட வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் நிர்வாகத்தில் மாநில அளவில் எப்படி பங்கு கொள்கிறார்களோ அதே முறையில் யூனியன் தலைவர்களும் வட்டார அளவில் நிர்வாகத்தில் பங்கு கொண்டு கிராம மக்களுக்கு நன்மை செய்ய முடிந்தது.



1982 மார்ச் 13] [திரு. மு. சுந்தரம்]

எனவே உடனடியாக தேர்தல்களை நடத்தி அதிகாரிகளின் ஆதிக்கத்தை நீக்கி கிராம மக்களுக்கு அரசு திட்டங்களின் நன்மை கிடைக்க, இந்த அரசின் மேல் நம்பிக்கை ஏற்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்பது காந்திஜி சொன்ன சுயதேவைப் பூர்த்தித் திட்டமாகும். தன்னிறைவுத் திட்டத்தில் ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன்கள் செய்த வேலைகளைத்தான் இப்போது க்ராஷ் ப்ரோக்ராமாக, தீவிரத் திட்டமாக செய்யப்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டத்தில் பத்து கிராமங்கள் ஒருங்கிணைந்த ஒன்றுக்கு ஒரு மருத்துவ மனை விதம் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுத்தால் அந்த மருத்துவ மனைகள் மூலமாக இந்த 100 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்த உதவியாக இருக்கும்.

இந்த தன்னிறைவுத் திட்டம் கிராம மக்களின் தன்னிறைவுத் திட்டமாக இருக்கவேண்டுமே தவிர மற்றவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய திட்டமாக இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தன்னிறைவுத் திட்டத்தை நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூர் பேரூராட்சியை நகரசபையாக மாற்றித்தர வேண்டும். அதேபோல், கள்ளக்குறிச்சி, போளூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும் நகரசபைகளாக மாற்றியமைக்க வேண்டும்.

[பிற்பகல் 4.40]

திருக்கோவிலூரில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மிகவும் பழைய கட்டிடமாக, கட்டப்பட்டு 75 ஆண்டுகளுக்கு மேலாகி, இடிந்து தலையிலே விழக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடம் 13 வகுப்பறைகளைக் கொண்டது. அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டபோது, 3 வகுப்பறைகள் கட்டுவதற்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டது. மற்ற 10 வகுப்பறைகள் இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கிறது. எனவே, பூராக் கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கி, முழுக் கட்டிடத்தையும் பழுதுபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கட்டிக் கொடுக்கவில்லை என்றால், அங்குள்ள மாணவர்கள் மரத்தடியிலே வகுப்பை நடத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல், என்னுடைய தொகுதியில் சில காரியங்கள் செய்ய வேண்டும். திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவி இல்லை. கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள், அடிபட்டு கை கால் முறிந்தால், எக்ஸரே எடுப்பதற்கு, தனிப்பட்டவர்களிடம் சென்று எடுத்து வந்தால், அதை

[திரு. மு. சுந்தரம்] [1982 மார்ச் 13

ஏற்படவில்லை. ஆகவே, எக்ஸ்ரே கருவியை அங்கே உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூரிலே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்தப் பழைய ஏரி தூர் எடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அந்த ஏரியை ஆழப்படுத்தி டி.சி.ஆர். திட்டத்தின் மூலம் ஏரியை ஆழப்படுத்துவதோடு, கரைகளை பலப்படுத்தி, அதன் மூலம் மேலும் ஆயக் கட்டுகள் பாசன வசதியைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முகையூர், ரிஷிவந்தியம் ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களை இரண்டு, இரண்டாகப் பிரிக்க வேண்டும். காரணம், முகையூர் பஞ்சாயத்து 45 மைல்கள் நீளம் கொண்டது. அதேபோல், ரிஷிவந்தியம் பஞ்சாயத்து 40, 45 மைல்கள் நீளம் கொண்டது. ஆகவே, இவ்வளவு நீளத்திற்கு இருக்கின்ற இந்த இரண்டு பஞ்சாயத்து யூனியன்களையும் இரண்டு, இரண்டாகப் பஞ்சாயத்து யூனியன்களாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகதுர்க்கம், மணலூர்பேட்டை சாலையின் குறுக்கே ஓடும் பெண்ணை யாற்றில் ஒரு மேம்பாலம் கட்டித் தரவேண்டும். அப்படி அந்த பாலத்தை அமைத்துக் கொடுத்தால், கோயம்புத்தூர், சேலம், கள்ளக்குறிச்சி; பெங்களூர்; வேலூர், திருவண்ணாமலை ஆகிய ஊர்களுக்கு இணைப்பு ஏற்படும். அதனால், தூரமும், நேரமும் குறையும். எனவே, அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கோணக்கவாடி--பனப்பாடி சாலையில் குறுக்கே போகும் கெடிலம் நதியின் மேல் ஒரு தரைப்பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அங்கே, இப்போது பாலம் இல்லாததால், போக்குவரத்து தடைப்படுகிறது. வரக்கூடிய பஸ் அதோடு நின்றுவிடுகிறது. எனவே, அந்த இடத்தில் பாலம் அமைத்தால் ரிஷிவந்தியம், சேலம் பாதையும், இந்தப் பக்கம் திருவண்ணாமலை விழுப்புரம் வரை பஸ் போவதற்கு ஏ வாக இருக்கும். எனவே, இந்த கெடிலம் நதியின்மீது ஒரு தரைப்பாலம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பூலாங்குறிச்சி— கள்ளக்குறிச்சி சாலையில் அமைந்திருக்கும், மணிமுத்தா நதியில் கட்டப்பட்டிருக்கும் அணையில் ஒரு பாலம் கட்ட வேண்டும். ஏற்கெனவே, அங்கே ஒரு பாலம் கட்டப் போவதாகப் பேசப்பட்டது. என்ன காரணத்தாலோ, அந்தப் பாலம் மீண்டும் அந்த இடத்தில் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தை அங்கே கட்டினால், கள்ளக்குறிச்சிக்கு 5 மைல் தூரத்திலே போகலாம். இல்லாவிட்டால், 18 மைல்கள் சுற்றிப் போக வேண்டும். இது சின்ன பாலம்தான். 50,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கலாம். எனவே, இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. மு. சுந்தரம்]

அதேபோல் ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் மருூர் ஏந்தல்
சாலையில், ஏந்தல் ஏரியின் மேல் உள்ள பாதையை அகலப்
படுத்தி, பஸ் செல்வதற்கு இடையூறு இல்லாமல், அதன் கரைகளை
ரிவெட்மெண்டுகளைப் பலப்படுத்திக் கட்டிக் கொடுக்க
வேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் டி.டி.ஓ. கூட்டத்தைக் கூட்டினால்
அந்தக் கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அதிகமாக வருவது
கிடையாது. கோரம் இல்லாமல் கலைத்து விடுகிறார்கள்.
என்னகாரணத்தினாலோ, இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.
ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் வருவது கிடையாது ; மற்றக்
கட்சியைச் சார்ந்தவர்களும் வருவது கிடையாது. இரண்டு பேர்
கள்தான் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, டி.டி.ஓ.
கூட்டத்திற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வருவதற்கான ஏற்
பாட்டை செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முரூர் பஞ்சாயத்தில் குடிநீர் வடிகால் திட்டம் சரியாக வேலை
செய்யவில்லை. மோட்டார் ஒன்று 3,4 வருஷங்களாக காணாமல்
இருக்கிறது. யார் எடுத்துக் கொண்டு போனார்கள் என்று
தெரியவில்லை. அதனால், அங்குள்ள ஓவர் ஹெட் டாங்கு,
வேலை செய்யவில்லை. அதனால், அந்தப் பஞ்சாயத்திலே
உள்ள, கிராமங்களிலே உள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் ரொம்ப
கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைச்சர்
அவர்கள் அங்கே ஓவர் ஹெட் டாங்கு நல்ல முறையிலே வேலை
செய்யாமல் இருப்பதால், அதை சரிசெய்து, அங்குள்ள மக்களுக்கு
தண்ணீர் கிடைக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். பஞ்
சாயத்து யூனியனுக்கு அதிக அதிகாரம் அளிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரி
வித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்கு புரட்சித் தலைவர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற இந்த தன்னிறைவுத் திட்டத்தை நாங்கள் பாராட்டு
கிறோம். 1947—லே இருந்து வரையிலும் இல்லாத
அளவில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், நகரத்திற்கும்
40 இலட்சம்' 60 இலட்சம், 80 இலட்சம், 1 கோடி என்ற அள
விலே செலவு செய்கிற ஒரு திட்டத்தை நம்முடைய புரட்சித்
தலைவர் ஒருவர்தான் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்
னால் அது மிகையாகாது, என்று கருதுகிறேன். அவருக்குப்

[திரு. அ. பழனிசாமி] [1982 மார்ச் 13

பாராட்டுதல்களை எப்படி தெரிவிக்க வேண்டுமென்று எண்ணுகிறேன் என்று சொன்னால் ஒரு நாள் பூராவும் ஹெலிகாப்டரில் பூவை வைத்து அவரை நிறுத்தி அவர்மீது பூ மழை பொழிய வேண்டுமென்று என் மனது விரும்புகிறது. தன்னிறைவுத் திட்டத்தில் சுமார் 50 ஆயிரத்திற்கு மேல் செலவாகிற சாலை, பாலங்களை எடுத்துக்கொள்வதற்கு நல்ல வாய்ப்புள்ளதை நான் மனதார பாராட்டுகிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் சிறப்பாக செயல்படுகிறது என்பதை சொல்லிப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சில பணிகள் செய்ய வேண்டும் என்பதற்காக நான் எடுத்துச் சொல்கிற காரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் அனைத்து இடங்களுக்கும் பஸ்கள் ஓடவேண்டுமென்ற இந்த அரசினுடைய கொள்கையின்படி பஸ்கள் விடவேண்டுமென்று சொன்னால் பல கிராமங்களிலே பாலங்கள் இல்லாமல் பஸ் விட முடியாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேடூர், சாலவேம்பு, பாலப்பட்டி, பட்டகாரனூர், குரும்பபாளையம், இராமேகவுண்டன்புதூர், சண்முகாபுரம், இலுப்பநத்தம், தேவாங்கபுரம், பெரியகுமாரபாளையம் போன்ற இடங்களில் சுவர்கள் எழுப்பி சிறு பாலங்களை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், மேட்டுப்பாளையத்திலிருந்து புளியம்பட்டி வரைக்கும், மேட்டு பாளையத்திலிருந்து சத்தி, கோபி வரைக்கும், காரமடையிலிருந்து தோளம்பாளையம், பில்லூர் வரைக்கும் பெரிய நாயக்கன்பாளையத்திலிருந்து கோவனான் போன்ற இடங்களுக்கு அகலமான பாதையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுமலைச்சாலைகள் திட்டத்தில் பாலமலை ரங்கநாதர் கோவிலுக்கு தார்ச்சாலை போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தோளம்பாளையம்—கோப்பனாரி பாதையை இன்றைய தினம் செப்பனிட்டு கொண்டிருக்கிறார்கள். அதை தார் போட்டு, அந்தப் பகுதியிலே வாழ்கிற ஆதிவாசிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேட்டுப்பாளையத்திலிருந்து கூடலூர் செல்வதற்கு நெல்லித்துறை வழியாக பாதையை அமைத்துத் தர வேண்டும். சிறுமுகையிலிருந்து சூலூர் மட்டத்திற்கு செல்வதற்கு ஒரு பாதையை அமைத்துத் தந்தால், மேட்டுப்பாளையத்திலிருந்து செல்கிற 38 மைல்கள், 13, 14 மைல்கள் குறைந்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், முக்கியமாக மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்கிற பாதையிலே இருக்கிற பாலம் இன்னும் சீக்கிரமாக கட்டி அதை முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. சு. பழனிசாமி]

[மாலை 4.50]

இந்த முக்கியமான வேலைகள் நம்முடைய ஆட்சியில் சீக்கிரமாக செய்து பாமர மக்களுக்கு உதவிடக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நகரத்திற்கும் ரோலர்கள் வாங்கித்தந்து அங்கே நடக்கிற வேலைகளை விரைவாகச் செய்வதற்கு ஒத்துழைப்புத்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாட்டர் பம்ப்கள் அடிக்கடி ரிப்பேராகி, குடிநீர் வசதி 3, 4 மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுவதைத் தவிர்க்க ஒவ்வொரு யூனியனுக்கும் அதிகமான மெக்கானிக்குகளை நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் 23, 81, 52 மீது விவாதத்திலே பங்கு கொள்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே 10 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்த காரணத்தினாலும், சென்னை நகரத்திலிருந்து இந்த சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்ற காரணத்தினாலும் இன்று சென்னை நகர மக்கள் படுகின்ற அல்லல்களையும், தொல்லைகளையும் இந்த சட்டமன்றத்திலே தெரிவிக்க வேண்டிய மாபெரும் பொறுப்பும் கடமையும் எனக்கு இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எண்சாண் உடலுக்கு சிரசே பிரதானம் என்பதைப்போன்று ஒரு மாநிலத்திற்கு தலைநகர்தான் பிரதானம் என்று சொல்கிற அளவுக்குத் தமிழ் அன்னையின் தவப்புதல்வியாக உள்ள சென்னை குமரி ஒரு காலத்திலே கொழுகொழுவென்று மதராஸாக இருந்தவள் இன்று அங்கமெல்லாம் தேய்ந்து எங்கு பார்த்தாலும் குழிவிழுந்த கன்னங்கள், குழி விழுந்த சாலைகள், ஒளியிழந்த கண்கள், எரியாத விளக்குகள், உடல் எல்லாம் கிழிந்த ஆடைகள் எங்குபார்த்தாலும் ஒட்டுப் போட்ட தெருக்கள், உடல் எல்லாம் வியாதியால் அழுகி துர்நாற்றமெடுக்கின்ற சாக்கடை. நீர்வழிந்தோடிக் கொண்டிருக்கின்ற நிலைமையில்தான் இன்று இருக்கிறாள் என்று சொன்னால் உள்ளபடியே நாம் அனைவரும் வேதனைப்படக்கூடிய விஷயம் ஆகும். புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அநாதைகள்; ஆதரவற்றவர்கள், கைம்பெண்கள், விதவைகளிடத்திலே பாசமும் பரிவும் உடையவர்கள். இன்றைக்கு சிடி பாதர்ஸ் இழந்த அநாதைகளாக சென்னை நகர மக்கள் இருக்கிறார்களே இவர்கள் பக்கம் ஒரு கண்ஜாடை விழக்கூடாதா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். இன்று சென்னை மாநகரத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால் அது இனிமேல் தீராது என்ற நிலைமையில்தான் தலைநகரை மாற்றவேண்டுமென்ற நிலைமைக்கு புரட்சித் தலைவர் வந்துவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். 1959 ஆம் ஆண்டு நினைவுகளை சற்று திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். **பேரறிஞர் அண்ணா அவர்கள்**

[டாக்டர். கே. சௌரிராஜன்] [1982 மார்ச் 13

வரியைக் குறைத்து வசதியைப் பெருக்குவோம் என்று சொல்லி கூவம் மணக்கும், சென்னை நகரம் அழகாக ஆகும் என்று எல்லாம் சொல்லி சென்னை மாநகராட்சியை தி.மு.க.வினர் பிடித்தார்கள். ஆனால், 23 ஆண்டுகள் ஆகிவிட்டன.

'The most beautiful city in Southern Metropolis'

என்று புகழப்பட்ட சென்னை இன்று அலங்கோலமாக காட்சியளிக்கின்றது என்று சொன்னால் அதற்குப் பொறுப்பாளி 1967 லிருந்து தொடர்ந்து பதவியிலே இருக்கின்ற நீங்கள் தான் என்பதை மனதிலே கைவைத்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் குறைகளைச் சொல்கிறேன் என்ற காரணத்திற்காக ஏதோ கேலியும் கிண்டலுமாகச் சொல்கிறேன் என்று என் கருத்துக்களைத் தள்ளி விடாமல் இந்தக் குறைகளையெல்லாம் தீர்ப்பதற்கு ஓரளவுக்கு யோசனை சொல்வதற்கு எனக்குத் தகுதி உண்டு என்ற காரணத்தினால் என்னுடைய யோசனைகளை செவிமடுத்து கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சியின் நிர்வாகம் இந்த அளவிற்கு இன்றைக்குச் சீர்குலைந்து போயிருக்கிறது என்றால் அதன் காரணங்களை நாம் நன்றாக ஆராய கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு மனைவி ஒரு கணவனைத்தான் திருப்திப் படுத்த முடியும்; ஆனால் பல பேருக்கு ஒரு மனைவி வாழ்க்கைப்படுவாளேயானால் அவளுடைய வாழ்க்கை சீர் குலைந்து போய்விடும். அதைப் போலத்தான் இன்றைக்கு மாநகராட்சியின் நிர்வாகம் ஆர்.டி. அண்ட் எல்.ஏ. என்ற ஒரு டிபார்மெண்டைவிட்டு ஒரு புறத்திலே மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் பிய்த்துக் கொண்டு போய் விட்டார்; ஒரு புறத்திலே உள்ளாட்சித்துறை அமைச்சர் பிய்த்துக் கொண்டு போய்விட்டார்: மற்றொரு புறத்திலே கல்வித் துறை பிய்த்துக் கொண்டு போய்விட்டது; மற்றொரு புறத்திலே மக்கள் நல வாழ்வுத் துறை அமைச்சர் பிய்த்துக் கொண்டு போய் விட்டார்.

'So many masters for the same city'
So many departments.

மாநில சுயாட்சி கேட்கின்ற நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படியே போனால் வருங்காலத்திலே சென்னை மாநகர சுயாட்சி கேட்கின்ற நிலைமை உருவாகிவிடும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப் பல இலாக்காக்களிடையே ஒரு கோவார்டினேஷன் இல்லாத காரணத்தால் இன்றைய தினம் மாநகராட்சியின் நிர்வாகம் மிகவும் சீர்கேடடைந்திருக்கிறது.

பல மாறுதல்களை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். ஒரு காலத்திலே வாட்டர் சப்ளை, சிவரேஜ், கன்சர்வன்சியெல்லாம் ஒரே இடத்திலே இருந்தது. யாரோ கடன் கொடுக்கிறார்கள் என்பதற்காக வாட்டர் சப்ளை ட்ரெய்னேஜ் போர்டு என்று ஒரு



1982 மார்ச் 13] [டாக்டர் கே. சௌரிராஜன்]

அமைச்சர் எடுத்துக் கொண்டார்; இன்னொரு இடத்திலே, எம்.எம்.டி.ஏ. என்ற ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டு அதன் மூலமாக யார் யார் எப்படித் திட்டமிட வேண்டுமென்று எடுத்துக் கொண்டார்கள். இப்படியேதான் கன்சர்வன்சி சுகாதார அதிகாரியிடத்தில் இருந்தது; அது கன்சர்வென்சி ரோட்ஸ் அண்ட் பில்டிங்ஸ் என்று மாற்றப்பட்டு இப்போது ரோடு கூலியா அல்லது கன்சர்வன்சி கூலியா என்று தெரியாத அளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கிறது. குடிசைப் பகுதி மாற்று வாரியம் என்று ஏற்பட்டு, குப்பைகள் அந்தப் பகுதியில் நிறைய இருக்கிறது என்று கேட்டால் குப்பை கூட்டுபவர்கள் சொல்கிறார்கள் இது கார்ப்பரேஷனைச் சேர்ந்தது அல்ல, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைச் சேர்ந்தது என்று சொல்லுகின்ற அவல நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அவல நிலைமையைத் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கக் கூட இல்லாமல் இப்படி உட்கார்ந்துக் கொண்டிருக்கிறோமே என்பதற்காக நான் வேதனைப் படுகிறேன். நான் ஒரு பத்திரிகையில் கார்ட்டூன் ஒன்றைப் பார்த்தேன். கொசு வலைக்குள் ஒருவன் தூங்கிக் கொண்டிருக்கிறான், அந்தக் கொசு சொல்லுகிறது, பொட்டைப் பையா, வெளியே வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன், உள்ளே புகுந்து அடைந்துக் கொண்டிருக்கிறாயே என்று சொல்வதைப் போல் அது போடப்பட்டிருக்கிறது. இப்படி மாநகராட்சியின் நிர்வாகத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் கார்ட்டூன் வருகின்ற அளவிற்கு இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்திலே சென்னைக்கு வெளிநாட்டிலேயிருந்து என்னுடைய உறவினர் ஒருவர் வந்தார். மெரீனா பீச் வழியாக வந்து கொண்டிருந்தபொழுது வெண்சாமரம் வீசுவதைப் போன்று துடைப்பங்களை வைத்துக் கொண்டு பல பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே 'லிட்டர் ப்ரீ ஜோன், என்று, தூய்மைப் பகுதி என்று போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் மற்றப் பகுதிகளெல்லாம் லிட்டர் புல் ஜோன்" என்று, அசுத்தமான பகுதி என்று அர்த்தமா என்று கேட்டார். இப்படி ஒரு இடத்தில் மட்டும் சில நபர்களை வைத்துச் சுத்தம் செய்வது போதாது; சென்னை நகரம் முழுவதும் அந்த நிலைமையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் இவ்வாறு சொல்வதைக் கேலியாகச் சொல்கிறேன் என்று நினைக்காமல் அவற்றைக் களைவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சியின் நிதி ஆதாரம் சரியாக இல்லை என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும்; சென்னை நகர மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இப்பொழுது மாநகராட்சியின் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்றால்,

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1982 மார்ச் 13

என்ற அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். நீங்கள் எது எதற்கோ அவசரச் சட்டங்களைப் போடுகிறீர்கள். நீங்கள் முதன்முதலாகச் செய்ய வேண்டிய காரியம்,

You scrap the City Municipal Act

புதிதாக ஒரு சட்டத்தை இயற்றாமற் போனால் சென்னை நகரத்தில் யாரும் வாழ முடியாத நிலை ஏற்படும் என்பதால்,

There must be a lot of thinking on the City Municipal Act.

50, 60 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட அந்தச் சட்டத்தை உடனடியாக மாற்றுவதற்கு யோசனை செய்து முயற்சியெடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சியின் வருமானத்தை அதிகரிக்க என்னென்ன யோசனைகள் உண்டு என்பதை என்னுடைய சிறிய அறிவுக்கு எட்டிய வகையில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சியில் கிட்டத்தட்ட 40 இலட்சம் பேர் வசிக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். ப்ளோட்டிங் பாபுலேஷனாக இருக்கிறது. எங்கிருந்தோ வருபவர்களுக்கெல்லாம், இங்கே வரி போட்டு தண்ணீர் வசதி, கக்கூஸ் வசதி போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறோமே அது நியாமானதுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே, மற்ற இடங்களிலுள்ளதைப் போல,

Why should we not impose pilgrim tax?

இங்கே சென்னை நகரத்திற்கு வருபவர் இந்த நகரத்திலுள்ள வசதிகளை அனுபவிக்கிறார்களே டெம்பரரியாக (குறுக்கீடு)

(மாலை 5.00)

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் பேசுகின்றபொழுது எங்கிருந்தோ வருகின்றவர்களுக்கெல்லாம் சென்னை நகரத்திலே வசதி செய்து கொடுக்கிறோமே, அதற்காக தனியாக வரி வசூல் செய்யக் கூடாதா என்று கேட்கிறார்கள். கிராமத்திலேயிருந்து அரிசியும் நெல்லும் வராவிட்டால் அவர்கள் எப்படி சாப்பிடுவார்கள் என்று அறிய விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி.)

**டாக்டர் கே. சௌரிராஜன் :** எங்கிருந்தோ என்று சொல்வது மற்ற மாநிலங்களிலிருந்து என்ற பொருள்பட எடுத்துக் கொள்ளலாம் என்று கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதோடு போதும் முடித்துக் கொள்ளுங்கள்.



1982 மார்ச் 13]

Dr. K. SOURIRAJAN : I have been a Councillor of the Corporation I am a responsible citizen and I have to make better suggetions.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமர்ந்திருக்கிற எல்லா உறுப்பினர்களும்

responsible citizens and responsible members.

Dr. K. SOURIRAJAN : People have sent me here to represent their grievances.

அடுத்தபடியாக, நகர்ப்புற நிலவரியை நாம் உயர்த்திக் கொண்டிருக்கிறோம், அதை வசூலித்துக் கொண்டிருக்கிறோம். முதலிலே நாம் சொன்னோம், நகர்ப்புற நிலவரியைச் சென்னை மாநகராட்சியினுடைய அபிவிருத்திக்காகக் கொடுக்கப்போகிறோம் என்று. அந்த வகையில், சென்னை மாநகராட்சியினுடைய அபிவிருத்திக்காக, சென்னை நகர்ப்புற நிலவரி எந்த அளவுக்கு வசூலிக்கப்பட்டு மாநகராட்சிக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அடிஷனல் சர்சார்ஜ் ஆன் சேல்ஸ் டாக்ஸ் சட்டம் சென்ற மாமன்றக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்டது. அதன் மூலமாக எத்தனை கோடி ரூபாய் சென்னை நகர அபிவிருத்திக்காகச் செலவழித்தீர்கள் என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை மாநகராட்சி வருவாயைப் பெருக்க ஏராளமான அளவுக்கு வழிகள் இருக்கின்றன. சென்னை மாநகராட்சியிலே தொழில் வரி விதிக்கப்படுகிறது. தொழில் இல்லாத யாரும் சென்னை மாநகரத்திலே இருக்கவே முடியாது. உதாரணமாக, ரூ. 200, ரூ. 300 மாதம் ஒன்றுக்குச் சம்பாதிக்காதவர் சென்னை நகரத்திலே வாழவே முடியாது. ரூ. 300-க்கு மேல் சம்பாதித்தால் நிச்சயமாகத் தொழில் வரி கட்ட வேண்டும். 40 இலட்சம் பேர்கள் உள்ள சென்னை மாநகரத்திலே குறைந்த பட்சம் 1 இலட்சம் பேர்களுக்கு மேல் உள்ளவர்களிடம் தொழில் வரி வசூலிப்பதில்லை. ஆகவே, தொழில் வரியை நிச்சயமாக வசூலித்தால், சென்னை நகரத்திலே வசதிகளை அனுபவிக்கின்ற தொழில் செய்கின்ற ஒவ்வொருவரும் அதிகமான அளவுக்கு நமக்குப் பணம் கொடுக்க முடியும்.

கடைசியாக, இங்கே சென்னை மாநகரத்திலே சினிமா கொட்டகைகள் எத்தனையோ உள்ளன. அந்தச் சினிமா கொட்டகைகளின் மூலம் தனியாருக்கு எந்த அளவுக்கு வருமானம் வருகிறது? அந்தச் சினிமா கொட்டகைகளை மாத்திரம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக்கினால், நிச்சயமாக அதன் வருவாயை ஏராளமாக்க முடியும். மாநகராட்சி வருவாயைப் பெருக்க உடனடியாக ஒரு குழு அமைத்து, சிட்டி முனிசிபாலிட்டிஸ் ஆக்டுக்கு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றி

னாலொழிய விரைவிலே சென்னை நகரத்தை விட்டு மக்கள் வெளியேறும் அவல நிலை உருவாகும் என்று தெரிவித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக மானியக்கோரிக்கைகளை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற முறையிலே அல்லாமல், தமிழ்நாட்டின் குடிமகன் என்ற முறையிலே இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன். இந்தியாவிலேயே தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது இங்குதான், ஒரு பழமொழி சொல்வார்கள், கிராமம் முன்னேறினால் நகரம் முன்னேறும்; நகரம் முன்னேறினால் மாநகரம் முன்னேறும். அதேபோல், நீர் உயர நெல் உயரும்: நெல் உயர குடி உயரும்; குடி உயர கோன் உயரும் என்று சொல்வார்கள். அம்முறையில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சிதம்பரத்தில் கீரப்பாளையம் ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அது நல்லமுறையில் செயல் பட்டிருக்கிறது என்பதை நாடே அறியும். அதற்காக, தானைத் தலைவர் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

சிதம்பரம் தாலுக்கா, காட்டுமன்னார் கோவில் தாலுக்கா டெல்ட்டா பிரதேசம். ஆறுகள், வாய்க்கால்கள் அதிகம் ஓடுகின்ற காரணத்தினாலே எல்லா சாலைகளையும் உயரப்படுத்த ஒரு தனித் திட்டம் போடப்பட்டிருக்கிற காரணத்தால், அதை ஒரு சிறப்புத் திட்டமாகக் கொண்டுவந்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேத்தியாத்தோப்பு பாலம் சோழர் காலத்திலே கட்டப்பட்ட புராதனமான பாலம், மிகக் குறுகிய பாலம். அது நீர்ப்பாசனப் பாலம். அதை அகலப்பாலமாக ஆக்க வேண்டுமென்றும், அதே போல் வெள்ளாற்றில் பழம் பிரசித்தி பெற்ற பரங்கிப் பேட்டை பேரூராட்சியையும், கிள்ளை பேரூராட்சியையும் இணைத்து ஒரு இணைப்புப் பாலம் அமைத்தால் நிச்சயமாக, கிழக்குக் கடற்கரைசாலையாக விளங்கும் பிச்சாவரம் சுற்றுலா முக்கியத்துவம் அடைய வசதியாக இருக்கும். ஆகவே, அந்தப் பாலத்தை அரசு உடனே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய சிதம்பரம் தொகுதி பின்தங்கிய பகுதியாகும். திருமுட்டம் பேரூராட்சியினுடைய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ்





சிதம்பரம் நகராட்சிக்கு ஒரு ரோடு ரோலர் வாங்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு மா. சின்னராசு :** பேரவை துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்திலேயே நமக்கு அடிப்படை உரிமை என்றும், குடியரசு அமைப்பு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை என்றும், டைரக்டிவ் பிரின்சிபிள் என்றும் வரையறுக்கப்பட்ட அந்த அடிப்படையில் அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மக்களுக்கு உரிமை அடிப்படை வசதிகளையும், கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் அரசு தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தினை நமது உள்ளாட்சித் துறை சட்டத்திலே அதனுடைய ஆப்ஜக்ட் என்று சொல்லப்படுகிற பகுதியிலே 1958ஆம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தை நிறுவினார்கள்.

A comprehensive programme of measures has been framed and embodied in N.E.S. and community development and in pursuance of such scheme, various inputs have been organised, works constructed and other facilities provided in rural areas.

என்று சொல்லி, அந்த கம்யூனிட்டி டெவெலப்மென்ட் திட்டங்களை கிராமிய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் பஞ்சாயத்து அமைப்பு என்ற அந்த அடிப்படையில் ஏற்படுத்தி இந்த கிராமிய வளர்ச்சி திட்டங்கள் இன்றுதான் அந்த நோக்கங்களை ஈடேற்றுகின்ற திட்டங்களாக மாறி இருக்கின்றது என்பதை, புரட்சித் தலைவர் அரசு மெய்ப்பிக்கிறது என்பதைத்தான் இன்று சமர்ப்பித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1958-லே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருந்தாலும்கூட மத்தியில் இன்றைய பிரதம அமைச்சர் பொறுப்பேற்ற பின்னாலேதான் அந்த டைரக்டிவ் பிரின்சிப்பிள், அதாவது அரசின் கடமைகளை அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தேவைப்பட்டால் அந்த அடிப்படை உரிமை என்பதைக்கூட மாற்றி அமைத்து எப்படி நாட்டு மக்களுக்கு அளிக்கலாம் என்ற உணர்வை இந்த நாட்டிலே ஏற்படுத்தினார்கள். அந்த உணர்வின் அடிப்படையிலேதான் இன்றைக்கு இந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை நான் மன்றத்தினுடைய உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கின்றேன்.

அந்த அடிப்படையைக் கொண்டுதான் இன்று கிராமவளர்ச்சி திட்டத்திற்கும், வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும், ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டத்திற்கும் கிட்டத்தட்ட மாநில

[திரு. மா. சின்னராசு] [1982 மார்ச் 13

பட்ஜெட்டில் ஐந்தில் ஒரு பங்கு அதாவது 200 கோடிக்கு மேற்பட்ட தொகையை புரட்சிக் தலைவர் இன்றைக்குத் தந்து, தன்னிறைவுத் திட்டம் என்றும், மத்திய அரசின் உதவியோடு நிறைவேற்றப் படுகிற வேலைவாய்ப்புத் திட்டம் என்றும், ஹில் ஏரியா டெவெலப்மென்ட் புரோக்கிராம் என்றும் மானியக் கோரிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன என்பதைக் கூறி, இது தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்லாமல் இந்தியாவுக்கே வழிகாட்டுகின்ற திட்டமாக அமைந்திருக்கின்றது என்பன்தக் கூறி, இந்தத் திட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகளில் எடுத்துக் கொள்ளப்படுகிற சிறுபாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கோவை மாவட்ட மக்களுக்குப் பெரும் குறை இருக்கிறது.

அங்கே சிறு பாசனத்திற்கு அணை கிடையாது. வாய்க்காலகளும் அதிகம் கிடையாது. ஆகவே அந்தப் பகுதியில் சிறுபாசனத திட்டத்திற்கு என்று ஒதுக்கப்படுகிற அந்தத் தொகை செலவழிக்கப்படுவதில்லை. ஏன் செலவழிக்கப்படுவதில்லை என்று கேட்டால் அங்கே சிறுபாசனத்திற்காக வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் குட்டைகளையும் செக்டாம்களையும் ஏற்படுத்தினால் மேலும் அங்கே இருக்கின்ற கிணறுகளுக்கு நிரந்தரமான நீர் ஊற்று ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே அரசு அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் சிறுபாசனத் திட்டம் என்று தன்னிறைவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த அம்சத்திற்கு சிறு குட்டைகளை, செக்டாம்களை அமைப்பது என்ற முறையில் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ள நான்கு பேரூராட்சிகள் தங்களுடைய ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியாத அளவில் இருக்கின்றன. தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப் படும்போது தொண்டாமுத்தூரில் உள்ள அனைத்துப் பேரூராட்சி மன்றங்களையும் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் சிறுவாணி திட்டத்தில் அந்தப் பகுதிகளுக்கு நீர் வினியோகம் செய்யப்படுகிற திட்டம் பூர்த்தியாகிவிட்டது. அவைகள் எல்லாம் கடன் திட்டங்களாக இன்று அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பேரூராட்சி மன்றமும் கிட்டத்தட்ட மூன்றிலிருந்து 5 லட்சம் வரையில் குடிநீர் வடிகால் வாரியத்துக்கோ அல்லது கோவை மாநகராட்சிக்கோ திருப்பிச் செலுத்தவேண்டிய கடனைப் பெற்றிருக்கின்றன. எந்தக் காலத்திலேயும் இந்தக் கடனை கட்டும் சக்தி அந்த பேரூராட்சி மன்றங்களுக்கு இல்லை. ஆகவே அந்தப் பேரூராட்சிகளுக்கும் கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்களுக்கும் அரசே ஏற்றுக் கொண்டதைப்போல, அந்தத் தொகையை அரசு மானியமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். **நன்றி. வணக்கம்.**



1982 மார்ச் 13]

[மாலை 5.10]

* **திரு. செ. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டு முன்னேற்றத்திற்கு ஊராட்சி துறை மிகவும் அவசியம். இந்தியத் திருநாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களில் தமிழகத்திலே மட்டும்தான் தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகிறது. தமிழகத்தின் கிராம வளர்ச்சிக்கு இது ஒரு பொற்காலமாகும். எம்.எல்.ஏ.-க்கள் தைரியமாக தொகுதியைச் சுற்றிவர இத்திட்டம் பெரிய துணை செய்கிறது. இப்போது தன்னிறைவுத் திட்டத்தில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பூண்டி, திருவள்ளூர், ஆகிய இரண்டு ஒன்றியங்கள் சேர்க்கப்பட்டு, அந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுகிறது. அதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1981-82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகிற ஒன்றியங்களில் அந்தப் பணி இந்த மாத இறுதிக்குள் முடித்துவிடவேண்டும் என்று அரசு உத்தரவு. இன்னும் 3 மாதங்களில் அனைத்துப் பணிகளும் முழுமையாக முடித்துவிட காலத்தைக் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு சிமென்ட் பற்றாக்குறை குறித்த காலத்தில் கிடைக்காததால் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது. மேலும், இணைப்புச் சாலைகள் போட ரோடு ரோலர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பது ஒரு காரணமாகும். மேலும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் இப்போது நிதிநிலைமை காரணமாக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆரம்பத்தில் எடுக்கப்பட்டபோது திருவள்ளூர் ஒன்றியத்தில் சில முக்கியமான ரோடுகள் விடப்பட்டன. மேலும் 45 இலட்சத்திற்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, இப்போது அதைக் குறைத்தால் அந்த ஒன்றியம் தன்னிரைவு பெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். செங்கை மாவட்டத்திலே தன்னிறைவுத் திட்டம் ஏறக்குறைய 90 சதவீதம் முடித்துள்ள திருவள்ளூர் ஒன்றியத்திற்கு முதலில் அதற்கு ஒதுக்கிய 45 இலட்சம் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அரசு அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இணைப்புச் சாலைகளுக்கு ஒதுக்கிய பணம் முழுவதையும் அந்த ஒன்றியத்திற்கு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தன்னிறைவுத் திட்டத்திலே விட்டுப்

போன பணிகள், குறிப்பாக, இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், மகப்பேறு இல்லங்கள், ஆதிதிராவிட மயான பகுதிகளில் பாதைகள் அமைக்கும் திட்டம், என்.ஆர்.இ.பி. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்த திட்ட வேலைகளை தன்னிறைவு திட்ட வேலைகள் போலவே செம்மையாக செய்ய சில விதிமுறைகளை உடனடியாக மாற்றிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்.ஆர்.இ.பி. வேலைகளில் வேலைகளைச் செய்ய எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இரண்டு யூனியன் இன்ஜினீர்களை அவசியம் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் வேலைகள் செம்மையாக நடைபெற ஏதுவாக இருக்கும். தன்னிறைவுத் திட்டமும் ஊராட்சி மன்றங்களின் வளர்ச்சியை அறிய மாவட்ட அளவில் வருவாய்த்துறை அதிகாரிகள் இருப்பது போன்று கிராம வளர்ச்சிக்கு மாவட்ட அதிகாரிகள் தனியாக நியமிக்கப்பட வேண்டும். அதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு பணிகளை கவனிப்பதற்காக அரசு ஜீப்புகள் வழங்கியுள்ளது. முதலில் 10 ஜீப்புகள் கொடுத்துள்ளதாக அறிகிறேன். ஆனால் செங்கை மாவட்டத்தில் திருவள்ளூர் கோட்டத்தில் 6 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகிறது. ஆனால் அந்தக் கோட்டத்திற்கு ஜீப்பு தரவில்லை என்று அறிகிறேன். அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டும். ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் அவசியம் இருக்க வேண்டும்.

நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் இன்னும் சில சாலைகளை 10 ஆண்டுகளுக்கு மேலாக நெடுஞ்சாலையாக மாற்றியும் இன்னும் தார் சாலையாகப் போடவில்லை. குறிப்பாக திருவள்ளூர்-சென்னை நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்துபோகும் தண்ணீர் குளம், புளியூர், பாக்கம், வழியாக வீரராகவபுரம் செல்லும் சாலை இன்னும் 4 கி.மீ. தார்சாலையாக இல்லை. அந்த ஒரே காரணத்தால் அந்தப் பக்கத்தில் 20 கிராமங்களுக்கு மேல் உள்ள மக்கள் சுமார் 8 கி.மீ. தூரம் நடந்து வரவேண்டிய அவல நிலை இருக்கிறது. மேலும், சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்து செவ்வாய்ப்பேட்டை, கீழானூர் வழியாக ரெட்ஹில்ஸ் செல்லும் சாலை, நெடுஞ்சாலையாக மாறியும் தார் சாலையாகவில்லை. அதனையும் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த





பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருவள்ளூர்-மெய்யூர் நெடுஞ்சாலை குறுக்கே ஒரு ஆறு இருக்கிறது. அதனால் மெய்யூர் மற்றும் பல கிராமங்களுக்கு இதனால் பஸ் வசதி இல்லாமல் 5 கி.மீ. அளவிற்கு நடந்து வரவேண்டிய சூழ்நிலை அந்த கிராம மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. எனவே அந்த ஆற்றின் குறுக்கே மிக நீண்ட நெடுங்காலமாக தரைப்பாலம் கட்டிக்கொடுக்குமாறு கேட்டும் அது சேர்க்கப்படவில்லை. தயவு செய்து அடுத்த ஆண்டிலாவது இதைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசு தன்னிறைவுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களில் அந்தப் பணிகளை நிறைவேற்றுவது போல இப்போது பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் இந்த ஆண்டு விஸ்தரித்து இருக்கிறது. என்னுடைய திருவள்ளூர் நகராட்சி 3-ம் நிலையைச் சேர்ந்தது. போதிய வருமானம் இல்லாத நகராட்சியாக இருக்கிறது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகராட்சியாக இருந்தும் எந்தவிதமான முன்னேற்றமும் அடையாமல் உள்ளது. போதிய சாலைகள் இல்லை. கழிப்பிடங்கள் இல்லை. வசதியான பேருந்து நிலையம் இல்லை. ஆகவே, திருவள்ளூர் நகராட்சியை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

* திரு. என். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டுக்கான சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றியும், தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

1982–83 ஆம் ஆண்டுக்கான சாலை மேம்பாட்டுத் திட்டங்களில் புரட்சித் தலைவரின் அரசு மாபெரும் சாதனை புரிந்துள்ள திட்டங்களில் ஒரு சில திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1982–83 ஆம் ஆண்டில் பேருந்து வழித் தடங்கள் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்காக 1,100 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்கும், பள்ளிக்கட்டிடங்கள். தாய்சேய் நல விடுதிகள், மயானப் பாதைகள், ஊரக மருந்தகங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம், இணைப்புச் சாலைகள் முதலானவற்றை துரிதமாக செயல்படுத்துகின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எனது வரகூர் தொகுதி தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் மிகவும் பின்தங்கிய தொகுதி. இத்தொகுதியில் 1957 ஆம் ஆண்டு மருதை ஆற்றில் தூத்துக்குடி இரயில் கவிழ்ந்து, நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் இழந்தார்கள். இதற்குக்

[திரு. என். பெருமாள்] [1982 மார்ச் 13

காரணம் மருதை ஆற்றின் குறுக்கே வலுவான பாலம் இல்லாத காரணத்தால்தான். மழைக்காலங்களில் இந்த ஆற்றில் அதிக வெள்ளம் வருவதால் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் வெளி இடங்களுக்கு ஆற்றைக் கடந்து செல்ல முடியாமல் ஒரு தீவில் வாழ்பவர்களைப்போலவே வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளாகியும் இதற்கு முன்பிருந்த அரசு இதனை கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். தற்போது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மருதை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதை எனது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் வேப்பந்தட்டையிலிருந்து செந்துறை — வழி வாலி கண்டபுரம், கீழப்புலியூர், பரவாய், புதுவேட்டக்குடி. காடூர், செந்துறை வரை இணைப்புச் சாலைகளை செப்பனிட்டால் நான்கு ஒன்றியங்களுக்கு போக்குவரத்து வசதி கிடைக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

வேப்பூர் ஒன்றியத்தில் வேப்பூரிலிருந்து ஒகலூர் செல்லும் சாலையின் குறுக்கே சின்னாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் குறுக்கே பாலம் ஒன்று அமைத்து அப்பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதி அளிக்க வேண்டுகிறேன்.

ஆலத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுவாச்சூரிலிருந்து கொட்டரை - ஆதனூர் சாலையை சீர்ப்படுத்தி போக்குவரத்து வசதி அளிக்க வேண்டுகிறேன்.

ஆலத்தூர் சேட்டியிலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் பேருந்துகள் சென்றுகொண்டு இருப்பதால் தார் இல்லாமல் உள்ள சாலையை தார்போட்டு செப்பனிட்டு போக்குவரத்துக்கு உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பேரூராட்சி லப்பைக்குடிக்காடு என்ற ஊர் ஒன்றுதான். இவ்வூரின் மிக அருகில் வெள்ளாறு என்னும் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு எடுத்து லப்பைக்குடிக்காடு, திருமாந்துறை, கழனிவாசல், ஒகலூர் சீகூர் முதலான கிராமங்களை மிகவும் பாதிக்கிறது. ஆகவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஆற்றின் ஓரத்தில் தடுப்புச் சுவர் எழுப்பி, அப்பகுதி மக்களை வெள்ள அபாயத்திலிருந்தும் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. என். பெருமாள்]

மேலும் திருமாந்துறை-சீகூர் பார்டர் வரை சாலை மிகவும் குறுகிய பாதையாக இருப்பதால் அருகில் உள்ள சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி சேதம் ஏற்படுகின்றன. எனவே, பாதையை அகலப்படுத்தி உதவ வேண்டுகிறேன்.

பேரழியிலிருந்து கொளக்காநத்தம் வழி மருவத்தூர், பனங்கூர், குரும்பாபாளையம், ஆயிலூர் குடிக்காடு கொளக்காநத்தம் சாலையை சீர்ப்படுத்தி அப்பகுதி மக்கள் போக்குவரத்து வசதி பெற வேண்டுகிறேன்.

இதுவரை எனக்கு பேச வாய்ப்பளித்த சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் வணக்கம்.

(மாலை 5.20)

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், சாலைகளும், பாலங்களும் என்ற மானியக் கோரிக்கையின மீது என்னுடைய கருத்தினை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் என்னுடைய தொகுதியிலே இரண்டு ஒன்றி யங்கள் இருக்கின்றன. ஒன்று குத்தாலம், இன்னொன்று குட வாசல். சென்ற ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் குத்தாலம் ஒன்றியம் சேர்க்கப்பட்டு வேலைகள் நடந்தன. ஆனால் சாலை வேலைகள் செய்யப்பட்டபோது பெரும்பாலான சாலைகள் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் கட்டப்படாமல் விடப்பட்டன. ஆகவே அந்த சாலைகளை மீண்டும் சேர்த்து எல்லா சாலைகளையும் கப்பி சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் செயலபடுத்தப்படுகின்ற
நேரத்திலே சில கிராமங்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை கூட தீர்க்கப்
படவில்லை. அப்படி விடப்பட்டிருக்கின்ற எல்லா கிராமங்
களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சிகளில் குழாய் கிணறுகளில்
பழுது ஏற்படுகின்றபோது அவ்வப்போது பழுது பார்க்கப்படா
மலும் பம்புகளுக்கு வாஷர் நட்டுகள் போடப்படாமலும் இன்
றையதினம் பழுது பட்டு வருகின்றன. ஊராட்சி மன்றத்தில்
தலைவர் இல்லாத காரணத்தால் அந்த வேலைகளைச் செய்வதில்
தடை ஏற்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் அதில் கொஞ்சம் கவனக்

[திரு. இரா. இராசமாணிக்கம்] [1982 மார்ச் 13

குறைவாக இருந்து அலட்சியம் காட்டுவதால் மக்களுக்கு இன்றையதினம் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகிற நிலைமை இருக்கின்றது. அந்தக் குறையினை உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் வெட்டுத் தீர்மானத்திலே கொடுத்திருக்கின்ற சில கோரிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நிறைவேற்றி வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய கவனத்திற்கு கொண்டுவர மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எனக்கு இரண்டு நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறார்.

ஊராட்சி ஒன்றியங்களில் கிராம மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த மருந்தகங்களில் பெரும்பாலான நாட்களில் டாக்டர்கள் இல்லாத நிலைமை இருக்கின்றது. பெரம்பூர் மருந்தகத்திலே 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் முதல் மருத்துவரே இல்லை. அதுவரை பணியாற்றிய மருத்துவர் ஓய்வுப் பெற்றுச் சென்று விட்டார். அதற்குப் பிறகு தொடர்ந்து இதுவரையில் மருத்துவர் நியமிக்கப்படவில்லை. இது குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர் மருத்துவ அதிகாரிக்கு பல முறை கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

அடுத்து கங்காதரபுரம் என்ற ஊரில் ஊரக மருந்தகம் இருக்கின்றது. அங்கேயும் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2 ஆம் நாள் முதல் மருத்துவர் இல்லை. வாணாதிராசபுரம் கிராமிய மருத்துவமனைக்கு 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து அரசு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கான கட்டிடம் கட்டப்பட்டு, தளவாடச் சாமான்கள் எல்லாம் கூட வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றது. 18 மாதங்களாக அங்கே மருத்துவர் நியமிக்கப்படவில்லை. இந்தக் குறையைச் சுட்டிக் காட்டி ஆணையர் அவர்கள் மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு கடிதம் எழுதி இருக்கிறார். பல கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். இப்படி 18 மாதங்களுக்கும் மேலாக ஆகியும் மருத்துவர் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே உடனடியாக இவற்றிற்கு மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

நானும் கூட மருத்துவ அதிகாரியை இது குறித்து நேரடியாகப் பார்த்துச் சொல்லி இருக்கிறேன். இதுவரை நியமிக்கப்படவில்லை. கட்டிடம் கட்டப்பட்டு தளவாடச் சாமான்கள் எல்லாம் வாங்கி வைக்கப்பட்டதற்குப் பிறகும் மருத்துவர் இல்லாத நிலைமை இருக்கின்றது. அதற்கு உடனடியாக ஆவனச் செய்ய வேண்டும். அல்லது மருத்துவர் நியமிக்கின்ற பொறுப்பினை ஆணையருக்காவது வழங்கி அவர் நியமிக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.



1982 மார்ச் 13] [திரு. இரா. இராசமாணிக்கம்]

அடுத்து என்னுடைய தொகுதி காவேரி ஆறு பாய்கின்ற தொகுதியாகும். காவிரி ஆறும், அதில் இணைந்திருக்கின்ற 15-க்கும் மேற்பட்ட கிளை ஆறுகளும் அந்தப் பகுதியிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள மக்களுக்கு வசதியாக சில பாலங்கள் கட்டப்பட்டிருந்தாலும் கூட அவை போதுமானதாக இல்லை. திருவாடுதுறை-புதூர் சாலை வீர சோழன் ஆற்றிலும், மஞ்சலாற்றிலும் பாலம் கட்டப்பட்டிருக்கின்றது. நண்டலாற்றில் வண்டிப் பாலம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நண்டலாற்றிலே பாலம் கட்டுவதற்காக இப்போது நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்னிலம்-மானந்தகுழி சாலையில் அரசலாற்றிலே ஒரு பாலம் முன்பு கட்டப்பட்டுள்ளது. கட்டப் படாமல் பாக்கி உள்ள திருமலைராசன் ஆற்றிலும், திருமலாரிலும், நூலாறிலும் பாலங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 28, 39, 52 ஆகிய எண்களில் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும், சாலைகளும், பாலங்களும், சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சார்பிலே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள சமர்ப்பித்துள்ளார்கள். அந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையினைத் துவக்குகிறேன். சென்ற ஆண்டு நான் இதே மானியக் கோரிக்கையின் மீது இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு ஒரே ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு அந்தக் கோரிக்கைக்காக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் பழங்குடியினர் நலத் திட்டத்தின் மூலம் 194 இலட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்து 3 பெரிய சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதை பாராட்டுகிறேன். நெடுஞ்சாலைத் துறையின் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலும், நெடுஞ்சாலை ஊரக வளர்ச்சித் துறையின் மலைப் பகுதிச் சாலை மேம்பாடு திட்டத்திலும், அல்லது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கொல்லி மலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள இடங்களில், சாலைகள் அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1982 மார்ச் 13

அடுத்ததாக கோயிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு வசதியாக செம்மேடு-லிருந்து கோயிலூர் அருகிலுள்ள பாலத்தை புதுப்பித்து அங்கே பேருந்துகள் செல்ல வசதி ஏற்பட செய்ய வேண்டுகிறேன். அது மட்டும் அல்லாமல் என்னுடைய தொகுதியில் மங்களாபுரம் பகுதியிலிருந்து உரம்பு மெட்டலா சாலையை தார் சாலையாகப் போட்டுக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல செம்மேடு-லிருந்து கோயிலூர் வரையில் உள்ள 12 கிலோ மீட்டர் சாலையையும், செம்மேடிலிருந்து வாசலூர்பட்டி வரையில் உள்ள 4 கிலோ மீட்டர் சாலையையும் செப்பனிட்டுத் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வலப்பூர் பிரிவு பகுதியிலிருந்து குழிவளவு வரை, நட்டுக்குழி கிராமத்தின் வழியாக 25 கி.லோ மீட்டர் தூரத்தில் ஒரு புதிய சாலையை அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள காரை கிணறு கிராமத்துக்குச் செல்லும் சாலையில் உள்ள பாலத்தை புதியதாக அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் அந்தப் பாலம் பழுதடைந்து மிக மோசமான நிலையில் இருப்பதால், அந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாப்புத் தரும் வகையில் அதை புதியதாகவே ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சமுதாய நல வளர்ச்சி, சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக் கொண்டு, இன்றையதினம் நம்முடைய நாட்டிலே தன்னிறைவுத் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வரும் சிறப்பினை சொல்ல வருகிறபோது, என்னுடைய தொகுதியிலே, சங்கராபுரம் கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளிலே தன்னிறைவுத் திட்டம் மிக நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு, அதன் காரணமாக நானும், என்னுடைய தொகுதி மக்களும் பூரிப்படையத் தக்க நிலையில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்கள் தமிழக முதல்வர் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் மிக பாராட்டி போற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இதிலே இன்னொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்வராயன் பகுதியில் உள்ள மலை வாழ் மக்களுக்காக இரண்டு சாலைகளை பரிகம்-லிருந்து வெள்ளிமலை ; வெள்ளிமலையிலிருந்து-சாளாக்காடு ஆகிய இரண்டு சாலைகளை 6 கோடி ரூபாயிலே திட்டமிட்டு



1982 மார்ச் 13] [திரு. சோ. கலிதீர்த்தான்]

அந்தச் சாலைகளின் பணி முதற் கட்டமாக துவங்கியிருப்பதை பார்க்கும்போது அந்தப் பகுதியில் உள்ள மலை வாழ் மக்கள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும், செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் மிகவும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படையாகவே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலிருக்கும் கல்வராயன் பகுதியிலிருந்து சின்ன திருப்பதி என்று சொல்லப்படும் பகுதி வரையில் ஒரு சாலை அமைத்துக் கொடுத்தால், அங்கு வரும் பக்தர்கள் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை தரிசிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்த வகையிலே அந்தச் சாலையை அமைத்துக் கொடுத்து, அந்த பக்தர்களுக்கு உதவி செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அதைப்போலவே என்னுடைய தொகுதியில் கள்ளக்குறிச்சியிலிருந்து திருக்கணங்கூர் வழியாக கரடி சித்தூருக்கு ஒருசாலை அமைத்துக்கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே கள்ளக்குறிச்சியிலிருந்து அயனூர் வழியாக மூங்கில் துறைபட்டு செல்ல ஒரு அகல சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்குந்தா நதியில் சங்கராபுரத்திலிருந்து பிர்ம குண்டம் வெத்தநல்லூர் செல்லும் வழியில் ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோலவே மணிமுத்தா நதியின் அணைக்கு கீழே கள்ளக்குறிச்சிக்கு அருகாமையில் ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியிலே மலைவாழ் மக்களின் நலனுக்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகளை எடுக்க வாய்ப்பாக அந்தப் பகுதியில் பஞ்சாயத்துக்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே சங்கராபுரம் பகுதியிலிருந்து பாப்பாத்திமூலை செல்லும் சாலையில் திராயராசபுரம் ஆற்றிலே ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளிலும் குடிநீர் வசதிகளை முடித்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பணிகளை நல்ல வசதிகளோடு, மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்,

[1982 மார்ச் 13

[மாலை 5·30]

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் காலத்தில் உருவாக்கப்பட்ட திட்டம் வளர்ந்து வந்த திட்டம் இப்போது தேய்ந்து கொண்டிருக்கிற திட்டம், இந்த உள்ளாட்சித் துறைத் திட்டங்கள், அவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிமிர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சியிலிருந்து வேளாண்மை, பொது சுகாதாரம், என்ஜினியர்கள் போன்ற பல அதிகாரங்கள் இன்றைக்கு பிரிக்கப்பட்டு விட்டன. இருக்கின்ற அதிகாரங்களையாவது குறைந்துவிடாமல் பாதுகாக்க அமைச்சர் முயற்சி செய்யவேண்டும்.

இத்துறையை நிர்வகிக்க மாவட்ட அளவில் கலெக்டர் அவர்கள் பொறுப்பிலே இருக்கிறார். அவருக்கு உதவியாக பி. ஏ. லெவலில் ஒரு அதிகாரி இருக்கிறார். இது போதாது. இதற்கு ஜாயின்ட் டைரக்டர் கிரேடிலே ஒரு அதிகாரியைப் போடவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஊராட்சி ஒன்றியங்கள் என். ஆர். ஈ. பி. திட்டம், ஐ. ஆர். டி. பி. திட்டம், கோபர் கேஸ் திட்டம் போன்ற திட்டங்களை நிர்வகிக்க வேண்டிய காரணத்தாலே இவைகளுக்கு மத்திய அரசிலே இருந்து ஏராளமாக பணம்வந்து கொண்டிருக்கிற காரணத்தாலே இவைகளை நிறைவேற்ற ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும். கலெக்டருக்கு ஏராளமான பணிகள் இருப்பதால் அவருக்கு நேரம் இருக்க வாய்ப்பில்லை.

சாதாரணமாக இப்போது வட்டாரத்திலே ஒவ்வொன்றிலும் ஏழு கிராம சேவக்குகள் இருக்கிறார்கள். இவர்கள் ஐ.ஏ.டி.பி. திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது பயிற்சி திட்டம் என்று ஒன்று செயல்படுகிறது. அத்திட்டம் தஞ்சை மாவட்டத்திலே இல்லாத காரணத்தால் இவர்கள் ஏழு பேரும் வேறு எங்கெங்கோ சென்று விடுகிறார்கள். இவர்களை ஊராட்சி ஒன்றியத்திலேயே இருக்கும்படியாக செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஊராட்சி நிர்வாக அதிகாரத்தை கிராம சேவக்குகளிடம் கொடுக்கப்பட இருப்பதாக அறிகிறேன். அவ்வாறு செய்யக்கூடாது. அந்தப் பொறுப்புக்களை நிச்சயமாக ஊராட்சி மன்ற நிர்வாக அதிகாரியிடம்தான் கொடுக்கவேண்டும்,



1982 மார்ச் 13] [திரு ந. சிவஞானம்]

அடுத்தபடியாக உள்ள மிகப்பெரிய பிரச்னை குடி நீர்திட்டம், குடிநீரை பராமரிக்கும் பணி ஊராட்சியிடமே கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், மின்சாரம் இல்லையென்றாலும், குடிநீர் இல்லையென்றாலும், ஊராட்சி ஆணையாளரைத்தான் மக்கள் கேட்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தால் இத்திட்டத்தை சரியாக செயல்படுத்த முடியாது ஏனென்றால் அவர்களிடம் போதிய நிதி வசதி இருக்காது. போதிய டெக்னிக்கல் அதிகாரிகள் இல்லை. எனவே இந்தப் பணியை ஊராட்சி ஒன்றியத்திடமே கொடுக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே தஞ்சை ஒன்றியத்தையும், ஒரத்தநாடு ஒன்றியத்தையும் இணைத்து மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற நாகப்பட்டினம், மசூர் ரோட்டை தேசீய நெடுஞ்சாலை இலாகா எடுத்துக்கொள்ள இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும்.

மற்ற மாநிலங்களைப் போல நெடுஞ்சாலையை ஆக்குவதற்கு திறமையான தலைமைப் பொறியாளரைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கிராம சாலைத் திட்டத்திலே வேலைப்பளு குறைவாக இருக்கிறது. அவர்களுக்கும் வேலையைப் பகிர்ந்து கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்திலே முடித்துக் கொள்ள வேண்டும் என்று அனைவருக்கும் கட்டளை பிறப்பித்திருக்கிறீர்கள். எனது தொகுதியிலே இருக்கிற ஓரிரு பிரச்சனைகளைக் கூறி விடை பெறக் கருதுகிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே தர்மத்துப்பட்டி-தாரமங்கலம் சாலையிலே ரூ. 38,50,000-க்கு அங்கே மலைப்பகுதி சாலை அமைகின்ற திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பணி இன்னும் முழுவதுமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரைந்து முடிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலே பல்வேறு பணிகளை எடுத்திருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கிற அடிப்படைத் தேவைகளில் ஒன்று கக்கூஸ், தன்னிறைவுத் திட்டத்தில் அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு ஆ. வெள்ளைச்சாமி] [1982 மார்ச் 13

இந்த கொள்கைக் குறிப்பில் திண்டுக்கல்லில் இருக்கிற ரயில்வே பாதையில் மேம்பாலம் அமைக்கின்ற திட்டம், 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்படுமென்று கூறியிருக்கிறார்கள். அதை விரைந்து எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்

ஊரகச் சாலைகளில் ரூரல் ரோட்வேசில் பல்வேறு சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பல்வேறு சாலைகளை தன்னிறைவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளமுடியா விட்டாலும், அவைகளை உடனடியாக முடித்துக் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், பஞ்சாயத்து சாலைகளை எடுத்துக் கொள்ளும் போது பாலங்களைக் கட்டுகிற நேரத்தில் அதை ஒரு லட்சத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. ஆகவே சில பாலங்கள் முடிக்க முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் அவைகளை ரூரல் ரோட்வேஸ்ஸில் எடுத்துக் கொண்டு அந்தப் பாலங்களை முடித்துக் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் போலியனூரில் ஒரு பாலம் கட்டுவதற்கு ஒரு லட்சத்திற்கு மேலாகும். இந்தப் பாலத்தைச் கட்டித் தரவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதற்கு ஒரு லட்சத்திற்கு மேல் ஆனாலும் இந்த பாலத்தைச் கட்டித்தரவேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சின்னாளப்பட்டி நகர பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களிடத்தில் பேசிய போது அமைச்சர் அவர்களும் மக்கள் தொகையைப் பொறுத்த வரையில் அதை நகராட்சியாக ஆக்குவதற்கு தகுதி இருக்கிறது. ஆனால் பொருளாதார நிதிநிலையைப் பார்க்கிறபோது அதை நகராட்சியாக ஆக்குவதற்கு அதற்குக் தகுதி இல்லை என்று சொன்னார்கள். அதற்கு விதிவிலக்கு அளித்தாவது சின்னாளப்பட்டி நகரப் பஞ்சாயத்தை நகராட்சியாக ஆக்கவேண்டும். முந்தைய காலத்தில் பல்வேறு கிராமங்கள், அதாவது ' ஹாம்லெட்' 10, 15 கிராமங்களைக் கொண்டு ஒரு பேரூராட்சியாக ஆக்கியிருக்கிறார்கள். தற்போது சில பேரூராட்சிகளில் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. சீறாபுரம் பேரூராட்சியில் ஒரு ஆண்டுகாலமாக துப்புரவு தொழிலாளர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. வருமானம் இல்லாத பேரூராட்சிகளை 'பைவர்கேட்' செய்து கிராம பஞ்சாயத்துக்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் கொள்கை குறிப்பில் மலை வாழ் மக்கள், பழங்குடி மக்களுக்கு சாலை வசதிகள் செய்து தந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு திட்டங்களைத்



1982 மார்ச் 13] (திரு. ஆ. வெள்ளைச்சாமி)

தீட்டியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். ஆதிவாசிகள் வசிக்கும் அந்தப் பகுதிகளில் சாலை வசதியை அமைத்துத்தரவேண்டும். அவர்களுக்கு வீட்டு மனை வசதி செய்து தரவேண்டும். இந்த வசதிகளையெல்லாம் அவர்களுக்கு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

*திரு ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். நெருக்கமான நேரத்தில், என்னுடைய உரையை சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், அங்கே கடையநல்லூர், வலசைரோட்டில் ஒரு ரயில்வே கேட் இருக்கிறது. அந்த ரயில்வே கேட்டில் ஆள் இல்லை ; அதற்கு ஆள் போட்டு, அந்த கேட்டைத் திறந்துவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி, கடையநல்லூர், போகநல்லூரிலே ஒரு ரயில்வே கேட் இருக்கிறது. அங்கேயும் ஆள் இல்லை ; அதற்கும் ஒரு ஆள் போட்டு அந்த இரயில்வே கேட்டைத் திறந்து விடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேதம்புதூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த அழகப்பாபுரம் என்ற ஒரு கிராமத்தில் இரயில்வே கேட் சிறியதாக இருக்கிறபடியால், அதை அகலப்படுத்தி, பேருந்துகள் போகுமாறு செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், மேலக்கடையநல்லூரிலிருந்து சின்னக்காடுவரை அந்த ரோடு நெடுஞ்சாலைத் துறையினரால் டெவலப்மென்ட் ஸ்கீமிலே எடுத்துக் கொண்டு, அதற்கு ஒரு எஸ்டிமேட் போடப்பட்டு, அது இன்றைக்கு தலைமைப் பொறியாளரிடம் வந்திருக்கிறது. அதை, இந்த ஆண்டு பட்ஜெட்டில் எடுத்துக்கொண்டு, அதற்கு நிதி ஒதுக்கி அதை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூர் நகராட்சியில், அங்குள்ள ஆணையாளர், என்ஜினீயர், சூபர்வைசர் ஆகியோர்களால் ஊழல் நடத்தி, அந்த ஊழல் ஆடிட்டால் கண்டுபிடிக்கப்பட்டு, அது மறைக்கப்பட்டிருக்கிறது. அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில், தென்காசி ஊராட்சி ஒன்றியத்திலே பல்வேறு பாகுபாடுகள், வேறுபாடுகள் இருக்கின்றன. அதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முக்கியமான வேலைகளை என்னுடைய தொகுதியில் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இரண்டு நிமிடம்

பேசிய உறுப்பினருக்கு முப்பது இலட்சம் எஸ்ட்டிமேட் கொடுத்த அமைச்சர் அவர்கள், இதற்கு தாராளமாக நிதி உதவி தருவார்கள் என்று நம்பி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், கொண்டுவந்த இந்த மானிய கோரிக்கையின்மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விருப்பப்படுகிறேன். உள்ளாட்சிகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்த வேண்டுமென்று மக்கள் அங்கே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே தடை வாங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தடையை உடைத்தெறிந்து, விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். யார் எல்லாம் தடை வாங்கியிருக்கிறார்கள், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அப்படி தடை வாங்கியிருக்கிறார்கள், என்பதைப் பற்றிய ஒரு பட்டியலை வெளியிட்டால் மக்கள் அவர்களைப் பற்றிய உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும். அப்போது தான் மக்கள் அவர்களைப் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும். ரிசர்வேஷனே கூடாது, அதை ஒழித்துவிடவேண்டும் என்று சிலர் விரும்புகிறார்கள். ஒரு வேளை ரிசர்வேஷனை ஒழித்துவிட்டு தேர்தல்களை நடத்தலாம் என்றிருந்தால் அப்படிப்பட்டவர்களை அப்படிப்பட்ட கட்சிகளை மக்கள் சந்திக்க வாய்ப்பு இருக்கும். அப்படி அந்தப் பட்டியலை வெளியிட்டால், அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பேரூராட்சிகள் இருக்கிற இடங்களில் அங்கே போதுமான ஆட்கள் இல்லை, தெருக்களைப் பெருக்கக்கூட ஆட்கள் இல்லை. எனவே, உடனடியாக அப்படிப்பட்ட இடங்களில் போதுமான அளவிற்கு ஆட்களை நியமிக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு சம்பள உயர்வும் கொடுக்கப்பட வேண்டும். இப்போது பலர் ரூபாய் 30, ரூபாய் 40 என்று கூலிபோல் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 200, ரூபாய் 300 என்றளவில் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அரசாணைப்படி இரண்டு ஆண்டுகள் வேலை செய்தால், தொடர்ந்து வேலை செய்தால் நகரசுத்தி தொழிலாளர்கள், கழிவு நீர் அகற்றுகிறவர்கள் போன்றவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று இருந்தபோதிலும் பலயிடங்களில் இன்று அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. வேலூர், ஆம்பூர், குடியாத்தப் போன்றயிடங்களில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது.





ஸ்வீப்பர்ஸ், நகரசுத்தித் தொழிலாளர்கள் இவர்களுக்கு காஷுவல் லீவ் இல்லை. மெடிக்கல் லீவ்தான் இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் காஷ்வல் லீவ் கொடுக்கப்பட வேண்டும்.

நலிவுற்றிருக்கும் நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். வாலாஜா போன்ற நகராட்சிகளில், நூற்றாண்டு விழா முடிந்து பத்து ஆண்டுகளாகின்றன, அங்கே ஆசிரியர்களுக்கு சம்பளம் கூடக் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. அதன் வருமானத்தைப் பெருக்குகிற அளவிற்கு அரசு திட்டங்கள் தீட்ட வேண்டும். நலிந்த எல்லா நகராட்சிகளுக்கும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

பேரணாம்பேட்டை ஒரு நகராட்சியாக மாற்ற வேண்டும். அங்கே நிறைய டானரீஸ் உள்ளன. அதற்கு வருமானமும் அதிகமாக இருக்கிறது. போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. புதிதாக ஒரு கோடிக்கான புது டானரி ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே, அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அதைப் பற்றி பலபேர்கள் பேசியிருக்கிறார்கள். சிறப்பானதுதான். அதன் வாயிலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று கட்டிக்கொடுக்கப்படுகிற வெல்பேர் ஸ்கூல்கள் இருக்கின்றன. அதிலிருந்து, வருகிற மானியத்தைக் கொண்டு பள்ளிக்கூடங்கள் கட்டுவது என்றால் 5,000, 6,000 ரூபாய்தான் ஒதுக்குகிறார்கள். அதை மாற்றி தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அல்லது ஒரு சிறப்புத் திட்டம் தீட்டியாவது 60,000 ரூபாய், 80,000 ரூபாய் அளவில் நல்ல பள்ளிக்கூடங்களை அமைத்துத் தர வேண்டும்.

குறைந்தபட்சம் பேரூராட்சிகளில் டெலிவிஷன் வைக்க வசதி செய்ய வேண்டும். பேரணாம்பட்டு மக்கள் டி.வி.யைப் பார்க்காதவர்கள். ஆகவே, அங்கே டி.வி. கிடைக்கச் செய்ய வேண்டும். எல்லா டவுன் பஞ்சாயத்துக்களிலும் கம்யூனிட்டி ஹால்ஸ் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

[மாலை 5–40]

***திரு. கு. பா. பழனியப்பன் :** வாய்ப்புக்கு நன்றி. விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டத்தின் மையப் பகுதி. அது ஒரு முக்கியமான நகரம். அதன் வளர்ச்சிக்கு வேண்டியதை கட்சி பாகுபாடின்றி அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அந்தப் பேருந்து நிலையத்தின் வழியாக நாள் ஒன்றுக்கு இரவு நேரத்தில் மட்டும் 200 பேருந்துகளுக்கு மேல் செல்கின்றன. அந்தப் பேருந்து நிலையம் மிகவும் மோசமான ஒரு நிலையில் இருக்கிறது. அந்த நகரத்தின் வளர்ச்சிக்காக மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள்

(திரு. கு. பா. பழனியப்பன்) [1982 மார்ச் 13

கூட ஒரு பெரும் பங்கு வகிக்கவேண்டியிருக்கிறது. காரணம், அவர்கள் 14 ஆண்டுகள்நகரசபை உறுப்பினராகஇருந்திருக்கிறார். கள். எனவே, அதன் வளர்ச்சியில் அவர்களும் அக்கறை காட்ட வேண்டும்.

இந்த விழுப்புரத்தில் புதிதாக ஒரு பேருந்து நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கே ஒரு நகராட்சிப் பூங்கா இருக்கிறது. அந்த நகராட்சிப் பூங்கா இன்று பாழடைந்து கிடக்கிறது. அந்தப் பூங்காவையொட்டி ஊரல் குட்டையில் மொத்தம் ஆறு ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

விழுப்புரத்தில் சமுதாயக்கூடம், திருமண மண்டபம் இல்லாமல் அங்குள்ள மக்கள் புதுவைக்கோ அல்லது பண்ருட்டிக்கோ செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, விழுப்புரத்தில் ஒரு திருமணக்கூடம் கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடிநீரைப் பொறுத்த வரையில் பெண்ணாற்றிலிருந்து தண்ணீர் வந்தும் போதுமான அளவிற்கு குடிநீர் வசதி அங்கே செய்து தரப்படவில்லை. பலவிடங்களில் சில மணிநேரம்தான் குடிநீர் வருகிறது. ஆகவே, பல நேரங்களில் கூட்டம் கூட்டமாக மக்கள் வரிசையாகக் காத்து நின்றும் தண்ணீர் எடுத்துக் கொண்டு போக முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். இரயில்வே காலனிக்குக்கூட குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும். இந்த குடிநீர்க் குழாய் எக்ஸ்டென்ஷன் தேவை.

கிராமங்களில் பி.டி.ஓ. மூலம் கைப்பம்புகள் பழுதுபட்டால் ரூபாய் 500 வரை செலவு செய்யலாம் என்ற ஒரு திட்டம் ஏற்கெனவே இருந்தது. இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தினரைத் தேடிச் சென்று ரிப்பேர் செய்ய வேண்டி இருக்கிறது. எனவே, விரைவில் ரிப்பேர் செய்ய முடிவதில்லை. அதிலும், கவனம் செலுத்த வேண்டும்.

விழுப்புரத்தில் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அங்கே ஒரு வாய்க்கால் ஓடுகிறது. கோவியனூரான் வாய்க்கால் என்று பெயர். அது தூர்ந்து போய் விட்டது. அதை சீர்ப்படுத்தினால் இரண்டு வகைகளில் அது பயன்படும். ஒன்று சாக்கடைத் தண்ணீரை வெளியேற்ற பயன்படும், அடுத்து கொசு தொல்லையை ஒழிக்கவும் பயன்படும். இதிலே வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழே, அதே வாய்க்காலை நகரத்தில் வெளிப்புறத்திலே இருப்பதை சரிப்படுத்தச் சொன்னோம். ஆனால், நகரத்திற்கு உள்ளே இருப்பதைச் செய்வதற்கு, அந்த வாய்க்காலில் மண்ணை அகற்றுகின்றபோது, அதை எடுத்துச் செல்வதற்கு நகராட்சி மறுத்துவிட்ட காரணத்தினால், அங்கே சுகாதாரக் கேடான சூழ்நிலை இருக்கிறது. விழுப்புரத்திலே பாதாள சாக்கடைத் திட்டமும், சீக்கிரம் விரைவிலே நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. கு. பா. பழனியப்பன்]

அங்கே சாலைகள் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. 10, 12 ஆண்டு காலமாக நிர்வாகத்திலே பொது மக்களுடைய பங்கில்லாத காரணத்தினால், தேர்தல் இல்லாத காரணத்தினால், அதையெல்லாம் சீர்படுத்த முடியவில்லை என்றிருந்தாலும், இந்த சாலைகளுக்காக 10 இலட்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்யத் தயாராக இருந்தும், அங்கேயிருக்கிற நிர்வாக அதிகாரி, கமிஷனர் போன்றவர்கள் ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினால், அந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை என்ற செய்தி கிடைத்து இருக்கிறது. அது உண்மையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்தச் சாலைகளைப் பொறுத்தவரையிலே, மற்ற நகராட்சிகளைவிட, விழுப்புரம் நகராட்சியிலே பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் இருப்பிலே இருக்கிறது. அப்படியிருந்தும், சாலை பராமரிப்பு வேலைகள் செய்ய மறுத்து வருவதற்கு என்ன காரணம்?

கீழ்ப்பெரும்பாக்கம் பகுதி விழுப்புரத்திலே இருந்து தனித்திருக்கிறது. அங்கே ஒரு ரயில்வே கேட் இருக்கிறது. அங்கே தரைப் பாலம் போட வேண்டுமென்று ஏறக்குறைய 20 ஆண்டு காலமாக, அமைச்சர் இராகவானந்தம் அவர்கள்கூட பெரும் ஆசைப்பட்டார்கள். அப்படியிருந்தும் இன்று வரைக்கும், அது நிறைவேற்றப்படவில்லை. எனவே, விரைவிலே நிறைவேற்றித் தர அரசு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி, சேந்தனூர் என்ற பகுதியிலே, அங்கேயும் ஒரு ரயில்வே கேட் போட வேண்டும்; லெவல் கிராஸ் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்தில் அதிகமான நெரிசல் உள்ள பகுதிகளிலே எல்லாம் இப்போது, குழல் விளக்குகளுக்குப் பதிலாக சோடியம் வேப்பர் விளக்குகள் நிறைய போட வேண்டும். 10, 12 பகுதிகளிலே போட வேண்டும் என்று நானே குறிப்பு எழுதிக் கொடுத்திருக்கிறேன். அங்கேயெல்லாம் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், காவணிப்பாக்கம், திருப்பாச்சனூர் ஊர்களை சேர்க்கின்ற பாதையில் மலட்டாறு குறுக்காக ஒரு தரைப்பாலம் போடவேண்டும். அந்தப் பாதை பழைய பண்ணுருட்டி ரோடு என்று சொல்வார்கள். அது ஏறக்குறைய, 5, 6 கிலோ மீட்டர் தூரத்தைக் குறைக்கும்

(மணியடிக்கப்பட்டு திரு. மு. அரங்கநாதன் பேச அழைக்கப்பட்டார்.)

*திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், கோத்தகிரி பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோத்தகிரியில் பஸ் நிலையத்தை விரிவு

[திரு. மு. அரங்கநாதன்] [1982 மார்ச் 13

படுத்த வண்டும். மேஜர் பஞ்சாயத்தாக கோத்தகிரி இருந்தும், பஸ் நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, பஸ் நிலையத்தை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கோத்தகிரி, குன்னூர் போன்ற நகரங்களில் சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் போதுமான சுகாதாரத் தொழிலாளர்கள் அங்கே இல்லை. 10, 12 வருஷங்களுக்கு முன்பு இருந்த தொழிலாளர்கள் தான் இப்போதும் அங்கே இருக்கிறார்கள். அதனால் தான் அசுத்தமாக இருக்கிறது. அங்கே தற்போதுள்ள 120 தொழிலாளர்கள் போதாது. குன்னூர் ஒரு அழகான நகரம். இதை மேலும் அழகாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வதற்கு நகரசுத்தித் தொழிலாளர்களை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. அதையும் அதிகமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அங்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், மலைப் பகுதியில் அங்கே மண் ரோடுகள் போடப்படுகின்றது. மழை பெய்தால், அந்த மண் ரோடுகள் மழையில் அடித்துக் கொண்டு போய்விடுகிறது. எனவே, மலைப் பகுதியிலே எங்கு ரோடுகள் போட்டாலும், தார் ரோடு போட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்திலே 21 டவுன் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. டவுன் பஞ்சாயத்துக்களுக்கு இதுவரைக்கும் டீ.டீ.ஓ. அதிகாரத்தின் கீழ் இருந்தது. ஆனால், இப்போது ஆர்.டீ.ஓ. க்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதனால், அங்குள்ள டவுன் பஞ்சாயத்துக்கள் அந்த அலுவலகம் பக்கத்திலே இல்லாத காரணத்தினால், அது வேறு மாவட்டத்திலே இருப்பதால், அங்கே சென்று உத்தரவு பெற்று வர வேண்டியுள்ளது. ஆகவே, அப்படி இருப்பதற்குப் பதிலாக அந்தந்த மாவட்டத்தின் தலைநகரத்திலேயே இதை ஏற்படுத்தி, அங்கு போகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினால், அங்குள்ள டவுன் பஞ்சாயத்துக்கள் சீரும், சிறப்புமாக நடைபெறும். அதேபோல், பஞ்சாயத்துக்களிலே பல இடங்களிலே விளக்குகள் எரிவதில்லை. நீலகிரி மாவட்டத்திலே அதிகமான மின்சார உற்பத்தி செய்யப்பட்டும், அங்கே பல பஞ்சாயத்துக்களிலே பணம் கட்டியும்கூட, பல பஞ்சாயத்துக்களிலே விளக்குகள் எரியாமல் இருக்கிறது. அதேபோல், பழங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் விளக்குகள் எரிவதில்லை. பால்வாடி போன்ற முக்கியமான பகுதிகள் கூட பாதுகாப்பாக இல்லை. அங்குள்ள ஆதிவாசிகள் வாழக்கூடிய பல கிராமங்களில் ரோடு வசதியில்லாமல் இருக்கிறது. அங்கெல்லாம் ரோடு வசதியை அவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.



1982 மார்ச் 13]

*திரு. வெ. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியில் இரண்டு ஒன்றியங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்து, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் உள்ள பணிகளைச் செய்வதற்கு உதவிய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஆதிவாசிகளுக்கு சாலை வசதிகளை செய்து தருவதற்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கி இருப்பதால் என்னுடைய தொகுதியில் பச்சை மலைப்பகுதியில் சாலை வசதி செய்து தர வேண்டும். அங்கு 33 கிராமங்கள் இருக்கின்றன. சாலை வசதி இல்லாத நிலையில் அங்கிருக்கும் மக்கள் வாழ்கிறார்கள். இதனால் மருத்துவ வசதி, கல்வி வசதி போன்றவை அந்த மக்களுக்கு சரியாகக் கிடைக்கவில்லை. அடித்தளத்தில் இருக்கிற மக்களோடு தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். சோபனபுரத்திலிருந்து டாப் செங்காட்டுபட்டிக்கும், செங்காட்டுப்பட்டியிலிருந்து மணலோடைக்கும் இருக்கிற சாலையை தார் சாலையாக இந்த ஆண்டு அமைத்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டம் நகராட்சிகளிலும், நகர பஞ்சாயத்துக்களிலும் எடுக்கிற காரணத்தால் துறையூர் நகராட்சி நிதி பற்றாக்குறையில் இருக்கிற காரணத்தால் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கூட செய்து தர முடியவில்லை. துறையூர் நகராட்சியையும், சிரம்பூர், உப்பிலியபுரம், பி. மேட்டூர் ஆகிய நகர பஞ்சாயத்துக்களையும் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துறையூர் நகராட்சி 3 வது கிரேடிலே இருக்கிறது. அதை இரண்டாவது கிரேடிற்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முசிறி, குளித்தலை பாலம் அமைத்ததன் மூலமாக இப்போது வருகிற லாரி, பஸ்கள் போன்றவை துறையூர் நகரத்தின் வழியாக செல்கிற காரணத்தால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. துறையூர் நகரத்தில் பை-பாஸ் ரோடு ஒன்றும், முசிறியிலிருந்து துறையூர் வழியாக பெரம்பலூர் வரையில் இருக்கிற சாலையை அகலப்படுத்தியும் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் வினாவிற்கு பதில் சொல்கிறபோது இரண்டாவது திட்டத்திலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தார்கள். அதை இந்த ஆண்டு எப்படியாவது நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

துறையூர் நகரில் தியேட்டர் கட்டுவதற்கும் திருமண மண்டபம் கட்டுவதற்கும் அரசிற்கு மனுக்கள் வந்திருக்கின்றன. அதை பரிசீலனை செய்து நிதியில்லாத இப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து இந்த இரண்டு பணிகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீரமச்சான்பட்டியிலிருந்து சேனப்பநல்லூருக்கும் ஆதனூரிலிருந்து கட்னாம்பட்டிக்கும் செல்ல பாலம் வசதி இல்லாத நிலை இருக்கிறது. மழைக்காலங்களிலும் மற்ற காலங்களிலும் மணல் பகுதியாக இருக்கிற குண்டாறு வழியாக செல்ல முடியாமல் 20 கிலோ மீட்டர் சுற்றி வருகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த குண்டாற்று பாலம் அமைக்க இந்த ஆண்டு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நரசிங்கபுரம், ஒட்டம்பட்டி சாலையிலே இருக்கிற இரண்டு பாலங்களை தன்னிறைவுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு இலட்சத்திற்கு மேலே இருக்கிறது என்று நீக்கியிருக்கிறார்கள். எனவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக கேள்வி படுகிறேன். துறையூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மேலே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த முன்னுரையில் கிராமத்திலேயிருந்து நகரத்திற்குச் செல்லும் மக்களை நகர மோகத்தைத் தடுப்பதற்கும், தீவிர பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை அமுல் படுத்துவதன் மூலமே கிராமமக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும் அக்கிராமங்களுக்கு உடமை அமைப்புக்களை அதிகரிக்கச் செய்து அக்கிராமங்களை தன்னிறைவும், தன்னம்பிக்கையும் உடையனவாக மாற்ற முடியும் என்ற கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்பு கிராம சீர்திருத்தம் என்ற பெயரால் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து ஒரு பகுதியை எடுத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். தந்தை பெரியார் ஒரு கிராம இராஜ்யம் எப்படி அமைய வேண்டும், என்பதற்கு அதிலே பல்வேறு திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவோமானால் கிராமங்களிலேயிருந்து நகரத்திற்கு வருகிற ஜனத்தொகை குறையும் என்பதை எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் ஊராட்சிகளில் இருக்கிற நிலைமைகளைப் பற்றி ஒரு சிலவற்றை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய பஞ்சாயத்து நிர்வாக அமைப்பு அடிப்படையிலே மக்களிடத்திலே ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தத் திட்டம் எப்படி அமைய வேண்டும் என்பதை பல்வந்ராய் கமிட்டி ஒன்று அமைக்கப்



பட்டு அந்த கமிட்டியினுடைய அறிக்கையின் மூலமாக மூன்று அடுக்கு நிர்வாகம். அதாவது, கிராமம், கோட்டம், மாவட்டம், என்ற அளவிலே அது அமைய வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தாலும் இன்றையதினம் தமிழகத்திலே அந்த நிர்வாக அமைப்பு செயல்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் சுயமாய் முடிவெடுத்து திட்டங்களை ஸ்தல நிலைமைகளுக்கு ஏற்ப செயல்படுத்துவதற்கு தேர்ந்தெடுத்த தலைவர்களுக்கு போதிய அதிகாரம் கிடையாது.

வளர்ச்சித் திட்டமும் அன்றாடக் காரியாலய நடைமுறைகளும் நன்றாகச் செயல்படுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் நிதிவசதிகளுடன் கூடிய அதிகாரங்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்க வேண்டும், இது மிகவும் அவசியம் என்பதை பல்வந்த்ராய் கமிட்டி அன்றைய தினம் எடுத்துக் காட்டியது. ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு அடிப்படையான கேள்வி. ஒன்றாக இணைக்கப்பட்டு செயல்பட வேண்டுமா என்பது ஒன்று. அல்லது அவை தனித்தனி அமைப்புக்களாக இருந்து செயல்பட வேண்டுமா என்பது இன்னொன்று. இப்போது இருகின்ற முறை பஞ்சாயத்து தனியாகவும், ரெவின்யூ இலாகா மூலமாகவும் செயல்பட்டு வருகிறது. இது அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் 1974 ஆம் ஆண்டு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது. பிரிக்கப்பட்ட பிறகு, அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யாமல் இருந்ததால்தான் சரியாகச் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக தமிழகத்திலே இன்றையதினம் பஞ்சாயத்து அமைப்புக்களே இல்லை, அது மட்டுமல்ல, கூட்டுறவு அமைப்புகளும் இல்லை, அது மாத்திரம் அல்ல, கணக்கப்பிள்ளை, முன்சீப்புகளும் கிடையாது. இப்படி கிராமங்களுக்கு முக்கியமாகத் தேவையாக இருக்கின்ற இந்தமூன்று அமைப்புகளும் தமிழகத்திலே இன்றைக்கு இல்லை. இது கிராம ராஜ்யமா அல்லது அதிகாரிகள் சாம்ராஜ்யமா என்று சொல்லத்தக்க அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து தேர்தலுக்கு ஒன்றிய தேர்தலுக்கும் யாரோ தடை வாங்கிவிட்டார்கள் என்று திரு. மூர்த்தி அவர்கள் பேசும்போது குற்றஞ்சாட்டினார்கள். தேர்தல் நடத்த வேண்டாமென்று சொல்கிறார்களோ என்ற அச்சம் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலிலே கூடிய கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அதை வரவேற்றவன் நான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்

கொள்கிறேன். அவர்களுக்கு ஒதுக்க வேண்டியது நியாயம், அதை ஒதுக்க வேண்டுமென்று சொல்கிறபோது அதற்கு கைட் லைன்ஸ், நார்ம்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எந்த எந்த பஞ்சாயத்துக்கள் எந்த எந்த யூனியன்கள் என்பதை அப்போதே கலந்து பேசி முடிவு எடுத்து இருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய கருத்தாகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. இப்போது 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு இருக்கிறது. எனவே, பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவது சாத்தியம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 2 மாதங்களில் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட அமைப்புக்கள் இருந்தால்தான் தன்னிறைவுத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக கிராமசேவக்குகள் தான் ஆங்காங்கே தலைவர்கள் போல் இருந்து வருகிறார்கள். அவர்கள் மூலமாக நடைபெறுகின்றன என்று பெருமையாகப் பேசிக் கொண்டாலும், கிராமப்புறங்களைச் சென்று பார்க்கிறபோது எந்த அளவுக்கு அவை நடைபெற்றன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அருமை நண்பர்கள் அந்தப் பக்கத்திலிருந்து சொன்னார்கள். அது அந்த இடத்தின் ராசி. அப்படித்தான் பாராட்டிப் பேசிப் பழக்கம் இருக்கும். நான் அங்கேயும் இருந்திருக்கிறேன், இங்கேயும் இருந்திருக்கிறேன், எனக்குத் தெரியும். தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். இப்போதுதான் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், தன்னிறைவுத் திட்டம் என்ற பெயர் இல்லமால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், எங்களுடைய தலைவர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். நீங்கள் பாராட்டாவிட்டால் பரவாயில்லை. செய்த காரியங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்காவிட்டாலும் குறை சொல்லாமல் இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசு இருந்த காலத்திலே பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. 374 ஒன்றியங்கள் இன்றைக்குப் பெருமையோடு பேசிக் கொண்டிருக்கிறோம்; எந்த அளவுக்கு அவைகள் நடைமுறையிலே செயல்படுகின்றன என்பதை பின்னாலே பார்க்கலாம். ஆனால், முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தன்னிறைவு என்ற பெயர் இல்லாமல் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்ற ஒரு திட்டத்தை அறிவித்ததே கழக அரசுதான். எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற திட்டத்தின் நிறைவு விழாவை நடத்தி அப்போது இருந்த அமைச்சர்கள் எல்லாம் கலந்துகொண்டு பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிக்கையிலேகூட '' மொத்தமுள்ள கிராமங்கள், உட்கிராமங்கள் ஆகியவற்றில் இவை 99 விழுக்காடு ஆகும். மின்வசதி பெற்றிராத ஆதி திராவிடர் குடியிருப்பு எதுவுமே தமிழ்நாட்டில் இப்போது இல்லையெனலாம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், இந்த சாதனை நிகழ்ந்துள்ளது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம் '' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாவலர் அவர்கள் அன்றைய தினம் அமைச்சராக இருந்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.





தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மின் வசதித் திட்டம் 1933-ஆம் ஆண்டிலே நுழைய ஆரம்பித்தது என்று கருதுகிறேன். 1933-ஆம் ஆண்டிலிருந்து 1960-ஆம் ஆண்டு வரையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பம்பு செட்டுகள் இரண்டு இலட்சம். 1967-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு முடிய ஏறத்தாழ 8 இலட்சம், அதாவது 7,96,000 என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட 8 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கியிருப்பதும் கழக அரசுதான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1977-ஆம் ஆண்டிலிருந்து 1981-ஆம் ஆண்டு முடிய அது 9 இலட்சமாகத்தான் ஆகியிருக்கிறது. அதாவது 8 இலட்சத்திலிருந்து 1 இலட்சம் தான் அதிகப்படுத்தியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 6-00]

குடிசைகளுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சாரம் ஏற்கெனவே எல்லாக் கிராமங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 20,000 அரிசனக் காலனிகள் இருந்தன ; அவைகளுக்கு 1970-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக் காலத்தில் ஏறத்தாழ 18,000 ஆதி திராவிடர் காலனிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்களுடைய கழக ஆட்சிக் காலத்திலே கலைஞர் தலைமையில் விவாதித்தோம். அரிசனக் காலனிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்குப் பஞ்சாயத்திலே பணம் இல்லை என்ற குறை இருந்தது. நானும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது பலமுறை பேசியிருக்கிறேன். அதை நினைவில் கொண்ட காரணத்தினால் அப்பொழுது முதலமைச்சரோடு விவாதித்து அந்த முதலமைச்சரவர்கள் ஒரு உத்தரவையே போட்டார்கள். சேரி, காலனிகளில் மின்சார வசதி செய்து கொடுப்பதற்குப் பஞ்சாயத்துக்களில் பண வசதி இல்லை என்றாலும் அதை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்று செய்து அப்பொழுதே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1982 மார்ச் 13

அதுமட்டுமல்ல, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்து அப்பொழுது, கலைஞர் ஆட்சியிலே உருவாக்கப்பட்டதுதான் வடிகால் வாரியம், அந்த வடிகால் வாரியத்தின் மூலமாக வரையறுத்து, ஏழாண்டுக் காலத்தில் தமிழகத்திலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற திட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பது பலருக்கும் நன்கு தெரியும்.

வசதியே இல்லாத, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் கோயில்பட்டி பிரதிநிதிகள் கோபித்துக் கொள்ளக் கூடாது, கோயில்பட்டிக்காரர்களுக்குப் பெண் கொடுப்பதற்கே மறுப்பார்கள், ஏனென்றால் தண்ணீர்க் கஷ்டம் அவ்வளவு இருக்கும். அப்படிப்பட்ட அந்த ஊருக்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து திட்டம் தயாரித்து கோயில்பட்டி நகராட்சிக்கு மட்டுமல்லாமல், அது வருகின்ற வழியிலே உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்றிச் செயல்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதியில் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். பொட்டுப் புழு வியாதியால் பாதிக்கப்பட்டார்கள். எனவே, கொள்ளிடத்திலிருந்து பெரிய திட்டத்தைப் போட்டு ஜெயங்கொண்டத்திற்கு மட்டுமல்லாமல், வருகிற எல்லாக் கிராமங்களுக்கும் பயனளிக்கும் திட்டத்தை நிறைவேற்றியது எங்கள் கழக அரசு என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இங்கே பல்வேறு திட்டங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களைப் பற்றி நான் குறை கூறவில்லை. திட்டம் போடுவது பெரிதல்ல. அதை நிறைவேற்றுவது எப்படி என்பதைப் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், சொன்னதைச் செய்யுங்கள் ; செய்வதைச் சொல்லுங்கள் ; ஆனால் சொல்லிவிட்டுச் செய்யாமல் விட்டு விடாதீர்கள் என்று சொல்வார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

தன்னிறைவுத் திட்டம் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைப் பார்க்கிறோம். சில நாட்களுக்கு முன்பு தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அங்கே நடந்த ஒரு கூட்டத்திலே பொறியாளர்கள் எப்படிப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது,

* * * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 மார்ச் 13] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

என்று சொல்லியிருக்கிறார். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இலாக்காவைப் பரிசீலனை செய்த பொழுது இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் நாசுக்காகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு முறை குறிப்பிட்டார்கள். நீங்கள் போடுகிற திட்டம் எப்படி இருக்கிறது என்றால், ஒரு ஐஸ் கட்டியை எடுத்து ஒருவர் கையிலே கொடுத்து அது மாறி, மாறிப் போய் உரியவரிடத்திலே சேருகின்ற பொழுது, ஒரு சொட்டுத் தண்ணீர் தானிருக்கிறது என்று நாசுக்காகச் சொன்னார்கள். அதைப் போலத்தான் இன்றையதினம் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை நாம் மறுத்துப் பேசி பயனில்லை. பல திட்டங்கள் நிறைவேற்றவே இல்லை. நிறைவேற்றாமலேயே பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் விரும்பினால் என்னோடு ஒரு குழுவை அனுப்பட்டும். நான் எந்த, எந்த இடங்களில், எப்படி, எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

நாம் எவ்வளவோ திட்டங்கள் போடுகிறோம். இன்றைக்கு அந்தத் திட்டங்கள் சரியாக செயல்பட வில்லை. திட்டங்கள் யாருக்காகப் போடுகிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமையில் நாம் ஒரு சரியான முடிவிற்கு வருதல் வேண்டும். பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களிடம், மக்கள் அடிப்படைத் தேவைகள், வளர்ச்சித் திட்டப் பணிகள், மக்கள் நலப் பணிகள் ஆகியவை மட்டும் இருக்கலாமா என்பதெற்கெல்லாம் தீர்வு காண வேண்டும். அனைத்திந்திய மட்டத்தில் ஏற்கெனவே, பல்வேந்த்ராய் மேத்தா குழுவினர், மக்கள் அடிப்படைத் தேவைகளைச் செய்யும் வேலையை முழுமையாகப் பஞ்சாயத்து ராஜ்யங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம், நிலைமை என்ன ? அப்படிப்பட்ட நிலைமை அங்கே இல்லை. அதைத்தான் இப்பொழுது நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்று பரவலாக பல மாநிலங்களிலே காணப்படும் நிலைமை வேறு. பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புகளிடம் கிராமப்புற வளர்ச்சியும், மக்கள் நலப் பணிகள் மாத்திரமின்றி, அவற்றிடம் முனிசிப்பல் அண்ட் சிவில் அட்மினிஸ்ட்ரேஷன் இன்றையதினம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மக்கள் விரும்புகின்ற நிலை

எப்படி இருக்கிறது என்றால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அமைப்புகள் தேவை என்பதைத் தான் இன்றைய தினம் மக்கள் விரும்புகிறார்கள். அதைத்தான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும் உத்தமர் காந்தி அடிகள் அவர்களும் அப்படி இருக்க வேண்டுமென்பதற்கு, கிராமக் சமுதாய வளர்ச்சி, தல வளர்ச்சி, அடுத்து ஜனநாயக வளர்ச்சி, இம்மூன்றும் முழுமையாக வளர இந்த மூன்று அடுக்கு ஜனநாயக அமைப்புகளிடம் அதாவது ஊராட்சி ஒன்றியம், ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றம் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால், அவை திறமையாக, சிக்கனமாகச் செயல்படும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்களே வற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள். எனவே, இறுதியாக, பஞ்சாயத்து ராஜ்யம், குறிக்கோள் என்று குறிப்பிடுவதற்குச் சரியான விளக்கமே இப்பொழுது இல்லை. எனவே பஞ்சாயத்து ராஜ்யம், குறிக்கோள் இரண்டையும் இணைத்துச் செயல்படுத்துவதற்கு அகில இந்திய மட்டத்திலேயே ஒரு நல்ல தீர்வு ஏற்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கே ஒரு திருத்தம் கொண்டு வந்தாலும், அது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அத்துடன் மாநில அரசுக்கு அதிகாரப் பரவல் திட்டத்திலும், குறிக்கோளிலும், அதன் தத்துவத்திலும் நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஒரு முழுமையான முன்னேற்றம் செய்தாலொழிய அதைச் செய்ய முடியாது. மாநில அரசினுடைய எண்ணத்தில் உருவாக பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புத் துறைக்கு, புது உருவம் தரப்பட, அரசியல் ,பொருளாதார,சமூக மாற்றங்கள் உருவாவது இன்றைய அவசர, அவசிய தேவையாகும். அதை உடனடியாகச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியத்தின்
தொழில் நிர்வாக அலுவலர் (குரூப் எகிசிகியூட்டிவ் ஆபீசர்)
என்ற ஒரு பதவியை நியமித்திருக்கிறார்கள். அவருடைய அந்தப்
பெயர் மாற்றப்பட்டு, நிர்வாகச் செயலாளர்—எக்சிகியூட்டிவ்
ஆபீசர்—என்று வைத்தால் அது நலமாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன். அதே போல் வட்டார அளவில் ஒன்றியத்தின்
தலைவராக, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் என்பவரை ஒன்றி
யத்தின் தலைவருக்குச் செயலாளர் என்று பெயர் வைக்க வேண்டு
மென்று நான் கருதுகிறேன். அதே போன்று மாவட்ட அளவில்
இன்றுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் தலைமை என்ப
தற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் இருத்தல் வேண்
டும். அவருக்கு உதவிட அங்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்
தலைவருக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இப்
பதவிக்குக் கூட்டு இயக்குநர் என்கிற அளவில் ஒரு அலுவலர்
வளர்ச்சித் துறையிலே இருந்தே நியமிக்கப்பட வேண்டும்,
ஏனென்றால், அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன.





வளர்ச்சித் துறைக்கு வருகின்ற பொழுதே பேரறிஞர் அண்ணா அவர்களே ஒருமுறை குறிப்பிட்டார்கள். நான் மாவட்ட நூற்பாலைத் தலைவராக இருந்தபொழுது எல்லா நூற்பாலைகளுக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அங்கே நிர்வாக இயக்குநர்களாக நியமித்தார்கள். நாங்கள் எல்லாம் சேர்ந்து அப்பொழுது அண்ணாவிடத்திலே சொன்னோம். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அங்கே உள்ள தொழிலாளர்களோடு பேசுகின்ற முறை சரியாக இல்லை அதனாலே சர்ச்சை ஏற்படுகின்றது. அதனாலே, அவர்களை மாற்றி வேறு நபர்களை நியமிப்பது நல்லது என்று நாங்கள் சொல்லி, அண்ணா அவர்களே எங்களை எல்லாம் எழுதி அனுப்பச சொன்னார்கள்.

(இரவு 6-10).

நாங்கள் எழுதி அனுப்பினோம். எழுதி அனுப்பியதற்குப் பிறகு அண்ணா அவர்கள் பார்த்து அதற்கு இனி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தேவையில்லை. அதற்கு டி.ஆர்.ஓ. அளவிலே உள்ள ஒருவர் நியமிக்கப்பட்டால் போதும் என்று குறிப்பிட்டார்கள். அதுமாத்திரம் அல்ல, அண்ணா இன்னொன்றையும் சொன்னார்கள். அதையும் சொல்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ரெவின்யு டிப்பார்ட்மென்டைச் சேர்ந்தவர்கள் எந்த இலாகாவுக்கும் போகலாம். அந்தக் கதவுகள் திறந்தே வைக்கப்பட்டு இருக்கும். ஆனால் மற்ற இலாகாக்காரர்கள் வந்தால் ரெவின்யூ இலாகாக்காரர்கள் அதைத் தடுத்து விடுவார்கள், அங்கே வர முடியாது என்று சொன்னார்கள். நான் இப்படி அண்ணா அவர்கள் சொன்னாரே என்று ஒரு ரெவின்யூ அதிகாரியைப் பார்த்துக் கேட்டேன். அண்ணா இப்படி சொன்னாரே என்று அவரைப் பார்த்துக் கேட்டேன். அதற்கு அவர் நாங்கள் சாதாரண கிராம வெட்டியான், தலையாரியில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆகவே எதுவும் எங்களுக்கு நன்றாகத் தெரிந்தது என்று சொன்னார்கள். அப்போது நான் அவரைப் பார்த்துச் சொன்னேன். மற்றவர்களுக்கும் அப்படி பயிற்சி அளித்தால் அது சரியாக வராதா, நீங்கள் பி.ஏ. படித்து லோயர் டிவிஷன் கிளார்க்காக சேருகிறீர்கள். ஆனால் அதே பி.ஏ. படித்த ஒருவர் பஞ்சாயத்து இலாகாவிலே சேர்க்கப்பட்டால் கடைசியாக அவர் பிரமோஷன் வந்தால் எக்ஸியூட்டிவ் ஆபீசர் ஆவது வருமோ வராதோ தெரியவில்லை, இது என்ன பேதம் என்று அவரைக் கேட்டேன். அதை எல்லாம் கேட்காதீர்கள் என்று அவர் சொன்னார்.

நான் மீண்டும் அண்ணா அவர்களிடத்திலே இதைச் சொன்னேன். அப்போது அண்ணா அவர்கள் சொன்னார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அப்படியே ரெவினியூ இலாகாவினரை நாம் எடுத்துவிட வேண்டுமென்பதில்லை. ரெவினியூ இலாகாவிலே இருக்கிற அதிகாரிகளை எல்லாம் வளர்ச்சித் துறை அதிகாரிகளாக பயன்படுத்தலாம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதன் காரணமாகவோ, என்னவோ, இன்று நமது தலைமைச்

செயலாளராக இருக்கிற மாண்புமிகு திரு. கே. திரவியம் அவர்கள் எங்களுடைய பஞ்சாயத்து வளர்ச்சி மன்ற அதிகாரியாக இருந்த போது, பஞ்சாய்த்துக்களைப் பார்வையிட்டு, அங்கு என்ன, என்ன சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்று யோசனை சொன்னார்கள். அவர்கள் யோசனை சொன்னதற்குப் பிறகு, அந்த அதிகாரிகளிலே சிலபேர் குறைபட்டுக் கொண்டார்கள். சில பேர் பாராட்டினார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, அந்த அளவுக்கு, வருமோ என்ற எண்ணம் கூட எனக்கு இப்போது இருக்கிறது. ஆகவே, இந்த இலாகாக்களுக்குப் போடுகிறபோது, இந்தப் பஞ்சாயத்துக்களிலே எந்தவிதமான பதவி உயர்வுக்கும் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதனாலேதான் இதை நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். வளர்ச்சித் துறை அலுவலர்களிலேயிருந்து அவர் நியமிக்கப்பட வேண்டும். மாநில அளவில் நமது வளர்ச்சிப் பணித் துறை அலுவலர் ஒருவர் வளர்ச்சித் துறைக்குத் தனியாக ஸ்டேட் டெவலப்மென்ட் கமிஷனர் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தப் பதவியும் வளர்ச்சித் துறையிலிருந்து வரும் அலுவலர்களுக்கே தந்திடப்பட வேண்டும். இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எப்படி கொடுக்க முடியும் என்றெல்லாம் கேட்கலாம்.

நான் ஒன்றை இங்கே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இங்கே வேளாண்மைத் துறை இயக்குநராக ஐ.ஏ.எஸ். அதிகாரி இருப்பதுதான் வழக்கம். நான் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது அதை மாற்ற வேண்டுமென்று அமைச்சரவையிலே சொன்னேன். அப்போது, வேளாண்மைத் துறையிலே அனுபவமும் நன்கு செயல்பட்டு இருந்தவருமான, திரு. வெங்கட்ராமன் அவர்கள் வேறு பதவியிலே இருந்தார்கள். அவரை நான் அந்த இலாகாவின் இயக்குநராகப் போட வேண்டுமென்று கேட்டு (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சரும் அப்போது அமைச்சராக இருந்தார். அந்தத் திட்டத்தை அப்போது அங்கிருந்தவர்கள் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னைக்கூட அப்போது ஒரு மந்திரி கேட்டார். இவ்வளவு சிபாரிசு செய்கிறீரே அவர் என்ன முக்குலத்தோரா என்று கேட்டார். நான் உடனே சொன்னேன். எக்குலமும் எனக்குச் சம்மதம் ஐயா, முக்குலம் என்றில்லை, என்று. ஆனால், விசாரித்துப் பார்த்தேன், அவர் யாதவர் என்று தெரிந்தது. திருநெல்வேலிக்காரர் யாதவர்தான். அவரைப் போடலாம் என்று வேடிக்கையாக சொன்னேன். கடைசியாக, ஒருவாறு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அனுபவம் வாய்ந்தவர், வேளாண்மைத் துறையிலே சம்பந்தப்பட்டவர். வேளாண்மைத் துறை இயக்குநராக வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஒருவர்தான் வர வேண்டுமென எண்ணினேன். அப்படியே போட்டோம். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ். வட்டாரத்தில் கொஞ்சம் முணுமுணுப்பு ஏற்பட்டது. அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலே அவரை அப்போது ஐ.ஏ.எஸ். ஆக்கி விட்டோம். அதற்குப் பிறகு, இன்று





விவசாயப் பல்கலைக் கழகத்திலே துணை வேந்தராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அவர்கள் விடுவதில்லை.

இன்னொன்றையும் சொல்கிறேன். நான் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது, இந்த வறட்சி நிவாரணப் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வறட்சி நிவாரணப் பணியை எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்று நாங்கள் அமைச்சரவையைக் கூட்டி, பேசி முடிவெடுத்தபோது நான் அவர்களிடத்திலே ஒன்றைச் சொன்னேன். டெக்னிக்கல் அதிகாரிகள் எல்லாம்—நம்முடைய தலைமைப் பொறியாளர்கள்தான்—அனுமதி கொடுத்து விட்டால் போதும். தலைமைப் பொறியாளர்கள் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு அது அரசாங்கத்திற்குப் போய், பி.டபிள்யூ. இலாகாவில் செயலாளர் அனுமதி கொடுத்தால்தான் முடியும் என்ற நிலைமை மாற்றப்பட வேண்டும். அது தாமதத்திற்கு வழி செய்கிறது. ஆகையினாலே, தலைமைப் பொறியாளர் அனுமதி கொடுத்தாலே அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். தலைமைச் செயலகத்தில் உள்ள செயலாளரும் ஒத்துக் கொள்ளவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரும் ஒத்துக் கொள்ளவில்லை. நான் முதல் அமைச்சரிடத்தில் சொன்னேன். அப்படியானால் அந்தப் பொறுப்பு எனக்குத் தேவையில்லை. ஒவ்வொருவராகப் போய் த லைமைப் பொறியாளர்—டெக்னிகல் ஆபீசர் என்று சொல்லி, அதற்கு மேலே ஏன் அரசாங்கத்திற்குப் போக வேண்டும் என்று சொல்லி, கடைசியாக தலைமைச் செயலகத்தில் இருந்து உத்தரவு வந்தது, கமிஷனரே அதைச் செய்து விடலாம் என்று அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், பரவலாக மாற்றங்கள் சில ஏற்பட்டாக வேண்டும். அதற்காக இருக்கும் அந்த அலுவலர்கள் உண்மையிலேயே அந்த இலாகாவில் சம்பந்தப்பட்டவர்கள் நன்றாக அனுபவம் உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் அன்றாடம் கிராம மக்களோடு பழகி வருபவர்கள். பழைய காலத்தில் பார்ப்போமானால், இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிபல் கவுன்சில்ஸ் அன்ட் லோகல் போர்ட்ஸ் என்றும், அதற்கு அடுத்து, ரீஜினல் இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் என்றும், அதற்கு அடுத்து டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்து ஆபீசர் என்றும், தாலுக்கா பஞ்சாயத்து ஆபீசர் என்றும் இப்படி அடிப்படையில் இருந்து வந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் எல்லாம் ஒரு டைரக்டராக வர வேண்டும் என்று சொன்னால் அவர்களுடைய காலத்தில் முடியாது. இப்போதாவது அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, அந்தப் பதவிக்கும் வளர்ச்சித் துறையில் வரும் அலுவலர்களுக்கே தந்திட வேண்டும். இதனால் வளர்ச்சித் துறையில் இருக்கும் அந்த அலுவலர்களுக்கு ஊக்கம் ஏற்படும் என்ற கருத்தை டாக்டர் டக்னஸ் என்சிம்கர் என்பவர் சொல்லி

[திரு. அன்பில் தர்மலிங்கம்] 1982 மார்ச் 13

யிருக்கிறார். அவர் போர்ட் நிறுவனத்தில் 19 ஆண்டுக் காலம் பணியாற்றியவர். இந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அவருடைய கருத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Dr. Douglas Ensminger:

"Panchayat Raj can be greatly strengthaned and its role made more dynamic if the relationship between the Panchayat as an institution of the people and the Governmental staff at the district and block levels is clarified. The Panchayats must see their role as being more dynamically developmental and the Governmental staff must view the Panchayats as a means of getting the people to accept and do the things which the village peoples' leaders and the Government feel to be in the best interests of the people and the nation."

என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதைய நிலையில் மாவட்டங்களில் நடைபெற்று வரும் மிகுதியான வேலைகளை கவனிக்க மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரே உதவியாக இருந்து வருகிறார். இவர் வளர்ச்சிப்பணிகளோடு இதனையும் முழுமையாக ஆய்வு செய்ய இவரால் நிச்சயமாக இயலவில்லை. எனவே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கிறபடி மாவட்ட முழுமைக்கும் வேலைகளை மட்டும் பார்வையிட்டு ஆய்வு செய்ய மாவட்ட வருவாய் அதிகாரி நிலையில் ஒரு அலுவலரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக வளர்ச்சித் துறையிலின்றும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

கடந்த ஆண்டில் கோவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு அலுவலர் மாநாட்டில் பேசுகின்றபோது மாவட்டங்கள் தோறும் நடைபெறும் வேலைகளை ஆய்வு செய்ய இதுபோன்ற அலுவலர்களை நியமிக்க வேண்டும் என்று பேசியதாக பத்திரிகைகளில் பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பேசியதாகப் பார்த்தேன். அவைகளை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்திலே கூட நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, தென்னாற்காடு ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து இருக்கிறார்கள். நான் அப்போதே சொன்னேன். நீங்கள் மக்கள் பிரதிநிதிகளையும் அங்கேயிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை



1982 மார்ச் 13] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

அழைத்து இதிலே செய்ய வேண்டும் என்று சொன்னேன். ஆகவே, அதையும் அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தன்னிறைவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவைகளுக்கு ஏறத்தாழ 14 கோடிக்குக் குறையாமல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதனை நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய இலாக்காவில் உள்ளோர் செய்து வருகின்றனர். இவர்களுக்கு என்று இருக்கும் பணியோடு இதனையும் சேர்த்து செய்வது வேலைகளைத் துரிதமாக முடிக்க இயலவில்லை என்று கருதுகிறேன். எனவே, வளர்ச்சித்துறைக்கென்றே மாநிலம் முதல் வட்டாரம் இறுதியாக முதன்மைப் பொறியாளர் முதல் ஒன்றியப் பொறியாளர் வரை வளர்ச்சித் துறைக்கு ஒரு பொறியியல் நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் செய்ய வேண்டிய வேலைகளை, செய்து முடிக்கப்பட்ட வேலைகளை செய்வது, பின்னர் பராமரிப்பது போன்ற செயல்கள் எளிதாகும் என்பதனையும் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே நம்முடைய சாலைகளைப் பற்றிச் சொல்கிறபோது, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் சாலைகள் மிக நன்றாக இருக்கிறது என்ற பெயர் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்கு ஒரு சாலை கூட சரியாக இல்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சமீபத்திலே கூட நான் வடநாடு சென்று இருந்த போது, குஜராத், மகாராஷ்டிரா, போன்ற மாநிலங்களில் பல இடங்களில் சாலைகளைப் பார்த்தேன். பல நேஷனல் ஹைவேய்ஸ் பல இடங்களில் இருப்பதைப் பார்த்தேன். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் டிஸ்ட்டிரிக்ட் ரோட்ஸ், மேஜர் டிஸ்டிரிக்ட் ரோட்ஸ் என்ற அளவிலேதான் சாலைகள் இருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலை என்று சொல்லக்கூடிய அளவில் 2, 3 தான் இருக்கின்றன. ஆனால், அங்கே எல்லாக் கிராமங்களிலும் அநேகமாக தேசிய நெடுஞ்சாலைகள் இருப்பதைப் பார்த்தேன். பார்த்துவிட்டு நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் சொன்னேன் இங்கே மட்டும் எப்படி ஒவ்வொரு சிறிய ஊரிலும் கூட தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது? தமிழ்நாட்டில் ஏன் இப்படி இல்லை என்று கேட்டேன் அவர்களுடைய கவனத்திற்காக அதைச் சொன்னேன்.

[இரவு 6—20]

நம்முடைய பொறியியல் துறையில் இருப்பவர்கள் வடநாட்டில் சென்று அவர்களோடு வாதாடி, சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். உங்களுக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்

றால் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டிலே இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்பட்டன கழக ஆட்சியில். மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் சேர்ந்து செய்ய வேண்டிய பணி, நிறைவேற்ற வேண்டியத் திட்டம் அது. பிற மாநிலங்களில் செய்யாததை எல்லாம் நம்முடைய மாநிலத்தில் பொறியியல் துறையில் இருப்பவர்கள் வாதாடி, அனுமதியைப் பெற்று வந்து, இங்கே மேம்பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்டவர்களை அங்கே அனுப்பி, தேசிய நெடுஞ்சாலைகள் பற்றிய கூட்டங்களுக்கு அனுப்பி, வாதாடி அதிகமாக தேசிய நெடுஞ்சாலைகளை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே பல்வேறு பிரச்னைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேனே அல்லாமல் குறைகள் சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் இங்கே நினைவு படுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் வந்த போது 1967-ஆம் ஆண்டு இதே கோட்டையில் மேலே அவர்கள் எல்லா அமைச்சர்களையும் உட்கார வைத்துவிட்டு அண்ணா அவர்கள் வந்து அவர்களுடைய இடத்திலே அமர்ந்தவுடன் எல்லா அமைச்சர்களும் மகிழ்ச்சியோடு வந்து உட்கார்ந்தோம். அப்போது நாவலர் அவர்கள் இங்கே சிரித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் இங்கே இல்லை. அப்போது அண்ணா அவர்கள் நாவலரைப் பார்த்துச் சொன்னார்கள் என்ன அப்படி சிரித்துக்கொண்டிருக்கிறீர்கள்? எதை நம்பி இந்த நாட்டு மக்கள் நம்மிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்? அவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்று நான் வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறேன்; நீங்கள் சிரிக்கிறீர்கள். தம்பீ. இந்த நாற்காலி நமக்குச் சொந்தமில்லை. இதிலே இதற்கு முன்னாலே எத்தனையோ பேர்கள் உட்கார்ந்தார்கள், நமக்குப் பின்னாலே எத்தனையோ பேர்கள் உட்காரப் போகிறார்கள்; இது நமக்குச் சொந்தம் இல்லை. நமக்கு முன்னாலே இருந்தவர்கள் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். நாம் என்ன செய்யப்போகிறோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையே உங்களுக்கு நினைவூட்டுகிறேன். நீங்கள் செய்த சாதனைகளைச் சொல்லுங்கள்.

அண்ணா அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த நாற்காலி நமக்குச் சொந்தமில்லை என்று சொல்லும்போது நாம் மந்திரியாக எத்தனை ஆண்டுக்கு இருந்தோம் என்ற கணக்கைப்





பார்க்காமல் நாம் மந்திரியாக இருக்கும்போது எத்தனை கிராமங்களுக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்ற சாதனைகளைச் செய்து காட்டுங்கள், பெருமைப்படுவேன் என்று சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. காங்கிரஸ் ஆட்சியில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்தார்கள். ஆனால், அவர்கள் செய்ததை எடுத்துச் சொல்ல தவறிவிட்டார்கள். என்னையும், பெரியாரையும் திட்டியே கெட்டுப்போனார்கள் என்று சொன்னார்கள். அதைப்போல, நீங்கள் செய்த சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டே வாழ்நாளைக் கழிப்பது சரியல்ல. என்றைக்கோ ஒருநாள் நாம் நிச்சயமாக நல்ல நிலைமைக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நினைவூட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த 3 கோரிக்கைகளையும் மாமன்றத்திலே எடுத்துக்கொண்டு இதுவரை 31 மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை அமைச்சரவைக் கூட்டத்திலே தெரிவித்தார்களோ அந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்து அனைத்துக் கிராமப்புற மக்களும் பயனடைய வேண்டும் என்பதற்காகவும் தமிழகத்தில் இருக்கக் கூடிய 47,000 குடியிருப்புகளும், 13,241 கிராமப் பஞ்சாயத்துக்களும், 378 ஊராட்சி ஒன்றியங்களும், 107 நகராட்சிகளும், 3 மாநகராட்சிகளும் பயன்படவேண்டும் என்பதற்காகவும் தான் தமிழகத்தில் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டம் என்ற பெரிய திட்டத்தை இன்று தமிழகத்திற்குக் கொடுத்து, எல்லோருமே வாழ்த்துகின்ற வகையில் போற்றுகின்ற வகையில் ஆச்சர்யப்படுகின்ற வகையில் இன்று திட்டப் பணிகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளை பற்றி மட்டுமல்லாமல் தமிழ்நாடு என்ற ஒரு பெரிய மாநிலத்தில் நடைமுறைப்படுத்துகின்ற பணிகளைப்பற்றியும் கோடிட்டுக் காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே எல்லா மாமன்ற உறுப்பினர்களுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. ஆனாலும் இந்த அவையில் அவ்வளவு தூரம் பதிலை சொல்லிக்கொண்டிருந்தால் நீங்கள் எல்லாம் கண்டிப்பாக பொறுக்கமாட்டீர்கள் என்பது தெரியும்.

ஆகவே ஒருசில கருத்துக்களை மட்டும், எந்தெந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களோ அதற்கு மட்டும் முதலிலே பதில் சொல்லிவிட்டு அதற்குப் பின்னால் என்னுடைய

[திரு. ப. குழந்தைவேலு] [1982 மார்ச் 13

திட்டப் பணிகள் பற்றியும் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லாத திட்டங்களையும் பற்றி நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இங்கே முதலிலே பேச ஆரம்பித்த அரியலூர் ஆறுமுகம் முதல் கடைசியாகப் பேசிய அருமை அண்ணன் அன்பில் அவர்கள் வரையிலும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக இந்த அரசினைப் பார்த்து இந்த அரசுக்கு என்ன தகுதி இருக்கின்றது என்று கேள்வி கேட்டவர்கள் கூட இந்த மாமன்றத்திலே இருக்கின்றார்கள் என்பதை எண்ணுகிறகின்றபோது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. கடந்த 30 ஆண்டுக்காலமாக யாரும் செய்யாத காரியங்களை எல்லாம் இந்த அரசு செய்து வருகின்றது. காய்க்கின்ற மரத்தின் மீது கல்லடியும் சொல்லடியும் விழும் என்று சொல்வது போன்று எங்களைப் பார்த்து சொல்லடியும் சில நேரங்களிலே கல்லடியும் வீசி வருகிறார்கள். எங்களைப் பொறுத்தவரையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னபடி எதையும் தாங்கும் இதயத்தோடு இந்த நாட்டுக்கும் கிராமப்புற மக்களுக்கும் காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம். ஆகவே எப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டாலும் எங்களுடைய பணி ஓயாது. கண்டிப்பாக இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த கொள்கைக்காகவே நாங்கள் வாழ்கிறோம் என்பதையும் இதை முடித்துவிட்டுத்தான் எங்களுடைய பணி முடியும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

குறிப்பாக இங்கே ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது தன்னிறைவுத் திட்டம் நல்ல திட்டம் தான், ஆனால் அவற்றைச் செயல்படுத்துவதிலே தவறுகள் இருக்கின்றன என்று சொன்னர்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே உண்மையிலேயே என்னென்ன காரியங்களை இவர் செய்யத் தவறி விட்டார்., ஆகவே என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைச் சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள் கிறேன். ஆனால் வானத்தைப் பார்த்துக்கொண்டு மேலே தெரியுது பார் என்று சொல்லி வானத்தைச் சுட்டிக்காட்டி பல் வேறு கோளாறுகள் இருக்கின்றன என்று சொல்வதைப் போன்று, தூய வானமாக இருக்கின்ற புரட்சித் தலைவரைப் பார்த்து புழுதிவாரித் தூற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு யாராவது இருந்தால் நான் மாண்புமிகு உறுப்பினர்களைப் கேட்டுக் கொள்வேன்—அந்த எண்ணத்தை தயவுசெய்து மாற்றிக்கொண்டு விட்டுவிடுங்கள். குற்றம் குறை இருக்கின்றது என்று எடுத்துக் காட்டினால் திருத்தக்கூடிய குறை என்றால் திருத்திக்கொள் கிறோம். திருத்திக்கொள்ள முடியாது என்று சொன்னால் ஆட்சியிலே இருந்தும், அந்தப் பொறுப்பிலே இருந்தும் கூட நாங்கள் விடுபடுவதற்குத் தயாராக இருக்கிறோம். அப்படிப் பட்டவர்கள் தான் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறோம் என்பதை யும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 13] [திரு. ப. குழந்தைவேலு]

அரியலூர் ஆறுமுகம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரியலூர் பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இன்று இருக்கக்கூடிய நிலைமையிலே பல்வேறு பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப் படவேண்டும், அந்த முதிர்ந்த நிலைமையினை ஏற்படுத்த, வேண்டும் என்ற நிலைமையில் அவற்றை எல்லாம் செய்யவேண்டும் என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்பதை அவர் களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார் கள். சாலையிலே கற்கள் போடப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் கட்டப்படாமல் இருக்கின்றது என்று சொன்னார்கள். கல்லைப் போட்டவுடன் ஒப்பந்தக்காரர்கள் பாதை வேலையினை ஆரம் பிக்காமல் இருப்பதன் காரணத்தால் கற்களே கூட இல்லாமல் இருக்கின்றது என்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலே அதை நான் வரவேற்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் கல்லைப் போட்டவுடனே பணியினை ஆரம்பிக்காமல் தள்ளிப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே அதற்கெல்லாம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கற்கள் எப்போது சாலைகளின் ஓரத்திலே போடப்படுகிறதோ அப் போதே பணிகளை ஆரம்பிக்கவேண்டும் என்ற உத்தரவுகளை நெடுஞ்சாலைத் துறையினர் பிறப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் ராஜமாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக பேசிய நம்முடைய அருமை நண்பர் தங்கமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் பற்றி எடுத்துச் சொன் னார்கள். பேரூராட்சி பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு உடம்பு சரியில்லை என்பதைக் கேள்விப்படுகின்ற நேரத்திலே எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நல்ல தங்கமணி போன்றவர்கள் இன்று உடம்பு சரியில்லை என்ற காரணத்தால் எழுதிப்படிக்கின்ற சூழ் நிலையில் அவர்கள் எடுத்துச் சொன்னர்கள். எனக்கு இருந்த எண்ணம் எல்லாம் குழந்தை 5 வயது வரையிலும் பேசவில்லை என்றால் ஐந்தாவது வயது முடியும்போது திடீரென்று பேச ஆரம்பிக்கின்றபோது நல்ல வார்த்தைகளைப் பேசும் என்று எதிர் பார்ப்பது உண்டு. அதேபோன்று தங்கமணி அவர்களுடைய வாயிலே இருந்தும் நல்ல வார்த்தைகள் வரும் என்று எதிர்பார்த்து நான் ஏமாந்துவிட்டேன். அதற்குக் காரணம் இன்று அவர்கள் பேசுகின்றபோது தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிச் சொல்கின்றபோது, அந்தத் திட்டம் செயல்படுகின்றதா என்று பார்த்தால் கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறி விட்டது என்று சொன்னார்கள்.

[திரு. ப. குழந்தைவேலு] [1982 மார்ச் 13

சமீபத்திலே மத்திய அரசின் மூலமாக ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்பது எந்த மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது மட்டும் அல்ல. காட்டக்கூடிய கணக்குகளை யார் ஒழுங்காக காட்டுகிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் ஒழுங்காக கணக்குகளைக் காட்டுகிறார்கள் தமிழகத்தில் மட்டும் தான் செய்யப்பெறும் வேலைக்கு சரியாக கணக்கு காட்டுகிறார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொல்லிஅது இன்றைய செய்தித்தாளிலே வெளிவந்து இருக்கிறது ; அதை தயவுசெய்து தங்கமணி போன்றவர்கள் எல்லாம் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(இரவு 6-30)

உண்மையிலேயே அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்டது என்கிறபோது அவர்களுடைய கண்ணுக்கு கட்டெறும்பு தான் தெரிந்ததே தவிர கழுதை எப்படித் தெரியாமல் போய்விட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் வேறு மாநிலங்கள் எல்லாம் இந்த திட்டத்தை சரியாக நடத்தாத நேரத்தில் கட்டெறும்பாக இருக்ககூடிய தமிழகம் சிறப்பான முறையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், கட்டெறும்பு உங்கள் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் * * கழுதைகள் தெரியாமல் போய்விட்டது என்று சொல்லிக் கொள்கிற நேரத்தில் எனக்கு உண்மையிலேயே சங்கடமாக இருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் தங்கமணி அவர்கள் சொல்லியிருந்தாலும் சரி, அல்லது அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தாலும் சரி, ** * * * * * என்கிற வார்த்தையை சொல்வது சரிதானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற மாநிலங்களின் உரிமையை பாதிக்கும் வகையில் பேசக் கூடாது. * * * நீக்க விடும்படி உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, அதேநேரத்தில், இந்த ஆட்சியை திறம்பட நடத்துவதற்கு உங்களுக்கு தகுதி இருக்கிறதா என்று அருமை நண்பர் தங்கமணி அவர்கள் கேட்டார்கள். நான் உண்மையிலேயே அவர்களைப் பார்த்து திருப்பிக் கேட்கமாட்டேன். ஆனால் இந்தியாவிலேயே இப்படிப்பட்ட சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்து, கிராமப்புற மக்களுக்கு பல நன்மைகளை இந்த திட்டத்தின் மூலம் செயலாற்றிக் கொண்டிருக்கிற நேரத்தில் எங்களைப் பார்த்து உங்களுக்கு தகுதி இருக்கிறதா என்று கேட்டால், * * * * ஏனென்றால் அப்படி சிறப்பான பணிகள், சீரான பணிகள் தமிழகத்தில்தான் நடைபெறுகிறது என்று நாங்கள் அல்ல, உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த உங்கள் கட்சி ஆட்சியில் இருக்கக்கூடிய, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தான் இந்தக் கருத்தை இங்கே வந்து தெரிவித்திருக்கிறார்கள். இங்கே நடைபெறக்கூடிய தன்னிறைவுத் திட்டத்தைப் பார்த்து விட்டு, எப்படி உங்களுக்கு பணம் கிடைத்தது ? எப்படி 200 கோடி ரூபாய் வரையில் செலவழித்துக் கொண்டு இருக்கிறீர்கள்! அந்தப் பணம் எங்கே இருந்து உங்களுக்கு வருகிறது என்ற கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனக்கே கூட கடிதம் எழுதி இருக்கிறார்கள். உண்மையிலேயே இப்படிப் பட்ட சிறப்பான திட்டத்தை எந்தெந்த அடிப்படைகளில் நிறைவேற்றுகிறீர்கள். எப்படி இதை சிறப்போடு செயலாற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்கிற விவரத்தை எனக்கு புத்தக வடிவில் அனுப்புவீர்களேயானால் எங்களுடைய மாநிலத்தில் நாங்கள் அதை அமுல் படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று உங்களுடைய கட்சி ஆளுகிற உத்தரப்பிரதேச மாநிலத்தினுடைய அமைச்சர் தான் அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் உங்களுடைய கண்ணுக்குப் படவில்லை காரணம் கழுதை தேய்ந்து.................. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் அடுத்த சப்ஜெக்டுக்குப் போகலாம். அங்கேயே நிற்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆகவே தங்கமணி அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்த வரையில் எப்படிப்பட்ட நிர்வாகம் நடைபெறுகிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும். உங்களை காட்டிலும் அதிகமாகவே தெரியும் என்றுகூடச் சொல்ல வேண்டும். அங்கே இருக்கக்கூடிய பணியாளர்கள் எப்படி இருக்கிறார்கள். யார் யார் மாற்றப் பெற வேண்டும், யார் யார் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற விவரங்களை

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

உங்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். சொன்னது மட்டுமல்ல உடனடியாக நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறேன். அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்ட பின்னாலும் கூட, எங்கள் மீது நம்பிக்கையில்லை, எங்களுக்கு ஆளத் தகுதியில்லை என்று சொன்னால் வேறு யார் இந்த மாநிலத்தை ஆளப் போகிறார்கள். உண்மையிலேயே திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்களைத் தவிர, இந்த தமிழகத்தில் கால் வைப்பதற்கு வேறு யாருக்கு நாதி இருக்கிறது என்பதை நான் பணிவோடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட பாரம்பரியம் என்றால், நாங்கள் எல்லாம் யார் திராவிட பாரம்பரியத்தில் வந்தவர்கள் இல்லையா! வேறு எந்த இனத்திலிருந்து வந்தவர்கள்? நாங்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? அதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இன்னொன்று, உண்மையிலேயே வங்கக் கடல் அலை ஓரத்தில் தங்கத் தமிழனாக, இன்று கல்லறைக் காவியமாகிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், அவர்களுடைய வார்த்தைகளைப்பற்றியும் பெரிதும் நினைவு கூர்ந்தார் மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள். உண்மையிலேயே நான் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காலம் கடந்தாவது பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், அவர்களுடைய மொழிகளைப்பற்றியும், அவர்கள் சொன்ன வார்த்தைகளைப் பற்றியும், நீங்கள் இந்த அளவுக்கு எடுத்துக் கூறியதைப் பற்றி, நினைத்துப் பார்க்கையில் உண்மையிலேயே தேசிய பாரம்பரியத்தில் எங்கோ ஒரு வாரிசு உருவாக்கப்படுகிறதோ என்கிற எண்ணத்திற்குத்தான் நான் வரமுடிந்தது. அந்த வகையில் தான் உங்களுடைய பேச்சு இருந்தது. அந்த அளவுக்கு நீங்கள் அண்ணாவைச் சுட்டிக்காட்டி பேசியிருக்கிறீர்கள். அதற்குக் காரணம் எல்லாம் தமிழகத்தில் இன்று இருக்கக்கூடிய திராவிட பாரம்பரியத்தில், வந்த பேரறிஞர் அண்ணாவை போன்றவர்கள் பகுத்தறிவுப் பகலவன் தநதைப் பெரியாரைப் போன்றவர்கள், புரட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்கள் தான் இந்த தமிழகத்தை வாழ வைக்க முடியும் என்பது மட்டுமல்ல வாழ்வளிக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டுவதும் அவர்களுக்குத்தான் தெரியும் என்ற காரணத்தால்தான் பேறறிஞர் அண்ணா அவர்களை மேற்கோள் காட்டி, அவருடைய வார்த்தைகளைச் சொன்னீர்கள். இல்லையென்று சொன்னால், தேசிய பாரம்பரியத்திலே வந்தவர்கள் இந்திய உப கண்டத்திலே எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள் மறைந்தார்கள் என்று நாம் பெருமைப்பட்டிருகிறோம். அவர்களுடைய வார்த்தைகளை மேற்கோள் காட்ட



முடியவில்லை. காட்ட முடியாது. அதற்குக் காரணம் அவர்கள் சொல்லவில்லை என்பதுதான். ஆகவே தான் நீங்கள் உண்மையிலேயே தேசியப் பரம்பரையிலே இருந்தாலும், எங்களுக்கு ஒரு வாரிசு அங்கே இருக்கிறது என்கிற நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக பேசிய நன்னிலம் கலையரசன் போன்றவர்கள் அருமை நண்பர் சுந்தரம் போன்றவர்கள் பல்வேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நகர நிர்வாகத்திலே இருக்கக்கூடிய கடைகளுக்கு அதிகமாக இன்று வாடகை ஏற்றப்பட்டிருக்கிறது. 50 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று ஜி. ஓ. போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியினை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் 50 சதவீதம் என்பதை மாற்றி 30 சதவீதம் கொடுத்தால் போதும் என்று நேற்றைக்கு முன் தினமே ஆணை பிறப்பிககப்பட்டுவிட்டது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக அருமை நண்பர் எம். பி. ரத்தினம் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நகர நிர்வாகத்திலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் போடப்பட்டிருக்கக்கூடிய குண்டு பல்புகளை எல்லாம் அகற்றிவிட்டு நீண்ட குழல் பல்புகளாக ஆக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இன்று மின்சாரத்துறை அமைச்சரிடத்திலே பேசி அதற்குரிய நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்களிலே எடுக்க இருக்கிறோம். நகர நிர்வாகத்தைப் பொறுத்த அளவிலும் எடுக்க இருக்கிறோம்.

இன்னொரு முக்கியமான ஒரு கொள்கைப் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் மட்டும் அல்லாது பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் உள்ளிட்ட பல அமைப்புகளிலும் இன்றைக்குப் பல்வேறு நபர்கள் தனியார்கள்சந்தைகளிலே வைத்து நிதி வசூலிக்கிறார்கள். அதிலே லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு இவைகளையெல்லாம் உள்ளாட்சி அமைப்புக்கு மாற்ற வேண்டும், அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் சந்தைகளில் வசூலிப்பதை எல்லாம் தடுப்பதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை இந்த அரசின் மூலமாக எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்குள்ளேயே இதற்குரிய சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம். அதன் மூலமாக வெளியாருக்குக் கிடைக்கக் கூடிய லாபம் பொதுமக்களுக்குப் போய்ச் சேரும். பரவலாக்கப்படும். அதன் மூலமாக இருக்ககூடிய ஊராட்சி ஒன்றியங்களுடைய நிதி நிலை சரியாகவும், பேரூராட்சிகளின் நிதி நிலைமை சரியாவ

தற்கும், நகராட்சிகளின் நிதி நிலை சரியாவதற்கும், இது வழி கோலும் என்கிற காரணத்திற்காக இத்தகைய சந்தைகளை நாம் எடுக்க இருக்கிறோம்.

அதே போல் இன்று நகரப் பகுதிகளிலே ஆங்காங்கு மாட்டுவண்டிகள், பட்டாக்கள் போட்ட மாட்டு வண்டிகள் ஓடுவதன் காரணமாக அங்கே இருக்கக்கூடிய சாலைகள் பழுதுபட்டுகின்றது என்கின்ற காரணத்தால், இனிமேல் கொடுக்கக் கூடிய கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொடுக்கக்கூடிய வண்டிகளை டயர் வண்டியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

நகர நிர்வாகத்திலே இன்று இருக்கக்கூடிய மருத்துவர்கள் சரியாகப் பணிசெய்வதில்லை, அவர்கள் எல்லாம் உடனடியாக நகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அருமை நண்பர் பூங்காவனம் அவருடைய தொகுதியைப் பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே என்னிடத்திலே நேரிலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக அந்தக் குறைகள் நீக்கப்படும்.

கம்பம் தொகுதியைச் சேர்ந்த ஆர். டி. கோபால் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி, பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். அதற்குக் காரணம், போன ஆண்டும், இந்த ஆண்டும் பல்வேறு திட்டங்களை கம்பம் தொகுதிக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திரு. செல்வராஜ் போன்றவர்கள், உகம்சந்த் போன்றவர்கள் நவநீதகிருஷ்ண பாண்டியன் போன்றவர்கள் பல்வேறு கருத்துகளைத் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தாராபுரம் தொகுதி உறுப்பினர் பெரியசாமி அவருடைய தொகுதியைப் பற்றிச் சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்கு பக்கத்திலே இருப்பது தாராபுரம் தொகுதி. ஆகையால் கண்டிப்பாக மாற்றந்தாய் மனப்பான்மை இல்லாமல் என்னுடைய தொகுதி என்கிற காரணத்திற்சாகவும் நான் நடவடிக்கைகளை எடுப்பேன் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் ராஜரத்தினம் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி பூவிருந்தவல்லியில் 3 மகப்பேறு நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன அவைகளைத் திறப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.





அதே நேரத்தில் இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்— பேரூராட்சிகளுக்கு எதற்காக தனி இயக்கம் என்று கேள்வியைக் கேட்டார்கள். நான் அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்— இருக்கிற பேரூராட்சிகளிலே பல்வேறு பணிகள் தங்குதடையின்றி நடைபெறவேண்டும் என்பதற்காகவும், மக்களுக்கு அதனுடைய பலன் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகவும், அப்படிப் பட்ட அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். எதற்காக பேரூராட்சிகளுக்கு தனி இயக்கம் ஏற்பட்டது என்றால் தனி இயக்கம் ஏற்பட்டதற்குப் பின்னால் பேரூராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு எடுக்கப்பட இருக்கின்றன. அதற்காக 100 பேரூராட்சிகள் இந்த ஆண்டு எடுக்க இருக்கிறோம் என்பதை அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எடுக்கின்ற நேரத்தில் எந்தெந்த பேரூராட்சிகள் பண உதவி இல்லாமல் காரியங்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட அதாவது 'பைனான்ஷியலி வீக்' ஆக உள்ள பேரூராட்சிகள் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் திருநெல்வேலியில் இருக்கக் கூடிய பாப்பாக்குடி பேரூராட்சியில் இன்று அங்கே பணி புரியும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட பேரூராட்சிகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. 100 பேரூராட்சிகள் எடுக்கப்படும்.

[இரவு 6.40]

அடுத்தாற்போல் உச்சி அவர்கள் மலையில் எப்படி நிலைமைகள் இருக்கின்றது என்று எடுத்துச்சொன்னார்கள். குறிப்பாக நீலகிரி மலையைப் பொறுத்த அளவில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் ஏற்கனவே மூன்று ஒன்றியங்கள் எடுக்கப்பட்டன. அந்த ஒன்றியங்களில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுவதற்கு திட்டங்கள் இருக்கின்றன. அரங்கநாதன் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கூனூர் கூடலூர் போன்ற பகுதிகளில் மலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக பல்வேறு பணிகளைச் செய்ய இருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து பேசிய அருமை நண்பர் சுந்தரம் அவர்கள் கோபத்தோடு தன் கருத்துக்களை தெரிவித்நார்கள். அவ்வாறு தெரிவித்ததற்குக் காரணம் அவர்கள் பகுதிக்கு எந்தத் திட்டமும் வரவில்லை என்ற காரணத்தால் என்மீது கோபப்பட்டார்கள். நான் அவர்களுக்குப்பணிவன்போடு தெலித்துக்கொள்ள

விரும்புகிறேன் இந்த ஆண்டில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் தன்னிறைவு திட்டத்தின் கீழ் எடுக்கப்படுகின்ற காரணத்தால் கண்டிப்பாக என்னென்ன வேலைகள் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த வேலைகள் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து பேசிய மேட்டுப்பாளையம் பழனிசாமி அவர்கள் தன் தொகுதி பிரச்னைகள் பற்றி எடுத்துச்சொன்னார்கள். நாமும் ஹெலிகாப்டர் வைத்து அதன் மூலம் மலர் மாலை தூவ வேண்டும் என்று சொன்னார்கள். தயவுசெய்து அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யவேண்டாம். * *

அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தி விடக் கூடாது. ஆகவே அந்த எண்ணத்தை விட்டு விட்டு அவருக்குப் பாராட்டுவதற்கு எண்ணம் இருந்தால் அதை அவர் தெரிவிக்கலாம் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய நிலைமைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

**திரு. கே. எம். தங்கமணி :** * * * என்பதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** டாக்டர் சௌரிராஜன் அவர்கள் மாநகராட்சியில் இருக்கக்கூடிய நிலைமைகளைப் பற்றிச் சொன்னார்கள். மாநகராட்சியின் சுயாட்சிப் பற்றியும் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். it is a hearty autonomous body மாநகராட்சி சுயாட்சியோடுதான் செயல்படுகிற நிறுவனம். மேலும் சுயாட்சித் தேவையில்லை. அதே நேரத்தில் லிட்டர் பிரிசோன் மெரினா சாலையில் காமராஜ் சாலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல்வேறு சாலைகள், இத்திட்டத்தின் கீழ் நாங்கள் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். ஆனால் மாநகராட்சிப் பகுதியில் எப்படி நிலைமைகள் இருக்கின்றன என்பது என் போன்றவர்களுக்குத் தெரிந்திருக்கின்ற காரணத்

** மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





தால் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைகளைக் கேட்டுக்கொண்டு வருகிறேன். என்னென்ன குறைகள் நீக்க வேண்டுமோ அதன் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ காலாகாலத்தில் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்து கணபதி, சின்னராஜ் போன்றவர்களும் பட்டாபிராமன், பெருமாள் போன்றவர்களும், ராஜமாணிக்கம் சிவப்பிரகாசம் போன்றவர்களும், கலிதீர்த்தான், சிவஞானம், பழனிசாமி, சாகுல் ஹமீது ஆகியவர்களும் தங்கள் தொகுதியைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். அவைகளையெல்லாம் குறித்துக்கொண்டிருக்கிறேன். கண்டிப்பாக அவைகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உறுதிப்பாட்டை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து பேசிய திரு. மூர்த்தி அவர்கள் உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் எந்த முறையில் எங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களைப் போன்றவர்களுக்கு நன்கு தெரியும். ஏற்கனவே அருமை அண்ணன் அன்பில் அவர்கள்கூட ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு நல்ல யோசனைகளைக் கூறினார்கள். இந்த அரசு கொண்டுவந்த ஒதுக்கீடுகளைப் பாராட்டினார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒதுக்கீடுகளைக் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து சிலர் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அரசியல் விரோதம் காரணமாக தடை பெற்றிருக்கிறார்கள். ஆனால் தடைகள் நீக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் உள்ளாட்சித் தேர்தல்களை எவ்வளவு சீக்கிரம் நடத்தமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. உள்ளாட்சித் தேர்தல்கள் பொறுத்த வரையில் அருமை அண்ணன், ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஏற்கனவே ஒதுக்கப்பட்டவை எல்லாம் கடந்த 1971 மக்கள் தொகை வாக்கெடுப்பின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. 1981-ல் நடந்த மக்கள் தொகை வாக்கெடுப்பு பற்றி விவரங்கள் வருகிற மே மாதத்தில்கிடைத்துவிடுமே மேயில் கிடைத்துவிட்டால் அதன்படித்தானே செய்யவேண்டிவரும் என்று சொன்னார்கள். ஆனாலும் கூட கோர்ட் தீர்ப்பு எப்படியிருக்கிறதோ அந்தத் தீர்ப்புக்கு ஏற்றமுறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக திரு. கு. பா. பழனியப்பன் அவர்கள் விழுப்புரம் நகராட்சி பற்றியும் அங்கே இருக்கக்கூடிய சாலைகள் பற்றியும், பழுதடைந்த சாலைகள் பற்றியும எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதை கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன். கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுப்பேன் என்ற உறுதிப்பாட்டை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அரங்கநாதன் அவர்கள் குன்னூர் பற்றி எடுத்துச் சொன்னார்கள். திரு. அரங்கராசன் அவர்கள் துறையூர் பற்றி எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய அருமை அண்ணன் அன்பில் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இங்கு கிராம ராஜ்யம் நடைபெறுகிறதா, இல்லை, அதிகாரிகள் சாம்ராஜ்யம் நடைபெறுகிறதா என்று கேட்டார்கள். அவர்களுக்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்லவேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு தமிழ் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிப்பது ராமராஜ்யம், ஆகவே ராமராஜ்யம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த ராம ராஜ்யத்தில்தான் இப்படிப்பட்ட தன்னிறைவுத் திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைகள், பாலங்கள் என்ற தலைப்பின்கீழ் பல்வேறு கருத்துக்களை அருமை நண்பர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று சாலைகள் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி இருந்து கொண்டிருக்கின்றது என்ற காரணத்தினால் இன்று சாலைகளை அதிகமாக, கிராமப்புறச் சாலைகள் அதிகமாக நாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். கிராமப்புறச் சாலைகள் பொறுத்து இந்த மாநிலத்தில் உள்ளதைப்போல் வேறு எந்த மாநிலத்திலும் அவ்வளவு நீளமான சாலை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய கிராமப்புறச் சாலைகள் நீளம் 71,527 கிலோ மீட்டர்கள். ஆனால் இதேபோன்று நீளம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

அதேபோல் கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த 6,860 கிலோ மீட்டர்ஸ் மேம்படுத்த உலக வங்கி உதவி மூலம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக 152 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே போடப்பட்ட மண் சாலைகளையெல்லாம் தார் சாலைகளாக மாற்றி அந்தத் தார் சாலைகளில் நம் பஸ் போக்குவரத்திற்கு ஏற்றமுறையில் செய்ய, கூடுதலாக 6,860 கிலோ மீட்டர்ஸ் எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.





இந்த ஆண்டிலிருந்து உள்ளாட்சிகளில் செயல்படுகிற பாலங்களாக இருந்தாலும், சாலைகளாக இருந்தாலும் ரூ. 50,000க்கு மேற்பட்டு இருக்கும் என்று சொன்னால் அவைகளெல்லாம் நெடுஞ்சாலைத்துறை மூலமாகத்தான் செய்யப்படவேண்டும் என்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்கிறோம். ஆகவே, பஞ்சாயத்துக்களுக்கு பணம் இல்லை என்ற காரணத்தால் பல வேலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்ற சூழ்நிலை இல்லாமல் இனிமேல் அப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் நெடுஞ்சாலைத் துறை மூலம் எடுக்கப்படும்.

அதேபோல் இன்று பல்வேறு பாலங்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன. மாநில நெடுஞ்சாலைகளாக இருந்தாலும், மாவட்ட நெடுஞ்சாலைகளாக இருந்தாலும் இதர மாவட்டச் சாலைகளாக இருந்தாலும் அந்தச் சாலைகளில் எல்லாம் பெரிய பளுவான வாகனங்கள் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் எங்கெங்கு பாலங்கள் இருக்கின்றனவோ அந்தப் பாலங்களையெல்லாம் பலப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அதற்காக இந்த ஆண்டு ரூ. 13,45,00,000 ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தின் மூலம் பலகீனமான பாலங்களை பலப்படுத்த, பெரிய வாகனங்கள் செல்வதற்குரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கக் கூடிய தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் 100 டன் கப்பாஸிட்டி என்று சொல்லும் அளவிற்குத்தான் பெரிய வாகனங்களை தாங்க முடியும். ஸ்டேட் ஹைவேஸ் எல்லாம் ஏறத்தாழ 10 அல்லது 14 டன்ஸ் வரை தாங்கும். ஆகவே பலகீனமாக உள்ள பாலங்களை இன்று பலப்படுத்த வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

(இரவு 6.50)

அதேபோல், தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் இந்தத் தமிழகத்தில் 1,726 கிலோ மீட்டர். அந்த 1,726 கிலோ மீட்டர் என்பது இப்போது மட்டுமல்ல; கடந்த 10 ஆண்டு காலமாக அப்படியே இருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் நீளம்கூட தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்படவில்லை. அதிகப்படவில்லை. இன்று இதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 16 சாலைகள போடப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. அதிலே 2 சாலைகளை எடுத்துக் கொள்ளுங்கள் என்று பணிவோடு கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட, அவர்கள் கேளா காதினர்களாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனாலுங்கூட, அங்கே இருக்கக் கூடிய அமைச்சரிடத்தில பேசி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1982 மார்ச் 13

இன்று நெடுஞ்சாலையைப் பொறுத்தவரை பல்வேறு பணிகள் அதிலும் குறிப்பாக 63 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் தீட்டி பணிகள் செயல்பட்டு வருகின்றன. அதே நேரத்தில், மூலதனச் செலவு ரூ. 20 கோடி என்று இப்படி பெரிய தொகையைப் போட்டு, பயிற்சி நிலையம் ஏற்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்து, இந்த ஆண்டிலே 50 இலட்சம் செலவில் அந்த பயிற்சி நிலையத்தை ஏற்படுத்த இருக்கிறோம். வருகின்ற பணியாளர்கள், குறிப்பாக, பொறியாளர்கள் எப்படி செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்தப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அவர்களுக்கு பயிற்சியைக் கொடுத்து, அந்தப் பயிற்சிக் காலம் முடிந்த பிறகு, அவர்கள் பணியிலே அமர்த்தப் படுகின்ற சூழ்நிலை உருவாகும் என்பதால், இந்த நிலைமையை நாம் சரி செய்து கொண்டிருக்கிறோம்.

அதேபோல், விரைவு வழித் திட்டம் ஒன்று நம் மாநிலத்திலே இல்லை. அதாவது எக்ஸ்பிரஸ் வே. நம் மாநிலத்திலே தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட சாலைகள் அல்லது மாவட்ட பெருஞ் சாலைகள் எல்லாம் நமக்கிருக்கிறதே தவிர, எக்ஸ்பிரஸ் வே என்று சொல்லக் கூடிய விரைவு வழித் தடம் நமக்கில்லை. ஆகவே, இப்படிப்பட்ட விரைவு வழித் தடம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அது ரெட்ஹில்சிலேயிருந்து தாம்பரம் வரை 31 கிலோ மீட்டர் தூரம் கொண்டது. இந்த விரைவு வழித் தடத்திற்கு 13 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த விரைவு வழித் தடத்தை ஏற்படுத்தினால், இப்போது ரெட்ஹில்ஸ்சிலிருந்து தாம்பரத்திற்கு 45 கிலோ மீட்டர் போவதற்குப் பதிலாக, அதுவும் டிராபிக் கன்ஜஷன் இல்லாமல், ரெட்ஹில்சிலிருந்து தாம்பரத்திற்கும், தாம்பரத்திலிருந்து ரெட்ஹில்சிற்கும் போவதற்கும், வருவதற்கும் உரிய விரைவு வழித் தடம் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்.

அதே நேரத்தில் இன்னொன்று. பல்வேறு மன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால், ஒரு கருத்தை அவர்கள் எல்லாம் தெரிவிக்க விட்டுவிட்டார்கள். அதற்குக் காரணம், அவர்களுக்கு நேரம் போதாது; நேரம் அதிகமாக அளிக்கப்படாதது தான் காரணம். ஒரு கருத்தை அவர்கள் எப்படியோ மறந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது முக்யமானது. பாம்பன் பால வேலைத் திட்டம். இந்த பாம்பன் பாலத்தைப் பற்றி அடிக்கடி இந்த மாமன்றத்திலே கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்குப் பதில் கூறி வந்திருக்கிறேன். ஆனாலுங்கூட, இதைப்பற்றி நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே பாம்பன்பால வேலைத் திட்டம் கடந்த 1974-லே ஆரம்பிக்கப்பட்டு, 1978லே முடிந்திருக்கவேண்டும். ஆனால், அதற்குப் பின்னால் ஏற்பட்ட புயல் காரணமாக, வேலை தடைப்பட்டது. வேலை தடைப் பட்டு போனாலும், அதைத் தொடர்ந்து செய்வதற்குக் காம்பன்



1982 மார்ச் 13] [திரு. ப. குழந்தைவேலு]

சேஷன் கொடுக்கவேண்டும் என்று அந்த கான்ட்ராக்டர், ஒப்பந்தக்காரர் கேட்டார் நாம் தங்களுக்கும் துறைக்கும் இடையில் எந்த ஒரு தகராறு அல்லது கருத்து வேற்றுமை இருப்பின் அதற்கு ஒப்பந்தத்தில் கண்டுள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம். என்று சொன்னதற்குப் பின்னால, அவர் வழக்கு மன்றத்திற்கு சென்றார். அப்படி வழக்கு மன்றத்திற்குச் சென்றாலுங்கூட, அங்குள்ள வேலைகள் தங்கு தடையின்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பாம்பன் பாலத்தின் வேலை தொடங்கப்பட்டு, இன்று காஸ்டிங், லான்சிங் போன்ற வேலைகளும், புரடக்ஷன் போன்ற வேலைகளும் அங்கே நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்று நெடுஞ்சாலையாக இருந்தாலும், பெரும் சாலைகளாக இருந்தாலும், அந்தச் சாலைகளில் போக்குவரத்து குறிப்பாக இரவு நேரங்களில், அகால நேரத்தில் வந்து போகின்ற நேரத்திலே, படுத்து உறங்க வேண்டுமென்று சொன்னால், டிரைவர்கள், கிளீனர்கள் விரும்பினால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காக தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் இருக்கிறது. ஆகவே, ஸ்டேட் ஹைவேஸ் ரோடுகளின் ஓரங்களிலே இப்படிப்பட்ட தங்கும் விடுதிகளைக் கட்டுவதற்காக ஒரு கோடி ரூபாய் ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திலே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 6 தங்கும் விடுதிகள் கட்ட இருக்கிறோம். அதற்காக 24 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டில் செலவழிக்க இருக்கிறோம். ஆகவே, இந்த தங்கும் விடுதிகளில் தங்கும் வசதிகள மட்டுமல்லாமல், வாகனங்களை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால், அதற்கான வசதிகளையும், அதோடு அவர்கள் வசதியாக தங்கி உறங்குவதற்கான வசதிகளும் கண்டிப்பாக இருக்கும் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒரு முக்கியமான கருத்து. கிழக்கு கடற்கரை சாலைபற்றி யாராவது சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். கேட்டு, கேட்டு இது கிடைக்காதோ என்ற காரணத்தாலே யாரும் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். கிழக்கு கடற்கரை சாலையை பொறுத்தவரையில் எட்டு மாவட்டங்களைத் தாண்டி செல்கிற சாலை. ஏறத்தாழ 773 கிலோ மீட்டர் செல்லக்கூடிய சாலை, ஏற்கெனவே மைய அரசின் மூலமாக 4 கோடி ரூபாய் பணம் கொடுக்கப்பட்டு 38 பால வேலைகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இந்த 38 பாலங்கள் இணைக்கிற வழித்தடத்தை தான் போட வேண்டுமென்று சொல்கிறோம். ஒரு வழித் தடமாக இருந்தால் 52 கோடி ரூபாய் செலவாகும் என்று எடுத்துக் சொல்லி, இரு வழித்தடமாக இருந்தால் 80 கோடி ரூபாய் தேவை என்பதை சொன்னோம். ஆனால், இது வரையில் கேளா காதினராய் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதை நேரிலே அங்கே இருக்கிற அமைச்சரிடத்திலே பேசி இதற்கு வேண்டிய பணத்தைப் பெறுகிற ஒரு நிலையை உருவாக்குவோம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில கடந்த ஆண்டிலே இந்த மாமன்றத்திலும், மேலவையிலும் எடுத்துச சொன்னேன். இதற்காக ஒரு ஆலோசனைக் குழு, கன்சல்டேட்டிவ் கமிட்டி நியமிப்போம் என்று எடுத்துச் சொன்னேன். ஆனால் போன ஆண்டில நியமிககவில்லை. இந்த ஆண்டிலே ஏற்படுத்தியிருககிறோம். அவர்களுடைய பெயர்களை வாசிக்கிறேன்.

மாணபுமிகு திரு. சனார்த்தனம், எம்.எல்.சி.

மாண்புமிகு திரு. காடுவெட்டி கண்ணப்பன், எம்.எல்.சி.

மாண்புமிகு திரு. சி. ஆர். லட்சுமிகாந்தன், எம்.எல்.சி.

மாண்புமிகு திரு. செ. பட்டாபிராமன், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. சு. பழனிசாமி, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. கே. சௌந்திரராசன், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. ம. கண்ணன், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. கே. பி. நாச்சிமுத்து, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. என். குப்புசாமி, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. கு. பா. பழனியப்பன், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. செ. சொக்கலிங்கம், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. ஆ. வெள்ளைச்சாமி, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம, எம்.எல.ஏ.

மாண்புமிகு திரு. மி. வின்சென்ட, எம்.ஏல்.எ.

மாண்புமிகு திரு. மு. அப்பாதுரை, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன, எம்.எல,ஏ.

மாண்புமிகு திரு. க. பாரமலை, எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. பொ. விஜயராகவன், எம்.எல்.ஏ.

மாண்புமிகு திரு. எஸ். ஆண்டித் தேவர், எம்.எல்,ஏ,,

மாண்புமிகு திரு. எஸ். சிவராமன், எம்.எல.ஏ.

இந்தக் கன்ஸல்டேட்டிவ் கமிட்டி நெடுஞ்சாலை துறைக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவார்கள். இருக்கக்கூடிய சாலைகளை மேம்படுத்துவதற்கும், தரமான சாலைகள் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எங்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலே வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகிறது என்று சொன்னால் இந்தத் துறையிலே தான் அதிகமான அளவிற்கு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள். நகரத்தை பொறுத்த வரையில் மாவட்டங்களிலே எம். எல். ஏ.க்கள் எம். பி.க்கள் கொண்ட அட்வைசரி கவுன்சில் இருக்கிறது. மாநகராட்சியை பொறுத்த வரையில், யாரும் ஸ்டே ஆர்டர் வாங்கவில்லை ; ஒன்று தேர்தலை ஒழுங்காக நடத்த வேண்டும், இல்லையானால் நம்முடைய அமைச்சர் அவர்களைத் தலைமையாக கொண்டு 14 எம். எல். ஏ. க்கள் எம். பி.க்கள் வைத்து ஒரு அட்வைசரி கவுன்சில் அமைச்சர் அவர்கள் அமைப்பார்களா ?

**சமாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தேர்தலை சீக்கிரமாக நடத்த வேண்டுமென்ற எண்ணம் தான் இந்த அரசாங்கத்தை பொறுத்த வரையில் இருக்கிறது. ஆலோசனைக் குழுக்களை போட்டுக் கொண்டே போவதன் காரணமாக எந்தவிதமான ஆலோசனையும் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் கிடைக்கக் கூடிய ஆலோசனையையும் செயல்படுத்தவும் முடியவில்லை. ஆகவே ஆலோசனைக குழுக்களை அதிகமாக போடாமல் தேர்தலை சீக்கிரமாக நடத்தவிருக்கிறோம்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமிட்டி அமைக்கவில்லை, ஆலோசனையையும் கேட்கவில்லை, உடனடியாகத் தேர்தலை நடத்தும் இந்த அரசு என்று சொன்னாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆலோசனை கிடைக்காது என்று சொல்வது, இங்கே காலத்தை வீணாககிக் கொண்டு இங்கும் அங்கும் செல்பவர்களை போல எல்லோரையும் நினைக்க வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(இரவு 7.00)

**மண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆகவே சமுதாய வளர்ச்சித் திட்டங்களிலே ஈடுபட்டிருக்கின்ற ஆர். டபிள்யூ. ஓ. எஸ். என்று சொலலக் கூடிய ஊர் நல அலுவலர்கள் எல்லாம் பதவி உயர்வு வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே அவர்களுக்கு உரிய குரூப் எக்சிகியூடிவ் அபிசர்கள் என்ற நிலைகளை போட்டு இருக்கிறோம். அது அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருமை அண்ணன் அன்பில் அவர்கள் சொன்னது போல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே வளர்ச்சிப் பணிகளுக்காக டி. ஆர். ஓ. லெவலிலே ஜே. டி. லெவலிலே அதிகாரிகளை ஏற்படுத்த வேண்டுமென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்கள் குறிப்பிலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நடவடிக்கை

[திரு. ப. குழந்தைவேலு] [1982 மார்ச் 13

எடுக்கும் முறையில் எங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு யார் யார் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்களோ அவற்றை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

கோரிக்கை எண். 28— சமுதாய வளர்ச்சி திட்டங்களும், ஊராட்சி நிர்வாகமும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண். 28.

திரு. செ. சிவசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பவும் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், நா. சுந்தரராஜ், பி.ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: :** பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,25, 98,330,00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 39. சாலைகளும் பாலங்களும்.**

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் இல. பலராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.



1982 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 39 சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,15,28,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 52—சாலைகளும் பாலங்களும் குறித்த மூலதனச் செலவு.**

திரு. செ. சிவசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், எஸ். இராசகுமரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— ''மானியக் கோரிக்கை எண் 52— சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,20,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் 15-3-82 ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

138. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு கிள்ளியூர் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொது மக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27–10–1980 ஆம் தேதியிடப்பெற்ற 1417 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

139. சென்னையிலுள்ள, மத்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்திற்குச் சொந்தமான 4573 ஆம் எண் மோட்டார் வண்டியின் மீது செலுத்த வேண்டிய வரியினைக் குறைப்பது குறித்து 19–11–1981 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் (போக்குவரத்து 1) 2743 ஆம் எண் அரசாணையில வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

140. பொதுச்சாலையல்லாத எந்த ஒரு பகுதியில் ஓடும் மோட்டார் வண்டிக்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 19–11–1981 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் (போக்குவரத்து-1) 742 ஆம் எண். அரசாணை 12 யில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ்.பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண். 28-ன் மீதான சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

99. கோரிக்கை எண். 39, சாலைகளும் பாலங்களும் மற்றும் கோரிக்கை எண். 52, சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1981–82 ஆம் ஆண்டிற்கான ஆய்வுரையும், 1982–83 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்).

100. சமுதாய வளர்ச்சி செயலாக்க வரவு-செலவு திட்டம், 1982–83 (தமிழ், ஆங்கிலம்).





இணைப்புகள்.

[254. . ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண். 28.

சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—கொள்கை விளக்கக் குறிப்பு.

முன்னுரை.

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கவும் அவைகளில் பின்தங்கிய கிராமங்களின் அரசியல், பொருளாதார சமூக நிலைகளை வலுவடையச் செய்யவும் உதவியது. தமிழ்நாட்டில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் 12,632 ஊராட்சிகளும், 606 பேரூராட்சிகளும், 13 ஊராட்சி நகரியங்களும் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்தப் பகுதிகளில் சமுதாய வளர்ச்சி திட்டங்களை அமல்படுத்தப்பட வேண்டிய நிர்வாக உள்ளமைப்புகளைக் கொண்டதாகும். கிராமப்புறத்திலிருந்து நகரங்களுக்குச் செல்லும் மக்களையும், நகர மோகத்தினை தவிர்க்கவும் தீவிர பொருளாதார வளர்ச்சி திட்டங்கள் அமல்படுத்துவதன் மூலமே கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும் அக்கிராமங்களுக்கு உடமை அமைப்புகளை அதிகரிக்கச் செய்து அக்கிராமங்களை தன்னிறைவும், தனனம்பிகையும் உடையனவாக மாற்ற முடியும்.

ஊரக வளர்ச்சி—

ஊரக வளர்ச்சி இயக்ககம்.

(அ) உடமை அமைப்பு வளர்ச்சி திட்டங்கள்.

1. தன்னிறைவுத் திட்டம்—

கிராமங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை பள்ளிக் கட்டிடம் ஆகியவைகளை அமைத்து அதனுடைய சமூக பொருளாதார வளர்ச்சியினை விரைவு படுத்த அரசினரால் கொண்டு வரப்பட்ட திட்டம் இத் தன்னிறைவுத் திட்டமாகும்.

[1982 மார்ச் 13

அடிப்படை வசதிகள் எண்ணற்றவாயினும் கிராமங்களின் உடனடியான தேவை என்ன என்பதையும் நிதி வசதியினையும் கருத்திற்கொண்டு கீழ்க்கண்ட பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயலாக்கப்படுகின்றன.—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர்.
2. இணைப்புச் சாலைகள்.
3. சிறுபாலங்கள்.
4. ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.
5. சிறுபாசன வசதி மேம்பாடு
6. ஊரக மருந்தகங்கள்.
7. தாய் சேய் நல விடுதிகள்.
8. பள்ளிக் கட்டிடங்கள்.
9. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள்.

தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| முதற் கட்டம் .. .. | 69 வட்டாரங்கள். |
| இரண்டாம் கட்டம் .. .. | 150 வட்டாரங்கள். |
| மூன்றாம் கட்டம் .. .. | 159 வட்டாரங்கள். |
| | 378 வட்டாரங்கள். |



1982 மார்ச் 13]

1980–81-ல் முதற்கட்டமாக முடிக்கப்பட்ட பணிகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன;—

| பணிகளின் வகை. (1) | செலவினம். (2) (ரூபாய் இலட்சத்தில்) | சாதனை (3) |
|---|---|---|
| 1. குடிநீர் வழங்கல் .. .. | 1,807 | 2,300 |
| 2. இணைப்புச் சாலைகள் .. | 1,239.70 | 6,590.96 கி.மீ. |
| 3. சிறுபாலங்கள் .. .. | 350.86 | 3,044 |
| 4. ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி. | 79.89 | 927.71 கி.மீ. |
| 5. சிறுபாசன வசதி மேம்பாடு | 68.67 | 1,023 |
| 6. ஊரக மருந்தகங்கள் .. .. | 47.43 | 82 |
| 7. தாய்சேய் நல விடுதிகள் .. | 118.95 | 237 |
| 8. பள்ளிக் கட்டிடங்கள் .. | 487.45 | 949 |
| 9. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் | 302.61 | 10,116 |

இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் (1981-82) கீழ் எடுத்துக்கொண்ட பணிகளும் சாதனைகளும், நிதி செயல்திறன் இலக்கு ஆகியவைகளை கீழே தரப்பட்டுள்ளது:—

| பணிகளின் வகை. | நிதி | | செயல்திறன் இலக்கு. | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு. | செலவினம். | மதிப்பீடு. | 31-3-82 வரை சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. குடிநீர் வழங்கல் .. .. .. | 2,105.00 | 1,366 | 5,922 | 3,080 |
| 2. இணைப்புச் சாலைகள் .. .. .. | 2,822.55 | 1,833.68 | 11,510.78 | 6,288,22 கி.மீ. |
| 3. ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி | 56.10 | 35.64 | 980.65 | 659.23 |
| 4. சிறுபாலங்கள் .. .. .. .. | 1,441.38 | 11,57.42 | 17,785 | 7,346 |
| 5. சிறுபாசன வசதி மேம்பாடுகள் .. .. | 53.75 | 33.70 | 609 | 435 |
| 6. ஊரக மருந்தகங்கள் .. .. .. | 112.95 | 74.26 | 170 | 26 |
| 7. தாய்சேய் நல விடுதிகள் .. .. | 273.90 | 196.16 | 490 | 63 |
| 8. பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | 954.56 | 151.22 | 1,793 | 566 |
| 9. ஆதி திராவிடர்களுக்கானவீடுகள் .. | 450 | 388.28 | 15.000 | 10.966 |



1982-83 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்டமாக இத்திட்டம் 159 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 97 கோடி மதிப்பீட்டில் கீழ்க் கண்ட பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

| பணிகளின் வகை. | செயல் திறன் இலக்கு. | நிதி மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. குடிநீர் வழங்கல் .. .. | 6,336 | |
| 2. இணைப்புச் சாலைகள் .. .. | 13,012 கி.மீ. | |
| 3. சிறு பாலங்கள் .. .. | 12,128 | |
| 4. ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி .. .. .. | கி.மீ. 2,281 | |
| 5. சிறு பாசன வசதி மேம்பாடு | 3,457 | 9,700 |
| 6. ஊரக மருந்தகங்கள் .. .. | 8,023 | |
| 7. தாய்சேய் நல விடுதிகள் .. | 192 | |
| 8. பள்ளிக் கட்டிடங்கள் .. .. | 539 | |
| 9. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் | 20,000 | |

2. தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:—

இம்மாநிலத்தில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயற்படுத்தப்பட்டு வந்த மத்தியஅரசின் திட்டமான வேலைக்கு உணவு திட்டம் 1980 அக்டோபர் திங்கள் முதல், தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்என மத்திய அரசின் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன :

1. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு இல்லாதவர்ளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

2. நிலையான சமுதாய உடமைகளை உருவாக்கி அதன் மூலம் ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், மற்றும் ஊரக ஏழை மக்களின் வருவாய் நிலையை உயர்த்துதல்.

3. ஊரக மக்களின் சத்துணவு நிலையங்களை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

[1982 மார்ச் 13

இம்மாநிலத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படும் பணிகளின் வகைகளாவன :

1. சிறிய நீர்ப்பாசன பணிகள் (கால்வாய்கள், குளங்கள், கிணறுகள் முதலியன).

2. வெள்ளத் தடுப்பு மற்றும் கழிவு நீர் கால்வாய்கள்.

3. மண், நீர்வளப் பாதுகாப்பு.

4. வன மேம்பாடு, சமுதாயக் காடுகள் வளர்த்தல்.

5. ஊரக சாலைகள்.

6. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் திட்டங்கள்.

7. பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் சமூதாயக் கூடங்கள், பள்ளி ஆசிரியை குடியிருப்புக்கள், தாய் சேய் நல விடுதிகள், போரடிக்கும் களங்கள் முதலியன.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலையாட்களுக்குத் தரும் ஊதியம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகின்றது.

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| 1 கிலோ அரிசி 1 ஆளுக்கு 1 நாளைக்கு | .. | .. | 1·75 |
| ஊதியப் பகுதி (மாநிலப் அரசுப் பங்கு) | .. | .. | 1·75 |
| ஊதியப் பகுதி (மத்திய அரசுப் பங்கு) | .. | .. | 3·50 |
| மொத்தம் | .. | .. | 7·00 |

இவ்வூதியம் மாநிலத்தில், ஆண், பெண் வேறுபாடின்றி எல்லோருக்கும் தரப்படுகின்றது. இத்திட்டத்திற்கான அரிசி மற்றும் நிதி ஒதுக்கீடும், செலவினங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம். | அரிசி. | | ஊதியங்கள். | | தளவாடங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்.). | | | | | |
| | ஒதுக்கீடு. | செலவினம். | ஒதுக்கீடு. | செலவினம். | ஒதுக்கீடு. | செலவினம். |
| 1979-80 | 73,000 (மெட்ரிக் டன்). | 58,232 | | | | |
| 1980-81 | 60,000 | 47,378 | 186,50 | 186,50 | 873575,50 | |
| 1981-82 | 50,246 | 28,530† | 2220,00* | | | 1945.62 |



1982 மார்ச் 13]

(†) முந்தைய ஆண்டு அரிசித் தொகை மீதத்தையும் இவ்வாண்டு தொகையையும் சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(*) ஊதியத் தொகையும் தளவாடத் தொகையும் சேர்ந்தது.

இத்திட்டத்தின்கீழ் சாதனைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1979-80 | 1980-81 | 1981-82 |
|---|---|---|---|
| 1. எடுக்கப்பட்ட பணிகள். | 42,390 | 38,226 | 5,945 |
| 2. முடிக்கப்பட்ட பணிகள். | 32,914 | 28,518 | 33,983 |
| 3. முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பு | ரூ. 920.90 (இலட்சங்கள்) | ரூ. 872·30 (இலட்சங்கள்) | ரூ. 2346·52 (இலட்சங்கள்). |
| 4 உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் | 142·04 (இலட்சங்கள்) | 146·75 (இலட்சங்கள்) | 335·21 (இலட்சங்கள்). |

1981-82 ஆண்டிலிருந்து 31—12—1981 நாள் வரையில் உள்ள செயல் சாதனைகள்.

| | | |
|---|---|---|
| சிறிய நீர்ப்பாசனப் பணிகள் | .. | 6,799·85 ஹெக்டேர்கள். |
| வெள்ளத்தடுப்பு மற்றும் கழிவு நீர்க் கால்வாய்கள். | | 374·34 ஹெக்டேர்கள். |
| ஊரக சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள். | | 9,472·00 கி. மீ. |
| பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் முதலியன. | | 4,031 |

(3) வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

18 வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் தகுதி பெற்ற ஆண் பெண் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1979-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற ஆண்களும், பெண்களும் இத்திட்டத்தின் கீழ் தமது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். 1981-82-லிருந்து ஜனவரி 1982 வரை வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பதிவு செய் ப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,54,602 ஆகும். அதில், 3,31,111 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது. மிகவும் அதிகமான பேர் பெயரைப் பதிவு செய்திருப்பினும் பலர் இத்திட்டத்தின்கீழ் வேலைக்கு வருவதில்லை. ஏனெனில் அவர்கள் உடல் உழைப்புப் பணிகளுக்கு மாறாக எழுத்துப் பணிகளையே விரும்புகின்றனர்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் சாதாரண 82 கூலி வேலையை மேற்கொள்பவருக்கு பயன்படுகிறது. 1981 30 ஆண்டு முதல், கூலிக்காகப் பயன்படுத்தப்பட்ட அரிசி 28,5 மெட்ரிக் டன்களாகும்.

### (4) சாண எரிவாயுத் திட்டம்.

ஆறாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் சாண எரிவாயுத் திட்டத்தை இந்திய அரசு மத்திய அரசுத் திட்டமாக செயல்படுத் தத் திட்டம் தீட்டியுள்ளது. திட்டகாலத்தில் 4 இலட்சம் சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். இத் திட்டத்தை செயல்படுத்த மாநில அரசுக்கு ஒப்புதல் அளித்து நடப்பு ஆண்டில் நாடு முழுவதும் 35,000 அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். அவற்றில் தமிழக அரசு 3,500 பிரிவுகளை அமைக்க வேண்டியுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான எல்லா செலவினங்களையும் மத்திய அரசே ஏற்கிறது. அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

மத்திய அரசு மானியம்.

| சாண எரிவாயு அமைப்பின் கொள்ளளவு (கன மீட்டரில்.) | ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் இனத்தவர். | சிறு மற்றும் குறு விவசாயிகள் | மற்றவர்கள். |
|---|---|---|---|
| | (ரூபாய்.) | | |
| 2 .. .. | 1,500 | 1,000 | 750 |
| [illegible] .. .. | 1,950 | 1,800 | 1,000 |
| [illegible] .. .. | 2,300 | 1,500 | 1,200 |
| [illegible] .. .. | 2,[illegible]00 | 1,900 | 1,500 |





அமைப்புக்களுக்காக விண்ணப்பங்கள் சேகரிக்கும் ஊர்நல அலுவலர்களுக்கு ரூபாய் 30 மானியம் அளிக்கப்படுகிறது. 3,500 அமைப்புகள் என்ற இலக்கினை அடைவதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் 25 அமைப்புகள் என்ற வீதம் ஒரு இலக்கினை செயல்படுத்துமாறு உடனே அதற்கான விண்ணப்பங்கள் சேகரித்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவிப்பெற்று பரிசீலனை செய்யுமாறு ஆணைகள் இடப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் வெற்றி, வங்கிகள் கடன் உதவி அளிப்பதில் காட்டும் ஒத்துழைப்பைப் பொறுத்து உள்ளது.

மாவட்ட ஆட்சியாளர்கள் இதுவரை 1,924 விண்ணப்பங்கள் பெற்றும் 384 சாண எரிவாயு அமைப்புகளை அமைத்து உள்ளனர் மத்திய அரசு முதல் தவணையாக ரூபாய் 10.92 இலட்சங்கள் மானியம் அளித்துள்ளது. இந்த மானியத்தை செலவழித்த பின் மத்திய அரசு மேலும் உதவி நிதி அளிக்கும்.

### (5) சாலைகள்.

சமுதாய வளர்ச்சிக்கு சாலை வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ் நாட்டில் 38,047 கிலோ மீட்டர் நீளம் இணைப்புச் சாலைகள் உள்ளன. இவற்றில் 5,373 கிலோ மீட்டர் மண் சாலைகளாகும் ; மற்றும் 13,473 கிலோ மீட்டர் சல்லி பரப்பப்பட்ட சாலைகளாகும். இந்த இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்காக தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இணைப்புச் சாலைகளுக்காக 1981—82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 28.00 கோடியாகும். மூன்றாம் கட்டத்தில் மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 1982—83 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம் செயல்படாத ஊராட்சி ஒன்றியங்களில் 500 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 100.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (6) பள்ளிக் கட்டிடங்கள்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 28,784 பள்ளிகள் உள்ளன. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்களும், 949 பள்ளிக்கட்டிடங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 17.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. பள்ளிக் கட்டிட வேலைகள் இம்மாநிலத்தில் எடுத்து செயல்பட்ட திட்டங்களில் ஒரு மாபெரும் திட்டமாகும்.

## (7) குடிநீர் வழங்குதல்.

1982–83 ஆம் ஆண்டு ரூபாய் 150.00 இலட்சங்கள் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் கிராமத்தில் குடிநீர் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் தொகை குடிநீர் வழங்குவதற்காக மட்டுமன்றி, குடிநீர் வழங்குவதற்காக மேற் கொள்ளப் பட்ட மின் தொடர்பு கட்டணத்தை கட்டுவதற்கும் பயன்படும். மேலும் புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் பயன்படும்.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு வழங்கப் டும் தொகை இதில் சேராது.

கைப்பம்புகளின் பராமரிப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது மெக்கானிக்குகளின் பணியமைப்பும் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் கொணரப்பட்டுள்ளது.

## (8) ஊராட்சிகளுக்கு அலுவலக கட்டிடங்கள்.

அநேக ஊராட்சிகளுக்கு சொந்தமாக அலுவலக கட்டிடங்கள் ல்லை. ஒவ்வொரு ஊராட்சிக்கும் சொந்தமான அலுவலகக் ட்டிடம் தேவைப்படுகிறது. எனவே ஊராட்சிகளுக்கு அலு லக கட்டிடம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. 1980–81 ம் ஆண்டு 41 ஊராட்சிகளுக்கு முதல் கட்டமாக அலுவலக ட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 15 இலட்சம் அனுமதிக்கப் ட்டது. இதற்கான செலவினம் அரசு மானியம் மற்றும் ராட்சிகளின் பங்குத் தொகை மூலம் செலவிடப்படும். ராட்சிகளின் நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு அவற் ின் பங்குத் தொகை தீர்மானிக்கப்படும். 1981–82 ஆம் ஆண்டின் தன்னிறைவுத் திட்டப் பகுதியிலுள்ள 50 ஊராட்சி களுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 15.00 இலட்சம் ஊராட்சிகளின் பங்குத் தொகையினை பொறுத்து அனுமதிக்கப் பட்டது. மகளிர் மன்றங்களுக்கான கட்டிடங்கள் இல்லாத ஊராட்சிகளில் மட்டுமே கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 50 கட்டிடங்கள் கட்டுவதற் 1982–83 ஆம் ஆண்டு இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 15·00 இலட்சமாகும்.

## (9) ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்களில் பணியாளர் குடியிருப்பு.

பெரும்பாலான கிராமப் புறங்களில் ஊராட்சி ஒன்றிய தலைமை இடங்களில் அமைந்துள்ள பகுதிகள் தனிப்பட்டவரின் ள் வாடகைக்கு கிடைப்பது மிகவும் அரிதாகவுள்ளதால் ட்சிஒன்றியஅலுவலர்களான ஆணையாளர் மற்றும் மேலாளர்





போன்ற அலுவலர்கள் அருகிலுள்ள சிறு நகரங்களில் குடியிருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எல்லா ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களிலும் பணியாளர்கள் குடியிருப்புகளை பல்வேறு கட்டடங்களில் கட்டி முடிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டு 20 ஒன்றியங்களில் குடியிருப்புகள் கட்ட ரூ. 60.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு ரூ. 61.60 இலட்சம் மொத்த செலவில் 20 ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் குடியிருப்பு வசதிகளை செய்து தர தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது.

## (அ) உற்பத்தித் திட்டங்கள்.

## (1) வேளாண்மை, கால்நடை பாதுகாப்பு மற்றும் மீன் வளம்.

வேளாண்மை மற்றும் கால்நடை திட்டத்தின் கீழ் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி மற்றும் பார்வை முறையில் எடுத்துக் கொள்ளப்படாத பணிகள் ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். அவ் வப்போது, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நெறி முறைகள் அளிக்கப்படும். 1982–83 ஆம் ஆண்டு ரூ. 60 லட்சம் பின்வருமாறு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) வேளாண்மை .. .. .. .. | 38 |
| (2) கால்நடை பராமரிப்பு .. .. .. | 12 |
| (3) மீன்வளம் .. .. .. .. | 10 |

### வேளாண்மை :

வேளாண்மை திட்டத்தின் கீழ் புதிய வேளாண்மை கிடங்கோ அல்லது துணைக்கிடங்கோ கட்டுவதற்காக ரூ. 21.66 லட்சம் மதிப்பீட்டில் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 2.90 லட்சங்கள் முடிக்கப்பெறாத கட்டிட வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 3.46 லட்சம் களம் அமைப் பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டு உற்பத்திக்காக முசுக்கட்டை செடிகளை வளர்த்தல் இதன்கீழ் எடுத்துக் கொள் ளப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பட்டு உற்பத்திக்காக 3 மாத பயிற்சி தரப்படுகிறது. அவர்களுக்கு உதவித் தொகையாக மாத மொன்றுக்கு ரூ. 150 அளிக்கப்படுகிறது.

### கால்நடை பராமரிப்பு.

கால்நடை பராமரிப்பிற்காக ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்டவும், தற்போது உள்ள மருந்தகக் கட்டிடங்களை சீர்திருத்தவும், கால்நடை மருத்துவக் குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### மீன்வளம்.

மீன் வளர்ச்சியில் தீவிர முன்னேற்றம் காண்பதற்காக குறிப்பிட்ட பகுதிகளில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கீழ்க்கண்ட மாவட்டங்கள் 1981–82 ஆம் ஆண்டு இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :—

(1) செங்கற்பட்டு.
(2) கன்னியாகுமரி.
(3) தஞ்சாவூர்.
(4) மதுரை.

தக்க குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை நேர்ந்தெடுத்து, மீன் வள ஆய்வாளர்கள் போன்ற வல்லுநர்களைக் கொண்டு மீன் வளத்தை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### (இ) நல்வாழ்வுத் திட்டங்கள்.

#### 1. திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச்சத்துணவுத் திட்டம்.

ஊட்டச் சத்துணவுத் திட்டம் மத்திய அரசு மற்றும் "யுனிசெப்" நிறுவனம் ஆகியவைகளின் உதவியோடு குழந்தைகள் மற்றும் கருவுற்ற பெண்களின் சத்துணவு நிலையை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டம் 75 ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் 48 ஒன்றியங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 27 ஒன்றியங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டு விட்டதால் சில மாறுதல்களோடு செயல்படுத்தப்படுகிறது. மேற்குறித்த 27 ஒன்றியங்கள் தவிர 10 புதிய ஒன்றியங்கள் 1981–82 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

### திட்ட விவரங்கள்.

இத்திட்டத்தின் சிறப்பு அங்கங்கள் வருமாறு :—

(1) சத்துணவுக் கல்வி.
(2) பயிற்சி.
(3) பொது சுகாதாரம்.



சத்துணவுக் கல்வி திட்டத்தின்கீழ் 'கேர்' உதவியுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 30 குழந்தைக் காப்பகங்கள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு காப்பகத்திலும் 80 குழந்தைகளும் 40 தாய்மார்களும் சத்துணவு பெறுவர்.

கிராமப்புற மகளிரிடையே மக்கள் நலம், சுகாதாரக் கல்வி, சத்துணவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களிடையே விழிப்புணர்ச்சியினை உண்டாக்க வேண்டி, சத்துணவுத் திட்டத்தின் கீழ், சத்துணவுத் திட்ட ஒன்றியத்தில் உள்ள 30 குழந்தைகள் காப்பகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 60 தாய்மார்களுக்கு 10 முகாம்கள் அமைத்து இரண்டு நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பொது சுகாதார திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.—

(1) குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் அனைவரையும் தொற்று நோயிலிருந்து தடுத்தல்.

(2) வைட்டமின் மாத்திரைகள் குழந்தைகளுக்கும் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்து குறையினை ஈடு செய்யும் வகையில் வழங்குதல்.

(3) சத்துணவு மதிப்பீடு.

ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள், குடும்ப நல்வாழ்வு நிலையங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகள் அனைவரும் இத்திட்டத்தின் பொது சுகாதாரப்பணியின் கீழ் உள்ள வேலைகளை கவனிப்பார்கள்.

திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் 6 வருட செயல் திட்ட கால அளவினை கொண்டதாகும். இதில் ஒரு ஆண்டு ஆரம்ப வேலையாண்டாகும். மீதமுள்ளவை நடைமுறை ஆண்டுகளாகக் கொள்ளப்படும். முன்னர் கூறியபடி திருத்திய ஊட்டச் சத்துணவுத் திட்டம் தற்போது 37 ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| ஒன்றியங்களின் எண்ணிக்கை .. .. .. | 37 |
| குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை .. | 507 |

பயன்பெறுவோர் :—

| | |
|---|---|
| (அ) குழந்தைகள் .. .. .. | 40,560 |
| (ஆ) தாய்மார்கள் .. .. .. | 20,280 |

[1982 மார்ச் 13

2. பள்ளி செல்லும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும் / கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் உணவு வழங்கும் திட்டம்.

குழந்தைகள் காப்பகங்களில் 120 பேர் என்ற விகிதத்தில் இம்மாநிலத்தில் 93 வட்டாரங்களில் அமைந்த 1,002 குழந்தைகள் காப்பகங்களில், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் தினமும் உணவு வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. 1,002 காப்பகங்கள் ஒவ்வொன்றின் மூலமும், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள 40 குழந்தைகளுக்கும், குழந்தை காப்பகத்தில் பதிவு செய்யப்படாத 40 குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 40 பேர்களுக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 80 கிராம் பல்கர் கோதுமை மற்றும் 7 கிராம் எண்ணெய் என்ற விகிதத்தில் 'கேர்' நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் வழங்குகிறது. மேலும் இச் செலவுக்காக ஒருவருக்கு ரூ. 0.03 வீதமும், பாலசேவிகை மற்றும் ஆயாக்களுக்கு கூடுதல் ஊதியமாக முறையே ரூ. 20 மற்றும் ரூ. 10 அளிக்கப்படுகிறது. 1980-81-ல் ரூ. 32.44 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1981—82 இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 19.00 லட்சம். இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 43.420 தாய்மார்களின் எண்ணிக்கை 21,710.

(உ) சுகாதாரத் திட்டங்கள்.

1. ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள்.

மாநிலத்தில் மொத்தம் 382 நல்வாழ்வு நிலையங்கள் சமுதாயத்திற்கு நோய் தடுப்புப் பணிகளையும் நோய் நீக்கும் பணிகளையும் செயல்படுத்துகின்றன.

தாய் சேய் நல விடுதிகள் :

தாய் சேய் நலப் பணிகள் மேம்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். தாய் சேய் நல விடுதிகளின் பராமரிப்பு செலவில் மூன்றில் இரண்டு பங்கு அரசால் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. 1982-83-ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 115.00 இலட்சம்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அமைத்து பராமரிக்கும் பணியும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மேலும் ஊராட்சிகளில் கிராமப்புற மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூ. 5,400-க்கு மேற்படாமல் பராமரிக்கப்



1982 மார்ச் 13

படும் ஒரு மருந்தகத்தின் செலவில் 50 சதவிகிதத்தை அரசிடமிருந்து நிதி உதவியாக ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1982-83-ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 5.00 இலட்சம்.

குடும்ப நலவாழ்வு.

ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடும்ப நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரித்தானது. தமிழகத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் சீரமைக்கப்பட்ட குடும்ப நல்வாழ்வு திட்டங்கள் கொண்டு வரப்பட்டது.

2. கிராம மகளிர்க்காககு கழிப்பிடங்கள் கட்டுதல்.

ஒரு வட்டாரத்திற்கு இரண்டு என்ற விகிதத்தில் 1980-81ஆம் பண்டு முதற் கட்டமாக தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் இட்ட 69 ஒன்றியங்களில், பெண்களுக்காக கழிப்பிடங்கள் கட்டும் முன்னோடித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 138 கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. இவைகளின் மொத்த மதிப்பு ரூ. 8.74 இலட்சம்.

இரண்டாவது கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் 150 ஒன்றியங்களில் இரண்டு கிராமங்களுக்கும், முதற்கட்ட தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 69 ஒன்றியங்களில் மேலும் இரண்டு கிராமங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது ஆய்வில் உள்ளது. பெண்களுக்கு மட்டும் கழிப்பிட வசதிகளை அளித்து, ஆண்களும், குழந்தைகளும் திறந்த வெளிகளை கழிப்பிடங்களாகப் பயன்படுத்துவது இத்திட்டத்தினை முழுமைப்படுத்துவது ஆகாது என்று இத்திட்டத்தை ஆய்வு செய்த திட்டக் குழு, ஆண்களுக்கும் கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டுமென ஆலோசனை கூறியது. அதற்கிணங்க நான்கு அறை ஆண்களுக்கும், இரண்டு அறை பெண்களுக்கும், ஆக ஆறு அறைகள் கொண்ட, சிமெண்ட் கூறை அமைக்கப்பட்ட கழிப்பிடங்கள், தமிழ்நாட்டிலுள்ள 16,000 கிராமங்களில் அமைக்கப்படுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 22.56 கோடி. இது பரிசீலனையில் உள்ளது.

3. பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம்.

பட்டினிச் சாவுகளைத் தடுக்கும் நோக்கத்துடன் பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 13—12—1980 முதல் நடைமுறைக்கு வந்தது.

இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 437 நபர்களுக்கு ரூ. 43,700 வழங்கப்பட்டுள்ளது.

### ஊ. பயிற்சித் திட்டங்கள்.

தே. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, சத்திய விஜய நகரம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நான்கு கிராம விரிவாக்க பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இவை தவிர பவானி சாகரில் மாநில கிராம வளர்ச்சி பயிற்சி நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. மேற்குறித்த ஐந்து நிலையங்களில் கைவினைப் பகுதிகள் உள்ளன. தே. கல்லுப்பட்டி மற்றும் சத்தியவிஜய நகர பயிற்சி நிலையங்களில் மனை இயல்பிரிவுகள் உள்ளன.

பவானிசாகரில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு 2 மாத பயிற்சியும், சமூக நல மற்றும் கல்வி விரிவாக்க அலுவலர்களுக்கு 30 நாள் சிறப்புப் பயிற்சியும், மாவட்ட அளவிலான வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்கு 15 நாள் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கிராம விரிவாக்க பயிற்சி நிலையங்களில் புதிதாக ஊர்நல அலுவலராக பதவி ஏற்க இருப்போருக்கு 2 ஆண்டுகால பணி முன் பயிற்சியும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்கு தீவிர வேளாண்மை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளைத் தவிர ஊட்டச் சத்துணவுத் திட்டம் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மனை இயல் பிரிவுகளில் பெண் அலுவலர்களுக்கும், அலுவலர்கள் அல்லாத பிறருக்கும் பயிற்சி அளிக்கப் படுகிறது. இவை தவிர மத்திய அரசு வகுத்துள்ள வேலைகளுக்காக கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். 1,394 இளைஞர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 685 கிராமப்புற இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

1982-83ல் ஏற்கனவே உள்ள தொழில்கள் அலலாது கீழ்க் கண்ட தொழில்கள் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளன.

1. ஊர்திகளின் இயந்திர நுட்பம்.
2. வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் தொழில் நுட்பம்.

தற்போது பயிற்சி கால அளவு மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாத அளவாகும். பயிற்சிகளுக்கான கால அளவினை தேவையான பயிற்சிகளில் ஆறு மாங்களிலிருந்து 12 மாதங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.





## பேரூராட்சிகளின் இயக்ககம்.

### பேரூராட்சிகள்.

இம்மாநிலத்தில் 606 பேரூராட்சிகள் மற்றும் 13 நகரியக் குழுக்கள் இருக்கின்றன. இவைகளில் தமிழகத்தின் மக்கட் தொகையில் சுமார் ஐந்தில் ஒரு பாகம் வசிக்கின்றனர். கடந்த 30 வருடங்களாக இப்பேரூராட்சிகள் முன்னேற்றமடையவில்லை. இப்பேரூராட்சிகளின் வருமானமும் பல வருடங்களாக அபிவிருத்தி அடையவில்லை. ஆயினும், பணியாளர் சம்பளச் செலவு மூன்றாம் ஊதியக் குழுவின் பரிந்துரையை அமல் படுத்தியதால் மிகவும் அதிகமாக உயர்ந்துள்ளது. பாதிக்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் வருமானத்தில் பாதிக்கு மேல் பணியாளர்களுக்கான ஊதிய வகைகளுக்கே செலவிடுகின்றன. நிதி பற்றாக்குறை காரணமாக பல பேரூராட்சிகள் எவ்வித புதிய திட்டங்களையும் அமல் படுத்த முடியவில்லை. இந் நிலையில் பேரூராட்சிகளையும் நகரியக் குழுக்களையும் அபி விருத்தி செய்வதற்காக அரசு அதற்கெனவே ஒரு தனி இயக்க கத்தை நிறுவியுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது செயல்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டத்தைப் போல் பேரூராட்சிகளிலும் 1982–83 ஆம் ஆண்டில் செயல் படுத்த முடிவெடுத்துள்ளது. இதற்கான திட்டங்கள் படிப் படியாக செயல்படுத்தப்படும்.

## நகர மேம்பாடு.

### நகராட்சிகளின் இயக்ககம் III.

### நகராட்சி நிர்வாகம்.

தற்போது 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியக் குழுக்கள் இம்மாநிலத்தில் உள்ளன. அவைகளாவன:

| நிலை. | நகராட்சிகள். | நகரிய குழுக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சிறப்பு நிலை .. .. .. | 4 | .. |
| தேர்வு நிலை .. .. .. | 9 | 3 |
| முதல் நிலை .. .. .. | 29 | 3 |
| இரண்டாம் நிலை .. .. | 33 | 2 |
| மூன்றாம் நிலை .. .. | 23 | .. |
| மொத்தம் .. | 98 | 8 |

வளர்ந்து வரும் நகரப் பிரச்சினைகள் மற்றும் இதர பணிகள் அதிகரித்துள்ளதன் காரணமாக நகராட்சி இயக்கத்தில் நிதி கல்வி, பொறியியல் பிரிவுகள் தோற்றுவிக்கப் பட்டன. மேலும் நகராட்சி ஆணையர்களுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சி தருவதன் மூலம் அவர்களின் திறமையை அதிகரிக்கச் செய்து, உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை செம்மை செய்து ''தமிழ்நாடு நகர்ப்புற கல்வி நிறுவனம்'' என்ற ஒரு பயிற்சி நிறுவனமதை ஏற்படுத்தி உள்ளது. இப் பயிற்சி வகுப்புகள் 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18 ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பயிற்சி நிலையத்தின் நிர்வாகம் ஒரு இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது. எதிர் காலத்தில் இந்த பயிற்சி நிலையம் ஆராய்ச்சி நிலையமாகவும் புள்ளியியல் நிலையமாகவும் விளங்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

நகராட்சிகளின் சாலைகள்ள செப்பனிடுதலும் வடிகால்கள் அமைத்த அமைத்தலும்.

106 நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் 5,488 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. கடும் மழை, மற்றும் வெள்ளத்தால் சாலைகள் மிகவும் சேதமடைந்து விடுகின்றன. நலிவுற்ற நிதி நிலைமையால், நகராட்சிகள் சேதமடைந்த சாலைகளை செப்பனிட இயலவில்லை. சுங்கத் தீர்வை மூலம் நகராட்சிகளுக்கு கணிசமான தொகை கிடைத்து வந்தது நிறுத்தப்பட்டு தற்போது ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. 1939 ஆம் ஆண்டு வாக்கில் விதிக்கப்பட்ட இந்த ஈட்டுத் தொகை, சாலைகள் பராமரிப்புக்கு போதுமானதாக இல்லாததால், கூடுதலான போக்குவரத்துக் காரணமாக சாலைகளின் நிலைமை மேலும் சீர்கேடடைந்து வருகிறது. நிதி நிலைமை சரியில்லாத நகராட்சிகளுக்கு சாலைகளை செப்பனிடவும், வடிகால்கள் கட்டவும் 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 20 இலட்சம் நிதியுதவி செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

மண்டல நிர்வாக அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

தற்போது வேலூர், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மண்டல நகராட்சி நிர்வாக இயக்ககங்கள் போதுமான இடவசதியின்றி வாடகை கட்டிடங்களில் உள்ளன. தற்போது உருவாக்கப்பட்ட பொறியியற் பிரிவு காரணமாக அதிக வாடகையில் கூடுதல் இடம் தேவைப்படுகிறது.



மண்டல இயக்ககங்கள் நிரந்தரமானவை என்பதாலும் கணிசமாக வாடகைப் பணம் வழங்குவது சேமிக்கப்படும் என்பதாலும் அரசு மண்டல நகராட்சி இயக்ககங்களுக்கு கட்டிடங்கள் கட்ட முடிவெடுத்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் மதுரை மற்றும் சேலம் மண்டல இயக்ககங்களுக்கு கட்டிடங்கள் ரூ. 4·00 இலட்சம் செலவில் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

4. பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த முன்னேற்றத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், விளக்குகள், குடிநீர், பொதுக்கழிப்பிடங்கள் போன்ற வசதிகள் செய்து கொண்டுக்கப்படுகின்றன. இத்திட்டம் 1977-78 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டும் சேர்த்து இந்நாள் வரை அரசு 63 நகராட்சிகளுக்கு ரூ. 41·00 இலட்சம் வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டுவரை அளித்த ரூ. 16·00 இலட்சம் 16 நகராட்சிகளுக்கு முழுமையாக செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் 47 நகராட்சிகளுக்கு அளித்த ரூ. 25·00 இலட்சத்தில் இதுவரை ரூ. 10·00 இலட்சம் செலவாயிற்று. மீதமுள்ள வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 25·00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாடு திட்டம்:

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி பகுதிகளில் சுமார் 700 குடிசை பகுதிகள் உள்ளன. அரசு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து 25 நகராட்சிகளுக்கு ரூ. 250 இலட்சம் கொடுத்து உள்ளது. குடிசை பகுதிகளை மேம்படுத்த இத்திட்டம் முதன் முதலில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் நகராட்சிகளில் 1978-79 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது இத்திட்டத்தின் கீழ் குடிநீர் சாலைகள், பொதுக்கழிப்பிடங்கள், விளக்குகள், கழிவு நீர் கால்வாய்கள் போன்ற முக்கியமான வசதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைகள் பகுதிகளில் வழங்கப்பட்டுப் டுள்ளன. ஒவ்வொரு வருடமும் அரசு ரூ. 50·00 இலட்சம் மான்யமாக நகராட்சிகளுக்கு வழங்குகிறது. இந்த ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் முன்னேற்ற வேலைகள் செய்ய 15 நகராட்சிகளில் ரூ. 50.00 இலட்சம் அளித்துள்ளது. இத்திட்ட மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 250·00 இலட்சங்களில் இதுவரை ரூ. 205·00 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகும்போது கிட்டத்தட்ட 250 குடிசையை பகுதிகள் தேவையான வசதிகள் பெறும். இத்திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டு ரூ. 50·00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. பள்ளிக்கட்டிடங்கள்**

தமிழ்நாட்டில் (ஆரம்ப மற்றும் இடைநிலை பள்ளிகள்) 1,040 (உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்) 58 நகராட்சிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் பெரும் பகுதியானவை வாடகை கட்டிடங்களிலேயே போதுமான இடவசதியின்றி இயங்கி வருகின்றன. பல பள்ளிகள் பழைய கட்டிடங்களிலும் இயங்குகின்றன. எனவே; புதிய கட்டிடங்கள் கட்டவும் போதுமான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் மானியங்கள் நகராட்சிக்கு வழங்கப்படுகின்றன. 1982–83 ஆம் ஆண்டு ஆரம்பப் பள்ளிகள் மற்றும் பள்ளிகள் கட்டுவதற்கு ரூ. 20·00 இலட்சம் ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 21·50 இலட்சமும் 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 20·00 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டது. சுமார் 115 ஆரம்ப பள்ளிகள் மற்றுய இடைநிலைப் பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்படும். 31 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிட வேலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நகராட்சிகளில் ரூ. 25·00 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. 1982–83 ஆம் ஆண்டும் தொடர் திட்டமாக ரூ. 25·00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. தனியார் தெருக்களை மேம்படுத்தும் சுழல் நிதித் திட்டம்:**

நகராட்சிகளிலுள்ள தனியார் தெருக்களை மேம்படுத்த நகராட்சிகளில் சுழல் நிதியை அரசு ஏற்படுத்தி 1980–81 ஆம் ஆண்டு ரூ. 25·00 இலட்சம் வழங்கியது. இத்தொகை 25 நகராட்சிகளுக்கு மொத்த வேலைகளின் மதிப்பீட்டுத் தொகையில் பாதித் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 167 தனியார் மனை பிரிவுகளை மேம்படுத்த எடுத்துக் கொண்டன. மேலும் மேம்படுத்த வேண்டிய நிலையில் 653 மனைப் பிரிவுகள் உள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 150 மனைப் பிரிவுகள் மேம்பாட்டிற்க்காக எடுத்துக்கொள்ளப்படும்.

**8. நலிவுற்ற வருவாயுள்ள நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் :**

கடந்த 20 ஆண்டுகளாக நகர்ப்புறங்களில் மக்கள் தொகை குறிப்பிட்டத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. 1961 ஆம் ஆண்டு 64 ஆக இருந்த நகராட்சிகளின் எண்ணிக்கை 1982-ல் 106 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நகர்ப்புற மக்கள் தொகை 1961 ஆம் ஆண்டில் 45,11,165-லிருந்து 1981 ஆம் ஆண்டில் 72,20,954 ஆக குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளின் மொத்த எல்லைப் பரப்பளவு 1,476.42 சதுர கிலோ மீட்டர் அளவாகும். நகரில் மொத்தமுள்ள ஜனத்தொகையில் கால் பகுதி ஆதிதிராவிடர்களும்



குடிசைவாழ் பகுதி மக்களும் உள்ளனர். இது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை நீங்கலாகும். எனவே, நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி நகர்ப்புற மக்களின் அடிட்படைத் தேவைகளான குடிநீர், சாலை, மின்விளக்கு, பொது சுகாதாரம் கல்வி நிலையங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதை முதற்கட்டமாக செயல்படுத்த 1982-83 ஆம் ஆண்டில் நிதி நிலைமை சரியாக இல்லாத நகராட்சிகளில் அமல்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் செயல்திறன் பற்றிய குறிப்பு.**

தமிழகத்தில் கடந்த இருபதாண்டுகளில் நகர்ப்புறங்களின் வளர்ச்சியும், மக்கட் தொகைப் பெருக்கமும் குறிப்பிடத்தக்கதாகும். 1961 ஆம் ஆண்டில் 64 ஆக இருந்த நகராட்சி மற்றும் நகரியங்களின் எண்ணிக்கை தற்போது 1981 ஆம் ஆண்டில் 106 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று மக்கட் தொகையும் 1961 ஆம் ஆண்டில் 45,11,165 ஆக இருந்தது தற்போது 1981 ஆம் ஆண்டில் 72,20,954 ஆக நகர்ப்புறங்களில் பெருகியுள்ளது. கடந்த இருபதாண்டுகளில் மக்கள் பெருக்கம் 27,09,789 ஆகும். அதாவது மக்கள் பெருக்கம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவுக்கு 60 சத விகிதம் வளர்ந்துள்ளது. நகராட்சிகளின் மொத்த எல்லைப் பரப்பு 1,476·42 சதுர கிலோ மீட்டர்களாகும்.

மாநிலத்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதத்தினர் நகர்புறங்களில் வசித்து வந்த போதிலும் இவர்களில் பெரும்பாலோர் போதிய அடிப்படை வசதியின்றி உள்ளனர். மேலும் மாநிலத்திலுள்ள மக்கள் தொயில் சுமார் 10,00,000 நபர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களாகும் மற்றும் 10,00,000 மக்கள் குடிசைப்பகுதியில் வசிப்பவர்களாகவும் உள்ளனர். இவர்கள் மட்டுமின்றி வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசித்துவரும் மக்களும் உள்ளனர். இத்தகையோர் அனைவரும், சாலை வசதி, குடிநீர்வசதி, மின்விளக்கு வசதி, பொது சுகாதார வசதிகள் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்கின்றனர்.

**நகராட்சிகளின் அமைப்பு.**

இருபதாயிரம் மக்கள் தொகையும், ரூ. 5 இலட்சம் வருமானமும் உள்ள பேரூராட்சிகள் நகராட்சியாக மாற்றி அமைக்கப் படுகின்றன.

D 2 A 17 29

[1982 மார்ச் 13

நகராட்சிகளின் பாகுபாடு.

கீழ்க்கண்ட அளவுகோலின்படி நகராட்சிகள் பகுக்கப்படுகின்றன:—

| நகராட்சி நிலை. | வருவாய். | |
|---|---|---|
| | பொதுக் கணக்கு சாதாரணம் ரூபாய்க்கு மேல். | அனைத்துக் கணக்குகள் ரூபாய்க்கு மேல் |
| (1) | (2) | (3) |
| 1 சிறப்பு .. .. .. | 50,00,000 | 75,00,000 |
| 2 தேர்வு நிலை .. .. | 25,00,000 | 50.00,000 |
| 3 முதல் நிலை .. .. | 10,00,000 | 15,00,000 |
| 4 இரண்டாம் நிலை .. | 5,00,000 | 7,00,000 |
| 5 மூன்றாம் நிலை .. .. | 3,00,000 | 2,00,000 |

| நகரியக் குழுக்கள். | பொதுக்கணக்கு சாதாரணம். |
|---|---|
| 1 தேர்வு நிலை .. | ரூபாய் 10·00 இலட்சத்திற்கு மேல் |
| 2 முதல் நிலை .. | ரூபாய் 5·00 இலட்சத்திற்கு மேல் ரூபாய் 10·00 இலட்சத்திற்கு மேற்படாமல். |
| 3 இரண்டாம் நிலை | ரூபாய் 5·00 இலட்சமும் அதற்கு குறைவாகவும். |

நகராட்சிகளின் விபரம்.

தற்போது மொத்தம் 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் இம்மாநிலத்திலுள்ளன. நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் தரம் கீழ்க்கண்டவாறு :—



1982 மார்ச் 13]

| வரிசை எண். | நகராட்சி, நகரியங்கள் நிலை. | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை .. .. .. | 4 |
| 2 | தேர்வு நிலை .. .. .. | 12 |
| 3 | முதல் நிலை .. .. .. | 32 |
| 4 | இரண்டாம் நிலை .. .. .. | 35 |
| 5 | மூன்றாம் நிலை .. .. .. | 23 |
| | | 106 |

நகராட்சிகளின் பணி:

நகராட்சி மற்றும் நகரியங்கள் எல்லைக்கு உட்பட்ட நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்கள் அனைவருக்கும் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டியது நகர்மன்றங்களின் கடமையாகும். நகர்மன்றங்கள் ஆற்ற வேண்டிய கட்டாய மற்றும் விருப்பப்பட்ட பணிகள் கீழ்க்கண்டவாறு :—

நகராட்சிகள் ஆற்ற வேண்டிய கட்டாயப் பணிகள் :

1. பொது சாலைகள், தெருக்கள், சந்துகள், சிறுபாலங்கள் மற்றும் குறுக்குச் சாலைகள் பராமரித்தல்.

2. படிப்பறைகள்.

3. இடைநிலைத் தவிர்த்த கல்வி.

4. பூங்காக்களும், தோட்டங்களும்.

5. விளையாட்டுத் திடல் மற்றும் மனமகிழ் மன்றங்கள், பொது மன்றங்கள்.

6. பொருட்காட்சி மற்றும் விழாக்கள்.

7. தெருக்கள், வடிகால்கள், மற்றும் சாக்கடைகள் தூய்மைப்படுத்துதல்.

8. மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்கள்.

9. தொற்று நோய்கள்.

10. இறப்பு மற்றும் பிறப்பு.

11. நிழல்தரும் மரங்கள் இருபுறமும் அமைந்த **பாதைகள்** பராமரிப்பு.

12. தெரு மின் விளக்குகள்.

13. தொடக்க கல்வி.

14. குடிநீர் விநியோகம், பொது மக்கள் மற்றும் தனியார் களுக்கு குடிநீர் இணைப்பு குழாய்கள்.

15. வடிகால்.

16. நகரமைப்பு.

17. பஞ்சம் மற்றும் பற்றாக்குறைக் காலங்களில் நிவாரணம்.

நகர்மன்றங்களின் விருப்பப்பட்ட பணிகள் :

1. இடைநிலைக் கல்வி, நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள்.

2. ஏழை எளிய அனாதை இல்லங்கள்.

3. வீட்டு வசதி.

4. கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்துதல்.

நகர்ப்புறங்களில் வாழும் அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகள் பெருமளவில் செய்து தரவேண்டியது நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் தலையாயக் கடமையாகும்.

தமிழ் நாட்டில் 98 நகராட்சிகளும் 8 நகரியங்களும் உள்ளன, இவற்றை மேற்பார்வையிட நகராட்சிகளின் நிர்வாகஇயக்குநர் அவர்களுக்கு உதவியாக ஐந்து மண்டல நிர்வாக இயக்குநர்கள் உள்ளனர்.

1981 ஆம் ஆண்டு மக்கள் கணக்கு எடுப்புப்படி நகராட்சிகளின் மக்கள் தொகை 72 இலட்சம் ஆகும். 5,462 கி.மீ. நீளத்தில் சாலைகள் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு மேலும் 1,53,000 தெரு விளக்குகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன 39 நகராட்சிகளில் 39 மேல் நிலைப் பள்ளிகள் உட்பட 5[illegible] உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன 2,202 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணி புரிந்து வருகின்றனர்.



1,043 ஆரம்பப் பள்ளிகள் நகராட்சிகளினால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 3,76,675 மாணவ மாணவியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இப்பள்ளிகளில் 11,314 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

93 மருத்துவ மனைகளும், காப்பகங்களும் நகராட்சிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் 248 தாய்சேய் நலவிடுதிகளும் உள்ளன. பொதுமக்களின் வசதிக்காக 62 வாரச் சந்தைகளும், 186 தினசரி சந்தைகளும், 90 பேருந்து நிலையங்களும், 76 வாடகை கார் நிற்குமிடங்களும் நகராட்சிகளால் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

நிதி :

நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய அடிப்படை வசதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போன போதிலும் நகராட்சிகளின் நிதி நிலைமை எவ்வித முன்னேற்றமுமின்றி நிலைப்பட்டு எந்தவித மாற்றங்களுமின்றி இருந்து வருகிறது. போதிய நிதி வசதியின்மைக் காரணமாக குறைந்த பட்ச அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வினியோகம் மற்றும் வடிகால் வசதிகள் உயர்ந்து கொண்டே போகும் மக்கட் தொகைக்கும், பெருகிவரும் நகர்ப்புறங்களுக்கும் ஈடு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே செயல் பூர்வமான வரிவிதிப்பு முறைகளும், திட்டமிட்ட அடிப்படை வசதிகளுடன் கூடிய நகர்ப்புறங்களை உருவாக்குவதற்கு தேவையான, வழிமுறைகள் காணுவது அரசின் அவசியமான கடைமைகளில் ஒன்றாகிறது.

ஒரு சில நகராட்சிகளைத் தவிர்த்து மற்றவையனைத்திலும் பொருளாதாரம் பற்றாக்குறை நிலைமையே இன்றுவரை நீடித்து வருகின்றதென்பது ஆராய்ந்து [illegible] தெரிய வருகின்றது. நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறைக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று ஐந்தாண்டுக்கு ஒருமுறை திருத்தப்பட வேண்டிய வரி விதிப்பு நடக்காததே ஆகும். கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களில் குடியேறும் மக்கள் தொகையின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகிக் கொண்டே வருவதாலும், வியாபாரம் மற்றும் தொழில்கள் நாள்தோறும் வியக்கத்தக்க வகையில் பெருகிக் கொண்டே போவதாலும், அத்தியாவசிய தேவைகளான குடிநீர் வினியோகம், வடிகால் வசதிகள் போன்ற பெரும் மூலதனத்தில் செயல்படுத்த வேண்டிய திட்ட பணிகள் நகராட்சிகளுக்கு பெரும் பிரச்சினையாக உருவாகின்றன. இத் திட்டப்பணிகளை செயலுக்குக் கொண்டு வர கடன்களும், மானியங்களும் அரசிடமிருந்து பெறவேண்டிய அவசியம் நகராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நகராட்சிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகையின் கூட்டுத் தொகை மிக அதிக அளவில் உள்ளதால் நகராட்சிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளன. பெரும் முதலீடு தேவையான

தால் நகராட்சிகள் முன்னேற்ற நடவடிக்கைகள் ஏதும் எடுக்க இயலாத நிலை உள்ளது. எனவே வருவாய்த்தரத்தைக் முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக மத்திய அரசும், மாநில அரசும், மத்திய மாநில ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் நிதி உதவிசெய்ய முன் வந்துள்ளன. தற்போது இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் உதவி பெற்று திட்டங்களைச் செயலுக்கு கொண்டு வருகின்றன.

தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளில செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் விபரம் பின்வருமாறு:—

**ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி முன்னேற்ற மேம்பாட்டுத்திட்டம்.**

அரசு, குடிசைப் பகுதிகளில், வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு 1977–78 ஆம் ஆண்டிலிருந்து புதியதொரு திட்டத்தினை துவக்கியுள்ளது. மொத்தமுள்ள 196 நகராட்சி மற்றும் நகரியங்களில் 700-க்கு மேற்பட்ட குடிசைப்பகுதிகள் உள்ளன. இங்கு மொத்தம் 10 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் மக்கள், அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், பொது சுகாதாரம், கழிப்பிடங்கள் ஆகிய எவ்வித வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர். இந்த நீண்ட கால குறையினைப் போக்க 1977–78–ம் ஆண்டில் அரசு ரூ. 50 இலட்சங்களை திருச்சி மற்றும் கோவை நகராட்சிகளில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக வழங்கியுள்ளது. மற்றும் இத்திட்டத்தினை மற்ற நகராட்சிகளிலும் செயல்படுத்த அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 50 இலட்சங்கள வழங்கி வருகின்றது.

1981–82 ஆம் ஆண்டை உள்ளிட்டு கடந்த ஐந்தாண்டுகளில அரசு ரூ. 250 இலட்சங்களை குடிசைப் பகுதிகளில் சாலைகள், குடிநீர் வசதி, சாலை மின் விளக்குகள மற்றும் கழிப்பிடங்கள் போன்ற பொது சுகாதார வசதிகளை ஏற்படுத்திட மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டம் மூலமாக 25 நகராட்சிகளில் 170 குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 5 இலட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் 1982–83 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 50,00 லட்சம் இத் திட்டப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது.

**பிற்பட்ட பகுதிகள் முன்னேற்ற ஒருங்கிணைப்பு திட்டம் :**

நகராட்சிகளிலும், நகரியங்களிலும், ஏழை எளியோர் வாழும் சில பகுதிகள் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கழிப்பிடங்கள் போன்ற பொது சுகாதார வசதிகள் போதிய அளவு



செய்யப்படாமல் பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இப்பகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு திட்டம் ஒன்று தீட்டப்பட்டு இதனை 1977–78 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1979–80 ஆம் ஆண்டுவரை 21 நகராட்சிகளுக்கு ரூ. 16 இலட்ச ரூபாயை மானியமாக கீழ்க்கண்ட விவரப்படி வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1977–78 .. .. | 10·00 | 10 |
| 1978–79 .. .. | 3·00 | 5 |
| 1979–80 .. .. | 3·00 | 6 |

இத்திட்டத்தின் மூலமாக நலிந்த பிரிவு மக்கள் வாழும் பிற்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலை வசதி குடிநீர் வினியோகம், மின்விளக்கு வசதி, கழிப்பிடங்கள் போன்ற பொது சுகாதார வசதிகள் முதலியவை செய்து தரப்படுகின்றன.

1981–82 ஆம் ஆண்டில் அரசு ரூ. 25 இலட்சங்களை 47 நகராட்சிகளில இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் தற்போது நடந்து வருகின்றன. இதுவரையில் இத்திட்டத்தின் பயனை 63 நகராட்சிகள் அடைந்துள்ளன. 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுதிட்டத்திலும் 25 இலட்ச ரூபாய் இத்திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொடக்கப் பள்ளிகள் கட்டுதல் :**

தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் மொத்த 1043 தொடக்கப் பள்ளிகளைப் பராமரித்து வருகின்றன. பெருமளவிலான பள்ளிக் கட்டிடங்கள் போதிய வசதியின்றி மோசமான கட்டிடங்களிலும் வாடகை கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. நகராட்சிகளின் நிதிப் பற்றாக் குறைக் காரணமாக இப்பள்ளிகள் அனைத்தும் போதிய கட்டிடங்கள் கட்டும் பொருட்டு 100 இலட்ச ரூபாய் கொண்ட திட்டம் ஒன்று 1980–81 ஆம் ஆண்டில் தீட்டப்பட்டு, 1980–81 ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 21.50 இலட்சம் மான்யமாக அரசு வழங்கியுள்ளது. இவ்வாண்டில் மொத்தம் 59 நகராட்சிகளில் 95 பள்ளிக் கட்டிடங்களை 3,500 மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் இடவசதி செய்யும் பொருட்டு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

[1982 மார்ச் 13

மேலும் 3,200 மாணவர்களுக்குத் தேவையான இடவசதியுடன்
கூடிய கட்டிடங்களைக் கட்டிட 1981–82 ஆம் ஆண்டில் அரசு
ரூ. 20 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தப்
பணம் 35 பள்ளிக் கட்டிடங்களைக் கட்டிட 18 நகராட்சிகளுக்கு
பகிர்ந்து தரப்பட்டது. மொத்தம் 130 பள்ளிக் கட்டிடங்கள்
கட்டிட 77 நகராட்சிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு,
இதுவரை 59 நகராட்சிகளில் 99 பள்ளிக் கட்டிடங்கள் 45
இலட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் கட்டி முடிக்கப்
பட்டு உள்ளன. மீதமுள்ள கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்
தருவாயில் உள்ளன. இந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்தி
முடித்திட அரசு 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்
தில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கி உள்ளது. நகராட்சி பள்ளிகளில்
படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் போதிய இட வசதியுடன்
கூடிய 633 பள்ளிக் கட்டிடங்களைக் கட்டி முடித்திட திட்டமிடப்
பட்டுள்ளது.

**உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்:**

மொத்தம் 58 உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப்பள்ளி
களும் 39 நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
இவற்றில் பெரும்பாலான பள்ளிகளுக்கு போதிய இடவசதிகள்
இல்லை. இக் குறையினை போக்கும் பொருட்டு 250 இலட்சம்
ரூபாய் கொண்ட திட்டம் ஒன்று தீட்டப்பட்டு 1981–82 ஆம்
ஆண்டிலிருகது செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக
1981–82ம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் மானியமாக
ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் தொகை 19 நகராட்சிகளுக்கு 23
பள்ளி கட்டிடங்கள் கட்டிட பிரித்து தரப்பட்டுள்ளது.
இதனைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு 1982–83 ஆம்
ஆண்டிற்கு 25 இட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தனியார் தெருக்களை சீர்செய்திட ''சுழலும் நிதி'' :**

நகராட்சிகளில் பல அங்கீகரிக்கப்பட்ட லே. அவுட்களில் லே
அவுட் சொந்தக்காரர்களால் செய்து தரப்பட வேண்டிய வசதி
களாகிய சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல,
சாக்கடை கட்டுதல் ஆகியவைகள் செய்து தரப்பட்டு மேற்கொண்டு
அவற்றினை பராமரித்து நகராட்சிகளிடம் ஒப்படைக்கப்படாத
காரணத்தால் இங்கு வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள்
அவதிப்படுகின்றனர். இதனை போக்கும் பொருட்டு அரசு
ஆணை எண் 1495 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
நாள் 30— 9— 1980-ல் மேற்படி லே அவுட்களில் இவ்வசதிகளைச்
செய்திட 100 இலட்சம் ரூபாய் கொண்ட ''சுழலும் நிதி'' என்ப
தொரு திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது அதன்படி அரசு
**1980–81 ஆம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.**



1982 மார்ச் 13

இத்திட்டத்தின்கீழ் 25 நகராட்சிகளில் 70 கிலோ மீட்டர்
நீளத்திற்கு சாலைகள், சிறுபாலங்கள் கட்டுதல், மின்விளக்குகள்
ஏற்படுத்துதல், சாக்கடைகள் கட்டுதல் போன்ற பணிகள் 50
இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பணிகள் முடிக்கப்
படும் தருவாயில் உள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக செலவழிக்
கப்படும் தொகைகள் தவணைமுறையில் 5 ஆண்டுகளில் லே அவுட்
சொந்தக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்படும். இத்திட்டம் புதிய
தாகையால் ஆரம்பக்கட்டத்தில் இத்திட்டத்திற்கு அவ்வளவாக
ஆதரவு இல்லை. ஆனால் தற்போது இத்திட்டத்திற்கு அதிக
அளவு இங்கு வாழும் மக்களிடைய வரவேற்பு உள்ளது. 1981–
82 ஆம் ஆண்டில் 13 நகராட்சிகளில் இப்பணிகளை 13·50
இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் வேலை செய்ய 6·75
இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆணடில்
இத்திட்டப்பணியினை முழுமையாக பயன்படுத்திச் கொள்ள
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**நகராட்சி சாலை வேலைகள் (முழுக்கடன் திட்டம் பாதி கடன் பாதி மான்யம் திட்டம்).**

தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சிகளும் **நகரியங்களும்**
மொத்ததில் 5462 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள சாலைகள்
பராமரித்து வருகின்றன. இவற்றை செம்மையாக பராமரிக்க
நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் அரசு ஒவ்வொரு ஆண்டும்
முழுமையும் கடனாகவும் பாதிக் கடன், பாதி மான்யம் என்ற
வகையிலும் நிதி உதவி வழங்கிவருகிறது.

1977-78 ஆம் ஆண்டில் அரசு முறையே 15 இலட்சம் ரூபாய்
6 இலட்சம் ரூபாய், 6 இலட்சம் ரூபாய் என முழுக்கடன் மற்றும்
பாதிக் கடன் பாதி மானியம் என 34 நகராட்சிகளுக்கு அனுமதி
வழங்கியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டிலும் முறையே 20 இலட்
சம் ரூபாய் 6 இலட்சம் ரூபாய் 6 இலட்சம் ரூபாய் என பாதிக்
கடன் மற்றும் பாதிக்கடன் பாதி·மான்யம் என வழங்கியுள்ளது.
1979–80 ஆம் ஆண்டில் அரசு முறையே 30 இலட்சம் ரூபாய்
15 இலட்சம் ரூபாய் மற்றும் 15 இலட்சம் ரூபாய் முழுக்கடன்
பாதிக் கடன் பாதி மான்யம் என நூறு நகராட்சிகளுக்கு சாலை
பராமரிப்புக்காக வழங்கியுள்ளது. இதைப்போன்று 1980-81
மற்றும் 1981-82 ல் அரசு முறையே 3௦ லட்சம்ரூபாய், 15 லட்சம்
ரூபாய் மற்றும்15 இலட்சம் ரூபாய் முழுக்கடன் பாதிக்
கடன் பாதி மானியம் என முறையே ஒவ்வொரு ஆண்டிற்கும்
வழங்கியுள்ளது (ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய்). மேற்படி 60
இலட்சம் ரூபாய் 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளில்.
70 மற்றும் 50 நகராட்சிகளுக்கு முறையே வழங்கப்பட்டுள்ளது.
கடந்த 5 ஆண்டுகளில் ரூபாய் 239 இலட்சம் செலவில் 300 கி.
மீட்டர்கள் நீளமுள்ள தூசியில்லா தார் சாலைகள் போடப்
பட்டுள்ளன. இவற்றைத் தவிர நகராட்சி நிதியிலிருந்து கணிச

[1982 மார்ச் 13

மான தொகை சாலை பராமரிப்பு என ஒவ்வொரு ஆண்டும் செலவிடப் படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் கடனாகவும் 15 இலட்சம் ரூபாய் பாதி கடன் 15 இலட்சம் ரூபாய் மானியமாகவும் சாலை வேலைகளுக்கென வழங்கிட வரவு செலவு திட்டத்தில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்.

மத்திய அரசின் உதவியுடன் ஒரு இலட்சத்திற்கு குறைவாக மக்கள் வாழும் 24 சிறிய மற்றும் நடுத்தர, நகரங்களில் அங்கு வாழும் மக்கள் தரத்தை உயர்த்திடும் பொருட்டு மத்திய ஒருங் கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தினை மாவட்டத் தலைநகரமாகவும், வேலைவாய்ப்பு வசதிகளை தோற்றுவிக்க வசதி உள்ளதாகவும் கிராமப்புற மக்கள் நகரப் புறங்களுக்கு மாறிச் செல்வதை தடுக்கும் பொருட்டும் செயல் படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இதன்படி மாவட்டத்திற்கு இரண்டு நகரங்கள் என 24 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு இத்திட்ட ஆய்வு அறிக்கையினை நகர் மற்றும் ஊர் அமைப்பு வாரியக் குழுவின் பரிந்துரையுடன் செயற்குழு தமிழ்நாடு அரசு மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுடன் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்முறையில் உள்ள நகராட்சிகளின் விபரம் பின்வருமாறு:

| வரிசை எண். | நகராட்சி. | அங்கீகரிக்கப் பட்ட திட்ட மதிப்புத் தொகை. | கொடுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சங்களில்.) | |
| 1. | செங்கல்பட்டு .. .. | 52.56 | 10.00 |
| 2. | திருவண்ணாமலை .. | 81.19 | 51.00 |
| 3. | ராணிப்பேட்டை | | |
| 4. | ஆற்காடு .. .. .. | 76.16 | 20.00 |
| 5. | வாலாஜாபேட்டை | | |
| 6. | மன்னார்குடி .. .. | 27.19 | 17.00 |



1982 மார்ச் 13]

| வரிசை எண். | நகராட்சி. | அங்கீகரிக்கப் பட்ட திட்ட மதிப்புத் தொகை. | கொடுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சங்களில்.) | |
| 7. | நாகப்பட்டினம் .. .. | 44.70 | 14.00 |
| 8. | கரூர் .. .. .. | 41.08 | 34.00 |
| 9. | புதுக்கோட்டை .. .. | 23.10 | 10.00 |
| 10. | பழநி .. .. .. | 101.70 | 20.00 |
| 11. | தேனி-அல்லிநகரம் .. | 87.65 | 20.00 |
| 12. | காரைக்குடி .. .. | 93.50 | .. |
| 13. | கோவில்பட்டி .. .. | 86.29 | 38.00 |
| 14. | ஆத்தூர் .. .. .. | 74.11 | 44.00 |
| 15. | நாமக்கல் .. .. .. | 86.50 | 22.00 |
| 16. | திருச்செங்கோடு .. .. | 80.54 | 28.00 |
| 17. | தருமபுரி .. .. .. | 81.43 | 21.00 |
| 18. | மேட்டுப்பாளையம் .. | 68.50 | 15.00 |
| 19. | பொள்ளாச்சி .. .. | 98.00 | 40.00 |
| 20. | உடுமலைப்பேட்டை .. | 70.59 | 22.75 |
| 21. | கோபிசெட்டிபாளையம் .. | 98.60 | 18.00 |
| 22. | தாராபுரம் .. .. | 57.66 | 21.00 |
| 23. | உதகமண்டலம் .. .. | 82.79 | 20.00 |
| 24. | குன்னூர் .. .. | 118.80 | 46.00 |
| | மொத்தம் .. | 1,632.64 | 531. |

[1992 மார்ச் 13

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. நகராட்சிகளின் எல்லைக்குள் உள்ள தரிசு நிலங்களை குடியிருப்பு மனைகளாக மாற்ற அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்.

2. பேருந்து நிலையங்கள் கட்டுதல், அபிவிருத்தி செய்தல்.

3. மண்டிகள் மற்றும் சந்தைகள் கட்டுதல், அபிவிருத்தி செய்தல்.

4. சாலைகளை செப்பனிட்டு விரிவுபடுத்துதல்.

இத்திட்டத்திற்கென 1632.64 லட்ச ரூபாய் 24 நகராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 531.75 லட்ச ரூபாய் (1980-81, ரூ. 81.17 லட்சம், 1981-82-ல் ரூ. 450.58 லட்சம்) இதுவரை வழங்கப்பட்டு எல்லா நகரங்களிலும் வேலைகள் நடந்து வருகிறது. மேலும் பண்ருட்டி, சிவகங்கை, ஆரணி, அரக்கோணம் மற்றும் பட்டுக்கோட்டை, ஆகிய நகராட்சிகளையும் இத்திட்டத்தில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்.**

நகர் மற்றும் ஊர் அமைப்பு வாரியக்குழு இதைத் தவிர தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வருவாய்தரும் திட்டங்களுக்கென (1) கடைகள் (2) அங்காடிகள் (3) பேருந்து நிலையங்கள் (4) ட்ரக்டேரிமினல் (5) கட்டண கழிப்பிடம் (6) வியாபார தலங்கள் முதலியன கட்டிட அனுமதி வழங்கியுள்ளது. 1980-81-ல் இத்திட்டத்தின்படி 300.75 இலட்ச ரூபாயும் 1981-82-ம் ஆண்டில் 362.29 இலட்ச ரூபாயும் நகர் மற்றும் ஊர் அமைப்பு வாரியக்குழுவால் அனுமதி வழங்கப்பட்டு, இதில் 1980-81-ல் 219.58 இலட்ச ரூபாயும், 1981-82-ல் 89.81 இலட்ச ரூபாயும் 65 நகராட்சிகளுக்கு இதுநாள்வரை வழங்கப்பட்டுள்ளது. இம்மாதிரியாக இதுபோன்ற வேலைகளுக்கென 1979–80 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் 40 இலட்ச ரூபாய் வீதம் மேற்படி நகராட்சிகளுக்கு நிதி உதவி அரசு வழங்கியுள்ளது.

**நகராட்சிகளில் நிதிப்பெருக்க திரைப்பட கொட்டகைகள் கட்டுதல்.**

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் தஞ்சாவூர் நகராட்சியில் நகராட்சி நிதியிலிருந்து கட்டி பராமரிக்கப்பட்டு வரும் திரைப்பட கொட்டகை லாபகரமாக இருப்பதால இதனைப் போன்று மற்ற



1982 மார்ச் 13]

பெரிய நகராட்சிகளிலும் அரசு உதவியுடன் நிதி நிலையைப் பெருக்கும் பொருட்டு திரைப்பட கொட்டகைகள் அரசு உதவியுடன் கட்ட தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிகளில் நிதிபெருக்க திரைப்பட கொட்டகைகள் கட்டுதல்.

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் தஞ்சாவூர் நகராட்சியில நகராட்சி நிதியிலிருந்து கட்டி பராமரிக்கப்பட்டுவரும் திரைப்பட கொட்டகை லாபகரமாக இருப்பதால் இதனைப் போன்று மற்ற பெரிய நகராட்சிகளிலும் அரசு உதவியுடன் நிதி நிலையைப் பெருக்கும் பொருட்டு திரைப்பட கொட்டகைகள் அரசு உதவி கட்ட தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கட்டண கழிப்பறைகள்.**

நகராட்சிகளால் பராமரிக்கப்படும் பொதுக் கழிப்பிடங்கள் பொது மக்களின் திருப்திக்கு ஏற்ற வகையில் இல்லாததால் "கட்டண கழிப்பிடங்கள்" கட்டுதல் என்ற ஒரு புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. அத்திட்டத்தினை ஆரம்பத்தில் நிதி வசதியுள்ள நகராட்சிகளால் செயலாக்கப்பட்டது. பின்னர் அத்திட்டம் நாளடைவில் மக்களிடையே பிரபலமடைந்ததாலும், அதுபோன்ற கழிப்பிடங்களை எல்லா நகராட்சிகளிலும் கட்டுவதற்காக அவசியம் ஏற்பட்டதாலும் அத்திட்டத்திற்கு அரசு 1979–80 ஆம் ஆண்டில் 10 இலட்ச ரூபாய் கடனாக 10 நகராட்சிக்கு அளிக்க முன் வந்தது. அத்திட்டம் வெற்றிகரமாக நடந்து வருவதால் அத்திட்டத்திற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் போதிய அளவு நிதி உதவி செய்து வருகிறது.

அத்திட்டத்தின்கீழ் இதுவரை 69 நகராட்சிகளில் 108 கட்டண கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 40 கட்டண கழிப்பிடங்கள் கட்ட 21.26 இலட்ச ரூபாய் கடனுதவியாக 29 நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் இதுவரை 12 நகராட்சிகளுக்கு ரூ. 10 இலட்சம் கடனுதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

கட்டணக் கழிப்பிடங்கள் இதுவரையில் கட்டப்படாமல் உள்ள இதர நகராட்சிகளிலும் இத்தகைய கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ள தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் குறுகிய காலத்திற்குள் தமிழகத்

திலுள்ள எல்லா நகராட்சிகளிலும் இத்தகைய கட்டணக் கழி வறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும் குடிசைப்பகுதிகளில் கூட இத்தகைய வசதிகளுடன் கூடிய நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட்டு கட்டணம் வசூலிக்காமல பராமரிக்கப்படும். தற்போது வேலைகள் நடைபெற்றுவரும் கழிப்பிடங்களையும் சேர்த்து மொத்தம் 1660 கட்டண கழிப்பிடங்கள் உள்ளன.

**ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்கள்.**

நீண்டகால முறையான நகரசுத்தி தொழிலாளர்களால் சுத்தம் செய்யப்படும் கழிப்பிடங்களை தண்ணீர் ஊற்றும் முறைகொண்டு கழிப்பிடங்களாக சொற்ப செலவில மாற்றி அமைக்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாட்டில் முதல் கட்டமாக 15 நகராட்சிகள் இத்திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தில் 15 நகராட்சி அலுவலகங்களில் முதற்கட்டமாக பொதுமககளின் பார்வைக்காக மாதிரி கழிப் பிடம் ஒவ்வொன்றும் உத்தேச செலவு ரூ. 500-க்குள் கட்டப் பட்டுளளது. இத்திட்டத்தினை மேலும் விளம்பரப்படுத்தி பொது மக்களின் ஆர்வத்தை தூண்டும் பொருட்டு உலக வங்கியின் ஆலோசனைப்படி ஒவ்வொரு நகராட்சியிலும் 50 வீடுகள் தேர்ந் தெடுக்கப்பட்டு அவைகளில் ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 செல வில் ஆர். சி. எ. பி. கழிப்பிடங்களை அமைக்கும் பணி நடை பெற்று வருகிறது. இதற்கான செலவை தற்சமயம் வீட்டின் சொந்தக்காரர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத் தினை 15 நகராட்சிகளில் நடைமுறைப்படுத்த அரசிற்கு பரிந் துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது.

**நகரசுத்தி தொழிலாளர்களின்றி பராமரிக்கப்படும் கழிப்பிடங்கள் தோற்றுவிக்கும் திட்டம்.**

உலக வங்கியின் அறிவுரைப்படி மத்திய அரசின் நிதி உதவி பெற உடுமலைப்பேட்டை மற்றும் பாளையங்கோட்டை நகராட்சி களில் நகர சுத்தி தொழிலாளர்களின்றி பராமரிககப்படும் கழிப் பிடஙகளை அமைப்பதற்கு என்று திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு உரிய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதி கிடைத்தவுடன் இத்திட்டம் செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நகராட்சியிலும் முறையே 58 இலட்ச ரூபாய் செலவழிக்கப்படும். (மொத்தம் 1.16 கோடி ரூபாய்)

**சுகாதார வசதியுடன் கூடிய கழிப்பிடங்கள் கட்ட வங்கி உதவி.**

மேற்கண்ட இரண்டு திட்டங்களையும், இவற்றினை செயல் படுத்தப்படும் நகராட்சிகளில் பெறும் வெற்றியினைப் பொறுத்து, மற்ற நகராட்சிகளிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் செயலாக்கப்படும். இதற்காக செலவிடப்படப் பெறப்படும், கடன் தொகையை வீட்டுச் சொந்தக்காரர்களிட மிருந்து தவணை முறையில் திரும்பப் பெறப்படும்.



**குடிநீர் விநியோகம்.**

தற்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக திட்டங்கள் 95 நகராட்சிகளிலும் நகரியங்களிலும் நடைமுறையில் உள்ளன. ஆலந்தூர், பல்லவபுரம், மதுராந்தகம் மற்றும் நெல்லிக்குப்பம் ஆகிய நகராட்சிகளின் தற்போது குடிநீர்த்திட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. பொள்ளாச்சி, குளச்சல், பத்மநாப புரம், சீர்காழி ஆகிய நகராட்சிகளிலும் மற்றும் அம்பத்தூர், கத்திவாக்கம், மாதவரம் ஆகிய நகரியங்களிலும் இத்திட்டத்தை செயலாக்குவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**கழிவு நீரேற்று திட்டம்.**

கழிவு நீரேற்று திட்டம் 9 நகராட்சிகளில் தற்பொழுது நடை முறையிலுள்ளன. காஞ்சிபுரம், சிதம்பரம், மன்னார்குடி, பெரிய குளம், உதகமண்டலம் ஆகிய நகராட்சிகளில் வேலைகள் முடி வுற்றுள்ளன. கும்பகோணம், திருமங்கலம், சாத்தூர் ஆகிய நகராட்சிகளிலும் ஒரு பகுதி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மேட்டூர் நகரியத்திலும், திருவொற்றியூர், திருச்சிராப்பள்ளி, பழநி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய நகராட்சிகளில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சேலம் வேலூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகராட்சிகளில் கழிவுநீர் வெளியேற்றும் திட்டம் விரைவில் செயல்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஏனைய நகராட்சிகளில், நிதி நிலைமையை பொறுத்தும் அவசியத்தை முன்னிட்டும் செயல்படுத்தப்படும்.

**மழைநீர் வடிகால் திட்டம் :**

பாதாள சாக்கடைகள் ஏற்படுத்துவதென்பது பெரிய திட்ட மாக உள்ளதால் அனைத்து நகராட்சிகளிலும் பணத்தேவை யினால் நடை முறைப்படுத்த இயலாததாக உள்ளது. எனவே சிறிய நகராட்சிகளில் மழைநீர் வடிகால் அமைத்து கொசுத் தொல்லையினை போக்க மழைநீர் வடிகால் கட்டும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு இத்திட்டத்திற்கென 1982–83 ஆம் ஆண் டிற்கு 20 இலட்சம் ரூபாய் அரசினரால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்தை தொடர்ந்து எல்லா நகராட்சி களிலும் செயல்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் முன்னேற்றத் திட்டம் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி நகராட்சி யானது யூனிசெப் அமைப்பின் நிதி உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் முன்னேற்றத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த

[1982 மார்ச் 13

மதிப்பீடு 24,05,500 ரூபாய் ஆகும். இதனை செயலாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சிகளையும் எடுத்துக்கொள்ளத் தேவையான பிரேரணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**சிறப்பு சத்துணவுத் திட்டம் ;**

சிறப்பு சத்துணவுத் திட்டம் தற்போது 32 நகராட்சிகளில் அமுலில் உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த 32 நிலையங்களை நகராட்சிகள் நடத்துகின்றன. இத்திட்டத்தின் கீழ் 6 வயது வரை உள்ள குழந்தைகட்கும். இளந்தாய்மார்கட்கும் சலாட் எண்ணெய் போன்ற சத்து உணவுகள் கொடுக்கப்படுகின்றன. இதனால் 1,22,566 பேர் பயன்பெற்றார்கள்.

**வெள்ள நிவாரணத்திட்டம் :**

1977 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின்காரணமாக பெரும்பான்மையான நகராட்சிகளில் நகராட்சிகளின் சொத்துக்களான சாலைகள், கட்டிடங்கள் குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் திட்டங்கள், தெருவிளக்குகள் பெரிதும் சேதம் அடைந்தன. இதனை சரி செய்ய 1978ஆம் ஆண்டு சனவரியில் 150 இலட்ச ரூபாய் 79 நகரங்களுக்கு அரசு பாதி கடனாகவும் பாதி மான்யமாகவும் வெள்ள நிவாரண வேலைகளுக்காக வழங்கியுள்ளது.

அதுபோல் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பேய் மழையின் காரணமாக நீலகிரி மாவட்டம் மற்றும் மற்ற மாவட்டங்களில் நகராட்சி சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது அரசு 1979 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் உதகமண்டலம் குன்னூர் மற்றும் குளச்சல் நகராட்சிகளில் வெள்ள நிவாரண பணிக்காக 30 லட்ச ரூபாயை பாதிக் கடனாகவும் பாதி மானியமாகவும் வழங்கியது. மேலும் குன்னூர் மற்றும் உதகமண்டலம் நகராட்சிகளுக்கு முறையே ரூ. 48 இலட்சம் மற்றும் ரூ. 43 லட்சம் மானியமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை பழுது பார்க்க அரசு அளித்துள்ளது. மேலும் இப்பணிகளுக்கென 1979 ஆம் ஆண்டு மார்சு மாதம் தஞ்சாவூர் மாவட்டத்தில உள்ள 9 நகராட்சிகளுக்கும் மற்றும் கொடைக்கானல் நகரியத்திற்கும் 10 லட்ச ரூபாய் அரசு வழங்கியுள்ளது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த மழையினால் எல்லா நகராட்சிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இந்நகராட்சிகளில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளும்படி மறுபடியும் அரசு 10 நகராட்சிகளுக்கு 200 இலட்ச ரூபா பாதி கடன் ஆகவும் பாதி மானியமாம் வழங்கியுள்ளது.



1982 மார்ச் 13]

**வறட்சி நிவாரணப் பணி.**

பருவமழை தவறியதால் 1980—81 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அரசு முனைந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட 34 நகராட்சிகளில் பொது மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும் பொருட்டு நிதியுதவி அளித்தது. வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு அரசு அளித்த நிதியுதவிகளின் விபரம் கீழ்வருமாறு—

| | ரூ. இலட்சம். |
|---|---|
| 1. வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில. | 40 |
| 2. சேலம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில். . | 10 |
| 3. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில். | 8 |
| 4. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில். | 29.61 |

இத்திட்டத்தின் கீழ் ஆழ்கிணறு, கிணறுகள் போடுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், தலைமை நீரேற்று நிலையங்களை வலுப்படுத்துதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தேவைப்பட்டபோது லாரிகள் அல்லது டிராக்டர் டிரைவர்கள் மூலமாக குடிநீர் வழங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கான செலவினை அரசு முழு மானியமாக ஏற்றுக்கொண்டது. மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை நிரந்தரமாக போக்க நகராட்சி தலைமை நீரேற்று நிலையங்களுக்கு துணை நிலையங்களிலிருந்து தனியாக மின் இணைப்பு கொடுக்கவும், தனியாக டீசல் ஜெனரேட்டர் பொருத்தவும் அரசு 50 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. இதனால வறட்சியால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் முழு அளவுக்கு குடி தண்ணீர் வழங்க முடிந்தது. இத்திட்டம் முழுதும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையில் அந்தந்த நகராட்சிகளாலும் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தினாலும் செயல்படுத்தப்பட்டது.

**நாகப்பட்டினம் நகராட்சிக்கு சிறப்பு நிதியுதவி.**

நாகூர் பகுதியைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நாகப்பட்டினம் நகரில் முக்கியத்துவம் கருதி அந்த நகராட்சியில் மேம்பாடு திட்டங்களாக சாலை அபிவிருத்தி குறுக்குப் பாலங்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல் பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் நகரின் தூய்மை காத்த மற்றும் குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகளை செயலாக்க நாகப்பட்டினம் நகராட்சிக்கு

1981–82-ம் ஆண்டில் 12.00 இலட்ச ரூபாய் பாதிக் கடனாகவும், பாதி மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம்.**

தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழகத் துவக்க விழாவை முன்னிட்டு நகரில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு அரசு 1981–82 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் நகராட்சிக்கு ரூ. 34.70 இலட்சம் பாதிக்கடனாகவும் பாதி மான்யமாகவும் வழங்கியுள்ளது இந்நிதி உதவியினைக் கொண்டு சாலை அபிவிருத்தி, தெருவிளக்குகள் நல்ல கழிப்பிடங்கள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டது.

**திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம்.**

திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துவக்க விழாவை முன்னிட்டு திருச்சி, திருவரங்கம், மற்றும் பொன்மலை நகரங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 1981–82 ஆம் ஆண்டு மேற்படி நகராட்சிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரூ. 70.00 இலட்சம் அரசு கடன் வசதி அளித்துள்ளது.

| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1. | திருச்சி நகராட்சி | .. | .. | 50·00 |
| 2. | ஸ்ரீரங்கம் நகராட்சி | .. | .. | 10·00 |
| 3. | பொன்மலை நகராட்சி | .. | .. | 10·00 |

இந்நிதியினைக் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

**பாரதியார் நூற்றாண்டு விழா.**

பாரதியார் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தூத்துக்குடி நகரில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க அந்நகராட்சிக்கு அரசு தனது ஆணை எண் 2097 ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 19–12–81 மூலம் 6.00 இலட்சம் ரூபாய் கடனாக அளித்துள்ளது. இந்நிதியினைக் கொண்டு நகரில் 200 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டன.

நகராட்சிகளால் நடத்தப்பெற்று வரும் உயர்நிலை மேல் நிலைப் பள்ளிகளில் 10 ஆம் 12 ஆம் வகுப்புகளில் சிறந்த செயல் திறனுக்கு பரிசளிப்புத் திட்டத்தினைச் செயல் படுத்துதல்.





நகராட்சிகளில் உயர்நிலை மற்றும் மேல நிலைப் பள்ளிகளில் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக நவீன பரிசளிப்புத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுளளது. இதன்படி 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறும்தாழ்த்-தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கும் முந்தைய ஆண்டினைவிட 20 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்று அரசு ஆணை எண் 85 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 20–4–81 மூலம் 1980–81–ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டுவசதி செய்திடத் திட்டம்.**

அனைத்து நகராட்சிகளிலும் 45 ஆயிரம் ஊழியர்கள் அடிப்படை ஊழியர்கள் முதல் மேலாளர் வரை பணிபுரிகின்-றனர். இவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போன்று வீடு கட்ட கடன் வழங்க வேண்டும் என்று நெடு-நாளாக கோரிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகின்றது, நகராட்சி ஊழியர்கள் 14–1–70 முதல் ஓய்வூதிய பணியின் கீழ் கொண்டு வரப்பட்டுளளனர். நகராட்சி ஊழியர்களுக்காக பிடிக்கப்படும் ஓய்வூதிய நன்கொடைத் தொகைகள் தல நிதிக்கணக்கு ஆய்வாளரால் கணக்குகள் பராமரிக்கப் பட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் நீண்டகால வைப்பில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளை வீடு கட்டும் கடன் வழங்கிடவும் கடன் தொகையினை வட்டியுடன் சேர்த்து தவணை முறையில் பிடித்திடவும் பரிசீலனை செய்-யப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக 700 பேர் கொண்ட அடிப்படை ஊழியர்கள பொதுசுகாதார மேற்பார்வையாளர்-கள ஓட்டுநர் மற்றும் ஊர்திகள் பழுதுபார்ப்போருக்கும் மற்றும் இரண்டாவது கட்டமாக வரி வசூலிப்போர் முதல் மேலாளர் வரை வழங்கிடவும் உத்தேசிக்கப்பட்டுளளது.

**நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்திட திட்டம்.**

மொத்தமுள்ள 106 நகராட்சிகளில்15 ஆயிரம் நகர சுத்தித் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் எவ்வித சுகாதார வசதியற்ற குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். 30 முதல் 35 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெறும் காலத்தில் சொந்த வீட்டுடன் வாழ வசதியற்று உள்ளனர். இப்பிரச்சனையைத் தீர்த்திட மத்திய நிதியுதவியுடன் சுமார் 33 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் படிப்படியாக வீட்டு வசதி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## நகராட்சிகளில் நிர்வாகத்தை செம்மைப்படுத்தும் பணி :

### நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பொறியியற்பிரிவு தோற்றம்

நகராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதாரத் திட்டங்களை மேம்படுத்த நகராட்சிகளின் நிர்வாக இயக்கத்தினை பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர்ருக்கு துறை அனுபவம் வாய்ந்த அலுவலர்களின் உதவி தேவைப்படுகிறது. எனவே நகராட்சிகளின் நிர்வாக இயக்கத்தின் ஒரு மேற்பார்வைப் பொறிஞரும் ஐந்து மண்டல இயக்கங்களை ஒவ்வொன்றிலும் ஒரு செயற் பொறிஞரும் கொண்ட பொறியியற்பிரிவு ஒன்று நகராட்சிகளில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல் படுத்தித் தர 1981–82–ஆம் ஆண்டில் அரசினரால் தோற்றுவிக்கப் பட்டு உள்ளது. இதனால் நகராட்சிகளின் பொதுப்பணிகளை துரிதமாக முடிப்பதுடன் நகராட்சிகளுக்கு அரசு கடனாகவும் மானியமாகவும் வழங்கும் நிதியுதவியும் துரிதமாக பயன்படுத்தப் படும்.

### கணக்கியர் பிரிவு தோற்றம்.

ஆண்டுதோறும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரூபாய் 10.00 கோடிக்கு மேலான மேம்பாட்டுப் பணிகளுக்கு அரசு மற்றும் ஆயுட்காப்பீட்டுக் கழகத்தினரால் பெருமளவு கடனாகவும் மானியமாகவும், மற்றும் பணமாகவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன் கணக்குகள் சரிவர பராமரிப்பு செய்யப்பட வேண்டி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் கொண்ட கணக்கியற் பிரிவு 1981–82 ஆம் நிதி ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### திட்டமிடல் மற்றும் நிதி நிலைமை ஆய்வுப் பிரிவு.

வருவாயைப் பெருக்கும் முகத்தான அன்றிமக்கட்கு அடிப்படை வசதிகள் செய்யவும் வேண்டி, நகராட்சிகள் குடிநீர் வழங்கல் வடிகால் அமைத்தல, விளக்கிடுதல், கல்வி, நகரமைப்பு பேருந்து நிலையங்கள் மற்றும் அங்காடிகள் கட்டுதல், சாலைகள அமைத்தல் பிற்பட்ட மற்றும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தல், போன்ற வளர்ச்சி பணிகளைப் மேற்கொள்கின்றன நகராட்சிகளின் நிதி நிதிநிலைமைச் சரி செய்ய சிறப்பான நடவடிக்கைகள மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அரசு நிதியுதவியினால் மட்டுமன்றி தங்களுடைய நிதியினின்றும் நகராட்சிகள பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. அவற்றின் மொத்த மதிப்பீட்டுப் பணியாளர் ஊதியம் உட்பட 60.00 கோடியாக கொள்ளலாம். திட்டங்களை வகுக்கவும் அவற்றை நிறைவேற்றவும் நகராட்சிகளை வழிநடத்தவென நகராட்சிகளின் நிர்வாக





இயக்ககத்தில் ஒரு இணை இயக்குநர் மற்றும் ஒரு துணை இயக்குநர் கொண்ட திட்டப் பிரிவு ஒன்றினை 1981–82 ஆம் ஆண்டில் அரசு தமது ஆணை எண் 974 ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை, நாள் 27–5–81 மூலம் தோற்றுவித்துள்ளது.

### கல்வி பிரிவு

நகராட்சிகளின் பராமரிப்பில் தற்போது 1043 துவக்கப் பள்ளிகளும், 58 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் 13,500க்கும் மேலானோர் பல்வேறு நிலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

நகராட்சிகளில் கல்வி நிலையங்களையும் அங்குப் பணியாற்றும் ஆசிரியர்களையும் செம்மையாக மேற்பார்வையிட்டு நகராட்சிப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு உதவவென்று துணை பள்ளிக் கல்வி இயக்குநர் நிலையிலுள்ள இணை இயக்குநர் ஒருவரை 1981-82 ஆம் ஆண்டில் அரசு நியமித்துள்ளது. இதன் காரணமாக நகராட்சி பள்ளிகளின் கல்வித் தரம் மேலும் உயரும் என நம்பப் படுகிறது.

### பொது சுகாதாரப் பிரிவு தோற்றுவித்தல்

நகராட்சிகளில் உள்ள பொது பொறியியல், நகரமைப்பு, கல்வி முதலிய பிரிவுகள் அனைத்தும் பொது சுகாதாரப் பிரிவு நீங்கலாக நகராட்சி ஆணையர், நகராட்சிகளின் இயக்குநர் அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. பொது சுகாதாரப் பிரிவு மட்டும் நகர்நல அலுவலர் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகளின் இயக்குநர் அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வருகின்றது. இதன் விளைவாக நகராட்சிகளின் பொது சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் சுகாதார சீர்கேட்டிற்கு நகராட்சி ஆணையரும் நகராட்சிகளில் நிர்வாக இயக்குநரும் பொறுப்பாக்கப்படுகிறார்கள். இச் சீர்கேடுகளைக் களையும் பொருட்டு பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களையும் நகராட்சி ஆணையர் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதுடன் நகராட்சி இயக்கத்தில் உதவி பொது சுகாதார இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார பொது சட்டத்தினை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஏற்கப்படின் உள்ளாட்சி நிறுவனங்கள் பொது சுகாதாரத்தினைத் திறம்பட நடத்திட வழி ஏற்படும்.

[1982 மார்ச் 1

## தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திருத்தம்

கடந்த 60 ஆண்டுகட்கு மேலாக நடைமுறையில் உள்ள 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் மாறிவரும் காலநிலைக்கேற்ப திருத்தப்பட வேண்டியுள்ளது. இச் சட்டத்திற்கு ஒட்டு மொத்தத் திருத்தங்களை வகுக்கவென அரசு அரசினரால் 1981–82 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற குழு 200க்கு மேற்பட்ட திருத்தங்கள் அடங்கிய தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## நாய், பன்றி, குரங்கு இவற்றால் ஏற்படும் தொல்லைகளைத் தடுக்கச் சட்டம் :

பயங்கர வியாதிகளான நாய்க்கடி, மூளைக்காய்ச்சல் முதலியவற்றை தோற்றுவிக்கும் நாய்கள், பன்றிகள் மற்றும் குரங்குகளை ஒழித்திட சட்டத் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நகராட்சி நிதி ஆய்வுக்குழு :

ஊதியம் மற்றும் விலை பொருட்களின் ஏற்றம் நகராட்களின் எல்லைப்பிரிவு, மக்கட் தொகைப் பெருக்கம் மற்றும் வருவாய் அதிகரிப்பின்மை காரணமாகப் பெருவாரியாக நகராட்சிகளின் நிதி நிலைமை கேடடைந்து உள்ளது. இதனை ஆராய அரசு ஒரு உயர்மட்டக் குழுவினை நிறுவியது. பலமுறை பல்வேறு நிலைகளில் தனது விரிவான ஆய்வினை நடத்திய இக் குழு மொத்தம் 47 பரிந்துரைகள் தொடர்ந்ததோர் அறிக்கையினை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

இப்பரிந்துரைகளில் மோட்டார் வாகன வரி ஈடு. சொத்து வரி விதிப்பு முறையில் மாற்றம், பாதி மானிய முறையில் குடி நீர் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயல்படுத்துதல், மானியம் வழங்குவதிலும் பெறுவதிலும் உள்ள நடை முறைகளை இலகுவாக்குதல் போன்றவை அடங்கியுள்ளன. இந்த முக்கியமான பிரச்னைகள் மீது அரசு தனி முடிவினை அறிவிக்கும் போது நகராட்சிகளின் நிதி நிலைமை மற்றும் நடைமுறைகளில் புரட்சிகரமான மாறுதல்கள் நிகழ்வதோடு மொத்தத்தில் மக்களுக்கு நகராட்சிகள் மேலும் வசதிகள் செய்வதற்கு ஏதுவாகும்.

## பணி அளவைக் குழு :

நகராட்சிகளில் நிர்வாக இயந்திரம் பல்வேறு பிரிவுகள் கொண்டு பணியாளர்களைக் கொண்ட நகராட்சிகளின் தேவைக்கேற்பவோ அல்லது ஊதியம் வழங்கும் சாத்தியக்கூறுக்



1982 மார்ச் 13]

கேற்பவோ இதன் அளவு நிர்ணயிக்கப்படவில்லை. நகராட்சிப் பணியாளர்களின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு அளவையை வகுக்க ஒரு குழுவை அரசு நியமித்துள்ளது. விரிவான ஆய்வுக்குப்பிறகு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

## பயிற்சி நிலையம்.

நகராட்சி நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்புகளில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்கட்கு நிர்வாகத்தின் நவீன நுணுக்கங்களை அளித்து செயல்படும் விதத்தில் பயிற்சியளிக்க வேண்டியது நீண்ட காலத் தேவையாக இருந்தது. அரசினால் நியமிக்கப்பெறும் நகராட்சி ஆணையர்கட்கும், பணியாளர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் கோயம்புத்தூர் மாநகரில் 1981-82 ஆம் ஆண்டில் துவக்கப்பெற்று வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு, விடுதியுடன் கூடிய சொந்தக் கட்டிடம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் நாளடைவில் ஒரு மாபெரும் ஆராய்ச்சி நிலையமாகவும், மற்றும் புள்ளிவிவர நிலையமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

## மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்கங்களுக்கு அலுவலக கட்டிடங்கள் கட்டுதல்.

வேலூர், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் உள்ள மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்ககங்கள் வாடகை கட்டிடங்களில் போதிய இடவசதி இன்றி இயங்கி வருகின்றன. தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள பொறியியல் பிரிவிற்கு கூடுதலாக இடவசதி தேவைப்படுகிறது. அதனைக் கட்டி வாடகை கொடுப்பதை தடுக்கும் பொருட்டும்இந்த அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. முதல் கட்டமாக சேலம் மற்றும் மதுரை மண்டல நகராட்சி நிர்வாக அலுவலகங்களுக்கு 1982–83 நிதியாண்டில் தலா ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 மண்டல நிர்வாக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் வருகின்ற ஆண்டுகளில் கட்டித்தரப்படும்.

## தன்னிறைவுத் திட்டம்.

பஞ்சாயத்துக்களைப் போல் நகராட்சிகளிலும் தன்னிறைவு திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஒரு அறிக்கையைக் கேட்டது. அதற்கேற்ப 98 நகராட்சிகளிலும் மற்றும் 8 நகரியங்களிலும் பல்வேறு திட்டங்கட்கென ரூபாய் 258 கோடி அளவிலான ஒரு மாபெரும் திட்டத்தினை செயலாக்க அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 13

முதற் கட்டமாக நிதி நிலைமை சரியில்லாத 60 நகராட்சிகளில் 1982-83 ஆம் ஆண்டில் இருந்து மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தலா 20 நகராட்சிகள் என பிரிக்கப்பட்டு மூன்று கட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

முடிவுரை.

அரசின் நிதி உதவியால் செயல்படுத்தப்பட்டு வரும் மேற்கூறப்பட்ட திட்டப் பணிகள் மூலமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் படிப்படியாகக் நகராட்சிகளின் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்டு உள்ள மேம்பாட்டினை அறிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு நன்மை தரும் புதிய பல திட்டங்களை ஆண்டுதோறும் புகுத்தி வருகின்றது. இதன் பயனை வரும் ஆண்டுகளில் கண்கூடாகக் காணலாம். நகர்ப்புறங்களின் மேம்பாட்டிற்காக பல திட்டங்களைச் செயல்படுத்தி சமீப ஆண்டுகளில் அரசு பெரும் அளவில் நகராட்சிகளுக்கு நிதி உதவி அளித்து வருகின்றது. மேலும், ஒவ்வொரு நகரமும் அனைத்து துறன்களிலும் தன்னிறைவு பெற்று விளங்கிடவும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் மிகப்பெரிய வியத்கு. அளவில் ''தன்னிறைவுத் திட்டம்'' கொண்டு வந்துள்ளது இத்திட்டப் பணிகளுக்கு மூதலிடம் வழங்கப்படுவதுடன் மத்திய மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாகவும் பயன்தரும் வருவாய் இனங்களை நகராட்சிகளில் செயலுக்கு கொண்டு வருவதன் மூலமாகவும் நகராட்சிகளின் வருவாயினை பன்மடங்கு உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கோரிக்கை எண். 39. சாலைகளும் பாலங்களும்.

கோரிக்கை எண். 52. சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு கொள்கை விளக்கக்குறிப்பு.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை.

தமிழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான சாலை வளர்ச்சித் திட்டங்களின் ஆய்வுரை மற்றும் 1982-83 ஆம் ஆண்டிற்கானத் திட்டங்கள்.

1. முன்னுரை :

1.1. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த முறையில் சாலைகளை அமைப்பதும் அவைகளை மேம்பாடு செய்வதும் ஓர் முக்கிய வழியாகும். சாலைகளும், சாலைப் போக்குவரத்தும் அத்தகைய ஒரு முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக அமைகிறது. ஒரு நாட்டின் சாலை வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. நமது நாட்டில் எண்பது சகவிகித மக்கள் கிராமங்களில் வாழ்வதால், அவர்களுக்கு தக்கதொரு சாலை அமைப்பு அடிப்படைத் தேவையாக உள்ளது. அதனால், கிராம மக்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரச் சந்தைகளில் எளிதில் சேர்க்க முடிகின்றது. இந்நிலைமை பின்தங்கிய பகுதிகளுக்கும், பழங்குடியினர் பகுதிகளுக்கும் மிகவும் பொருந்தும்.



1982 மார்ச் 13]

1.2. இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், திட்டப் பணிகள் மூலம் இந்நாட்டில் பல்வேறு துறைகளில் குறிப்பாக நீர்ப்பாசனம், விவசாயம், தொழில், வனம், மீன்வளம், சமூகநலம், மலைவாழ் மக்கள் நலம் போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு சாலை வளர்சியாவது ஓர் அடிப்படைப் பணியாகும். இந்நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்ல பலன்களை அடைவதற்கு அடிப்படையான சாலை வசதிகளை முன்னோடியாகக் கொண்டு மற்றைய ஆக்கப்பணிகளுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகும். சாலைப் போக்குவரத்து பணிகளை பொறுத்தவரை தமிழ்நாடு புரிந்துள்ள சாதனையானது அனைவராலும் மிகமிகப் பராட்டுக்குரியதாகும். ஐந்தாவது மற்றும் ஆறாவது திட்டக் காலங்களில் குறைந்த அளவுத் தேவைத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகச் சாலைகளின் மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உள்ளது. 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையினை கொண்ட கிராமங்கள் அனைத்திற்கும் எல்லா பருவ நிலைகளுக்கும் ஏற்றவாறு சாலைகளை அமைத்து அவற்றின் மூலம் இணைப்பினை ஏற்படுத்தித் தருதலே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

1.3. தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை (அ) தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறம்), (ஆ) மாநில நெடுஞ்சாலை, (இ) மாவட்ட பெருஞ்சாலைகள், (ஈ) மாவட்ட இதர சாலைகள் போன்ற சாலை வகைகளின் கீழ் சாலைகளை பராமரித்து வருகின்றது. பல்வேறு வகையான சாலைகளின் நீளம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன :

| | | கிலோ மீட்டர். |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்) | .. | 139 |
| மாநில நெடுஞ்சாலைகள் | .. .. .. | 1,814 |
| மாவட்டப் பெருஞ்சாலைகள் | .. .. | 14,028 |
| மாவட்ட இதரச் சாலைகள் | .. .. .. | 18,118 |
| மொத்தம் | .. | 34,099 |

உள் ஆட்சிமன்றங்களால் பராமரிக்கப்பட்டு வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் மொத்த நீளம் 71.527 கிலோ மீட்டராகும். (இது இந்தியாவிலேயே மிக உயர்ந்ததாகும்.)

1.4. மேலும், மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையானது மத்திய அரசு பொறுப்பேற்கும் பணிகளை அதாவது மாநிலங்களுக்கு இடையே பொருளாதார மற்றும் அண்டை மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணிகள், மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் போன்ற மத்திய அரசுத் துறையின் திட்டப் பணிகளை மேற்கொள்கிறது

ஊரக வளர்ச்சிக்கான திட்டங்கள் :

2.1. தகுந்த போக்குவரத்து வசதிகள் தேவைப்படும் ஊரகப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்து இவ்வரசானது ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவதை உறுப்பினர்கள் அறிந்ததே. ஆதலால் இந்த அரசானது, '' ஊரகச் சாலைகள் திட்டம் '', '' பேருந்து வழித்தடங்களை எடுத்துக் கொள்ளும் திட்டம் '', '' தன்னிறைவுத் திட்டம் '' முதலான பல்வேறு வகைத் திட்டங்களை வகுத்து சாலைகளை அமைப்பது/மேம்படுத்துவது போன்ற பணிகளை செய்து வருகின்றது. எனவே, கிராமவாசிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எளிதாகவும் இலாபகரமாகவும் சந்தையில் சேர்ப்பித்து அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ள முடிகின்றது.

2.2. ஊரகச் சாலைகள் திட்டம் :

2.2.1. நகர்ப்புறங்களிலிருந்து சற்று உள்ளேயிருக்கும் கிராமங்களில் வசிக்கும் மக்கள் நகரச் சந்தைகளுக்குச் செல்வதற்கு சரியான சாலை வசதி இல்லாத காரணத்தால் மிகுந்த துன்பங்களை அடைந்து வருகின்றனர். ஆகவே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் தகுந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி அதன்மூலம் கிராமங்களை அவற்றிற்கு மிக அருகிலிருக்கும் வாகனப் போக்குவரத்து சாலைகளுடன் இணைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் கிராமப் பெருங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினைக் காண இந்த அரசானது கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது. அத்தகையதோர் இலட்சியத் திட்டத்திற்கு பெருமளவு மூலதனம் தேவைப்படுகின்றது. ஆகவே இந்தப் பெரு விருப்பிற்குரியத் திட்டம் கால கட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையினைக் கொண்ட கிராமங்களுக்கு அவற்றிற்கு வெகு அருகாமையில் இருக்கும் வாகன போக்குவரத்துச் சாலைகளுடன் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் சாலைகளை அமைத்துத் தருவதே இத்திட்டத்தின்



ஆரம்பக் காலப் பணியாகும். பிற்படுத்தப்பட்ட மற்றும் வளர்ச்சி அடையாத பகுதிகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது அப்படிப்பட்ட பகுதிகளில் இருக்கும் கிராமங்களில் மக்கள் தொகை 1,000 இருந்தால் கூட இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பல குக்கிராமங்களின் மக்கள் தொகை கூட்டாக 1,500-ம் அதற்கு மேற்பட்டு இருந்தாலும் அவைகளையும் இத்திட்டத்தின் கீழ் சாலை வசதிகள் பெற பரிசீலிக்கப்படுகின்றது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் அப்பணியானது முடிவடைந்ததும் எதிர் கால பராமரிப்பிற்காக அரசால் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் உள் ஆட்சி மன்றங்களின் நிதிச்சுமை குறைக்கப்படுகின்றது. புதிய சாலைகள் அமைக்கும் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதுவரை, இத்திட்டமானது ஆறு கட்டங்களாக அங்கீகாரம் பெறப்பட்டு ரூ. 7,625.44 இலட்சங்கள் மூலதனத்தில் 6,433.30 கிலோ மீட்டர் நீளத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

2.2.2. 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை மொத்தமாக 4,026 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகள் ரூ. 2,453.44 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் முடிக்க பட்டுள்ளன. இதனால், 1,626 பிரதான கிராமங்களும் 1,550 இடைப்பட்ட கிராமங்களும் பயனடைந்துள்ளன. ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலீடு செய்தால் சராசரியாக 5,000 மனித நாட்களுக்கான வேலை வாய்ப்பினை உருவாக்குகிறது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். முதல் மூன்று கட்டங்களில், 2,924 கிராமங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2,025 இலட்சங்கள் மதிப்பீட்டில் 3,731.13 கிலோ மீட்டர் சாலைகளை அமைத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுவதும் முடிவடைந்துவிட்டன. நான்காம் கட்டப் பணிகள் முடிவுறும் அளவிற்கு முன்னேற்ற நிலையில் உள்ளன.

2.2.3. ஐந்தாம் கட்டமானது '' தன்னிறைவுத் திட்டத்தின்'' கீழ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 69 ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்குத் தக்கவாறு ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்தாம் கட்டப் பணிகளானது 372 கிராமங்கள் பயன் பெறும் வகையில் ரூ. 712 இலட்சம் மதிப்பீட்டில் 406.67 கிலோ மீட்டர் நீளத்தினை மேற்கொள்ளும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.4. ஆறாம் கட்டப் பணிகளானது 1,030 கிராமங்கள் பயன் பெறும் வகையில் ரூ. 4,388 இலட்சம் மதிப்பீட்டில் 1,750.40 கிலோ மீட்டர் நீளத்தினை மேற்கொள்ளும் அளவில் திட்டமிடப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் திட்டத்தின் கட்டங்கள் வாரியான இலக்குகளும் செயல் முறைகளும் காட்டும் அறிக்கை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

ஊரகச் சாலைகள் திட்டம்.

திட்டங்களும் ,செயல் முறைகளும்.

நீளம் கிலோ மீட்டரில்.

மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில்.

| வரிசை எண்ணும், கட்டங்களின் விவரமும். | | இலக்குகள். | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பணிகளின் எண்ணிக்கை. | பயன்பெற்ற கிராமங்கள். | | | நீளம். | மதிப்பீடு. |
| | | பிரதான கிராமங்கள். | குக் கிராமங்கள். | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 முதற் கட்டம் .. .. | 542 | 814 | 802 | 1,616 | 1,708.00 | 842 |
| 2 இரண்டாம் கட்டம் .. | 216 | 409 | 356 | 765 | 1,106.00 | 546 |
| 3 மூன்றாம் கட்டம் .. | 174 | 228 | 315 | 543 | 917.13 | 637 |
| மொத்தம் .. | 932 | 1,451 | 1,473 | 2,924 | 3,731.13 | 2,025 |
| 4 நான்காம் கட்டம் .. | 124 | 226 | 111 | 337 | 545.10 | 500 |
| 5 ஐந்தாம் கட்டம் .. | 145 | 232 | 140 | 372 | 406.67 | 712.44 |
| ஆக மொத்தம் .. | 1,199 | 1,909 | 1,724 | 3,633 | 4,682.90 | 3,237.44 |
| 6 ஆறாம் கட்டம் .. .. | 421 | 598 | 432 | 1,030 | 1,750.40 | 4,388.00 |
| ஆறு கட்டங்களின் மொத்தம். | 1,620 | 2,507 | 2,156 | 4,663 | 6,433.30 | 7,625.44 |



| வரிசை எண்ணும், கட்டங்களின் விவரமும். | 31—3—1981 வரை நிறைவேற்றப்பட்டவை. | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பணிகளின் எண்ணிக்கை. | பயன்பெற்ற கிராமங்கள். | | | நீளம். | மதிப்பீடு. |
| | | பிரதான கிராமங்கள். | குக் கிராமங்கள். | மொத்தம். | | |
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 முதற் கட்டம் .. .. | 542 | 814 | 802 | 1,616 | 1,708·00 | 842·00 |
| 2 இரண்டாம் கட்டம் .. | 216 | 409 | 356 | 765 | 1,106·00 | 546·00 |
| 3 மூன்றாம் கட்டம் .. .. | 174 | 228 | 315 | 543 | 917·13 | 637·00 |
| மொத்தம் .. | 932 | 1,451 | 1,473 | 2,924 | 3,731·13 | 2,025·00 |
| 4 நான்காம் கட்டம் .. .. | 70 | 130 | 55 | 185 | 200·00 | 250·00 |
| 5 ஐந்தாம் கட்டம் .. .. | 30 | 45 | 22 | 67 | 94·87 | 178·44 |
| ஆக மொத்தம் ... | 1,032 | 1,626 | 1,550 | 3,176 | 4,026·00 | 2,453·44 |

ஊரகச் சாலைகள் திட்டம்—தொடர்ச்சி.

திட்டங்களும், செயல் முறைகளும்—தொடர்ச்சி. நீளம் கிலோ மீட்டரில்.

மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில்.

| வரிசை எண்ணும், கட்டங்களின் விவரமும். | 1—4—1981-ன்படி முன்னேற்றத்தில் உள்ளவை. | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பணிகளின் எண்ணிக்கை. | பயன்பெற்ற கிராமங்கள். | | | நீளம். | மதிப்பீடு. |
| | | பிரதான கிராமங்கள். | குக் கிராமங்கள். | மொத்தம். | | |
| (1) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| 1 முதற் கட்டம் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 2 இரண்டாம் கட்டம் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3 மூன்றாம் கட்டம் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4 நான்காம் கட்டம் .. .. | 54 | 96 | 56 | 152 | 345·10 | 250·00 |
| 5 ஐந்தாம் கட்டம் .. .. | 113 | 187 | 118 | 305 | 311·80 | 534·00 |
| ஆக மொத்தம் .. | 167 | 283 | 174 | 457 | 656·90 | 784·00 |
| ஆறாம் கட்டம் .. .. | .. | .. | .. | .. | .. | .. |



2.2.5. 1979-80 ஆம் ஆண்டில் ஊரகச் சாலைகள் திட்டத்தின்கீழ் 127 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல்/அமைத்தல் போன்ற பணிகள் ரூபாய் 300 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. அதனால், 1,14,900 மக்கட் தொகையினைக்கொண்ட 108 கிராமங்கள் பயன் பெற்றன. 1980-81 ஆம் ஆண்டில் 510 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல்/அமைத்தல் போன்ற பணிகள் ரூபாய் 601 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன ; அதனால், 5,27,500 மக்கட் தொகையினைக் கொண்ட 392 கிராமங்கள் பயன்பெற்றன.

2.2.6. 1981-82 ஆம் ஆண்டில் 500 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகள் மேம்படுத்தபபடும். ரூபாய் 700 இலட்சம் மதிப்பீட்டில் 4,50,000 மக்கட் தொகையினைக் கொண்ட 320 கிராமங்கள் பயன்பெறும்.

2.2.7. 1982-83 ஆம் ஆண்டில் 600 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல்/அமைத்தல் போன்ற பணிகளை ரூபாய் 1,000 இலட்சம் மதிப்பீட்டில் 4,50,000 மக்கட் தொகையினைக் கொண்ட 320 கிராமங்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த அரசானது சரியான போக்குவரத்து வசதிகளின் சிறப்புப் பலன்களை ஊரகப் பகுதிகள் பெறும் பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் அதிகப்படியான முதலீட்டினைப் படிப்படியாக உயர்த்தி வருகின்றது என்பது தெளிவாகும்.

2.3. பேருந்து வழித் தடங்களை மேற்கொள்ளும் திட்டம் :

2.3.1. இத்திட்டம் 1960-61 ஆம் ஆண்டில் துவங்கப்பெற்று 1973-74 ஆம் ஆண்டு வரை சுமார் 12,500 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த பேருந்து வழித் தடங்கள் மேம்படுத்தப்பட்டு அவற்றை பராமரிப்பதற்காக அரசால் அச்சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. போதிய நிதி வசதியில்லாத காரணமாக இத்திட்டம் 1974 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை கைவிடப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் இத் திட்டமானது அரசால் ஆய்வு செய்யப்பட்டு மீண்டும் இத்திட்டம் மிக ஊக்கத்துடன் மேற் கொள்ளப்பட்டது. அதன்படி 1981-82 ஆம் ஆண்டு முடிவு வரை 8,103 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்கள் (69 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் 1,517 கி.மீ. 150 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில், 1,157 கி.மீ., மேற்படி தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் இடம் பெறாத கிராமங்களில் 5,429 கி.மீ.) மேம்படுத்தப்பட்டு அவற்றின் எதிர்கால பராமரிப்பிற்காக அச்சாலைகள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ; அதனால் உள்ளாட்சி மன்றங்களின் நிதிச்சுமை குறைகின்றது.

[1982 மார்ச் 13

அங்ஙனம் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் நீளம் மற்றும் செலவிடப்பட்ட தொகை ஆகியவை ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், ஆண்டும். | ஒதுக்கீடு. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) 1979-80 .. .. | 600·00 | 601·07 |
| (2) 1980-81 ... .. .. | 10,00·00 | 10,02·00 |
| (3) 1981-82 .. .. .. | 13,00·00 | .... |
| மொத்தம் .. | 29,00·00 | .. |

| வரிசை எண்ணும், ஆண்டும். | தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்கள். | தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களைத் தவிர. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (4) | (5) | (6) |
| | (நீளம் கிலோ மீட்டரில்.) | | |
| (1) 1979-80 .. | 867 | 1,643 | 2,510 |
| (2) 1980-81 | 550 | 2,596 | 3,146 |
| (3) 1981-82 | 1,257 | 1,190 | 2,447 |
| மொத்தம் .. | 2,674 | 5,429 | 8,103 |



1982 மார்ச் 13]

| வரிசை எண்ணும் ஆண்டும். | | பயன் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை. | மக்கட் தொகை. |
|---|---|---|---|
| (1) | | (7) | (8) |
| | | (எண்ணிக்கையில்.) | |
| (1) 1979-80 | | 1,255 | 12.58,500 |
| (2) 1980-81 | .. | 1,573 | 16,22,000 |
| (3) 1981-82 | .. | 1,224 | 12,553,00 |
| மொத்தம் | .. | 4,052 | 41,34,000 |

2.3.2. 1982—83ஆம் ஆண்டில் பேருந்து வழித் தடங்களை மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 1,222.50 கி.மீ. நீளம்கொண்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தி அச்சாலைகளை பராமரிப்பதற்காக அரசால் எடுத்துக்கொள்ள திட்ட மிடப்பட்டுள்ளது. அதற்காக 1982—83ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் ரூபாய் 11,00 இலட்சங்கள் ஒதுக்கப் பட்டுள்ளது.

2.3.3. இந்த திட்டத்தை அமுல்படுத்தும்போது ''தன்னிறைவுத் திட்டத்தின்'' கீழ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பேருந்து வழித் தடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.

2.4. தன்னிறைவுத் திட்டம்—

2.4.1. 1980—81ஆம் ஆண்டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டமானது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் கீழ்க்கண்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அடிப்படைத் தேவைகளாவன

(அ) இணைப்புச் சாலைகள்,

(ஆ) சுடுகாட்டிற்கான வழிப் பாதைகள்,

[1982 மார்ச் 13

(அ) 1,500-ம் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகையும் கொண்ட தனி கிராமங்களும் 1,000-லிருந்து 1,500-க்குட்பட்ட மக்கள் தொகை கிராமங்கள் மட்டுமே ஊரகச் சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) தன்னிறைவுத் திட்டத்திலும் கூட புதிய சாலைகள் அமைத்தல், ஏற்கனவே அமைந்திருக்கும் சாலைகளை மேம்படுத்துதல் முதலான பணிகள் 1,500-ம் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் மற்றும் 1,000-லிருந்து 1,500 வரை மக்கட் தொகை கொண்ட கிராமங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.4.7. நடப்பு ஆண்டில் (1981–82) ரூ. 2,440 இலட்சங்கள் மதிப்பீட்டில் மொத்தம் 4,916 கி.மீ. நீளம் கொண்ட ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

அட்டவணை.

| வரிசை எண்ணும் திட்டமும். | புதிய அமைப்புகள் சாலையினை அமைத்தல் மற்றும் செம்மண் பரத்துதல். | மேம் படுத்துதல் (கல் பரத்துதல்.) | மொத்தம். | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.) | பயனடைந்துள்ள கிராமங்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அ. 1,500-ம் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகைக் கொண்ட தொகுதி : | கி.மீ. | கி.மீ. | கி.மீ. | | |
| 1 தன்னிறைவுத் திட்டம். | 408 | 412 | 820 | 786 | 850 |
| 2 ஊரகச் சாலைகள் திட்டம். | .. | 350 | 350 | 500 | 260 |
| மொத்தம் .. | 408 | 762 | 1,170 | 1,286 | 1,110 |



1982 மார்ச் 13]

| ஆ. 1,000-லிருந்து 1,500 வரை மக்கள் தொகைக் கொண்ட தொகுதி : | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | கி.மீ. | கி.மீ. | கி.மீ. | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 தன்னிறைவுத் திட்டம். | 1,220 | 2,376 | 3,596 | 954 | 3,700 |
| 2 ஊரக சாலைகள் திட்டம். | .. | 150 | 150 | 200 | 60 |
| மொத்தம் | 1,220 | 2,526 | 3,746 | 1,154 | 3,760 |
| ஆக மொத்தம் .. (அ—ஆ) | 1,628 | 3,288 | 4,916 | 2,440 (அல்லது) ரூ. 24.40 கோடி. | 4,870 |

2.4.8. மத்திய அரசினால் குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10.5 கோடிக்கு மாறாக இம்மாநிலத்தில் 1981–82 ஆம் ஆண்டிற்கு மட்டும் ஊரகச் சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ரூ. 24.40 கோடி முதலீடு செய்யப்பட்டிருப்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது.

2.4.9. 6,860 கி.மீ. நீளத்திற்கு ரூ. 152 கோடி மதிப்பீட்டில் ஊரகச் சாலைகள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கி மற்றும் அவற்றின் உட்பிரிவுகளிலிருந்து உதவியினை பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பதிலை எதிர் நோக்கியுள்ளோம்.

3. மாநிலச் சாலைகள் திட்டம் :

3.1. (அ) தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதியுடன் கட்டுதல்.

(ஆ) பாலம் அமைக்கப்படாத கடவுப் பாதைகளில் மதகுகளும் பாலங்களும் அமைத்தல் ;

(இ) நடைபாதைகளை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் ;

(ஈ) வடிவமைப்பு இயல் மேம்பாடு போன்ற மூலப்பணிகள் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மாநிலச் சாலைப் பணிகள் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு துணை திட்டப் பணியை பொறுத்த வரையிலும் அவற்றின் நோக்கங்களுக்கிணங்க அடைந்த சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

3.1.1. தேசிய நெடுஞ் சாலைகள் (நகர்ப்புறம்).—20,000-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகராட்சி எல்லைகளுக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் மாநில அரசால் மேம்பாடு செய்யப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இப்பகுதிகளை தேசிய நெடுஞ்சாலைகளின் புறநகர் சாலைத் தரத்திற்கு சிறிதும் குறைவுபடாமல் பராமரிக்கவும், நகரியப் பகுதிகளின் போக்குவரத்து நெரிசலுக்கு ஈடு கொடுக்கும் விதத்திலும், நடைபாதை நீங்கலாக உள்ள சாலைப் பரப்பு முழுவதும் தூசி படியா சாலையாக இருக்கவும் இந்நகரியப் பகுதி தேசிய நெடுஞ்சாலைகள் படிப்படியாக மேம்பாடு செய்யப்படுகின்றன.

3.1.2. 1980–81 ஆம் ஆண்டில் ஒரு பெரும் பணியானது (அ-து.) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை புது ஆவடி சாலைச் சந்திப்பிலிருந்து வைணவக் கல்லூரி வரை, தேசிய நெடுஞ்சாலை 4-ல் கி.மீ. 5/4 முதல் 7/6 வரை ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

3.1.3. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டிலான ஆறு பணிகள் செங்கற்பட்டு, ஆம்பூர், திண்டிவனம், விருதுநகர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்வதற்காக 1981–82 ஆம் ஆண்டின் பாகம்-2 திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை அறிய தயவு செய்து இணைப்பு 2-யைக் காண்க). அப்பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

3.1.4. தேசிய நெடுஞ்சாலை 45 இல் கி.மீ. 11/4 முதல் 12/4 வரையிலான சாலைப் பகுதியினை (அ-து.) "கிண்டி சுரங்க நடைபாதை"யிலிருந்து மவுண்ட்—பூந்தமல்லி சாலை மற்றும் மவுண்ட் சாலை ஆகியவற்றின் சந்திப்பு வரை (கத்திப்பாரா-சந்திப்பு) யிலான பகுதியினை அறுவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ. 22.00 இலட்சம் மதிப்பீட்டில் சமீபத்தில் ஒப்புதலளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.





3.1.5. 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 12.12 இலட்சத்திற்கு மாறாக ரூ. 22.61 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் முடிவடையக் கூடும் ஆறு பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும், பணிகளின் பெயரும். | மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 நாகர்கோவில் நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலை 47 இல் கி.மீ. 631/2 முதல் 638/6 வரை (அ-து.) கேரள எல்லையிலிருந்து கன்னியாகுமரி பிரிவு வரையிலான சாலைப் பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 1.00 |
| 2 இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குள் (தேசிய நெடுஞ்சாலை) கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை சாலையில் 46-இல் கி.மீ. 142/8 முதல் 144/4 வரை கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 0.70 |
| 3 சிங்கநல்லூர் நகராட்சி எல்லைக்குள் (தேசிய-நெடுஞ்சாலை—47) சேலம்-கொச்சின் சாலையில் கி.மீ. 151/1-லிருந்து 154/2 வரையிலான சாலைப் பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 2.25 |
| 4 சேலம் நகராட்சி எல்லைக்குள் சேலம்-கொச்சின் சாலையில் (தே. நெ. 47) கி.மீ. 0–0 முதல் 0–35 வரையிலான சாலைப்பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 0.38 |

[1982 மார்ச் 13

| வரிசை எண்ணும், பணிகளின் பெயரும். (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 5 சேலம் நகராட்சி எல்லைக்குள் தே. நெ. 7-இல் கிருஷ்ணகிரி-சேலம்-மதுரை பிரிவில் பி.சி.சி. சாலையில் கி.மீ. 201/4முதல் 206/7 வரையிலான சாலைப் பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 1.00 |
| 6 இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குள் சென்னை-சித்தூர்-பெங்களூர் சாலையில் (தே. நெ. 4) கி.மீ. 111/2 முதல் 115/0 வரையிலான சாலைப் பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல். | 1.50 |

3.1.6. 1982-83ஆம் ஆண்டில் 6 பணிகளுக்காக ரூபாய் 38.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (பணிகளின் விவரத்தை அறிய தயவு செய்து இணைப்பு 3-னைக் காண்க.)

**3.2. மாநிலச் சாலைகள் திட்டம்:**

3.2.1. (அ) வாகனப் பாதைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், (ஆ) உறுதியற்ற கட்டுமானங்களை உறுதியுடன் திரும்ப அமைத்தல் மற்றும் (இ) பாலமில்லா இருப்புப் பாதைக் கடவுகளில் புதிய பாலங்கள் அமைத்தல் போன்ற மூலப் பணிகள் (1) மாநில நெடுஞ்சாலைகள், (2) மாவட்டப் பெருஞ் சாலைகள், (3) மாவட்ட இதரச் சாலைகள் ஆகிய மாநில அரசு சாலைகளின் மாநிலச் சாலை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.2.2. மாநில நெடுஞ்சாலைகள் :**

1981-82 ஆம் ஆண்டிற்காக, நான்கு பணிகளுக்கு, ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன (ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளின் விவரத்தை அறிய தயவு செய்து இணைப்பு 4-னைக் காண்க.)



1982 மார்ச் 13]

3.2.3. பெரும் தொழிற்சாலைகளின் அதிவேக வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு இந்த அரசானது தனி ஆர்வம் கொண்டுள்ளது. திருச்சி அருகே திருவெறும்பூரில் அமைந்துள்ள ''பெல்'' நிறுவனத்திற்கு வெளிப்புறத்திலுள்ள சாலையையும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையிலுள்ள ''பெல்'' நிறுவனத்திற்கு வெளிப்புறத்திலுள்ள சாலையையும் அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு இந்த அரசானது ஒப்புதல் வழங்கியுள்ளது. திருச்சி-திருவெறும்பூரில் நிறுவப்பட்டுள்ள ''பெல்'' நிறுவனத்தின் தொழில் மேம்பாட்டிற்காகவும், திருச்சி-திருவெறும்பூர் பகுதிகளில் பெருகியுள்ள போக்குவரத்தின் வசதிக்காகவும், திருச்சியிலிருந்து ''பெல்'' தொழிற்பேட்டை வரை உள்ள சாலையை நான்கு வழித்தடங்கள் கொண்ட சாலையாக அமைத்திட ரூபாய் 122.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் ஐம்பது விழுக்காட்டினை '' பெல் '' நிறுவனம் ஏற்க இசைந்துள்ளது.

3.2.4. '' பெல் '' நிறுவனத்தால் வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் '' கொதி ஆலை உதவித் திட்டத்தை '' முன்னிட்டு பின்வரும் மூன்று பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், பணிகளின் பெயரும். (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1 பெல் நிறுவனத்திற்கு பயன்படும் வகையில் தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு 3.4 கி.மீ. நீளத்திற்குச் சாலையினை அமைத்தல். | 18.40 |
| 2 இராணிப்பேட்டை-பொன்னைச் சாலையில் (அரசு மா. இ. சாலை) கி.மீ. 0/0 முதல் 4/0 வரையிலான பகுதியினை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம்படுத்தல். | 17.00 |
| 3 இராணிப்பேட்டை-பொன்னைச் சாலையில் (அரசு மா. இ. சாலை) கி.மீ. 2/8-இல் அமைந்துள்ள சுரங்கப் பாதையினை மேம்படுத்தல். | 38.00 |
| மொத்தம் | 73.40 |

[1982 மார்ச் 13

இதுபோன்ற பணிகள் தொழில் வளர்சியினைப் பெருக்க உதவுவதுடன் பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாதவர்களுக்கு வேலைவாய்ப்பினையும் அளிக்கின்றன.

3.2.5. மாநில நெடுஞ்சாலைகள் திட்டத்தின் கீழ் மூலப் பணிகளுக்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 56.47 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்காக ரூபாய் 131.18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டிலேயே முடிவுறும் தருவாயில் உள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும், பணிகளின் பெயரும். | மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1 கடலூர்-சித்தூர் சாலையில் கி.மீ. 38/2 48/0 வரையிலான பகுதியில் சாலைப் பாதையினை இரு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அகலப்படுத்துதல் (தென்னாற்காடு மாவட்டம்). | 8.00 |
| 2. திருநெல்வேலி-தூத்துக்குடி-செங்கோட்டை-கொல்லம் சாலையில் கி.மீ.59/0முதல்65/0 வரையிலான பகுதியில் சாலைப் பாதையினை அகலப்படுத்துதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 1.80 |
| 3. சேலம்-உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ. 76/4-ல் அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல் (தென்னாற்காடு மாவட்டம்). | 9.50 |

3.2.6. 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 59.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. (பணிகளின் விவரங்களை தயவு செய்து இணைப்பு 5-ல் காண்க.)



1982 மார்ச் 13]

**3.3. மாவட்டப் பெருஞ்சாலைகள் :**

3.3.1. சேலம் உருக்காலைத் திட்டத்திற்குப் பயனளிக்கக் கூடிய சூரமங்கலம்-தாரமங்கலம் சாலையை மேம்படுத்தும் பணியானது 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 157 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டது. 1981—82 ஆம் ஆண்டிற்காக, 13 பணிகளுக்கு ரூ. 595.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது (பணிகளின் விவரத்தை இணைப்பு—6-ல் காண்க).

3.3.2. இத்திட்டத்திற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 106,58 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. பின்வரும் பணிகள் நடப்பு ஆண்டில் முடிவுறும் தறுவாயில் உள்ளன :—

| வரிசை எண்ணும் பணிகளின் பெயரும். | மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. கொரட்டூர்-தின்னனூர்-பெரியபாளையம் சாலையில் கி. மீ. 6/4 முதல் 17/4 வரையிலான பகுதியினை அகலப்படுத்தி மேம்படுத்துதல். (செங்கற்பட்டு மாவட்டம்). | 4.00 |
| 2. அரக்கோணம்-காஞ்சீபுரம் சாலையில் கி.மீ. 1/6 முதல் 4/0 வரையிலான பகுதியினை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். (வட ஆற்காடு மாவட்டம்). | 2.00 |
| 3. தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையினை கி.மீ. 6/0 முதல் 33/0 வரை அகலப்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 2.03 |
| 4. பொள்ளாச்சி-பல்லடம் சாலையில் கி.மீ. 5/0 முதல் 17/0 வரையிலான இடைப்பகுதியில் சாலைப்பாதையினை அகலப்படுத்தி தார் பரத்துதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 5.00 |
| 5. பழனி-தேக்கன் தோட்டம் சாலையில் கி.மீ. 2/4-ல் அமைந்துள்ள பாலத்தினை திரும்ப அமைத்தல். | 3.00 |
| 6. பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் கி.மீ. 5/10-ல் பாலம் அமைத்தல். | 5.50 |

[1982 மார்ச் 13

| வரிசை எண்ணும் பணிகளின் பெயர். (1) | மதிப்பீடு. (2) ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 7. பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் கி.மீ. 8/4-ல் பாலம் அமைத்தல். | 2.40 |
| 8. கிருஷ்ணகிரி-இராயக்கோட்டா சாலையில் கி.மீ. 20/4-ல் பாலம் அமைத்தல். | 6.00 |

3.3.3. 1982–83 ஆம் ஆண்டில் இருபத்தைந்து பணிகள் ரூ. 505.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (இணைப்பு 7-னைக் காண்க).

3.4. மாவட்ட இதர சாலைகள் :

1981–82 ஆம் ஆண்டிற்காக 8 பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 120.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரத்தை இணைப்பு 8-ல் தயவுசெய்து காண்க). இத்திட்டத்தில் 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 71.37 இலட்சம் செலவிட திட்டமிடப் பட்டுள்ளது.

3.4.1. பின்வரும் 7 பணிகள் 1981–82 ஆம் ஆண்டில் முடிவுறும் தறுவாயில் உள்ளன :—

| வரிசை எண்ணும் பணிகளின் பெயரும். (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. கடயம்—முக்கூடல் சாலையினை கி.மீ. 0/0 முதல் 6/0 வரை மேம்படுத்துதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 2.00 |
| 2. கடயம்—முக்கூடல் சாலையினை கி.மீ. 6/0 முதல் 12/0 வரை மேம்படுத்துதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 2.00 |
| 3. கடயம்—முக்கூடல் சாலையினை கி.மீ. 12/0 முதல் 20/0 வரை மேம்படுத்துதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 2.00 |



1982 மார்ச் 13]

| வரிசை எண்ணும் பணிகளின் பெயரும். (1) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 4. நாசரத்—ஏரல் சாலையினை கி.மீ. 0/6 முதல் 1/2 வரை அகலப்படுத்தல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 0.40 |
| 5. அய்யலூர்—கடவூர் சாலையினை கி.மீ. 0/0 முதல் 8/0 வரை மேம்படுத்துதல். (மதுரை மாவட்டம்.) | 4.80 |
| 6. இளையாங்குடி—மரவமங்கலம் சாலையினை கி.மீ. 0/0 முதல் 6/0 வரை மேம்படுத்துதல். (இராமநாதபுரம் மாவட்டம்.) | 1.00 |
| 7. முதுகுளத்தூர்—உத்திரகோசமங்கை சாலை கி.மீ. 1/8 முதல் 6/0 வரை மேம்படுத்துதல். (இராமநாதபுரம் மாவட்டம்.) | 0.93 |

3.4.2. 1982–83 ஆம் ஆண்டில் பதினெட்டு பணிகள் ரூ. 422.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன (பணிகளின் விவரத்தை இணைப்பு—9 இல் காண்க).

3.5. இதரச் சாலைகள் திட்டம் :

3.5.1. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு 50,000 ரூபாய்க்கு மேல் செலவாகக்கூடிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், விடுபட்ட பெரிய மற்றும் சிறிய பாலங்கள், தாம்போகிகள், படுகைப் பாலங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப்பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகளையும், பாலங்களையும் பராமரிப்பதில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிவாரணம் அளிக்கும் பொருட்டு உள்ளாட்சி மன்றங்களிடமுள்ள நல்லெண்ண அடிப்படையில், ஊரகச் சாலைகள் திட்டம், பேருந்து வழித்தடங்களை மேற்கொள்ளும் திட்டம், மத்திய சாலை நிதித் திட்டம் போன்ற திட்டங்களைப் போன்று ரூ. 50,000-மும் அதற்கு மேற்பட்ட மதிப்பீட்டினையும் கொண்ட சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளை நடைமுறைப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை மேற்கொள்ள வேண்டும் என்று அரசானது ஆணையிட்டுள்ளது.

3.5.2. 1981–82 ஆம் ஆண்டிற்காக, 15 பணிகளுக்கு ரூ. 304.95 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை தயவு செய்து இணைப்பு 10 இல் காண்க.)

[1982 மார்ச் 13

3.5.3. 1981–82 ஆம் ஆண்டில் 18 பணிகள் முடிவடைந்து விடும் (பணிகளின் விவரத்தை இணைப்பு 11 இல் தயவு செய்து காண்க.) 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 125.55 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.5.4. 1982–83 ஆம் ஆண்டில் இருபத்தி ஏழு பணிகள் ரூ. 468.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (விவரங்களை தயவு செய்து இணைப்பு 12 இல் காண்க.)

3.6. நிழற்சாலைகள் :

3.6.1. சாலையோரங்களில் நெடிய சாலைகளுக்கு அழகூட்டவும், சாலைப் பயணிகள் தங்கி இளைப்பாறவும், சாலை ஓரங்களில் நிழல் மற்றும் பயன் தரும் மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இம்மரங்கள் வளர்ப்பதனால் பின்னால் கிடைக்கக்கூடிய விறகு போன்ற பொருட்களினால் அரசுக்குத் தொடர் வருமானத்திற்கு வழிவகை செய்வதுடன் இயற்கை சூழ்நிலையும் மாறுபடாமல் பராமரிக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தினால், கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பும், கிராமத் தொழில் வளர்ச்சியும் ஏற்பட வழி வகுக்கின்றது. தற்சமயம் பல இலட்சக் கணக்கான பனை மரங்கள், கட்டிடங்களுக்குத் தேவையான மரங்கள், எரிபொருள், எண்ணெய், கனிகள், மலர்கள் போன்ற பலவகை பயன் தரும் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

3.6.2. மரங்கள் வளர்ப்பதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 11.00 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 25,00,000 பனை மரங்களும், 25,000 நிழல் தரும் மரங்களும் நடப்பட்டுள்ளன.

3.6.3. 1982–83 ஆம் ஆண்டிற்காக, 20,00,000 பனை மரங்களும், 1,00,000 நிழல் தரும் மரங்களும் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.7. கருவிகளும் தளவாடங்களும்:

3.7.1. ஒவ்வொரு ஆண்டும் அரசின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்படும் சாலைகளின் நீளம் அதிகரிப்பதாலும், சாலைகளில் பெருகி வரும் அதிவேகமுள்ள வாகனங்களினாலும், அவற்றின் தேவைக்கேற்ப சாலைத் தளத்தை தரமுயர்த்தி அதிக அளவில் மேம்பாடு செய்து பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இப்பணிகளுக்கு தளவாடங்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி, நவீனப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பேருந்து வழித் தடங்களை எடுத்துக் கொள்ளும் திட்டம், வைரச் சாலைகள் திட்டம், கரும்பு சாகுபடி மேம



1982 மார்ச் 13]

பாட்டுக்கான சாலைத் திட்டம், பழங்குடியினர் நல்வாழ்வுத் துணைத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம் மட்டும்), மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மத்திய சாலை நிதித் திட்டம் போன்ற பல்வேறு சாலை ஆக்கப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டுள்ளதால் இப் பணிகள் செவ்வனே செய்து முடிக்கப் போதுமான கருவிகளும் தளவாடங்களும் தேவைப்படுகின்றன.

3.7.2. மேலும், பழுதடைந்த மற்றும் தேய்ந்துவிட்ட தளவாடங்களையும் கருவிகளையும் புதியனவற்றைக் கொண்டு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

3.7.3. 1980–81 ஆம் ஆண்டில், கருவிகள் மற்றும் தளவாடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அரசு, லாரிகள், ஸ்கிட் கொள்கலம், தார் கொதிகலன் போன்ற கருவிகளை வாங்க ரூ. 148.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்திய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் அடைக்கப்பட்ட தாரின் அளவை மிகவும் குறைத்துள்ளதால், மேலே ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தொகையானது நெடுஞ்சாலைத் துறையில் சென்னை மற்றும் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து தாரினை ஒட்டு மொத்தமாகக் கொண்டு வரவும், சேமிக்கவும் வகை செய்யும். இத்துடன் நெடுஞ்சாலைத் துறையில் அதிக பட்ச அளவில் தேவைப்படும் கருவிகளும் தளவாடங்களுமான சாலை உருளைகள், சரக்குப் பேருந்துகள், கல்லுடைக்கும் கருவிகள் வாங்குவதற்காக 1980–81 ஆம் ஆண்டில் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் அரசு மேலும் ரூ. 72.50 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3.7.4. 1981–82 ஆம் ஆண்டில், தன்னிறைவுத் திட்டத்திற்காக 100 சாலை உருளைகள் வாங்குவதற்கு ரூ. 200 இலட்ச மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

3.7.5. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 395.88 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிற்காக கருவிகளும் தளவாடங்களும் வாங்குவதற்கு ரூ. 248.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.7.6. 1982–83 ஆம் ஆண்டில் அடைக்கப்பட்ட தாரினை மேலே கொண்டுச் செல்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேவையான கட்டடம் கட்டுவதற்கு கூடுதலாக ரூ. 150 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

3.8. தற்போதிருக்கும் சாலை இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

3.8.1. மேம்பாலங்களை/சுரங்கப்பாதைகளைப் பொறுத்த வரை ஏற்படும் செலவினைப் பகிர்ந்துக் கொள்வதில் இந்திய அரசின் தற்போதைய கொள்கை பின் வருமாறு :—

3.8.1.1. அணுகு சாலை உட்பட மேம்பாலங்கள்/சுரங்கப் பாதைகள் அமைப்பதில் ஏற்படும் மொத்தச் செலவில் 50 விழுக்காட்டினை இரயில்வே ஏற்கும். மேற் கூறியவற்றில், மாற்று வழிச் சாலை, வடிகால்கள், தந்திப் புதைவடங்கள், தண்ணீர் எடுத்துச் செல்லும் பெருங் குழாய்கள் போன்றவற்றை அமைப்பதற்கான செலவும் அடங்கும். ஆனால், நிலத்தை கையகப் படுத்தும்போது அதில் கட்டுமானம் ஏதாவது இருந்தால் அதையும் சேர்த்து ஆகும் செலவு இதில் அடங்காது.

3.8.1.2. அணுகு சாலைகள் உட்பட மொத்தச் செலவில் 50 விழுக்காட்டினை மாநில அரசு ஏற்கும். கட்டுமானத்துடன் கூடிய நிலத்தை கையகப்படுத்துவதற்கான முழுச் செலவினத்தையும் மாநில அரசு ஏற்கும்.

3.8.1.3. பொதுவாக பாலங்கள் 24 அடி அகலம் உடையனவாக (இருவழித்தட அகலம்) இருக்கும். நகரங்கள், மாநகரங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் அவசியமாயின் இரு நடைப்பாதைகள் (ஒவ்வொன்றும் 6 அடி அகலம்) அமைக்கப் படும். இரயில்வே இருப்புப் பாதையைக் கடப்பதற்கு வருங் காலத்தில் நிதி ஒதுக்கவேண்டியிருப்பின், அந்தப் பாலத்தில் கூடுதல் கட்டுமானத்திற்காகும் செலவு முழுவதும் இரயில்வேத் துறையினரால் ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன், பாலத்தின் எஞ்சியப் பகுதிக்காகும் செலவு, சாலைகளுக்காகும் செலவு ஆகியவற்றில் அதன் பங்கினையும் ஏற்கும்.

3.8.1.4. மேலேயுள்ள பத்தி 3.8.1.3.-ல் குறிப்பிடப் பட்டுள்ள அதாவது இருவழி அகலத்திற்கு மேலே சாலையில் கூடுதல் அகலம் வேண்டுமென்று மாநில அரசு விரும்பினால், இக்கூடுதல் அகலத்திற்காகும் செலவு (அ) தற்போதுள்ள பாதையுடன் இணைப்பதற்காகப் பாலத்தின் நீளத்தை அதிகப்படுத்தும் செலவு முழுவதும் மாநில அரசும், (ஆ) வருங்காலத்தில், கூடுதல் இரயில்வே பாதையைக் கடப்பதற்காகப் போடப்படும் ஏந்த வாரு கூடுதல் நீளத்திற்காகும் செலவையும், மாநில அரசும், இரயில்வேயும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

3.8.2. பணிகளுக்காகும் நிதிச் செலவினங்கள் :

3.8.2.1. சட்டப்படிக்கான விதி முறைகளின்கீழ் அமைக்கப் பட்டிருக்கும் தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் சுரங்கப் பாதைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலை இருப்புப்பாதை கடவுகளின் தரத்தை உயர்த்துதல், ஆளில்லாத இருப்புப் பாதை கடவுகளில் ஆட்களை நியமித்தல் போன்ற மாநில அரசின் பொறுப்புகளை ஏற்பதற்காக மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம், 1966 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு " இரயில்வே பாதுகாப்பு பணி நிதி " எனப்படும் ஒரு நிதியை ஏற்படுத்தியுள்ளது.



3.8.2.2. இரயில்வே சட்டத்தின்கீழ் வரும் சட்டப்படியான விதிமுறைகளின்கீழ், ஆளில்லாத சாலை இருப்புப்பாதை கடவுகளில் ஆட்களை நியமிப்பதற்கும், தற்போதுள்ள சாலை இருப்புப்பாதைக் கடவுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் இரயில்வேக்கு இந்நிதியில் 20 விழுக்காடுகள் நேரடியாக ஒதுக்கப் படுகின்றது.

3.8.2.3. சாலை-இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம்/சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகின்றது. சட்டப் படியான விதி முறைகளின் கீழ் தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம்/சுரங்கப்பாதைக் கட்டும் பணி, மாநில அரசு இரயில்வேயின் கூட்டு முயற்சியில் செய்யப்படுகின்றது. நிலம் கையகப்படுத்துதல் நீங்கலாக இப்பணிக்கு ஆகும் செலவு, மாநில அரசாலும், இரயில்வேயினாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. நிலம் கையகப்படுத்துவதற்கான செலவு நீங்கலாக மாநில அரசின் பங்கு தொடக்கத்தில் மாநில நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றது. பின்னர், இது " இரயில்வே பாதுகாப்பு பணி நிதி "-யிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படுகின்றது.

3.8.2.4. சாலை மேம்பாலங்கள் நகராட்சிகளின் அதிகார வரம்பிற்குள் வருமாயின் செலவுத் தொகையில் மாநிலத்தின் பங்கு (மொத்த செலவில் 50 விழுக்காடு) மாநில அரசு, நகராட்சிகளுக்கிடையே சமமாக பிரித்துக் கொள்ளப்படுகின்றது. இரயில்வே பாதுகாப்பு பணி நிதியில் குறைந்தளவு தொகையே உள்ளதால், நகராட்சிகளுக்காகும் பங்கு செலவைப் பொதுவாக இந்நிதியிலிருந்து திருப்பிக் கொடுப்பதில்லை.

3.8.3. 1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.39 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

3.8.4. செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு—13-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.8.5. 1982–83 ஆம் ஆண்டிற்காக, ரூ. 23.83 இலட்சம் மேற்படி பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

3.8.6. இவை தவிர, பின்வரும் சில மேம்பாலம் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த பரிசீலனையிலும், இரயில்வே மற்றும் இந்திய அரசின் ஒப்புதலினை எதிர்நோக்கியும் உள்ளன,

[1982 மார்ச் 13

(அ) மணலி அருகே சென்னை-கல்கத்தா பாதையில் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைத்தல்.

(ஆ) துறைமுகத்திற்கும் இராயபுரத்திற்கும் இடையே தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுக்கு மாறாக மேம்பாலம் அமைத்தல்.

(இ) கிண்டி இரயில் நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள மேம்பாலத்தை மேம்படுத்துதல்.

3.9. பழங்குடியினர் நலத் திட்டம்—

3.9.1. 171.10 கி.மீ. நீளத்திற்கு ரூ. 209.25 இலட்சம் மதிப்பீட்டில் 12 பணிகளடங்கிய ஒரு பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணிகள் ஐந்து ஆண்டு கால அளவில் (அதாவது 1978–83) செயற்படுத்தப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 12 பணிகளில் இருபணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.9.2. மேலும் பச்சமலை குன்றுகளிலுள்ள ஒடைகாட்டுப் புதூரிலிருந்து பெரியமங்கலம் வரையிலான சாலையினை விரிவுப் படுத்தும் பணிக்கு ரூ. 15.00 இலட்சம் அரசால் ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது.

(இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்படுத்தப்பட்டு வரும் பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு-14-ல் காணலாம்.)

3.9.3. மேற்படி பணிகளுக்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 188.33 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.9.4. மேற்படி பணிகளை தொடர்வதற்காக 1982–83ஆம் ஆண்டில் ரூ. 112.07 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.10. மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புசாலைகள் அமைத்தல்.

3.10.1. கடற்கரையோரப் பகுதியில் அநேக மீனவர் குடியிருப்புகள், தற்போது போதிய இணைப்புச் சாலை வசதியின்றி உள்ளன. இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்களில் இம்மாதிரியான மீனவர் குடியிருப்புகளுக்கு போதிய போக்குவரத்து வசதியினை ஏற்படுத்துமாறு அமையவில்லை. எனவே, இப்பிரிவினரின் தேவைகளை கருத்திற்கொண்டு போதிய சாலை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக இவ்வரசு முதல் முறையாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்து ஒப்புதலளித்துள்ளது.



1982 மார்ச் 13]

3.10.2. ரூ. 93.50 இலட்சத்தில் 84.7 கி.மீ. நீளத்திற்கு இம்மாதிரியான சாலைகளை அமைத்திட, 37 பணிகளுக்கு அரசு நிர்வாகம் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டமானது 1979–80 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டிற்கும் 1980–81 ஆம் ஆண்டிற்கும் முறையே 15.42 இலட்சமும் ரூ. 30.22 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பட்ட பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பெரும்பாலான பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன (பணிகளின் விவரத்தை தயவுசெய்து இணைப்பு 15-ல் காண்க.)

3.10.3 13.55 கிலோ மீட்டர் நீளத்திற்காக ரூ. 36·90 இலட்சத்தினை இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இவ்வரசு ஒப்புதலளித்துள்ளது. (பணிகளின் விவரத்தை தயவு செய்து இணைப்பு 16 இல் காண்க.)

3.10.4. 1981–82ஆம் ஆண்டில் ரூ. 30.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.10.5. 1982–83 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 35.00 இலட்சமாகும்.

3.11. நெடுஞ்சாலைத்துறையின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

3.11.1. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கங்களாவன :—

(அ) மலைப் பகுதி கிராமங்களிலுள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல் ;

(ஆ) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீன்வளம், வனம், தொழில் மற்றும் சுற்றுலா போன்ற ஏனைய பல்வேறு திட்டங்களின் கீழ் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ள எல்லா இடங்களுக்கும் எளிதில் செல்வதற்கான சாலை போடுதல் ;

(இ) பழங்குடியினர் மற்றும் ஆதி-திராவிடர்கள் வாழும் கிராமப் பகுதிகளை பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி அடைந்த மையங்களுடன் இணைக்க சாலைகள் அமைத்தல். இத்திட்டம் 1975 ஆம் ஆண்டில் துவங்கப்பெற்று, ஒவ்வொரு ஆண்டும் பல பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 47 சாலைப் பணிகளுக்கு ரூ. 272.05 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது,

அதில் 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரை 24 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (பணிகளின் விவரத்தை தயவு செய்து இணைப்பு 17 இல் காண்க.)

3.11.2. ஏழு புதுப் பணிகளுக்கு அரசானது சமீபத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதிலிருந்து, மேற்கொள்ளப்பட்ட பணிகள் வெவ்வேறு நிலைகளிலுள்ளன என்பது தெரிய வருகிறது. (பணிகளின் விவரத்தை தயவுசெய்து இணைப்பு 18 இல் காண்க.)

3.11.3. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 80.92 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிற்காக ரூ. 99.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வனப்பகுதியில், மலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம். (வனப்பகுதி சாலைப் பணிகள்).

3.12.1. மலைப் பகுதியை மேம்படுத்துவதற்காக, வனத் துறை தெரிந்தெடுத்த வனப்பகுதி எல்லைக்குள் சாலைகளை அமைப்பதும் மேம்படுத்துவதும் அவசியமானதாகும். இதுவரை இத்திட்டத்தின் கீழ் ஆறு பணிகளுக்கு ரூ. 399.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு அப்பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன. (பணிகளின் விவரத்தை தயவுசெய்து இணைப்பு 19 இல் காண்க.)

### மேற்கு மலைத்தொடர்ச்சி சாலை வளர்ச்சித் திட்டம்.

3.13.1. மலையில் விளையும் பொருட்களை சமவெளிக்குக் கொணர்வதற்காக மேற்கு மலைத் தொடரில் சாலை அமைத்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகள் இந்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

3.13.2. இது மத்திய அரசு ஆதரவளிக்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டம் 1975–76 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. திட்டத்தின் கீழ், பின்வரும் கருத்துக்களும் முன்னேற்றங்களும் கவனத்தில் கொண்டு செயல் படுத்தப்பட வேண்டுமென திட்டக் குழு பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1. ஆடுகள், ஆவினம், கோழிகள் ஆகியவைகளின் பண்ணைகள் வளர்ச்சி மற்றும் சந்தை வசதிகள் புல்வெளி அபிவிருத்தி மற்றும் உடல் நல பாதுகாப்பு வசதிகள்.

2. மலைத் தோட்டப் பயிர்களை வளர்த்தல், மண் வளத்தை மேம்படுத்துதல், நில நிர்வாக வழிமுறைகளை செயல்படுத்தல்.



3. அணுக முடியாத பகுதிகள் மற்றும் அங்காடிகள் இடையே வழிவகை செய்வது சம்பந்தமான திட்டங்கள் மூலம் தோட்டம் மற்றும் வனாந்திர வளங்களை மேம்படுத்துதல்.

3.13.3. இதுவரை இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் முதலில் குறிப்பிட்ட பணி மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. பல்வேறு நிலைகளிலுள்ள இப்பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் பணிகளின் பெயரும். (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1 சிறுமலை மலைச் சாலையை மேம்படுத்துதல் (பணி முடிவு பெற்றுவிட்டது). | 15.00 |
| 2 கும்பக் கரையிலிருந்து வெள்ளக்கவிக்குச் சாலை அமைத்தல். | 15.00 |
| | 93.00 |
| 3 தர்மாத்துப்பட்டியிலிருந்து ஆடலூருக்குச் சாலை அமைத்தல். | 35.00 |
| | 38.50 |
| 4 பெரிய குளத்திலிருந்து அடுக்கம் வரை சாலை அமைத்தல். | 15.00 |
| | 20.00 |

3.13.4. 1980–81 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 30.00 இலட்சம் செலவிடப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 38.01 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்காக ரூ. 57 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கரும்பாலை வளர்ச்சிக்கான சாலைப் பணிகள் திட்டம்.

3.14.1. இத்திட்டம் சர்க்கரைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கரும்பை உற்பத்தியாகுமிடங்களிலிருந்து சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக எடுத்துச் செல்வதற்காக, குறிப்பிட்ட கரும்பு சாகுபடியாகும் பகுதியிலுள்ள சாலைகளை மாவட்ட

பெருஞ்சாலைகள் தரத்திற்கு மேம்படுத்துவதற்காக ஆண்டு தோறும் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இம் மாநிலத்தில் 21 சர்க்கரை ஆலைகளுக்கு அருகாமையிலேயே கரும்பு சாகுபடி பகுதியிலுள்ள சாலைகள் பொதுவாக அமைந்துள்ளன.

3.14.2. 1981-82 ஆம் ஆண்டில் மூலப் பணிகளுக்குகாக ரூ. 180.00 இலட்சமும். பராமரிப்பதற்காக ரூ. 50,00 இலட்சமும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி வரை இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 724.37 கிலோ மீட்டராகும்.

3.14.1, 1982-83-ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின் கீழ் மூலப் பணிகளுக்காக ரூ. 200.00 இலட்சமும் ,பராமரிப்பதற்காக ரூ. 50.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.14.4. 1981-82 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் பொருட்டு, தார் சாலையாக மேம்படுத்தும் 10 பணிகளுக்காக ரூ. 32.66 இலட்சத்துக்கும், புதிய சாலைகளை அமைப்பதற்காக ரூ. 170.60 இலட்சத்திற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது.

**உலக வங்கித் திட்டத்தின் கீழ் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.**

3.15.1. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு ஓர் உள்வட்ட சாலையினை மேம்படுத்தவும், சிறிய மற்றும் பெரிய பாலங்கள் முதலியவற்றை அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் இரண்டு கட்டங்களிலே மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டப் பணிகளுக்கான முதலீடு ரூ. 7.18 கோடியாகும். (இதில் பெரு வழிச் சாலைகளுக்கான ரூ. 4.00 கோடியும் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள இதரச் சாலைகளுக்கு ரூ. 3.18 கோடியும் அடங்கும்.) இத்திட்டம் 1977-78-ல் துவக்கப்பட்டது. 1980-81 வரையிலான செலவு ரூ. 612.76 இலட்சமாகும். 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 84.72 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.15.2, சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கட்டம் 1-ல் கீழ்க்கண்ட பணிகளை எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (மதிப்பீடு ரூ. 7.18 கோடி).

(1) கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைப்பதைச் சேர்த்து உள்வட்டச் சாலை அமைத்தல் — நீளம் 11.7 கீ.மீ.

(2) அண்ணா சாலை, பெரியார் சாலை ஆகியவற்றில் பாதசாரிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டிகள் ஆகியோரின் வசதிக்கென்று மேம்பாட்டுப் பணிகள்—21 கி.மீ.





(3) ஏழு பாலங்களை திரும்ப அமைத்தல்:

(4) உயர்மட்டப் பாலங்கள் இரண்டினை அமைத்தல்.

(அ) நெல்சன் மாணிக்கம் சாலையில் ஒன்று:

(ஆ) கான்ட்ஸ் சாலையில் ஒன்று.

(5) நெல்சன் மாணிக்கம் சாலையில் வாகனப் போக்குவரத்திற்கான சுரங்கப் பாதை அமைத்தல்.

(6) தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகில் வைத்தியநாத தெருவில் ஒரு மேம்பாலம் அமைத்தல்.

(7) எட்டு சுரங்க நடைப் பாதைகள் பாதசாரிகளுக்காக அமைத்தல்.

(8) சாலை சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான 10 தானியங்கி மின் விளக்குகள் பொருத்தல்.

(9) இதர சில போக்குவரத்து மேம்பாட்டு வழிவகைகள்.

3.15.3. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் பின்வரும் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன:

1. உள்வட்டச் சாலை அமைத்தல் 7.6 கி.மீ. நீளம்:

2. அண்ணா சாலை மற்றும் பெரியார் சாலைகளில் பாதசாரிகள் மற்றும் மிதி வண்டி ஓட்டிகள் ஆகியோரின் வசதிக்கான மேம்பாட்டுப் பணி 21 கி.மீ.

3. சிறு பாலங்கள் புதுப்பித்தல் 7:

4. பாதசாரிகள் சுரங்கப் பாதைகள் 6.

5. சாலை சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான தானியங்கி மின் விளக்குகள் பொருத்தல் 9.

6. ஒரு வழிப் போக்கு போன்ற சாலைகளில் அறிவிப்புகள் மற்றும் மின்னும் விளக்குகள் அமைத்தல்.

3.15.4. பின்வரும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன:

(1) உள்வட்ட சாலை அமைத்தல் 1.2 கிமீ.

(2) இரு உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்:

[1982 மார்ச் 13

(3) நெல்சன் மாணிக்கம் சாலையில் வாகனப் போக்குவரத்திற்கான சுரங்கப் பாதை அமைத்தல்.

(4) தொற்றுநோய் மருத்துவ மனைக்கருகே பாதசாரி சுரங்கப்பாதை ஒன்று அமைத்தல்.

(5) புது ஆவடி சாலை சந்திப்பிற்கருகே தானியங்கி மின்விளக்கு ஒன்று அமைத்தல்.

3.15.5. பின்வரும் பணிகள் செயல்படுத்தபடவுள்ளன:

(1) உள்வட்டச் சாலை அமைத்தல் 3.00 கி.மீ. நீளம்;

(2) தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகில், வைத்தியநாதன் சாலையில் ஒரு மேம்பாலம் அமைத்தல்.

(3) உள்வட்டச் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைத்தல்.

1982-83 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 51.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள், அனைத்தும் 1982-83 ஆம் ஆண்டிலேயே முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.15.6. சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டம் கட்டம் 2.

3.15.6.1. தமிழக அரசின் பிரிதிநிதிகளுடன் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் கலந்தாலோசித்த உலக வங்கி மதிப்பீட்டுக் குழு அலுவலர்கள், பின்வரும் பணிகளை இச்சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர்:

(1) சென்னை உள்வட்டச் சாலை கட்டம் 1-ன் தொடர்ச்சியாக பாடியிலிருந்து தேசிய நெடுஞ்சாலை எண் 5 வரை இணைக்கும் 6 கி.மீ. சாலையினை அமைத்தல் (மதிப்பு ரூபாய் 381 இலட்சம்)

(2) வில்லிவாக்கத்திலிருந்து ஆவடி வரையிலான 7-ன் சென்னை-திருவள்ளூர் சாலையை 14.6 கி.மீ. நீளத்திற்கு மேம்படுத்துதல் (மதிப்பு ரூபாய் 151.00 இலட்சம்)

(3) முகப்பேர் மனை மற்றும் வசதி திட்டத்திற்கான அணுகு சாலை அமைத்து கூவம் ஆற்றில் ஒரு பாலம் அமைத்தல் (மதிப்பு ரூபாய் 67.5 இலட்சம்).



1982 மார்ச் 13]

மேற்படி பணிகள் ஆய்வு செய்யப்பட்டு வரிசை எண் 1 மற்றும் 3-இல் உள்ள பணிகளுக்கான விரிவான மதிப்பீட்டிற்கு ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. வரிசை எண் 2 இல் உள்ள பணிக்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. நிலத்தை கையகப்படுத்துவதற்காக முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரிசை எண் 1 மற்றும் 2-ல் கண்ட பணிகளுக்கான ...ம் கையகப்படுத்தும் பணிக்கான துணை மதிப்பீடு ரூபாய் 73.88 இலட்சத்...ற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான நில விபர நமூனாக்கள், வருவாய்த் துறையால் அனுப்பப்பட்ட சிறப்புப் பணியாளர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளை 1983-84 ஆம் ஆண்டிற்குள் முடித்துவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்குள் ...ாய் 50.00 இலட்சம் செலவு செய்யப்பட்டது. நடப்பு 1981-82 ஆம் ...ண்டிற்காக இரண்டாம் கட்டப் பணிகளுக்காக ரூபாய் 50.00 இலட்சம் இலட்சமாகும்.

3.16. ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் (மாநில அரசு நிதி ...க்கீடு).

3.16.1. இத்திட்டம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றிடம் சென்னை பெருநகர்ப் பகுதிக்குள் தெரிந்தெடுக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கு வகை செய்கிறது.

3.16.2. பின்வரும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன :—

(1) சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்தல் 12 கி.மீ.—

(அ) பெரியார் சாலை (சென்ட்ரல் சந்திப்பிலிருந்து புதிய ஆவடி சந்திப்பு வரை).

(ஆ) அண்ணா சாலை (கத்திப்பாராவிலிருந்து விமான நிலையம் வரை).

[1982 மார்ச்

(இ) அண்ணா நகர் சந்திப்பிலிருந்து, உள்வட்டச் சாலை வ யிலான புது ஆவடிச் சாலை.

(2) மூன்று புதியச் சாலைகள் அமைத்தல்—6.3 கி.மீ.

(அ) வேளச்சேரி துணைப்பாதை.

(ஆ) தரமணி இணைப்புச் சாலை.

(இ) அண்ணா நகர் மேற்கிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை;

(3) நான்கு புதிய பாலங்கள் அமைத்தல் :—

திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் மூன்று பால களும், கோட்டூர்புரத்தில் ஒரு பாலமும்.

(4) தற்போதுள்ள பாலங்களை திரும்ப அமைத்தல் :—

சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில் ஒன்றும், இராமகிருஷ்ணா மடச் சாலையில் ஒன்றும் தே. நெ. 5 இல் கி.மீ. 7/6 இல் ஒன்றும் ஆக மூன்று;

(5) புற்றுநோய் நிலையம் அருகில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் புதிய சாலை அமைக்கும் பணி ஒன்று (அண்ணா நகர் மேற்குப் பகுதியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும்) முடிவு பெற்று விட்டது.

3.16.3. பின்வரும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன :—

(1) 12.00 கி.மீ. நீளத்திற்கான சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்—மூன்று. அவற்றில் இருபணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன:

(அ) தேசிய நெடுஞ்சாலை 45-னை மேம்படுத்தல் (கி.மீ. 11/7 முதல் 15/4 வரை);



32 மார்ச் 13]

(ஆ) அண்ணாநகர் சந்திப்பிலிருந்து உள்வட்டச் சாலை சந்திப்பு ரையிலான புது ஆவடி சாலையினை மேம்படுத்தல்.

(இ) சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து புது ஆவடிச்சாலை ரயிலான பூந்தமல்லி நெடுஞ்சாலையினை மேம்படுத்தல்.

(2) இரண்டு புது சாலைகள் அமைத்தல்—5.6 கி.மீ.

(அ) வேளச்சேரிக்கு துணைப்பாதை அமைத்தலையும் சேர்த்து லாங்பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ. 5-லிருந்து தரமணிக்கு ணப்புச் சாலையினை அமைத்தல்.

(ஆ) அண்ணா நகருக்கும் அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும் டையே இணைப்புச் சாலையினை அமைத்தல்.

(3) புற்றுநோய் நிலையத்திற்கருகே பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல் (இப்பணியானது முடிவுறுந்தறுயில் உள்ளது).

(4) திருவொற்றியூர் பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் கி.மீ. 7/4 றும் 8/2-ல் இரு பாலங்கள்.

(5) தே. நெ. 5-ல் கி.மீ. 7/6-ல் ஒருபாலம்.

(6) கோட்டூர்புரம் அருகே அடையாற்றின் குறுக்கே ஒரு பாலம்.

3.16.4. பின்வரும் பணிகள் தொடங்கப்பெற உள்ளன. அவை அனைத்தும் ப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன.

[1982 மார்ச் 13

1. புது பாலங்கள் அமைத்தல்—ஒன்று.

திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் கி.மீ. 5/: பாலம் ஒன்று அமைத்தல்.

2. தற்போதுள்ள இருபாலங்களை திரும்ப அமைத்தல்.

(அ) சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கருகே அமைந்துள்ள பாலத்தின் இரண்டாம் பாதியினை திரும்ப அமைத்தல்.

(ஆ) இராமகிருஷ்ணா மடம் சாலையிலுள்ள பாலத்தை திரும்ப அமைத்தல்.

3.16 5. 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 37.21 இலட்சம் செலவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் மூலம் மேற்சொல்லப் பட்டப் பணிகளை முடிப்பதற்காக ரூ. 34.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.17. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி.

3.17.1. ஆராய்ச்சி என்பது வளர்ச்சிப் பணிக்கு அடிப்படைத் தேவை யாகும். அவைகளை அமைப்பதற்காகும் செலவைக் குறைக்கவும், சாலைகளை அமைக்க உள்ளூரிலே கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களையும் பயன் படுத்தவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறு திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், செலவில் குறைந்த சாலைகளை அமைக்க தகுந்த மற்றும் இடைநிலை சாலை தொழில் நுட்பத்தை உருவாக்க ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிகளின் பலனாக சாலை கட்டுமானப் பணிகளில் பெருமளவிற்கு செலவு குறையும். ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள விலையுயர்ந்த கருவிகள் தேவைப் படுகிறது. எனவே, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்காக பின்வரும் கருவிகள் வாங்குவதற்கு 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 இலட்சம் **மதிப் பீட்டிற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**



1982 மார்ச் 13]

(ஆ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மண் ஆராய்ச்சிக் கூடத்திற்காக தேவைப்படும் கருவிகள்.

(இ) சோதனைக்கான அலுவலர்கள்.

(ஈ) சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள நிர்வாகப் பிரிவிற்கு தேவையான கருவிகள் பொருள்கள்.

3.18. உறுதியற்றனவற்றை உறுதிப்படுத்தல்.

3.18.1. தமிழ்நாட்டிலுள்ள சாலைகளில் நீளமானது மிக மிக அதிகரித்துள்ளது. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும்மாவட்ட பெருஞ்சாலைகளிலுள்ள படுக்கைப் பாலங்களுடன் பல அமைப்பு களும் உறுதியிழந்தவையாகவும் தரமிழந்தனவாகவும் காணப் படுகின்றன. இவை தற்போதைய அனுமதிக்கப்படுகின்ற பளுவின் நிலையைத் தாங்கக்கூடியதாக இல்லை. மேற்படி சாலைகளில் பெரும் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் வருகின்றது. இந்நிலையானது தொழில் வளர்ச் சிக்கு குந்தகமாக உள்ளது. தொழிற்சாலைகளின் **தேவைகளைப்** பூர்த்தி செய்யும் வகையில் உறுதியற்ற அமைப்புகளை திரும்ப அமைத்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் போன்ற பணிகளை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மாநில நெடுஞ்சாலைகளில் உடனடியாக செப்பனிட வேண்டி திரும்ப அமைக்கப்பட வேண்டிய பாலங்களுக்காகவும், படுக்கைப் பாலங் களுக்காகவும் ரூ. 286.13 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. மாவட்டப் பெருஞ்சாலைகளில் உடனடியாக திரும்ப அமைக்கப்பட வேண்டிய பாலங்களுக்காகவும், படுக்கைப் பாலங்களுக்காகவும் செலவாகும் தொகையில் 50 விழுக்காடானது ரூ. 1,059.00 இலட்சம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே, மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் மொத்தத் தொகை ரூ. 1,345.13 இலட்சமாகும். முதல் முறையாக 1982—83 ஆம் ஆண்டிற்காக ரூ. 25 இலட்சம் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

3.19. சாலைப்புற வசதிகள்:—

3.19.1. நெடுஞ்சாலைகளில் செல்லும் லாரிகள் மற்றும் பேருந்துகளில் பயணம் செல்பவர்களுக்கு ஓய்வு விடுதிகள், சிற் றுண்டி சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை அளிக்க வேண்டியது மிக அவசியமாகும். வாகனங்களுக்கு பழுது பார்க்கும் வசதியினை அளிக்க வேண்டியதும் மிக அவசிய மாகும். மேற்படி வசதிகள் இல்லாததால் நெடுஞ்சாலை ஓரத் தில் ஒழுங்கற்ற முறையில் காளான்களைப் போன்று வளரும் அத்தகைய நிலையங்கள் போக்குவரத்து நெருக்கடியினையும் விபத்துக்களையும் தோற்றுவித்து வருகின்றன. முதன் முறை

யாக அரசானது நெடுஞ்சாலைகளில் செல்லும் மோட்டார் மற்றும் பேருந்து ஓட்டுநர்களுக்கும், பயணிகளுக்கும் சாலைப்புற வசதிகள் ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980–85) ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.19.2. 1982–83 ஆம் ஆண்டில் 6 இடங்களில் மேற்படி வசதிகளை அளிப்பதற்காக ரூ. 24.00 இலட்சம் செலவிட இந்த அரசானது முதன் முறையாக இத்திட்டத்தைமேற்கொள்ள உத்தேசித்துள்ளது. (பணிகளின் விவரத்தை தயவு செய்து இணைப்பு 20ல் காண்க).

3.20. ஆய்வுப் பணிகள்.—

3.20.1. மூன்று கோட்டங்களுடன் கூடிய சிறப்பு வட்டம் ஒன்று, எல்லாப் பெருந் திட்டங்கள் பற்றிய ஆய்வுப் பணிகளுக்கும் விரிவான திட்டங்களையும், மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிக்கும் பொறுப்பு வகிக்கின்றது. தேசிய நெடுஞ்சாலைகளைத் தவிர, மாநிலத்திலுள்ள பாலப் பணிகள், முக்கிய சாலைப் பணிகள் அனைத்தையும் குறித்து இவ்வட்டம் தொடக்கத்திலேயே விரிவாக ஆய்வு செய்து கள விவரங்களை சேகரிக்கின்றது. இவை சரியான முறையில் திட்டங்களை வடிவமைப்பதற்கும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. இத்துடன் அரசின் ஏனைய துறைகளான தொழில், வீட்டுவசதி மீன்வளம், வனத்துறை வேளாண்மைத்துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பணிகள் குறித்த ஆய்வு, திட்டங்கள், மதிப்பீடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளை இவ்வட்டம் மேற்கொள்கின்றது.

3.21. வடிவமைப்பு :

3.21.1. முக்கிய பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகளைத் தயாரிக்கும் பொறுப்பை இத்துறையில் உள்ள தனி வட்டம் ஏற்கிறது. பெரிய பாலங்கள், மேம்பாலம், சுரங்கப்பாதை, நீண்டவிட்டமுள்ள முன்னரே வலுவேற்றப்பட்ட சிமிட்டிக் கற்கலவைக் கட்டுமானங்கள் போன்ற சிக்கலான கட்டுமானங்கள்ஆகியவற்றின் வடிவமைப்புகளைத் தயாரித்து தற்போதைய தொழில் நுட்ப உத்தியுடன் இணைக்கும் பணியில் இவ்வட்டம் பெரும்பாலும் ஈடுபடுகிறது. இதன் காரணமாக இப்பணியை நிறைவேற்றுவதற்குச் சிக்கனமான, சிறந்த வடிவமைப்புகள் கிடைக்கின்றன. வலுவற்ற கட்டுமானங்களைக் கண்டறிந்து ஏற்கனவே உள்ள கட்டுமானத்திலுள்ள குறைகளை போக்குவதற்கு அவசியமான செயற்குறிப்பை தயாரிக்கும் பணியையும் இவ்வட்டம் மேற்கொள்கிறது.



(2) ஒப்பந்தக்காரர்களால் கைவிடப்படும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பணிகளின் மதிப்பினை பொருட்படுத்தாமல் ஒப்பந்தப் புள்ளிகள், வரப்பெறாத பணிகளை மேற்கொள்ளுதல்.

6.2. மூலதனம் மற்றும் கடன் அமைப்பு—

6.2.1. மேற்படி கழகத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்ட மூலதனம் ரூ. 1.00 கோடியும் தற்பேதைய கொடுக்கப்பட்ட மூலதனம் ரூ. 46.4 லட்சமும் ஆகும். மொத்த மூலதனமும் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் தமிழக அரசானது நிரந்தரக் கடனாக ரூ. 4.00 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.

6.3. நடவடிக்கைகள் :

6.3.1. இக்கழகம் அமைக்கப்பட்ட உடனேயே அதன் நடவடிக்கைகளை துவக்கி, முதலாண்டின் நடைமுறையில் விலை முக்கியத்துவம் கருதாமல் ரூ. 440.00 இலட்சம் மதிப்புள்ள ஒப்பந்தங்களை பெறமுடிந்தது. பெரும்பாலனவற்றில், பெருத்தப் போட்டிகளுக்கிடையேதான் இக்கழகத்தால் பணிகளை பெற முடிந்தது. எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் வெவ்வேறு மாவட்டங்களில் நீர்ப்பாசனம், கட்டடங்கள், பாலங்கள் மற்றும் மலைப் பகுதி சாலைகள் போன்ற வெவ்வேறு வகையான பணிகளாகும். கையிருப்பில் இருக்கும் ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பு ரூ. 678.00 இலட்சமாகும். (அதன் விவரங்கள் இணைப்பு 21 இல் கொடுக்கப்பட்டுள்ளன).

6.3.2. தேவையான தளவாடங்கள் இயந்திரங்கள் மற்றும் எக்கினாலான பொருட்களை வாங்கி இக்கழகமானது அதன் அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்கின்றது. இக்கழகமானது தரத்துடன் குறைந்த செலவுடன் கூடிய கட்டுமானம் மற்றும் குறித்த காலத்தில் திட்டத்தை நிறைவேற்றுதல் போன்ற முதன்மையான கொள்கைகளை கருத்தில் கொண்டு இயங்கி வருகின்றது. கட்டுமானத் தொழிலில், சிமெண்ட் மற்றும் இதரப் பொருட்கள் பற்றாக்குறை நிலம் கையகப்படுத்துவதில் தாமதம், மற்றும் ஆரம்ப கால இடையூறுகள் போன்ற தொல்லைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில் சந்தித்த போதிலும் ரூ. 177.00 இலட்சம் மதிப்புள்ள 41 ஒப்பந்தங்களை 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் இக்கழகம் முடிக்கத் திட்டமிட்டுள்ளது. (இணைப்பு 22-னைக் காண்க). அத்துடன் ரூ. 124·00 இலட்சம் மதிப்புள்ள ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள 25 பணிகளை செயல்படுத்தியும் வருகின்றது.

ஏற்கெனவே முடிவடைந்த பணிகளாவன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (அ) நாகப்பட்டினத்தில் காவல்துறையினருக்காக குடியிருப்புக்கள் அமைத்தல். | 38.00 |
| (ஆ) மதுரை மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் நீர்ப்பாசன திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல். | 16.00 |
| (இ) மதுரையிலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் அளித்தல். | 21.00 |
| (ஈ) இராமேஸ்வரத்தில் படுக்கைக்கூடம் ஒன்றும் ஆடை மாற்ற அறை ஒன்றும் அமைத்தல். | 2.00 |
| (உ) மதுரையிலுள்ள தமிழ்நாடு பல்துறை பயிற்சி நிலையத்திற்காக கூடுதல் விடுதி கட்டடம் அமைத்தல். | 6.00 |

கையிருப்பிலுள்ள பெருந் திட்டங்கள்.

| | |
|---|---|
| (1) மதுரையில் தல்லா.குளத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் அமைத்தல் | 40.00 |
| (2) சென்னையில் கோட்டூர்புரம் அருகில் டர்ன்புல்ஸ சாலையினையும் கிண்டி பொறியல் கல்லூரியினையும் இணைக்கும் வகையில் அடையாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 85.00 |
| (3) வண்டலூர் மிருகக் காட்சி சாலை வளாகம் (அனைத்து பணிகளும் ரூ. 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ளவை. | |
| (4) சென்னையில் பரங்கிமலை—பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கி.மீ. 2-8ல் அடையாற்றின் குறுக்கே அமைந்துளள பாலத்தை அகலப்படுத்தல். | 61.00 |



| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (5) மதுரை மாவட்டத்தில் தர்மாத்துப்பட்டி—ஆடலூர் மலைப் பகுதி சாலையில் கி.மீ. 6-344லிருந்து 27-834 வரையிலான பகுதியை மேம்படுத்துதல். | 39.00 |
| (6) தே. நெ. 7-ல் கி. மீ. 301—2-ல் அமராவதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பெரும் பாலத்தைத் திரும்ப அமைத்தல் மற்றும் அப்பாலத்திற்கு அணுகு சாலைகளும் கரூரைச் சுற்றி மாற்றுப் பாதையும் அமைத்தல். | 93.00 |
| (7) குண்ணாண்டார் கோயில், குப்பம்பட்டி அச்சம்பட்டி மற்றும் செங்கிப் பட்டி வரையிலும் சாலையினை கல் பரப்புதல் முதலான மேம்பாட்டுப் பணிகள் செய்தல் அத்துடன் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள விடுபட்ட இணைப்புகளை மேம்படுத்துதல். | 26.00 |
| (8) மறைமலை நகரில் குறைந்த வருமானப் பிரிவினருக்காக 126 வீடுகளைக் கட்டுதல். | 20.00 |

இக்கழகமானது அதிகத்தரமான பணிகளைக் குறித்த காலத்தில் முடித்து திடமான வளர்ச்சியினைக் காண திட்டமிட்டுளளது.

**6.5. ஊனமுற்றோருக்கு ஆதரவளித்தல் :**

6.5.1. ஊனமுற்றோர்களால் நடத்தப்பட்டும் நிர்வகிக்கப் பட்டும் வரும் இரண்டு நிலையங்களிலிருந்து தட்டுமுட்டுப் பொருட்கள் எஃகாலான கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றை வாங்குவதன் மூலம் இக்கழகமானது சமூகத்தில் நலிந்த பிரி வினருக்கு ஆதரவளித்து வருகின்றது.

**6.6. பணியாளர்கள் :**

6.6.1. இக்கழகத்தில் தற்போது 40 தொழில நுட்பப் பணியாளர்களும் 64 கணக்கு மற்றும் நிர்வாகப் பணியாளர் களும் ஆக மொத்தம் 104 பேர் பணி புரிந்து வருகின்றனர். அது மட்டுமல்லாமல் சிறப்பாக ஊரகப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான திறமை வாய்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப் பினை அளித்து வருதலால் தகுதி வாய்ந்த தொழில் நுட்ப பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இக் கழகமானது துவங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 16.3 விழுக் காடு 'போனஸ்' அளித்துள்ளது.

**6.7. பயிற்சி :**

6.7.1. இக்கழகமானது அதன் அலுவலர்களையும் ஊழியர் களையும் பல்வேறு வகையான பயிற்சிகளைப் பெறும் பொருட்டு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி கருத்தரங்கு களுக்கு அனுப்பி வருகின்றது. இக்கழகமானது அதனிடமிருந்து எதிர் பார்க்கும் சேவைகளை நிறைவேற்றி வருகின்றது.

**7.1. தேசிய நெடுஞ்சாலை :—**

7.1.1. தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு 1971 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டுத் தனித் தலைமைப் பொறி யாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் மத்திய சாலை நிதித் திட்டங்களையும் கவனித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் மத்திய அரசுத் துறை திட்டங்களாகும். இவற்றிற்கு மத்திய அரசு முழு நிதி உதவி அளிக்கிறது.

**7.2. மத்திய சாலை நிதித் திட்டம் :—**

7.2.1. ''மத்திய சாலை நிதி'' காலம் கடந்து போகாத பாகும். மோட்டார் எண்ணெய்க்கு லிட்டர் 1-க்கு 3.5 வீதம் விதிக்கப்படும் சுங்க ஆயத்தீர்வையின் மூலம் இந்த வருவாய் கிடைக்கிறது. இம்மாதிரி கிடைக் வசூலில் 80 சத விகிதம் இத்திட்டத்தின் கீ



கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்காகும் செலவுகளை சரிக் கட்டுவதற்காக மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சத விகிதத்தை ''சேமத் தொகை''யாக மத்திய அரசு வைத்து வருகிறது.

7.2.2. திருத்தி அமைக்கப்பட்ட முறையின்படி சாலைகள் பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சித் திட்டங்கள் போக்குவரத்து ஆய்வுகள் பொருளாதார ஆய்வுகள், இளம் பொறியாளர்கள் பயிற்சித் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும் வாகனங்களில் வருவோர் தங்குவதற்கான விடுதிகள் போன்ற வழியோர வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அதிக முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது.

**7.3. நான்காவது திட்டம் (1969–74) :**

7.3.1. நான்காவது திட்டக் காலத்தில் 16 வேலைகள் ரூபாய் 4,70.79 இலட்சத்திற்கு மத்திய அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 14 வேலைகள் இதுவரை முடிக்கப்பட்டு விட்டன. அடியிற் குறிப்பிட்டுள்ள இரண்டு வேலைகள் நடை பெறுகின்றன.

(1) வாணியம்பாடிக்கும் ஜாப்பராபாத்திற்கும் இடையே பாலாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் மற்றும் வளத்திகமன பண்டாவிற்கும் ஆந்திர மாநில எல்லைக்குச் செல்லும் சாலைகளை மேம்பாடு செய்தல் (ரூபாய் 65.23 இலட்சம்).

அணுகு சாலையில் 300 மீட்டர் நீள சிறு பகுதி நிலத்தைக் கையகப்படுத்தல் நீங்கலாக மற்ற எல்லா வேலைகளும் முடிந்து விட்டன.

(2) ரூபாய் 7.70 இலட்சம் செலவில் வலுவிழந்த மற்றும் பழைய பாலங்களை சோதனை செய்ய ஒரு சோதனை வண்டி தயார் செய்யப்பட்டு வருகிறது. இது 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தயார் செய்யப்பட்டு விடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

7.3.2. நான்காவது திட்டக் காலத்தில் ரூபாய் 2,24.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**7.4. ஐந்தாவது திட்டம் (1974— 78) :**

7 4.1. ஐந்தாவது திட்டக் காலத்தில் 13 வேலைகாக ரூபாய் 314.51 இலட்சங்கள் மதிப்பீடு அளவில் மத்திய தில் அனுமதி அளித்தது.

[1982 மார்ச் 1

இவற்றுள் பாலாற்றின் குறுக்கே கிர்க கண்டிக்கு அருகில தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில எல்லையில் பாலம் கட்டும் ஒரு பணி கர்நாடக மாநிலத்தால் செயலாக்கப்பட இருக்கிறது. இப்பணிக்கான செலவுகளை இரு மாநில அரசுகளும் சமமாக ஏற்க இருக்கின்றன. தமிழக அரசின பங்கு செலுத்தப்பட்டுவிட்டது.

7.4.2. குருபகவுண்டன் ஆரியகவுண்டன் ஜாகிர் வழியாக இளக்காட்டு ரங்கப்பரை இணைக்கும் ஜீப் செல்லும் பாதை அமைக்கும் பணி ரூபாய் 53 இலட்சம் செலவில் நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. ரூபாய் 65 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது. வேலை நடைபெற்று கொண்டு வருகிறது.

7.4.3. அருள்மிகு கோதண்ட இராமசாமி கோவிலிலிருந்து தேசிய நெடுஞ்சாலை 49-ஐ (மதுரை-தனுஷ்கோடி சாலை) இணைக்கும் சாலை அமைக்கும் பணி முடிந்து விட்டது. மீதமுள்ள பத்து வேலைகள் பலவேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

7.4.4. ஐந்தாவது திட்டக்காலத்தில் ரூபாய் 2,66·31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

7.4.5. 1978–80 வருடாந்திர திட்டக் காலங்களில் புதிய வேலைகள் ஒன்றும் அங்கீகரிக்கப்படவில்லை முந்திய திட்டக் காலததில் அங்கீகரிக்கப்பட்டு நடைபெற்று வரும் வேலைகளுக்காக இவ்விரு ஆண்டுகளிலும் ரூபாய் 1,09·23 இலட்சம் செலவிடப்பட்டுளளது.

7.5 ஆறாவது திட்டம் (1980–85):

7.5.1. ஆறாவது திட்டத்தில் ரூ. 1,54.80 இலட்சத்திற்கு 8 பணிகளை மத்திய அரசு அனுமதித்துள்ளது. சம பங்கு உதவியின் கீழ் மாநில அரசு பங்கு தொகை ரூ. 35 இலட்சம் மத்திய சாலை நிதியிலிருந்து கொடுக்க ஒப்புக் கொண்டு 4 பணிகள் ரூ. 70 இலட்சத்திற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளன.

7.5.2. தமிழ்நாட்டில் வட்டார ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவ ரூ. 2.25 இலட்சத்தையும் மேலும் அந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு நடவடிக்கைகளை பெருக்குவதற்காக ரூ. 4 இலட்சமும் மத்தியசாலை (சாதாரண) சேமநிதியிலிருந்து மத்திய அரசு கொடுத்துள்ளது. மதுரையில் வட்டார ஆய்வுக் கூடம் வீதவ சரிபங்கான தொகையை மாநில சொந்த வருவாயிலிருந்து கொடுப்பது சம்மந்தமான செயல் குறிப்பு அரசின் பரிவலையில் உள்ளது.



1982 மார்ச் 13]

7.5.3. தமிழ்நாட்டில் உள்ள ஆய்வுக் கூடங்களில் சோதனைக்கூட வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டத்திற்கு ரூ. 8 இலட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு பாதித் தொகையை ஏற்கும்.

7.5.4. நான்காவது மற்றும் ஐந்தாவது திட்டக்காலங்களில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வருகின்ற பணிகளின் பட்டியல் இணைப்பு (23) மற்றும் (24)-ல் காணலாம். ஆறாவது திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியல் இணப்பு (25)ல் கொடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர 1960-ம் ஆண்டு முதல் 1981-ம் ஆண்டு வரைக்கான இடைபட்ட காலத்தின் சாதனையை (செலவினம் மற்றும் செய்துள்ள பணிகள்) காட்டும் அட்டவணையும் இணைப்பு (26)ல் உள்ளது.

7.5.5. 1981–82-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 41.49 இலட்சம். 1982–83-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 37.81 இலட்சம்.

7.6. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் :

7.6.1. தமிழ்நாட்டில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957-ல் நிறுவப்பட்டது. இது கடந்த 24 ஆண்டுகளாக நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறை மற்றும் அண்டை மாநிலங்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளது. இது நமது நாட்டின் தெற்கு வட்டாரங்களில் வட்டார சோதனை மற்றும் ஆராய்ச்சி ஆய்வுக்கூட நிலைக்கு உயர்ந்துள்ளது. நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள் பொறியியல் தொடர்பான துணைத் துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெறுவதற்கு சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. இது போன்று பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகமும் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த நிலையம் ஆற்றிவரும் சிறப்பு மிக்க தொண்டினை ஏற்றுக்கொண்ட வகையிலும் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருதியும் இந்நிலைய நிர்வாகியின் பதவி தலைமைப் பொறியாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

7.6.2. இந்நிலையம் செயலாற்றிவரும் சில முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

7.6.2.1. ஆராய்ச்சிக்காகவும் புதிய உத்திகளையும் நவீன சாலை அமைப்பு வழிகளையும் புகுத்தி பல்வேறு மணதரத்திற்கேற்ப சாலை அமைப்பு முறைகளைப் போக்குவரத்து நிலைக்கேற்ப கையாள சோதனைகள் செய்யும் அடிப்படைக்களமாக [illegible]ண்டாற்ற ஒரு சோதனைப்பாதை ரூ. 22 இலட்சத்தில் [illegible]ப்பட்டு வருகிறது.

[1982 மார்ச் 13

7.6.2.2. பாலங்களின் பளுதாங்கும் திறனைச் சோதனை செய்வதற்காக 120 டன் செயல் திறன் கொண்ட ஒரு சோதனை வண்டி தயாராகிக்கொண்டிருக்கிறது.

7.6.2.3 நெய்வேலி லிக்னைட்டிலிருந்து தார் தயாரிக்க ஒரு நாளைக்கு ஒரு டன் கொள்ளளவு கொண்ட மாதிரி சாதனம் ஒன்று நிறுவப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. விரைவில் அது செயலபடத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7.6.3. மத்திய அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்ற ஆராய்ச்சித் திட்டங்கள் இந்நிலையத்தால் மேற்கொள்ளப் பட்டவை இணைப்பு 27-ல் கொடுககப்பட்டுள்ளன.

## 8. பாம்பன் பாலத் திட்டம்.

### 8.1. பொது :

தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவுக்கருகில் 49 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையில் பாம்பன் ஜலச்சந்திக்குக் குறுக்கே உயர்மட்ட சாலைப்பாலம் ஒன்றை ரூ. 5,32.87 இலட்சம் செலவில் கட்ட மத்திய அரசு 1973 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அனுமதி வழங்கியது. இந்தப் பாலத்திற்கு இரு பக்கங்களிலும் அணுகு சாலைகளை அமைப்பதற்காகும் செலவு ரூ. 51.01 இலட்சமும் இதில் அடங்கும். இப்பாலம் தேசிய நெடுஞ் சாலையில் அமைவதால் மத்திய அரசு இப்பணிக்கு நிதியுதவி அளிப்பதுடன் செலவு முழுவதையும் தனது பொறுப்பில் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசின் சார்பில் மாநில அரசு இப்பணியை நிறைவேற்றி வருகிறது. இயற்கையின் சீற்றங் களை எதிர்த்தும், உவர்மண் அதிகமாகப் படிந்திருக்கும் நிலை யிலும் கடலின் குறுக்கே இப்பாலம் கட்டப்படுவதால் இந்தியா வில் இவ்வகைப் பாலங்களுள் இதுவே முதலாவதாகும்.

### 8.2. முக்கியக் கூறுகள்.

8.2.1. மேற்சொன்ன பாலத்தில் ஒவ்வொன்றும் 27.13 மீட்டர் அகலமுள்ள 76 கணகள் உள்ளன. பாலத்தின் மத்தி யில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 115.21 மீட்டர் அகலமுள்ள ஒரு கண்ணும் அதன் இருபுறமும் ஒவ்வொன்றும். 68.50 மீட்டர் அகலமுள்ள இரு கண்களும் அமைந்துள்ளன. (இப்பாலத்தில் மொத்தம் 79 கண்கள் உள்ளன) கப்பல் போக்குவரத்துக்காக, மண்டபம் பக்கம் உள்ள கண்களில் 1 சதவிகிதம் சாய்வுடனும், பாம்பன் பகக கண்களில் 2 சதவிகித சாய்வுடனும் கப்பல் போக்குவரத்துக்காக உள்ள கண்களில் கீழ்மட்டம், கடல் பொங்கும் அலை உயர்மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் உயரத்தில் கப்பல்கள் எளிதாக கடக்க இயலும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.



1982 மார்ச் 13]

### 8.3. முக்கிய பாலம் :

8.3.1. இப்பால வேலையின் ஒப்பந்தம் திருவாளர்கள் நீலகண்டன் அண்டு பிரதர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு 1974 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், 10 ஆம் நாள் அன்று முடிவாகியது. ஒப்பந்தப்படி ஒப்பந்தக்காரர்கள் பால வேலையை 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் அன்று முடித்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பந்தக் காரர்கள் வேலையில் முன்னேற்றத்தை காட்டத்தவறி, இறுதியாக வேலையின் முன்னேற்றம் 36 விழுக்காடுகள் இருந்த போது, ஒப்பந்த கால நீட்டிப்பு தருணத்தில் 1979 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து அனைத்து வேலை களையும் நிறுத்தி விட்டனர். ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து வேலையில் முன்னேற்றத்தைக் காட்டத் தவறியதாலும் ஒப்பந்த விதிகளின்படி நடத்தத் தவறியதாலும் அவர்களது ஒப்பந்தம் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் அன்று முழுவதுமாக ரத்து செய்யப்பட்டது.

8.3.2. ஒப்பந்தக்காரர்கள் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள் அன்று, நடுவரை மாற்றக் கோரியும் மற்ற சில சலுகைகள் கோரியும், சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு விசாரணைக்கு இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனினும் மீதியுள்ள வேலை களை முடிக்க ஒப்பந்தங்கள் கோருவதற்கு உயர் நீதி மன்றம் இத்துறைக்கு அனுமதி அளித்துள்ளது. மீதமுள்ள வேலைகளை முடிக்க எந்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் முடிவாகிறதோ அந்த ஒப்பந்தக்காரரின் பெயரை உயர் நீதி மன்றத்தில் பதிவு செய்வதற்குத் தெரிவிக்கும் படியும் உயர் நீதி மன்றம் கோரி யுள்ளது. இதன்படி ஒப்பந்தம் கோர விரும்பும் ஒப்பந்தக்காரர் களிடமிருந்து முன் தகுதிக்கான விண்ணப்பங்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிக்கப்பட்டது. மீதமுள்ள வேலை களுக்கான ஒப்பந்தம் கோருவதற்குத் துறையின் ஒப்பந்த ஆவணம் மத்திய அரசின் கருத்துரையின்படி, திருத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது. துறையின் ஒப்பந்த ஆவணம் இறுதியாக்கப்பட்ட டன் மீதி வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணி படைக்கப்படும்.

[1982 மார்ச் 13

8.3.3. இதற்கிடையில் ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்படும் காலம் வரை, கீழ்க்கண்ட வேலைகளைத் துறையினராலும், சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் செய்வதற்காக உயர் நீதி மன்றத்தை அணுகி 1981-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

1. ஏற்கெனவே முடிக்கப்பட்டு பால வேலை இடத்தில் இருக்கின்ற கான்கிரீட் விட்டங்களைத் தூண்களின் மேல் பொருத்துதல.

2. முன்கூட்டியே வலுவேற்றப்பட்ட கான்கிரீட் விட்டங்களை மேல் வார்த்தல்.

3. பாம்பன் பகுதி சார்பு சுவற்றின் பின்புறத்தை நிரப்புதலும், முன்புறப் பாதுகாப்பு வேலைகளை நிறைவேற்றுதலும்.

8.3.4. இதன்படி, மேற்படி வேலைகளைத் துறையினராலும் சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வேலைகளைச் செய்வதற்காக, ஆட்கள் மற்றும் தளவாடங்கள் சேகரிக்கப்பட்டு, தேவைப்படும் இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டன. இதுகாறும் எட்டு விட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு விட்டங்கள் வார்க்கப்பட்டுள்ளன. மேலும் விட்டங்கள் வார்க்கும் வேலையும் விட்டங்களைத் தூண்களின் மேல் பொருத்தும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. பாம்பன் பகுதி சார்பு சுவற்றின் பின்புறத்தை நிரப்புவதற்கும் முன்புற பாதுகாப்பு வேலைகளை முடிப்பதற்கும் ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு இவ்வேலையை முடிப்பதற்கு மத்திய அரசின் தொழில் நுட்ப ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் பாம்பன் பகுதியில் சில தூண்களுக்கான அடித்தள வேலைகளைத் துறையின் மூலமாகவே செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

8.4. அணுகு சாலைகள் :

பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலைகள் அமைக்கும் பணி பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பல ஒப்பந்தக்காரர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சாலையின் மொத்த நீளமான 8 கி. மீட்டரில் 5'5 கிலோ மீட்டரில் தார் மேற்பரப்பு வேலை உள்பட எல்லா சாலை அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில், இரயில்வே துறையின் நிலங்களும் கட்டிடங்களும் அமைந்துள்ளதால் அவற்றின் நில ஆர்ஜிதம் அண்மையில் தான் இறுதியாக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.



1982 மார்ச் 13]

8.5. செலவு விவரங்கள் :

8.5.1. பாம்பன் பால திட்ட வேலைக்கு 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் தேதி முடிய செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபாய் 456'42 இலட்சம் ஆகும். 1981–1982ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டான ரூபாய் 75·00 இலட்சத்தில் திருத்திய மதிப்பீடு மற்றும் இறுதி மாற்று ஒதுக்கீட்டில் ரூபாய் 25'00 இலட்சங்கள் கோரப்பட்டது. 1981-82-இல் 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி முடிய செலவிடப்பட்ட தொகை ரூபாய் 8'38 இலட்சம் ஆகும்,

1982-83-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கை ரூபாய் 75'00 இலட்சம் ஆகும்.

9. பொருளாதார மற்றும் பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த பணிகள்.

9.1 முன்னுரை.

பொருளாதார மற்றும் பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் மற்றும் பாலங்களை அமைக்கும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளிக்கிறது. பல மாநிலத் தொடர்பு முக்கியத்துவம் வாய்ந்த சாலை, பாலப் பணிகளுக்காக மத்திய அரசு முழுக்கடனுதவி அளிக்கிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலை, பாலப் பணிகளுக்காகும் செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாக ஏற்கின்றன.

9.1.1. கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சாலை பால வேலைகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுவதற்கு தகுதியுடையவையாகும்.

1. போக்குவரத்திற்கு அவசியமாயிருக்கின்ற பல மாநிலத் தொடர்பு வாய்ந்த சாலைகள்.

2. அண்மைக்காலத்திற்குள் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத புதிய பகுதிகளில் புறப்பகுதிகளை இணைக்கும் சாலைகள், பாலங்கள்.

3. அதிகமான கனிவளம், மலைத் தோட்டம் மிக்க மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக உதவக்கூடிய சாலைகளும் பாலங்களும்.

[1982 மார்ச் 13

9.2. சாதனைகள் :

9.2.1. நான்காம் திட்டக் காலத்தில் (1969-74) கிழக்குக் கடற்கரைச் சாலையில் ரூபாய் 401·20 இலட்சம் செலவில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அப்பணிகளுக்காக ரூபாய் 261·00 இலட்சம் கடனுதவியும் அளித்துள்ளது. இப்பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இதைத் தவிர, ஐந்தாம் திட்ட காலத்தில் (1974-79) இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 60·00 இலட்சம் செலவில் இரண்டு பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மேற்சொன்ன பணிகளுடன் "திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை—துறையூர் சாலையில் முசிறியையும் குளித்தலையையும் இணைத்து" காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை (தந்தை பெரியார் பாலம்) கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. நான்காம் மற்றும் ஐந்தாவது திட்டப் பணிகளின் கீழ் இப்பணியைச் சேர்த்துக் கொள்ளும்படி மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, இப்பணி மாநில நிதியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது. மேற்சொன்ன தந்தை பெரியார் பாலத்தில் மின் விளக்குகள் பொருத்தும் வேலையும் முடிக்கப்பட்டு விட்டன.

9.2.2. தற்போது இத்திட்டத்தின் கீழ் 1982-83-ஆம் ஆண்டில் செய்வதற்கு எஞ்சியுள்ள வேலைகள் ஏதும் இல்லை.

9.3. புதிய செயற்குறிப்பு :

9.3.1. கிழக்குக் கடற்கரைச் சாலையில் நாகப்பட்டினத்திலிருந்து கன்னியாகுமரி வரை சில பகுதிகளில் சாலையை ரூபாய் 4·00 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்வதற்கு ஒரு திட்டம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இப்பணியை பல மாநிலத் தொடர்பு முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் மத்திய அரசின் முழுக் கடனுதவியுடன் செயல்படுத்த மத்திய அரசு வற்புறுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இப்பணியை செயல்படுத்த ஆவன செய்யப்படும்.



1982 மார்ச் 13]

10. நிவாரணப் பணிகள்.

10.1. 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலும், 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளிலும் புயலாலும் பெருமழையாலும் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களை மட்டுமே கவனித்து வெள்ள நிவாரணப் பணிகளாற்றிட நெடுஞ்சாலை ஊரகப்பணித் துறையின் ஒரு தனிப் பிரிவு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சிறப்பு தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக உருவாக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாகப் பருவமழை பெய்யத் தவறியதால் கடுமையான வறட்சி ஏற்பட்டது. எனவே, பெருமளவில் வறட்சி நிவாரணத் திட்ட வேலைகளைக் கவனிக்க 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் இப்பிரிவினை "நிவாரணப் பணிகள் பிரிவு" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முந்தைய காலங்களில் இது போன்ற நிவாரணப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுத்து வந்ததற்கு மாறாக, அரசின் நேரடி நிவாரணப் பணிகளாகச் செயலாற்றிட இத்துறையிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும்.

வறட்சி நிவாரணப் பணிகள்.

10.2. வறட்சி நிவாரண வேலைகளாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலை வேலைகள் மற்றும் 50 ஏக்கருக்குக் குறைவாகப் பாசன ஆயக்கட்டுகளைக் கொண்ட சிறு பாசனக் குளங்களைச் செப்பனிடும் வேலைகள் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டன. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 883.09 இலட்சம். இதில் புதிய சாலைகள் அமைத்தல், சிறு மதகுகள் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல், சாலைகளுக்கு செம்மண் பரப்புதல் மற்றும் சரளைக் கற்கள் பரப்புதல் போன்ற வேலைகளுக்காக ரூ. 320.55 இலட்சமும்; சிறு பாசன குளங்களை தூர் எடுத்தல் கரைகளைப் பலப்படுத்துதல், மடைகளைச் செப்பனிடுதல் போன்ற வேலைகளுக்காக ரூ. 562.54 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 13

10.3. இந்த வறட்சி நிவாரணத் திட்டச்சாலை வேலைகளுக்காக ரூ. 300 இலட்சமும், சிறுபாசனக் குள வேலைகளுக்காக ரூ. 460 இலட்சமும் முறையே மைய அரசு நிதி உதவி செய்துள்ளது.

10.4. அரசு சாலைகளுக்காக ரூ. 303 இலட்சமும், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேருந்து மார்க்க சாலைகளுக்கு ரூ. 55 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. (இணைப்பு 28 29-ஐப் பார்க்கவும்).

10.5. வறட்சியால் பாதிக்கப்பட்ட பதின்மூன்று மாவட்டங்களில் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் பயனுறும் வண்ணம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, எவ்வளவு அதிகமான மக்கள் பயனடைய முடியுமோ அவ்வளவு கிராமங்கள் பயன் பெறும் வகையில் வறட்சித் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் மூலம் இயற்கையின் சீற்றத்தினால் எளிதில் அழிக்க முடியாத வண்ணம் சிறுபாலங்கள், மதகுகள் அமைத்தல், எப்பருவத்திற்கும் உகந்த சாலைகள் அமைத்தல் மற்றும் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த கூடுதல் நீர்வடியும் கலங்கல்கள், ஏரி மதகுகள் போன்றவற்றை திருத்தியமைத்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. இப் பணிகள் யாவையும் உள்ளூர் ஆயக்கட்டுதாரர்களைக் கொண்டு இத்திட்டத்தில் கிராம மக்கள் நேரிடையாகப் பங்கு பெற்று சிறப்பிக்கும் வகையிலும் நிறைவேற்றப்பட்டது. இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது ஒன்றாகும்.

10.6. மைய அரசின் நிதி உதவியினை முழுமையாகப் பெறும் வகையில் வறட்சித்துயர் துடைப்புப் பணிகள், 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் துவக்கி செப்டம்பர் திங்களில் முழுத் தொகையையும் செலவிட்டு பணிகளை நிறைவேற்றியது மற்றொரு முக்கிய அம்சமாகும். இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வேலைகளுக்கான இறுதிக் கணக்குப் பட்டியல் தயாரிக்கவும் ; முடிவு அறிக்கைகள் தயாரிக்கவும் வசதியாக 31-3-1982 வரை இப்பிரிவு தொடர்ந்து இயங்கவும், இப் பணிகளுக்கான கணக்குப் பதிவேடுகளைச் செம்மையாக வைத் திருக்க அவ்வப்போது தனி தணிக்கைக் குழு, அனைத்து கணக்குகளையும் தணிக்கை செய்து வதந்ததையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும்.



1982 மார்ச் 13]

10.7. இத்திட்டத்தைச் செயல்படுத்தியதால் ஏற்பட்ட நன்மைகளாவன :

(1) தமிழ்நாடு முழுவதுமாக 1.12 கோடி மனித சக்தி நாட்களில் 15,94,747 பேர் வேலை வாய்ப்பைப் பெற்று பயனடைந்தனர்.

(2) 1,69,178 ஏக்கர் நிலப்பரப்பு நிரந்தரமாகப் பயனடையும் வண்ணம் 7,004 சிறுபாசனக் குளங்களைத் தூர் எடுத்து, ஆழப்படுத்தி இனி வரும் காலங்களில் பெய்யும் மழையினால் அதிக அளவில் நீர் பிடிப்பு செய்ய வசதியாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

(3) தண்ணீர் வீணாகாமல் சமமாகப் பகிர்ந்து கொடுக்கும் வகையில் 380 மதகுகள்/உபரி நீர்வடியும் கலங்கல்கள் திருத்தி அமைக்கப்பட்டன.

(4) சாலை வசதியே இல்லாத கிராமங்களுக்கு சாலை அமைத்து, வருங்காலங்களில் இச்சாலைகளை வேறு எந்தத் திட்டத்திலாவது மேம்பாடு அடையச் செய்யும் வண்ணம் 1,530 கிலோமீட்டர் நீளம் கொண்ட 1,214 சாலைகள் புதியதாக அமைக்கப்பட்டன.

(5) தங்கு தடையின்றி எளிதாக போக்குவரத்து அமையும் வண்ணம் 680 கிலோ மீட்டர் நீளம் கொண்ட 507 சாலைகள் செம்மண் பரப்பி மேம்படுத்தப்பட்டுள்ளன.

(6) ஒருங்கிணைந்த இத்திட்டத்தில் உள்ளூர் ஆயக்கட்டு தாரர்களையும் பொதுமக்களையும் பெருமளவில் ஈடுபடுத்தி இப்பணிகளைச் செயல்படுத்தியதன் மூலம் மக்கள் மத்தியில் இயற் கையின் சீற்றத்தால் பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் தகுந்த உதவியை சிறிதும் தயங்காமல் அரசு செய்யும் என்ற நம் பிக்கை ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக இத்துறை அலுவலர் களும் கிராம மக்களுடன் ஒருங்கிணைந்து ஊக்கமுடன் செய லாற்ற முடிந்தது.

10.8. இப்பணிகளுக்காக செலவிடப்பட்ட செலவினையும், வேலைகளின் முடிவுற்றதன்மையினையும் மாவட்டவாரியாக இத னுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 30 (அ) மற்றும் 30 (ஆ) வில் காணலாம்.

10.9. வெள்ள நிவாரண வேலைகள் :

வறட்சித்துயர் துடைப்புப் பணிகளை முடித்தவுடன் சற்றுக் குறைந்த அளவில் அலுவலர்களைக் கொண்டு 30-11-1981 முதல் முடிவுறாமல் இருந்த வெள்ளப்பாழ் நிவாரண வேலைகளை

31–3–1982க்குள்ளாக முடிக்கும் வகையில் முனைப்பாக இத் துறை செயல்பட்டு வருகின்றது. எனவே, இப்பிரிவு 31–3–1982 வரை செயல்பட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

10.10. இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் அரசு சாலைகள் தலைப்பில் 10,559 வேலைகள் மேற்கொள்ளப்பட்டதில் 10,532 வேலைகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 21 வேலைகள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும்.

10.11. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலை வேலைகளாக 17,502 வேலைகள் மேற்கொள்ளப்பட்டதில் 17,482 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 16 வேலைகள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும்.

10.12. சிறுபாசனக் குளங்களைச் செப்பனிடும் வகையில் 10,085 வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

10.13. இதேபோன்று 2,688 கட்டடங்கள் கட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து வேலைகளும் முடிக்கப் பட்டுள்ளன.

10.14. ரூ. 1·00 இலட்சமும் அதற்கு மேலாக மதிப்பீடுகள் கொண்ட 152 பால வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 9 பாலங்களைத் தவிர எஞ்சியுள்ள பால வேலைகள் அனைத்தும் 31–3–1982-க்குள்ளாக திட்ட மிட்டுள்ளபடி முடிக்கப்படும்.

10.15. கடந்த ஆண்டுகள் போலவே 1980 ஆம் ஆண்டிலும் தென்மேற்கு பருவமழையினால் நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவுகள் ஏற்பட்டதை அனைவரும் அறிவர். இதற்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு இவ்வாண்டு ரூ. 15.43 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இந்த நிவாரணப் பணிகளையும் இத்தனிப்பிரிவு மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது. இதில் ஒரு பால வேலையைத் தவிர மற்ற வேலைகள் யாவும் 31–3–1982-க்குள் முடிக்கப்படும்.

10.16. 1977 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட வெள்ளப் பாழ் நிவாரண வேலைகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்த ரூ. 39.93 கோடி மொத்த தொகையில், அரசு சாலைகள் ; ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலை வேலைகள் ; கட்டடங்கள் ; சிறு பாசனக் குளங்கள் ஆகியவற்றிற்காக ரூ. 39.58 கோடி இது வரை செலவிடப்பட்டுள்ளன. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ந் தேதிக்குள் மேலும் 33 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டு விடும். வரும் நிதியாண்டில் எஞ்சியுள்ள 10 வேலைகளை முடித்திட குறைந்தபட்ச தொகையாக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.



10.17. மாவட்ட வாரியாக வெள்ளப்பாழ் நிவாரண வேலைகளின் முடிவுற்ற தன்மையையும், செலவிடப்பட்ட தொகையினையும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 31 (அ) மற்றும் 31 (ஆ) வில் காணலாம்.

சென்னை-9,
13—3—1982.

ப. குழந்தைவேலு,
உள்ளாட்சித்துறை அமைச்சர்.

இணைப்பு 1.—தொடர்ச்சி.

(பத்தி 2.4.3-ஐப் பார்க்கவும்)

தன்னிறைவுத் திட்டம்.—தொடர்ச்சி.

| வரிசை எண். | திட்டங்கள் | 1981-82 — 69. தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டவை. எண்ணிக்கை. | நீளம் (கி. மீ.) | ஒதுக்கீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | இணைப்புச் சாலைகள் .. .. | .. | 11,684.55 | 2,680.49 |
| 2 | சுடுகாட்டிற்கான பாதைகள் .. .. | | 1,269.95 | 53.22 |
| 3 | சிறு பாசனங்கள். .. .. .. | 10,539 | .. | 1,451.65 |
| 4 | பள்ளி கட்டிடங்கள் .. .. .. | 1,808 | .. | 908.23 |
| 5 | சிறு பாசனங்கள் .. .. .. | 1,250 | .. | 59.31 |
| 6 | பிரசவம் மற்றும் குழந்தைகள் நல விடுதி | 499 | .. | 265.42 |
| 7 | ஊரக மருந்தகங்கள் .. .. .. | 169 | | 109.50 |
| | மொத்தம் | 14,265 | 12,954.50 | 5,527.82 |



இணைப்பு 1—தொடர்ச்சி.

(பத்தி 2.4.3.-ஐப் பார்க்கவும்)

தன்னிறைவுத் திட்டம்.

| திட்டங்கள். | 1980-81 — 69. தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டவை. எண்ணிக்கை. | நீளம். (கி. மீ.) | மொத்த மூலதனம் |
|---|---|---|---|
| (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| இணைப்புச் சாலைகள் .. .. .. | .. | 6,542.00 | 1,220.52 |
| சுடுகாட்டிற்கான பாதைகள் .. | .. | 927.71 | 83.52 |
| சிறு பாலங்கள் .. .. .. .. | 3,030 | .. | 348.14 |
| பள்ளி கட்டிடங்கள் .. .. .. | 937 | .. | 487.92 |
| சிறு பாசனம் .. .. .. .. | 1,023 | .. | 68.88 |
| பிரசவம் மற்றும் குழந்தைகள் நல விடுதி | 236 | .. | 118.18 |
| ஊரக மருந்தகங்கள் .. .. .. | 82 | .. | 48.22 |
| மொத்தம் .. | 5,308 | 7,469.71 | 2,369.38 |

## இணைப்பு 2

(பத்தி 3.1.3-ஐப் பார்க்கவும்)

**தேசிய நெடுஞ்சாலையின் (நகர்ப்புறம்) கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.**

| வரிசை எண்ணும் மாவட்டம். (1) | | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. செங்கற்பட்டு | .. | சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் (தே. நெ. 45) செங்கற்பட்டு நகராட்சி எல்லைக் குட்பட்ட பகுதியான கி.மீ. 54/4—58/8-ற்கு கடின அடித்தளம் மற்றும் மேற் பரப்பினை அளித்தல் மற்றும் மேம்படுத்துதல். | 3.75 |
| 2. செங்கற்பட்டு | .. | ஜி.எஸ்.டி. சாலையில் (தே. நெ. 45) கி.மீ. 26/2-4 வரையிலான பகுதியில் பார வண்டிகள் நிற்பதற்கான பாதையினை அமைத்தல். | 3.50 |
| 3. வட ஆற்காடு | | தேசிய நெடுஞ்சாலை எண். 46-ல் கி.மீ. 68/8-ல் ஆம்பூர் நகராட்சி எல்லைக்குள் பாலம் அமைத்தல். | 10.00 |
| 4. தென் ஆற்காடு | .. | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குள் சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் (தே. நெ. 45) கி.மீ. 123/4-ல் அமைந்திருக்கும் பாலத்தினை திரும்ப அமைத்தல். | 2,50 |



| | | | |
|---|---|---|---|
| 5. ராமநாதபுரம் | .. | விருதுநகர் நகராட்சி எல்லைக்குள் பனாரஸ்—கன்னியாகுமரி சாலையில் (தே. நெ. 7) கி. மீ. 42/4-45/6 வரையிலான பகுதிக்கு கடின அடித்தளமும் மேற்பரப்பும் அளிப்ப துடன் அச்சாலையினை மேம்படுத்துதல். | 1.50 |
| 6. திருநெல்வேலி | .. | பாளையங்கோட்டை நகராட்சி எல்லைக்குள் பாளையங்கோட்டை—தூத்துக்குடி சாலை யில் (தே. நெ. 7ஏ) கி.மீ. 0/0-2/2 வரையி லான பகுதிக்கு கடின அடித்தளமும் மேற் பரப்பும் அளிப்பதுடன் அதனை மேம் படுத்துதல். | 3.75 |
| | | மொத்தம் | 25.00 |

## இணைப்பு 3.

(பத்தி 3.1.6.-ஐப் பார்க்கவும்.)

**தேசிய நெடுஞ்சாலை (நகர்புறம்) கீழ் 1982-83-ல் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்**

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணிகளின் பெயர். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. செங்கற்பட்டு .. | .. தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் (தே. நெ. 45) கி.மீ. 24/0—27/800 வரையிலான பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அப்பகுதியினை மேம்படுத்துதல். | 5.00 |
| 2. வட ஆற்காடு .. | .. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. 46) கி.மீ. 65/7—71/400 வரையிலான பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அப்பகுதியினை மேம்படுத்துதல் | 6 00 |
| 3. தென் ஆற்காடு | .. திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் (தே.நெ. 45) கி.மீ. 120/6—125/2 வரையிலான பகுதிக்கு கடின அடித்தளம் மற்றும் மேற்பரப்பினை அளிப்பதுடன் அப்பகுதியினை மேம்படுத்துதல். | 4.00 |



| | | |
|---|---|---|
| 4. திருநெல்வேலி | .. திருநெல்வேலி நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ. 148/2—149/2 வரையிலான பகுதியின் அடித்தளத்தை அகலப்படுத்தி மேம்படுத்துதல். | 5.00 |
| 5. திருநெல்வேலி | ... தேசிய நெடுஞ்சாலை நெம்பர் 7-இல் கி.மீ. 150.6—153.8 வரை செப்பனிடுதல். | 12.00 |
| 6. சேலம் .. .. | .. நாமக்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பனாரஸ்—கன்னியாகுமரி சாலையில் (தே. நெ. 7) கி.மீ. 246/8—254/785 வரையிலான பகுதியினை மேம்படுத்துதல். | 6 00 |
| | மொத்தம் .. | 38.00 |

## இணைப்பு 4.

(பத்தி 3.2.2.-ஐப் பார்க்கவும்.)

**மாநில நெடுஞ்சாலையின் கீழ் 1981—82 வருடத்திற்காக அனுமதிக்கபட்ட பணிகளின் பட்டியல்.**

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர்—திண்டுக்கல் சாலையில் கி.மீ. 82/8ல் குறுக்கிடும் அமராவதி நதியின் குறுக்கே அமைந்திருக்கும் எஃகு பாலத்தினை திரும்ப அமைத்தல். | 35.00 |
| 2. தஞ்சாவூர் .. | நாகப்பட்டிணம்—கூடலூர்—மைசூர் சாலையில் கி.மீ. 72/2-ல் அமைந்திருக்கும் வளைவு பாலத்தை திரும்ப அமைத்தல். | 11.00 |
| 3. தென் ஆற்காடு .. | சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ. 86/2-ல் அமைந்திருக்கும் பாலத்தினை திரும்ப அமைத்தல. | 8.00 |
| 4. தென் ஆற்காடு .. | சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ. 92/10-ல் அமைந்திருக்கும் பாலத்தினை திரும்ப அமைத்தல். | 6.00 |
| | மொத்தம் .. | 60.00 |



## இணைப்பு 5.

(பத்தி 3.2.6.-ஐப் பார்க்கவும்.)

மாநில நெடுஞ்சாலையின் கீழ் 1982—83ஆவது வருடத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. தென் ஆற்காடு .. | சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ. 84/4-ல் அமைந்திருக்கும் பாலத்தினை திரும்ப அமைத்தல். | 6.00 |
| 2. தென் ஆற்காடு .. | சேலம்— உளுந்தூர்பேட்டை சாலையில கி.மீ. 87/6ல் அமைந்திருக்கும் பாலத்தினை திரும்ப அமைத்தல். | 10.00 |
| 3. தஞ்சாவூர் .. | பெரம்பலூர்— மானாமதுரை சாலையில் கி.மீ. 58/4-ல் அமைந்திருக்கும் பாலத்தினை அகலப் படுத்துதல். | 15.00 |
| 4. திருச்சிராப்பள்ளி .. | பெரம்பலூர்— மானாமதுரை சாலையில் கி.மீ. 21/0— 51/6 வரையிலான பகுதியை தற்போதிருக்கும் ஒரு வழிச் சாலையிலிருந்து இருவழிச் சாலையாக அகலப்படுத்துதல். | 20.00 |
| 5. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்— திண்டுக்கல் சாலையில் கி.மீ. 10/2— 11/6 வரையிலான பகுதியினை மேம் படுத்துல். | 6.00 |
| 6. சேலம் .. | தலைவாசல அருகே சேலம் உளுந்தூர்பேட்டைசாலையில் கி.மீ. 65/2-ல் அமைந்திருக்கும் இருப்புப் பாதைக் கடவினை சுற்றியுள்ள பகுதியினை மேம் படுத்துதல். | 2.00 |
| | மொத்தம் .. | 59.00 |

## இணைப்பு 6.

(பத்தி 3.3.1-ஐப் பார்க்கவும்.)

மாவட்ட பெருஞ்சாலையின் கீழ் 1981 82 வருடத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. | சென்னை—மகாபலிபுரம் சாலையில் கி.மீ. 19.10-ல் பாலம் அமைத்தல். | 30·00 |
| 2 தஞ்சாவூர் .. | பாப்பநாடு—மதுக்கூர்—பெருகுவளந்தான் சாலையில் கி.மீ. 24/8-ல் பாமினி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 30·00 |
| 3 கன்னியாகுமரி .. | நாகர்கோவில்—இராஜக்கமங்கலம்—கொளச்சல் சாலையில் கி.மீ. 16.2-ல் அமைந்துள்ள மணவாளக்குறிச்சி பாலத்தை திரும்ப அமைத்தல். | 25·00 |
| 4 சேலம் .. .. | மல்லிக்கரை—தம்மப்பட்டி சாலையில் கி.மீ. 16/0-ல் குறுக்கிடும் சுவேதா நதியின் குறுக்கே அமைந்துள்ள உயர்மட்ட பாலத்தை திரும்ப அமைத்தல். | 15·00 |
| 5 பெரியார் .. | ஈரோடு—பவானி சாலையில் கி.மீ. 3/4-ல் உயர்மட்டப் பாலம் அமைத்தல். | 22·00 |
| 6 தென் ஆற்காடு .. | பி. முட்லூர் அருகே பழைய கடலூர்—சிதம்பரம் சாலையில் கி.மீ. 35/6-ல் குறுக்கிடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 43·00 |
| 7 மதுரை .. .. | டி. மேட்டுப்பட்டியிலிருந்து சக்களத்துமேட்டிற்கு மலைச் சாலையினை அமைத்தல். | 60·00 |
| 8 வட ஆற்காடு .. | ஆம்பூர் அருகே ஆம்பூர்—சத்கூர் சாலையில் கி.மீ. 1/4-6-ல் பாலாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 73·75 |
| 9 மதுரை .. .. | கொம்பையிலிருந்து இராமக்கல்மேட்டிற்கு சாலையினை அமைத்தல். | 70·00 |
| 10 திருநெல்வேலி .. | வீரவநல்லூருக்கும் முக்கூடலுக்கும் இடையே தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 25·00 |
| 11 சேலம் .. .. | தோப்பூர்—மேட்டூர்—பவானி சாலையில் கி.மீ. 37/2-6-ல் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல் மற்றும் தோப்பூர்—மேட்டூர்—பவானி சாலையில் கி.மீ. 33/22-4-ல் மேட்டூர் மிகுதிப் பாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்கும் எல்லிஸ்சத்தா பாலத்தை திரும்ப அமைப்படன் இணைப்புச் சாலைகளை அமைத்தல். | 175·00 |
| 12 திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி—சிதம்பரம் சாலையில் கி.மீ. 30/10-ல் அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 2·00 |
| 13 தென் ஆற்காடு .. | பழைய நெலியனூர் அருகே மதகடிப்பட்டு — கரிய மாணிக்கம் சாலையில் செல்லங்கல் ஓடையின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 25·00 |
| | மொத்தம்.. | 595·75 |

## இணைப்பு 7.

(பத்தி 3.3.3.-ஐப் பார்க்கவும்).

மாவட்டப் பெருஞ்சாலையின் 1982-83-வது வருடத்திற்கு அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பணிகளின் பட்டியல். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. | தாம்பரம் — முடிசூர் சாலையில் கி.மீ. 0/0—7/4 வரை அகலப்படுத்துதல். | 12·00 |
| 2 வட ஆற்காடு .. | அரக்கோணம் நகரத்தில் கடைத்தெரு பகுதியில் அரக்கோணம்—திருத்தணி சாலையில் கி.மீ. 0/0—0/4 வரையிலான நெருக்கடியான பகுதிக்கு இணையான சாலை அமைத்தல். | 17·00 |
| 3 வட ஆற்காடு .. | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையினையும் ஆற்காடு—திண்டிவனம் சாலையினையும் இணைக்கும் டெல்லி கேட் சாலையினை அகலப்படுத்தி மேம்படுத்துதல். | 25·00 |
| 4. தஞ்சாவூர் .. .. | மாயூரம்—முத்துப்பேட்டை சாலையில் கி. மீ, 30/2-ல் புத்தாற்றின் குறுக்கே அமைந்துள்ள பலவீனமானதும் குறுக்கலானதுமான பாலத்தை திரும்ப அமைத்தல். | 10.00 |
| 5 தஞ்சாவூர் .. | மன்னார்குடி—திருத்துறைப் பூண்டி வேதாரண்யம் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 29/0—63/6. | 48·00 |
| 6 புதுக்கோட்டை .. | காட்டுமாவடி மிமிசல் சாலையிற் கி.மீ. 72/0—81/0 அபிவிருத்தி செய்தலும் பாதுகாப்பு சுவர்கட்டுதலும் | 11·00 |
| 7 புதுக்கோட்டை .. | மயிலம்பட்டி—உப்பிடமங்கலம் சாலையில் கி. மீ. 25/10-ல் லிங்கத்தூர் கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்தல். | 15.00 |
| 8 மதுரை .. .. | பழநி—தாராபுரம் கிழக்குச் சாலையினை (கி.மீ. 0/6—18/0) மேம்படுத்துதல். | 27.00 |
| 9 மதுரை .. .. | மதுரை—தூத்துக்குடி சாலையில் கி.மீ. 8/0—8/4 வரையிலான பகுதிகளை மேம்படுத்துதல். | 6.00 |
| 10 மதுரை .. .. | மதுரை மாநகரைச் சுற்றி வளையச் சாலை ஒன்று அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்தல். | 80.00 |
| 11 மதுரை .. .. | அம்மைநாயக்கனூர்—பெரியகுளம் சாலையில் கி.மீ. 41/8-ல் அமைந்திருக்கும் பாலத்தை திரும்ப அமைத்தல். | 15.00 |
| 12 இராமநாதபுரம் .. | தேவகோட்டை நகராட்சி எல்லைக்குள் வட்டானம் சாலையில் கி.மீ. 1/0-ல் மணிமுத்தாற்றின் (விருசுலியூர்) குறுக்கே அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 75.00 |
| 13 திருநெல்வேலி .. | தூத்துக்குடி—தருவைக்குளம்—சூரங்குடி சாலையில் கி.மீ. 0/0 முதல் 9/6 வரை பலப்படுத்தி அகலப்படுத்துதல். | 16.00 |

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| 14 | திருநெல்வேலி | காசிமேஜர்புரம்—குத்துக்கல்—வலசை சாலையில் கி.மீ. 2/2-ல் அமைந்திருக்கும் பாலத்தை திரும்ப அமைத்தல். | 8.0 |
| 15 | கன்னியாகுமரி | நாகர்கோவில்—பாலமூர் சாலையில் கி.மீ. 6/2-ல் அமைந்திருக்கும் பலவீனமான பாலத்தை திரும்ப அமைத்தல். | 10.00 |
| 16 | கன்னியாகுமரி | மார்த்தாண்டம்—பேச்சிப்பாறை சாலையில் கி.மீ. 5/6-ல் அமைந்திருக்கும் பாலத்தை திரும்ப அமைத்தல். | 24.00 |
| 17 | தர்மபுரி | மொரப்பூர்—மாரண்டஹல்லி சாலையில் கி.மீ. 36/6-ல் பாலம் அமைத்தல். | 7.00 |
| 18 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூரில் கோயம்புத்தூர்—தடாகம் சாலையில் (மா.பெ.சா.) கோயம்புத்தூர்—மருதமலை சாலை (இ.மா.சா.) கவ்லி பிரௌன் சாலை (இ.மா. சா.) ஆகியவை சந்திக்கும் இடத்தை மேம்படுத்துதல். | 25.00 |
| 19 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி—மீனக்கரை சாலையில் கி. மீ. 7/4-ல் ஆளியார் நதியின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 55.00 |
| 20 | நீலகிரி | குன்னூர்—குந்தா சாலையில் கி. மீ. 3/8-ல் தற்போது அமைந்திருக்கும் குறுகலான பாலத்தை அகலப் படுத்துதல். | 2.50 |
| 21 | நீலகிரி | குன்னூர்—குந்தா சாலையில் கி.மீ. 6/10-ல் தற்போது அமைந்திருக்கும் குறுகலான பாலத்தை அகலப் படுத்துதல். | 1.00 |
| 22 | நீலகிரி | குன்னூர்—குந்தா சாலையில் கி.மீ. 11/6-ல் தற்போது அமைந்திருக்கும் குறுகலான பாலத்தை அகலப் படுத்துதல். | 1.00 |
| 23 | நீலகிரி | குன்னூர்—குந்தா சாலையில் கி.மீ. 13/2-ல் தற்போது அமைந்திருக்கும் குறுகலான பாலத்தை அகலப் படுத்துதல். | 3.00 |
| 24 | சேலம் | காரவல்லியிலிருந்து சோலக்காடுவரை சாலையினை அமைத்து மேம்படுத்துதல் (20வது கொண்டை ஊசி முனை வளைவிலிருந்து 50-வது கொண்டை ஊசி முனை வளைவு வரை.) | 30.00 |
| 25 | சேலம் | தாரமங்கலம்—ஜலகண்டபுரம் சாலையில் கி.மீ. 6/10-ல் பாலம் அமைத்தல். | 4.50 |
| | | மொத்தம் .. | 505.00 |

## இணைப்பு 8.

(பத்தி 3-4-ஐப் பார்க்கவும்).

**இதர மாவட்டச் சாலைகளின்** கீழ் 1981—82-வது வருடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட **பணிகளின்** பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | | பணிகளின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 | செங்கற்பட்டு .. | திருவாலங்காடு இ.பா. நிலையம்-கனகம்மா சத்திரம் சாலையில் கி.மீ. 12/1-ல் குகஸ்தலை ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் அமைத்தல். | 26.00 |
| 2 | தென் ஆற்காடு .. | ஆனைக்காரன் சத்திரம்—மணிக்கொல்லை சாலையில் கி.மீ. 0/0 முதல் 8/6-வரை தார் பரத்தல் மற்றும் மேம்படுத்துவதுடன் சிறுபாலங்களையும் அமைத்தல். | 16.00 |
| 3 | தஞ்சாவூர் .. | வேளச்சேரி — வெள்ளக்குடி — வில்லக்கோட்டயம்—சித்தாம்பூர் சாலையில் கி.மீ. 1/6-ல் கொரயாற்றின் குறுக்கே தற்போதிருக்கும் வண்டி—பயணிகள் பாலத்திற்கு மாற்று பாலம் அமைத்தல். | 13.00 |
| 4 | **புதுக்**கோட்டை .. | விராலிமலை—களமாவூர் சாலையில் கி.மீ. 10/8-ல் அமைந்திருக்கும் பாலத்தை திரும்ப அமைத்தல். | 6.00 |
| 5 | **சேலம்** .. .. | அயோத்தியா பட்டிணம்—பேளூர் சாலையில் கி. மீ. 19/4-ல் வசிஷ்ட நதியின் குறுக்கே மூழ்கு பாலம் அமைத்தல். | **14.00** |
| 6 | கோயம்புத்தூர் .. | குறிச்சி—நாச்சிப் பாளையம் சாலையில் கி. மீ. 6/6-ல் பாலம் அமைத்தல். | 15.00 |
| 7 | தஞ்சாவூர் .. .. | வேளச்சேரியிலிருந்து வெள்ளக்குடி வில்லக்கோட்டயம் சித்தாம்பூர் செல்லும் சாலையில் கி. மீ. 0/0 முதல் 7/6 வரை மேம்படுத்துதல். | 21.10 |
| 8 | ஷை .. | பூவனூர் கிராமத்தில் பூவனூர்செட்டி–சத்திரம் சாலையில் தற்போதிருக்கும் நடைப் பாலத்திற்கு மாற்று பாலம் அமைத்தல். | 9.00 |
| | | மொத்தம் .. .. | 120.10 |

# இணைப்பு 9.

(பத்தி 3-4-2-ஐப் பார்க்கவும்.)

இதர மாவட்டச் சாலைகளின் கீழ் 1982-83-வது வருடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பயணிகளின் பெயர். (2) | மதிப்பிடு. (3) |
|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. | பூந்தமல்லி—பட்டாபிராம் சாலையில் கி. மீ. 9/6-8-ல் பாலம் அமைத்தல். | 55.00 |
| 2 செங்கற்பட்டு .. | பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைப்பதுடன் துரைப்பாக்கம் அருகே சென்னை—மகாபலிபுரம் சாலை மற்றும் திருவான்மியூர்—முத்துக்காடு சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில் இணைப்புச் சாலையினை அமைத்தல். | 40.00 |
| 3 வட ஆற்காடு .. | காஞ்சிபுரம்—திருவத்திபுரம் சாலையிலிருந்து புதுப்பாடி—வட இலுப்பை சாலையை இணைக்கும் சாலையினை மேம்படுத்துதல். | 23.00 |
| 4 தஞ்சாவூர் .. .. | ஆலங்குடி—தலை ஞாயர்—தலத்திருவாசல் சாலையில் கி. மீ. 32/4 முதல் 39/2 வரை மேம்படுத்துதல். | 14.00 |
| 5 திருச்சிராப்பள்ளி .. | ஆலத்தூர்—காரை கொலக்கநத்தம் சாலையில் கி. மீ. 21/0 மருதையார் நதியின் குறுக்கே பாலம் அமைத்தல். | 50.00 |
| 6 ஷை .. | குமுலூர்—கண்ணக்குடி பேரவலப்பூர் சாலையில் கி. மீ. 0/0 முதல் 4/8 வரை மேம்படுத்துவதுடன் சிறு பாலங்களையும் அமைத்தல். | 15.00 |
| 7 புதுக்கோட்டை .. | கரம்பக்குடி—இரகுநாதபுரம் சாலையில் கி. மீ. 58/0-ல் மகாராஜ சமுத்திரம் நதியின் குறுக்கே பாலம் அமைத்தல். | 40.00 |
| 8 மதுரை .. .. | அய்யலூர்—ஆலம்பட்டி சாலையில் கி. மீ. 0/0 முதல் 11/8 வரை பமம்படுத்துவதுடன் சிறு பாலங்களையும் அமைத்தல். | 20.00 |
| 9 மதுரை .. .. | நிலக்கோட்டை—காமூ பிள்ளைச் சத்திரம் சாலையில் கி. மீ. 7/6-ல் பாலம் அமைத்தல். | 4.00 |
| 10 இராமநாதபுரம் .. | துத்திநத்தம்—கீழ்க்குடி—கமுதி சாலையை 18/8 கி. மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்தல்—<br>(1) கீழ்க்குடி—கமுதி சாலை கி.மீ. 0/0—13/4.<br>(2) துத்தி நத்தம்—கீழ்க்குடி சாலை 0/0—5/4. | 22.00 |
| 11 திருநெல்வேலி .. | தூத்துக்குடி—தருவைக்குளம்—சூரங்குடி சாலையில் கி. மீ. 9/6 முதல் 22/0 வரை மேம்படுத்துதல். | 20.00 |
| 12 சேலம் .. .. | ஓமலூர்—சங்ககிரி சாலை கி. மீ. 5/0-ல் பிரிந்து மூத்து நாய்க்கன்பட்டி செல்லும் சாலையில் கி. மீ. 0/4-ல் சரபங்கா நதியின் குறுக்கே பாலம் கட்டுதல். | 25.00 |
| 13 சேலம் .. .. | கொத்தூர்—தண்டா சாலையில் (தேங்கல் பள்ளம்) கி.எமீ. 9/0-ல் பாலம் அமைத்தல். | 30.00 |

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணிகளின் பெயர். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 14 நீலகிரி .. .. | குன்னூர்—மூல்லிக்கல் சாலையில் (காட்டேரி—சலாஸ் சாலை) கி. மீ. 2/2-ல் அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்துதல். | 2.00 |
| 15 டிடி .. | சலாஸ்—கொலக்கொம்பை சாலையில் கி. மீ. 3/4-ல் அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 5.00 |
| 16 டிடி .. | சலாஸ்—கொலக்கொம்பை சாலையில் கி. மீ. 6/8-ல் அமைந்துள்ள பாலத்தை திரும்ப அமைத்தல். | 4.00 |
| 17 தர்மபுரி .. .. | பாலக்கோடு—கேசரிகுளி சாலை (மாவட்ட இதர சாலை) கி. மீ. 9/2 சின்னாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 15.00 |
| 18 தாமபுரி .. .. | பைரநாய்க்கன்பட்டி நரிப்பள்ளி சாலையில் கி.மீ. 3 2-ல் நரிப்பள்ளிக்கு அருகில் கல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 38.00 |
| | மொத்தம் .. .. | 422.00 |



இணைப்பு 10.

(பத்தி 3–5–2– ஐப் பார்க்கவும்.)

இதரச் சாலையின்கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணிகளின் பெயர். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 மதுரை .. .. | கண்டமனூருக்கும் அம்பாசமுத்திரத்திற்கும் இடையே வைகையாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 15·00 |
| 2 தர்மபுரி .. .. | பையனூர், கொம்மபட்டி வழியாகச் செல்லும் உப்பரப் பட்டி—கோவிந்தபுரம் சாலையில் கி. மீ. 1/2ல் பாம்பாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 12.00 |
| 3 கோயம்புத்தூர் .. | வேட்டக்காரன்புதூர்—உப்பார் சாலையில் கி.மீ. 4·0-இல் உப்பார் நதியின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல். | 12·00 |
| 4 சேலம் .. .. | பெத்தநாய்க்கன்பாளையம்—காளிச் செட்டியூர் சாலையில் கி.மீ. 1/0-ல் வசிஷ்ட நதியின் குறுக்கே தரை மட்ட பாலம் அமைத்தல். | 10·00 |
| 5 தஞ்சாவூர் .. | நன்னிலம்—மனத்தகுடி சாலையில் கி.மீ. 6/2-ல் திரு. மலைராயன் நதியின் குறுக்கை பாலம் அமைத்தல். | 10·00 |

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 6 திருநெல்வேலி .. | வீரவநல்லூர்—அழகப்பாபுரம் சாலையில் கி.மீ. 7/2-ல் பாலம் அமைத்தல். | 5·00 |
| 7. புதுக்கோட்டை | மெய்வாயல்— வட்டனூர் சாலையை மேம்படுத்துதல். | 4.00 |
| 8. சேலம் | இருகலூர்— ஊத்துப்பாளையம் சாலையில் கி.மீ.0—0 முதல்4—6 வரை மேம்படுத்துதல் | 5.50 |
| 9. சேலம் | கொளத்தூர்—அந்தியூர் சாலையில் சௌரிபாளையம் அருகே காக்கையன்காட்டு ஓடையின் குறுக்கே பாலம் அமைத்தல். | 10.00 |
| 10 திருநெல்வேலி .. | கோபால சமுத்திரம் அருகே தாமரபரணியாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 25·00 |
| 11 இராமநாதபுரம் .. | பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் கி.மீ. 221/4-லிருந்து வேலூருக்குச் செல்லும் வகையில் சாலையினை அமைத்து மேம்படுத்துவதுடன் பாலம் ஒன்றினையும் அமைத்தல். | 8·45 |
| 12 தென் ஆற்காடு .. | சின்னசேலம்-கூகையூர் சாலையில் கி. மீ. 2/6-ல் வசிஷ்ட நதியின் குறுக்கே பாலம் அமைத்தல். | 12·00 |
| 13 மதுரை .. .. | கம்பம் ஊராட்சி ஒன்றியத்தில் கூடலூர்-புளியங்குடி சாலையில் கி.மீ. 3/6-ல் காஞ்சிமாத்துறையிலுள்ள பெரியாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல். | 20·00 |
| 14 சேலம் .. .. | பாலமலை குன்றுகளிலுள்ள செட்டியூரிலிருந்து சித்தேஸ்வரன் கோயிலுக்கு சாலையினை அமைத்து மேம்படுத்துதல். | 12·00 |
| 15 கோயம்புத்தூர் .. | பெருமாள்புதூர்—பொன்னிக் காட்டுத் துறை (கம்பகவுண்டன் நல்லூர்) சாலையில் கி.மீ. 0/0 முதல் 5/2 வரை மேம்படுத்துவதுடன் கி.மீ. 0/9, 4/6 மற்றும் 5/2 ஆகிய இடங்களில் பாலங்கள் அமைத்தல் மற்றும் சிறு பாலங்களை அமைத்தல். | 36·00 |
| | மொத்தம் .. | 304·95 |

## இணைப்பு 11.

(பத்தி 3·5·3 ஐப் பார்க்கவும்).

இதர சாலையின் கீழ் 1981-82 வருடத்தில் முடிவு பெறும் பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | | பணியின் பெயர். (2) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 கன்னியாகுமரி | .. | நாகர்கோவிலில் மூவத்துமுகம் பாலத்தினை அமைத்தல், மற்றும் சாலையினை மேம்படுத்துதல். | 15·60 |
| 2 தென் ஆற்காடு | .. | கள்ளக்குறிச்சி வட்டத்தில் கூத்தக்குடி-நின்னையூர் சாலையில் கி.மீ. 0·4ல்- மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 4·50 |
| 3 தென் ஆற்காடு | .. | சின்னசேலம் ஊராட்சியில் லட்சுமணாபுரத்திலிருந்து கூகையூருக்குச் சாலையினை அமைத்து மேம்படுத்துதல் (8·0 கி.மீ.). | 5·00 |
| 4 திருநெல்வேலி | .. | கோவில்பட்டி—பசுவந்தனை சாலையில் கி.மி. 17/4-ல் அச்சங்குளம் ஓடையின் குறுக்கே பாலம் அமைத்தல். | 3·20 |
| 5 இராமநாதபுரம் | .. | அரியன்கோட்டை—காவனூர் சாலையிலிருந்து பிரிந்து சிறுவாயல் கீழ்க்குடியிருப்புக்குச் செல்லும் சாலையில் கி.மீ. 0/0 முதல் 3/0 வரை மேம்படுத்துதல். | 1·65 |
| 6 இராமநாதபுரம் | .. | அரியன்கோட்டை—காவனூர் சாலையிலிருந்து கடம்பூர் செல்லும் சாலையில் கி. மீ. 0/0 முதல் 2/0 வரை மேம்படுத்துதல். | 1·18 |
| 7 இராமநாதபுரம் | .. | அரியன்கோட்டை—காவனூர் சாலையிலிருந்து பிரிந்து மஞ்சன்குளம் செல்லும் சாலையில் கி.மீ. 0/0 முதல் 2/0 வரை மேம்படுத்துதல். | 1·18 |
| 8 இராமநாதபுரம் | .. | காரியாப்பட்டி—பணிக்கனேந்தல் சாலையில் கி.மீ. 0/2-ல் பாலம் அமைத்தல். | 3·00 |
| 9 தென் ஆற்காடு | .. | கரியாமங்கலம் — கீழ்மங்களகுடி சாலையில் கி. மீ. 1/2-ல் மானம்பாத்தான் கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்தல். | 1·10 |
| 10 தர்மபுரி | .. | அரூர் ஊராட்சி ஒன்றியத்தில் அச்சல்வாடி வழியாக செல்லும் அரூர்—பேத்தம்பட்டி சாலையில் கி.மீ. 0/0 முதல் 8/2 வரை மேமபடுத்துதல். | 4·15 |
| 11 தஞ்சாவூர் | .. | துறையாண்டார் கோட்டையிலிருந்து கிலாவூர் வரையிலான சாலையினை மேம்படுத்துதல். | 5·75 |
| 12 இராமநாதபுரம் | .. | போசலூர் ஊராட்சி ஒன்றியத்தில் நரியந்தலிலிருந்து மதுரை—இராமநாதபுரம் சாலை வரை சாலையினை அமைத்தல். | 0·22 |
| 13 செங்கற்பட்டு | .. | உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் சித்தமல்லி—மல்லியன்கரணை சாலையில் கி.மீ.0/0 முதல் 6/0 வரை மேம்படுத்துதல். | 4·58 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (இ) சென்னை—திருத்தணி சாலையில் கி.மீ. 85/6-ல் சுரங்கப் பாதை அமைத்தல். | 18.00 / 19.00 | அணுகுசாலைப் பணியானது முடிவடையும் தருவாயில் உள்ளது. இருப்புப் பாதை பகுதியானது எடுத்துக் கொள்ளப்படவில்லை. |

2. அங்கீகாரம் பெறப்பட்டு செயல்படுத்த இதுவரை எடுத்துக் கொள்ளப்படாத பணிகள்.

| | | |
|---|---|---|
| (அ) மதுரை—அருப்புக்கோட்டை சாலையில் கி.மீ. 1/6-ல் மேம் பாலம் அமைத்தல். | 35.00 / 38.50 | இரயில்வே துறையிடம் தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். |
| (ஆ) சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் கி. மீ. 176/10-ல் மேம்பாலம் அமைத்தல். | 25.00 | போக்குவரத்துச் செறிவானது ஒரு இலட்சம் தொடர் ஊர்தி வாகன அலகுக்கும் குறைவாக இருப்பதால் இரயில்வே நிர்வாகம் அதனுடைய திட்டப் பணிகளில் இதனை சேர்க்கவில்லை. 25,000 தொடர் ஊர்தி வாகன அலகு அடிப்படையாக இருந்த போது இப்பணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| (இ) கடலூர்—சித்தூர் சாலையில் கி.மீ. 21/6-ல் திருவாடிக்கு அருகே மேம்பாலம் அமைத்தல். | 25.00 | (முன் பணிக்கு குறித்தபடி). |



| | | |
|---|---|---|
| ஈ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள் தே. நெ. எண். 7-ல் கி. மீ. 438/6-ல் தத்தனேரி அருகே பாலம் அமைத்தல். | 60.00 | இரயில்வே நிர்வாகம் அவர்களது திட்டப் பணிகளில் இப்பணியினை இதுவரை சேர்த்துக் கொள்ளவில்லை திட்டப் பணிகளின் பட்டியலில் இப்பணியினை சேர்த்துக் கொள்ளுமாறு அவர்கள் கோரப்பட்டுள்ளனர். |
| (உ) நாகல் நகர் நகராட்சி எல்லைக்குள் திண்டுக்கல்—வட்டாணம் சாலையில் கி. மீ. 2/4-ல் மேம் பாலம் அமைத்தல். | 30.00 | போக்குவரத்துச் செறிவானது இலட்சம் தொடர் ஊர்தி வாகன அலகுக்கும் குறைவாக இருப்பதால் இரயில்வே நிர்வாகம் அதனுடைய திட்டப் பணிகளின் பட்டியலில் இப்பணியினை சேர்த்துக் கொள்ளவில்லை. 25,000 தொடர் ஊர்தி வாகன அலகானது அடிப்படைத் தேவையாக இருந்தபோதே இப் பணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| (ஊ) சேலம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை—சேலம் சாலையில் தேவிக் குறிச்சிக்கருகே மேம் பாலம் அமைத்தல். | 30.00 | ஷை |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 14 மதுரை .. | .. தும்பார்பட்டி அத்தப்பட்டி—கீளவனூர் ஊராட்சி சாலையில் கி.மீ. 5/2-ல் பாலம் அமைத்தல். | 1·00 |
| 15 இராமநாதபுரம் | .. திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோத்தங்குளம் சாலையில் கி.மீ. 1/8-ல் வாணியம்பட்டிக்கும் பாடிக்கா வைத்தம்பட்டிக்கும் இடையே காயல்குடி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 1·50 |
| 16 | .. சர்க்கார் சாமகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் குரும்பப் பாளையம்—சித்ரா சாலையில் கி.மீ. 8/8-ல் பாலம் அமைத்தல். | 2·50 |
| 17 சேலம் .. | .. (அ) இளம்பிள்ளை அழகப்பாளையத்திலிருந்து சாலையினை மேம்படுத்துதல் (கி.மி. 0/0 முதல் 7/2 வரை). | 6·80 |
| | (ஆ) அழகப்பம்பாளையம் புதூர் கச்சிப்பள்ளி சாலையில் ( ஊராட்சி சாலை) கி.மீ. 0/0 முதல் 4/6 வரை மேம்படுத்துவதுடன் தாரிடுதல் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல். | |
| 18 தர்மபுரி .. | .. (அ) கண்ணம்பள்ளி கோவில் சாலையில் கி. மீ. 0/0 முதல் 3/2 வரை ( ஊராட்சி ஒன்றியச் சாலை) மேம்படுத்துதல். | |
| | (ஆ) கண்ணம்பள்ளி கோவில் — மேலேரிக்குட்டை சாலையினை கி.மீ. 0/0 முதல் 2/0 வரை மேம்படுத்துதல். | |
| | (இ) மேலேரிக்குட்டை — பெரியமலை சாலையினை அமைத்தல் (கி.மீ. 0/0 முதல் 3/0 வரை). | 2·50 |



## இணைப்பு 12.

(பத்தி 3.5.4.-ஐப் பார்க்கவும்)

இச்சாலை (ஊராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்)யின் கீழ் 1982—83-வது வருடத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல் ( ரூ. 50,000-க்கு மேல் உள்ள பணிகள்).

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. | கடலூர்—பெரியக்குப்பம் சாலையில் பக்கிங்சாம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்தல் மற்றும் முதுக்கரை—கடலூர் சாலையில் கி.மீ. 28·8-லிருந்து பிரிந்துச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல். | 20·50 |
| 2 வட ஆற்காடு .. | ஏலகிரி குன்றுகளில் உள்ள மங்கலம்—தாயலூர் சாலையினை மேம்படுத்துதல் மற்றும் அச்சாலையில் கி.மீ. 1/6-ல் பாலம் அமைத்தல். | 15·00 |
| 3 தென் ஆற்காடு .. | (கண்டாச்சிமங்கலம்)—வரஞ்சரம் சாலையில் கி.மீ. 1/4-ல் கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 40·00 |
| 4 தென் ஆற்காடு .. | தேவங்குடி—கா. புத்தூர் சாலையில் கி.மீ. 1¼-ல் மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 45·00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 21 சேலம் .. .. | செட்டிமான்குறிச்சி—சௌரிப்பாளையம் சாலையினை தார் பரத்தும் அளவிற்கு மேம்படுத்துவதுடன் விடுப்பட்ட இணைப்புச் சாலைகளை அமைத்தல் மற்றும் சிறுபாலங்களை அமைத்தல். | 5.00 |
| 22 சேலம் .. .. | சூளத்தூர்—தொட்டி கிணறு சாலையினை மேம்பட படுத்துவதுடன் அச்சாலையில் கி.மீ. 2/4 மற்றும் 2/6 பாலங்கள் அமைத்தல். | 20.00 |
| 23 கோயம்புத்தூர் .. | வல்லகுண்டாபுரம்—பாலார் சாலையில் கி.மீ. 2/4-இல் பாலம் அமைப்பதுடன் சாலையினை மேம்படுத்துதல். | 18.00 |
| 24 கோயம்புத்தூர் .. | தேவனூர்புதூர் நல்லூர் காலனி சாலையினை மேம்படுத்துவதுடன் சிறு பாலங்களை அமைத்தல். | 18.00 |
| 25 வட ஆற்காடு .. | செங்கம் நாச்சிப்பட்டு கீழ் சாலையில் கி.மீ. 0/8-இல் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 21.00 |
| 26 இராமநாதபுரம் .. | வத்திராயிருப்பு—அர்ஜுனாபுரம் சாலையில் கி.மீ. 3/2-இல் அர்சுனா நதியின் குறுக்கே பாலம். | 40.90 |
| 27 திருநெல்வேலி .. | ஆலங்குளம் துத்திக்குளம் சாலையை மேம்பாடு செய்தல் (நீளம் 6.00 கி.மீ.). | 9.00 |
| | மொத்தம் .. | 468.50 |



## இணைப்பு 13.

(பத்தி 3.8.4-ஐப் பார்க்கவும்.)

அனுமதிக்கப்பட்டுள்ள மேம்பாலங்கள்/சுரங்கப்பா...

| பணிகளின் பெயர். | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) நிர்வாக ஒப்புதல்/ தொழில்நுட்ப ஒப்புதல். | குறிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நடைபெற்று வரும் பணிகள் :— | | |
| (அ) மாயூரம்—முத்துப்பேட்டை சாலையில் கி. மீ. 41/8-இல் மேம்பாலம் அமைத்தல். | 40.00/44.00 | அணுகுச் சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றது. தாரிடுதல் முதலான அனைத்துப் பணிகளும் முடிவடைந்து விட்டன. இருப்புப் பாதைப் பகுதியில் பணி நடைபெற்று வருகின்றது. |
| (ஆ) நாகப்பட்டிணம்—கோயம்பத்தூர்—கூடலூர் சாலையில் கி.மீ. 22/6-இல் மேம்பாலம் அமைத்தல். | 50.00/55.00 | அணுகுச் சாலைப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இருப்புப் பாதை பகுதியில் பணி நடைபெற்று வருகின்றது. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (எ) சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் கி. மீ. 279/8-ல் பாபநாசத்திற்கு மேற்கே சுந்தரபெருமாள் கோவில் அருகே மேம்பாலம் அமைத்தல். | 20.00 | இரயில்வேயின் சம்மதத்தினை பெறும் பொருட்டு ரூ. 22.00 இலட்சத்திற்கான அணுகு மதிப்பீடு அவர்கட்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இரயில்வே நிர்வாகத்திடம் தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றது. இரண்டு துறைகளும் ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்த பின்னர் இரயில்வேயில் திட்டப்பணிகளில் பட்டியலில் இப்பணியும் சேர்த்துக் கொள்ளப்படும். |
| (ஏ) சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் கி. மீ. 282/4-ல் பாபநாசம் அருகே மேம்பாலம் அமைத்தல். | 20.00 | இரயில்வேயின் திட்டப் பணிகளின் பட்டியலில் இதுகாறும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. |
| (ஐ) தூத்துக்குடி—திருநெல்வேலி செங்கோட்டை—கொல்லம் சாலையில் கி. மீ. 97/5-ல் மேம்பாலம் அமைத்தல். | | போக்குவரத்து செறிவான ஒரு இலட்சம் தொடர் ஊர்தி வாகன அலகுக்கும் குறைவாக இருப்பதால் இரயில்வே நிர்வாகம் அதனுடைய திட்டப் பணிகளின் பட்டியலில்  இப்பணியினை சேர்த்துக்கொள்ளவில்லை. 25,000 தொடர் ஊர்தி வாகன அலகானது அடிப்படைத் தேவையாக இருந்த போது இப்பணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| (ஒ) வேலூர் நகராட்சி எல்லைக்குள் இராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி சாலையில் கி.மீ. 116/8-10-ல் மேம்பாலம் அமைத்தல். | 50.00 | போக்குவரத்துச் செறிவானது ஒரு இலட்சம் தொடர் ஊர்தி வாகன அலகுக்கும் குறைவாக இருப்பதால் இரயில்வே நிர்வாகம் அதனுடைய திட்டப் பணிகளின் பட்டியலில் இப்பணியினை சேர்த்துக் கொள்ளவில்லை. |
| (ஓ) பிக்ஷாண்டார் கோவில் அருகே திருச்சி—நாமக்கல் சாலையில் மேம்பாலம் அமைத்தல். | 15.00 | இப்பணியானது ஆய்வில் உள்ளது. |
| (ஔ) திருச்சி—புதுக்கோட்டை சாலையில் திருச்சி அருகே அமைந்துள்ள இ1 சி4 மற்றும் 1135 எண்ணினைக் கொண்ட மேம்பாலத்தினை அகலப்படுத்துதல். | 5.25 | இ1 சி4 மற்றும் 1135-ற்கான அணுகு மதிப்பீடு இரயில்வே நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இரயில்வேயின் சுருக்க மதிப்பீட்டிற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டு |

| (1) | (3) | (3) |
|---|---|---|
| | | உள்ளது. திருத்திய நிர்வாக அங்கீகாரம் பெறுவதற்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (அஅ) காட்பாடி இரயில் நிலையத்திற்கருகே கடலூர்—சித்தூர் சாலையில் அமைந்திருக்கும் இருப்புப் பாதை மேம்பாலத்தினை திரும்பக் கட்டுதல். | 126.00 | இத்திட்டம் 1980–81 இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்காக பொதுவான அமைப்பு இரயில்வே இடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது மதிப்பீடுகள் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. |



## இணைப்பு 14

(பத்தி 3.9.2-ஐப் பார்க்கவும்)

### பழங்குடியினருக்கான துணைத் திட்டம்.

| பழங்குடியினர் இருப்பிடம். | வரிசை எண்ணும், பணிகளின். விவரமும், | மதிப்பீடு (ரூபாய் (இலட்சத்தில்) நிர்வாக ஒப்புதல்/ தொழில் நுட்ப ஒப்புதல். | குறிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சேலம் மாவட்டத்திலுள்ள பச்சமலை குன்றுகள். | (1) சேலம் மாவட்டத்தில் பெரியப்பாக்கம், சின்னப்பாக்கம், வெங்கமோடி வழியாக ஓடைக்காடு புதூரிலிருந்து செங்காட்டுப் புத்தூர் மேற்பாகம்வரை சாலையினை அமைத்து மேம்படுத்துதல் (பச்சமலை குன்றுகள்) [அரசு ஆணை (நிரந்தரம்) எண். 904, சமூகநலத் துறை, நாள். 30—12—1977]. | 20.00 | |
| | | 22.00 | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது குன்றுகள். | (2) ஜவ்வாது குன்றுகளிலுள்ள நட்றாம்பள்ளியிலிருந்து புதூர் நாடு வரை சாலையினை அமைத்து மேம்படுத்துதல். [அரசு ஆணை (நிரந்தரம்) எண். 423, சமூகநலத் துறை, நாள் 12.7.1978.] | 40.00<br>40.00 | |
| சேலம் மாவட்டத்திலுள்ள அரணுத்து மலை. | சேலம் மாவட்டத்திலுள்ள (3) கீரப்பட்டி—கனக்காட்டி, ஆலமண்குட்டை—சின்னவலம் பட்டி, பெரியவலம் பட்டி—ஆலடிப்பட்டு மற்றும் சிறுமலை வழியாக புளுத்திக் குட்டையிலிருந்து அரணுத்து மலைக்கு சாலையினை அமைத்து மேம்படுத்துதல் [அரசு ஆணை (நிரந்தரம்) எண். 1182, சமூகநலத்துறை, நாள். 5—7—79] மற்றும் அரசு ஆணை (நிரந்தரம்) எண். 323, சமூகநலத் துறை, நாள் 12.5.1981. | 17.40<br>84.00 | |
| தர்மபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி குன்றுகள். | (4) அலயார் சேனக்கம்பட்டு வழியாக அரூரிலிருந்து சித்தேரி—கலசப்பாடிக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல். (அரசு ஆணை (நிரந்தரம்) எண். 1182, சமூக நலத்துறை, நாள் 5.7.1979 அரசு ஆணை (நிரந்தரம்) எண் 295, சமூகநலத்துறை நாள் 29—4—1981. | 25.00<br>65,00 | |
| லம் மாவட்டத்திலுள்ள கொல்லி குன்றுகள். | (5) கொல்லி குன்றுகளிலுள்ள தென்னனூர்-வெலப்பூர் சாலையினை மேம்படுத்துதல் (30 கி. மீ.) அரசு ஆணை (நிரந்தரம்) எண். 860, சமூகநலத் துறை, நாள் 5.11.1980. | 24.00<br>90.00 | |
| ௸ | (6) கொல்லி குன்றுகளிலுள்ள சோலக்காடு—குளிவளவூர் சாலையினை கி.மீ. 0/0. முதல் 7/0. வரை மேம்படுத்துதல். | 5.80<br>24.80 | |
| ௸ | (7) கொல்லி குன்றுகளிலுள்ள குளிவளவூர்—ஒத்தக்கடை சாலையினை மேம்படுத்துதல் (24 கி.மீ.) | 26.00<br>80.00 | |
| சலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு குன்றுகள். | (8) ஏற்காடு குன்றுகளிலுள்ள கோட்டச்சேடு—கப்னூர் சாலையில் கி.மீ 6/0. முதல் 10.6 வரை மேம்படுத்துதல் அத்துடன் கி.மீ. 0/0.—6/0. | 6.71<br>21.00 | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | சாலை பகுதிக்காக மேற்படி பகுதியிலிருந்து சிறு பாலங்கள் அமைத்தல். | | |
| சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு குன்றுகள். | (9) பட்டுப்புடி—வேலூர் சாலையினை மேம்படுத்துதல் (6·6 கி.மீ.). | 8·64 | |
| தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள். | (10·1) கல்ராயன் குன்றுகளிலுள்ள கரியலூர், கொண்டுத்துறை, கொண்டியா, நத்தம், மேல் பரிகம் ஆகியவற்றின் வழியாக வெள்ளி மலையிலிருந்து பரிகம் வரை (கி.மீ. 0/0—22/6) சாலையினை அமைப்பதுடன் சிறு பாலங்கள் அமைத்தல், அரசு ஆணை (நிரந்தரம்) எண். 505, சமூகநலத் துறை நாள்: 15—7—1981. | 21·50 | |
| | | 115·00 | |
| டி | (10.2) கல்ராயன் குன்றுகளில் உள்ள இந்நாடு வழியாக வெள்ளி மலையிலிருந்து சீரப்பட்டுக்கு சாலையினை (கி.மீ. 0/0—45/0) அமைப்பதுடன் சிறு பாலங்கள் அமைத்தல். | 206.00 | |
| திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சமலை குன்றுகள். | (11) மெல்சுபனாபுரம் — செங்காட்டுப்பட்டி சாலையினை மேம்படுத்துதல் (23 கி.மீ.). | 6·60 | |
| | | 77·00 | |
| | (12) செங்காட்டுப்பட்டி — மூலக்காடு சாலையினை மேம்படுத்துதல் (4·20 கி.மீ.) மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் மேல் இப் புதுப்பணிக்கு அரசால் அங்கீகாரம் வழங்கப் பட்டது. | 1·40 | .. |
| | | 8·10 | |
| | (13) பச்சமலை குன்றுகளில் உள்ள ஓடைக்காட்டுப்புத்தூரிலிருந்து பெரிய மங்கலம் கிராமம் வரை செல்லும் சாலையினை விரிவுப்படுத்துதல். | 15·00 | |
| | | 16.50 | |
| | மொத்தம் .. | 870·90 | |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | (கி.மீ.) |
| 7. புதுக்கோட்டை | .. | முத்துப்பேட்டை— மிமிசல் சாலையில் கி.மீ. 47/4— லிருந்து பிரிந்து பிரதாபிராமன் மீனவர் காலனிக்கு செல்லும் வகையில் சாலையினை அமைத்து மேம்படுத்துதல். | 0.70 | 2.10 |
| 8. இராமநாதபுரம் | .. | பிரப்பன் வலசையிலிருந்து சொக்கப்பிள்ளை மடம் வரையிலான சாலையினை மேம்படுத்துதல். | 1.80 | 4.50 |
| 9. இராமநாதபுரம் | .. | எருமேணியிலிருந்து எருமேணிக்குப்பம் வரையிலான சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/4— 2/4). | 2.00 | 2.80 |
| 10. திருநெல்வேலி | .. | பழையகாயலிலிருந்து மீன் முற்றத்திற்குச் செல்லும் வகையில் அணுகு சாலையினை அமைத்தல். | 1.20 | 2.20 |
| 11. திருநெல்வேலி | .. | விஜயாபதி— இடிந்தகரை சாலையில் கி.மீ. 2/2 முதல் 2/4 வரை மேம்படுத்துதல். | 0.20 | 0.30 |
| 12. திருநெல்வேலி | .. | பரத ஓவரி கிராமத்திலுள்ள மாதா கோயிலுக்கு (கடற்கரை) பிரதான பேருந்து நிலையத்திலிருந்து செல்லும் சாலையினை மேம்படுத்துதல். | 0.40 | 0.60 |
| 13. கன்னியாகுமரி | .. | முட்டம்கடியப்பட்டிணம் சாலையினை மேம்படுத்துதல். | 1.50 | 2.00 |
| 14. கன்னியாகுமரி | .. | புத்தன் துறையிலிருந்து ரமண துறைக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 1/0—1/350). | 0.35 | 0.60 |
| 15. கன்னியாகுமரி | .. | பொழிக்கரை—கேசவன் புத்தன் துறை சாலையினை மேம்படுத்துதல். | 0.60 | 0.60 |
| | | மொத்தம் .. | 13.55 | 36.90 |

# இணைப்பு 15.

(பகுதி 3.10.2-னைக் காண்க)

மீனவர் குடியிருப்புகளுக்கு பயன்படும் சாலைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணிகளின் பெயர். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. கன்னியாகுமரி .. | .. கன்னியாகுமரி மீன் உணவு முற்றத்திற்கு அணுகு சாலையினை அமைத்தல் (நீளம் 0/8 கி.மீ) | 0.05 |
| 2. தென்ஆற்காடு .. | சித்தனைக்குப்பம் சாலையில் கி.மீ. 0/0 முதல் 0/1 வரை (0/1 கி.மீ நீளம்) | 0.07 |
| 3. தென்ஆற்காடு .. | நடுக்குப்பம் சாலையில் கி.மீ 0/0 முதல் 1/0 வரை (1/0 கி.மீ. நீளம்) | 0.66 |
| 4. தென்ஆற்காடு .. | தந்திரியான் குப்பம் சாலையில் கி.மீ 0/0 முதல் 1/0 வரை (1/0 கி. மீ. நீளம்) | 0.71 |
| 5. புதுக்கோட்டை .. | அம்மாபட்டிணம் மீனவர் காலனி-கடற்கரை (0/6 கி.மீ. நீளம்) | 0.78 |
| | | .. |



| | | |
|---|---|---|
| 1. இராமநாதபுரம் .. | புதுக்கடை— தொண்டி சாலையில் கி.மீ.0/0 முதல் 0/8 வரை (0/8 கி.மீ. நீளம்). | 0.97 |
| . இராமநாதபுரம் .. | மாக்ஸ்—பொன்னை சாலையில் கி.மீ. 0/0 முதல் 1/5 வரை (1.5 கி.மீ. நீளம்). | 1.61 |
| . திருநெல்வேலி .. | வேம்பார் கடற்கரையிலிருந்து பெரியசாமிபுரம் திருப்பம் வரை (0.8 கி.மீ. நீளம்). | 0.43 |
| . திருநெல்வேலி .. | சிப்பிகுளம் கடற்கரையிலிருந்து கொண்டபெருமாள் கிராமம் வரையிலான சாலை (0.6 கி.மீ. நீளம்). | 0.43 |
| . திருநெல்வேலி .. | தருவைக்குளம் சாலையிலிருந்து தூத்துக்குடி சாலைக்கு செல்லும் சாலை (3/0 கி.மீ. நீளம்). | 2.43 |
| திருநெல்வேலி .. | மனப்பாடு கிராமத்திலிருந்து கடற்கரை சாலையை இணைக்கும் சாலை (0.6 கி.மீ. நீளம்). | 0.43 |
| திருநெல்வேலி .. | மனப்பாடு கடற்கரையிலிருந்து ஊராட்சிப் பேருந்து நிலையத்திற்குச் செல்லும் சாலை (1.6 கி.மீ.நீளம்). | 0.90 |
| . தென் ஆற்காடு .. | தலகண்டா—கடலூர் சாலை(3.2 கி.மீ.நீளம்). | 3.4 |
| . தென் ஆற்காடு .. | முடகடை—சிதம்பரம் சாலை (2.00 கி.மீ.நீளம்). | 2.12 |
| . தென் ஆற்காடு .. | மகாக்குத்துறை — திருநாத்தோப்பு சாலை (கி.மீ. 0/0 2.0 வரை). | 3.22 |
| . தென் ஆற்காடு .. | தாண்டவராயன் சோழகன்பட்டி—பிச்சாவரம் சாலை (கி. மீ. 0/0—2/0 வரை). | 2.43 |

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| 17. தென் ஆற்காடு | .. | பெரியகுப்பம்—கடலூர் சாலை (4.2 கி.மீ. நீளம்) .. | 4.32 |
| 18. தென் ஆற்காடு | .. | புதுக்குப்பம்—சாமியார்பட்டி (கி. மீ. 0/0—3/0 வரை) | 3.03 |
| 19. தஞ்சாவூர் .. | .. | கள்ளிமேடு—அவரிக்காடு (நாகப்பட்டிணம்) (7.0கி.மீ. நீளம்). | 13.97 |
| 20. இராமநாதபுரம் | .. | திருப்பாலக்குடி சாலை கி. மீ. 0/0—1.0 (1/0 கிமீ. நீளம்). | 1.14 |
| 21. இராமநாதபுரம் | .. | இராமநாதபுரம் தேவிப்பட்டிணம் கடற்கரை சாலையில் கி.மீ. 14/6லிருந்து செல்லும் மீனவர் சாலையினை மேம்படுத்துதல். | 0.82 |
| 22. இராமநாதபுரம் | .. | சித்தன் குட்டை—முடி வீரப்பட்டிணம் கடற்கரைசாலையிலிருந்து பழநி—வளகை கடற்கறை வரை சாலையினை மேம்படுத்துதல் (கி. மீ. 0/0—20). | 1.67 |
| 23. இராமநாதபுரம் | .. | ஆத்தங்கரை சாலையில் கி. மீ. 3/2 லிருந்து முடிவீரப் பட்டிணம் கடற்கரைக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (கி. மீ. 0/0—4/0). | 3.29 |
| 24. இராமநாதபுரம் | .. | ஆத்தங்கரை மீனவர் குடியிருப்புச் சாலையில் கி. மீ. 17/6-லிருந்து மேம்படுத்துதல் (கி. மீ. 0/0—1/6). | 1.70 |
| 25. இராமநாதபுரம் | .. | தே. நெ. 49-லி— [illegible] (0/6 கி. மீ.) லிருந்து தர்கவலகை மீனவர் குடியிருப்புக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (கி. மீ. 0/0 2/0). | 1.49 |
| 26. இராமநாதபுரம் | .. | தே. நெ. 49லிருந்து அலகத்து வலசைக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (கி.மீ. 0/0—1/6). | 1.73 |
| 27. இராமநாதபுரம் | .. | தே. நெ. 49 லிருந்து தோப்பு வலசைக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (கி. மீ. 0/0 2/4). | 2.04 |
| 28. இராமநாதபுரம் | .. | மண்டபம் வட மீனவர் குடியிருப்பு சாலையினை மேம் படுத்தல் (கி.மீ. 0/0—1/0). | 1.11 |
| 29. இராமநாதபுரம் | .. | மணங்குளம் கடற்கரை—சாயல்குடி சாலையினை மேம் படுத்துதல் (கி.மீ. 0/0—2/0). | 1.44 |
| 30. இராமநாதபுரம் | .. | மண்டல் சாலையினை அமைத்தல் (கி. மீ. 0/0—1/0). | |
| 31. இராமநாதபுரம் | .. | மரியூரி சாலையினை அமைத்தல் (1.5 கி. மீ. நீளம்) .. | 0.95 |
| 32. கன்னியாகுமரி | .. | வாணியக்குடி—மிடாளம் சாலை (3.0 கி. மீ. நீளம்) .. | 1.56 |
| 33. கன்னியாகுமரி | .. | உதயமார்த்தண்டம்—மிடாளம் துறை சாலை (0/6 கி. மீ. நீளம்). | 0.34 |
| 34. தஞ்சாவூர் .. | .. | கரையார் தெருவிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (1/8 கி.மீ. நீளம்). | 6.32 |
| 35. தென் ஆற்காடு | .. | குணாங்குப்பம்—கடலூர் சாலை (கி.மீ. 0/0—1/0). | 2.18 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6. செங்கற்பட்டு .. | அரங்கம் துணிரேவினை அடையும் திருமலை நகருக்கு புலிக்காட்டிலிருந்து சாலையினை அமைத்து மேம்படுத்துதல் (கி. மீ. 0/0—16/0). | | 17.40 |
| 17. செங்கற்பட்டு .. | லைட் அவுஸ்குப்பம், வைவன் குப்பம், சாத்தாங்குப்பம் ஆகியவற்றைத் தொடும் கரைக்குப்பத்திற்கு புலிக்காட்டிலிருந்து சாலையினை அமைத்து மேம் படுத்துதல் (5 கி. மீ. நீளம்). | | 5.58 |
| | மொத்தம் .. | | 93.50 |



இணைப்பு 16.

(பத்தி 3.10.3-ஐப் பார்க்கவும்)

ன்வ கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளின் கீழ் இரண்டாவது கட்டமாக அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணியின் பெயர். | சாலையின் நீளம்(கி.மீ.) | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. செங்கற்பட்டு .. | புதுகல்பாக்கம் சாலையினை மேம்படுத்துதல் | 0.60 | 3.00 |
| 2. செங்கற்பட்டு .. | நெமிலிக்குப்பம் சாலையை மேம்படுத்துதல் | 0.60 | 3.00 |
| 3. செங்கற்பட்டு .. | சூலேர்காடு குப்பம் சாலையினை மேம்படுத்துதல். | 0.60 | 3.00 |
| 4. தென் ஆற்காடு .. | செட்டிநகரை பாண்டி—மரக்காணம்—சேலம் சாலையில் கி. மீ. 21/2-ல் இணைக்கும் சாலையினை மேம்படுத்துதல். | 1.00 | 3.50 |
| 5. தஞ்சாவூர் .. | தரங்கம்பாடி மாணிக்க பாங்கு சாலையினை மேம்படுத்துதல். | 1.00 | 5.00 |
| 6. புதுக்கோட்டை .. | காட்டு மாவடி, மீனவர் காலனிக்கு முத்துப்பேட்டை சாலையில் கி. மீ. 43/8-ல் பிரித்து செல்லும் வகையில் சாலையினை அமைத்தல். | 1.00 | 3.70 |

## இணைப்பு 17.

(பத்தி 3.11.1-ஐப் பார்க்கவும்.)

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முடிவடைந்துள்ள பணிகளின் பட்டியல்.

| வரிசை எண். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | இத்தலார் நஞ்சன்காடு சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 2/2). | 3.50 |
| 2 | மணியாட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 3/6) .. .. | 3.06 |
| 3 | கய்யாட்சி— குக்கல்— குக்கல்துறை சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 10/4). | 9.18 |
| 4 | சின்ன குன்னூர் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—5/4) .. | 5.76 |
| 5 | அத்திக்கல் கடசோல சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 4/8) .. | 5.04 |
| 6 | கோத்தகிரி— மார்வெல்லா சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 5/6— 9/0). | 2.88 |
| 7 | தங்காடு— எடக்காடு சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 7/8). | 6.48 |
| 8 | கோத்தகிரி— மார்வட்டு சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 5/6). | 5.05 |
| 9 | குன்னூர்— கோத்தகிரி— கெட்டிக் கொம்பை சாலை (19/8) யினை மேம் படுத்துதல (கி.மீ. 0/0— 3/8). | 2.70 |
| 10 | பேடல்லா— பியாங்கி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 5/9) .. | 6.30 |
| 11 | சாவடிப்பட்டு— கிளார் பண்ணை சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 4/0). | 3.36 |
| 12 | லவடேல்கெட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 5/2) .. | 5.40 |
| 13 | காட்டேரி— எல்லனகல்லி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 4/6). | 4.14 |
| 14 | பண்டலூர்— நெட்டியாலம் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 4/0— 6/9). | 1.80 |
| 15 | சாலிஸ்பரி— போஸ்பரா சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 5/0). | 5.04 |
| 16 | கக்காட்டிகில்— உதயராட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 2/4). | 2.16 |
| 17 | மிலித்தேன்— முருக்கட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 3/2). | 3.06 |
| 18 | மல்லிக்கரை சேனட்டோரியம் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 1/2+20மீ.). | 1.44 |
| 19 | கீழ்க்கோத்தகிரி— உதயராட்டி சாலையினை மேம்படுத்துத (கி.மீ. 0/0— 2/1). | 2.70 |
| 20 | மேல்காவட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 2/6) .. .. | 2.30 |

| எண் (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 21 | கெட்டிக்கொம்பை—புதுயங்கி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 3/8—5/6). | 2.50 |
| 22 | பாலடா கல்லகோரை சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ.) 0/0—1/4) | 1.85 |
| 23 | கைகாட்டி—குக்கல்துறை சாலையில் கி.மீ. 4–6ல் பாலம் அமைத்தல் | 32.25 |
| 24 | இத்தலார்—பெம்பட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—3/4) | 2.60 |



## இணைப்பு 18.

(பத்தி 3.11.2-ஐப் பார்க்கவும்.)

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்—நடைபெற்று வரும் பணிகள்.

| வரிசை எண். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. நிர்வாக ஒப்புதல்/ தொ.ஓ. ஒப்புதல். (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | வெள்ளி விழா சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—15/8) .. | 14.58 / 26.00 |
| 2 | முக்கட்டி—பொன்னை சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—7/8). | 7.02 / 14.00 |
| 3 | மார்துமு நகர்—புதூர்வாயில் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—2/0). | 2.75 |
| 4 | பியங்கி—குக்கல் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—1/8 50 மீ). | 2.87 |
| 5 | கோத்தமுடி—எப்பாநாடு சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—4/4). | 4.75 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 6 | குருத்துக்குளி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—3/8) .. .. | 4.88 |
| 7 | குன்னூர்—கோத்தகிரி சாலையில் கி.மீ. 11/2-லிருந்து நடுகட்டிக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—1/2). | |
| 8 | டி. மனிக்கட்டி சாலையில் கி.மீ. 7/6-லிருந்து காட்டுபேட்டு—இடுகட்டி சாலையினை அடையும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—1/2). | 3.00 |
| 9 | மிலித்தேன்—பர்கனி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 5/4—8/4): | 10.50 |
| 10 | சின்ன குன்னூர்—பெந்தட்டி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—1/8). | 15.00 |
| 11 | கோத்தகிரி—பர்கானி சாலையில் 7/8-லிருந்து பர்கானிக்கு செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—2/0). | 5.50 |
| | | 7.50 |
| 12 | தும்மராட்டி—மணிகாட்டி சாலையில் கி.மீ. 0/2 காட்டுபேட்டு—இடு காட்டி சாலையில் 4/4 (கி.மீ. 0/8—3/6). | 9.00 |
| | | 14.00 |
| 13 | பாமுடி வழியாகச் செல்லும் நெடுகுலா—சோட்டனல்லி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—1/6). | 4.00 |



| | | |
|---|---|---|
| | பலடா—ஒசட்டி—பிகமண்ட்—அண்ணா நகர்—துபிக்கானா சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—6/6). | 22.00 |
| | லக்கனமனை வழியாகச் செல்லும் எல்லனகல்லி—மினல்லி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—5/0). | 12.50 |
| | இரத்தலட்—மங்கச்சல் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—2/0). | 5.00 |
| | கெந்தோரை சாலைக்குச் செல்லும் காட்டேரி—எல்லனகல்லி சாலையில் கி.மீ. 3/8-லிருந்து மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—2/0). | 5.00 |
| | குரியமடை—கரடிமலை சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—4/4). | 10.00 |
| | | 25.45 |
| | கூடலூர்—சுல்தான் பேட்டரி—பாலம்வாயல் சாலையில் கி.மீ. 25/4-6-லிருந்து மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—3/0). | 7.50 |
| | | 12.10 |
| | கவர்னர் சோலா சந்திப்பிலிருந்து பார்சன் பள்ளத்தாக்குச் சாலைக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—4/2). | 10.50 |
| | கூடலூர்—சுல்தான்பேட்டரி சாலையில் கி.மீ. 22-4-லிருந்து பென்னை சாலைக்குச் செல்லும் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—3/0). | 7.50 |
| | | 15.75 |
| | குயின்சோலா சாலையில் கி.மீ. 4/4-லிருந்து மேம்படுத்துதல் .. .. | 2.50 |
| | அணிகோரை—தென்னேரி சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0—3/0) | 12.00 |
| | | 28.00 |

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 24 | ஊட்டி— கோத்தகிரி— மேட்டுப்பாளையம் சாலையினை மேம்படுத்துதல் (58 கி.மீ.). | 2,35.00 |
| 25 | பைகாரா— சோலூர்— தென்னேரி— கத்தட்டா சாலையினை மேம்படுத்துதல் (33 கி.மீ.). | 1,05.00 |
| 26 | குந்தா— கெட்டை சாலையிலிருந்து காரைமடை சாலைவரை மேம்படுத்துதல் (32 கி.மீ.). | 1,00.00 |
| 27 | பில்லூர்— கொலக்கொம்பை சாலையினை மேம்படுத்துதல் (16 கி.மீ.) .. | 40.00 |
| 28 | கெட்டி— எல்லனகல்லி சாலை, அரவங்காடு— அகத்தலை சாலையினை மேம்படுத்துதல் (11 கி.மீ.). | 40.00 |
| 29 | கெட்டி—பல்லடசெலாஸ் சாலையினை மேம்படுத்துதல் (10 கி.மீ.) .. | 30.00 |
| 30 | ஊட்டி— சீகூர் சாலையினை மேம்படுத்துதல் .. .. .. | 50.00 |



## இணைப்பு 19.

(பத்தி 3.12.1-ஐப் பார்க்கவும்.)

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத் (வனச் சாலை) தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியல்.

| வரிசை எண். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | அணைக்கட்டி— சிருர் சாலையினை மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 7/2) | 24.00 |
| 2 | முடிமண்ட் சந்திப்பிலிருந்து முக்குர்த்தி ஏரியின் மேற்கு கரை சாலையை யொட்டி மேம்படுத்துதல் (கி.மீ. 0/0— 7/2). | 24.50 |
| 3 | நீலகிரி மலையுச்சிக்குச் செல்லும் தற்போதைய வனச் சாலையில் கி.மீ. 0/0 முதல் 2/0 வரையிலான பகுதியையும் 9/6 முதல் 10/6 வரையிலான பகுதியினையும் மேம்படுத்துதல். | 10.90 |
| 4 | கல்லம்பாளையம்— தெங்குமரதா— சீகூர் சாலையினை மேம்படுத்துவதுடன் சிறு பாலம் அமைத்தல் மற்றும் மோயாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல். | 1,50.00 |
| 5 | தாய்சோலா—ரொரக்குந்தா—மேல் பவானி சாலையினை மேம்படுத்துதல். | 90.00 |
| 6 | சீகூர் (வலைத் தோட்டம்)— அணைக்கட்டி சாலையினை மேம்படுத்துதல. | 1,00.00 |
| | மொத்தம் .. | 3,99.40 |

## இணைப்பு 20.

(பத்தி 3.19.2-ஐப் பார்க்கவும்.)

சாலைப்புற வசதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஊர்களின் பட்டியல்.

| வரிசை எண். (1) | பணிகளின் பெயர். (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | அன்னக்கரையில் சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் (அரசு மாவட்டப் பெருஞ்சாலை) கி.மீ. 249/6—8-ல் பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| 2 | குட்டம்பட்டி அருகே திருச்சிராப்பள்ளி—மதுரை சாலையில் (அரசு மாவட்டப் பெருஞ்சாலை) பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| 3 | தென்காசி—மதுரை சாலையில் (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 98/4-6-ல பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| 4 | கோயம்புத்தூர்—சத்தி—சாம்ராஜ நகர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 83/0-ல் பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| 5 | கோயம்புத்தூர்—திண்டுக்கல் சாலையில் (மாநில நெடுஞ்சாலை) கி.மீ 101/0-ல் பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| 6 | எட்டயபுரத்தில் மதுரை—தூத்துக்குடி சாலையில் (அரசு மாவட்டப் பெருஞ்சாலை) கி.மீ. 90/0-2-ல் பயணிகள் விடுதியினை அமைத்தல். | 4.00 |
| | மொத்தம் .. | 24.00 |



## அட்டவணை 21.

(பத்தி 6.3.1. ஐப் பார்க்கவும்.)

தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் மேற்கொண்ட பணிகள் பற்றிய விபரம்.

| மேற்கொள்ளப்பட்ட பணிகளின் இனம். (1) | வேலையின் எண்ணிக்கை. (2) | மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| கட்டடங்கள் :— | | |
| (அ) உலக வங்கி உதவியுடன் கூடிய புறநகர் துணை (Satellite) நகரம். | 2 | 21 |
| (ஆ) வீட்டு வசதித் திட்டம் .. .. .. .. | 15 | 54 |
| (இ) சுற்றுலா இல்லம் .. .. .. .. .. | 4 | 22 |
| (ஈ) விவசாயக் கூடம் .. .. .. .. | 1 | 4 |
| (உ) தொழிலாளர் நல தொழிற்கூடம் .. .. | 6 | 17 |
| (ஊ) கல்வி நிலையங்கள் .. .. .. .. | 1 | 6 |
| (எ) அலுவலகக் கட்டடங்கள் .. .. .. .. | 1 | 40 |
| (ஏ) பிராணிகள் பூங்கா இல்லம் .. .. .. | 3 | 7 |
| | 33 | 171 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| II. பாலங்கள்— | | |
| (அ) தேசிய நெடுஞ்சாலையில் .. .. .. | 3 | 82 |
| (ஆ) மாநில நெடுஞ்சாலையில் .. .. .. .. | 7 | 178 |
| (இ) கன்னியாகுமரியில் கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு நடைபாலம். | 1 | 50 |
| | 11 | 310 |
| III. சாலைகள்— | | |
| (அ) மலைச் சாலைகள் .. .. .. .. .. | 3 | 55 |
| (ஆ) தேசிய நெடுஞ்சாலை .. .. .. .. | 5 | 79 |
| (இ) மாநில சாலைகள் .. .. .. .. .. | 1 | .. |
| | 9 | 160 |
| IV. நீர்ப்பாசனம்— | | |
| உலக வங்கி உதவியுடன் இணைந்த திட்டம் .. .. | 11 | 16 |
| V குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதி—பணிகள் மதுரையில். | 2 | 21 |
| | 66 | 678 |

அட்டவணை 22.

(பத்தி 6—3—2-ஐப் பார்க்கவும்.)

தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகம் எடுத்துக் கொண்ட பணிகளில் 31—3—1982-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள பணிகள் பற்றிய விவரம்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | ஒப்படைக்கப்பட்டது. | | 31—3—1982-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள பணிகள். | |
|---|---|---|---|---|
| | வேலையின் எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.) | வேலையின் எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 மதுரை .. .. .. | 25 | 189 | 16 | 54 |
| 2 திருச்சிராப்பள்ளி .. .. | 6 | 98 | 2 | 5 |
| 3 திருநெல்வேலி .. .. | 5 | 45 | 4 | 20 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 14 | 72 | 13 | 47 |
| 5 செங்கற்பட்டு .. .. .. | 6 | 41 | 3 | 35 |
| 6 இராமநாதபுரம் .. .. | 2 | 4 | 1 | 2 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 4 | 26 | 2 | 14 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 8 சென்னை .. .. .. | 2 | 146 | .. | .. |
| 9 கன்னியாகுமரி .. .. | 1 | 50 | .. | |
| 10 நீலகிரி .. .. .. .. | 1 | 7 | .. | .. |
| | 66 | 678 | 41 | 177 |



இணைப்பு 23.

(பத்தி 7–5–4.)

மத்திய சாலை நிதி நான்காவது திட்டத்தின் கீழ் முடிவு பெற்ற, நடைபெறும் பணிகளின் பட்டியல்.

| வரிசை எண். (1) | பணியின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| முடிக்கப்பட்ட பணிகள் : | | |
| 1 | கொடைக்கானலை பழனியுடன் இணைக்க லாஸ் மலைப் பாதையிலிருந்து ஒரு மலைப் பாதை அமைத்தல். | 125.00 |
| 2 | பண்ணைப்பட்டி பாச்சலூர் சாலையில் உள்ள ஆதலூரில் இருந்து தண்டிக்குடி மலைச்சாலையில் கி.மீ. 12/0-இல் இணையும் சாலை அமைத்தல். | 33.60 |
| 3 | பாச்சலூரிலிருந்து வடகாட்டிற்கும், ஒட்டன் சத்திரத்திற்கும் சாலை அமைத்தல். | 44.00 |
| 4 | போளூர் செங்கம் சாலையில் மைல் 29/6 இல் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 10.70 |
| 5 | எமனேஸ்வரம் நைனார் கோவில் சாலையில் கற்பரப்பி மேம்பாடு செய்து தார்ச்சாலை அமைத்தல். | 5.20 |
| 6 | கொள்ளேகால் செல்லம்பாளையம் சாலையில் கி.மீ. 34/0—39/6-ல் கற்பரப்பி மேம்பாடு செய்து தார்ச்சாலை அமைத்தல் | 13.20 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 7 | கோவளத்திற்கு அருகில் உள்ள கடற்கழியில் ஒரு பாலம் அமைத்தல் .. | 25.00 |
| 8 | வைகையாற்றின் குறுக்கே இடைக்காட்டூரில் ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் | 13.78 |
| 9 | அச்சரப்பாக்கம்—வந்தவாசி சாலையில் கி.மீ. 46/4-ல் சுகநதியின் குறுக்கே பாலம் கட்டுதல். | 6.50 |
| 10 | கைக்கலத்தூர் பெரிய வடகரைச்சாலையில் மைல் 7/3-ல் கல்லாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 6.12 |
| 11 | அரவக்குறிச்சி—சின்ன தாராபுரம் சாலையில் கி.மீ. 3/2-இல் இராசாபுரம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல். | 13.20 |
| 12 | சென்னை—பழவேற்காடு சாலையில் மைல் 23 5/6-இல் பொன்னேரி அருகே ஆரணியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். | 20.03 |
| 13 | கரவலூர்—கோவில் பாளையம் சாலையில் சிறு பாலங்கள் கட்டுதல் ... | 3.52 |
| 14 | இளையாமுத்தூர் கல்லாபுரம் சாலையில் கி.மீ. 5/6-இல் ஒரு பாலம் கட்டுதல். | 13.80 |
| நடைபெற்றுவரும் பணிகள் : | | |
| 1 | வளத்திகமன பந்தாவிற்கும், ஆந்திர மாநில எல்லைக்கும் செல்லும் சாலைகள் மேற்கொள்ளப்படும். மேம்பாட்டுப் பணிகள் உட்பட, வாணியம்பாடிக்கும் ஜாப்பராபாத்திற்கும் இடையே பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 65.23 |
| 2 | வலுவிழந்த பழைய பாலங்களைச் சோதனையிடுவதற்கு ஒரு சோதனை வண்டி தயாரித்தல். | 7.70 |



## இணைப்பு 24.

(பத்தி 7—5—4.)

மத்திய சாலை நிதி ஐந்தாவது திட்டத்தின் கீழ் முடிவடைந்த, நடைபெறும் பணிகளின் பட்டியல்.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| முடிக்கப்பட்ட பணிகள் : | | |
| 1 | இராமேஸ்வரம் தீவில் அருள்மிகு கோதண்ட இராமசாமி கோயிலை மதுரை—தனுஷ்கோடி சாலையுடன் இணைக்கும் சாலை அமைத்தல். | 8.47 |
| நடைபெற்றுவரும் பணிகள் : | | |
| 1 | பென்னகரம்—பெரும்பாலைச் சாலையில் கி.மீ. 34/2-இல் தொப்பையாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப்பாலம் கட்டுதல். | நி.ஓ. 14.50<br>தொ.ஓ. 7.727 |
| 2 | சித்தாலந்தூர்—ஜேடார் பாளையம் சாலையில் மூழ்கு பாலம் ஒன்றைக் கட்டுதல். | நி.ஓ. 16.80<br>தொ.ஓ. 2.876 |
| 3 | திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை—நாகலாபுரம் சாலையில் சீவலப்பேரிக்கு அருகே கி.மீ. 11/8இல் தாமரவருணி ஆற்றுக்குக் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டுதல். | நி.ஓ. 20.50<br>தொ.ஓ. 22.55 |

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 4 | வட ஆற்காடு மாவட்டத்தில் பாணாவரம்—சேந்தமங்கலம் சாலையில் நெமிலி கிராமத்தின் அருகே கி.மீ. 16/10-லிருந்து 17/2 வரை ஒரு தரைப்பாலம் கட்டுதல். | நி.ஒ. 8.00<br>தொ.ஒ. 8.80 |
| 5 | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனை அடிப்படையில் சாலை அமைத்தல். | நி.ஒ. 22.00<br>தொ.ஒ. 22.00 |
| 6 | ஆரிய கவுண்டன் ஜாகிரிலுள்ள கீழ்க்காட்டை குருபகவுண்டன் ஜாகீர் வழியாக ரங்கப்பனூருடன் இணைப்பதற்கு ஜீப் செல்வதற்குரிய பாதை அமைத்தல் (கல்ராயன் மலை). | நி.ஒ. 53.00<br>தொ.ஒ. 53.00 |
| 7 | ஆர். கே. பேட்டை—பள்ளிப்பேட்டை சாலையில் கி.மீ. 17/7-லிருந்து 18/4 வரை குசஸ்தலை ஆற்றுக்கு குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல். | நி.ஒ. 27.00<br>தொ.ஒ. 29.70 |
| 8 | இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டத்தில் முத்துப்பேட்டை மிமிசல் சாலையில் கி.மீ. 49/7 இல் மிமிசலுக்கு அருகே பாம்பாறு ஆற்றுக்கு குறுக்கேயுள்ள பாலத்தினை ஒரியூர் திருப்புவன வாசல் ஆகியவற்றுடன் இணைப்பதற்கு இணைப்பு சாலை அமைத்தல் .. | நி.ஒ. 4.90<br>தொ.ஒ. 5.39 |



| | (ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|
| வட ஆற்காடு மாவட்டத்தில் போளூரிலிருந்து ஜவ்வாது மலை உச்சிக்கும் ஆலங்காயத்திற்கும் செல்லும் மலைச் சாலையை மேம்படுத்தல். | நி.ஒ. 75.00<br>தொ.ஒ. 82.50 |
| குத்தியாலத்தூர் காட்டுப்பகுதியில் ஒரு மலைப் பாதை அமைத்து மேம்படுத்துதல்—மூன்று பகுதிகள். | நி.ஒ. 51.50 |
| பகுதிகள் 1, 2 மட்டும் ... | தொ.ஒ. 37.95 |
| தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் விடுபட்ட இணைப்புச் சாலைகள் உட்பட குன்னாண்டார் கோயில் குப்பம்பட்டி, அச்சம் பட்டி, செங்கிப்பட்டி வரையிலும் குறுக்குவடிகால் கட்டும் பணியும், கப்பி போட்டு சாலையை மேம்படுத்தும் பணியும் செய்தல். | நி.ஒ. 25.385<br>தொ.ஒ. 25.385 |
| தமிழ்நாடு கர்நாடக எல்லையில் கிர்கண்டிக்கு அருகே கொள்ளே காலம் செல்லம்பாளையம் சாலையை இணைப்பதற்குப் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | நி.ஒ. 10.92<br>தொ.ஒ. 13.78 |

நி.ஒ.—நிர்வாக ஒப்புதல்.

தொ.ஒ.—தொழில்நுட்ப ஒப்புதல்.

# இணைப்பு 25.

(பத்தி 7.5.4.)

**ஆறாவது திட்டத்தின் கீழ் (1980-85) மத்திய அரசினரால் அனுமதி அளிக்கப்பட்ட மத்திய சாலை நிதி வேலைகளின் பட்டியல்.**

| | வேலையின் பெயர். | வேலை எண். | மதிப்பீட்டுத் தொகை. | மத்திய சாலை நிதி (ஒதுக்கீடு) யில் செலுத்தப்பட வேண்டிய தொகை. |
|---|---|---|---|---|
| | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | சேலம் மாவட்டத்தில் சமூக, பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு செய்தல். | ஆர்.எம்.ஐ.எஸ். ஸி.எஸ்.இ.ஏ. ஆர்.எச்.01. கே.ஆர்.-81 | 3.00 | 1.50 |
| | ஆடலூர்—தண்டிக்குடி மலைச்சாலை கி.மீ. 13/0 இல் பாச்சலூரை இணைக்கும் மலைச் சாலை ஒன்றை அமைத்தல். | ஏஎல்/டிஎன்/ 1/ஆறாவது திட்டம். | 40.00 | 40.00 |
| 3 | பாண தீர்த்தத்திலிருந்து தண்டிக்குடியிருப்பு மற்றும் பாபனாசத்தை இணைக்கும் மலைச் சாலை ஒன்று அமைத்தல். | ஏஎல்/ டிஎன்/ 2. ஆறாவது திட்டம். | 47.00 | 47.00 |
| 4 | கன்னியாகுமரியில் சாலையோர விடுதி ஒன்று கட்டுதல். | ஏஎல்/டி என்/ 3. ஆறாவது திட்டம். | 5.00 | 5.00 |
| 5 | தே. நெ. 49 இல் கி.மீ. 188-0விருந்து தனுஷ்கோடி நீராடும் துறையை இணைக்கும் சாலையை அமைத்தல். | ஏஎல்/ டிஎன்/ 4. ஆறாவது திட்டம். | 15.00 | 15.00 |
| 6 | சிக்கல் மற்றும் சாயல்குடிக்கு இடையே குண்டாற்றின் குறுக்கேயுள்ள தாம்போகியின் தரை மட்டத்தை மேம்படுத்தி ஓர் உயர் மட்ட பாலம் அமைத்தல். | ஏஎல்/ டிஎன்/ 5. ஆறாவது திட்டம். | 28.30 | 28.80 |
| 7 | தே. நெ. 46—ல் கி.மீ. 68-8—ல் உள்ள பாலத்தை திருத்தி அமைத்தல். | ஏஎல்/ டிஎன்/ 6. ஆறாவது திட்டம். | 7.50 | 7.50 |
| 8 | குத்தியாலத்தூர் வனப்பகுதியில் உள்ள இரண்டு மற்றும் மூன்றாம் பகுதியில் கற்பரப்பு ஏற்படுத்தி தார் மேற்பரப்பு அமைத்தல். | ஏஎல்/ டிஎன்/ 7. ஆறாவது திட்டம். | 10.00 | 10.00 |
| | | | 156.30 | 154.80 |

(பத்தி 3 26. 7.5.4.

மத்திய சாலை நிதி, திட்டத்தின் கீழ் கிடைக்கும் தடையற்ற நிதி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேலைகள் செலவினங்களை காட்டும் அட்டவணை.

| வரிசை எண். | காலம். | தடையற்ற நிதி. | அங்கீகரிக்கப்பட்ட வேலைகள். | | தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதிக்கப்பட்டது. | | முடிவடைந்த வேலைகளின் எண்ணிக்கை. | நடந்துகொண்டு இருக்கும் வேலைகளின் எண்ணிக்கை. | செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண். | தொகை. | எண். | தொகை. | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | 1960-69 .. .. .. | 507.77 | 69 | 507.77 | 69 | 550.00 | 69 | .. | 542.91 |
| 2 | 4-வது திட்டம் (1969-74) .. | 368.40 | 16 | 470.79 | 16 | 470.77 | 14 | 2 | 224.10 |
| 3 | 5-வது திட்டம் (1974-78) .. | 252.80 | 13 | 314.51 | 12 | 279.18 | 1 | 12 | 266.31 |
| 4 | ஆண்டுத் திட்டம் 1978-80 | .. | .. | .. | — | — | — | .. | 109.30 |
| | மொத்தம் .. | 1,128.97 | 98 | 1,293.07 | 97 | 1,299.97 | 84 | 14 | 1,142. |
| 5 | 6-வது திட்டம் (1980-85) | 232.00 | 8 | †154.80 | .. | .. | .. | .. | ‡‡ 45.31 |
| | | .. | 4 | ††35.00 | .. | .. | .. | .. | .. |
| | | 1,360.97 | 110 | 1,482.87 | 97 | 1,299.97 | 84 | 14 | 1,187.86 |

†8 வேலைகள் ரூ. 154.80 லட்சத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

†† மத்திய சாலை நிதியிலிருந்து மத்திய அரசின் பங்கிற்கு இணையாக 4. வேலைகளின் மதிப்பீடு ரூ. 70 இலட்சத்தில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 35 இலட்சம்.

1980-81ஆம் ஆண்டில் செலவு.

# இணைப்பு 27.

## மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளின் பட்டியல்.

(பத்தி 7.6.3.)

**(1) ஆர் 1**

ஆங்காங்கே கிடைக்கும் பொருள்களைப் பற்றி சர்வே மற்றும் கணிப்பு எடுத்தல்;

**(2) ஆர் 3 (இரண்டாவது கட்டம்)**

பலதரப்பட்ட சாலை வகைகளில் வெவ்வேறு வட்டங்களில் சாலைப் போக்குவரத்து வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி.

**(3) ஆர். 5.**

சாலை அடித்தளத் திறனைப் பலதரப்பட்ட சூழ்நிலையிலும் ஈரத்தன்மைக்கேற்ப ஆராய்ந்து கணிப்பு எடுத்தல்.

**(4) ஆர். 6.**

" BENKLEMAN BEAM DEFLECTION " முறையைப் போன்று முன்னேற்ற முறைகளைக் கையாண்டு ஏற்கெனவே போடப்பட்டுள்ள சாலைக் கட்டுமானங்களின் தாங்கு திறனைக் கண்டுபிடிக்கவும், வலுவிழந்த கட்டுமானங்களின் மேலேயே போடுவதற்கான வடிவமைப்பு முறைகளைக் கணக்கிடுதல்.



**(5) ஆர். 12.**

தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலைகளின் பயன் திறனைப் ற்றிய ஆராய்ச்சி.

**(6) பி4 B(4)**

சாலைப் பாலங்களில், மேல்தளங்கள் ஒவ்வொன்றுக்கும் இடைவெளிகளில் பொருத்தப் டுகின்ற விரிவாக்கு சாதனங்கள் பற்றிய ஆராய்ச்சி.

**(7)** நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் போர்ட்லண்ட் போசலோனா சிமெண்ட்டை வலு வற்றப்பட்ட காங்கிரீட் அமைப்புகளில் உபயோகப்படுத்துவதற்கான பரிசோதனை ஆராய்ச்சி.

அட்டவணை 28 (பத்தி 10.4)

அரசு சாலைகளில் வறட்சி நிவாரணப் பணிகள்

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு இலட்சத்தில் (அரசு ஆணை நிலை எண் 1569, வருவாய் நாள் 13—7—1981.) | ஒப்பளிக்கபட்ட பணிகளின் எண்ணிக்கை. | ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் மதிப்பீடு (ரூ. இலட்சத்தில் | தொடங்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை. | முற்றுப் பெற்ற பணிகளின் எண்ணிக்கை. | செலவான தொகை. (ரூபாய் (இலட்சத்தில்) | உற்பத்தியான மனித நாட்களின் மொத்த எண்ணிக்கை. | வாரத்தில் தொழிலாளர்கள் சராசரியாக வேலை பார்த்ததின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9[ | (10) |
| 1 | வடஆற்காடு .. .. | 49.00 | 559 | 83.45 | 559 | 559 | 47.30 | 3,50,470 | .. |
| 2 | தென்ஆற்காடு .. .. | 27.00 | 210 | 40.03 | 210 | 190 | 25.61 | 1,84,373 | .. |
| 3 | செங்கல்பட்டு .. .. | 8.00 | 108 | 10.44 | 108 | 108 | 8.38 | 57,898 | .. |
| 4 | தஞ்சாவூர் .. .. | 5.00 | 83 | 11.15 | 83 | 83 | 5.01 | 71,572 | .. |
| 5 | திருச்சிராப்பள்ளி .. .. | 18.00 | 218 | 23.68 | 218 | 218 | 16.81 | 1,77,338 | .. |
| 6 | புதுக்கோட்டை .. .. | 33.00 | 572 | 61.37 | 497 | 497 | 33.00 | 4,41,276 | .. |
| 7 | மதுரை .. .. .. | 18.00 | 252 | 27.75 | 252 | 248 | 20.06 | 37,375 | 50 |
| 8 | திருநெல்வேலி .. .. | 5.00 | 125 | 6.84 | 125 | 115 | 5.01 | 52,991 | .. |
| 9 | இராமநாதபுரம் .. .. | 70.00 | 528 | 95.91 | 528 | 528 | 70.47 | 8,62,885 | .. |
| 10 | சேலம் .. .. .. | 30.00 | 354 | 38.91 | 354 | 344 | 29.91 | 3,45,584 | .. |
| 11 | தர்மபுரி .. .. | 37,00 | 287 | 52.50 | 287 | 287 | 41.31 | 2,67,384 | 152 |
| | மொத்தம் .. | 300.00 | 32.96 | 452.03 | 3,221 | 3,177 | 302.87 | 28,49.146 | 202 |

அட்டவணை 29

(பத்தி 10.4)

ஊராட்சி ஒன்றியப் பேருந்துப் பாதைகளில் வறட்சி நிவாரணப் பணிகள்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒதுக்கீடு இலட்சத்தில் (அரசு ஆணை நிலை எண். 1397, வருவாய், நாள் 12—6—1981) | ஒப்பளிக்கப் பட்ட பணி களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப் பட்ட பணி களின் மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) | தொடங்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை. | முற்றுப் பெற்ற பணிகளின் எண்ணிக்கை. | செலவானத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்). | உற்பத்தி யான மனித நாட்களின் மொத்த எண்ணிக்கை. | வார இறுதியில் தொழிலாளர் சராசரியாக வேலை பார்த்ததின் எண்ணிக்கை, |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 வட ஆற்காடு .. .. | 10.00 | 82 | 15.02 | 82 | 82 | 11.90 | 72,259 | .. |
| 2 தென் ஆற்காடு .. .. | 10.00 | 68 | 13.95 | 68 | 63 | 12.71 | 52,072 | .. |
| 3 செங்கல்பட்டு .. .. | 7.00 | 34 | 8.04 | 34 | 34 | 7.45 | 35,305 | .. |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 2.00 | 6 | 2.01 | 6 | 6 | 2.01 | 28,000 | .. |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 3.00 | 13 | 3.10 | 13 | 13 | 2.79 | 20,950 | 20 |
| 6 மதுரை .. .. .. | 2.00 | 11 | 2.07 | 11 | 19 | 1.87 | 51,900 | 30 |
| 7 திருநெல்வேலி .. .. | 3.00 | 17 | 3.53 | 17 | 16 | 3.02 | 28,075 | .. |
| 8 இராமநாதபுரம் .. .. | 4.00 | 15 | 4.77 | 15 | 15 | 4.02 | 48,625 | .. |
| 9 சேலம் .. .. .. | 5.00 | 49 | 8.10 | 49 | 49 | 5.29 | 64,298 | .. |
| 10 தருமபுரி .. .. .. | 4.00 | 23 | 4.79 | 23 | 23 | 4.00 | 49,927 | .. |
| மொத்தம் | 50.00 | 318 | 65.38 | 318 | 311 | 55.06 | 4,51,411 | 50 |

[1982 மார்ச் 13 1982 மார்ச் 13]

30 (அ)

பத்தி 10.8.

வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் மேற் கொள்ளப்பட்ட சிறுபாசன ஏரிகளின் புள்ளி விவரங்கள்.

(மாவட்ட வாரியாக).

50 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டு வல்ல சிறுபாசன ஏரிகள்.

| வரிசை எண்ணும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் பெயர்களும். | வறட்சியால் பாதிக்கப் பட்ட ஊராட்சி ஒன்றியங் களின் எண்ணிக்கை. | ஊராட்சி ஒன்றியங் களின் நிர்வாகத்தில் உள்ள 50 ஏக்கருக்கு குறைவாகக் உள்ள சிறு பாசன ஏரிகளின் மொத்த எண்ணிக்கை. | மேற் கொள்ளப் பட்டு முடிக்கப் பட்ட வேலை களின் மொத்த எண் ணிக்கை. | பழுதுபார்க்கப் பட்ட புதுப்பிக் கப்பட்ட மதகு வேலைகளின் மொத்த எண்ணிக்கை. | மனித சக்தி நாட்கள் உருவாக்கப் பட்டவை. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி. (ரூபாய் இலட்சத்தில்.) | செலவழிக்கப் பட்ட மொத்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | அபிவிருத்திச் செய்யப் பட்ட கரைகளின் மொத்த நீளம் (கிலோ மீட்டரில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 செங்கல்பட்டு .. .. | 13 | 692 | 345 | 56 | 4,60,222 | 44.81 | 41.42 | 19,125 |
| 2 வட ஆற்காடு .. .. | 36 | 1,510 | 1,216 | 16 | 11,23,677 | 95,75 | 96.26 | 51,961 |
| 3 தென் ஆற்காடு .. .. | 30 | 1,231 | 538 | 30 | 4,87,565 | 50.04 | 47.95 | 32,930 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 4 | 338 | 39 | 7 | 41,194 | 3.53 | 3.53 | 2,315 |
| 5 சேலம் .. .. .. | 35 | 312 | 234 | .. | 1,84,197 | 19.98 | 19.98 | 4,685 |
| 6 தர்மபுரி .. .. .. | 16 | 1,825 | 898 | 62 | 6,96,103 | 60.12 | 59.54 | 19,736 |
| 7 பெரியார் .. .. .. | 17 | 219 | 73 | .. | 32.301 | 3.00 | 3.00 | 11,010 |
| 8 திருச்சிராப்பள்ளி .. .. | 28 | 1,781 | 419 | 19 | 4,59,370 | 31.79 | 29.39 | 20,496 |
| 9 புதுக்கோட்டை .. .. | 12 | 3,032 | 776 | .. | 3,67,365 | 45.70 | 45.70 | 41,176 |
| 10 மதுரை .. .. .. | 24 | 3,073 | 474 | 70 | 5,86,562 | 47.57 | 47.54 | 19,820 |
| 11 இராமநாதபுரம் .. .. | 27 | 3,802 | 1,678 | 14 | 16,01,656 | 120.34 | 119.10 | 1,15,080 |
| 12 திருநெல்வேலி .. .. | 16 | 1,440 | 305 | 56 | 2,68,462 | 25.00 | 22.62 | 24.350 |
| 13 கன்னியாகுமரி .. .. | 6 | 1,235 | 9 | .. | 7.698 | 1.00 | 1.00 | 0.918 |
| மொத்தம் .. | 264 | 20,481 | 7,004 | 380 | 63,26,373 | 548.63 | 537.03 | 3,73,604 |

இணைப்பு 30 (ஆ).

(பத்தி 10.8.)

வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் புள்ளி விவரங்கள் (மாவட்ட வாரியாக).

ஆர் 1, ஆர் 2 ஏற்கனவே உள்ள சாலைகளின் அபிவிருத்தி செய்தலும் புதிய சாலைகளை அமைத்தலும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண்ணும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் பெயர்களும். | வறட்சியால் பாதிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை. | மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்ட வேலைகளின் மொத்த எண்ணிக்கை. | புதியதாக அமைக்கப்பட்ட சாலைகளின் மொத்த எண்ணிக்கை. | புதியதாக அமைக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம். கி. மீ. | மேம்படுத்தப்பட்ட சாலைகளின் மொத்த எண்ணிக்கை. | மேம்படுத்தப்பட்ட சாலைகளின் மொத்த நீளம். கி.மீ | முடிக்கப்பட்ட வடிகால் வேலைகளின் எண்ணிக்கை. | உருவாக்கப்பட்ட மனித சக்தி. நாட்கள். | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி. | செலவழிக்கப்பட்ட மொத்த தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 செங்கல்பட்டு .. .. | 13 | 206 | 130 | 192.73 | 76 | 114.00 | 30 | 3,70,594 | 33.35 | 33.35 |
| 2 வட ஆற்காடு .. .. | 36 | 414 | 205 | 264.08 | 63 | 88.00 | 75 | 10,36,994 | 64.19 | 64.28 |
| 3 தென் ஆற்காடு .. | 30 | 175 | 106 | 140.58 | 69 | 82.67 | 44 | 3,08,542 | 38.12 | 38.12 |
| 4 தஞ்சாவூர் .. .. | 4 | 27 | .. | .. | 27 | 26.60 | 10 | 12,779 | 4.00 | 4.00 |
| 5 சேலம் .. .. | 35 | 197 | 197 | 189.30 | .. | .. | 20 | 34,970 | 30.19 | 30.10 |
| 6 தர்மபுரி .. .. | 16 | 378 | 161 | 208.35 | 105 | 116.80 | 25 | 4,04.176 | 37.93 | 37.93 |
| 7 பெரியார் .. .. | 17 | 206 | 78 | 82.20 | 109 | 162.00 | 19 | 2,36,613 | 22.45 | 22.45 |
| 8 திருச்சிராப்பள்ளி .. | 28 | 63 | 59 | 107.30 | .. | .. | 38 | 2,28,422 | 14.91 | 14,92 |
| 9 புதுக்கோட்டை .. | 12 | 72 | 71 | 64.60 | 2 | 5.80 | 4 | 71,428 | 4.94 | 4.97 |
| 10 மதுரை .. .. | 24 | 60 | 54 | 65.00 | 4 | 5.80 | 67 | 1,64,927 | 18.40 | 18.37 |
| 11 இராமநாதபுரம் .. | 27 | 189 | 145 | 209.10 | 32 | 49.20 | 53 | 19,13,433 | 34.78 | 34.78 |
| 12 திருநெல்வேலி .. | 16 | 17 | 1 | 0.50 | 16 | 23.60 | 21 | 39,274 | 4.00 | 4.00 |
| 13 கன்னியாகுமரி .. .. | 6 | 11 | 7 | 6.20 | 4 | 5.90 | 8 | 14,703 | 2.00 | 2.00 |
| மொத்தம் .. | 264 | 2,015 | 1.214 | 1,529.94 | 509 | 680.37 | 414 | 48,36,855 | 309.26 | 309.27 |

இணைப்பு 31 (அ).

(பத்தி 10.17).

1977, 1978 ஆம் மற்றும் 1979 ஆண்டு மற்றும் நீலகிரி மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வெள்ள நிவாரண வேலைகள்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | அரசுச் சாலைகள். | | | | ஊராட்சி ஊராட்சி ஒன்றியச் சாலைகள. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு. | | செலவு. | | ஒதுக்கீடு. | | செலவு. | |
| | (ருபாய் இலட்சத்தில்-ƒ | | | | (ருபாய் இலட்சத்தில்.) | | | |
| 0 | 77–78 முதல் 8–81 வரை. | 81–82 | 77–78 முதல் 80–81 வரை. | 81–82 | 77–78 முதல் 80–81 வரை. | 81–82 | 77–78 முதல் 80–81 வரை. | 81–82 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 செங்கற்பட்டு .. | 173.76 | 7.98 | 175.14 | .. | 172.06 | 15.93 | 160.41 | .. |
| 2 தென் ஆற்காடு | 149.21 | 13.13 | 152.67 | 152.67 | .. | 3.10 | 216.91 | .. |
| 3 வட ஆற்காடு .. | 75.55 | 2.73 | 82.06 | .. | 68.22 | 1.34 | 79,07 | 216.91 |
| 4 திருச்சிராப்பள்ளி | 83.83 (—) | 0.02 | 94.79 | .. | 118.36 | 0.47 | 122.23 | .. |
| 5 புதுக்கோட்டை .. | 139.41 | 0.11 | 131.75 | .. | 225.62 | 0.04 | 225.86 | .. |
| 6 தஞ்சாவூர் .. | 253.21 (—) | 17.56 | 624.70 | .. | 159.39 | 0.69 | 160.85 | .. |
| 7 மதுரை .. | 134.34 | 3.89 | 132.88 | .. | 106.42 | 7.58 | 103.33 | .. |
| 8 கோயம்புத்தூர் | 59.03 | 0.23 | 61.95 | .. | 38.62 | 0.14 | 37.83 | .. |
| 9 பெரியார் .. | 92.43 | 12.34 | 91.78 | .. | 33.02 | 12.88 | 34.57 | .. |
| 10 சேலம் .. | 61.99 (—) | 1.17 | 59.72 | .. | 46.04 | .. | 45.97 | .. |
| 11 தர்மபுரி .. .. | 16.37 | 0.01 | 16.54 | .. | 13.42 | .. | 12.53 | .. |
| 12 நீலகிரி .. .. | 180.41 | 25.55 | 182.25 | .. | 36.60(—) | 0.29 | 40.94 | .. |
| 13 திருநெல்வேலி .. | 112.13(—) | 1.54 | 118.20 | .. | 115.64 | 2.03 | 119.06 | .. |
| 14 இராமநாதபுரம் .. | 173.31(—) | 0.76 | 177.22 | .. | 226.05 | 1.12 | 221.00 | .. |
| 15 கன்னியாகுமரி .. | 34.80(—) | 0.06 | 34.85 | .. | 23.53 | .. | 24.00 | .. |
| மொத்தம் .. | 1.739'78 | 44.86 | 1.776'35 | .. | 1.612'75 | 4.493 .6 | 14.56 | .. |

**இணைப்பு 31 (அ)—தொடர்ச்சி.**

**(பத்தி 10, 17)—தொடர்ச்சி.**

**1977, 1978 மற்றும் 1979 ஆண்டு வெள்ள நிவாரண வேலைகள்—தொடர்ச்சி.**

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | சிறு பாசன ஏரிகள். | | | | கட்டடங்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு. | | செலவு. | | ஒதுக்கீடு. | | செலவு. | |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| | 1977-78 முதல் 1980-81 வரை. | 1981-82 | 1977-78 முதல் 1980-81 வரை. | 1981-82 | 1977-78 முதல் 1980-81 வரை. | 1981-82 | 1977-78 முதல் 1980-81 வரை. | 1981-82 |
| | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 செங்கற்பட்டு .. | 35.35 | .. | 34.29 | .. | 9.30 | .. | 9.84 | .. |
| 2 தென் ஆற்காடு | 39.52 | .. | 38.98 | .. | 17.87(—) | 0.09 | 16.90 | |
| 3, வட ஆற்காடு .. | 19.71 | .. | 19.98 | .. | 6.66 | .. | 6.74 | .. |
| 4 திருச்சிராப்பள்ளி | 23.06 | .. | 23.99 | .. | 11.32(—) | 0.20 | 10.24 | .. |
| 5 புதுக்கோட்டை .. | 154.58 | .. | 156.44 | .. | 3.24 | .. | 3.26 | .. |
| 6 தஞ்சாவூர் .. | 0.55 | .. | 0.56 | .. | 39.18 | 0.25 | 39.19 | .. |
| 7 மதுரை .. | 22.70 | .. | 22.80 | .. | 5.62 | .. | 5.64 | .. |
| 8 கோயம்புத்தூர் | 14.95 | .. | 14.95 | .. | 3.67 | .. | 3.72 | .. |
| 9 பெரியார் .. | 9.14 | .. | 9.13 | .. | 3.31 | .. | 3.27 | |
| 10 சேலம் .. | 5.39 | .. | 5.95 | .. | 7.25 | .. | 6-9[illegible] | .. |
| 11 தர்மபுரி .. .. | 7.65 | .. | 9.68 | .. | 0.51 | .. | 0.51 | |
| 12 நீலகிரி .. .. | .. | .. | .. | .. | 4.10 | 0.41 | 4.22 | .. |
| 13 திருநெல்வேலி .. | 32.89 | .. | 32.78 | .. | 4.89(—) | 0.05 | 4.94 | .. |
| 14 இராமநாதபுரம் .. | 49.38 | .. | 49.42 | .. | 6.39 | .. | 6.34 | .. |
| 15 கன்னியாகுமரி .. | 10.80 | 0.01 | 10.96 | .. | 0 41 | .. | 0.41 | .. |
| மொத்தம் .. | 426.27 | 0.01 | 427.91 | .. | 123.82 | 0.32 | 122.12 | .. |

இணைப்பு 31 (ஆ)

(பத்தி 10, 17)

மாவட்டத்தில் 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வெள்ள நிவாரண கட்டுமானப் பணிகளின் சாதனை நிலை.

| | அரசுச் சாலைகள். | | | ஊராட்சி ஒன்றியச் சாலைகள். | | |
|---|---|---|---|---|---|---|
| | எடுத்துக் கொண்டவை. | முடிக்கப் பட்டவை. | நடை பெறுபவை. | எடுத்துக் கொண்டவை. | முடிக்கப் பட்டவை. | நடை பெறுபவை. |
| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | 1,021 | 1,020 | 1 | 1,774 | 1,772 | 2 |
| | 1,057 | 1,054 | 3 | 2,430 | 2,430 | — |
| | 628 | 626 | 2 | 710 | 710 | — |
| | 707 | 707 | .. | 1,519 | 1,518 | 1 |
| | 775 | 775 | .. | 2,870 | 2,870 | — |
| | 1,625 | 1,620 | 5 | 1,791 | 1,785 | 6 |
| | 755 | 752 | 3 | 939 | 938 | 1 |
| | 744 | 744 | .. | 383 | 383 | .. |
| | 54 | 49 | 5 | 27 | 25 | 2 |
| | 393 | 393 | .. | 274 | 274 | .. |
| | 62 | 62 | .. | 56 | 56 | .. |
| | 620 | 614 | 6 | 570 | 570 | .. |
| .. | 879 | 878 | 1 | 1,220 | 1,220 | .. |
| .. | 927 | 926 | 1 | 2,701 | 2,695 | 6 |
| .. | 312 | 312 | .. | 238 | 236 | 2 |
| .. .. | 10,559 | 10,532 | 27 | 17,502 | 17,482 | 20 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

திங்கட்கிழமை, 1982 மார்ச் 15.

பங்குனி 2, துன்மதி திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.''

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும் ; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவாரோ ?

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண். 497— **திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

(இ) எத்தனை வருவாய் கிராமங்கள் புதிய தாலுக்காவில் சேர்க்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) 57 வருவாய் கிராமங்கள்.

**திரு. எம். சின்னசாமி :** பேரவைத் தலைவரவர்களே, கரூர் தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கிறது. தாலுக்காவினுடைய ஒரு கோடியிலிருந்து தலை நகரத்திற்கு வரவேண்டு

மென்றால் சுமார் 30 மைல்களைக் கடந்து வர வேண்டியிருக்கிறது. அது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு கால கட்டத்தில் அந்தப் பரிசீலனை முடிவடைந்து அது அமலுக்கு வரும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை இப்பொழுது முடிந்திருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கிறபொழுது பரப்பு, பிற்பட்ட தன்மை, மக்கள் தொகை, நில வரி, நிர்வாக வசதி ஆகியவற்றிற்கு ஏற்றாற் போல் தாலுக்காக்களும் மற்றவைகளும் பிரிப்பதாக இருக்கிறது. இதைப் பற்றிய பரிசீலனை முடிந்து அரசு நடவடிக்கை எடுத்து உத்தரவு போடுகின்ற இடத்திற்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சின்னசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அப்படிப் புதிய தாலுக்கா வரும் பொழுது அதற்கு என்ன பெயர் வைப்பதாக அரசு முடிவெடுத்துள்ளது ? எத்தனை பிர்க்காக்கள் சேர்க்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கிருக்கின்ற தாலுக்காவில் 11 பிர்க்காக்கள் இருக்கின்றன. அதிலே அரவக்குறிச்சி, பள்ளப் பட்டி, கே. பரமத்தி, தென்னிலை, சின்ன தாராபுரம் ஆகிய ஐந்து பிர்க்காக்களை ஒரு தாலுக்காவாகவும், புகளூர், வெங்கல், கரூர், தாழம்பட்டி, வெள்ளியணை, தொரணக்கல் பட்டி ஆகிய 6 பிர்க்காக்களை ஒரு தாலுக்காவாகவும் அமைக்க அரசு உத்தே சித்துள்ளது.

**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய தாலுக்கா அலுவலகம் எந்த ஊரில் அமைக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் ஆகியிருக்கிறது. குழந்தை பிறக்கிற நேரமாகியிருக்கிறது. குழந்தை பிறந்த பிறகு அது ஆணா பெண்ணா என்று தெரிந்த பிறகு பெயர் வைக்கப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் பிரிக்கப்படக் கூடிய தாலுக்காக்களில் ஒரு தாலுக்காவைப் பெரியார் மாவட்டத்தோடு இணைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் தற்போது இல்லை.



**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள டி. சி. புறம்போக்கு நிலங்களின் மீதுள்ள ஆக்கிரமிப்புகள்.**

*வினா எண். 498— **திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே சட்டப் பூர்வமாக ஒதுக்கப்பட்ட டி. சி. (D. C.) புறம்போக்கு நிலங்களில் தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மற்ற மாவட்டங்களில் ஆக்கிரமிப்பு நடந்துள்ளது.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக முறைப்படி தேவையான நடவடிக்கைகளை கோட்டாட்சியினர் எடுத்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது முறைப்படி எடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார்கள். சேலம், வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் குறிப்பாகக் கள்ளக்குறிச்சி தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா போன்ற யிடங்களில் கடந்த எட்டாண்டுக் காலமாக அவர்கள் கலெக்டரிடத்திலும், ஆர். டி. ஓ. விடத்திலும் கொடுத்தும் இன்று வரையில் கையகப்படுத்தாமல் அதிகாரிகள் இருக்கிறார்கள். கடந்த எட்டாண்டுகள் ஆகியும் கூட இன்னும் செய்யவில்லை. சேலம் மாவட்டத்திலும் இப்படி நடந்திருக்கிறது. கிட்டத்தட்ட 100 பேர்கள் மூன்று ஜில்லாக்களிலும் கொடுத்திருந்தும் ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே, ஒரு ஸ்பெஷல் ஆர்டர் போட்டு அவர்களுக்காகக் கையகப்படுத்தப்பட்ட இடங்களை அவர்களுக்கே ஒப்படைக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்பில் இரு வகை இருக்கிறது. ஒரு ஆக்கிரமிப்பு ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள்— நான் ஜாதி இந்துக்கள் என்று சொல்லவில்லை ; ஆதி திராவிடர்கள் அல்லாத மற்றவர்கள்— அந்த இடங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். சில இடங்களில், ஆதி திராவிடர்களே, மற்றவர்களுக்கு கொடுத்து விடுகிறார்கள். அவைகளை எல்லாம் பார்த்து, விரைவிலே கொடுக்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும்

எடுத்துக் கொண்டிருக்கிறது. எங்கேயாவது குறிப்பிட்ட இடங்களில் இருந்தால் நீங்கள் பெயர்களையெல்லாம் என்னிடத்தில் கொடுங்கள்; நான் விரைவிலே நடவடிக்கை எடுக்கிறேன். ஆதி திராவிடர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு மிகவும் உன்னிப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவைத் தம்பி :** ஆதி திராவிடர்களுக்குப் பட்டா வழங்குகின்ற இலாகாவில் ஆதி திராவிடர்கள் மீது உண்மையிலே அக்கறை உள்ள, குறிப்பாக, ஆதி திராவிட அதிகாரிகளை அரசு நியமிக்க முன் வருமா? ஆதி திராவிடர்களின் மீது அக்கறை இல்லாதவர்கள் மிகப் பெரிய பொறுப்பில் இருக்கிற காரணத்தால், அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்து, ஆதி திராவிடர்களுக்கு அளித்த சலுகைகளை அல்லது அளிக்க வேண்டிய உரிய சலுகைகளை ஆதி திராவிடர்களுக்குச் சேராமல் தடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அப்படிப்பட்ட எண்ணங்கள் அரசுக்குத் தெரிந்தால் நடவடிக்கை எடுத்திருக்கும். ஆனால், ஆதி திராவிடர்கள் மீது அந்தவிதமான நம்பிக்கையில்லாத அதிகாரிகள் இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்தில் நலிந்தவர்கள்மீது மற்றவர்கள் அக்கறை காட்டுவதுதான் மனிதாபிமானம், மனிதத் தன்மை என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஆக்கிரமிப்புகள் இரண்டு விதம் என்று சொன்னார்கள். ஒன்று, ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள் வந்து ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்; மற்றொன்று ஆதி திராவிடர்களே மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, ஆதி திராவிடர்கள் தாங்களே நிலத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அதை அரசு கையகப்படுத்துவதில் கொஞ்சம் சிக்கல் இருக்கலாம். ஆனால், ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள் இந்த நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவர்களை உடனடியாக வெளியேற்ற அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்துதான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. எங்கேயாவது காலதாமதம் ஆகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அங்கே நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. அரசுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த விதத்தில் உதவி செய்ய வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. சி. பழனிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் ஆக்கிரமிப்பு செய்த நிலங்களை, பட்டாக்கள் இருந்தும், அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு அங்குள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்க அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் என்கிறபோது, ஆக்கிரமிப்பு என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் ஆக்கிரமிப்புச் செய்தாலும், யார் ஆக்கிரமிப்புச் செய்தாலும் நடவடிக்கை எடுப்பது அந்த நிலத்தினுடைய தன்மையைப் பொறுத்தது. விவசாயத்திற்காக, ஏரி இருக்கிற ஆயக்கட்டு இருக்கிறது. ஆயக்கட்டைப் பாதிக்கும் விதத்தில் ஆக்கிரமிப்பு செய்தால் யாராக இருந்தாலும் அகற்றப்படும். ஆனால், மற்ற பகுதியாக இருந்தால், ஆதி திராவிடர்களுக்கு மனைக்குக் கொடுக்க இந்த அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரப்பகுதிகளில் வாழ்கிற ஆதி திராவிடர்களுக்குப் பட்டா வழங்கும்போது, நகரசபையும், வீட்டு வசதி வாரியமும் தடையாக இருப்பதனால், அவர்களுக்குப் பட்டா வழங்க முடியவில்லையென்ற கருத்து இருக்கிறதே, அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் அரசு நிலங்கள் இல்லை. அப்படி இருக்கிற அரசு நிலங்களும் அரசு உபயோகத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது புறம்போக்கு நிலம் இருந்தால் ஆதித் திராவிடர்களுக்குக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை போன்ற நகரங்களில் இலவசமாகக் கொடுக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைத் தனியார் ஆக்கிரமிப்பு செய்வது ஒரு புறம் இருக்க, ஆதி திராவிட மக்களுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை உடனடியாக சில அதிகாரிகள் மனைப் பிரிவுகளாகப் போட்டு, அவற்றை அளந்து, அவற்றினுடைய எல்லைகளை நிர்ணயிக்க காலதாமதம் செய்வதையும் அதே நேரத்தில், கையகப்படுத்திய நிலங்களை அந்த நிலங்களின் உரிமையாளர்கள் மற்றவர்களுக்கு விற்று, தொல்லைகள் கொடுத்து, நீதிமன்றங்களுக்கு அவர்களை இழுத்து, இழுத்து, பல வருடங்களாக இந்த நிலம் ஏழைகளுக்குப்

[1982 மார்ச் 15

ஆதிதிராவிடர்களுக்கும் கொடுக்காத நிலைமையையும் அரசு அறியுமா? அதற்கு உடந்தையாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, அதிகாரிகளைப் பொறுத்தவரையிலும் தாமதப்படுத்துவதை அரசு உடனடியாகத் துரிதப்படுத்தி அதை நடைமுறைப்படுத்தும். அதிகாரிகள் செய்கிற தவறுகளை இந்த அரசு கண்டித்துத திருத்தும். நடவடிக்கை எடுக்கும். ஆனால் நீதிமன்றங்களுக்கு செல்லுகிறபோது நீதிபதிகள் எதைச் சொன்னாலும் அது சரியோ, தப்போ அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டப்பாட்டில் இருக்கிறோம்.

**திரு. கு. பா. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, விழுப்புரம் தாலுகா, கப்பியாம்புலியூர் கிராமத்தில் ஏற்கனவே சென்ற முறை மானியக் கோரிக்கையின்போது கூட குறிப்பிட்டு இருந்தேன். அந்த கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தை மீண்டும் அரசு—ஏரியிலே மரங்கள் போடவேண்டும் என்ற காரணத்தால்—எடுத்துக் கொண்டு விட்டது. அந்த நிலங்களை மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருப்பிக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட தாலுகாவில் குறிப்பிட்ட ஊரைப் பற்றிய விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

### பாலிஸ்டர் நூலிழைக்கு விதிக்கப்பட்டுள்ள வரி.

*வினா எண். 499—**திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்கானிக் கெமிகல்ஸ் நிறுவனத்தார் தயாரிக்கும் பாலியஸ்டர் ஸ்டேபிள் பைபருக்கு (Polyster staple Fibre) 4 சதவீதம் வரிவிதிப்பிலிருந்து 3 சதவீதமாக தமிழக அரசு குறைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :**

(அ) மற்றும் (ஆ) : 20-12-1972 முதல் பாலியஸ்டர் நூலிழை மீது குறைந்த வரி வீதமாக 2 சதவீத பலமுனை வரி விதிக்கப்பட்டு வந்தது. 20-12-1980 முதல் இவ்வரி வீதம் 3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூ. 38.5 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

**துணை வினாக்கள் இல்லை.**



1982 மார்ச் 15]

### வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு.

* வினா எண். 500—**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளைப்பூண்டு அழுகும் பொருளாக அறிவிக்கப்பட்டு வரிவிலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இக்கோரிக்கை ஏற்பதற்கு இல்லை.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு இல்லை என்று சொன்னார்கள். அது அழுகும் பொருளாக அறிவிக்கப்பட்டு வரி விலக்கு அளிக்கப்படுமா என்கிற கோரிக்கை. எனவே வெள்ளைப் பூண்டு என்பது அழுகும் பொருளாக இருக்கின்ற காரணத்தினால் ரொம்ப நாள் அதை வைத்து வாணிகம் செய்ய முடியாத காரணத்தினால் அது விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைந்து இருக்கின்ற காரணத்தாலும், மீண்டும் கருணையோடு பரிசீலனை செய்து அழுகும் பொருளாக இருக்கின்ற நிலையில் அதற்கு வரி விலக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, பச்சைக் காய்கறிகள், பழங்கள், வெற்றிலை, வாழை இலை, பூ, முட்டை, மாமிசம், மீன் ஆகியவைகளை அழுகும் பொருள்களாக இன்றைக்கு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. வெள்ளைப் பூண்டை அழுகும் பொருளாக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் இப்படி பல இடங்களில் இருந்து இப்படி கோரிக்கைகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்யும்படி நான் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதில் வரி விலக்குக் கொடுத்தால் அரசுக்கு 8 லட்சம் ரூபாய் வரி இழப்பு ஏற்படுகிறது.

**திரு. குமரி அனந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழுகும் பொருள் பட்டியலில் அது சேரவில்லை என்று சொன்னார்கள். அது வாயுத் தொல்லையையும், இருதய நோயையும் போக்க சிறந்த மருந்துப் பொருளாக இருக்கின்ற வகையிலாவது அதனை கணக்கில் எடுத்துக் கொண்டு அரசு பரிசீலனை செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, மருந்துப் பொருளாக இருப்பதால் அதை இரண்டு விதங்களில் நோக்க வேண்டி இருக்கிறது. மருந்துப் பொருள

[1982 மார்ச் 15

எல்லோரும் வாங்குகின்ற வகையில் குறைக்கப்படுவது ஒன்று. மருந்துப் பொருள்களுக்கு அதிக டிமாண்டு இருப்பதால், எதில் இதை சேர்ப்பது என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வெங்காயத்தைப் போல வெள்ளைப் பூண்டும் அழுகும் பொருள் வகையைச் சேர்ந்ததுதான் என்பது அனைவருக்கும் தெரியும். வெங்காயத்தையாவது 6 மாதத்திற்கு பாதுகாக்கலாம். ஆனால் வெள்ளைப் பூண்டை 3 மாதங்களுக்கு மேல் பாதுகாக்க முடியாது ; அழுகி விடும். மேலும் கொடைக்கானல் பகுதியில் இந்த வெள்ளைப் பூண்டை சிறு விவசாயிகள், 60 சென்ட், 70 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் தான் விவசாயம் செய்கிறார்கள். எனவே இதை மறுபரிசீலனை செய்து வரி விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இது பற்றி விளக்கமாகக் கடிதம் மூலமும் நேரடியாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் தெரிவித்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இப்போது கொடைக்கானலில் இப்படிப்பட்ட கஷ்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்த வெள்ளைப் பூண்டுக்கு சில வட மாநிலங்களில் வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது 7 இலட்சம் ரூபாய் இழப்பு வரும் என்று சொன்னார்கள். கோடிக் கணக்கில் விவசாயிகளுக்கு சலுகைகள் அளிப்பதாகச் சொல்லும் இந்த அரசு இந்த வெள்ளைப் பூண்டு பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நன்மை பயக்கும் என்பதால் வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு செய்தால் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும். ஆகையால் வட மாநிலங்களைப் போல இங்கேயும் வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வட மாநிலங்களிலே இதற்கு வரி விலக்கு இருக்கிறதா இல்லையா என்ற கணக்கு என்னிடம் இல்லை. அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்றால் அது பற்றி அரசு யோசிக்க வேண்டியதுதான். அதே நேரத்தில் வரி போடுவதால் நல்ல பெயர் வருமா, வரி போடாததால் நல்ல பெயர் வருமா என்பது முக்கியமல்ல. இது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.



1982 மார்ச் 15]

**கிண்டி குதிரைப்பந்தய மைதானத்திற்குள் ரகசிய சூதாட்டம்.**

*வினா எண். 501—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திற்குள் கள்ளத்தனமாக ரகசிய சூதாட்டம் (ரேஸ் பெட்டிங்ஸ்) நடத்தி அரசுக்கு வர வேண்டிய வரி ஏய்ப்பு செய்வதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : அனுமதிக்கப்படாத வகையில், சென்னை குதிரைப் பந்தய மைதானத்திற்குள் பணையம் வைத்து சூதாடுவதாக அரசிற்கு புகார்கள் ஏதும் வரவில்லை. சென்னை, குதிரைப் பந்தய மைதானத்திற்குள் வகை செய்யப்பட்டுள்ள அடைப்பிடத்திற்குள் அல்லாமல் வேறிடங்களில் யாராவது செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தில் சட்ட விரோதமான பெட்டிங் மூலம் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. சமீபத்தில் பத்திரிகையிலும் இது பற்றிய செய்தி வந்திருக்கிறது. இந்த புக்கிங் முறையில் பந்தயம் கட்ட பெரும் பணக்காரர்கள் கணக்கு இல்லாமல் சங்கேத மொழியில் 5, 500 என்று சொல்கிறார்கள். 2,500 ரூபாய்க்கு மேல் புக்கிங் கட்ட வேண்டியிருந்தால் வருமான வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக பந்தயம் கட்டுகிறவர்கள் ஒரே கார்டில் கட்டாமல் பல கார்டுகளில் புக்கிங் கட்டுவதால் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே; என்னென்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதை அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அதையும் மீறி தவறு செய்வதற்கு இடமிருக்கிறது. அது பற்றி இன்றைக்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்து அதை ஒழிப்பதற்கு அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த குதிரைப் பந்தயங்களில் ஓனர், ட்ரெயினர், ஜாக்கிகள் சேர்ந்து கொண்டு மோசடி செய்வதும், அப்பாவி மக்கள் பணத்தை கபளீ

[1982 மார்ச் 15

கரம் செய்வதும் அரசுக்குத் தெரியுமா ? நேற்று கூட இந்த சம்பவம் நடந்திருக்கிறது. இந்த குதிரைப் பந்தயத்தை லண்டன் மாநகரில் நாய்களை வைத்து குதிரைகளை ஓட்டுகிறார்கள். அதைப் போல இங்கேயும் ஜாக்கிகள் இல்லாமல் குதிரைகள் ஓட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அப்பாவி மனிதர்களை அவர்கள் எப்படியும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அவர்கள் யாரும் அங்கே போவதில்லை. விளையாடுவதற்கு வசதி படைத்தவர்கள் தான் அங்கே போகிறார்கள். சிலர் ஏமாற்றப்படுகிறார்கள் என்றால் அவர்கள் அங்கே போகாமல் இருப்பதுதான் நல்லது. இது அவசியமானது, அத்தியாவசியமானது அல்ல, அங்கே போகிறவர்கள் வீட்டிலே இருந்து வேலை பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, சூதாட்டத்தில் நம்பிக்கை இல்லை என்று கூறும் இந்த அரசு 'ஆஃப் கோர்ஸ் பெட்டிங்' என்ற சூதாட்டத்தை கண்காணித்து வருவதற்குப் பதிலாக இந்த சூதாட்டத்தையே இல்லாமல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை ஒழிக்க வேண்டியது மக்களாட்சியினுடைய கொள்கைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இங்கே நாம் குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டால் இங்குள்ள மக்கள் ஹைதராபாத்திற்கும், பெங்களூருக்கும் போய்விடுவார்கள். அதனால் நமக்கு வருமானம் குறைகின்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே சுற்றிலும் நடந்துகொண்டிருக்கின்றது இருந்தாலும் அதை ஒழிக்கப்போவதில்லை என்று அரசு எண்ணவில்லை அதைப் பற்றிதீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, ஒரு இடத்திலே குதிரைப்பந்தயத்தை ஒழித்து விட்டால் மற்ற இடங்களுக்கு போவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் ஊட்டியிலே குதிரைப் பந்தயம் நடத்தப்படுகின்றது. அதற்கு மற்ற வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம் வருகின்றார்கள். மேலும் நம்முடைய ஏழை எளிய மக்கள் இந்தக் குதிரைப் பந்தயத்திற்கு தினசரி போவதை ஒரு பழக்கமாகக் கொள்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இதைத் தடுக்க அரசு முன்வருமா ?



1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, ஏழை எளியவர்கள் ஏன் அங்கே போகிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் போகாமல் இருப்பதற்காக நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

## உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் வரிசைகளில் சேர்க்கும் செயற்குறிப்பு.

*வினா எண் 502—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கல்லூரிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் (Teaching Staff) வரிசையில் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய விகிதத்தை (ரூ. 700-40—1,100-50-1,300-EB 50—1,600) போலவே கலைக் கல்லூரியில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கும் விரிவு படுத்தலாமா என்பதைப்பற்றி மத்திய அரசுடன் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடற் பயிற்சி இயக்குநர் பதவியினையும் நூலக ஆசிரியர் பதவியினையும் உதவிப் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தி அதற்குரிய சலுகைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக வைக்கப்பட்டும் இன்றுவரை அது நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இந்த கோரிக்கையினை இந்த அரசால் எப்போது நிறைவேற்ற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தப் பதவி உயர்த்தப்படுகின்றபோது ஏற்படுகின்ற செலவினத்தில் 80 சதவீதத்தை 5 வருடத்திற்கு மத்திய அரசுதான் தர வேண்டும். அவர்கள் தருவதற்கு ஒப்புக்கொண்டால்தான் முடியும். ஆகவே அவர்களிடத்திலே சொல்லி நாம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்லி அதன்பிறகு அவர்கள் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியதற்கு பிறகு அமுலுக்கு வரும். இப்போதுதான் நம்முடைய ஒப்புதலைத்

தெரிவித்து இருக்கிறோம். ஆகவே அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தந்துவிடுவார்களேயானால் இது அமுலுக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. கோபாலன் :** தலைவரவர்களே, கல்லூரிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் பதவிக்கு எம்.ஏ., பி.எட். பட்டம் படித்தவர்களைத் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, டீ.பி.எட், படித்தவர்களுக்கு உயர்நிலைப்பள்ளியிலும் இடம் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும் இடம் கிடைப்பதில்லை. இந்த நிலைமையிலே அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## சுயாட்சி பெற்ற கல்லூரிகள்.

* வினா எண் 503— **திரு. நா. பழனிவேல் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளுக்கு சுயாட்சி முறை வழங்குவது எந்த அடிப்படையில் ?

(ஆ) சுயாட்சி பெற்ற கல்லூரிகளுக்கு அரசு விசேஷ உதவி ஏதும் செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் நிலைபெற்று பல்கலைக் கழகத்துடன் நிரந்தரமான இணைப்பு பெற்ற ஒரு கல்லூரி பல்கலைக்கழக நாட்குறிப்பேட்டின் இருபத்தாறாம் அத்தியாயம் 9 (எ) விதியின்படி குறிப்பிட்ட பாட வகுப்புக்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட தகுதியுடையதாகிறது.

(ஆ) தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பாக எந்த விதமான மானியக் கொடையையும் வழங்கவில்லை.

## கதர், கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண் 504— **திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). 1980–81–ம் நிதியாண்டில் எவ்வளவு கதர் துணிகள் மற்றும் கைத்தறித்துணிகள் விற்கப்பட்டன ?



(ஆ). இவைகளுக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு வழங்கிய ரிபேட் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ). 1980–81–ம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்–டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்ட கைத்தறித் துணியின் மதிப்பு ரூ.7,541.00 இலட்சம் ஆகும். இதே ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளின் மதிப்பு ரூ. 692.62 இலட்சம் ஆகும்.

(ஆ). கைத்தறித் துணிக்குத் தள்ளுபடித் தொகையாக மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு முறையே ரூ. 298.94 இலட்சம் மற்றும் ரூ.139.86 இலட்சம் ஆகும். கதர் துணிக்கு காதி கமிஷன் ரூ.84.41 இலட்சமும். மாநில அரசு ரூ. 30.94 இலட்சமும் தள்ளுபடி தொகையாக வழங்கியுள்ளது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி மற்றும் கதர் துணிகளின் விலையினை நிர்ணயிப்பது யார் ? மானியத் தொகையினை எந்த விகிதத்தில் கொடுக்கிறார்கள் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டில், 20-வது அகில இந்திய கைத்தறி விழாவினையொட்டி 30 தினங்களுக்கு, 20 சதவீதம் தள்ளுபடியை மாநில அரசு கொடுத்தது. அதில் தீபாவளிக்கு 20 நாட்களும், பொங்கல் பண்டிகையின்போது 10 நாட்களும் என்ற வகையில் மாநில அரசு 10 சதவீதமும், மைய அரசு 10 சதவீதமும், சிறப்புத் தள்ளுபடிக்கு அனுமதித்துள்ளது. மேலும் கல்கத்தா, பம்பாய், லக்னோ போன்ற இடங்களில் நடைபெற்ற கைத்தறிப் பொருட்காட்சிகளின்போது மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்கும் மைய அரசு 20 சதவீத தள்ளுபடியை அனுமதித்துள்ளது. அரசு தள்ளுபடி அனுமதிக்கப்பட்ட காலத்தில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறித் துணிகள் மட்டும் 4,644.89 லட்சம் ஆகும். ஆகவே இந்தத் தள்ளுபடியை மாநில அரசு, மைய அரசு ஆகிய இரண்டுமே தருகிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்கிற வகையில் அவர்களுக்கு இந்த ரிபேட் முறை ஆண்டு முழுவதும் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** : தலைவர் அவர்களே, இப்போதைக்கு அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கதர், கைத்தறி துணிகளுக்கு மத்திய அரசு ரிபேட் கொடுத்து உதவியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த ரிபேட்டை அந்தந்த ஆண்டிலேயே மத்திய அரசுக்கு வழங்குகிறதா ? இல்லையென்றால் மாநில அரசுக்கு ரிபேட் என்ற வகையில் மையஅரசு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தர வேண்டிய ரிபேட் தொகையை வாங்கித்தான் அவ்வப்போது தந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் உடனேயே தருவது இல்லை. கணக்குப் பார்த்து பிறகுதான் தருகிறார்கள். அப்படித் தருகிறபோது, அந்தந்த தொகைகளை நாம் கோவாப் டெக்சுக்கு அவ்வப்போது கொடுத்துவிடுகிறோம்.

### கைத்தறித் துணிகள் ஏற்றுமதி

*வினா எண் 505. திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து கைத்தறித்துணிகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் என்னென்ன ரகங்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன ?

(இ) அந்த ரகங்கள் எந்தெந்த இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) ரியல் மெட்ராஸ் கைக்குட்டைகள், லுங்கிகள், சட்டைத்துணிகள், அலங்கார படுதா துணிகள் (Furnishing) முதலிய ரகங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(இ) சைதாப்பேட்டை, அனகாபுத்தூர், சேலம், கரூர், குறிஞ்சிப்பாடி முதலிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் நம்முடைய மாநில சங்கம் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தி அதன் மூலமாக நெசவாளிகளுக்கு உதவி செய்கிறது. என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில்



அதே அளவு கைத்தறி துணிகளை தனியார் முதலாளிகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால், அதனுடைய அதிக வருவாய் நம்முடைய நெசவாளிகளுக்கு கிடைப்பது இல்லை. ஆகவே, மாநில சங்கத்தின் மூலமாகவே வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சங்கம் ஏற்றுமதி செய்தாலும், தனியார்கள் ஏற்றுமதி செய்தாலும், நெசவாளிகளுக்கு வேலை கிடைக்கிறது. கூலி கிடைக்கிறது. ஆகவே நெசவாளிகளுக்கு கூலி கிடைக்கவில்லை அல்லது வருமானம் குறைகிறது என்பது உண்மைக்கு மாறானது. தனியார் துறையில் ஏற்றுமதி செய்தாலும்கூட தமிழகத்தில் இருக்கிற நெசவாளிகளுக்கு நல்லதுதான்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? இந்த ஆண்டு நமக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரத்தின்படி 1979—80-ல் தமிழகத்திலே இருந்து 56.35 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி வகைகள் ஏற்றுமதி யாகியிருக்கிறது. அதே சமயத்தில் அகில இந்தியா முழுவதும் ஏற்றுமதியான துணிகளுடைய மொத்த மதிப்பு 287.72 கோடியாகும். 1980—81-ல் தமிழகத்திலே யிருந்து 78.96 கோடிக்கு ஏற்றுமதியாகியிருக்கிறது, அகில இந்திய ரீதியில் 330.02 கோடியாகும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற பட்டு கதர்கைத்தறி துணிகளின் விலைஅதிகமாக இருக்கிற காரணத்தால், அதற்கு தமிழகத்திலே மார்க்கெட்டு இல்லாமல் போய்விடுகிறது என்கிற காரணத்தால், பட்டுக் கைத்தறி துணிகளை வெளிநாட்டில் ஏற்றுமதி செய்து விற்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிப் பட்டை பொறுத்த மட்டில் அரசு உதவித் தேவைப்படுகிற நிலையில் அவர்கள் இல்லை. அவைகள் நல்ல முறையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது என்பதை எனக்குக் கிடைத்த விவரங்கள் சொல்கின்றன.

[1982 மார்ச் 15

## கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தி.

வினா எண் 506. திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் திட்டம் தற்போது அமுலில் உள்ளது.

(ஆ) இத் திட்டத்தின்கீழ் முதன் முதலில் பாலியஸ்டர் ரகத்தில் சட்டைத் துணிகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ரகத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட ரகங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. பாலியஸ்டர் சட்டைத்துணி.
2. பாலியஸ்டர் சேலைகள்.
3. ஸ்பன் ரகம் (பாலியஸ்டர்).
4. பாலியஸ்டர் சூட்டிங்.
5. பாலியஸ்டர் வேட்டிகள்.

(முற்பகல் 9—30)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த கைத்தறி பாலியஸ்டர் துணிகள் இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்படுகிறதா ? அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தியா முழுவதும் நம் கோ ஆப்டக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளுக்கும் தேவைப்பட்டவர்கள் வாங்கிச் செல்லலாம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த பாலியஸ்டர் துணிகளுக்கு அதிகமான அளவிற்கு மார்க்கட் இருக்கிற காரணத்தினால் மேலும் அதை கூடுதலாக உற்பத்தி செய்ய, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இந்தத துணிகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு சிறப்புத் திட்டம் ஏதாவது வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாலியஸ்டர் ஷர்ட்டிங் முதன் முதலாக ஸ்ரீவில்லிபுத்தூரில் நெய்யப்பட்டு பிறகு ராஜபாளையம், சுந்தரபாண்டியம், சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை, சத்திரப்பட்டி, கைத்தறிநெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



1982 மார்ச் 15]

பாலியஸ்டர் சேலைகள் முதன்முதலாக கோவையில் ஆரம்பிக்கப்பட்டு அருப்புக்கோட்டை, ராஜபாளையம்,சேலம், நாகர்கோவில் போன்றயிடங்களில் மேற்கொள்ளப்பட்டது. பாலியஸ்டர் ஸ்பன் ரகம் முதன்முதலாக மதுரையில் ஆரம்பிக்கப்பட்டு பிறகு திருத்தணி, ராஜபாளையம் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டது. பாலியஸ்டர் சூட்டிங் ஈரோடு, சென்னிமலையில் ஆரம்பிக்கப்பட்டதோடல்லாமல் இப்போது இதை நெய்யும் தறிகள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. பாலியஸ்டர் வேட்டிகள் சேலம், ராமநாதபுரம், செங்கல்பட்டு, நாகர்கோவில் போன்றயிடங்களில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. தற்போது 4,751 தறிகள் பாலியஸ்டர் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்த பாலியஸ்டர் துணி அல்லது நூலுக்கு வரியைரத்து செய்யவேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் கோரியிருக்கிறோமா ? சததிரப்பட்டி போன்ற வட்டாரங்களில் எல்லாம் இவை ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நெய்து தயாரித்த துணிகளை-கோ-ஆப்-டெக்ஸ்-டம் ஒப்படைக்கிறபோது காலாகாலத்தில் பணம் கிடைக்காத நிலையில் சில மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு சீக்கிரம் பணம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பிரச்னை குறிதது அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : வெப்ப நாடுகளுக்கு ஏற்ற உடை வேட்டி என்பதால் மகாத்மா காந்திஜி அவர்கள் வேட்டியை மட்டும் உடுத்திக்கொண்டு சட்டையைக் கழற்றிவிட்டார்கள். எனவே வெப்ப நாடுகளான ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா, தூர கிழக்கு நாடுகள் இவற்றில் வேட்டியை அணிய பிரசாரம் செய்ய தமிழ்நாடு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவரவர்கள் பழக்கத்திற்கு ஏற்பத்தான் உடைகள் அணிந்து கொண்டிருக்கிறார்கள். வேட்டி கூட நாம் ஒருவிதமாகவும் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் வேறுவிதமாகவும் அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் அவர்கள் வேட்டி மாதிரி வேறு ஒரு உடையை அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அணிகிற உடை, நம் கைத்தறித் துணி அவர்கள் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிறகு இருக்கிறது. ஆகவே இந்த ப்ளீடிங் மெட்ராஸ் என்ற துணி ஆப்பிரிக்கா நாடுகளில் நல்ல விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

[1982 மார்ச் 15

## இராஜபாளையம் சங்கரன்கோவில் தாலுக்காக்களில் அனுமதியின்றி வெட்டி யெடுக்கப்பெறும் சுண்ணாம்புக் கற்கள்.

* வினா எண் 507. திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளயம், சங்கரன்கோவில் தாலுக்காக்களில் முறையான குவாரி லைசென்ஸ் பெறாமல் பெரும்பாலானவர்கள் சுண்ணாம்புக்கற்கள் எடுத்து கள்ளத்தனமாக செம் தயாரிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதனால் ஆலங்குளம் அரசு சிமென்ட் ஆலை பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளதென்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இம்முறை தடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இராசபாளையம் தாலுக்காவில் முறையான குவாரி லைசென்ஸ் பெற்று மூன்று நிறுவனங்கள் 'செம்' பவுடர் தயாரிக்கிறார்கள். சுண்ணாம்புக்கற்கள் எடுப்பதற்கு இவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. யாரும் கள்ளத்தனமாக செம் தயாரிக்கவில்லை. சங்கரன் கோயில் தாலுக்காவில் இருக்கும் ஒருவர் பந்தப்புளி கிராமத்தில் சுண்ணாம்புக்கல் எடுக்க குத்தகை பெற்று தொழிற்சாலை நிறுவியுள்ளார். தென்மலை கிராமத்தில் பட்டா நிலங்களில் சுண்ணாம்புக்கல் குவாரி செய்ய இராஜபாளையத்தில் உள்ள ஒரு 'செம்' தொழிற்சாலைக்கும் புளியங்குடியில் உள்ள கூட்டுறவு சங்கத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. பந்தப்புளி கிராமத்தில் சுண்ணாம்புக்கல் அனுமதியின்றி குவாரி செய்துவருவது கவனத்திற்கு வந்தது. ஏற்கெனவே, மூன்று நபர்கள் மீது வழக்குப் போடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை, தாசில்தார் ஆகியோர்களுக்கு இப்படி திருட்டுத்தனமாக அனுமதியின்றி எடுத்துச்செல்வோர் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆலங்குளம் சிமெண்டு ஆலை பாதிக்கப்படும் சூழ்நிலையில் இல்லை.

(இ) இடம் இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடி கிராமத்தில் முறையாக லைசென்ஸ் பெற மனு போடப்பட்டு, இதுவரைக்கும் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ? விரைவில் அவர்களுக்கு லைசன்ஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?



1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருட்டுத்தனமாக சுண்ணாம்புக் கற்கள் எடுத்துக்கொண்டு போவது பற்றித்தான் கேள்வி. பல பேர்கள் மனு போட்டிருக்கிறார்கள். குறிப்பாக யாருடைய மனு என்று கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும், ஆனால், மொத்தம் வந்திருக்கக்கூடிய மனுக்கள், அவைகளின் தகுதிக்கேற்ப பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்தினால், லாபகரமாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே, இதை அரசே விரைவில் ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசீலனை இப்போது ஏதும் இல்லை.

## தருமபுரியில் நூற்பாலை ஏற்படுத்துதல்.

*வினா எண் 508— திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரியில் அரசு சார்பாக ஸ்பின்னிங் மில் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியில் 25,000 கதிர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை சுமார் 7 கோடி அளவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1982-83 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த ஆலை நிறுவப்பட்டு, சுமார் 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஏற்படக்கூடிய இந்த ஸ்பின்னிங் மில், எந்த இடத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ? அப்படியானால், அந்த மில் உற்பத்தி செய்ய, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து எப்போது முதல் உற்பத்தி தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை எல்லாம் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, இப்போது அரசுக்கு வந்திருக்கிறது. அரசினுடைய முடிவு வெகு விரைவிலே அறிவிக்கப்பட இருக்கிறது. 1982-83-லே இது துவங்கப்பட்டு, 1984 ஆம் ஆண்டிலே உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## விழுப்புரத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

*வினா எண். 509—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா:—

தமிழ்நாடு அரசு நிறுவனம் (Sipcob) தென்னாற்காடு ஜில்லாவில் தொழில் மையம் (Industrial Centre) ஏற்படுத்தப்போவதாக அறிவித்தபடி தொழிற்பேட்டையை விழுப்புரத்தில் நிறுவ அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் கடலூருக்கு அருகில் சுமார் 500 ஏக்கர் பரப்பில் தொழில் இணையம் ஒன்றை அமைத்து, ரசாயனத் தொழில்களை ஊக்குவிக்க அரசு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரத்தில் சாலை போக்குவரத்து வசதி, ரயில் போக்குவரத்து வசதி, மின்சாரம், தொலைபேசி தொடர்பு இவ்வளவும் சிறந்த அளவில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே விழுப்புரத்திலே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால், எல்லாவிதத்திலும் உபயோகமாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே அங்கே வேறு ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கடலூர் அருகே சிப்காட் காம்ப்ளெக்ஸ் ஆரம்பிக்கப்படுவது பற்றியது. மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் கேள்வி விழுப்புரத்திலே அதற்குப் பக்கத்திலே தொழிற்பேட்டை நிறுவ முடியுமா என்பது பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரத்திலே தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் நன்றி. விழுப்புரம் தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பரிசீலிக்கப்படும் என்றுதான் அமைச்சர் சொன்னார்.

திரு. கு. பா. பழனியப்பன் : விழுப்புரம் பகுதி தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூருக்கு அருகே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க இருக்கிறோம். விழுப்புரத்திலே ஆரம்பிக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 6 தாலுக்காக்கள் தமிழகத்திலே தொழிலில் பின்தங்கியிருப்பதாக அறிவிக்க இருக்கிறோம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளையும் மனதிலே கொண்டு பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்பேட்டைகளில் ஆதி திராவிடர்களுக்கான சலுகைகள் அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிற்பேட்டை கட்டிய பிறகு சலுகையைப் பார்ப்போம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் அமைக்கப்படுகிற இந்த தொழிற்பேட்டைக்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? அதற்கான பூர்வாங்க வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நில ஆர்ஜித வேலைகளில் ஈடுபடுகிறது, அதற்குப் பின்னாலே தான் மற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிம்சன் போர்டு டிரக் கம்பெனிக்கு இடம் அளிக்கும் செயற்குறிப்பு.

*வினா எண். 510—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை அருகில் உள்ள சிம்சன் போர்டு டிரக்கு தொழிற்சாலைக்கென இடம் கேட்டு அரசுக்கு கோரிக்கை வரப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) அண்டு (ஆ) திருமழிசையில் உள்ள காலியாயிருந்த நிலம் மற்றும் கொட்டகையை முத்திரையிட்ட டெண்டர் கோரி அதில் கலந்து கொண்ட திருவாளர்கள் சிம்சன் கம்பெனிக்கு ஐந்து வருட காலத்திற்கு மாத வாடகை ரூ. 17,000க்கு 10—9—1979 முதல் தொழில் வணிகத் துறை குத்தகைக்கு விட்டிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சிறிய இடத்திலேயிருந்து பெரிய அளவிலே இடம் வேண்டுமென்று கேட்டு சிம்சன் போர்டு டிரக் கம்பெனியால் மனு செய்யப்பட்டதா என்பதைதான் என் கேள்வியில் மையமாக வைத்து கேட்டேன். வேறு இடத்தை கேட்டு அதிக பரப்பளவில் வேண்டுமென்று மனு செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற கோரிக்கைகள் எதுவும் இப்போது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்படவிருக்கிற அந்த தொழிற்சாலையில் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள்? நமது நாட்டிலே பஸ், லாரி சேசிஸ்களுக்கு பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டிலே அந்த தொழிற்சாலை உருவாவதற்கு எல்லாவிதமான சலுகைகளும் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தால் பெறப்பட்ட கடன்.

*வினா எண் 511—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி உரிமையாளர் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் TIDCO இடம் ரூ. 17.50 லட்சம் வாங்கி திருப்பிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) மேற்படி தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தைச் சார்ந்த தனி நபர் எவருக்கும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடன் வழங்கவில்லை. நிறுவனத்தின் முனைவர் என்ற தகுதியில் நிதி நிறுவனங்கள் தேவைக்கு ஏற்பவும், மேலும் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியின் வரம்புக்கு உட்பட்டு ரூ. 17·50 இலட்சத்தை "டிட்கோ" பாதுகாக்கப் படாத கடனாக அளித்துள்ளது; இந்த கடனுக்கு வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது என்றும் இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியின் உத்தரவு இல்லாமல் திருப்பி பெறக் கூடாது என்றும் மேற்படி வங்கி கூறியிருக்கிறது. ஆகையால் மேற்படி தொகையை வசூலிப்பது என்ற கேள்வி தற்போது எழவில்லை.

விவசாயக் கிணறுகள் வெட்ட ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம்.

*வினா எண் 512—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய கிணறுகள் வெட்டுவதற்கு அரிசனங்களுக்கு மானியமாக பணம் வழங்குவது நிலவள வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

[1982 மார்ச் 15

(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டிலாவது மேற்படி திட்டத்தை அமல் செய்ய மாற்று ஏற்பாடுகள் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) அறியும்.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் களைந்து மானியத் தொகையையும் உயர்த்தி ஆணை ஒன்றை அரசு பிப்ரவரி திங்களில் பிறப்பித்துள்ளது.

சந்தவாசல் கிராமத்தில் ஆதி திராவிட மாணவர் இல்லம் அமைத்தல்.

வினா எண் 513—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரிசன மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க இது வரையில் கோரிக்கை வரவில்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்.

வினா எண் 514—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) இந்தச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு ஏதேனும் புகார் வந்ததா?



1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின்கீழ் 1980-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 759

(ஆ) இந்த சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு எந்த புகாரும் வரவில்லை.

திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, இது வரை தீண்டாமைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் வழக்குகள் மூலமாக தண்டிக்கப் பட்டவர்கள்? எந்த எந்த மாவட்டங்களிலே எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியானது 1980 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 759 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்களிலே தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 58, விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 528, நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 176 ஆகும். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, 528 பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த கேஸ்களை அரசாங்க வக்கீல்களே நடத்துகிறார்களா? அல்லது அரிசன நலத் துறையின் மூலமாக வக்கீல்கள் வைத்து நடத்தப்படுகிறதா? அரசாங்க வக்கீல்கள் வழக்குகளை நடத்துகிறபோது சாட்சி சொல்ல வருகிறவர்களை சட்டப்படி சமாதானப்படுத்தக் கூடாது என்று சட்டமிருந்தும் கூட அந்தச் சாட்சிகளைப் பயமுறுத்தி அவர்கள் சாட்சி சொல்லச் செல்லாத வகையில் நீண்டகாலமாக வழக்குகள் ஒத்திவைக்கப்படுவதால் தான் சாட்சிகள் அப்படி சாட்சி சொல்ல வராததால்தான் தள்ளப்பட்டன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அரசாங்க வக்கீல்கள் வழக்குகளில் ஈடுபடுகின்றபோது சாட்சி சொல்ல வருகிறவர்களை அச்சுறுத்தி வேறுவிதமாகத் தூண்டி விடுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள், அரசு சார்பில் அத்தகைய குறைகள் சொல்லப்படவில்லை. பொதுவாக தீண்டாமைக் குற்றங்களிலே அரசுக்குப் புகார்களை அனுப்புகிறவர்கள் சாட்சி சொல்கிற நேரங்களிலே தங்களுக்கு இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக— கிராமப் புறங்களிலே மற்றவர்களின் துன்புறுத்தல் கூட காரண

மாக இருக்கக்கூடும் என்று கருதுகிறேன்—சாட்சிச் சொல்கிறவர்கள் மாற்றிச் சொல்லுகின்ற நிலைமையும் அத்தகைய நிலைமைகள் ஏற்படவில்லை என்று சொல்லுகின்ற நிலைமையும் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அரசாங்க வக்கீல்கள் அத்தகைய நிலைமைகளில் ஈடுபட்டதாக அரசுக்குப் புகார்கள் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் கூட அரிசன மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதி குறைந்தபாடு இல்லை. அரிசன மக்களுக்கு கொடுமைகளை இழைப்பது அநீதி இழைப்பது என்பது நடந்து வருவதால் அதைத் தடுக்கக்கூடிய முறையில் தடுப்புச் காவல் சட்டத்தை அரசு பயன்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இந்த சமுதாயத்தில் மக்களின் மீது இத்தகைய வகையில் மற்றவர்கள் ஈடுபடுகிற போது இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அரசுக்கும் காவல் துறைக்கும் பாதுகாப்புக் கோரியும், அதன் காரணமாக மாநில அரசும் மத்திய அரசும் அதிலே அக்கறை செலுத்தி— இந்த நிலைமை தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய திரு நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்ற வகையிலே—நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. தடுப்புக் காவல் சட்டத்தின் மூலமாக இத்தகைய குறைகள் இருக்கக்கூடிய பகுதிகளிலே சாட்சி சொல்லக்கூடியவர்கள் இறுதிவரையில் நிலையாக இருந்து சாட்சி சொன்னால்தான் இத்தகைய குறைகளைச் செய்கிறவர்கள்மீது அரசால் நடவடிக்கை எடுக்க முடியும்?

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இது போன்ற தீண்டாமை சம்பந்தமாக குற்றங்களை ஆய்வு செய்வதற்காக வட்டார அளவிலே ஏதாவது கமிட்டியை அரசாங்கம் அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அது பற்றிய விவரம் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த தீண்டாமை ஒழிப்பு கேஸ்களிலே சாட்சிகள் எல்லாம் போய் சொல்லி இருந்தாலும் கூட சாட்சிகள் சொல்வது உண்மை என்று தெரிந்திருந்தும்கூட சில சமயங்களிலே கேஸ் தள்ளப்பட்டுவிடுகிறது. ஆகவே இந்தமாதிரி பேசினார்கள் என்றாலும் இந்த மாதிரி அக்கிரமமாக நடந்துகொண்டிருந்தால் உடனே தண்டனை கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்க முடியுமா?

(முற்பகல் 9,50)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நிலைமைகளை உருவாக்க முடியாது.





## ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்கு மூன்றாண்டுத் திட்டம்.

வினா எண். 515 —திரு. கு. ரமணி : திரு. நா. பழநிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்துக்காக ஒரு மூன்றாண்டுத் திட்டத்தை அரசு தயாரித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி தலைவரவர்களே, ஆதி திராவிடர்கள் சமுதாயம் முன்னேற வேண்டுமென்பதற்காக இன்று விவரமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் மத்தியிலேயும் அந்த எழுச்சி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கால நிர்ணயம் ஏற்படுத்தித்தான் ஒரு திட்டத்தை, டைம் பவுண்ட் ப்ரொகிராம் செய்ய வேண்டும். எனவே, இந்த முறையில் அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்றால் அதில் என்னென்ன அம்சங்கள் அடங்கியுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்டவர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக மூன்றாண்டுத் திட்டத்தை உடனடியாகத் தயாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் இந்தத் திட்டமானது தீவிர பரிசீலனையிலே இருந்து வருகிறது. ஆனால் இந்தத் திட்டமானது மைய அரசினுடைய உதவியோடு தற்போது தமிழகத்திலே நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஸ்பெஷல் காம்பொனன்ட் பிளானோடு தொடர்பு படுத்தப்படாமல் தனியாகவே இயங்க வேண்டுமென்றும், தனித் திட்டமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். முதல்வர்களுடைய ஆணைக்கிணங்க தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற ஒரு சில துறைகளின் செயலர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவானது தற்போது முதல் கட்டமாகக் கூடி ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், சாலை, குடிநீர், விவசாயம் போன்றவைகள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டுமென்றும், அதற்காக ஒரு விவர அட்டவணையும் தயாரித்து, வட்டார வளர்ச்சி அலுவலர்களின் மூலமாகச் சேகரிக்க வேண்டுமென்றும், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தற்போது தமிழகம்

முழுவதிலிருந்து அனைத்து வட்டங்களிலிருந்தும் அந்த விவரங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றின்மீது மீண்டும் அந்தக் குழு கூடி எந்தெந்த வகைகளிலே எந்தெந்த இடங்களில் மக்களின் நிலைமைகள் இருக்கின்றன என்று முழுமையாக ஆராய்ந்த பிறகு அந்தத் திட்டமானது செயல்படுத்தப்படுவதற்கான வழிவகைகளை அரசு மேற் கொள்ளும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பல பகுதிகளிலிருந்து தமிழகத்தினுடைய முக்கியமான நகரங்கள் அல்லது பஞ்சாயத்து மையங்கள் போன்ற இடங்களிலிருந்து எல்லாம் பல ஆலோசனைகள் பெறப்பட்டு இப்பொழுது பரிசீலனையில் இருப்பது மாதிரி அமைச்சருடைய பதிலிலிருந்து நான் புரிந்து கொள்கிறேன். அது சரியா என்பதை அவர்கள் கூற வேண்டும். அடுத்ததாக, இந்த ஆதி திராவிட மக்களில் பெரும்பான்மையானவர்கள் நிலமற்ற கூலித் தொழிலாளர்களாக இருந்து வாழ்க்கையிலே மேம்பட முடியாத, முன்னேற முடியாத நசுக்கப்பட்ட மக்களாகக் கிடக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு இருக்கும் பிரதான குறை என்னவென்றால் நிலம் கிடைப்பதுதான் பிரச்சினை. இந்தத் திட்டத்தில் இதுவும் ஒரு பகுதியாக இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதல் கட்டமாக என்னென்ன தேவைகள் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இருக்கின்றன என்று அறிய அந்தப் புள்ளி விவரங்கள் பெறப்பட்டிருக்கின்றன என்ற கருத்தினை நான் தெரிவித்தேன். அதிலே ஆதிதிராவிட மக்களைப் பொறுத்த வரையில் விவசாயம் என்ற பொருளும் அடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப்போல விவசாயக் கூலிகளாக இருக்கும் அத்தகைய மக்களுக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கும் கருத்தின் அடிப்படையிலேகூட அரசு நிச்சயம் ஆவன செய்யும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக மூன்றாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படும்? எந்தெந்த மாவட்டங்களில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

(பதில் இல்லை)

திரு. பொ உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் மூன்றாண்டுத் திட்டத்தில் கல்வியும் சுகாதாரமும் இன்னும் சில திட்டங்களெல்லாம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பது, இந்த மூன்றாண்டுத் திட்டத்திலே அரிசன மக்களுக்காக வீட்டு மனை இல்லாதவர்களுக்கு அந்த மனைகளை எடுக்கும் பொழுது பல தடங்கல்கள் இருக்கின்றனவே, அந்தத்



தடங்கல்களை நீக்கி விட்டு மனை இல்லாதவர்களுக்கு மூன்றாண்டுகளுக்குள் மனை வழங்கப்படுமா? சுடுகாட்டுப் பாதை என்று செய்யும்பொழுது பல்வேறு கட்டத்தில் தனியார் அல்லது மற்ற இடங்களில் தடுக்கிறார்கள். எந்தத் தடங்கல் இருந்தாலும் மூன்றாண்டுக் காலத்தில் சுடுகாட்டுப் பாதையும், மனையில்லாதவர்களுக்கு மனையும் கிடைக்க அரசு பரிசீலிக்குமா நிறைவேற்ற முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும என்று நான் கருதுகிறேன். தமிழக அரசு இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே பொறுப்பேற்றதற்குப் பின்பு கடந்த 4 ஆண்டுகளிலே ஏறத்தாழ 10 ஆண்டுகாலமாகக் கொடுக்கப்பட்டிருந்த வீட்டு மனைகளின் எண்ணிக்கையை மிஞ்சுகின்ற அளவுக்குத் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, தனியார் நிலங்களும் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீட்டு மனைகளாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், சிற்சில இடங்களில் இதுபோன்ற இடர்பாடுகளைக் கவனத்திலே கொண்டு இத்தகைய மக்களுக்காகத் தனியாக தயாரிக்கப்படுகின்ற 3 ஆண்டுத் திட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களும் இடம் பெறலாம் என்று நான் கருதுகின்றேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு 3 ஆண்டுத் திட்டம் செயல்படுத்த தீவிர பரிசீலனையில் இருப்பதை அறிகிறேன். ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை கொடுக்கப்பட்டு, வீடு கட்டக் கூடிய பொருளாதார சூழ்நிலையில்லாமல் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதுடன் இந்தத் திட்டம் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கும் விரிவு படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தலைப்புகளின் கீழ் தற்போது இந்தக் குழுவானது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து வட்டங்களிலும் விவரங்கள் சேகரித்து அறிக்கை கொடுத்தவுடன் அந்த விவரங்களின் அடிப்படையிலே எந்த, எந்த வகைகளிலே அந்த மக்களுக்கு வீட்டு மனைகளாகவும் வீடுகளாகவும் கொடுத்து, அவர்களுடைய பொருளாதாரத் தன்மைகளை உயர்த்தலாம் என்கின்ற வகையிலேயும், எந்த, எந்த வகையிலே நடைமுறைப்படுத்தலாம் என்கின்ற வகையிலேயும்தான் இந்தத் திட்டமானது தற்போது ஆராயப்பட்டு வருகிறது. அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிற அடிப்படையில் வீடுகளைப் பற்றிய கருத்தும்

பரிசீலனை செய்யப்படும். தற்போது ஆதிவாசிகளுக்கு அந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகிற எண்ணம் இல்லை. இது தனியாக ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்துகிற எண்ணத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு கழிவுப் பஞ்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 516 : திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கென கழிவுப் பஞ்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அது எங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவுப் பஞ்சாலைத் திட்டம் இப்போதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை மறுபடியும் மறு பரிசீலனை செய்து, எங்கெங்கே எல்லாம் இந்த அரிசன மக்களுக்கும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வழி செய்ய முடியுமோ அந்த வகையிலே ஆராய்ச்சி செய்து அதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—1—1982 அன்று தலைமைச் செயலர் தலைமையிலே கூடிய அரசுச் செயலாளர்கள் கூட்டத்தில் கழிவுப் பஞ்சாலைத் தொழிலில் தற்போது தேக்க நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக எந்தவிதமான கழிவுப் பஞ்சாலைகளும் அமைக்க வேண்டியதில்லையென்ற அளவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நிரந்தரத் தொழில்கள் தர வேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசு பல்வேறு வகையில் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துகின்ற வகையில், இருக்கக்கூடிய வசதிகளின் அடிப்படையில் எந்த, எந்தத் தொழில்கள் உள்ளனவோ அவற்றைத் தேர்ந்தெடுத்து அந்த மக்களுக்கு தற்போது உதவ இந்த அரசு முன் வந்திருக்கிறது.

[முற்பகல் 10–00.]

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று சொன்னாலும் கூட, நெல்லை மாவட்டத்தை பொறுத்தளவில் அங்கே ஆதிதிரா





தார்கள். அரைமணி நேர விவாதத்திற்கும் அனுமதி தந்தார்கள். அதனை ஒட்டி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்று அங்கே சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து, கலவரப்பகுதியில் ஒரு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையிலே சென்றார்கள். ஆகவே, கலவரத்தை அமைதிப்படுத்த வேண்டும் ; அங்கே வன்முறை இருக்கக்கூடாது என்பதுதான் இந்த பேரவை உறுப்பினர்களுடைய தலையாய நோக்கமாகும். அந்த நோக்கத்தை இந்த அளவுக்கு உடனுக்குடன் நிறைவேற்றுகிற இந்த அரசு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே அங்கே ஒரு அமைதியான சூழ்நிலையை இந்த அறிவிப்பின் மூலம் உருவாக்க முடியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பி, நீதிவிசாரணை போடுவோம் என்று சொன்னால் அதன்மூலம் மேற்கொண்டு கலவரங்கள் நடக்காமல் இருக்க பேருதவியாக இருக்கும் என்று கருதி அறிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அந்த நேரத்தில் இங்கே சட்டமன்ற கூட்டமும் இல்லை. நாம் எல்லோரும் அமைதிதான் முக்கியம் என்று கருதுகிறோமே தவிர, நம்முடைய சட்டமன்ற விதிமுறைகள், மரபுகளை முக்கியமாக கருதி கலவரத்தை நீடிக்க நிச்சயமாக நாம் யாரும் விரும்பமாட்டோம். ஒருவர் வீட்டிலே இன்னொருவர் புகுவது அத்துமீறல் தான். ஆனால் வீடு தீப்பற்றி எரியும் போது எல்லோரும் சேர்ந்து அதை அணைக்கிறோம். ஆகையால் இத்தகைய அறிவிப்பை ஒருநாள் கழித்து இங்கே வந்து அறிவிப்பதை விட அங்கே அறிவித்து நிலைமை சுமூகப்படுமானால் அதைத்தான் நாம் வரவேற்க வேண்டுமே தவிர, சில நேரங்களில் சில பிரச்சினைகளைத் தவிர்க்க, சுமூக சூழ்நிலையை உருவாக்க தவிர்க்க முடியாமல் இத்தகைய அறிவிப்பு செய்வதை சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்ட வேண்டுமே தவிர தங்களுக்குத்தான் முதலில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்பது எந்தவகையிலும் பொருத்தம் அல்ல என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : சார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்று சமாதானம் பேசிக்கொண்டிருக்கும் போது கூட பக்கத்து கிராமத்தில் பெரிய கலவரம் ஏற்பட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. இப்போது அங்கே நிலைமை எப்படி இருக்கிறது ? கலவரம் அடங்கி இருக்கிறதா ? அல்லது தொடர்ந்து நடக்கிறதா ? இதற்கு யார் காரணம் என்பதுபற்றி அரசாங்கம் இந்த அவையிலே அறிவிக்க இயலுமா ?

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்ற பிறகு அன்றுகூட பதில் சொல்லவில்லை. அங்கே போய் நிலைமைகள் பற்றி விவாதித்த பின் அரசாங்கத்தின் நடவடிக்கைபற்றி ஒரு அறிக்கை இந்தச் சபை முன் வைக்கப்படுமா ?

[1982 மார்ச் 15

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே அறிக்கை ஒன்றை அவை முன் வைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட சட்டமன்றத்தில் எடுத்துக் கொள்ள விதிமுறை இல்லை. ஆனாலும் எல்லா உறுப்பினர்களும், எதிர்க் கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரை மணி நேர விவாதம் வைத்து, ஏறத்தாழ ஒன்றேகால் மணி நேர விவாதம் நடந்து. அதன் விளைவாக இங்கே இருக்கிற வேகத்தையும் பார்க்கவேண்டியிருக்கிறது, அங்கே இருக்கிற சூழ்நிலையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகையால் மாண்புமிகு முதலைமச்சர் அவர்கள் அங்கே புறப்பட்டுச் சென்றார்கள். அங்கே சென்றபிறகு, இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டால் சமூக சூழ்நிலை ஏற்படும் என்று உணர்ந்ததால் அங்கே நீதி விசாரணை பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்ததைப்போல அது வரவேற்கக்கூடியதே தவிர அது விவாதத்திற்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

**தமிழ்நாடு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக தமிழ் தெரியாத ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் எஸ். ஆண்டித்தேவர், என். பழனிவேல், ப. நெடுமாறன், என். எஸ் வி. சித்தன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம், ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, மு, அப்பாதுரை, குமரி அனந்தன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, என். சங்கரய்யா, என். வரதராஜன், கு. ரமணி, அ. ரகுமான்கான். என்.வி.என். சோமு ஆகியோர் '' திரு. கே.பி.என். சிங் அவர்களை பீகார் மாநிலத்திலிருந்து தமிழ்நாடு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக நியமித்துள்ளதால் தமிழ்மொழி நீதி மன்ற மொழியாகத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருப்பதற்கு முரணாக இருப்பதால் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் ' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புச கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. எஸ். ஆண்டித்தேவர் இருக்கையில் இல்லாததால் முதலில் திரு. என். சங்கரய்யா அவர்கள்.



1982 மார்ச் 15]

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்த தமிழ்நாட்டு உயர்நீதி மன்றத்திற்கு பீகார் மாநிலத்தின் உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி திரு. கே.பி.என். சிங் அவர்கள் நியமிக்கப்பட்டது பற்றி விவாதிக்க வேண்டும் என்பதில் உள்ள முக்கிய அம்சம் என்னவென்றால் இந்திய மக்கள் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாப்பதில் நாம் அனைவரும் இணைந்து அக்கறை கொண்டிருக்கிறோம்.

(முற்பகல 10.10)

அந்த ஒற்றுமை மொழி வாரி மாநிலங்களை அமைப்பதன் மூலம் மேலும் பலம் அடையும் என்ற காரணத்தால்தான் இந்திய மக்களுடைய நீண்ட முயற்சிக்குப் பிறகு மொழி அடிப்படையிலே மாநிலங்கள் அமைக்கப்பட்டு இன்றைக்கு அந்த மாநிலங்கள் தங்களுடைய மொழியிலேயே அரசாங்கத்தை நடத்துகிறது. இதர சட்டமன்ற நடவடிக்கைகளையும் நடத்தி வருவதை நாம் பார்க்கிறோம். அதை ஒட்டித்தான் நீதிமன்றங்களிலே அந்தந்த மாநிலங்களின் மொழிகளை நீதிமன்ற மொழியாக ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. தமிழகத்தில் ஏற்கெனவே இந்த சட்ட மன்றப் பேரவையிலே பல கட்சியினரும் சேர்த்து வற்புறுத்தியதன் விளைவாக தமிழகத்தில் அடிமட்டத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றங்களில் எல்லாம் இன்று தமிழ் மொழியின் மூலம் அந்த நடவடிக்கைகள் நடைபெறவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்கான நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு எல்லாவிதமான கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற வேளையிலே இப்போது உயர்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிமன்றங்களில் இருந்து வரக்கூடிய மேல் முறையீடுகள் சம்பந்தமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் தமிழ்மொழி தெரிந்திருக்கக்கூடிய நீதிபதி அங்கே இருந்தால் தான் அந்தப் பிரச்சினைக்ளைத் தெரிந்துகொள்ள முடியும். நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 348(2)-வது பிரிவின்படி ஒரு மாநில கவர்னர் அதாவது ஒரு மாநில ஆட்சியானது ஜனாதிபதியின் முன் அனுமதியுடன் மாநில நீதிமன்றங்களிலே தங்களுடைய பிரதேச மொழிகளையோ அரசாங்கக் காரியங்களுக்காக உபயோகப்படுத்தக்கூடிய மொழிகளையோ பயன்படுத்தலாம். ஆனால் உயர்நீதி மன்றங்களிலே இறுதியாக அவர்கள் கூறக்கூடிய உத்தரவு மட்டும் தான் ஆங்கிலத்திலே இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மேலும் தமிழ்நாட்டிலே உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாக தமிழ் தெரிந்தவர்கள் இருந்தால்தான் நீதிமன்றங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அமலாக்க முடியும். திரு. கே. பி. என். சிங் அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. இந்தியாவில் இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் இந்தியக் குடிமக்கள். அகில இந்திய சர்வீஸ்களிலே பல மாநிலங்களையும் சேர்ந்தவர்கள் பல

இடங்களுக்கும் செல்கிறார்கள். அவர்கள் வேறு வேறு மாநிலங்
களுக்கெல்லாம் கூடச் செல்கிறார்கள் ஆனால் அதைப்பற்றி
எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையைப்
பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்திலே இந்த மாநிலத்தின்
மொழி தெரிந்தவராக இருந்தால்தான் சாத்தியமாக இருக்க
முடியும். இது சம்பந்தமான பிரச்சினையிலே கூட சுப்ரீம்
கோர்ட்டிலே 7-வது நீதிபதியாக இருக்கின்ற திரு, குப்தா அவர்
கள் கூட இந்த மாற்றங்களைச் செய்யலாம் என்று திருப்தி
அளித்தபோது கூட திரு. கே. பி.என். சிங்கை மாற்றும்போது அவ
ருக்கு பரிச்சயமாக இருக்கக்கூடிய மொழி இருக்கக்கூடிய மாநில
திற்குத்தான் மாற்ற வேண்டும் என்ற கருத்தும் கூறி இருக்கிறார்
கள். ஆகவே இன்றைக்கு இந்தப் பிரச்சினையின் காரணமாக
தமிழ்நாட்டிலுள்ள மக்கள் மத்தியிலே ஒரு பதட்டமான நிலைமை
ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு நீதிபதிகளை ஒவ்வொரு இடத்
திற்கும் மாற்றுவதன் மூலமாக மத்திய அரசு அவர்களின் மேல்
ஒரு விதமான செல்வாக்கை பிரயோகிக்கவேண்டும் என்ற முயற்சி
யும் அதிலே அடங்கி இருக்கின்றது என்பது வருந்தத்தக்கது. ஏற்
கெனவே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே அகில இந்திய
ஜூடீஷியல் சர்வீஸை ஏற்படுத்தவேண்டும் என்ற முயற்சி நடக்
கின்றது. இராஜ்ய சபையிலே மூன்றிலே இரண்டு பங்கு மெஜா
ரிட்டி ஆளும் கட்சிக்கு கிடைத்தால் அப்படிப்பட்ட ஒரு காரி
யத்தைச் செய்வதற்குக் கூட வழிவகை இருககின்றது என்பது
அபாயகரமான போக்காகும்.

ஆகவே, இன்று இங்கே இருக்கக்கூடிய எல்லாக் கட்சியினரும்
செய்த வேண்டுகோளின்படி நம்முடைய அரசாங்கம் நீதிமன்றங்
களிலே தமிழ்மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்று உத்தர
விட்டிருக்கின்றது. தமிழிமொழியிலேதான் பஞ்சாயத்துக்கள்
எல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன, முன்பு. ஆனால் பிரிட்டிஷ்
ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் இந்த நிலைமை மாற்றப்பட்டது.
ஆகவே, அந்தந்த மாநில மொழிகள்தான் அந்தந்த நீதிமன்றங்
களுக்கு வேண்டும். தமிழ்நாட்டிலே மற்ற மாநிலத்தைச் சேர்ந்த
நீதிபதி வந்துவிட்டார் என்ற பிரச்சினை இல்லை, அதை நான்
ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆனால், நீதிமன்றங்களைப்
பொறுத்தவரையிலே வங்காள மாநிலத்திலே உள்ள உயர்நீதி
மன்றத்திலே வங்காளமொழி தெரிந்தவரும், ஆந்திரா மாநிலத்தின்
உயர்நீதிமன்றத்திலே தெலுங்கு மொழி தெரிந்தவரும் உயர்
நீதிமன்ற பிரதம நீதிபதியாக இருக்கவேண்டும். அந்த அடிப்
படையிலேதான் பிரச்சினை வருகிறது.

ஆகவே அரசாங்கம் இதிலே தலையிட்டு எல்லா கட்சியினரின்
உதவியுடனும், பாராளுமன்றத்திலே இருக்கக்கூடிய எல்லா கட்சி
களின் உதவியுடனும் இந்திய அரசினை இதுகுறித்து வற்புறுத்தி





இப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்யவேண்டாம் என்றும் தமிழ்
நாட்டின் உயர் நீதிமன்றத்திலே தமிழ்தெரிந்த ஒருவரைத்தான்
பிரதம நீதிபதியாகப் போடவேண்டும் என்றும் சொல்லி அதற்கு
ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, இது ஒரு மாநிலப் பிரச்சினை
அல்ல. அகில இந்தியாவிலே இருக்கக்கூடிய பிரச்சினையாகும்.
அகில இந்தியாவிலே அந்தந்த மாநிலங்களிலே இருக்கக்கூடிய
உயர்நீதிமன்றத்திலே அந்தந்த மொழி தெரிந்தவர்கள் நீதிபதி
களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை வற்
புறுத்துகிறேன். ஆகவே, இந்த அவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான்
கோருகிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker Sir, a point of Order. I strongly object this question being discussed here in this House.

MR. SPEAKER: It has already been taken. The point to be decided now is whether to adjourn the other business of the House to discuss this issue or not. Now we are not discussing the merit of the case.

திரு. ப. நெடுமாறன்; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டுள்ள பிரச்சினை,
தமிழகத்தைப் பற்றிய பிரச்சினை மட்டும் அல்ல. இந்தியா பூரா
வும் மொழி வழி மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற அடிப்
படையிலே, இந்த தேசத்தின் தந்தை மகாத்மா காந்தியடிகள்
வகுத்திருக்கிற கொள்கைக்கு எதிராக, இன்னொரு மொழி பேசு
கிற ஒருவரை தமிழகத்தில் கொண்டு வந்து, தலைமை நீதிபதி
யாக நியமித்து, தமிழகத்திலே தமிழ் மொழி ஆட்சி மொழியா
வதற்கு குந்தகம் ஏற்படுத்துகிறது என்ற உணர்வோடு, நாம்
இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம்.

நாம் இந்தப் பிரச்சினையை இந்தக் கண்ணோட்டத்திலே
அணுகுவதனாலேயே தேசிய ஒருமைப்பாட்டுக்கோ, இந்த தேசத்
தின் ஒற்றுமை உணர்வுக்கோ நாம் எதிரானவர்கள் அல்ல. மாறாக
தேச ஒருமைப்பாடு வேண்டும் என்ற உண்மையான நோக்கத்
தோடு தான், இந்தப் பிரச்சினையை இந்தக் கண்ணோட்டத்தில்
அணுகுகிறோம். பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று, இந்த
தமிழகத்தில் உள்ள சிவில் நீதிமன்றங்கள் உள்ளிட்ட சகல நீதி
மன்றங்களிலும் தமிழ், ஆட்சி மொழியாகும் என்று இந்த அரசு
அறிவித்திருக்கிறது. ஆனால் அறிவித்து ஒரு மாத காலம் ஆவதற்
குள்ளாகவே, அந்த அறிவிப்பின் மேல் இடி விழுந்தாற்போல்,
பீகார் மாநிலத்திலிருந்து ஒருவரை இங்கே கொண்டு வந்து உயர்
நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்திருக்கிறார்கள்.

தனிப்பட்ட முறையிலே அவர் மீது நமக்கு எந்தவித விரோதமோ, வெறுப்புணர்வோ இல்லை. மாறாக அந்த மொழி மக்களுக்குக் கூட, இது பாதகமானது. பீகார் மாநிலத்திலே, பீகார் ஆட்சி மொழியாக இருக்கும்போது இன்னொரு மாநிலத்திலிருந்து, தலைமை நீதிபதி நியமிக்கப்படுவார்களேயானால், அந்த மொழி மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இங்கே தமிழக மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த உணர்வை வெளிப்படுத்தி, இதை சட்டமன்றத்திலே நாம் விவாதித்திருக்கிறோம். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்திய பிரதம அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சட்டமன்றத்தின் உணர்வைத் தெரிவித்துக் கடுமையாக வலியுறுத்தி கடிதம் எழுதியிருக்கிறார்கள். இங்கே நாமும் விவாதித்திருக்கிறோம். இங்கே தலைமை நீதிபதியாக இருந்த மதிப்பிற்குரிய முகமது இஸ்மாயில் அவர்கள் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்து, இம்மாநில மக்களின் உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு, அவர்கள் பிடிவாதமாக இவ்வாறு நியமனம் செய்திருப்பது என்பது, தேசீய ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகும் என்பதை நான் இங்கே சுட்டி காட்ட விரும்புகிறேன்.

மொழி உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட இறைவன் சன்னிதானத்திலே கூட ஆலயங்களிலே தமிழிலேதான் அர்ச்சனை போன்றவைகள் நடைபெற வேண்டும் என்று சொல்லக் கூடிய இந்தக் காலத்திலே, சாதாரண பாமர மக்கள், நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து விலக்கப்பட்டு, நிற்கக்கூடிய ஒரு நிலையை இது போன்ற நியமனங்கள் ஏற்படுத்திவிடுகிறது. ஆங்கிலத்திலே விவாதங்கள் நீதிமன்றத்திலே நடைபெறுகிறபோது, என்ன நடைபெறுகிறது என்று அவர்கள் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது. ஆகவே, அவரவர்கள் சொந்த மொழியிலேயே நீதிமன்ற நடவடிக்கைகள் அமையுமே யானால், ஏழை எளிய மக்கள், நீதிக்கும் சட்டத்திற்கும் மிக அருகிலே வர அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. அந்த நிலைமைக்கு விரோதமாக, இந்த நீதிபதி அவர்களின் நியமனம் இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மதுரையிலே பாண்டியனின் அவையிலே வழக்குரைத்த கண்ணகி சோழ நாட்டைச் சேர்ந்தவளாக இருந்தாலும் கூட, முற்றிலும் வேறு பட்ட ஒரு நாட்டிலே, இன்னொரு மன்னனின் சபையிலே அவள் தமிழிலேதான் பேசி தன்னுடையகணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்துக் காட்டினாள். ஆனால் அந்த தமிழ்நாட்டிலே தலைமை நீதிமன்ற நீதிபதியாக எங்கேயோயிருந்து, யாரையோ—அவரே கூட முழுவதும் இஷ்டப்படாமல் கொண்டு வந்து இங்கே நியமித்ததின் மூலம், தமிழ் நீதிமன்ற மொழியாவதற்கு எதிராக மைய அரசு செயல்படுகிறது என்பதைத்தான் காட்டுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன்மூலம் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாமட்டங்களிலும் ஆட்சிமொழியாக, நீதிமொழியாக ஆவதை மைய அரசு வரும்பவில்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.





(முற்பகல் 10.20)

மத்திய அரசுக்கு விருப்பம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் தேசீய ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய இந்தச் செயலை மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவிக்கவேண்டிய பொறுப்பு நம் அரசுக்கு உண்டு. இந்த மன்றத்தின் உணர்வுகளை மத்திய அரசுக்கு தெரிவித்து இப்படிப்பட்ட நடவடிக்கைளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் இதன் மூலம் தமிழ்நாட்டின் நீதிமன்ற மொழி தமிழாக வருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதைப்பற்றியெல்லாம் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்தில் வேகமாக எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற வகையில் தமிழ் ஆட்சி மொழியாக முழுமையான அளவிற்கு வருவதற்கு துரித நடவடிக்கைகள் எடுத்து வரும் இந்த நேரத்தில் பீகார் மாநிலத்திலிருந்து தமிழ் தெரியாத ஒருவரை மத்திய அரசு தமிழ்நாட்டின் உச்ச நீதிபதியாக அமைத்திருப்பது குறித்து தமிழக மக்கள் முன்னால் ஒரு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம், நாம் இந்திய ஒருமைப்பாட்டை விரும்பக் கூடியவர்கள். நாம் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கக் கூடிய்வர்கள். அதில் நமக்கு கருத்துவேறுபாடு கிடையாது. ஆனால் தமிழ் மொழி தெரியாதவர் நீதிபதியாக வரும்போது சாதாரண ஏழை எளிய மக்கள் நீதிமன்றம் செல்லும் போது நீதிபதியைப் பார்த்து தன்னுடைய மொழியில் சில விளக்கங்களை அல்லது கருத்துக்களை சொல்வதற்கு இதனால் தடங்கல் ஏற்பட மூடியும். எனவே தமிழ்நாட்டில் தமிழை வளர்க்கக் கூடிய இந்த நேரத்தில் எந்தளவிற்கு மத்திய அரசு தமிழ்நாட்டு மக்களை மதித்திருக்கிறது. என்பதை சந்தேகிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு இன்றைக்கு வந்திருக்கக்கூடிய தலைமை நீதிபதி அவர்கள் மீது நமக்குத் தனிப்பட்ட கருத்து வேறுபாடு கிடையாது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தில் தமிழ் தெரிந்த ஒரு நீதிபதியை ஏற்படுத்துவதோடு, தமிழக அரசு மற்ற கட்சிகளின் உணர்வுகளை மத்திய அரசிடம் அணுகிப் பேசி தமிழ் நாட்டிற்கு விரைவில் ஒரு தமிழ் தெரிந்த பிரதம நீதிபதியை அமர்த்தவேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டை இப்படி மத்திய அரசு உதாசீனப்படுத்தக்கூடிய அளவிற்கு மீண்டும் மீண்டும் பார்க்கிறபோது தமிழ் மொழிக்கே ஆபத்து வரக்கூடிய அளவிற்கு மறைமுகமாக வேறு ஒரு மொழியை புகுத்தக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்குமளவிற்கு தமிழ் நாட்டில் ஒரு சந்தேகமும் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழப்பத்தை நீக்குவதற்கும், தமிழ்நாட்டில் தமிழ்

தெரிந்த ஒரு பிரதம நீதிபதியை நியமிப்பதற்கும் இதுபோன்ற பிரச்னைகள் குறித்து விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிந்த ஆண்டு ஆரம்பத்திலேயே சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதியை கேரள உயர்நீதிமன்றத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னதுபோல் யாரோ எங்கிருந்தோ அல்ல, பாட்னாவில் பிரதம நீதிபதியாக இருந்தவரை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் அவர்களால் மாற்றப்பட்டதை நாடும் நாமும் அறிவோம்.

இந்திய அரசியல் சட்டத்தின் 222 (1) பிரிவின்படி

The President may, after consultation with the Chief Justice of India, transfer a Judge from one High Court to any other High Court

என்பதன்படி இந்த மாற்றம் செய்யப்பட்டது. உடனடியாக இந்த மாற்றத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அரசியல் சட்டத்தின் இந்த ஷரத்தில் பிரதம நீதிபதி என்று குறிப்பிடப்படாததால், வெறும் நீதிபதி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதால், பிரதம நீதிபதியை இந்த ஷரத்துப்படி மாற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றத்தில் வாதம் செய்யப்பட்டது. ஆனால் இந்த வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. பிரதம நீதிபதி எனப்படுபவர் முதல் நீதிபதிதானே தவிர மற்ற நீதிபதிகளுக்கு மேலானவர் அல்ல எனவே நீதிபதி என்று சொல்லப்படுவது அவர்களுக்கும் பொருந்தும் என்று அங்கே தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் அரசியல் சட்டத்தின் இந்த ஷரத்துப்படி குடியரசுத் தலைவர் அவர்கள் உச்சநீதிமன்ற பிரதம நீதிபதியிடம் யோசனை கேட்கலாம்—"Ma ", "Shall" அல்ல என்று இருக்கிறதே தவிர அந்த ஆலோசனையை மாநில அரசிடம் கேட்கவேண்டும் என்று இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும். ஆகவே அரசியல் சாஸனப்படி உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் தொடர்ச்சியாக முடிவு செய்யப்பட்ட இந்தப் பிரச்னை அல்லது நியமனம் முறையற்றது என்று சொல்வது எப்படி நியாயமாகும் என்பதை தங்கள் மூலம் வினவ விரும்புகிறேன்.

* * * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தப் பிரச்னையில் அவர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம். ஆனால், நீதிபதிகளின் கான்டெக்ட், அவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



களுடைய பண்பாடுகளைப் பற்றி விவாதிப்பது நம்முடைய விதிமுறைகளுக்கு மாறானது ; புறம்பானது. அவர்கள் இப்போது சொன்னது ***

Tha is a reflection on the conduct of the Judge.

திரு. நா. சுந்தரராஜ் : அப்படியென்றால் திரு. சங்கரய்யா அவர்கள் பேசியது தவறல்லவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் பேசியதையும் நான் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னது மத்திய அரசுக்கு மாற்றுவதற்கு அதிகாரமுண்டு, குடியரசுத் தலைவர் மூலமாகச் செய்கிறார்கள் என்று சொன்னார். ஜட்ஜீகளைப் பற்றி அவர் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* * * * * * *

திரு. என். எஸ். வி. சித்தன் : தனிப்பட்ட யாரையும் நான் சொல்லவில்லை ; பொதுப்படையாகத்தான் சொன்னேன். இது அரசியல் பிரச்னை. பொதுப்படையாக மொழி தெரிந்தவர்கள் இங்கே நீதிபதியாக இருக்க வேண்டுமென்று விவாதித்தார்கள். அந்த அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். மொழி தெரியாதவர்கள் நீதிபதிகளாக நியமிக்கக் கூடாது என்று சொல்லக் கூடாது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு சித்தன் அவர்கள் இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டாம் என்று கருதுகிறார்கள். அப்படி சபையை ஒத்திவைக்கவேண்டாம் என்று வாதாடக் கூடிய ஒருவர், இங்கே பேசுவது சரியாக இருக்குமா? இரண்டாவது காங்கிரஸ் கட்சி............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிகளின் அபிப்பிராயங்களை ஏதாவது ஒருவகையில் சொல்வது மரபு. அதற்காக நீங்கள் இப்படிச் சொல்வது சரியாக வராது.

திரு. என். சங்கரய்யா : பிரச்னை என்னவென்றால், தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தில் தமிழ் மொழி தெரியாத ஒருவர், பிரதம நீதிபதியாக வரலாம் என்பது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் கொள்கையா என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 15

திரு. என். எஸ். வி. சித்தன் : ஏன் இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் இன்னும் சொல்லவில்லை. நீண்டநாள் அனுபவமுள்ள சங்கரய்யா அவர்கள் இப்படிக் கூறுவது சரியல்ல. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. தயவு செய்து சற்று பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொல்லும்போது நான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மேலும், இந்த நியமனத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் பெயரும் இணைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய உறவும் ஒத்துழைப்பும் இந்த அரசுக்குத் தேவை என்பதை அறிவோம். இந்த உறவு பாதிக்கக்கூடிய அளவிலே நம்முடைய செயல்முறைகள் இருக்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே 1967-இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, தமிழகத்தின் ஆட்சி மொழியாக இரு மொழிக் கொள்கை நிறைவேற்றப்பட்டது. தமிழும், ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாட்டிலே உயர்நீதி மன்றத்திலே ஆங்கிலம் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சாசனத்தில் இதைப் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

Chapter 3-ல்

Language of the Supreme Court, High Courts etc.-ன் படி 348(2) பிரிவில்,

Notwithstanding anything in the foregoing provisions of this part, until Parliament by law otherwise provides—

(a) all proceedings in the Supreme Court and in every High Court shall be in the English language. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ் தெரிந்தவர்தான் பிரதம நீதிபதியாக பதவியேற்க வேண்டுமென்றால், அரசியல் சாசனத்தின் 348-ஆம் பிரிவுக்கு அது முரணாகாதா என்று கேட்க விரும்புகிறேன்? தமிழ் தெரிந்தவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாக அமர்வதை வரவேற்கலாம். ஆனால், தமிழ் தெரிந்தவர்தான் வேண்டுமென்று வலியுறுத்தப்படுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை உங்கள் மூலமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நெடுமாறன், உணர்ச்சி வசப்பட்டு எழுந்திருக்கக் கூடாது. எல்லோரும் திடீரென்று எழுந்து பேசக் கூடாது. திரு. குமரி அனந்தன் இருக்கிறார்; அவர் பதில் சொல்வார்.



1982 மார்ச் 15]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இன்னமும் சொல்வேன். பிரதம நீதிபதி உயர்நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கும் போது, அவர் மட்டுமே தனியே அமர்வதில்லை. தமிழ் தெரிந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகளும் உடன் அமர்வது வழக்கம். இதுவே 'First Branch' இருக்கிறது. எனவே தமிழ் வாதங்களை அவர்கள் புரிந்து கொள்வதிலே எந்தவிதமான சிரமங்களும் இல்லை. (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்.)

(முற்பகல் 10—30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைக்காததற்கான பிரச்னைகளை விட்டு, ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சொல்லுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் முடிக்கவில்லை. நமது நீதிமன்றத்திலே பல்வேறு வழக்குகளிலே இந்தி, குஜராத்தி, உருது போன்ற இந்திய மொழிகளிலும், பிரஞ்சு போன்ற வெளி நாட்டு மொழிகளிலும் தஸ்தாவேஜுக்கள் நீதிபதிகள் ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்தந்த மொழி தெரிந்தவர் தான் நீதிபதியாக இருக்கவேண்டுமென்ற அந்த வாதம் எப்படி ஏற்க முடியும். நான் கேட்க விரும்புகிறேன் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளப்படாததால் தமிழ் நாட்டிலே நீதி கெட்டு விட்டதா? அரசியல் சாசனங்களில் மொழி பிரச்னையை வைத்து நாட்டிலே கவனத்தை திசை திருப்புகிறதற்காகவோ, மத்திய மாநில அரசுகளின் உறவுகளை சீர்கேடு செய்வதற்காகவோ இப்படிப்பட்ட விவாதங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. இதனாலே தமிழக மக்கள் மத்தியிலே ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறதாலே இதை விரிவாக நாம். ஆராய வேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அதிகாரிகள் வெளி மாநிலங்களில் இருக்கிறார்கள். இன்னும் சொன்னால் தபால் இலாக்கா, இன்கம்டாக்ஸ், கஸ்டம்ஸ் போன்ற துறைகளில் இருப்பவர்கள் தமிழ் தெரிந்தவர்கள், ஒருமைப்பாட்டை காக்கிற விதத்திலே பல்வேறு மாநிலங்களிலே இருக்கிற காரணத்தாலே, இது போன்ற பிரச்னைகள் இருப்பதாலும், அவர்கள் சொல்கிற வாதங்களுக்கு பதில் சொல்லவேண்டிய நிலை இருக்கிறதாலும் தமிழக மக்கள் மத்தியிலே பதட்ட நிலை இருப்பதாலும் விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலியுறுத்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் கருத்தைச் சொல்வதற்கு அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பீகாரிலிருந்து வந்தவரை, திரு. சிங் என்று சொல்கிற நீதிபதி பெருமகனாரை தனிப்பட்ட முறையிலே நாம் எந்த விரோத மனப்பான்மையிலும் பார்க்கவில்லை. தமிழ்நாட்டிலே நீதிமன்ற மொழியாக தமிழ் மொழி இருக்கிறது. சிவில் கோர்ட்களிலே தமிழ் மொழி மன்ற மொழியாக இருக்க வேண்டுமென்று தமிழக அரசு இந்த நாட்டு மக்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆணை யிட்டிருக்கிற இந்த நேரத்திலே, கீழ் மட்டத்திலேயிருந்து, மேல் மட்டம் வரை தமிழ் நீதிமன்ற மொழியாக செம்மையாக செயல் படுகிறதா என்று உச்ச நீதிபதி என்கிற வகையிலே அதை கண் காணிக்கின்ற பொறுப்பு மட்டுமல்ல, அமல் நடத்துகிற பொறுப் பும் (இம்ப்ளிமென்டேஷன் பார்ட் ஆப் இட்) உச்ச நீதிபதிக்கு வருகிறது. எனவே தமிழை அறிந்தவர்கள்தான் இதனை செம்மையாகக் கொண்டு வர முடியும் என்பதிலே எந்த ஐயமும் இல்லை.

அடுத்த செய்தியாக அகில இந்திய ரீதியிலே பார்ப்பது— அகில இந்திய ரீதியிலே பெயர் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் மட்டுமல்ல, அகில இந்திய ரீதியிலே சிந்திக்கின்றவர்கள் அத் தனை பேருமே அகில இந்திய ரீதியிலே பார்க்கிறோம். அகில இந்திய ஆட்சித் துறையிலே இருக்கிறவர்கள் ஐ.ஏ.எஸ். போன்ற வர்கள் என்கிற பிரச்னை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களிலே சிலர் சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் கூட வெளி மாநிலங்களிலேயிருந்து இங்கே வரலாம், ஐ.ஏ.எஸ். ஆக இருக்கலாம். தமிழ் நாட்டிற்கு வந்தால் தமிழ் மொழி தேர்விலே வெற்றி பெற்று அதன் பிறகு தான் இங்கு ஆட்சித் தலைவராக இருக்க முடியும் என்பது அகில இந்திய ரீதியிலே எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஆதலாலே ஒரு மாவட்ட அளவிலே ஆட்சியினை செம்மை படுத்துவதற்கே அது தேவைப்படுகிறது என்றால் மாநில அளவிற்கு நீதியை நிலை நாட்டுகிற பெரும் பொறுப்பிலே இருக்கிற ஒரு பெருமகனார் தமிழ் மொழியை தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பது ஒன்று. இன்னொரு செய்தி, அவர்களை எதிர்த்து அல்ல இங்கே இருக்கிற பிரச்சினை ; நம்மவர்கள் பல இடங்களிலே அங்கே இருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதை போலவே நாமும் உணர்கிறோம். நீதி என்பது செலுத்தப்படுவது மட்டுமல்ல, செலுத்தப்படுவ தாக மற்றவர்கள் உணரவேண்டுமென்று சொல்வார்கள். கரிகால் பெருவளத்தான் நீதி சொல்வதில் குறைந்தவனில்லை. அவனி டம் வழக்காட வந்த இரண்டு வயோதிகர்கள் இந்த இளைஞன் எப்படி நமக்கு நீதி தருவான் என்ற எண்ணத்தைக் கொண்டு அவனிடம் நீதி கோராமல் வெளியேறுகின்ற நேரத்திலே விவரத்தை அறிந்த கரிகால் பெருவளத்தான் தாடி வைத்துக் கொண்டு தன்னை வயோதிகராக மாற்றிக் கொண்டு காட்சி அளித்து நீதி வழங்குகிறேன் என்று வழங்கினான் என்பது வர லாற்று இலக்கிய சான்று. ஆக, வருகிறவர்கள் நீதி கிடைக்கும் என்று சொல்கிற நம்பிக்கை அந்த நீதிபதியைப் பொறுத்தது





மட்டுமல்ல, இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்தும் இருக்கிறது. அப்படிச் சூழ்நிலையைப் பொறுத்து இருக்கின்ற காரணத்தினால் சிங் அவர்கள் பேரிலே எப்படி கரிகால் பெருவளத்தான் எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அந்த அளவுக்கு நம்பிக்கை இருந்தாலும் மற்றவர்களுக்கு தோற்றம் அளிக்கிற வகையில் அவர்கள் தமிழ் மொழி தெரிந்தவராக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதுதானே தவிர வேறல்ல.

காம்போசிட் ஸ்டேட் இங்கே இருந்த நேரத்திலே கேரளத்தில் இருந்தும் ஆந்திராவிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் இருக்கின்ற வர்கள் ஒரு குறிப்பிட்ட பதவிக்கு மேலே போனால் இன்னொரு மொழியைத் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தது. கூட்டுறவுத் துறையிலே சி. எஸ். ஆர். பதவிக்கு மேலே போக வேண்டுமென்றால் இன்னொரு மொழியைக் கற்றாக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதைப் போல் உயர் நீதிமன்றத்திற்கு இங்கே வருகிற ஒருவர் அந்த மொழியைத் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறோமே தவிர அந்த நாட்டிலே பிறந்தவராக இருக்க வேண்டுமென்று நாங்கள் ஒருமைப்பாட்டை சிதைக்கவில்லை. நம்மைப் பொறுத்த வரை யில் அந்த மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியதை நான் மனதிலே வைத்துப் பேசுகிறேன். நீதிமன்றத்திற்கு ஒரு செய்தி போகிறது. அது அரசியல் சட்டத்திலே இருந்த பிறகும் நீதிமன்றத்திற்குப் போகி றது என்றால் அரசியல் சட்டத்திலே இருப்பதுகூட நீதிமன்றத் திலே விவாதிக்கப்படுகிற நிலைமையிலேதான் அது இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அரசியல் சட்டத்திலே இருக்கிறது என்ற காரணத்திற்காக இந்த அவையிலே விவாதிக்கப் படக்கூடாது என்பது அல்ல, எப்போது ஐயப்பாடு வந்து விட்டதோ அப்போதுதான் நீதிமன்றத்திற்குப் போகிறது, அதைப் போலவே ஐயப்பாடு வந்துவிட்டால் இந்த அவையிலே விவாதிக்க வேண்டிய பொருளாக வந்துவிடுகிறது.

இன்னொன்றைச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர் களுடைய பெயர் இங்கே இழுக்கப்படுகிறது, மத்திய மாநில உறவுகள் சீர் குலைவதற்குரிய ஆபத்து இருக்கிறது என்று. மத்திய அரசு சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டு இருப்பதன் மூலம்தான் அந்த உறவு சீராக இருக்கும் என்று நினைப்பது ஒரு அடிமை மனப்பான்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அபிப்பிராயம் சொல்வது, உள்ளத்தில் இருக்கின்ற எண்ணத்தை வெளியிடுவதற்கு ஒரு முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறது என்பது மட்டுமல்ல, இந்த அவைக்கும் இருக்கிறது என்பதை தயவுசெய்து மறந்துவிட வேண்டாம். எனவே மாநிலத்திலே உள்ள எல்லா இடங்களிலும் இருக்கின்ற நீதிபதிகள் அந்த அந்த தாய் மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதுதானே தவிர அந்த அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்

என்பதைக் கூட நாங்கள் சொல்லவில்லை. அந்த மொழி தெரிந்வராக இருக்க வேண்டும் என்பதுதான். அந்த மொழி தெரிந்தவர்களில் ஒருவர் இருக்க வேண்டும். அவர்களைப் பற்றி எந்த விதமான கருத்தையும் நான் குறிப்பிடுவதற்கு விரும்பவில்லை. தேசிய மொழிகள் எல்லாவற்றையும் நாம் மதிக்கிறோம். எனவே பீகாரிலே நீதிபதி அந்த மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதிலே நமக்கு ஐயப்பாடு இல்லை. தஸ்தாவேஜு என்று சொல்கிற நேரத்திலே தஸ்தாவேஜு பன்னூறு மொழிகளில் இருக்கலாம். அது அல்ல அங்கே. நீதி வழங்கப்படுகிறது என்று சொன்னால் அந்த மாநிலத்திலே இருக்கின்ற மொழிபுரிய வேண்டும் என்பதுதான் முக்கியம். அந்த வகையிலே பார்க்கிறபோது இங்கே வந்திருக்கின்ற நீதிபதி அவர்களைத் தனிப்பட்ட முறையிலே நாங்கள் சொல்லவில்லை. அவருக்கு இங்கே வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற மக்களுடைய மொழி புரிய வேண்டும். நெளிவு சுளிவுடைய மொழி என்பது, இலக்கிய வளம் உள்ள மொழி என்பது, நகரத்தார் ஒரு சிலேடைப் பாட்டு எழுதிவிட்டார் என்பதற்காக சோமசுந்தர பாரதியாரை வைத்து வழக்காட வேண்டி வந்தது என்பது தமிழ்நாட்டு வரலாற்றிலே சட்ட வரலாற்றிலே இருக்கிறது: ஏனென்றால் தமிழும் சட்டமும் தெரிந்த ஒருவர் அதை வாதிட வேண்டும் என்பதற்காக மதிப்பிற்குரிய சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடியிலிருந்து மதுரைக்கு அழைத்து வரப்பட்டது வரலாற்றுச் செய்திகள். எனவே இலக்கிய வளம் நிறைந்த நெடுநாள் இருந்துகொண்டு இருக்கின்ற நாகரிக மொழியைப் பேசுகின்ற மக்களுக்கு நீதியை வழங்குகிறவர் அந்த மொழியைத் தெரிந்தவராக இருக்க வேண்டும். அது இல்லாத நிலைமையிலே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஆண்டவனே தமிழ் தெரியாமல் இருப்பானேயானால் அவன் தேவையில்லை என்ற கருத்தையுடையது திராவிட முன்னேற்றக் கழகம். ஆகவே தமிழ் தெரிந்த நீதிபதிகள்தான் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய கட்சியின் கருத்து. அதிலே சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாநிலத்தை விட்டு மாநிலம் மாற்றப்படுகிறார்கள். அதற்கு மத்திய சர்க்கார் சார்பிலே சொல்லப்படுகிற காரணம், தேசிய ஒருமைப்பாடு, ஒரு தனி நபருடைய ஆதிக்கம், டாமினேஷன் கம்யூனலாகவோ அல்லது இன்புளுவன்ஸ் ரீதியாகவோ வேறு எந்த ரீதியாகவோ அமைந்துவிடக் கூடாது, அதனாலே நீதி கெட்டுவிடும். ஆகையினாலே இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் வெவ்வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும், பொது மக்களின்





நன்மையைக் கருதி, ''இன் தி இண்டரஸ்ட் ஆஃப் தி பப்ளிக்'' இது செய்யப்படுகிறது என்ற வாதத்தை மத்திய சர்க்கார் வைத்து இருக்கிறது.

(முற்பகல் 10-40.)

அதுமட்டுமல்ல, 'ஸ்டேட் ரீ ஆர்கனைசேஷன் கமிஷன்' 1956-லே மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்படுவதற்காக அமைக்கப்பட்ட கமிஷன் இம்மாதிரி தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டுமென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் வேற்று மாநிலங்களைச் சேர்ந்த நீதிபதிகள் உயர்நீதிமன்ற நிதிபதிகளாக நியமிக்கப்பட வேண்டுமென்று கருத்து தெரிவித்திருக்கிறது.

அதைப் போலவே, அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் என்ற சீர்திருத்தக் கமிஷனும், அனுமந்தையா தலைமையில் இருந்த கமிஷனும் இதே கருத்தை வலியுறுத்திச் சொல்லி இருக்கிறது.

கடைசியாக வந்திருக்கக்கூடிய லா கமிஷனுடைய ரிப்போர்ட்டிலேயும் 40-வது ரிப்போர்ட்டிலே என்று கருதுகிறேன். இதே கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே இந்த அடிப்படையிலேதான் இந்தக் காரியத்தை நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1965 ஆம் ஆண்டு டெல்லிப் பட்டணத்திலே உயர்நீதிமன்ற நீதிபதிகள், இந்தியா முழுவதும் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே, மாநிலம் விட்டு மாநிலம் உச்ச நீதிமன்றங்கள் மாற்றுவது அல்லது நீதிபதிகளை மாற்றுவது ஏற்கக் கூடியது அல்ல என்று 1965 ஆம் ஆண்டிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

இதிலே இன்றைக்குள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால் உயர்நீதிமன்றத்தினுடைய உச்ச நீதிபதியை ஒரு மாநிலம் விட்டு இன்னொரு மாநிலத்திற்கு மாற்றியிருக்கக்கூடிய இந்த முறை—டிரான்ஸ்ஃபர் ஆர்டர், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா என்று கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூறியதைப் போல அரசியல் சட்டத்தினுடைய 222-வது பிரிவின்படி அந்த ஆர்டர் வேலிட்; இது சட்டத்திற்கு உட்பட்டது என்று 7 பேர் கொண்ட நீதிபதிகளில், 4 பேர் சட்டத்திற்கு உட்பட்டது என்றும், 3 பேர் சட்டத்திற்கு உட்படாது என்றும், இது மெஜாரிட்டி ஜட்ஜ்மெண்டாக சுப்ரீம் கோர்ட்டிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, குப்தா என்ற மாண்புமிகு நீதிபதி அவர்கள் லோகல் கண்டிஷன் தெரிந்தவர்கள்தான் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருப்பது நல்லது; லோகல் லாங்க்வேஜ் தெரிந்தவர்கள்தான் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருப்பது

நல்லது ; இன்னும் சொல்லப் போனால் அந்தக் குறைபாட்டின் காரணமாக, லோகல் கண்டிஷன் தெரியாத அல்லது லோகல் லங்க்வேஜ் தெரியாத காரணத்தினால் ஒரு நீதிபதியின் எஃபியன்சி—திறமைகூட பாதிக்கப்பட்டுப் போகலாம் என்று, ஆப்சர்வேஷன் என்ற முறையிலே நீதிபதி குப்தா அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, இந்த அரசை நான் கேட்க விரும்புகிறேன். சட்ட ரீதியாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு நீதிபதியை பனிஷ்மெண்டாக அல்ல, தண்டனை தரும் விதத்தில் அல்ல, தேசிய ஒருமைப்பாடு அல்லது டாமினேஷன் உருவாகி விடக் கூடாது ; நீதிமன்றம் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற அம்சத்தில் மத்திய சர்க்கார் சட்ட ரீதியாக எடுத்திருக்கும் இந்த டிரான்ஸ்ஃபர் பிரச்னையை இந்த அரசு ஆதரிக்கிறதா என்பது ஒரு பிரச்னை ; அதிலே இந்தச் சர்க்காரின் கருத்து எனக்குத் தெரியவில்லை.

இரண்டாவதாக, இன்றைக்குச் சிவில் கோர்ட் தமிழிலே நடைபெறுகிறது ; கிரிமினல் கோர்ட் தமிழிலே நடைபெறுகிறது ; ஜட்ஜ்மெண்ட் எல்லாம் இன்றைக்குத் தமிழிலே சொல்லப்படுகின்றன. அப்படியானால் ஹைகோர்ட்டிலே இருக்கும் உச்ச நீதிமன்ற உயர் நீதிபதி அவர்களுக்குத் தமிழ் தெரியாது ; லோகல் லாங்க்வேஜ் தெரியாது. இந்த சிவில் கோர்ட் தீர்ப்பு, அதே போல் கிரிமினல் கோர்ட் தீர்ப்பு ஆகிய இவைகளெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அதனாலே பணச் செலவு அதிகமாக ஏழை மக்களுக்கு ஏற்படுகிறது. பணச் செலவு என்பது மட்டுமல்ல ; இந்த டிரான்ஸ்லேஷன் செய்யப்படும்பொழுது அர்த்தம் சரியாகச் செய்யப்பட வேண்டும். ப்ராப்பர்ட்டி ஆக்ட் இருக்கிறது ; இன்னும் பல்வேறு சட்டப் பிரிவுகளெல்லாம் இருக்கின்றன. எனவே, கவனமாகச் செய்யப்பட்டுப் போகும். அதற்குக் காலதாமதம் ஆகும். ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான வழக்குகள் நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்றன. சோசியல் லெஜிஸ்லேஷன் என்று சொல்லுகின்ற விதத்தில் பல்வேறு சட்டங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆகவே அந்த அடிப்படையிலே பார்க்கின்றபொழுது தமிழ் தெரிந்த நீதிபதியாக இருந்தால் இந்தப் பண விரயமும், டிரான்ஸ்லேஷன் சிக்கலும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

நான் இன்னொரு கருத்தைச் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். ஒன்றை நாம் இன்றைக்கு மறந்து விடுகிறோம். உயர்நீதிமன்றம், மெட்ராஸ் ஹைக்கோர்ட் இருக்கிறது. தமிழ் தெரிந்த நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதி வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் சிவில் கோர்ட்டிலே





தமிழ் இருக்க வேண்டும் ; கிரிமினல் கோர்ட்டிலே தமிழ் இருக்க வேண்டும் ; லோயர் கோர்ட்டிலே தமிழ் இருக்க வேண்டும். ஆனால் ஹைகோர்ட்டிலே தமிழ் இருக்க வேண்டுமென்று நீங்கள் சொல்ல முடியுமா ? சொல்ல முடியாது. இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தின்படி ஆங்கிலத்தில் இருக்க முடியும். நான் கேட்கிறேன், உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதி, உயர்நீதிமன்றத்தினுடைய மொழி ஆங்கிலமாக வந்து விட்டால் அதற்காக நீங்கள் ஏன் ஒரு தீர்மானம் போடக் கூடாது ? அது பற்றி இந்தச் சர்க்கார் என்ன கருதுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறார்களா அல்லது வேறு எதிலேயாவது பேசுகிறார்களா ? இரண்டு கருத்துக்களையும் பேசிக்கொண்டு வருகிறார்கள். தமிழும் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், ஆங்கிலமும் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினருடைய கட்சியின் கொள்கை என்ன என்று கேட்கக் கூடிய அளவிற்கு நானே ஆளாக வேண்டிய நிலைமைக்கு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொன்னதை நீங்கள்தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை. என்ன சொல்கிறீர்கள் என்று எனக்கே புரியவில்லையென்றேன்.

திரு. அ. ரகுமான்கான் : உச்ச நீதிமன்ற நீதிபதி தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், உச்ச நீதிமன்ற—ஹைகோர்ட்—ப்ரொசீடிங்ஸ், லோக்கல் லாங்குவேஜிலே—தமிழிலே இருந்தால்தான் சிறப்புக்குரியதாக இருக்கலாம்.

இன்றைக்கு ஆட்சிமொழி தமிழாக இருக்கிறது. மாநிலத்தினுடைய ஆளுநர் கூட இன்றைக்குத் தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்றுகூட இந்த அரசு வலியுறுத்துமா என்று தெரியவில்லை. காரணம் ஆட்சிமொழி தமிழாக இருக்கிறது. இன்றைக்குக் கிராமத்திலே இருப்பவர்கள் தங்களுடைய பிரச்னைகளை ஆளுநரிடத்தில் சொல்ல வேண்டுமென்றால்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநரிடம் போய், வரிசையாக ஒவ்வொன்றாக வந்தால் சரியாக இருக்காது. அடுத்து, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டப்
பிரிவு 222 இல் குறிப்பிட்டுள்ள வழிமுறைக்கு உட்பட்டு பாரத
குடியரசுத் தலைவர் ஒரு நீதிபதியை ஒரு உயர்நீதிமன்றத்தில்
இருந்து மற்றொரு உயர்நீதி மன்றத்திற்கு மாற்றலாம். அவ்
வாறு செய்யும் முன் மத்திய சட்ட அமைச்சர், மாநில முதலமைச்
சர் மூலம் மாற்றம் செய்யப்படும் நீதிபதியை விடுவிப்பதற்கு
மாநில ஆளுநருக்கும், தலைமை நீதிபதிக்கும் ஏதேனும் ஆட்
சேபணை உள்ளதா என்று கேட்பார். பிறகு, உச்ச நீதிமன்றத்
தில் தலைமை நீதிபதியையும், பிரதம அமைச்சரையும் கலந்து,
குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்வார். குடியரசுத்
தலைவரின் ஆணை பெறப்பட்ட பின் மாறுதல் ஆணைகள் பிறப்
பிக்கப்படும்.

இந்திய சட்டக் குழு, தலைமை நீதிபதியை மாற்றம் செய்
வதைப் பற்றி இவ்வரசின் கருத்தைக் கோரிய பொழுது 1979 மே
மாதத்தில் நமது அரசின் கருத்தைக் கீழ்க்கண்டவாறு தெரிவித்
தோம். ஒரு மாநிலத்தின் தலைமை நீதிபதி அந்த மாநிலத்தைச்
சேர்ந்தவராகவும், இருக்கலாம், தவிர்க்க முடியாத நிலையில் வேறு
மாநிலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால், எந்தக்
காரணத்தை முன்னிட்டும் மதம், ஜாதி என்ற காரணத்தின் அடிப்
படையில் சொந்த மாநிலத்தில் தலைமை நிதிபதியாக பணி
யாற்ற உரிமை உள்ள ஒருவரை மாற்றக் கூடாது. அதோடு,
வேறு மாநிலத்திலேயிருந்து தமிழகத்திற்குத் தலைமை நீதிபதி
யாக வருபவர் தமிழராகவும், நன்கு தமிழ் பாண்டித்வம்
உள்ளவராகவும் இருந்தாக வேண்டும். இனி, வழக்கு மன்ற
நிகழ்ச்சிக்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டுமென்ற
நமது அரசின் கொள்கை காப்பாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்
பட வேண்டுமாயின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழி பின்பற்றப்
படுவதைத் தவிர வேறு வழியில்லை யென்றும் முதலமைச்சரவர்
களை, மத்திய சட்ட அமைச்சர் சென்னை, உயர்நீதி மன்றத்
தின் தலைமை நீதிபதியை மாற்றம் செய்வது குறித்து கலந்த
பொழுது மேற் சொன்னதை 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள்
15ம் நாள் அன்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அந்தக்
கடிதத்தில் அந்தந்த மாநிலத்தின் பிராந்திய மொழி தெரிந்தவர்
தான் அந்தந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி
யாக இருக்க வேண்டுமென்பது மாநில அரசின் கருத்து என்பதும்
அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்குத் தலைமை நீதிபதியாக
வருபவர் தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்பதும் வலி
யுறுத்தப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சங்கரைய்யா, குமரி அனந்தன்,
நெடுமாறன் போன்றவர்கள் பேசுகின்ற பொழுது தங்களுடைய
கருத்துக்களைத் தெளிவாக வெளியிட்டார்கள். உயர்நீதிமன்றத்
தின் கீழ் உள்ள சிவில், கிரிமினல் நீதிமன்றங்களில் ஜட்ஜ்மெண்ட்,
டிக்ரீ, ஆர்டர், டெப்போசிஷன், டாக்குமென்ட் ஆகியவை



யெல்லாம் தமிழில் இருக்கும்போது, தமிழ் தெரியாத ஒருவர் உயர்
நீதிமன்றத்தின் நீதிபதியாக இருப்பாரேயானால் நீதிப் பரிபாலனத்
தில் முழுமையாக, உண்மையான பொருள் உணர்ந்து நீதி பரி,
பாலனம் செய்வது மிகச் சிரமம் என்று இந்த அரசு உணர்கிறது.
மேலும், கீழ் நீதிமன்றங்களிம், பரிபாலனத்தை ஆய்வு செல்
வதற்குக்கூட தமிழ் தெரியாத உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரால்
அந்தக் கீழ் நீதிமன்றங்களின் நீதி பரிபாலனைத்தைச் செம்மை
யாக நடைமுறைப்படுத்தச் சிரமம் ஏற்படும். இதனால், நீதி
கேட்டு நீதிமன்றங்களை நாடும் தமிழ் மக்களுக்குத்தான் பெரும்
இழப்பு ஏற்படும் என்பதை அரசு உணர்கிறது. அரசினுடைய
இந்தக் கருத்தில் எந்தவித மாற்றமும் கிடையாது. ஆனாலும்,
இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், மத்திய அரசினு
டைய முடிவே அரசியல் சட்டப்படி இறுதியான முடிவாகும்.

[முற்பகல் 10-50]

பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சே.பி.என்.
சிங் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக
மைய அரசு மாற்றம் செய்து அவர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச்
திங்கள் 12 ஆம் நாள் அன்று சென்னை உயர்நீதி மன்றத்தின்
தலைமை நீதிபதியாக பதவி ஏற்றிருக்கிறார்கள். தமிழ் அறிந்
தவர்கள்தான் தமிழகத்தினுடைய தலைமை நீதிபதியாக மட்டு
மல்ல வேறு எந்த நீதிபதியாகவும், உயர்நீதிமன்றத்திலும் இருக்க
வேண்டும் என்ற இந்த அரசினுடைய கொள்கை தொடர்ந்து
வலிறுத்தப்படும். இருந்தாலும் இந்தப் பிரச்சினையில் மத்திய
அரசினுடைய முடிவு இறுதியான முடிவாக இருக்கின்ற காரணத்
தினால் அந்த அடிப்படையிலே தற்போது சிங் அவர்கள் பதவி
ஏற்றிருக்கிறார்கள். அரசு தொடர்ந்து, தமிழகத்தினுடைய,
உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலும், எந்த நீதிபதி
யையும் தமிழ் தெரிந்த ஒருவராக இருக்க வேண்டும் என்ற
கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்ச
ரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி
வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை
என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரி மூடப்பெற்றிருப்பது.

திரு. ந. குலசேகரப்பாண்டியன் : தலைவர் அவர்களே,
வாணியம்பாடி "இஸ்லாமிய கல்லூரி கடந்த ஒரு மாதகாலமாக
மூடிக்கிடப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவ
'' வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி முதல்வர், அவரது
ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று கடிதத்தில் கடந்த 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் மற்றும் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் இரு தினங்களாக கல்லூரி மாணவர்கள், இசைக்குழு ஒன்று ஏற்பாடு செய்யும் பொருட்டு ரூ. 10,000 சேரி வகுப்பிற்கு வரவில்லை, எனத் தெரிவித்துள்ளார். மாணவர்களிடம் குறிப்பிட்ட கோட்பாட்டிற்காக மதத்தில் இசை அனுமதிக்கப்படுவதில்லை என்றும், மதத்திற்கு மதிப்புத் தரல் வேண்டும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது. திருப்பத்தூர் சார்பு ஆட்சியாளரின் ஆலோசனையின் பேரில் இந்நிலை மாணவத் தலைவர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடப்பட்டது. ஆனால், 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் அன்று வேலை நிறுத்தத்தில் உள்ள மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். மேலும், கல்லூரி பொருள்களுக்குச் சேதம் விளைவிப்பது என்ற எண்ணத்துடன் கல்லூரிக்குள் நுழைந்தனர். முதல்வரின் வேண்டுகோள் ஏற்கப்படாமல் போகவே காவல் துறையின் உதவி வேண்டப்பட்டது. இந்நிலையில் கல்லூரிக்குழு கல்லூரியையும், விடுதியையும் காலவரையரையின்றி மூடும்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 1 மணியளவில் இது அறிவிப்புப் பலகையில் அறிவிக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10-ம் நாள் அன்று கல்லூரி திறக்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

திரு. ந. குலசேகரப்பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் உள்ள அந்தக் கல்லூரி வடார்க்காடு மாவட்டத்திலேயே மிகவும் பழமையான கல்லூரி. நான் படித்த கல்லூரியும் கூட. தற்போது அந்தக் கல்லூரி ஆண்டுதோறும் ஏதாவது சில காரணங்களுக்காக இப்படி அதிக நாட்களுக்கு மூடப்படுகின்ற நிலை இருக்கின்றது. மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைக் கூட நிர்வாகம் அடிக்கடி புறக்கணித்து மாணவர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தி எதிர்காலத்திலே பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மிகப் பெரிய பொருட் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாணவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளைக் கூட விட்டுவிட்டு கல்லூரியைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு அனைவரும் கையெழுத்திட்டுக் கடிதம் கொடுத்தும் கூட, நிர்வாகம் நீண்ட நெடு நாட்களுக்கு மூடிவைத்து, அது இன்றைக்கு சட்டமன்றத்தில் வரப்போகிறது என்று தெரிந்து இரண்டு நாட்களுக்கு முன்னாலேதான் அதைத் திறந்து இருக்கிறார்கள். இந் நிலைமையில் எதிர்காலத்தில் மாணவர்களுக்கு முட்டுக்கட்டைப்போடும் சூழ்நிலையை அந்த நிர்வாகம் மேற்கொள்ளுமானால், அந்த நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ள முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அங்கே மாணவர்கள் இசைக்குழு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, அதனாலே வரவில்லை என்ற காரணத்தினால் ஆரம்பத்திலே இந்த அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு இரண்டு பேர்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு கல்லூரிப் பொருள்களுக்கு சேதம் விளைவிப்பது என்ற நோக்கத்தோடு உள்ளே நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர் என்று அந்த முதல்வர் தெரிவித்திருக்கிறார். அந்த நிகழ்ச்சியின் அடிப்படையைப் பார்க்கின்ற போது மாணவர்கள், கல்லூரி நிர்வாகம் இரண்டும் கல்லூரி சம்பந்தப்பட்ட பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை இரு சாராரும் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மாணவர்கள் தங்களுடைய படிப்பு கெடுகின்ற அளவுக்கு நடக்கவிடக் கூடாது என்று உறுதியோடு நிற்பார்களேயானால் இந்தப் பிரச்சினை நிச்சயமாக இராது. அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கல்லூரி நிர்வாகம் தவறு செய்கின்ற போது நாம் நம்முடைய அதிகார வரம்புக்குட்பட்டு வரும்போது நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்தக் கல்லூரியை அரசு ஏற்று நடத்துவது என்பதில், அதை மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த முஸ்லீம் சமுதாயத்தினர் நடத்துகின்ற காரணத்தால் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதை எல்லாம் பேசுகின்ற சூழ்நிலை இப்போது அங்கே இல்லை. இப்போது அங்கே மாணவர்கள் அமைதியாக இருக்க வேண்டும் ; கட்டுப்பாடாக இருக்க வேண்டும். தங்களாலே தங்களுடைய படிப்பு கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்லூரி நல்ல முறையில் நடக்க மாணவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : துணைத் தலைவரவர்களே, மாணவர்களிடையே எழுந்த பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்துடன் நானும் கோட்டத் துணை ஆட்சித் தலைவரும் பேச்சுவார்த்தை நடத்தி, மாணவர்கள் ஏற்றுக் கொண்ட சூழ்நிலையில் கூட, இப்படி இரண்டு மாதத்திற்கு முன்னால் கூட கல்லூரி ஸ்டிரைக் காரணமாக மூடப்பட்டது. இப்படி ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஆண்டுதோறும் மூடப்பட்டால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் அந்த நிர்வாகத்தை ஓரளவுக்கு நியாமான கோரிக்கைகளை ஏற்று நடத்தச் சொல்லி அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி நிர்வாகத்தை நலலபடி நடத்தச் செய்ய வேண்டும் என்பதிலே தக்க அதிகாரத்தை இந்த அரசு

பயன்படுத்தும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது, மாணவர்களால் பொதுவாக அமைதியின்மை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை மாணவர்கள் உணர வேண்டும். அப்படியானால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவர்கள் அமைதியாக இருப்பதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, தொடர்ந்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.

(ஆ) தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகள்உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. பா. பழனியப்பன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. பா. பழனியப்பன் : துணைத் தலைவரவர்களே, "அரசின் தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள நோயாளிகள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதம் இருப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பர்கூர் இல்லத்தில் உள்ள தொழுநோயாளிகள் தவிர, மற்ற ஒன்பது இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை.

பர்கூர் இல்லவாசிகள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர்—

(1) இல்லவாசி திரு. வீரபாகு என்பவரை உளுந்தூர்ப்பேட்டை இல்லத்திற்கு மாற்றிய உத்திரவை ரத்து செய்ய வேண்டும்.

(2) தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள உணவு செலவினத் தொகை ரூபாய் 2.30-ஐ அதிகப்படுத்துதல் வேண்டும்.

இது குறித்து உதவி இயக்குநர் (மறுவாழ்வு இல்லங்கள்) அவர்களிடமிருந்து அறிக்கைப் பெறப்பட்டது. அவர் தனது அறிக்கையில், பர்கூர் இல்லவாசிகளை நேரடியாக சந்தித்து அவர்கள் கோரிக்கையை கேட்டறிந்ததாகவும், திரு. வீரபாகு என்கிற இல்லவாசியின் மாற்றல் உத்திரவை ரத்து செய்யவும்,



உணவு செலவினத் தொகையை உயர்த்தவும் மேற்படி இல்ல நிர்வாக அதிகாரிக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என்றும், இதற்கு இல்லவாசிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

தற்போது பர்கூர் இல்லத்தில் நிலைமை சீரடைந்துவிட்டதாகவும், இல்லவாசிகள் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொண்டதாகவும் அறிக்கை அனுப்பியுள்ளார்.

திரு. கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, இதுவரை அங்கே கொடுக்கப்பட்டு வந்த உணவுப் பொருட்கள் எப்படிப்பட்டவை என்பதைக் காட்டுவதற்காக சிலவற்றைக் கொண்டு வந்திருக்கிறேன். நாற்றம் அடிக்கிற அரிசியும், உளுத்துப்போன துவரம் பருப்பும், புளித்துப் போன வெல்லமும்தான் இதுவரை கொடுக்கப்பட்டு வந்தது. இனிமேலாவது அவை மாற்றப்பட வேண்டும். அது மட்டுமல்ல. 1977–78 ஆம் ஆண்டில் 12.49 இலட்ச ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் 16.28 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து செலவழிக்கப்படாமல் இந்தத் துறையில் மிச்சப்படுத்தியதாக அறிகிறேன். அதனால் அவர்களுக்கு தேவையான அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்கவில்லை. கக்கூஸ், பாத்ரூம், ஆகியவைகளுக்கு கதவுகள் இல்லாமல் இருப்பதால் உடனடியாக அவைகளை சீர்படுத்திக் கொடுத்து மேலும் தேவையான வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் இல்லத்திலே நல்ல விதமான உணவைத்தான் கொடுத்துக் கொணடிருக்கிறோம். இதுதான் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நல்லவிதமான உணவு கொடுக்கப்படவில்லை என்றும் நாற்றமெடுத்த உணவு கொடுக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த நல்ல கோரிக்கையினை கவனத்தில் கொண்டு அதிகாரிகளிடம் கூறி பர்கூர் இல்லத்திலே எப்படிப்பட்ட நல்ல உணவைக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்கிறேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து 1980–81 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை சரியான முறையிலே அவர்களுக்காகச் செலவழிக்கப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டினைக் கூறினார்கள். அதுபற்றிய விவரம் எனக்குக் கொடுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியினை அவர்களுக்காகச் செலவு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே செலவு செய்யாமல் இருப்பதான விவரம் எனக்குக் கிடைக்கவில்லை. அதுபற்றியும் நான் விசாரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, பாவப்பட்ட ஜன்மங்களாக இருக்கின்ற அந்தத் தொழு நோயாளிகளின் மீது பற்றும் பாசமும் எப்போதும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் நமக்கு கருத்து வேறு பாடு கிடையாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்ற போது உயர் அதிகாரி பர்கூருக்கு நேரடியாகச் சென்று பார்த்து அந்த உணவிற்கான செலவினைப் பொறுத்தவரையிலே 2 ரூபாய் 30 காசு என்று இருப்பதை உயர்த்துவதற்கு ஒப்புக் கொண்டிருக் கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த 2 ரூபாய் 30 காசு என்பது 1972 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவலின்படியாகும். ஆகவே இந்தத் தொகை யினை எவ்வளவாக உயர்த்தப் போகிறார்கள் என்பதையும் அரசின் பொறுப்பிலே இருக்கின்ற மற்ற இல்லங்களுக்கும் அந்த உயர்வு பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து மற்ற அரசு மருத்துவமனைகளிலே வழங்கப்படுவது போன்ற உணவு அவர்களுக்கு வழங்கப்படுமா என்பதோடு தட்டு, டம்ளர் டூத் பேஸ்ட், பிரஷ், போன்றவற்றை—அவர்கள் டி.வி. கேட்கவில்லை. மற்ற பெரிய வசதிகள் எதுவும் கேட்கவில்லை —தட்டு, டம்ளர் போன்றவற்றைத்தான் அவர்கள் கேட்கிறார் கள், இதுபோன்ற அத்தியாவசியமான தேவைகளையாவது கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகின்ற 2 ரூபாய் 30 காசு என்பதை 2 ரூபாய் 75 காசாக உயர்த்தி வழங்குவதற்காக அங்குள்ள அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மற்ற மருத்துவமனைகளிலே வழங்கப்படுகின்ற உணவினை போன்று அவர்களுக்கும் உணவு கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். காலை உணவாக தேநீரும் சிற்றுண்டியும் கொடுக்கப்படுகின்றது. மதிய உணவு கொடுக்கப் படுகின்றது. மாலையில் தேனீரும், இரவில் உணவும் கொடுக்கப் படுகின்றது. அதோடு மட்டுமல்லாமல் தினந்தோறும் மோர் வழங்கப்படுகின்றது. வாரம் ஒரு முறை இறைச்சி கொடுக்கப் படுகிறது. அடுத்தபடியாக சுதந்திர தினம் மற்றும் விழா நாட் களிலே, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாட்களிலே ஒரு ரூபாய் அளவிலே ஒரு சிறப்பு உணவும் வழங்கப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தட்டு அவர்களுக்குக் கொடுக் கப்படுகின்றது. டூத் பேஸ்ட், பிரஷ் போன்றவைகள் எல்லாம் சரியான முறையிலே வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படி இல்லை என்றால் உடனடியாக வழங்கப்படும். அடுத்து உணவிற்கான தொகை உயர்த்தப்படும் என்பதைப் பொறுத்தவரையிலே 10 இல்லங் களுக்கும் அந்த 2 ரூபாய் 75 காசு அளவுள்ள உணவு கொடுக்கப் படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



(5) வரவு செலவுத் திட்டம் 1982–83 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற் சாலைகளும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,27,74,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்து தொழிலாளர் களின் வேலை பாதுகாப்பு ஊதிய நிர்ணயம் பற்றி நிரந்தர நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 8,27,74,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''.

திரு. கே. என். தங்கமணி : தலைவ்ரவர்களே, நகராட்சி களில் பணி புரியும் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு வேலை பளு நிர்ணயிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 8,27,74,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''.

திரு. பி. எஸ். மூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி தொழிலாளர் நலனைப் பாதுகாக்க சட்டமியற்றி பல மாதங்கள் கடந்தும், விதிகள் இயற்றி அமல்படுத்தாமல் காலங்கடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 8,27,74,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச சம்பளத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச கூலியை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, மாற்றி அமைக்க முடிவு செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 8,27,74,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண் 33— வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 15,64,59,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. த. வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, தனியார்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கடன் முறையில் வீடுகட்டித்தருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 15,64,59,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 15,64,59,000இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, கிராமப்பகுதிகளில் ஏழைகளுக்கு தரமான வீடுகள் கட்டிக் கொடுப்பது சம்மந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக்கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 15,64,59,000இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".



விட மக்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக அந்தக் கழிவுப் பஞ்சாலை அமைப்பதை மீண்டும் மறுபரிசீலனை செய்து நெல்லை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது கழிவுப் பஞ்சாலை இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் சமூகத்திலே தள்ளப்பட்ட காரணத்தினால் கழிவுப் பஞ்சாலை கேட்கவில்லை. ஆனால் பொருளாதாரத்திலே வசதிபெற்றுள்ள ஆதி திராவிட மக்கள் நல்ல பஞ்சாலையை, தங்களுடைய முயற்சி யின் காரணமாக அமைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கு அரசு உதவி செய்யுமா ? இந்த மூன்றாண்டு திட்டத்தை அரசு பரிசீலித்து வருவதாகச் சொன்னார்கள். அதன் படி இப்படி நல்ல பஞ்சாலை அமைக்க வருகின்றவர்களுக்கு தனிச் சலுகை காட்ட அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன். அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே அமைக்க முன் வந்தால் அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, இந்த மக்களைப் பொறுத்தவரையில் அவர்களை தொழில் துறை யிலே உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையிலே அரசு பணி யாற்றி வருகின்றது. தற்போது ஏறத்தாழ தோல் தொழில்கள், கழிவுப் பருத்தி நூற்பாலை, பனியன் தொழில், கிராம நெசவு மையங்கள், கல் உடைப்பு போன்ற பல்வேறு வகையில் அவர் களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதாக இருக்கக் கூடிய தொழிற்களிலே ஈடுபடவேண்டும் என்ற உணர்வோடு அரசு திட்ட டங்களைத் தீட்டி இந்த மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்தான் பணியாற்றிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கக் கூடிய கருத்துக்களையும் அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 மானியக் கோரிக்கைகளைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளை* அவை முன் வைத்திருக்கிறேன். அவைகளை நான் படித்ததாக குறிப்பேட்டிலே ஏற்றிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்கியதற்குப் பின்னாலே, அரசின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

**திரு. ஏ. டி. குலசேகர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் தமிழகம் முன் நிலையில் இருக்கிறது என்று அண்மையிலே, அம்பத்தூரிலே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றிலே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் நேரிடையாக நீதிமன்றத்திற்கு செல்லலாம் என்றும், அதுபற்றிய மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும், மைய அரசு அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் ஒரு பொருள் பட, அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கூறியிருக்கிறார்கள். தமிழக அரசின் புரட்சிகரமான சட்டத்திற்கு, மத்திய அரசிலே உள்ள ஆட்சி முட்டுக்கட்டையாக இருப்பதுபோன்று சொல்வது தொழிலாளர்களை திசை திருப்புவதற்காகவும், பொதுமக்களை திசை திருப்புவதற்காகவும் வெளியிடப்பட்ட கருத்தே தவிர, தமிழக அரசு தயாரித்து அனுப்பியுள்ள மசோதாவில், தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்கு நேரிடையாக செல்வதற்கு வகை செய்யப்படவில்லை என்பதும், இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே ஒரு சிறு மாற்றத்தை மட்டும் செய்து, தொழிற் தகராறுகள் சம்பந்தமாக சமரச பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்றும், பேச்சு வார்த்தை முடிந்ததும், அரசு அதனை பரிசிலனை செய்து, கட்டாயமாக அந்தத் தகராறை கோர்ட்டுக்கு அனுப்புவது என்றும் ஒரு நிலையை மட்டும் ஏற்படுத்தி, அந்தச் சட்டத் திருத்தத்தை அனுப்பியுள்ளார்கள்.

*751 பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.





(முற்பகல் 11–10).

இப்போதுள்ள சட்டப்படி ஏ. ஸி. எல்., டி.ஸி.எல்., பேச்சுவார்த்தைகள் ஒரு ஆண்டிற்கு மேல் காலம் கடத்தியிருக்கிறது என்ற நிலையில் இந்தச் சட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை என்று நினைக்கிறேன்.

தற்போது பல பெரும் தொழில்கள் அரசு கையில் உள்ளது. பால்வளம், போக்குவரத்துக் கழகங்கள், வீட்டு வசதி வாரியம், உணவுப்பொருள் வழங்கு துறை, அரக்கோணம், சேலம் உருக்காலைகள், தமிழ் நாடு பஞ்சாலைக் கார்ப்பரேஷன், போன்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இந்த அரசு போதிய அளவிற்கு ஊதியம் கொடுக்க முடியவில்லை. தொழில் தகராறுகளைத் தீர்த்து வைக்க தொழிலாளர் நலத்துறை இன்று சக்தி இழந்து வருகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

ஒப்பந்தக் கூலி முறையை ஒழிக்க இந்த அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று நாட்டில் உள்ள பல தொழிற்சாலைகளில் ஒப்பந்தக் கூலியாக, கூலிகளாக, தினக் கூலிகளாக, தற்காலிகக் கூலிகளாக நியமிக்கும் அந்த முறை இருந்துவருகிறது. அண்மையில் கூட அம்பத்தூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் முதல்வர் அவர்கள் பேசும்போது முதலாளிகள் என்று யாருமே கிடையாது என்றும் நானே ஒரு தொழிலாளி என்ற பொருள் பட பேசியிருக்கிறார்கள். அவற்றின் அடிப்படையில் எடுத்துப் பார்த்தால் என்னுடைய தொகுதியில் கடந்த ஆறு மாத காலமாக ஜெயலட்சுமி மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், ஜோதி மில்ஸ், ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரிஸ் போன்ற நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அவை எந்தக் தகராறுகள் காரணமாக நிறுத்தப் பட்டிருந்தாலும் அவை ஆறுமாதங்களாக நிறுத்தப்பட்டு மூவாயிரம் தொழிலாளர்கள் இன்று பட்டினியால் பசியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் என்று யாருமே கிடையாது என்று முதல்வர் அவர்கள் கூறி இருப்பதன் காரணமாக யாரை வைத்து தொழில் தகராறை முடித்துக்கொள்வது என்ற நிலை இல்லாதிருக்கிறது. எனவே இதை மாற்றியமைத்து ஒரு தொழிலாளி நீக்கப்பட்டால் உடனடியாக நேரடியாக அவர்கள் நீதிமன்றம் செல்கிறவகையில் தமிழக அரசு ஒரு மசோதாவைத் தயாரித்து தொழிலாளர்களைக் காப்பற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடுமையான மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மின்வெட்டிற்கும் தொழிலாளர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அரசின் கொள்கையால் அல்லது திறமைகுறைவால் தொழிலாளர்கள்

## ஒழுங்கு பிரச்சனை

### பேரவைக் கூட்டம் நடைபெறுகையில் நீதிவிசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது, வெளியில் அறிவிப்பது

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கவனத்தையும், கவலையையும் கடந்த 10, 20 நாட்களாக ஈர்த்துக்கொண்டிருக்கின்ற கன்னியா குமரி மாவட்டத்திலே விரும்பத்தகாத வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய கவனத்தை ஈர்க்கின்ற இந்தப் பிரச்சினைப் பற்றி இந்த மாமன்றத்தில் கழிந்த 3-ந் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாகவும், சனிக்கிழமை அன்று இந்த மாமன்றத்திலே இருக்கின்ற பல்வேறு கட்சித் தலைவர்களால் தமிழக மக்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே அரைமணி நேர விவாதம் நடைபெற்ற நேரத்திலும் சரி, அங்கே நடைபெற்ற வன் முறை சம்பவங்கள் சம்பந்தமாகவும் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகவும், அரசாங்கம் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல்வேறு சமயங்களிலும் சொன்ன நேரத்திலும் கூட, இந்த மன்றம் கூடி இருக்கின்ற இந்த நேரத்தில் அதை இங்கே அறிவிக்காமல் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி சென்று "அரசு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இதிலே நாம் கொண்டிருக்கின்ற அக்கறை காரணமாக இந்த முக்கியமான அறிவிப்பினை மன்றம் கூடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே மன்றத்திலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் ஏன் இங்கே சொல்லாமல் அங்கே சென்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏற்பட்டிருக்கின்ற சேதம், நட்டம் பொறுத்த அளவிலே அங்கே போகாமலே நமக்கு இங்கேயே தெரியும்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நீதி விசாரணை பற்றி அறிவித்த அறிவிப்பு முக்கியமானது என்றும், அதை சட்டமன்றத்திலே முதலிலே அறிவித்து இருக்கவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அது முக்கியமான அறிவிப்பு என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சட்ட சபையிலே அறிவிக்க வேண்டியது இயல்புதான். ஆனால் எந்த நேரத்தில் எத்தகையை சூழ்நிலையில் எப்படி அறிவிக்கப்பட்டது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மிகுந்த கவலை தருகின்ற காரணத்தினால் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தந்





### கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,16,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மற்றும் காந்தி நகர் போன்ற புதிய குடியிருப்பு பகுதிகளுக்குசாலை மற்றும் நகர்ப்புற வசதி செய்துத் தருவதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக்கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,16,32,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற [illegible] : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கையைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,16,32,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, நகரத்திலுள்ள குடிசைவாழ் மக்களின் நலன் கருதி தரமான வீடுகள் கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 34. நகர்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,16,32,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதித்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்லவிரும்பினால் சொல்லலாம்.

[திரு. ஏ. டி. குலசேகர்] [1982 மார்ச் 15

முன்னுரிமை கொடுத்து உதவ ஏற்பாடு செய்ய வேண்டும். தவிர,
குலுக்கல் முறையில் வீடுகள் ஒதுக்கப்படுவதால், அந்த முறையில்
தவறுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக, சில பணக்கார முத
லாளிகள், பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை முதலீடகப்
போட்டு, பல பெயர்களில் விண்ணப்பங்களைப் போட்டு, வீடு
களை எடுத்துக்கொள்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் இன்
றைக்கு பொதுமக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும்
முறையில் இயங்கவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மின்வாரியத் தொழிலார்கள். கிராமப்புறங்களில் வேலை
செய்கிறார்கள் அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதில்லை. கிரா
மங்களிலே அவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கிடைப்ப
தற்கு ஏற்படு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
அதே போல் கட்டிடத் தொழிலாளர்கள் பிரச்னைகளுக்கும்
அவர்களுடைய கோரிக்கைகளையும் இந்த அரசு மனதிலே
கொண்டு, அதையும் அவர்களுக்கு நிறைவேற்றித் தரவேண்டும்
என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை
அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற இந்த மானியக்
கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்
வதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் வீட்டு மனை எல்லாம்,
கிராமப்புற ஏழைகளுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படவேண்டும்
என்றும், அப்படி வழங்கப்பட்ட மனைகளில் வீடுகள் கட்டிக்கொள்
வதற்கும், பொருளாதாரத்திலே நலிந்த பிரிவினருக்கு வீடுகளை
ஏற்படுத்தித் தருவதிலும் நல்ல பல திட்டங்களைத் தீட்டிக்
கொண்டு, செம்மையாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது.
அதே நேரத்தில், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்
திற்கு என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்க விரும்பு
கிறேன். இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி
போன்றவைகளுக்கு ஒட்டியிருக்கின்ற நிலங்களை சமூகத்திலே
சில வசதி படைத்தவர்கள், பெரிய மனிதர்கள் அந்த நிலங்களை
வாங்கி வைத்துக் கொண்டு, பதிவு இல்லாமல், ஒப்பந்தம் போட்
டுக் கொண்டு, 2 ஆண்டுகளுக்கு , 3 ஆண்டுகளுக்கு அதை விற்கா
மல், பின்னர் அவர்களாகவே ஒரு விலையை நிர்ணயித்துக்
கொண்டு, குறிப்பாக ஒரு சதுர அடி ரூ. 50, ரூ. 60 என்று
அவர்கள் விலை வைத்துக் கொண்டு , மற்றவர்கள், சாதாரண
மக்கள், நடுத்தர மக்கள் வாங்க முடியாத ஒரு நிலையை உரு
வாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குட்டி ஜமீன்
தார்கள் இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில்
வளர்ந்து கொண்டு வருகிறார்கள்.



1982 மார்ச் 15] [திரு. எம். சின்னசாமி]

(முற்பகல் 11-20)

ஆகவே நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதி
களில் குறைந்தது ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோமீட்டர்
வரை அரசு நிலங்களை முன்னதாக கையகப்படுத்தி பினாமி
தாரர்கள் ஏழை, எளியவர்களை நசுக்கிவிடுகிற போக்கினை
தடுக்க வேண்டும். இதற்காக ஒரு சட்டத்தை கொண்டு வர
வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள்
அந்த நிலங்களை வாங்கிக்கொண்டு டவுன் பிளானிங் சட்டத்தை
மதிக்காமல் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு என்று வைத்துக்
கொண்டு விட்டு பிறகு மற்றவர்களுக்கு விற்று விடுகிறார்கள்.
பின்னால் வீடு கட்டுகிறவர்கள் விதிமுறைகள் கடைபிடிக்க
படாமல், ரோடுகள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்
றிற்கு இடம் ஒதுக்கப்படாமல் கட்டி விடுகிறார்கள். அவர்களும்
இதனால்சிரமத்திற்குள்ளாகிறார்கள். கரூர் தொகுதியை
பொறுத்தவரையில் கரூர் நகராட்சியிலே சென்ற தடவை ஒரு
கூட்டத்தை கூட்டி, ஏன் ரோடுகள் போடவில்லை என்று
கேட்டால், அந்த ரோடுகள் 10 ஆண்டு காலமாக நக
ராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை என்று ரெக்கார்டுகளிலே
தெரிகிறது. நிலத்தை விற்றவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு
போய்விடுகிறார்கள். பொதுவான ரோடுகளை ஒப்படைப்ப
தில்லை. இதன் காரணமாக நகராட்சிகள் ரோடு, பாதாள சாக்
கடை போன்ற வசதிகளை செய்து தரமுடியாமல் இருக்கின்றன.
நகராட்சிகள் மக்களுக்கு எந்த வசதியும் செய்யவில்லை என்று
நகராட்சியை மக்கள் திட்டுகிற நிலைதான் இன்றைக்கு இருக்
கிறது. விதிகளுக்கு உட்படாமல் வீடுகளை கட்டிக் கொண்டிருப்
பவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாது என்பது போன்ற
உத்தரவை போட்டு டவுன் பிளானிங் விதிகளை மக்கள் கடை
பிடிப்பதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலமாக தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு 4,000 ரூபாய் கடன் கொடுத்து வீடுகளை கட்டுவதற்கு
அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது. கிராமப்புற கூட்டுறவு
சங்கங்களில் ஓராண்டு, இரண்டு ஆண்டு காலமாக மனுக்கள்
தேங்கிக்கொண்டிருக்கின்றன. ஆதி திராவிட மக்கள் பத்து தட
வைகள் நடந்தும் கூட கடன் கிடைக்காத நிலை இருந்து வரு
கிறது. அதிகாரிகளை கேட்டால் அரசாங்கத்திடமிருந்து பணம்
வரவில்லை என்று சொல்கிறார்கள். கிராமப்புற வீட்டு வசதி
சங்கத்தின் மூலமாக மனு செய்கிறவர்களுக்கு ஒரு காலக்கெடுவை
நிர்ணயித்து அந்த மனுக்களை பைசல் செய்து அவர்களுக்கு உதவ
வேண்டும். அப்போது தான் இந்த கூட்டுறவு சங்கங்கள் உரு
வாக்கியதற்கான நோக்கமே நிறைவேறும்.

அதேபோல கூட்டுறவு அடமான சங்கத்தின் மூலம் 40 ஆயிரம்
ரூபாய் நகரப் பகுதிகளிலே கடன் கொடுக்கிறோம். வீடுகட்டுகிற
மெட்டீரியல்ஸ், தளவாடச் சாமான்கள் அதிகமாக விலை உயர்ந்

திருப்பதால் 40 ஆயிரம் ரூபாய் என்பது போதாது. ஆகவே, இதை சற்று உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தை பொறுத்தவரையில் சென்னை நகரில் மட்டும் செயல்படுவதாக மக்கள் எண்ணுகிறார்கள். கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், போன்ற இடங்களில் செயல்படுகிறது. இதை தாலுக்கா மட்டத்திலே அந்த பணியினை விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் திட்டங்கள் மேற்கொள்ளும் போது புதிய குடிசைகள் அங்கே உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய கரூர் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஒரு திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு இடங்கள் மாற்றி அது மூன்றாவது இடத்தில் இருக்கிறது. இந்த திட்டம் கால தாமதமாகிறதோ என்று மக்கள் கருதுகிறார்கள். கரூரைப் பொறுத்தவரையில் சென்னைக்கு அடுத்தபடியாக வீட்டு மனைகள் அதிகமான விலைக்கு விற்கிறது. சாதாரண மக்கள் மனை வாங்கி வீடு கட்ட முடியாமல் இருக்கிறது. ஆகவே கரூர் பகுதிக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இருக்கிற திட்டத்தை வேகமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கூட எடுத்துக் கூறியிருக்கிறேன்.

மராட்டிய மாநிலத்திலே உள்ளதுபோன்று வீடுகள் கட்டும் அப்பார்ட்மெண்ட் சிஸ்டத்தை தமிழ்நாட்டிலேயும் ஏற்படுத்தித் தரவேண்டுவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னாலே அந்தக் குழுவை அழைத்துக்கொண்டு மராட்டிய மாநிலத்திற்குப் போய் அங்கே இருக்கின்ற அந்தத் திட்டங்கள் எப்படிச் செயல்படுகின்றன, அந்தச் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்பட்டிருக்கின்றன என்பதனையெல்லாம் பார்த்து ஆலோசனை செய்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்கள் இறந்து போனால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு அதிலே தாமதப்படுத்தினால் இங்கே கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பதாக சொன்னார்கள்., அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — தலைமை.)

கல் உடைக்கின்ற தொழிலாளர்களுக்கு திடீரென்று விபத்து ஏற்பட்டாலோ அல்லது இழப்பு ஏற்பட்டாலோ அவர்களுக்குப் பாதுகாப்புச் செய்ய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

கரூரிலே பாதாள சாக்கடைத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுகொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, தொழிலாளர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசீயக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் தொழிலாளர் பகுதியை எடுத்துக்கொண்டால் விவசாயத் தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசு சட்டம் கொண்டு வந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டுக் காலமாக நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் படைத்தவர் தான்— அந்தச் சட்டங்கள் அமலாக்கப்படுகிறதா என்றால் தமிழகத்திலே குறிப்பாக கிழக்குத் தஞ்சை, சிதம்பரம் போன்ற பகுதிகளைத் தவிர வேறு எந்த இடத்திலேயும் அமல்படுத்தப்படவில்லை. அதனால் கிராமப்புறங்களிலே உள்ள அறியாமையில் வாழ்கின்ற மக்கள், வறுமையில் வாழுகின்ற மக்கள் இவர்களையெலலாம் சமூக விரோத சக்திகள் தூண்டிவிட்டு அரசாங்கத்திற்கும் சட்டதிற்கும் எதிராக அமைதியைக் குலைக்கிற வகையிலே நிலைமைகளை ஏற்படுத்துகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியும் என்று நம்புகிறேன். அப்படி தெரிந்திருந்தும்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறைந்த பட்ச கூலி கட்டாயமாக நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி இங்கே கொடுத்தார்கள், அதைப்போலவே அமைச்சர் அவர்களும் அது நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள், ஆனால் இரண்டாண்டு காலமாகியும்கூட அந்த சட்டத்தை அமல்படுத்தவில்லை, வட்ட ரீதியாக மாவட்ட ரீதியாக தகுந்த அலுவலர்களை அதற்காகப் போட வில்லை, அப்படி அமைக்காததால் இங்கே நாம் எத்தனை பேசினாலும் அரசாங்கச் சார்பிலே உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டாலும் ஏதோ மாமன்றத்திலே சொல்வதற்காக, அரசியல் ரீதியாக ஒரு வாக்குவாதத்திற்காக பதில் சொல்லுவதாகத்தான் நான் நினைக்கிறேனே தவிர வேறு ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை.

குறிப்பாக மின்சார இலாகாவைத்தவிர, வேறு எந்த இலாகாவும் அமைச்சர்கள் இங்கே பேசுகிறார்கள், பேசப்பட்ட விஷயங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மன்ற

உறுப்பினர்களுக்கு தெரிவிக்கவில்லை என்பதை நான் தெரிவித்து கொள்கிறேன். கடந்த காலத்திலே பல உறுதிமொழிகள் இங்கே அமைச்சர்களால் கொடுக்கப்பட்டன, அந்த உறுதிமொழிகள் என்ன ஆயிற்று என்று மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை. வேறு இலாக்காக்கள் செய்வதில்லை, நான் அமைச்சர் அவர்களை மட்டும் குற்றம் சாட்டவில்லை. வருங்காலத்திலாவது அதைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

லட்சக்கணக்காக இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடுகள் இல்லை, வீட்டுமனைகள் இல்லை, தமிழ்நாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி என்ற குறிப்பிலே 2 ஆவது பக்கத்திலே மத்திய அரசு சொல்லியதை நாங்கள் ஏற்றுக்கொண் டிருக்கிறோம் 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையிலே என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே முதலில் ''வீட்டு மனையில்லாத கிராமக் குடும்பங்களுக்கு மனை வழங்குதல் மற்றும் அவர்கள் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் தீட்டுதல்'' என்று இருக்கிறது கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்பதை எனக்கு தெரிந்த அளவில் நான் சொல்கிறேன். எவ்வளவு வந்தது, எத்தனை பேர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டன என்று குறிப்பிலே காட்டப்படவில்லை. அதைப்போலவே இரண்டாவது ''குடிசைப் பகுதிகள் சுற்றுப்புறத்தை மேம்பாடுசெய்தல்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-30]

குடிசைப் பகுதிகள் வாழும் மக்களில் இரு பகுதியினர்களாக இருக்கிறார்கள். 80 ஆண்டுகள், 100 ஆண்டுகள் என்று நீண்ட காலமாக அங்கே இருக்கிறார்கள். நான் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சேத்துப் பட்டு, பெரியமேடு, கே. எம். கார்டன் இதுபோன்ற இடங்களி லும், வரதராஜபுரம் நமச்சிவாயபுரம் போன்ற இடங்களிலும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். காமராஜ் காலத்தில் நமச்சி வாயபுரத்திற்கும், சேத்தப்பட்டு பகுதியிலுள்ள பிருந்தாவனம் என்ற இடத்திற்கும் அவர்களுக்கு இலவசமாக மனையையும் கொடுத்து கூட்டுறவு மூலம் கடனும் வழங்கி அவர்கள் நல்ல முறையில் வீடு கட்டி வாழ்கிறார்கள் என்பதை நான் இங்கே அவசியமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் நான் முதலமைச்சரவர்களைப் பார்த்தேன், ரெவின்யூ அமைச்சர்வர்களைப் பார்த்தேன்; தொழிலாளர் நல அமைச்சரவர்களிடத்திலேயும் நான் பலமுறை இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். 80 ஆண்டு காலத்திற்கும் மேலாக அவர் கள் வாழ்ந்து வரும் பகுதியைப்பற்றிக் கொஞ்சம் கருணையோடு நினைத்துப் பார்த்து நீங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்யத் தவறுவீர்களேயானால் நீங்களே எடுத்துக்கொண்டு கட்டிக் கொடுப் பதிலேயும் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இப்பொழுது என்ன நிலைமை என்றால் நமசிவாயபுரம் போன்ற இடங்களில் சேத்துப்பட்டிலுள்ள சிவராஜ் நகர் போன்ற இடங்களில் உள்ள





மக்கள் 1,300 ரூபாய் அல்லது 1,400 ரூபாய் கொடுக்க வேண்டு
மென்றும், இல்லாவிட்டால் அவர்கள் காலி செய்ய வேண்டுமென்
றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று, நீங்கள் வீடு கட்டிக்
கொடுத்து அதற்கு வாடகை கொடுக்காமல் இருந்தால் அவர்களை
நீங்கள் கேட்பதில் ஆட்சேபணை கிடையாது. அவர்களுக்கு
சர்க்கார் வீடு கட்டிக்கொடுத்திருந்தால் அதற்கான வாடகை
கேட்கும்பொழுது கொடுக்கப்படத்தான் வேண்டும் ; அதில் எங்
களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அரசாங்கம் வீடும்
கட்டிக்கொடுக்காமல், அங்கே 80 வருஷங்களாகக் குடியிருக்
கின்ற அந்த மக்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் அநீதியான
முறையில், அவர்கள் மேல் இரக்கமற்ற நிலையில் அரசு இருக்கிறது
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், செக்கரட்டே
ரியட் காலனி என்று 1,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகின்ற
அரசாங்க சிப்பந்திகளுக்கு அந்த இடம் இலவசமாகக் கொடுக்
கப்பட்டது. அவர்களுக்குக் கொடுத்ததற்காக நான் வருத்தப்பட
வில்லை. ஆனால் அப்படிச் சம்பாதிக்கின்றவர்களுக்கு அந்த
இடத்தை இலவசமாகக் கொடுத்திருக்கிற பொழுது வசதியற்ற
மக்கள், 80 வருடங்களாக அந்த இடத்திலே குடியிருந்திருக்கிறார்
கள், அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள்
என்று அரசாங்கக் கணக்கிலேயே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.
அப்படி இருந்தும் கூட அந்த மக்களுக்கு முதலமைச்சரவர்களோ
அல்லது தொழிலாளர் நல அமைச்சரவர்களோ இதுவொரு
பாலிசி மேட்டராக இருந்தாலும் வருங்காலத்தில் கவனித்து
அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்ற
எண்ணத்தை இப்பொழுது நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

3,750 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் கிராமப்புற
வீட்டு வசதிக்காகக் கொடுக்கப்பட்டதாகச் சொன்
னார்கள். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள்
இந்த மன்றத்திலே கேள்வி நேரத்தில் சொல்லும்பொழுது 50
பர்சென்டுக்கு மேல் ஏன் 60 பர்சென்டாக ஆதிதிராவிட மக்க
களுக்கு இந்த வீட்டைக் கொடுத்தோம் என்று மிக்க மகிழ்ச்சி
யோடு சொன்னார்கள். ஆனால் ஒன்றை அவர்கள் மறந்திருக்
கிறார்கள் என்று நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.
4,000 ரூபாயை ஒரே முறையில் கொடுக்கவில்லை. ஆனால்
அமைச்சரவர்கள் நல்லெண்ணத்தோடுதான் சொன்னார்கள்.
ஒரே நேரத்தில் கொடுத்தால் செலவழித்து விடுவார்கள், ஆகவே
கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்
ஆனால் இரண்டு, இரண்டரை ஆண்டுகளாகியும் மண்ணால்
கட்டப்பட்ட சுவர் இடிந்து, இருந்த வீட்டையும் இழந்து உங்
களிடத்தில் கடனை வாங்கி அதையும் அடைக்க முடியாமல் வீடும்
இல்லாத அவல நிலைமை இருக்கிறது. ஆயினும் இந்தக் காலத்

தில் 4,000 ரூபாய்க்கு வீடு கட்ட முடியவில்லை. நம்முடைய முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது சொல்கிறார்கள், எல்லோரும் ஏழைகள் என்று சொல்கிறார்கள். நான் எல்லோரும் ஏழைகள் என்பதால் வருத்தப்படவில்லை. எல்லா ஏழைகளுக்கும் செய்வதற்கு நம்மிடம் பணம் இல்லை என்றாலும், கான்ஸ்டிட்யூஷன் சேஃப்கார்டு என்று சொல்லி அவர்களது மேம்பாட்டுக்காகச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எந்த இனம், எந்த ஜாதி என்று நான் கவலைப்படவில்லை. நான் ஒரு பார்லிமென்ட் குழுவிற்குத் தலைவராகயிருந்தபொழுது தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்லுகின்ற கமிட்டிக்குத் தலைவராக இருந்தபொழுது ஒரு வரம்புக்கு மீறியேகூட எழுதியிருக்கிறேன். தீண்டாமை ஒழிப்புக்காகத் தனிப் பள்ளிக் கூடங்கள், தனி வீடுகள் இருக்கக்கூடாது என்று செய்து விட்டோம் என்றாலும் பிராமணர்கள் ஏழைகளாக இருந்தாலும் அவர்களுக்கும் அரிசனங்களுக்கு அளிக்கப்படுவதைப்போல அத்தனை வசதிகளும் செய்யப்பட வேண்டுமென்று 1969 ஆம் ஆண்டிலே நான் என்னுடைய ரிப்போர்ட்டிலேயே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது முதலமைச்சரவர்களுக்குச் சொல்ல வேண்டிய கடமைக்காகச் சொல்கிறேன். ஏனென்றால், நான் அதில் ஒன்றும் சந்தேகப்படவில்லை. ஆனால் சமீப காலமாக இம்மக்களுக்கு உங்களால் ஒன்றும் செய்யப்படவில்லை. வீடுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் இரண்டாண்டுக் காலமாகியும் இன்னும் ஒரு வீடுகூட ஆதிதிராவிட மக்களுக்காகச் செய்யவில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் கடனில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள முடியுமா? அந்தக் கடனை எப்படி அவர்கள் திருப்பிக் கட்ட முடியும்? அந்த வீட்டிலே தானும் தன்னுடைய பிள்ளைகளும் கூடி வாழ முடியுமா என்பதைப் புரிந்த அந்த அறிவுள்ள மக்கள், சாமர்த்தியம் உள்ள மக்களாக இருப்பதால் இந்தக் கடனுக்கே அவர்கள் வரவில்லை. இந்தக் கடன் ஏதாவது கிடைத்தால், பனை ஓலையிலே வாழ்கின்ற நாம் நல்ல வீடு கட்டக் கூடாதா என்று விரும்புகிறார்கள். கும்பகோணம் தாலுகா, சிதம்பரம் தாலுகா, சேலம் போன்ற இடங்களிலே $1\frac{1}{2}$ ஆண்டு காலமாகியும் கூட அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, சங்கங்கள் அமைத்துச் செய்வதிலே ரூ. 5, ரூ. 10 வாங்குவதற்குப் பதிலாக ரூ. 20 வாங்கி, ரூ. 5-க்கு ரசீது கொடுக்கப்படுகிற அவல நிலை இருக்கிறது. அதை அமைச்சரவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எழுதியும் இந்தக் கிராம வீடு கட்டும் திட்டத்திலே இந்த அவல நிலை இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், சேலத்திலே, ஒரு தனியார் மாக்னசைட் கம்பெனி 28—11—1972-ல் தமிழக அரசு அவர்கள் சரியாக நடத்தவில்லையென்று ரத்து செய்து, 1979 ஆம் வருஷத்திலே நாம் கார்ப்ப





ரேஷன் மூலமாக அதை எடுத்தோம். ஆனால் அப்படி எடுத்தும், கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், தனியார் துறையிலே அந்தக் கம்பெனியிலே இருந்தவர்கள், தங்களுடைய தொழிலிலே ஈடுபடமுடியாமல், 6—5—1981-ல் டெல்லியிலே, லேபர் கமிஷனர் மூலம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டும் இன்றளவு வரையிலும் அந்த அவல நிலை இருப்பதைத் தவிர்க்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) எங்கள் கட்சியின் சார்பிலே நான் ஒருவன்தான் பேசுகிறேன். ஆகவே, இன்னும் 2 நிமிடங்கள் அளிக்க வேண்டுகிறேன்.

மேலும், லேபர் கோர்ட்டுகளை எடுத்துக் கொண்டால், தொழிலாளர்கள் மிகவும் அவல நிலையில் இருக்கிறார்கள். அதாவது, ஆயிரக்கணக்கான கேஸ்கள் வருகின்றபோது, போதுமான அதிகாரிகளை, நம் அரசாங்கம் நியமிக்க தவறி இருக்கிற காரணத்தினால், அந்த வழக்குகள் எல்லாம் உடனடியாக பைசல் செய்யப்படுவதில்லை. அது மட்டுமல்ல, லேபர் கமிஷனர், டெப்புட்டி கமிஷனர் போன்ற அதிகாரிகள் சில காரியங்களைச் செய்ய முன்வந்தால் கூட, அவர்களுக்குப் போதுமான உத்தியோக உயர்வு கிடைக்காத காரணத்தினால், அவர்கள் நல்லபடியாக அந்தப் பணியைச் செய்ய முடியதில்லை. சரியாகச் செய்கின்றவர்களுக்கு ஊக்கமும் கொடுக்கவில்லை. போதுமான அதிகாரிகளும் நியமிக்கவில்லை. வந்த அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வும் கொடுக்கவில்லை. அதிகப் படியான வழக்குகளும் வந்தபடியாக இருக்கின்றன. ஆகவே, போதுமான அதிகாரிகளை நியமிக்கவேண்டும்; அவர்களுடைய நலன்களைக் கவனித்தாலொழிய அவர்களால் நீதி வழங்க முடியவில்லை. அவர்களும் மனிதர்கள்தான். ஆகவே, அவர்களுடைய எண்ணங்களைக் கவனித்தல் வேண்டும்.

மேலும் குடிசை மாற்று வாரியம், வீட்டு வாரியம் போன்றவைகளிலே பணி செய்கின்றவர்களுக்கும் போதுமான உத்தியோக உயர்வு இல்லை. பணிசெய்கின்றவர்களுக்கு நல்ல நிலைமையை உருவாக்கினால்தான் அவர்களது பணிகளும் நல்ல நிலைமையை உண்டாக்கும் நிலைமை உருவாகும்.

கட்டிடம் கட்டும் தொழிலாளி, பாரம் சுமக்கும் தொழிலாளி, இவர்களுக்குக் கூலிப் பாதுகாப்புச் சட்டமும் இல்லை, வீட்டு வசதியும் இல்லை. அவர்களுக்கு பிராவிடன்ட் பண்ட், கிராஜுவிட்டி இல்லை. அதனால் அவர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு மத்திய அரசும், மாநில அரசும் இதைக் கவனிக்க வேண்டும். மத்திய அரசைச் சொல்லிக் கொண்டு காலம் கடத்துவதாலே பயனில்லை.

மேலும் தொழில் நிறுவனங்களிலே, பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிற நிலைகளைப் பார்ப்பதில்லை. டோக்கன்களை எண்ணுவதில்லை, சுகாதாரத்தைக் கவனிப்பதில்லை, அங்கு

சரியான செக்கிங் செய்வதில்லை. ஆகவே, தொழிற்சாலைகளுக்கு வருகின்ற பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் தங்கள் கடமைகளிலே தவறியதோடு மட்டுமல்லாமல், காண்ட்ராக்ட் முறையிலே மறைமுகமாக அவர்களுக்கு உதவிக் கொண்டிருக்கிற அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய தொழிலாளர் நல அமைச்சருக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் துறையிலே வீடு கட்டுகின்ற நிலைமை இருக்கும்போது, காந்தி கஸ்தூரிபா (மணியடிக்கப் பெற்றது) ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, 15 வருடமாக, ரூ. 17,000 கோவாப்பரேடிவ் பாங்கிலே வைக்கப்பட்டு, அவர்களுக்கு இன்னும் எதுவும் செய்யப்படவில்லை.

அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், எம். எம். டி..ஏ. கூட்டத்தில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர், மணலி போன்ற இடங்களிலே அலாட் செய்யும்போது, குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 5 கடைகள் இருந்தன. அந்த 5 கடைகளில் ஒன்றை, அப்பிரிவினருக்குச் கொடுங்கள் என்று சொன்னேன். அமைச்சர் நிச்சயமாக கவனிக்கிறேன் என்று சொன்னார். தொழில் துறையில் அவர்கள் முன்னுக்கு வர அது உதவும், கொடுங்கள், என்று சொன்னேன். கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மனுக்கள் வரப்பட்டன, ஒரே ஒரு மனு ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவரால் போடப்பட்டிருந்தது. ஆனால் அவருக்குக் கிடைக்கவில்லை. மற்றவர்களோடு போட்டி போட்டு, கேள்வி கேட்டு, அதிகத் தொகையிலே ஏலம் எடுக்கின்ற சக்தி அவருக்கு இல்லை. ஆகவே கவனியுங்கள் என்று சொன்னேன். கவனிப்பதாகச் சொன்னார்; ஆனால் கடைசியிலே பார்த்தால், அவருக்குக் கிடைக்கவில்லை. இது போன்ற நிலைமைகள் இருக்கின்றன என்று சொன்னால், வீடுகளில் 60 சதவிகிதம் கொடுத்துவிட்டோம் கூட்டுறவு முறையிலே என்று சொன்னால், ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்று சொல்லும் போது, அவர்களுக்கிருந்த நிலைமையை கெடுத்திருக்கக் கூடிய அவல நிலை இருப்பதால், நீங்கள் சற்று கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40.)

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் இலாக்கா சம்பந்தமாக இன்று முன் வைத்திருக்கும்படியான இந்த மானியத்தின் மீது முக்கியமான, ஏராளமான விஷயங்கள் சொல்ல வேண்டும். ஆனால் நம்முடைய துரதிருஷ்டம் என்ன வென்று சொன்னால் இப்படிப்பட்ட மானியங்களை 2 மணி, 2½ மணி நேரத்திற்குள் முடித்துவிட வேண்டும் என்று இருக்கின்ற முறை கைவிடப்பட வேண்டும்.





அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டு நாட்களுக்காவது அதன் பேரில் விவாதம் இல்லை என்று சொன்னால், அமைச்சர் எப்படி நிதி வாங்குவார்கள். 3 மானியக் கோரிக்கைகளில் அவர் மானியம் வாங்க வேண்டும். நிதியும் வாங்க வேண்டும். அது நடக்காத விஷயம். இருந்தாலும் ஓரளவுக்கு என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். எதை எதைப் பேசுவது எதை விடுவது என்பதே கஷ்டமாக இருக்கின்றது.

இந்த மாமன்றத்திலே தொழிலாளர் கொள்கையைப் பற்றி இந்த அரசினுடைய நடவடிக்கைகள் தவறு என்பதைக் கடுமையாக பேசியவர்கள் நாங்கள். 1981 பிப்ரவரி மாதத்தில் இந்த விவாதம் நடைபெற்றது, என்பது இந்த மன்றத்திலே உள்ளவர்களுக்குத் தெரியும். அதற்குப் பிறகும், அரசு தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறதா என்று கேட்டால், ரொம்ப வேதனையோடு சொல்லுகிறோம். அந்தக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து செல்லும்படியான ஒரு நிலை இருக்கின்றது. அது நல்லதல்ல.

தொழில் தகராறுகளில் போலீஸ் தலையீடு இருக்காது என்று பிரகடன்படுத்தியது இந்த அரசாங்கம். இன்றைக்குத் தொழில் தகராறு ஏற்படும்போது அதிலே போலீஸ் தலையீடு இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரியும். உதாரணமாக அண்மையில் நடைபெற்ற சில சம்பவங்களைப் பார்த்தால் தெரியும்.

ஹோசூரில் நடைபெற்றப் போராட்டம், லே-லாண்டு தொழிற்சாலையில் நடந்த போராட்டம், ஐ. டி. ஐ. படித்த வாலிபர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சில ரூபாய்களுக்காக வேலை செய்து கொண்டிருக்கும் இடம். அங்கே, ஒரு காபி, சாயா வாங்கிக் குடிப்பதற்கும் வழி கிடையாது. வேறு எவரும் அங்கே ஓட்டலை நடத்த முடியாது. அப்படிப்பட்ட இடத்திலே தகராறு வந்தது. அங்கே உணவுப் பிரச்சினையிலே தகராறு வந்தது. அவர்களுடைய கூலிப்பிரச்சினையிலே தகராறு வந்தது. இது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்திய நேரத்தில் கூட்டு லேபர் கமிஷனர் கொடுத்த ஆலோசனையை அந்த மேனேஜ்மென்டார் நிராகரித்து விட்டார்கள். அதற்குப் பதிலாக அநியாயமாக சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட சம்பளத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னதற்காக அந்தக் கமிஷனர் பேரிலேயே அவர்களுடைய தாக்குதலை ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட நிர்வாகம். இதை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அதனாலே இந்தப் பிரச்சினை வளர்ந்தது. போலீஸ் தலையீடு பயங்கரமாக இருந்தது. அங்கே தகராறு ஏற்பட்டு கதவடைப்பு ஏற்பட்டது. அந்தக் கதவடைப்பு முடித்து முதலாளிகளாகவே அந்தக் கம்பெனியை திறக்க ஏற்பாடு செய்தார்கள். எந்தத் தொழிற்சங்கத்தோடும் அவர்கள் ஒப்பந்தத்தை செய்து கொள்ளத் தயாராக இல்லை.

தாங்களே, அந்தத் தொழிலாளர்கள் போதிய அளவுக்குப் பட்டினி கிடந்ததாக நினைத்து அவர்கள் திறந்தார்கள். 220 தொழிலாளர்களுக்கு மேல் அவர்கள் பட்டியல் தயாரித்து போலீஸ் உத்தியோகஸ்தர்களிடம் கொடுத்து, போலீஸ் உத்தியோகஸ்தர்கள், கம்பெனி ஆட்களாக கம்பெனி உத்தியோகஸ்தர்களாக கிடைத்தவரை எல்லாம் அவர்களைக் கைது செய்தார்கள். பெங்களூரில் கொண்டுபோய் கம்பெனி நிர்வாகம் விசாரணை வைத்தார்கள். ஒழுங்கு சம்பந்தமான விசாரணையை, இந்த மாநிலம் சம்பந்தப்பட்ட விசாரணையை பெங்களூரில் கொண்டுபோய் வைத்தார்கள். இதற்கும் தொழிலாளர்கள் போனார்கள். போனவர்களை அங்கே வைத்து கைது செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு அவர்கள் எப்படி போவார்கள். இப்படிப்பட்ட தகராறுகள் அந்தத் தொழிலாளர்கள் பேரில் நடந்தன.

3 மாதங்களுக்குப் பிறகு நவம்பர் மாதத்தில் இந்தக் கம்பெனி திறக்கப்பட்டது. எத்தனை தொழிலாளர்கள் வேலைக்குப் போனார்களோ அதற்கு அதிகமான அளவுக்கு போலீஸ் இருந்தது. 2,500 தொழிலாளர்கள் வேலைக்கு வந்தால் 2,500-க்கும் மேற்பட்ட போலீஸ் இருந்தது. போலீசினுடைய டெர்ரர் அதுதான் அன்றிருந்த நிலை. அதை வைத்து வேலையை நடத்த ஏற்பாடு செய்த முதலாளிகள், தங்கள் இஷ்டம் போல வேலைப் பளுவை உயர்த்தி தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்கி வேலைக்குச் சேர்த்தார்கள். இத்தனையையும் அவர்கள் செய்வதற்கான நோக்கம், எப்படியும் அங்கே தொழிற்சங்க இயக்கம் வளரக் கூடாது. புது இடம் அல்லவா, அடிக்கும் கொள்ளையை 'புல்லாக' அடிக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் அது நடக்கவில்லை. இத்தனைக்கும் பிறகு அந்தத் தொழிலாளர்கள் உறுதியாக தொழிற்சங்கத்திலே இன்றைக்கு இருக்கிறார்கள், அவ்வளவையும் அனுபவித்ததற்கு பிறகு. ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கை அங்கே நடந்தது. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளால் பயன் கிடையாது.

அந்த நிர்வாகம் சட்டவிரோதமாக நடக்கும்போது அந்த நிர்வாகத்திற்கு சர்க்காரிடத்தில் ஆதரவு இருக்கக்கூடாது அல்லவா? அவர்கள் இந்த புதிய தொழிற்சாலையைத் தொடங்க சர்க்கார் எத்தனையோ இலட்சக்கணக்கான பணத்தை செலவு செய்துதானே அவர்களுக்கு 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்' செய்து கொடுத்திருப்பார்கள். அரசாங்கத்தின் உதவியோடுதானே அவர்கள் தொழிலை நடத்துகிறார்கள். அப்படி இருக்கும்போது ஏன் அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாது? சட்டவிரோதமாகச் செயல்படக்கூடாது என்று ஏன் சர்க்கார் சொல்லக்கூடாது? இதுதான் எங்களுக்கு இருக்கிற கவலை.





அவர்கள் பெரிய முதலாளிகள். இன்றைக்கு 555 லேலான்ட் பஸ்களை இந்த அரசாங்கத்தின் போக்குவரத்துக் கார்ப்பரேஷனுக்கு வாங்க இருக்கிறோம். தொழிலாளர் நல அமைச்சர் இதற்கு பதில் சொல்ல முடியாது என்றாலும் அரசாங்கத்திற்கும் அவர்களுக்கும் இப்படி ஈடுபாடு இருக்கின்ற காரணத்தால் தட்டிக் கேட்கலாம் அல்லவா? இன்றைக்கு ஓசூரில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கும்போதுதான் அவர்களிடமிருந்து இந்த பஸ்களை வாங்கப்போகிறோம்.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சேலத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள். அங்கே அடிதடி நடந்திருக்கிறது. முதலாளிகள் ரௌடிகளை வைத்து தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அங்கே நக்சலைட் புகுந்து விட்டார்கள் என்று சேலத்தில் பொதுக் கூட்டத்தில் கருத்துச் சொன்னார்கள். உடனே இது பற்றி அங்கே இருக்கிற போலீசார் ஒரு அறிக்கை விட்டார்கள். நக்சலைட் புகவில்லை. நிர்வாகத்தின் தவறு என்று போலீசார் குறிப்பிட்டார்கள். எப்படி போலீசும் நிர்வாகமும் சேர்ந்து அந்தத் தொழிலாளர்களை சீரழிக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இதை எல்லாம் சொல்கிறேனே அல்லாமல், அரசாங்கம், இப்படிப்பட்ட விஷயங்களில் தொழிலாளர் பக்கம் நிற்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே அல்லாமல் இதை ஒரு தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கிய விஷயம் இன்றைக்கு நாடு பூராவும் போராட்டம் நடக்கிறது. நம்முடைய காடம்பாறை மின்சார திட்டத்தில் 154 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் 110 பேர் ஆண்கள், 30 பெண்கள், 14 குழந்தைகள், அவர்களை எல்லாம் பிடித்து ஜெயிலிலே போட்டார்கள். எந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒன்றும் அறியாத அந்த குழந்தைகளை பிடித்து ஜெயிலில் போட்டார்கள்? அந்தக் கான்ட்ராக்டர் கட்டிக் கொடுத்த குடிசைகளைப் பிரித்து போட்டு, அவர்களுடைய சாதனங்களை எல்லாம் அந்த கான்டிராக்ட் நிர்வாகத்திடம் எடுத்து கொடுத்துவிட்டு, அவர்களை, கைது செய்து ஜெயிலிலே போட்டார்கள். பல மாதங்கள் அவர்கள் சிறையில் இருந்தார்கள். பின்னாலே அவர்கள் அத்தனை பேர்களும் மன்னிப்பு எழுதி கொடுத்து விட்டு, 3 மாத தண்டனை பெற்று வெளியே வந்தார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னிப்பு கேட்டவர்களுக்கு 3 மாத ஜெயில் தண்டனை. இந்த 3 மாத தண்டனையை ரிமாண்டிலிருந்த காலத்தில் கழித்துக் கொண்டு வெளியே போ என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? நான் அமைச்சர் அவர்களுக்கு சவால் விட்டுச் சொல்கிறேன். அங்கே ஒரு விசாரணைக்கு நீங்கள் ஏற்பாடு செய்தால் அந்த இடத்தில் நடைபெற்ற சம்பவங்களை நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம்.

என்னதான் சொன்னாலும் அரசாங்கத்தின் கண்ணோட்டம் அந்த கான்டிராக்ட் முதலாளிகள் பக்கம்தான் இருக்கிறது. தங்களுடைய கோரிக்கைக்காக தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை குரூப், குரூப்பாக கைது செய்து, அவர்கள் பேரில் வழக்குத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்ததற்காக 3 மாதம் ஜெயில் தண்டனை கொடுத்தார்கள். இப்படிப்பட்ட ஒரு வரலாறு தமிழக சரித்திரத்திலேயே கிடையாது. அப்படி இருக்கும்போது இந்த அரசாங்கம் ஏன் தங்களுடைய கொள்கையிலே ஒரு கறுப்புப் புள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். இதற்கு உங்களால் என்ன நியாயம் சொல்ல முடியும்? சி.ஐ.டி.யு. தொழிற் சங்கத்தை உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் அதைச் சொல்லட்டும், ஏன் பிடிக்கவில்லை என்று சொல்லட்டும், ஆனால் இப்படிப்பட்ட நடவடிக்கை சரியல்ல என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த கான்ட்ராக்டர் யார்? இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி. 18 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு அவர்களுக்கு நம்முடைய கான்ட்ராக்ட் இருக்கிறது. செய்துகொண்ட கான்ட்ராக்ட்படி அவர்கள் செயலாற்றவில்லை என்றால் அந்தக் கான்ட்ராக்டை அபாலிஷ் செய்ய சட்டம் இருக்கிறது. எந்த இடத்திலாவது அந்தச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. எத்தனை சாவு அங்கே நடந்திருக்கிறது? இது பற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்தது உண்டா? நிச்சயமாக இல்லை. அக்கம்பெனி ஒரு சர்வதேச கான்ட்ராக்டர் இந்த சர்க்காருக்கு மேல் செல்வாக்குப் படைத்தவராக இருக்கிறார். அந்தச் செல்வாக்கினால் அரசாங்கம் பேசாமல் இருக்கிறது. அரசாங்கத்திடம் செல்வாக்குப் படைத்த அந்த முதலாளி இன்றைக்கு இந்த சர்க்காரைப் பயன்படுத்தி தொழிலாளர் தலையில் கைவைத்திருக்கிறார். அந்த முதலாளி மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். இந்த மின் திட்டத்தை நடத்த விடாமல் தொழிலாளர்கள் நடப்பதால்தான், இப்படி, நடந்தது என்று ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். முதலமைச்சரிடம் அந்த முதலாளி கொடுத்த ரிப்போர்ட்தான் செல்வாக்கு பெற்றதாக இருக்கிறது. நான் முதலமைச்சரிடம் சொன்னேன். இது தப்பு என்று நிருபிக்கத் தயார் என்று நான் சொன்னேன் ஆனால் என்னுடைய பேச்சு செல்வாக்குப் பெறவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலை கூட அந்த செல்வாக்கைப் பெறவில்லை. ; ஆனால் அந்த முதலாளியின் ரிப்போர்ட் முதலமைச்சரிடத்தில் செல்வாக்கு பெறுகிறது. அதற்கு என்ன காரணம்? அந்த காண்ட்ராக்டருடைய ஆட்கள் அமைச்சர்களுடைய வீடுகளைச் சுற்றிக் கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கிறோம். அது கூடாது. இன்றைக்கு அந்தக் கான்ட்ராக்டருக்கு லோயர் மேட்டூரில்



கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் கண்ணோட்டம் முதலாளிகள் பக்கம்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சர்வதேச கான்ட்ராக்டருக்கு பாதுகாப்பு அளிப்பது இந்த அரசின் கொள்கையாக இருக்கக் கூடாது.

[முற்பகல் 11–50]

நீங்கள் தொழிலாளர்கள் பக்கம் நிற்கவேண்டும். இனி மேலும் அப்படி நிற்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது. அப்படிப்பட்ட கொள்கையே இந்த அரசுக்கு இல்லாமல் போய்விட்டது என்று நாங்கள் எண்ணவில்லை. நடவடிக்கைகளிலே தவறு ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தது எந்த போராட்டங்களும் முடிந்தவுடன் வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவதில்லை. 1977-ஆம் ஆண்டு இந்த சர்க்கார் வந்தபோது லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் தொழிலாளர்கள் 900 பேர் கைது செய்யப்பட்டார்கள் அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படும் என்ற வாக்குறுதியினை எனக்குக் கொடுத்தார்கள். ஆனால் வாபஸ் வாங்கப்படவில்லை. அதே போன்று காடம்பாறை போராட்டம் சம்பந்தமாக வழக்கு போடப்பட்டது அந்த வழக்கும் வாபஸ் வாங்கப்படவில்லை ஈரோட்டு துரைமுருகன் காலண்டரிங் மில் தொழிலாளர்கள் 35 பேர் மீது கேஸ் போடப்பட்டது. ஆனால் இன்று வரை அவர்கள் தினமும் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு வருவது போன்று கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். 14 நாட்களுக்கு ஒரு முறை அவர்கள் கோர்ட்டுக்குப் போய் வர வேண்டிய நிலைமை இருக்கின்றது. வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை.

ஈரோட்டு ஆயில் மில் தொழிலாளர்கள் போராட்டம் 1979-ல் நடந்தது. அப்போது அந்தத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள் அந்த வழக்கும் இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை. இவை எல்லாம் தொழிற் சங்கம் நடத்துவதை தடுத்து அதனை அழித்துவிடலாம் என்பதாலா? அப்படி அழிக்க முடியாது. தொழிலாளர்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து அந்த எண்ணத்தைக் கொண்டிருந்தால் அந்தக் கொள்கையைச் சட்டாயம் அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்தது தொழிற்சாலை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். இந்த பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் மட்டுமல்லாது, சென்னையில் சீஃப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இருக்கிறார் இந்த ஆய்வாளர்கள் எல்லாம் ஆங்காங்கே வருகின்றபோது தொழிற்சங்கத்

தலைவாகளைக் கண்டு பேசுவதில்லை தொழிற் சங்கத் தலை
வர்களின் கருத்துக்களைக் கேட்பதில்லை. ஒரு வேளை இவர்
களுக்கும் முதலாளிகளுக்கும் தொடர்பு இருக்குமோ என்னவோ
தெரியவில்லை. தொழிலாளர்களுக்குரிய கஷ்டங்கள் நிலமை
கள் பற்றி தொழிற்சங்கத் தலைவர்களைக் கண்டு இவர்கள்
எல்லாம் பேசுவதே இல்லை. ஆகவே நான் தெரிவித்துக்கொள்
கிறேன் முதலாளிகளை மட்டும் நம்பினால் தொழிற்சாலை
சட்டம் ஒழுங்காக நடக்காது. ஆகவே பல ஆய்வாளர்களுக்
குத் தொழிற் சங்கத் தலைவர்களோடு தொடர்பே கிடையாது.
அப்படிப்பட்ட மோசமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.
அடுத்தது இணை ஆய்வாளர் என்று நான்கு மாவட்டங்கள்
இணைந்த கோவை பிராந்தியத்தில் இருக்கிறார். அவரும்
கூட தொழிற் சங்கத தலைவாகளுடன் தொடர்பு கொள்வ
தில்லை. ஆனால் உண்மை நிலைமையை அறிந்துகொள்ளவேண்
டும் என்றால் தொழிற்சங்கத் தலைவர்களுடன் தொடர்பு
கொண்டால்தான் அறிந்துகொள்ள முடியும். ஆகவே இந்த
ஆய்வாளர்கள் மஸ்டர் ரோலிலே உள்ள பெருமளவு தவறான
காரியங்களைக் கண்டுபிடிக்கத் தவறுகிறார்கள். அந்த ரகசியங்
களை இவர்களாலே அறிந்துகொள்ள முடியவில்லை. நிரந்
தரம், பதிலி, லர்னர், அப்ரண்டீஸ், தினக்கூலி, கான்ட்டிராக்ட்
என்று இப்படி சட்ட பாதுகாப்பு எதுவுமில்லாமல் வேலைக்குப்
போய்க்கொண்டிருக்கிறார்கள். எந்த விதமான எழுத்தோ,
கணக்கோ கிடையாது. ஆகவே ஃபேக்டரி சட்டங்களை நாம்
உருவாக்கி அவற்றை ஒழுங்காக அமுல் நடத்த வேண்டும் என்
றால் இவற்றை எல்லாம் சரியாகக கண்காணிக்க வேண்டாமா?
ஆனால் இவையெல்லாம் சரியாகக் கண்டுபிடிக்கப்படுகின்றதா
என்றால் இல்லை. இப்படி மிகப் பெரிய குளறுபடிகள்
இருக்கின்றது. பாக்டரிகளில் இரண்டு வித மஸ்டர் ரோல்கள்
உள்ளன. ஆய்வுக்காக செல்கின்றபோது மஸ்டரில் இல்லாத
ஆட்கள் இருக்க மாட்டார்கள். மற்ற நேரங்களிலே வேலை
செய்துகொண்டிருப்பார்கள். இப்படி பல பிரச்சினைகள்
கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் தொழில்
தகராறுகள் முளைக்கின்றன. ஆகவே ஆய்வாளர்கள் இது
பற்றிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க முடியும்,
இந்த நிலைமைகளைப் பற்றி சரியாக ஆராய்ந்தால். அப்போது
இது சம்பந்தமாக பிரச்சினைகள் எல்லாம் வராது. ஆய்வாளர்
கள் ஒழுங்காகப் பணி செய்தால் பல தொழில் தகராறுகள்
வராமல தடுத்து விடலாம். ஆனால் அந்தப் பிரச்
சினைகள் மூடி மூடி வைக்கப்பட்டு பிறகு அது லேபர் கமிஷன
ருக்கு வரும். இப்படிப்பட்ட நிலைமைகள் சரியில்லை. இது
மாற்றப்படவேணடும் இப்படி இருந்தால் சட்டங்களைப் பாது
காக்க முடியாது.

இருபத்து நான்கு மாதங்கள சர்வீஸ் செய்திருந்தால் அவர்
களை நிரந்தரமாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் சட்டம் கொண்டுவந்தார்கள். அது நல்ல சட்டம்



தான். வரவேற்கிறோம். ஆனால் அந்த சட்டத்தை நிறை
வேற்ற வேண்டும் என்றால் மஸ்டர் ரோல், அடையாள அட்டை,
சம்பளப் பட்டியல், சம்பள பில்கள் சரியில்லா விடில் அது
முடியாது. நாம் நிறைவேற்றுகின்ற சட்டங்கள எல்லாம்
தோற்றுப்போய்விடும். அன்றாடம் வந்து பணி செய்துவிட்டுப்
போகின்ற பணியாளர்கள் பற்றிய இப்படிப்பட்ட எந்தவிதமான
விவரமும் இல்லாத நிலைமை பல தொழிற்சாலைகளிலே இருக்
கின்றது. அடுத்து கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் இன்றும்
பல தொழிற்சாலைகளிலே இருக்கிறார்கள். கான்ட்ராக்ட்
முறையினைத் தடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள
சொன்ன போது நாங்கள் சந்தோஷப்பட்டோம். ஆனால,
இப்போது எல்லா இடத்திலும் காண்ட்டிராக்ட் தொழிலா
ளர்கள் அதிகமாக ஆகி இருக்கிறார்கள்.

இன்னொரு சம்பவம். மிக முக்கியமானது. நம் அத்தனை
பேருடைய நெஞ்சத்வதயும் தொடக்கூடிய விஷயம். சிவகாசியில்
நடந்த விபத்து பற்றியது. 1981 தீபாவளி சமயத்தில் அந்த
வெடி விபத்து நடைபெற்றது. எந்தவிதமான சட்டதிட்டங்
களுக்கும் கட்டுப்படாமல் அத்தனையையும் தூக்கி எறியக்கூடிய
நிலையில்தான். சிவகாசியிலும் அதனைச் சுற்றிலுமுள்ள சில
பகுதிகளிலும் இன்றும் சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பிராந்
திய ஆய்வாளர்கள் என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள் ?
இந்த விபத்தின் காரணமாக 30 பேர்கள் உயிரிழந்தனர். இந்தக்
குற்றத்தை நாம் யார்மீது சுமத்தப் போகிறோம். அந்த
அளவுக்கு அந்த ஆய்வாளர்களின் பணிகளில்
குறைபாடுகள் இருந்ததின் காரணமாகத்தான், இத்தகைய
வெடி விபத்துக்கள ஏற்பட்டிருக்கின்றன. அவைகளையெல்
லாம் தீர பரிசீலிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்
கிறது. சிறுவர்களை பணியில் வைத்துக் கொள்ளக்கூடாது
என்ற சட்டம் இருக்கிறது— ஆனால் சிறுவர்கள் இந்த விபத்
தில் இறந்து போனதற்கு யார் காரணம் ? ஆய்வாளர்கள
தங்கள் பணிகளை ஒழுங்காக மேற்கொண்டார்களா ? இது
போன்ற தீப்பெட்டி மருந்துத் தொழிற்சாலைகளில் மின்சாரம்
உபயோகப்படுத்தக் கூடாது என்று விதியிருக்கிறது. ஆனால்
அப்படி உபயோகப்படுத்தியதின் விளைவாகத்தான் இந்த
விபத்தே ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் ஆய்வாளர்கள்
கணகாணித்திருக்க வேண்டாமா ? இன்னும்கூட பதிவு செய்யப்
படாத நிறைய சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் காடு
களிலும் தோட்டங்களிலும் மறைவாக திருட்டுத்தனமாக நடப்ப
தாகத் தெரிகிறது. இவைகளையெல்லாம் அவர்கள் கண்டு
பிடிக்க வேண்டாமா? முதலாளிகளுக்கு என்ன ? நல்ல
முறையில் பணம் செலவழித்து, தற்போது பெயிலில் வந்து,
அவர்கள சுகமாகத்தான் இருக்கிறார்கள்.

[திரு. கு. ரமணி] [1982 மார்ச் 15

அதேபோலவே, இந்த 30 பேர் இறந்ததற்காக நஷ்டஈடு
கொடுப்பதிலும் அநீதி நடந்துள்ளது. நஷ்டஈடு இவ்வளவு
கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்க, இறந்தவர்களின்
உறவினர்களை கூப்பிட்டு சாட்சிகளாக விசாரிக்கிறபோது கூறப்
பட்டதை எடுத்திருக்க வேண்டும். ஆனால இறந்தவர்களுக்கு
ஊதியமாக 350, 400 என்று கொடுக்கப்பட்டதாக உறவினா
கள சிலர் சொன்னதின் பேரில் நஷடஈட்டை நிர்ணயித்திருக்கி
றார்களா என்றால இல்லை. அது தவறு. உண்மைக்கு மாறாக
90 ரூபாய், 80 ரூபாய் என்ற அளவிற்குதான் அந்தத் தொழி
லாளர்களுக்கு ஊதியம் கொடுத்திருக்கிறார்கள் என்று முதலாளி
கள் கூறியதை ஏற்றுள்ளனர். ஆனால் உண்மையில் என்ன நடந்
திருக்கிறது என்றால், இறந்தவர்களின் உறவினர்களைக் கூப்பிட்டு
மேனேஜ்மென்ட் என்ன செய்திருக்கிறது என்றால், கொடுத்ததை
வாங்கிக் கொள்ளுங்கள், உங்களால் எதையும் நிருபிக்க முடியாது.
சாட்சியங்கள் கிடையாது. அப்படியே நிருபித்தாலும் நீங்கள்
நஷ்டஈட்டை பெறுவதற்கு காலதாமதம் ஆகும். ஆகையால்
கொடுப்பதை வாங்கிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் இது
வும் கிடைக்காமல் போய்விடும் என்று அவர்களை நிர்ப்பந்தப்
படுத்தியிருக்கிறார்கள்.

உயிர் இழந்த ஒவ்வொரு தொழிலாளியின் குடும்பத்திற்கும்
18-லிருந்து 22 ஆயிரம் வரையில் நஷ்டஈடு தர வேண்டும்.
ஆனால் 5,000, 10,000 என்று மட்டும் செலவழித்து, அதற்குள்
அவர்களை ஒப்புக்கொள்ள வைத்து, இந்த நஷ்டஈடு விவகாரம்
முடிக்கப்பெற்றிருக்கிறது. இது என்ன நியாயம்? இறந்து
போன ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் எவ்வளவு தொகை
கொடுக்கப்பட்டது? அப்படி கொடுக்கப்பட்ட மொத்தத்
தொகை எவ்வளவு? நியாயப்படி அவர்களுக்கு எவ்வளவு
கொடுக்க வேண்டும்? உண்மையில் கொடுத்தது எவ்வளவு
போன்ற விவரங்களை பரிசீலித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் இந்த அவையில் வைத்தால் எங்களுடைய மனம் ஓரளவிற்கு
நிம்மதியாக இருக்கும், ஆகவே அமைச்சர் அவர்கள் அதைக்
கண்டிப்பாகச் செய்ய முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, இந்த விசாரணையை துரிதமாக முடித்துக்கொள்ள
வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் ரொம்ப பாடுபட்டிருக்
கிறாராம். எப்படிப்பட்ட விசாரணை—இந்த விசாரணையை
முடிக்க அவர் கமிட்டியை முடுக்கிவிட்டாராம். 1980-இல்,
சிறுவர்களை பணியில் அமர்த்துவது பற்றிய பிரச்சினைக்கு முடிவு
காண, மாவட்டக் கலெக்டர் தலைமையில் அரசு ஒரு கமிட்டி
அமைத்ததே, அதன் பொறுப்பை அவர் எந்த வகையில்
நிறைவேற்றியிருக்கிறார்? அந்த நிலைமைகளை எல்லாம்
யோசிக்க வேண்டியிருக்கிறது. நியாயப்படி விசாரணைகள்
நடக்கவில்லை என்பதுதான் எங்களுக்குக் கிடைத்த தகவல்கள்



982 மார்ச் 15] [திரு. கு. ரமணி]

.றுகின்றன. அப்படி இல்லை என்றால் நடந்தது என்ன என்பது
.றித்து பரிசீலனை செய்து அதன் விவரங்களை இந்த அவைக்கு
மைச்சர் அவர்கள் தரவேண்டும்.

நஷ்டஈடு கொடுப்பதற்காக நடத்தப்பட்ட விசாரணைகள்
றித்து, அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப் பெற்றது
ன்ற விவரம் குறித்து, அந்தப் பிராந்திய ஆய்வாளர்கள்
ட்ட விரோதமாக தொழிற்சாலைகள் நடத்தவிட்டது
றித்து, இந்த விபத்துக்கு யார் காரணம் என்பது குறித்த
ண்மைகளை அறிய தனியாக லேபர் கமிஷனர் தலைமையில்
ஒரு உண்மையான விசாரணையை நடத்தி, பரிசீலனை செய்து,
அவற்றின் விவரங்களை இந்த அவைக்குத் தரவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இது மிக மிக முக்கியம்.

அடுத்ததாக, இந்த தொழிற் தகராறுகளை தீர்ப்ப
தற்காக மாநிலம் முழுவதற்கும் ஒரு கமிஷனர், ஒரு ஜாயின்ட்
கமிஷனர், ஒரு சில உதவி லேபர் கமிஷனர்களைப் போட்டிருக்
கிறீர்கள். மாநிலம் முழுவதற்கும் ஒரு கமிஷனர் போதுமா?
அவருக்கு மாநாடுகளுக்கு சென்று அட்டெண்ட் பண்ணுவதற்கே
நேரம் சரியாக இருக்கிறது. அதற்கு மேல் அவருக்கு நேரமும்
இருக்காது. ஆகவே அவருடைய பதவி நிலையிலேயே இன்
னொரு கமிஷனரையும் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
அதேபோல் ஜாயின்ட் கமிஷனர் பதவியிலும் ஒரே ஒருவர்தான்
இருக்கிறார். அவர் எத்தனை மாவட்டங்களை பார்க்க முடியும்?
கன்சீலியேஷன் உட்பட எத்தனை வேலைகளைச் செய்ய முடியும்?
டெபுடி லேபர் கமிஷனர்கள் 7 அல்லது 8 பேர்கள் இருக்
கிறார்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) எப்போதுமே தவறு
என்று தெரிந்தால் நான் திருத்திக் கொள்ள தயாராக இருக்கி
றேன். 10, 12 பேர்கள் இருக்கிறார்கள் என்றே வைத்துக்
கொள்வோம். ஒவ்வொருவருக்கும் 3, 4 மாவட்டங்கள் இருக்
கின்றன. எப்படி அவர்கள் தொழில் தகராறுகளை உரிய நேரத்
தில் முடிக்க முடியும். வேலை பளு அவர்களுக்கு அதிகமாகிக்
கொண்டேயிருக்கிறது. தொழிற் தகராறுகளும் தீர்க்க
வைக்கப் பெறாமல் மேலும் மேலும் குவிந்து, தேங்கிக் கொண்டே
இருக்கின்றன. அவர்களுக்கு என்ன நிம்மதி ஏற்படும். சோ
வும் விரக்தியும்தான் அவர்களுக்கு ஏற்படுகிறது. அவர்களுக்கு
பிரமோஷனுக்கு என்ன வழி இருக்கிறது. அவர்கள் அத்தனை
பேரும் ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ண முடியுமா? ஆகவே, அவர்க
7, 8 வருடம் சர்வீஸ் ஆனாலும் அதே நிலையில் இருப்பதா
அவர்களிடையே ஸ்டேக்னேஷன் என்று சொல்லக் கூடிய ஒ
தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்
(மணியடிக்கப்பட்டது.) எனக்கு அதிகப்படியான நேர
வேண்டும் என்று தலைவர் அவர்களிடம் கேட்டுக் கொண்டிரு
கிறேன்.

[நண்பகல் 12—00]

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்) தங்களுக்கு 20 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: எனக்கு அவ்வளவுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? தங்களுடன் தர்க்கம் செய்வதில் பிரயோஜனமில்லை.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் உடல் நலம் பேணுவதற்கு என்று ஒரு பிரிவு இருக்கிறது. டாக்டர்கள் இருக்கிறார்கள். நல்லதுதான். இப்போது ஐந்தாறு டாக்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வேலை என்ன? அவர்கள் தொழிற்சாலைகளுக்குப் போய் சாம்பிள்ஸ் எடுத்து, தொழிலாளர்கள் ரத்தம், மூத்திரம் இவற்றை எடுத்து பரிசோதனை செய்து ஆலோசனை கொடுக்கவேண்டும். யாரிடம்? மானேஜ்மென்டிடம். அது வேறு யாருக்கும் தெரியும்? இவர்களை யார் கட்டுப்படுத்துவது? அது பற்றி ஏதாவது ரிப்போர்ட் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிறதா? இல்லை. இந்த டாக்டர்கள் பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் கண்ட்ரோலில் இருக்கிறார்கள். பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் என்ன மருத்துவ நிபுணர்களா, இல்லை. ஆகவே டிஸ்ட்டிரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் அல்லது வேறுவிதமான மருத்துவம் பற்றித் தெரிந்த அதிகாரியின் கண்ட்ரோலில் கொண்டுவரவில்லை என்று சொன்னால் நல்லது செய்யப்போய் அது பலன் இல்லாது போய்விடும். அவர்கள் தொழிலாளர்களுக்கு வைத்தியம் செய்வதைவிட முதலாளிகளுக்கே வைத்தியம் செய்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படாமல் இருக்க கவனித்துக் கொள்ளவேண்டும்.

தொழிலாளர்கள் பழி வாங்கப்படுதல். இது இன்றைக்கு எக்கச்சக்கமாக நடந்து கொண்டிருக்கிறது. சென்னையில் உள்ள பால்வள நிறுவனத்தில் 1,600 தொழிலாளர்கள் சட்ட விரோதமாக அக்கிரமம் செய்தார்கள் என்று அரசு முடிவு செய்கிறார்கள். நாங்கள் முடிவு செய்யவில்லை. மதுரையில் நடந்த போராட்டத்திற்கு இவர்கள் ஆதரவு அளித்தார்கள் என்று அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாக வெளியேற்றப்பட்டார்கள். அந்தத் தொழிற்சங்கம் இருக்கக்கூடாது. அந்தத் தொழிலாளர்கள் இருக்கக்கூடாது. புதிய ஆட்களை வைத்து நடத்தவேண்டும் என்றால், அப்படிப்பட்டதொரு எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தால் பகிரங்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் இன்னின்ன காரணங்களால் இருக்கக்கூடாது. வெளியே போங்கள், என்று வெளிப்படையாகச் சொன்னால் புரிந்து கொள்ளலாம். அப்படி இல்லாமல் இன்று அவர்களை வெளியே தெருவில் திண்டாடவிடுவது என்பது சரியல்ல. இப்படி ஒரு பாடம் கற்பித்து



அவர்களை திருத்திவிடலாம் என்று நினைக்காதீர்கள். அது தவறு. போலீஸ் உதவியோடு வேறு புதிய ஆட்களை வைத்து இவர்களை வெளியேற்றும் அந்தக் காரியம் நடைபெற்றது. இது ஒரு அநீதியான நடவடிக்கை. இப்படிப்பட்ட பழி வாங்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கக்கூடிய இடத்திற்கு வருகிறது. இந்தக் கெட்ட பெயர் இந்த அரசுக்கு வரக்கூடாது. ஆகவே வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும்.

திண்டிவனத்தில் ஆரோரூட் பாக்டரி இருக்கிறது. அங்குள்ள 600 பேர்களில் 400 பேர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். ஆய்வாளர்கள் ஆய்வு நடத்துகிறார்கள். இதைக் கண்டுகொள்வதில்லை. அங்கு ஸ்ட்ரைக் செய்ததால் அந்தக் கம்பெனி நின்று போய் விட்டது. அது குறித்து பேச்சுவார்த்தை நடந்தது. அது வெற்றி பெறவில்லை. சென்னைக்கு வந்தார்கள். டி. சி. எல். பலராமன் அவர்களோடு பேசியிருக்கிறார்கள். முன்னாள் எம். எல். ஏ. கோவிந்தராஜன் அவர்கள் சென்றிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடத்த முற்பட்டபோது, ஸ்ட்ரைக்கை விட்டு விட்டு வாருங்கள். பிறகு பேசுவோம் என்கிறார்கள். யார் அவர்களுக்கு இந்த தைரியத்தைக் கொடுத்து இப்படிப்பட்ட கொள்கையைச் சொல்லச் சொன்னார்கள்? அரசாங்கம் சொல்லட்டும், இனிமேல் எந்தப் போராட்டமும் நடத்த வேண்டாம். நாங்கள் சொல்கிறபடி நீங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். போராட்டத்தை கைவிட்டால்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பது உங்கள் கொள்கையாக இருந்தால் அதை பகிரங்கமாகச் சொல்லுங்கள்.

நான் ஒரு உதாரணத்துக்காகச் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் இதை சொல்வதற்காக வருத்தப் படக்கூடாது. அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை, கோரிக்கைகளைப் பெற வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் போன்றவைகளை நடத்துவது என்பது முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தேவையாக இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் அது தேவையில்லை என்றும் அமைச்சர்களுடன் நேரில் பேச வாய்ப்பிருக்கும் இந்தக் காலத்தில் தொலைபேசி மூலம் அமைச்சர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய இந்தக் காலத்தில் மாநில அரசுகளும் மத்திய அரசும் போட்டி போட்டுக் கொண்டு தொழிலாளர்கள் நலங்களைக் காக்கும் சட்டங்களைக் கொண்டு வந்து செயல்பட்டு வரும் இந்தக் காலத்தில் வேலைநிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்றவைகள் தேவைதானா என்று தொழிலாளர்கள் கவனிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொழிற் சங்க இயக்கங்களில் போராட்டங்கள் இப்போது தேவையில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு வந்த பிறகு தமிழ்நாட்டில் சோஷியலிசம் வந்திருக்கிறது,

என்று அமைச்சர் அவர்கள் நினைத்தால் அதற்கு நான் ஜவாப்
தாரியல்ல. நாங்கள் அதை நம்பவில்லை. ஒத்துக் கொள்ள
வில்லை. சோவியத் அரசின் கான்ஸ்ட்டிடியூஷனை அமைச்சர்
அவர்கள் கையில் கொடுத்து படிக்கச் சொன்னேன். அந்த
சோஷியலிசம் இங்கே வரமுடியாது. இங்கே சோஷியலிசம் ஒன்று
மில்லை. இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு. இங்கிருப்பது
முதலாளித்துவ சமுதாயம். டாட்டா பிர்லாக்கள் வாழ்கிற நாட்
டில் இந்த மாதிரி வேலை நிறுத்தங்கள் இல்லாமல் காரியங்களை
சாதிக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் அப்படி செய்து
வைத்தால், அப்பாடா அதை எவ்வளவு தூரம் வரவேற்போம்.
அப்படி அது இல்லை. ஆனால் அப்படிச் சொல்லுகிறார்கள்.
அதன் விளைவாகத்தான் டீ. சி. எல். பலராமன் அவர்கள்
போராட்டம் வாபஸ் வாங்கிவிட்டு வாருங்கள் என்று சொல்
கிறார். அது சரியல்ல. சென்னையில், வட பழனியில் ஒரு
கம்பெனி இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.) சில உண்மை
களை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அரைமணி நேரம் தர
வேண்டும். என்று நான் மதிப்பிற்குரிய ஸ்பீக்கரிடம் பேசியிருக்
கிறேன். தயவு செய்து கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்.
3, 4 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். சில விஷயங்களைச்
சொல்லாமல் இருக்க முடியவில்லை. என்ன செய்வது?

திரு, ப, நெடுமாறன் : இந்த மானிய கோரிக்கைகளிலே
பல கட்சித் தலைவர்கள் பேசவில்லை. மற்ற உறுப்பினர்களும்
அதிகமாகப் பேசவில்லை. தொழிற்சங்க இயக்கத்திலே அனுபவம்
வாய்ந்தவர்கள் ஒன்றிரண்டு பேர்கள், ரமணியைப் போன்றவர்
கள் பேசுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிக நேரம் தர வேண்
டும். அதனால் ஒன்றுமாகிவிடாது. தயவு செய்து நேரம் கொடுக்
கும்படி வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவாணந்தம் : அவருக்கு 20
நிமிடங்கள் கொடுக்கப்பட்டது. அரை மணி நேரம் கொடுங்கள்
என்று என்னிடம் கேட்டார்கள். நான் சொல்வதெல்லாம்,
1 மணி அல்லது $1\frac{1}{4}$ மணிக்கு உறுப்பினர்கள் வாதங்களை முடித்
துக் கொண்டால், அதற்கு மேல் நான் முக்கால் மணி நேரத்தில்
முடித்துக் கொள்கிறேன். மாலை செஷன் வேண்டாம் என்று
சொன்னார்கள் (குறுக்கிடு) நான் அதிகமாகப் பேச வேண்டு
மென்றால் அதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 2 மணிக்கு மேல்
சபை நீடிக்க முடியாது இன்னும் 2, 3, உறுப்பினர்கள் பேச
வேண்டும். நீங்கள் அரை மணி மற்றொரு உறுப்பினர் அரை மணி
எடுத்துக் கொண்டு அதற்கு மேல் 3, 4 உறுப்பினர்கள் பேசு
வதற்கு நேரம் இருக்காது கொஞ்சம் சீக்கிரம் முடித்துக் கொள்
ளுங்கள்.





திரு, கு ரமணி : அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உதவியதற்
காக நன்றி. வட பழனியிலே ஒரு எலக்ட்ரிக் கம்பெனி 1982 ஜன
வரி யிலே இருந்து பூட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியிலே
உள்ள பொருள்களை எல்லாம் அந்த முதலாளி அப்புறப்படுத்த
முயன்றபோது, அங்குள்ள தொழிலாளர்கள் கேஸ் போட்டார்
கள். பொதுவாக தொழிலாளர்கள் கேஸ் போட்டால்
இன்ஜெக்ஷன் கிடைக்காது. எப்படியோ கிடைத்து விட்டது.
அப்படி கிடைத்துவிட்ட பிறகும், செங்கற்பட்டு பிராந்திய டி.ஐ.ஜி.
அவர்கள் அந்த உத்தரவை குப்பைத் தொட்டியில் போட்டு,
அந்த முதலாளிக்கு உதவி கொடுத்து, சாதனங்கள் முழுவதையும்
அங்கிருந்து வெளியேற்ற உதவியிருக்கிறார். இந்தத் தொழிலா
ளர்கள் மீது கேஸ்களை போட்டு, ஜெயிலுக்கு அனுப்ப
ஏற்பாடு செய்திருக்கிறார். எனவே, எப்படி தொழிலாளர்
நல சட்டங்கள் எல்லாம் தூள் தூளாக்கப்படுகின்றது என்பதை
நமது அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.
நான் அமைச்சர் அவர்களோடு சேர்ந்து அந்த அநீதியை எதிர்க்க
வேண்டியவனாக இருக்கிறேன். ஆகவே, இதையும்
கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, லைட் ரூபிங் கம்பெனி செங்கற்பட்டிலே
இருக்கிறது. அதிலே தொழிலாளர்கள் வெளியேற்றப்படுகிறார்
கள். 30 தொழிலாளர்களுக்கு மேல் டிஸ்மிஸ் செய்யப்படு
கிறார்கள். மன்னிப்பு எழுதிக் கொடுங்கள் வேலையில் அமர்த்து
கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தக் தொழிலாளர்கள்
34 பேர்கள் மன்னிப்புக்கடிதம் எழுதிக்கொடுக்காத காரணத்
தினால், வேலைக்கு எடுக்கவில்லை. எனவே, கடைசியிலே
அவர்கள் எங்கள் கேஸை லேபர் கோர்ட்டுக்கு அனுப்புங்கள்
என்று கேட்கிறார்கள். "நோ கேஸ் பார் ரெபரென்ஸ்"
என்று சொல்லி, அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

அதேமாதிரி, இன்னொன்றையும் சொல்கிறேன். ஐ.என்.டி
யு.சி. யினுடைய தமிழ்நாட்டின் தலைவர்களில் முக்கியமான
வர், நீலகிரி மாவட்டத்திற்கு திரு. ராமன் நாயர். அங்கே
இருக்கக்கூடிய தோட்டத்தில், ஸ்டேன்ஸ் கம்பெனி, அமால்க
மேஷன் குரூப்பில் அந்த ஸ்டேன்ஸ் கம்பெனி இருக்கிறது—
அந்த தோட்டத்திலே ஒரு தகராறு நடந்தது. 17 தொழி
லாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள். அங்கே ரௌடி
களையும், குண்டர்களையும் வைத்து அந்தப் போராட்டத்தை
அடக்க முயன்றார்கள். அவர்கள் தங்களுடைய கேஸ்களை
கோர்ட்டுக்கு அனுப்பச் சொல்லிக் கேட்டார்கள். அனுப்ப
வில்லை. அது மட்டுமல்ல. அந்த 17 பேர்களில் 3 பேர்கள்
ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு மட்டுமே அந்த
முதலாளிகள் வேலை கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்
சொல்லி, அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்று
நான் சொல்லவில்லை. இது முதலாளிகள் செய்கிற தந்திரம்,

ஒரே கேஸில் உள்ள மூன்று பேர்களுக்கு தனி நியாயமா? பாக்கியிருக்கிறவர்கள் இந்தக் கேஸை கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. திரு. ராமன் நாயர் அவர்கள் நர்சிங் ஹோமிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார். அவர் எழுதிக்கொடுத்ததை நான் அமைச்சர் அவர்களிடம் நேரில் கொடுத்தேன். கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்று சொன்னேன். ஆனால், அமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது தெரியாது.

அதேமாதிரி, அரசு கருவூல ஊழியர்கள் 68 பேர்கள்மீது நடவடிக்கை அத்தனை பேர்கள் மீதும் போலீஸ் கைது செய்து கேஸ் போட்டார்கள். அரசாங்கமே அவர்களிடம் மன்னிப்பு எழுதிக் கொடுங்கள் என்று கேட்டது. 60 பேர்கள் எழுதிக் கொடுத்து, வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். 8 பேர்கள் கொடுக்கவில்லை. அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய், அவர்கள் பக்கம் தீர்ப்பாகிறது. அப்படி தீர்ப்பு வந்ததற்குப் பின்னாலும், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு, உடனேயே வேறு ஒரு வகையில் சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுத்து, அவர்கள் வெளியிலே அனுப்பப்படுகிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்ல முடியாது என்பது தெரியும். ஆனால், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் தங்கள் உரிமைக்காகப் எப்படிப் பேராடுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

(பிற்பகல் 12-10)

அது மட்டுமல்ல ஈரோடு ஸ்ரீகிருஷ்ணா ரிபைனரி தொழிலாளர்கள் விஷயத்தில் இன்றைய வரைக்கும் நமக்கு ரெபரன்ஸ் கிடைக்கவில்லை. அதற்கான ஒரு பதில் கடைசியாக ''நோ கேஸ் பிபோர் ரெபரன்ஸ்'' என்று வந்தாகிவிட்டது. 3—7—1981 தேதியிட்ட தொழிற்சங்கம் அமைத்துள்ள மெமோரண்டத்திலே அத்தனை விவரங்களும் இருக்கின்றன. அந்த ஆயில் மில் 2 ஆயிரம் டின் எண்ணெய் ரிபைன் பண்ணுகிறவர்கள். அந்த முதலாளிமார்கள் 4 கம்பெனிகளை அண்ணன் தம்பி பேரில் வைத்திருக்கிறார்கள். கள்ளத்தனமாக வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிற முழுவதும் இரகசிய விவரங்களடங்கிய டாக்குமென்ட் தயார் பண்ணி நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் நான் கொடுத்தேன். அன்றைக்கு இருந்த இரண்டு ரவின்யூ போர்டு மெம்பர்கள் எப்படி அவர்களுக்கு சகாயமாக இருந்தார்கள் என்று விவரங்களை எழுதி அவரிடத்திலே கொடுத்தேன். இன்றைய வரைக்கும் பதில் இல்லை. நடவடிக்கையில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அந்த பதிலை பெறுவதற்கு கூட எனக்கு உரிமையில்லையா? இதை கவனத்தில எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





நகரங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி இந்த அரசு செயலாற்றி வருவதைப் பாராட்டுகிறேன். வேதாரண்யம் வட்டத் தலைநகரத்தில் அரசு அலுவலர் வாடகை குடியிருப்பை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதியிலே ஏழாயிரத்திற்கும் மேம்பட்ட உப்பளத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அந்த உப்பளத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை இந்த அரசு நிர்ணயித்திருந்தாலும்கூட அவர்கள் அந்தக் குறைந்தபட்சக் கூலியைப் பெறுவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களைப் போக்குவதற்கும், அவர்களுடைய வாழ்க்கையை வளமாக்குகின்ற முறையிலேயும் அங்கே அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள புகையிலை, உப்புத் தொழில் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குக் காப்புறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி அங்கே அமல் செய்வதற்கு உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அங்கே கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தை உருவாக்க வேண்டும். இப்பொழுது மன்னார்குடியில் அப்படிப்பட்ட ஒரு சங்கம் இருக்கிறது. அதில் நான்கு வட்டங்கள் அடங்கியிருக்கின்றன. அந்த நிலைமையை மாற்றி திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் வட்டங்களைக் கொண்டு கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தை வேதாரண்யத்திலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஏற்படுத்தித் தருவதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னார்களே, தொழிலாளர் நலத் துறையிலே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் ஆஃப் ஃபேக்டரீஸ்-ஐப் பிரிக்க வேண்டும்; மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்களே, அந்தக் கோரிக்கை தவறு என்று அவர்கள் கூறியதை ஏற்றுக்கொள்கிறேன். இன்ஸ்பெக்டர் ஆஃப் ஃபேக்டரீஸ் துறையை அவ்வாறு மாற்றாமல் தொழிலாளர் நலத் துறை ஆணையாளரின் கட்டுப் பாட்டின் கீழ், தொழிலாளர் நலத் துறையிலேயே இருந்தால்தான் தொழிலாளர் நலத் திட்டங்களை நிறைவு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால்கூட அதைப் பிரித்து விடாமல் தொழிலாளர் நலத் துறை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் நலத் துறையிலேயே அந்தத் துறை இயங்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். அதைப்போன்று பல்வேறுபட்ட அதிகாரிகளையும், ஊழியர்களையும் நியமித்து தொழிலாளர் நல திட்டங்களை மீண்டும் நிறைவுபடுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலாவதாக வீட்டு வசதி, நகர்ப் பகுதி வளர்ச்சி சம்பந்தமாக சில விஷயங்களை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் விரும்புகிறேன். 1981–82 ஆம் ஆண்டில் 40,000 கிராமப்புற வீடுகள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 31–1–82 ஆம் தேதி வரையில் கட்டப்பட்டிருப்பது 11,632 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 29,000 வீடுகள் எப்பொழுது பூர்த்தி செய்யப்படும்? இப்பொழுது நாம் மார்ச் மாதத்தை எட்டியிருக்கிறோம். அதற்குள் இது பூர்த்தியாகுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982–83 ஆம் ஆண்டுக்கு, இந்தக் கிராமப்புற வீடுகளுக்காக ஏற்கனவே 450 இலட்சம் ரூபாய் என்று இருந்தது. 800 இலட்சமாக ஒதுக்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தாகை அதிகமாக தெரிந்தாலும், கடன் வழங்கக் கூடிய தாகையும் ஏற்கனவே உயர்த்தப்பட்டிருக்கிறது ; ரூ. 3,000 லிருந்து ரூ.4,000 ஆகஉயர்த்தப்பட்டிருக்கிறது. வீடுகள் கிட்டத்தட்ட அதே அளவுக்குத்தான் வரும். இன்றைய தினம் ரூ. 4,000 லே வீடு கட்டிக் கொள்ள முடியாது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தொடர்ச்சியாக இந்த மன்றத்திலே ரூ. 5,000 குறைந்த பட்சம் வீடு கட்டக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதை ரூ. 5,000 ஆக உயர்த்தித் தருவதற்கான அறிவிப்பை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால், அரிசனங்களுக்காகத்தான் வீடுகள் கட்டக் கடன் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாகக் காலனிகள் கட்டிக் கொடுப்பது இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இதையாவது செய்து நாம் அவர்களுக்கு முறையாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

அடுத்ததாக இந்த விஷயத்திலே நான் கேட்டுக் கொள்வது, இந்த அரிசனங்களுக்கு வீடுகள் கட்டும் சங்கத்தின் மூலமாக கடன் கொடுக்கும்போது, அதே நேரத்தில் வீடுகளுக்கான சிமென்ட் ஒதுக்கீட்டை இந்த சொசைட்டிகள் மூலமாகவே செய்ய வேண்டும். இப்பொழுது புதிய உத்தரவின்படி ஆர்.டி.ஓ. விடத்திலே செல்ல வேண்டும். அவர்கள் கடன் வாங்குவதற்காக



இன்று இல்லை. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே தொழிற்சங்கங்களை முறியடிப்பதற்காக தங்களுடைய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அந்தச் சங்கங்களிலே வரவேண்டும் என்பதற்காக எந்தவிதமான முயற்சிகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சிம்சனில் நடந்த கொடுமைகள் வேறு எங்கேயும் இந்தத் தமிழகத்திலே நடந்து இருக்கமுடியாது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த பிரதாப் சந்திரனைக் கொன்றார்களே அப்படிப்பட்ட பாதகச் செயலைச் செய்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் நலனில் அக்கறை காட்டுகின்ற இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12–20)

அடுத்தபடியாக கிராமப்புற வீட்டு வசதியையும், நகர்ப்புற வீட்டு வசதியையும் ஒருங்கிணைத்துச் சிறப்பாக இந்த அரசு செயல்படுத்துகிறது. கிராமப்புறங்களில் இரண்டு இலட்சம் வ்டுகளை ஏழை எளிய மக்களுக்காக அடுத்து வரும் ஆண்டுகளில் கட்டித் தர வேண்டுமென்ற அடிப்படையில் ஆண்டுக்கு 40,000 வீடுகளைக் கட்டுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகிறது. அதன் மூலமாகக் கிராமப்புற மக்கள் வசதியான நல்ல வீடுகளைப் பெற்று நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது.

நகரங்களிலே உள்ள குடிசை மேம்பாட்டுப் பணிகளை 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே திராவிட முன்னேற்ற கழக அரசு அமல் நடத்தியிருந்தாலும் கூட இடைக்காலதில் வந்த கவர்னர் ஆட்சியிலே அப்படிப்பட்ட திட்டங்கள் வீணானவை என்று சொல்லி நிறுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறவும், குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்து அங்கே சாலை வசதி, சுகாதார வசதி போன்ற வசதிகள் ஏற்படவும் வழிவகை செய்து அந்த மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் வளம் காண வேண்டுமென்ற முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், குடிசைப் பகுதிகள் மேம்பாடு அடையவும், குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்தி நல்ல நகரமைப்புகளை உருவாக்கவும் இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வீட்டு வசதி அளிப்பதிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமும், குடிசைப் பகுதி மாற்றுவாரியத்தின் மூலமாகவும், காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாகவும் கவனம் செலுத்தி இந்த அரசு வீட்டு வசதிகளை உருவாக்கி வருகிறது. மாவட்டத் தலைநகரங்களில் வீட்டு வசதி வாரியம் அரசு அலுவலர்களுக்கு வாடகைத் திட்டத்தில் வீடுகள் கட்டியுள்ளது. வட்டத் தலை

கொண்டுதான் இருக்கிறோம். மீறி அடக்குமுறையைக் கொண்டு சமாளிக்க முன் வருவது என்றால் நிச்சயமாக தொழி லாளர் வர்க்கம் தன்னுடைய இரத்தத்தையும் சிந்தி உயிரையும் கொடுத்து நாங்கள் அந்த உரிமையை பாதுகாத்தே தீருவோம். அந்த நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். என்றுசொல்லி முடிக்கிறேன்.

*திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தொழிலாளர் நலன், வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தமிழகத்திலே வந்ததற்கு பின்னாலே தொழில் அமைதி, காக்கவேண்டும் என்கிற நிலைமையிலே, தொழிலாளர் உரிமைகள் பாதிக்காமல் அவர் களுக்கு நன்மைகள் விளைய வேண்டுமென்ற இரண்டு லட்சியங் களை கொண்டு அதன் மூலமாக தொழில் வளம் தமிழகத்திலே அதிகமாக வரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே செயல்படுகிறது.

இந்த அரசு தொழிலாளர் துறையை நிர்வகித்து வருகிறது, அந்த வகையிலே நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு உறுப் பினர்கள் எல்லாம் இந்தக் கொள்கையில் வேறுபாடு தெரிவதாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் 1980-இல் இருந்த நிலைமை யயும் இன்று இருக்கின்ற நிலைமையையும் பார்க்கிறபோது அவர்கள் இந்த அரசிலிருந்து வேறுபட்டு இருக்கின்ற நிலை மையைத்தான் நான் பார்க்கிறேனே தவிர தொழிலாளர் நிலை மையிலே இந்த அரசு ஒரே தனித் தன்மையைக் கொண்டு பாது காத்து வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர் துறையிலே எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் கூறமுடியும். சென்னையிலே மிகப் பெரிய ஆலையாக உள்ள பின்னி மில் மூடப்பட்டு அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இழக்கிற நிலை உருவானபோது புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருணை உள்ளத்தாலே அந்தத் தொழிலாளர்களுக்கு தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் களை அள்ளி வழங்கி அதன் மூலமாக அந்தக் குடும்பங்கள் எல்லாம் சாகாமல் தடுத்தார்கள். அது மட்டுமல்ல, அந்தத் தொழிற்சாலையைத் திறக்கவேண்டுமென்று, தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற முறையிலே மத்திய அரசை வலியுறுத்தி அதன்





மூலமாக அந்த நிறுவனம் இன்று இயங்கிவருவதோடு அதன் மூலம் தொழிலாளர்கள் தங்கள் வேலைகளைப் பெற்று பாது காப்பைப் பெற்று அந்த நிறுவனத்தின் மூலமாக உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் புரட் சித் தலைவர் தான் காரணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தொழிலாளர் துறையிலே காவல் துறை தலை யீடு அதிகமாக இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். உண்மை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தொழி லாளர் துறையில் காவல் துறையின் தலையீடு இருக்காது என்று அரசு அறிவித்ததாலே அதைப் பயன்படுத்திக்கொண்டு தங்க ளுடைய இயக்கங்களை வளர்ப்பதற்காக தங்களுடைய சங்கங் களை வளர்ப்பதற்காக தங்களுடைய கட்சிகளை வளர்ப்பதற் காக தொழிலாளர்களிடத்திலே மோதலை உருவாக்கி அதன் மூலம் தங்களுடைய இயக்கங்களை வளர்க்கவேண்டுமென்பதற் காக தொழில் அமைதியைக் குலைக்கிற முயற்சியிலே தொழில் உற்பத்தியைப் பாதிக்கின்ற முறையிலே நடந்துகொள்கின்ற நேரத்திலே இந்த அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடி யாது. அதைச் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டுவிட்டது என்று மற்றொரு தரப் பினர் சொல்கின்றார்கள். அதையெல்லாம் பார்க்காமல் அவர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்கி அவர்களுக்கு பாதகம் வராமல் இந்த அரசு செயலாற்றி வருகிறது என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்நலச் சட்டங்கள் எத்தனையோ சட்டங்கள் இங்கே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வேலை யிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களுக்கு ஊதியம் அளிக்கக் கூடிய நிலைமை, நெசவாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க கூடிய நிலைமை, கட்டிடத் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு சட்டம் கொண்டுவரவில்லையென்றால் மாநில அரசே சட்டம் கொண்டுவரும் என்று அறிவித்து அதன்மூலம் அந்தத் தொழிலாளர்கள் இறந்துபோனால் பத்து ஆயிரம் வழங்குகிற திட்டத்தையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது என்றால் தொழிலாளர்கள் நலனில் அக்கறை இல்லாத அரசு இது என்று கூறமுடியுமா ? தொழிலாளர்கள் நலனில் அக்கறை காட்டி உண்மையிலேயே தொழிலாளர்களை வாழவைப்பதற் காக பாடுபடுகின்ற அரசு என்பதால்தான் தொழிலாளர்களை தூண்டிவிட்டு வேலை நிறுத்தம் செய்து அவர்கள் குடும்பங் களைப் பட்டினிபோடுகின்ற நிலைமை மாறி அவர்கள் உழைக்கின்ற உழைப்புக்கு பணமும் வேலையில்லாத் திண்டாட்ட நிலைமையைப் போக்குகின்ற தன்மையும் ஏற்படுத்த இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் தான் தமிழகத் திலே மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகள்

இன்றைக்கு அந்த நிர்வாகத்திற்கு பல தொழிற்சாலை லைசென்ஸ்கள் கொடுக்கபோவதாக கேள்விப்படுகிறேன். விவரம் எனக்கு தெரியாது. இந்த நடவடிக்கை எங்கே இருந்து வருகிறது? அதனாலேதான் அரசாங்கத்தினுடைய நடவடிக்கை முதலாளிக்கு சாதகமாக போகக் கூடாது என்று நாங்கள் சொல்வதற்கு காரணம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடலூர் செராமிக்கிஸ்சிலே நடந்த போராட்டம். அவர்களுக்கு அதை முடிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி 750 ரூபாய் அட்வான்ஸ் கொடுப்பதாக சொல்லப்பட்டது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் சேர்ந்து தான் இந்த விஷயத்தை பேசினோம். அவர் அதை கொடுக்கச் சொன்னது பிடிப்பதற்கு அல்ல. ஒப்பந்தத்திலே பிடிக்காத அட்வான்ஸ் என்று எழுத முடியாது. அதை பிடிப்பதில்லை என்பதுதான் முடிவு. கொடுத்த வாக்குறுதி நிறைவேற வில்லை. இன்றைக்கு அந்த பணம் பிடிக்கப்படுகிறது. இதை அந்த மேனேஜ்மென்டிற்கு, முதலாளிக்கு— திரு. விஸ்வநாதன் — அரசாங்கத்திற்கு ரொம்ப தெரிந்தவர். வேண்டியவரும் கூட அவரிடத்திலே சாதவித்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து கைத்தறி சட்டம். ரூல்ஸ் தயாரிக்கப்பட்டு எங்கேயோ போய் சிக்கி நிற்கிறது என்று கேள்விபடுகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்வார் என்று நினைக்கிறேன். இதற்கு ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. ஆனால் ரூல்ஸ் வராமல் இதை அமல் நடத்த முடியாது. அந்த சட்டத்தை அமலாக்குவதற்கு வாரியம் அமைக்கிற ஒரு திட்டம் இருக்கிறதா? நிதி அமைச்சர் அவர்களின் பட்ஜெட் ஸ்பீச்சிலே அது வந்திருக்கிறது. வாரியம் அமைத்து சட்டத்தை அமலாக்க வேண்டிய அவசியம் என்ன? அப்படியானால் சட்டம் மற்றும் ரூல்ஸ் அமல் நடத்தும் லேபர் பிரிவு என்ன செய்து காண்டிருக்கிறது? இது சரியானது என்று நாங்கள் கருதவில்லை. மூலச்சட்டதிலே இடமிருக்கிறதா வாரியம் அமைக்க என்று தெரியவில்லை. முதலாளிகள் ஹைகோர்ட்டிற்கு போனால் இந்த சட்டமே அமலாகாது. இந்த நிலை வரக்கூடாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த பாக்டரி இன்ஸ்பெக்டரேட் லேபர் டிபார்ட்மென்டினுடைய பிடிப்பிலே இல்லாமல் தனியாக போய் நிற்க போகிறதா? அப்படி நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையானால் மிகப் பெரிய தவறாக முடியும். நம்முடைய வேண்டுகோள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கொள்கை லைன்லே மாற்றம் கொண்டு வரவேண்டும். தொழிற்சங்கத்தின் வளர்ச்சியை நீங்கள் தடுக்க முடியாது. என்ன தடுத்தாலும் நாங்கள் வளர்ந்து



அலைவது ஒரு புறம். ஒரு பகுதி கட்டியதற்குப் பிறகு மீண்டும் அடுத்த இன்ஸ்டால்மென்ட் வாங்குவதற்கு திருப்பி அலைய வேண்டும் மூன்றாவது இன்ஸ்டால்மென்ட் வாங்குவதற்கு அவர்களுக்கு இருக்கக் கூடிய சிரமங்கள் இருக்கின்றனவே., அதோடு இந்த சிமென்ட் பர்மிட் பெறுவதற்கு ஏற்படக்கூடிய சிரமத்தையும் உணர்ந்து, நேரடியாக அந்த வீடுகளுக்கு தேவையான மூட்டை சிமென்ட்டை, அதற்கான அலாட்மென்ட்டை, அந்த வீடுகட்டும். சங்கங்களுக்கு மாவட்ட வாரியாகப் பெற்றுக் கொடுக்கவேண்டும். அந்தச் சங்கங்கள் மூலமாக, வீடு கட்டுபவர்களுக்கு சிமென்ட் கொடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து, என்னிடத்திலே வந்திருக்கக்கூடிய ஒரு முறையீட்டைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வியாசர்பாடியிலே வழங்கப்பட்ட வீட்டு மனைகள் சம்பந்தமாக, பிளாட் நெம்பர். 422, அந்த வீட்டிற்கு 2 ஆண்டுகளுக்கு முன்னரே மனு செய்தவர் ஜாய்சி பாண்டியன் என்பவர். அவர் ஒருவர் தான் மனு செய்திருக்கிறார். மனு செய்தவருக்குக் கொடுக்க வேண்டுமென்பது தான் மரபு, நியாயம், சட்டம். ஆனால், என்ன காரணத்தினாலோ, இரண்டு ஆண்டுகள் கழித்து, தொடர்ச்சியாகப் பல முறையீடுகள் செய்த அந்த மனுதாரருக்கு 19–11–81 ஆம் தேதி அன்று ஒரு உத்தரவு செல்கிறது.

I am directed to invite your attention to the letter cited and request you to sell the plot 422 in Vysarpadi area in auction.
Chairman, - *Tamil Nadu Housing Board.*

இந்த உத்தரவு அனுப்பப்பட்டு, அதன் நகல், இவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவருக்கு இந்த மனை மறுக்கப்பட்டுள்ளது. காரணம், அந்த ஜாய்சி என்பவர், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. தா. பாண்டியனுடைய மனைவி என்ற காரணத்தினாலே அந்த மாதிரி உத்தரவுபோடப்பட்டதோ? என்னவோ ? எனக்குத் தெரியாது. அதற்குப் பிறகு நடந்தவற்றை நான் அமைச்சருடைய கவனத்திற்காகச் சொல்லி விடுகிறேன். அப்படி உத்தரவு போட்டதற்குப் பிறகு இன்றைய தினம் ஆக்ஷனில் விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீண்டும் வேறு ஒருவருக்கு, அவருடைய பெயர் ஜெயபாலன், நான் அவருடைய கட்சியைப் பற்றி இங்கே சொல்ல விரும்பவில்லை, அது உங்களுக்குத் தெரியும் அவருக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. அவரிடத்திலே மனு கோரப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது ; மீண்டும் இவரிடத்திலும் மனு வாங்கி, அவர் தான் தகுதி உடையவர் என்ற வகையிலே தீர்மானிக்கலாம் என்று உத்தேசித்திருப்பதாக கூறப்படுகிறது. அந்த வகையில் ஒரு விஷயம் நடந்திருக்கிறது என்பதை நான் அமைச்சருடைய

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 15

கவனத்திற்குக் கொண்டு வந்து, இதிலே முறைகேடுகள் இல்லாமல், நான் வேண்டிக் கொள்வது, இதிலே விருப்பு வெறுப்பு தேவையில்லை ; பாண்டியன் என்பதாலே அவருக்கு நீங்கள் ஏதாவது சலுகைகள் காட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே நான் கோரவில்லை, நியாயத்தின் அடிப்படையிலே விருப்பு வெறுப்பு இல்லாமல் முறையாக அது கிடைப்பதற்கான முறையிலே அதை கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அவர் படையெடுத்து, படையெடுத்து, அவரது கால் ஓய்ந்து போயிற்று.

(பிற்பகல் 12.30).

அடுத்து, தொழிலாளர் நலன் சம்பந்தமாக சில விஷயங்களைக் குறிப்பிட்டு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அரசு கடை பிடித்து வரும் கொள்கை சம்பந்தமாகவும் நான் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தொழிலாளிகளுக்கு இருக்கின்ற அடிப்படையான உரிமை, ஒரே உரிமை அடிப்படையான உரிமை, வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை. அந்த உரிமையைப் பறித்து விட்டு நீ உயிரோடு இருக்க வேண்டும் என்று யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இன்றைய தினம் நடை முறையில் அதைப் பறிப்பதற்கான சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. Esm Essential Services Maintenance Act.

அடுத்து, தேசியப் பாதுகாப்புச் சட்டம். இந்தச் சட்டங்களை பயன்படுத்தி இந்த உரிமையைப் பறிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இது சம்பந்தமாக நம்முடைய மாநில அரசு, அதிலும் குறிப்பாக உழைக்கும் வர்க்கத்திற்குப் பக்கத்திலே நிற்கிறோம். அதற்காக இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய வாழ்வைப் பாதுகாப்பதற்காக இருக்கின்றதாகக் கூறும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அரசும் இம்மாதிரியான சட்டங்களை அமல் படுத்துவதற்காக அதை ஆதரித்துப் பாராளுமன்றத்திலே நிற்பதும் அதே மாதிரியான சட்டத்தை இந்த சட்ட மன்றத்திலே சட்ட முன் வடிவாக கொண்டு வந்திருப்பதும், தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிப்பதாகும். அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அரசு சம்பந்தப்பட்ட மட்டில் தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கும் முயற்சியை கைவிட வேண்டும். அதை அடக்குவதற்கான முறையிலே நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயம் என்று குறிப்பிட விரும்புகிறேன். இது சம்பந்தமாக 19-ந் தேதி நடை பெற்ற போராட்டத்தில் அரசு கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள், துப்பாக்கிப் பிரயோகம் போன்ற நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவை. இதன் காரணமாக 3 உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. திருமெய்ஞானம், இரட்டைப்புளி என்ற கிராமங்களிலே



1982 மார்ச் 15] [திரு. இரா. கருப்பையா]

பறிக்கப்பட்ட உயிர்கள் விவசாயத் தொழிலாளர்கள். அரிசனங்களுடையது. நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்திற்கு ஒரு நீதி விசாரணை கேட்கக்கூடிய நேரத்தில் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்து மீறிய நடவடிக்கைகளை போலீஸ் அதிகாரிகள் நடத்தி இருந்தால் ஒரு நீதி விசாரணை மூலம் அதைக் கண்டு பிடிக்கமுடியும். ஆகவே அந்த அடிப்படையில் ஒரு நீதி விசாரணை தேவை என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதற்காக ஒரு நீதி விசாரணையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே வேலை நிறுத்தம் சம்பந்தமாக கதவடைப்புகள் சம்பந்தமாக இழந்திருக்கின்ற மனிதநாட்கள் 1980–1981 இரண்டு ஆண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய நேரத்திலே அது அதிகரித்து இருக்கிறது. அதைத் தவிர்க்க முடியாது. வேலை நிறுத்தத்தை யாரோ சிலர் தூண்டி விட்டு நடைபெறுகிறது என்று சிலர் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தொழிலாளியின் பட்டினி கிடக்கும் வயிறுதான் வேலை நிறுத்தத்தை தூண்டி விடுகிறது. சில தலைவர்கள் பார்த்து நீங்கள் வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று தூண்டுவதால்தான் வேலை நிறுத்தம் நடக்கிறது என்று கூறுவது தவறானது. வேலை நிறுத்தம் செய்கிற காலத்தில் தொழிலாளி பட்டினி கிடக்க வேண்டும். அவனுடைய குடும்பம் பட்டினி கிடக்க வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய இன்னல்கள், கஷ்டங்கள், என்ன என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஒருவர் தூண்டி விடுவதன் மூலமாக வேலை நிறுந்தம் சுலபமாக வந்து விடாது. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாத நேரத்தில் அவர்கள் உரிமை பெற வேண்டும் என்று வருகின்ற நேரத்தில், கடைசி ஆயுதமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே தான் வேலை நிறுத்தங்கள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக இழக்கக் கூடிய மனித நாட்கள் அதிகரித்து வருகிறது என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்படுகிறது. ஆகவே வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான காரணத்தை ஆராய்ந்து அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விலைவாசி உயர்வை ஈடு கட்டக் கூடிய வகையிலே தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி, மற்ற வசதிகளைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுப்பதன் காரணமாக அதைத் தவிர்க்க முடியும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை நிறுத்தங்களில் அரசாங்கம் கையாளுகிற கொள்கை சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலை நிறுத்தம் நடந்தால் "நீ செய்து கொண்டே இரு" என்று

சொல்லி, வேலை நிறுத்தம் மேற் கொண்டவர்கள் 'டயர்டு' ஆகி, அவர்களாகவே வேலை நிறுத்தத்தை கைவிட்டு, வேலைக்கு போக வேண்டுமென்ற கொள்கை நிலையை ஏற்படுத்துவது ஒரு சரியான கொள்கை அல்ல. வேலை நிறுத்தம் நடக்கப் போகிறது என்றால் அதற்கு முன்னால் அரசாங்கம் தலையிட வேண்டும். இல்லை என்றால் வேலை நிறுத்தம் நடைபெற்ற உடனே எபக்டி வாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழி லாளர்களே வேலை நிறுத்தத்தை கைவிட்டு போகக் கூடிய நேரத்தில் 10 ரூபாய்க்குப் பதிலாக 2 ரூபாய் பெற்றுக் கொடுத் தோம் என்று சொல்லுகின்ற நடை முறை இன்றைக்கு கையாளப் படுகிறது; அதை மாற்றியமைக்க வேண்டும். இப்படிப்பட்ட கொள்கை கையாளப்படுகிறது என்பதற்கு நான் பல உதாரணங் களை இங்கே எடுத்துக் காட்ட முடியும்.

நாகையில் ஸ்டீல் ரோலிங் மில்லில் இரண்டு மாதங்கள் ஸ்டிரைக் நடைபெற்றது. அதைப் போல கரூர் மில்ஸ் வேலை நிறுத்தம். அதைப் போல மணப்பாறையில் போனஸ் கேட்டு வேலை நிறுத்தம் நடைபெற்றது. அமைச்சரிடம் எடுத்துச் சொன்னோம். தீபாவளி முடிந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று சொல்லி விட்டார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பிறகு ஒரு மாதம் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இம்மாதரி யான போக்கை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தொழில் அமைதியைக் காக்க வேண்டுமென்று எல்லோரும் மேடையிலே முழங்குகிறோம். ' ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை ஏற்றுக் கொள்கிறார்களா என்றால் இல்லை. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு ரகசிய முறையில் வாக்கு எடுக்கப்பட்டு, பெரும்பான்மை வாக்கு கள் பெறும் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். அரசாங்கம் இதை செயல்படுத்த முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச் சர் அவர்கள், அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி, பல்வேறு காரியங்களுக்கு மற்ற மாநிலங்களுக்கு நாம் வழிகாட்டியாக இருக்கிறோம் என்று கூறுவதைப் போல ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்பதிலும் வழிகாட்டியாக ஏன் இருக்கக்கூடாது? அதை நிறைவேற்ற வேண்டும்; தொழில் அமைதியைப் பாது காக்க அது உதவும் என்று கூறிக்கொள்கிறேன்.

ஒரு சங்கம் இருந்தால்தான் ' பார்கெயினிங் ' பவர் அதிகம் பெற்று, உரிமைகளைப் பெற வாய்ப்பு இருக்கும். ஒரே சங்கம் ஒரே குறிக்கோளில் போராடினால், முதலாளிகளுக்கு நிர்ப்பந் தம் ஏற்படும். அதனால் தொழில் தகராறு குறையும்; வேலை நிறுத்தம் குறையும். ஆகையால் இந்தக் கொள்கையை தமிழக சர்க்கார் செயல்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





தொழிலாளர் நலனுக்காகப் போடப்பட்டிருக்கிற சட்டங் களை அரசுத்துறை நிறுவனங்கள் சரியாக அமுல்செய்தால் இன் றைக்கு பல்வேறு தகராறுகளுக்கு இடமில்லாமல் போய்விடும். தொழிலாளர் நலன் கருதி போடுகின்ற சட்டங்கள், போடுகின்ற உத்தரவுகள் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இன் றைக்கு சுற்றுலா வளர்ச்சி ஊழியர்களுக்கு சங்கம் ஒன்று இருக்கி றது.

ஒரே சங்கம்தான் இருக்கிறது. வேறு சங்கம் இல்லை. ' இம்பிளிமென்டேஷன் அன்ட் எவாலுவேஷன் கமிட்டி ', இந்த சங்கத்தை அங்கீகாரம் செய்ய தீர்மானம் கொடுத்திருந்தாலும் அதன்படி அங்கீகாரம் வழங்கவில்லை ; மறுக்கப்பட்டிருக்கிறது சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரசுத் துறையில் இருக்கிற ஒரு கழகம். இதற்கு அங்கீகாரம் கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. உடன் இந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேளை பலமான தொழிற்சங்கமாக வந்து விட்டால், பெரிய அதிகாரிகளுடைய ஊழல்கள் வெளியே வந்து, பெரும் விளைவுகள் வரும் என்று கருதி, அந்தக் காரணத்தால் இம்மாதிரியான கொள்கையை கையாளுகிறார்களோ என்று கருதுகிறேன்.

சமீபத்திலே தகவல் கிடைத்துள்ளது. அந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் இருந்த பல அதிகாரிகள் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது வேறு காரணங்களுக்காக. தொழிற்சங்கம் இருக்கிறது என்றால் அது ஸ்டிரைக் செய்வதற்காகவே இருக்கிறது என்ற முடிவு சரி யானதல்ல. அந்த ஒரே நோக்கத்தோடு மட்டும் தொழிற் சங்கம் செயல்பட முடியாது, அப்படிச் செயல்படவும் கூடாது. ஒருவேளை அது ஏ.ஐ.டி.யு.சி. சங்கம் என்பதால் அங்கீகாரம் அளிக்கப்படவில்லையோ என்று கருதுகிறேன். அந்த கண் ணோட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அதை மாற்ற வேண் டும். ஒரே சங்கம் தான் இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அதை நீங்கள் அங்கீகாரம் செய்வதில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்பதை மீண் டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு ஊழியர்கள் சங்கம் இருக்கிறது. பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கு ஒரு வருஷம் ஆனாலும் பேச வர மறுக்கிறார்கள். கூட்டுறவுத் துறை ரெஜிஸ்திராரைக் கேட்டால் '' ஐ டோன்ட் மைன்ட் இஃப் யூ கோ ஆன் இன் ஸ்டிரைக் ' என்று சொல்கிறார் என்று நான் கேள்விப்பட்டேன். நீங்கள் வேண்டுமானால் ஸ்டிரைக் செய்யுங்கள் என்று சொல்லி, அவர் ஸ்டிரைக் ஏஜென்டாக மாறி யிருக்கிறார். அப்படி இருந்தால் எப்படி அந்த இலாகாவில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்க முடியும்? அங்கே லேபர் டிபார்ட்மென்ட் சொல்லுகிற சிபாரிசுகளை அமுல்படுத் வதில்லை.

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 1

'ஸ்கிரினிங் கமிட்டி' என்று வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட இது கூடாது என்று, ஜெயிலுக்கே போகவும் தயார் என்று முன்னாலே சொன்னார்கள். ஸ்கிரீனிங் கமிட்டி கூடாது என்று ஹைகோர்ட்டில் தீர்ப்பும் சொல்லியிருக்கிறார்கள். ஸ்கிர்னிங் கமிட்டியை ஒழிக்க வேண்டுமென்பது நம்முடைய கொள்கை. ஏற்கனவே ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த கமிட்டியை ஏன் ரத்து செய்யக்கூடாது? அரசுத்துறை நிறுவனங்களில் ஒருவன்மீது குற்றச்சாட்டைச் சொன்னால் அது சம்பந்தமாக கோர்ட்டுக்கு அனுப்புவது என்றால் அவர் ஸ்கிரீனிங் கமிட்டி அனுமதித்தால் தான் கோர்ட்டுக்குப் போகலாம்; நேரடியாகப் போக முடியாது. இது தொழிலாளிகளுக்கு பெரிய பாதகமாக இருக்கிறது. ஆகவே ஹைகோர்ட் தீர்ப்புச் சொன்ன பின்னாலும் ஸ்கிரினிங் கமிட்டியை வைத்திருப்பது சரியல்ல; அதை ஒழித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

அடுத்து நம்முடைய தொழில் தாவாக்களைக் கோர்ட்டுகளுக்கு அனுப்புவது சம்பந்தமாக ஏற்படக்கூடிய தாமதங்களைப் பொறுத்தவரையிலே ஒரு வருஷம் $1\frac{1}{2}$வருஷம் ஆகியும் ரெஃபரன்ஸ் கிடைக்கவில்லை. இதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். அது போக்கப்பட வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய சட்டமன்றத்திலே சென்ற சட்டமன்ற ஆகஸ்ட் கூட்டத் தொடரிலே, டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகத் தொழில் கோர்ட்டுக்குப் போவதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டும்என்றுஒருசட்டத்தை நிறைவேற்றி ஜனாதிபதி அங்கீகாரத்திற்காக அது சென்றிருக்கிறது. நாம் பெருமைப்படத்தக்க அளவிலே இந்த மாநிலத்திலே அம்மாதிரியான சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் துரதிஷ்டம் இன்னும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அப்படி டிஸ்மிஸல் டிஸ்புயூட்ஸைப் பொறுத்தவரையிலே எத்தனை இருக்கின்றதோ அத்தனையும் கோர்ட்டுக்கு அனுப்புவது என்பதுதான் நாம் ஏற்றுக்கொண்டு இருக்கக்கூடிய கொள்கை நிறைவேற்றுவதாகும் ஆகவே நம்முடைய சட்டத்திற்கு அங்கீகாரம் வரும்போது வரட்டும். வரவில்லை என்றால் அதை எதிர்த்துப் போராடுவோம். ஆனால் அந்தக் கொள்கையினை ஏற்றுக்கொண்டு இருக்கக்கூடிய இந்த அரசு அந்த அடிப்படையிலே, வேலை நீக்கம் சம்பந்தமான அனைத்து தொழில் தாவாக்களை எல்லாம் தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்.

அடுத்து வேலைநிறுத்தம் சம்பந்தமாக சிலவற்றைச் குறிப்பிட வேண்டி இருக்கின்றது. தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடக்கின்றன. பால் வினியோக



1982 மார்ச் 15] [திரு இரா. கருப்பையா]

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ அவர்களின் பிரச்சினை $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்கும் மேலாக இருக்கின்றது. ஒருவேளை அவர்கள் தொழிலாளர்கள் என்பதால் அவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற உணர்வு இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. $1\frac{1}{2}$ ஆண்டுக்காலமாக அது தீர்க்கப்படாமல் இருக்கிறது. வேண்டுமானால் அவர்களைப் பிடித்து ஜெயிலிலே போட்டுவிடுங்கள். ஆனால் அந்தத் தொழிலாளர்களை வஞ்சம் தீர்க்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் இருக்கின்றது. அவர்கள் 1500 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களின் குடும்பம் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை, டிஸ்ப்யூட்டும் இருக்கின்றது. ஸ்ட்ரைக் செய்தான் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் இப்படி வெளியே நிறுத்தப்பட்டுள்ளார்கள் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தனியார் பஸ்போக்குவரத்துத் தொழிலாளர்களுக்காகச் சட்டம் இருக்கின்றது. ஆனால் எந்தக் கம்பெனியிலே பார்த்தாலும் டெய்லி வேஜஸ்தான். இவற்றைக் கண்காணிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் யாருக்கும் மாதச் சம்பளம் கிடையாது. அவர்களுக்கு கிராஜ்விட்டி கிடையாது, பென்ஷன் கிடையாது, பிராவிடென்ட் ஃபன்ட் கிடையாது. நம்முடைய மாநிலத்திலே 5696 தனியார் பேருந்துகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆனால் எத்தனை பஸ்களில் தொழிலாளர்கள் மாதச் சம்பளம் வாங்கக்கூடிய நிலைமை இருக்கின்றது என்பதையும் அரசு கணக்கிட்டு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு சட்டம் போட்டாகி விட்டது ஆகவே பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைப்பது சரியில்லை. சட்டத்தை அமல்நடத்தி அது அந்தத் தொழிலாளர்களுக்கு பலனை ஏற்படுத்துவதற்குரிய வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுதான் சரியானதாக இருக்கும்.

அடுத்து அன் ஆர்கனைஸ்ட் லேபர் சம்பந்தமாக இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறைந்தபட்சக் கூலி சட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது நிலைமையைப் பார்த்தால் நேற்று விற்ற விலை இன்று இல்லை. விலைவாசி விட்டருக்கு தினசரி 10 பைசா கூடுகிறது. அதையும் ஒரு சட்டம் மாதிரி முதலாளிகள் செய்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, அது வேறு பிரச்சினை. ஆனால் தினசரி விலைவாசி ஏறுகிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. மூன்றாண்டு கடந்த பிறகு தான் அதனை மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறினாலும் அப்பொழுதும் அதைச் செய்வது கிடையாது. மூன்றாண்டுக்குப் பின்னர் தாமதப்படுத்தி கமிட்டி அமைக்கப்படும் அது மேலும் இரண்டாண்டுகள்

ஆகும். ஆகவே இரண்டாண்டுக்கு ஒரு முறை குறைந்த பட்சக் கூலியை மாற்றியமைக்க வேண்டும். விலைவாசியைக் கணக்கிட்டு அவ்வப்போது ஈடுசெய்யக்கூடிய முறையிலே பஞ்சப்படி கொடுக்கக் கூடிய முறையில் குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும். பீடித்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி அறிவிப்பு 12 ஆம் தேதி வந்துள்ளது. ஆனால் பஞ்சப்படி என்ற பெயரிலே அறிவித்துள்ளது வஞ்சிக்கக்கூடிய படிதான். அது. 60 ஆம் ஆண்டு விலைவாசிப் புள்ளியை எடுத்து ஓராண்டுக் காலம் கணக்கிட்டு 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1982 ஜனவரி முதல் டிசம்பர் வரை ஓராண்டிலே எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று கணக்கிட்டு 5 புள்ளிக்கும் 2 பைசா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நானும் புள்ளிக் கணக்கை எடுத்து புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன் 1960 ஆம் ஆண்டுக்கான புள்ளியை அடிப்படையாக வைத்து பஞ்சப்படி கணக்கிடப்படுகிறது. அதிலே 20 பைசா கூட கிட்டாது.......

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலேயும் கூலி நிர்ணயித்திருக்கிறார்கள். ஆந்திராவிலேயும் கூலி நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை. தமிழக அரசுதான் பஞ்சப்படி கொடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா கருப்பையா :** மாற்றுத் தலைவரவர்களே, பஞ்சப்படி கொடுக்கும் அந்த முறை வரவேற்கத்தக்கதுதான். அதற்கு எங்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிலே இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 5 புள்ளிக்கு 2 பைசா. 36 ஆம் வருஷப் புள்ளியை எடுத்துப் பார்த்தால் உதாரணமாகச் சொன்னால் 1981 அக்டோபர் மாதத்திலே 2161 ஆகி இருந்தது. டிசம்பர் மாதத்திலே 2194. 33 புள்ளி உயர்ந்திருக்கிறது. இது 36 ஆம் வருஷத்திற்கு. 60 ஆம் வருஷததிற்குரிய புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால் 454 ஆக இருந்தது. 461 ஆகியுள்ளது 7 புளளி உயர்ந்திருக்கிறது. இரண்டு மாதத்தில் அந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது. 10 மாதத்திற்கு கணக்குப் போட்டால் அவனுக்கு 15 பைசாவுக்கு மேல் கிடைக்காது என்ற நிலைமையே இருக்கிறது. ஆகவே விலைவாசி புள்ளி அடிப்படையிலே பஞ்சப்படி கொடுப்பதை வரவேற்கிற அதே நேரத்தில் நாம் 36 ஆம் ஆண்டு விலைவாசி புள்ளியை கணக்கிட்டு அந்த அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும். இன்றைக்கு டெக்ஸ்டைல்ஸ் மற்றும் மிகப் பெரிய தொழில்களில் எல்லாம் இந்த மாதிரியான முறையில் பஞ்சப்படி கணக்கிட்டு கொடுக்கப்படுகிறது. அதே போன்றமுறைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.



அடுத்து பல பகுதி தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை நிரணயிக்க கமிட்டி நியமிக்கப்படுவதைப் பற்றியது. அச்சுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இனிமேல்தான் கமிட்டி போட்டு பரிசீலிக்க வேண்டும். இன்னும் 2 வருஷம் ஆகும். சுமார் 6 லட்சம் பேர்கள் கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கமிட்டி போட்டு பரிசீலனை செய்வது 2 வருடம் ஆகும் என்றால், பிறகு அறிவிப்பு வந்த பிறகு நடைமுறைக்கு வர மேலும் 2 வருடம் ஆகும். இது நடைமுறை. ஆகவே, இந்த கைத்தறித் தொழிலாளர்களுக்கு அச்சு தொழிலாளிகள் போன்றவர்களுக்கு உடனடியாக குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்து உடன் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் விவசாயத் தொழிலாளர்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களைக் கணக்கில பார்த்தால் 1971-லே அவர்களுடைய எண்ணிக்கை 44 இலட்சத்து 90 ஆயிரத்து அறுபத்து மூன்று. 1981 ஆம் ஆண்டு 59,47, 614. இது அரசாங்கத்தினுடைய கணக்கு. அதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். இப்படி 59 இலட்சம் பேர்கள் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நியாயமான கூலியை பெற்றுத் தரக்கூடிய அமைப்பு எது என்றால், அந்தப் பொறுப்பு வருவாய்த்துறையின் வட்ட ஆட்சியர் அல்லது அவருக்கு துணையாக இருக்கக் கூடிய ஒரு அதிகாரியிடம் என்று இருக்கிறது. சாதாரணமாக கிராமத்தில் என்ன சொல்வார்கள் என்றால் — தாலுக்காபீசில என்ன வேலை என்று கேட்டால், கல்யாணத்திலிருந்து கருமாதி வரையில் அவர்களிடத்திலேதான் போய் நிற்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவ்வளவு வேலைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இவ்வளவுக்கும் மேலே இது வேறே. எல்லா வேலைகளையும் பட்டியல் போட்டு சொல்வதற்கு நேரம் இல்லை. அப்படி வேலைகளு அவர்களுக்கு அவர்களிடத்திலே போய் இதை ஒப்படைத்திருக்கிறார்கள். இது எப்படி நிறைவேறும் ? எப்படி அவர்கள் இதை செயல்படுத்துவார்கள் ?

கடந்த இரண்டாண்டு காலத்தின் அனுபவத்திலேயே பார்த்திருக்கலாம். இந்த விவசாயத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் கூலியைப் பெற முடியவில்லை. என்பதை, அது குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த விவசாயத் தொழிலாளர்கள் குறைந்த பட்சக் கூலியைப் பெறவேண்டும் என்று சொன்னால், நான் சொல்ல விரும்புகிறேன், லேபர் டிபார்ட்மென்டிலேயே ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தி அதன் மூலம் அமுல் செய்ய நடவடிக்கை எடுத்தால் ஒழிய இந்தச் சட்டத்தை அமுல் செய்ய முடியாது. அந்தத் தொழிலாளர்களுக்கு இம்மாதிரியான கூலி நிர்ணயம் இருக்கிறது.

அதை நாம் பெற வேண்டும் என்கிற உணர்வைக் கூட ஏற்படுத்த முடியாமல் போய்விடும். ஆகவே அந்த அடிப்படையில் இன்றைய தினம் லேபர் டிபார்ட்மென்ட்லே தனியாக கமிஷனர் போட்டு செய்ய வேண்டும். 60 லட்சம் விவசாயத் தொழிலாளர் களுக்கு கூலி நிர்ணயம் பெற்றுத் தரக்கூடிய எவ்வளவு பெரிய பிரச்சனை. இதற்கு எவ்வளவு பெரிய இலாகா தேவைப்படும், எவ்வளவு அதிகாரிகள் வேண்டும் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதையெல்லாம் செய்யாமல் சட்டம் அமு லாகாது என்று கூற விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. எம். அண்ணாதாசன் : பேரவையின் மாற்றுத் தலை வர் அவர்களே, சபை நிகழ்ச்சிகள் நடந்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பிரஸ் நிருபர்களோடு போய் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண் டிருக்கிறாரே. இது அவையின் நடைமுறைக்கு சரியா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. இரா. கருப்பையா : அடுத்து நான் குறிப்பிடவிரும்பு வது, இந்த லேபர் டிபார்ட்மெண்டிலே இன்றைக்கு ஒரு ஸ்டேக் னேஷன் இருக்கிறது. அதை தோழர் ரமணி அவர்கள் கூட சுட் டிக் காட்டினார்கள். அந்த டிபார்ட்மெண்டிலே, ஒரு லேபர் கமிஷனர், ஒரு ஜாயின்ட் லேபர் கமிஷனர், ஒரு ஸ்பெஷல் லேபர் கமிஷனர், 12 டெபுடி கமிஷனர்கள் என்று இருக்கிறார் கள். அவர்களுக்கு கீழே மற்றும் பல அதிகாரிகள் இருக்கிறார் கள். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு கூறிய செய்திக்கு நான் பதில் அளிக்க வேண்டும். அதற்கு எனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இந்த அவையில் பேசும்போதுதான் என்னுடைய இடத்திலேயிருந்து பேச வேண்டும். உட்காரும் போது எங்கே வேண்டுமானாலும் உட்கார்ந்துக் கொள்ளலாம். நான் இந்தப்பகுதியில் கடைசி மூலையில் உட்கார்ந்திருந்திருந் தேன். அப்படி உட்கார்ந்திருந்ததினாலேயே பிரஸ் நிருபர் களோடு பேசுகிறேன் என்று சொன்னால், அந்தப் பக்கத்திலே கடைசி மூலையில் உட்கார்ந்திருப்பவர்கள் அதிகாரிகளோடு பேசுகிறார்களா? எனவே இந்த அவைக்கு தவறான தகவலைச் சொன்ன ஆளும் கட்சி உறுப்பினர் மீது உரிமைப் பிரச்சனையை எழுப்பலாம் என்றாலும் போனால் போகட்டும் என்று விட்டு விடுகிறேன்.





திரு. இரா. கருப்பையா : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதில் ஒரு நிலைமையை அரசும் அமைச்சர் அவர்களும் மிகவும் கவலையோடும், சீரியஸாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் காரணம் 10, 15 வருஷங்களாக ஜாயின்ட் கமிஷனர் டெபுட்டி. லேபர் கமிஷனராக அவர்கள் இருக்கிறார்கள். அதிலே பல அதிகாரிகளை நேரிடையாக அமைச்சர் அவர்கள், அவர் அமைச்சராவதற்கு முன்பே நன்றாக அறிவார்கள்.

(பிற்பகல் 12-50)

எங்களைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரி யும். 15 ஆண்டுகளாயிற்று. இன்னும் அவர்கள் ரிட்டயராகும் வரை அதேயிடத்தில் இருந்து காலத்தை முடிக்கவேண்டியிருக் கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வது என்றால் சாகிற வரைக் கும். அந்தப் பதவியில் இருந்து கொண்டு உற்சாகமாக வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஒரு இன்ஸென்டிவ் இருக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது). அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக் கப்படவேண்டும். இந்த இலாகா இன்னும் அதிகப்படியான பொறுப்புகளை ஏற்று செயல்படுத்துவதற்கு அதற்கான முறை யில் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கடைசியாக அரசாங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கம் போடக்கூடிய உத்தரவுகளை, பல இலாக்கக்கள் அமலாக்கு வதில்லை. முனிசிப்பாலிட்டிகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கக் கூடிய முடிவுகளை, அரசாங்க உத்தரவுகளை நிறைவேற்று வது இல்லை. அதற்கு என்ன மெஷிணரி வேண்டும் என்பதை கண்டுபிடித்தாக வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக அரசாங்கம் கடைப் பிடிக்கும் கொள்கையில் ஒரு மாற்றம் காணவேண்டும். ஏனென் றால் இப்போது மோதுதல் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படு கிறது. அதை கைவிட்டு விட்டு, அரசாங்கம் பழி வாங்கக் கூடிய கொள்கையை கைவிட்டுவிட்டு அரசு ஊழியர்களின் ஒத்துழைப் பைப் பெறக்கூடிய முறையில் ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது வால்பாறை தொகுதி யில் தேர்தல் காலத்தில் விடுமுறை அளிக்கப்பட்டபோது அன் றைக்கு ப்ளான்டேஷன் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக் கப்படும் என்று அரசாங்கம் சொல்லியிருந்தது. அவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சம்பளம் மாதாமாதம் சரியாக பல நகராட்சிகளில் வழங்கப்படுவதில்லை. என்ற புகார் கள் இருக்கின்றன. கீழக்கரையில் தேங்காய்த்துருவல் தொழிற் சாலையில் வேலை செய்பவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக் கிறார்கள். பசைத் தொழிலாளர்களுக்கு—இது கைத்தறித் தொழிலையொட்டியது—குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கப் பட்டவேண்டும்.

கட்டடத் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கும் போது இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கும் ரூ. 10,000 நஷ்டயீடு கிடைக்க வழிவகை செய்யவேண்டும். தொழிற் சங்க உரிமைகளை மதித்து, தொழிளார்களுக்கு உரிமைகளை வழங்கி, தொழில் அமைதியை பாதுகாப்பதற்கு வேண்டிய ஒரு கொள் கையை உருவாக்கி செயல்படவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 12 50)

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கோரிக்கை மீது, மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல விழைகிறேன். வளர்ந்து வருகிற சமுதாய மாற்றத்திற்கேற்றவாறு தமிழக அரசு, புரட்சித் தலைவர் அவர் கள் அரசு தொழிலாளர்களின் மீது கொண்டுள்ள அக்கறையின் அடிப்படையில், விரும்பி வரவேற்கப்படுகிற சூழ்நிலையில் பல் வேறு முற்போக்கான நடவடிக்கைகளை தொழிலாளர்கள் நலன் கருதி கொண்டு வந்திருப்பதை ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பாராட்டுவதற்குப் பதிலாக எதிர்க்கட்சி வரிசைகளிலிருந்தும் தோழமைக் கட்சி வரிசைகளிலிருந்தும் பாராட்டுதல்கள் பரவ லாக வந்தது பராட்டுக்குரியது என்பதை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படைக் காரணம் முதலீடுகள், தொழில் செய்கிறவர்கள் ஏகபோகமாக நடப்பதாலும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகிற ஒரு நிலை இந்திய ஜனநாயக சட்டத்தில் இருந்தது என்று சொன்னாலும் தொழிலாளி வர்க்கம் ஒரு அரசு போடு கிற திட்டங்களால் அல்லது அரசாங்கம் அமைக்கிற சட்டங்களா லோ தொழிலாளர் வர்க்கத்தை திருப்தி செய்யக்கூடிய நிலை யில் அவர்கள் உள்ளக்குமுறல்களை தீர்க்க முடியாது என்ற என்னுடைய தனிப்பட்ட கருத்தை இந்த மன்றத்தில் தெரிவித் துக்கொள்ளவிரும்புகிறேன். மாறி வருகிற சமுதாயச் சூழ்நிலை யில் தொழில் முதலீடு செய்கிறவர்கள் ஏகபோக உரிமை பெற்ற வர்களாக இருக்கக்கூடாது என்றதொரு நிலையை ஒரு மிகப்





பெரிய ஜனநாயக அரசு, ஒரு சோஷலிஸ அரசு, இந்திய
ஜனநாயக நாட்டில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையில்
தொழிற்சங்கங்களை நடத்தக்கூடிய தொழிற்சங்க வாதிகள்
கூட, தொழிலாளர்கள் தலைவர்கள் கூட தொழிற்சங்கத்தில்
உள்ள தொழிலாளர் தோழர்களை ஏகபோக உரிமைப்படி
நடத்துகிற அளவிற்கு ஏகபோகத்தோடு அவர்கள் நடந்து
கொள்ளமுடியாது என்றளவில் துணிவோடு செயல்படுகிற அள
விற்கு இந்த நாட்டிலிருக்கிற சட்டதிட்டங்களை மாற்றி
யமைக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், பி அண்டு சி
மில் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள், அல்லல்படுகிறார்கள்,
பசியால், பஞ்சத்தால் வாடுகிறார்கள் என்று சொல்லி, தமிழக
அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஒவ்வொரு தொழி
லாளர்களுக்கும் ரூ. 200 மானியமாக அளிக்கும்போது அந்த
200 ரூபாய் பெற்ற தொழிலாளர்கள் மத்தியில், பஞ்சத்தால்,
பசியால் வாடுகின்ற அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் 10 ரூபாய்
பெறக்கூடிய அளவிலே தொழிற்சங்க நிறுவனத்தை நடத்திச்
செல்லுகின்றவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், இதை
அனுமதிப்பது, இப்படிப்பட்ட ஏகபோக சூழ்நிலையை உரு
வாக்குவது என்பதை மாற்றுவதற்கு இந்த அரசு ஏற்றவகையில்
அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான்
பணிவோடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரை, தொழிலாளர்கள்
எதிர்காலத்திலே நல்லவகையில் பாதுகாக்கப்படுகின்ற வகையில்
பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரி மாநிலத்திலே, அந்த
மாநிலத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம், அங்கே
முற்போக்கு கொள்கைகளை கொண்டுவருவதற்கு முட்டுக்கட்டை
யாக இருக்காது என்றாலும், அந்தப் பாண்டிச்சேரியிலே உள்ள
முதல்வர், தொழிலாளர் நல அமைச்சர் கொண்டுவராத முற்
போக்குத்திட்டங்களை, தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சியில், இங்குள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் விரும்பி வேண்டி
வரவேற்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன், மார்க்கிஸ்ட்
சித்தாந்தத்தைப் பேசுகின்ற மேற்கு வங்காளத்தில், அந்த
ஆட்சியிலே இல்லாத சட்ட திட்டங்களை இந்த அரசு தொழி
லாளர்கள் நலம் கருதி அவர்கள் மேலும் வளரவேண்டும் என்ற
நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கின்ற இந்த சட்ட திட்டங்
களை மனமார விரும்பி பாராட்டுவதற்கு ஒவ்வொருவரும் நாம்
கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்த தொழிலாளர் சட்டத்திலே, சஸ்பென்ட் செய்யப் பட்டால் முதல் 90 நாட்களுக்கு 50 விழுக்காடு ஊதியமும், 90 நாட்களிலே இருந்து 180 நாட்கள் வரை, 75 விழுக்காடு ஊதியம் தரவேண்டும் என்றும், 180 நாட்களுக்கு மேல் போனால் முழு ஊதியமும் வழங்கவேண்டும் என்று 1–1–1982 முதல் இதற்கான ஆணையிட்டு உள்ளது. இந்தச் சட்டத்தை, மிகவும் முற்போக்கான கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறவோடு ஆட்சி செய்யும் பாண்டிச் சேரியிலே கூட இல்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டம் அங்கே வந்திருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தேன் ; அங்கே இத்தகைய சட்டம் இல்லை என்பதை நான் பணிவோடு தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள். இந்தச் சட்டம், தமிழகத்திலே உள்ள பொது நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் பயன்படுகின்ற அளவிலே செய்வதற்கு, நம் மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அவர்களுக்கு கோரிக்கை விடுத்து, இந்தச் சூழ்நிலை அவர்களுக்கும் பயன்படுகின்ற வகை யில் செய்யவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

ஒரு தொழிற்சாலையில், ஒரு தொழிலாளி ஒரு ஆண்டில் 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றினால், அவர் நிரந்தர மாக்கப்பட வேண்டும் ; இதைச் செயல்படுத்த வேண்டும் என்று 1–1–1982 முதல் அமுல்படுத்த உத்தரவிட்டிருப்பதாக நான் அறிகிறேன். இந்தச் சட்டம் புதுவையிலே இல்லாவிட்டாலும், இந்தச் சட்டத்தை தமிழகத்தில் சீக்கிரமாக நிறைவேற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஒரு தொழிலாளி தொடர்ந்து 8 நாட்களுக்கு பணிக்கு வரவில்லை என்று தகவல் தெரிந்தால், அவர் தானாகவே அந்த நிறுவனத்திலிருந்து விலகிக் கொண்டதாக கணக்கிடுகின்ற ஒரு சூழ்நிலையை, இத்தகைய நிலையை திருத்தத்தை தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதுபோன்ற திருத்தத்தை மற்ற மாநிலங்களிலும் பின்பற்றுகின்ற வகையில் இப்படிப்பட்ட ஒரு முற்போக்கான சட்டத்தை, திருத்தத்தை செய்திருப்பதற்காக நான் இந்த அரசை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற 22 மாநிலங்களிலே, இந்த மாநிலம் தான் கதர், மற்றும் கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றதிலே அக்கறை கொண்டு, இந்த நாட்டிலே உள்ள பல இலட்சக





கணக்கான கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் நலனைக் கருத்தில்கொண்டு, தமிழக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அப்படி கொண்டு வரப்பட்ட கைத்தறி நெச வாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை நான் விரும்பி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிற்சங்கத் தகராறு நடந்து, தொழிற்சங்க அமைப்புகள், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களோடு பேச சென்னைக்கு வரும்போது, அவர்கள் ரூ. 5 கட்டணத்தில் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனம் திறந்து பாராட்டக்கூடிய நிலைமையிலே இல்லாவிட்டாலும், பொது உடைமையைக் கண்ட வர் என்பதை மனதிலே கொண்டு, தொழிலாளர் நலத் தலைவர் ஜீவா அவர்கள் பெயரை அதற்கு வைத்திருப்பதற்காக தமிழக அரசையும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டு கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

தொழிலாளிகளுக்கு கிராட்சுட்டி வழங்கும் போது 240 நாட் கள் ஒவ்வொரு ஆண்டும் பணி புரிந்திருந்தால் தான் அந்த ஆண்டுகளுக்கு கிராச்சுட்டி வழங்கமுடியும் என்று உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில் தொழிலாளர்களுக்கு பாதகம் ஏற் பட்டிருக்கிறது, இதற்கு ஒரு சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு இதிலே காலதாமதம் செய்துகொண்டிருக்கிறது. இந்த காலதாமதத்தை போக்குகிற விதத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு எடுத்துரைத்து இந்த சட்டத்தை அமல்படுத்துவதில் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்தை, தொழிற்சங்கங்களை பேச்சு வார்த்தைக்கு வரவேண்டுமென்று அழைக்கும்போது சில நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு வருவதில்லை. இந்த நிலையை மாற்றி சமன் அனுப்பக்கூடிய ஒரு ஆர்டரை லேபர் ஆபீசருக்கு வழங்கவேண்டு மென்று ஒரு நிலையையும், தொழிலாளர்களுக்கு நேரடியாக நீதிமன்றங்களுக்குச் சென்று தீர்ப்பு பெறவேண்டுமென்ற சட்டம் இயற்றவேண்டுமென்ற நிலையையும், இந்த இரண்டு சட்டங் களையும் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக மாநில அரசு வைத்திருக்கிறது. இந்த ஒப்புதலை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சீக்கிரம் வாங்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி, நகராட்சி, வருவாய்த் துறை அமைப்புகளும் பல இடங்களில் சும்மா கிடக்கும் இடங்களை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தி வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டும். நிலங்களைக் கையகப்படுத்தும் போது ஏழை, எளிய விவசாயிகள் மீது கருணை காட்டவேண்டும். பினாமி நிலங்கள் வைத்திருக்கிறவர்களை, அவர்களுடைய நிலங்களை வேகமாக கையகப்படுத்துவதற்கு தமிழக அரசு முயற்சி செய்யவேண்டும். சில இடங்களில் சிறு விவசாயிகள் இந்த நிலையில் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு நகராட்சிகளுக்கு, மாநகராட்சிக்கு, ஒன்றியங்களுக்குச் சொந்தமான காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றில் சுகாதார கேடுகள் ஏற்படுகின்றன. அவற்றைக் கையகப்படுத்தி வீட்டு வசதி வாரிய வீடுகளைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களின் கட்டளைக்கிணங்க முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் பற்றிய விளக்கக் குறிப்பினை நம்முடைய அமைச்சர் அவர்கள் மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இதிலே எனக்கு முன்னாலே பேசிய ஆளும்கட்சி உறுப்பினர்கள் தொழிலாளர் நலம் பற்றிய திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது மினிமம் வேஜஸ் ஆக்ட்டாக இருந்தாலும் சரி, பாக்டரி ஆக்ட்டாக இருந்தாலும் சரி அல்லது ஷாப் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்டாக இருந்தாலும் சரி, கைத்தறி தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் இப்படி தொழிலாளர் வர்க்கத்தினுடைய பல்வேறு பிரிவுகளைச்சார்ந்தவர்களுக்காக பல்வேறு சட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லி பாராட்டினார்கள். ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டங்களுக்கு உயிர் இருக்கிறதா ? இந்தச்ச ட்டம் அமல் நடத்தப்படுகிறதா ? தோட்டா இல்லாத துப்பாக்கியாக, மணமில்லாத பூவாக, உயிர் இல்லாத எலும்புக் கூடாக இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பலன் அளிக்காத சட்டங்களுக்குப்பாராட்டு தேவையில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

480 நாட்கள் ஒரு தொழிலாளி வேலையிலே இருந்திருப்பாரானால் அவர்கள் நிரந்தர தொழிலாளியாக ஆக்கப்பெறலாம். நான் உங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். தமிழ் நாட்டிலே எவ்வளவு பேர்கள் அப்படி நிரந்தர தொழிலாளியாக ஆக்கப்பட்டிக்கிறார்கள் ? எந்தெந்த நிறுவனங்களில் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் ? அதற்கு என்ன மெஷினரி வைத்திருக்கிறார்கள் ? அதை நீங்கள் உரையிலே சொல்வீர்களானால் தொழிலாளி வர்க்கத்திற்குப்பயனாக இருக்கும் என்பதைதெரி



வித்துக் கொள்கிறேன், அதுமட்டுமல்ல தொழிலாளிகள் நேரடியாக லேபர் கோர்ட்டிற்குப் போகலாம் என்று இந்த அரசின் கொள்கையாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் ஸ்கிரீனிங் கமிட்டி என்ற ஒன்றை வைத்து நீங்கள் ரெபரன்ஸ் கொடுத்தால் தான் லேபர் கோர்ட்டிற்குப்போக முடியும். ஆனால் இந்தக் கமிட்டியினுடைய அதிகாரிகளைப் போட்டீர்களே தவிர அவர்கள் தான் அநியாயமாகத்தீர்ப்பு வழங்குபவர்கள். இது ஜனநாயக விரோதமான தொழில் கொள்கை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல நீங்கள் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே பல தவறான தகவல்கள் இருக்கின்றன. உதாரணமாக முதல் பக்கத்திலே ஒன்றைச்சொல்லியிருக்கிறீர்கள். தொழில் தகராறு பற்றியும், வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் காரணமாகவும் உழைப்பு நாட்கள் வீணாவதைக் குறைந்திருப்பது பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் இதற்குச சான்றாக அமையும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் 5ஆம் பக்கத்தை புரட்டிப் பார்த்தால் அதிலே நீங்கள் கொடுத்துள்ள கணக்கு தவறான புள்ளிவிவரம் என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1980வது ஆண்டிலே வீணானஉழைப்பு நாட்கள் முப்பத்தைந்து லட்சத்து ஆயிரத்தி இருபத்தி இரண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1981 ஆம் ஆண்டு வீணான உழைப்பு நாட்கள் அதிகரித்திருக்கிறது. எப்படி அதிகரித்திருக்கிறது என்றால் 41 லட்சத்து 24 ஆயிரத்து 21 என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் அமைச்சரைக் கேட்கிறேன். அதிகாரிகள் உங்களுக்குத் தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் திருத்தவும் இல்லை. இதிலேயிருந்து என்ன தெரிகிறது. ஸ்ட்ரைக், லே ஆப் மூலமாக மனித உழைப்பு நாட்கள் அதிகமாக வீணாக்கப்பட்டிருக்கின்றன, அதிகமாகி இருக்கிறது. ஆகவே உண்மைக்குப் புறம்பான தகவலைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் சான்று வேறு இருக்கிறது என்று சொல்கிறீர்கள்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஏறத்தாழ 1,300 பேர்களுக்கு மேலே பாதிக்கப்பட்டார்கள். அந்த மானேஜ்மெண்டிற்கும் தொழிலாளர்களுக்கும் மத்தியிலே ஏற்பட்ட பிரச்சினை. அவர்களுக்குள்ளாகவே ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள், ஸ்டாச்சுட்டரி பார்மாலிட்டி என்ற அடிப்படையில், லேபர் கமிஷனர் முன்னாலே அவர்கள் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். 25 சதவீதம் சம்பள உயர்வு என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் ஆலோசனை சொன்னதாக இதிலே குறிப்பிட்டிருக்கிறீர்களே, நீங்கள் எங்கே ஆலோசனை சொன்னீர்கள், உங்களுடைய சர்க்காா் இதிலே தலை

யிட்டதா ? இது ஏற்கெனவே முடிந்த விஷயம். நிர்வா த்
திற்கும் தொழிலாளர்களுக்கும் உடன்பாடு ஏற்பட்டது. இதை
உங்களுடைய சாதனையாக எப்படி நீங்கள் சொல்லமுடியும் ?
உங்களுடைய சாதனையாகச் சொல்வது வருத்தத்திற்குரிய
விஷயம். இது செட்டில்மெண்ட் என்பதன் கீழே சொல்லி
யிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் மேலவையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். திருப்
பூரில் 1,300 பனியன் தொழிற்சாலைகள் இருக்கின்றன.
அங்கே ஏற்பட்ட சுமுக் ஏற்பாட்டின் மூலமாக 20 ஆயிரம்
தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். இது உங்களுடைய சாதனையல்ல. உங்களுடைய
அதிகாரப்பூர்வமான அண்ணா பத்திரிகையிலே 18—2—1982
அன்று பலன் பெற்றவர்கள் பட்டியல் காணீர் என்று சொல்லி
யிருக்கிறீர்கள். இவையெல்லாம் தவறான தகவல் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லவிரும்பு
கிறேன். சென்னையிலே பி.அண்ட்.சி. மில் சம்பந்தமாக
இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே உங்கள் தலையீடு
என்ன? போன ஆளுநர் உரையிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்
நிர்வாகத்தினரும் தொழிலாளரும் சம்மந்தப்பட்ட பி.அண்ட்.சி.
மில் பிரச்சினையை மத்திய அரசே திறக்கவேண்டும்'' என்று
சொல்வதன்மூலமாக உங்களுடைய ரெஸ்பான்ஸ்பிளிட்டியை
ஷிப்டு செய்து விட்டீர்கள். எங்களுக்கு இதிலே ஒன்றும் இல்லை.
மத்திய அரசு செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டீர்கள்.
எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. 'கலாநிதி அவர்
களும், நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. லட்சுமணன்
அவர்களும் இதிலே முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள்.
நாங்கள் போராட்டம் நடத்தினோம், கூட்டங்கள் போட்டோம்.
டெல்லியிலே ஒப்பந்தமானது. ஆனால் தவறான தகவலைச்
சொல்கிறீர்கள். டெல்லி ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்
காகத்தான் திரு. கமலரத்தினம் நியமிக்கப்பட்டாரே தவிர
இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்படவில்லை.
ஆனால் திரு. கமலரத்தினம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து
நீங்களும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தது போன்ற
ஒரு உணர்வை ஏற்படுத்துவது தவறான தகவல்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல ஆலைகள் மூடப்
பட்டன என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைய தினம்
குற்றஞ்சாட்டியிருக்கிறீர்கள். கோவை ஜெயலட்சுமி மில்ஸ்
ஜோதி மில்ஸ் மூடப்பட்டது, லே ஆப் போடப்பட்டு பாதி,
சம்பளம் கூட கிடைக்காமல் இருக்கிறது. தொழிலாளர்கள்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோவாப்ரேடிவ் ஸ்டோர்க்ஸ்
மூடப்பட்டிருக்கின்றன. மேனேஜ்மெண்ட் $2\frac{1}{2}$ லட்சம் கொடுக்க
வில்லை, இ.எஸ்.ஐ., பி.எப். போன்ற வாய்ப்புக்கள் கொடுப்ப
தற்காக மேனேஜ்மெண்ட் பணம் கொடுக்காமல் இருக்கிறது.





முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்குக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு முயற்சி
எடுத்துக்கொள்ளவில்லை, பேச்சுவார்த்தை கூட நடக்கவில்லை.
அதைப்போலவே தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் 8 வருடமாக
மூடப்பட்டிருக்கிறது, தொழிலாளர்களுக்குச் சம்பளம்
இல்லை, 300 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சிக் மில்ஸ், நலிந்த மில்கள்
எல்லாம் அரசாங்கத்தாலே எடுத்து கொள்ளப்பட்டது. அதைப்
போலவே அப்படிப்பட்ட மில்களைச் சர்க்காரே எடுத்துக்
கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் கூட சென்னையில் பாலு கார்மெண்ட்ஸ்
நிறுவனத்தை அரசே எடுத்துக்கொள்ளும் என்று வாக்குறுதி
கொடுத்தார்கள். அது காற்றோடு .காற்றாக கலந்துவிட்டது
என்றே கருதுகிறேன். மேட்டூர் பியர்ட்செல் நூற்பாலை
மூடப்பட்டிருக்கிறது, லே ஆப் என்ற காரணத்தினால்,
1937 இல் அது ஆரம்பிக்கப்பட்டது. லே ஆப்பிற்கு காரணமே
தெரியவில்லை. அந்தத் தொழிலாளர்கள் வேதனைப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே மால்கோ நிறுவனம்
எல்லோருக்கும் அறிமுகமானதுதான். 9 கோடி ரூபாய் மின்
சாரக் கட்டணம் பாக்கியுள்ள நிறுவனம், அங்கே ஸ்ட்ரைக்
நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. நிர்வாகம் மூடுவதற்கான
அச்சமான சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இவைகள் எல்லாம் அரசின் சாதனைகளாக
இருக்க முடியாது. தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கி
றார்கள். நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று
தொழிலாளர் நல அமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலே
நான் அமைச்சர் அவர்கள் அதிலே ஈடுபட வேண்டுமென்று
ஆலோசனையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். தொழிலாளர்களுடைய உரிமையை, நலனைப்
பாதுகாக்கும் விதத்திலே இந்த அரசு இருப்பதாகக் குறிப்பிடு
கிறீர்கள். நான் ஒன்றைச் சொல்வதற்காக வருந்தக்கூடாது.
நம்முடைய முதல்வரவர்கள் மேலவையிலே பேசிய பேச்சைத்
தான் சொல்கிறேன். 'நான் நாடோடி' மன்னன் சினிமாப்
படத்திலே வருகின்ற கருத்துக்களைத்தான் அமல் நடத்திக்
கொண்டிருக்கிறேன் ; குறிப்பாக முதல் காட்சியிலே நான்
வருகிறேன்; அதிலே ஒரு அறிவிப்புப் பலகை என் கையிலே
இருக்கும், 'ஒன்று சோறு போடு அல்லது வேலை கொடு'
என்று இருக்கும், அந்த அடிப்படையிலே நான் பல காரியங்
களைச் செய்து கொண்டிருக்கிறேன் என்று தமிழக சட்டமன்
றத்தின் மேலவையிலே நம்முடைய பொறுப்பான முதல்வர்
சொல்லியிருக்கிறார். இங்கே வேலை கொடுக்காவிட்டாலும்
கூடப் பரவாயில்லை; மதுரை மாநகராட்சி மின்சாரப் பிரிவில்

176 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எந்தக் காரணமும் இல்லை. 1979-லே நியமிக்கப்பட்டவர்கள்; இரண்டாண்டுக் காலத்திற்கும் மேலே பதவியிலே இருந்திருக்கிறார்கள். நீங்கள் ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கவில்லை. காரணம் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, 75 தொழிலாளர்களைப் பதவி நீக்கம் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் மாடல் எம்ளாயர்-ஆக முன் மாதிரியாக இருக்க வேண்டும். ஆனால் உங்களுடைய மாநகராட்சியிலே நீங்கள் வேலை கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; வேலையிலிருப்பவர்களைத் திடீரென்று நீக்குகிறீர்கள். நாடோடி மன்னன் சினிமாப்படத்திலே கூட வேலையிலிருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பு என்று எந்த இடத்திலும் இல்லை. ஆக நாடோடி மன்னன் சினிமாப்பட அடிப்படையிலேகூட அதற்கும் கூட புறம்பாக முதலமைச்சர் அல்லது இந்தச் சர்க்கார் நடப்பது சரியாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 480 நாட்கள் சர்வீசிலே இருந்தால் போதும், அவர்களைப் பர்மனென்ட் ஆக்கலாம். ஆனால் 480 நாட்களுக்கும் மேலாகவே இருந்தும் கூட அந்த விதிகளை நீங்கள் பின்பற்றவில்லை.

அதுமட்டுமல்ல, பால் வள நிறுவன ஊழியர்கள் 1,500 பேர் இன்றைக்கு வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். 20—11—1980 முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை நியமித்திருக்கிறார்கள். அதிலே ஒரு வேடிக்கை. இன்று அதைக் கருங்காலித்தனம் என்று சொல்வார்கள். அவர்களுக்கு ஆரம்பத்தில் மாதச் சம்பளம் 345 ரூபாய். இப்பொழுது 240 ரூபாய். ஆசை காட்டி மோசம் செய்திருக்கிறீர்கள். அவர்கள் சில கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். நம்முடைய முதலமைச்சர் கூட மேலவையிலே பேசுகின்ற பொழுது பாலில் தண்ணீர் கலந்தால் நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியுமா என்று கேட்டார். பாலிலே தண்ணீர் கலப்பவன், பாலிலே கலப்படம் செய்பவன், சாராயம் காய்ச்சுபவன் என்று யாராக இருந்தாலும் தப்பு செய்பவர்களைச் சட்டத்தின்படி தண்டிக்க வேண்டியதுதான், டிசிப்பிளினரி ஆக்‌ஷன் எடுக்க வேண்டியதுதான். ஆனால் நான்கு பேர், பத்துப் பேர் தப்பு செய்கிறார்கள் என்பதாலே, வீட்டிலே எலித் தொல்லை என்பதால் வீட்டையே கொளுத்துவது முறையாகாது. 1,500 பேர்களும் மதுரை பால் பண்ணை நிறுவனத்திலே நடைபெற்ற சில அநீதிகளை எதிர்த்து, சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்துத்தான் இந்தப் போராட்டத்தை ஒரு அடையாள ஸ்ட்ரைக்கை நடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களையெல்லாம் நீங்கள் வீட்டிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். முதல்வரவர்கள் தவறான தகவலைச்



சொல்கிறார்கள். ஆகவே நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, குடிசை மாற்று வாரியத்தைச் சார்ந்த ஊழியர்கள் கூட இன்றைக்கு உண்ணாவிரதம் நடத்துகிறார்கள், போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில கோரிக்கைகளாக சம்பள உயர்வு, ரெகுலரைஸ் செய்ய வேண்டியது, பதவி உயர்வு ஆகியவை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் கோரிக்கையற்றுக் கிடக்கின்றன. அது மட்டுமல்ல, நான்கு நாட்களுக்கான ஊழியர்களின் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். காரணம் என்னவென்று கேட்டால், அன்றைக்கு இதே சபையிலே கூட நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன்.

நந்தனம் கல்லூரி மாணவர்களுக்கும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு காவல்துறையைச் சேர்ந்தவர்கள் வீட்டு வசதி வாரிய அலுவலக எல்லைக்குள் புகுந்து ஊழியர்களையெல்லாம் அடித்திருக்கிறார்கள். அதைக் கண்டிக்கும் விதத்திலே ஒருநாள் அடையாளமாக ஆர்பாட்டம் செய்தார்கள். நம்முடைய அமைச்சர் போனார். உன் மீது பட்ட அடி என் மீது பட்ட அடி என்று சொன்னார். போலீசார் மீது விசாரணை வைக்கிறேன் என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு அநியாயமாக அந்தத் தொழிலாளர்களின் நான்கு நாள் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். இது எந்த விதத்திலே நியாயம்? அதை அவர்களுக்குத் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சார்பாக உண்ணாவிரதம் இருப்பதே கூடாது; சட்ட விரோதம் என்று அறிவித்திருக்கிறீர்கள் என்று சொன்னால் இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய துணை சபாநாயகரவர்களின் தலைக்கு மேலே உபதேசம் செய்து கொண்டிருக்கிறாரே தேசப்பிதா காந்தியார், அவர் படம் இருப்பதிலே அர்த்தமே கிடையாது. காரணம் காந்தியார் உண்ணாவிரதத்தைப் போதித்தார்; முறையான கோரிக்கைகளுக்காக நியாயமான கோரிக்கைகளுக்காக அப்பொழுது உண்ணாவிரதம் இருந்தார். எனவே, உண்ணாவிரதமே 'இல்லீகல்' என்று சொல்லுகின்ற அளவிற்கு உங்களுடைய நடவடிக்கைகள் இருக்குமேயானால் நீங்கள் மகாத்மா காந்தியை ஏமாற்றுகிறீர்கள்; மகாத்மா காந்தியை மதிக்கத் தயாராக இல்லை என்பதுதான் அர்த்தம் என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1982 மார்ச் 15

அதுமட்டுமல்ல, ஸ்ட்ரைக் என்பதை நீங்கள் சட்ட விரோதமாக ஆக்கியிருக்கிறீர்கள். ஆனால் இது அண்ணாவின் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமானது. இன்னும் சொல்வோம் என்றால், ஜனவரி 19-ஆம் தேதி ஒரு ஜெனரல் பந்த், ஸ்ட்ரைக் நடந்தது. அதிலே நாங்கள் கலந்து கொள்ளவில்லை. அது வேறு விவகாரம், ஆனால் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காகப் போராடிய அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அதற்காக நீதி விசாரணை இல்லை. தொழிலாளர்களின் ரத்தம் மண்ணிலே சிந்தியது தான் மிச்சம். அதற்காக எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் அதே நேரத்திலே நீங்கள் யாரையெல்லாம் சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்கள்? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பதற்காக ஒரு நாள் பந்திலே கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான ஊழியர்களை நீங்கள் சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்கள். 8 நாள் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். கூட்டுறவு வங்கியினுடைய ஊழியர்கள் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். டிரான்ஸ்போர்ட் ஊழியர்கள் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். நல்லவேளை, நீதிமன்றம் இருப்பதாலே அவர்கள் இன்றைக்கு ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதனாலே, நீங்கள் நடைமுறைப் படுத்த முடியாமல் இருக்கிறீர்கள். ஆனால் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். ஸ்டிரைக் செய்வது சட்ட விரோதம், அதற்கு சஸ்பென்ட் செய்வதுதான் முறை, சம்பளத்தைப் பிடிப்பதுதான் முறை என்று சொன்னால் இலங்கைத் தமிழர் பிரச்சினையின்பொழுது இந்தச் சர்க்காரே ஸ்டிரைக் செய்ததே, அப்படியானால், நான் கேட்கிறேன். அமைச்சர்களை எல்லாம் சஸ்பென்ட் செய்யலாமா? நான் கேட்கிறேன். அமைச்சர்களுடைய சம்பளத்தை எல்லாம் ஒரு மாதத்திற்குப் பிடித்துக்கொள்ளலாமா? ஆக, நாங்கள் செய்தால் தவறு, நீங்கள் செய்தால் சரியா என்று சொல்கின்ற வாதம் சரியாக இருக்க முடியாது. ஒரு சர்க்காரை வேலை நிறுத்தம் செய்தால்—நீங்கள் ஞாயிற்றுக்கிழமை வேலை நிறுத்தம் என்று கூட அறிவித்திருக்கலாம்— அது வேறு விவகாரம் ஆனால் வேலை நிறுத்தத்தினுடைய ரியல் சென்ஸ் அது தான், டெக்னிக்கல் பாய்ண்ட்டிலே மாறலாமே தவிர, அதனுடைய அடிப்படை உணர்வு அதுதான்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் ஊழியர்கள் சஸ்ென்ட் செய்தால் போனஸ் கிடையாது என்று சொல்கிறார்கள். சில நேரங்களிலே மாணவர்களுக்கும் அவர்களுக்கும் தவறான சண்டை கூட வந்துவிடுகிறது. அதற்காக ஒரு நாள் அடையாளமாக வேலை நிறுத்தம் செய்து விட்டால் கூட அவர்களுக்கு போனஸே கிடையாது என்று சொல்வது அபட்டமான தொழிலாளர் விரோத போக்கு என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 15] [திரு. அ. ரகுமான்கான்]

கட்டிடத் தொழிலாளர்கள், பாவம், ஏழைகள். மீனவர்கள், கடலிலே மீன் பிடிக்கும்போது இறந்து போனால், பணம் தருவதாக இந்தச் சர்க்கார் சொல்கிறது. அதைப் போல், மீனவர்கள் மட்டுமல்லாமல், மரம் ஏறுகிறவர்கள் இறந்து போனால், அவர்கள் குடும்பம் தெருவில் நிற்கக் கூடாது என்பதற்காகச் சர்க்கார் பணம் கொடுப்பதாகச் சொல்கிறது. அதே நேரத்திலே கட்டிடத் தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக, வேலை செய்கின்றபொழுது, ஏழை கொத்தனார்கள் கட்டிடத் தொழிலாளர்கள் இறந்து போனால் அந்தக் குடும்பத்திற்கு ரூ. 10,000 கேட்டால் பண வசதியில்லையென்று சொல்லி, அவர்கள் மீது வழக்கு, அவர்கள் மீது சிறை. அதைச் சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகப் பார்க்கிறார்களே தவிர, நியாயம் கிடைப்பதாக இல்லை.

ஆனால், அதே நேரத்திலே ஒரு பாத யாத்திரை கிராமப்புறத்து மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்கப் போகிறேன் என்று முதலமைச்சர் அறிவித்துவிட்டு, மக்களுடைய வரிப் பணத்திலே ரூ. 75 இலட்சத்துக்கு ஹெலிகாப்டர் வாங்கி விட்டு கேட்டால், சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதைப் பயன்படுத்துவேன். தவறாகப் கருதவேண்டாம் என்று விளக்கம் கொடுத்து விட்டு, தொழிலாளர் சமுதாயத்தினருக்கு, எதிராகக் கூட, கொத்தனார்களுக்கு எதிராகக் கூட இந்த ஒரு யுத்தப் பிரகடனம் செய்திருப்பது முறையானதுதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, கான்ட்ராக்ட் ஒழிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு சொல்கிறது. ஆனால், அதே நேரத்தில் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே— இன்றைக்கு அத்துறை அமைச்சர் அவர்கள் கூட இருக்கிறார்கள்— அந்த கான்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படாமல் ஊழலுக்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

15—7—1981 ஆம் தேதி அன்று ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்கிறீர்கள் என்றால், ஏறக்குறைய ரூ. 60,000-க்கு மேலே—நான் ரஃபாகச் சொல்கிறேன். கேபிள் பதிப்பிக்க கான்ட்ராக்ட் விடப்படிருக்கிறது. அதை அங்கே மின்சார இலாகாவிலே இருக்கிற ஊழியர்கள் செய்யலாம்; தினக்கூலி ரூ. 8 வீதம் இரண்டு பேர் செய்தால் ரூ. 16 தான் ஆகும். ஆனால் அந்த வேலையை கான்ட்ராக்டர்கள் செய்தால் ரூ. 50 கேட்கிறார்கள். அங்கே ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வேண்டும்; வேறு வேலை பளு கூட இல்லை. நான் கேட்கிறேன். நீங்கள் ஏன் தனிப்பட்ட முறையிலே வெளியிலே இருக்கக்கூடிய நபருக்கு எதற்காக விடுகிறீர்கள்? இது என்ன முறை? வாய்ப்பிருந்தும்

கூட உள்ளே இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு வாய்ப்புக்
கொடுக்காமல், மின்சார இலாகாவிலே இருக்கக்கூடியவர்
களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் வெளியே இருப்பவர்களுக்குக்
கொடுப்பது, கொள்ளை அடிப்பதற்குக் கதவுகளைத் திறந்து
விடுவதாகும் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். காமராஜர் சாலையிலே அந்த
கேபிள் வேலை நடப்பதற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்
கிறது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மஸ்டர் ரோல் ஊழலிலே பார்த்தசாரதி,
சந்திரசேகரன் என்ற கார்ப்பரேஷன் ஊழியர்கள் கைது செய்யப்
பட்டு, நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டார்கள்.
ஆனால், அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்க மறுக்கிறீர்கள்.
அவர்களை பர்மனென்ட்டாக்க இந்த கார்ப்பரேஷன் மறுக்கிறது,
ஆனால், அப்ரூவர் 7 பேர்—அப்ரூவர் என்று சொன்னால் என்ன
பொருள்? உடந்தையாக இருந்தவர்; சட்டப்படி தண்டனை
பெறாமல் இருக்கலாம். ஆனால் உடந்தையாக இருந்தவர்—
அவர்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், அவர்
களோடு சேர்ந்து இன்னொரு 20 அதிகாரிகளை, அத்தனை
பேர்களையும் ரெகுலரைஸ் செய்து, அவர்கள் கேஸிலே
சஸ்பெண்ட் செய்த காலத்தை நீங்கள் லீவ் பிரியடாகக் கருதி,
பாக் வேஜஸ் எல்லாம் கொடுத்திருக்கிறீர்களே, அதிகாரிக்கு ஒரு
நீதி, ஏழைத் தொழிலாளிக்கு ஒரு நீதி என்ற இந்த இரட்டைப்
போக்கு சரிதானா? தொழிலாளர் நலம் பேசுகிற சர்க்காருக்கு
இது சரிதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப் போலவே, கவர்ன்மென்ட் பிரஸ்லே இன்றைக்கு
அரசு அச்சுப் பணியில் ''ஜோதி'' என்ற ஒரு இயந்திரம்.
அந்த இயந்திரத்தினுடைய விலை ரூ. 65,000. ஆனால்,
ரூ. 90,000-க்கு வாங்குகிறீர்கள். நியாயம்தானா? அதே
போல், பொருத்தப்பட்ட அந்த ஜோதி இயந்திரம் முழுவதும்
ரிப்பேர் ஆகிறது. அடுத்து, 167 எண் உள்ள இயந்திரம்
அங்கே இருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய பல பகுதிகளை
எல்லாம் கழட்டி, இதிலே போய் பிட் அப் செய்கிறார்கள்
அது மட்டுமல்ல, ரூ. 65,000 பழுதுபார்ப்பதற்காக செல
வழிக்கிறார்கள். தொழிலாளி போனஸ் கேட்டால், பணத்துக்கு
எங்கே போவது என்று சொல்கிறீர்கள். கூலி உயர்வு
கேட்டால், வருத்தப்படுகிறீர்கள். ஆனால், இப்படியெல்லாம்
பல தவறுகள் அங்கே நடைபெறுகின்றன.

(பிற்பகல் 1-20)

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் ஞாபகப்படுத்த விரும்பு
கிறேன். பரிசுச் சீட்டு நம்பர் போடும் ரோட்டரி நம்பர்
**பாக்ஸ்** 8 மிஸ் ஆகியிருக்கிறது. 8 பரிசு சீட்டு இயந்திரங்களை





அரசு அச்சகத்திலே இருந்து எங்கே போனது என்று தெரிய வில்லை. ஆனால் இன்றைக்கு அதற்குப் பொறுப்பான அதிகாரி கள் கைது செய்யப்படவில்லை.......

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களை இந்த மானியத்தில் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். அரசு அச்சகம் என்கிறார், மின்வாரியம் என்கிறார். அதிலே ஒரு வேளை அவர் கட்சியில் வாய்ப்புக் கொடுக்காமல் விட்டு விட்டார்கள் என்றோ என்னவோ எனக்குத் தெரியவில்லை; தயவு செய்து இந்த மானியத்தில் பேசும்படி கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** Ignorance of information is no excuse நான் பேசுவதற்கு முன்பாகவே அமைச்சர் இராகவானந்தம் அவர்களைச் சந்தித்து-தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை எங்கெல்லாம் இருக்கின்றதோ, தமிழக எல்லைக் குள், தமிழக சர்க்காருக்குள், அவைகளை நீங்கள் தாராளமாகப் பேசலாம். நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். சரக்கு என்னிடத்தில் ஏராளமாக இருக்கின்றது என்று அவர் கொடுத்த உறுதியின் அடிப்படையிலேதான் பிரச்சினைக்கு வெளியே போகாமல், தொழிலாளர் நலன் எந்தத் துறை யிலே இருந்தாலும் சரி என்ற அடிப்படையில் பேசுகிறேன்.

அங்கே தொழிலாளர்களை நீங்கள் என்ன செய்தீர்கள். அந்த மெஷின்கள் காணாமல் போய்விடுகிறது. 9 தொழிலா ளர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரி திருமலை என்பவர் இன்றைக்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டு பழையபடியும் அந்தப் பொறுப்புக்கே நியமிக்கப்பட்டிருக்கிறார் கள். அதைப்போலவே இன்னொரு அதிகாரி லட்மிநாராயண ரெட்டியார் என்ற அதிகாரி உடனடியாக மதுரைக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார். அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை இல்லை. 9 ஊழியர்கள் மீது அந்த மிஷின்கள் மிஸ் ஆகிப்போனதற்காக அவர்களைப் பழிவாங்கி இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்பதைத். தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு தகவலையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஹவுசிங்போர்டு சம்பந்தமாக நம்முடைய அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். புஷ்பவனம், நுங்கம்பாக்கம் குடிசைமாற்று வாரியம். இதிலே வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. முதல் முறை ஒதுக்கப்படுகின்றது. இரண்டாம் முறை ஒதுக்கப்படுகிறது, மூன்றாம் முறை ஒக்கப்படுகிறது, நான்காம் முறையும் ஒதுக்கப்படுகின்றன. மாற்றி மாற்றி ஒதுக்குகிறார்கள். என்ன காரணம் உங்கள்

கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, நீங்கள் விரும்புகிறவர்களுக்கு இதிலே இடம் கொடுக்க முடியவில்லை என்பதற்காக இப்படி செய்கிறீர்கள். இவைகளை எல்லாம் தேதிவாரியாக தகவல் வைத்திருக்கிறேன். பெயர்களை வேண்டுமானால் சொல்கிறேன். இராமகிருஷ்ணன், அவ்வை சண்முகம் சாலை இந்த இடத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்; எம். ஆர். இராசேந்திரன்; 16 ரங்கன் வீதி, அந்த இடத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர், காசிம் அனிபா, 26, வி.வி. கோவில் தெரு, வெள்ளாள தேனாம்பேட்டை, இந்த இடத்திற்குச் சம்மந்தம் இல்லாதவர், அம்மணி அம்மாள், 10 காமராஜபுரம், நுங்கம் பாக்கம், அந்த இடத்திற்கு சம்பந்தம் இல்லாதவர். இவர்களுக்கு எல்லாம் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால் குடிசை மாற்றுவாரியத்தில் வீடு ஒதுக்கீடு யார் செய்வது என்று சொன்னால் அசிஸ்டென்ட் எக்சிக்யூடிவ் இன்ஜினியர், ஸ்லம் கிளியரன்ஸ்போர்டு சப்-டிவிசன்தான். ஆனால் என்னிடத்திலே ஒன்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே யார் கையெழுத்து போட்டிருக்கிறார் என்று பார்த்தால், ரத்தத்தின் ரத்தம், அகில இந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தைச சேர்ந்தவர்கள், கையெழுத்துப் போட்டு இருக்கிறார்கள். இது என்ன நியாயம்? நாட்டிலே சந்தேகம் ஏற்படுகிறது. மார்க்குப் பட்டியலில் ஊழல், பஸ் டிக்கட்டிலே கள்ள டிக்கட், அதுபோல் இதிலும் தவறுகள் இருக்கக் கூடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இவர் ஒரு ஆளுக்கு உத்தரவு போடுகிறார். ஆனால் குடிசைமாற்று வாரியத்தில் இருக்கின்ற அந்த அதிகாரி அந்த வீட்டை இன்னொருவருக்குப் போடுகிறார். இந்த வீட்டை இவர் போடுகிறார், அவர் போடுகிற வீடு இன்னொருவருக்கு. இப்படி இரட்டை நிலை ஆட்சி வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததைப்போல, இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எக்சிகூடிவ் இன்ஜினியர்களாகவும் மாறி ஒரு பக்கத்திலே அவர்கள் உத்தரவு போடுகிறார்கள். இன்னொரு பக்கத்திலே அதிகாரிகள் உத்தரவு போடுகிறார்கள்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினை. எம்.ஐ.சி., எச்.ஐ.ஜி. அண்ணாநகர், பெசன்ட் நகர், கலைஞர் நகர் ஆகிய பகுதிகளில் வீடு கட்டக் கூடிய திட்டம் உள்ளது. செல்ப் பைனான்சிங் ஸ்கீம் என்று அதற்குப் பெயர். 100-க்கு 25 சதவிகிதம் முன் பணம் கட்ட வேண்டும். வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, நகையை அடகு வைத்து, கஷ்டப்பப்பட்டு, சிரமபட்டு, சென்னையிலே வீடு கட்ட வேண்டும் என்று பணம் கட்டி விட்டார்கள். அந்த செல்ப் பைனான்சிங் ஸ்கீமிலே. ஆனால் இன்றைக்கு என்னவென்றால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது. 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் பணம் கட்டியவர்களுக்கு எல்லாம் திருப்பி கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன் ஒரு





ரியல் எஸ்டேட்காரன் இப்படிப்பட்ட தவறு செய்தால் செக்ஷன் 420 போட்டு நடவடிக்கை போடுவீர்கள். இப்போது சர்க்காரே அந்தத் தப்பைச் செய்திருக்கிறது. என்ன வழக்குப் போடப் போகிறீர்கள். நான் ஏதோ கொஞ்சம் கோபமாக பேசினாலும் நியாயத்தைக் கேட்க விரும்புகிறேன்.

பெருமாள் என்ற ஒரு நபர் ஆதி திராவிடர், மதுரையிலே சாத்தமங்கலத்திலே அவர் ஒரு அப்ளிகேஷன் போடுகிறார். எங்கே போடுகிறார் என்றால் வீட்டுவசதிப் பிரிவு அண்ணாநகர் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கான 64 எச்.ஐ.ஜி. வீடுகளுக்கு இதிலே 7 வீடுகள் ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்க வேண்டும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுக்கப்படவில்லை. அந்த 64 வீடுகளில், 31-வது வீடு சரன்டர் ஆனது. அந்த, சரன்டர் ஆன வீட்டுக்குப் பெருமாள் என்ற அரிசன் அப்ளிகேஷன் போடுகிறார். முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் செய்து விட்டார். டிபாசிட் மணி, மற்ற தொகை எல்லாம் கட்டி விட்டார். ஆனால் அந்த எச்.ஐ.ஜி. 31ஆம் நம்பர் வீட்டுக்கு அப்ளை செய்தும்கூட பெருமாள் என்ற அரிசன வகுப்பைச் சேர்ந்தவருக்குக் கிடைக்கவில்லை. அவருக்கு சென்னை வீட்டுவசதி வாரியத்திலிருந்து ஒரு கடிதம் வருகிறது. லாட் போட்டுத்தான் அந்த 31-ஆம் நம்பர் வீட்டைக் கொடுக்கப் போகிறோம் என்று வீட்டு வசதி வாரியத்திலிருந்து அந்த அரிசன் வகுப்பைச் சேர்ந்த பெருமாளுக்கு கடிதம் வருகிறது. ஆனால் அந்த வீடு யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்றால் அப்ளிகேஷன் கொடுக்காத மேலூரில் இருக்கிற உண்ணாமலை அம்மாள் என்பவருக்குக் கொடுக்கப்படுகிறது. அந்த அம்மாளுக்குக் கொடுக்க சொல்லி உத்தரவு போடப்படுகிறது.

இதில் இருக்கிற வேடிக்கை என்னவென்றால் ஒரு வீடு சரண்டர் ஆகிறது என்றால் அந்த விட்டுக்கு முறைப்படி அப்ளிகேஷன் கேட்டு, வாங்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல், இங்கிருந்து உத்தரவு போகிறது. என்னவென்று? அந்த 31ஆம் நம்பர் வீட்டை மட்டும் நாங்கள் அலாட் செய்வோம்; அலாட்மென்ட் கமிட்டி அந்த அட்டை கொடுக்காது என்று சொல்லி, அலாட் செய்யப்படுகிறது அந்த உண்ணாமலை அம்மாளுக்கு. ஆகையால் இது விதிமுறைகளை மீறி தரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து, அமைச்சர் அவர்கள் என்னிடம் நேரில் பேசும்போது 'என்னிடம் நிறைய சரக்கு இருக்கிறது' என்று சொன்னார்கள்.; அவருக்கு

" சரக்கு இருந்தால் அவிழ்த்துவிடு,
இல்லை சலாம்போட்டு ஓடிவிடு "

என்ற ஒரு சினிமாப் பாட்டை நினைவுபடுத்தி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1982 மார்ச் 15

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளிலும் 8 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தொழிலாளர் நல மானியத்தில் சூடு இருக்கும் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை என்பதிலிருந்தே மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர் நலம் மிகவும் சிறப்பாக பாதுகாக்கப்படுகிறது என்பது உறுதியாகிறது.

நான் திரு. ரமணி அவர்களிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்கு கோபமான வார்த்தைகளோ அல்லது குற்றச்சாட்டுக்களோ வரவில்லை. காரணம் அதற்கு இடமில்லாததுதான்.

திரு. ரகுமான்கான் அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகள் பற்றி நிரம்ப பேசுவார்கள் என்று எதிர் பார்த்தேன் ; என்னிடமும் சொல்லியிருந்தார்கள். அவர் அங்கிருந்து குடிசைமாற்று வாரியத்திற்குப் போய் விட்டார். காரணம் அவர் தலைவராக இருக்கிற சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் சில கோரிக்கைகளைக் கேட்டு. அதிலே முக்கியமான கோரிக்கை வேலை செய்யாத நாளைக்கும் சம்பளம் வேண்டும் என்பது. இதை எத்தனை பேர் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை உங்களுடைய முடிவுக்கே விட்டு விடுகிறேன். வேலை செய்யவில்லை என்றால் '' நோ ஓர்க், நோ பே ''. ஹவுசிங் போர்டிலோ அல்லது ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டிலோ..........

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார்கள். வெட்டரினரி காலேஜில் அப்படி இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏதாவது சந்தேகம் என்றால் கடைசியில் கேளுங்கள் இடையில் வேண்டாம். பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் இன்னும் சிறிது நேரம் நீடிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு சுருக்கமாக முடித்துக் கொள்ள முடியும். இருந்தாலும் என்னுடைய பதில் வேண்டும் என்று கேட்பதால் பதில் சொல்கிறேன். திரு. இரா. கருப்பையா அவர்கள் பேசி இருக்கிறார்கள். திரு. ரமணி அவர்கள் பேசி இருக்கிறார்கள். முன்பு நாங்கள் எல்லாம் ஒன்றாகப் போராடினோம். ஆகவே அண்ணன் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.



1982 மார்ச் 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கி
கிறேன். அந்த நான்கு நாட்களுக்காக அவர்கள்மீது எந்தவித
மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் அவர்கள்
வேலை செய்யவில்லை அதனால் ஊதியம் தரவில்லை. வேலை
செய்யாமல் ஊதியம் தர வேண்டும் என்பதை யார் ஏற்றுக்
கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்
கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
I want to be clear about that. 'No postponement of increment'
நோட்டீஸ் கொடுக்கப்படாமல் சட்ட விரோதமான வேலை
நிறுத்தம் செய்தார்கள். ஆகவே அவர்கள்மீது நடவடிக்கை
எடுத்து 8 நாள் வரையிலே ஊதியத்தை முடக்கலாம் என்பது
ஆக்டிலே இருக்கின்றது. ஆனால் நாங்கள் அப்படிச் செய்ய
வில்லை. டோக்கனாக ஒருநாள் ஊதியத்தைகூட பிடிக்கவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதான் புரட்சித்
தலைவர் ஆட்சியின் சிறப்பு என்பதையும் தெரிவித்துக் கொள்கி
றேன். (குறுக்கீடு) இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
திரு. இளையபெருமாள் அவர்களும், ஐந்தாறு தினங்களுக்கு
முன்னால் பேசிய திரு. மூர்த்தி போன்றவர்களும் ஏழை எளியவர்
களுக்குக் கிராமப்புறங்களில் வீடு கட்டித் தருவதுபற்றிச்
சொன்னார்கள். நான் இப்போது சவாலாகச் சொல்ல விரும்ப
வில்லை. இதுவரையில் 1978லேயிருந்து 77,302 வீடுகள் கட்டப்
பட்டிருக்கின்றன. இதிலே 58,994 வீடுகள் ஆதி திராவிடர்களுக்
காகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே 75 சதவீதம் மேலே
போய் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நீங்கள் தெரிந்து
கொள்ள வேண்டும் என்பது எங்களுடைய ஆசையாகும். இந்த
ஆண்டு 1981–82-லே 11,632 வீடுகள். அதிலே 10,115 வீடுகள்
ஆதி திராவிடர்களுக்கு. I can say wit certain amount of pride and
pleasure. இந்த 33,34 ஆண்டு காலத்திலே யார்யாரோ ஆட்சி செய்
திருக்கிறார்கள். எல்லோரும் ஆண்டிருக்கிறார்கள். பெரியவர்கள்
எல்லாம் ஆண்டிருக்கிறார்கள். ஆனால் ஆதி திராவிட மக்களுக்
காக இவ்வளவு வீடுகள் இனிமேல் நீங்கள் தப்பித் தவறி ஆட்சிக்கு
வந்தால்கூட கட்ட முடியாது. அவ்வளவு வீடுகள் கட்டி இருக்
கிறோம்......(குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருந்தால்
எழுப்பப்பட்ட பிரச்னைகளுக்கு எல்லாம் பதில் சொல்லலாம்.
இதில் 3,200 ரூபாய் தருகிறோம். ஆதி திராவிட மக்களுக்காக
1,000 ரூபாய் மானியமாகத் தரப்படுகிறது. அவர்களுக்கு வட்டி
இல்லை. அதுமட்டுமல்ல. மாண்புமிகு திரு. மூர்த்தி அவர்கள்
சொல்லும்போது உடனுக்குடன் பணம் கொடுக்க மாட்டேன்
என்று சொல்கிறார்கள் என்று சொன்னார். லோன் சாங்ஷன்
ஆனவுடனே 30 சதவீதம் கொடுக்கப்படுகின்றன. பேஸ்மென்ட்
லெவலுக்கு வந்தபிறகு 40 சதவீதம் தரப்படுகின்றது. முதலிலேல்
960 ரூபாய். அடுத்தது 1,280 ரூபாய். ரூப்ஃலெவல் வந்த
வுடனே 960 ரூபாய் கொடுத்து விடுகிறோம் என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 15

இலக்கினை அடைய முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது கோவாப்பரேடிவ் ஆண்டு. ஜூலையிலிருந்து ஜூன் வரையில். எனவே 40,000க்குள் கட்டி முடிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அத்தோடு, அரிசன மக்களோடு, தொடர்ந்து, அவர்களை ஒட்டினாற்போல் வீடு கட்டிக் கொள்கிறோம், வாழ்கிறோம் என்று சொல்லுகிற அரிசன மக்கள் அல்லாதோர்களுக்கும் ஆயிரம் ரூபாய் மானியம் உண்டு. அந்த அரிசன மக்கள் அல்லாதோருக்கு வட்டிக் கூட, 63/4, 83/4, 91/4 என்று எங்கேயிருந்து கடன் வாங்குகிறோமோ அதற்கு ஏற்றாற்போல்தான் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பொறுத்தவரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இதற்கு முன்னாலே இருந்தவர்கள் எவ்வளவு வீடுகளைக் கட்டி இருந்தார்களோ, அந்த டெம்போவைத்தான் எங்களால் கடைபிடித்து வர முடிகிறது. காரணம், முன்பெல்லாம் 1971லிருந்து 1975–76 வரையில் குடிசை மாற்று வாரியத்தில் வீடு ஒன்று கட்டுவதற்கு 7 ஆயிரத்திலிருந்து 8 ஆயிரம் ரூபாய் வரைதான் ஆகியது. ஆனால் இப்போது 15லிருந்து 16 ஆயிரம் வரை ஆகிறது. எனவே அதைப் பொறுத்தவரையில் அந்த டெம்போவையே வைத்துக் கட்டிக் கொண்டிருப்பதற்கு முயற்சி செய்துக் கொண்டிருக்கிறோம். 'We are concentrating on slum improvement.' அதிகத் தொகையை குடிசை அபிவிருத்தித் திட்டத்தில் நாங்கள் செலவு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் வீட்டுமனைகள் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது நாங்கள் வீட்டு மனைகளைச் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக வங்கியின் கீழ், மேம்படுத்தப் பட்ட வீட்டு மனை நிலங்களை, அங்கே குடியிருப்பவர்களுக்கே, கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அதுபற்றிய விவரங்களை கேள்வி மூலம் அல்லது மற்றவைகளின் மூலம் பிறகு பெற்றுக் கொள்ளலாம். அதைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதுதான் முக்கியம்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் 1961-லேயிருந்து 1971 வரையில் 43,109 வீடுகளைத்தான் கட்டியிருந்தார்கள். ஆனால் இந்த ஆட்சிக் காலத்தில்—4 ஆண்டுகளில் நடுவில் எங்களுக்கு சர்வீஸ் பிரேக் வந்தது — அதற்கு மாண்புமிகு இளையபெருமாள் போன்றவர்கள் காரணமாக இருந்தார்கள் என்று சொல்ல மாட்டேன் — அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய



1982 மார்ச் 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

கட்சி காரணமாக இருந்திருக்கக்கூடும். இந்த 4 ஆண்டுகளில் 39,313 வீடுகளைக் கட்டியிருக்கிறோம். 1961லேயிருந்து 1971 வரையில் 10 ஆண்டுக்காலத்தில் 43,109 வீடுகளைக் கட்டினார்கள், ஆனால் இந்த 4 ஆண்டுக் காலத்திலேயே 39,313 வீடுகளைக் கட்டியிருக்கிறோம், ஆகவே நிறைய வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். என்ன காரணம் என்றால், வாரியத்தின் மூலமாக நாங்கள் கட்டும் வீடுகள் சதுர அடிக்கு 150 ரூபாய் ஆகிறது என்று சொன்னால், தனியார்கள் கட்டும் வீடுகள் 350 ரூபாய் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே இப்படி அதிக அளவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற காரணத்தால், வெளியிலுள்ள வீடுகளின் விற்பனை விலை குறைகிறது. இதனாலேயே சென்னையைச் சுற்றி இருக்கும் நிலங்களை நிறைய வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அரசே அதிக அளவில் நிறைய நிலங்களை வாங்குகிற காரணத்தால், வீட்டு மனையின் விலையும் குறைகிறது. விலையைச் சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். சிலருக்கு அதிர்ச்சி கூட ஏற்பட்டு விடும்.

இங்கே அண்ணாசாலையில் ஒரு கிரவுண்ட்—60-க்கு 40—அதாவது 2,400 சதுர அடி உள்ள நிலம் 7 லட்சம் ரூபாய்க்கு விற்கிறது. அதுவே கிடைக்கவில்லை. அதற்கு அப்புறம் செல்லச் செல்ல 80,000 ரூபாய், 60,000 ரூபாய், 40,000 ரூபாய் என்று வருகிறது. சில நேரங்களில் ஆக்ஷனில் போட்டு விடுவதற்குக் காரணமே ஒரு கிரவுண்ட் எங்களிடம் இருக்கையில் அதை யாருக்குக் கொடுப்பது என்று தகராறு ஏற்பட்டு, கமர்சியல் பிளாட்டாக இருந்துவிட்டால், ஏலத்தில் விட்டு விடுகிறோம். இதனால் 1 கிரவுண்டில் எங்களுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது.

அருமை நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் நல்ல இளைஞர். என்னோடு அவர் நிறையநேரம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பேசியவர். இன்னும் மரியாதையோடு இருப்பவர். பேச எழுந்திருக்கும்போது தான் சற்று வேகமாகப் பேசுவாரே தவிர, அதை பேசி முடித்துவிட்ட பிறகு, வயதிற்குத் தகுந்த மரியாதையை காண்பிப்பது அவருடைய பண்பாடு. அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போனஸ் ஆக்ட் 36-ல் ஒரு விதி விலக்கு கொடுத்து ஹவுசிங் போர்டு தொழிலாளர்களுக்கு போனஸ் இல்லை என்று கோப்பிலேயே எழுதியிருக்கிறார்கள். ஆனால் ஹவுசிங் போர்டு தொழிலாளர்கள் போனஸ் கேட்டார்கள். இவர்கள் கோப்பிலே என்ன எழுதினார்கள் என்றால், 'Fxemption is given under section 36 of the Bonus Act.' என்று அவர்களுக்குப் போனஸ் கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன்.—ஆனால் அகில இந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகுதான் விதிவிலக்கு

கொடுக்க முடியாது என்று எழுதி, அவர்களுக்கும் போனஸ் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைச் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்ன்மெண்ட் பிரஸ் என்று ஒன்று இருப்பது அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கே போனஸ் கொடுப்பார்களா ? அப்படி அவர்கள் அறிவிப்புச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன் ?

[பிற்பகல் 1-40]

**மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் :** திரு. ரகுமான்கான் ஒரு சிறந்த வக்கீலாக வரவேண்டும் என்று நான் ஆசைப்பட்டிருக்கிறேன். எந்தளவிற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரியாது. அவர்கள் நன்கு வளரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கவர்ன்மெணட் ப்ரஸ் என்று வந்து விட்டதால் போனஸ் கிடையாது. 1965 ஆம் ஆண்டு போனஸ் சட்டத்தில் 'In any concern run direc ly by the Government Department, the workers are not enti led to bonus. என்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. அ,. ரகுமான்கான் :** அரசு நேரடியாக நடத்துவதால் போனஸ் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இங்கிருக்கக்கூடிய குடிநீர் வடிகால் வாரியத்தில் அங்குள்ள வொர்க்கேர்ஸ்க்கு..............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதெல்லாம் பப்ளிக் அண்டர்டேக்கிங்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ரெயில்வே வொர்க்கர்ஸ், போஸ்டல் வொர்கேர்ஸ்க்குக் கிடையாது. இவையெல்லாம் டிப்பார்ட்மெட்டால் ' ரன்' செய்யப்படுபவை. இது மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட 1965 போனஸ் ஆக்டில் இருக்கிறது. அதைத் திருத்துங்கள். நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று சொல்லவில்லை. கொடுக்க அங்கே வழி இல்லை. அதே மாதிரி தோட்டத் தொழிலாளர்களுக்கு, கவர்ன்மென்ட் நடத்தும் தொழிற்சாலையில் இருப்பவர்களுக்கு கிடையாது. ஆனால் வீட்டுவசதி வாரியத்தில் இருப்பவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். அதுதான் பாயின்ட். ஆனால் நீங்கள் கொடுக்கவில்லை. என்ன காரணம் ? விதிவிலக்கு கொடுத்து விட்டார்கள், 1976-ல். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் விதிவிலக்கு கொடுக்கமுடியாது என்று, எந்த நிறுவனமாக இருந்தாலும் 1977-லிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி போனஸ் ஆக்டி





லிருந்து விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டால் புரட்சித் தலைவர் ஆட்சியில் கொடுத்ததில்லை, போனஸ் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்.) இது டஃப் சப்ஜக்ட் அப்புறம் புரிந்து கொள்ளலாம். (குறுக்கீடுகள்).

வீட்டுவசதி வாரியத்திலுள்ள தொழிலாளர்களுக்கு 36 செக்ஷன்படி கொடுக்க வேண்டியதில்லை என்று விதிவிலக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கோப்பில் எழுதியிருந்தார்கள். அதை ரத்து செய்து போனஸ் கொடுக்க வேண்டுமெனக் கூறியுள்ளோம்.

அடுத்தபடியாக, ஸ்கிரீனிங் கமிட்டி பற்றிச் சொன்னார்கள். இந்தக் கமிட்டி ஏற்பட்டதே 1972-ல்தான் இதை மாண்புமிகு ரகுமான்கான் கவனிக்கவேண்டும். இந்தக் கமிட்டி ஏற்பட்டது 1972-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். இந்தத் தகவலை மட்டும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது எதிர்பார்த்த பயன் இல்லை என்று சொன்னார்கள். காரணம், ஆர்கனைஸ்ட் லேபர் என்று சொல்லக்கூடிய தொழிற்சாலைகளுக்குள் வரக்கூடிய, தொழிற் சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், போன்றவற்றில் வரக்கூடியது. 7,90,275 பேர்கள். இதில் 13-ம் தேதி வரை, நேற்றுமுன் தினம் வரை வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள். 2,521 பேர்கள்தான். ஏனென்றால் வேலை நிறுத்தம் மூலமாக சாதிப்பதை விட பேச்சு வார்த்தை மூலமாக பேசி பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் எல்லோருக்கும் வந்திருக்கிறது என்பதைக் காண நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். நான்காண்டு காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எந்த முயற்சியில் அதிகமாக ஈடுபட்டதோ அந்த முயற்சியில் வெற்றிபெற்றிருக்கிறது என்பதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்று சொன்னால், திரு. ரமணி போன்றவர்கள் ஒரு பொலிடிகல் பிலாசபியிலே வளர்ந்திருக்கிறார்கள். வளர்ந்து கொண்டு இருப்பவர்கள். அவர்கள் பிலாசபியிலே ஸ்டாடர்ஜி வேறு. ஏற்கனவே இருக்கின்ற அந்த டாக்டிக்சை மாற்றி, மாடர்ன் டாக்டிக்ஸ்-க்கு வரவேண்டுமென்று சொன்னால், கொஞ்சம் சிரமமாக இருக்கும். அதிலே கொஞ்சம் மாற்றம் தேவை என்று இந்த ஆட்சி சொல்வதிலே நியாயம் இருக்கிறது. ''You should equip yourself well'. நிரம்பப் படியுங்கள் ; நிரம்ப தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் பேச்சு வார்த்தைக்குப் போகும்போது, 'You should corner the manage-

ment by intelligent argument'' புத்திசாலியான, திறமையான பேச்சு வார்த்தைகள் மூலம், மானேஜ்மென்டை மடக்கி, பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளுவதில் முயற்சி செய்யுங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னார்கள் தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், தன் உயிரை விடுவேன் என்று சொன்னார்கள். நீங்கள் உயிரை விட்டால், நிச்சயமாக நான் அதைத் தெரிந்தவுடன், என் உயிரை விட்டு விடுவேன். தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையிலே இந்த அரசு நடந்து, அதற்காக உங்கள் உயிர் போகும் என்றால், அதைத் தெரிந்தவுடன் நானே உயிரை விட்டுவிடத் தயாராகயிருக்கிறேன். காரணம், நாம் இருவரும் ஒன்றாக இருந்து போராட்டம் செய்தவர்கள். இந்த ஆட்சியில் (குறுக்கீடு) உயிரை விட மாட்டோம் என்பது எங்களுக்குத் தெரியும்; அதனால் தான் நான் சொல்கிறேன். அந்த அவசியம் வராது.

இந்த அரசு நடந்து கொண்டிருக்கின்ற முறையைப் பார்த்தால், எல்லோரும் படிக்க வேண்டும். எங்கள் தலைவர் அதைத் தான் சொல்வார், எல்லோரும் நிறையப் படிக்க வேண்டும்; நான் தான் படிக்கவில்லை மற்றவர்களைப் படிக்க வைப்பேன் என்கிறார். அதையொட்டித் தான் '' உழைப்பவர் உலகம் '' நடத்துகிறோம். Tamil Nadu Institute of Labour S udies. இதிலே 16, 17 பாடங்களைச் சொல்லித் தருகிறார்கள். அதாவது தொழிலாளர்கள், தொழிலாளர் தலைவர்கள், மானேஜ்மென்டைச் சேர்ந்தவர்கள் தொழில் உறவிலே எப்படி இருக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, அதற்காக ஆண்டுக்கு 3.9 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். இந்த மாதிரி நடத்துவதன் மூலமாக, தொழிற் சங்கத் தலைவர்களிடத்திலே விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்ந்து இருக்க வேண்டும்.

இப்போது யார் ஆட்சியிலே இருக்கிறார்கள்? சார் மன்னன் ஆண்ட காலத்திலே இருக்கின்ற போராட்டத்தை இப்போது ரஷ்யா நடத்திக் கொண்டிருக்கிறதா? அதேமாதிரி, டில்லியிலே ஏதாவது வேண்டுமென்றால், இப்போது போராட்டம் நடத்தத் தேவையில்லை. பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் போராட்டம் நடத்தத் தேவையில்லை. அதிலே மாற்றம் வேண்டும். இன்றைக்கு டெல்லி அமைச்சர்களோடு உடனே பேசமுடியும். பிரச்னையைப் பற்றி பேசி தீர்ப்பதற்கு வழியிருக்கிறது. எனவே, 40, 50 ஆண்டுகளுக்கு முன் இருந்த ஒரு முறையைக் கையாள்வது சரியல்ல. இப்போது அதிலே ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. அதுதான், It is only a foed for thought and for rethinking.

மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதைத் தான் நாங்கள் சொல்கிறோம். இன்றைக்கு எல்லாவற்றையும் பார்க்கும்போது மாற்றம் வேண்டியிருக்கிறது. பழைய பாதையிலே போகக்



கூடாது. ஒருவரைப் பார்த்தால், அவர் பெண் பிள்ளையா, ஆண் பிள்ளையா என்பது தெரியவில்லை: தெரிய மாட்டேன் என்கிறது. நடையிலே மாத்திரமல்ல; உடையிலேயும் தெரியவில்லை. இருவரும் நடப்பதும் நாட்டிய நடைபோல் இருக்கிறது. ' ஹேர் ' ஸ்டைலைப் பார்க்கும் போதும், அது ஆணா, பெண்ணா என்று தெரியவில்லை.

எனவே, அந்தமாற்றங்கள் எல்லாம் தேவை என்று ஏற்படுகின்றபோது, தொழிலாளர் போராட்ட முறையிலும் ஏன் மாற்றம் ஏற்படக் கூடாது? 40 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த முறையை இப்போதும் பின்பற்ற வேண்டுமா என்பதை நாங்கள் சிந்திக்கச் சொல்கிறோம். வேலை நிறுத்தத்தை விட்டு விடுங்கள் என்று சொல்லவில்லை. மறு பரிசீலனை செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன். அதைத்தான், ஆங்கிலத்திலே It is cnly a food for thought and for rethinking. என்று சொன்னேன். மறு பரிசீலனை செய்யுங்கள் என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வழக்கு மன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த குலசேகரன் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைச் சட்டமாக்க வேண்டுமென்று டெல்லிக்கு அனுப்பினோம். டெல்லியிலே என்ன சொல்லுகிறார்கள் என்றால், நேரடியாக வழக்கு மன்றத்திற்குப் போவதை அனுமதிக்க முடியாது. கன்சீலியேஷனுக்கு வராதவர்களை சம்மன் செய்ய உள்ள சட்டத்தை அனுமதி தருகிறோம். இரண்டையும் பிரித்து, தனியாகக் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள் இந்த அரசைப் பொறுத்தவரையில், வேலைநீக்கம் செய்யப்படும் தொழிலாளர் வழக்கு மன்றத்திற்கு நேரடியாக போகவேண்டும் என்று இதே சட்டமன்றத்தில், அந்தச் சட்டத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். டெல்லி அனுமதி தரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். மீண்டும் வலியுறுத்தி கடிதம் எழுதி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல கிராச்சுட்டி ஆக்ட்டிலே ஓராண்டில் 240 நாட்கள் வேலை செய்தால் தான் அவர்களுக்கு கிராச்சுட்டி தர வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பொறுத்தவரையில் இந்த அரசு ஏற்கனவே 30—7—1981-ல் கடிதம் எழுதினோம். மீண்டும் 4, 5 நாட்களுக்கு முன்னாலேயும் எழுதியிருக்கிறோம். அதிலே எக்ஸ்ப்பிளனேஷன் என்ன சொல்கிறார்கள் என்றால்—

(பிற்பகல் 1–50)

In the case of an employee who is no: in uninterruputed service fhr one year, he shall be deemed to be in continuous service, if he has been actually employed by an employer'' 'ஆக்ச்வலி

எம்ப்ளாயிட்' என்று சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது. ஓராண்டில் 240 நாட்கள் வேலை செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டது. அதற்கு பதிலாக என்ன வரவேண்டுமென்று நாம் சொல்கிறோம் என்றால் If he has been in the employment of the employer during the twelve months immedia ly preceding the year for n t less an.. என்று நாங்கள் மாற்றவேண்டுமென்று மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோர்ட்டிற்கு கேஸ்களை ரெபர் செய்யாமல் இருக்கிற விஷயத்திலே அமைச்சர் அவர்கள் சொன்னது, ஒவ்வொரு கேசும் இறுதியாக கோர்ட்டிலேயாவது போய் தீர்ப்பு சொல்லலாமா என்று ஒரு தொழிலாளியோ, தொழிற் சங்கமோ விரும்புமானால் அனுப்பவேண்டுமென்று ஒத்துக்கொண்டு தான் நாமும் இந்த சட்டத்தை இங்கே நிறைவேற்றினோம். மத்திய சர்க்கார் கொண்டு வரட்டும் நமக்கு. அதற்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த கொள்கையை நீங்கள் ஒத்துக்கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் கடைசியாக வரக்கூடிய பல கேஸ்களை ரெபர் பண்ணாமல் மறுக்கிற காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கையாக சட்டத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். அது வருகிற வரையில் இருக்கக்கூடிய முறையையே கையாண்டு வருகிறோம். எனவே எங்களைப் பொறுத்தவரையில் எதை எதை வழக்கு மன்றத்திற்கு அனுப்பவேண்டிய தேவையில்லை என்று கருதுகிறோமோ அதைத்தான் அனுப்பவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி அனுப்பியிருக்கிறார்கள்? நாங்கள் எப்படி அனுப்பியிருக்கிறோம் என்ற ஸ்டாட்டிஸ்டிக்ஸ் கொடுக்க விரும்புகிறேன்.

1971-ல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 461—மறுந்தது 178
1972-ல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 415—மறுத்தது 226
1973-ல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 378—மறுத்தது 304
(குறுக்கீடுகள்)
1974-ல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 417—மறுத்தது 379
1975-ல் வழக்கு மன்றத்திற்கு அனுப்பியது 451—மறுத்தது [illegible]

| | | | |
|---|---|---|---|
| அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அனுப்பியது. | 690 | மறுத்தது | 411 |
| | 722 | ஷை | 454 |
| | 719 | ஷை | 557 |
| | 1936 | ஷை | 855 |
| | 1935 | ஷை | 710 |





மற்ற ஆட்சிகளை ஒப்பிட்டு பார்க்கும்போது நிரம்ப வழக்கு மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் வெற்றி பெற வேண்டுமென்று ஆசைபடுகிறோம். எனவே அவர்கள் நேரடியாக போகவேண்டும் என்பதற்காக வேண்டிய சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம்.

இங்கே குறைந்த பட்ச ஊதியத்தை பற்றி பேசினார்கள். இரண்டு ஆண்டு காலமிருந்தால் அல்லது 50 புள்ளி உயர்ந்து விட்டால் குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி அமைக்கலாமென்று அண்மையிலே டெல்லியிலே கூடிய கூட்டத்திலே முடிவெடுத்திருக்கிறார்கள். இதற்கேற்ப இந்த அரசு நடந்து கொள்ளும் என்பதை சொல்லியாக வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்னாலே விவசாயிகள் தொழிலாளர்கள் குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் தொழிலாளர்கள் பற்றி சொன்னார்கள். அதுவும் 12-ம் தேதி அமலுக்கு வந்து விட்டது. அந்த ரூல்ஸ் விஷயத்தில் ஒருசில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று லா டிபார்ட்மென்ட் சொல்கிறார்கள். பின்னாலே கொண்டு வந்தாலும் அந்த பார்ட்டிகுலர் செக்ஷன் ரூல் அப்ளை ஆகாமல் அமல் படுத்தக்கூடிய பகுதிகளும் இருக்கிறது. இவைகளை இப்போது அமல்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். விரைவிலே 1, 2 வாரங்களிலே ரூல்களை பப்ளிஷ் செய்துவிடுவோம். திரு. கருப்பையா அவர்கள் சொன்னதைப் போல் அப்ரஹென்ஷன் பியர் தேவையில்லை.

மினிமம் வேஜஸ்க்காக இரண்டு குழுக்களை அமைத்து விட்டோம். உங்களைவிட நாங்கள் வேகமாகப் போகிறோம். அதைப் புரிந்து கொள்ள மாட்டேன். என்கிறீர்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள், 15-ஆம் தேதி கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி ஏன் அமைக்கப்படவில்லை என்று. அது பழைய கதை, குழு அமைத்தாகிவிட்டது. ஒரு குழு பரிந்துரை வழங்கிவிட்டது. இன்னொன்று பரிந்துரையை வழங்கப் போகிறது. உங்களுக்கு எங்கள் மேலே இருக்கிற கோபமே என்ன தெரியுமா? நாம் நினைப்பதற்கு முன்னாலேயே புரட்சித் தலைவர் அவர்கள் காரியத்தைச் சாதித்துவிடுகிறாரே நம்மால் ஒன்றும் சண்டைபோட முடியவில்லையே, நாம் சிந்திப்பதற்கு முன்னாலே புரட்சித் தலைவர் செயல்படுகிறாரே அவரை எப்படிக் குற்றம்சொல்வது? குற்றம் சொல்லமுடியவில்லையே. இன்றைக்கும் ஒன்றும் பையர் ஓர்க்ஸ் இல்லையே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பையர் ஓர்க்ஸ், பையர் ஓர்க்ஸ் என்று சொல்கிறீர்கள். இங்கே பையர் ஓர்க்ஸ் வந்துவிடப் போகிறது (சிரிப்பு).

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 15

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தற்போது மட்டும் 15 குழுக்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த விளக்கங்களையெல்லாம் புத்தகங்களிலே பார்க்கலாம், கொடுக்கப்பட்டிருக்கின்றன. 15 குழுக்கள் செயல்படுகின்றன என்றால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். திரைப்படத் தொழில், பீடி, சுருட்டுத் தொழில், கைத்தறி துணி தொழில் (ஒன்று வந்து விட்டது) பனியன் தயாரிக்கும் தொழில், சிற்றுண்டிசாலை மற்றும் உணவகங்கள் வேலை, கட்டடம் கட்டுதல், சாலை போடுதல் கல் உடைத்தல் முதலிய தொழில், வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டு பாத்திரங்கள் செய்யும் தொழில் வேலை செய்கிறவர்கள், அரசு மருத்துவ மனைகள், தொழில் காப்புறுதி மருத்துவ மனைகள், மருந்தகங்கள் அல்லாத ஏனைய மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகள் வேலை, தீப்பெட்டி மற்றும் மத்தாப்பு தயாரிக்கும் வேலையில் உள்ளவர்கள், விசைத் தறியில் வேலை செய்கிறவர்கள், முந்திரிக்கொட்டை பதப்படுத்துவதில் வேலை செய்கிறவர்கள், வாசனை புகையிலை தயாரிப்பதிலே வேலை செய்கிறவர்கள் சோப்பு செய்யும் தொழிற்சாலை, சினிமாத் தொழிற்சாலை, பருத்தி பிரித்து கட்டும் வேலை, இவைகளுக்கு எல்லாம் குறைந்த பட்ச ஊதியக் குழு நியமித்து அது வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும்.

கான்ட்ராக்ட் லேபர் பற்றிச் சொன்னார்கள். சிமின்ட் பேக்டரியில் நாங்கள் ஏற்கெனவே அகற்றிவிட்டோம். வேறு சில டிக்னிஷ் புராப்ளம்ஸ் வரும். கான்ட்ராக்ட் வேலையில் ஒரு தொழிற்சாலையில் 1,000 பேர்கள் வேலைசெய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தத் தொழிற்சாலையில் கான்ட்ராக்ட் வேலையை ஒழித்துவிடுகிறோம். அதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி ஒழித்துவிட்ட பிறகு அந்த ஆயிரம் பேர்கள் வேலை செய்த இடத்திற்கு யாரை நியமிப்பது, யாரை வேலைக்கு எடுப்பது? அந்த முதலாளியை நிர்ப்பந்தம் செய்ய என்ன சட்டம் இருக்கிறது? 1,000 பேர்கள் வேலையில்லாமல் போய்விடுகிறார்கள். அந்த முதலாளி தனக்கு வேண்டிய ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்வார். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் கான்ட்ராக்ட் லேபர்ஸை டிஸ்பென்ஸ் செய்தால் பான்டெட் லேபர் மாதிரி— கான்ட்ராக்ட் லேபரையே அதே தொழிற்சாலையில் பர்மனன்ட் லேபராக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அளவுக்கு நிர்வாகத்தை நிர்ப்பந்தம் செய்யக்கூடிய அளவுக்கு சட்டத்தை மாற்றியமைக்கக்கூடிய அளவுக்கு நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இல்லை என்றால் ''தென் வாட் வில் ஹேப்பன்? ஆல் தி கான்ட்ராக்ட் லேபர்ஸ் வுட் பி த்ரோன் அவுட் ஆப் ஜாப்''. அவர்கள் எல்லாம் தெருவிலே நிற்கவேண்டியதுதான். எனவே அப்படி ஏற்படாத முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

நாங்கள் புதிதாகச் சட்டம் கொண்டுவருவதைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். மேன்வல் ஒர்க்கர்ஸ். எந்தச் சட்டத்திலேயும் வராமல் புரட்சித் தலைவரவர்கள் சொன்னார்களே ஆதரவற்ற அன்ஆர்கனைஸ்டு லேபர் அவர்களைப் பாதுகாப்பதற்காக சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லேபர் வெல்பேர் பண்டில் இப்போது ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. முதலாளிகள் சார்பாக ஒரு தொழிலாளருக்கு ஒரு ஆண்டுக்கு 2 ரூபாய் என்றும் தொழிலாளர் சார்பாக ஆண்டுக்கு ஒரு ரூபாய் என்றும் கொடுக்கிற சட்டம் 1972-இல் கொண்டுவரப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது. ஆனால் ரொம்ப புத்திசாலித்தனமாக ரொம்பத் திறமையாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படியென்றால் ஒரு தொழிலாளர் ஆண்டுக்கு ஒரு ரூபாய் தரவேண்டும், முதலாளி ஆண்டுக்கு 2 ரூபாய் தரவேண்டும். ஆனால் அரசாங்கம் என்ன தரவேண்டும். ஒன்றும் இல்லை. அந்த பண்ட் இருக்கிறது. அரசாங்கம் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தது அவ்வளவு தான். வாட் இஸ் யுவர் கான்ட்ரிப்யூஷன்? நத்திங். இதை புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொன்னவுடனே அது சரியல்ல என்று சொல்லி இப்போது இந்தச் சட்டத்தைத் திருத்த இருக்கிறோம், இந்தத் தொடர் கூட்டத்திலே வரப் போகிறது.

தொழிலாளி ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ரூபாய் தருகிறார். மேச்சிங் கிராண்ட் இந்த அரசாங்கமும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இரண்டு ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் தரும். முதலாளி 4 ரூபாய் தர வேண்டும். ஒரு ரூபாய் உயர்கிறது. ஒரு ரூபாய் என்பது இரண்டு ரூபாயாக உயர்கிறது. முதலாளி தருகின்ற இரண்டு ரூபாய் என்பது 4 ரூபாயாக ஆகிறது. அதை மறந்து விடக் கூடாது. ஆனால் அரசாங்கம் ஒன்றுமே இதுவரையில் கொடுக்கவில்லை. லேபர் வெல்பேர் அந்த ஃபண்டிலேயே அந்தச் சமிட்டி ஒத்துக் கொண்டது. எனவே ஒரு ரூபாய் இரண்டு ரூபாயாகிறது. முதலாளிகள் கொடுக்கும்படியான இரண்டு ரூபாய் நான்கு ரூபாய் ஆகிறது.

(பிற்பகல் 2—00)

அதோடு இதுவரையிலும் அரசாங்கம் கொடுக்காமல் இருந்த நிலைமையை மாற்றி புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் முதன் முதலாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் இரண்டு ரூபாய் கொடுப்பது என்று சொன்னார். இப்பொழுது சட்டம் வரப் போகிறது. 1972 ஆம் ஆண்டிலே சட்டம் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அரசாங்கத்தினுடைய கான்ட்ரிபியூஷன் என்ன, நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமே, யாராவது ஒருவர்

எழுந்து அரசாங்கம் என்ன கொடுக்கப் போகிறது என்று கேட்டால் நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம் என்று அதையெல்லாம் பற்றிக் கவனிக்கவில்லை. நீ ஒரு ரூபாய் கொடு, நீ இரண்டு ரூபாய் கொடு என்று சொல்லி சட்டத்தைக் கொண்டு வந்து போய் விட்டார்கள். ஆனால் நாங்கள் கொண்டு வருகிறோம். (குறுக்கீடு) அரசாங்கத்தைக் கிரிட்டிசைஸ் செய்யும் பொழுது அது பூமராங் பண்ணும் என்பதும் உங்களுக்கு ஞாபகம் இருக்க வேண்டும். நான் சொல்லும்பொழுது மட்டும் கோபம் வந்து பிரயோஜனம் இல்லை.

**திரு. துரைமுருகன் :** நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெரிய தொழிற்சங்க வாதியாக இருந்தீர்களே, அப்பொழுது அந்த ஐடியாவைக் கொடுத்தால் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் சொல்லி விடுவேன். பிறகு இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே நடந்த வாக்கு வாதத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக ஆகிவிடும். எனவே வேண்டாம். ஆனாலும் ஒன்றை மட்டும் சொல்கிறேன். அங்கே விஷயம் தெரிந்தவர்கள் யாரையுமே வைத்துக் கொள்ளவில்லை, எல்லாவற்றையும் இங்கே அனுப்பி விட்டீர்கள். அதற்கு நான் என்ன பண்ணுவது ?

ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இந்த அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 14 இலட்சம் ரூபாய் செலவாகிறது. 14 இலட்சம் ரூபாய் செலவு செய்து இந்த அரசு சட்டத்தைக் கொண்டு வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

உண்மையாகவே மாண்புமிகு திரு. கருப்பையா அவர்கள் வருத்தப்பட்டார்கள். ஸ்ட்ரைக் நீடித்துக் கொண்டே போகிறதே என்று. அந்தக் கேள்வி நியாயமானதுதான். அதை நிறுத்த வேண்டாமா ? அது யார் கையில் இருக்கிறது ? இரு தரப்பாரும் மோதிக் கொள்கிறார்கள் ; சண்டை நடக்கிறது. கன்சிலியேஷனுக்கு வருகிறோம். இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டிபார்ட்மென்டைப் பற்றிச் சொன்னார்கள். நான் சொல்கிறேன் ஒரு சிறந்த டீம். லேபர் டிபார்ட்மென்டிலே இன்றைக்கு இருப்பது பெஸ்ட் டீம். அது கன்சிலியேஷனாக இருந்தாலும் சரி, பேக்டரி விங்காக இருந்தாலும் சரி, பெஸ்ட் டீம் இருக்கிறது. நாம் ஆளுகிறோம், நாமே அமைச்சராக இருக்கிறோம் என்ற அளவிற்கு அவர்கள் உள்ளுணர்வோடு இப்பொழுது வேலை செய்திருக்கிறார்கள் என்பதை நன்றி உணர்வோடு இந்த நேரத்தில் நான் சொல்லியாக வேண்டும். கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். ஆலோசனைகளைக் கொடுக்கிறார்கள். இரண்டு பேரும் ஆலோசனைக் கொடுக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களும் கேட்கவில்லை ; முதலாளிகளும் கேட்கவில்லை. போராட்டம் நீண்டு கொண்டே போகிறது.





அதற்காகத்தான் கேரளா அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தது. ஒரு ஸ்ட்ரைக் நீடித்துக் கொண்டே இருக்குமேயானால் அரசாங்கம் இன்றையதினம் பத்து ரூபாய் ஒரு தொழிலாளிக்கு நான் கொடுக்கிறேன் என்று சொல்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு எனக்கு அதிகாரம் இல்லை ; சீப் மினிஸ்டருக்கு அதிகாரம் இல்லை ; பிரைம் மினிஸ்டருக்கு அதிகாரம் இல்லை. ஒருவருக்கும் கிடையாது. ஆனால் அந்த அதிகாரம் வேண்டுமென்று கேரளாவிலே கொண்டு வந்து சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கும்பொழுது நிறுத்துங்கள் என்று சொல்லி, இடைக்கால நிவாரணமும் கொடுத்து, 100 ரூபாய் கேட்டார்கள் என்றால் முதலாளி 60 ரூபாய் போடுகிறார், இந்தா நான் 75 ரூபாய் தருகிறேன்.

The issue will be referred for adjudication. The issue will be whether the workers are entitled to more than what the Government has given or what the Management has offered.

அப்படியென்று சொல்லி வழக்கு மன்றம் அனுப்புவதற்கு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நாங்கள் இங்கே கொண்டு வந்தோம். 10 (பி). எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நல்லவேளையாக இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டிலே இதைத் திருப்பி வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் சொல்லி வைத்த பொழுது சி.பி.எம்., சி.பி.ஐ., டி.எம்.கே., எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் ஒத்துக் கொண்டதன் காரணமாக அந்தச் சட்டத்தை இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் கொண்டு வருவதாக இருக்கிறோம். அது ஒரே நிமிஷத்திலேகூட பாஸ் ஆகிவிடும், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களும் ஆதரவு தந்திருப்பதால். அது வந்து விட்டால், வேலை நிறுத்தங்கள் அதிகமாக நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கு இந்த அரசால் முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் நிரம்பக் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கருதினாலும் கூட, இன்னும் ஒரு மணி நேரத்திற்குப் பேசுவதற்கு பாயின்ட்ஸ் இருக்கின்றன என்றாலும் நேரம் அதிகமாகி விட்டதால் இறுதியாக நான் சொல்ல விரும்புவது திரு. கருப்பையா அவர்கள் சொன்ன ஒரு விஷயத்தைப்பற்றித்தான். மூன்று பேர்களைக் கொன்று விட்டீர்களே என்று திரு. கருப்பையா அவர்கள் வருத்தப்பட்டார்கள். ஜனவரி மாதம் 19 ஆம் தேதி நடந்த வேலை நிறுத்தத்தில் மூன்று பேர்களைக் கொன்று விட்டீர்களே என்று வருத்தப்பட்டார்கள். நம்முடைய திரு. ரமணி அவர்களும் மிக்க ஆர்வமாகக் கவனிக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். '' ஹிந்து '' 20–1–1982-லே

One person died at Sealdah in Burden District when the Police fired this morning to disperse, two rival groups.

என்று வந்திருக்கிறது. மேற்கு வங்காளத்திலே அதே ஜனவரி 19 ஆம் தேதியில் துப்பாக்கியாலே சுட்டு ஒருவர் செத்திருக்கிறார். செத்தது ஒன்றாக இருந்தால் என்ன, மூன்றாக இருந்தால் என்ன? (குறுக்கீடு) உங்களுக்கு மூன்று உயிர் பெரிதாக இருக்கலாம். (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். நான் இன்னொரு வாக்கியத்தைச் சொல்லிவிட்டு உட்காருகிறேன்.

**திரு. கு. ரமணி :** அவர் மற்றொரு மாநில அரசாங்கத்தை இழுக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ. இராகவானந்தம் :** நான் இழுக்கவில்லை. நான் சொல்வது, மாண்புமிகு உறுப்பினர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொழிலாளியை போராட்டத்திலே சுட்டு விட்டீர்களே, 3 பேர் செத்தார்களே, என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சி.பி.எம்.மைச் சேர்ந்தவர். அவர்கள் ஆளுகிற ஆட்சியிலே ஒருவர் துப்பாக்கிச் சூட்டிலே இறக்கிறார் என்றால் (குறுக்கீடு) நீங்கள் இருந்தாலும் சுடுவீர்கள் என்பதற்காகத்தான். அது மட்டுமல்ல, இன்னும் என்ன நடந்திருக்கிறது அங்கே (குறுக்கீடு) ஆகவே, தவிர்க்க முடியாது, துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன என்று சொல்கிறேன்.

The Chief Minister Mr. Jyothi Basu—it has appeared in The Hindu dated 21st January 1982 confirmed the death at Mangalkote and said that the death toll had gone upto 5. The State Government sources said the score sheet of yesterday's Bandh is, death 5, arrested 300, wounded including Policemen 209. Police fired in 6 areas 26 rounds. Twenty six rounds having been used, tear gas was used in 5 places.

இது அங்கே நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், புரட்சித் தலைவர் ஆட்சியில், 3 பேர்களைக் கொன்று விட்டீர்களே, என்றார்கள். இங்கே, பஸ்ஸை எரித்தார்கள். புரட்சித் தலைவர் மைக்கிலே கூப்பிட்டு, உடனே அவர்களைச் சுடுங்கள், 3 பேரைச் சுடுங்கள் என்று சொல்வதில்லை. நான் போலீஸ்காரன் வீட்டுப் பிள்ளை. அங்கேயே வளர்ந்தவன் ; அங்கே என்ன நடக்கும் ? அந்தக் கூட்டங்களைக் கலைந்து போங்கள், கலைந்து போங்கள், கலைந்து போங்கள், என்று சொல்வார்கள். இல்லாவிட்டால் துப்பாக்கியால் சுடுவேன் என்று சொல்வார்கள். 5, 6 தடவை சொல்வார்கள். அவன் கல்லால் அடிப்பான். நான் ஒரு போலீஸ்காரன் வீட்டுப் பிள்ளை. என் அண்ணன் அப்படி கல்லால் அடிபட்டுச் செத்துப் போயிருந்தால், அடியேன் இராகவானந்தம்





நடுத் தெருவிலே பிச்சை எடுத்துக் கொண்டுதான் இருந்திருப்பேன். (குறுக்கீடு) போலீஸ்காரர்களுக்கும் உயிர் உண்டு. (குறுக்கீடு) நீங்கள் என்ன, என்னவோ சொன்னீர்கள். அதையெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தோம் அல்லவா ? போலீஸ்காரர்கள் மண்டை உடையும்போது, அவர்கள் சாகக்கூடிய நிலை வரும் போது, துப்பாக்கியால் சுடுகிறார்கள். இங்கேயிருந்து புரட்சித் தலைவர் டைரக்டாக ஆர்டர் போடுவதில்லை. அதே மாதிரி தான் மேற்கு வங்கத்திலே நடந்திருக்கிறது.

ஜனவரி 19 ஆம் தேதி ஸ்டிரைக்கைப் பற்றி, இந்த அரசினுடைய கொள்கை என்ன, ஆதரிக்கவில்லையா என்று கேட்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இந்த நாட்டில் ஒரு குழப்பம் வர வேண்டுமென்று எப்படி ஒரு பெரிய Call for All-India strike கொடுத்தார்களோ, அதற்கும் இதற்கும் — ஜனவரி 19 ஆம் தேதி நடந்த ஸ்டிரைக்குக்கும் — மாறுபாடில்லை, வித்தியாசம் இல்லையென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கு. ரமணி :** நாங்கள் இங்கே பேசக்கூடிய விஷயத்திற்கு அவர்கள் நேரடியாக எங்களை விமர்சனம் பண்ணி பதில் சொன்னால், மிகுந்த மரியாதையோடு அந்த விஷயத்தை நாங்கள் வரவேற்போம். விமர்சனத்திலே இருந்து பாடம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையை நாங்கள் படித்தவர்கள். அவர் வங்காளத்திலே ஓரிடத்திலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று சொல்வதா ? இதற்குப் பதில், இங்கே நடந்ததற்குப் பதில் சொல்வதற்குப் பதில், வங்காளத்திலே நடந்தது என்று சொல்வது இரண்டும் ஒன்றாக இருந்தால் சரி. அந்த ஃபண்டமென்டல் பொலிட்டிக்கல் சையன்ஸ்ஸை அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அங்கே இரண்டு குரூப்புகளுக்கிடையே சண்டை—அமைச்சரே படித்தார். இங்கே தஞ்சாவூரிலே நடந்தது 2 குரூப்புகளுக்கு இடையிலே அல்ல, ஆயிரக்கணக்கான, 3 இலட்சத்து 80 ஆயிரம் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளும் ஸ்டிரைக். அதைத் தப்பு என்று நீங்கள் சொல்லுங்கள், உங்கள் தத்துவப் பிரகாரம் சொல்லுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை................. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. இராகவானந்தம் :** நீங்கள் இன்னொரு நாளைக்குப் பேசலாம்—கூட்டத்திலே. நான் சொல்வதை நீங்கள் மறுக்க முடியாது.

[1982 மார்ச் 15

**திரு. கு. ரமணி :** எங்கள் பேரிலே குற்றச்சாட்டு அவர் சொல்வது சரியா, இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பதில் சொன்னதில் ஏதாவது கிளாரிபிகேஷன் இருந்தால் கேளுங்கள். மற்ற எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் விவகாரம் வளர்ந்துகொண்டே போகும்.

**திரு. கு. ரமணி :** அவர் குற்றச்சாட்டுச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. உதாரணத்திற்காக சொன்னார்.

([பிற்பகல் 2-10]

**திரு. கு. ரமணி :** அவர் சொன்ன இன்பர்மேஷன் இதற்கு ஒத்ததாக இல்லை என்பது என்னுடைய கருத்து. இல்லை என்றால் நான் வரமாட்டேன். அங்கே இரண்டு குரூப்புகள் சண்டை போட்டு கொண்டனர். யார் அந்த குரூப்புகள் என்ற பிரச்னைக்கு இப்போது நான் போகவிரும்பவில்லை. அதில் வேறு சில கட்சிகளுடைய பிரச்னைகள் எல்லாம் வரும். நான் அதை விளக்க விரும்பவில்லை. ஆனால் 3 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் இங்கே போராட்டம் நடத்தினார்கள். கல்லை எடுத்துப் போட்டார்களா, பின் ஏன் அவர்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அங்கே துப்பாக்கிச் சூடு நடத்தினால் இங்கேயும் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும் என்பதல்ல.

**மாண்புமிகு திரு. இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, 3 பேர்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே சுடப்பட்டார்கள் என்று சொல்லுகிறபோது, அவர் சார்ந்திருக்கின்ற கட்சி ஆட்சி நடத்துகின்ற மாநிலத்தில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கின்றது என்று சொன்னால், இங்கேயும் அவர்கள் ஆட்சி இருந்தால் எவ்வளவு ஃபையரிங் எவ்வளவு டியர் கேஸ், எவ்வளவு போலீஸ் எக்சஸ் நடக்கும். அதைச் சொல்லித் தான் ஆகவேண்டும். (குறுக்கீடு) எங்களைப்பற்றிய * * நீங்கள் சொல்லாமல் இருந்தால், உங்களை பற்றிய உண்மைகளை நாங்கள் சொல்லாமல் இருப்போம்.

**திரு. கு. ரமணி :** அவர்களைப் பற்றிய * * நாங்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 15]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஜனவரி மாதம் 19-ம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தைப் பற்றி ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் மீது விரோதம் உள்ள அரசு என்று இதே சபையிலே பேசி இருக்கிறீர்கள். அதற்கு நான் சொல்லி ஆகவேண்டும். (கூச்சல், குழப்பம்) நீங்கள் சொல்வதைத் தாங்குவதற்கு எனக்கு சக்தி இருப்பதைப் போல, நாங்கள் சொல்லும் உண்மைகளைத் தாங்கிக் கொள்ள உங்களுக்கு சக்தி இருக்க வேண்டும் என்றுதான் வேண்டுகிறேன். (குறுக்கீடு) உறுப்பினர்கள் ஏன் எழுந்திருக்க வேண்டும். எங்களைத் தாக்கும் போது நான் எழுந்திருந்தேனா?

**திரு. இரா. கருப்பையா :** ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு திரு. இராகவானந்தம் :** ஐ ஆம் நாட் ஈல்டிங். நான் பதில் சொல்லியாக வேண்டும்?

**திரு. இரா. கருப்பையா :** நான் கேட்டால் முடியாது என்று சொன்னால் என்ன அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து உட்காருங்கள். விதிக்குட்பட்டு இந்த அவையை நடத்துவோம். விவரம் தெரிந்தவர்கள், அதிக நாள் இந்த அவையிலே இருக்கக்கூடியவர்கள் கொஞ்சம் கேட்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னர் விளக்கம் கேட்கலாம். இதே போன்று திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டபோதும் இதைத் தான் சொன்னேன். அவர் ஏற்றுக்கொண்டார். உங்களுக்கும் அதேதான். யாருக்கும் தனிச் சலுகை இல்லை. அமைச்சர் தொடர்ந்து பேசட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. மாநில அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்து அது பொறுப்புக் குழுவின் ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றி எல்லாம் நாம் ஆலோசனை செய்து பார்க்கும்போது உலகத்திலே நடக்கக்கூடிய நடவடிக்கைப் பற்றியும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். இன்றையதினம் போலந் நாட்டில் என்ன நடந்திருக்கிறது ? ஒரு தொழிற் சங்கம் ஆரம்பித்தார்கள். சாலிடாரிட்டி என்று பெயர். அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற உரிமையைக் கேட்டார்கள். ஆனால் அரசு என்ன செய்தது ? அந்தத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்க நடைமுறைக்கு அப்பால் சென்று, அரசைக் கைப்பற்றுகிற காரியத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லி, தொழிற்சங்கத்தைக் கலைத்து, அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் சிறையில் அடைத்து, இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தார்கள். அந்த உங்களுடைய வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் They transgressed their limit எல்லையைத் தாண்டினார்கள்.

[1982 மார்ச் 15

அதைப் போல இந்தியா ஒரு வளர்ந்து வருகிற நாடு. ஆப்டிமம் லெவல் ப்ரொடக்ஷன் வரவேண்டும். (குறுக்கீடுகள்.).

திரு. இரா. கருப்பையா : போலந்தில் என்ன நடந்தது என்று சொல்கிறார்கள். அங்கே எந்த முதலாளி இருந்தார்? அங்கே ..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி திடீரென்று இடையிலே எழுந்து கேட்கக் கூடாது. ஏதாவது சந்தேகம் கேட்க வேண்டுமென்றால் அல்லது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் இறுதியில் அனுமதிக்கிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : எனவே, அவர்கள் தொழிற்சங்கத்தின் எல்லையை மீறி நடப்பார்களானால், அதை அரசியலாக மாற்றுவார்களானால், நாட்டுக்கு சேதத்தை ஏற்படுத்துவார்களானால், பஸ்ஸை கொளுத்துவார்களானால், மக்களுக்கு கொடுக்க வேண்டிய தண்ணீர் சப்ளையை போகாமல் செய்வார்களானால், மருத்துவமனைகளில் ஆப்பரேஷன் செய்வதற்கு முக்கியமாகத் தேவைப்படும் மின்சாரத்தை செல்லவிடாமல் தடை செய்வார்களானால் அதை எல்லாம் தடை செய்வதற்கு ஒரு ஆட்சிக்கு அதிகாரம் இல்லையா? பின் எதற்காக ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டும்? W. have come here o govern. நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்குத்தான் வந்திருக்கிறோம். அப்படிப் பட்ட சட்ட விரோதமான நடவடிக்கைகளைத் தடை செய்வதற்காக சட்டம் கொண்டுவந்து அதை ஒரு பாதுகாப்பாக வைத்திருக்கிறோம். என்னுடைய செக்யூரிட்டி ஆபீசர் ரிவால்வர் வைத்திருக்கிறார். அவர் யாரையும் சுட்டுவிட மாட்டார். என்னைக்கூட முறைத்துப் பார்க்கிறார்கள். உடனே செக்யூரிட்டி ஆபீசர் டப் என்று சுட்டுவிடுவாரா? சுடமாட்டார். அதைப் போல சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, இந்த நாடு வளர வேண்டும், பொருளாதாரத்திலே அதிக வளர்ச்சிப் பெற வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டிருக்கிறோம். அதற்கு குந்தகம் ஏற்படக்கூடாது; வன்முறையால் அதற்கு தடை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அந்தச் சட்டம் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கேட்டதற்கு பதில் சொல்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் தரவேண்டுமென்று பென்ஷன் தந்துகொண்டிருக்கிற ஆட்சி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிதான் என்று இந்த நேரத்தில் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை சிறப்பாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 15]

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். பி. அன்ட் சி. ஆலை நிர்வாகத்தினர் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கும் பிரச்சனையில் தொழில் துறை செயலாளர் 36-வது செக்ஷனின்கீழ் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க மறுத்தும், அந்த ஆலை நிர்வாகம் இன்னும் போனஸ் வழங்கவில்லை. அதனால் அங்கே தொழிலாளர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுகுறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் கோப்பில் 36-வது பிரிவின் கீழ் விதிவிலக்கு தருகிறோம்; போனஸ் தரவேண்டியதில்லை வீட்டுவசதி வாரியத் தொழிலாளர்களுக்கு என்று எழுதியதைப் போல எழுதாமல் பி. அன்ட் சி. தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்துதான் ஆகவேண்டும்; விதிவிலக்கு தரக்கூடாது என்று எழுதியிருக்கிறோம். அந்த நிர்வாகம் வந்தபோது, we will not give exemption. You must pay bonus என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, ஜனவரி 19-ந் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1975 ஆம் ஆண்டு ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் நடத்தியதைப்போல என்று குறிப்பிட்டார்கள். 19-ந் தேதி தொழிற்சங்கங்கள் முறையான வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்து, அவர்களுடைய பொருளாதார கோரிக்கைகளுக்காக, அவர்களுடைய உரிமையை பாதுகாப்பதற்காக நடைபெற்ற வேலை நிறுத்தம். அதை அமைச்சரவர்கள் அரசியல் காரணத்திற்காக நடைபெற்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் ஏதாவது இருந்தால் கொடுப்பது பயனுடையதாக இருக்கும். தொழிற்சங்கங்கள் தங்களுடைய பொருளாதார கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் என்று முன்னறிவிப்புக் கொடுத்து செய்தன. இந்திராகாந்தி எள் என்றால் நீங்கள் எண்ணெயாக இருப்பீர்கள் என்பது தெரியும்.

[பிற்பகல் 2-20]

இப்போதும் கூட அவர் அந்த விசுவாசத்தைக் காட்டக்கூடிய முறையிலே பேசி இருக்கிறார். இதை அரசியல் என்று சொன்னால் அதற்கான ஆதாரங்களை இருந்தால் அவர் வைக்கட்டும்.

அடுத்து......(குறுக்கீடு)......அவர் சொன்னது உண்மை என்றால் நீதிவிசாரணையிலே அது நிருபிக்கப்பட்டுவிடும். நேற்றையதினம் கூட கன்னியாகுமரி மாவட்டத்திலே நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர்

அவர்கள் அறிவித்திருக்கிறார். அதைத்தான் நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே என்ன கஷ்டம் என்பதைத் தெரிவிப்பதற்குப் பதிலாக மேற்கு வங்காளத்தையும் மற்ற இடங்களையும் குறிப்பிடுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? என்பதைதான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலம் முந்திக்கொண்டிருக்கின்றது என்று கூறினார். பீடித் தொழிலாளர்களுக்காக மத்திய அரசு ஆயிரம் பீடிக்கு 8 ரூபாய் தேசியக் கூலியாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றது. ஆனால், நம்முடைய மாநிலத்திலே எவ்வளவு நிர்ணயித்து கொடுத்திருக்கிறார்கள்? ஆகவே முந்திக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்த வரையிலே குந்திக்கொண்டிருக்கிறதா பிந்திக்கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டிலே கூலியை நிர்ணயிக்கும்போது We should not drive the enterpreneurs out of the business also. இங்கே இருப்பவர்கள் எல்லாம் மற்ற மாநிலங்களுக்கு ஓடிப் போகும்படியாகவும் நாம் கூலியை நிர்ணயித்து விடக் கூடாது. அது மினிமம் வேஜஸ்தான். அதற்கு மேல் வாங்கிக்கொள்வதற்கு எல்லொருக்கும் உரிமை இருக்கின்றது. நான்கு மாநில அமைசசர்கள் கூடி 7 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக நிர்ணயிக்கலாம் என்று சொல்லி அதை நிர்ணயித்து 12 ஆம் தேதியிலிருந்து அமல்படுத்துவதற்குச் சொல்லி இருக்கிறோம். அதுதான் குறைந்தபட்சக் கூலியைப் பொறுத்தவரையில்.

பஞ்சப்படி கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறோம். 19 ஆம் தேதி பற்றிச் சொன்னார்கள். என்னுடைய 40 வருட அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். We should see beyond our nose. If we do not see beyond our nose we cannot save this country. அமெரிக்கா பாகிஸ்தானுக்கு நிறைய ஆயுதத்தைக் கொடுத்து எந்த நேரத்திலும் இந்தியா மீது படை எடுக்கக்கூடிய அச்சம் இருக்கின்ற நிலைமையிலே இந்தியா பூராவிலும் ஒரே நாளிலே எல்லோரும் வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று சொல்லி செய்வது என்றால் அதற்கு இது ஆப்பர்சூன் டைம் இல்லை. பாராளுமன்றம் இருக்கின்றது. சட்டமன்றத்திலே பேசுவது போன்று பார்லிமெண்டிலேயும் பேசலாம். வேறு டெமாகிரேட்டிக் மெத்தட்ஸ் எல்லாம் இருக்கின்றது. லாஸ்ட் வெப்பனை உடனே எடுத்து அடித்தால் தேசம் என்ன ஆகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அந்த கான்டெக்ஸ்லேதான் நான் சொன்னேன்.





This is not the opportune time for All India strike. This will paralyse our Indian economy and may invite the foreigners also for an attack.

அந்த நிலையிலே கொண்டுவந்துவிட்டோம். ஆகவே இந்த நேரத்திலே போய் ஸ்ட்ரைக் அடித்தால் என்ன ஆகும்? அப்படிப்பட்ட நிலைமை பற்றி நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படி எண்ணிப்பார்க்காமல் தொழிற்சங்கத்தலைவர்கள் இருந்தால் எப்படி அவர்களைத் தொழிற்சங்கத்தலைவராகச் சொல்ல முடியும்? ஆகவே அந்த கான்டெக்ஸ்லே தான் நான் சொன்னேன். இந்த நேரத்திலே அகில இந்திய ரீதியிலே ஒரு பெரிய ஸ்ட்ரைக் வேண்டுமா, இந்திய அரசை முடக்கக்கூடிய அந்தச் செயலைச் செய்யலாமா என்பதுதான் இந்த அரசினுடைய கருத்து.

திரு. எல். இளையபெருமாள் : - மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் நான் 3 விஷயங்களைச் சொன்னேன். ஒன்று நீங்கள் கூட்டுறவு முறையில் கொடுக்கின்ற வீடுகளுக்கு 4 ஆயிரம் ரூபாய், அரிசனங்கள் அல்லாத மக்களால் அந்தத் தொகையைக்கட்ட முடியாது என்பதால் அவர்கள் மனுச்செய்யவில்லை. இரண்டாவதாக அரிசனங்கள் ஓலைக் குடிசையிலே இருப்பவர்கள் இதையாவது செய்தால் ஒரு நல்ல வீடாக வாங்கிக்கொள்ளலாம் என்றால் அதன்படி கொடுக்கின்ற பணம் ஒழுங்காகக் கொடுக்கப்படவில்லை என்றுதான் சொன்னேன். 11 ஆயிரம் வீட்டிலே 10 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டது என்று சொல்கின்றபோது அதிலே எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன? அதிலே எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன என்பதைச் சொல்லவில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்காக இரண்டாண்டுகள் ஆகியும் அமைச்சரவர்கள் இந்த வகையிலே இரண்டு தடவை வாக்குறுதி கொடுத்தும் விவசாயத் தொழிலாளருக்கான குறைந்தபட்சக்கூலிச் சட்டம் அமல் நடத்த அதிகாரிகளை எந்த ஜில்லாவிலேயும் நியமிக்கவில்லை. (குறுக்கீடு) விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்த பென்ஷன் ஒருவருக்கும் இந்த மாநிலத்திலே கொடுக்கப்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் தெரிந்துகொண்டு இந்த மன்றத்திலே நான் க்ளாரிஃபிகேஷன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் பிரச்சினையை வேறு திசையில் திருப்புகின்ற வகையிலே இருப்பதால் தயவுசெய்து மீண்டும் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ டிபார்ட்மென்டிடம் இருக்கும் இம்பிளிமென்டேஷன் அதிகாரம், லேபர் டிபார்ட்மெண்டுக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தினை

மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சமயத்தில் இதுபோன்ற நல்ல யோசனையை சொல்லக்கூடியவர் அவர். இவைகளையெல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைப் பேச அழைப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு எங்குமே பென்ஷன் கொடுக்கப்படவில்லை. ஆனால் கொடுக்காமலேயே கொடுப்பதாகச் சொல்வது, (குறுக்கீடு)

I am requ:s ing you o allow me to s:eak– T.e Minister gave *
o :Fe Hous:.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னதில் * * * என்பதை நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதையே திரும்ப திரும்ப பேசவேண்டாம். திரு அ. ரகுமான்கான் (குறுக்கீடு),

திரு. அ ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைப் பெறவிரும்புகிறேன். பீட்டர்ஸ் காலனியில் பத்திரிகை நிருபர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டியிருப்பதாக கூறினார்கள். அந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்படுமா? அல்லது பீட்டர்ஸ் காலனியில் இல்லாவிட்டாலும் வேறு எங்காவது இடத்தில் தனியாக பத்திரிகை நிருபர்களுக்கென்று வீடுகட்டி அவைகளை அவர்களுக்கே சொந்தமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்கவிரும்புகிறேன் அத்தோடு..........(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் வாடகை வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று நாங்கள் கருதவில்லை. சொந்த வீடுகளை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் ஹையர் பர்சேஸ் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் 3 சதவீதத்தை அவர்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். ஆனால் அதில் அவர்கள் தான் அதிகமான முன் வரக்காணோம். 7, 8 பேர்கள் தான் மனு செய்திருக்கிறார்கள். ஆகவே அந்த நல்ல திட்டத்தை அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





உபயோகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படவேண்டும் என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீ. போன்றவர்கள் இதற்காக தனியாக யோசித்து, முதல்வர் அவர்களைக் கலந்துக் கொண்டு, இதற்காக சிரமப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தான் அந்த ஹையர் பர்சேஸ் திட்டத்தில் 3 சதவீத ஒதுக்கீடு செய்யப் பெற்றது. அதை உபயோகப்படுத்தி அவர்களெல்லாம் சொந்தவீட்டிலே இருப்பதை பார்க்கவேண்டும் என்றுதான் புரட்சித் தலைவர் அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறுகின்றனவா என்று அறியவிரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு.. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கேட்டபோது, கடைசியில் கேளுங்கள் என்று சொல்லிவிட்டீர்கள். இப்போது எனக்கு அனுமதிக்காமல் இருப்பது நியாயம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே 2½ மணி வரை அவை நடவடிக்கை நீட்டிக்கப்பட்டு விட்டது.

திரு. கு. ரமணி : எனக்கு இரண்டு நிமிடங்கள் தந்தால் போதும், ஏற்கெனவே இவ்வளவு நேரம் ஆகி விட்டது. மிக முக்கியமானப் பிரச்சினை. இரண்டு நிமிடம் நீட்டிப்பதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் கேட்டதற்கு அவர் பதில் சொல்லவில்லை என்று சொன்னதெல்லாம் சரி, ஆனால் எனக்கு கேட்க அனுமதி அளிக்க வேண்டும். தாங்களே பின்னால் கேட்கலாம் என்று சொன்னதின் பேரில் தான் நான் அப்போது அமர்ந்தேன்...........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? அங்கேயும் சிலர் கேட்கக் கூடும். இருந்தாலும் சுருக்கமாகச் சொல்லிவிடுங்கள்.

[1982 மார்ச் 15

(பிற்பகல் 2-30.)

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஏற்கெனவே இருந்திருந்த சட்டத்தையும் பழக்கத்தையும்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள், டிப்பார்ட்மெண்ட் தலைமையின்கீழ் நேரடியாக நடத்தப்படக்கூடிய ஸ்தாபனங்களில் போனஸ்கொடுக்கப்படுவதில்லை என்று அவர்கள் சொல்லும்போது போஸ்டல், ரெயில்வே பற்றியும் சொன்னார்கள். இன்று அவை அப்படியல்ல. இன்று போஸ்டலிலும், ரெயில்வேயிலும் குறிப்பிட்ட தொகை போனஸாக தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிறது மத்திய அரசாங்கத்தால்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள். கோவையில் மூன்று மில்கள்—2,159 தொழிலாளர்கள் சில மாதங்களாக வேலையில்லாமல்—மானேஜ்மெண்ட் சண்டையால் பூட்டிக் கிடக்கின்றன. 75,000 ஸ்பின்டில்ஸ் வேலை செய்யாமல் இருக்கிறது. இதில் அமைச்சர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுத்து ஒரு சமரசத்துக்கு ஏற்பாடு செய்து வைப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடம் அதைத் தனியாகச் சொல்லலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் வாக்கெடுப்புக்கு முன்மொழியும் தீர்மானத்தை இங்கே அனுமதித்திருக்கிறீர்கள். அந்த நேரத்தில் விவாதங்களை அனுமதிப்பது நம்முடைய விதிகளுக்கு முரணானது அப்படியிருக்க திரு ரமணி அவர்களைப் பேசச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 15] [திரு. ச. இராமசந்திரன்]

அதன் தொடர்பாக விவாதிக்க, வாக்கெடுப்பு நேரத்தில் எப்போதும் நாம் அனுமதிப்பதில்லை. அது விதிகளுக்கு முரணானது. இப்படித் தொடர்ந்து போய்க் கொண்டிருக்குமானால் தாங்கள்தான் இதற்கு ஒரு முடிவு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு ஆணையிடுகிறேன்.

அ. கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

திருவாளர்கள் கு. பா. பழனியப்பன், கே. எம். தங்கமணி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. இரா. கருப்பையா ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,27,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

ஆ. கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

திருவாளர்கள், த. வேணுகோபால், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,64,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

இ. கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

திருவாளர்கள் த. வேணுகோபால், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 34—நகரப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ 24,16,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 16–3–92 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

101. கோரிக்கை எண் 29—தமிழ்நாடு தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்)



102. கோரிக்கை எண். 33—மற்றும் 34—தமிழ்நாடு வீட்டு வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பும், நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக்குறிப்பும் 1982—83 (தமிழ், ஆங்கிலம்)

103. தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் செயல் திறன் பற்றிய குறிப்பு, 1977—78, 1981—82 (தமிழ்.)

104. 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' என்கிற சிறு புத்தகம். (தமிழ்.)

105. 'தமிழ்நாட்டில் தன்னிறைவுத்திட்டம்'—ஊரக வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

## இணைப்புகள்

664-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

1.1. தமிழ் நாட்டில், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுத்தருவதும், தொழில் அமைதியைப் பாதுகாப்பதும் தொழிலாளர் நலத்துறையின் பொறுப்பாகும். சமுதாயத்திற்கு பயனளிக்கும் வகையில் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயலாற்ற தொழில் நிருவாகத்தினருக்கு உரிமை உண்டு. அதே நேரத்தில் தொழிலாளர்களின் நலனையும் அவர்கள் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும். இந்நோக்கத்திற்காக தொழிற்சங்கங்கள் மற்றும் நிருவாகங்களின் இசைந்த ஒத்துழைப்பினை அரசு பெரிதும் நம்பியிருக்கிறது. இந்த வகையில் சென்ற ஆண்டு இருதரப்பாரிடமிருந்தும் பெருமளவில் இந்த ஒத்துழைப்பை அரசு பெற்றிருந்தது என்பதில் அரசு பேருவகை கொள்கிறது. இதன் விளைவாக சுமூகமான தொழில் உறவை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டமைக்காக அனைவரும் தமிழகத்தைப் பாராட்டியுள்ளனர். சுமூகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகள் பற்றியும் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் காரணமாக உழைப்பு நாட்கள் வீணாவதைக் குறைந்திருப்பது பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் இதற்குச் சான்றாக அமையும். தொழில், அமைதியைப் பேணிக் காத்திட, தொழிற்சங்கத்தினரும், நிருவாகத்தினரும் இந்த ஆண்டிலும் தொடர்ந்து தங்கள் ஒத்துழைப்பை நல்கியமைக்கு அரசு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

1.2. தொழிலாளர்களின் உரிமைகளும் நலன்களும் இயன்ற வரை அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை இந்த அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளதை தெளிவுபடுத்தி இருக்கிறது. அப்பொழுதுதான் அவர்கள், தங்களின் உரிமைகளைப் பெற போராட்டங்களில் ஈடுபடாமல், இயற்றப்பட்டுள்ள முற்போக்கான சட்ட திட்டங்கள் மூலமாகவே அவைகளைப் பெற முடியும். இதனைக் கருத்திற் கொண்டு தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பணிகளில் நிலைப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கிடவும் உறுதி செய்ய இந்த அரசு சட்டங்களை இயற்றியுள்ளது. இந்த இரண்டு சட்டங்களும் 1982-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ளன. பணியிலிருந்து தவறாக வெளியேற்றப்படும் போதும் பணி நீக்கம் செய்யப்படும்போதும் நீதி கோரி தொழிலாளர்கள் நேரிடையாக தொழிலாளர் நீதி மன்றங்களில் முறையிட உரிமையளித்தும் அரசு சட்டம் இயற்றியுள்ளது. இச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1.3. வரைமுறைப்படுத்தப்படாத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் குறித்து அரசு எப்போதும் அக்கறைக் காட்டி வந்துள்ளது. கைத்தறித் துறையில் பணியாற்றும் இப்படிப்பட்ட இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் நலன் பெறும் வகையில், 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் (வேலை நிலமைகள் மற்றும் பல்வகை விதித்துறைகள்) சட்டத்தை அரசு இயற்றியிருக்கிறது.

1.4. 1981 ஆம் ஆண்டில் அரசு பல தொழில்களில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயித்துள்ளது. மேலும், முன்னர் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய வீதங்களை திருத்தி அமைத்துள்ளது. தொழிலாளருக்கு நன்மை பயக்கும் இச்சட்டங்களை செவ்விய முறையில் செயல்படுத்திட தொழிலாளர் நலத்துறை மற்றும் வருவாய்த்துறைகளிலுள்ள நிருவாக அமைப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது.

1.5. தொழிலாளர் நலத்துறையின் பணிகள் பற்றிய விவரங்கள் இவ்வறிக்கையின் இப்பகுதியில் கீழ்க்காணும் தலைப்புக்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன :—

1. தொழில் உறவுகள் குறித்தச் சட்டம்.
2. வேலை நிலைமைகள் மற்றும் பணி நிபந்தனைகள் குறித்தச் சட்டங்கள்.
3. ஊதியங்கள் குறித்தச் சட்டங்கள்.
4. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
5. தொழிலாளர் நலப்பணிகள்.
6. எடைகள்-அளவைகள் குறித்தச் சட்டம்.



## அத்தியாயம் 2.

### தொழிலுறவுகள் குறித்தச் சட்டம்.

2.1. தமிழ்நாட்டில் தொழில் அமைதியைப் பேணிக் காப்பதற்குப் பொறுப்பு வகிக்கும் தொழில் உறவு நிர்வாக அமைப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. எனவே, அரசு இந்த அமைப்பினை மேலும் திறமை வாய்ந்ததாக ஆக்கும் நோக்கத்துடன் ஐந்து தொழிலாளர் நலன் அலுவலர் பதவிகளை தொழிலாளர் நல உதவி ஆணையராக நிலை உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் கூடுதலாக இரண்டு தொழிலாளர் நல அலுவலர்களை நியமிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. ஓசூரில் வளர்ந்து வரும் தொழிற்பேட்டைப் பகுதியைக் கவனிக்க தர்மபுரி மாவட்டத்தில் ஒருவரும் பெருகிவரும் தொழில் தகராறுகளுக்குத் தீர்வுகாண மதுரையில் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 2.2. 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

1980, 1981-ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழ்க்காணும் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

விவர அட்டவணை.

| விவரம். | 1980 (1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை). | 1981 (1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1981-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,844 | 1,770 |
| ஆ. வரப்பெற்ற புகார்கள், எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை | 8,383 | 8,425 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| இ. முந்தைய ஆண்டுகளில் புலனாய்வு செய்யப் பட்ட புகார்கள், தகராறுகள் உட்பட தற்போது புலனாய்வு செய்யப்பட்ட புகார் கள், தகராறுகள் ஆகியவை குறித்த எண்ணிக்கை .. | 8,457 | 8,653 |
| ஈ. இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,667 | 1,791 |
| உ. வேறுவகையில் சமரச அலுவலர்களின் உத வியுடன் தீர்வு கண்ட தகராறு களின் எண்ணிக்கை | 5,748 | 5,789 |
| ஊ. தொழிலாளர் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை. | 1,036 | 1,035 |
| எ. 10(2)-ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை | .. | 33 |
| ஏ. நடுவர் தீர்ப்புக்கு விடப் பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 6 | 5 |
| ஐ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண் ணிக்கை .. | 1,770 | [illegible] |



## 2.3. வேலையை நிறுத்திவிடுதல்

அறிக்கை ஆண்டிலும் முந்தைய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பு நோக்கு விவரங்கள் வருமாறு.—

| விவரம் | 1980 (1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) | 1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல்நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 293 | 288 |
| ஆ. வீணான உழைப்பு நாட்கள் | 35,01,022 | 41,24,021 |

2.4. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில் வாரியான பகுப்பாய்வு, இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.5. 1981 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப் புகள், குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் வருமாறு:—

| | |
|---|---|
| (அ) சமரச அலுவலர்களால் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்க்கப்பட்டவை. | 55 |
| (ஆ) தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கப்பட்டவை | 17 |
| (இ) தொழிலாளர் நலத்துறை அரசு அலுவலர்களால் தீர்த்துவைக்கப்பட்டவை | 193 |
| (ஈ) மூடப்பட்டவை .. .. .. ... | 4 |
| (உ) ஆண்டின் இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை | 19 |
| மொத்தம் — | 288 |

2.6.

தொழிலாளர் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அந்த நீதி மன்றங்களால் பிரிவு 15-ன் கீழும் பிரிவு 33 சி (2)-ன் கீழும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இவைகளைக் காட்டும் விவர அறிக்கை இணைப்பு I ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.7. தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

இவ்வகையில், சென்னை பக்கிங்காம் கர்னாடிக் ஆலை லிமிடெட் நிறுவனம், சென்னை இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை) 'பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் ஆகியவற்றில் எழுந்த தகராறுகளுக்குத் தீர்வு கண்டது தொழிலாளர் நலத் துறையின் பாராட்டத்தக்க சாதனைகளாகும்.

இத்தகராறுகள் பற்றிய விவரங்கள் வருமாறு.—

(1) சென்னை, பி. அண்டு சி. ஆலை நிறுவனம்.—

(அ) கிட்டத்தட்ட 13,000 தொழிலாளர்கள் பணியற்றும் பி. அண்டு சி. ஆலையை அதன் நிருவாகம், 1–1–81 லிருந்து மூடிவிட்டது. ஆலை மூடப்பட்டது குறித்து, அதன் தொழிற் சங்கங்கள் தொழில் தகராறை எழுப்பின. இத்தகராறு குறித்து, தமிழ்நாடு அரசு மைய அரசுடன் தொடர்பு கொண்டது. மைய அரசின் ஆலோசனையின் படி தொழிலாளர் நலத்துறையின் ஓய்வு பெற்ற ஆணையர் திரு. கமலரத்தினம் அவர்களை தனி அலுவலராக மாநில அரசு நியமித்தது. ஆலையின் ஊதிய அமைப்பு, பணிச் சுமை, ஆகியவை குறித்து ஆராயவும், தொழிற் சங்கங்கள் ஆலை நிருவாகம், வணிக அமைச்சின் அலுவலர்கள் ஆகியோர்களிடையே ஏற்பட்ட உடன் பாட்டின் அடிப்படையில் பரிந்துரைப்பதற்கும் அவர் நியமிக்கப்பட்டார்.

(ஆ) இதற்கிடையில், ஆலை மூடப்பட்டதால், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துயர் துடைக்க, தமிழ்நாடு அரசு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 200 வீதம் ரூ. 26 இலட்சம் கருணை மானியமாக வழங்க அனுமதியளித்தது. தொழிலாளர்களுக்கென முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இவ்வளவு பெரிய தொகையை வழங்கியது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ) பின்னி ஆலையில் பணிச்சுமை/உற்பத்தித் திறன்/ செயல் முறை சம்பள அடிப்படை இவை குறித்து பி. அண்டு சி. ஆலை தனி அலுவலர் தனது முடிவுகளைத் தெரிவித்தார். அதன்



பிறகு, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்படி தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 6–6–1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று. அந்த ஆலையை மீண்டும் திறப்பதுதான் இந்த உடன்பாட்டின் முக்கிய நோக்கமாகும். அந்த ஆலை 19–6–1981–ல் மீண்டும் திறக்கப்பட்டது.

(2) இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை) பிரைவேட் லிமிடெட், சென்னை.

20–6–81 முதற் கொண்டு, சென்னையிலுள்ள தங்கள் நிறுவனத்தை மூடப்போவதாக 20–4–81 அன்று இந்நிறுவனத்தினர், 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 25 FFA பிரிவின் கீழ் அறிவிப்புக் கொடுத்தனர். இந்நிறுவனம் மூடப்படுவதைத் தவிர்க்க தொழிற் சங்கங்கள் உடனடியாகத் தொழிலாளர் நல ஆணையரை அணுகினர். இருதரப்பினரோடும் அவர் பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்கீழ் இவர்கள், அவர் முன்னிலையில் 8–5–81–ல் உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டனர். இந்த உடன்பாட்டின் பயனாக, சுமார் 800 தொழிலாளர்கள் வேலை பார்க்கும் அந்த நிறுவனம் மூடுவது தவிர்க்கப்பட்டது.

2.8. தொழில்வாரியான உடன்பாடுகள்.

(1) சங்கரன் கோவிலில் உள்ள கைத்தறி, விசைத்தறி ஆலைகள்: சங்கரன் கோவிலில் உள்ள கைத்தறி, விசைத்தறி ஆலைகளைச் சேர்ந்த சுமார் 8,000 தொழிலாளர்கள் சம்பள உயர்வு முதலியவை தொடர்பான மதுரை, தொழிலாளர்நல துணை ஆணையாளரின் சமரச முடிவைச் செயற்படுத்த வேண்டுமென வலியுறுத்தி 26–3–1981-ல் வேலை நிறுத்தம் தொடங்கினர். திருநெல்வேலி, தொழிலாளர் நல துணை ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அப்பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும், தொழிலாளர்நல அமைச்சரும் தங்கள் ஆலோசனைகளை நல்கினர். அவர்களுடைய அறிவுரைப்படி 15–5–1981-ல் உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு 16–5–1981–ல் மீண்டும் வேலை தொடங்கியது.

(2) திருப்பூரிலுள்ள பனியன் ஆலைகள் : சம்பள உயர்வு கோரியும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயற்படுத்தக் கோரியும், திருப்பூர் பகுதியிலுள்ள பனியன் ஆலைகளைச் சேர்ந்த சுமார் 20,000 தொழிலாளர்கள் 4–3–81 லிருந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். சென்னை தொழி

லாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அப்போது தொழிலாளர் நல அமைச்சரும் ஆலோசனை வழங்கினர். அதன் பிறகு 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 23–4–1981-ல் உடன்பாடு ஏற்பட்டது.

(3) தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் : மாநிலம் முழுவதிலும் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 7,500 பேர், சம்பள உயர்வு, பணி நிலைமைகளில் முன்னேற்றம் முதலியன கோரி தொழில் தாவாவினை எழுப்பினர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் அப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். 6–4–1981-ல் உடன்பாடு ஏற்பட்டது.

2.9. பெருந் தொழிற்சாலைகளில் உடன்பாடுகள்.

(1) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி—இந்நிறுவன நிர்வாகத்தினர் அளிக்க முன்வந்ததைக்காட்டிலும் அதிகஅளவு ஊதியக்கொடை வழங்கக்கோரி, இந்நிறுவனத் தொழிலாளர்கள் சுமார் 18,000 பேர் கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர். அதன் காரணமாகத் தொழில் அமைதியின்மை ஏற்பட்டது. உற்பத்திக் கேற்ற ஊதியக் கொடை வழங்க வேண்டுமென தொழிளாலர்கள் கோரினர். தொழிலாளர் நல ஆணையர் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார், இப்பேச்சுவார்த்தையின் பொழுது தொழிலாளர் நல அமைச்சரும் தனது ஆலோசனைகளை நல்கினார். நேரடி நடவடிக்கை எதிலும் ஈடுபட வேண்டாமென அமைச்சர் கேட்டுக் கொண்டார். சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களும், அதை ஏற்றுக் கொண்டன. அமைச்சரின் தலையீட்டின் பேரில், மத்திய அரசைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட துறையானது, முதலில் இந்நிறுவனம் வழங்க முன் வந்த ஊதியக் கொடையைக் காட்டிலும் அதிகத்தொகையை வழங்க ஒப்புக் கொண்டது. இது தொழிலாளர்களுக்கு மன நிறைவை அளித்தது. இது குறித்து 17–11–1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாகி தொழில் உறவு இயல்பான நிலைக்குத் திரும்பியது.

(2) மதுரை கோட்ஸ் லிமிடெட் ; 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளுக்கு ஊதியக் கொடை வழங்குவது தொடர்பாக, மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள இந்நிறுவனத்தைச் சேர்ந்த 16,000 தொழிலாளர்கள் 15–10–81 லிருந்து தொடங்கி, பல்வேறு நாட்களில் பகுதியாகவோ முழுமையாகவோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து 30–6–81 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டுக்கு ஊதியக் கொடையும்



ஊக்கத் தொகையும் வழங்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தொழிலாளர் இணை ஆணையர் 21–10–81-ல் ஆலோசனை கூறினார். அவருடைய ஆலோசனையை ஏற்று, தொழிலாளர்கள் 22–10–1981-ல் மீண்டும் வேலைக்கு திரும்பினர்.

(3) சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்; 1980–81 ஆம் ஆண்டுக்கு ஊதியக்கொடை வழங்குவது தொடர்பாக சேரன் போக்குவரத்து கழகம், சேரன் பொறியியற் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கும் அவற்றின் தொழிலாளர்களுக்குமிடையே ஒரு தொழில் தகராறு எழுந்தது. கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின்படி 12–10–1981-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(4) நெய்வேலி செராமிக்ஸ் அண்ட் ரிப்ராக்டரிஸ் லிமிடெட், வடலூர் : மேற்படி நிறுவனம் பணியாளர் சங்கமானது 1979–80 ஆம் ஆண்டுக்கு 50 சதவீத ஊதியக்கொடை வழங்க வேண்டும், 1980 செப்டம்பருக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும், அன்றாடப் பணியாளர்களின் பணியை முறைப்படுத்த வேண்டும் ஊதியத்தை உயர்த்த வேண்டும் ஆகிய கோரிக்கை களை முன் வைத்தனர். இக்கோரிக்கைகள் குறித்து நேரடிப் பேச்சு வார்த்தை ஏதும் நடத்த நிருவாகத்தினர் முன் வராத தால், இந்நிறுவனத் தொழிலாளர்கள் 16–10–80 முதற் கொண்டு வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அதனை அடுத்து, நிருவாகத்தினர் 17–10–80 முதற்கொண்டு கதவடைப்புச் செய்தனர். கடலூர் தொழிலாளர் நல அலுவலர், சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையர் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகள் பலனளிக்க வில்லை. எனவே, இப்பிரச்சினையை தொழிலாளர் நல ஆணை யர் அலுவலகம் தீர்வுக்கு எடுத்துக் கொண்டது. தொழிலாளர் நல அமைச்சரின் முயற்சியால் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் 18–4–1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று.

2.10. ஏனைய உடன்பாடுகள் :

(1) இலக்குமி ஆட்டோமாட்டிக் லூம்ஸ், ஒசூர் : இந்த நிறுவனத் தொழிலாளர்கள் 7–8–81 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தாலும், வன்முறை செயல்களில் ஈடுபட்டதை யடுத்தும், 13–8–81-லிருந்து தொழிற்சாலையை கதவடைப்புச் செய்வதாக நிருவாகம் அறிவித்தது. சென்னை தொழிலாளர் நல துணை ஆணையர் (ஆய்வு)அவர்களின் முன்னிலையில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்படி 12–11–1981-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன் பாட்டின்படி, நிருவாகம் 16–11–1981-லிருந்து கதவடைப்பை நீக்கியது.

(2) தென் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை :

உற்பத்தியைப் பெருக்க தொழிலாளர்கள் பணியாற்றியுள்ளதைக் கருத்தில் கொண்டு ஊக்கத் தொகை வழங்கக் கோரி, சிறுமுகை தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் நிறுவனத் தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பினர். ஊக்கத்தொகை அளவு குறித்து இரு தரப்பினரும் உடன்பாடு காண இயலாததால் சென்னை தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரின் ஆலோசனை கோரப்பட்டது. இப்பிரச்சினை குறித்து இரு தரப்பினரோடும் அவர் பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக, 23–10–1981 இல் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்படி ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(3) திரு. மீனாட்சி மில்ஸ் குரூப் :

மதுரை, பரவை மற்றும் மணப்பாறையிலுள்ள மேற்படி ஆலைகளில் பணியாற்றும் சுமார் 4,000 தொழிலாளர்கள் 1980–81 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை வழங்கக் கோரி 16-1–1981-லிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் நல இணை ஆணையர் இரு தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி, தொழிலாளர்களுக்கு ஊதியக் (சாடைத் தொகை எவ்வளவு என்பதை முடிவு செய்யும்வரை ஊதியக் கொடை முன்பணம் வழங்கலாம் என அறிவுரை நல்கினார். இதன் பயனாக வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு, 30–11–1981–லிருந்து தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மீண்டும் பணியாற்றத் தொடங்கினர்.

(4) சீதாலட்சுமி மில்ஸ் குரூப் :

1980–81-ம் ஆண்டிற்கான ஊதியக்கொடை பிரச்சினை மீது மதுரை சீதாலட்சுமி மில்ஸ் குரூப், தேனியைச் சேர்ந்த போஜராஜ் டெக்ஸ்டைல்ஸ் இராமநாதபுரத்தில் உள்ள அய்யப்பன் டெக்ஸ்டைல்ஸ், இராசகம்பீரம், வரதலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சில ஆலைகளில் 19–10–1981-லிருந்தும் ஏனையவற்றில் 23–10–1981 லிருந்தும் வேலை நிறுத்தம் தொடங்கியது. சென்னை தொழிலாளர் நல துணை ஆணையர் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, ஊக்கத் தொகையும், ஊதியக்கொடையும், வழங்க வேண்டுமென்று 5–12–1981 அன்று அறிவுரை நல்கினார். இதன் பயனால் தொழிலாளர்கள் 6–12–1981 லிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.



(5) நாதியம்மாள் டெக்ஸ்டைல் மில்ஸ், லிமிடெட்., அழியா நிலை :

மேற்படி ஆலையில் பணியாற்றும் சுமார் 500 தொழிலாளர்கள், 1980–81 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை கோரி 11–10–1981 லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல இணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தி 17–11–1981-இல் அவர்களுக்கு 1980–81 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடையினை வழங்கும்படி அறிவுறுத்தினர். இதன் பயனாக, 20–12–1981 அன்று தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

2.11. முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்பட்ட விவரங்கள் :

(1) சென்னை! பாலு கார்மண்ட்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய 275 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2001- வழங்க 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

(2) சென்னை, கேஞ்சஸ் பிரிண்டிங் இங்க் பேக்டரியில் பணியாற்றிய 78 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.200 வழங்க 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது.

(3) 'பி' அண்டு 'சி' மில்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 13,000 தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும், ரூ. 200 வீதம் ரூ. 26 லட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

2.12. தொழிற் சங்கங்கள் :

தமிழ் நாட்டில் 1–1–1981 அன்று உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,498 ஆக இருந்தது. இவ்வாண்டில் 262 தொழிற்சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டன. 218 தொழிற்சங்கங்களின் பதிவு. விலக்கம் செய்யப்பட்டது. 4 தொழிற்சங்கங்கள் பதிவு விலக்கம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது 5 தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஒரு தொழிற்சங்கம், மற்றொரு சங்கத்தோடு இணைக்கப்பட்டது. ஆக 1981–ம் ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,840.

2.13. முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள் :

தொழிலாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு குழுக்களை அமைத்து அவைகளின் ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் தொழிலாளர் நலச் சட்டங்களை

வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியுமென்று அரசு நம்புகிறது. சென்ற ஆண்டு செயலாற்றிய சட்டப்படி அமைந்த குழுக்களும், ஏனைய குழுக்களும் வருமாறு :

சட்டப்படி அமைத்த குழுக்கள்.

(1) குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை வாரியம்.

(2) அட்டவணையிட்ட வெவ்வேறு தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்க சென்ற ஆண்டு அமைக்கப்பட்ட குழுக்கள்.

(3) மலைத் தோட்ட தொழிலாளர் (வீட்டு வசதி) ஆலோசனை வாரியம்.

(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு.

(5) மாநில ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆலோசனை வாரியம்.

(6) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு.

ஏனைய குழுக்கள் :

(1) மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியம்.

(2) மாநில மதிப்பீடு-செயற்படுத்தும் குழு.

(3) மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

(4) தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த குழு.

(5) சிறுவர்களைப் பணியில் அமர்த்தல் பற்றிய மாநில ஆலோசனை வாரியம் மற்றும் குழு.

(அ) வாரியம் : சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் குறித்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சகம் அமைத்த உயர் அதிகாரக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு அரசு மாநில தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையின் கீழ் மாநில ஆலோசனை வாரியம் 1981 ஏப்ரலில் அமைத்தது. இவ் வாரியத்தின் பணிகள் வருமாறு :

(i) சிறுவர்களை பணியிலமர்த்துவது தொடர்பாகத் தற்போதுள்ள சட்டங்களின் செயல்முறை பற்றி ஆய்வு செய்தல்.

(ii) பணி புரியும் சிறுவர்களின் நலனுக்கான சட்ட நடவடிக்கைகளையும் நலப்பணிகளையும் எடுத்துரைத்தல்.

(iii) பணிபுரியும் சிறுவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளின் முன்னேற்றத்தை ஆராய்தல்.



(iv) எந்தத் தொழில்கள் மற்றும் பகுதிகளில் கொஞ்சம் கொஞ்சமாக சிறுவர்கள் பணியிலமர்த்தப்படுவதை தவிர்க்கலாம் என்பது பற்றியும் அது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரைத்தல்.

இவ்வாரியம் 24–6–1981 அன்று கூடி, தமிழ் நாட்டில் சிறுவர்களைப் பணிக்கமர்த்தல் சம்பந்தப்பட்ட பல சட்டங்களின் செயல் முறையினை ஆராய்ந்து பணி புரியும் சிறுவர்களுக்கு முறை சாராக் கல்வி, தொழிலாளர் ஈட்டுறுதி திட்டப் பயன்கள் முதலியவை தொடர்பாகச் சில பரிந்துரைகளைச் செய்துள்ளது.

(ஆ) குழு :

தீப்பெட்டித் தொழில், பட்டாசுத் தொழில் போன்றவற்றில் பணி புரியும் சிறுவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளைச் செயல் படுத்தவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுவர்களைப் பணிக் கமர்த்துவது பற்றிய பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் தொடர் புடைய பல்வேறு அமைப்புகளின் பணிகளை ஒருங்கிணைக்கவும், அரசு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமை யின் கீழ் ஆலோசனைக் குழு ஒன்றை1980 அக்டோபர் திங்களில் அமைத்தது. இக்குழுவில், தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர் களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொழிற் சங்கப் பிரதி நிதிகளும் தொழிலதிபர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உள் ளனர். இந்த ஆலோசனைக் குழு 22–7–1981 அன்று சிவகாசியில் கூடியது. மீண்டும் இக்குழு 19–1–1982 அன்று கூடியது.

(6) சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தொழில் நிறுவனங்களில், நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்கமளிக்கும் பொருட்டு, சுமுகமான தொழிலுறவினை நிலவச் செய்வதில் பாராட்டத்தக்க பணியாற்றிய நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகள் அளிக்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், பரிசுக்குரியவர் களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதி களுடன், உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு 1981ல் பல முறை கூடி 1980 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற் குரியவர்களைத் தெரிந்தெடுத்தது. இவர்களுக்கு முதற் பரிசாக சுழற் கோப்பை ஒன்றும் நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றும் இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் அளிக்கப்படும்.

## அத்தியாயம் 3

### வேலை நிலைமைகள் மற்றும் பணி நிபந்தனைகள் குறித்த சட்டங்கள்.

**3–1–1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் :**

(1) 1981 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 9,681 தொழிற்சாலைகளும், ஆண்டு இறுதியில் (31–12–81 ஆம் நாள் நிலவரப்படி) 10,444 தொழிற்சாலைகளும் இருந்தன. இவற்றில் 6,40,850 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வாண்டில் 1,149 தொழிற்சாலைகள் புதிதாக இச்சட்டத்தின் கீழ் வந்தன. 396 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டன. புதிய தொழிற்சாலைகளைப் பதிவு செய்வது குறித்து இவ்வாண்டில் இத்துறை முனைப்பாக நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக மேலும் பல தொழிற்சாலைகள் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதனால், தொழிற்சாலைகள் சட்டத்தின்படியும், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களின்படியும் கிடைக்கும் பயன்களை அதிகத் தொழிலாளர்கள் பெற இயலும்.

(2) இச்சட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் முறையே III, IV ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

(3) தொழிற்சாலைகள் சட்டத்தினையும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்டுள்ள ஏனைய சட்டங்களையும் தீவிரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன், அரசு, தொழிற்சாலை ஆய்வாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் பணியைச் சீரமைத்துள்ளது. கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்ட தொழிற்சாலை தலைமை இணை ஆய்வாளர் அலுவலகம், சென்னை, ஈரோடு, ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட இரு தொழிற்சாலைத் தலைமைத் துணை ஆய்வாளர் அலுவலகங்களும், சென்னை, கோயம்புத்தூர் திருச்செங்கோடு ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்ட மூன்று தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகங்களும் திறம்படச் செயல்படத் தொடங்கியுள்ளன. இவற்றைத் தவிர, சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பாகத் தனிக்கவனம் செலுத்தவும், பெருவாரியானதீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளை தொற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காகவும், சிவகாசியில், மேலும் ஒரு தொழிற்சாலை ஆய்வாளர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**3.2. தொழிலாளர்களின் பாதுகாப்பு :**

(1) 1981 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரம் வருமாறு—

| ஆண்டு. | உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 | 47 | 27,398 |
| 1981 | 47 | 24,815 |

(2) தொழிற்சாலைகள் சட்டத்தின் செயல்வரம்பிற்குள் பெருவாரியான தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் பெருமளவிற்குக் குறைந்துள்ளன. அதிலும், குறிப்பாக, தொழிற்சாலை ஆய்வாளர்கள் இடை விடாது தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டு தொழிலாளர் நலனைக் கவனித்து வந்ததன் பயனாக உயிரிழப்பு அல்லாத விபத்துக்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக, பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளவும், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் தொழிற்சாலைகளில், தனிக்கவனம் செலுத்தி விபத்துக்களைத் தடுப்பதற்காகவும் தொழிற்சாலை ஆய்வாளர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

**3.3. அரசு வழங்கும் பாதுகாப்பு பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள்.**

(state safety Awards and shramvir Awards).

(1) தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடையே தொழில் பாதுகாப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற் கொள்ளவும், அரசு பாதுகாப்புப் பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் (S`ramvir Aw rd's) ஆகிய இரு தனிப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயல் படுத்திக் கொண்டிருக்கிறது.

(2) தொழிற்சாலைப் பாதுகாப்பு, அதிக உற்பத்தி, உற்பத்திச் செலவைக் குறைத்தல், பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தல் போன்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான கருத்துக்களைத் தெரிவிக்கும் தொழிலாளருக்கு அவருடைய பணியையும், ஆலோசனையையும் போற்றிப் பாராட்டும் வகையில் மாநில அளவிலான 'உழைப்பு வீரர்' என்னும் பரிசு அளிக்கப்படுகிறது. இப்பரிசுத் திட்டத்தின் கீழ், 1980 ஆம் ஆண்டில், 80 மனுக்கள் வரப்பெற்றன.

(3) அரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசுகள், விபத்துக்களைக் குறைக்க வேண்டுமென்ற போட்டி மனப்பான்மையை பல்வேறு தொழிற்சாலை நிர்வாகத்தினரிடையே உருவாக்கும் நோக்கங் கொண்டவை. விபத்துக்களைப் பெருமளவு குறைத்துள்ள தொழிற்சாலைகளுக்கு, அவற்றின் பணியைப் பாராட்டும் வகையில் இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பரிசுகள் பெறுவதற்காக 776 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

(4) இத்திட்டத்தின் கீழ் பரிசு பெறத் தகுதியுடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டுவிட்டன ; அவர்களுக்கு விரைவில் பரிசுகள் வழங்கப்படும்.

3.4. பாதுகாப்புப் பிரிவு :

(1) இந்த ஆண்டு மதுரையில் ஒரு பாதுகாப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. பெருவாரியான விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும் தொழிற்சாலைகளில் அவ்வாறு விபத்துக்கள் பெருமளவில் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராயவும், பாதுகாப்பு ஆய்வினை மேற் கொள்வதும் இப்பிரிவின் முக்கியப் பணிகளாகும். இப்பாதுகாப்புப் பிரிவு, தொழிற்சாலையில் பாதுகாப்புக்குரிய கருவிகள், சாதனங்களின் வடிவமைப்பினைத் தெரிந்தெடுத்துக் கூறுவதோடு, தொழிற்சாலையின் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்துவது குறித்து தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனையும் வழங்குகிறது. இப்பிரிவு, தொழிற்சாலைப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து, தொழிலாளர்களுக்கும், மேற் பார்வையாளர்களுக்கும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

(2) இவ்வாண்டில், தொழிலாளர்கள், மேற் பார்வையாளர்களுக்காக பல பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. இக்காலத்தில் மதுரை, மகாலட்சுமி நூற்பாலை, அம்பாசமுத்திரம், மதுரை கோட்ஸ், ஆறுமுகநேரி, தாரங்கதாரா கெமிக்கல்ஸ், சிவகாசி, இராமமூர்த்தி மெட்டல் டெகரேட்டிங் இண்டஸ்ட்ரி ஆகிய தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(3) இப்பாதுகாப்புப் பிரிவு தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக புதிய முறைகளைக் கண்டறியும் ஆராய்ச்சி வளர்ச்சிப் பிரிவாகச் செயலாற்றுவதோடு, தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும் தொழிற்சாலை தன் முறையில் நடை பெறுவதற்கும் வகை செய்கிற்து.



(4) 1981 ஆம் ஆண்டில் எட்டு திரைப்படங்கள் வாங்கப்பட்டன. தற்போது தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், தொழிற்சாலை பாதுகாப்பு, சுகாதாரம் குறித்து 40 திரைப் படங்கள் உள்ளன. தொழிலாளர்களின் நலன் கருதி இவற்றைத் திரையிட்டுக் காட்ட தொழிற்சாலைகளுக்கு இவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன.

3.5. உற்பத்தித் திறன் :

தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, ஆகிய இடங்களில் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் ஒவ்வொன்றும் அவை செலவிட்ட தொகையில் 50 சதவீதத் தொகை அல்லது ரூ. 1,500 இவற்றுள் எது குறைவானதோ , அத்தொகை ஒவ்வொரு ஆண்டிலும், பொது மானியமாக, இக்குழுக்களுக்கு மாநில அரசால் வழங்கப்படுகிறது.

3.6. தொழிற்சாலையில் உடல் நலம் பேணும் பிரிவு :

(1) மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலைச் சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனைக்கு ஏற்பாடு செய்தல், உயிரின மாதிரிகளை ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆய்தல் இவை இப்பிரிவின் பணிகளாகும்.

(2) இந்த ஆண்டில் 72 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 32 தொழிற்சாலைகளிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. இரத்தம் சிறுநீர் மாதிரிகள் பல பரிசோதனை செய்யப்பட்டன. இச் சோதனைகளின் முடிவுகள் தொழிற்சாலைகளின் நிர்வாகங்களுக்கு தெரிவிக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு உடல்நலக் கேடு விளையாமல் இருக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு , தூசி புகை அல்லது ஆவியை அவை தோன்றுமிடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவதற்கான வெளியேற்று வசதிகளை அமைத்திடுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஈயம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய நச்சு நோய் குறித்தும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

[1982 மார்ச் 15

(3) நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழில் பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் இது போன்ற பரிசோதனைகள் நடத்த மருத்துவப் பாதுகாப்புப் பிரிவு ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டு 24—10—1981 முதல் செயல்பட்டு வருகிறது.

(4) தொழிலாளர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ நிவாரண நோய் தடுப்புப் பணிகளை மதுரையிலுள்ள இந்த மருத்துவப் பாதுகாப்புப் பிரிவு மேற்கொள்கிறது.

(5) இந்த ஆண்டு முதற்கொண்டு சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்ட ஆறு பிரிவுகள், சென்னை, வேலூர் சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படத் தொடங்கியுள்ளன. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 95 ஆம் விதியின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள தொழில்களான முந்திரிக் கொட்டை பதப்படுத்தும் தொழிற்சாலைகள், இராசயனத் தொழிற்சாலைகள், மண்பாண்டம், பீங்கான் தொழிற்சாலை போன்ற ஆபத்தான தொழில்களில் உள்ள தொழிலாளர்களைப் பரிசோதிப்பதே இந்த மருத்துவர்களின் முக்கியப் பணியாகும். உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உடல் நலனை குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை இவர்கள் சோதனை செய்கின்றனர்.

3.7. தொழிலாளர் நல சட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பினை வலுப்படுத்தல்.

தொழிலாளர் நல சட்டங்களைச் செயல்படுத்தும் பணியாளர் அமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தோடு மேலும் 3 தொழிலாளர் நல ஆய்வாளர் பதவிகளை இந்த ஆண்டு அரசு ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் ,சென்னை, காஞ்சிபுரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயலாற்றுகின்றனர். ஆய்வாளர் அலுவலகத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரித்த பிறகு, தொழில் நிறுவனங்களின் ஆய்வுகள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இவை பெருமளவு உயர்ந்துள்ளது என்பதை III, IV ஆம் இணைப்பிலுள்ள அட்டவணைகளிலிருந்து அறியலாம்.

3—8—1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் :

(1) இச்சட்டத்தின் கீழ் உள்ள கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த விவரங்கள் தொடரப்பட்ட வழக்குகள், பிரிவு 41ன் கீழ் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகிய விவரங்களை III, IV ஆம் இணைப்புகளிலுள்ள அட்டவணைகளில் காணலாம்.



1932 மார்ச் 15]

(2) இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதிதுறைகள், மாமல்லபுரம் நகரியத்திற்கும், கைலாசபுரம் பேரூராட்சிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(3) விதிகளில் திருத்தம்.

(அ) தமிழ் நாடு கடைகள் நிறுவனங்கள் விதிகளின் 9, 11 ஆம் விதிகள் திருத்தப்பட்டன. இந்தத் திருத்தத்தின்படி, இச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.

(இ) 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் விதிகளில் செய்யப்பட்ட மற்றொரு திருத்தத்தின்படி 'K' படிவத்தில் உள்ள விடுப்பு பதிவேடு திருத் யமைக்கப்பட்டுள்ளது.

து

டித்

(4) 51 ஆம் .பிரிவின்கீழ் விண்ணப்பங்கள் : ட்ட

சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் செய்துகொள்ள கயை பரிதுவதன் விண்ணப்பங்கள் இந்த ஆண்டு தொடக்கத்தில் வரகள் நல இருந்தன. 1981 ஆம் ஆண்டில் 4 விண்ணப்பங்கள் ரூபாய் மொத்தமுள்ள 11 விண்ணப்பங்களில் தொழிலாளா மானிக்கப் யாளர் 7 விண்ணப்பங்கள் குறித்து ஆணை பிறப் (இலட்சம் ஆண்டு இறுதியில் 4 விண்ணப்பங்கள் முடிவு மலிருந்தன.

லாளர்கள்

3—9—1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் டிற்காக ளது. 9

(1) இச்சட்டத்தின் கீழ் உள்ள உணவகங்களின் ழுவிற்கு மேற்கொள்ளப ஆவார். வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், இச்சட்டத்தின் 19 ஆ பீடித் கள் தொடரப்பட்ட வழக்குகள், மேல்முறையீடுகள் ஆகிய வி்ய பல் படி முடிவு செய்யப்பட்ட இணைப்புகளிலுள்ள அட் II முதல் V வரையுள்ள களில் காணலாம்.

(2) இந்த ஆண்டில், இச்சட்டம், செங்கற்பட்டு மாவழி திருச்சிராப்பள்ளி மாவட ாமல்லபுரம், நகரியத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. கைலாசபுரம் பேரூராட்சிக்கும்

(3) இந்த ஆண்டில் , தொழிலாளர் நல ஆணையாளர், இ டத்தின் 27(2) பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஓ ண்ணப்பத்தை விசாரித்து ஆணை பிறப்பித்தார்.

### 3.10. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (நிலைமைகள்) சட்டம், 1968 ஆம் ஆண்டு தமிழ் நாடு சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள்

(1) இச்சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட உரிமத் தொ ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொட பட்ட வழக்குகள் ஆகிய விவரங்களை II முதல் IV வரையுள் இணைப்புகளிலுள்ள அட்டவணைகளில் காணலாம்.

(2) திருத்தங்கள் :

தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் தயாரிக்கும் பீடிகளில் பெரும் அளவை தள்ளி விடுவதால் தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பு ஏற்படுத்துவதைப் தவிர்ப்பதற்காக, அரசு, 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளில், 33-ஏ என்னும் புதிய துணை விதியைச் சேர்த்தது, இவ்விதியின்படி, தொழிலதிபர், ஒரு தொழிலாளரால் யாரிக்கப்படும் பீடி அல்லது சுருட்டு அல்லது இவை இரண்டி ் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட பீடி அல்லது சுருட்டு அல்லது விரண்டையும் தள்ளுபடி செய்யக்கூடாது.

த் தொழிலாளருக்கு ஊதிய உறுதி :

ான்றுக்குக் குறைந்தது 500 பீடிகளாவது சுற்றப் ன மூலப்பொருள்களை பீடித் தொழிலாளர்களுக்குத் பர்கள் வழங்காதபோது, நாளொன்றிற்கு 1,000 பீடி வதற்கு நிர்ணயித்துள்ள குறைந்த அளவு தொகையில் நம் தொகையை ஊதியமாக வழங்க உத்திரவாதம் வகையில் அரசு ஆணையிட்டது. இந்த ஆணை 1981 நாள் முதல் செயலுக்கு வந்தது.

ந் தொழிலாளர் நலன் :

பீடித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் பணிகளை மேற் ள மத்திய அரசு ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ப்பு, துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடும் உதவி னும், பீடித் தொழிலாளர்களுக்காக பல்வேறு நலப்பணி ளை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

(i) பீடித் தொழிலாளர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப் பதற்காக, மேலப்பாளையத்தில் நிலையான-நடமாடும் மருத்துவ பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.



19

(ii) பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ள ளுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்க ஆங்கில மருத்துவமுறை மருத்தகங்கள் வேலூருக்கு அருகாமையில் உள்ள சாத்துவாச் சேரியிலும், தென்காசியிலும், ஈரோட்டிலும் செயல்பட்டு வரு றன.

(iii) நிலையான-நடமாடும் மருந்தகம் ஒன்றை அமைப் பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டு, அம்மருந்தகம் திருச்சியில் அமைக் கப்பட்டுள்ளது.

(iv) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின்கீழ், பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 2,501 மாணவர்களுக்கு 1,04,640 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில், படிப்புதவித் தொகை வழங்குவதற்கு, உரிய விண்ணப்பங்கள் பெங்களூர், பீடித் தொழிலாளர் நல ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பொருளாதார வகையில் நலிந்த நிலையில் உள்ளவர் களுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வேலூர், சாத்து வாச்சேரியில் கட்டப்பட்ட வீடுகளில், 150 வீடுகளை பீடித் தொழிலாளர்களுக்கு, ஒதுக்கவும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் ஆகும் செலவில் 10 சதவீதத் தொகையை வீடு பெறும் பீடித் தொழிலாளர் முதற்கண் செலுத்துவதன் பேரிலும், பெங்களூர் மத்திய அரசு பீடித் தொழிலாளர்கள் நல ஆணையாளரால் ஒவ்வொரு வீட்டிற்கும் 1,500 ரூபாய் செலுத்தப்படுவதன் பேரிலும், அவ்வீடுகளை ஒதுக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கிணங்க, உதவி மானியமாக 2.25 இலட்சம் ரூபாய் மைய அரசு இதற்காக அனுமதித்துள்ளது.

(5) குழுக்கள் : 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாட்டிற்காக ஆலோசனைக் குழு ஒன்றை மைய அரசு அமைத்துள்ளது. 9 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இக்குழுவிற்கு தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் தலைவர் ஆவார். இக்குழு இவ்வாண்டில், மும்முறை கூடி இம்மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்குரிய பல் வேறு நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது.

### 3.11. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் :

(1) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் இத்துறையைச் சேர்ந்த அலுவலர்களால் தீவிரமாகச் செயலாக்கப் பட்டு வருகின்றன.

(2) வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், ஆய்வர்ச் 15 நடத்திய ஆய்வுகள், விதித்துறைகளை மீறியதற்காகத் தெ பணி பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முத பீடி, வரையிலுள்ள இணைப்புகளில் காணும் விவர அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளன.

3.12. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் கை, ஏனைய செய்தித் தாள் நிறுவனப் பணியாளர்கள் (ப நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம் :

(1) இச்சட்டத்தின் விதித்துறைகள், தொழிலாளர் நல ஆய் வாளர்களாலும், தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்களாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் ஆகியவர்களோடு, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தொடர்பு அலுவலரும் இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளராகப் பணி புரிவர் என்று அரசு அறிவித்துள்ளது. 1981 ஆம் ஆண்டு இறுதியில் இருந்தவாறு, இச்சட்டத்தின் கீழ் 54 நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், 3,500 பத்திரிகையாளர்கள் பணிபுரிகின்றனர்.

(2) 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின்கீழ் செய்தித்தாள் நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன. மேற்கூறிய சட்டத்தின் விதித்துறைகளை செய்தித் தாள் நிறுவனங்களுக்கு நீட்டிக்க வரைவு அறிவிக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

(3) செய்தித்தாள் நிறுவனங்கள் குறித்து அமைக்கப்பட்ட பலேக்கர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்திய தன் விளைவாக, இச்சட்டத்தின் கீழ் வருகின்ற பத்திரிகையாளர் கள், ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் வேலை இழக்காமல் அவர்களின் நலனைக் காக்க மைய அரசு 1981 ஆம் ஆண்டு 12 ஆம் அவசரச் சட்டத்தின் வாயிலாக இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில், திருத்தத்தைச் செய்துள்ளதோடு 16 A என்னும் புதிய பிரிவொன்றையும் சேர்த்துள்ளது.

(4) செய்தித்தாள் நிறுவனங்கள் குறித்த பலேக்கர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகள், செயற்படுத்தப்படுவதை, துறை அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

3.13. 1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

மருந்து தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங் களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம், இதன் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல் படுத்தப்படுகிறது.



3.14. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப் படுத்துதலும் நீக்குதலும்) சட்டம்.

(1) இச்சட்டத்தின் கீழ், 1981 ஆம் ஆண்டில், 395 பேர் முதன்மைத் தொழிலதிபர்களாகவும், 972 பேர் ஒப்பந்தக் காரர்களாகவும் பதிவு செய்யப்பட்டனர்.

(2) செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் IV வரையிலான இணைப்பு களில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(3) இம்மாநிலத்தில் பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்கள், அவர்களுடைய பணிநிலைமைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய துணைக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(4) சிமிட்டித் தொழில் குறித்த, துணைக் குழு அளித்த பரிந்துரையின் பேரில், இத்தொழிலில் கீழ்க்காணும், செய்முறை களில், ஒப்பந்தத் தொழிலாளர்களை 1-3-81 ஆம் நாளிலிருந்து நியமிக்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்தது :—

(அ) சிமிட்டியை சிப்பம் கட்டும் இல்லத்தில் அதனைப் பைகளில் சிப்பம் செய்யும் முறை ; மற்றும்,

(ஆ) கோணிப்பைகளில் அச்சிடுதல்.

3.15. 1946 ஆம் ஆண்டு தொழில்வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1981 ஆம் ஆண்டில், 66 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால், சான்றளிக்கப் பட்டன. மேலும் 7 தொழில் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் நிலை ஆணைகளில் செய்யப்பட்ட திருத்தங் களுக்கும் சான்றளிக்கப்பட்டது. இவ்வாண்டில், இச்சட்டத்தின் கீழ் 9 மேல் முறையீடுகளை மேல்முறையீட்டு மன்றங்களாகச் செயல்படும் தொழிலாளர் நீதி மன்றங்கள் விசாரித்துத் தீர்ப்பு அளித்துள்ளன.

3.16. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

இவ்வாண்டில் ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டவை, இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காகத் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் IV வரையி லான இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ளன.

3.17. 1957 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.

(1) 1981 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 419 மலைத் தோட்டங்கள் இருந்தன, இவற்றில் சுமார் 90,600 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். 1–1–81 ஆம் நாளிலிருந்து 31–12–81 ஆம் நாள் வரையிலுள்ள கால அளவில் 1,060 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 21 மலைத் தோட்டங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 270 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்த 6 மலைத்தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டன. ஆக, இந்த ஆண்டின் இறுதியில் 434 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன.

31–12–1981 ஆம் நாளன்று இருந்தவாறு இவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை தோராயமாக 91,390 ஆகும்.

(2) இச் சட்டத்தின் விதித்துறைகள், விதிகள் ஆகியவற்றை மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மலைத்தோட்ட ஆய்வாளர்கள் எழுவர் செயற்படுத்தி வருகின்றனர். தொழிலாளர் நல இணை ஆணையர் மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

(3) செய்யப்பட்ட ஆய்வுகள், இச்சட்டம், விதிகளின் விதித் துறைகளை மீறியதற்காக வழக்குத் தொடர அனுமதிக்கப் பட்டவை, ஆகியவை குறித்த விவரங்கள் II லிருந்து IV வரையிலான இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ளன.

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் விதிகளைச் சேர்ந்த 51 (2) ஆம் விதியின் கீழ் குடியிருப்புகளிலிருந்து தொழிலாளர்களை வெளியேற்றுமாறு கோரி, நிர்வாகத்தினர் தாக்கல் செய்த 4 விண்ணப்பங்களை கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் முடிவு செய்தது.

3.18. 1981 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் (திருத்தச்) சட்டம்.

(1) மத்திய அரசு, மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தை 1981 ஆம் ஆண்டு, மலைத்தோட்டத் தொழிலாளர்கள் (திருத்தச்) சட்டத்தினால் (சட்டம் எண். 58/1981) திருத்தியுள்ளது : இச்சட்டத்தின் முக்கிய கூறுகள் வருமாறு :—

(i) மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், முன்னர் 10.117 எக்டேர் பரப்பளவு கொண்ட மலைத் தோட்டங்களுக்கும், 30 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள மலை



தோட்டங்களுக்கும் மட்டுமே பொருந்தியது. ஆனால், இச்சட்டம் தற்போது 5 எக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள மலைத் தோட்டங்களுக்கும், 15 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள மலைத் தோட்டங்களுக்கும் பொருந்துமாறு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ii) மலைத் தோட்டங்களைப் பதிவு செய்யவும், ஒவ்வோராண்டும் புதுப்பிக்கப்படுவதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது.

(iii) குழந்தைகள் காப்பகம் தொடர்பான விதித்துறைகளை, 50 பெண் தொழிலாளர்களுக்கும் குறைவான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அத்தகைய பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை 20-க்கும் குறைவாக உள்ள மலைத் தோட்டங்களுக்கும் நீட்டிப்பதற்குரிய அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(iv) மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக மலைத் தோட்ட அதிபர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் இடிந்து வீழ்வதால் ஏற்படும் விபத்துக்களுக்காக தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(v) நிர்வாகம் விபத்துக்கள் பற்றி அறிவிக்கவும், விபத்துக்கள் பற்றிய பதிவேட்டை பராமரித்து வரவும் கோர வகை செய்யப்பட்டுள்ளது.

2. இச்சட்டம் 26–1–1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின்கீழ் புதிய விதிகளை இயற்றுவது குறித்து தொழிலாளர் நல ஆணையாளரோடு கலந்தாலோசித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

3.19. புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள்:

(1) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் (சட்டம் எண் 45/1981). தொழில் நிறுவனங்கள் தங்களுடைய பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கி வைக்கும்போது, அக்கால அளவிற்கு அப்பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்கிட வேண்டுமென்று இச்சட்டம் வரையறுக்கிறது. வழங்கப்பட வேண்டிய வாழ்க்கைப்படி வீதங்கள் வருமாறு:—

முதல் 90 நாட்களுக்கு—ஊதியத்தில் 50 சதவீதம்.

90 நாட்களுக்கு பிறகு—ஊதியத்தில் 75 சதவீதம்.
180 நாட்கள் வரை.

180 நாட்களுக்கு மேற்பட்டு—முழுஊதியம்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1—1—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளன.

*(2) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்தல்) சட்டம் (சட்டம் எண் 46/1981).*

24 திங்கள் கால அளவில் தொடர்ந்து 480 நாள் பணி புரிந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் முக்கியக்கூறு யாதெனில், தொழிலாளர் ஒருவர் பணிபுரியும் காலத்தில் பணியில் இடையீடு ஏற்படுமானால் அதற்கு அவர் பொறுப்பல்லவென்று தெரிந்தால், அந்த இடையீட்டைத் தொடர் பணியாகச் சேர்த்துக்கணக்கிட்டு தொழிலாளர்கள் உரிமை உடையவர் ஆவார் என்பதே ஆகும். எனவே, தொழிலாளர் எவரையும் ஒருதலை முடிவெடுத்து எந்த ஒரு நிர்வாகமும் அவரைப் பணியிலிருந்து நீக்கி, தொடர்ந்து பணியின் பயன் அத்தொழிலாளருக்கு கிடைப்பதை தடுக்க முடியாது. இச்சட்டம் 1—1—1982 ஆம் நாளன்று செயலுக்கு வந்துள்ளது.

*(3) 1981 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (சட்ட எண் 47/1981):—*

ஆலோசனைக் குழுக்களை அமைத்தல், அவை செயல்படுதல் ஆகியவற்றில் காணப்படும் சில நடைமுறைச் சிக்கல்களைக் களையும் பொருட்டு, இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் 1—10—1981 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது.

*(4) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்:—*

நெசவாளர்களுக்கும் சொந்தத் தறி நெசவாளர்களுக்கும் மிடையே தொழிலதிபர் தொழிலாளர் உறவை வளர்க்கவும், நெசவாளர்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படுதல், நெசவாளர்களைப் பணியில் தொடர்ந்து வைத்திருத்தல், அவர்களுக்கு சுகாதார, ஏனைய நல வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றிற்கு உறுதி செய்யவும் இச்சட்டம் வகை செய்கிறது. தொழிற்சங்க அமைப்பு இல்லாத பெருவாரியான தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இத்தகையதொரு சட்டத்தை இயற்றியதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.



## அத்தியாயம் 4.

ஊதியங்கள் குறித்த சட்டங்கள்—

4. 1. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்:—

(1) தொழிற்சங்க அமைப்பு இல்லாத பெருவாரியான தொழிலாளர்களுக்கு, இயன்ற வகையில் அதிகம் பேருக்கு குறைந்த அளவு ஊதியங்களை வழங்க உறுதி செய்வதில், அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. கீழ்க்காணும் வேலைகளுக்குரிய குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு நிர்ணயித்துள்ளது அல்லது திருத்தியமைத்துள்ளது:—

(i) தையல் தொழில் (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(ii) செயற்கை வைரம் தீட்டும் தொழில் (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(iii) கடைகள்—நிறுவனங்களில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

(iv) காப்பிக்கொட்டை பதப்படுத்தல் தொழிலில் வேலை (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(2) ஆய்வுக்கால அளவில், கீழ்க்காணும் வேலைகளுக்குரிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(i) வாசனைப் புகையிலை தயாரிக்கும் தொழிலில் வேலை.

(ii) கட்டிடங்கள் கட்டுதல், கற்களை உடைத்தல், கற்களைத் தூள் செய்தல், சாலை போடுதல், சாலை பராமரிப்பு ஆகிய பணிகளில் வேலை.

(iii) சோப்புத் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(iv) அரசினர் மருத்துவமனை, தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ விடுதிகள் ஆகியவற்றில் வேலை.

(v) விசைத்தறித் தொழிலில் வேலை.

(vi) திரைப்படத் தொழிலில் வேலை.

(vii) முந்திரித் தொழிலில் வேலை.

(viii) உள்ளாடைகள் தயாரிப்புத் தொழில்கள் வேலை.

(ix) கைத்தறிப்பட்டுத் நெசவுத் தொழிலில் வேலை.

(x) கைத்தறி நெசவுத் தொழிலில் வேலை.

(xi) கம்பளி விரிப்பு, போர்வை நெய்யும் தொழிலில் வேலை.

(xii) பீடி சுற்றும் தொழில் நீங்கலாக, பீடி தயாரிக்கும் தொழில் உட்பட புகையிலை தயாரிப்பு தொழிலில் வேலை.

(xiii) உணவகங்கள், சிற்றுண்டியகங்கள் ஆகியவற்றில் வேலை.

(xiv) தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்புத் தொழிலில் வேலை.

(xv) பாத்திரங்கள் (தட்டுமுட்டுச்சாமான்கள்) தயாரிப்புத் தொழிலில் வேலை.

(3) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் பின்வரும் தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

(i) டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதில் வேலை.

(ii) சிறு அளவிலான பொறியியல் இணைப்புக் கட்டுமானத் தொழிலில் வேலை.

(4) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ், ''அதிகாரிகள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள் இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் தரப்படாமை குறித்து வந்த 41 உரிமைக் கோரிக்கை மனுக்களை முடிவு செய்துள்ளனர்.

(5) குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் நடத்திய ஆய்வுகள் தொடர்ந்து வழக்குகள் முதலியவைபற்றிய விவரங்கள் III ஆம் IV ஆம், இணைப்பில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. 2. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த அளவு ஊதியங்கள் —

(1) பாரதப்பிரதமர் அவர்கள் புதிய 20 அம்சத் திட்டமொன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குரிய குறைந்த அளவு ஊதியங்கள் குறித்து மறு ஆய்வு செய்வதும் அவைகளைப் பயன்தரும் வகையில் செயலாக்குவதும் இடம் பெற்றுள்ளது. வேளாண்மைத் தொழில் பிரிவில், குறைந்த அளவு ஊதியங்களைச் செயலாக்கும் பொறுப்பு, வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



இதன் பொருட்டு மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் துணை வட்டாட்சியர்கள், தலைமையிட துணை வட்டாட்சியர்கள் உள்பட வருவாய் ஆய்வாளர்கள், ஆகியோர் அவரவர்களுடைய அதிகார வரம்பிற்குள் ''ஆய்வாளர்களாக'' நியமிக்கப்பட்டுள்ளனர். குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகின்ற எல்லா உரிமைக் கோரிக்கை மனுக்கள் குறித்து விசாரணை நடத்தி முடிவு செய்யும் பொறுப்பு வட்டாட்சியர்களைச் சாரும்.

(2) வேளாண்மைத் தொழில் புரியும் வேலைக்குரிய ஊதியங்களின் குறைந்த அளவு வீதம், கடைசியாக 1979 செப்டம்பரில் திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஊதியங்களைத் திருத்தியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை கூறும் பொருட்டு ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

4.3. 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்—

(1) தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்களாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும் இச்சட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

(2) 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் விதித்துறைகள், செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் நீட்டித்து, அரசு இவ்வாண்டில், வரைவு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

(3) ஆய்வுகள், தொடரப்பட்டு வழக்குகள், முடிவு செய்த உரிமைக் கோரிக்கைகள் ஆகியவைப்பற்றிய விவரங்கள், III ஆம் IV ஆம் இணைப்புகளில் காணும் விவர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 5.

## சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

### 5-1/1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்.

(1) இச்சட்டத்தை நீட்டித்தல்.

ஆய்வுக்கால அளவில் பின்வரும் புதிய நிறுவனங்கள்/தொழிற்சாலைகள் அவற்றுக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து இச்சட்டத்தின் செயல் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன:—

(i) சரக்குகளை கொண்டு வந்து ஏற்றி அனுப்புதல், கப்பலில் சரக்குகளை ஏற்றுதல், கப்பலிலிருந்து சரக்குகளை இறக்குதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள். 23—11—81

(ii) கோழி வளர்ப்புப் பண்ணைகள் .. 7–12–81

(iii) கால்நடைத் தீவன தயாரிப்புத் தொழிற்சாலைகள். 7–12–81

இதன் விளைவாக இச்சட்டம், மேலும் 722 புதிய நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதனால் கூடுதலாக சுமார் 46,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

(2) இச்சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள்:—

1981-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று இருந்தவாறு, இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்/தொழிலாளர்கள்/சந்தாதாரர்கள் ஆகியோர் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| விவரம். | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் படாதவை. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 463 | 12,504 | 12,967 |
| இச்சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3,27,250 | 10,98,187 | 14,25,437 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3,16,348 | 9,93,040 | 13,09,388 |

3. தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் உறுப்பினர்கள்.

உறுப்பினர்களின் எண்ணிக்கை—8,89,235

(4) 1976ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகைஇணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(அ) 1952ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ், விலக்களிக்கப்படாத, விலக்களிக்கப்பட்ட நிறுவனங்களிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாவர்.

(ஆ) தொழிலாளர்களிடமிருந்து சந்தாத் தொகை/தவணை கட்டணம் ஏதும் வசூலிக்காமல், அவர்களுக்கு தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தை செயலுக்குக் கொண்டு வந்துள்ள



நிறுவனங்களுக்கு, 1976ஆம் ஆண்டு, தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம் பொருந்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை வருமாறு :—

| நிறுவனங்களின் எண்ணிக்கை. | உறுப்பினர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 71 | 77,596 |

(இ) இச்சட்டத்தின் பல்வேறு விதித் துறைகளின்கீழ் செலுத்த வேண்டிய தொகையின் கேட்பு, வசூல், பாக்கி விவரங்கள் வருமாறு :—

| செலுத்த வேண்டிய தொகை பற்றிய விவரம். | 30—11—1981 அன்றிருந்தவாறு பாக்கி. | 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நவம்பர்த் திங்கள் 30 ஆம் நாள்வரை வசூல் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதி. | 203·33 | 4,428·17 |
| 2 குடும்ப நல ஓய்வூதிய நிதி. | 10·58 | 657·64 |
| 3 வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதி நிதி. | 7·15 | 174·19 |

(ஈ) நாட்டுடைமையாக்கப்பட்ட துணி ஆலைகள் தொடர்பான தொகை ரூ. 59·13 இலட்சம் உட்பட, தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதியின் கீழ் காட்டப்பட்ட பாக்கித் தொகையில் பெரும்பகுதி பஞ்சாலைத் தொழில் தொடர்பானதாகும். பாக்கித் தொகை ரூ. 144·20 இலட்சத்தில் ரூ. 85·45 இலட்சம் பின்வரும் தொழில் நிறுவனங்களிடையே முடங்கிக் கிடக்கிறது.

| | |
|---|---|
| (i) மேற்கூறிய திட்டம் பொருந்துவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ள நிறுவனங்கள். | ரூ. 68·10 இலட்சம் |
| (ii) கலைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள். | ரூ. 12·85 ,, |
| (iii) மூடப்பட்டுள்ள நிறுவனங்கள். | ரூ. 4·50 ,, |
| மொத்தம் .. | ரூ. 85·45 இலட்சம் |

(உ) எஞ்சியுள்ள 58·75 இலட்சம் ரூபாயை வசூலிக்க வேண்டியதில் 52·03 இலட்சம் ரூபாய் வசூலிக்க இவ்வமைப்பு 278 இனங்களில் வரிவசூல் நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றோடு நிலுவைத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக 1,395 வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

(5) வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து, தொகை கொடுத்துத் தீர்த்தல்.

(அ) 1981ஆம் ஆண்டில் (30–11–1981ஆம் நாள்வரை) 46,743 இனங்களைப் பொறுத்தமட்டில் வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாக்கி தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 1,340 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

(ஆ) வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டவை, 30–11–1981ஆம் நாளன்றிருந்தவாறு தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (i) | 31–12–80 ஆம் நாளன்று இருந்தவாறு தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. | 6,527 |
| (ii) | 1981 ஜனவரியிலிருந்து 1981 நவம்பர் வரை வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. | 54,066 |
| (iii) | 1981ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 60,593 |
| (iv) | 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரையில், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. | 46,743 |
| (v) | குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 8,937 |
| (vi) | 30–11–81 ஆம் நாளன்று இருந்தவாறு தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 4,913 |



(இ) 1981ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு (1981சனவரி முதல் 1981 நவம்பர் வரை):—

| | | |
|---|---|---|
| (i) | இறப்பு .. .. .. .. .. | 3,757 |
| (ii) | வயது முதிர்வு பெற்றமை .. .. | 5,946 |
| (iii) | நிரந்தரமாக இயலாமையுற்றது .. | 1,018 |
| (iv) | பதவியை விட்டு விலகியது .. .. | 29,849 |
| (v) | ஆட்குறைப்பு செய்யப்பட்டது .. .. | 5,657 |
| (vi) | இடம் பெயர்தல் .. .. .. | 31 |
| (vii) | பணியிலிருந்து நீக்கப்பட்டது .. | 344 |
| (viii) | பல்வகை .. .. .. .. | 141 |
| | மொத்தம் | 46,743 |

(6) 1971 ஆம் ஆண்டு, தொழிலாளர்கள் குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (i) | 31–12–1980 ஆம் நாளன்று இருந்தவாறு முடிக்கப்பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,967 |
| (ii) | 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 40,944 |
| (iii) | மொத்தம் .. .. .. | 46,911 |
| (iv) | 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை தொகைக் கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 32,463 |
| (v) | குறைபாடுகளை சரிசெய்து அனுப்ப திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 9,89 |

| | |
|---|---|
| (vi) 30-11-1981 ஆம் நாளன்று இருந்த வாறு முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,549 |
| (vii) தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை. | 43.97 (இலட்சம் ரூபாய்) |
| (viii) 30-11-1981 ஆம் நாளன்று இருந்த வாறு மாதந்தோறும் ஓய்வூதியத்தை பெறும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 790 |

(7) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத்தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம் :—

| | |
|---|---|
| (i) 31-12-1980 ஆம் நாளன்று இருந்த வாறு முடிக்கப்படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 613 |
| (ii) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 3,308 |
| (iii) மொத்தம் .. .. .. | 3,921 |
| (iv) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரையில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,041 |
| (v) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்பு மாறு கோரி திருப்பி அனுப்பப்பட்ட உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,232 |
| (vi) 30-11-1981 ஆம் நாளன்றிருந்தவாறு நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த மனுக்களின் எண்ணிக்கை. | 648 |
| (vii) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் தொடர்பாக வழங்கப்பட்ட தொகை. | ரூ. 60.13 (இலட்சம்) |



(8) முன்பணங்கள் :—

(அ) அறிக்கையாண்டில் பின்வரும் நோக்கங்களுக்காக இத் திட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களது வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் உள்ள தொகையிலிருந்து திருப்பிச் செலுத்த வேண்டாத முன்பணங்கள் வழங்கப்பட்டன.

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (i) வீட்டு மனைகள்/கட்டிடங்கள் வாங்குவதற்காக அல்லது வீடுகள் கட்டுவதற்காக. (ii) உதவித் தொகையுடன் வீடு கட்டும் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட குடியிருப்புகளை ஒதுக்குவதற்காக. (iii) குறைந்த வருமானமுள்ளவர்களுக்குரிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக. | 2,681 | 82.99 |
| (iv) 15 நாட்களுக்கும் மேற்பட்டு கதவடைப்பு செய்யப்பட்ட / மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணங்கள். | 851 | 3.36 |
| (v) உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் மருத்துவச் சிகிச்சை தொடர்பாக ஏற்பட்ட செலவுகளுக்காக. | 482 | 3.83 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (vi) தன்னுடைய திருமணத்திற்காக மகளின், மகனின் சகோதரிகளின் சகோதரர்களின் திருமணங்களுக்காகவும், குழந்தைகளின் உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கு மேற்பட்ட படிப்புக்காக. | 5,567 | 103.16 |
| (vii) வெள்ளம்/நில நடுக்கம் போன்ற இயல்பு மீறிய கால நிலைகளின்போது ஏற்படக்கூடிய செலவுகளுக்காக. | 12 | 0.11 |
| (viii) மின்வெட்டு காரணமாகப் பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்காக. | இல்லை | |

(9) முக்கிய திருத்தங்கள் :—

(அ) இவ்வாண்டில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் கீழ் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றில், பின்வருவனவற்றைப்பற்றி குறிப்பிடலாம்.

இத்திட்டத்தின் கீழ், இந்நிதியின் உடல் ஊனமுற்ற தொழிலாளர் சந்தாதாரர் உறுதுணைச் சாதனங்களை வாங்குவதற்காகத் தங்களது ஆறுமாத அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படிகளுக்கு நிகரான தொகையை அல்லது அவர் செலுத்திய சந்தா தொகை அளவிற்கு நிகரான தொகையை முன் பணமாக மேற்கூறிய நிதியிலிருந்து பெற இயலும் வகையில் புதிய விதித்துறை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள முக்கிய திருத்தங்களாவன :—(i) இத்திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் குடும்பத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற குறைந்தளவு ஓய்வூதியம் 40 ரூபாய் ஆகும். ஆனால் 13–1–1981 ஆம் நாளன்று, குறைந்தளவு ஓய்வூதியத்தை 60 ரூபாயாக உயர்த்தி 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் 28 ஆம் பாராவின் கீழ் இவ்விதித்துறை திருத்தப்பட்டுள்ளது. இவ்வுயர்வு 1–3–1980 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ளது.



(ii) மேலே குறிப்பிட்டது போல மாதாந்திர குறைந்தளவு குடும்ப நல ஓய்வூதியத்தை உயர்த்தும் போது, இறந்து போன உறுப்பினரின் குடும்பத்தினர் ஆயுள் காப்புறுதித்தொகை 1,000 ரூபாயைப் பெறுவர் என்று முன்னர் வகை செய்யப்பட்டதற்கு மாறாக, ஒட்டு மொத்தமாக 2,000 ரூபாயைப் பெற இயலும் வகையில் 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் 31 ஆம் பாராவும் திருத்தப்பட்டுள்ளது.

இவ்விரு திருத்தங்களின் மூலம் இறந்துபோனவர்களின் குடும்பங்களுக்கு உயர்த்தப்பட்ட குறைந்த அளவு ஓய்வூதியமும் ஒரு மொத்தத் தொகையும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

5. 2. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் :

(1) 1955 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம், இதுவரையில் 50 மையங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில், இத்திட்டம் பின்வரும் புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேலும் 6,200 தொழிலாளர்கள் வருகின்றனர்.

(அ) சிவகாசி சுற்றுப்புறப் பகுதிகள்.

(ஆ) சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள குமாரபாளையம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் மற்றும் வாக்குடி.

(2) மேற்சொன்ன நீட்டிப்பு காரணமாக தமிழ்நாட்டில் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள், பயனடைவோர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (i) தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை. | 4,81,200 |
| (ii) ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 5,18,200 |
| (iii) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை. | 5,18,200 |
| (iv) பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை. | 20,01,000 |

(3) மின்சக்தியைப் பயன்படுத்தக்கூடியதும் 20-க்கும் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களை கொண்டதுமான தொழிற் சாலைகளுக்குப் பொருந்தக்கூடிய இத்திட்டத்தின்கீழ், பின் வரும் உதவிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது :—

(i) மருத்துவ உதவி (மருந்துப் பொருட்களாக வழங்கப் படுதல்).
(ii) நோய்க்கால உதவி
(iii) பேருகால உதவி
(iv) ஏலாமையற்றோருக்கு உதவி
(v) சார்ந்துள்ளவர்கள் நல உதவி
(vi) இறுதிச் சடங்குகளுக்குரிய செலவுத் தொகை.

(ii)–(vi): பணமாக

(4) ஆய்வுக்கால அளவில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் பின்வரும் இடங்களில் செயல்படத் தொடங்கி யுள்ளன :—

(i) திருத்தங்கல்—இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி சுற்றுப்புறப் பகுதிகளுக்காக.

(ii) குமாரபாளையம், சேலம் மாவட்டம்.

(iii) திருவெறும்பூர். திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(5) ஆய்வாண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுள்ளன.

(i) தற்போது அம்பத்தூரிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி நிலையான மருந்தகத்தை இரண்டாகப் பிரித்து ஒன்று அம்பத்தூரிலும் மற்றொன்று கொரட்டுரிலும் அமைக்கப் பட்டுள்ளன.

(ii) கோயம்புத்தூரில் தற்போதுள்ள நடமாடும் மருந்த கத்தை எடுத்து விட்டு சின்னியம்பாளையத்தில் நிலையான தொழிலாளர்நல ஈட்டுறுதி மருந்தகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iii) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ள லூரில் கே.என்.ஆர். பஞ்சாலைக்கு தொழிலாளர் நல ஈட் டுறுதித் திட்டத்தை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தொழி லாளர்கள் வெள்ளலூரிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் சிகிச்சை பெறுவர்.

(iv) தற்போது நாகர்கோயிலிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தோடு தொழிலாளர்களை இணைப்பதன் மூலம் கன்னியாகுமரி சுற்றுப் பகுதிகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப் பட்டுள்ளது.



(v) ஆத்தூரில் நிலையான மருந்தகம் ஒன்றைத் தொடங்கு வதன்மூலம் ஆறுமுகனேரிக்கு இத்திட்டத்தை நீட்டித்தல்.

(vi) சேலம் சுற்றுப்புறப்பகுதியில் நிலையான மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதன் மூலம் சேலம் சுற்றுப்புறப்பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டித்தல்.

(vii) கோயம்புத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனையில் இதயநோய் மருத்துவப் பிரிவு (Intensive coronary care unit) ஒன்றை தொடங்குதல்.

(6) பெருந் திட்டத்தின் கீழ் பின்வரும் பகுதிகளில் தொழி லாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தை நீட்டிக்கவும் கருதப்பட் டுள்ளது.

(i) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருநின்றவூர், திருவள் ளூர், காக்களூர் ஆகிய இடங்களிலும் அவற்றின் சுற்றுபுறப் பகுதி களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு நீட்டித்தல்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மானாமதுரைக் கும் அதன் சுற்றுப்புற பகுதிகளுக்கும் நீட்டித்தல்.

(iii) திருநெல்வேலி மாவட்டத்தில், பேட்டையில் நிலை யான மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதன்மூலம் வீரநல்லூருக்கு நீட்டித்தல்.

(iv) நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திற்கும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் நீட்டித்தல்.

(v) வட ஆற்காடு மாவட்டத்தில் அரியூருக்கு நீட்டித்தல்.

(vi) தருமபுரி மாவட்டத்தில் ஒசூருக்கு நீட்டித்தல்.

(7) மாநிலத்தில் உள்ள 5 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகள் மற்றும் 110 தொழிலாளர் நல ஈட்டுறுதி நிலையான மருந்தகங்களில், 5 தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனைகளும் 45 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களும் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்படுகின்றன ; எஞ்சியுள்ளவை தனியார் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன.

(8) இரண்டு டாக்டர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட டாக்டர்களைக் கொண்டுள்ளவையும் தற்போது வாடகைக் கட்டிடங்களில் செயற்படுபவையுமான மருந்தகங்களுக்கு 45

[1982 மார்ச் 15

இடங்களில் சொந்தக் கட்டிடங்களைக் கட்ட தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இந்த 45 இடங்களில் மருந்தகக் கட்டிடங்களைக் கட்டுவதற்குரிய நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

(9) பின்வரும் இடங்களில் மேலும் நான்கு (50 படுக்கைகளைக் கொண்ட) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

(i) சேலம், (ii) மேட்டூர் அணை, (iii) திருச்சிராப்பள்ளி, (iv) சிவகாசி இதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

(10) சந்தாவசூல்: 1981–82 ஆம் ஆண்டில் (31—1—1982 வரை) தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் சந்தாத் தொகைகள் தொடர்பாக ரூ. 1,335·43 இலட்சம் பெறப்பட்டது.

(11) பண உதவி : ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கு (31—1—1982 வரை) ரூ. 938 இலட்சம் பண உதவியாகக் கொடுக்கப்பட்டது.

5.3. தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி :

(1) கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது அவை போன்ற ஆபத்தான தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால் நிலையாகப் பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1923-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதிவசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும் இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர்.

(2) 1981-ஆம் ஆண்டில் தொழிலாளர் ஐவருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்புத் தொகையாக ரூ. 10,000 வழங்கப்பட்டது.



1982 மார்ச் 15]

## அத்தியாயம் 6.

## தொழிலாளர் நலப்பணிகள்.

### 6.1. அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம் (தனியார் தொழிலதிபர்கள் திட்டங்கள்).

(1) 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வருகின்ற தொழிற்சாலைகளின் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(2) ஆய்வுக்கால அளவில் புதிய திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருவது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், படாளம். | 40 வீடுகள் கட்டும் பணி II-ஆம் கட்டம் நிதியாண்டின் இறுதிக்கு முன்னர் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர். | 72 வீடுகள் கட்டுவதற்குரிய திட்டம் இவ்வாண்டின் இறுதிக்கு முன்னர் நிறைவு பெற்றுவிடும். |
| ஸ்ரீஇராமலிங்கா ஆலை லிமிடெட், அருப்புக்கோட்டை. | அரசு அனுமதித்துள்ள 140 வீடுகள் கட்டும் பணி தரை மட்டம் வரையில் (Plinth level) முடிந்துள்ளது. |

(3) இத்திட்டம் தொடக்கத்திலிருந்து 31—12—1981 ஆம் நாள் வரையில் இத்திட்டத்தின் கீழ் தனியார் தொழிலதிபர்கள் கட்டியுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 1078 ஆகும். இது தொடர்பாக இதுவரையில் கடன் வகையில் ரூ. 30.10 இலட்சமும் உதவித் தொகை வகையில் ரூ. 13·93 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 6.2. மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித்திட்டம்.

(1) இத்திட்டம், மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தருவதற்கு உதவி புரிவதை நோக்கமாக கொண்டதாகும். ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் உச்சவரம்புச்

செலவில் (1979-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டவாறு) கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37·5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது :—

| | வீடுகளின் எண்ணிக்கை. | கடன். | உதவித் தொகை). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய்) | (ரூபாய்) |
| (அ) ப்ரூக் லாண்ட்ஸ் எஸ்டேட், குன்னூர். .. | 4 | 8,000 | 6,000 |
| (ஆ) வாட்டர் பால்ஸ் எஸ்டேட் (மேற்கு) வால்பாறை. .. | 24 | 48,000 | 36,000 |

(2) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 715 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 31—12—1981 ஆம் நாள் வரையில் ஏற்பட்டுள்ள செலவு முறையே கடன் வகையில் ரூ. 9·71 இலட்சமும் உதவித் தொகைவகையில் ரூ. 6·30 இலட்சமும் ஆகும்.

6.3 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்:

(1) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1973-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நல அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவார். இவ்வாரியம் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு நிறைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாரியம், தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலனை முன்னிட்டு விரைவில் மேலும் பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தவும் எண்ணியுள்ளது. அவற்றின் விவரங்கள் வருமாறு.

(2) தொழிலாளர் நல நிலையங்கள்:

ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 14 நிலையங்களோடு இவ்வாண்டில் பின்வரும் இடங்களில் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. (1) மேட்டூர் அணை, (2) டால்மியாபுரம், (3) திருச்சிராப்பள்ளி, (4) தாராபுரம், (5) விக்கிரமசிங்கபுரம், (6) தூத்துக்குடி, (7) பெரியநாயக்கன்பாளையம், (8) தஞ்சாவூர்.



(3) தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கென்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தங்கும் இல்லம் (ஜீவா இல்லம்).

சென்னைக்கு அலுவல் பற்றி வரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு தங்குமிடவசதி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், ரூ. 10 இலட்சம் செலவில் சென்னை, தேனாம்பேட்டையில் "ஜீவா இல்லம்" என்ற கட்டிடத்தைக் கட்டியுள்ளது. இதன்பொருட்டு 2 இலட்சம் ரூபாய் மானியமும் இலவசமாக 5 கிரவுண்டு 1630 ச.அடி. நிலமும் தமிழக அரசு வழங்கியுள்ளது. கிரவுண்டு ஒன்று 76,300 ரூபாய் வீதம் இந்நிலத்தின் மொத்த மதிப்பு 3,81,500 ரூபாயாகும். இக்கட்டிடம் 18·11. 1981 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது.

(4) இவ்வாரியம் செயற்படுத்தும் பிற தொழிலாளர் நலத் திட்டங்கள், இவற்றின் மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரம் வருமாறு—

(அ) தையல் பயிற்சி நிலையங்கள். .

1. இத்தையல் பயிற்சி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை. — 23
2. பயிற்சி பெறுவோரின் மொத்த எண்ணிக்கை — 680

(ஆ) நர்சரிப்பள்ளிகள்—

1. நர்சரிப்பள்ளிகளின் எண்ணிக்கை .. — 22
2. பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. — 598

(இ) குழந்தை நலக்காப்பகங்கள்.—

1. குழந்தை நலக்காப்பகங்களின் மொத்த எண்ணிக்கை. — 6
2. பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. — 248

(ஈ) படிப்பகங்கள்.—

1. படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. — 4
2. பயனடைந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை. — 36,600

(5) பிற திட்டங்கள்.

| | பயனடைந்த வர்களின் எண்ணிக்கை. | தொகை ரூபாய் |
|---|---|---|
| (அ) தொழிலாளர்கள் மூக்குக் கண்ணாடி வாங்கியதற்குரிய செலவைத் திருப்பி கொடுத்தல். | 878 | 37,009 |
| (ஆ) தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதற்குரிய கட்டணத்தையும், தேர்வுக் கட்டணத்தையும் அளித்தல். | 301 | 2,186 |
| (இ) "பிளஸ் 2" படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை. | 12 | 6,000 |
| (ஈ) பொறியியல் படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை. | 6 | 6,000 |
| (உ) எம்.பி.பி.எஸ். படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை. | 2 | 2,000 |
| (ஊ) பொறியியலில் பட்டப் படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை. | 12 | 7,200 |
| (எ) தொழிற் பயிற்சி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்குரிய படிப்புதவித் தொகை. | 6 | 1,800 |
| (ஏ) புத்தக வங்கி .. .. | 1,648 | 15,251 |
| (ஐ) இறுதிச் சடங்கிற்குரிய செலவு. | 151 | 30,200 |

(6) தொழிலாளர் நல நிதிக்கென்று மாநில அரசு வழங்கும் தொகை :

தொடக்கத்தில் அரசு வழங்கிய ரூ. 5 இலட்சத்துடன், இத் தொழிலாளர் நல நிதி ஏற்படுத்தப்பட்டது. தொழிற் சங்கத் தலைவர்களுக்கென்று கட்டப்பட்ட தங்குமில்லத்தை



(ஜீவா இல்லம்) 18—11—1981 அன்று திறந்து வைத்து உரையாற்றியபோது, வருங்காலத்தில் அரசு, தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு ரூபா வீதம் வழங்குமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். இதன் அடிப்படையில் அரசு வழங்க இருக்கும் தொகை ஆண்டு ஒன்றிற்குச் சுமார் ரூ. 14 இலட்சமாகும்.

6.4. சட்டஉதவி :

(1) உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் சட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சங்கங்களின் சட்டநடை முறை செலவுகளுக்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு அரசு திட்டமொன்றுக்கு ஏற்பளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு 'ரிட் மனு' ஒன்றுக்கு 150 ரூபாய் வழங்கப்படும் சட்ட நடவடிக்கைகளுக்காக நிதி உதவி தேவைபடும் போ.. தெ..லாம் அதனை வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(2)வசதியில்லாத, நிதி உதவி பெறத்தகுதியுடையதொழிலாளர்களுக்கும், அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் இழப்பீட்டுறுதிச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத்தொகை வழங்குமாறு கோருகின்றவர்களுக்கு அரசு செலவில் சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இந்த அரசு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாய்க்கு வகை செய்துள்ளது. தொழிலாளர்கள் இழப்பீட்டுறுதிக் கூடுதல் ஆணையாளரின் ஆணைகளை எதிர்த்து, நிருவாகம் மேல் முறையீடு செய்கையில் விபத்தினால் காயமுற்ற தொழிலாளர்கள், உயர் நீதிமன்றத்தில், தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காடுவதற்காகச் சட்ட உதவி பெறுவதற்குத் தகுதியுடையவராவர்; அத்தகைய சட்ட உதவி தேடும் தொழிலாளர்கள் இழப்பீட்டுறுதி கூடுதல் ஆணையாளரால் அவர்கள் தொடர்ந்த வழக்குகளில் இழப்பீடு வழங்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில், 3 கோரிக்கைகள் வரப்பெற்று 150 ரூபாய் வழங்கப்பட்டது.

6.5. தொழிலாளர்களுக்குரிய சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

(1) சென்னையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் மூன்று சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவை, ஓய்வுபெற்ற நீதித் துறை அதிகாரிகளாலும் ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளாலும் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. போதிய வசதியற்ற தொழிலாளர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கென்று திட்டமொன்றைத் தயாரிப்பது பற்றிய பொதுப் பிரச்சினை

[1982 மார்ச் 15

குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு, அமைக்கப்பட்ட தனி நபர்க்குழு அளித்த பரிந்துரைகளின்பேரில், அரசு, இக்குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள், பணியாளர்களின் முறையீடுகளை பரிவு உணர்வுடன் அணுகி, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் உதவி பெறுவதற்கு அணுகவேண்டிய அமைப்புகள் குறித்தும் அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றன.

(2) இக்குழுக்கள், 1981 ஆம் ஆண்டில் 384 முறையீடுகளை முடிவு செய்தன.

6.6. தமிழ்நாடு தொழில் சத்துணவுத் திட்டம் :

(1) கேர் (CARE) நிறுவன உதவியுடன் தொழில் சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் நலனுக்காகச் செயல் படுத்தப் பட்டு வருகிறது. தொழிலாளர்க் குடும்பங்களிலுள்ள சிறார்கள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தற்போது தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிலையங்கள் உட்பட 117 பிரிவுகள் வாயிலாக 34,387 பேர் பயனடைந்து வருகின்றனர்.

(2) தொழில் சத்துணவுத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த சுகாதார விரிவுப் பணி திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் சத்துணவு பெறுவதோடு மருத்துவ சிகிச்சையும் அவர்கள் பெற இயலும்.

6.7. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை:—

(1) சிறந்த தொழிற்சங்க அமைப்பை மேம்படுத்தவும், நிருவாக வாயில்களை வளர்க்கவும். திறம்பெற்ற தொழிலாளர் நல நிருவாகப் பணிக்கு வகை செய்யவும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் செயல்படுகிறது.

(2) இந்நிலையத்தால் இதுவரையில் 130 வகுப்புகள்—கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இவற்றில் 3,906 பேர் கலந்து கொண்டனர். 1981 ஆம் ஆண்டில் நடத்திய பல்



1982 மார்ச் 15]

வேறு வகுப்புகள்—கருத்தரங்குகள் குறித்த விவரங்கள் வருமாறு—

| தொடர் எண்ணும் பயிற்சி வகுப்பின் பெயரும். | பயிற்சிக் கால அளவு முதல் | வரை. | பயிற்சி பெற்ற வர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (i) ஆம் தொழிற்சங்கத் தலைமைப் பயிற்சித் திட்டம் .. | 30-3-81 | 8-5-81 | 27 |
| (ii) 12ஆம் தொழிற் சங்கத் தலைமைப் பயிற்சித் திட்டம் | 7-12-81 | 18-1-81 | 29 |

துறை அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்பு :—

| | | | |
|---|---|---|---|
| (iii) தொழிலாளர் நலன் வேலை வாய்ப்புத் துறை அலுவலர் களுக்கும் பிரிவு அலுவலர்களுக்கும் 11ஆம் நினைவுகூர் பயிற்சி வகுப்பு | 2-2-81 | 28-2-81 | 9 |
| (iv) தொழிலாளர் நலன் வேலை வாய்ப்புத் துறை அலுவலர் களுக்கும் பிரிவு அலுவலர்களுக்கும் 12ஆம் நினைவுகூர் பயிற்சி வகுப்பு .. | 6-7-81 | 1-8-81 | 9 |

வனத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்பு.—

| | | | |
|---|---|---|---|
| (V) நாகர் கோயிலில் வனத்துறை அலு வலர்களுக்கு முதல் பயிற்சி வகுப்பு | 27-4-81 | 30-4-81 | 10 |

பறிமுதல் செய்யப்பட்டன. இதன் வாயிலாக அம்மூட்டைகள் விற்பனையாகாமல் தடுத்து நிறுத்தப்பட்டன. வணிகர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், அம்மூட்டைகளில் உள்ள அளவுக்கு விகிதாச்சார விலைக்கே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அம்மூட்டைகள் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

7.8. சமையல் வாயு சிலிண்டர்களில் வாயு அளவு குறைவாக உள்ளது என்று செய்தித்தாள் புகார்கள் வந்ததன் பேரில் தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள் 7–8–1981 அன்றும் 10–8–1981 அன்றும் பல்வேறு இடங்களில் திடீர்ச்சோதனை நடத்தினர். 7–8–81 அன்று சென்னை எண்ணெய்த் தூய்மை (ஆயில் ரிபைனரீஸ்) ஆலையில் வாயு நிரப்பப்படுமிடத்தில் இத்துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். 10 சிலிண்டர்களைச் சோதனை செய்ததில் 2 சிலிண்டர்களில் அளவு சரியாக இருந்தது. எஞ்சிய 8 சிலிண்டர்களில் 50 கிராம் முதல் 500 கிராம் வரை வாயு அளவு குறைந்தது. எனவே, அளவு குறைந்த சிலிண்டர்கள் மீண்டும் சரியாக நிரப்பப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டன. மூன்று பெரு வணிகர்களின் கடைகளும் 10–8–81 அன்று சோதனையிடப்பட்டன. 30 சிலிண்டர்களைச் சோதனை செய்ததில் 15 சிலிண்டர்களில் வாயு அதிகமாகவும், 14 சிலிண்டர்களில் குறைவாகவும், ஒரு சிலிண்டரில் மட்டும் சரியாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. வாயு அதிகமாக அடைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களில் 100 கிராம் முதல் 3,700 கிராம் வரை அளவு அதிகமாகவும், வாயு அளவு குறைந்த சிலிண்டர்களில் 200 கிராம் முதல் 5,400 கிராம் வரை அளவு குறைவாகவும் இருந்தது. வாயு அளவு குறைவாக இருந்த சிலிண்டர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு மீண்டும் திருப்பி எடுத்து அனுப்பும்படி ஆணையிடப்பட்டன. இவ்வாறு இவை விற்கப்படாமல் தடுக்கப்பட்டன.

7.9. இந்தக் கூட்டுச் சோதனைகள் மற்றும் தீவிர ஆய்வுகள் ஆகியவற்றின் விளைவாக பல்வேறு உலோகங்களினால் செய்யப்பட்ட 26,260 எடைக்கற்களும், வெவ்வேறு அளவுகளுள்ள 18,669 முகத்தல் அளவைகளும், வெவ்வேறு வகையான 867 நிறுக்கும் கருவிகளும் 802 அளவைக் கருவிகளும் 3,431 தராசுகளும் தவறாக உள்ளன. குறைபாடு உடையன அல்லது சரி பார்க்கப்படாதவை என்பதனால் கைப்பற்றப்பட்டன.



பாகம் 2.

அத்தியாயம் 8.

## தேசிய வேலை வாய்ப்புப் பணி.

8.1. வேலை வாய்ப்புகள் :

(1) தமிழ்நாட்டில் 39 வேலை வாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள், இரண்டு சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் மற்றும், சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் செயற்படும் மூன்று பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆகியவையும் அடங்கும்.

(2) வேலை வாய்ப்பகங்கள், வேலைத் தேடுவோர்களைப் பதிவு செய்து அவர்களை அறிவிக்கப்பட்ட வேலைக்காலி இடங்களுக்குப் பரிந்துரைக்கின்றன. வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள், வேலைக்காக வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடி பதிவேட்டில் (Live Register) காத்திருப்பவர்கள், அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களை பயன்படுத்திக்கொண்ட அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்களும் மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான நிகரான விவரங்களும் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணை பிரிவு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.2. ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் :

உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலை வாய்ப்பகம் ஒன்றும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற்றோர்களுக்காக நான்கு தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலை வாய்ப்பு அளித்து வருகின்றனர். 1–4–1981 லிருந்து 31–12–1981 வரையிலான காலத்தில் உடல் ஊனமுற்ற மனுதாரர்களை பதிவு செய்து, வேலையில் அமர்த்தப்பட்ட விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.3. தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பு அலுவ கம் :

(1) இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம் அறிவியல், பொறியியல், நிர்வாக மேற்பார்வைப் பணிக்கல்வி தகுதியுடையவர்களைப் (Profession l and Executiv Standard பதிவு செய்து அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் தொடர்பு கொண்டு, பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த முயற்சி செய்து வருகிறது. 1–4–1981 முதல் 31–12–1981 வரையிலான காலத்தில். இந்த அலுவலகம் ஆற்றிய பணிகளின் புள்ளி விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு விவரங்களை அளிப்பதும் வழிகாட்டுதல் பணியையும், தொழில் உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்யும் பணியையும் செய்து வருகிறது. 1–4–1981 முதல் 31–12–1981 வரையிலான காலத்தில் இந்நிலையங்கள் ஆற்றிய பணிகளின் புள்ளி விவரங்கள் இணைப்பு VI-இல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 4 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.4. வேலை நிலவரத் தகவல் திட்டம் (Employment Mark t Information Programme) :

இத்திட்டத்தின் கீழ், 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லா தனியார்த்துறை நிறுவனங்களிலிருந்தும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும் காலாண்டுக்கொருமுறை வேலை நிலவரத் தகவல் திரட்டப்படுகிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி தொழிற்சங்க அமைப்பு ரீதியான துறைகளில் மட்டும் (Organised Sector) மேற்கொள்ளப்பட்டது. 31–3–1981, 30–6–1981, 30–9–1981 ஆகிய தேதிகளுடன் முடியும் மூன்று காலாண்டுகளில் தகவல் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண் ணிக்கை, பொதுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த நிறு வனங்களில் வேலையிலிருப்போர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளி விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையின் 5 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.5. பணியாளர்களின் தொழில்—கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு :

(1) 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (காலி யிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தின் விதிகளுக் கிணங்க அனைத்து தனியார்த்துறை தொழிலதிபர்களும்,





அவர்கள் வேலைக்கமர்த்தியுள்ள தொழிலாளர்களின் வேலை
வகைபாடு, அவர்களின் கல்வித்தகுதி ஆகியவைகள் குறித்த
30–9–1981 அன்றைய நிலவரப்படியின் புள்ளி விவரங்களை
ஈ.ஆர். II படிவங்களில் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.
30–9–1981 அன்றைய நிலவரப்படி தனியார்த்துறை நிறுவனங்
களிலிருந்து தொழிலாளர்களின் வேலை வகைப்பாடு கல்வித்
தகுதி ஆகிய விவரங்கள் திரட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(2) இவ்வியக்கத்தால் கீழ்க்கண்ட பொருள் பற்றிய சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன :

(அ) தமிழ்நாட்டில், வேலை வாய்ப்பகங்களில் நிலுவை யிலுள்ள காலியிடங்கள் பற்றிய ஆய்வு.

(ஆ) தமிழ்நாட்டில் மகளிர் வேலை வாய்ப்புவேலை வாய்ப்பின்மை பற்றிய ஆய்வு.

(3) இவ்வியக்கத்தால் மேற்சொல்லப்பட்ட கீழ்க்கண்ட ஆய்வு கள் நடந்தேறி வருகின்றன :

(i) மதுரை மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும், திண்டுக் கல் துணை வேலை வாய்ப்பகத்திலும் உள்ள செல்லுபடி பதி வேடுகளில் பதிவு செய்து காத்திருப்பவர்களில் எத்தனை பேர்கள், ஏற்கனவே வேலையில் உள்ளனர் என்பதைப் பற்றிய ஆய்வு.

(ii) தமிழ் நாட்டின் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தேசிய தொழிற் பழகுநிலை சான்றிதழ் (Nati nal A re i es i Cer ifi ate) தேசிய தொழிற் சான்றிதழ் (Na i nal ra e Cer i ica e) பெற்ற வர்கள் பற்றிய ஆய்வு.

8.6. வேலை வாய்ப்பகங்களின் பணியை கம்ப்யூட்டர்களைக் கொண்டு செய்தல்.

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள 9 வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கம்ப்யூட்டர்கள் மூலம் செய்யும் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மனு தாரர்களின் விவரங்கள் கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு செய்யப் பட்டு, அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்ட புள்ளி விவரத் தொகுப்பு கொண்ட கம்ப்யூட்டர் நாடாக்களின் உதவியால் வேலை வாய்ப்பகங்களின் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு இதுவரை மேற்கொள் ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

(அ) 31–10–1981 முடிய உள்ள கால அளவில் தொழில்
மற்றும் நிருவாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்
துள்ள அனைத்து மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட (29,900)

படிவங்கள் தயாரிக்கப்பட்டன. அப்படிவங்கள் அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்திற்கு, பாகுபாட்டிற்காக (Processing) அனுப்பப்பட்டன.

(ஆ) இப்படிவங்களை பாகுபாடு செய்தபின், அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம், தகவல் படிவத்தில் பிழைத்திருத்தங்கள் செய்யும் பொருட்டு பதிப்பித்தல் பட்டியல் (Edit lis ) வழங்கியது. தேவையான பிழைத்திருத்தங்கள் அரசு புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன.

(இ) பதிப்பித்தல் பட்டியல்படி, பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்ட பட்டியல் ஒன்றினை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் வழங்கியுள்ளது. பிழைத்திருத்தங்கள் சரியாக செய்யப்பட்டுள்ளதா என்று அவை சரிபார்க்கப்பட்டன.

(ஈ) அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் முடிவான பட்டியல் (Masters temen ) தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இப்பணி முடிந்ததும் மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகளும் இதர வேலைவாய்ப்பக பணிகளுக்கும் கம்ப்யூட்டர் வாயிலாக மேற்கொள்ளப்படும்.

8.7. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனை அளித்தலும் ;

Vocaional Guidance and Emplo,men Counselling.

தமிழ் நாட்டில் தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலை வாய்ப்பு அலுவலங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோர்களுக்கு தொடர்ந்து தொழில் வேலைவாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வசதிகள், வேலைவாய்ப்புக் குறித்து தகவல் தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை அளிக்கிறது. மாணவர்கள்/பதிவு செய்தவர்கள் பயனடையும் வகையில் வழி காட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள்/வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிகள் காலாண்டு தோறும் வழிகாட்டிச் செய்தி அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும், நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளில் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 6 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்கத்தின் மாநில வாழ்க்கை தொழில் வழிகாட்டல் பிரிவு 33 தொழில் பயிற்சி நிலையங்களில் சுமார் 34,448 விண்ணப்





பத்தாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு (Apti de Tes ) நடத்தியது. தொழில் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழில்களில் சேர்த்து கொள்ளப்படுவதற்காக இத்தேர்வு நடத்தப்பட்டது.

1981 டிசம்பர் திங்களில் சென்னை பல்கலைக் கழகத்தில் படித்த பட்டதாரிகள் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பொதுமக்கள் பயனடைவதற்காக ஒரு "தொழில் தகவல் கண்காட்சி 1981 ல் நடத்தப்பட்டது"

(3) இவ்வாண்டில் வேலை வாய்ப்பு பயிற்சித்துறை இயக்க அலுவலர்கள் 31 வேலை வாய்ப்பகங்களை ஆய்வு செய்தனர்.

8.8. வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு :

இப்பிரிவு பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு தகுந்த வேலை வாய்ப்பு பயிற்சி வசதிகள் ஆகியவற்றைப் பெற உதவுகிறது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளின் விவரங்கள், இணைப்பு VIஇல் உள்ள விவர அட்டவணையின் 7 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8–9–1959ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகங்கள் (வேலைக் காலியிடங்களைக் கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தைச் செயற்படுத்துதல் :

30–9–81 அன்றைய நிலவரப்படி 12,853 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் வந்தன. 30–9–1980 நாள்படி 12,710 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் இருந்தன. குறிப்பிட்ட காலங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையும் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 8 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.10. வேலையற்றோருக்கு உதவித் திட்டம் :

படித்த வேலையற்றோர்களிடையே உள்ள அவல நிலையைப் போக்கும் பொருட்டு "வேலையற்றோர் உதவித் திட்டம்" ஒன்றை அரசு உருவாக்கி இத்திட்டம் 1–7–80 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஏற்பளிக்கப்பட்ட பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த வேலை நாடுவோர்கள் அத்திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள் ஆவார் :

1. அனைத்து படிப்புத் துறைகளிலும், பட்டதாரிகள் பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள்;

[1982 மார்ச் 15

2. தகுதி வாய்ந்த இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள்.

3. தகுதி வாய்ந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

4. தகுதி வாய்ந்த உடற் பயிற்சிக் கல்வி தொடக்கப்பள்ளி/ உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

5. தகுதி வாய்ந்த தமிழ், பிற மொழி ஆசிரியர்கள்.
6. தகுதி வாய்ந்த கைவினை ஆசிரியர்கள்.

7. பொறியியல் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள்.

பள்ளி இறுதி வகுப்புத் தேறிய அல்லது புதிய 10-வது வகுப்பு தேறிய அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியுடைய பார்வை இழந்தோருக்கும் தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றோருக்கும் 1—10—1981 முதல் வேலையற்றோருக்கான உதவித் திட்டத்தினை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தில் 1980-81, 1981-82 (31-12-81 வரை) ஆம் நிதி ஆண்டுகளால் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள உதவித்தொகை ஆகியவை பற்றிய விவரங்கள இணைப்பு VI-இல் உள்ள விவர அட்டவணையில் 9 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.11. ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான வேலை வாய்ப்பு உதவி :

(1) ஆதி திராவிடர், பழங்குடியினரை வேலையில் அமர்த்துவதில் வேலை வாய்ப்பகங்களின் பணிகளை ஒருங்கிணைக்க இவ்வியக்கத்தில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மைய, மாநில அரசு நிறுவனங்களில் நிரப்பப் படாமல் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள, வேலையில் அமர்த்தப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினர் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு VI-இல் உள்ள விவர அட்டவுணையின் 10ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) வேலை வாய்ப்பில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர் களுக்கு உரிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் காலியிடங்கள் நிரப்பப்படுவதற்காக இத்துறை, ஒருங்கிணைந்த பதிவேட்டுத் திட்டம் ஒன்றை செயற்படுத்தியது. இத்திட்டம் முன்னோடித் திட்ட அடிப்படையில், சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலு வலகத்தில் செயற்படுத்தப்பட்டது. சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில அரசு,அரசு சார் நிறுவனங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் இவைகளில் ஏற்படும் அனைத்து வேலைக்காலியிடங்கள் தொடர் பாக இன அடிப்படையிலான ஒதுக்கீட்டை சேலம் வேலைவாய்ப்பு



1982 மார்ச் 15]

அலுவலகத்திலுள்ள ஒருங்கிணைந்த பதிவேட்டுப் பிரிவு செயற் படுத்துகிறது. அறிக்கை காலத்தில் இன அடிப்படையிலான ஒதுக்கீடு பொருந்துகின்ற அறிவிக்கப்பட்ட காலி இடங்களில் 18 சதவீதத்தை இப்பிரிவு ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கியது. பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் வழி காட்டுவதற்காகவும், பழங்குடியினரை அனுப்புவதற்குத் தகுந்த வேலைகளிலுள்ள காலியிடங்களாக கண்டறியவும், பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் முறை வழி காட்டும் நிலையம் ஒன்று உதகமண்டலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையில் 11-வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.12. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலை வாய்ப்பு அளித்தல்.

(1) ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கேனும் வேலை கிடைக்க வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும் ஏழைக் குடும்பங்களை சேர்ந்தவர்களும் வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயரை பதிவு செய்துள்ளவர்களுமான வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது இக்கொள்கையின் ஒரு அம்சமாகும்.

(2) ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம், சுய வேலை வாய்ப்புக்காக கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் இவைகளின் கீழ் நபர்களை தெரிவு செய்கையில் சுய வேலைவாய்ப்புக்காக உதவி வேண்டுவோருக்கு முன்னுரிமை யளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

(3) வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் பற்றிய புள்ளி விவரங்களை வைத்து வருவதற்காக வருமானம், படிப்புத் தகுதி, விரும்பும் வேலையின் தன்மை முதலிய இன்றியமையாத விவரங்களைத் திரட்டுவதற்காக 13 இலட்சம் படிவங்கள் அச்சிடப்பட்டு, வேலை வாய்ப்பகங்களுக்கு கொடுக்கப் பட்டுள்ளன. சனவரித் திங்கள் இறுதிவரை 9·75 இலட்சம் படிவங்கள் அனுப்பப்பட்டன. 5·39 இலட்சம் படிவங்கள் நிரப்பப் பட்டு திரும்பப் பெறப்பட்டுள்ளன. புள்ளி விவரங்கள் திரட்டும் பணி விரைவில் முடிவுறும்.

8.13. மாவட்ட உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுக்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுவை அமைப்பதற்கு தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 26—10—81ஆம் நாளிட்ட 2406ஆம் எண்ணில்

அரசு ஆணை பிறப்பித்துள்ளது. உள்ளூரில் கிடைக்கும் வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு தனித்து இயங்கக் கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் மாவட்டங்களில் வேலையற்று இருப்போரையும் போதிய வேலைவாய்ப்பு அற்று இருப்போரையும் வழிப்படுத்தும் ஓர் அமைப்பாக இந்த குழுக்கள் செயல்படும் என்று கருதப்படுகிறது. மாவட்டங்களிலுள்ள வேளாண்மை, தொழில் கூட்டுறவு, கட்டுமானம், புள்ளி விவரம், கிராமப்புற மேம்பாடு, கல்வி, கால்நடை வளர்ப்பு, கிராமத் தொழில்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயம், மகளிர், வங்கிகள், மக்கள் பிரதிநிதிகள், தனியார் துறை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு இக்குழுக்களை அமைக்க கருதப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியின் இக்குழுவின் தலைவராகாவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், உறுப்பினர்-செயலாளராகவும் பணியாற்றுவர்.

8.14. 1981—82ஆம் ஆண்டில் அரசால் அனுமதிக்கப் பெற்று செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்.

பின்வரும் திட்டங்கள் 1981—82 ஆம் நிதி ஆண்டில் செயற்படுத்தப்பட்டன :—

1. தொழில் நுட்ப தகுதி பெற்றவர்களுக்கு, மதுரையில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

2. வேலை வாய்ப்பகங்களில் கூடுதல் பணியாளர்களை அமர்த்துதல்.

3. சென்னை-35லுள்ள தொழில் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கூடுதல் பணியாளர்களை அமர்த்துதல்.

4. வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்ககத்திற்கும் வேலை வாய்ப்பகங்களில் உள்ள வேலை நிலவரத் தகவல் பிரிவிற்கும் கூடுதல் தட்டச்சர்கள் நியமித்தல்.

5. வேலை வாய்ப்பகங்களுக்கு 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்குதல்.

6. சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரிலும், இராமநாதபுரத்திலுள்ள விருதுநகரிலும் துணை வேலை வாய்ப்பகங்கள் அமைத்தல்.

7. மதுரையில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தல்.

8. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் உதவியாளர் ஒருவரை நியமித்தல்.



8.15. எதிர் காலத் திட்டங்கள்:

(1) திருச்சியில் வட்டாரத் துணை இயக்ககத்தை ஏற்படுத்துதல்.

வேலை வாய்ப்பகங்களின் பணியைச் சீரிய முறையில் மேற்பார்வையிடவும் கட்டுப்பாடுடன் இயக்கவும், மேலும், வேலை தேடுவோரின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்யவும் 1982-ஆம் நிதி ஆண்டில் திருச்சியில் வட்டார துணை இயக்குநர் அலுவலகம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது. தற்போது இயக்குநர் செயல்படுத்தி வரும் அதிகாரங்களில் சிலவற்றை அங்கு நியமிக்கப்படவிருக்கும் துணை இயக்குநருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களாக நிலை உயர்த்துவதின் மூலமாக, வேலை வாய்ப்பகங்களை வலுப்படுத்துதல்.

கிராமப்புறங்களில் வாழும் வேலை தேடுவோருக்கு சீரிய முறையில் பணியாற்றவும், வேலை வாய்ப்பகங்களில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கவும் 1982—83-ஆம் ஆண்டில் தூத்துக்குடி, திண்டுக்கல் நாகப்பட்டினத்திலுள்ள துணை வேலைவாய்ப்பகங்களோடு திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள ஒருசில வட்டாரங்களைச் சேர்த்து, அத்துணை வேலைவாய்ப்பு அலுவலகங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களாக தரமுயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) சென்னையிலுள்ள தொழில்-நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகத்தை வலுப்படுத்துதல்.

இம்மாநிலத்திலுள்ள கல்லூரிகள் மேல்நிலைப்பள்ளிகளில் ஏற்படும் காலியிடங்களை பூர்த்தி செய்யத் தகுந்த நபர்களை விரைவில் பரிந்துரைக்கும்பணியை தொழில் நிருவாக வேலை வாய்ப்பகம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இதனை வலுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்கப்படும் காலி இடங்களுக்கு மனுதாரர்களை அனுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், தகுதியான மனுதாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் உதவி இயக்குநருக்கு உடன் பணி புரியும் இவ்வலுவலகத்தில் தற்போதுள்ள இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் பதவியை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பதவியை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்பதவியாக 1982—83-ம் ஆண்டில் நிலை உயர்த்தி தொழில் நிருவாக வேலை வாய்ப்பகத்தை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) வேலைவாய்ப்பகங்களுக்கு இரும்பு அலமாரிகள் வழங்குதல்.

வேலைத் தேடுவோரின் முக்கிய விவரங்களைக் கொண்ட பதிவட்டைகளை பத்திரமாக வைப்பதற்காக 1982–83-ம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களுக்கு 12 இழுவறைகள் கொண்ட 25 இரும்பு அலமாரிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(5) மதுரையில் உள்ள வட்டார அலுவலகத்திற்கு வாகனமும் தொலைபேசியும்.

மதுரையிலுள்ள வட்டார துணை இயக்குநர் தன் கட்டுப்பாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களில் இயங்கும் வேலைவாய்ப்பகங்களை திடீர் சோதனையிடவும் முழுமையான ஆய்வு செய்யவும், பெறப்படும் குற்றச்சாட்டு மனுக்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்ககாகவும் அவருடைய பணியை திறம்படச் செய்வதற்காகவும் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, 1982–83-ம் ஆண்டில் மதுரை வட்டார துணை இயக்குநர் அலுவலகத்திற்கு தொலைபேசியும், வாகனமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் 9.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

9.1. தொழில் பயிற்சி நிலையங்களின் பங்கு :

(1) தொழில் வளம் பெருக, தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் இந்தியாவின் பல பகுதிகளிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியைப் பயனுள்ளதாகச் செய்யும் பொருட்டு இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களில் பணிமனைச் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்திற்கு இந்தத் தொழில் பயிற்சி நிலையங்கள் ஆதாரமாக உள்ளன. தமிழ்நாட்டில், ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையமும் சம்பந்தப்பட்ட முதல்வரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழில் பயிற்சி நிலையங்களும், வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ், பின்வரும் வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

(i) தொழில் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.

(ii) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி.



(iii) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(iv) தொழில் பள்ளிகளுக்கான விதிக் கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழில் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(v) வேலை இழந்த பொற்சொல்லர்கள், மாதிரி அமைப்பு தயாரிப்பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட தொழில்களில் (பகுதி நேரம்) தனிப் பயிற்சித் திட்டம்.

(vi) வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டம்.

(vii) அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிப்போர் பயிற்சித் திட்டம்.

(viii) கிராமப்புற இளைஞர்களுக்கு குறுகிய கால பயிற்சித் திட்டம்.

(ix) குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் பயிற்சிக்காக சென்னை/பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடத்தும் திட்டம்.

(2) 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரக்கோணத்திலும், கடலூரிலும் (மகளிர்) தொடங்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களையும் சேர்த்து, தமிழ்நாட்டில் 34 தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இத் தொழில் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்கள் 8,234 ஆகும். 30 பொறியியல் பிரிவுகளிலும், 9 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 19 தொழில் பிரிவுகளில் பயிற்சிக் காலம் ஓராண்டாகும். 20 தொழில் பிரிவுகளில் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகும். மகளிருக்குக்கென தனியாக தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்று சென்னையிலும் மற்றொன்று கடலூரிலும் இயங்கி வருகின்றன. எந்திரக் கம்மியர் (பொது மின் அனுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற்காக தனித் தொழில் பயிற்சி பிரிவு ஒன்று அடையாறு மின்னனுவியல் கூடத்தில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி, ஆண்டிற்கு ஒரு முறை தொழிற் பயிற்சி நிலையங்களில் தகுதி அடிப்படையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். 1980-ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள தொழில் பயிற்சி நிலை யங்களில் அனுமதிக்கப்பட்டப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 7,891 ; ஆனால் 1981 ஆம் ஆண்டில் 8,033 பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(3) தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற்கான குறைந்த கல்வித் தகுதி ஒன்பதாம் வகுப்பு படித்திருக்க வேண்டும் என முன்பு வரையறுக்கப்பட்டிருந்ததை, பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்று மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

(4) தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித் திறனைச் செம்மையாக்கவும் தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தை திறம்படச் செயல்படுத்தவும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

(5) பயிற்சி பெறுபவர்கள், பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு குறைவாக உள்ள தொழில் பிரிவுகளை நீக்கி விட்டு, வேலை வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் பிரிவுகளைப் புதி தாக அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில் பயிற்சி நிலையங் களில் தொழில்களைப் பலதிறப்படுத்துதல் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது.

(6) 1981–82 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு, கிண்டி, புதுக் கோட்டை ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் 'பற்றவைப் பவர்' தொழில் பிரிவினை நீக்கி விட்டு, மாணவர்கள் விரும்பு வதும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதுமான பண்ணை எந்திர வேலையாள் கம்மியர் (மோட்டார் வண்டி) ஆகிய தொழில் பிரிவுகளை ரூபாய் 5 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன.

(7) 1982–83-ஆம் ஆண்டு ஓசூர் தொழிற் பயிற்சி நிலை யத்தில் கருவிகள் அச்சுத் தயாரிப்புத் தொழில் பிரிவும், கைக் கடிகாரம், சுவர் கடிகாரம் செய்பவர் தொழில் பிரிவும், விருதுநகர், மேட்டூர் அணை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் கம்மியர் (மோட் டார் வண்டி) தொழில் பிரிவு தொடங்கவும் கருதப்பட் டுள்ளது.

(8) தமிழ்நாட்டில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை பின் வருவனவற்றிலிருந்து மதிப்பிடலாம் :—

(அ) இதுவரை நடைபெற்ற 17 அனைந்திந்திய திறனாய்வுப் போட்டிகளில் தமிழ்நாடு முதன்மை இடத்தை எட்டு முறைகள் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற் கேடயத் தையும் எட்டு முறை பெற்றுள்ளது. 1982-ம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்ற 18-வது அனைத்திந்திய திறனாய்வு போட்டியின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



அனைத்திந்திய தொழில் தேர்வில் மதிப்பீட்டுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் மைய இடங்களில் விடைத்தாள்களைத் திருத்தும் முறை அறிமுகப்படுத் தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இத்திட்டம் ஓராண்டு ஈராண்டு பயிற்சியுடைய எல்லாத் தொழில் பிரிவு களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் நடைபெற்ற அனைந்திந்திய தொழில் தேர்வில் கலந்து கொண்ட 8,210 பயிற்சி பெறுவோர்களில் 6,843 பெறுவோர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி முடிவு 83 விழுக் காடாகும்.

(9) 1981–82 ஆம் ஆண்டு, ஈரோட்டில் இருக்கும் தொழில் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தர மாணவர் விடுதி ஒன்றினைக் கட்டுவதற்கான வேலை தொடங்கப்பட்டுள்ளது.

9–2–1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் :

(1) 1961 ஆம் ஆண்டு, தொழில் பழகுவோர் சட்டம் 1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க தொழில் பழகுநர் ஆலோசகரால் அறிவிக்கப்பெறும் தொழில் பிரிவுகளில் நிறுவனத் தில் உள்ள தொழில் பழகுவோருக்குப் பயிற்சி அளிப்பது தொழில அதிபரின் கடமையாகும். இப்பயிற்சித் திட்டம், தொழில் பயிற்சிப் பள்ளிகளில் அளிக்கப்படும் பயிற்சியின் தொடர்ச்சி யாகும். வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்யப் போதிய அளவுக்குப் பயிற்சி பெற்ற கைவினை ஞர்களைத் தேசிய அளவில் உருவாக்கி அவர்களின் திறமையை வளர்ப்பதும், பயிற்சி பெற்றவர்களின் ஒட்டு மொத்த தரத்தை உயர்த்த இயலும் வகையில் இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயற்படுத்துவதும், இத் திட்டத்தின் குறிக்கோளாகும். தொழில் பயிற்சி நிலையங்கள் தொழில் பழகுவோருக்குப் பல்வேறு தொழில்களில் அடிப்படைப் பயிற்சியை அளிக்கின்றன. தொழில் பழகு பயிற்சியின் போது தொடர்புடைய பொருத்தமான அறிவுரையுடன், அவசியமான பட்டறைப் பயிற்சி அல்லது பணியில் இருக்கும்போது பயிற்சி ( on the job training) அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சி யின் கால அளவு, அந்தந்த தொழிலைப் பொறுத்து ஆறு திங்கள் முதல் நாலாண்டு வரை வேறுபடுகிறது. தொழில் பழகுவோர் பயிற்சியின் இறுதியில், அனைத்திந்திய தொழில் திறமைப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர் களுக்குத் தேசிய தொழில் பழகுநிலை சான்றிதழ் அளிக்கப்படு கிறது.

(2) தொழில் பழகுவோர் பயிற்சியின் தரத்தை உயர்த்த 1981–82 ஆம் ஆண்டு அம்பத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங் களில் தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் தனிப்

பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சி திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்காக தாராபுரத்தில் தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையம் ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டது. தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் வகுப்புக்களைத் தகுந்த முறையில் மேற் பார்வையிடவும், பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், கடலூரில் உள்ள தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலை யத்தில் தொழில் பழகுவோர் உதவி ஆலோசகர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(3) இத்திட்டத்தின் கீழ் 30–9–1980 அன்றும் 30–9–1981 அன்றும் தொழில் பழகுவோரின் விவரப் பட்டியல் கீழ்வருமாறு:—

| | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை | மொத்தம் |
| 30–9–1980 அன்றுள்ளவாறு | 3,890 | 7,041 | 10,931 |
| 30–9–1981 அன்றுள்ளவாறு | 3,622 | 7,381 | 11,003 |

| | தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுவோரின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை | தனியார் துறை. | மொத்தம். |
| 30–9–1980 அன்றுள்ளவாறு | 3,000 | 7,080 | 10,080 |
| 30–9–1981 அன்றுள்ளவாறு | 2,685 | 7,485 | 10,170 |

(4) இன்றுள்ளவாறு, தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் 136 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா தொழில் பழகுவோருக்கும் பயிற்சிக்கால அளவில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 130 முதல் ரூ. 200 வரை பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி உதவித் தொகை வீதம் 25–1–1982–லிருந்து இந்திய அரசால் திருத்தப்பட்டுள்ளது. இப்போது பயிற்சிக் கால ஆண்டினைப் பொறுத்து இந்த உதவித் தொகை ரூ. 230–லிருந்து ரூ. 350 வரை வேறுபடுகிறது. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளிலிருந்து தனியார் தமிழக அரசுத் துறை நிறுவனங்களில் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் செயல்படுத்தப்படும் நிறுவனங்கள் 1,[illegible]



ஆகும். 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய தொழிற் பயிற்சித் தேர்வில் எழுதிய 2,596 பேரில் 2,284 பேர் வெற்றி பெற்றனர்.

(5) வட சென்னை தொழிற் பயிற்சி நிறுவனத்தில் தொழில் பழகுவோரின் பயிற்சித் தொடர்பாக அறிவுரை மையத்திற்காக வகுப்பறைகள் கட்டுவதற்கான பணி 1981–82 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது.

9.3. தொழிற்சாலைகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.

(1) தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர் களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்தித் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்சாலை அதிகமாக உள்ள பகுதிகளான கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிறு வனங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் உள்ள மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும். 1981–82 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேட்டூர் அணை மற்றும் திருச்சியில் தொடங்கப்பட்டது. இவற்றில் 150 பேர் பயிற்சி பெறுகின்றனர். 1981 ஆம் ஆண்டு தேர்வில் 567 பேர் தேர்வு எழுதியதில் 465 பேர் வெற்றி பெற்றனர்.

(2) திருச்சியிலுள்ள பாரத் கனரக மின்கலத் தொழிற்சாலை (பெல் நிறுவனம்), அத் தொழிற்சாலையில் பணி புரியும் தொழி லாளர்களின் அறிவினை மேம்படுத்த தொழிற்சாலை வளாகத் திற்குள் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. பற்றவைத்தல், பொருத்துதல் ஆகிய இரு தொழில் பயிற்சி பிரிவுகள் தொடங் கப்பட்டுள்ளன. இப்பயிற்சி வகுப்பில் 50 பேர் சேர்த்துக் கொள் ளப்படுகின்றனர்.

9.4. நிதி உதவி பெறும் தொழில் பள்ளிகள் :—

(1) வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரால் பிறப் பிக்கப்பட்ட தொழில் பயிற்சி பள்ளிகள் ஒழுங்குமுறை விதிக் கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 78 தொழிற் பள்ளி கள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில், பற்ற வைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டு தல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத் தொழில்களின் பயிற்சிக் காலம் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு களாகும். அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5,124. தற்போது 4,374 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறு

கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில் களுக்கும் பொதுவான பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பொதுத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. தொழில் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிக் கோவையின் விதித் துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுயுடையனவாகும். 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் எழுதிய 2,170 பயிற்சியாளர்களில் 2,043 பேர் தேறினர். வெற்றி 94 விழுக்காடாகும்.

(2) அரசு தொழில் பயிற்சி நிலையப் பணியாளர்களுக்கு, மூன்றாவது சம்பள ஆணைக் குழு பரிந்துரைத்த சம்பள வீதங்கள் நிதி உதவி பெறும் தொழில் பள்ளிகளில் அது போன்ற பதவி களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. உதவி பெறும் பள்ளிகள் எங்கு அமைத்திருந் தாலும் அப்பள்ளி பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப் படியும் வழங்க அரசு அனுமதித் துள்ளது. அரசுப் பணியாளர்களுக்குச் சமமாக இப்பணியாளர் களுக்கு அகவிலைப்படி வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது.

9.5. சிறப்புப் பயிற்சித் திட்டம்.—

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங் களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்க மாகும். சேலம், திருச்சி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களி லுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துனர் தொழில், செப்பு வேலைப்பாடு, தகர வேலைப்பாடு ஆகிய இரட்டைதொழில்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு, ரூ. 10 பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண் ணிக்கை 160 ஆகும். 1981 ஆம் ஆண்டு 160 பயிற்சியாளர்கள் இவ்வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 155 பேர் தேர்வு எழுதியதில் 155 பேர்களும் தேர்ச்சி பெற்றனர்.

9.6. வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம்.

(1) தொழில் நுட்பவியலில் நாள்தோறும் பெருகி வரும் நவீன கருவிகளையும் மாற்றங்களையும் கருத்திற்கொண்டு ஐக்கிய நாடு கள் வளர்ச்சித் திட்டம் அனைத்து நாட்டுத் தொழிலாளர் நல



நிறுவனத்தின் உதவியுடன் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களின் தொழில்துறை அறிவினை மேம்படுத்த, அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அம்பத்தூர் தொழிற் பயிற்சித் நிலையத்தில் கீழ்க்கண்ட தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தர நிர்ணயம், பொறியியல் வரை படங்களைக் கற்றல், உலோகப் பற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி, கருவி அச்சு தயாரித்தல், கம்மியர் பராமரிப்பு, மற்றும் மின்சாரம் பராமரிப்பு.

இதுவரை தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 847 தொழிலாளர்கள் மேற் கூறிய தொழில்களில் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

(3) 1981–82 ஆம் ஆண்டு இத்திட்டம் கோயம்புத்தூரி லுள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

9.7. அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் பணியாளர் களுக்கான பயிற்சித் திட்டம்.

(1) இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் பயிற்றுநர் களுக்கும் கல்வி கற்பிப்பதில் தொழில் நுட்ப உத்தி குறித்தும் ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிருவாகம் குறித்தும் தனிப் பயிற்சி அளிப்பதேயாகும். இப் பயிற்சித்திட்டம் 1980 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இள நிலைப் பயிற்சி அலுவலர்களும், உதவி பயிற்சி அலுவலர்களும் நவீன தொழில் நுட்ப பயிற்சி முறையால் பயன் அடைகின்றனர். இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற் சாலைகளைப் பார்வை யிடுவதும் அடங்கும்.

(2) பயிற்றுவித்தலின் கீழ் கற்பிக்கும் முறை, பாடத் திட்டங் களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறைகுறித்த கோட்பாடுகள், கல்விச் சாதனங்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நவீன ஒலி, ஒளி கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக் கப்படுகிறது. இதுவரையில் 88 பயிற்றுநர்கள் இப்பயிற்சி பெற் றுள்ளனர்.

9. 8. கிராம இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம். (Trysem).

(1) கிராம இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பை தேடிக் கொள்வதற்கு இயலும் வண்ணம் அவசியமான திறமையைப் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறு விவசாயி

கள் ஏரளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கிராம இளைஞர்கள் இவர்களுக்குப் பயிற்சி அளித்து திறமையுடையவர்களாக ஆக்குவதையே இத்திட்டம் முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது. திறமை மிக்க கைவினைஞர்கள் நகர்புறத்திற்குச் செல்வதைத் தடுத்து அவர்களைக் கிராமப் புறங்களிலேயே இருக்கச் செய்து தொழில் புரிய ஊக்குவிப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. குறைந்த அளவு கல்வித் தகுதி ஏதும் வலியுறுத்தப்படவில்லை. 18 வயது முதல் 35 வயது வரை உள்ள கிராம இளைஞர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) 19 தொழிற் பயிற்சி நிலையங்களில் 1 சுயவேலை வாய்ப்புத் தொழில்களில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் சமீபத்தில் மேலும் தொழில் பயிற்சி நிலையங்களில் நீடிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது இம்மாநிலத்தில் இத்திட்டம் 27 தொழில் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சி காலம் முழு நேரப் பயிற்சிக்கு 2 மாதங்கள் (10 தொழிற் பயிற்சி நிலையங்கள் பகுதி நேரப் பயிற்சிக்கு 4 மாதங்கள் (17 தொழிற் பயிற்சி நிலையங்கள்) மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை உதவித் தொகை முழு நேரப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 100 வீதமும், பகுதி நேரப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75 வீதமும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 250 மதிப்புள்ள கருவிப் பெட்டி ஒன்று அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியின் முடிவில் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 31 முடிய இத்திட்டத்தின் கீழ் 6,931 கிராம இளைஞர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

(3) 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுவது மாநில அளவிலிருந்து மாவட்ட அளவிற்கு பரவலாக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் இயங்கும் மாவட்ட அளவிலான குழுக்கள் இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன. இத்திட்டம் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களும் வருகின்றன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் வட்டாரம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 6 இலட்சத்தில், இத்திட்டத்திற்காக ரூ. 1.50 இலட்சம் பயன்படுத்தப்படும்.

9.9. தொழிற் பயிற்சி நிலையங்களில் குடிசை வாழ் மக்களுக்கான பயிற்சித் திட்டம்.

இந்தத் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் குடிசை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை மாநகர் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த



ஏற்கும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பெ திட்டமாகும். இத்திட்டம் கிண்டி, அம்பத்தூர், வட சென்னை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை பகுதி நேரத் தொழிலாக தச்சு வேலை, ஒட்ட வைப்பு உட்பட இரு சக்கர வண்டி வேலை, சாதாரண மின் கம்பி வேலை, பழுது பார்த்தல், கட்டிட வேலை, வண்ணம் பூசுதல், சைக்கிள் பழுது பார்த்தல், குறைவழுத்தப் பற்ற வைப்புத் தொழில் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில்களுக்கு ஏற்ப பயிற்சிக் காலம் மூன்று திங்களிலிருந்து ஆறு திங்கள் வரை உள்ளது. இது வரை 700 பயிற்சியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

9.10 பொது :

(1) பயிற்சியாளர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடும் போது அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட, மூன்று உற்பத்தி சார்ந்த பயிற்சி நிலையங்கள் அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் 1981–82-ல் தொடங்கப்பட்டன.

(2) 1982–83 ஆம் ஆண்டில், நாகர்கோவிலில் உள்ள எஸ். எம். ஆர். வி. நிலையத்தில் பல்வேறு தொழில் பிரிவுகளில் கூடுதலாக 160 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம், அதனை ஒரு முழுமையான மகளிர் தொழிற் பயிற்சி நிலையமாக தரமுயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

(3) தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியின் தரத்தை மேம்படுத்த ரூபாய் 10 லட்சம் செலவில் பற்றாக்குறையான கருவிகளை வாங்குவதற்காகவும் ரூபாய் மூன்று லட்சம் செலவில் கருவிகளை மாற்றி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## பாகம் III.

### அத்தியாயம்-10.

கோரிக்கை 55.—பல்வகை மூலதனச் செலவு 495-ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்து மூலதனச் செலவு-ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள்-ஏபி. வேலை வாய்ப்பு.

இத் தலைப்பின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் சில துணைத் திட்டங்கள் வருமாறு :—

10.1. தொழிற் பயிற்சி நிலையங்களின் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

இம் மாநிலத்திலுள்ள 25 தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடியிருப்புகள் உள்ளன. எஞ்சிய

தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இத்திட்டத்திற்காக 1982–83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**10.2.** தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் விடுதிக் கட்டிடத்தைக் கட்டுதல்.

இம் மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நீலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. ஈரோடு தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதி கட்டும் பணி 1981–82-ல் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**10.3.** அரக்கோணத்திலும், கடலூரிலும் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள், கருவிகளுக்கு வகை செய்தல்.

அரக்கோணத்திலும் கடலூரிலும் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

**10.4.** தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

சென்னை (வடக்கு), தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள தொழில் தொடர்பான அடிப்படைப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு, வகுப்பறைகள் கட்டுவதற்காக 1982–83ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.30 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கிண்டி, தொழிற் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி நிலையத்திற்குக் கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் அம்பத்தூர், திருச்சி, மதுரையில் புதிதாகத் தொடங்கப்படும் அடிப்படைப் பயிற்சி வகுப்புகளுக்கான மேசை, நாற்காலிகள் வாங்குவதற்கும் ரூ. 8,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**10.5.** தொழில்களைப் பல்திறப்படுத்தல்.—

செங்கற்பட்டு, கிண்டி, புதுக்கோட்டை தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பல்திறப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக





1981–82-ஆம் ஆண்டில் ரூ. 5.55 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மேலும் தேவையான இயந்திரங்கள், கருவி கள் வாங்குவதற்கு 1982–83-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.01 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.6.** சாதனங்கள் வாங்குதல்.

பல்வேறு தொழில்களுக்காக, மைய அரசு வரையறுத்த
கருவிகள், சாதனங்கள் குறித்த தரப்பட்டியலைத் திருத்தி
யமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) கம்மியர்
(குளிர் பதனம்-சீர்வளி வசதி), கருவிகளும் சாதனங்களும்
வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1982–83-ஆம் ஆண்டு
வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இயந்திரங்கள் மற்றும்
சாதனம் வாங்க ரூ. 10.26 இலட்சம் நிதி யாதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

**10.7.** கம்மியர் தொழில் (பொது மின்னனுவியல்) பயிற்சி.

அடையாறு, பயிற்சிப் பிரிவுக்கு கருவிகள், சாதனங்கள்
வாங்குவதற்காகும் செலவுக்காக 1982–83-ஆம் ஆண்டு வரவு
செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 23,000 நிதி ஒதுக்கம்
செய்துள்ளது.

**10.8.** தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

(1) அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில்
வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டத்திற்கும்,
வேலூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் தோல் பதனிடும்
தொழில்களுக்கும் கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக
1982–83-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூ. 1,05,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து கோயம்
பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்திலும் செயல்படுத்தப்
படுகிறது. இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக
1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூ. 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகம் IV.

அத்தியாயம்-11.

**11.1.** அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசைச் சார்ந்தது) 1956 ஆம் ஆண்டின் நிறுமங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப்பட்டது. இந் நிறுவனம் ரூ. 50 இலட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. இத்தொகையில் இதுவரை ரூ. 10 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப் பெற்றுள்ளது.

11.2. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் : (1) திறமை பெற்ற, ஓரளவு திறமை பெற்றவர்களுக்கு வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவது (2) வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பி வைக்கப் பெறும் தொகையினை முதலீடு செய்வது. (3) இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் நிறுவுவது (4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது ஆகியவையாகும்.

11.3. தற்போது வெளிநாடுகளில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது பற்றிய பணியை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது, வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் தொழிலாளர்களை இந்த நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 13–12–1981 அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 5,517 ஆகும். இந்நிறுவனம், ஐக்கிய அரபு எமிரைட்ஸ், ஈராக், லிபியா ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 423 தொழிலாளர்களை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 90 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மேலும் 51 பணியாளர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்ப தேர்வு செய்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.



பாகம் V

இணைப்புகள்

தொழிலாளர்—தொழிலதிபர் நல்லுறவு.

(i) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த புள்ளி விவரங்கள்.

| ாடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 | 1980 | 1981 | 1980 | 1981 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| துணி நெசவு .. | 107 | 133 | 78,916 | 1,14,392 | 15,69,824 | 27,99,352 |
| பொறி இயல் .. | 70 | 86 | 14,099 | 16,178 | 4,23,884 | 5,01,817 |
| தோல் பதனிடும் தொழிற்சாலை | 8 | 6 | 728 | 909 | 13,392 | 13,247 |
| புகையிலை, பீடி | 5 | 1 | 50,377 | 605 | 5,16,184 | 37,520 |
| மலைத்தோட்டங்கள் | 13 | 13 | 90,643 | 17,358 | 3,66,216 | 2,70,818 |
| ஏனையவை | 90 | 49 | 47,021 | 36,732 | 6,11,522 | 5,01,267 |
| மொத்தம் .. | 293 | 288 | 2,81,784 | 1,86,174 | 35,01,022 | 41,24,021 |

(ii) தீர்ப்பு வழங்குதல்.

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1980 (2) | 1981 (3) | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1980 (4) | 1981 (5) |
|---|---|---|---|---|
| (அ) சென்னை, தொழில் நடுவர் மன்றமும் தொழிலாளர் நீதி மன்றங்களும். | 1,036 | 1,035 | 889 | 1,003 |
| (ஆ) 10(2)-ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்டவை. | — | 33 | — | .. |
| (இ) தொழிலாளர் நீதி மன்றங்கள் முன்பு 33-சி (2)-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை. | 1,554 | 1,694 | ... | .. |

(iii) வசூல்—

1947-ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1)—ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்.

| வசூல் செய்ய ஆணையிடப்பட்டவை. 1980 (1) | 1981 (2) | தொகை ரூபாய். 1980 (3) | 1981 (4) |
|---|---|---|---|
| 124 | 205 | 6,76,322·22 | 26,61,048·31 |

(iv) வழக்குத் தொடர்தல்—

நடப்பாண்டில் வழக்கு தொடர அனுமதிக்கப்பட்டவை—3



## இணைப்பு II

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் கீழ் உள்ள நிறுவனங்கள்/தொழிலாளர்கள்/வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை குறித்த விவரங்கள்.

| ஆண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுக் கட்டணம். (4) |
|---|---|---|---|
| I. தொழிற் சங்கம் அமையப்பெற்ற தொழில்கள். | | | |
| 1, 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் | | | |
| 1980 .. .. .. .. | 9,681 | 6,75,222 | 52,75,124 |
| 1981 .. .. .. .. | 10,444 | 6,40,850 | 53,31,106 |
| 2. 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | | | |
| 1980 .. .. .. | 419 | 90,291 | ... |
| 1981 .. .. .. | 434 | 91,390 | .. |
| 3. 1961—ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம். | | | |
| 1980 .. .. .. | 1,564 | 55,077 | 70,931·69 |
| 1981 .. ... — | 1,626 | 58,035 | 84,877·77 |

| ஆண்டு (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | பணிக்கமர்த்தப் பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் கட்டணம். (4) |
|---|---|---|---|
| II. தொழிற் சங்கம் அமையப் பெறாத தொழில்கள். | | | |
| 1. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | | | |
| 1980 .. .. .. .. | 1,397 | 12,935 | 38,145·50 |
| 1981 .. .. .. | 1,332 | 12,361 (வீட்டுத் தொழி லாளர்கள் 2,00,000) | 42,617·00 |
| 2. 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம். | | | |
| 1980 .. .. .. .. | 2,86,420 | 2,61,527 | .. |
| 1981 .. .. .. | 2,78,123 | 2,64,492 | .. |
| 3. 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | | |
| 1980 .. .. .. .. | 28,285 | 67,378 | 2,20,860·05 |
| 1981 .. .. .. .. | 27,987 | 71,146 | 3,09,298.00 |



## இணைப்பு III

**பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் குறித்த விவரங்கள்.**

| சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறைகள் ஆய்வு. (3) | தனி ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சரி பார்ப்பு ஆய்வு. (7) | மொத்த ஆய்வுகள். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| (i) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 19,311 | 888 | 1,555 | 502 | 776 | 1,891 | 24,923 |
| (ii) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 359,467 | 44,029 | 6,344 | 10,959 | 18,791 | .. | 4,39,580 |
| (iii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 51,801 | 338 | 398 | 675 | 346 | .. | 54,058 |
| (iv) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர்கள் சட்டம். | 3,551 | 52 | 171 | 76 | .. | .. | 3,840 |
| (v) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமையும் பல்வகை ஒதுக்கீடுகளும்) சட்டம். | 38 | .. | .. | .. | .. | .. | 38 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| (vi) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம். | 874 | .. | .. | .. | .. | .. | 87 |
| (vii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை நிறுவனங்கள். (தேசீய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,88,595 | 3,161 | 2,348 | 2,868 | .. | — | 1,96,972 |
| (viii) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம். | 1,338 | 100 | 180 | 82 | .. | .. | 1,700 |
| (ix) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 54,316 | 135 | 79 | 274 | .. | .. | 54,804 |
| (x) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,65,261 | 277 | 169 | 525 | 20 | .. | 1,66,352 |
| (xi) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | 3,193 | 154 | 60 | 243 | .. | .. | 3,655 |
| (xii) 1938 ஆம் ஆண்டு சிறுவர்கள் பணிச் சட்டம். | 296 | .. | .. | .. | .. | .. | 296 |
| (xiii) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 6,657 | .. | .. | .. | .. | .. | 6,657 |



## இணைப்பு IV

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்

| சட்டத்தின் பெயர். (1) | தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்தவை. (2) | இந்த ஆண்டில் தொடுக்கப்பட்டவை. (3) | முடிக்கப்பட்டவை. (4) | தண்டனை அளிக்கப்பட்டவை. (5) | விடுதலை பெற்றவை. (6) | கண்டிக்கப்பட்டவை. (7) | திரும்பப் பெறப்பட்டவை. (8) | முடிவுறாமல் உள்ளவை. (9) | பெறப்பட்ட அபராதத் தொகை (10) ரூபாய். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (i) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 2,134 | 3,756 | 3,984 | .. | .. | .. | .. | 1,906 | 3,09,440 |
| (ii) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம். | 4,004 | 17,029 | 15,101 | 14,966 | 26 | 50 | 59 | 5,932 | 7,85,074 |
| (iii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 1,003 | 2,901 | 2,463 | 2,427 | 2 | 12 | 22 | 1,441 | 1,57,321 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (iv) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம். | 197 | 466 | 469 | 458 | .. | 2 | 9 | 194 | 58,055 |
| (v) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம். | 7 | 19 | 23 | 23 | .. | .. | .. | 3 | 2,600 |
| (vi) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் | 1,446 | 4,723 | 4,409 | 4,372 | 8 | 13 | 16 | 1,760 | 1,28,032 |
| (vii) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 75 | 74 | 102 | 97 | 4 | .. | 1 | 47 | 12,335 |
| (viii) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 474 | 1,431 | 1,152 | 1,145 | .. | 2 | 3 | 753 | 44,465 |
| (ix) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் | 412 | 2,054 | 1,675 | 1,662 | 1 | 5 | 7 | 791 | 88,505 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (x) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | .. | 8 | 7 | .. | .. | .. | .. | 1 | 260 |
| (xi) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | .. | 2 | 1 | 1 | .. | .. | .. | 1 | 150 |
| (xii) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 89 | 118 | 148 | 138 | 1 | 4 | 1 | 59 | 10,785 |
| (xiii) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | .. | 3 | 1 | 1 | .. | .. | .. | 2 | 10 |

## இணைப்பு V

(அ) பற்பல தொழிலாளர் நலச்சட்டங்களின்கீழ் துறை அலுவலரால் முடிவுசெய்யப்பட்ட வழக்குகள்

| விவரங்கள் | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் | | *தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் | | பணிக்கொடை** வழங்குதல் சட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 | 1980 | 1981 | 1980 | 1981 |
| (i) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 32 | 22 | 168 | 146 | 352 | 173 |
| (ii) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 114 | 128 | 191 | 336 | 893 | 1,236 |
| (iii) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 146 | 150 | 259 | 482 | 1,245 | 1,409 |
| (iv) நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 124 | 112 | 213 | 358 | 1,072 | 1,059 |
| (V) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 22 | 38 | 146 | 124 | 173 | 350 |

* தொழிலாளர் நல துணை அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியவர்களால் முடிவு செய்யப்பட்டவை.

** தொழிலாளர் நல துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.

(ஆ) தொழிலாளர் நல துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்குதல் சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 | 1980 | 1981 | 1980 | 1981 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (i) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 449 | 339 | 204 | 216 | 93 | 163 |
| (ii) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 798 | 874 | 421 | 758 | 711 | 327 |
| (iii) மொத்தம். | 1,247 | 1,213 | 625 | 974 | 804 | 490 |
| (iv) இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 908 | 959 | 409 | 793 | 641 | 344 |
| (v) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 339 | 254 | 216 | 181 | 163 | 146 |

## இணைப்பு V

(அ) பற்பல தொழிலாளர் நலச்சட்டங்களின்கீழ் துறை அலுவலரால் முடிவுசெய்யப்பட்ட வழக்குகள்

| விவரங்கள் | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் 1980 | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் 1981 | *தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1980 | *தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1981 | பணிக்கொடை** வழங்குதல் சட்டம் 1980 | பணிக்கொடை** வழங்குதல் சட்டம் 1981 |
|---|---|---|---|---|---|---|
| (i) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 32 | 22 | 168 | 146 | 352 | 173 |
| (ii) இவ்வாண்டில் வரப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 114 | 128 | 191 | 336 | 893 | 1,236 |
| (iii) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 146 | 150 | 259 | 482 | 1,245 | 1,409 |
| (iv) நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 124 | 112 | 213 | 358 | 1,072 | 1,059 |
| (v) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 22 | 38 | 146 | 124 | 173 | 350 |

* தொழிலாளர் நல துணை அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியவர்களால் முடிவு செய்யப்பட்டவை.

** தொழிலாளர் நல துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.



(ஆ) தொழிலாளர் நல துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | தொழிலாளர் இழப் பீட்டு சட்டம். 1980 | தொழிலாளர் இழப் பீட்டு சட்டம். 1981 | ஊதியம் வழங்குதல் சட்டம். 1980 | ஊதியம் வழங்குதல் சட்டம். 1981 | பணிக்கொடை வழங்குதல் சட்டம். 1980 | பணிக்கொடை வழங்குதல் சட்டம். 1981 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (i) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 449 | 339 | 204 | 216 | 93 | 163 |
| (ii) இவ்வாண்டில் வரப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 798 | 874 | 421 | 758 | 711 | 327 |
| (iii) மொத்தம். | 1,247 | 1,213 | 625 | 974 | 804 | 490 |
| (iv) இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 908 | 959 | 409 | 793 | 641 | 344 |
| (v) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 339 | 254 | 216 | 181 | 163 | 146 |

4 பல்கலைக் கழக வேலை நிலவரத் தகவல்—வழிகாட்டி பிரிவு, அண்ணாமலை நகர், சென்னை, மதுரை

| (1) | 1—4—1981 முதல் 31—12—1981 வரையிலான காலத்திற்கு. பதிவு செய்து கொண்டவர்கள். (2) | வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். (2) | 1981 ஆம் ஆண்டு டிசம்பர்வரை பதிவேட்டி லுள்ளவர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|---|
| அ) சென்னை .. .. .. | 118 | 7 | 282 |
| ஆ) மதுரை .. .. .. | 1,510 | 152 | 3,544 |
| இ) அண்ணாமலை நகர் .. .. .. | 157 | 20 | 457 |

5 வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்:

| காலாண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | நிறுவனங்களிலுள்ள மொத்த வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| அ) பொதுத்துறை— | | |
| 31—3—1981 .. .. .. | 9,398 | 12,18,885 |
| 30—6—1981 .. .. .. | 8,921 | 12,31,087 |
| 30—9—1981 .. .. .. | 9,081 | 12,44,487 |
| ஆ) தனியார்துறை— | | |
| 31—3—1981 .. .. .. | 11,785 | 6,84,581 |
| 30—6—1981 .. .. .. | 11,863 | 6,92,736 |
| 30—9—1981 .. .. .. | 12,367 | 7,02,340 |



6. வாழ்க்கைத் தொழில் ஆலோசனை :

| | 1-4-1981 முதல் 31-12-1981 வரை |
|---|---|
| (1) கூட்டுக் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை .. .. | 3,153 |
| (2) கூட்டுக் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 56,681 |
| (3) பதிவு வழி முறைகளைப் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை. | 13,710 |
| (4) பணியில் அமர்த்தப்பட்ட/தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 612 |
| (5) பள்ளிகள்/கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி உரையின் எண்ணிக்கை. | 280 |
| (6) தொழில் பழகும் பயிற்சி/படிப்பு உதவித் தொகை/மேல்படிப்புக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 10,706 |

7 தொழிலாளர் வேலை வாய்ப்புச் பிரிவு:

| | 1-4-1981 முதல் 31-12-1981 வரையிலான கால அளவிற்கு. ஸ்ரீலங்கா. | பர்மா. |
|---|---|---|
| (1) பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை .. | 3,343 | 1,215 |
| (2) பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 608 | 428 |
| (3) தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை (டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி). .. | 12,786 | 2,317 |

8. 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் :

| காலம். | அறிவிக்கப் பட்ட காலி இடம். | நிரப்பப்பட்ட காலி இடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (i) 1-4-1980 முதல் 31-12-1980 வரை .. .. .. | 47,973 | 31,326* |
| (ii) 1-4-1981 முதல் 31-12-1981 வரை .. .. .. | 74,523 | 48,860* |
| (iii) 1-1-1981 முதல் 31-12-1981 வரை .. .. .. | 95,235 | 61,405* |

*அறிவிக்கப்பட்ட காலி இடத்திற்கும் நிரப்பப்பட்ட இடத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு காரணம். (1) தேர்வு முடிவுகள் கிடைக்கப் பெறாததால், காலியிடங்கள் தொழில் அதிபர்களால் நிரப்பப்படாமல் உள்ளவை. (2) பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால் காலி இடங்கள் இரத்து செய்யப்பட்டவை. (3) எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு காலி இடங்கள் ஏற்படாமை.

9. வேலையற்றோர் உதவித் திட்டம் :

31-12-1981 அன்று நிலவரப்படி பயனடைந்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன·

| | | |
|---|---|---|
| (1) | 1-7-1980 முதல் 31-12-1981 வரை பயனடையத் தகுதி வாய்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 19,640 |
| (2) | தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரிபார்த்து உதவித்தொகை அளிப்பதற்காக வட்டாட்சியருக்குப் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 19,610 |
| (3) | வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 11,284 |
| (4) | 1—10—1981 வரை பயனடையத் தகுதி வாய்ந்தவர்களை அடையாளப் படுத்தப் பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை. | 136 |



| | | |
|---|---|---|
| (5) | இனம் 4-ல் உள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரி பார்த்து நிவாரணத் தொகை அளிப்பதற்காக மாநிலத்திலுள்ள வட்டாட்சியர்களுக்கு, பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 50 |

1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான, ஒதுக்கீடும் செலவும் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஒதுக்கீடு. | செலவு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| (1) 1980-81 .. .. .. .. | 50,00,000 | 22,04,000 |
| (2) 1981-82 .. .. .. .. | 80,00,000 | 45,27,000 (31-12-1981 வரை) |

10 ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்பு உதவி—

| | 1-4-1981 முதல் 31-12-1981 வரை | |
|---|---|---|
| | ஆதி திராவிடர். | பழங் குடியினர். |
| (1) பதிவு செய்து கொண்டவர்கள் .. .. .. | 54,686 | 2,556 |
| (2) பணியில் அமர்த்தப்பட்டவர்கள் .. .. .. | 8,904 | 276 |
| (3) பதிவேட்டில் உள்ளவர்கள் .. .. .. | 1,96,710 | 5,067 |

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலுள்ள பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் ஆலோசனை நிலையம், உதகமண்டலம்.

| | | 1-4-1981 முதல் 31-12-1981 வரை: |
|---|---|---|
| (1) | பழங்குடியினர் வாழுகின்ற பெரும்பகுதி இடங்களுக்கு, இப்பிரிவு சென்று வந்த பொழுது பதிவு செய்து கொண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 1,049 |
| (2) | பதிவு செய்து கொண்ட காலத்தில் வழிகாட்டப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 201 |
| (3) | தொழில் பயிற்சி வசதி குறித்து தனிப்பட்டவகையில் தகவல் வரப்பெற்ற பழங்குடியினரின் எண்ணிக்கை. | 2,006 |
| (4) | ஆதி திராவிடர் நல பள்ளிகள்/விடுதிகளில் பழங்குடியினருக்காக நடத்தப் பட்ட தொழிற்பயிற்சி உரைகளின் எண்ணிக்கை. | 67 |
| (5) | தனி வாழ்க்கைத்தொழில் ஆலோசனை நிலையத்தின் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை.— | |
| | (அ) பணியில் .. .. .. .. | 63 |
| | (ஆ) தொழில் பழகுவோர் பயிற்சியில் .. .. | 14 |
| | (இ) பயிற்சித் திட்டத்தில் .. .. .. | 5 |



1982 மார்ச் 15]

## கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34 வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சி.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

முன்னுரை :

உறைவிடம் அளிக்கும் வீட்டு வசதி, மனிதனின் முக்கிய தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒருவரின் பொது நலம் மற்றும் சுகாதாரம் ஆகியவைகளுக்கு வீட்டு வசதி வழி வகுப்பதோடு, ஒரு தொழில் என்ற வகையில் அது பெருமளவில் வேலைவாய்ப்புகளை உண்டாக்குகிறது. மக்கட் தொகை பெருக்கத்தினால், நல்ல வசதியுடைய வீட்டு வசதி இருப்பினுக்கான தேவைகள் அதிகரித்துள்ளன. 1970 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 86·4 இலட்சமாக இருந்தது. 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மக்கட் தொகை 480 இலட்சத்தைத்தாண்டியுள்ளது. இவற்றில் 320 இலட்சம் பேர் கிராமங்களிலும், ஏறக்குறைய 160 இலட்சம் பேர் நகர்ப்புறங்களிலும் வசிக்கின்றனர். சென்ற சில ஆண்டுகளில் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் வீட்டு வசதி இருப்பினை அதிகப்படுத்தியுள்ளன. இதனைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பார்த்தால் வீடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை அதிக அளவுக்கு தேவையிருக்காது. ஆனால் தற்போதுள்ள வீடுகளில் நல்ல வசதிகள் செய்வதற்கும், கால இழப்பினால் பழைமையான வீடுகளை மாற்றி அமைப்பதற்கும் உடனடித் தேவையுள்ளது.

2. அரசு நிறுவனங்களின் மூலமாக நகர்ப்புற மற்றும் கிராமப் பகுதிகளில் வீட்டு வசதி இருப்பினை திட்டமிட்டு பெருக்குவது அரசின் கொள்கையாகும். தனியார்த்துறையில் ஏற்படும் இயல்பான வளர்ச்சிக்கு இக்கொள்கை உறுதுணையாக அமைகிறது. அதே சமயத்தில் பொருளாதாரத்தின் அடித்தளத்தில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினரின் வீட்டு வசதிக்கு நல்ல முறையில் உதவியினை நல்குகிறது.

3. அண்மையில் பிரதம மந்திரி அவர்களால் அறிவிக்கப்பட்ட 20 அம்ச திட்டம், பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சி ஏற்றமடையச் செய்ய முக்கியமான நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது. அவற்றில் கீழே தரப்பட்டுள்ள இரண்டு அம்சங்கள் குறிப்பிடத் தகுந்தவை.

(1) வீட்டு மனையில்லாத கிராமக் குடும்பங்களுக்கு மனை வழங்குதல் மற்றும் அவர்கள் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் தீட்டுதல், மற்றும்.

[1982 மார்ச் 15

(2) குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறத்தை மேம்பாடு செய்தல், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் காரணம் ஏதுமின்றி உயர்கின்ற நிலத்தின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்.

மாநில அரசு இந்தத் திட்டங்களை முழுமனதோடு ஏற்றுக்கொண்டுள்ளது. இத்துறையின் நடவடிக்கைகள் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது.

4. இந்த அரசு 1977 ஆம் ஆண்டிலிருந்து கிராமப் பகுதிகளில் வீடில்லாதவர்களுக்கு பெரும் வீட்டுவசதித் திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது. சென்ற ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு 40,000 வீடுகள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அண்மையில் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் வீடுகளுக்கான மதிப்பீட்டுத் தொகையை ரூ. 3,750-ல் இருந்து ரூ. 4,000-க்கு அரசு உயர்த்தியுள்ளது. ஆக 40,000 வீடுகள் கட்ட ஆண்டொன்றுக்கு ரூ. 16 கோடி செலவிட வேண்டியிருக்கும். இத்திட்டத்திற்கான நிதியாதாரங்களை, நிதி நிறுவனங்களிடமிருந்து பெற பெரிய அளவில் முயற்சி தேவையாகவுள்ளது. இத்திட்டம் வருவாய் மற்றும் சமூக நலத்துறைகளால் நிறைவேற்றப்படும். வீடு வசதியில்லாதோருக்கு மனைகள் வழங்கும் திட்டத்தினோடு இணைத்து வீடுகள் கட்ட முயற்சி எடுக்கப்படவிருக்கிறது.

5. ஹட்கோ அளிக்கும் நிதியுதவியோடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சமூக வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுகிறது. பொருளாதாரத்தில் நலிந்த, குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்த் தொகுதியினர்களுக்கான வீடுகளுக்கு ''ஹட்கோ'' நிர்ணயித்துள்ள மதிப்பீட்டுச் செலவு இத்திட்டங்களைப் பெருமளவில் நிறைவேற்றுவதற்கு பிரச்சினையாகவுள்ளது. அண்மையில் மத்திய அரசு, வீடுகள் கட்ட ஆகும் செலவு உயர்வினைக் கருத்திற்கொண்டு இப்பிரிவினர்களுக்கான வீடுகளின் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்துவது பற்றி பரிசீலிக்கிறது என்பது வரவேற்கத்தக்க செய்தியாகும். வீட்டு வசதி வாரியம் வீடுகட்டும் பணியை உயர்த்துவதற்கு இதுவகை செய்யும். ஹட்கோ உதவியுடன் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காகவும், சென்னை நகரில் உள்ள குடிசைவாசிகளுக்காகவும் முறையே வீட்டு வசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் அதிக அளவில் திட்டங்களை எடுத்துக்கொள்ள இம்முடிவு உதவியாக அமையும்.

6. 1977–78 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி உதவியுடன் சென்னை நகரில் வாழும் ஏழை மக்களுக்காக ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தையும், சென்னை நகரில் உள்ள அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கும் தமிழக அரசு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1980–81 ஆம் ஆண்டு முதல் சென்னை



1982 மார்ச் 15]

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டம் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்னை நகரில் உள்ள குடிசைப்பகுதிகளில், குடி தண்ணீர் வசதி, சுகாதார வசதி, சாலைகள், தெருவிளக்குகள், கல்வி வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன. இத்துடன் குடிசைப்பகுதிகளில் வாழும் 50,000 குடும்பத்தினருக்கு ரூ. 600 முதல் ரூ. 3,500 வரை வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும் குத்தகை விற்பனைப் பத்திரத்தின் மூலமாக குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு உடைமை உரிமை அளிக்கப்படுகிறது. மேம்பாடு செய்ய இயலாத குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்காகவும், ஆட்சேபணையாகவுள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு கட்டப்படும் குடியிருப்புகளுக்கு இத்திட்டங்கள் துணையாக அமைந்துள்ளன.

7. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழகம் மணலி புறநகர் பகுதிகளில் 1,086 வீடுகளையும், புதிய நகரான மறைமலை நகரில் 874 வீடுகளையும் கட்டி மேம்படுத்தியுள்ளது. திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் என்ற மூன்று திட்டப்பகுதிகளில் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டம் நிறைவேற்றப்பட்டது. சென்னை நகர்புற வளர்ச்சி, இரண்டாவது கட்ட திட்டத்தின் கீழ் நெற்குன்றம் மற்றும் மொகப்பேர் பகுதிகளும் மேம்படுத்தப்படும். இக்கழகம் சென்னை ஜார்ஜ்டவுன் பகுதியில் காணப்படும் இட நெருக்கடியை நீக்கும்பொருட்டு, கோயம்பேட்டில் மொத்த விற்பனை அங்காடியை புதிதாக ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைப் போக்க உள்வரைவுச் சாலைகளையும், லாரி மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவற்றை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் முனைக்குச் சுமார் ரூ. 60 கோடி முதல் ரூ. 70 கோடி வரை செலவில் பெரும் பகுதியினரைக் கொண்டு செல்லும் விரைவு போக்குவரத்துத் திட்டம், மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசுக்குச் சொந்தமான 6·64 எக்டேர் நிலத்தையும், சுமார் ரூ. 204 இலட்சம் மதிப்புடைய தனியாருக்குச் சொந்தமான 2·111 எக்டேர் நிலத்தையும் இரயில்வேக்கு இலவசமாக அளிக்க தமிழக அரசு இசைவு அளித்துள்ளது.

8. சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை பின்பற்றி, நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம் தமிழ்நாட்டில் உள்ள பிற பெரிய நகரங்களின் நகர்ப்புற தேவையைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்திற்கு குறைவாக மக்கள் தொகையுள்ள 23 நகரப்பகுதிகளுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசுகள்

ரூ. 564.75 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளன. இவற்றின் மூலம் முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டம், வருவாய் ஆதாயம் தரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

9. மேலே எடுத்துச் சொல்லப்பட்டவைகளின் அடிப்படையில் பல்வேறுபட்ட நிறுவனங்களின் சாதனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கிராமப்புற வீட்டு வசதி.

10. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தலைமைச் சங்கமாக இருந்து, கிராம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வாயிலாக கிராம வீட்டுவசதித் திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தை நிறையப் பகுதிகளில் விரிவுபடுத்த கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் எண்ணிக்கை 100லிருந்து 110 ஆக அரசு சமீபத்தில் உயர்த்தியுள்ளது.

11. கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 1980–81 ஆம் ஆண்டு முடிய ரூ. 2,602·82 இலட்சம் கடன்தொகை வழங்கி, ஆதி திராவிடர்களால் 58, 994 வீடுகளும், மற்றவர்களால் 18,308 வீடுகளும் (மொத்தம் 77,302 வீடுகள்) கட்டப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்டப்படவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31—1—1982 வரை 11,632 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் 10,115 வீடுகள் ஆதி திராவிடர்களால் கட்டப்பட்டவை. 34,609 வீடுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. முதன்மைச் சங்கங்கள் ரூ. 721.10 இலட்சம் கடனாக வழங்கியுள்ளன.

12. 1982–83 ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்டப்படவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம வீட்டு வசதி திட்டத்திற்காக 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த ரூ. 450 இலட்சத்திற்கு மாறாக 1982–83 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 800 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ;

13. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறும் கடனை நகர்ப்புற வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நிதியுதவியாக அளித்து வருகிறது. இதுவரையில் 36,095 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இச்சங்கம் 30—6—1981 வரை கடனாக ரூ. 73.29 கோடியை வழங்கியுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 8,000 வீடுகள் கட்டப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம்



1—7—1981 முதல் 31—1—1982 வரை ரூ. 4.16 கோடியினை கடனாக வழங்கியுள்ளது. 886 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக சமூக வீட்டு வசதித் திட்டங்கள்.

14. பல்வேறுபட்ட வீட்டு வசதித் திட்டங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உயர் வருவாய்த் தொகுதியினர் முதல் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் வரை உள்ள பலதரப்பட்ட மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. வீட்டு வசதி வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவு மதிப்பீடு 1981–82 ஆம் ஆண்டு மதிப்பீடான ரூ. 29.50 கோடியிலிருந்து 1982–83 ஆம் ஆண்டுக்கு ரூ. 32 கோடிக்கு உயர்த்தியுள்ளது.

15. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கான திட்டத்தின் கீழ் பயன்பெறும் பிரிவினருக்கு நிறைய வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற கருத்தில் வீட்டு வசதி குடியிருப்புப் பகுதிகளில் பல்வேறுபட்டவர்களுக்கான வீட்டு வசதி கீழ்க்கண்ட சத விகிதத்தில் இருக்க வேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது.

| | | சதவிகிதம். |
|---|---|---|
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் | .. | 45 |
| குறைந்த வருவாய்த் தொகுதியினர் | .. | 35 |
| நடுத்தர வருவாய்த் தொகுதியினர் | .. | 15 |
| உயர் வருவாய்த் தொகுதியினர் | .. .. | 5 |

16. ''ஹட்கோ'' நிதி உதவியுடன் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் குறைந்த நடுத்தர மற்றும் உயர்வருவாய்த் தொகுதியினர்களுக்கு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும் வீட்டு வசதி திட்டங்களின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| திட்டம். | | இதுவரை கட்டப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை | 1981–82 ஆம் ஆண்டு கட்டப்படவிருக்கும் குடியிருப்புகள். | 1982–83 ஆம் ஆண்டு கட்டப்படவிருக்கும் குடியிருப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர். | .. | 11,256 | 387 | 633 |
| குறைந்த வருவாய்த் தொகுதியினர். | .. | 15,181 | 2,214 | 1,700 |
| நடுத்தர வருவாய்த் தொகுதியினர். | .. | 9,033 | 1,129 | 1,725 |

நிலம் கையகப்படுத்தல்—வீட்டு மனை மேம்பாட்டுத்திட்டம்.

17. நிலத்தின் விலைகளில் ஊக வாணிகத்தை தடுக்கும் பொருட்டும், நிலத்தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் நிலங்களை பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

18. நமது மாநிலத்தில் இதுவரையில் 16,798.73 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டு வாரியம் ரூ. 237.47 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் ரூ. 319.43 இலட்சம் செலவிட்டு இத்திட்டத்தின் செயல்பாட்டினை உயர்த்தும் இத்திட்டச்செலவுகளில் ஒரு பகுதியையே அரசு வாரியத்திற்கு கடனாக வழங்குகிறது. 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 25 இலட்சத்திற்கு மாறாக 1982–83 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 30 இலட்சமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு என வீட்டுவசதித் திட்டம் :

19. இத்திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியம் மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு என குடியிருப்புகளை கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 2,734 குடியிருப்புகளை கட்டியுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 120 குடியிருப்புகளை கட்ட வாரியம் உத்தேசித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 30 இலட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

காவலர் வீட்டு வசதித் திட்டம் :

20. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே காவலர் துறை சார்நிலை பணியாளர்களின் 80 சதவீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். இத்திட்டத்தின் கீழ், 1981–82 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 1,343 குடியிருப்புகளை கட்டியுள்ளது. எஞ்சியுள்ள 90 குடியிருப்புகளை 1982–83 ஆம் ஆண்டில் கட்ட வாரியம் உத்தேசித்துள்ளது. அரசு சென்னை, புதுப்பேட்டையில் காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணியை வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில்





அகற்றல், நகர்ப்புற போக்குவரத்துக்காக சாலையை மேம்படுத்துதல், நகர்ப்புறத்திலுள்ள ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு ஒருவாக்கித் தருதல் ஆகியவையே சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

குடிசைப் பகுதி மேம்பாடு சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1 மற்றும் 11.

40. குடிசைப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு தெரு விளக்குகள், சாலைகள், கழிவு நீர் அகற்றல், குடி நீர் வழங்கல், பொதுக் கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் 1977–78 ஆம் ஆண்டு 19 குடிசைப் பகுதிகளுக்கும் 1978–79 ஆம் ஆண்டில் 7 குடிசைப் பகுதிகளுக்கும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செய்து தரப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இது வரை 25,817 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1981 ஆம் ஆண்டு டிசம்பர், 31-ஆம் தேதி வரை ரூ. 404!56 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

41. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள 12 குடிசைப் பகுதிகளில் 4,137 குடும்பங்கள் பயனடையும் வகையில், சென்னை மாநகராட்சி 1979–80-ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றி வருகிறது. 1981-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் வரை அரசு மானியமாக வழங்கியுள்ள ரூ. 48!54 இலட்சத்தில் ரூ. 43!24 இலட்சத்தைச் செலவு செய்துள்ளது.

42. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதியிலுள்ள 50,000 குடும்பங்கள் சுகாதாரம், சத்துணவு மற்றும் குழந்தைகள் நலம் திட்டங்களின் மூலம் பயனடைவார்கள். 250 பாலர்பள்ளிகள் மற்றும் 30,000 குடும்பங்கள் பயனடைய 15 மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்படும். குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய மாத வருமானம் ரூ. 201 முதல் ரூ. 600 வரை உள்ளவர்களுக்கு ரூ. 1,500 முதல் ரூ. 3,500 வரை வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். மாத வருமானம் ரூ. 200!க்கு குறைவாக உள்ளவர்களுக்கு, ரூ,. 600 மானியமாகக் கொடுக்கப்படும் 2981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ 17 11 இலட்சம் செல்வு செய்யப்பட்டுளளது 1982-83 ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 200 இலட்சம் ஒதுக்கப் பட்டுளளது.

[1982 மார்ச் 15

43. பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் பகுதிகளை வெள்ளப் பாதிப்பு மற்றும் கழிவு நீர் நெருக்கடிகளிலும் மிருந்து பாதுகாக்க கழிவு நீர் வடிகால் வசதிகளும் மற்றும் கழிவு நீர் உபவடிகால்களும் ரூ. 483 இலட்சத்தில் அமைக்க அல்லது சீர்திருத்தப்பட உள்ளன. மாம்பலம், நந்தனம், விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அரும்பாக்கம் பகுதிகளில் உள்ள வடிகால் கள் பொதுப்பணித் துறையால் சீர்திருத்தப்படும் சென்னை மாநகராட்சி பகுதியிலுள்ள சுமார் 19,042 குடும்பங்கள் பயனடையும் வகையில் கழிவு நீர் வடிகால்களை பழுதுபார்த்தல், உலர வைத்தல் மற்றும் உபவடிகால்கள் அமைத்தல்ஆகிய பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும்.

**தாய்சேய் நலம் :** சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் I மற்றும் II.

44. 126 சிறுவர் பள்ளிகளும், 88 குழந்தைகள் காப்பகங்களும் சுமார் 6,725 சிறார்களையும், 2,677 குழந்தைகளையும் பராமரித்து வருகின்றன. 88 பள்ளிகளில் துணைச் சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதுவரை 25,336 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 16,394 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வாய் வழியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. செயல்முறை கல்வி வகுப்புகளில் 3,918 பெண்கள் பயின்று வருகின்றனர். 1981 ஆம் ஆண்டில் டிசம்பர் வரை ரூ. 55·55 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 44·79 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிசைத் தொழில் :

45. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வாழும் 5,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்களில் இதுவரை 3,641 பேர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 48 இடங்களில் தொழில் கூடங்கள் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. அவைகளில் 28 தொழிற்கூடங்கள் உற்பத்தி பணி தொடங்கப்பட்டுள்ளது. சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பெட்டிக் கடை (Pe ti shop) வைப்பதற்காக வங்கியிலிருந்து கடன்கள் பெறுவதற்கு இதுவரை 1,151 பேர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 45·17 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டம் : சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் 1 மற்றும் 11

46. பணி வசதி பெற்ற குடியிருப்பு மனைகள், முக்கிய வீட்டு வசதிப் பகுதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்தல், கட்டிடப் பொருட்கள் வழங்குதல், சமுதாய வசதிகள் செய்து கொடுத்தல் முதலியன அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய



1982 மார்ச் 15]

மூன்று இடங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் முழு வசதிகளடங்கிய வீட்டுமனைகள் திட்டத்தின் கீழ் செய்து தரப்படுகின்றன. பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கு 8,491 வீட்டு மனைகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 3,969 மனைகளும் இம்மூன்று வீட்டு வசதி திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. 693 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக வங்கிகளிடமிருந்து கடன் உதவி கிடைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இத்திட்டத்திற்காக ரூ. 1,019·42 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 262 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

47. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒன்றின்கீழ் குறிப்பாக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட குறைந்த அளவு செலவிலான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு விரிவுபடுத்தி மொகப்பேர், நெற்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் 15,000 நபர்களுக்கு வீட்டு வசதி அளிப்பது, சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டம் இரண்டின் நோக்கமாகும் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை ரூ. 241·76 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 400 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்களுக்கான வசதி சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டங்கள் I மற்றும் II

48. தன்னிறைவு வீட்டுமனைப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அத்திட்டப் பகுதிகளில் சிறு தொழில்கள் ஏற்படுத்த மனைகள், பணிக்கருவிகள், இயந்திரங்கள் வழங்கல் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 150 பணிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 32·09 இலட்சத்திற்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இத்திட்டத்திற்கு ரூ. 170·50 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1982—83 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

49. சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் மொகப்பேரிலும், நெற்குன்றத்திலும் அமுல் படுத்தப்படும் பணிமனைத் திட்டம் பகுதிகளிலும் அதே போன்ற வசதிகள் சிறு தொழிலுக்கு ரூ. 478·80 இலட்சம் செலவில் செய்து தரா வகை செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றல்—சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்று

50. தற்போதுள்ள குடிநீர் வழங்கும் முறையை மேம்படுத்துவதும் ஏழை மக்களுக்கு—குறிப்பாக பொதுக் குழாய்களை பயன்படுத்துபவர் மற்றும் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு விரைவில் நிவாரணம் அளித்தல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 959·41 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1982—83-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 37!92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலை போக்குவரத்து மேம்பாடு—சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் I மற்றும்II

51. உட்புறச்சாலையின் ஒரு பகுதியை கட்டுதல், நடைபாதைகள், சைக்கிள் பாதைகள், வண்டிப்பாதைகள் ஆகியவற்றைக் கட்டுதல்—மேம்படுத்துதல், பாதசாரி சுரங்கப்பாதைகள், ஆற்றுக்கடவுகள், இரயில் மேம்பாலம் கட்டுதல், தெருவிளக்குகள் போடுதல், போக்குவரத்தை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆகிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூபாய் 850.88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் ரூபாய் 51.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

52. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் உட்புறச்சாலையை 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாடியிலிருந்து மாதவரம் வரை அமைப்பதற்கும், சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலையை பாடியிலிருந்து ஆவடி வரை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூபாய் 50.06 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு, மதிப்பீட்டில் ரூபாய் 100 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்லவன் போக்குவரத்துக் கழகம்—சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்று மற்றும் இரண்டு.

53. 285 பேருந்துக்கான அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு மேற்கூடு அமைக்கப்பட்டு இயக்கப்பட்டுள்ளது. பணிமனை மூன்றும் பேருந்து வழித்தட முடிவிடங்கள் எட்டும், 400 நிழற்குடைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இருபது மேம்படுத்தப்பட்ட அடிச்சட்டங்கள் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூபாய் 559.45 இலட்சம் செலவழிக்கப்புட்டுள்ளது.





54. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் 555 பேருந்துகளை வாங்கவும், தண்டையார்ப்பேட்டையில் கூடுதல் பணிமனை ஒன்று கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூபாய் 93.78 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 660 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிவுப் பொருள்களைச் செவ்வையாகக் கையாளுதல் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டு.

55. கழிவுப் பொருள்களைச் செவ்வையாக கையாளுதல் திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களை சேகரிக்கவும், அழிக்கவும் தேவையான கருவிகளையும், வாகனங்களையும் வாங்குதல், ஒரு மாற்று நிலையம் அமைத்தல், 8 வாகனங்களின் பணிமனைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளை ரூபாய் 161 இலட்சம் செலவில் சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும். நகராட்சி பணிகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் இரண்டாம் நிலை சாலைகள், நடைபாதைகள், கழிவு நீர் வடிகால்கள், தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவைகளை ரூபாய் 147 இலட்சம் செலவில் பராமரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டில் ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டம் :

56. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4.83 கோடியில் 33 சதவீதத்திற்கு சற்றே கூடுதலானவர்கள் 434 நகரங்களில் வசிக்கிறார்கள் என்பது 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் தெரிய வருகிறது. தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 1971-இல் இருந்ததைக் காட்டிலும் 34.63 இலட்சம் கூடுதலாகியுள்ளது. இது 27.72 சதவீத வளர்ச்சியாகும்.

57. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகர்த் தொடர்ச்சிகளில் மக்கள் தொகை மட்டுமே மாநில நகர்ப்புற மக்கள் தொகையில் .45 சதவீதமாகும். மாநில நகர்ப்புற வள்ர்ச்சியின் செயலாக்கம் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை முன்னேற்றம் செய்வதிலேயே தொடர்ந்து இருக்கும். அவற்றை முன்னேற்றம் செய்வதன் மூலம் கிராம மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதைத் தடுக்கவும் அதன் மூலம் பெரு நகரங்களில் மக்கள் நெருக்கத்தைக் குறைப்பதற்கும் கிராம மக்களுக்கு அண்மையிலேயே நகர்ப்புற வசதிகளை அளிக்கவும் இயலும். இக்கொள்கையில் வட்டார வளர்ச்சி மையங்களையும், வளர்ச்சி மையங்களையும் அபிவிருத்தி செய்வது அடங்கும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு இலட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட 28 நகரங்களில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த அரசு தேர்ந்து எடுத்துள்ளது.

[1982 மார்ச் 15

58. 1980–81 ஆம் ஆண்டில் 12 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த 295.75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டின் 7 நகரங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 182 இலட்சங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. நாமக்கல் | .. | 22.00 |
| 2. கோவில்பட்டி | .. | 38.00 |
| 3. ஓசூர் | .. | 28.00 |
| 4. பொள்ளாட்சி | .. | 40.00 |
| 5. தேணி அல்லிநகரம் | | 20.00 |
| 6. நாகப்பட்டினம் | .. | 14.00 |
| 7. இராணிப்பேட்டை | .. | 20.00 |
| (மொத்தம் | .. | 182.00 |

59. மேலும் 1981-82ஆம் ஆண்டில் கூடுதலாக வழங்கப் ஓய்பதில் ரூபாய்

(1) மாநில அரசால் உதகமண்டல நகரத்திற்கு ரூபாய் 20.00 இலட்சம்.

(2) மத்திய அரசால் நாகப்பட்டிணத்திற்கு வழங்கிய கூடுதல் தொகை ரூபாய் 10.25 இலட்சம்.

60. இவற்றோடு கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, சிவகங்கா, ஆரணி ஆகிய 4 நகரங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவ அளிக்க மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

61. மாநில அரசு, நகர-மற்றும் ஊர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து உள்ளாட்சிகளுக்கு அதன் வருவாய் தரத்தக்க திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து வரும். 1980–81 ஆம் ஆண்டில் 213.58 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 200 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 200 இலட்சம் கடனுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகை மத்திய அரசால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும் கடனுதவியில் சேராது.

62. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நகர்ப்புற ஏழை மக்களுக்கு, குடிநீர், குறைந்த செலவில் சுகாதார வசதிகள், கல்வி மற்றும் நல்வாழ்வு ஆகிய அடிப்படை வசதிகளை அளிக்க ரூபாய் 30 இலட்சம் நிதி உதவி பெற அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்க்குடி நகரம் இத்திட்டத்தின் கீழே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டிற்குள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைப்பதற்கான குறிப்புகள் அரசிற்கு கிடைத்துள்ளது.



63. பல ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ளாட்சிகளில் அனுமதிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டங்களை விரிவாக ஆய்வுரை செய்யவும் அதனை மேற்கொள்ளவும் அரசு உத்தேசித்துள்ளது. மதுரையிலும், கோயம்புத்தூரிலும் இத் திட்டத்தை முதன் முதலில் மேற்கொள்ளும். மற்ற நகரங்களில் படிப்படியாக செயலாக்கப்படும். ஆய்வு முடிந்த பின் இத் திட்டத்தை செயல்படுத்த வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 16.

பங்குனி 3, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கிழக்கு முகவை மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலை.

*வினா எண். 477—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு முகவை மாவட்டத்தில் முந்திரி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் வனத் துறையைச் சார்ந்த காடுகளிலும், தனியார் துறையைச் சார்ந்த காடுகளிலும் அதிகமான அளவுக்கு முந்திரி பயிரிடப்படுவதால், அரசு அதற்கான தொழிற்சாலை அமைப்பதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே கிழக்கு மாவட்டத்தில் இரண்டு முந்திரி ஆலைகள் இருக்கின்றன. ஒன்று, பெரியார் டெபரிலே அமைக்கப்பட்ட முந்திரி கூட்டுறவு தொழிற்சாலை. அடுத்து, திருப்பத்தூர் தாலுக்காவிலே மகிபாலன்பட்டியில் அமைக்கப்பட்ட மீனாட்சி முந்திரி தொழிற்சாலை. இரண்டும் கிழக்கு முகவை மாவட்டத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றன. அவைகளுக்குப் போதுமான முந்திரி பருப்பு அங்கே உற்பத்தியாகின்ற காரணத்தினால், வேறு முந்திரி ஆலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் கடற்கரை 30 மைல்களுக்கு இடையில் இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையால் முந்திரி அதிக அளவிலே பயிரிடப்படுகின்றது. இதுவரை கேரளாவிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள வியாபாரிகள் தயவினால் முந்திரிக்கு விலை கிடைக்கின்றது. இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற ஆலைகளில் முந்திரி எண்ணை உற்பத்தி, முந்திரியைப் பதப்படுத்துதல் செய்யப்படுகின்றதா? இன்னும் அதிகமான அளவுக்கு இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரண்டு நிறுவனங்களும், முந்திரி பருப்பு முந்திரி எண்ணை ஆகியவைகளை உற்பத்தி செய்கின்றது.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் செம்மண் கலந்த மணற்பாங்கான பூமியாக இருப்பதால், முந்திரியைப் பயிரிடுவதற்கு வசதியாக இருக்கின்றது. எனவே, இன்னும் அபிவிருத்தி செய்யும் முறையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைச் சொல்வதோடு, இப்போது எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர்கள் பயிரிடப்படுகின்றது என்பதற்கான விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், வருகின்ற ஐந்தாண்டு காலத்தில், ஏற்கனவே ஒரு 10 நாட்களுக்கு முன் ஒரு கேள்விக்கு விடையளித்தபோது குறிப்பிட்டதைப்போல், 37 கோடி ரூபாயில் உலக வங்கியின் உதவியோடு, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதை நிறைவேற்றுகின்றபோது, இராமநாதபுரம் மாவட்டத்திலும் இது விரிவுபடுத்தப்படும்.



**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முந்திரி உற்பத்தி செய்வதை அடுத்த மாநிலத்தில் வாங்கிச் செல்வதை தடை செய்யப்புடுமா ? இங்கு கிடைக்கின்ற முந்திரியை அரசாங்கமே, கூட்டுறவுத் துறை மூலம் அதைக் கொள்முதல் செய்து, முறையாக முந்திரி ஆலைகளுக்கு விநியோகம் செய்யுமா? அதோடு, மூடிக் கிடக்கின்ற முந்திரி ஆலைகளை அரசே ஏற்று நடத்துமா ? முந்திரிக் கழகத்தை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், இங்கே உற்பத்தியாகும் முந்திரியை இங்கே உள்ள தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று, தொழிற்சாலை முனைவர்கள் அரசுக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். அதன்மீது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் திட்டம்.

*வினா எண். 478—**திரு. ப. தீர்த்தராமன் ; திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் போரூரில் உள்ள கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** அடையார் மற்றும் போரூரில் மூடப்பட்டு இருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை தொழிற் கூட்டுறவு சங்கமாக நடத்த அரசின் அனுமதி கேட்டு அதன் தொழிலாளர்களிடமிருந்து வந்துள்ள மனு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் போரூரில மூடப்பட்டிருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்துவதற்கு, இதுவரை அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையினுடைய தலைமையகம் கல்கத்தாவில் இருக்கிறது. கடன் காரணமாக அதன் மீது வழக்குபோட்டு, அது லிக்வியூடேஷனில் இருந்து அங்கே கல்கத்தாவில் இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்த முன்வந்த காரணத்தாலே நீதிமன்றம் அவர்களை நடத்த அனுமதித்துள்ளது. அதைப்போல சென்னையிலே இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்துகிறோம் அதற்கு அரசாங்கத்தினுடைய உதவி வேண்டும் என்று அரசிற்கு மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது இன்றைக்கு தொழிற்துறை பரிசீலனை செய்து 27 லட்சம் ரூபாய் முதலீட்டில் அவர்களுக்கு உதவி செய்ய அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த விரும்புவதால் அந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் போது அதிக அளவில் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ? அந்தத் தொழிற்சாலையின் மற்ற விவரங்களைக் குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே இந்த தொழிற்சாலையை ஏற்று நடத்தாது. அங்கே இருக்கிற 70-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட ஒரு இன்டஸ்ரியல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியாக உருவாக்கி அவர்களுக்கு 27 லட்சம் ரூபாய் அரசு சார்பில் கொடுத்து, பிறகு வங்கிகளின் வாயிலாக பிற நிதியாதாரங்களை கொடுத்து தொழிலாளர்களே நடத்துகிற தொழிற்சாலையாகத் தான் இந்தத் தொழிற்சாலை இருக்கும்.

## அரசு சிட் பண்டு துவக்கும் திட்டம்.

*வினா எண். 479—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் வருடம் முதல் அரசு சிட்பண்டு துவக்குவது பற்றி தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) பலன் என்ன?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அரசு சரர்பில் சீட்டுக்கழகம் ஒன்று அமைப்பதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகத்தை சென்னை கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டபின், பங்குதாரர்களிடமிருந்து பெறப்படும் தொகையினை சேர்த்து வரக்கூடிய மொத்த தொகையான ரூ. 10 இலட்சத்தை மூலதனமாகக் கொண்டு இச் சீட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை சென்னையிலும் சீட்டு நடத்தும் தொழில் மிகப் பிரபலமாக உள்ள வேறு இடங்களிலும் இக்கழகத்தின் கிளைகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் இதன் மூலம் கிடைக்கும் கணிசமான இலாபத்தைத் தவிர வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் இத்திட்டம் உதவும். இது மட்டுமின்றி சந்தாதாரர்கள் செலுத்தும் தொகை அரசு நடத்தும் சீட்டுக் கழகத்தில் பாதுகாப்பாக இருப்பதுடன் இக்கழகத்தின் மூலமாக கிடைக்கும் பங்கு மூலதனம் கமிஷன் மற்றும் வட்டிப் பணத்தையும் கொண்டு பல முன்னேற்ற திட்டங்களை வகுக்கவும் அரசிற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார்கள் பலர் சீட்டு கம்பெனிகள் நடத்தி இரவோடு இரவாக முடிவிட்டு ஓடிவிட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திலிருந்து போய் இன்னொரு மாநிலத்தில் நடத்துகிறார்கள். தாம்பரத்திலே கூட இதுபோன்ற மோசடி சமீபத்திலே நடைபெற்றது. வேறு பல சீட்பண்டுகளைப் பொறுத்தவரையில் பணத்தை சேகரித்து பின்னால் ஒரு நல்ல நிலைக்கு வந்தவுடன் லிக்விடேட் பண்ணி மோசடிகள் எல்லாம் செய்கிறார்கள். இந்த நிலைமையில் மக்களுக்கு உத்தரவாதம் கொடுக்கிற முறையிலே அரசே விரைவில் இதை அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அமல் படுத்தும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதர்சன் சிட்பண்ட், கருடா சிட்பண்ட் போன்ற சீட்டு கம்பெனிகளிலே ஏழை மக்களின் பணத்தை கபளீகரம் செய்கிற வகையிலே மோசடிகள் நடந்திருக்கிறதால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நடத்துவதாலும், அல்லது கோவாப்பரேட்டிவ் வங்கிகள் மூலமாக சீட்டு கம்பெனிகளை நடத்தினாலும் மக்களுக்கு பிரயோஜனமாக இருக்குமே; இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு புதியதாக தொடங்கவிருக்கிற முயற்சியே அந்த தீமைகளை களைய வேண்டும் என்பதற்காகத்தான்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டு கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது என்ற முத்திரையுடன் நடைபெறக் கூடிய தனியார் சிட்பண்ட் கம்பெனிகள் அடிக்கடி திவாலாகி சேமிக்கும் ஏழை மக்களுடைய பணம் மோசடி செய்யப்படுவதால் இதை தடுப்பதற்கும், அரசே உடனடியாக சீட்டு கம்பெனியை துவங்கு அதற்கும் முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே நிச்சயமாக மேற்கொள்ளும்.

(முற்பகல் 9·10)

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, கருடா சிட் பண்ட்ஸ் மக்கள் பணத்தைப் பறித்துக் கொண்டு பறந்து விட்டது, இதுபோன்று பல சிட் கம்பெனிகள் பறந்து கொண்டிருக்கின்றன. கொள்கை அளவிலே சீட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதாக நீண்ட நெடுங் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் ? அதனுடைய கிளைகள் எல்லா மாவட்டங்களிலும் துவக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** முதல் கட்டமாக சென்னை நகரைத் தலைநகராகக் கொண்டு 10 முக்கியமான நகரங்களிலே—குறிப்பாக சென்னையில் 2, வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில்—தொடங்கப்படும்.

**இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைத்தல்:—**

***வினா எண்: 480—திரு. இல. பலராமன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைக்க கோரி இந்து சமுகத்தினர் கோரிக்கைகள் ஏதும் வைத்துள்ளனரா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இல்லை.





**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லை என்று கூறினார்கள். ஆனால் கோரிக்கை வந்து இருக்கிறதா என்றநிலைக்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? ஆசையற்றவர்கள் தான் அறநிலையத் துறையில் இருக்கவேண்டுமென்று பொது நியதியை அரசு ஏற்குமா? தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் ஆசையால் தான் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து அந்த நிர்வாகம் நல்ல முறையிலே நடக்க இதுபோன்ற வாரியத்தை அமைக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா என்ற வினா எழுப்பப்பட்டதற்கு அரசுக்கு கோரிக்கை வரவில்லை என்று பதில் அளித்து இருக்கிறேன். அந்த வாரியம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். 1925ஆம் ஆண்டு முதல் இப்படிப்பட்ட பல்வேறுநிலைகளிலே பல்வேறு அறிஞர்கள், பெரியவர்கள் எல்லாம் இதை ஆராய்ந்து அப்படிப்பட்ட வாரியம் எல்லாம் நடைபெற்று அப்படிப்பட்ட வாரியமும் சரியாக நடைபெறாமல் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த திரு. வெங்கட்டரமணராவ் நாயுடு அவர்கள் தலைமையிலே திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை போன்றவர்கள் எல்லாம் வாரியத்திலே தலைவர்களாக இருந்தவர்களே குழுவாக இருந்து அவர்கள் எல்லாம் ஆராய்ந்து கண்டறிந்ததற்குப் பிறகு அரசு அதிலே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்து அரசு இப்போதுநடைமுறையிலிருக்கிற இந்தச்சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதிலேயிருந்து மாறி மீண்டும் பழைய நிலைமைக்குப் போவது பலனளிக்காது என்று கருதுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, இந்து மதத்தினுடைய மனம் புண்படும் அளவில் மதுரை ஆதீனத்தைச் சேர்ந்தவர்களுடைய பேச்சுக்கள் இருக்கின்றன. . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வாரியம்பற்றி கேள்வி, அதுபற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, பண்டைய தமிழர்களின் சிற்பக் கலைக்குச் சான்று பகரும் இந்து மதத்தினருடைய வழிபடும் ஆலயங்களாக இருக்கின்றவைகளில் விளக்குகள் ஏற்றி வைப்பதற்குக்கூட போதிய வருவாய் இல்லாமல் அவைகள் எல்லாம் பராமரிக்கப்படாத நிலையிலே உள்ளதால் இம்மாதிரியான வருவாய் குறைந்த கோவில்களைக் கருத்திலே கொண்டு அவற்றையெல்லாம் பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் விரைவிலே நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். : தலைவர் அவர்களே, இது மிகுந்த சிக்கலானது. பல்வேறு முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டாலும்கூட விரைவிலே தீர்க்க முடியாத பிரச்சினையாக வளர்ந்து கொண்டு வருகிறது. அறநிலையத் துறைஉருவாக்கப்பட்டதற்குப் பிறகு சுமார் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆலயங்களை இந்தத் துறைக்குள்ளே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே உள்ள சுமார் 25 ஆயிரம் ஆலயங்கள் வருமானம் இல்லாத ஆலயங்களாக இருக்கின்றன. அவைகளையும் அறநிலையத் துறைக்குள்ளே கொண்டு வந்து இருக்கின்றார்கள். வருமானம் இல்லாத ஆலயங்களையும் அறநிலையத் துறைக்குள்ளே கொண்டு வருகிறபோது அவற்றின் வருமானத்தைப் பெருக்குவதும் கஷ்டமாக இருக்கிறது, அவற்றைப் பராமரிப்பதும் கஷ்டமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எப்படி முடிவு எடுப்பது என்பதுதான் பிரச்சினை. கிராமங்களிலே அந்தந்த மக்கள் எல்லாம் சேர்ந்து ஆலயங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அவைகளுக்கு என்று இருக்கின்ற கொஞ்ச நஞ்ச சொத்துகளைக்கூட மற்றவர்கள் பராதீனம் செய்து கொண்டு அந்த ஆலயங்களுக்கே இல்லாமல் செய்துவிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஆலயங்களைப் பராமரிப்பது என்பதை எடுத்துக் கொள்கிறபோது இத்தனை ஆயிரம் ஆலயங்களுக்கும் எங்கேயிருந்து நிதியை ஒதுக்குவது என்பதும் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே அறநிலையத் துறை இப்படி வருமானம் இல்லாத ஆலயங்களை அந்தந்தக் கிராமங்களிலே—பழங்கால முறையில் அங்கே இருக்கின்ற ஆலய வழிப்பாட்டிலே நம்பிக்கை இருக்கின்றவர்கள் எல்லாம் சேர்ந்து பாதுகாக்கின்ற பொறுப்பேற்றுக் கொள்கின்ற ஒரு முறையை உருவாக்க இயலுமா என்பதுபற்றி தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற அறநிலையத் துறையினுடைய உயர்மட்ட ஆலோசனைக் குழுவினடத்திலேகூட நாங்கள் அதை ஒரு பொருளாக வைத்து பரிந்துரை கேட்டிருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முஸ்லீம் மதம் போன்ற மற்றைய மதங்களில் பொதுச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு வாரியம் இருக்கிறது. அது போன்று இந்து மதத்திலும் அவர்களே அதன் சொத்துக்களைப் பராமரிப்பதற்கான வாரியம் இருக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வி எழுந்தது என்று கருதுகிறேன் பத்திரிகைகளிலும் பார்த்தோம். கூட்டங்களிலேயும் பேசப்படுகிறது. எனவே இது குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா ? வக்ப் போர்டு போன்ற நிர்வாகம் இதையும் நிர்வகிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, வக்ப் போர்டு போன்ற அல்லது வேறு மைனாரிட்டி சமுதாய சமய நிறுவனங்களோடு இந்த இந்து சமய நிறுவனங்களை ஒப்பிடுவது அடிப்படையிலேயே பொருத்தமற்றது. காரணம், 85 அல்லது 90 சதவீதம் மக்கள் இந்துக்களாக வாழும் ஒரு நாட்டில் மன்னர்களாலும் மற்றவர்களாலும் பாரம்பரியமாக இந்த ஆலயங்கள் அமைக்கப் பெற்று, சொத்துக்கள் வழங்கப் பெற்று, பாதுகாக்கப்பட வேண்டிய நிலை தொடர்ந்து அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மன்னர்கள் இல்லாத சூழ்நிலையில் இன்றைய தினம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதைப் பாதுகாக்க வேண்டிய கடமைக்கு உள்ளாகியிருக்கிறது; செய்து தீரவேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஒரு அரசு எடுக்கும் முடிவுகளை மற்ற அரசுகள் தொடர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டு காப்பாற்ற வேண்டும். மைனாரிட்டி சமுதாயம் அல்லது மைனாரிட்டி மதத்தினர் என்று கருதப்படுபவர்கள் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே இருக்கிறார்கள். அதற்கும் சில அடிப்படைகள் இருந்தாலும் அதுவும் அரசினுடைய மேலாதிக்கத்திற்குள்ளே தான் இருக்கிறது. வக்ப் போர்டு நிர்வாகத்தை அமைச்சர் பொறுப்பிலே கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். வக்ப் போர்டிலும் அப்படிப்பட்ட சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக, அழிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் பரவலாக வந்து கொண்டு இருக்கின்றன. குறைவாக இருப்பதால் அது உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. அவைகளைப்பற்றிச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்படாத காரணத்தினால் அதில் நடைபெறும் குறைபாடுகள் பொதுமக்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்படுவதில்லை. ஆகவே, இந்து சமுதாயம், அதிகமாக இந்து மக்கள் அதிகமாக இந்து கோயில்கள் என்று இருக்கின்ற அடிப்படையிலே எடுக்க வேண்டிய நடைமுறைகளை மற்ற சிறுபான்மை சமுதாயத்தினரோடு ஒப்பிடுவது உகந்ததும் அல்ல ; வளர்ச்சிக்கு ஏற்றதும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆலய நிர்வாக அதிகாரிகளின் மூலம் ஆலய நிர்வாகம்

* வினா எண். 481—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய நிர்வாக அதிகாரிகளுக்கு சராசரி 10 கோவில்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்ததை தற்போது கிராம அதிகாரிகளை நீக்கியதையொட்டி ஒவ்வொரு அதிகாரிக்கும் 20 கோவில்களுக்கும் மேலாக கூடுதல் பொறுப்பு தரப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், ஆலயங்களின் நிர்வாகம் சீர்குலையாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

[1982 மார்ச் 16

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை. செயல் அலுவலர் என்ற முறையிலும் அறங்காவலர்கள் இல்லா ஆலயங்களில் தக்கார் என்ற முறையிலும் சராசரி 6 ஆலயங்களே அவர்கள் பொறுப்பில் உள்ளன.

(ஆ) நிர்வாகம் சீர் குலைய வாய்ப்பு ஏதும் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது சராசரி 6 ஆலயங்களே அவர்கள் நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஆனால் ஒவ்வொரு கோயிலுக்கு கிட்டத்தட்ட 5 தர்மகர்த்தாக்கள் இருக்கிறார்கள். இன்றையதினம் கோயில்களில் உள்ள சொத்துக்களைப் பராமரிப்பதற்குச் சரியான நடைமுறைகள் இல்லாத காரணத்தினால் கையாடல்கள் போன்றவைகளும், மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல பல சிக்கல்களும் ஏற்படுகின்றன. அந்தச் சொத்துக்கள் துர்விநியோகம் செய்யப்படுகின்றன. பலயிடங்களில் தேர்தல்கள் நடந்து மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று அரசின் நாமினேஷன் இரண்டும் செய்யப்படாமல் இருக்கின்றன. சிலயிடங்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அதுவும் அமல்படுத்தப்படாத நிலைமையிருக்கிறது. இதனால் பல கோயில்களில் நிர்வாக ஊழல் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அவைகளை நல்லமுறையில் நிர்வகிப்பதற்காக பரவலாக அந்தக் கோயில்களில் ஐந்து பேர்களை உள்ளூர் டிரஸ்டிகளாகவும் நியமித்தோ அல்லது ஒரு நிர்வாக அதிகாரிக்கு 6 கோயில்கள் என்று பொறுப்பைக் கொடுக்காமல் 2 கோயில்கள் அல்லது 3 கோயில்கள் என்று குறைத்து அந்தக் கோயில்களின் சொத்துக்கள் செம்மையான முறையில் கோயில்களுக்குப் பயன்படும் வகையில் அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அறங்காவலர்கள் இல்லாமல் தக்கார் என்கின்றவர்களை அந்த ஆலயங்களுக்கெல்லாம் நியமிக்கும் ஒரு சூழ்நிலை 1976 ஆம் ஆண்டிலே அவசர நிலைக் காலத்தில் திடீரென்று ஒரு ஆணையின்படி அல்லது சட்டத்தின்படி ஏற்கனவே இருந்த அறங்காவலர்களை நீக்கியதாலும், அப்படி நீக்கியதால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவதற்காகத் தக்கார்கள் என்ற பெயரில் மீண்டும் அதிகாரிகளை நியமித்ததாலும் ஏற்பட்ட விளைவுகளாகும். ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக அப்படிப் பட்ட ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க வேண்டுமென்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அநேகமாக இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவு பெற்று விடுகின்ற சூழ்நிலைக்கு நாம் வந்திருக்கிறோம்.



1982 மார்ச் 16]

(முற்பகல் 9·20)

அப்படி வருகிறபோது மூன்று அறங்காவலர்களை அங்கே இருக்கின்ற பிராந்தியக் குழுக்கள் பரிசீலனை செய்து அசிஸ்டன்ட் கமிஷனர், டிப்டி கமிஷனர், கமிஷனர் என்கிற தகுதிகளுக்குள்ளே உள்ள ஆலயங்களுக்கு நியமிக்கப்பட்டு வருகிறார்கள். தேவையானால் அரசாங்கம் இரண்டு பேர்களை நியமிக்கிறது. அப்படி யாருமே விண்ணப்பம் தரவில்லை. விண்ணப்பமே கிடைக்காத இடங்களில் சர்க்கார் யாரையாவது நல்லவர்களாகப் பார்த்து ஒரு அறங்காவலரை மாத்திரம் போடலாம் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறோம். மூன்று பேர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டார்கள் என்றால், அந்த இரண்டு பேர் அரசாங்கம் போடவேண்டும் என்பதற்காக காத்துக் கொண்டிருக்கவேண்டியதில்லை. மூன்று பேர்களை வைத்தும் தலைவர் தேர்தலை நடத்தி பொறுப்புக்களை ஒப்படைக்கவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறோம். இருந்தாலும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இருக்கின்ற காரணத்தினாலே பல பகுதிகளில், கிராமப் பகுதிகளில் அதிலும் குறிப்பாக நான் முன்னாலே சொன்னதைப்போல, சொத்து இல்லாத கோவில்களுக்கு யாரும் வரமாட்டேன் என்கிறார்கள். சொத்து இருக்கின்ற கோவில்களுக்குத்தான் மிகப் பெரிய போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த சொத்து இல்லாத ஆலயங்களையும் பாதுகாக்கவேண்டும் என்கிற அடிப்படையிலேதான் யாராவது ஒருவரை அறங்காவலராக போட்டு இந்த நிர்வாகத்தை ஒப்படைத்து விடுங்கள் என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே தக்கார்கள் என்ற முறையில் இப்போது சில இடத்திலே அதிகாரிகளை தக்கார்களாகப் போட்டிருக்கிறோம். அவர்களை எல்லாம் 2, 3 மாதங்களுக்குள் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட அவர்கள் ஐவராக இருக்கலாம், மூவர்களாக இருக்கலாம் அல்லது ஒருவராக இருக்கலாம். அவர்களிடத்திலே அந்த நிர்வாகம் முறையாக மாற்றப்படவேண்டும். அப்படி மாற்றப்பட்டதற்குப் பிறகு பொது மக்களுடைய கவனம் அந்த ஆலயத்தின் மீதும் ஆலயச் சொத்துக்கள் மீதும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல கோவில்களில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களிடத்திலே அதனுடைய சொத்துக்கள் முறைப்படி கொடுக்கப்படாமல் இருக்கின்ற அந்த நிலைமையைச் சீர்திருத்த விரைவிலே அவர்களை நியமித்து அந்தத் சொத்துக்களை எல்லாம் ஒப்படைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே இது ஒரு முக்கியமான கேள்வி. நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பதில் இந்தக் கேள்விக்கு இருக்கிறது. இரண்டாண்டு, மூன்றாண்டு காலமாக இந்த அதிகாரிகள் அந்த ஆலயங்களை நிர்வகித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்

களை யாரும் கேட்பதற்கே ஆள் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அறங்காவலர் என்று பொதுமக்களிலே இருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துப் போனதற்குப் பிறகு பலமுறை அவர்களுக்கு எல்லாம் அறிவுரைகள் வழங்கப்பெற்றும், சட்ட விதிகளை எடுத்துக் காட்டியும் கூட, பல சாக்குகள் சொல்லிக் கொண்டு நியமிக்கப்பெற்ற அறங்காவலர்களிடத்திலே பொறுப்புக் களை கொடுக்காமல் இருக்கின்ற நிலைமை நீண்டு கொண்டு இருக்கின்றது. வளர்ந்து கொண்டு இருக்கின்றது. அப்படிப்பட்ட அதிகாரிகளைக் கடுமையாக கண்டித்து இருக்கிறோம். அந்த அறங்காவலர்களாக தேர்ந்தெடுத்து போகிறவர்கள் கூட, சட்டங்களை எல்லாம் படித்துக் கொண்டு அவர்கள் போவதில்லை. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு போகிற அறங்காவலர்களை நிர்வாக அதிகாரிகள், உங்களுக்கு ஒன்றும் பொறுப்பே இல்லை நீங்கள் சும்மா வந்து பார்த்துவிட்டு போகவேண்டியதுதான் என்று சொல்லுகிற தைரியத்தை கூட பெற்றிருக்கிறார்கள். காரணம் அவர்கள் இஷ்டப்படி ஒரு 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆட்சி செய்து கொண்டு இருந்தார்கள். இப்போது மக்களுடைய பிரதிநிதிகள் வருகிறார்கள என்ற உடனே அவர்கள் கணக்கை கேட்கிறார்கள், விவரம் கேட்கிறார்கள், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நெருக்கடிகள் எல்லாம் அவர்களுக்கு வருகிறது. அதை ஒட்டித்தான் இந்த சூழ்நிலை வளர்ந்து கொண்டு இருக்கிறது. ஆனால் கடந்த ஓராண்டு காலமாக கடுமையாக அவர்கள் அறிவிக்கப்பெற்று, அவர்கள் ஒப்படைக்காமல் இருந்தால் அவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறைபாடுகள் விரைவிலே எங்கே மிச்சம் மீதி இருந்தாலும் அது களையப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு ஏதாவது வந்து இருந்து அதைக்குறித்து அவர்கள் தெரிவிப்பார்களானால் அந்த அதிகாரிகள் மீதும் அந்த ஆயலத்தின் மீதும் கடுமையான கண்காணிப்பு ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்** : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இங்கே சமாதி கோவில்கள் என்று தமிழகத்திலே இருக்கின்றன. நம்முடைய அரசாங்கம் மிகக் கருணையோடு அந்த அறங்காவல் துறை அதிகாரிகளை இதிலே ஈடுபடவேண்டாம் என்று சொல்லியும் கூட தமிழகத்தில் குறிப்பாக வியாசர்பாடியிலே உள்ள கர்ப்பத்துறை சுயப்பிரசாமி சாமிகள் போன்ற சமாதி ஆலயத்திலும், இன்னும் பல சமாதி ஆலயங்களிலும் வேண்டும் என்றே அதிகாரிகளை நியமித்து கோர்ட்டுக்கும் போகும் அளவுக்கு செய்திருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ? அப்படிப்பட்ட சட்டத்திலே விதிவிலக்கு இருப்பதை கூறியும் கூட அவைகளை எல்லாம் விடுவித்து, அங்கே இருக்கின்ற சன்னியாசிகளே அங்கே நிர்வாகம் நடத்துகின்ற அளவுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே சமாதி மாத்திரம் இருந்து வழிபடுகின்ற இடங்களாக இருக்கின்ற ஆலயங்களைப் பொறுத்த வரையில் பிரச்சினை இல்லை. சமாதியாக முதலிலே துவங்கி, பிறகு அதற்குப் பக்கத்திலே ஒரு ஆலயம் எழுப்பப்பட்டு, அந்த ஆயலத்திற்குப் பொதுமக்கள் வருகிற சூழ்நிலை ஏற்பட்டு, அதற்குப் பொது மக்கள் காணிக்கைகள் மற்றும் பணங்கள் தருகிற நிலைமை ஏற்படுகிறபோது, சமாதியும் ஆலயமும் இணைந்து விடுகின்றது. ஆகவே ஆலயம் என்கிறபோது அது பொதுமக்களுடைய ஆலயமாக மாற்றப்படுகிற அந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்டால் சமாதி பக்கம் அதிகாரிகள் வரவே மாட்டார்கள். அது பல இடங்களில் இருக்கின்றது. இன்னும் தெளிவாக அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறோம் அறிவுறுத்தியிருக்கிறோம். தனிப்பட்டவர்கள் அவர்களாகவே உருவாக்கி, மிகச் சிறந்த நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால், அதற்குப் பொதுமக்கள் தரும் பணத்தையும் ஒழுங்காக கணக்கிட்டு சிறப்பாக நடத்தப்படுமானால் அந்தப் பக்கம் நீங்கள் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் பரம்பரை என்ற பெயரை வைத்துக் கொண்டு, சமாதி என்ற பெயரை வைத்துக் கொண்டு, அதற்குப் பக்கத்திலே ஒரு ஆலயத்தையும் வைத்துக் கொண்டு, அதன் மூலம் இலட்சக் கணக்கான பணத்தை அவர்கள் பெறும்போதுதான் பல பிரச்னைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆலயத்தைப்பற்றிய விவரமும் அரசுக்குத் தெரியும். இருந்தாலும் சமாதி மட்டும் இருந்து வழிபடும் முறை இருந்தால் அதற்குள் அதிகாரிகள் நுழைய மாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திரைப்பட நிதி உதவிக் கழகம்.

* வினா எண், 482—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்பட நிதி உதவிக் கழகத்தை தமிழக அரசு அமைக்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) அம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : அவையின் முன் அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@1102-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1982 மார்ச் 16

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தத் திரைப்பட நிதி உதவிக் கழகம் எந்த அடிப்படையில் பங்குத் தொகை சேர்க்க இருக்கிறது ? எப்போது முதல் இந்தத் திரைப் பட நிதி உதவிக் கழகம் செயல்படத் தொடங்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி முழுவதும் அரசே பொறுப் பேற்றுக் கொண்டு நடத்துகிற கழகமாகத்தான் இருக்கிறது. இதற்கான தொடக்க வேலைகள்—இப்போது கம்பெனியைப் பதிவு செய்கிற பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அவை முடிந்த பிறகு இது பற்றிய முழு விவரத்தையும் அறிவிக்க இயலும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த நிதி உதவிக் கழகத்தின் சார்பில் என்ன அடிப்படையில் ஒவ்வொரு படத்திற்கும் எவ்வளவு தொகை வழங்க அரசு உத்தேசித்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர வர்களே, இந்த நிதி உதவிக் கழகம் தோற்றுவிக்கப் பட்டதன் அடிப்படை நோக்கம் நல்ல திறமைகள் இருந்தும் பண வசதி இல்லாத காரணத்தாலே கடன் பட்டு படம் எடுக்க முடியாத திறமையான கலைஞர்கள், திறமையான வர்கள் முன்னுக்கு வர வேண்டும். அதன் மூலம் சமுதாயம் பயனடைய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிதி உதவிக் கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது. இது எப்படி செயல்பட வேண்டும் ; எப்படிப்பட்ட நிபந்தனைகளின் கீழ், விதிகளின்கீழ் கடன்கள் வழங்கப்பட வேண்டும் என்பதெல்லாம் இந்தக் கம்பெனி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு நடைமுறையில் வரும்போதுதான் விதிகள் உருவாக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சினிமா தயாரிப்பாளர்கள் இடத்திலே போதுமான பணம் இல்லாத காரணத்தால் படத்தை பாதியிலும், அரைகுறையாகவும் நிறுத்தி விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அப்பொழுது அவர்கள் நிதி உதவி கோரி நிதி உதவி நிறுவனங்களிடம் சென்றாலும் அங்கே இருக்கிற ஒரு நடிகை தன்னை அந்தப் படத்தில் கதாநாயகியாகப் போட்டால்தான் நிதி உதவி தருவோம் என்று சொல்கிறார்கள். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி இல்லை. அடுத்து வினா எண் 483.



1982 மார்ச் 16]

## யூரியா உர தட்டுப்பாடு

*வினா எண் 483—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யூரியா உரம் தட்டுப்பாடாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தட்டுப்பாடு நீங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ் நாட்டில் யூரியா உரத்திற்கு தற்போது தட்டுப்பாடு இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, தற்சமயம் தட்டுப்பாடு இல்லை என்று சொல்கிறார்கள். யூரியா தட்டுப் பாடு இருந்ததால் தான் அந்த நேரத்தில் இந்தக் கேள்வி எழுப்பப் பட்டது. நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, நமக்கு யூரியா தேவையான சில நேரங்களில் இப்படிப் பட்ட தட்டுப்பாடு வருகிறது. அப்படி வராமல் இருப்பதற்கு முன் கூட்டியே இந்த இலாகா சரியான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி ஒரு தட்டுப்பாடு வருமோ என்ற ஐயப்பாடு வந்தவுடனே மத்திய அரசுக்கு எழுதினோம். எங்களுக்குத் தேவையான யூரியா உரத்தைத் தரவேண்டுமென்றும், ஒதுக்கீடு செய்த யூரியாவை உடனே அனுப்ப வேண்டுமென்றும் கேட்டோம். அவர் களும் அனுப்பினார்கள். இதைப் போன்ற சிக்கல்கள் ஏற்படா மல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, இங்கே உற்பத்தியாகும் நெல்லுக்கு அதிக விலை இல்லை. ஆனால் அவர்கள் தருகின்ற உரத்திற்கு அதிக விலை இருக்கிறது. ஆகவே, உரத்தின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கனவே வற்புறுத்தி ஆகிவிட்டது.

(முற்பகல் 9.30)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களிலே யூரியாவிற்குத் தட்டுப்பாடு இல்லை என்றாலும் கூட கிராமங்களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கிடங்குகளில் யூரியா கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தனியார் அதிக லாபத்திற்கு விற்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுடைய இலாக்காவாக இது இல்லை என்றாலும் கூட விவசாயிகளின் நலன் கருதி அவர்களுக்குத் தேவைப்படுகின்ற காலங்களில் எல்லா கிராம கூட்டுறவுச் சங்கங்களிலும் யூரியாவினை வைத்து விற்பனை செய்வதற்குரிய வகையிலே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவ்வாறு புகார் வந்தால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யூரியா வழங்குவதிலே சிறு விவசாயிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் ஏதாவது கன்சஷன் தருகிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அவ்வாறு மானியம் வழங்குகிற முறை இருந்தது. தற்போது இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே விவசாயிகளுக்கு யூரியா வினியோகம் செய்யப்படுவதைப் பொறுத்தவரையிலே ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்த அளவிலே செய்யப்படுகின்றதா ? யூரியாவிற்கு மானியம் வழங்குமாறு மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவ்வாறு கேட்டு மானியம் வழங்குவதாக உத்தேசம் இல்லை என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஒவ்வோர் ஆண்டும் யூரியா நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே அதிகமாகத்தான் வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம். 1979-80-ல் 3,36,000 டன், 1980-81-ல் 2,73,000 டன், 1981-82-ல் 3,52,000 டன் என்ற வகையிலே வினியோகம் செய்து வருகிறோம்.



கரூர் விவசாய மார்க்கெட்டிங் குழுவிற்கு நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பு.

*வினா எண் 484—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி பேரூராட்சி எல்லைக்குள் கரூர் விவசாய மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நிலம் கையகப்படுத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது ?

(இ) கமிட்டிக்கான கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 8.25 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

(இ) விற்பனைக் குழு, பொதுப்பணித்துறை மூலமாக, இவ் வேலையைச் செய்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின் மூலமாக கிடங்குகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்படும், எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கையகப்படுத்தப்பட்ட 8.25 ஏக்கர் நிலத்தில் 1,88,000 ரூபாய் செலவில் ஒரு வியாபார நடவடிக்கைக் கூடமும், 43,000 ரூபாய் செலவில் ஒரு உலர் களமும் கட்டப்பட இருக்கின்றது.

ஏரூர் கிராமத்திற்கு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்.

*வினா எண். 485—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுச்சத்திரம் ஒன்றியத்தில் 5,000 ஜனத்தொகை உள்ள ஏரூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று நிறுவ அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள ஏரூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

[1982 மார்ச் 16

அரசுத்துறை மூலம் மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிக்கும் செயற்குறிப்பு,

*வினா எண். 486—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத்துறை மூலம் நேரடியாக மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே நேரடியாக மருந்து, மாத்திரைகள் தயாரிக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே மருந்து தயாரிக்கக் கூடிய கம்பெனிகள் தங்கள் இஷ்டம் போல் விலைகளை ஏற்றியும், பல்வேறு மோசடிகளையும் செய்து வருவதால் அரசாங்கமே இதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்து அரசாங்கமே மருந்து தயாரிக்கும் தொழிலைத் தொடங்குவது பற்றிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இதுபற்றிய ப்ராஜெக்ட் ரிப்போர்ட்ஸ் தயார் செய்தோம். அந்த ரிப்போர்ட் அடிப்படையிலே இன்டியன் டிரக்ஸ் அண்டு பார் மசூட்டிகல்ஸ் லிமிடெட் என்ற ஒரு மத்திய அரசாங்கத்தின் சார்பாக நடக்கின்ற நிறுவனம்தான் மருந்துகளைத் தயாரித் துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் அண்மையிலே இங்கே வந்து கூட அதனை விஸ்தரிப்பதற்குரிய வாய்ப்புகளைத் தர வேண்டும் என்று சென்னார்கள். தமிழ்நாடு தாதா ஃபார்ம சூட்டிக்கல்ஸ் நிறுவனம் என்பது தமிழக அரசும் சேர்ந்த ஒரு ஜாயின்ட் செக்டார் நிறுவனமாகும். அவர்களும் மருந் தினைத் தயாரித்துக்கொடுக்கிறார்கள். இதே இரண்டு நிறுவ னங்களும் தேவைப்படுகின்ற அளவுக்கு மருந்துகளைத் தயாரித் துக் கொடுத்தாலும் கூட அந்த அளவுக்கு வாங்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்கு முழுமையாக நாம் வாய்ப்பு தரவேண்டும். இந்த நிலையிலே அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டும் என்றால் The maximum capacity of these companies will not be utilised. அதை நாம் பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்பதற் காகத்தான் இந்த முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



1982 மார்ச் 16]

வானூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை.

*வினா எண். 487—திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வானூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு ஏற்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) அண்டு (ஆ) இல்லை, எனினும் இங்கு ஆரம்பசுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க 1—8—1981 அன்று உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே இம் மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மருத்துவமனை இல்லாத காரணத்தால் பாண்டிச்சேரிக்கும், திண்டிவனத்திற்கும் செல்லக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் அங்கே ஆரம்பிக்கப் போவதாக சொன்னது, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகிறேன். அதை இந்த ஆண்டே துவங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் உத்தரவு போட்டு விட்டோம். வேலைகள் கூட அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. அரசு மொத்தமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பதாக முடிவு செய்து, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் வரையில் வைத்துக்கொண்டு மேலும் ரெக்கரிங்காக 2, 3 இலட்சம் செலவில் வேலைகளைச் செய்யலாம் என்று ஜி.ஓ. இஷ்யூ செய்திருக்கி றோம். 6 மாதங்களுக்குள் முடித்துவிடலாம் என்று கருது கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வானூர் இப்போது தாலுக்கா தலைநகரமாக ஆக்கப்பட்டி ருக்கிறது என்கிற காரணத்தால் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து மேலும் இந்த திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 16

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையமே ஆரம்பிக்கவிருக்கிறோம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் என்ற பிரச்சினைக்கு உள்ளே போகாமல், இப்போது கட்டப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம், இது வரையில் கட்டிய ஆரம்ப சுகாதார நிலையத்தை விட மாடர்னாக இருப்பதுடன், ஒரு தாலுக்கா மருத்துவமனக்கு உரிய சில அம்சங்களையும் கொண்டிருக்கும். அந்த மருத்துவமனையே தேவையான பணிகளைச் செய்யும் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி பெரிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு என்னென்ன அடிப்படைகள் தேவை? ஊராட்சிகள் தங்களுடைய பங்குக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் கொடுக்கலாம். இருந்தாலும் கொள்கைப் பிரச்சினையாக இருப்பதால், கேள்வி நேரத்தில் சொல்வது சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகமண்டலம் அரசு தலைமை மருத்துவமனை.

*வினா எண், 488—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் தலைமை மருத்துவமனையிலுள்ள சிறப்பு வார்டுகளின் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) உதகமண்டலம் தலைமை மருத்துவமனையில் மலைப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் வார்டின் மேல்தளத்தில் புதிதாக 15 படுக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன இவைகள் ,

| | |
|---|---|
| ஏ வகுப்பு | 1 |
| பி வகுப்பு | 2 |
| சி வகுப்பு | 12 |

இது விரைவில் செயல்படுத்தப்படும்.



1982 மார்ச் 16]

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பரந்த மலைவாசஸ்தலமான நீலகிரியில் சரியான மருத்துவமனை இல்லாததன் காரணமாக அங்கேயிருக்கிற மக்கள் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் சென்று அங்கே நிரம்பியிருப்பதைக் காண்கிறோம். அதற்குக் காரணம் சீனியர் டாக்டர் யாரும் இல்லை என்ற குறைதான். அங்கே சீனியர் டாக்டர்ஸ் போகும்படியாக ஒரு ஏற்பாட்டைச் செய்து அதற்காக அவர்களுக்கு சிறப்பு ஊதியம் தந்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அங்கே இருக்கக் கூடிய மருத்துவமனையின் டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் என்ற வகையில் படுக்கைகளின் எண்ணிக்கை 331, அதுவும் அல்லாமல் 40 படுக்கைகள் ஹில் ஏரியா டெவலப்மெண்ட் புரோக்ராம் என்று வைத்திருக்கிறோம். அதுவும் அல்லாமல் இப்போது தனியாக புதிதாக 15 படுக்கைகள், அடிஷனல் பெட்ஸ் என்ற வகையிக செய்திருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் இந்தப் பிரதேசத்தில் சம்மர் காலங்களில் ஜனத்தொகை ஜாஸ்தியாக வருகிற நேரத்தில் இன்டென்சிவ் கரோனரி கேர் யூனிட் ஆரம்பிக்கலாமா என்ற சிந்தனையோடு பல நிபுணர்களை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதுவும் செயல்பட்டால் இந்தப் பிரச்னை இராது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி ஒரு பெரிய மாவட்டம். ஏழை எளிய தொழிலாள மக்கள் மலைவாழ் மக்கள் 100 க்கு 90 சதவீதம் இருக்கும்படியான ஒரு மாவட்டம். அங்கேயிருக்கும்படியான அந்த மருத்துவமனையில் உள்ள படுக்கை விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மிக மிகக் குறைவு. சென்னையில் இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய மருத்துவமனையின் 2 வார்டுகளுக்குமட்டுமே சமமானது. ஆகவே அங்கே அதிக அளவில் இன்னும் படுக்கை வசதிகளை ஏற்படுத்தினால்தான் அங்கேயிருக்கக்கூடிய மக்களின் தேவையை பூர்த்திசெய்வதாகும். மாண்புமிகு உறுப்பினர், சின்னராஜ் அவர்கள் சொன்னது போல, அங்கேயுள்ள மக்கள் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு போகிற நிலைதான் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி, ஆப்பரேஷன் தியேட்டர் உட்பட, அதை பக்கா மருத்துவமனையாக மாற்ற முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9·40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த ஒரு மாவட்டத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனையில் முழுமையான அளவில் 300 படுக்கைகள் உள்ளன. எல்லா மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் 300 படுக்கைகள் கிடை

யாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தின் அடிப்படையில், அதே உணர்வுகளின் அடிப்படையில், சில நாட்களுக்கு முன்பாக இந்த மருத்துவ மானியக் கோரிக்கை நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் ஒரு ரெவ்யூ மீட்டிங் வைத்து இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் சொல்லப்பட்டு ஏதாவது ஒரு வகையில் பரிகாரம் தேடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில் இன்டன்சிவ் கரோனரி கேர் யூனிட் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். அதை அங்கே ஆரம்பித்தால் நன்றாகயிருக்கும். அதற்காக முயற்சியை எடுத்துக் கொள்கிறோம்.

திரு. மு. அரங்கநாதன்: உதகை தலைமை மருத்துவமனையில் தோல், கண், காது, போன்றவற்றிற்கு ஸ்பெஷலிஸ்டுகளை நியமிக்க அரசு உத்தரவிடுமா? அங்கே ஸ்பெஷலிஸ்ட் இல்லாததால் அந்த மக்கள் வேறு ஊர்களுக்கு சொல்ல வேண்டியிருப்பதால் அங்கே ஸ்பெஷலிஸ்ட்ஸ் நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் கூட எல்லா ஸ்பெஷாலிட்டீஸ்-ம் இருக்க வேண்டும் என்பதற்காக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பார்ட் 2 ஸ்கீம்களைப் பார்த்தால் தெரியும். படிப்படியாக விரைவில் எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் எல்லா ஸ்பெஷாலிட்டீஸையும் ஏற்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த மருத்துவமனையிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

## இராசிபுரம் அரசு பொது மருத்துவமனை.

வினா எண். 489—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் அரசு பொது மருத்துவமனை 48 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருந்தும் அங்கு பத்து படுக்கைகள் மட்டுமே இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அம்மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இராசிபுரம் அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 48 படுக்கைகளும் உள்ளது. அவை, கீழ்க்கண்டவாறு பகிர்மானம் செய்யப்பட்டுள்ளன.

| | | படுக்கைகள் |
|---|---|---|
| தொழுநோயாளிகளுக்கான சிகிச்சைப்பகுதி | .. | 20 |
| குடும்பநலப் பிரிவு | .. | 5 |
| ஆண்கள் சிகிச்சைப் பிரிவு | .. | 9 |
| பெண்கள் சிகிச்சைப் பிரிவு | .. | 14 |
| மொத்தம் | .. | 48 |

(ஆ) இராசிபுரம் நகர கூட்டுறவு வங்கி இம்மருத்துவமனையில் மகப்பேறு வார்டு கட்ட ரூ. 65,000 தர முன் வந்துள்ளது. மேலும் 12 படுக்கைகள் கொண்ட காச நோய்ப் பிரிவு ஒன்று கட்ட காச நோய்க் கழகம் நன்கொடை தர முன் வந்துள்ளது. இவ்விரண்டு செயற் குறிப்புகளும் மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் ஆய்விலுள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: சேலம் மாவட்டத்தில் டானிடா திட்டத்தின்கீழ் ராசிபுரம் மருத்துவமனையை எந்தெந்த விதத்தில் அபிவிருத்தி செய்கிற திட்டங்கள் அரசிடம் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: டானிடா திட்டத்தின் கீழ் இராசிபுரம் தாலுகா மருத்துவ மனைக்கு ஒரு ஆப்பரேஷன் தியேட்டர், குழந்தைகள் வார்ட் கட்டமுடியுமா என்று ஆராய்கின்றோம். இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் முடிந்துவிட்டது. முடியுமாயின் ஜூன் மாதத்தில் இரண்டாவது கட்டமாக

—The Second stage of DANIDA Project will commence—

அந்த நிலையில் இதற்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள நாம் தயாராகயிருக்கிறோம். எவ்வளவு ரூபாய் ஆகும் என்பது பிரச்சினை இல்லை. அதற்காக எவ்வளவு செலவானாலும், இந்த டேனிடா ப்ராஜக்ட் அடிப்படையில் இராசிபுரம் மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்த இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: இந்த அறிவிப்பை அறிவித்ததற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதே நேரத்தில் பல்வேறு நகரங்களில் மின் தட்டுப்பாடு ஏற்படு

கிற காரணத்தால் அங்கே ஜெனரேட்டர்ஸ் வைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? அதே போல் ஆண் பிரிவில், மென் வார்டில் ஒன்பது படுக்கைகள்தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து போகிற நிலை இருப்பதால் அந்த தாலுக்கா மருத்துவ மனையில் ஆண்களுக்காக ஒன்பது படுக்கை கள் மட்டும் இருப்பது நல்லதுதானா? அதைக் குறைந்தது 50 படுக்கைகளாகவாவது உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இரண்டு வாரங் களுக்கு முன்பாக 28-ம் தேதி டானிடா ப்ராஜக்ட்டுக்கு, அங்கே சென்ற நேரத்தில் அவர்களும் என்னோடு வந்திருந் தார்கள். அந்த மருத்துவ மனையைப் பார்வையிட்டிருக் கிறோம். அங்குள்ள பிரச்சினை எல்லாம் சில கட்டில்கள் சரியாக இல்லை என்பதைக் கூட பார்த்திருக்கிறோம். நான் சென் னைக்கு வந்த பிறகு உடனடியாக

The Cots have to be either repaired or replaced.

என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இவைகளுக்குப் பரிகாரம் செய்ய, இன்னும் அதில் ஏராளமான பற்றாக்குறை இருந்தால் அதைப்பற்றி பிறகு சிந்திக்கலாம்.

**அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் தொழிலாளர் நல நிதி ஏற்படுத்துதல்.**

*வினா எண். 490—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) அண்ணா என்ஜினீயரிங் கார்ப்பரேஷனில் தொழி லாளர் நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த நிதியைக் கொண்டு தொழிலாளர்களுக்கு இதுவரையில் செய்துள்ள நன்மைகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 21—3—1979-லிருந்து செயல்பட்டு வருகிறது.

(இ) தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தை களுக்கு புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்க 1979-80 ஆம் ஆண்டில் 38 தொழிலாளிக்கு ரு. 500 ல், 1980-81 ஆம் ஆண்டில் 69 தொழிலாளர்களுக்கு ரூ. 2,520-ம் தொழி லாளர் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.



திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் இருக்கக் கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் இந்த நல உரிமைத் திட்டம் செயல்படுமா அல்லது அண்ணா டிரான்ஸ்போர்ட் முழுவதும், அந்தக் கம்பெனியிலே இருக்கக்கூடிய எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தற்போது அந்த பொறியியல் கழகத்திலே உள்ளவர்களுக்கு மட்டும் என்றிருக்கிறது. இதை விரிவுபடுத்துவது பற்றி பின்னாலே யோசிக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பொறியியல் பிரிவுக்கு மட்டும் இதை அமுலாக்குவது என்று சொல்வது, ஒரு சலுகையை அந்த பிரின்ஜ் பெனிபெட்டை தொழிலாளர் களுக்கு கொடுக்கும்போது, அந்தக் கம்பெனியிலே இருக்கக் கூடிய எல்லாத் தொழிலாளர்களுக்கும் அந்த உரிமை, பயன் கிடைக்காமற்போகுமேயானால், தொழிலாளர்கள் மத்தியில் ஒரு சங்கடம், வெறுப்பு உருவாகும். அது வேலைகளை சரிவர நடத்துவதற்கு உகந்ததாக இருக்காது. ஆகவே, அந்த கார்ப்பரேஷன் முழுவதற்கும் அதை நீட்டிப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்? அதோடு என்ன காரணத்தால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அது விஸ்தரிக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு பிரிவுக்கு மட்டும்தான் என்று நான் தெரிவித்தேன். அந்தக் கழகம் வேறு; அண்ணா போக்குவரத்துக் கழகம் என்பது வேறு. இந்த பொறியியற் கழகம் தனியான ஒரு கழகமாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இருந்தாலும், இதை அண்ணா போக்கு வரத்துக் கழகத்திலும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. இதனால், தொழிலாளர்களுக்கு மன சங்கடம் ஏற்படும் என்று சொல்லிவிட முடியாது. அந்தக் கழகத்தின் வேலையும், இந்தக் கழகத்தின் வேலையும் மாறுபட்டது. இங்கே இன்னும் பல சலுகைகள் கொடுக்கப்படுகிறது. எனவே, அதை ஒப்பிட்டுச் செல்ல முடியாது.

[1982 மார்ச் 16

## சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான உரிமம்.

*வினா எண். 491—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைக்கிள் ரிக்ஷாவிற்கான உரிமம், அவ்வண்டியை ஓட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** சைக்கிள் ரிக்ஷாவிற்கான உரிமம் அவ்வண்டியை ஓட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இம்முடிவினை செயலாக்கும் பொருட்டு தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வாடகை வண்டிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன் வடிவு இப்பேரவையில் ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ரத்து செய்வதற்கு, அதுபற்றிய யோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வேகம் குறைவாக ஓடுகின்றனவகளை அறவே நீக்கவேண்டும் என்று அரசு கருதுகிறது. எனவே, அப்படி குறைக்க வேண்டுமென்பதால், இப்போது அரசுகூட அந்த சைக்கிள் ரிக்ஷாக்களை மாற்றிவிட்டு, அதிலே எந்திரங்களைப்பொருத்திக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதற்காக, அரசாங்கம் பணத்தைகூட ஒதுக்கி, அதன்மீது இப்பொது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி இந்தத் திட்டத்தை அமுல் படுத்துகின்றபோது, அதிலே வேலையில்லாத தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு என்ன? அதற்கு இந்த மாநில அரசு எவ்வளவு ரூபாய் செலவிடும் என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிக்கின்றபோது, அந்த சைக்கிள்களில் எந்திரம் பொருத்தப்படுவதால், அந்தத் தொழிலாளர்கள் வேலை இழக்கின்ற நிலை ஏற்படாது. ஒருவேளை எண்



1982 மார்ச் 16]

ணிக்கை குறையுமானால், அதற்கான முயற்சிகளை எடுத்து, அரசாங்கம் அவர்களுக்கு பாதுகாப்பான வேலைகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகம் முழுவதும் ரிக்ஷாக்களை தனியார், பணம் படைத்தவர்கள் வாங்கி, அதை வாடகைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வாடகை கொடுப்பதிலே கஷ்டப்படுகின்ற நிலைமை இருப்பதால், தனியார்களிடம் அந்த உரிமையை உடனடியாக ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் ·50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். யார், யார் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சைக்கிள் ரிக்ஷா வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு இனிமேல் அனுமதியில்லை. ஓட்டுநர்கள் மட்டும் தான் அனுமதியைப் பெற வேண்டுமென்று சொல்லி நாம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறேன். அப்படி எடுக்கிறபோது அவர்கள் தானாக வெளியிலே பேசுகிற சூழ்நிலை ஏற்படும்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டன. பிறகு சைக்கிள் ரிக்ஷாக்கள் வந்தன. சைக்கிள் ரிக்ஷாக்கள் அனைத்துமே அரசாங்கத்தினுடைய செலவிலே மோட்டார் பொருத்துவதற்கு கடனாக கொடுப்பதற்குத் திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் அவர்கள் பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனை திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்குமா என்று கேட்டால் இருக்காது, அதை அவர் ஏற்றுக்கொள்வார் என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலையை கருதி நம்முடைய கூட்டுறவு அமைப்பின் மூலமாக 1,000 ரூபாய் நிதியாக கொடுத்து, முன் பணமாக வழங்கி அதைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்ற திட்டம். அந்த ஆசை, இந்த அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் உள்ள விளம்பரப் பலகைகள் மூலம் வருமானம்.**

*வினா எண். 492—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் விளம்பரப்பலகை மூலமாக போக்குவரத்துக் கழகத்திற்கு சென்ற ஆண்டு கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) மற்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இந்த முறை நடைமுறையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ரூபாய் 700 (எழுநூறு மட்டும்).

(ஆ) பாண்டியன் போக்குவரத்துக்கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம், அண்ணா போக்கு வரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக்கழகம் ஆகியவைகளில் இம்முறை நடைமுறையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களில் விளம்பரம் மூலம் வருமானத்தைப் பெருக்குவது நடைமுறையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்து கழகத்தின் மூலம் 700 ரூபாய் தான் வருமானம் வருகிறது என்றும் சொன்னார்கள். விளம்பரம் அதிகமாக எதிர்பார்க்கக்கூடிய சென்னை நகரில் ஏன் இந்த அளவு வருமானம் குறைந்திருக்கிறது? அதிகமான விளம்பரத்தின் மூலம் வருமானத்தை பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இப்போது ஓடிக்கொண்டிருக்கிற அத்தனை பேருந்துகளும் புதிய பேருந்துகள். இந்த புதிய பேருந்துகளில் விளம்பரத்திற்காக பலகை அடிப்பதன் மூலமாகவோ அல்லது அதற்கு வர்ணங்களைப் பூசுவதன் மூலமாகவோ அந்த பேருந்துகளில் கவர்ச்சி கெட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலே அதை இப்போது நிறுத்தி வைத்திருக்கிறோம். பழைய வண்டிகளிலே மாத்திரம் நடைமுறையிலே வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது டீசல் விலை உயர்வின் காரணமாகவும், மற்ற நஷ்டங்களை எல்லாம் பார்க்கிறபோது கொஞ்சம் கவர்ச்சி குறைந்தாலும் பரவாயில்லை. இதை நடைமுறைப் படுத்தலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.



**தஞ்சை மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.**

*வினா எண். 493—திரு. இ. ரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மண்டல போக்குவரத்து அலுவலரிடம் 1979–80, 1980–81ம் ஆண்டிற்கு புதிய பேருந்து வழித்தடம் கேட்டுவந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை?

(இ) வழங்கப்பட்ட வழித்தடங்களில் எத்தனைப் பேருந்து கள் ஓடிக்கொண்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

| (அ) புதிய பேருந்து வழித்தடம் | 1979—80 | 1980—81 |
|---|---|---|
| கேட்டு வந்த மனுக்கள். | 185 | 300 |
| (ஆ) அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்கள். | 90 | 18 |
| (இ) அனுமதி வழங்கப்பட்ட வழித் தடங்களில் ஓடும் பேருந்துகள். | 82 | 13 |

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தலைவர் அவர்களே விண்ணப்பிக்கப்பட்டதற்கு பெர்மிட் வழங்கியதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவைகள் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட பெர்மிட்டுகளா? அல்லது தனியார்களுக்கு அளிக்கப்பட்டவையா? ஏற்கனவே புதிய மார்க்கங்கள் வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தது. அது இப்போது நீக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு தான் வழங்கப்பட்டிருக்கிறது. தனியார்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறோமே தவிர அந்த தடை இன்னும் நீக்கப்படவில்லை.

**வாடகைக் கட்டிடங்களில் உள்ள அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் செயற்குறிப்பு.**

* வினா எண். 494—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாடகைக் கட்டிடங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவல கங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் முயற்சியாக 1980-81-ல் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : வாடகைக் கட்டிடங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் பொருட்டு அரசு 1980-81ல் கீழ்க் கண்ட அலுவலக கட்டிடங்களை கட்ட அனுமதி வழங்கியுள்ளது:

(1) புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தின் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 327·05 இலட்சங்கள்);

(2) திருநெல்வேலியில் கோட்டாட்சியர் அலுவலக கட்டிடம் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 5·35 இலட்சங்கள்) ;

(3) விருதுநகர், பெரம்பூர் (சென்னை) ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் மதிப்பீட்டுத் தொகை ரூ. 10·65 இலட்சங்கள்) ;

(4) கரூர், தேனி ஆகிய இடங்களில் வணிக வரித்துறை அலுவலகக் கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.60 இலட்சங்கள்) ; மற்றும்

(5) கடலூர், விருத்தாசலம், மதுரை ஆகிய இடங்களில் பொதுப் பணித்துறைக்கு தேவையான அலுவலகக் கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 7·05 இலட்சங்கள்).

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படி வாடகைக் கட்டிடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அலுவலகங்களுக்காக அரசு ஆண்டுக்கு என்ன வாடகை கொடுக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? வாடகை நாள்தோறும் உயர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் இதை ஒரு 'பேஸ்ட் புராகிராமாக' திட்டமிட்டமுறையில் அமல்படுத்தி எல்லா அலுவலகங்களையும் அரசு கட்டடத்திலே அமைக்க, தொலைதூர நோக்கோடு ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, வாடகை சம்பந்தப்பட்டது பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டதல்ல. அரசு அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் உத்திரவு பிறப்பித்து புதிய புதிய அலுவலகக் கட்டிடங்களை பொதுப் பணித் துறையின் வாயிலாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, பெரம்பூர் பகுதியிலே, அரசு அலுவலகம் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பெரம்பூரில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதன் மதிப்பீட்டுத் தொகை 5 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் என்று கருதுகிறேன்.



ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்.

*வினா எண். 495—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் I. C. D. S. (ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம்) திட்டம் எத்தனை யூனியன்களில் அமுல் நடத்தப்படுகின்றது ?

(ஆ) இதற்கு மத்திய அரசின் உதவித் தொகை எவ்வளவு?

(இ) இத் திட்டத்தை மாநிலம் முழுவதும் அமுல் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(ஈ) ஆம் என்றால் எப்போது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மாநிலத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம் (I. C. D. S.) 3 இடங்களில் அமுல் நடத்தப்படுகிறது. அவையாவன:—

(1) சென்னை, (2) நிலக்கோட்டை பஞ்சாயத்து யூனியன்—மதுரை மாவட்டம், (3) தளி பஞ்சாயத்து யூனியன்—தர்மபுரி மாவட்டம்.

(ஆ) இதற்கு மத்திய அரசின் சர. சரி வருட உதவித் தொகை:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம் (I.C.D.S.) | 13 |
| பெண்களுக்கான செயல்முறை கல்வி .. | 4 |

(இ) தற்சமயம் இல்லை.

(ஈ) கேள்வி எழுவில்லை.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தில் கொடுக்கப்படும் சலுகைகள் குடும்பக் கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ? அது நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் கருத்தரித்த தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இணைத்துத்தான் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி போதிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 16

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டத்தை சென்னையிலும், மதுரையிலும் நடத்துகிறார்கள். அதற்காக வருடத்திற்கு 15 லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குழந்தைகள் அதிகமாக இருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலேயும் இந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் குடும்பக் கட்டுப்பாட்டை மீறுகிறார்கள் என்று தான் அர்த்தம்.

திரு. பி. துரைராஜ் : ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்திலே சங்கரன்கோவில் தொகுதியில் வாழும் மக்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள், ஆகவே, ஆங்கே இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தற்போது 1982-83ஆம் ஆண்டு, 1983-84 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டம் 36 இடங்களில் செயல்படுத்தப்படுவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருச்சியில் உள்ள கோழி உற்பத்தி கழகத்திற்கு சொந்தமான குளிர்சாதன கிடங்கு.

* வினா எண். 496—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோழி உறபததி கழகத்துக்கு சொந்தமாக திருச்சியில் உள்ள குளிர் சாதன கிடங்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : திருச்சியிலிருந்து குளிர்சாதன இயந்திரம் பழுதடைந்திருந்ததால் அங்குள்ள குளிர் சாதனக் கிடங்கு செயல்படவில்லை. அந்த இயந்திரம் சென்னை அடையாறிலுள்ள முட்டை விற்பனைப் பிரிவிற்குக் கொண்டு வரப்பட்டு பழுது பார்க்கப்பட்டு 17—2—1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1982 மார்ச் 16]

தூத்துக்குடி— திண்டுக்கல்— கரூர் அகல இரயில் பாதைத் திட்டம்.

குறுகிய கால வினா எண். 2—திரு. ப. நெடுமாறன் : திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல இரயில் பாதைத் திட்டம் நிறைவேற்றுவதற்கு நில ஆர்ஜித நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளனவா ?

(ஆ) நில ஆர்ஜிதம் செய்வதற்கு தாமதம் ஆவதுதான் மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாததற்கு காரணமா ?

(இ) இத்திட்டத்தை உடனே எடுத்துக் கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) இல்லை.

(இ) தமிழ்நாட்டில் தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல இரயில் பாதை திட்டத்திற்கு திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்குத் தேவையான வரைபடமும் விவர அட்டவணையும் தென்னிந்திய இரயில்வே தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்) அவர்களிடமிருந்து கிடைத்த பிறகு நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, நெல்லை பிராட்கேஜ் இரயில் பாதைத் திட்டம் 1968ஆம் ஆண்டில் ஒரிஜினல் பிரிலிமினரி சர்வே முடிக்கப்பட்டு, 1979ஆம் ஆண்டில் அப்டேட்டிங் சர்வேயும் முடிக்கப்பட்டு பிறகு தமிழக அரசும், தமிழகத்தைச் சேர்ந்த அத்தனை கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடைவிடாது வற்புறுத்தியதன் விளைவாகப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தலையிட்டு இந்தத் திட்டத்தை டாப் பிரையாரிட்டி லிஸ்டிலே சேர்க்கும்படி உத்தர விட்டார்கள். அப்பொழுது இரயில்வே அமைச்சராக இருந்த திரு. கேதார் பாண்டே அவர்கள் நாடாளுமன்றத்திலேயே இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், குறைந்தபட்சம் ஆறாண்டுகளில் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்றும் நாடாளுமன்றத்திலே அறிவித்தார்கள். அதற்குப் பிறகு மத்திய நிதியமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஆர். வி. அவர்கள் சென்னையிலே ஒரு கூட்டத்திலே பேசும்பொழுது இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதிவசதி அத்தனையும் அளிக்கப்படும் என்றும், இந்தத் திட்டம் குறித்த காலத்திற்குள் முடிக்கப்படும் என்றும் தமிழக மக்களுக்கு உறுதியளித்தார்கள். இதற்காக 1981-82ஆம் ஆண்டு இரயில்வே பட்ஜெட்டில் ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாக் கேட்க வேண்டும்.

**திரு. ப. நெடுமாறன் :** பிறகு 77 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டும் கூட அமைச்சர் அளித்த பதிலிருந்து இங்கே நில ஆர்ஜித வேலை இன்னும் ஆரம் பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, எந்த வேலையும் ஆரம்பிக்கப்படாத நிலையில், புதிய இரயில்வே அமைச்சர் ஒன் றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், புதிய திட்டம் எதுவும் இன்னும் குறைந்தபட்சம் ஐந்தாண்டுக் காலத்தில் எடுத் துக்கொள்ளப்பட மாட்டாது என்று சொல்லியிருப்பதால் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு முழுக்குப் போட்டு விட்டதா? மீண்டும் வற்புறுத்தி இந்தத் திட்டத்தை அமல் படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, நமக்கு வந்துள்ள அந்தக் குறிப்பின்படி நில ஆர்ஜிதத்திற்காக ரூபாய் 50 இலட்சமும், ஏறத்தாழ 750 ஹெக்டேர் நிலம் வேண்டு மென்றும் சொல்லி குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல், இந்த நடவடிக்கையை வேகப்படுத்துவதற்காக ஒரு தனி துணை மாவட்ட ஆட்சியாளரையும், அவருக்குத் தேவை யான பணியாளர்களையும் ஒதுக்கி உடனடியாகச் செய்து தர வேண்டுமென்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதற்கான நடவடிக்கைகள் அத்தனையும் எடுத்து அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற ஆட்சித் தலைவர்களிடத்திலே கருத் தைச் சொல்லி இப்பொழுது நாம் தயாரான நிலையிலே இருக் கிறோம். நமக்கு மத்தியிலே இருந்து கிடைத்திருக்கின்ற தகவல் அந்த 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதாக. எனவே, அங் கேயிருந்து அந்த வரைபடம், எந்தெந்த இடத்திலே எவ்வளவு இடம் வேண்டுமென்ற வரைபடம், அதற்கான அந்தந்த கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டு இதில் வேகமான நடவடிக்கை எடுப்பதற்குத் தமிழக அரசைப் பொறுத்தவரையில் நாம் தயா ராக இருக்கிறோம், எனவே, நாம், மத்திய அரசு இதை விரைவு படுத்த வேண்டுமென்று—டெல்லி சென்றிருந்தபொழுது சொல்லிக் கொண்டு வருகிறோம். மீண்டும் இந்தக் கருத்தைச் சொல் வதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர வர்களே, ப்ராஜக்ட் ஓரியன்டெட் லைனை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று அதே மத்திய அரசின் புதிய கொள்கையை மத்திய இரயில்வேத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சேத்தி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே சேலத்திலே இரும் பாலை தொடங்கப்பட்டு விட்டது. சேலம் இரும்பாலையுடைய



தென் மாவட்டங்களில் அதிலும் குறிப்பாகத் தூத்துக்குடி துறை முகத்துடன் இணைக்கின்ற இரயில்வே பாதையாக இருப் பதால் ப்ராஜக்ட் ஓரியன்டெட் லையன் என்று கருதி உடனடி யாக இந்த ஆண்டே இந்த வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசை மீண்டும் வற்புறுத்துவதற்கு நம்முடைய போக்கு வரத்துத் துறை அமைச்சரவர்கள் இதற்காக டெல்லிக்குச் செல் வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இதற்காக போய்த்தான் ஆகவேண்டுமென்ற நிலை வந்தால நாங்கள் போ வதற்குத் தயக்கம் காட்டவில்லை. மாண்புமிகு உறுப்பின ருக்கு அதிக அக்கறை இருக்கிறது என்று எனக்குத் தெரியும், அவருடைய பகுதியிலே இது வருகிறது—அவருக்கு மிக வசதி யாக இருக்கும் என்றெல்லாம் நம்புகிறார்கள். எனவே தேவை யென்றால், அவரைக்கூட அழைத்துக்கொண்டு போகத் தயக்கம் காட்ட மாட்டோம்.

**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 கோடி ரூபாய் திட்டத்திற்கு வெறும் 50 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆகவே, இது யானைப் பசிக்கு சோளப்பொறி போல் இருக்கிறது. இப்படி நிதி குறைவாக இருக்கிற காரணத்தாலே இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்படுமோ என்ற அச்சம் தமிழக மக்கள் மத்தியிலே இருக்கிறது. ஆகவே, இந்தத் திட் டத்தை விரைவு படுத்தும் வகையில், மத்திய அரசு கவனத்தை ஈர்க்கும் வகையில், நம்முடைய மாநில அரசு ஏதாவது மேல் நடவடிக்கை உடனடியாக எடுக்கும் திட்டம் உள்ளதா? அதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ரூ. 50 லட்சம் என்பது குறைவாக இருந்தாலும்கூட, இந்த வேலையைத் துவக்குவதற்காகப் பணத்தை ஒதுக்கிவிட்டால், அதற்குப் பின்பு தொடர்ந்து ஒதுக்கித்தான் ஆகவேண்டும், பாதி யிலே நிறுத்தி விட முடியாது. கவனத்தை ஈர்க்கின்ற அளவுக்கு என்று சொன்னால், இன்றையதினம் சட்டமன்றத்திலே பேசு வதேகூட மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்த்தாக வேண்டும். எனவே, அந்த வகையிலே அரசாங்கம் வெளியிலே போய் ஊர் வலம் நடத்துவது போன்ற காரியங்களைச் செய்ய முடியாது. ஆனால், சட்டசபையின் மூலமாக, நிச்சயமாக இந்தக் கருத்துக் கள் அவர்களுக்குப் பிரதிபலிக்க முடியும். கடிதங் களின் மூலமாக, அல்லது நேரிலே சொல்வதன் மூலமாக, இந்தக் கருத்தை மத்திய அரசிற்கு மாநில அரசு வலியுறுத்தத் தயாராக இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய தேவையை அறிந்து, இந்தியப் பேரரசு ரூ. 50 லட்சம் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே, மாநில அரசு நில ஆர்ஜிதம் செய்வதற்கு இடையூறாக திருச்சியிலேயிருக்கிற தென்னிந்திய ரெயில்வே நிலையத்திலிருந்து வரைபடம் கிடைக்கவில்லையென்ற தகவலையும் சொன்னார்கள். அரசாங்கம் அதற்காக ஏற்பாடு செய்திருக்கிற துணை கலெக்டர் அலுவலகம் இந்த வரைபடத்தைப் பெறுகின்ற முயற்சியிலே சற்று முனைப்பாக இருந்து, அதன் மூலமாக நில ஆர்ஜிதம் நடவடிக்கையைத் துரிதப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தென்னிந்திய ரெயில்வே தலைமைப் பொறியாளரிடமிருந்து நமக்கு வரைபடம் கிடைக்கவேண்டும். அதை நாம் கேட்டுக் கொண்டுதானிருக்கிறோம். நமக்கிருக்கின்ற அக்கறையை விட, மத்திய அரசாங்கத்தினுடைய அந்த ரெயில்வேத் துறை, வேகமாகச் செய்தாக வேண்டும்; இந்தக் காலத்திலே நாம் திட்டத்தைப் போட்டு, இந்தக் காலத்திலே நாம் முடித்திருக்கிறோம் என்று பெருமையோடு அவர்கள் செய்ய முடியும் என்ற அந்த உணர்வோடு அவர்கள் செயல்படுவார்களானால் அது நமக்கும்கூட மகிழ்ச்சியாக இருக்கும்.

**திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட, அங்கே ரெயில்வே அமைச்சரிடத்திலே, பிரதம அமைச்சரிடத்திலே வற்புறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டு மக்களுடைய குரலை அங்கே ஒலிக்கும் வகையில், நம்முடைய அரசு, தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை இது விஷயமாக, டெல்லிக்கு அனுப்பி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, சொன்னார்கள், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே ஒலித்திருக்கிறார்கள் என்று. அவர்களும் நம்முடைய பிரதிநிதிகள்தான். எனவே, இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் போனால் மட்டும்தான், நம்முடைய பிரதிநிதிகள் என்று அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது அல்ல. நம்முடைய தமிழகத்துப் பிரச்சினைகளை எடுத்துச்சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் இங்கேயிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்கிறார்கள். அங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களையே பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு மத்திய அரசாங்கம் செய்ய எந்தத் தயக்கத்தையும் காட்டாது என்று நம்புகிறேன்.



**திரு. பாபு ஜனார்த்தனன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை குறித்து அமைச்சர் அவர்கள் தலைமையில் சர்வகட்சி உறுப்பினர்களும் டெல்லி சென்று........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அனுப்பி வைக்கலாமா என்று திரு. சின்னசாமி கேட்டார். அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார்.

**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கரூர்-மதுரை—தூத்துக்குடி அகல பாதை ரெயில் திட்டம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் அத்தியாவசியமானது. அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லையென்றும், மத்திய அரசு சரியான முறையிலே இதிலே அக்கறை செலுத்தவில்லையென்றும், பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலம் அறிய முடிகிறது. உடனடியாக, மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, இதை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்த தமிழகத்திலே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. நம்முடைய சட்டமன்றத்திலே இது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதற்கான முறையிலே அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அரசு அந்த வகையிலேயும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறது. உறுப்பினர் இப்பொழுது கேட்டதைப் பொறுத்தவரைக்கும், தலைவர் அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சர்வகட்சியினர் போகும் போது பார்த்துக் கொள்ளலாம். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

## 2. தகவல் கோரல்

### (அ) மாநில அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப்படியை உயர்த்துவது

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நம்முடைய பொது விவாதத்தை இறுதிப்படுத்திவைத்து நமது நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற காலத்தில், மாநில அரசு ஊழியர்களுக்கு 4 கிராக்கிப்படி கொடுக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி மத்திய அரசு முடிவு எடுத்தவுடனே நாங்கள் முடிவு எடுத்து அறிவிப்போம் என்று குறிப்பிட்டார்கள். மத்திய அரசு முடிவெடுத்தாகிவிட்டது. முடிவு வெளி வந்துவிட்டது; நம்முடைய அரசு அதுபற்றி என்ன........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. (குறுக்கீடு) நிதி அமைச்சர் இங்கில்லை. நிதி அமைச்சர் டெல்லியிலே இருந்து வந்தவுடனே நாளை, அல்லது நாளைய மறுதினம் சொல்வார். பொறுத்துக் கொள்ளுங்கள்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று இன்று மாபெரும் ஊர்வலத்தை நடத்திக்கொண்டு கோட்டையை நோக்கி, வருகிறார்கள். அதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுதுதான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தீர்கள். அதைப் பார்த்தேன். எடுத்துக்கொள்வதா இல்லையா என்று இன்னும் தீர்மானிக்கப் படவில்லை.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் கடந்த 8 வாரங்களாக 20,000-க்கும் அதிகமான பீடித் தொழிலாளிகள் போராட்டம் நடத்தி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பீடித் தொழிலாளிகளைப் பற்றி நேற்றைய தினம் நடந்த தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசி இருக்கவேண்டும். பேசி அமைச்சரிடம் வாக்குறுதி வாங்கியிருக்கலாம். பேசத் தவறியது உறுப்பினரது குறையே தவிர, என்னுடைய குறை அல்ல. (குறுக்கீடு) நேற்று தான் தொழிலாளர் நல இலாகா மானிய விவாதம் முடிந்திருக்



கிறது. தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் நேற்றைய தினம் திரு. கருப்பையா பேசி இருக்கிறார். அப்பொழுது, இது பற்றி அவர் பேசி இருக்கலாம்.

**திரு. இரா. கருப்பையா :** நேற்று அது பேசப்படவில்லை.

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் :** முக்கியமான பிரச்னையாக இருந்தால் நேற்றே பேசியிருப்பார். முக்கியமானதாக இல்லாததால் தான் அவரே பேசவில்லை. ஆகவே, நாம் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும் ? (குறுக்கீடு.)

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவருடைய பதிலே கிடைக்கவில்லை, நிராகரிப்பும் கிடைக்கவில்லை. (கூச்சல்-குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 20,000 பேர்களுடைய பிரச்னை என்றால், முதலில் அதை எடுத்துப் பேசியிருக்க வேண்டும். எனக்கு இருக்கிற கடமைகளை வலியுறுத்துகிறீர்கள் தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கடமைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்துப் பார்க்க வேண்டும் அல்லவா ? இதைச் சொல்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா :** தனியாக, விசேஷமாக, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குத்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமைச்சருடைய கவனத்திற்கு எத்தனையோ வகையிலே கொண்டு வரலாம். இதை ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கொண்டுவர முடியாது. மானியக் கோரிக்கை வரும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அதுவும் குறிப்பாக, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தலைவர்கள் பேசுவார்கள் என்று நினைத்தேன். அதுதான் மரபே தவிர, உறுப்பினர் பேசாமல் விட்டுவிட்டேன் என்பது இது வரையில் புரிந்து கொள்ளாத ஒரு புதிர் ; இனிமேல் தான் நான் விளங்கிக் கொண்டாக வேண்டும்.

**திரு. எஸ். இளையபெருமாள் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நான் 4 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத் திருக்கிறேன். சேலத்திலே உயிரோடு எரிக்கப்பட்டது, பாளையங்கோட்டையிலே ஒருவர் கொலை செய்யப்பட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை முழுவதுமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அவையிலே ஒரு நாளிலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒத்திவைப்புத் தீர்மானம் வராத நாளே கிடையாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பவும் பரிசீலிக்கிறேன். அதனை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறேன்.

### 3. ஒழுங்குப் பிரச்சினை

பேரவைக் கூட்டம் நடைபெறுகையில் நீதி விசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது—தொடர்ச்சி.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, நேற்றைய தினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியிலே நீதி விசாரணை சம்பந்தமாக அறிவித்திருக்கிறார்கள். எங்கள் உறுப்பினர் இது பற்றி எழுப்பிய போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமான அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இது குறித்து வெளியே அறிவித்தது இந்த அவையை அவமதிக்கும் செயலாக நான் கருதுகிறேன். ஆகவே முதல் முறையாகக் கூடுகின்ற நேரத்திலேயாவது அறிவித்திருக்க வேண்டும். அந்த அறிவிப்பிற்குப் பிறகு இன்றைக்கு இரண்டாவது நாள் கூட்டமாகும் இப்போதும் கூட இந்த அவையிலே எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. ஆகவே இது அவையினுடைய உரிமையினை மீறிய செயலாக இருக்கின்றது. எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அது சம்பந்தமாக அறிக்கை வெளியிடப்படுகின்ற நேரத்திலே உடனே அது குறித்து அவையிலே அறிவிக்க வேண்டும், இல்லை என்றால் அது கூட உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பதை கடந்த காலங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த அவைக்கு அந்த அறிக்கை சம்பந்தமாக நீதி விசாரணை சம்பந்தமாக ஏதேனும் அறிக்கை கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதுதான்.





(முற்பகல் 10-20.)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இப் பிரச்சினையை எழுப்பினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைக்குத்தான் சென்னைக்கே வர முடிந்தது—(குறுக்கீடு). ஆமாம்—இன்று காலையில் தான் வருகிறார்கள். ஆகையினால் முழு விவரங்களும் வந்த பிறகு, அவைகளை இந்த அவைக்கு தந்து, பிறகு அதை விவாதத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்று நேற்றே சொன்னேன். எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் அப்போது இல்லையோ என்னவோ. (குறுக்கீடு.) இன்றைக்கு அந்த விவரங்கள் அவையில் வைக்கப்படும் என்று சொல்லவில்லை, முழுவிவரங்களும் கிடைத்தவுடன் வைக்கப்படும் என்று சொன்னேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வந்து விட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிக முக்கியமான விஷயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பதட்ட நிலை நிலவுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம், மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் உடனடியாக இங்கு இந்த அவைக்கு வந்து, தேவையான நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை ............ (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல்வர் நேற்று வரவில்லை. காலையில் வருவதாகத்தான் செய்தி.

DR. K. SOURIRAJAN : Whenever a privilege issue is raised on the floor of the House, it precedes all other business before the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமை மீறல் தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பேச விட்டால் தானே கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.

## (4) உரிமைப் பிரச்சினை...

### மின்சாரத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு முன்னறிவிப்பு கொடுத்து உள்ளார். இப்பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

''10—3—1982 அன்று பேரவையில் எழுப்பப்பட்ட ஒத்திவைப்புப் பிரச்சினைக்கு பதில் அளிக்கையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார் ''இந்தக் கலவரத்தின் போது திரு. இராஜசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி இராயப்பேட்டை மருத்துவமனையில் மாலை 4-30 மணிக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். நல்ல வேளையாக அவர் இப்போது இங்கே வந்திருக்கிறார் அவருக்குத் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பு இருக்கிறது. காவல் துறையினர் தாக்கியதாகக் கூறவில்லை''.

அமைச்சரால் அறிவிக்கப்பட்ட மேல் காணும் இந்த விவரம் உண்மைக்கு மாறானது மட்டுமல்ல, இந்த அவையின் நடவடிக்கைகளையே திசை திருப்புவதாக ஆகும். என் செயலில் களங்கம் கற்பிப்பதாகும். இந்த அவையின் உரிமையை மீறியதாகவும் உள்ளது'' என்று திரு. இராஜசேகரன் தம் அறிவிப்பில் கூறியுள்ளார்.

இப்பிரச்சினையில் உரிமை மீறல் எவ்வாறு ஏற்படுகிறது என்பதை சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் 9—3—1982 ஆம் தேதி மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில் நடைபெற்ற காவல் துறையினரின் விரும்பத் தகாத நடவடிக்கை குறித்து, 10—3—1982 ஆம் தேதி இங்கே சாதுர்யமாக பொம்மைத் துப்பாக்கியையும், கத்தியையும் நான் காட்டிய கண்ணீர் புகைக் குண்டு, கல்—அதை உணர்ச்சி வசப்பட்டு எறிந்தால், அது விழுந்தால் என்று கற்பனை வளத்தோடும், கட்டுப்பாடோடு இருந்த கூட்டத்தை கட்டுப்பாடு அற்ற கூட்டம் என்றும் அதில் நானும் சேர்ந்து கொண்டேன் என்றும் அறிக்கை தந்தார். இது போன்று முதல்வருக்காகவும் அவை முன்னவருக்காகவும் பல அறிக்கைகளைத் தந்த பாணியிலே இதுவும் உள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்த சம்பவம் பற்றி மீண்டும் பேசுவது சரியல்ல. இரண்டு பிரச்சினையைப் பற்றி இருக்கிறது. ஒன்று இராயப்பேட்டை மருத்துவமனையில் உள் நோயாளியாக இல்லை என்பது, மற்றொன்று காவல் துறை தாக்கியதைப் பற்றியது. இந்த இரண்டையும் பற்றி மட்டும் பேசி, இது எப்படி அவை உரிமையின் கீழ் வரும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. வே. இராஜசேகரன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப்பேரவை விதி 246-ன் கீழ் மாண்புமிகு மின்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வர அனுமதிக்க வேண்டுகிறேன்.

9-3-1982 அன்று பாராளுமன்ற மேலவை நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்து திரும்புவதை யொட்டி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில் சிறப்பான வரவேற்பு தர வருகை தந்திருந்த இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்களையும், தொண்டர்களையும், நடிகர் திலகம் சிவாஜி மன்ற தோழர்களையும் போலீசார் கொடுமையான நடவடிக்கைகளின் மூலம், பல விரும்பத் தகாத அருவருக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியதால் 10—3—1982 அன்று நமது சட்டப் பேரவையில் பெரும்பாலான எதிர்க் கட்சி உறுப்பினர்களால் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டது. நானும் தன்னிலை விளக்கமாக நடந்ததை விவரிக்க அனுமதிக்கப்பட்டேன்.

இவற்றுக்குப் பதில் அளித்த மின் துறை அமைச்சர் அவர்கள் அவர் தம் பதிலில் ஒரு பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''இந்தக் கலவரத்தின் போது திரு. இராஜசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டதாகக் கூறி இராயப்பேட்டை மருத்துவமனையில் மாலை 4-30 மணிக்கு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நல்லவேளையாக அவர் இப்போது இங்கே வந்திருக்கிறார். அவருக்குத் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பு இருக்கிறது. காவல் துறையினர் அவரைத் தாக்கியதாகக் கூறவில்லை.

அமைச்சரால் அறிவிக்கப்பட்ட மேல் காணும் இந்த விவரம் உண்மைக்கு மாறானது மட்டுமல்ல, வேண்டும் என்றே இந்த அவையின் நடவடிக்கையையே திசை திருப்புவதாக ஆகும். என் செயலில் களங்கம் கற்பிப்பதாகும். இந்த அவையின் உரிமையை மீறியதாகவும் உள்ளது. அதாவது நான் அன்று மாலை 4-30 மணிக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன் என்பது உண்மை அல்ல. மேலும் என்னைப் பரிசோதித்த மருத்துவரிடம் நான் போலீசாரால் தாக்கப்பட்டேன் என்று

[திரு. வே. இராஜசேகரன்] [1982 மார்ச் 16

சொல்லவில்லைஎன்பதும் உண்மையல்ல. நான் இராயப்பேட்டை மருத்துமனை மருத்துவரால் புறநோயாளியாகவே நடத்தப் பட்டேன். என் உடலிலுள்ள காயங்கள் போலீசார் தாக்கியதால் தான் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் சொல்லி அவர் பதிவு செய்தார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நான் புறநோயாளியாக நடத்தப்பட்டு அதற்காக வழங்கப்பட்ட ஓ. பி. சீட்டில் கூட ஆங்கிலத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது.

History of Patient—Police lathi charge in front of Airport.

(முற்பகல் 10-30).

நான் என்னைப் பரிசோதித்த மருத்துவரிடம் போலீஸ் தடியால் தாக்கப்பட்டதால்தான் என் உடலில் காயங்கள் ஏற்பட்டன என்று கூறியதை ஒட்டித்தான் மேற்குறித்தபடி மருத்துவர் ஆங்கிலத்தில் எனது ஓ.பி. சீட்டில் குறிப்பிட்டுள்ளார். அந்த ஓ.பி. சீட்டின் எண் 1119. அதன் நகல் ஒன்றை தங்களிடம் கொடுத்திருக்கிறேன்.

உண்மை இவ்வாறிருக்க உள் நோயாளியாக இருந்த நான் நல்ல வேளையாக இங்கு வந்திருக்கிறேன் என்று கூறும் அமைச்சரின் கூற்று ஏதோ நான் மருத்துவ அறிவுரைக்கு (அகைன்ஸ்ட் மெடிக்கல் அட்வைஸ்) விரோதமாகவோ அல்லது மருத்துவமனை நிர்வாகத்திற்குத் தெரியாமல் வந்திருப்பதைப் போன்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

இவ்வாறு ஒரு எண்ணத்தை வேண்டுமென்றே அமைச்சர் உருவாக்குவது உண்மைக்கு மாறாக மட்டுமல்ல; என் செயலை களங்கப்படுத்துவதோடு இந்த அவைக்கு தவறான தகவலைத் தருவதன் மூலம் அவையின் உரிமையை மீறுகிறார்.

அடுத்து, அமைச்சர் என்னை பரிசோதித்த இராயப் பேட்டை மருத்துவ மனை மருத்துவரிடம் நான் போலீசாரால் தாக்கப்பட்டேன் என்று சொல்லவில்லை என கூறும் கூற்று ஏதோ என் உடலிலுள்ள காயங்கள் போலீஸ் தடியடியால் ஏற்பட்ட தல்ல என்பதுபோலவும், வேறு வழிகளால்தான் ஏற்பட்டது போல வும், அதனால்தான் நான் மருத்துவமனையில் அப்போது சொல்லவில்லை என்பது போலவும் போலீசார்மீது பழிசுமத்த இப்போது அவையில் எனது உடலிலுள்ள காயங்கள் போலீசார் தடியடியால் ஏற்பட்டது என்று சொல்வது போலவும் கருதக்கூடிய ஒரு எண்ணத்தை அமைச்சர் அவர்கள் பதிலில் உள்நோக்கத்தோடு உருவாக்கியிருக்கிறார் என்று உணர்கிறேன்.



1982 மார்ச் 16] [திரு. வே. இராஜசேகரன்]

இவ்வாறு அமைச்சர் அறிக்கை மூலம் செய்வதாவது வேண்டுமென்றே என் செயலை களங்கப்படுத்துவதோடு அவைக்கு தவறான தகவலைத் தந்து அவையின் நடவடிக்கை களை திசைதிருப்பி அவையின் உரிமையை மீறி இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே எனது இந்த உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி மேல் நடவடிக்கைக்காக பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே குறிப்பாக இரு பிரச்சினைகளை மாண்பு மிகு உறுப்பினர் திரு இராஜசேகரன் அவர்கள் இங்கே எழுப்பி னார்கள். அவர்களுடைய கௌரவத்தைப் பாதிக்கின்ற வகை யில் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். நான் முதல் முதலாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் : அவர்கள் கௌரவத்தை மட்டுமல்ல; அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கௌரவத் தையும் பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து நிச்சயமாக நான் தவறமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9—3—1982 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. உடனடியாக ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருந் தார்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதுபற்றிய விவரங்களை காவல்துறை தயார் செய்துகொண்டிருக்கிறபோது மாலை 5-12 மணிக்கு மீனம்பாக்கம் காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் திரு இராஜசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் சிகிச்சைக்காக இராயப்பேட்டை அரசாங்க மருத்துவ மனைக்கு வந்த விவரம் தெரிந்தது. மருத்துவமனையில் இருந்து இதுபற்றி ()Accident and Injuries—Intimation to Police)' என்று ஒரு அறிக்கை அனுப்புகிறார்கள். அந்த அறிக்கை யில் குறிப்பு பிரிவு 7—எந்த வார்டில் அனுமதிக்கப்பட்டுள் ளார் என்று கேள்விக்கு அவர்கள் புறநோயாளியாக இருந்தால் ஓ.பி. என்று எழுதுவார்கள். ஆனால் அந்த அறிக்கையில் "ரெபர் டு டி.எ.ஓ.எஸ். என்று எழுதியிருக்கிறார்கள். ரெபர் டு டி.ஏ.ஓ.எஸ். என்று எழுதியதால் அவர்கள் திரு. இராஜ சேகரன் அவர்களை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை செய்யப்போகிறார்கள் என்று கருதிக்கொண்டார்கள். டி.எ.ஓஎஸ். என்றால் என்ன என்றுஎனக்கும் தெரியாது. அதுபற்றிக்கேட்டேன்.

'Refer to Duty Assistant (Ortho) Surgeon'

என்று அதற்குப் பொருள். ஆக, அந்த வகையிலே தான் ஓ.பி. என்று எழுதாத காரணத்தால் ரெபர் டு டி.எ.ஓ.எஸ். என்று எழுதப்பட்டு இருந்ததால் அவர்கள் உள்நோயாளியாக அனுமதித்தார்கள் என்று அந்தக் தகவலைத் தந்திருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் சொல்லுகிறபோது, ''காவல் துறையினர் தாக்கினார்கள் என்று நான் அப்போது குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள். இராயப்பேட்டை அரசாங்க மருத்துவ மனையில் ஆக்சிடெண்ட் ரெஜிஸ்டரை பார்வையிட்டதில் திரு இராஜசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் மேலுள்ள காயங்களைப்பற்றி

'Alleged to have been assaulted by 5 known persons with sticks near out-gate of airport on 9th March 1982 at about 9-20 a. Not even 'lathis' but sticks.

''அவர்கள் இங்கே காட்டியது கல்.

Alleged to have been assaulted by 5 known persons. ஆக்சிடெண்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட்டில் 5 பேர் என்று எழுதியிருக்கிறார்கள். அதுபோல ஆக்சிடெண்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட்டிலும் Assault near Airportஎன எழுதப்பட்டிருக்கிறது.

இதை வைத்துத்தான் முந்தைய அறிக்கையில் அவரைக் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் பின்னர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே கிடைத்த முதல தகவலின் அடிப்படையில் இங்கே தகவல் அளிக்கப்பட்டதே தவிர வேண்டுமென்றே முற்றிலும் மாறாக தெரிந்தே மாற்றி அந்தத் தகவல்கள் தரப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர், திரு ராஜசேகரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் நானே இத்தகைய அறிக்கை தருகிறபோது அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வந்ததைப் பார்த்த உடனே எனக்கும் சந்தேகம் ஏற்பட்டது. அதனால்தான் நல்ல வேளையாக இங்கே வந்திருக்கிறார் என்று சொன்னேன். அவர்களைக் குறைத்துச் சொல்ல வேண்டும் என்பதல்ல. இதிலே உள் நோயாளி என்று இருக்கின்றது. சாதாரணமாக இதை நாங்கள் செக் பண்ணுவது உண்டு. ஆனால் அவர் இங்கே வந்திருந்தார். அதோடு



மட்டுமல்ல. பெரிய கல்லைக் காட்டி காயங்களையும் காட்டினார். அதை எல்லாம் பார்க்கிறபோது புறநோயாளியாக இருக்க வாய்ப்பில்லை என்றுதான் நான் கருதினேனே தவிர வேறல்ல. அந்த சந்தேகத்திலேதான் சொன்னேன். அவர் முதுகிலேயும் விலாவிலேயும் உள்ள காயங்களைக் காட்டி அவ்வளவு பெரிய கல்லையும் காட்டியும் கூட புறநோயாளியாகத்தான் அவர்கள் சிகிச்சை பெறுகிறார்கள் என்று தெரிந்திருந்தால் ஒருவேளை ஒத்திவைப்புத் தீர்மானம் கூட வராமலே கூட இருந்திருக்கலாம். அது வேறு சமாசாரம். இருந்தாலும் இந்தத் தகவல்களை முன்னரே தெரிந்து வேண்டும் என்றே மாற்றிச் சொல்லவில்லை என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் பேரவைக்கும் தெரிவித்து இதிலே உரிமை மீறல் பிரச்சினை எதுவும் இல்லை எனக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தினசரி பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றி அமைச்சர்கள் அறிக்கைகளைத் தரவேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்றது. இந்த மாமன்றமும் அப்படிப்பட்ட அறிக்கைகளை அந்தந்த வேளைகளில் கேட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டும் என்றோ அல்லது தெரிந்தோ தன்னுடைய கவனத்திற்கு வந்த பிறகோ, நேரிலோ கண்ட பிறகோ அப்படிச் சொல்ல வேண்டும் என்ற எண்ணங்களின் மூலமாகச் சொல்லவில்லை என்று எடுத்துச் சொல்லி இருக்கின்ற காரணத்தால் இது உரிமை மீறல்பிரச்சினையாகாது என்பதைச் சொல்லி முடிக்கிறேன்.

## (5) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரை மாநகராட்சி மின்சாரத்துறை தொழிலாளர்கள் வேலை நீக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ''மதுரை மாநகராட்சியில் மின்சாரத் துறையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்து வந்த 176 தொழிலாளிகள் எவ்வித முன்னறிவுப்புமின்றி 1—3—1982 முதல் வேலை நீக்கம் செய்யப் பட்டிருப்பதால் உருவாகியுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்னும் தீர்மானத்தை முன் மொழிய அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு ப. நெடுமாறன் அவர்களிடமிருந்து ஒரு முன்னறிவிப்பு வந்துள்ளது.

இதே பொருள் குறித்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்தும் முன்னறிவிப்புகள் வந்துள்ளன.

திரு. க. பாரமலை; திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்; திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன்; அ. ரகுமான் கான்; என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; கே. ஆர். சுந்தரம்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை குறித்து மிகச் சுருக்கமாக விளக்கிக் கூறும்படி திரு ப. நெடுமாறன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி மின்சாரத் துறையிலே 176 தொழிலாளிகள் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வேலை பார்த்து வருபவர்கள், எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் 1—3—1982 முதல் திடீர் என்று வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே சிலர், 3 அல்லது 4 ஆண்டுகள் கூட தொடர்ந்து அந்த மாநகராட்சியிலே பணியாற்றியவர்கள். நிரந்தரமான ஊழியர்களுக்குக் கொடுக்கும் பல சலுகைகள் கூட அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த ஒரு முன் அறிவிப்பும் அவர்களுக்கு அளிக்கப்படாமல் திடீர் என்று வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

கடைநிலை ஊழியர்களான அவர்களின் வாழ்க்கையில் இதுபோன்ற அவல நிலை ஏற்படக் கூடிய வகையில், மதுரை மாநகராட்சி அதிகாரிகள், ஒரு விபரீத விளையாட்டாகக் கருதி, இவர்களை பணி நீக்கம் செய்திருக்கிறார்கள் என்பதை மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்ற நிரந்தரமான ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்தும் கூட, திடீர் என்று எந்த வித முன் அறிவிப்பும் இல்லாமல் வேலை நீக்கம் செய்ததை, மிக முக்கியமாக ஒன்றாக அரசாங்கம் கருதி, அவர்களை மீண்டும் வேலைக்கு அழைத்து, வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன் வரவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இது 176 தொழிலாளிகளின் எதிர்கால வாழ்க்கையை பாதிக்கின்ற பிரச்சினையாக இருப்பதால்; இது குறித்து முழுமையாக விவாதிக்கிற வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



**டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே: நமது அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால் அதேபோன்று நண்பர் ரமணி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் கொண்டு வந்த பிரச்சினை குறித்து, தொழிலாளர்கள் பிரச்சினையை நேற்றைக்கே மானியத்தில் பேசியிருக்கவேண்டும். இப்போது இங்கே விவாதிப்பதற்கு இல்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கிறீர்கள். நான் நண்பர் நெடுமாறன் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறுக்கிட விரும்பவில்லை, அதை மறுக்கவும் இல்லை. ஆனால், கம்யூனிஸ்ட் நண்பர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, தொழிலாளர்களின் பிரச்சினை-தொழிலாளர் மானியத்தில் நேற்றைக்கே பேசியிருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, இப்போது இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை மட்டும் எந்த நிலையில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் நேற்று அந்த மானியத்தில் கலந்து கொண்டு பேசவில்லை, ஆனால் திரு. கருப்பையா அவர்களும் திரு. ரமணி அவர்களும் நேற்று பேசியிருக்கிறார்கள், இதே சப்ஜக்ட் பற்றி.

**டாக்டர் மு. கருணாநிதி:** இதே பிரச்சினை பற்றி திரு. ரகுமான்கான் அவர்களும் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய மானியம். இது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்களும் விழாக்களும் நிறைந்த தென் பாண்டிய மண்டலத்தின் தலைநகராக விளங்குகின்ற, தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகிய மதுரை நகரில், என்றைக்கும் ஒளியோடு இருக்கிற அந்த நகரின் சில வீடுகள் இன்று ஒளியிழந்து காணப்படுகின்றன என்ற வருந்தத்தக்க சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னதுபோல் மதுரை மாநகராட்சியில் இருக்கிற மின்சாரப் பிரிவில் ஏறத்தாழ 170-க்கு அதிகமான பேர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கே பணியாற்றியிருப்பவர்கள் 1—3—1982 அன்று திடீரென்று பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் கிடையாது. வழக்கம்போல் இந்த மாதம் முதல் தேதி அன்று காலை

யில் வேலைக்கு வந்தவர்களிடம் இந்த இடிபோன்ற செய்தியினை, அவர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற உத்தரவு அவர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. ஏதோ சாதாரண பெட்டிக்கடையில் வேலை செய்பவர்களை நீக்குவதைப் போல் 170-க்கு அதிகமான இந்தப் பணியாளர்கள் மதுரை மாநகராட்சியின் மின்திட்டப் பிரிவிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களை நீக்கியது மட்டுமல்ல, மேலும் 60-க்கு அதிகமான பேர்களை, மின்சாரப் பிரிவில் பணியாற்றுகிறவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது. மாநகராட்சியில் பணியாற்றுகிற இவர்கள் அரசாங்க அல்லது மாநகராட்சி பணி கிடைத்து விட்ட காரணத்தால் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தையும் பெருக்கியிருக்கிற இந்த மகிழ்ச்சியான சூழ் நிலையில் திடீரென்று அவர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது உண்மையில் வருந்தத்தக்க ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, மதுரை மாநகராட்சி மின் திட்டத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இன்னும் அதே வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாகரீகம், வசதிகள், தேவைகள் இவை பெருகி வரும் இந்தக் காலத்தில் மின்சாரத் தேவையும் அதிகமாக இருப்பதால் பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்து பணியாற்றிவருபவர்களின் வேலைப்பளு இன்று அதிகமாக ஆகியிருக்கிறது. எனவே உலகத் தமிழ் மாநாட்டின்போது இந்த 170 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அமைச்சர் அவர்கள் தமது பதிலில் சொல்வார்கள், உலகத் தமிழ்நாட்டின் முக்கியத்துவத்தை கருதி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டோம் என்று. அதற்கான பதிலை நான் இப்போதே சொல்லிவிடுகிறேன். உலகத் தமிழ் மாநாடு முடிந்து ஒரு ஆண்டு ஆன பிறகும்கூட அவர்கள் பணி தேவைப்பட்டது. ஒரு ஆண்டுகாலமாக அவர்கள் பணியில் வைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்லமுடியும். இந்த 170க்கும் அதிகமான பேர்களுக்கு போதுமான பணி இருந்து கொண்டிருக்கிறது என்பதால்தான அவர்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். இன்றையதினம் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்குள்ள பொது மக்களிடையே ஒரு பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது. டிசம்பர் மாதத்தில் கூட அந்தப் பிரச்சினை அங்கே விவாதத்திற்கு வந்தபோது அனைத்துத் தொழிற் சங்கங்களும்—அங்குள்ள மேயர் அவர்களும், மாநகராட்சி தனி அதிகாரி அவர்களும் அப்போது அவர்கள் பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள், நிச்சயமாக அவர்கள் பணி தேவைப்படும் என்ற உறுதிகூட சொல்லியிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது, நான் தங்கள் மூலம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ



தெல்லாம் இப்படி பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை உடனடியாக வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும்—அவர்களுக்கு போதுமான பணி அங்கே காத்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர்கள் திறமையாக பணியாற்றுவார்கள் என்றும்—பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் முன்பு இருந்தது போல் அந்த உயர்ந்த பதவிகளை கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லி பணி நீக்கம் செய்யப்பட்டவர்களின் குடும்பங்களிடையே ஒரு பதட்ட நிலை இருப்பதால் அது குறித்து பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நேற்று தொழிலாளர் நலத் துறை மானியத்தின்மீது பேசுகையில் இப்பிரச்சினை குறித்து பேசிய நேரத்தில் நான் குறிப்பிட்டதை இங்கே வாசிக்க விரும்புகிறேன். '' மதுரை மாநகராட்சி மின்சாரப் பிரிவில் 176 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எந்தக் காரணமும் இல்லை. 1979-லே நியமிக்கப்பட்டவர்கள், இரண்டாண்டு காலத்திற்கும் மேலே பதவியிலே இருந்திருக்கிறார்கள். நீங்கள் ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கவில்லை ; காரணம் சொல்லவில்லை. அது மட்டுமல்ல. 75 தொழிலாளர்களை பதவி நீக்கம் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் மாடல் எம்ப்ளாயர்—ஆக முன்மாதிரியாக இருக்க வேண்டும். '' ஆனால் அரசினுடைய நேரடிப் பார்வையின் கீழ் உள்ள மாநகராட்சியில் கூட இந்த முறைகள் பின்பற்றப்படவில்லை.

(முற்பகல் 10.40)

வேலையில் இருப்பவர்கள் திடீரென்று நீக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்வதாக இருந்தால் இங்கே 480 நாட்கள் சர்வீசிலே இருந்தால் போதும், அப்படி தொடர்ந்து இருப்பவர்கள் பர்மனென்ட் ஆக்கப்பட்ட வேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருக்கிறது. இவர்கள் 480 நாட்களுக்கு மேலாக, தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் நாடோடி மன்னன் சினிமாப் படத்திலே வருகின்ற ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதல் காட்சிக்கு நான் வருகிறேன். அதிலே ஒரு அறிவிப்புப் பலகை கையிலே இருக்கிறது. அதிலே ஒன்று சோறு போடு அல்லது வேலை கொடு என்றிருக்கும்............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்று பேசியதைப் பார்த்து படிக்க வேண்டாம். எப்படி அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று பேசுங்கள்.

திரு. அ. ரஹுமான்கான் : ஆக, நாடோடி மன்னன் கதையில் வரும், ஒன்று சோறு போடு அல்லது வேலை கொடு என்ற கொள்கை நிறைவேற்றப்படுகின்றதா என்று சொல்லுங்கள். புதிதாக வேலை கொடுக்க வேண்டுமென்பதுகூட அல்ல. ஏற்கெனவே வேலையில் இருக்கக்கூடிய ஏழை எளிய தொழிலாளர்கள், இதை நம்பி திருமணம் செய்து கொண்டு, வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிருப்பவர்கள், இன்றைக்கு எவ்வித காரணமும் இல்லாமல், ஓர்க் லோட் அதிகமாக இருந்தால் உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வேலைக்கு நியமனம் செய்கிறோம் என்று உத்தரவிலே குறிப்பிடாமல், இன்றைக்கு திடீரென்று அவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறீர்கள். அவர்களை தெருவில் நிறுத்துவது, அவர்களுடைய குடும்பம் இன்றைக்கு சிரமப்படுவது, தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையாக இருக்கிறது, குறைந்தபட்சம், நாடோடி மன்னன் கொள்கைகூட கடைப்பிடிக்கப்படவில்லை. ஆகவே, இது தொழிலாளர்களுடைய முக்கியமான பிரச்சினை. அவர்களைப் பாதுகாக்க வேண்டிய இந்த அரசாங்கம் இப்படிச் செய்திருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்துவிரிவாகவிவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே, இந்த அவையை ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கு மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மாநகராட்சியிலே வேலை செய்கின்ற இந்த நண்பர்களைப் பொறுத்த வரையிலும், 1979 ஜனவரியில் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள். அப்படி எடுக்கப்பட்ட இந்த ஆட்களிலே 175க்கு மேற்பட்டவர்களை எந்தவிதமான காரணமும் சொல்லாதது மாத்திரமல்ல, இன்னும் சொல்ல வேண்டுமானால், ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்து, அவர்களிடம் பதில் கேட்கப்படவில்லை. அப்படி என்று சொன்னால், அவர்கள் திடீரென்று வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு 75 பேர்களே, ஏற்கெனவே செய்யப்படுகின்ற வேலையிலிருந்து கீழே பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கான காரணமும் சொல்லப்படவில்லை. இன்னும் வேடிக்கை என்னவென்றால், ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நேற்று பேசும்போதுகூட சொன்னார்கள். 480 நாட்கள் இரண்டு ஆண்டுகளில் வேலை செய்தால், அவர்கள் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டுமென்





பது அந்தச் சட்டம், இது 1-1-1982 முதல் அமுலுக்கு கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டசட்டத் டத்தை, அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற நகராட்சி மன்றமே நிறைவேற்ற வில்லை என்று சொன்னால், நாங்கள் இதை எங்கே போய் சொல்வது என்பது புரியவில்லை. இரண் டாவது, கிராமத்திலே சொல்வார்கள்—மங்கை சூதகமானால், கங்கையிலே போய் நீராடலாம். ஆனால் கங்கையே சூதகமானா மானால் எங்கே போய் நீராடுவது என்று. அதைப்போல் அரசாங்கம் போடுகின்ற சட்டத்தை, அரசாங்கமே நிறைவேற்ற வில்லை என்று சொன்னால், எங்கே போய் கேட்பது அந்த நிலையிலே இது பற்றி விரிவாக விவாதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையிலே ஏற் கெனவே எங்களுக்குக் கிடைத்த தகவல், இரண்டாவது காலமாக இதிலே பணியாற்றும் தொழிலாளர்கள் சட்டப்படி பதிவு செய்யப் பட வேண்டுமென்று, சி.ஐ.டி.யு. சங்கத்தில் சேர்ந்து தங்கள் கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள். சட்டப்படி தங்களுக்கு எல்லா உரிமைகளும் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இந்த இரண்டு ஆண்டு காலம் முடிந்து விட்டது. பதிவு பூர்த்தியாவதற்குள் சீக்கிரம் அவர்களை வெளியே அனுப்ப வேண்டும் என்பதாலும், அவர்கள் சி.ஐ.டி.யு. சங்கத்தில் சேர்ந்தால், அவர்கள் பழிவாங்கப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இரண் டாவது, என்ன வேடிக்கை என்று சொன்னால், அவர்களுக்குப் பிறகு வேலைக்கு எடுத்த 45 நபர்கள் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 'லாஸ்ட் கம், பர்ஸ்ட் கோ' என்ற முறை இருக்கிறது. அதாவது கடைசியிலே வந்தவர்கள், முத லிலே போக வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அப்படி முறைப்படி போக வேண்டும் என்றிருக்கிறது. அதுவும் மீறப் பட்டுள்ளது. ஆகவே இப்படிப்பட்ட சட்ட விரோதமான செயல் கள் நடந்து இருப்பதை குறித்தும், பாதிக்கப்பட்ட தொழிலாளர் கள் மீண்டும் வேலை பெற வேண்டும் என்ற அவசியம் இருப்பதன் காரணமாகவும் இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் 1981 சனவரித் திங்களில் நடை பெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மின் ஒளி அமைப்பு, தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளுக்காக மதுரை மாநகராட்சி மொத்தமாக ரூ. 37 லட்சம் செலவிட முடிவு செய்தது. இப் பணிகளை குறுகிய கால அளவில் முடிப்பதற்காக தற்காலிகமாக சில புதிய பதவிகளை ஆறு மாதங்களுக்கு தோற்று விக்க அனுமதிக்குமாறு மதுரை மாநகராட்சி அரசை கேட்டுக்

கொண்டது. இக் கோரிக்கையை அரசு ஆய்வு செய்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஆணை எண். 1699, நாள் 23—10—1979ல் கீழ்க்கண்ட புதிய பதவிகளை தோற்றுவிக்க ஆறு மாத காலத்திற்கு மட்டும் அனுமதி அளித்து ஆணையிட்டது:—

| | | |
|---|---|---|
| 1. | உதவி கோட்டப் பொறியாளர் | 1 |
| 2. | இளநிலை உதவி மின்பொறியாளர் | 4 |
| 3. | இளநிலை உதவியாளர் | 2 |
| 4. | பதிவு எழுத்தர் | 4 |
| 5. | லைன் இன்ஸ்பெக்டர் | 4 |
| 6. | லைன்மேன் | 12 |
| 7. | ஹெல்பர் | 16 |
| 8. | தினக்கூலி | 224 |
| 9. | அலுவலக உதவி புரிபவர் | 1 |

ஆறு மாதங்கள் முடிந்த பின்னரும், மதுரை மாநகராட்சி இப்பதவி களைக் கலைக்காமல் மீண்டும் 31—3—1981 வரை தொடர்ந்து நீடிக்க அரசை அனுமதி வேண்டியது. அரசு இக்கோரிக்கையை ஏற்காமல் உடனடியாக கலைத்து விடுமாறும், கலைத்துவிடும் தேதி வரை இப்பதவிகளை நீடிக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆணை எண். 965, நாள் 9—5—1981ல் உத்தரவிட்டது. இந்த ஆணை கிடைத்தவுடன் எல்லா தற்காலிக பதவிகளையும் கலைத்து இருக்க வேண்டும். ஆனால் மதுரை மாநகராட்சி அரசின் ஆணைப்படி செயற்படாமல் வேறு பணிகளுக்கென இப்பணியாளர் களைத் தொடர்ந்து நீடிக்க அரசினை மீண்டும் அணுகியது. அரசு இக்கோரிக்கையை நன்கு ஆய்வு செய்தது. இப்பதவிகள் குறுகிய ஆறு மாத காலத்திற்கே அரசு அனுமதித்தது. உலக தமிழ் மாநாடு முடிந்த பின்னரும் இப்பதவிகளை நீடிக்க அரசு விரும்பவில்லை. ஆகையால் கடந்த 1981ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் நாள் இப் பதவி ளை உடனே கலைத்துவிடுமாறு ஆணையிட்டது. வேறு பணிகளுக்கு பணியாளர் தேவையிருப்பின் புதிய செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு மதுரை மாநகராட்சியின் ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மதுரை மாநகராட்சி அரசின் ஆணையை ஏற்றுக்கொண்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 268 பணியிடங்களை 1—3—1982 முதல் கலைத்து விட்டது. இதன் விளைவாகவும் வேறுபணி யிடங்கள் இல்லாத காரணத்தாலும் மதுரை மின்திட்டத்திலுள்ள 70 பணியாளர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். மேலும் உலகத் தமிழ் மாநாட்டிற்கெனத் தாற்காலிகமாக அமர்த்தப்பட்ட 176 தினக்கூலி தொழிலாளர்களும் 1—3—1982 முதல் பணியிழந் தனர். இவர்கள் எல்லோரையும் 28—2—1982 வரை பதவியில் நீடித்தமைக்கு பின்னேற்பு கோரி மதுரை மாநகராட்சி அரசிற்கு கோரிக்கை வைத்துள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.



குறிப்பாக, முன்னறிவிப்பு கொடுக்காமல் பணியாளர்கள் எல் லாம்பதவி நீக்கம் செய்யப்பட்டதாக சொன்னார்கள். அது சரி யல்ல, காரணம் ஏற்கனவே பல தடவை அரசினுடைய சார்பிலே மாநகராட்சிக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. உடனடியாக கலைத்து விட வேண்டுமென்றும், பணியிலேயிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அலுவலர்கள் விபரீத விளையாட்டாக கருதிக்கொண்டு செய்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. அப்படிப்பட்ட நிலை இல்லை. குறிப்பாக நாடோடி மன்னன் கதையை சொல்லி, அந்த கதையில் சோறு போடு அல்லது வேலை கொடு என்று புரட்சித் தலைவர் சொன் தாக தெரிவித்தார்கள். இந்த அரசை பொறுத்தவரையில் சோறு போட வேண்டும் வேலை கொடுக்க வேண்டும் என்கிற திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. எல்லா படங் களிலும் வருகிற காட்சிகளை வைத்தே ஒரு அரசாங்கம் நடக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா என்பது தெரியவில்லை. அப்படி விரும்பினால் திரும்பி பார் என்ற திரைப் படத்தை மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டும். திரும்பிப்பார் யார் யாருக்கு, என்னென்ன புத்திமதிகளை சொல்லியது என்பதை யும் மாண்புமிகு உறுப்பினர் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே பழையவற்றை திரும்பிப் பார்த்தால் நம்முடைய கண்களுக்கு முன்னாலே பல்வேறு காட்சிகள் தென்படுகின்றன.

குறிப்பாக இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் எல்லோருக் கும் வேலை கொடுக்க வேண்டும், யாரும் பணியிலே இருந்து நீக்கப்படக்கூடாது என்கிற கருத்தை தான் நாங்கள் கொண்டிருக் கிறோம். ஆறு மாத காலத்திற்கு மட்டுமே எடுக்கப்பட்டவர்கள் தான் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையை அதற்காக ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை குறிப்பிட்டு நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குபின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்துஇத்தீர்மானம் குறித்து விவாதிக்கத்தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## (6) அறிக்கை அளித்தல்.

### துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 11—2—1982ஆம் தேதியன்று 141ஆம் எண் வினாவின் எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி 107(—)இன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11—2—1982 ஆம் நாள் சட்டமன்ற வினா எண் புதியது 141; பழைய எண் 11150க்குப் பதில் அளிக்கையில் திரு. செ. செம்மலை அவர்கள் எழுப்பிய துணை வினாவிற்கு நான் கீழ்க்கண்டவாறு பதிலளித்தேன். '' தலைவலர் அவர்களே, கேரள அரசு அப்படிச் சொல்லியதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. கேரள அரசோடு போட்ட ஒப்பந்தம் பிப்ரவரி 11ஆம் தேதி—11—2—1982—அதாவது இன்றோடு முடிகிறது என்று கருதுகிறேன். ஆனாலும் அந்த மாநிலம் உபரி மாநிலமாக இருப்பதால் தொடர்ந்து அவர்கள் தருவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே மீண்டும் ஒப்பந்தத்தைப் புதிப்பிப்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும் ''. மேற்கூறியதற்குப்பதிலாககீழ்க்கண்டவாறு என்னுடைய பதிலைத் திருத்திக் கொள்ள விழைகிறேன் :

'' தலைவர் அவர்களே, கேரள அரசு அப்படிச் சொல்லியதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. கேரள அரசோடு போட்ட ஒப்பந்தம் 11—2—1983ஆம் தேதியன்று முடிகிறது. ஆனால் இரண்டு மாநிலங்களும் விருப்பப்பட்டால் 2 ஆண்டுகளுக்கு அதாவது 11—2—1982க்குப் பின்னர் மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் மறுபரிசீலனை செய்யலாம். ஆனாலும் அந்த மாநிலம் உபரி மாநிலமாக இருப்பதால் தொடர்ந்து மின்சாரம் தருவார்கள் என்று கருதுகிறேன். ஒப்பந்தம் முடிவுறும் தருணத்தில் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்பெறும்



## (7) கவன ஈர்ப்புகள்

### (அ) கிழக்குக் கடற்கறைசாலை பணியினை முடிப்பது.

*திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, '' சேது சமுத்திரம் திட்டத்திற்கு முன்னோடியாக உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை வேலைகளை முடிக்க வேண்டிய அவசியம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

திட்டமிடப்பட்டுள்ள சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக்கடற்கரைச் சாலை செங்கை, தென்னாற்காடு, தஞ்சை, முகவை, நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களின் வழியாகச் செல்லும். இச்சாலை வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு தரத்தை உடைய வெவ்வேறு பெயர்களைக் கொண்ட சாலைகளைக் கொண்டு அமைந்துள்ளது. 773·20 கி.மீ. நீளமுள்ள இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. மேற்கூறிய இச்சாலையை ஒரு வழிச் சாலையாக மேம்படுத்த ரூ. 52·00 கோடி ஆகும் என்றும் இரு வழிச் சாலையாக மேம்படுத்த ரூ. 80·00 கோடி ஆகும் என்றும் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2. இச்சாலையினை ஒரே சீராக அமைக்கவும் தேசிய நெடுஞ்சாலையின் தரத்தில் அமையாத இடங்களை அத்தரத்திற்கு கொண்டு வரும் பணிகளும் இச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் அமையும் முக்கிய அம்சங்களாகும். இத்திட்டத்தில் தேவையான இடங்களில் பாலங்கள் கட்டுவதற்கும், தற்போதுள்ள சிறிய பாலங்கள் மற்றும் குறுகிய பாலங்களைத் திருத்தி கட்டுவதற்குமான திட்டமும் அடைங்கியுள்ளன. தேவையான இடங்களில் புறச்சாலைகள் அமைப்பதற்கும் இத்திட்டத்தில் வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

3. மேற்கூறிய மேம்பாட்டிற்கு அதிகமான அளவில் தொகை தேவைப்படுவதால் நிதிபற்றாக்குறையை முன்னிட்டு இதை மாநில வருவாயிலிருந்துமுழுமையாக ஏற்றுச் செய்ய இயலாது. எனவே, இது விஷயத்தில் மத்திய அரசின் உதவியினைக் கோருவது மிகவும் அவசியமாகிறது. மத்திய அரசின் திட்டங்களான, தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம்படுத்துதல், போர்ப் பாதுகாப்பு சாலை வளர்ச்சித் திட்டம் ஆகிய ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள திட்டமிட்டு பல தருணங்களில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

4. கிழக்குக் கடற்கரைச் சாலையின் முக்கியத்துவத்தைக் கருதி பொருளாதார பன் மாநில திட்டத்தின்கீழ் நான்காவது திட்ட காலத்தில் ரூ. 401·20 இலட்சம் செலவில் 38 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் கிழக்கு கடற்கரைச் சாலையின் முக்கியத்துவத்தையும் அது செயலாக்கப்பட வேண்டியதன் அவசரத்தையும் விளக்கி கிழக்கு கடற்கரைச் சாலையை, தேசிய நெடுஞ்சாலை தரத்திற்கு மேம்படுத்த, ஒரு வழி தடத்திற்கு ரூ. 52·00 கோடியும், இருவழி தடத்திற்கு ரூ. 80·00 கோடியும் செலவாகும். இப்பணிக்கு அனுமதி வழங்கும்படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டது. இப்பணிக்கு அனுமதி வழங்க தற்போது இயலாவிட்டாலும் இப்பணியை ஆறாம் ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ளும்படி இந்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது. ஆனால், மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காமல், இது பொருளாதார மற்றும் பன் மாநில திட்டத்தின்கீழ் படிப்படியாக எடுத்துக் கொள்ளும் வகையில் பரிந்துரை செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளது. இதன்படி ரூ. 4·00 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்திற்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் சாலை மேம்பாட்டுக் பணிக்கும், இராமநாதபுரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் சில முக்கிய பாலங்கள் கட்டுவதற்கும் பன் மாநில முக்கியத்துவ திட்டத்தின்கீழ் மேற்கொள்ள இம்மாநில அரசால் அனுப்பப்பட்ட செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ப. நெடுமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவர அறிக்கையில் சுமார் 4 கோடியே ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அந்த சாலைக்கு 38 பாலங்கள் நம்முடைய மாநிலஅரசால் கட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாலங்களை இணைக்கின்ற சாலை போடப்படாவிட்டால், அந்தப் பாலங்கள் வீணாகும், இதுவரை, அதற்காக செலவழிக்கப்பட்ட சுமார் 4 கோடி ரூபாயும் வீணாகும். ஆகவே அந்தச் சாலையை உடனடியாக போடவேண்டுமென்று மத்திய அரசை மீண்டும் நம்முடைய அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரையோர சாலை மிகவும் முக்கியமான சாலை என்பதைப் பற்றியும் ஏற்கெனவே 4-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசின் நிதி உதவிக்காக பொருளாதாரப் பன் மாநிலத்திட்டத்தின் அடிப்படையிலே 4 கோடியே 1 லட்சத்து 20 ஆயிரம் கொடுக்கப்பட்டு 38 பால வேலைகள் முடிவடைந்து இருக்கின்றன. அதற்குப் பிறகு இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு உயர்த்த வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டோம். அதை ஒரு வழிச் சாலையாக அமைத்தால 52 கோடி ஆகும் என்றும் இருவழிச் சாலையாக அமைத்தால் 80 கோடி ஆகும் என்றும் மதிப்பீடு செய்து மத்திய அரசுக்கு அனுப்பி ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயாவது அதைச் சேர்க்கவேண்டுமென்று சொன்னோம். அதற்குக் காரணம் அந்தச் சாலை இருந்தால் போர்க் காலங்களிலே அது மிக முக்கியமான சாலையாக இருக்கும், போர்ப் பாதுகாப்பு வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலாவது ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்பிவேண்டிக் கேட்டுக்கொண்டும் கூட அவர்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கவில்லை. இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி ஏற்கெனவே அமைக்கப்பட்ட பாலங்கள் அப்படியே இருக்கின்றன. இதை முடிக்காவிட்டால் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்ட வேலைகள்கூட பயனற்றுப் போய்விடும் என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களைச் சந்தித்துப் பேச இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே நானும் சென்று நேரடியாகக் கேட்டு அந்தவேலையில்முக்கியத்துவத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அதற்குரிய எவ்வளவு பணம் தேவையோ அதில் இந்த ஆண்டு பத்து கோடியோ, 15 கோடியோ கொடுத்தாலும் கூட அதற்குரிய வேலைகளைத் தொடங்கத் தயாராக இருக்கிறோம் அத்தகைய நிலைமைகளை உத்தேசித்து நேரடியாகப் பேசவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இதற்காக அமைச்சரவர்கள் டெல்லிக்குச் சென்று எப்படியும் இந்தத் திட்டத்திற்காக ஒரு பகுதி பணத்தையாவது பெறுவதாக உறுதி கூறினார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் அறிவித்த அறிக்கையிலே மத்திய அரசு இதைப் போர்ப் பாதுகாப்புச் சாலைத் திட்டத்தின் கீழே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியும்கூட அவர்கள் எடுக்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்தியாவிற்கு அண்மையிலே திரிகோணமலையில் அமெரிக்கத் தளம் வரவிருக்கிறது. அப்படி அமெரிக்கத் தளம் அமைக்கப்படும் நேரத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையின் முக்கியத்துவம் என்பது யுத்த அடிப்படையிலே அதன் முக்கியத்துவம் அதிகமாகிறது. இரண்டாவதாக, சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளும், தமிழக அரசும் சேர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த சேது சமுத்திரத் திட்டம் . எடுக்கப்படுவதற்கு இந்தச் சாலை மிகவும் அவசியமானது. மூன்றாவதாக, அண்மையிலே காவிரிப் படுகையிலே பெட்ரோலிய எண்ணெய் கிடைக்கிறது என்பது

உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான வேலை ஆரம்பமாகின்ற இந்தத் தருணத்தில் இந்தச் சாலையின் அவசியம் இன்னும் அதிகமாக உணரப்படுகிறது. ஆகவே, திரிகோணமலையில் அமெரிக்கத் தளம் சேது சமுத்திரத் திட்டம், காவிரிப் படுகையில் பெட்ரோலிய எண்ணெய் ஆகிய இந்த மூன்று முக்கியமான காரணங்களையொட்டி இந்தச் சாலையை போர்ப் பாதுகாப்புச் சாலையாக மத்திய அரசு கருதி இதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அருமை அண்ணன் திரு. நெடுமாறன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல இந்த முக்கியத்துவத்தையெல்லாம் ஏற்கனவே எடுத்துக் கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறோம். ஆனாலும், சமீபத்தில்கூட அப்படிப்பட்ட போர் அபாயங்கள் இந்திய நாட்டை பக்கத்திலே அடிக்கடி அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதை இந்தியப் பிரதமர் அவர்களும் கூட எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இதையும்கூட மனத்தில் வைத்துக்கொண்டு இந்தக் கருத்தையும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி இது பக்கத்தில ஐந்தாறு மாவட்டங்களை இணைக்கின்ற சாலையாக, முக்கியமான கடற்கரை ஓரச் சாலையாக இருப்பதால் போர்காலத்தில் பயனுடையதாக இருக்கும் என்ற காரணத்தைக் காட்டி உடனடியாக அவர்களுக்கு எடுத்துச் சொலவதன் மூலம் இவைகள் கிடைக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த முடியும்; கண்டிப்பாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொளகிறேன்.

## (ஆ) உயிர் காக்கும் மருந்துகளைப் பாதுகாப்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன் ஆகியோர் ஓரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. செ. சிவசாமி :** துணைத் தலைவர் அவர்களே, '' உயிர் காக்கும் மருந்துகள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து அனுப்பப் பெறும் நேரங்களில் குளிர்ப்பதன பெட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்படாததால் அவை சக்தியிழந்திருப்பது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை,**

மருந்துகள் பெரும்பாலும் கீழே குறிப்பிட்டுள்ள நோக்குடன் உபயோகப்படுத்தப்படுகின்றன :—

(அ) நோய் வராமல் தடுக்க.
(ஆ) சிகிச்சை செய்ய.
(இ) நோய்கள் உள்ளனவா என்று கண்டுபிடிக்க.

இவற்றில் Vaccine மற்றும் sera என்ற வகையான மருந்துகள் வைக்க குளிர்சாதன பெட்டிகள் தேவை. இவை பெரும்பாலும் நோய்களைத் தடுக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

Hormones என்ற மருந்து கலவைகள் சிகிச்சைக்காகவே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் இரு வகைகள் உண்டு.

(1) இயற்கையான பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுபவை. (உதாரணம் Insulation, Pi u tary Ex ract).
(2) செயற்கையானவை. (உதாரணம் Frednisl.1e Betame.hasone போன்றவை.

இவற்றில் முதலில் கூறப்பட்ட மருந்துகளும் விசேஷ குளிர்சாதன வசதிகள் தேவை. இரண்டாவது வகை மருந்துகளுக்கு அத்தகைய வசதிகள் தேவை இல்லை.

ஆகையால் குளிர்ச்சாதன வசதிகள் இருக்கும் மருந்துகள் (சிகிச்சைக்காகவோ அல்லது நோயைக் தடுப்பதற்காகவோ இருப்பினும்) மிகக் குறைவானவையே, நோய்களைக் தடுக்க உபயோகப்படும் Vacci e மற்றும் sera வகையான மருந்துகள் அரசு மருத்துவ நிலையங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. Insulin Pituitary, Extrac Oral Polio Vaccine போன்ற மருந்துகள் கடைகள் மூலமாக விநியோகிக்கப்பட்டுவரும் மருந்துகளில் ஒரு சில.

மருந்து கடைகளுக்கு, மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின்கீழ் விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குளிர் சாதன வசதிகள் வைப்பது உரிமங்கள் வழங்குவதற்கு ஒரு நிபந்தனையாகும். இவ்வித வசதியற்ற மருந்துக்கடைகள் இத்தகைய மருந்துகளை விற்பதை அனுமதிப்பதில்லை. இதுபோன்ற நிபந்தனைகள் மருந்து தயாரிப்பவர்களுக்கும் உண்டு. மருந்து தயாரிக்கும் இடத்திலும், விற்கும் இடத்

திலும் போதுமான குளிர் சாதன வசதிகள் இருப்பது இதிலிருந்து அறியலாம். மருந்து தயாரிப்பாளரிடமிருந்து மருந்துகள் விற்பவர்களுக்கு மருந்துகள், லாரிகள், ரயில்கள், மற்றும் தபால்கள் மூலமாக அனுப்பப்பட்டு வருகின்றன. அவ்வமயம் குளிர்சாதன வசதிகள் மருந்துகளுக்கு ஏற்படுத்துவது பெரிய பிரச்சினையாகும. ஏனெனில் இவை மட்டும் தனியாக அனுப்பப்படுவதில்லை. மற்ற மருந்துகளுடன் அனுப்பப்படுகின்றன. இப்பிரச்சனைசய மருந்து அலோசனைக் குழு (Drugs Cons ltative Commi ee) விசாரித்தது. நாட்டில் போதிய வசதியில்லாத காரணத்தினால் இப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியவில்லை. Polio Vaccine மருந்து மட்டும் விமானம் மூலம் குளிர்சாதன வசதியுடன் விசேஷ பெட்டிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. விமான நிலையத்திலிருந்து விற்கப்படும் இடத்திற்கும் இம்மாதிரி வசதியுடன் அனுப்பப்பட்டு வருகிறது.

இந் நிலையில் மருந்து தயாரிப்பாளர்களும், மருந்து வியாபாரிகளும், மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென கோரி வருகின்றனர். போதுமான குளிர்சாதன வசதிகள் இல்லாததால், மருந்தின் தரம் குறைவாக இருப்பதாக புகார் ஏதும் வரவில்லை. உஷ்ணத்தினால் பாதிக்கப்படும் மருந்துகள் தயாரிக்கும் காலத்திலிருந்து காலாவதி நாள் ஆகும் வரை வீரியம் குறையாமலிருக்க மருந்து தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் போது கூடுதலான மருந்துகளை சேர்த்து வீரியம் நிலைத்திருக்க செய்கிறார்கள்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, உயிர் காக்கும் மருந்துகள் மனிதனுக்கு மிக மிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இப்படிப்பட்ட மருந்துகள் உற்பத்தியாகின்ற இடத்திலிருந்து உபயோகப்படுத்தும் இடத்திற்கு அனுப்பப்படும் நேரங்களில் இரயிலிலும், லாரிகளிலும் ஆகிய இதுபோன்ற வாகனங்களில் அனுப்பப்படுகின்றன. உயிர் காக்கும் மருந்துகள் குளிர்ப்பதன பெட்டிகளில் வைக்கப்பட்டால்தான் அந்த மருந்துகள் தங்களுடைய உயிரைக் காத்துக்கொள்ள முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் உயிர் காக்கும் மருந்துகளே கூட உயிரிழந்து போகும் நிலைமை இருக்கிறது. லாரிகளிலும், இரயில்களின் மூலமாகவும் அனுப்பப்படும் நேரத்தில் உயிர் காக்கும் மருந்துகள் உயிரற்றுப் போகின்றன. இதனால் உயிரைக் காக்க வேண்டிய அந்த மருந்துகள் தங்கள் உயிரை இழந்து, மற்றவர்களின் உயிரையும் குடிக்கின்ற நிலை ஏற்படுகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எனவே குளிர்ப்பதனப் பெட்டிகளை லாரிகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும், ஆஸ்பத்திரிகளிலும் மற்றும் இது போன்ற இடங்களிலும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





(முற்பகல். 11.00)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை வந்ததற்குக் காரணமே நான் ஒரு இடத்தில் அப்படி செய்ய வேண்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லி, பத்திரிகையிலே வந்ததற்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு அது வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்த அளவிற்கு அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கிறது என்பதற்கு அடையாளமாகச் சொல்லியிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, ஓரல் போலியோ வாக்சின் பிளேனிலே கொண்டு வரும்போது, டிரை ஐஸ் என்று—சாதாரண ஐஸைவிட டெம்பரச்சேர் லோவாக இருக்கக்கூடிய—கார்பைன் டை ஆக்ஸைட் மூலமாக, தெர்மாகோல் அப்பரேட்டஸ்ஸில் வைத்து,—அதில் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலே செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, டிரக் இன்ஸ்பெக்டர்களை அனுப்பி ஒவ்வொரு கடையிலும் பரிசோதனை செய்து, சாம்பிளை எடுத்து, பொட்டன்சி இருக்கிறதா என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மிக எச்சரிக்கையாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற இந்த அறிக்கையிலே சில குறிப்பிட்ட மருந்துகளைப் பொறுத்தமட்டிலே குளிர்சாதனம் இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, குளிர்சாதனம் கடையிலே கூட வைக்கப்பட்டிருந்தால் தான் அவர்களுக்கு லைசன்ஸ் கொடுப்போம் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால், கடையிலே, லைசன்ஸ் பெறுவதற்கு முன்னாலே வைக்கிறார்கள். அதற்குப் பிறகு சரியாக அமுல் நடத்துவதில்லை. அது அமுல் நடத்தப்படுகிறதா என்பதை நம்முடைய டிரக் இன்ஸ்பெக்டர்கள் அடிக்கடி கண்காணித்து, அமுல்படுத்தாத கடைகள் மீது ஏதாவது கேஸ்கள் போடப்படுகிறதா ? அப்படிப்பட்ட கேஸ்கள் எத்தனை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன ? அடிக்கடி கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொன்னதோடு மட்டுமல்லாமல், இப்படி ஒரு கேள்வி வரும்—எத்தனை இடங்களில் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறதென்று ஒரு உறுப்பினர் கேட்டால் பதில் சொல்ல வேண்டுமென்று, மூன்று நாட்களுக்கு முன்னால், துறையினரைக் கேட்டு, கோப்பு வந்ததன் அடிப்படையிலே சில விவரங்களையெல்லாம் கூட வாங்கி வைத்திருக்கிறேன்.

உதாரணத்திற்காக, சொல்கிறேன்.

Ms. Chemical Labora ories Limited, Madras-86.

என்கிற நிறுவனத்திடமிருந்து சாம்பிள்ஸ் டிரா செய்திருக்கிறோம்.

Institute of Child Health and Hospital for Children, Egmore,

என்ற இடத்திலிருந்து சாம்பிள்ஸ் டிரா செய்திருக்கிறோம்.

Messrs. Spencer and Company Limited,

என்ற இடத்திலிருந்து சாம்பிள்ஸ் டிரா செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல,

M. Jayanthilal, Proprietor, Emson Products, No. 115, Nyniappan Naicken Street, Madras-3, M. VimalchandRathod, Proprietor, Messrs. Vimalchand Pharma,

என்ற இடங்களிலிருந்து டிரா செய்திருக்கிறோம். அதிலே, இரண்டு இடங்களிலே, Convicted under No. 898/80 dated, 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் ஃபைன் ரூபாய் 200 போடப்பட்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இதை நான் சொல்கிறேன்.

## (8) வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு

### கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,90,78,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவர் அவர்களே, செய்யார் வட்டத்தில், மாமண்டூரில், மேல்நிலைப் பள்ளிக்காக, அங்குள்ள மக்கள் பணம் கட்டியும், அதுபற்றி அரசு ஆரம்பிக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 2,90,78,59,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."



திரு. உ. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ்., போன்ற உயர்பதவிக்கான போட்டிகளில் தமிழ் மாநிலப் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் மிகக் குறைவான அளவில் தேர்வு பெறுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 2,90,78,59,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, அனைத்து ஆசிரியர்களுக்கும் நேரடியாகவே சம்பளம் பட்டுவாடா செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைமொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 2,90,78,59,000இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவகர்ளே, கிராமப் பகுதிகளிலுள்ள பள்ளிகளின் தரத்தை நகரப்பகுதிகளின் அளவுக்கு உயர்த்துவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 2,90,78,59,000இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு* வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் அதோடு வைக்கப்பட்ட திருத்தங்களையும் நான் படித்ததாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைத்திருக்கக்கூடிய இந்த கல்வி மானியக் கோரிக்கையின்

*1103—1174 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

[திரு. துரைமுருகன்] [1982 மார்ச் 16

மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக்காக இந்த ஆண்டு இதனுடைய குறிப்பிலே சொல்லி இருப்பதைப்போல 1982-83ஆம் ஆண்டுக்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். கல்வி என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அவைகளுக்கு செலவு செய்வதை யாரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். ஒரு நாட்டினுடைய மதிப்பை அந்த நாட்டிலே ஓடுகிற ஆறுகளைக் கொண்டோ, இருக்கின்ற மலையைக் கொண்டோ யாரும் கணக்கிட மாட்டார்கள். அந்த நாட்டில் எவ்வளவு பேர்கள் கல்வியறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்து, அந்த நாடு முன்னேறி இருக்கிறதா, பின்னேறி இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அந்த வகையிலே யாரும் கல்விக்கு செலவு செய்வதை குறையாக சொல்ல மாட்டார்கள். ஆனால், செலவு செய்கின்ற பணம் உள்ளபடியே கல்வியின் தரத்தை உயர்த்தி இருக்கிறதா, கல்வியின் மேம்பாட்டுக்காக செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கூர்ந்துபார்க்கிறபோது, நாங்கள் எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறோம், எவ்வளவு செலவிட்டுக் கட்டடங்கள் திறந்திருக்கிறோம் எவ்வளவு பள்ளிகளை திறந்திருக்கிறோம் பாரீர் என்று வேகமாகப் பேசினாலும் எந்த இலட்சியமும் அதை அடைந்திருப்பதாகத் தெரியவில்லை.

இங்கே முதலிலே உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகள் என்பதற்கெல்லாம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள்—ஒரு ஸ்டாட்டிஸ்ட்டிகல் ஆபீசருக்குத் தான் புரியும்—அவ்வளவு புள்ளி விவரங்களை நுழைத்து இருக்கிறார்கள். சுலபத்திலே யாரும் அன்டர்ஸ்டான்ட் பண்ண முடியாத அளவுக்கு இருக்கிறது.

நான் முதலாவதாக கல்வித் துறையோடு இணைந்த தமிழ் வளர்ச்சி பிரிவைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். அதை இந்த மானியக் கோரிக்கையிலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக்காக ஒரு அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இதிலே தமிழ்நாட்டு வரலாறு என்று ஒன்று, தமிழ்நாட்டு வரலாற்றில் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும் என்று இந்த மானியக் கோரிக்கையிலே 52-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.



1982 மார்ச் 16] [திரு. துரை முருகன்]

தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்கு ஒருங்கிணைந்த ஒரு வரலாறு தேவை. ஒவ்வொரு வரலாற்றுப் பேராசிரியரும் ஒவ்வொரு மாதிரியாக எழுதியிருக்கிறார்கள். அதை வெளிநாட்டுக்காரர்கள் படித்தால் அவர்களுக்கு குழப்பம்தான் மிஞ்சும். எனவே தமிழ்நாட்டிலே இருக்கின்ற தமிழாய்ந்த பெருமக்கள், வரலாற்றுப் பெருமை படைத்தவர்கள், இவர்களை எல்லாம் வைத்து ஒரு வல்லுநர் குழு நாங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எங்கள் தலைவரால் உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அந்த வல்லுநர் குழுவில் டாக்டர் மு. வ. போன்ற பெரியவர்கள் எல்லாம் இருந்தார்கள். அப்போது தொல் பழங்கலைப் பற்றிய ஒரு நூல் முதலில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வெளியிடப்பட்டது.

அதற்குப் பிறகு 1975 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்ற கழக ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு 1976, 1977, 1978 1979, 1980, 1981, 1982 ஆண்டுகள் வந்து போயின. அதிலே ஓராண்டு ஜனாதிபதி ஆட்சி போனால் கிட்டத்தட்ட 5½ ஆண்டு காலம் நீங்கள் ஆட்சியிலே இருந்திருக்கிறீர்கள். ஆனால் அந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே வெளியிடப்பட்ட தொல்பழங்காலம் என்ற நூலைத் தவிர, இது வரையில் இரண்டாவது ஒரு வெளியீடு ஏன் வரவில்லை. நாங்கள் தான் சொல்லி இருக்கிறோமே துரைமுருகா, விரைவில் வெளியிடப்படும் என்று சொல்லி இருக்கிறோமே, விரைவில் என்றால் உங்களுக்குப் புரியவில்லையா, கூடிய சீக்கிரம் வரலாம் என்று சொல்லலாம் இந்த ஆண்டு இப்படி சொல்லி இருந்ததால் எனக்கு மாறுபட்ட கருத்தில் இல்லை. ஆனால் எப்போது. இதோ நான் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கை 1979 ஆண்டின் மானியக் கோரிக்கை. அதிலே இந்த தமிழ்நாட்டு வரலாறு பற்றி நம்முடைய அமைச்சர் என்ன சொல்லி இருக்கிறார். 'தமிழ்நாட்டு வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் எழுதி முடிக்கப்பெற்றுள்ளன. தொன்பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. சங்ககாலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும். ஆகவே 1979 மானியக் கோரிக்கைகளில் சங்ககாலத்தைப் பற்றி ஒரு நூல் விரைவில் வெளியிடப்படும். 1979-லே தமிழ்நாட்டு வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுதுவதற்காக வல்லுநர் குழு அமைக்கப்படும் என்று பீடிகை எல்லாம் சொல்லி கடைசியிலே விரைவில் வரும் சங்ககாலம் பற்றிய நூல் என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11.10)

1979-லே நூல் வெளிவந்திருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் அதுபற்றிய குறிப்பு கூட குறைந்துபோய், இரண்டு வரியில் கொண்டுவந்து '' விரைவில் வெளியிடப்படும் '' என்று குறிப்

பிட்டிருக்கிறீர்கள். 1979-லேயும் 'விரைவில் வெளியிடப்படும்' என்று இருக்கிறது. இந்த ஆண்டிலும் 'விரைவில் வெளியிடப்படும்' என்று இருக்கிறது. அதனுடைய வாசகத்திலே கூட மாற்றம் இல்லை. 'தொல் பழங்காலத்தைப்பற்றிய முதல் தொகுதி ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும். இது 1979 ஆம் ஆண்டு அறிக்கையில் சொல்லப்பட்ட வாசகம். 'தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி வெளியிடபட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும் ''. இது இந்த ஆண்டு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற வாசகம். ஆக, இந்த வாசகங்களிலே கூட மாற்றம் இல்லை. அப்படியே இருக்கிறது. இப்படி 1979-லேயிருந்து செய்து கொண்டிருக்கிறீர்களே தவிர அந்த வரலாற்று நூலை வெளியிட இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

அதைப்போன்று 'செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி' பற்றிய குறிப்பும் இருக்கிறது. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் மடலத்தின் முதல்பகுதி-மொழியியலறிஞர் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள தொகுத்தது விரைவில் வெளியிடப்படும் என்று இவ்வாணடு அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். எங்களுடைய கழக ஆட்சியிலே, கலைஞர் அவர்கள் காலத்திலே தமிழிலும் திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞான தேவநேயப் பாவணர் அவர்களைத் தலைவராகப் போட்டு அந்தப் பனி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் பாவாணர் அவர்கள் இறந்துவிட்டார்கள்.

ஆனால் நான் உங்களைக் கேட்கிறேன். 1979-லே கூட ''தமிழிலும் திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலில் திட்ட இயக்குநராவார். இந்த அகரமுதலியைத் தொகுக்கும் பனியில அவர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். அவ்வகரமுதலி முழு விரிவு வாய்ந்ததாகவும் திட்டவட்டமானதாகவும் அமையும். அது 13 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதியின் முதல் பகுதி விரைவில் வெளியிடப்படும் '' என்று சொல்லியிருக்கிறீர்கள். எப்பொது சொன்னீர்கள்? 1979-லே சொன்னீர்கள். இப்போது 1982. இந்த மானியக் கோரிக்கையில் என்ன சொல்கிறீர்கள்? '' முதல் பகுதியின் முதல் தொகுதி விரைவில் வெளியிடப்படும். என்றுதான் சொல்லியிருக்கிறீர்கள. ஈயடிச்சான் காப்பி அப்படியே இருக்கிறது. இதிலிருந்து பார்க்கிறபோது என்ன தெரிகிறது என்றால், நீங்கள் தமிழ் வளர்ச்சிக்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இதற்கு அடுத்து வருகிறது மொழி பெயர்ப்புப் பணி, பிற மொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின்கீழ் இதுவரை மொழிபெயர்ப்பு நூலகள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன் இதுவரையில் என்னென்ன புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அந்த விரம் தரப்பட வேண்டாமா? எங்களுக்கு கிடைத்திருக்கிற தகவல் சரியானதா அல்லது அரசு கொடுக்கிற தகவல் சரியானதா என்று நாங்கள் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டாமா? அதற்காகவாவது தமிழ் மொழியில் இன்னின்ன நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன; தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்கள் இன்ன்ன்ன, இன்னின்ன மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளவை என்ற விபரத்தை நம்முடைய அமைச்சா அவர்கள் இங்கே தெரிவித்திருக்க வேண்டாமா?

எங்களுக்கு வருகிற செய்தி, இங்கிருந்து கல்கத்தாவுக்கு ஒருவரை அனுப்புகிறார்கள். கல்கத்தாவில போய் உட்கார்ந்து என்ன செய்கிறார்? கலீல்கிப்ரான் கவிதையை மொழிபெயர்க்கிறார். கலீல்கிப்ரான் கவிதை ஏற்கெனவே பலமுறை தமிழில் வெளிவந்துவிட்டது. போனபிறகு அவருக்கு என்ன வேலை; ஏற்கெனவே செய்த வேலையைத்தான் செத்திருக்கிறாரே தவிர வேறு என்ன செய்திருக்கிறார்? எனவே நான் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கு வருகிற செய்தி உண்மையா அல்லது நீங்கள் கொடுத்திருக்கிற செய்தி உண்மையா என்று இரண்டையும் ஒப்பு நோக்குதற்கு இந்த மொழிபெயர்ப்ப நூல்களை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

இன்னொன்று. மதுரையில் நடந்த 5 ஆவது உலகத்தமிழ் மாநாடு பற்றிய அறிவிப்பு. உலகத்தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு இருப்பதாகவும், 1982—83 ஆம் ஆண்டில் இதற்கு 105 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். உலகத் தமிழ்ச் சங்கம் எதற்காக ஆரம்பிக்கிறீர்கள் என்று நான் கேட்கவில்லை. அதனுடைய லட்சியங்கள் என்ன? என்று சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ''இந்த நிறுவனத்தில் தமிழ்மொழி வல்லுநர்கள் பணிபுரிவார்கள்.'' ஏற்கெனவே இருக்கிற தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் அறிஞர்கள் பணிபுரியவில்லையா என்றால் அதிலே 19 ஆராய்ச்சி அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதிநேர மாணவர்கள் ஆகியோர் ஆராய்ச்சு பணியில் ஈடுபட்டுள்ளனர் வெளிநாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் தமிழ் கற்றுக்கொடுத்திருக்கிறது. இதை எது செய்கிறது? உலகத்தமிழ் ஆராய்ச்சி

நிறுவனம் செய்கிறது. ஆனால் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செய்கிற இதே பணியைத்தான் இந்த உலகத் தமிழ்ச் சங்கம் செய்கிறதா என்று நான் கேட்கிறேன்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இந்த நிறுவனத்திலே தமிழ் மொழி வல்லுநர்கள பணி புரிவார்கள். உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழி வல்லுநர் பணி புரியாமல் தெலுங்கு மொழி வல்லுநரா பணிபுரிவார் ?

இதற்கு ஒரு வரியை எழுதி இதற்கு 108 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறீர்கள். கேட்டால் என்ன செய்வது, அறிவித்து விட்டார் முதலமைச்சர் மாநாட்டிலே ஆகவே துவக்கி இருக்கிறோம் என்று சொல்லலாம். காரணம் அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஆகவே உங்களுக்கு இதிலே எல்லாம் நாட்டமே கிடையாது. தமிழ் வளர்ந்திருக்கின்றதா. தமிழ்மொழி வளர்ச்சி அடைந்திருக்கின்றதா ? அகர முதலி வந்திருக்கிறதா ? தொல் பழங்காலம் வெளியிடப்பட்டிருக்கின்றதா ? என்பதில் அக்கறை இல்லை. அந்த மொழியின் மேன்மை உங்களுக்கு புரிகின்றதா என்றால் அது இல்லை. ஏன் இல்லை? தமிழ் ஆய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும் என்றான் பாரதிதாசன். ஆகவே அங்கேயே வராதபோது இதெல்லாம் எங்கே வரப்போகிறது? இந்தத் துறையிலேயும் கூடசலுகைகளைக் கொடுக்க நீங்கள் முற்படுகிறீர்கள். நான் அமைச்சர் அவர்களின்கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பாலிடெக்னிக் ஒன்று துவக்க வேண்டும் என்றால் அதற்கு சர்க்கார் சில விதிமுறைகள் வைத்து இருக்கின்றது. அப்படி ஒரு பாலிடெக்னிக்—

Polytechnic for Women at Thanjavur by the Periyar Maniammai Educational Society G.O. dated 13th May 1980.

1980–81 ஆம் ஆண்டு அன்னை மணியம்மையினுடைய எஜுகேஷனல் சொசைட்டி மூலமாக தஞ்சையிலே பெண்களுக்கான ஒரு பாலிடெக்னிக் துவக்கவேண்டும் என்று சர்க்காரிடத்திலே விண்ணப்பிக்கிறார்கள். விண்ணப்பித்த பிறகு சர்க்கார் அதற்கு அனுமதி தருகின்றது எப்படி? 13—5—1980 அன்று ஒரு ஜி.ஓ. போடுகிறீர்கள். அதுலே எப்படி? டிராக்டா ரெக்கமென்டேஷன் எல்லாம் பற்றிக் குறிப்பிட்டு கடைசியிலே ஒன்று போடுகிறார்கள். அதிலே இன்னின்ன நியதிகளை நீங்கள் புல்பில் பண்ணவேண்டும். என்று கூறப்படுகிறது. அதிலே ஒன்று.

The total non-recurring cost, capital cost of opening of the Private Polytechnic should be shared within the private management and the Government in the ratio of about 66 per cent i.e. 2/3 and about 33 per cent i.e. 1/3 respectively . . .





ஆகவே தனியார் ஒரு பாலிடெக்னிக் துவக்க வேண்டும் என்றால் அதிலே ஒரு கண்டிஷன் இருக்கின்றது. ரெக்கரிங் காஸ்ட் என்ற கேப்பிட்டல் காஸ்ட் அதாவது கட்டிடங்கள் கட்டுவது, மற்றவை இவைகளுக்கெல்லாம் சர்க்கார் எவ்வளவு தரும் என்றும் அந்த நிறுவனத்தை துவக்குகின்றவர்கள் எவ்வளவு தரவேண்டும் என்பதற்காக ஒரு கண்டிஷன் போடுகிறார்கள் கிறார்கள். அதாவது பிரைவேட் மேனேஜ்மெண்டாக இருப்பவர்கள் 66 சதவீதம் தரவேண்டும். அதாவது மூன்றில் இரண்டு பகுதி தரவேண்டும். அரசாங்கம் மூன்றில் ஒரு பகுதி தர வேண்டும். அது எவ்வளவு என்றால் 33 சதவீதம். நானே கூட ஒரு நிறுவனத்தைத் துவக்குகிறேன் என்றால் அதற்கு நான் 66 சதவீதம் கொடுக்க வேண்டும். அப்படி இதனை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். பெரியம்மை எஜுகேஷனல் . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே பெரியார் நூற்றாண்டு விழா, மணியம்மை எஜுகேஷனல் சொசைட்டி.

திரு. துரைமுருகன் : சரி, பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி 5 இலட்சம் ஒதுக்க வேண்டும். 50 ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே போன்று குமாரபாளையத்திலே எஸ்.எஸ். எம். சுப்பிர மணியம் என்பவருடைய தந்தையாரோ, உறவினரோ எனக்குத் தெரியாது. எஸ். எஸ். மாரிச் செட்டியார் ட்ரஸ்ட் என்ற ஒரு டிரஸ்டை உருவாக்குகிறார்கள். அவர் என்ன சொல்கிறார்? குமாரபாளையத்திலே இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி ஆரம் பிக்க வேண்டும் என்று அவர் கேட்கிறார். அவர் கேட்ட தற்கு சர்க்கார் அனுமதி அளிக்கின்றது. குமாரபாளையத்திலே எஸ்.எஸ்.எம் சுப்பிரமணியம் எஸ்.எஸ். மாரிச்செட்டியார் என்ற பெயரிலே அங்கே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கின்ற காரணத்தால் நீங்கள் 66 சதவீதம் கேப்பிட்டல் காஸ்ட் தரவேண்டும். என்றும் சர்க்கார் 33 சதவீதம் தரும் என்றும் சர்க்கார் ஒரு ஆர்டர் போடுகின்றது. 17–7–1979 ஆம் தேதி அந்த ஜி.ஓ. எண் 1236. அதற்குப் பிறகு என்ன நடக்கின்றது எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்திலே என்னென்ன எழுதப்பட்டிருக்கின்றது என்ற அந்த வாசகங்கள் இந்த ஜி.ஓ.விலே இல்லை. இந்த ஜி.ஓ. வினுடைய எண்.1233 தேதி 5–7–80.

Government—Technical Education—Institution of Textile Technology at Kumarapalayam, Salem Border—Share of expenditure between the Management and Government—revised orders—Issued.

ஆகவே போட்ட ஆர்டரை மறுபரிசிலனை செய்து ஆர்டர் போடுகிறீர்கள். அது என்ன ஆர்டர்? ஒரு தனியார் பாலிடெக்னிக் ஆரம்பித்தால் அவர்கள் 66 சதவீதம் தர வேண்டும், சர்க்கார் 33 சதவீதம் தரவேண்டும் டோட்டல் காஸ்டிலே என்ற அந்த நிலையை மாற்றுகிறார்கள். எப்படி? ஏற்கனவே போட்ட ஆர்டரை மாற்றி மாடிஃபிகேஷன் ஆர்டர் போடுகிறீர்கள்.

" . . . . in the modification of the order, the Government direct that the total non-recurring cost on opening of the Institute should be shared between the Management, S. S. Mari Chettyar Trust, Kumarapalayam and the Government in the ratio of 25 per cent and 75 per cent respectively as a Special case . . . "

(முற்பகல் 11.20)

அதை எப்படி கொடுக்கவேண்டும் என்று கேட்டால், மாரி செட்டியார் 25 சதவீதம் கேப்பிடல் காஸ்டுக்காக கொடுக்கவேண்டும், சர்க்கார் 75 சதவீதம் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். என்ன காரணம் என்ன அதற்குச் சர்க்கார் சொல்கிறது.

"The pattern of sharing of non-recurring expenditure ordered in this case is a concession extended to S. S. Mari Chetty Trust, Kumarapalayam for special reasons and should under no circumstances be taken as a precedent.

ஆகவே, எஸ்.எஸ்.எம் மாரி செட்டியாருடைய அந்த டிரஸ்டுக்கு மட்டும்தான் ஸ்பெஷல் கன்செஷனாக தருகிறோம். ஆனால் அதே மாதிரி யாராவது வேறு ஒருவர் அப்ளை பண்ணி அதைப்போலவே மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டால் தருவீர்களா? மாட்டீர்களா ஏன் தர மாட்டீர்கள்? இந்தச் சலுகை ஃப்ரீசிடென்டாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படமாட்டது. ஒரே ஒரு கன்சஷன் தான். இந்த சர்க்கார் தருகிற ஒரே ஒரு சலுகை சிறப்புத் தள்ளுபடி என்று சோவாப்டெக்சில் போடுகிறார்களே அது போன்று ஒரே ஒரு சிறப்புச் சலுகை இது ஒன்றுதான். சரியான சலுகை எஸ்.எஸ்.எம்.சுப்பிர-மணியத்திற்கு தரப்பட்டிருக்கிறது. அப்படி என்ன செய்-தார் இவர்? என்ன ரீசன்? என்ன சர்க்கம்ஸ்டென்ஸ்? உப்புச் சத்தியாகிரகத்திலே உதைபட்டு, ஆகஸ்ட் சத்தியா-கிரகத்திலே அடி வாங்கி, எரவாடா சிறையில் இருந்து வாடி, தண்டியாத்திரை நடத்தி, தடியடி வாங்கியவர்களா? அல்லது திராவிட பாரம்பரியத்திலே மும்மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்றவர்களா? எதற்காக அவருக்கு இந்தச் சலுகை? ஒரு பெரிய தேசத் தியாகியாக இருந்தால்கூட



அவருக்கு சர்க்கார் 75 சதவீதம் கொடுத்து, அவர்களிடத்திலே 25 சதவீதம் வாங்குவதில் நியாயம் இருக்கலாம். ஆனால் ஒரு தனி மனிதனுக்காக இந்த சர்க்கார் சலுகை காட்ட வேண்டிய அவசியம் என்ன? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ...ங்கே இல்லை? இருந்தால் சொல்வார்கள் தம்பி உனக்குத் தெரி யாது எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியத்தை, நாமெல்லாம் ஒன்றாக இருந்த காலத்தில் (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுபவர்கள் இந்த அவையிலே இல்லை. அவையிலே இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது என்ற மரபு இருக்கிறது. அந்த மரபை ஒட்டிப் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எரவாடு சிறைக்கு மாண்பு மிகு உறுப்பினர் அவர்களும் போகவில்லை, நானும் போக-வில்லை. (குறுக்கீடு) மும்மொழிப் போராட்டத்தில் நானும் தான் சிறை சென்றிருக்கிறேன். ஆகவே, தகுந்த விளக்கத்தைப் ப... விரும்பினால் பிரச்சனையைப் பற்றி மட்டும் பேசலாம். விளக்கம் பெறவேண்டும் என்கிற உணர்வோடு பிரச்சனைகளை சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. சி. கோபால் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். உயர்நிலைக் கல்வித் திட்டம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிய கருத்துக்களை நான் இந்த நேரத்திலே இம்மன்றத்தில் கவனத்திற்கு கொண்டு வரு வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

நம்முடைய தானைத் தலைவர் பேரறிஞர் அவர்கள் அண்ணா ஒரு முறை ஜப்பானுக்குச் சென்றுவிட்டு, சென்னைக்கு வந்த நேரத் திலே சொன்னார்கள். "நான் ஜப்பான் நாட்டுக்கு போனேன். அங்கே எரிமலைகள் பூகம்பங்கள் எல்லாம் சர்வ சாதாரணம் என் றாலும் ஜப்பான் நாட்டு மக்கள் வளம் மிக்க வாழ்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பான் நாட்டு மக்கள் உலகத்திலேயே பொருளாதார வளர்ச்சியிலே முற்போக்காக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு உள்ள அறிவும் ஆர்வமும் ஆற்ற லும் தான்" என்று சொன்னார்கள்.

மக்களுடைய அறிவும் ஆற்றலும் பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சியை வளர்க்க வேண்டிய நிலைமையும் வேண்டும் என்று சொன்னால் மக்களுக்கு தேவைப்படுகிற ஒரு நல்ல ஆயுதம், வலிமை மிக்க ஆயுதம் கல்வித் துறை தான் என்று பேரறிஞர் அண்ணா அவர்கலே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டை ஒரு ஜப்பான் நாடாகவோ அல்லது ஜெர்மனி நாடாகவோ நான் பார்க்க வேண்டும் என்று எண்ணம் எனக்கு இருக்கிறது என்கிற வார்த்தையை பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அதை நினைவிலே வைத்துக் கொண்டுதான், உயர் நிலைக்கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். தொழிற்கல்விகள் எல்லாம் உயர்நிலைப்பள்ளியின் அளவிலேயே கொண்டு வரவேண்டும் என்ற ஒரு நல்ல திட்டத்தை, ஒரு மறுமலர்ச்சியை, கல்வித் துறையில் ஏற்படுத்தியது எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் திட்டத்திற்காக, அவர் கடைய எண்ணங்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற இன்றைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் கல்வியில் மறுமலர்ச்சி வேண்டும் என்ற நோக்கத்திற்காக செலவு செய்யப்படுகிற ஒரு துறையாக கல்வித் துறை இருந்தாலும் கூட 1982—83ம் ஆண்டில் மொத்த வருவாய்த் தொகையில் ஏறக்குறைய கல்விக்காக என்று 318 கோடி ரூபாய் செலவு செய்ய இந்த அரசு இருக்கிறது. கல்விக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்காக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எங்கள் ஆட்சியில் கல்வித்துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவதெல்லாம், 1973—74ஆம் ஆண்டில், 1974—75-ஆம் ஆண்டில் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தவர்கள் யார் என்பது தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

1973—74ஆம் ஆண்டில் கல்விக்காக ஒதுக்கிய தொகை 160 கோடி ரூபாயாகும். 1974—75ல் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 140 கோடி. ஆனால் இன்றைய அரசு ஒரு நாட்டின் வளம் பற்றி மற்றவர்களுக்குத் தெரிய வேண்டுமென்று சொன்னால், முக்கியமாக கல்வித் துறையில் முன்னேற்றம்அடையவேண்டும், நம் சமுதாயம் நல்ல முறையில் உருவாக வேண்டுமென்ற எண்ணத்தோடு, புரட்சித் தலைவர் அவர்கள் இருப்பதால் இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற இந்த அரசு 318 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது, எப்படிபட்ட நிலைமைகள் இருந்தாலும் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள நான பெருமைப்படுகிறேன்.





அதே போல் 1982—83ஆம் ஆண்டு 1000 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகளை, நடுநிலைப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் சேர்த்து 150 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளை நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்த்து 500 தமிழ் ஆசிரியர்கள் பதவிகளையும், உயர்நிலைப்பள்ளிகளில் 50 தலைமை ஆசிரியர்கள் பதவிகளையும், உயர்நிலைப் பள்ளிகளில் 300 ஆசிரியப் பதவிகளையும் ஏற்படுத்த இருக்கின்றன. நடுநிலை பள்ளிகளில் உள்ள தொழில் பகுதிகளைக் கூட முக்கிய பகுதிகளாக உயர்த்தக்கூடிய ஒரு நிலைமை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. ஆக, நாட்டின் வளத்தைப் பெருக்கிட, எதிர்காலத்தில் எதிர்கால சமுதாயத்தை மேம்படுத்த, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு அரசாக இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல பெருமைப்படுகிறேன்.

நம் தமிழ்நாட்டின் பண்பாட்டின்படி தமிழகத்தில் உள்ள பெரியவர்கள் எல்லாம் பேசுவது உண்டு. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்று சொல்வார்கள். இளமையில் கல் என்று சொல்வார்கள். அந்தக் கருத்திற்கு, அந்தப் பண்பாட்டு, தத்துவத்திற்கு ஒரு உணர்வு கொடுக்க வேண்டும், அதற்கு உயிர் ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்தில்தான், தாய் மடியில் வைத்து தாலாட்டுவதுபோல், இளம் சிறார்களுக்கு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் உண்மை நிலையை உணர்ந்து இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் முதன்முறையாக 1982—83ல் இளம் சிறார்களுக்காக அவர்களின் கல்விக்கென பெரிய அளவில் ஒரு திட்டத்தை வகுத்து அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்க இருக்கிறது என்று சொல்கிற போது இதைப் பாராட்டாதவர்கள் பாராட்டுவதற்கு பக்குவம் பெறாதவர்கள், பாராட்டுகிற மனப்பான்மை வராதவர்கள், நிச்சயமாக தமிழர்களாக இருக்க முடியாது என்பதைமட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1973—74ம் ஆண்டில் 6 வயது முதல் 11 வயது வரை உள்ள மாணவர்கள், பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்களின் நின்றுவிட்டவர்கள் எண்ணிக்கை 51 சதவீதம் ஆக இருந்தது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை 1980—81ல் அப்படி 5 வயது முதல் 11 வயது வரை பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறவர்களில் நின்றுவிடுகிறவர்களை பள்ளிக்குக் கொண்டு வந்து நாளைய சமுதாயம் நல்ல முறையில் உருவாக அவர்களும் வாழ வேண்டும் இந்தச் சமுதாயமும் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கல்வி புகட்ட 51 சதவீதம் ஆக இருந்ததை 30 சதவீதம் ஆகக் குறைந்துக் கொண்டு வந்திருக்கிற பெருமை இன்றுள்ள தமிழக அரசைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. கோபால்] [1982 மார்ச் 16

(முற்பகல் 11.30)

அது மட்டுமல்ல. சுதந்திரமடைந்த இந்த இந்திய நாட்டிலே, 60 கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த முதாயத்திலே ஏறக்குறைய 40 கோடி மக்கள் எழுத்தறிவு இல்லாமல இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். என்கிற எண்ணிக்கை இருக்கிறது, ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கும் இன்று, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் இரண்டாவது என்கின்ற நிலைமையில், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி தந்திருக்கின்ற நிலைமையை இப்போது ஆண்டு கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அரசுதான் செய்திருக்கிறது என்பதை தான் இந்த நேரத்திலே இங்கே தெரிவித்து கொள்வதிலே பெருமையடைகிறேன்.

விஞ்ஞான அறிவு வளர்ந்தால்தான், ஒரு நாடு முன்னேற முடியும என்ற கருத்தை இங்கே யாரும் மறுக்க முடியாது. அந்த வகையிலேதான் 1982—83ஆம் ஆண்டிலே 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் அமைப்பதற்காக ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியிலும் ஒரு ஆய்வுக்கூடத்தை, அமைக்கவேண்டு மென்று, ஒவ்வொன்றுக்கும் ரூ. 80.000 ஒதுக்கப்பட்டு, விஞ்ஞான அறிவு வளரவேண்டும், உயர்நிலை மட்டத்திலேயே மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவைப் புகட்ட வேண்டுமென்ற ஒரு தத்துவத்தின் அடிப்படையிலே இந்த நிதியை ஒதுக்கியிருப்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும்.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றி வந்த ஆசிரியர்கள், அடிப்படை ஊழியர்கள் ஆகியோர் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பெற்றார்கள். அதற்காக இந்த தமிழக அரசை உண்மையிலேயே நல்ல உள்ளம் கொண்டவர்கள் பாராட்டுவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்கள் அனைத்தும், அந்தப் பொறுப்பு முழுவதும் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஒரு உதவி கல்வி அலுவலர் என்ற வகையிலே 366 உதவி கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கல்வித் துறை முன்னேற வேண்டும் என்கிற முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி, மாணவர்கள் அறிவை நல்லமுறையிலே பக்குவப்படுத்த வேண்டும், அப்படி இயங்கி வரவேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தோடு. உருவாக்கி, இந்த முயற்சி செய்யப்பட்டாலும், அப்படி ஒரு நிலையை ஏற்படுத்தியிருந்தாலும்கூட, இன்றைய நிலைமையிலே சில இடங்களிலே முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிலே, அந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளரிடம் இந்தப் பொறுப்பு விடப்பட்டிருந்ததால், அப்போது அந்த



1982 மார்ச் 16] [திரு. சி. கோபால்]

ஆணையாளர் அவர்களுக்கு வாகன வசதி கொடுக்கப்பட்டிருந்தது. அதனால், அன்றைய நிலைமையிலே ஆசிரியர்கள் எல்லாம் அந்த ஆணையாளர் திடீரென்று எப்போது வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் வரலாம் என்ற ஒரு அச்ச உணர்வைக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைய நிலைமையில், நாம் ஒரு நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்திருந்தாலும் கூட, இந்த ஆட்சிக்கு எதிராக அணியை உருவாக்கிக் கொண்டிருப்பவர்கள், அந்த அணியின் தலைவர் என்ற பெயராலே செய்வதால், இந்த கல்வி உதவி அலுவலர்களுக்கு வாகன வசதி இல்லை என்ற நிலைமையைத் தெரிந்து வைத்துக்கொண்டு, அவர் அடிக்கடி வரமாட்டார் என்பதைப் புரிந்து வைத்துக்கொண்டு இந்த அரசுக்கு எதிராக செயல்படுகின்ற ஒரு நிலைமை இருப்பதால், இந்த உதவி கல்வி அலுவலர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இன்று கல்வித் துறையிலே சில இடங்களிலே, மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் அமைதியின்மை இருக்கின்றது என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன ? எதிர் காலத்திலே, படித்து முடித்துவிட்ட பின்னால் அவர்கள் மத்தியில் இருக்கிற உணர்வுதான் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே.......

**திரு. மு. ப. முனுசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஆளுங் கட்சிக்கு ஆதரவாக இருப்பவர்களுக்குத் தான் வேண்டி தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா ? அது சரியானதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, அதைப் பற்றி கேட்கட்டும்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வித் தரத்தை வளர்ப்பதில மாணவர்கள் ஆசிரியர்களுடைய பிரிதாச்சாரத்தை ஓரளவு குறைக்க வேண்டுமென்ற கருத்தை நான் எடுத்து சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இந்த அமைதியின்மையை அடியோடு அழிக்கவேண்டுமென்று சொன்னால், கல்லூரியாக இருந்தாலும் சரி, மேல்நிலை பள்ளிகளாக இருந்தாலும் சரி உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி ஆங்காங்கு பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியவர்களிடம் ஒரு நல்ல உணர்வை. உருவாக்குகிற விதத்தில் மாதத்திற்கு ஒரு கூட்டத்தை கூட்டி நல்ல பலன் கிட்டுவதற்கு கல்வித் துறையிலே இருக்கிற அதிகாரிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் விளையாட்

டுத்துறைக்கு நல்ல முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்த ஆண்டு கூட 150 உடற் பயிற்சி ஆசிரியர்கள் எடுக்கவிருக்கிறோம் என்கிற போது பெருமை அடைகிறோம். உயர்நிலை பள்ளிகளை பொறுத்த வரையில் உடற் பயிற்சி சாதனங்களை முழுமையாக வாங்கிக் கொடுக்காத நிலை இருக்கிறது. உயர்நிலை பள்ளிகளில் விளையாட்டு கல்விக்காக 6-ம் வகுப்பிலேயிருந்து 8-ம் வகுப்பு வரையில் படிக்க மாணவர்களிடம் ரூ. 150-ஐ வசூலிக்கிறோம். 8-ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்பு வரையில் உள்ள மாணவர்களிடம் ரூ. 2 வசூலிக்கிறோம். இவற்றை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு விளையாட்டுத் துறை முன்னேற வேண்டுமென்று சொன்னால் உயர்நிலை பள்ளிகளுக்கு மானியமாக தொகை அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியை பொறுத்த வரையில் சோளிங்கர் ராணிப்பேட்டைக்கு அருகில் இருக்கிறது, தொழிற்பேட்டை இருக்கிறது. பெல் நிறுவத்தினர் துவங்குவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். டி.வி.எஸ். நிறுவனமும் தொழிற்சாலை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சோளிங்கர் என்பது வட ஆற்காடு மாவட்டத்தில் மையமாக இருக்கிறதால் ஒரு பாலிடெக்னிக்கை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு, கல்வி மானியத்தை ஆதரித்து, கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்பதைக் கூறி முடிக்கிறேன்.

**திரு. ஆர். சுந்தரமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற கல்வி மானிய கோரிக்கையில் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் கருத்துக்களை எடுத்துரைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டில் ஏழை, எளிய பிள்ளைகளும் கல்வி அறிவினை பெறவேண்டுமென்பதற்காக தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் கல்வி நிலையங்களை அமைத்த பெருமை பெருந்தலைவர் காமராஜர் அவர்களையே சாரும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அப்படிப்பட்ட பெருந்தலைவர் முதல் அமைச்சராக பணியாற்றிய இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற 1982—83 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையில் ஒதுக்கியுள்ள ரூபாய் 291 கோடி இவ்வாண்டு வருவாய் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூபாய் 1370 கோடியில் 21'3 விழுக்காடாகும். இந்த விழுக்காடு முந்தைய ஆண்டுகளை காட்டிலும் குறைவானதாகும். இப்படி ஆண்டுக்கு ஆண்டு விழுக்காடு குறைந்து கொண்டே செலவதை பார்க்கும்போது யாரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. கல்வி அமைச்சரவர்கள் அமைச்சராக ஆகியவுடன் தன்னுடைய அமைச்சக பணிகளை செய்வதில், மிகுந்த ஆர்வம் காட்டினார். ஆசிரியராக பணியாற்றி அந்த





பணியில் சிறந்து விளங்கியதன் காரணமாக இன்றைய தினம் கல்வி அமைச்சராக இருக்கின்ற அமைச்சரைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியராகப் பணியாற்றி, ஆசிரியர்களின் குறைகளை நன்கு உணர்ந்த அமைச்சரவர்கள் இன்றைய தினம் ஏன் வாய் மூடி மௌனமாக இருக்கின்றார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக பணியாற்றிய 6 பேர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் செய்த தவறு என்ன? அண்ணாமலை பல்கலைக் கழக 1928 ஆம் ஆண்டு சட்டத்தை திருத்துவதாக தமிழக அரசு 1980 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவித்தது. அந்த சட்ட திருத்தத்தை வலியுறுத்தி அண்ணாமலை பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் ஒன்று சேர்ந்து அமைதியான ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள் பற்றி இந்த மன்றத்திலும் பேசப்பட்டது. நானும் பேசியுள்ளேன். ஆனால் இதுவரையில் எந்தவிதமான சட்ட திருத்தமும் கொண்டுவரப்படவில்லை. மாறாகப் போராடிய ஆசிரியர்கள் பழிவாங்கப்படுகின்றார்கள்.

(முற்பகல் 11.40)

ஆசிரியர்கள், ஊழியர்கள் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்து பேசியபோது பல உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன. அரசரை நம்பவேண்டாம், இந்த அரசை நம்புங்கள் என்று கூறினீர்கள். ஆனால், இந்த அரசை நம்பிய ஆசிரியர்களும் ஊழியர்களும் பழிவாங்கப்படுகின்றார்கள், இந்த அரசு அந்த அரசரைப் பார்த்து பயந்து நடுங்குகின்ற காட்சியைத்தான் காண முடிகிறது. எந்த நாட்டையும் ஆளாத ஒருவருக்கு அரசர் பட்டம் கொடுத்த வெள்ளையர்கள் வெளியேறிய பிறகும்கூட அந்த அரசரைப் பார்த்து இந்த அரசு நடுங்குவதன் மர்மம் என்ன என்பது எங்களுக்குப் புரியவில்லை. ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தபோது அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்ற சேவை மனப்பான்மையோடு ஆரம்பித்தார். ஆனால் இன்றைய நிர்வாகம் அதை ஒரு வர்த்தக ஸ்தாபனமாக மாற்றிக்கொண்டு வருகிறது. பி.ஏ. பி.எஸ்.ஸி., பி. காம். போன்ற பட்ட படிப்புக்களை அறவே நீக்கிவிட்டு விட்டதன் காரணமாக அங்கே பல ஆண்டுகளாக பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களைப் பணிநீக்கம் செய்து பழி வாங்குகின்றார்கள். பட்ட படிப்பை அகற்றியதன் காரணமாக அந்தப் பகுதியில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சார்ந்த மாணவர்கள் நடைமுறை கல்வி ஆண்டினை இழந்த பரிதாபத்திற்குரியவர்களாக குறிப்பாக தெய்வபாய் தானுக் காவில் காண முடிகிறது. இந்த அவல நிலையை போக்குவதற்கு உடனடியாக அரசு தலையிட்டு வரும் கல்வி ஆண்டிலாவது

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பு தொடங்க ெழிவகை செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் மறுபடியும் பணியில் சேர்த்துக்கொள்ள இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அடுத்து மார்க் பட்டியலில் ஊழல்கள் நடைபெற்று அதன் காரணமாக பலர் கைது செய்யப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டப் படிப்பில் மாணவர்கள் சேர்க்கையில் இந்த ஆண்டு அரசு விதிமுறைகள் அனைத்தும் மீறப்பட்டு முறைகேடுகள் நடந்துள்ளன. ஆகவே பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

பல்கலைக் கழகப் பொறியியல் துறையில் சேர ஆல் இண்டியா கவுன்சில் ஆப் டெக்னிக்கல் எஜூகேஷன் நிர்ணயம் செய்த மாணவர்களின் எண்ணிக்கை 240. இந்த எண்ணிக்கையை மீறக் கூடாது என்று ஏ.ஐ.சி.டி.இ. வற்புறுத்தி உள்ளது. சென்ற ஆண்டு 240இல் இருந்து 270 ஆக அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக்கழகம் விடுத்த கோரிக்கைக்கே ஏ.ஐ.சி.டி.இ. இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆனால், இந்த ஆண்டு 346 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். சேர்க்கை இன்னும் முடிவின்றி தொடருகின்றது. இவர்களுக்கு வேண்டிய கல்வி வசதிகள் எங்கிருந்து கிடைக்கும்? அளவுக்கு மீறிய மாணவர்கள் சேர்க்கையால் பல் கலைக்கழகப் பட்டத்தில் தரம் குறையாதா? அரசு பிரதிநிதி யால் நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிக மார்க் பெற்று வெயிட்டிங் லிஸ்ட்டில் வைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் தராமல் நிர்வாகத்திற்கு வேண்டிய குறைந்த மதிப்பெண் கள் பெற்ற மாணவர்கள் மேனேஜ்மென்ட் கோட்டா என்ற பெயரில் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற் கண்ட முறைகேடான சேர்க்கையால் அரசு ஆணைப்படி தாழ்த் தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விகிதங்கள் பின்பற்றப்படவில்லை. இம்முறைக் கேட்டை உடனே அரசு பூரணமாக ஆராய்ந்து உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளியைப் பார்க்கின்ற போது இந்த அரசு தன்னுடைய தேர்தல் அறிக்கையில் பலவிதமான உறுதி மொழிகளைத் தந்திருக்கின்றது. ஆனால், இன்றைய தினம் அந்த உறுதிமொழிகளை எல்லாம் பட்டங்களைப் போல் பறக்க





விட்டிருக்கின்றார்கள். சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலத்திலே பேசுகின்ற போது இந்த அரசு ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் என்று கூறியிருக்கிறார்கள். ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் உறுதி கூறியிருந்தீர்கள். ஆனால், இதுவரை எந்தவிதமான குழுவும் அமைக்கப்படவில்லை. ஆசிரியர்களின் துயரங்கள் துடைக்கப்படவில்லை. தொடர்ந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தக் குழுவை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, தமிழகத்தில் பல உயர்நிலைப் பள்ளிகளில் தேவையான ஆசிரியர்கள் நியமிக் கப்படவில்லை. சுமார் 70 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மாணவர்களின் கல்வித்தரம் குறையாதா? ஆகையால் தேவையான ஆசிரியர்களை வருகிற கல்வியாண்டிலாவது நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீப காலங்களில் ஆசிரியர்களின் மீது விரோதமான போக்கை கடைப்பிடிக்கிறது. ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படாதபொழுது கல்வித் துறையின் கவனத்தையும் அரசின் கவனத்தையும் ஈர்ப்பதற்கு வேறு என்ன வழி இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். ஆசிரியர்களின் மாறுதல்களில் முறையான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.

பல பள்ளிகளில் பல பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப் படாத சூழ்நிலை இருக்கிறது. பல மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை. கட்டி முடிக்கப் பட்ட இடங்களிலேயும்கூட தண்ணீர் வசதி இல்லை. அங்கே தண்ணீர் வசதியை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் இளநிலை ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்து முதுநிலை ஆசிரியர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி கமிட்டிகளில் நிர்வாகிகளின் உறவினர்களே உறுப்பினர்களாக இருப்பதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். ஏனெனில், தனி நபர் வழிபாடு மாறி குடும்ப வழிபாடாக மாறி யுள்ள சூழ்நிலையைப் பார்க்க முடிகிறது. இது தவிர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்கள் ஒழுங் காகச் செலவு செய்யப்படுகிறதா என்பதை அரசு கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒழுங்காகச் செலவு செய்கின்ற பள்ளிகளுக்கு ஒருசில சலுகைகளை அரசு அளிப்பதற்கு முன் வர வேண்டும்.

பத்து ஆண்டு பணி முடித்த ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலையும், 20 ஆண்டு பணி முடித்த ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலையும் அளிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை அரசு உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மாணவர்களுக்குத் தேவையான உணவு அளிக்கப்படுவதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அமுலில் உள்ளது. குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் மாணவர்களுக்குத் தேவையான உணவை மத்திய உணவகத்திலிருந்து வேன்கள் மூலம் எடுத்துச் சென்று விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால், மூன்று ஆண்டுக் காலமாக வேன்கள் எல்லாம் பழுது பட்டு விக்கிரவாண்டி பணிமனையில் நின்று கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் மதிய உணவை மத்திய உணவகத்திலிருந்து பள்ளிகளுக்கு மாட்டு வண்டிகளின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. அதனால், முதல் நாள் மதிய உணவிற்குச் செல்ல வேண்டிய உணவு மறுநாள் மதிய உணவுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசு இதில் கவனம் செலுத்தி, உடனடியாக வேன்களைப் பழுது பார்த்து உணவு உரிய நேரத்தில் கிடைக்க வழிவகை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அச்சிட்டு வெளியிட்டுள்ள பாடப்புத்தகங்களில் திலகர், லாலா லஜபதிராய் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் இதைப் பாடத் திட்டத்திலிருந்து நீக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அரசின் இந்தப் போக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களை அவமதிப்பதாக உள்ளது. அரசின் இந்தப் போக்கு குறித்து இந்த அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன். மேலும், அரசு சாதித்ததைத்தான் சாதனைப்பட்டியல் போடுவது வழக்கம். ஆனால், இந்த அரசு நிறைவேற்றப்படாத ஆசிரியர்களுக்கான வீட்டு வசதி வாரியத்தைத் தன்னுடைய சாதனைப் பட்டியலில் குறிப்பிட்டு சாதனை புரிந்திருப்பதை இந்த அரசில்தான் பார்க்க முடிகின்றது. மற்ற மாநிலங்களைப்போல் அனைத்து ஆசிரியர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை மாற்றிக் குறிப்பாக ஆந்திர மாநிலத்தைப் போல் மாற்றி அமைக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய முகையூர் சட்டமன்றத் தொகுதி பகுதியில் குறிப்பாகத் திருக்கோவிலூரில் பெண்கள் கல்லூரி ஒன்றும், அரசு தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்திலே இன்று வரை ஆதி திராவிட மாணவர்களுக்கு சி.இ.ஓ., அன்ட் டி.இ. அலுவலகம், புத்தகம் கொடுக்கப்படவில்லை. பரீட்சைக் காலம் வந்து விட்டது. சிதம்பரம் தாலுக்காவில் புவனகிரி, திருக்கோவிலூர் உயர்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டத்தில் சிங்கம்புணரி உயர்நிலைப்பள்ளி, வடாற்காடு மாவட்டத்தில் அரக்கோணம் பள்ளிகளுக்கெல்லாம் செல்ல வேண்டிய பாடப் புத்தகங்கள் இதுவரையில் சென்றடையவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் கல்வி இயக்குனர்கள் அலுவலகத்தின் முகப்பில் அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்ற பெரியவர்களின் படங்கள் பெரியதாக மாட்டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பெரிய படங்களோடு கல்விக் கண் தந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் படம் ஒன்று மாட்டப்படாவிட்டாலும், கல்வி இயக்குநர் அலுவலகத்தின் முகப்பில் காமராஜ் சிலையை அமைத்துத் தர வேண்டுமென்று வலியுறுத்தி, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

*திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கையின்மீது எனது சில கருத்துக்களை நான் சொல்ல முன்வருகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில், கல்வியில் எடுத்துக்கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளையும் தமிழ் ஆய்வுக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் எடுக்கப் பட்டிருக்கிற சிறப்புக் கொள்கைத் திட்டங்களையும் ஏழை, எளிய மக்கள் கல்வியில் பெறத்தக்க நன்மைகளை எடுத்துக்காட்டுகிற ஒரு விளக்க உரையாகவும் இந்தக் கல்வி மானியக் கோரிக்கை உரை இருக்கிறது என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா வழியில், தந்தை பெரியார் அவர்கள் வகுத்துத் தந்த அந்தக் கொள்கை நெறியில் நடைபெறுகிற இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சி, அவர்களுடைய கொள்கையிலிருந்து இம்மி அளவும் பிசகாமல் வழிநடை போடுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில்தான் இன்றைய இந்தியாவில் இரு மொழிக் கொள்கையை கடைப்பிடிக்கிற ஒரே மாநிலம் தமிழகம் என்பதை உலகுக்குப் பறை சாற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் துரை முருகன் அவர்கள் ஏனோ மறந்து விட்டார்கள் என்பதை நான் அவருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு எவ்வளவோ பிரச்னைகள் நாட்டில் கல்வித் துறையில், பல மாநிலங்களில் எழுந்தாலும் நாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு விட்டுத் தந்த அந்த இரு மொழிக் கொள்கையைக் காக்கின்ற அந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை நான் நினைவுகூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்று நமக்கு அரசியலமைப்புச் சட்டத்திலேயே அடிப்படை உரிமைகளையும் டைரக்டிவ் பிரின்சிப்பிலில் சேர்த்து, நமக்குண்டான கடமையை 51(எ) (இ) பிரிவின்கீழ் பிரதமர் இணைத்ததற்குப் பின்னால், அதில் நம்முடைய தந்தை பெரியாருடைய பகுத்தறிவு வாதத்தை இந்த நாட்டில் பரப்புவது நமது கடமை என்ற உணர்வு கூட அதில் சுட்டிக்காட்டியிருப்பதையும் நான் நினைவுகூற விரும்புகிறேன். 51(ஏ)(இ) பிரிவில் அதைப் பிரிக்கிற பொழுது,

to promote harmon and the spirit of common brotherhood amongst all the people of India, transcending religious, linguistic and regional or sectional diversities; to renounce practices derogatory to the dignity of women;

என்று குறிப்பிடுகிற அந்த வாசகங்களில் நமது தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையை அது நினைவூட்டுவதாக இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டுதான் இன்றைய புரட்சித்தலைவருடைய ஆட்சிக் கல்விக் கொள்கையை நிலை நாட்டுவதில், பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

to develop the scientific temper. humanism and the spirit of inquiry and reform;

ஏன், எதை, எதற்காகச் செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்து, சிந்தித்து, மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதை இந்த நாட்டிற்கு எடுத்துக் கூறிய பெரியவர்களில் தந்தை பெரியார் முதலிடம் வகிக்கக்கூடியவர்கள். ஆகவே, அவர் இந்த நாட்டு மக்களிடையே எழுப்பிய அந்த விழிப்புணர்ச்சியை நாட்டில் மங்கவிடாமல் பாதுகாக்கின்ற அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசு இன்று கல்வித்துறையில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் விஞ்ஞானத் தொழில் நுட்பத்திற்கும் விஞ்ஞான ஆய்வுத் திறமைக்கும் மாணவர்களை ஊக்குவிக்கிற முறையில் தான் இன்று கல்வித்துறை அமைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அண்மையில் விஞ்ஞான வளர்ச்சிக்கும், விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகிற தொழில் நுட்பப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் நமது அரசு அதிக முக்கியத்துவம் தந்திருக்கிறது என்பதை இங்கே பார்க்கிறபொழுது நாம் உணர்கிறோம். ஆகவே, அந்த வகையில் நாட்டில் ஒரு எழுச்சியையும் மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் இந்தப் பகுத்தறிவு வாதம் உருவாக்குகிற ஒரு கொள்கை விளக்கமாகத்தான்





இன்று கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கை விளக்க உரை அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்று சமுதாயத்தின் கீழ் மட்டத்தில், அடிமட்டத்தில் இருக்கிற ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவித் தொகையும், இலவச நோட்டுப் புத்தகங்களும், அவர்களுக்கென்று மதிய உணவு—கேர் நிறுவனம் தர முன்வராத நிலையிலுங்கூட அல்லது குறைத்துவிட்ட நேரத்திலும்கூடம்—ஆகியவற்றிற்கு நமது அரசு வழி வகுத்திருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்தச் சமுதாயத்தினுடைய அடித்தளத்தில் இருக்கிற அந்த மக்கள் நல்ல தன்மையைப் பெற வேண்டும். ஆரம்ப நிலையில் உயர்நிலைப் பள்ளியைத் தாண்டுகிற மாணவர்கள், மேல்நிலைப் பள்ளியை ஒரு தொழில் கல்வியாகப் பயன்படுத்த வேண்டுமென்பதிலும் அரசு அக்கறையோடு இருக்கிறது. தொழில் கல்வி படிக்கிற அவர்கள் மேல்நிலைப் பள்ளியில் கல்வி கற்று முடித்து பின்னால் தங்களை ஒரு தொழிலைச் செய்யத் தகுதி உடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கொள்கை ரீதியாக எடுக்கப்பட்டு அந்த முடிவுகள் காரணமாகவும் மேல்நிலைப் பள்ளிகளிலும், இன்று கல்லூரிகளாக விளங்குகிற அளவுக்கு அதில் ஒரு வேகத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டு வந்தது நமது புரட்சித் தலைவர் ஆட்சி, நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கிற சிறப்பையும் முன்னேற்றத்தையும் நாம் கண்டு கொண்டு இருக்கிறோம். மேல்நிலைப் பள்ளிகளிலே ஆய்வுக் கூடங்கள், மேல் நிலைப் பள்ளிகளிலே 10,12 எம்.எஸ்.ஸி. எம்.ஏ. பட்டதாரி ஆசிரியர்கள், அந்த அளவுக்கு நூலகங்கள் ஆய்வுக் கூடங்கள் இப்படி. அத்தனையும் தரத்தக்க அளவுக்கு இன்று கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றது புரட்சித் தலைவர் அரசு என்பதை தயவுசெய்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேபோல இன்றைக்கு நர்சரி பள்ளி, பாலர் பள்ளிகளில் பொது மக்களுக்கு இருக்கக் கூடிய மோகத்தினால், அதிக செலவில் தங்களுடைய குழந்தைகளை நர்சரி பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அதைப் பார்த்து ஏழை எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு அந்தக் கல்வி அளிக்க முடியவில்லையே என்று ஏங்குகின்ற அந்த நிலையைப் போக்குகிற அளவில் சாதாரண ஏழை மக்கள் வசிக்கின்ற அந்தக் கிராமங்களிலே இருக்கின்ற பாலர் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்துகின்ற திட்டம் மக்களால் பாராட்டப்படுகின்ற திட்டம் என்பதைக்

கூறுவதில் பெருமை கொள்ளுகிறேன். அந்த அளவுக்கு அடிமட்டத்தில் இருக்கக்கூடிய இந்த கிராம மக்களுடைய தேவைகளை உணர்ந்து மேல்நிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் அவைகள் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் அதைத் தவிர கல்லூரி கல்வியின் பாடத் திட்டத்தையும், தரத்தையும் உயர்த்த வேண்டும் என்றெல்லாம் இந்த அரசு மிக வேகமாகவும், மிகச் சிறப்பாகவும் நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதையும் மாற்றுக் கருத்து உடையவர்கள் கூட ஒப்புக்கொள்வார்கள் என்று நான் எண்ணுகிறேன். இன்று பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்னால்தான் தமிழுக்கு என்று பல்கலைக் கழகமும், கோவையில் எனது மாவட்டத்தில், அருமைமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பிரதிநிதியாகக் கொண்டிருக்கிற அந்த மாவட்டத்தில் பாரதியார் பல்கலைக் கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும் ஏற்படுத்தி, அன்று கோத்தாரி கமிஷனிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற பல நடைமுறை விதிமுறைகளை அதனுடைய ரெக்கமன்டேஷன்களுக்கு ஏற்ப அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தன்மை அமைய வேண்டும் என்று இந்த அரசு முனைப்போடு இருக்கின்றது என்பதை நான் கவனப்படுத்தியாக வேண்டும்,

இந்தப் பல்கலைக்கழகங்கள் எப்படி அமைய வேண்டும், அதன்தரம் எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1947 லே சுட்டிக்காட்டிய அந்த கிரேட் வெர்ஷன் என்று சொல்கிற அந்தப் பெரிய கொள்கை விளக்கங்கள் இன்று தமிழக அரசால் நிர்வகிக்கப்படுகின்ற அந்தப் பல்கலைக் கழகங்களிலே எடுத்து ஆளுகிற முயற்சியை நமது கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருககிறார்கள்.

A university stands for humanism, for tolerance, for reason, for adventure of ideas, for research and for trust. It stands for the onward march of human race towards even higher objectives. If the university discharges its duties adequately, then it is well with the Nation and the people.

என்று அந்தப் பெருமகனார் சுட்டிக் காட்டினார்கள். அந்த உரையில் அவர் கூறியதைப்போல மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவது, இந்த நாட்டினுடைய நிலையை உயர்த்துவது, இந்தப் பல்கலைக் கழகங்களின் நிலையைப் பொறுத்திருக்கிறது என்று சுட்டிக் காட்டியதைப் போல நமக்கு வாய்த்திருக்கிற பல்கலைக் கழகங்கள், நாட்டில் மக்களுடைய தேவையை நிறைவேற்றுகிற முயற்சியை மேற் கொண்டு, நாட்டினுடைய பெரிய தேவைகள் என்ன என்பதைக் கருத்தில் கொண்டு அதற்கான ஆய்வுகளைச் செய்தால் அது மக்களுக்குப் பயன் படுகிற வகையில், என்று நமக்கு உதவுகிறதோ அன்றுதான்



அந்தப் பல்கலைக் கழகங்கள் நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காக உதவுகிற பல்கலைக் கழகங்களாக அமையும் என்பதை வலியுறுத்தி சொல்லி வருகிற நமது கல்வி அமைச்சர் அவர்கள் தமது கொள்கையை நிறைவேற்றுகிற நேரத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்கு என்றும் தவறியது இல்லை. அந்த அடிப்படையில்தான் இன்று பல்கலைக் கழகத்தை நமது நாட்டு மக்கள் நோக்குகிற நேரத்தில், மக்களுடைய எதிர் பார்ப்புகள் அங்கே இருந்து வெளிவர வேண்டும். அதனுடைய ஆராய்ச்சி மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும்.

நூறு ஆண்டுகளைத் தாண்டிவிட்ட சென்னைப் பல்கலைக் கழகம் இந்த நாட்டு மக்களுக்காக எடுத்து வைத்திருக்கிற கண்டுபிடிப்புகள் என்ன? அதனால் மக்கள் அடைகிற பயன் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்பதையும், இந்த சிந்தனையை தூண்டியது நமது அரசுதான் என்பதையும் பெருமையோடு சொல்லிக் கொள்ள விழைகிறேன். அந்த வகையில், யாருக்கும் அஞ்சாமல் எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் அடிபணியாமல் கல்வி ஸ்தாபனங்கள், கல்வியை அளிக்கும் ஒரு சுயேச்சையாக நடத்துகின்ற அந்தப் பெரும் முயற்சியிலே ஈடுபடுத்துகிற இந்த அரசை யாரும் குறை கூறும் நேரத்திலே கூட மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார்கள் என்பதை அருமை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசியதில் இருந்து நான் உணருகிறேன்.

ஆக, அந்த அளவுக்கு யாருக்கும் அஞ்சாமல், நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இரு மொழிக் கொள்கையை கடைப்பிடிக்கிறோம் என்று சொல்லுகிறபோது இந்த நாட்டுக்குத் தேவையான கல்வியை, பாரதப் பிரதமர் அவர்கள் கருத்தையும் செயல்படுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு அந்தப் பொறுப்பையும் சேர்த்து செயல்படுத்தின்ற கல்வியை பயிற்றுவிக்கும் ஒரு இயக்கமாகத்தான் இன்று தமிழ்நாட்டில் கல்வி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

இன்றைக்கு பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டிருக்கிற தனியார் கல்லூரிகளில் இருந்து எழுப்பப்படுகின்ற நிர்வாகச் சிக்கல்கள் பல இருக்கின்றன. அவை ஆசிரியர்கள் சம்பந்தமாக இருந்தாலும் அல்லது ஆசிரியர் அல்லாத கல்வி சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் பிரச்சினை என்று வருகிறபோது அதை ஆராய்ந்து பார்த்தால் அந்தக் கல்லூரி சம்பந்தப்பட்ட நிர்வாகக் குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகள் அல்லது பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவர் கூட

இடம் பெறாமல் இருப்பதுதான் காரணம் என்று தெரிகிறது. அந்தக் கல்லூரியை நடத்த அரசு பெருமளவில் மானியம் கொடுக்கிறது. ஆகவே, அங்கே ஏதாவது ஒரு விதத்தில் பொது மக்கள் பிரதிநிதிகள் அந்த நிர்வாகத்தில் பங்கேற்றால் இத்தகைய பிரச்சினைகள் அநேகமாக எழுவதற்கு இடமில்லாமல் தடுக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆரம்பக் கல்வியை நமது அரசு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப்போல ஆதி திராவிடர் நல இயக்குநரால் சில பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பள்ளிகளில் கல்வியின் தரம் எப்படி இருக்கிறது என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். என் தொகுதியில் 5 உறைவிடப் பள்ளிகள் ஆதி திராவிடர் நல இயக்ககத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பள்ளிக்கு ஒரு ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவிட்டாலும் கூட இதுவரை 20 பேர்கள் கூட அங்கே எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை. இவ்வளவு பணம் செலவிட்டும் அதனுடைய பயன் நமக்கு கிடைக்காமல் போய் விடுகிறது. அதற்கு என்ன காரணம் என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்தப் பள்ளி ஆசிரியர்கள் எல்லாம் ஆஸ்டல் நடத்தத்தான் அங்கே வருகிறார்களே தவிர அந்த மாணவர்களின் கல்வி தரத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதாக இல்லை. கல்வித் துறைக்கும் அந்த நிர்வாகத்தில் எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல இருக்கிறது. இதை ஆராய்ந்து பார்த்து நம்முடைய அரசு ஆதி திராவிடர் நலத்துறை நடத்தும் அந்தப் பள்ளிகளை அரசு கல்வித் துறையின் பொறுப்பில் எடுத்துக் கொண்டு செயல்படுத்தினால் நலலமுறையில் கல்வியின் தரம் அமையும் என்று நான் கருதுகிறேன். ஆதி திராவிடர் நலத்துறையின் உதவியினால் அந்தப் பள்ளிகள் நடைபெற்றாலும் அதனுடைய நிர்வாகத்தை நம்முடைய பள்ளிக் கல்வி இயக்குனரகம் எடுத்துக் கொள்ள வேண்டும்; அப்படியானால் தான் அதன் பயன் நமக்கு கிடைக்கும்; அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாற்றுத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அங்கே இருக்கின்ற உண்மை நிலையைச் சொன்னார்கள். அந்தப் பள்ளிகள் அவருடைய தொகுதியில் இருப்பதால் தெரிவிக்கிறேன். அந்தப் பள்ளிகளுக்கு இன்று வரையில், இப்போது பரிட்சை நடக்கப் போகிறது, புத்தகங்கள் போய்ச் சேரவில்லை. அங்கே தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்ற உண்மையையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய தகவலுக்காக நான் அறிந்த உண்மைகளைத் தெரிவி



கிறேன். கலவித் துறை அந்தப் பள்ளிகளை எடுத்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆதி திராவிடர் நலத்துறை நடத்தினாலும் கல்வித் துறை நடத்தினாலும் உரிய பயன் கிடைக்க வேண்டும்.

**திரு. மா. சின்னராசு:** நான் குறிப்பிட்ட இந்தப் பள்ளிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதோ அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதோ தொடங்கப்பட்டவை அல்ல. 30, 35 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொடங்கப்பட்டாலும் தொடர்ந்து இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் குறிப்பிட்டேன். ஆக இதில் ஒரு மாற்றம் தேவை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். நடைமுறையில் இருக்கிற பலவேறு சிக்கல்களை ஆராய்ந்து பார்த்து, இந்தப் பள்ளிகளை அரசுத் துறையில் இருக்கிற கல்வித் துறை ஏற்று நடத்தி, அதனுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடற்பயிற்சிக் கல்வியைப் பொறுத்தவரையில் நமது அரசு தீவிரமாக நல்ல பல திட்டங்களை இதிலே செயல்படுத்தி வருகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். மேலும் பல உடற் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குவதற்கும், கிராமப் புறங்களிலே உடற்பயிற்சி மையங்களை அமைப்பதற்கும் அரசு முனைப்புடன் திட்டங்களை வைத்திருக்கிறது. அது மட்டுமல்ல. தமிழ் வளர்ச்சிக்கு என்று இன்றைக்கு ஒரு துறையை நிறுவி அந்தத் துறையின் மூலம் ஆராய்ச்சி வசதிகளுக்கு உதவிடும் வகையில் தமிழக அரசு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ் அறிந்த பெரியோர்கள், தமிழ் பண்பாளர்கள் அதை வரவேற்று போற்றுகிறார்கள். அதைப் பாராட்டத் தவறியவர்களை தமிழ் ஆய்ந்தவர்களா என்று நான் சந்தேகப்படவில்லை; அவர்களுடைய தமிழ் பண்பாட்டைத்தான் நான் சந்தேகிக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு பாலிடெக்னிக் — ஒரு தொழில் நுட்பப் பள்ளி அவசியம் தேவையாக இருக்கின்றது. அங்கே இருக்கின்ற மருதமலை ஆண்டவர் கோயிலில் நிறைந்த அளவுக்கு மக்கள் காணிக்கை செலுத்துகிறார்கள். அந்த அற நிலையத் துறை மூலமாகவும் நமது அமைச்சரவர்கள் முயற்சி மேற்கொண்டு ஒரு பாலிடெக்னிக் நிறுவ உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்வித் துறையில் எல்லா வகையிலும் சிறப்பினை எய்துகிற அளவுக்கு நாட்டுக்கு வழிகாட்டியாக தமிழகம் அமைந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

[1982 மார்ச் 16

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மாற்றுத்தலைவர் அவர்களே, கல்வி மானியத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை எடுத்து முன் வைக்க விரும்புகிறேன். நமது அரசாங்கத்தினுடைய துறையிலே மிக அதிகப் படியான பணத்தைச் செலவழிப்பது இந்த கல்வித் துறைதான். 291 கோடி ரூபாய் நம்முடைய வருவாயிலே செலவழிக்கப்படுகிறது. இது மொத்தச் செலவிலே 21.3 விழுக்காடு என்று அமைச்சரவர்களுடைய பாலிசி நோட்டிலே கொடுத்திருக்கிறார்கள். இது போன ஆண்டை விட, குறைவாகத்தான் இருக்கும். ஜாஸ்தி இல்லை. இதனை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. ஆனால் அதுதான் உண்மை. இந்தத் துறையிலே நடைபெறுகின்ற முக்கியமான வேலைகளைப் பற்றியும் இதனுடைய தேவைகளைப்பற்றியும் ஏராளமான விவரங்கள் சொல்ல முடியும். மக்களின் மத்தியிலே அப்படி பல கருத்துக்கள் உள்ளன.

ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட வரையிலே ரொம்பத் தெளிவான முறையிலே நம்முடைய நடவடிக்கைகளுக்கு வேண்டியவற்றைப் பற்றிச் சொல்லப் படவேண்டும் என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. ஐந்தாவது வகுப்பு வரையில் தாய்மொழியில்தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்றிருப்பதுதான் சரியாக இருக்கும். ஆனால் ஐந்தாவது வகுப்பு வரையிலே வேறு மொழியினைக் கற்றுக் கொடுக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தி அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பாதிக்கின்ற வகையிலே நிலைமைகள் இருக்கக் கூடாது. அப்போதுதான் அஸ்திவாரம் சரியாக அமையும். ஆகவே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து கிராமங்களிலேதான் 5-வது வகுப்பு வரையில் உள்ள பள்ளிகள் 27,767 இருக்கின்றன என்று கொடுத்திருக்கிறார்கள். 8-வது வகுப்பு வரை உள்ள பள்ளி 5,556 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே படிக்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 70,12,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த மாணவர்கள் 8-வது வகுப்பு வரையிலே உள்ள கல்வியிலே இருக்கிறார்கள். ஆனால் இவர்க ல் பலர் கல்வி கற்பதிலிருந்து நின்று போகாத நிலைமை இருக்க வேண்டும். அதுதான் மிகக் கஷ்டமான மிக முக்கியமான காரியமாகும். அடிப்படைக் கல்வியிலே சேர்த்துக் கொள்ளப்பட்ட குழந்தைகள் முழுவதும் அந்த வகுப்புகள் ஆறாவது 5-வது, 8-வது வகுப்பு முடியும் வரையில் அவர்கள் தொடர்ந்து கல்வி பயிற்சி பெற்றால்தான் அவர்களுக்கு ஆரம்பக்கல்வியாவது பூர்த்தியாகக் கிடைக்கும். ஆனால் அவ்வாறு பூர்த்தியாகாமல் இடையிலே மாணவர்கள் நின்று விடுகின்ற நிலைமையினைப் பொறுத்தவரையிலே



1982 மார்ச் 16] [திரு. கு. ரமணி]

50 சதவீதமாக இருந்தது இப்போது 30 சதவீதமாகக் குறைந் திருக்கின்றது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப் பிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனாலும் 30 சத வீதம் என்று சொல்கின்றபோது இது மொத்தத்தில் மூன்றில் ஒரு பகுதியாகும். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இதைப்பற்றித்தான் தீவிரமான பரிசீலனைகளும் ஆலோசனைகளும் தேவை. இந்த நிலைமையினைச் சமாளிக்க வேண்டும். இந்த ட்ராப் அவுட்டே இல்லாமல் செய்வதற்கு என்னென்ன திட்டங்களை மேற்கொள்வது என்று யோசித்து அதற்கான புதிய முறைகளைப் புகுத்துவதற்கான காரியங்களிலே ஈடுபட்டாகவேண்டும். அதற்காக சில வசதிகளை யல்லாம் செய்தாக வேண்டி இருக்கிறது. பள்ளிகள் வெகு தூரத்திலே இல்லாமல் அருகாமையிலேயே இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் நல்ல முறையிலே சொல்லிக் கொடுத்து திருப்தியான முறையிலே கல்வி கற்பதற்கான வசதிகள் இருக்கவேண்டும். பாடப்புத்தகங்கள் அவர்களுக்கு சரியான முறையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். சீருடைகளைக் குழந்தைகளுக்கு கொடுப்பது என் பது ஒரு பெரிய செலவுதான். இருந்தாலும் இதைப்பற்றியும் நாம் சிந்திக்கவேண்டியது அவசியமாகும்.

தற்போது 1-வது வகுப்பிலிருந்து 8-வது வரை படிக் கின்ற மாணவர்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த நாட்டிலே வறுமையின் காரணத்தால் 5 வயதுக் குழந்தைகளைக்கூட சில வேலைகளுக்கு அனுப்பு வது உண்டு. அப்படி இல்லாமல் அவர்கள் பள்ளிக்கு வரவேண்டும் என்பதற்காக உணவு கொடுத்தாவது அவர்களை பள்ளியிலே வைத்துக்கொள்ளவேண்டும் என்பது ஏழைக் குடும்பங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றாலும் அதிலே சில அடிப்படைகள் இருக்கின்றன. கிட்டத் தட்ட 20 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகளுக்கு நாம் மதிய உணவு அளித்துக் கொண்டிருக்கிறோம். அதனுடைய செலவு 5 அல்லது 6 கோடி ரூபாய் வரையில் வருகிறது. அந்தச் செலவை நாம் செய்து கொண்டிருக் கிறோம். அது இன்றைக்குப் போதாது. ஏழைக் குழந்தை களாக இருக்கிற அத்தனைபேருக்கும் உணவு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான், 100 கோடி ரூபாய் பணம் செலவழித்து, ஒரு திட்டத்தை அரசு கொண்டு வந்து, அந்த யோசனையை பட்ஜெட் உரையிலே வைத்தது அதை யாட்டி, அனேக விவாதங்கள், விமரிசனங்கள் நடை பெற்றிருக்கின்றன. இதற்கான விமரிசனங்கள் எப்படி இருந் தாலும், 100 கோடி ரூபாய் செலவழித்து அத்தனை ஏழை எளிய குழந்தைகளுக்கும், உணவு அளிப்பது என்கிற திட்டம் நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் இந்த 100 கோடி ரூபாய் பணத்தை அந்தக்

குழந்தைகளுக்கு உணவிற்காகவே செலவழிக்கப்பட வேண்டும். அது திருடப்பட்டு போய்விடக்கூடாது, அதிலே ஊழல்கள் நடைபெறக்கூடாது என்பதுதான் பிரச்சினை.

(பிற்பகல் 12·10)

ஒரு பெரிய அளவிற்கு செய்யவேண்டிய இந்த திட்டத்தில் எப்படி அந்த ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்பதை நாம் பார்க்கவேண்டாமா? அந்த நடைமுறைகளைச் செய்வதற்கு எந்த அமைப்பு உருவாக்கப்பட போகிறது என்பது தான் பெரும் கவலையைத் தரக்கூடிய பிரச்சினை. ஏனெனில் 5 வயது நிரம்பிய பிறகுதான் ஏழைக் குழந்தைகள் பள்ளிகளுக்கே அனுப்பப்பட்டு போகிறார்கள். நம்முடைய திட்டத்தில் 2 வயதிலிருந்து 10 வயதுக்குட்பட்ட ஏழைச் சிறுவர்களுக்கு உணவு அளிப்பது என்று கொள்கை. ஆகவே பள்ளிக் கூடத்திற்கு வராத சிறுவர்களுக்கும் அந்த உணவு போய்ச் சேரவேண்டிய நிலை இருக்கிறது. அது எப்படி நடக்கும் என்பது தெரியவில்லை. அதனால் தான் பலபேர்கள் இதில் பலவிதமாக விவாதம் பண்ணி பிரச்சினைகளை கிளப்பினார்கள். ஆகவே அந்த முறையில் இந்தப் பிரச்சினைகளை விவாதிக்கும்போது, இந்த திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் செலவழித்துக்கொண்டு வரக்கூடிய திட்டமே சரியில்லை என்ற மாதிரி இருக்கக்கூடிய ஒரு நெகடிவ் அப்ரோச் செய்யக்கூடாது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அப்படிப்பட்ட அப்ரோச்சை எடுக்கவில்லை. இந்த திட்டத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் எப்படி அதை செய்ய போகிறீர்கள் என்பதை சிந்தித்துச் செயல்படுவது நல்லது. ஏழைக்குழந்தைகள் என்பதை எப்படி நிர்ணயிக்கப் போகிறீர்கள். எந்த அளவுக்கு வருமான வரம்பு உள்ள குடும்பத்தில் உள்ள குழந்தைகளை ஏழைக் குழந்தைகள் என்று சொல்லப்போகிறீர்கள்? 2 வயதிலிருந்து 5 வயது வரையில் உள்ள அத்தனை ஏழைக் குழந்தைகளுக்கும் எங்கே உணவு அளிக்கப் போகிறீர்கள்? இதனுடைய நடைமுறையில் வேறு சில பிரச்சினைகளும் வரும். மிகமிக ஏழ்மை நிலையில் உள்ள குழந்தைகளுக்கு இந்த உணவு கட்டாயம் கொடுக்கப் படவேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு, அதைக் கண்காணிப்பதற்கு எவ்வளவு பெரிய ஒரு அமைப்பு தேவைப்படுகிறது.

இப்போது நாம் மைய கிச்சன் என்ற முறையில் பள்ளிக் கூடங்களில் பகல் உணவு அளித்துக் கொண்டிருக்கிறோம். இந்த முறையில் ஓரளவு வெற்றிகரமாக நகர்ப்புறத்தில் செய்யலாம். ஆனால் கிராமப்புறங்களில் பல மைல்களுக்கு போகவேண்டியிருக்கும். அப்போது பெரிய பெரிய சமையல் கூடங்கள், உணவைச் செய்வதற்கு வேண்டிய ஆட்கள், எடுத்துச செல்வதற்கு வேண்டிய ஆட்கள், எடுத்துச் செல்வதறகு தேவையான வேனகள்-வண்டிகள் வசதிகள், அதோடு கூட



கொண்டுசெல்வதற்கு சில இடங்களில் ரோடுகள் கூட போட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே இவ்வளவு பெரிய இன்பிராஸ்டிரக்ச்சரை உருவாக்கித்தான் இவைகளை நடத்த வேண்டும்.

ஆகவே 100 கோடி ரூபாய்த் திட்டம் என்று சொல்லி விட்டால் மட்டும் போதாது. இது நல்ல முறையில் நடக்க வேண்டும். உணவு ஏழைக்குழந்தைகளுக்கு போய் அவசியம் சேரவேண்டும். இந்த திட்டம் வெற்றி பெறவேண்டும். ஆகவே அதற்கான வகைகளில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் விரும்புவதெல்லாம்.

அடுத்து சிறு குழந்தைகளின் நர்சரிப் பள்ளிகளைப் பற்றி, அரசு எடுத்திருக்கும் புது கொள்கை முடிவு வரவேற்கத் தக்கது. கிட்டத்தட்ட 4,433 குழந்தைகள் நல மையங்கள் பால்வாடிகள் என்று சொல்லக்கூடிய நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த இடங்களிலே நர்சரி பிரிவுகளை அரசே ஏற்படுத்த இருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நம்மாநிலத்தில் இருக்கும் நர்சரிப் பள்ளிகள் தனியார்களினால் நடத்தப்பட்டு அவர்கள் பணத்தை கொள்ளையடிக்கிற ஒரு நிறுவனமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே நம் இளம் சிறார்களுக்கு தாய் மொழிப்பற்று ஊட்டப்பெறுவதில்லை. தாய் மொழியில் கல்வி சொல்லித் தரப்படுவதில்லை.

அதற்கு மாறாக வேறு ஒரு கலாச்சாரத்தில், வேறு ஒரு நாகரிகத்திற்கு பழக்கப்படுத்தும் வகையில், வருங்கால சமுதாயத்தின் மலர்கள் என்று சொல்கிறார்களே, அந்த மலர்களை Flowers of the Society என்றுதான் அந்த இளம் குழந்தைகளை, நான் சோவியத் யூனியன் சென்றபோது கிண்டர் கார்டனைச் சேர்ந்த குழந்தைகளை நிறுத்தி அணி வகுப்பு செய்தபோது, நேரில் பார்த்தபோது அப்படித்தான் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட அந்த இளம் மலர்களுக்கு கல்வி சொல்லித் தரப்படுவது தாய் மொழியில் அல்ல. அத்தகைய அவல நிலைமைகள் இந்த நாட்டிலே இருக்கிறது. இந்த நிலைமையில், அந்த நர்சரிப் பள்ளிகளை அரசே நடத்துவது என்பது மிகவும் வரவேற்கத் தக்க ஒன்று. அந்தத் திட்டதை சரியான முறையில் வெற்றிகரமாக நடத்துவதற்கு, வேண்டிய ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரத போல, உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும்கூட சீர்திருத்தவேண்டும். இந்தப் பள்ளிகளில் பல குறைபாடுகள் இருக்கின்றன. முதல் குறைபாடு இந்தப் பள்ளிகூடங்களில் போதிய கட்டிடங்கள் இல்லை, அறைகள் இல்லை, இடங்கள் போதவில்லை என்ற நிலைதான் இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு வகுப்பறையில் இரண்டு மூன்று வகுப்புகள் ஷிப்ட் முறையில் நடத்தப்படுகின்றன. குறுக்கே ஒரு தட்டியை வைத்துவிட்டு அங்கே சப்தம் போட்டால் இங்கே உள்ளவர்களுக்கு படிக்க முடியாத நிலை கூட இருக்கிறது. இந்நிலையை மாற்றியாக வேண்டும். ஆகவே பள்ளிகளுக்கு பெருமளவில் கட்டடங்கள் கட்டப்படவேண்டும். அதிகப்படியான ஆய்வுக்கூடங்கள் கட்டப்படவேண்டும். பல பள்ளிக்கூடங்களில் ஆய்வுக்கூடங்கள் இல்லாமல் இருக்கிறது. அப்படியில்லாததால் லாபரட்டரியில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க முடிவதில்லை. இந்த மேல் நிலைப் பள்ளித் திட்டம் இரண்டு மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. இவற்றிற்கு தேவையான ஆசிரியர்கள் இல்லை. எந்தெந்த வகுப்புகளில் என்னென்ன தேவையோ அவை பூர்த்தி செய்யப்படவில்லை. ஜூன் மாதத்தில் நிரப்பப்படவேண்டிய ஆசிரியர் போஸ்டுகள் டிசம்பர் வரை நிரப்பப்படாமல இருக்கிறது. ஆண்டு முழுவதும் நிரப்பப்படாமல் இருக்கிறது. அந்நிலையில் கல்வியின் தரம் குறையத்தான் செய்யும்.

லாபரட்டரி அட்டெண்டர் போஸ்ட்கள் இதுவரை சாங்க்ஷன் செய்யப்படாமல் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். ஆகவே லாபரட்டரியில் உள்ள கருவிகளை இயக்க பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. அதை எல்லாம் கவனிக்க வேண்டும்.

அடுத்து, தொழில் கல்வி. இது நல்லதொரு அம்சம். இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் அல்லாமல் கீழேயும் கூட கற்றுக் கொடுக்கப்பட்டு வருவது வரவேற்கத் தக்கது. அது மேல்நிலைப் பள்ளி மட்டத்தில் வரும்போது சிறப்பாக இருக்கும். பலயிடங்களில் தொழிற்கூடங்கள் அமைத்தாக வேண்டும். (மணியடிக்கப்பட்டது). எலக்ட்ரிக் வைண்டிங் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் பக்கத்தில் உள்ள வொர்க்ஷாப்களுக்கு குழந்தைகளைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பல பிரிவுகளில் தொழில்களைக் கற்றுக் கொடுக்க கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து, தனியார் பள்ளிக்கூடங்கள். தனியார் துறைப் பள்ளிக்கூடங்கள் முழுவதையும் அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்த வேண்டும். அதுதான் கொள்கையாக இருக்க வேண்டும். பணம் இல்லை, பெரிய அளவில் தனியார் மூலதனம் போட்டு இதில் செலவழிக்கட்டும் என்று பார்த்தால் இவை முழுவதும் இன்று வர்த்தக ரீதியில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆசிரியர்களுக்குப் பாதுகப்பாபு இல்லை. மைனாரிட்டி உரிமை என்று சொல்லி அதில் தலையிட்டால் உடனே கோர்ட்டுக்கு சென்று விடுகிறார்கள். அரசாங்கம் தலையிடாமல் செய்து விடுகிறார



கள். இப்படிப்பட்ட நிலை இன்றிருக்கிறது. இது ஒரு அடிபடைப் பிரச்னை. ஆகவே அரசியல் சட்டத்தில் இதற்கேற்றவாறு ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர்களைப் பாதுகாக்க இதைத் தவிர வேறு வழி இல்லை. கல்லூரிகளில் அவர்களுக்கு சம்பளம் சர்க்கார் கிராண்டிலிருந்து நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் பள்ளிக்கூடங்களில் அப்படிப்பட்ட நிலை இல்லை. அதனால் ஆசிரியர்களுக்கு பெரும் கஷ்டம் இருக்கிறது. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு அவர்களுக்கு நிர்ணயித்துள்ள சம்பளம் கொடுப்பதில்லை. அதிலிருந்து ஒரு தொகையை வெட்டி எடுத்து விடுகிறார்கள். கையெழுத்து மட்டும் வாங்கிவிடுகிறார்கள். முழுத்தொகைக்கு இந்த நிலைக்குமுடிவு கட்டியாக வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, அட்டானமஸ் காலேஜஸ். இப்படி ஒரு நாகரீகம் வளர்ந்து வருகிறது. அட்டானமஸ் காலேஜ்களில் என்ன சாதிக்கப்பட்டிருக்கிறது ? அரசாங்கக் கல்லூரிகளில் நடைபெறாத என்ன சாதனைகளை இதனால் கண்டுவிட்டோம் ? அட்டானமஸ் காலேஜ் என்பதால் தனியார் அவர்கள் இஷ்டம் போல் நடந்துகொள்கிறார்கள். அங்கே ஆசிரியர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை.

அடுத்தப்படியாக, டெக்னிக்கல் எஜுக்கேஷன். இப்போது டெக்னிக்கல் கல்வி ஏராளமாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதிகமான பள்ளிகள் வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அப்படி கல்வி கற்று வருகிறவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. எனவே அவர்களை வரிசைப்படுத்தி முன் உரிமை அளித்து வேலை கொடுக்க, எல்லோருக்கும் வேலை கொடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மாஸ் காப்பியடித்தல். சிலயிடங்களில் சில பள்ளிகளில் நிர்வாகமே இதில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது கடுமையாக தடுக்கப்பட வேண்டும். அதை தடுத்தேயாக வேண்டும்.

மார்க் ஊழல்கள். அது இப்போது இங்கே ஆரம்பித்துவிட்டது. கேரளாவில்தான் அது பயங்கரமான பிரச்னையாக அது ஆகி பலபேர்கள் கைது செய்யப்பட்டிருகிறார்கள். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கேயும் பத்து பதினேழு பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். இந்த நிலைமைக்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

(பிற்பகல் 12-20)

அடுத்து 'ராகிங்' நடப்பதை கட்டாயமாக நாம் எதிர்த்தே தீரவேண்டும். இதிலே தயவு தாட்சண்யமே காட்டக்கூடாது. இதைப்பற்றி மதிப்பிற்குரிய நம்முடைய ஜனாதிபதி அவர்களே உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது குறித்து வருத்தப்பட்டிருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இதனால் மாணவர்களின் படிப்பும் கெடுகின்றது. எனவே, இதிலே கண்டிப்பாக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், அதே நேரத்தில் இதைக் காட்டி அவர்களின் ஜனநாயக உரிமையைப் பறிக்கக் கூடாது. மாணவர்கள் சங்கங்களில் தேர்தல்கள் நடக்க வேண்டும். இதிலே அடக்கு முறையை உபயோகப்படுத்தக் கூடாது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், ஆர்ட்ஸ் செக்ஷன் மூடப்பட்டிருக்கிறது. அதனால், 2, 3 தாலுகாவிலே இருக்கக கூடிய மாணவர்களின் படிப்பு கெடுகிறது. எனவே, அதற்கு அரசு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். சிதம்பரத்திலே ஒரு ஆர்ட்ஸ் கல்லூரியை நிறுவ வேண்டும் ; அதுவரை அது மூடப் படக்கூடாது என்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும்,

அதே மாதிரி சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி, அங்கே இருக்கக்கூடிய பதிவாளரைப் பற்றி ஏராளமான ரிப்போர்டுகள் சொல்லப்பட்டது அரசுக்குத் தெரியும். அந்தப் பதிவாளரைப் பற்றி இங்கேகூட ஏற்கெனவே பேசப்பட்டிருக் டிருக்கிறது. இந்த நிலைமையில ,அங்கே இருக்கக்கூடிய பதிவாளர் அங்கே தொடர்ந்து பதவியில் இருந்தால், விசாரணை நடத்தினால் உண்மை கிடைக்காது. தஸ்தாவேஜுகள் எல்லாம் கொளுத்தப்படுகிறது. மார்க் லிஸ்டுகள் எல்லாம் மாற்றப்படுகின்றது என்றிருக்கின்ற நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்தப் பதிவாளரை தற்காலிக பதவி நீக்கம் செய்து, விசாரணை நடத்தி, குற்றவாள் அல்ல என்று சொன்னால், அவர் திரும்பி வரட்டும். எனவே, அந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுககொண்டு, என்னுடைய தொகுதியிலே உள்ளதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.....(மணியடிக்கப்பட்டது).

(**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்)** : இன்னும் 23 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது, சீக்கிரம் முடியுங்கள்,

**திரு. கு. ரமணி :** மிக்க நன்றி. என்னுடைய தொகுதியில் மூன்று ஆண்டுகளுக்கு முன் சித்தாபுதூர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் 8 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரம், கல்வி அமைச்சர் அவர்களைக் கொண்டு



போடப்பட்டது. அந்தக் கல்லைக்கூட பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். அதற்கு நிதியும் ஒதுக்கப்படவில்லை. இன்றைய தினம் அதற்கு பள்ளிக்கூட கட்டிடம் அங்கே இல்லை. என்னுடைய தொகுதியில் மூன்று ஆண்டுகள் ஆகியும், பள்ளிக்கூட கட்டிடம் இன்னும் கட்டப்படவில்லை, அதே போல் சித்தாபுதூரில பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கிடையாது. அந்த இடத்திலும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித் தர வேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், என் தொகுதியிலே உள்ள ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இடைநிலைப் பள்ளிகள், இவைகளிலே 5, 6ஆம் வகுப்புகள் வரையில் படிக்கின்ற மாணவக் குழந்தைகளுக்கு கீழே உட்காருவதற்கு பலகைகூட கிடையாது. பெஞ்சு இல்லாவிட்டாலும் பரவாயில்லை ; கீழே அவர்கள் உட்காருவதற்கு பலகைகூட இல்லாமல் இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். அதேபோல், காந்திபுரம் நூறு அடி ரோடிற்கு வடக்குப் புறத்தில், ஜனத் தொகை அதிகம். அங்கே ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் கிடையாது. இருக்கின்ற ஒரு தனியார் பள்ளி இதைப்பற்றி கவனிப்பதில்லை. எனவே, ஒரு ஆரம்பப் பள்ளி வேண்டுமென்றகோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும். அதேபோல், பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள இடைநிலை பள்ளியிலே, கட்டிடக் கூரையை பிரித்துக் கொண்டு போய் விட்டார்கள். அங்கே கட்டிடம் மட்டும்தான் இருக்கிறது; கூரை இல்லை. எனவே, அதையும் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே இந்த அரசு இதையெல்லாம் செய்து, கல்வி துறையை சிறந்த முறையிலே உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. ப. கோ. ஆனூர் ஜெகதீசன்** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1982-83 ஆம் ஆண்டு கல்வி துறைக்காக ஏறத்தாழ 291 கோடி ரூபாயை இந்த தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, சமுதாய வளர்ச்சிப்பணிகள், உயர்நிலைப் பள்ளிகள், சமுதாய கல்வி, சமூக கல்வி, ஒய்வூதியம் போன்றவற்றிற்கு சுமார் 27 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி பார்க்கிறபோது மொத்தத்திலே 1,370 கோடியிலே 22 சத வீதத்திற்கு மேல் இன்றைக்கு ஒதுக்கியிருப்பது கல்வியின் மீது இந்த அரசு வைத்திருக்கிற நல்ல அக்கறையை எடுத்துக் காட்டு

கிறது. அதுமட்டுமல்ல, மருத்துவக் கல்வி, வேளாண்மை கல்வி சீ திருத்த பள்ளி, கால்நடை மருத்துவம், ஆதி திராவிடர் நலனுக்கான பள்ளிகள் ஆகிய இவற்றையெல்லாம் சேர்த்தால் இன்னும் ஏராளமான பணத்தை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்பது நன்றாக தெளிவாகிறது. நம்முடைய தமிழ் இலக்கணத்தில் அரிமா நோக்கு என்ற நிலை உண்டு. சிங்கம் தான் வந்த பாதையை திரும்பி பார்த்து மேலும் தான் செல்லவேண்டிய எதிரே இருக்கிற பாதையை ஏறிட்டு பார்த்து மதிப்பிட்டு நடக்குமாம். அதேபோல புரட்சித்தலைவர் அவர்களுடைய சீரிய தலைமையில் அரிமாநோக்கு போல கல்வித்துறைக்கு சிறப்பாக பணியாற்றுகின்ற நம்முடைய கல்வியமைச்சர் அவர்களை மனமார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐயாவின் பகுத்தறிவு கருத்துக்களிலே தமிழகம் எழுச்சி பெற வேண்டுமென்று தமிழகத்தை தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திருப்பெயராலே திருச்சியிலே பல்கலைக்கழகத்தை ஏற்படுத்திய புரட்சித்தலைவர் அவர்களை பாராட்டுகிறேன். மதுரையிலே உலக தமிழ் சங்க ஆராய்ச்சித் துறை அமைக்க, முழுவதும் தன்னாட்சி உரிமை பெற்றதாக செயல்படவும் இந்த சங்கம் 1982-83ஆம் ஆண்டில் 105 லட்சம் ஒதுக்கி இருப்பதற்காக இந்த அரசை பாராட்டுகிறேன். இந்திய துணை கண்டத்திலே எல்லா துறைகளிலும் முன்னயிணிலே வந்து கொண்டிருக்கிற நம்முடைய கல்வித் துறைக்கு ஏராளமாக செலவிட்டும், நம்முடைய விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்பு, பிற நாட்டு விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்கு காரணம் நம்முடைய நாட்டிலே இருக்கிற மூட நம்பிக்கையும், பகுத்தறிவு உணர்வு இல்லாததாலும், அறிவு வளர்ச்சி குன்றி போய் இருப்பதாலும் தான் இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட மக்களுக்கு திறனுள்ள மனப்பான்மை குன்றிபோய் இருப்பதை மாற்றவேண்டிய பொறுப்பு கல்வித்துறைக்கு இருக்கிறது. நம்முடைய தமிழகம் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலும் முன்னணியிலே இருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களுடைய, பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையை பாடமாக வைப்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் தங்களுடைய காலத்திலே இந்த மூட நம்பிக்கையை ஒழிக்கவேண்டுமென்று எப்படி எண்ணினார்களோ அத்தகைய கருத்துக்களையும் அந்த குழந்தைகளுக்கு பாடமாக வைக்கவேண்டும்.

தமிழ் பல்கலைக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15–9–1981ஆம் நாளில் அண்ணாவை நினைவு கூறும் விதத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே தஞ்சையிலே புரட்சித்தலைவர் தொடங்கி வைத்தார். சென்னை மத்திய நூலகத்திற்குத் தேவநேய பாவாணர் பெயரை வைத்து சிறப்பு செய்திருக்கிற இந்த அரசைப் பாராட்டுகிறேன். தேவநேய பாவாணர் நூல்களை உயர்நிலைப் பள்ளிகளிலே பாடமாக வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய நூலகத்திலே அவருக்கு ஒரு சிலையை நிறுவ வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ் வளர்ச்சி பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1959ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. அது ஒழுங்காக செயல்பட்டதா என்று சொன்னால் செயல்படவில்லை. அதற்குப் பிறகு அனைத்துப் பணிகளிலும் தமிழ் கட்டாயமாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு தமிழ் வளர்ச்சித்துறை என்ற ஒரு துறையை நிறுவினார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளாக அது செயல்படாமல் இருந்து சமீபத்திலே ஏறக்குறைய 1980-க்குப் பிறகு சிறப்பாக செயல்படுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 1981–82லே மட்டும் ஏறக்குறைய 17 துறைகளிலே இந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். 1975 முதல் 1980-ஆம் ஆண்டு வரை வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றிற்கு விருதுகளைக் கொடுப்பதற்கு திருவள்ளுவர் திருநாளான 15–1–1982 அன்று மாண்புமிகுபுரட்சித் தலைவர் அவர்கள் புலவர் பெருமக்களுக்கு விருதுகளை வழங்கினார்கள். சென்னையிலே நடைபெற்ற அந்த விழா தமிழக மக்களிடத்திலே ஒரு நல்ல விழிப்புணர்ச்சியை, உணர்வை ஏற்படுத்தியது என்று சொன்னால் மிகையாகாது. அந்த விழாவை புரட்சித் தலைவர் அவர்களைக் கொண்டும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கொண்டும் ஏற்பாடு செய்த தமிழ் வளர்ச்சி இயக்குநர் புலவர் நன்னன் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். தமிழக அரசும் அவரைக் கௌரவித்துப் பாராட்டும் என்று கருதுகிறேன். அடுத்து சென்ற ஆண்டு கல்வியமைச்சர் முன்னிலையில் மூவாண்டு முனைப்புத் திட்டம் என்ற ஒன்றை அறிவித்தார்கள். அந்த விழாவிற்குச் செல்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தத் திட்டம் செயல்படுவதற்கு இருக்கின்ற தடைகளை உடைக்க வேண்டுமென்று, போக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

ஆட்சி மொழி நான்கு கட்டங்களாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் எந்தக் கட்டத்திலேயும் தமிழக அரசினுடைய தலைமைச் செயலகத்திலே அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற குறிப்பு இல்லை, செயல்படுத்தப்படவில்லை. குடிநீர் அனுப்புகிறபோது தலைப்பிலே மருந்தைப் போட்டால்

அந்தத் தண்ணீர் குழாய் வழியாக வந்து வீட்டிலே உள்ள வாளியிலே வரும். அப்போது குடிநீர் சுத்தமாக இருக்கும். ஆனால் தலைப்பிலே மருந்து போடாமல், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மருந்து போடுவதைப் போல தலைமைச் செயலகத்திலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் ஆங்காங்கே இருக்கின்ற ஒன்றியங்களிலே மற்ற ஊர்களிலே மட்டும் இதை நிறைவேற்றுவதன் மூலமாக நிச்சயமாகக் காலதாமதம் ஏற்பட்டு நோக்கம் நிறைவேறாமல் போகக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே தலைமைச் செயலகத்திலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்க வேண்டும். முதல் வேலையாக அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வேறு வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வந்து உள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தமிழ் தெரியாமல் இருக்கிறார்கள். அதன் காரணத்தினால் மக்கள் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. அவர்கள் என்ன பேசுகிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்றே தெரியவில்லை. அவர்கள் தமிழ் கோப்புகளைப் பார்த்து என்ன புரிந்துகொள்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே தமிழ்க் கோப்புகளைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் அவர்கள் பதவி ஏற்றதற்குப் பிறகு தமிழைக் கற்று அறிந்து எப்படிப் புரிந்துகொள்ள முடியும் என்று தெரியவில்லை. அப்படித் தமிழை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் வேலையிலிருந்து ரிடையராகி வீட்டுக்குச் செல்கிறார்களே அப்போதுதான் தமிழைக் கற்று அறியக் கூடிய நிலைமை ஏற்படும். இந்த நிலையைப் போக்கவேண்டுமென்றால் தமிழைப் பேச, எழுத, தக்க ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வரவேண்டும். ஏராளமான அலுவலகங்களில் ஆங்கிலத் தட்டச்சு இருக்கிறது. முறையாக அவற்றையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு அவை இருக்கின்ற இடங்களிலே தமிழ்த் தட்டச்சுக்களைக் கொடுத்துவிட்டால் தமிழ் வளர்ச்சித் திட்டம் ஒழுங்காக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரிகளிலே பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்புகளில் தமிழில் பாடம் நடத்தப்படுகிறது. ஆனால் எம்.ஏ., எம்.எஸ்.சி. வகுப்புகளில் தமிழில் பாடம் நடத்தப்படவில்லை. ஆகவே, இதைக் கூர்ந்து கவனித்து அந்த வகுப்புகளையும் தமிழிலே படிக்க வாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெளி மாநிலங்களில் உள்ள சுமார் 20 பல்கலைக் கழகங்களுக்குத் தமிழக அரசு தமிழ் தெரியாத அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தமிழைப் போதிப்பதற்காக ஆண்டொன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் மானிய



மாக அனுப்பிக் கொண்டிருக்கிறது. டிப்ளமோ கோர்ஸுக்கும் சர்டிபிகேட் கோர்ஸுக்கும் இது அனுப்பப்படுகிறது. தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு செலவழித்தும்கூட முறையாக அது செயல்படுத்தப்படுகிறதா என்று கண்காணிப்பதற்கு வழியில்லை. அதைக் கண்காணிப்பதற்காக தமிழைக் கற்றறிந்த அறிஞர்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி அதைக் கண்காணிக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏராளமான நர்சரிப் பள்ளிகள் தமிழ்நாடு பூராவும் பெருகிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகள் இருக்கிற வரையில் தமிழ் வாழாது, வளராது. தமிழை வாழ வைக்க வேண்டுமானால் உடனடியாக அவசரச் சட்டம் போட்டு நர்சரிப் பள்ளிகளை நிறுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சில குறிப்புகளைச் சொல்லவிரும்புகிறேன். இப்போது டி.இ.ஓ. ஆபீஸுக்கு தொலைபேசி வசதி கிடையாது. காஞ்சிபுரம் போன்ற தலைநகரிலேதான் இருக்கிறது. எல்லா அலுவலகங்களிலும் அந்த வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எல்லா ஊர்களுக்கும் தொடக்கப்பள்ளிகளுக்காக அழகான கட்டிடங்களைக் கட்டித் தந்து கொண்டிருக்கிறோம். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. வயது வந்த பெண்கள் படிப்பதற்குக்கூட லாயக்கற்ற முறையில் கொட்டகைகளில் பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை மாற்றித் தருவது நம்முடைய பொறுப்பு என்பதை அமைச்சரவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். எனவே அந்தக் கொட்டகைகளை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகள் பலவற்றிற்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லை. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. பல ஆண்டுகளாக அந்தப் பள்ளி இருந்தும் கொட்டகையில்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதில் படிக்கின்ற வயது வந்த பெண்கள் ஒதுங்குவதற்கான இடம் இல்லாத துரதிருஷ்டமான நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்] [1982 மார்ச் 16

செங்கல்பட்டுக்குச் சுற்று வட்டாரத்தில் இருக்கின்றவர்களுக்கும் பயன்படும் வகையில் செங்கல்பட்டில் இராஜேஸ்வரி கலைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது தானமாகக் கொடுக்கப்பட்ட இடம். அந்த இடம் தற்பொழுது போதுமானதாக இல்லை. பட்ட மேல் படிப்பு கொண்டு வருகின்ற நிலைமை இருப்பதால் அங்கு புதிய கட்டிடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் விளையாட்டுத் திடல் இல்லை. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1982–83ஆம் ஆண்டில் 139 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்கும்பொழுது செங்கல்பட்டு போன்ற நகரங்களுக்கு நல்ல விளையாட்டுத் திடலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சி விளையாட்டுத் திடல் போதுமான அளவிற்கு விளையாடும் அளவிற்கு இல்லை. ஒரு காலத்தில் வைக்கப்பட்ட மரங்களைக் கூட வெட்டியெடுத்துக் கொண்டு போகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

*திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1982-83ஆம் ஆண்டுக்கான கல்விமானியத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்று அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால் அதேநேரத்தில் ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் படுகின்ற துன்பங்களைப்பற்றித் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பாக 17 கோரிக்கைகளைப் பட்டியலாக அனுப்பியிருக்கிறார்கள், கல்விச் செலவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையில் அதிகமான தொகையை ஆரம்பப் பள்ளிகளுக்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஆரம்பப் பள்ளிகள் சிறப்பான முறையில் நடைபெற்று அந்தப் பணம் சமுதாயத்திற்குப் பயன்படத்தக்க அளவில் செயல்பட வேண்டும் என்றால் பாடத்தைப் போதிக்கின்ற அந்த ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அமைச்சரவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றபிறகு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக் காலமாக பல்வேறு வகையான தொகைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன.

ஓய்வு பெறும் காலத்தில் பத்தாயிரம் ரூபாய் வழங்கப் பெற வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 16] [திரு. மு. அப்பாதுரை]

இன்றைக்குப் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருந்தாலும் அவைகளில் போதுமான ஆசிரியர்கள் நிரப்பப்படவில்லை என்ற குறை எழுப்பப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்யவிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இன்னொரு குறையும் இருக்கிறது.

ஆய்வுக் கூடங்கள் நல்லமுறையில் செயல்படுவதற்கு அட்டெண்டர்களை மட்டும் நியமித்தால் போதாது ; தேர்ச்சிபெற்ற பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்களுக்குத் தனிப்பயிற்சி கொடுத்து நியமனம் செய்தால்தான் ஆய்வுக் கூடங்களில் உள்ள குறைபாடுகளை நீக்க முடியும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளானாலும் சரி, ஆரம்பப் பள்ளிகளானாலும் சரி, அவைகளிலெல்லாம் கழிப்பிடங்கள், காம்பவுண்டுகள் போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கின்றன. தமிழக அரசு பல கோடி ரூபாய்களைச் செலவழித்து பல புதிய கட்டிடங்களைத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிக் கொடுத்தாலும்கூட இப்படிப்பட்ட வசதிகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் பாலிடெக்னிக் மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட்டத்தை நடத்தினார்கள். அப்பொழுது பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அமைச்சர் அவர்களின் உறுதிமொழிக்கேற்ப அந்தப் போராட்டத்தை நிறுத்தி வைத்தோம். அந்த மாணவர்களை இரண்டாம் ஆண்டுப் பொறியியல் படிப்பில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

சென்ற ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக அந்த மாணவர்கள் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் செய்ததன் விளைவாக, அவர்களுடைய பள்ளிக் கால அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. பிராஜக்ட் நேரம் என்று சொல்லக்கூடிய கால அளவு குறைந்திருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு இந்த ஆண்டு நடைபெறுகின்ற தேர்வு காலத்தைக் கொஞ்சம் தாமதப்படுத்தி—அதற்காக, தேர்வு முடிவை தாமதப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. அதைக் குறித்த காலத்தில் அமுல்படுத்த வேண்டும்—ஆனால், இவர்களுக்குத் தேர்வுக்கான காலத்தைக் கொஞ்சம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் போராட்டத்தைப் பற்றி கடந்த சில ஆண்டுகலாகவே நாம் சட்டமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்திரா காங்கிரஸ் நண்பர் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய அந்தத் துணைவேந்தர் அங்கேயிருக்கக்கூடிய ஆசிரியர் சங்கத்தை முடமாக்க வேண்டும், அந்தச் சங்கத்தை உடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் பழிவாங்கும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றைக்குப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிற ஆசிரியர்களையும், இன்னும் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிற ஆராய்ச்சிப் பணி மாணவர்களையும் பணியில் சேர்த்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், இந்திய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் முதன் முதலாக 'வெள்ளையனே வெளியேறு' என்று சொல்லி குரல் கொடுத்த முதல் தமிழர் வீரபாண்டிய கட்டபொம்மன் பெயராலே வீரபாண்டிய கட்டபொம்மன் அரசு உயர்நிலைப் பள்ளியிருக்கிறது. அந்தப் பள்ளி செயல்படும் இடங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். 3 இடங்களில், 3 கட்டிடங்களில அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் செலவழித்துக் கட்டிய ஆராய்ச்சிக்கூடம்கூட பல கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. அதைப்போலத்தான் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. பெயரால் இருக்கக்கூடிய ஒட்டப்பிடாரத்திலே இருக்கக் கூடிய பள்ளியும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிதி ஆண்டிலேயே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு தேசியத் தலைவர்கள் பெயரால் விளங்குகிற இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு—ஏற்கெனவே 10 ஏக்கர் நிலம் ஒரே இடத்திலே வாங்கப்பட்டிருக்கிறது—ஒரே இடத்திலே புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய வாரைமுட்டியில் அரசு மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தரவும ஓட்டநத்தம் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தரவும் வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தென்னகத்திலே எங்களுடைய நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால், இப்படிப்பட்ட அதிக மாணவர்களைக் கொண்ட கேம்பிரிட்ஜ் என்று சொல்லக்கூடிய பாளையங்கோட்டை பக்கத்திலே இருக்கக் கூடிய காரணத்தால், கல்வியிலே சிறந்து விளங்கக் கூடிய நெல்லை மாவட்டத்திலே தமிழக அரசு பொறியியற் கல்லூரி திறந்திருப்பதை



நாங்கள் வரவேற்கிறோம். அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள், ஆகவே, பாரதியார் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திறந்தாலும், ஒரு பல்கலைக் கழகத்திற்கு 44, 43 என்ற விகிதத்தில்தான் கல்லூரிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் வீரம் செறிந்த சுதந்திரப் போராட்ட வீரர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. பெயரால் ஒரு பல்கலைக் கழகம் துவங்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று எங்களுடைய மாவட்டத்தில் வளர்ந்து வரக்கூடிய தூத்துக்குடி தொழில் நகரம். அங்கே அதிகமான மூலதனத்தைப் போட்டு பல்வேறு தொழிற்சங்கங்கள் இருக்கின்ற காரணத்தால் அங்கே தூத்துக்குடியிலே ஒரு பெண்கள் பாலிடெக்னிக் அமைத்துத் தர வெண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இங்கே பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில இருக்கக்கூடிய பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. எம். எஸ்.ஸி எம். காம் போன்ற உயர்நிலைப் படிப்புகள் இல்லை. அவைகளை அந்தக் கலலூரிகளிலே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய தனியாருக்குச் சொந்தமான ஒரு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் அந்தப் பள்ளியை மூடக்கூடிய அளவுக்கு எதேச்சாதிகாரமாக இன்றைக்குச் செயல்படுகிறார். அந்தப் பள்ளியையும் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை தொகுதியில் என்னுடைய அருமைத் தோழர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.டி.கருப்பையா பல நேரங்களிலே இங்கே தெரிவித்து இருக்கிறார்—கோட்டுமலையாண்டிப்பட்டணம் மனோன்மணி செல்லமுத்து என்ற தாய் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு 100 ஏக்கர் தானமாகக் கொடுத்தும், பொது மக்கள் ரூ. 55,000 அரசுக்குச் செலுத்தியும் முதன்மைக் கல்வி அலுவலர் ரூ. 5,75,000 கட்டிடம் கட்டப் பரிந்துரை வழங்கியும் இதுவரைக் கட்டுவதற்குச் செயற்குறிப்பு வரவில்லை. ஆகவே அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், பல்வேறு பல்கலைக் கழகங்களானாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, மாணவர்களுடைய போராட்டம் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தை எப்படி முடிவிற்குக் கொண்டுவருவது என்பதைப் பற்றி எல்லாம் கடந்த ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சர்வ கட்சியினர் கொண்ட இரண்டு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார்கள். நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதெல்லாம், இன்றைக்குப் பல்வேறு கோரிக்கை

களுக்காக மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். போராடுகின்றபொழுது, உடனடியாக அந்தப் போராட்டத்திலே தலையிட்டு, அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நல்ல சூழ்நிலைகள் இருக்கின்றன. யார் போதிக்கிறார்களோ, யார் பொறுப்பிலே இருக்கிறார்களோ, அவர்களே அதிலே ஈடுபடுகிற காரணத்தால், கால இடைவெளி அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பிரச்சனைகள் தீர்வதற்குப் பதிலாக, பிரச்சனைகள் மேலும் சிக்கலாக செல்லக்கூடிய கூற்றைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அப்படிப்பட்ட மாணவர் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு தனி இயக்குநர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் பள்ளிகளிலே நடைபெறுகின்ற தில்லுமுல்லுகளை நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம், குறிப்பாக மைனாரிட்டி என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் மைனாரிட்டி சமுகத்தைச் சேர்ந்த அந்தக் கல்வி நிறுவனங்களில் மைனாரிட்டி ஆசிரியப் பெருமக்களையே அங்கே பழிவாங்குகிறார்களே தாக்குதலுக்கு அவர்கள் உள்ளாக்கப்படுகிறார்களே, அவர்களுடைய நியாயமான கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. ஆகவே அந்த மைனாரிட்டியைக் காப்பதற்கு ஏன் இந்தத் தமிழக அரசாங்கம் அந்த மைனாரிட்டியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லக் கூடாது? மைனாரிட்டி என்று சொல்வது மதத்தைப் போதிப்பதற்கும் அவர்களுடைய மத சமுதாயங்களை நிலைப்படுத்துவதற்கும் தானே தவிர, கல்வியின் பேரால் சுரண்டுவதற்காக அல்ல. அப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்கு தமிழக அரசு தனி சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் மாலை நேரக் கல்வி மூடப்பட்டிருக்கிறது என்ற செய்தி இங்கே வந்திருக்கிறது. அங்கே இருக்கின்ற கல்லூரி முதல்வருக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டதன் காரணமாக கடந்த 20 நாட்களாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருந்த மாலை நேரக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் தலையிட்டு அந்த மாணவர்களுக்குக் கல்வி தொடர்ந்து வழங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் மத்திய மாநில அரசுகளின் சார்பில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் இன்னும் பல்வேறு மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிற உதவித் தொகை அங்கே இருக்கக்கூடிய நிர்வாகத்தினரால் — வருட ஆரம்பத்திலே பெறப்பட்ட அந்தப் பணம் — மாணவர்களுக்குக் கொடுக்கப்படாமல் வட்டிக்கு விடப்படுகின்ற நிலை இருக்கிறது. எந்த தினத்தில் அந்த உதவித் தொகை மாணவர்களுக்கு வருகிறதோ உடனடியாக அந்தத் தொகை அந்த மாணவர்களின் கரங்களில் ஒப்படைக்கக் கூடிய வகையில் மாதாமாதம் கொடுக்கின்ற உணவுக் கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்றும் தவறினால் மாணவர்களை நீக்கிவிடலாமென்றும் என்ற முறையிலே அறிவுறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறதென்றால் மாணவர்கள் பெயரால் கொள்ளை நடக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



* **திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட 1982-83ஆம் ஆண்டுக்கான கல்வி மான்யக் கோரிக்கையில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,000 இளநிலை ஆசிரியர்கள் பதவி, 500 தமிழாசிரியர்கள் பதவி, 150 உடல் பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளை இந்த அரசு கொண்டு வந்ததற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல 1982-83இல் 122 கூடுதல் முறைசாராகக் கல்வி நிலையங்களை அமைப்பது குறித்து மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே விளையாட்டை எடுத்துக் கொள்வோமானால் மகளிருக்காக பெண்கள் விளையாட்டுப் பள்ளி கோவையில் ஆரம்பிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும். 150 கிராமப்புற விளையாட்டு நிலையங்கள் ஏற்படுத்தவும் பொழுதுபோக்கு மையங்கள் 8 ஏற்படுத்துவதும் குறித்து நான் அரசைப் பாராட்டுகிறேன். விளையாட்டிற்காக தமிழக அரசு இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்தும் தமிழகத்தில் விளையாட்டு ஏன் நசிந்துபோகிறது என்பதற்கான சில காரணங்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு மையங்களில் பணியாற்றும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும். அதுபோலவே பயிற்சியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க தனிச் சலுகை காட்ட வேண்டும். மாவட்ட விளையாட்டுகளில் முன்னாள் சிறந்த வீரர்களுக்கு நமது தமிழகத்திற்கு புகழ் தேடித் தந்தவர்கள் அப்படிப்பட்டவர்களைப் பயிற்சியாளர்களாக நியமிக்க வேண்டும்.

விளையாட்டுப் பணிகளில் விடுதிகளில் இன்றைய மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அதில் தகுதி படைத்த மாணவர்களைச் சேர்த்தால்தான் இந்தத் தமிழகத்திலே சிறந்த விளையாட்டு வீரர்களை நாம் உருவாக்குகின்ற வழிவகையைச் செய்ய முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

வெளி மாநிலத்திற்கு வீரர்களை, வீராங்கனைகளை அழைத்துச் செல்கிறபோது — 1981ஆம் ஆண்டு ஹைதராபாத்திற்கு வீராங்கனைகளை அழைத்துச் சென்றபோது அதில் சிறந்த விளை

யாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில்—அனைத்து மாவட்டங்களிலே வெற்றி பெற்ற குழுவிலிருந்தும், அனைத்து மாவட்டங்களிலே வெற்றிக்கு முயன்ற குழுவிலிருந்தும் சிறந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பின்னால் சென்னையில் அவர்களை வைத்து அதன்மூலமாகத் தேர்வு செய்து அதில் சிறந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்து எடுத்து அனுப்பினால் இன்று தமிழகம் ஹைதராபாத்தில் வெற்றிபெற வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் ஹைதராபாத்தில் நடைபெற்ற விளையாட்டில் தமிழகத்திலே இருந்து சென்ற கொகோ விளையாட்டிற்கான தேர்வுமுறையில் சென்னையில் உள்ள ஒரே ஒரு கல்விக் கூடத்திலே மட்டும் 5 மாணவிகளை மட்டும் தேர்ந்தெடுக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. ஆகையால் தமிழ்நாட்டிடிலே அனைத்துப் பள்ளிகளையும் சேர்ந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50)

அடுத்து, சென்னையில் கொகோ பயிற்சியாளர் ஒருவர் ஒரு பள்ளியில் படிக்கும் மாணவ வீரரின் பிறந்த தேதியை திருத்தியதுடன் இன்னொரு பள்ளியில்—தாம்பரம் கார்லி ஹையர் செகன்டரி பள்ளியில் படிப்பதாக சான்று தயாரிக்கிற அளவில் தனக்குப் பெயர் கிடைப்பதற்காக வழி வகுத்துள்ளார். அவரைப்பற்றி அரசுக்குப் புகார்கள் பல கொடுக்கப்பட்டிருப்பதாகவும் நான் அறிகிறேன். போட்டிகளுக்கு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்களிடம் தவறாகப் பணம் வாங்கி செயல்படுவதாகவும் பல புகார்கள் வந்துள்ளன. புகார்களில் சொல்லப்பட்டுள்ள அந்த கொ கோ கோச் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது உடற்கல்வி ஆய்வாளர்களை நேரடித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படியானால்தான் அவர்களுடைய பணி சிறப்பாக இருக்கும். மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் நியமிப்பதில் நேரடித் தேர்வு நடத்தாமல், ஆரசு ஆணை எண் 1550-ல் புதிய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நியமனம் செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டவர்கள் யாருமே நேரடித் தேர் வுக்கு வரவில்லை. வந்திருந்தால் அவர்கள் அந்தந்த முதன்மைக் கல்வி அதிகாரியிடம் முன் அனுமதி பெற்றிருப்பார்கள்; அதற் கான டி.ஏ. பணமும் வாங்கியிருப்பார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா செயலாளரும் அமெரிக்கா சென்றிருந்தபோது அவசர அவசரமாக ஆணை பிறப்பிக்கப்பட் டுள்ளது. அதுபற்றி புகாரும் வந்திருக்கிறது. நல்ல அனுபவமும் திறமையும் உள்ளவர்களைச் சேர்க்காமல் அனுபவமில்லாதவர் களை நியமித்து அதன் காரணமாக அரசுக்குச் கெட்ட பெயரை ஏற்படுத்தியிருக்கிறர்கள். அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்றும் தீவிர நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொள் கிறேன்.



அடுத்து, விளையாட்டுத் துறையில் பணிபுரிகிறவர்கள் தங்களுடைய குறைகளைச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடக் கூடாது என்று சமீபத்தில் விளையாட்டு இயக்குநரால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் முறையிடுவதில் தவறு ஒன்றும் இல்லை. இந்தச் சுற்றறிக்கை மூலம் அவர்கள் குறைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் சொல்வதை தடை செய்வது இயக்குநரின் எதேச்சாதிகாரப் போக்கைக் காட்டுகிறது. எனவே இந்த சுற்றறிக்கையை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி, மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளுக்கு அந்தந்த துறையில் நல்ல படிப்பும் அனுபவமும் உள்ளவர்களை இயக்குநர்களாக நியமிப்பதைப்போல விளையாட்டுத் துறைக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாப் மாநிலத்தில் சிறந்த விளையாட்டு வீரரான மிஸ்காசிங் என்பவரை டெபுட்டி டைரக்டராக நியமித்திருப்பதைப்போல தமிழ்நாட்டிலும் சிறந்த விளையாட்டு வீரர்களை இந்தத் துறையில் நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை 1981ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் அரசு ஊழியர்களாக்கி அரசு ஊழியர்களுக்கு வழங்கிவந்த அத்தனை சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கிட உத்தரவிட்ட இந்த அரசைப் பாராட்டுகிறேன். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதன் நிமித்தம் மாவட்ட கல்வி அலுவலகங்களின் பணி மிகவும் அதிகரித்துவிட்டதன் காரணமாக மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பணியில் தேக்க நிலை ஏற்படுகிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பிரச்சனைகள் பல தீர்க்கப்படாமல் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. தேக்கத்திற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டால் மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஏற்ப ஏனைய இலாகாக்களை போன்று கண்காணிப்பாளர் பணியிடங்கள் இல்லாததால் பணி தேக்கம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 51 கல்வி மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. அங்கே எழுத்தர்கள் மட்டும் 800 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், இந்த 800 பணியாளர்கள் செய்த பணிகளைக் கண்காணிக்க கல்வி மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 51 பேர்கள் மட்டுமே உள்ளனர். ஏறத்தாழ 16 பணியாளர்களுக்கு ஒரே ஒரு கண்காணிப்பாளர் இருக்கிறார். ஏனைய துறைகளில் குறைந்த பட்சம் 5 பணியாளர்களுக்கு ஒரு கண்காணிப்பாளர் இருந்து

வருகின்றார். அந்த விகிதாச்சார அடிப்படையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்துற்கும் கூடுதலாக இன்னும் இரண்டு கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 20 ஆண்டுகள் பணிக்காலம் முடித்த இடைநிலை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கியதுபோல இதர பிரிவு பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் போன்றவர்களுக்கும் ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி சிறப்பு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கு இரண்டு வருடம் பயிறசி பெற்றதனால் 1981ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் அரசு ஆணை 1759-ன் படி ஒரு ஊதுய உயர்வு வழங்கியது போல மற்ற ஆசிரியர்களான பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், தையல், தோட்டக்கலை ஆசிரியர்களுக்கும் ஒரு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சாயத்துப் பள்ளிகளை 1–6–1981 முதல் அரசுப் பள்ளிகளாக்கியதால் அதனை நிர்வாகம் செய்வதற்காக உதவிக் கல்வி இயக்குநரின் கீழ் ஏற்கெனவே இதனை நிர்வாகம் செய்து வந்த டெபுடடி இன்ஸ்பெக்டர் அவர்களும் பணி புரிந்து வருகிறார்கள். இதற்குப் பதிலாக இந்த இரண்டு பணிகளையும் செய்யக்கூடிய அனுபவம் பெற்ற தலைமை ஆசிரியரை அங்கே நியமித்து அவர்கள் மூலமாக, அதாவது ஒரே ஒரு பதவியின் மூலமாக செயல்படுகின்ற நிலைமையை ஏற்படுத்தினால் நல்லது. ஆகவே ஊராட்சி ஒன்றிய ஆட்சிக்கு உட்பட்ட பள்ளிகளாக நிர்வகிக்கப்படுவதற்குரிய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலே நாங்குநேரி ரேஞ்சிலே சி. எம். எஸ். ஹையர் எலிமென்டரி ஸ்கூல் இருக்கின்றது. இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பதவிக்கு இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அவர் தமிழ்ப் புலவர் இல்லை. பி.எஸ்ஸி., பி.எட்., என்ற காரணத்தால் அவருக்கு இன்னும் சம்பளம் இரண்டு வருடங்களாகக் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆனால் கடையநல்லூரில் பணிபுரியும் பி.ஏ., பி. எட்., தலைமை ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே கடையநல்லூருக்குக் கொடுக்கப்பட்டது போல் ஆழ்வாநேரி சி. எம். எஸ. ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் உள்ள தலைமை ஆசிரியர் பதவிக்கும் அங்கீகாரம் அளித்து அவர்களுக்குரிய சம்பளத்தைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவள் காலஞ்சென்ற தலைமை ஆசிரியரின் மகள்.





அடுத்து நாங்குநேரி ரேஞ்சில் தாமரைக்குளம் என்ற ஊரில் அரிஜன நலக் கமிட்டியால் ஒரு ஆரம்பப் பள்ளி நடத்தப்பட்டது. அது ஒரு ஆரம்பப் பள்ளி. ஆனால் திடீரென்று அதற்கான அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே அங்கே குழந்தைகள் படிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அவர்கள் 3 மைல் தூரத்தில் உள்ள வேறு ஒரு பள்ளிக்குத்தான் போக வேண்டி இருக்கிறது. தற்போது கல்வி இலாகாவின் டெபுட்டி டைரக்டர் அவர்கள் வந்து நேரில் பார்த்து சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அரிஜன் வெல்பேர் இலாக்கா அந்தப் பள்ளியினை எடுத்து நடத்த மறுத்து விட்ட காரணத்தால் அந்தப் பள்ளியினை அரிஜன கமிட்டியே நடத்துவதற்கும் 25 ஆயிரம் ரூபாய் என்டோமென்ட் கட்ட வேண்டும் என்று இருக்கின்றது. அந்த விதியினைத் தளர்த்தி அரிஜன மக்களின்பால் அக்கறை கொண்டிருக்கின்ற இந்த அரசு அங்கே அரிஜன நலக் கமிட்டியாலே தற்சமயம் நடத்தப்படுகிற அந்தப் பள்ளியினை நடத்துவதற்குரிய அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து நெல்லை கிழக்கு மாவட்டத்தில் ஆசிரியர்களின் சார்பாக பல பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்........ (மணியடிக்கப்பெற்றது)

*திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆண்டுதோறும் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற தொகை உயர்ந்து கொண்டே போகிறது. இவ்வாண்டு ஏறத்தாழ 291 கோடி ரூபாயை இங்கே கோரி இருக்கிறார்கள். ஆனால் இந்த ஒதுக்கீடு உயர்கிற அளவுக்குக் கல்வியின் தரம் உயர்ந்திருக்கின்றதா என்றால் உள்ளபடியே நாம் வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவுக்குக் கல்வித் தரம் உயரவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஒரு காலத்தில் ஆல் இண்டியா காம்பெட்டிட்டிவ் எக்ஸாமினேஸன் ஆகிய ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற தேர்வுகளில் தமிழகம்தான் முன்னோடியாகவும் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கியது என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால் அண்மைக் காலமாக ஒவ்வோர் ஆண்டும் தமிழகத்திலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதற்குக் காரணம் கல்விதான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைய தினம் தமிழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை
93.75 இலட்சமாகும். ஆனால் ஆசிரியர்களின் எண்ணிக்கை
2.71 இலட்சமாகும். இந்த மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம்
இன்னும் குறைந்தால்தான் உள்ளபடியே தரமான கல்வி
யினைத் தர முடியும். ஆகவே அந்த வகையிலே ஆசிரியர்
மணவர்களின் விகிதாச்சாரம் மாற்றப்பட வேண்டும். இன்றைய
தினம் இரண்டாயிரம் ஆசிரியர் பதவிகளை நீங்கள் புதிதாக
அறிவித்திருக்கிறீர்கள். அப்படி ஏற்படுத்தி இருக்கின்ற இரண்டு
ஆயிரம் ஆசிரியர் பதவிகளில் தமிழ் ஆசிரியர்களின் பதவி 500
மட்டுமே என்று இருப்பது உள்ளபடியே மிகவும் வருந்தத்தக்கது.
ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலே பெரும்பாலும் வேலை
வாய்ப்பற்று இருப்பவர்கள் புலவர் பட்டம் பெற்றவர்கள்தான்.
ஆகவே அந்த 500 என்ற எண்ணிக்கையினைக் குறைந்தபட்சம்
1000 என்று உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தினால்தான்
தமிழ் ஆசிரியர்களிடையே இருக்கின்ற வேலையில்லாத் திண்
டாட்டத்தை ஓரளவுக்குப் போக்க முடியும். அதே போன்று
இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றிய ஆசிரி
யர்களை எல்லாம் அரசு ஊழியர்கள் என்று நீங்கள் அறிவித்
திருக்கிறீர்கள். அவர்களும் கூட இதை வரவேற்று அறிக்கை
எல்லாம் கூட விட்டார்கள். ஆனால் இன்றைய தினம் என்ன
நிலைமை? ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு நாம் அடிமையாக
இருப்பதா என்று சொல்லி இன்றைய தினம் கல்வித்துறையிலே
உள்ள ஏ.இ ஓ-க்களுக்கு அடிமையாக ஆக்கப்பட்டிருக்கின்ற
நிலைமை இருக்கின்றது.

அவர்களுக்கு என்று கட்டிடங்கள் கிடையாது;
கிடையாது; பர்னிச்சர் கிடையாது. அதே ஊராட்சி ஒன்றிய
கட்டிடங்களில்தான் இன்றைய தினம், இந்தக் கல்வி இலாகாவின்
பிரிவும் இருக்கிறது. உள்ளாட்சித் துறை கமிஷனர் அவர்கள்
சொல்கிற பரிந்துரைகள் போல்தான், அதே அளவுதான்
பரிந்துரைகளைக் கல்வித் துறையின் அதிகாரிகளும் அங்கே செயல்
படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதை நான் அரசின்
கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் ஆசிரியர்களை
அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை
எந்தப் பலன்களுக்காக வைத்தார்களோ, அந்தப் பலன்களை
அவர்கள் பெறவில்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
குறிப்பாக பி. எப். அட்வான்ஸ் சேங்ஷன் பெறுவது, சைக்கிள்
அட்வான்ஸ் பெறுவது, அல்லது விடுப்புச் சம்பளங்கள் இவை
களையெல்லாம், அவர்கள் ஏ.இ.ஓ. அவர்களிடத்திலே சென்று
பார்த்து சொன்னால் கூட அந்தச் சம்பளங்களும், அட்வான்ஸ்
களும் அவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப் பெறுவதில்லை.



(பிற்பகல் 1.00)

ஆனால் இதற்கு முன்னால் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்
இருந்தபோது, குறைந்த கால அவகாசத்திலேயே இவைகள்
கொடுக்கப்பட்டு வந்தன என்பது மட்டும் அல்ல, அதிலே
தற்போது சில ஊழல்கள் நடைபெறவும் செய்கின்றன என்றும்
குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக நண்பகல் உணவுத் திட்டத்தைப் பற்றி எடுத்துக்
கொண்டால், அரசு மானியமாக ஒரு மாணவனுக்கு 10 பைசாவும்,
உள்ளாட்சி நிறுவனங்களிடம் இருந்து 5 பைசாவும் பெற்று,
மொத்தம் 15 காசுகள் பகல் உணவிற்காக ஒவ்வொரு மாண
வனுக்கும் கொடுக்கப்படுகிறது. இது போதாது. இது மிகவும்
குறைந்த தொகை. குறைந்தபட்சம் அரசு மானியத் தொகை
யை 30 காசாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் இருக்கிற 4,433 பால்வாடிகளில்
நர்சரிப் பள்ளிகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்
கிறார்கள். இந்த நர்சரிப் பள்ளிகளுக்குத் தேவையான சிலபஸ்
உருவாக்குவதற்கு நவம்பர் 1981ல் அரசு ஒரு குழு அமைத்தது.
இன்று வரையில் அவர்கள் அந்தப் பாடத் திட்டத்தின் முறைகளை
அறிவிக்கவில்லை. எனவே இந்த ஆண்டு முதல் நீங்கள் துவங்க
விருக்கிற நர்சரிப் பள்ளிகளில், எந்தப் பாடத் திட்டத்தை
அமுல்படுத்தப் போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை.
எனவே வருகிற கல்வி ஆண்டிலேயாவது அந்தப் பாடத் திட்டங்
களை உடனடியாகப் பெற்று, தனியார் நர்சரிப் பள்ளிகளில்
ஏற்பட்டிருகிற ஒழுங்கீனங்களை அகற்றுகிற அளவுக்கு, இந்த
நர்சரிப் பள்ளிகளை உடனடியாகத் துவக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் குறிப்பாக,
தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பள்ளிக் கூடங்களுக்கு ஒழுங்கான
பள்ளிக் கட்டிடங்கள் கிடையாது, என்னுடைய தொகுதியிலே
கூட திருநாகேஸ்வரம், திருச்சேரை நாச்சியார் கோவில், பந்த
நல்லூர், அணைக்கரை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில்
போதுமான கட்டிடங்கள் இல்லை. சோதனை சாலைகள்
கிடையாது. போதுமான ஆசிரியர்கள் கிடையாது. என்னுடைய
தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்திலே, அணைக்கரை
நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கியிருக்கிறார்
கள். அதில் தற்போது 6 ஆசிரியர்களே பணியாற்றி வருகிறார்
கள். அது நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது 12 ஆசிரியர்
கள் பணியாற்றினார்கள். தற்போது உயர் நிலைப் பள்ளியாக
மாற்றப்பட்டதற்குப் பிறகு 6 ஆசிரியர்களே பணிபுரிந்து வரு
கிறார்கள். ஆகவே அங்கே மாணவர்களுக்குப் பல பாடங்கள்
சொல்லிக் கொடுப்பதே கிடையாது என்பதை இந்த நேரத்திலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1982 மார்ச் 16

அதே போல சென்ற ஆண்டு திருவிடைமருதூர் ஒன்றியத்தில், உயர் நிலைப் பள்ளியில் புதியதாக ஒரு தமிழாசிரியர் பதவியை ஏற்படுத்தி தமிழ் பயின்ற புலவர் பட்டம் பெற்ற, அனுபவம் மிக்க ஒருவரை தமிழாசிரியராக நியமிக்க வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று வரையில் அந்த நியமனம் செய்யப்படவில்லை. அங்கேயிருக்கிற ஒரு ஆசிரியர் 15 ஆண்டுக் காலம் அனுபவம்பெற்ற, புலவர் பட்டம் பெற்ற ஒருவர் தன்னை அந்தப் பதவியில் நியமிக்க வேண்டும் என்று கேட்டிருந்தும் அவரை நியமிக்காமல், நேரிடையாக நியமனம் செய்ய, அங்குள்ள அதிகாரிகள் ஆட்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, ஒரே பணி செய்பவர்களுக்கிடையே ஊதிய வேறுபாடு இருக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால், நமது மாநிலத்திலேயே உள்ள உயர் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, மைய அரசின் பொறுப்பில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் ஒருவிதமான சம்பளமும், மாநில அரசின் பொறுப்பில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் வேறு விதமான சம்பளமும் ஆக இரண்டு வேறு பட்ட ஊதியங்கள் வழங்கப்படுகின்றன. எனவே இந்த வேறுபாட்டை நீக்குகிற வகையிலும், ஆசிரியர்களுக்கு உதவி செய்கிற வகையிலும், மைய அரசு வழங்குகிற அந்த ஊதிய விகிதத்திலேயே, மாநில அரசுப் பள்ளிகளிலும், ஊதியங்களை வழங்க வேண்டும் என்றும், அந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் சிறப்பாக பல்லாண்டு காலமாக நடைபெற்று வந்த, கஸ்தூரிபா காந்தி நடுநிலைப் பள்ளி என்ற பெண்கள் பள்ளியில் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே தீ விபத்து ஏற்பட்டபோது கட்டிடங்கள் எரிந்து போய்விட்டன. ஏறத்தாழ 40,000 ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் இந்தப் பள்ளி நிர்வாகத்தினர் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி கோரி கடிதம் எழுதியிருந்தார்கள்.

இன்றுவரை கொடுக்கப்படவில்லை. ஆனால் இன்றைய தினம் அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் சம்பளத்தைப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் இந்த ஆசிரியர்களின் நிலை மிக மிக மோசமாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து— எது எதற்கோ உதவி செய்கிறார்கள்— நிதி உதவி கொடுத்து அந்தப் பள்ளிக்கூடக் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 16] [திரு. செ. இராமலிங்கம்]

திருநாகேஸ்வரம் உயர்நிலைப்பள்ளி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தீப்பிடித்து எரிந்தது. அந்தக் கட்டடம் பொது மக்கள் உதவியோடு ஏறத்தாழ 15,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டதாகும். இன்று அந்தக் கட்டடம் அடியோடு நாசமாகி விட்டது. அதற்கும் முதல அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தை அரசினர் ஆண்கள் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு 126 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகள் எல்லாம் இன்றைய தினம் முழுமைபெற்ற கல்லூரிகளாக இருக்கின்றன. ஆனால் இன்றையதினம் அந்தக் கல்லூரியை ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகக்கூட நீங்கள் நினைத்தால் மேம்படுத்தலாம். ஆனால் மாறாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற பொறுப்பில் இருந்த காலத்தில் எம். எஸ்ஸி. (பிஸிக்ஸ்), எம். எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) வகுப்புகளுக்காக மூன்று இலட்சம், மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்குத் தேவையான உபகரணங்கள் எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஐந்தாண்டுக் காலத்தில் அந்த வகுப்புகள் அங்கே துவங்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கும்பகோணம் கல்லூரிக்கு 1975 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் 14 இலட்சம் ரூபாய் அங்கே மாணவர்கள் விடுதி கட்டுவதற்குத் தொகை ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த ஆட்சியைக் கலைத்ததற்குப் பிறகு இன்றுவரை அங்கே மாணவர்கள் விடுதி கட்டுவதற்கு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மாறாக அங்கே ஒரு பழைய ஹாஸ்டல் கட்டடம் இருக்கிறது. அது தனியார் டிரஸ்டுக்குச் சொந்தமானது. அந்தக் கட்டடம் இன்று இடிந்துகொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே புதிதாக அந்தக் கல்லூரிக்கு உடனடியாக ஒரு ஹாஸ்டல் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு காலத்தில் என். ஸி. ஸி. பயிற்சி, கல்லூரி மாணவர்களுக்குக் கட்டாய பாடமாக இருந்தது. இன்றைய தினம் அந்த நிலைமை இல்லை. எனவே மீண்டும் அந்த என். ஸி. ஸி. பயிற்சியை கட்டாய பாடமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என். ஸி. ஸி. பயிற்சி மூலம் மாணவர்களிடத்தில் ஒரு கட்டுப்பாடு, ஒழுக்கம், தேசப்பற்று ஆகிய நல்ல குணாதிசயங்களை ஏற்படுத்த முடியும். எனவே என். ஸி. ஸி. பயிற்சியை மீண்டும் கட்டாய பாடமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980-81 தேர்வு முடிவுகளில் பல்வேறு தவறுகளையெல்லாம் நாம் கண்டோம். அப்படிப்பட்ட தேர்வு முடிவுகள் மீண்டும் வராமல் இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரே பாடத்தில் எல்லா மாணவர்களும் ஒரேமாதிரியான மதிப்பெண்கள் பெற்று அனைவரும் தேர்வில் வெற்றி பெறவில்லை என்ற செய்தி நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அப்படிப்பட்டதொரு நிலை, தனியாக இயக்குநரகம் அமைத்ததற்குப் பிறகு ஏற்படுவது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது.

மற்றொன்று, சென்னையில் ஆவணக் காப்பகம் கொள்ளை போனது போல் தஞ்சையில் சரஸ்வதி மகாலிலும் கொள்ளை போயுள்ளது. விலைமதிப்பற்ற நூல்கள் பல, ஓலைச்சுவடிகள் பல, ஓவியங்கள் பல, கலைச்சின்னங்கள் பல தஞ்சை சரஸ்வதி மகாலிலிருந்து கொள்ளை போயுள்ளன. சரபோஜி மன்னன் தஞ்சையை மராட்டியர் கவர்ந்ததன் சின்னமாக ஆண்ட போது பற்பல மொழி நூல்களையும் ஓவியங்களையும், சிற்பங்களையும் சேகரித்து சரஸ்வதி மகாலைச் செழுமைப்படுத்தினர். இன்றும் பன்னாட்டாரும் தேடி வந்து பயன் பெறும் அறிவுப்பெட்டகங்கள் அவை. அரியனவான இந்த நூல்கள் ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன், பிரெஞ்சு, வடமொழி மற்றும் பல மொழிகளில் ஆனவை. இந்த நூல்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கக்கூடாது என்பது நூலக விதி. ஆனாலும் நூலக நிர்வாகக் குழுவினர் சிலர் அதிகார துஷ்பிரயோகம் செய்து நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எடுத்துச் சென்றுள்ளனர். பதினேழு, பதினெட்டு, பதினொன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை அந்த நூல்கள். இதுவரை அவை திருப்பித் தரப்படவில்லை.

பக்தி மீமச பாஷ்யம் என்பது நாராயண தீர்த்தா என்ற முனிவர் எழுதியது. சரஸ்வதி மகாலில் ஓலைச்சுவடியாக இருந்த இந்நூலும் காணாது போயுள்ளது. இந் நூலுக்கு சரஸ்வதி மகால் நூலக வடமொழி நூற்பட்டியலில் எண், 14-டி. எஸ். 8226 என்ற எண் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சரபோஜி மன்னர் சேர்த்து வைத்த நூல்களுள் ஒன்று காகிதத்தில் எழுதப்பட்டிருந்த இராமாயணக் கையெழுத்துப் பிரதியாகும். இதில் கனத்த தாளில் படங்கள் வரையப்பட்டிருந்தன. படங்கள் வரையப்பட்ட இரு தாளை இப்போது காணோம்.



(பிற்பகல் 1.10)

இந்த அரிய படத்தை நூலகத்தின் மராத்தி நூற்பட்டியலில் இப்படங்கள் பொது மக்கள் பார்வைக்காக கண்ணாடி பீரோவில் வைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், அவைகள் எல்லாம் இன்று களவுபோய் இருக்கின்றன. இந்த விவரங்கள் எல்லாம் இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளிலே எழுதப்பட்டிருக்கிறது. இதை இந்த நேரத்தில் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 17 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் எல்லாம்கூட, இன்றைக்குத் திருடுபோய் இருக்கின்றன. அதேபோல், நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட குத்து விளக்குகள் எல்லாம், அப்பேர்ப்பட்ட விலை மதிக்க முடியாத பொருள்கள் எல்லாம் இன்றைக்குச் சரஸ்வதி மகாலில் திருடப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கே அதை நிர்வாகக் குழுவிலே உள்ளவர்களே தவறு செய்கிறார்கள் என்றும், அப்பேர்ப்பட்ட தவறுகளைக் களைய வேண்டுமென்றும் கூறி அமைகிறேன்.

**திரு. அ. ரகுமன்கான் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், மன்றத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தையொட்டி, மீண்டும் இன்று காலை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, இரண்டு பேர்கள் இறந்ததாகத் தகவல் அங்கிருந்து கிடைத்திருக்கிறது. இந்தத் தகவல் உண்மையான தகவலா என்று அறிவிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் கிடைத்தவுடன் இங்கே சொல்லப்படும்.

*** திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தக் கல்வி மானியத்தின்மீது, எங்களுடைய காங்கிரஸ் (ஐ) கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று நம்முடைய நாட்டிலே நல்ல ஒழுங்கு, கட்டுப்பாடு இவைகளைக் கொண்டு வரவேண்டுமென்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இந்த நேரத்திலே வளர்ந்து வரக்கூடிய ஜெனரேஷனை நாம் கட்டுப்படுத்தக்கூடிய நிலையிலே இல்லை. எனவே, வளரக்கூடிய சமுதாயத்தை, இளைஞர்கள் சமுதாயத்தை, இவர்களை எப்படி கட்டுப்படுத்தப் போகிறோம், அவர்களிடையே ஒழுங்கு, கட்டுப்பாடு, சண்ணியம் ஆகியவற்றை

எப்படி வளர்க்கப் போகிறோம் என்பதைச் சிந்திப்பது இந்த அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இதிலே அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்று பள்ளியிலே இருந்து படித்துவிட்டு, கல்லூரிக்கு வந்து டிகிரி வாங்கக்கூடிய ஒரு மாணவன், டிகிரி வாங்கியவுடனே, அவன் மனதிலே ஒரு பிரஸ்ட்டிரேஷன் அதாவது ஒரு வெறுப்பு அந்த டிகிரியைப் பார்த்தவுடனே ஏற்படுகின்றது. டிகிரி வாங்கிவிட்ட ஆனந்தத்திலே அந்த ஸ்டூடன்டு இல்லாத நிலைமையைப் பார்க்கிறோம். அதனால தான் இந்த நாட்டிலே இன்றைக்கு மாணவர்கள் மத்தியிலே ஒரு இன்-டிசிப்ளின் வளர்ந்து கொண்டு வருகிறது. அதைப் பார்க்கின்ற படிக்ககூடிய ஸ்டூடன்டு மனதிலே, தனக்கு என்ன ஆகுமோ, எப்படி ஆகுமோ என்ற நிலையில் அவர்கள் மத்தியிலே ஒரு இன்-டிசிப்ளின ஏற்பட்டு, இதைக் கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் அவர்கள் ஏற்படுத்த முயல்கிறார்கள். இதைத் தீர்க்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின முக்கியக் கடமையாக இருக்க வேண்டும். இதை எப்படி தீர்க்கப் போகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது இருக்கக்கூடிய பழைய கல்வி பாட முறையை அப்படியே கொண்டு வந்தால், நிச்சயமாக பள்ளிக்கூடங்களிலே படிக்கக்கூடிய பையன்கள் மத்தியிலே ஒரு செலப்-கான்பிடென்ஸ் நிச்சம் ஏற்படாது. வளரக்கூடிய சமுதாயத்தில் ஒரு செல்ப்-கான்பிடென்சை உருவாகக வேண்டும். அதை எப்படி வளர்க்க வேண்டுமென்பதை நாம் சிந்தித்துப் பார்கக வேண்டும். இப்போது சிறிய பள்ளிகளிலே, ஆரம்பப் பள்ளிகளிலே பார்க்கும் போது, ஒரு எஸ்டாபிளிஷ்ட் பாக்ட் (Es ablished fact) ஏற்பட்டிருக்கின்றதா என்று பார்த்தால், அந்தப் பையன்கள் மத்தியிலே ஒரு கன்பியூஸ்ட் மைன்ட் தான் இருக்கிறது. அந்தப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர் ஒன்றைச் சொல்லிக் கொடுக்கிறார்; பின்னால், சமுதாயத்திலே அதைப்பற்றி வேறாக, வேறு விதமாக கற்றுக் கொள்ளுகிறான்; வீட்டுக்குப் போனால், அதைப் பற்றி வேறுவிதமாகக் கற்றுக் கொள்கிறான. அதைத் தவிர்க்க வேண்டும், ஒரு மெட்டீரியலிஸ்டிக் அப்ரோச் இருக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். இன்னமும், பள்ளியிலே படிக்கக்கூடிய சிறு குழந்தைகளுக்கு,

Dogmas of doubtful revelation என்று சொல்வார்களே, அதைப்போல, ஒரு கற்பனை உலகத்திலே Stance invention of an exceptional mind என்று சொல்வார்கள். அந்த மாதிரி கற்பனை உலகத்திலே வளரக்கூடிய ஒருவனாக வளரக்கூடிய முறையில் இந்தக் கல்வி முறை இருக்கக் கூடாது. அவர்களுக்கு உண்மையான நிலை என்னவென்று தெரியவேண்டும். வளரக் கூடிய சிறு பையன்களுக்கு வெளியிலே வருகிறபோது கிரியேட்டிவ் மைண்ட் இருந்தால் தான் இந்த சமுதாயத்திலே நாம் நினைத்துப் பார்க்கிற அளவிற்கு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த முடியும். நீங்கள் இந்த "ஓல்ட் ஆடர்சையே" வைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக இன்டிசிப்பிளின்ட் ஆக்ட்டிவிட்டிஸ் என்பது தொடர்ந்து நடந்து வருமே தவிர இந்தச் சமுதாயத்தை மாற்றியமைக்க முடியாது.





சோஷலிஸ்ட்டிக் சொசைட்டி அமைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். எந்த அடிப்படையிலே அமைக்க போகிறீர்கள்? நேஷனல் சோஷலிஸ்ட்டிக் சொசைட்டியாக இருக்க வேண்டுமே தவிர, நீயும் நானும் சமம் என்று மேடையிலே பேசக்கூடிய அளவிலே அதை சிறு வயதிலே அவர்களுக்குப் புகட்டக் கூடாது. எஜுகேஷனல் சிஸ்ட்டத்தையே மாற்றியமைக்க வேண்டும். இதற்கு ஒரு "ஹை பவர் கமிட்டி" ஒன்றினை அமைக்கவேண்டுமென்று சொல்கிறேன். உங்களிடத்திலே படித்தவர்கள், இந்தத் துறையிலே மிகுந்த அனுபவமுள்ளவர்கள் இருக்கிறார்கள். "ஹை பவர் கமிட்டி" ஒன்றினை அமைத்து "எஜுகேஷன் சிஸ்டத்தை ரீ-ஓரியன்ட்" செய்யவேண்டும். "ஹை பவர் கமிட்டி" ஒன்றை அமைத்தால்தான் ஒழுங்காக, கட்டுப்பாட்டுடன் வளர முடியும்.

அடுத்து பள்ளிகளிலே, கல்லூரிகளிலே இருக்கக் கூடிய ஆசிரியர்கள் வகுப்பு நடத்தும்போது தங்களுடைய கட்சிகளைப்பற்றியெல்லாம் பேசக்கூடிய நிலை இருக்கிறது. சிறு வயதிலே யார் யார் எந்தக் கட்சி என்று தெரியாத நிலையில் மாணவர்களிடத்திலே ஒரு "கன்பூயூஸ்ட் மைண்ட்" இருக்கிறது. கட்சிகளைப் பற்றி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் தங்கள் வகுப்புக்களில் பேசக்கூடாது என்பது குறித்து அரசு ஒரு கடுமையான உத்தரவை போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்..

அடுத்து "கம்பல்சரி எஜுகேஷன்" என்று கொண்டு வந்தீர்கள். அந்தக் காலத்தில் தலைவர் காமராஜர் அவர்களும் கொண்டு வந்து, பெரியவர் பக்தவத்சலம் காலத்திலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் எல்லோரும் வரிசையாக இந்தத் திட்டத்தை வைத்து கொண்டு வருகிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. 6 வயது முதல் 14 வயது வரையில் கட்டாயமாக படிக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள். அதுவும் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கின்றபோது ஒரு பள்ளிக்கூடத்தி

லாவது ' ஃபுல் ஸ்ட்ரெங்த் ' மாணவர்கள் கிடையாது. அவர்
கள் அந்தந்த பகுதிகளில் மாடு மேய்ப்பதற்கோ அல்லது வேறு
கூலி வேலை செய்வதற்கோ போய் விடுகிறார்கள். இப்படி
யிருந்தால் இந்த நாட்டிலே சோஷலிஸ்ட்டிக் சொசைட்டியை
ஏற்படுத்த முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தது பள்ளிகளிலே முக்கியமானது ' ஸ்போர்ட்ஸ்
ஆக்ட்டிவிட்டீஸ் ' இதை நீங்கள் கம்பல்சரியாகக் கொண்டு வர
வேண்டும். இந்த ஸ்போர்ட்ஸ் ஆக்ட்டிவிட்டீஸ் மற்றும்
என். சி. சி. போன்றவைகள் கட்டாயமாக இருந்தால் மாணவர்
களிடத்தில் '' இன்டிசிபிளின்ட் '' ஒழுங்கின்மை கட்டாயமாக
இருக்காது. ஆகவே இதை அரசாங்கம் கட்டாயமாகக் கொண்டு
வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழகத்திலே ' அன்—ரெககனைஸ்ட்
ஸ்கூல்ஸ் ' இருக்கின்றன. சில நன்றாக ரன் பண்ணுகின்றன.
சில மோசமாக ரன் பண்ணுகின்றன. அதைத் தடுக்கவேண்டும்.
அரசாங்க கன்ட்ரோலில் அல்லது யூனிவர்சிடியின் கன்ட்ரோலில்
ஸ்கூல்ஸை கொண்டுவந்தால் ஒழிய நன்றாக நடக்காது. பள்ளி
களிலே இருக்கக்கூடியவர்களுக்கு செக்யூரிட்டி ஆப் ஜாப் கிடை
யாது. நினைத்தால் ஒரு வருஷம் வேலைக்கு வைத்துக் கொள்ளு
கிறார்கள். இல்லாவிட்டால் நிறுத்திவிடுகிறார்கள். பள்ளிக்
கூடங்களிலே மாணவர்களுக்கும் எஜுகேஷன் செக்யூரிட்டி கிடை
யாது. நினைத்தால் மூடிவிடுகிறார்கள். இளைஞர்களிலிருந்து
நல்ல சமுதாயத்தை வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்.
அதை நிறைவேற்றுவதற்கு இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்
தால் முடியாது, பள்ளிகளை விட்டுவிட்டால் அதைச் செய்ய
முடியாது. ஆகவே, '' யூ மஸ்ட் பிரிங் இட் அண்டர் தி கன்ட்
ரோல் ஆப் தி கவர்ன்மெண்ட் ''.

(பிற்பகல் 1-20)

என்னுடைய புதுக்கோட்டையிலே ஒரு காலேஜ் இருக்கிறது.
இங்கே இரண்டு எம். ஏ., கோர்ஸ்கள் கொடுத்திருக்கிறீர்கள்.
ரொம்ப நன்றி உங்களுக்கு. ஆனால் அங்கே ஷிப்ட் சிஸ்டம்
வைத்துத்தான் படிக்கவேண்டி இருக்கிறது. கட்டிடத்தினை
விஸ்தரிக்க 'எக்ஸ்டன்ஷன் ஆப் பில்டிங்' இல்லாமல் எல்லா
கிளாஸ்களையும் இருக்கிற இடத்திற்குள்ளேயே நடத்தவேண்டி
யிருக்கிறது. ஆகவே, எக்ஸ்ட்ரா பில்டிங் கட்டிக் கொடுத்து இன்
னும் எம். ஏ., கோர்ஸ்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்
டும். இல்லாவிட்டால் கஷ்டமாக இருக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.





அந்தக் கல்லூரி இந்த ஆண்டு நூற்றாண்டு விழாவைக்
கொண்டாடுகிறது. அது ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் ஆகி
விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து நடத்திக்
கொடுத்தார்கள் அதை. அந்த காலேஜிலே உட்கார்ந்து ரிக்ரியே
ஷன் ஆக்டிவிடிஸ் செய்து கொள்வதற்கு ஆடிட்டோரியம் இல்லாத
நிலை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்த வருஷம் அதை
கட்டிக் கொடுத்து பராமரிக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்
டுக் கொள்கிறேன்.

பக்கத்திலே கேர்ள்ஸ் காலேஜ் இருக்கிறது. அங்கே எம்., ஏ.
கோர்ஸ் கிடையாது. இன்னும் எக்னாமிக்ஸ் வரவில்லை. அங்கே
ஒரே ஒரு கேர்ள்ஸ் காலேஜ்தான் இருக்கிறது. ஆகவே இந்த
கோர்ஸை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அங்கே ஒரு எஸ். சி. ஹாஸ்டல் இருக்கிறது. அந்த ஹாஸ்டல்
அரசாங்கத்தின் ரெவின்யூ டிபார்ட்மெண்டால் ரன் பண்ணப்படு
கிறது. அதைக் காலேஜ் பொறுப்பிலே கொடுத்துவிட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இன்னும் இரண்டு
காரியங்கள் இல்லாமல் இருக்கின்றன. விளையாட்டு மைதானமும்
ஆடிட்டோரியமும் கிடையாது. அரசாங்கம் இந்த இரண்டையும்
அங்கே அவசியமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன்.

ஸ்காலர்ஷீப் பி. சி.-க்கு என். சி.. பையன்களுக்குக் கொடுக்
கப்படுகிறது. அதை பிரின்பாலிடம் கொடுத்து அவர் அதைக்
கொடுக்கிறார். அதனால் அங்கே கம்யூனல் பிரிக்ஷன் உண்டாகி
கிறது. போர்டிலே போடுவதை அவர்கள் பார்க்கிறார்கள். அத
னால் மனவேறுபாடுகள் உண்டாகி கம்யூனல் பிரிக்ஷன் ஏற்படு
கிறது. அதை ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் கொடுத்து
கலெக்டரே கொடுக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

கொடைக்கானலிலே பல ஸ்கூல்ஸ் இருக்கின்றன. அங்கேயும்
விளையாட்டு மைதானம் இல்லை. அரசாங்கத்தினாலே ஒரு
கேர்ள்ஸ் காலேஜ் ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்கெனவே ஒரு
புரப்போசல் இருந்தது. அங்கேயுள்ள ஜிம்கானா கிரவுண்டை
அரசாங்கம் எடுத்துக் கொண்டு அங்கே விளையாட்டு மைதானத்
தையும் ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிஸிக்கல் எஜுகேஷன் டீச்சர்ஸ் மாநாடுகள் எல்லாம் போட்
டார்கள். பல குறைகளை உங்களிடம் சொன்னார்கள். அண்ணா
மலை யூனிவர்சிடியிலே இன்னொரு மாநாடு போடுகிறார்கள்.
அவர்களுக்குக் குறைகள் இருக்கின்றன. போன ஆண்டு 29.52
இலட்சம் பிசிக்கல் எஜுகேஷனுக்காக சாங்ஷன் பண்ணியிருந்
தீர்கள். இந்த வருடம் 6·5 இலட்சத்திற்குத்தான் சேங்க்ஷனுக்
காகக் கேட்டிருக்கிறீர்கள். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு ஸ்போர்ட்ஸ் மிகவும் அவசியம். எனக்கு முன்னால் பேசியவர்கள் கூடச் சொன்னார்கள். நம்முடைய ஆட்கள் பஞ்சாப், டெல்லி போன்ற இடங்களுக்குச் சென்று சான்ஸ் கிடைக்காமல் வருகிறார்கள் என்று. அதற்குக் காரணம் இதுதான். அதிகப் பணத்தைச் செலவழித்து ஸ்போர்ட்ஸ் ஆக்டிவீடீஸை விருத்தி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இரண்டரை வருடங்களாக பி.இ.டி.-க்கு டெபுடி டைரக்டரைப் போடுவதாகச் சொல்லியும் அது நிரப்பப்படாமல் இருக்கிறது. கூடிய விரைவில் அந்தப் பதவியை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக—என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4·00)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

***திரு. எம். அண்ணாதாசன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம், இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கல்வி மானியத் கோரிக்கையின் மீது காலையிலேயிருந்து பல மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். கடந்த பல நாட்களாக நடந்த மானியக் கோரிக்கைகளிலேயெல்லாம் பல குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, இங்கே அமர்ந்திருந்த உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலாவது குறை சொல்லாமல் இருப்பார்கள். ஏனென்றால், கல்வி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் குறிப்பாக நல்ல ஒரு மேம்பாட்டை அடை[illegible]



(மாலை 4.10)

அது மட்டுமல்ல. சிறார்களுடைய கல்வி அறிவை வளர்ப்பதற்காக இந்த ஆண்டு 4,433 சிறார் பள்ளிகளைத் தொடங்க இருக்கிறார்கள். அந்த நர்சரி பள்ளிகளிலே சிறார்கள் பயில்வதற்கான ஒரு நல்ல திட்டத்தை ஒரு கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த இருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். நான் சொல்கிறேன். எவ்வளவு பெரிய நல்ல திட்டம் இது என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

வசதி படைத்தவர்கள்தான் தங்களுடைய குழந்தைகளை தனியார் உருவாக்கியிருக்கிற நர்சரி பள்ளிகளுக்கு அனுப்ப முடிகிறது. அதற்கு ஆகும் செலவைப் பார்த்தால், ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு பஸ் போக்குவரத்திற்காக ஏறத்தாழ 30 ரூபாய், பள்ளிக்கூட பீஸ் 15 அல்லது 20 ரூபாய் ஆகிறது. கிட்டத்தட்ட ஒரு குழந்தைக்கு மாதம் 70 ரூபாய் செலவாகிறது. ஒரு மூன்று வயது குழந்தைக்கு இந்த அளவுக்கு படிப்புக்காக செலவிட ஏழை எளிய மக்களால் முடியாது. வசதி படைத்தவர்கள், அல்லது கல்வி கற்றறிந்த பெரியவர்கள், வேலை பார்க்கின்றவர்கள் அவர்கள் உழைக்கின்ற ஊதியத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து, அந்தத் தொகையைக் கொண்டு தங்களுடைய குழந்தைகளை நர்சரி பள்ளிகளில் படிக்க வைக்க முடிகிறது. அதனால் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்'' என்று சொன்னார்கள். அந்த அண்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, அந்த நல்ல திட்டத்தின் அடிப்படையிலே ஆங்காங்கே இருக்கிற சிற்றூர்களில் அமைக்க இருக்கின்ற இந்த நர்சரி பள்ளிகளிலே ஏழை எளிய மக்களுடைய குழந்தைகள், வசதி அற்றவர்களுடைய குழந்தைகள் படிக்கிற நல்ல திட்டமாக இங்கே உருவெடுத்திருக்கிறது என்பதை வரவேற்று அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைய தமிழக அரசு மிக முக்கியமான நல்ல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட பல தொழில் நுட்பக் கல்லூரிகளில், அதாவது பாலிடெக்னிக் பள்ளிகளில், புதிய வகுப்புகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. பாலிடெக்னிக்கைப் பொறுத்த வரையில் இந்த நாட்டிலே படிப்படியாக வளர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்று உள்ளபடியே நான் இந்தத் துறையிலே நீண்ட காலத்திற்கு முன்னால் இருந்தவன் என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன். 1964 ஆம் ஆண்டுக்குப் பின்னால் இந்தத் தொழில் நுட்பக் கல்வி படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது, மறுக்கவில்லை. ஆனால் இந்த 4½ ஆண்டுக் காலத்தில் இவ்வளவு வேகமாக

வளர்ந்த வரலாறு கடந்த கால கணக்கைப் பார்த்தால் நிச்சயமாக கிடையாது என்பதை அறுதியிட்டு உறுதியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதைப் போன்ற தொழில் கல்வியை நல்ல பல வகைகளிலே தொடங்க இருக்கிற இந்த நேரத்தில் அதற்கு உருவாக்க இருக்கிற குழுக்களில் ஆசிரியர் பிரதிநிதிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழில் நுட்பக் கல்வியில் நல்ல ஆலோசனைகளை வழங்கி, இந்தக் கல்வி செயல்படுவதை ஊக்குவிக்க உறுதுணையாக இருக்க அந்தக் குழுவிலே ஆசிரியர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் இடம்பெற வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பாலிடெக்னிக்குகள் இங்கே நிறைய இருக்கின்றன. இந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் டி.எம்.இ., டி.இ.இ., டி.சி.இ. போன்ற டிப்ளமோ கோர்சுகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய அரசு நடத்தும் பாலிடெக்னிக்குகளில் ஆர்கிடெக்சரில் டிப்ளமோ கோர்ஸ் இது வரையில் இல்லை. சில தனியார்கள் நடத்தும் மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிகளில் மட்டும் இந்தக் கோர்ஸ் இருக்கிறது. நம்முடைய அரசு புதிதாகத் தொடங்கும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் மகளிருக்காக இந்த ஆர்கிடெக்சர் டிப்ளமோ கோர்ஸை தொடங்க இருப்பதாக அறிகிறேன். இந்தக் கோர்ஸை மகளிர் பாலிடெக்னிக்குகளில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து பாலிடெக்னிக்குகளிலும் தொடங்க ஏற்பாடு செய்தால் நிச்சயமாக இதிலே ஏராளமானவர்கள் பயன்பெற நல்ல வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கோர்ஸ் இப்போது தனியார் பாலிடெக்னிக்குகளில் மட்டுமே இருக்கிறது. அரசு நடத்தும் பாலிடெக்னிக்குகள் எல்லாவற்றிலும் இந்தக் கோர்ஸை முறையாக அமுல்படுத்த வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 4 ஆண்டு கால பொறியியல் படிப்பு இருக்கிறது. இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இந்தப் படிப்புக்கு வரலாம் என்று இருக்கிறது. முன்னாலே இந்தப் படிப்பு 5 ஆண்டு படிப்பாக இருந்தது. 5 ஆண்டு படிப்பாக இருந்ததை இந்த அரசு 4 ஆண்டுகளாகக் குறைத்தது மாணவர்களுக்கு மட்டுமல்ல ; அந்த மாணவர்களைப் பெற்ற தாய், தந்தையருக்கும் செலவைக் குறைப்பதால் பேருதவியாக இருக்கிறது. இந்த அளவுக்குப் பொறியியல் துறையில் நல்ல முறையில் படிக்கவசதிகளை உருவாக்கித் தந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





இந்த 4 ஆண்டுப் படிப்புக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் மட்டுமல்லாமல் ஐ.டி.ஐ. படித்தவர்களும் வருகிறார்கள். இப்போது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கும் ஐ.டி.ஐ. படித்தவர்களுக்கும் படிக்கின்ற கால அளவு ஒன்றாகத்தான் இருக்கிறது ; 4 ஆண்டுக் காலம் இருவரும் படிக்க வேண்டும். ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. படித்த பிறகு இரண்டு ஆண்டுக் காலம் ஐ.டி.ஐ. படிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், எஸ்.எஸ்.எல்.சி. படித்து அதன் பிறகு இரண்டாண்டுகள் ஐ.டி.ஐ. படித்து, டெக்னிக்கல் எஜுகேஷன் பெற்ற பிறகும் கூட 4 ஆண்டுக் காலம் படிக்கிறபோது இன்னும் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆகவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் தமிழக முதல் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் ஐ.டி.ஐ-லே சேர விரும்பினால் அவர்களுக்கு இதிலே விதிவிலக்கு அளித்து அதற்குத் தகுந்த மாதிரி சட்டங்களை மாற்றி ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலே ஆசிரியர்கள் பல இடங்களிலே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போராட்டம் நடத்தப்படுகின்ற இந்தச் சூழ்நிலை எதனாலே ஏற்படுகின்றது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு முறை கூறியது என் நினைவுக்கு வருகின்றது. குறைகளையும் கோரிக்கைகளையும் எவ்வித அச்சமுமின்றி கூறுவதற்கான சுதந்திரமான சூழ்நிலையைத்தான் இத்தகைய போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதாக ஒரு கருத்தினைக் கூறினார்கள். அது மிகவும் உண்மையானதாகும்.

தனியார் நடத்தும் பள்ளிகள், தனியார் நடத்தும் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் போன்ற இடங்களிலே ஆசிரியர்கள் இது போன்ற போராட்டங்களை நடத்துவதற்கு அங்கே இருக்கின்ற நிர்வாகம் எல்லாம் அவர்கள் இஷ்டப்படி சில நேரங்களிலே நடந்துகொள்வதுதான், சர்வாதிகார நிலைமை தலைதூக்கி நிற்கின்றது. அதனால் கோரிக்கைகளை வைப்பதைத் தவிர வேறுவழியின்றி இதுபோன்ற பேராட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதுபோன்ற நிலை நீடிக்காமல் அவர்களுக்கு நல்லதொரு நிலைமை ஏற்படவேண்டுமானால் இப்படிப்பட்ட அந்த தனியார் கல்லூரிகளையும் பாலிடெக்னிக்குகளையும் அரசே எடுத்துக்கொள்ளுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி மிகப்பெரிய தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். பாய்லர் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, ரீஜினல் இன்ஜினியரிங் காலேஜ் போன்றவற்றிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் மட்டு

மல்லாறு, இரயில்லே தொழிலாளர்கள் போன்ற பல தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும் அது. அங்கே சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் $1\frac{3}{4}$ இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அங்குள்ள பாப்புலேஷன் கெப்பாசிட்டி கிட்டத்தட்ட 5 இலட்சத்திற்கும் மேற்பட்டிருக்கின்றது. அவ்வளவு பெரிய தொகுதியில் இதுவரையிலே ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி கிடையாது. பக்கத்திலே இருக்கின்ற பாய்லர் தொழிற்சாலைக்காக ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கின்றது. ஆனால் அந்தப் பள்ளியிலே அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு மட்டும்தான் முதலிடம் தரப்படுகின்றது. வெளியிலே உள்ள ஏழை எளிய, நடுத்தர விவசாயத் தொழிலாளர்களின் மகன்களும், மகள்களும் அங்கே படிப்பதற்கு முதலிடம் தரப்படவில்லை. அதனால் அவர்கள் திருச்சிக்குச் செல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு திருவரம்பூர் தொகுதியில் ஒரு மகளிர் மேல்நிலைப்பள்ளியை அரசு சார்பிலே அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள அம்பிகாபுரம் என்ற ஊரிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடன் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க உத்தரவிட்டார்கள். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம் என்று சொன்ன அண்ணா அவர்களைப் பின்பற்றி ஆட்சி செய்வதாகச் சொல்லி 9 ஆண்டுக்காலம் ஆண்டவர்கள் அதனைச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறிவிட்டார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டிடம் கட்டிடமாக இல்லை. கட்டைச் சுவர் கூட அங்கே இடிந்துதான் கிடக்கின்றது. மாண்புமிகு டைரக்டர் போன்றவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அவர்களிடத்திலே நான் சொல்லி இருக்கிறேன். அவர்கள் வந்து பார்த்ததற்குப் பிறகு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடப்பாண்டிலேயே அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித்தரவேண்டும். அங்கே வகுப்பறைகள் இல்லை. எனவே 6 வகுப்பறைகள் கட்டித்தருவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேனீர்ப்பட்டி என்ற ஊரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கின்றது. அதுவும் 18 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்ட பள்ளியாகும். அந்தப் பள்ளியிலே மாணவர்கள் உட்கார்ந்து பயில்வதற்கு வகுப்பறைகள் கிடையாது. ஓலைக்குடிசைகளிலும் மேயும் உட்கார்ந்துகொண்டுதான் படிக்கிறார்கள். இந்த நிலைமை பற்றி மரியாதைக்குரிய



கல்வி இயக்குநர் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்தப் பள்ளிக்கு இப்போது 13 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்கின்ற புதுக்கோட்டை மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதியாக அறிவித்து அங்கே பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒரு ஹாஸ்டல் நிறுவி அந்த உயர்நிலைப்பள்ளியினையும் நல்ல முறையிலே இயங்க கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4·20)

நான் இறுதியாக ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களே போதாத நிலையில், நாம் இந்தச் சட்டமன்றத்தில் விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். பல உரிமைகளையெல்லாம் அவர்கள் எடுத்துக் கொண்டாலும், கல்வித்துறையிலே இருக்கிற உரிமைகளாவது பறிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். மாநிலங்களுக்கு தற்போது இருக்கிற அதிகாரங்கள் போதாது. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. கல்வித் துறையில் உள்ள அதிகாரங்களையும் பறித்து தன்னுடைய கையிலே வைத்துக் கொள்ள மத்திய அரசு செய்யும் செயல்கள் அனைத்தும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். சமீபத்தில் 42-வது அரசியல் சட்டத்திருத்தத்தினை திருத்தியது உட்பட, மொழிப் பிரச்சினை, தேசிய ஒற்றுமைக்கு உலை வைப்பதாகத்தான் அமையும். ஆகையினால் இத்தகைய செயல்களை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். என்னுடைய தொகுதியிலே தொழில்கள் வளம் பெற்றிருக்கலாம். ஆனால் என்னுடைய மையத் தொகுதியைச் சுற்றி பல சிற்றூர்கள் இருக்கின்றன. சுமார் 20, 25 சிற்றூர்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலேயெல்லாம் படிப்பதற்கு நலல பள்ளிக்கூடங்கள் அமையாது இருந்து, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலேதான், அங்கே தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பல பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டில் அந்த சிற்றூர்களில் எல்லாம் பல பள்ளிக்கூடங்கள் கட்டி வந்திருக்கிறார்கள். அந்த நிலைமையை எண்ணுகிறபோது

என்னுடைய தொகுதிவாழ் மக்களும் இந்த அரசுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதி என்ற முறையில் நானும், அவர்களுடைய சார்பிலே புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, கல்வி மானியத்திலே காந்தி காமராஜ் தேசீய காங்கிரசினுடைய சார்பாக சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல அனுமதித்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்பது இந்த நாட்டிலே இருக்கிற குழந்தைகளின் வருங்காலத்தை மட்டுமல்லாமல், நாட்டினுடைய வருங்காலத்தையே திட்டமிட்டு செம்மை படுத்துவதற்குரிய ஒரு கருவியாகும். அந்தக் கருவியினை எந்த வகையிலே நாம் பயன்படுத்திக் கொள்கிறோமோ, அந்த வகையிலேதான் இந்த நாடு அமையும் என்பதிலே எந்தவித ஐயப்பாடும் இல்லை. இந்த ஆண்டு, இப்போது இருந்து கொண்டிருக்கிற இந்த 4,433 குழந்தைகள் நல மையங்களிலே இளம் சிறார்களுக்கு பள்ளிகளை ஏற்பாடு செய்வது என்று நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது இந்த அரசாங்கம். வெளியே தனியார்கள் தான் இப்போது இத்தகைய சிறார் பள்ளிகளை நடத்துகிறார்கள். அதைப்போலவே அரசாங்கமும் நடத்தவேண்டும் என்பதல்ல அரசாங்கத்தின் நோக்கம். அரசாங்கம் அந்த இளம் சிறார்களுக்கு இந்தப் பள்ளிகளை திறப்பதன் நோக்கம், தன்னுடைய தம்பி தங்கைகளை சிறு குழந்தைகளை பார்த்துக் கொள்கிற பொறுப்பினை, அந்தப் பெரிய குழந்தைகளிடம்-சிறுவர்களிடம் விட்டு விட்டு, தாய்மார்கள் பணிகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தாலே அந்தக் குழந்தைகளின் படிப்புக்கு பாதகம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்கிற முக்கியமான நோக்கமே இதற்குக் காரணமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை.)

சிறார்களுக்கான பள்ளிகளைத்தொடங்க இருக்கிற அரசாங்கம் மிக நல்ல நோக்கத்தோடு, தொடர்ந்து அதை எச்சரிக்கையோடு செய்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது என்றாலும் ஒரு கருத்தினை நான் அவர்களுக்கு நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வண்ண வண்ணப் புத்தகங்களில் கடினமாக எழுதப்பட்ட பாடங்களை முதலிலே சொல்லிக் கொடுக்காமல் எளிமையோடு, இசையோடு சொல்லிக் கொடுக்கிற நிலைமையில் அந்த இளம் சிறார்களின் ஆசிரியர்கள்





இருத்தல் வேண்டும். அதற்கு நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத்தான் நாம் ஆசிரியர்களாக, ஆசிரியையாகப் போடுதல் வேண்டும். அதற்குரிய பயிற்சிகளைக் கொடுப்பதற்கு ஒரு நல்ல மையம் இங்கே இருக்க வேண்டும். கல்வி இலாகா இவைகளைப் பற்றியெல்லாம் சிந்தித்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இவைகளை இவ்வளவு அவசியமாக, அழுத்தமாக குறிப்பிடுவதற்குக் காரணம். கல்வி இயக்கத்திலே கல்வி ஆராய்ச்சிப் பிரிவு என்ற ஒரு நல்ல பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவிலே என்னென்ன ஆராய்ச்சிகள் நடத்துகிறார்கள் என்பதை வெளியிலே இருக்கின்றவர்களால் அதிகமாகப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அறிந்து கொள்ள முடியவில்லை.

அதற்காக வெளியே இருக்கின்றவர்கள் பொறுப்பல்லவா இவைகளையெல்லாம் அறிந்துக் கொள்வது என்று சொல்வதற்கு பதிலாக இந்த ஆராய்ச்சியிலே என்னென்ன நடக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாவது தெரிந்து சொள்கிற முறையிலே இடையிடையே அவர்களுக்கு எல்லாம் அழைப்பும் கொடுத்து இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே உங்களுடைய கருத்க்துகள் என்ன என்று கேட்பதும் நல்லது என்று கருதுகிறேன்.

ஏனென்றால், கல்வி ஆராய்ச்சி என்று இயங்குகின்ற பிரிவு கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு என்ன என்ன வழி இருக்கிறது என்று ஆய்வதற்காக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். கடந்த சில ஆண்டுகளிலே என்னென்ன மாற்றங்களை இவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த மாற்றங்களாலே ஏற்பட்டிருக்கிற விளைவுகள் என்ன ? அது எந்த வகையில் எல்லாம் நமக்குச்சாதகமாக அமைந்திருக்கிறது என்பதையெல்லாம் இந்தக் கல்வியிலே அக்கறை உடையவர்களாவது தெரிந்து கொள்கிற அளவிற்கு மற்றவர்களுடைய கருத்துக்களை நீங்கள் கேட்டுப் பெற வேண்டும்.

" தமிழகக் கல்வி." என்று ஒரு காலாண்டு ஏடு வருவதாகச் சொல்கிறார்கள். அந்த ஏடு கூட என்னுடைய பார்வையிலே வரவில்லை.

பாராட்டுக்குரிய நிறையச் செய்திகள் இருந்தாலும் கூட இப்படி சுட்டிக்காட்ட வேண்டியதை மட்டுமே சுட்டிக் காட்டிக்கொண்டு போவதற்குக் காரணம், பாராட்டுவதற்கு மனம் இல்லாமலோ இல்லை பாராட்டுவதற்கு உரிய செய்திகள் இல்லாமலோ இல்லை. நேரத்தை எல்லாம் அதிலேயே செலவழித்து விட்டால் சுட்டிக்காட்டுவதற்கு நேரம் போதாது என்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் இங்கே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே பள்ளி நேரம் முடிந்ததற்குப் பின்னால் 1 மணி முதல் 1½ மணி வரை ஆங்கிலம், கணிதம், அறிவியல் இவைகளிலே தனிச் சிறப்பு வகுப்புகளை ட்யூஷன் நடத்துவதாக இங்கே குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ட்யூஷன்லே 3,76,000 மாணவ மாணவிகள் பயன் பெறுவதாகக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் செய்யுமானாலும், இந்த 3,76,000 மாணவ மாணவிகளும் பயன்பெறுகின்ற அளவிற்கு இந்தத்தனிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றனவா என்று சோதனை இட்டுப் பார்ப்பதற்கும், அப்படிச் சோதனையிட்டுப் பார்க்கிற நேரத்தில் இந்த மாணவ மாணவிகள் பயன்பெறுகின்றார்களா என்பதைப் பார்ப்பதற்கும் ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதையும் நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே ஆலோசித்து இருக்கும் என்று நம்புகிறேன். இல்லையென்றால் அதற்குரிய முயற்சியிலே ஈடுபடவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சி மொழி என்பது ரொம்பக்காலமாக நாம் வாதித்துக் கொண்டிருக்கிற ஒன்று. பாடமொழி ஒன்று, பயிற்சி மொழி ஒன்று. மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷனைப் பற்றி நான் பேசுகிறேன் குழந்தைகளுக்கு அவரவர்களுடைய தாய்மொழியிலேதான் மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்க வேண்டுமென்பதில் காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் மிக ஆழமான கருத்துக் கொண்டிருக்கிறது. கிரியேட்டிவ் திங்கிங், ஆக்கபூர்வமான சிந்தனை ஒருவருக்கு தாய் மொழியிலே மட்டும்தான் வர இயலும். தாய் மொழி என்று நான் சொல்வதை நீங்கள் உற்றுப் பார்ப்பீர்களானால் தமிழர்களுக்குத் தாய்மொழி தமிழாகவும் மற்றவர்களுக்கு அவரவர்களுடைய மொழி தாய் மொழியாகவும் இருக்கிற காரணத்தால்தான் தாய் மொழிக் கல்வியை நான் சொல்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே தமிழ் தாய்மொழியாக இருந்தபோதிலும் சென்னை போன்ற எல்லாப் பிரிவினரும் வாழுகின்ற பகுதியிலே இருக்கிறவர்கள் தனது தாய் மொழியிலே தனது பயிற்சி இருக்க வேண்டுமென்று அவரவருடைய தாய் மொழியிலே கொடுப்பது கூடத் தவறு அல்ல, இன்னும் சொல்லப் போனால் கொடுக்க வேண்டும், இந்திய தேசிய ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டு மனப்பாட்டிற்கும் நகரங்களிலே அதைக் கொடுக்க வேண்டுமென்ற கருத்து காந்தி காமராஜ் தேசிய காங்கிரசுக்கு இருக்கிறது. அதைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தலைநகரங்கள் உட்பட பயிற்சி மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டுமென்பதிலே இந்த அரசாங்கம் மிக உறுதியாக இருந்து வழி காட்டுதல் வேண்டும், எந்த வகுப்பு வரை பயிற்சி மொழி என்ற கேள்விக்கே இடம் இருக்கக் கூடாது. எல்லா வகுப்புகளுக்கும் பாலர் பள்ளியில் இருந்து பல்கலைக் கழகம் வரை தமிழால் முடியும் என்று உறுதியாக எடுத்துக் கொண்டு நாம் புறப்பட்டு போகவேண்டும். ஏனென்று சொன்னால்





எந்த வகையான முன்னேற்றத்தையும் இன்னொரு மொழி படித்துத்தான், அதன் மூலம் தான் பாடங்களைத் தெரிந்து கொள்வது என்ற நிலையை நாம் பெற முடியவில்லை.

பாரதி ஆங்கிலத்திலே .தேர்ந்தவனாக இருந்தாலும் அவன் சொல்வான் " செலவு தந்தைக்கு ஓர் ஆயிரம் சென்றது ". ஆங்கிலப் பள்ளிக்கூடத்திலே படித்தவனுடைய விளைவை அவன்' சொல்கிறான்,

" செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது,
தீது எனைக்குப் பல்லாயிரம் சேர்ந்தது,
நலம் ஓர் எள்ளத்தனையும் கண்டிலேன்
இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்வேன் "

என்று சொன்னான். " நலம் ஓர் எள்ளத்தனையும் கண்டிலேன் " எள்ளத்தனையும் நலம் எனக்குக் கிடைக்கவில்லை, இதை 40,000 கோயிலிலே நான் சத்தியம் பண்ணிச் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று ஆங்கிலத்தைப் படித்த, ஆங்கிலத்திலே புலமை வாய்ந்த, பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்த வித்தகனாக இருந்த பாரதி சொன்னான். தாய் மொழியிலேதான் கவி இருக்க வேண்டும் என்று, பாலர் பள்ளியிலே இருந்து, பல்கலை கழகம் வரை தமிழ் மொழியையும் வைத்திருக்கிறோம், என்று சொல்லாமல் தமிழ் மொழிதான் இருக்க வேண்டுமென்று பயிற்று மொழியாகத்தமிழைத்தான் வைத்திருக்கிறோம் என்று சொல்கிற நிலை வரவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

(மாலை 4·30)

இப்படிப் பயிற்று மொழி தாய் மொழியாக இருக்கிற நேரத்தில் அதிலே படித்து வெளியே வருகிறவர்கள் பல சாதனைகளைச் செய்ய முடியும் என்பதற்குச் சான்றாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நான் குறைத்துப் பேசவில்லை என்று சொன்னாலும் கூட ஆங்கிலத்தில் படிப்பதன் மூலம்தான் உலகத்தில் மற்ற நாடுகளோடு நாம் போட்டி போட முடியும் என்று சொல்கிறவர்களுக்கு ஒரு சிறு குறிப்பை நான் சொல்ல விரும்புகிறேன். இந்திய தேசியத்தில் எவ்வளவு நாடுகளில் நோபல் பரிசு பெற்றவர்கள் எத்தனை என்று.ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தால், மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் நம் நாட்டில் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்ற ஒரு சிந்தனை நமக்கு வரவேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன், ஜெர்மானிய நாட்டில் அவர்கள் தாய் மொழியில் படித்தவர்கள், ஜெர்மனி மொழியில் படித்தவர்கள் இதுவரை அவர்கள் பெற்றிருக்கிற நோபல் பரிசு 57. பிரான்ஸ் நாட்டிலே அவர்களுடைய தாய் மொழியில் படித்து நோபல் பரிசு பெற்றவர்கள் 44 பேர். ருஷ்ய நாட்டில் தாய்மொழியில் கல்வி கற்று பெற்றிருக்கிற நோபல்

பரிசு 24. ஆனால் இந்திய புண்ணிய பூமியில் வேற்று மொழியில் படித்துத்தான் நாம் சாதனைகளைச் செய்ய முடியும் என்று விரும்பி கொண்டிருக்கிற இந்த நாட்டில், சுதந்திரத்திற்கு முன்பு இருந்து இன்று வரை, நாம் பெற்றிருக்கிற நோபல் பரிசு 3. அந்த மூன்றிலும் கூட, ஒன்று ரபிந்திரநாத் டாகூர் தானே தனது பெங்காலி மொழி பெயர்ப்பை ஆங்கிலத்திலே வெளியிட்டுப் பெற்றார். இரண்டு, தெரஸா அம்மையார் சமாதானத்திற்காகப் பெற்றார். அதையும் கழித்து விட்டால், சர். சி. வி. ராமன் பெற்றிருப்பது மட்டும் தான் நோபல் பரிசு வந்திருக்கிறது என்று சொன்னால் அதுவும் சுதந்திரத்திற்குப் பின்னால் விஞ்ஞானத்திற்கோ அல்லது மருத்துவத்திற்கோ இந்த 34 ஆண்டு காலமாக நாம் எதையும் பெறவில்லை என்று சொன்னால் நாம் இன்னொரு மொழியில் படித்து அதன் மூலம் சாதனைகளைச் செய்ய முடியவில்லை. என்பதற்கு இது ஒரு அற்புதமான எடுத்துக் காட்டாக இருக்கிறது. மற்ற நாடுகள் தங்கள் தாய் மொழியில் படிப்பதன் மூலம் பெறுகிற ஆக்கப்பூர்வமான சிந்தனையை நமது நாட்டில் இருக்கிற மக்கள் அந்நிய மொழியில் கற்றுப் பெற முடியவில்லை என்றால் இதுவே ஒரு சான்று என்பதை நான் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

எனவே எந்த வகுப்புகளுக்கு பயிற்று மொழி என்பதல்ல. ஆங்கிலத்தை தனிப்பாட மொழியாக படித்துக் கொள்ளட்டும், நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை. உலகத்தினுடைய மொழி இது. உலகத்தைப் பார்ப்பதற்கு அது சன்னல், அது கூட கதவு இல்லை. சன்னலுக்கு மேம்பட்டதாக அதை ஒத்துக் கொள்ள மறுக்கிறான் ஜெர்மன். சன்னலுக்கு மேம்பட்டதாக அதை ஒத்துக் கொள்ள மறுக்கிறான் பிரான்ஸ் நாட்டவன். சன்னலுக்கு மேம்பட்டதாக அதை ஒத்துக் கொள்ள மறுக்கிறான் ருஷ்ய நாட்டவன். எனவே சன்னல் என்ற அளவிற்குத் தான் இருக்கவேண்டும். உலகத்திலே இந்த மொழிப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று சொன்னால் வருங்காலத்தைப் பற்றி நாம் சிந்திப்பதாக இருந்தால் ஒரு வழி தான், உலகத்திலே தனி ஒரு மொழி கண்டு பிடிக்க வேண்டுமே தவிர வேறு வழி இல்லை.

ஆனால் மொழி என்பது நட்டு வைப்பதில்லை. அது தானே முளைத்து வளர வேண்டிய ஒன்று என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் வேறு வழியில்லை. அவர் அவர் தாய்மொழி உலகத்து மொழி இரண்டையும் கற்கிற நிலையைப் பார்க்கிறபோது தான், அன்டார்டிக்கிலே இருக்கிறவனும், ஆப்பிரிக்காவிலே இருக்கிறவனும், அருப்புக்கோட்டையிலே இருக்கிறவனும் ஒருவருக்கொருவர் பேசுகிற ஒரு மொழி உலகத்து மொழி இருக்கிற நேரத்திலேதான் அவரவர் தாய் மொழி, உலக மொழி என்று இரண்டு மொழியைக் கண்டிப்பாக படிக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.



இது இங்கே பேச வேண்டிய பேச்சா என்ற கேள்வி பலர் உள்ளத்தில் எழும். இதை எங்கே வேண்டுமானாலும் பேசலாம். நம்து சட்ட மன்றத்தில் இருக்கிற எல்லோரும் இந்தக் கருத்தைக் கொண்டு இருந்தால் மத்திய அரசை வற்புறுத்தலாம். மத்திய அரசின் மூலம் ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு போகலாம். யுனஸ்கோ மூலம் உலக மொழி ஒன்றை எஸ்பெரன்ட்டோ என்ற ஒன்றைக் கண்டு பிடிப்பதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதைப் போல, உலக மொழி ஒன்றை கண்டு பிடிக்கிற நேரத்தில் மொழிப் பிரச்னைக்கு முற்றிலுமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே தாய்மொழி ஒன்றும் உலக மொழி ஒன்றும் கற்கிற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிற நேரத்தில் 'ஒன் வொர்ல்டு ஒன் பார்லிமெண்ட்' என்று சொல்கிற ஒரு உயர்ந்த சிந்தனை இருக்கிறதே, ஒரே உலகம் ஒரே மக்கள் என்று சொல்கிற எண்ணம் இருக்கிறதே அவைகளுக்கு எல்லாம் ஆதாரமாக, ஆணி வேராக இருக்கிறது என்று சொன்னால் உயர்நிலைப் படிப்புக்கு பயிற்று மொழி எவ்வளவு முக்கியமானது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நமது நாட்டைப் பார்க்கிற நேரத்தில் நம்முடைய கல்வியின் தரம் மிகவும் குறைந்தது என்று மற்றவர்கள் சொல்வது போல் நான் சொல்லவில்லை. கல்வியினுடைய தரம் அருந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் நிரந்தரமாக இருக்கிறது என்றால் இல்லை. ஒரு பள்ளியில் நன்றாக இருக்கிறது. இன்னொரு பள்ளியில் நன்றாக இல்லை என்ற சூழ்நிலை வருகிறது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் எங்கே ஒழுக்கம் சிறப்பாகப் பின்பற்றப்படுகிறதோ, எங்கே கட்டுப்பாடு சிறப்பாகப் பின்பற்றப்படுகிறதோ அங்கே கல்வி சிறப்பாக இருக்கிறது. கட்டுப்பாடு அற்ற நிலை எந்தக் கல்விக் கூடத்தில் இருக்கிறதோ அங்கே பள்ளி படிப்பு சரியாக வரவில்லை. அந்தப் பள்ளியில் பிள்ளையும் சரியாக வரவில்லை. ஆதலால் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது ஒழுக்கத்தை நாம் எப்படியும் நிலை நாட்ட வேண்டும். தனியார் பள்ளிகளில் இப்படிப்பட்ட குறைகளைச் சொல்கிறார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கிற நிர்வாகிகள் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் எங்களைக் கேட்டு நடக்க மாட்டேன் என்கிறார்கள். நாங்கள் சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிறார்கள் என்று நிர்வாகிகள் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் சொல்கிறார்கள்—நிர்வாகத்தினர் எங்களை கொத்தடிமைகளாக நடத்துகிறார்கள். ஆகவே எங்களால் ஒத்துப் போக முடியவில்லை என்று சொல்கிறார்கள். இவர்கள் இப்படிச் சண்டைப் போட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நாங்கள் எப்படி பாடங்களைக் கற்க முடியும் என்று மாணவர்கள் கேட்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிருக்கிற காரணத்தால் அரசு அதிகாரிகளும் தனியார் நிர்வாகிகளும் ஆசிரிய பிரதிநிதிகளும் உடனடியாக ஒரு கூட்டத்தை கூட்டி இதற்கு ஒரு முடிவு உண்டாக வேண்டும்.

இங்கிருந்து நாம் நேரடியாக சம்பளம் கொடுப்பது நல்லது தான். அதில் பிறர் ஏமாற்ற வழியில்லை. ஆனால் தனியார் பள்ளி நிர்வாகிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? எங்களிடம் இருக்கிற ஒரே பிடியும் போய் விட்டதே என்று சொல்கிறார்கள். அவர்கள் பிடி போகிறது என்றால் லட்சக் கணக்கான ஆசிரியர்கள் பிடியை அவர்கள் கையில் கொடுக்க முடியாது என்பது அரசின் கொள்கையாக இருக்க வேண்டும். அதிலே தப்பு இல்லை. ஆனால் நிர்வாகிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத ஒரு சூழ்நிலையும், ஆசிரியர்களுக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லாத ஒரு சூழ்நிலையும் இந்த இரண்டுமே வெறுக்கத்தக்கவை என்பதை எண்ணிப் பார்த்து அரசாங்கம் இந்தத் தனியார் பள்ளிகளை ரெகுலரைஸ் செய்கிற ஒரு முயற்சியை ஒழுங்காக ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளாக கொண்டு வருகிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு உடனடியாக கூடிப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அதைப்போலவே பள்ளிகளில் உள்ள கண்டின்ஜன்ஸி ஊழியர்கள் என்று சொல்கிறார்கள், கூட்டுகிறவர்கள், பெருக்குகிறவர்கள், காவலர்கள் இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் கொடுத்து வருகிற மிகக் குறைந்த ஊதியமான ரூபாய் 200 என்பதை இனிமேல் ரூ. 250 ஆகக் கொடுக்கப் பரிசிலிக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட எளிய தோழர்களுக்கு, கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்பவர்களுக்கு, சுத்தம் சோறுபோடும் என்ற படிப்பை பார்வைக்கு வைக்கிறார்கள் அல்லவா, அப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஊதியத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்வது பாராட்டுக்குரியது. அதற்காக இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு நீங்கள் கொடுப்பதாகச் சொல்கிற ஊதியத்தைக்கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முக்கியமான பயிற்சி தொழிற் பயிற்சி. இந்தத் தொழில் பயிற்சி கொடுக்கிறவர்களுக்கு நீங்கள் முழுநேர வேலை கொடுக்காமல் பகுதிநேர வேலை கொடுப்பதால் அவர்கள் ரூ. 100 தான் ஊதியம் பெறுகிறார்கள். இந்த ரூ. 100 ஊதியம் பெறுவது என்பது போதுமானதாக இல்லை.........பயிற்சி பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும். கைத் தொழில் ஒன்றை கற்றுக் கொள்வதால் கவலை உனக்கிருக்காது என்று சொல்கிற அளவிற்கு பாடல்கள் எந்திருப்பதைப் பார்க்கிறோம். அப்படி கைத்தொழில் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு நல்லமுறையில் ஊதியம் கிடைக்கும்வகையில் அவர்களுக்கு நிரந்தரமாக முழுநேரப் பணி கொடுக்கும் வகையில் அரசாங்கம் திட்டங்களை காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





ஒரு முக்கியமான செய்தி. எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று விரும்பினாலும் கூட அவைகளை எல்லாயிடங்களிலும் செய்யமுடியாமல் இருப்பதால் மற்றவர்கள் நம்மைக் குறைத்துப் பேசுகிறார்கள். சான்று சொல்லப் போனால், 1964 லிருந்து இலங்கை போன்ற நாடுகளில் கூட பயிற்றுமொழி தமிழாக வந்து அதற்குரிய புத்தகஙகள் எல்லாம் வந்து விட்டன. ஆனால் இங்கே சில புத்தகங்கள் வரவில்லை. வந்திருப்பவையும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூர் விமான நிலையத்தில் இறங்கினால் விமான தளத்திலேயே என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி தமிழிலே சொல்கிறார்கள். ஆனால் இங்கே என்ன பார்க்கிறோம் என்றால் சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் வந்து இங்கு இறங்குபவர்களின் பெரும் பகுதி பேர்கள் தமிழர்கள். அவர்கள் சாதாரண மக்கள், கூலி வேலைக்குச் சென்று ஏதோ கொஞ்சம் பணத்தை சம்பாதித்து விமானத்தில் வருகிற அளவிற்கு வசதி படைத்த மகிழ்ச்சியோடு வருகிறார்கள். அவர்கள் மொழி விற்பன்னர்கள் அல்ல. உயிர் காக்கும் கருவியை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி ஆங்கிலத்தில் பிற மொழிகளில் அவர்களுக்கு, சொல்லப்படுகிறது, இந்தியன் ஏர் லைன்ஸில். டெல்லியில் இருந்து வருகிற விமானமாக இருந்தாலும் சரி அல்லது வேறு இடங்களிலிருந்து வருகிற விமானங்களாக இருந்தாலும் சரி; உயிர் காக்கும் கருவியைப் பயன்படுத்துவது எப்படி என்பதை தமிழ் மொழியில் சொல்லாத நிலையில் விமானங்களில் வந்து இறங்குகிற பயணிகள் பலர் அதைப் புரிந்து கொள்ள முடியாத நிலை இருக்கிறது. இந்த மொழிப் பிரச்னையில் நாம் சற்று ஆழமாக இருக்க வேண்டும். அதில் கவனமாகயிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியைப் பொறுத்தவரையில் திருவொற்றியூரில் கன்னியா குருகுலம் என்ற ஒன்று இருக்கிறது. அதை அரசாங்கம் தனியாரிடமிருந்து எடுத்திருக்கிறது. 6,000—க்கும் மேற்பட்ட பெண்கள், பெண் பிள்ளைகள் படிக்கும் அந்தப் பள்ளிக்கூடம் வசதி இல்லாமல் இருக்கிறது. நானே நேரில் சென்று பார்த்தேன். எந்தவித வசதியும் இல்லாதிருக்கிறது அந்தப் பள்ளிக்கூடம். அங்கே கழிவிடம் கூட இல்லை. பெண்கள் மட்டுமே படித்துக் கொண்டிருக்கிற அந்தப் பள்ளியில் பல ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கிற அந்தப் பள்ளியிலே, கழிவிடம் இல்லை, பக்கத்து வீடுகளுக்குச் சென்றுதான் அவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது என்று சொன்னால் அது மிகவும் வேதனையான காரியம் என்பதை அரசாங்கம் தயவு செய்து உற்றுக் கவனிக்க வேண்டும்.

அதேபோல் இன்னொரு முக்கியமான செய்தி. தொழிலாளர்கள் நிறைந்துள்ள திருவொற்றியூர் தொகுதியில் ஒரு தொழில் கல்விக் கூடம் கூட இல்லை. அங்கே ஐ.ஐ.டி. போன்றவற்றிற்கு ஏற்பாடு

பார்க்கும்போது, உள்ளபடியே நான் நன்றி உணர்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் மேலும் இரண்டு ஏற்படுத்தியிருப்பதையும், 25 மாவட்ட கல்வி அதிகாரிகள், நேர்முக உதவியாளர்கள் பதவிகளும், ஒரு உள் தணிக்கைப் பிரிவையும் ஏற்படுத்துவதற்கான வழிவகை ஏற்படுத்தியிருப்பது குறித்து நான் உள்ளபடியே மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் இந்த தமிழகத்திலே உள்ள ஏழை எளிய மக்கள், அத்தகைய மாணவர்கள் பசியாலும், பட்டினியாலும் இருப்பதைப் போக்குவதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றை 100 கோடி அளவிலே இந்த ஆண்டு கொண்டு வந்து, 2 வயது முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்காக ஏற்படுத்தியிருப்பது குறித்து நான் அவர்களை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ 4,433 நர்சரி பள்ளிகள் வருகின்ற கல்வி ஆண்டிலே ஏற்படுத்தி, கிராமப் பகுதிகளிலே வாழக்கூடிய 5 வயது குழந்தைகள் எல்லாம் கல்வி அறிவு பெற வழிவகை செய்திருப்பது பெரிதும் பாராட்டக் கூடியதாகும்.

சுதந்திரம் பெற்ற பின் 20 ஆண்டுக் காலம் இந்த நாட்டை காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டு வந்தார்கள். வெள்ளைக்காரன் ஏற்படுத்திய அந்த சென்னைப் பல்கலைக்கழகம் ஒன்று மாத்திரமே அப்போது இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு 1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகுதான், மதுரையிலே மதுரைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப் பட்டது. அதற்குப் பிறகு 7 ஆண்டு காலம் இந்த ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தினாலும், அப்போது ஒரு பல்கலைக் கழகத்தைகூட ஏற்படுத்தவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அதற்குப் பிறகு, 1977-லே புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தமிழக ஆட்சியை ஏற்றுக் கொண்ட பிறகு, திருச்சியிலே, கோவையிலே பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தியதோடு, மேலும் தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம், ஆக மூன்று பல்கலைக் கழகங்களை இந்த தமிழ்நாட்டிலே நிறுவியுள்ளதைக் குறித்து நான் உள்ளபடியே புரட்சித் தலைவர் அவர்களைப் பராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் பாரதியார் பிறந்த நூற்றாண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் பெண்களுக்கென்று பல்கலைக் கழகம் ஆரம்பிக்க அனுமதி கொடுக்கப்பட்டு விரைவிலே துவங்கவிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நெல்லை மாவட்டத்திலே அந்த பெண்களுடைய பல்கலை கழகத்தை நிறுவ வேண்டுமென்று அந்த மாவட்ட மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து ஆரம்பக் கல்வியிலே நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்றால் கல்வித்துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு நல்லமுறையிலே சலுகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலத்திலே ஆசிரியர்களுக்கென்று எத்தனையோ நன்மைகளை இந்த அரசு செய்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருமே அரசு ஊழியர்களாக கடந்த ஆண்டு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இன்றைய தினம் நிர்வாகத்தை கண்காணித்துக்கொண்டிருக்கிற உதவி நிர்வாக அலுவலர்களுக்கு கட்டிட வசதி செய்து கொடுத்து நல்லமுறையிலே நிர்வகிப்பதற்கு வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்குரிய கல்வி பொறுப்பு அத்தனையையும் இந்த அரசாங்கமே ஏற்று அவர்கள் முன்னேறுவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடைகளாவது வழங்க வேண்டும்.

நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆகிய மூன்று வகுப்புகளுக்கும் சேர்த்து ஒரே ஆசிரியரே பாடம் நடத்தக்கூடிய நிலை இருக்கிறது. ஒரே ஆசிரியரின் கீழே அத்தனை மாணவர்களும் படிக்க இருப்பதால் அவர்களின் கல்வித் திறன் பாதிக்கப்படுகிறது. அத்தகைய பள்ளிகளை மூடிவிடுவதற்கு அரசு உத்தரவிட்டு பக்கத்திலே உள்ள உயர்நிலைப்பள்ளிகளுடன் இணைத்துவிட்டால் மாணவர்கள் படித்து முன்னேற வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளுக்கு தற்போது வழங்கிக்கொண்டிருக்கிற நிர்வாக மானியத்தை 10 சதவீதம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் ஆரம்ப பள்ளிகளுக்கு கட்டிட வசதி சரியான முறையில் இல்லாமல் இருந்து வருகிறது. போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் அரசாங்கமே அவர்களுக்கு கடன் வழங்கி கட்டிட வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டிருக்கிற நிலைமையை பார்க்கிறோம். தற்போதுள்ள ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் ஒரு வகுப்பு தான் நடந்துகொண்டிருக்கிறது. பயிற்சிக்கு உரிய பாடதிட்டம் மிகவும் கடினமாக இருக்கிறதால் அந்த பாடதிட்ட முறையை எளிதாக்கி அதிகமான ஆசிரியர்கள் பயிற்சி கிடைப்பதற்கு மேலும் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1982 மார்ச் 16

அதேபோல இப்போது கர்நாடக மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்று வருபவர்களுக்கு தமிழகத்திலே வேலை வாய்ப்பையும் நிறுத்தி வைத்திருப்பதாக அறிகிறேன். இந்த திட்டம் தான், ஆனாலும் இந்த அரசு ஆணை பிறப்பித்ததற்குமுன்னால பயிற்சி பெற்றவர்களுக்கும் பயிற்சியில் சேர்ந்து படித்து வரும் நபர்களுக்கும் இந்தத் தடையிலிருந்து விதிவிலக்கு அளித்து வேலை வாய்ப்பு பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே சிவசைலம் என்ற இடத்தில் நடந்து வந்த தனியார் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை தற்போது மூடிவிட்டார்கள். அதை ஈடு செய்யும் வகையில் முனைஞ்சிபாடி அரசு ஆசிரியை பள்ளியில் மேலும் இரண்டு வகுப்புகளை அதிகமாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித்துறையிலே நியமனம் செய்கிற பள்ளித் தணிக்கையாளர்கள் பதவிகளுக்கு தகுதியுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த ஆசிரியர்களை அமர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெற்றோர்-ஆசிரியர்கள் நல நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியினை நல்ல முறையிலே விளம்பரப் படுத்தி அதிகமான ஆசிரியர்களுக்கு அந்த உதவி கிடைப்பதற்கு ஏற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ஆசிரியர்கள் பதவிக்கு தேர்ந்தெடுக்கிற சமயத்திலே ஒவ்வொரு பாடத்துறையிலே தனித்தனியாக தாழ்த்தப்பட்ட மக்களை ஒவ்வொரு பாடவாரியாக 18 சதவீதம் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஒட்டு மொத்தமாக மொத்த ஆசிரியர்கள் என்ற கணக்கிலேதான் அந்த சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு என்று அறிய நான் வேதனைப்படுகிறேன். ஆகவே அதை மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4·50)

அடுத்து என்னுடைய சங்கரன்கோயில் தொகுதியில் ஆலமநாயக்கர்பட்டி, கரிசல்குளம், இளையரசநேந்தல் ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக இந்த ஆண்டு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 16] [திரு. பி. துரைராஜ்]

இன்றைய தினம் அநேக அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் போதிய அளவுக்கு இல்லை. வன்னிக்கோநேந்தல், சேர்ந்தமரம் ஆகிய இடங்களிலே உள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கு கட்டிடங்களை இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் ஆனபிறகு ஏற்கனவே தற்காலிகமாக வேலை பார்த்தவர்கட்கு மீண்டும் வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்திரவிட்டுள்ளது. ஆனால் ஒன்றியங்களிலே உள்ள பள்ளிகளிலே தற்காலிகமாக வேலை பார்த்தவர்கள் ஊஸ்ட் ஆன பிறகு வேலை கொடுப்பதற்கு அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு பள்ளிக்கூடங்களிலே 10 ஆண்டுக்காலமாக அட்டெண்டர், லைப்ரரியன், வாட்ச்மென், வாட்டர்மேன் முதலிய பதவிகள் காலியாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளையெல்லாம் ஓவிய ஆசிரியர்களும் மற்ற ஆசிரியர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கி அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

***திரு, க. இரா. சின்னராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற **1982-83** ஆம் ஆண்டிற்கான கல்வி மானியத்திலே பேசுவதற்கு நல்வாய்ப்பைத் தந்ததற்காக நன்றி சொல்லி மொத்தமாக கல்விக்காக இந்த ஆண்டு 318 கோடி ரூபாயை ஒதுக்கி, இந்த மாநிலத்திலே கல்வி நல்ல முறையிலே நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை இங்கே தந்து இருக்கிறார்கள். அதை நல்ல முறையில் பாராட்டி வரவேற்கிற வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆதிதிராவிடப் பழங்குடி மக்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற நல்ல திட்டத்தை அரசு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் காலத்தில் செய்துகொண்டு வருகிறது. ஆனாலும் கொஞ்சம் குறைபாடு இருந்துகொண்டு தான் இருக்கிறது. அந்தப் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு உரிய காலத்திலே ஆதிதிராவிட மாணவர்களுக்குப் போய்ச் சேருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதை அதிகாரிகளிடம் சொல்லி உரிய காலத்திலே கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1982 மார்ச் 16

அதோடு இன்றைக்கு மேல்நிலைப் பள்ளிகளில் தொழில்
கல்வி முறையைக் கொண்டு வந்து இங்கே தொழில் கல்வியை
பயிற்றுவிக்கின்ற நல்லதொரு வாய்ப்பை மாணவர்களுக்கு உரு
வாக்கித் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அவர்கள் பள்ளிக்
கல்வியைப் பெறுகின்ற நேரத்திலே தொழில் முறையை நன்றாகத்
தெரிந்துகொண்டு அவர்கள் காலங்களில் தொழில் துறையை
வளர்த்துக் கொள்வதற்காக புரட்சித் தலைவர் அவர்கள்
காலத்திலே கொண்டு வந்து நல்ல முறையிலே நடந்துகொண்
டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைத் தவிர வேறு
எத்தனையோ அரசுகள் ஆட்சி நம் நாட்டிலே நடைபெற்றிருக்
கின்றது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே
தான் மிக அதிகமான நிதியை ஒதுக்கி இந்த மாநிலத்தில் வேறு
எந்த அரசும் செய்யாத காரியத்தை புரட்சித் தலைவர் ஆட்சி
யிலேதான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் காலத்திலே
தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் பல நல்ல திட்டங்
களைத் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டு
மென்றால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்
திலே ஏற்பட்ட நான்காண்டுக் காலத்திலே கல்வியிலே மிகப்
பெரிய மாற்றங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொன்னால்
ஆச்சரியப்படத் தேவையில்லை.

புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு பேரறிஞர்
அண்ணா பொறியியல் பல்கலைக் கழகம் ஒன்று சென்னையிலே
துவங்கப்பட்டது. அதற்கடுத்து, மதுரை காமராஜ் பல்கலைக்
கழகம் உருவாகியது. அடுத்து, பாரதியார் பல்கலைக் கழகம்
கோவையிலே இப்பொழுது துவங்கப்படயிருக்கிறது. திருச்சி
யிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம் துவங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில்
உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று புரட்சித்
தலைவரவர்கள் சொன்னார்கள். அதுவும் ஆரம்பிக்கப்படவிருக்
கிறது. அதற்குரிய காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையிலே ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆரம்பிக்கப்
பட்டிருக்கிறது.

இவ்வாறு புரட்சித் தலைவரவர்கள் இத்தனைப் பல்கலைக்
கழகங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதெல்லாம் எதை
குறிக்கின்றன என்றால் இந்த மாநிலத்திலே கல்வி எப்படி
யெல்லாம் வளர வேண்டுமென்று புரட்சித் தலைவரவர்கள்
எண்ணுகிறார்களோ அந்த வகைகளிலேயெல்லாம் புரட்சித்
தலைவரவர்கள் கல்வியைப் வளர்ப்பதற்குக் கொஞ்சமும் தயங்
காமல் இத்தனை காரியங்களையும் செய்துகொண்டிருக்கிறார்கள்
என்பதைக் காட்டுகின்றது.



1982 மார்ச் 16] [திரு. க. இரா. சின்னராசு]

இதற்கு முன்னால் ஆண்டவர்கள், தமிழினத் தலைவர் என்று
போஸ்டரைப் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால்
அவர்களுடைய காலங்களில் இத்தனை பல்கலைக் கழகங்களை
ஏற்படுத்தியிருக்கிறார்களா? கல்வியிலே இவ்வளவு மாற்றங்
களைச் செய்திருக்கிறார்களா? என்று பார்த்தால் இல்லையென்று
தான் சொல்ல வேண்டும்.

அதோடுமட்டும் விட்டுவிடவில்லை புரட்சித் தலைவரவர்
கள். இன்றைக்கு நாம் பாரதியார் நூற்றாண்டு விழாவைக்
கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். பெண்களுக்குப் பல வகை
களிலேயும் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று பாரதியார்
தம்முடைய பாடல்களிலே சொன்னதை முன்னிட்டுத் தமிழ்
நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டு
மென்று தமிழக அரசும், புரட்சித் தலைவரவர்களும், கல்வி
அமைச்சரவர்களும், அறிவித்திருக்கிறார்கள். அது உண்மையி
லேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் பல்
கலைக் கழகத்தை எங்கு அமைக்க வேண்டுமென்பதற்கு என்
கருத்தைச் சொல்கிறேன். தர்மபுரி மாவட்டம் அதியமான்
ஆண்ட மாவட்டம். அதிகமான் ஆண்ட அந்த மாவட்டத்தில்
சங்க காலப் புலவர்களில் ஒருவராக விளங்கிய ஒளவையார்
தமக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல்
ஒளவையார் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டுமென்ற காரணத்
தால் அதிகமான் ஒளவையாருக்கு கொடுக்கிறார். தமிழுக்காக
அரும்பாடுபடும் ஒளவையார் நீண்ட காலம் வாழ வேண்டு
மென்று கருதி அதிகமான் அந்த நெல்லிக்கனியை ஒளவையாருக்குக்
கொடுத்தாகச் சரித்திரம் சொல்கிறது. அந்தச் சரித்திர
நாயகன் ஆண்ட அடிப்படையில அவர் வாழ்ந்த தர்மபுரி
மாவட்டத்திலே ஒளவையார் மகளிர் பல்கலைக் கழகம் என்று
பெயரிட்டு நிறுவ வேண்டுமென்று நான் இங்கே தமிழக
முதல்வர் புரட்சித் தலைவரவர்களையும், கல்வியமைச்சரவர்
களையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சங்க
காலத்திலே காலம் முழுவதும், நாடு முழுவதும் நடந்தே சென்று
கவி பாடிய ஒளவையார் பெயரில் இந்தப் பல்கலைக் கழகத்தை
நிறுவுவது சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அந்த
அடிப்படையிலே மகளிர் பல்கலைக் கழகம் அமைய வேண்டு
மென்று அரசையும், மாண்புமிகு அமைச்சரவர்களையும் வேண்
டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் கல்வியிலே மிகவும் பின்தங்கிய மாவட்ட
மாக இருக்கிறது. எனவே, இந்தப் பல்கலைக் கழகத்தை
அந்த மாவட்டத்திலே ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.
அந்த மாவட்டத்திலே சராசரி கணக்கெடுக்கும்பொழுது. நூற்
றுக்கு 28 சதவீதம்தான் படித்திருப்பதாக அரசாங்கத்தின்

கணக்குப்படி தெரிகிறது. ஆகவே, அந்த மாவட்டத்திலே இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சிறப்பூதியம் வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளிலே பணிபுரிகின்ற கைத்தொழில் ஆசிரியர்களுக்குச் செகண்டரி கிரேடு ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு குழுவைப் போட்டிருக்கிறார்கள். அதன்படி சம்பளத்தில் பத்து ரூபாயைப் பிடித்தம் செய்து கொண்டு அவர்கள் ஓய்வு பெறுகின்றபொழுது பத்தாயிரம் ரூபாயைப் பெற்றுச் செல்லும் வகையிலே ஒரு திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றுநான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லா ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக அரசு ஆக்கியது. ஆனால் அதில் நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை. அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி அந்த ஆசிரியர்களுக்கும் நல்வாழ்வு வழங்கிட வேண்டுமென்று அரசையும், அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களின் நலன் கருதி அவர்கள் வாழ்வதற்கான வீடு கட்டித் தருகின்ற முறையிலே வீடு கட்டிக் கொடுக்கின்ற வாரியம் ஒன்றைத் துவக்கி, தமிழகத்திலுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று அரசையும் அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5.00)

இன்றைக்குப் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவச் சலுகை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவச் சலுகை தவறாமல் கொடுக்கின்ற வகையிலே மாதச் சம்பளத்துடன் சேர்த்து மருத்துவப் படி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் தொழில் பயிற்சிக் கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் கொடுத்தார்கள். ஆனால், அந்த மாவட்டத்திலே, மற்ற மாவட்டங்களோடு போட்டி போடுகிற அளவுக்குக் கல்வி வளர்ச்சி இல்லாத காரணத்தினால் எல்லா மாவட்டங்களிலும் இருந்து விண்ணப்பம் வருகின்ற காரணத்தினால், மற்ற மாவட்ட மாணவர்களின் தகுதி அதிகமாகவும், தர்மபுரி மாவட்டம் பிற்பட்ட நிலையில் உள்ளதால் இம்மாவட்ட மாணவர்களின் தகுதி குறைவாக இருப்பதாலும் அவர்களுடன் போட்டியில் சரிசமமாக வர முடியாத காரணத்தினால் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் போட்டு அனுமதி பெறுவது கஷ்டமாக இருப்பதால், 50 சதவீதம் தர்மபுரி மாவட்ட மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் படிப்பதற்கு வாய்ப்பில்லாததால் சென்னை, சேலம் போன்ற பெரு நகரங்களுக்கு சென்றுதான் படிக்க வேண்டியிருக்கிறது. அது வறட்சி மாவட்டமாக இருக்கிற காரணத்தினால், இவ்வளவு தூரம் அனுப்பி குழந்தைகளைப் படிக்க வைக்கின்ற வசதி பெற்றோர்களுக்கு இல்லாத காரணத்தினால், எம்.ஏ., எம்.எஸ்.ஸி., போன்ற பட்ட மேற் படிப்புகளை, தர்மபுரி, கிருஷ்ணகிரி கல்லூரிகளில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலை நேரக் கல்லூரிக்கும் அங்கே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாவட்டத்திலே இருப்பது இரண்டே இரண்டு கல்லூரிகள்தான். ஆகவே, கர்நாடகா, ஆந்திராவை ஒட்டி இருக்கிற ஹோசூரில் இன்னொரு கல்லூரியை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்ற பெண்கள் அடுத்த மாவட்டங்களுக்குச் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால், தர்மபுரி மாவட்டத்திற்சென்று ஒரு பெண்கள் கல்லூரியை அதையும் கிருஷ்ணகிரியிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வியின் தரம் உயர வேண்டுமென்ற அடிப்படையில், நம் நாட்டிலே கல்வித் தரம் உயர, அமைச்சர் அவர்கள், குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் இரண்டிலேயிருந்து 10 வயது வரையிலே இருக்கிற சிறார்களுக்கு மதிய உணவு திட்டத்தைக் கொண்டு வந்து. அதற்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கி இந்த

மாநிலத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மாணவர்கள் கல்வி பெறவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் முனைந்திருப்பதற்காக, தமிழக மக்கள் உங்களைப் பாராட்டுகிறார்கள். என்னுடைய பாராட்டுகளையும் அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவர்அவர்களுக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், அரசு அலுவலர்களாக ஆகிவிட்டார்கள். ஆனால், பள்ளி ஆயாக்கள் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் மிகச் சாதாரணமான நிலைமையிலே இருந்து பிள்ளைகளுக்கு மதிய உணவு செய்து போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரிடத்திலே கூட நேற்றைய முன் தினம் அதுபற்றி நான் மனுக் கொடுத்தேன். அவர்களையும் ஆசிரியர்களோடு சேர்த்து அரசு அலுவலர்களாக்க வேண்டும். அரசு கடைநிலை ஊழியர்களைப் போல். பாவித்து அவர்களை அரசு அலுவலர்களாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இவ்வாண்டு டிசம்பர் மாதம் டில்லியில் நடக்க இருக்கும் ஆசிய விளையாட்டு போட்டிகளைக் காண விரும்பும் உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குச் சிறு விடுப்பு கொடுத்து, ஆசிய நாடுகளிலிருந்து வந்து விளையாடுகிறவர்களது விளையாட்டுக்களைக் காண்கின்ற வகையிலே, அதன் மூலமாகப் பயிற்சி பெறுகின்ற வகையிலே, வழி வகை செய்ய வேண்டும். அவ்வாறு சிறு விடுப்பு கொடுத்தால், அதற்கு அரசு முன் வந்தால், நமது நாட்டிலே அத்தகைய மாணவர்களை உருவாக்குவதற்கு நல்ல வாய்ப்பிருக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்மென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பைத் தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கல்வி மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கொடுத்த இந்த வாய்ப்புக்கு நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே, சீரும் சிறப்புமாக நடைபெறுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. நல்ல திறமை வாய்ந்த அமைச்சர் அவர்கள் தலைமையிலே இந்தத் துறை பல முன்னேற்றங்களை, பல முற்போக்கான திட்டங்களைக் கல்வித் துறை ஈட்டி இருக்கிறது நிலைநாட்டி இருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும் எவ்வளவுதான் நாம் செய்தாலும் கூட பற்றாக்குறை என்பது வளர்ந்து





கொண்டேதான் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே தமிழிலே மட்டுமே சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனக்கு முன்னாலே பேசிய மற்ற உறுப்பினர்களும் அதை வலியுறுத்தினார்கள். அதிலும் கிராமப்புறங்களிலே இருக்க கூடிய பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள் தாய் மொழியிலே படிக்க வேண்டிய அளவிலே இருக்கிறார்கள். கிராமத்திலே ஆங்கில வழிப் படிப்பு பெரும்பாலும் இல்லை. நகர்ப்புறங்களில் இருக்கக் கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழிப் படிப்பு இருக்கிறது. ஆகவே நகர்ப்புறத்திலே படிக்கிற மாணவர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஆங்கில மொழியிலே படிக்கிறார்கள். கிராமப்புற மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. அந்த வாய்ப்பு இல்லை என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் இரண்டுவிதமான படிப்புகள் இருக்கும்போது அதன் விளைவாக தொழில் கல்விக்கு மேற்பட்ட படிப்புக்கு வருகிற நேரத்திலே தமிழ் வழி மாணவர்களை ஒருவிதமாகவும், ஆங்கில வழி மாணவர்களை மற்ற விதமாகவும் நடத்தக் கூடிய நிலைமை இருக்கிறது.

பெரிய பெரிய செல்வந்தர்கள், நிலப் பிரபுக்கள், அதிகாரிகள், பரம்பரையாகப் படித்தவர்கள் ஆகியவர்களின் குழந்தைகள் ஆங்கில வழி கல்வி கற்று அதன் மூலம் அதிக மதிப்பெண்கள் கிடைத்து மிக சுலபமாக தொழில் கல்லூரிகளில் சட்டக் கல்லூரிகளில் மேலும் பல உயர் படிப்புகளில் சேர முடிகிறது. ஆனால் கிராமங்களிலே வாழுகின்ற ஏழை எளிய மக்களுடைய குழந்தைகள் பிற்படுத்தப்பட்ட மக்களின் குழந்தைகள் தமிழ் வழி படிப்பு படித்து வருகிற காரணத்தினால் அவர்களுக்கு அந்த வாய்ப்புகள் அடைபட்டுப் போகின்றன. இந்த ஏற்றத்தாழ்வு கல்வித் துறையிலே இருக்கலாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சான்றிதழ்களிலே தமிழ் மொழி வழி படித்தவர்கள் என்று பிராக்கட்டிலே ' டி ' என்று போடுகிறார்கள். ஆங்கில வழி படித்தவர்களின் சான்றிதழ்களிலே பிராக்கட்டிலே ' இ ' என்று போடுகிறார்கள். அதைப் பார்த்தவுடன் தொழில் கல்லூரிகளிலே மற்ற மேல் நிலைகளிலே தமிழ் எடுத்துப் படிக்கிறவர்களை சுலபமாக நிராகரிக்கக்கூடிய நிலை இருக்கிறது. கல்வித் துறையிலே இந்த பாகுபாட்டை ஒழித்து எல்லா மாவட்டங்களிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கும், ஆங்கில வழி பயிற்சி மொழி கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்காது என்ற நிலையை உருவாக்கினால் ஒழிய இந்த பேதத்தை வேற்றுமையை போக்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தொழில் கல்விக்கு நாட்டிலே அதிகமான கிராக்கி இருக்கிறது. பாலிடெக்னிக் பள்ளிகளிலே படிப்பதற்கு ஏராளமான மாணவர்கள் முன்வருகிறார்கள். காரணம் படித்தவுடன் தொழில் செய்ய

லாம், அல்லது அப்ரன்டிஸ் வேலையாவது கிடைக்கும் என்ற ஆசையின் காரணமாக அதற்கு போட்டி அதிகமாக இருக்கிறது. என்னுடைய நகரமான மதுரையிலும் சரி, மதுரை மாவட்டத்திலும் சரி பாலிடெக்னிக்குகள் அதிகமாக இல்லை. மதுரை நகரத்திலே ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாக இருக்கின்றன. இந்த ஆண்டு பழனி அறநிலையத் துறையின் சார்பிலே பெண்களுக்கான ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

(மாலை 5.10)

ஆனால் அதேநேரத்தில் அண்டை மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் 6 பாலிடெக்னிக் பள்ளிகள் இருக்கின்றன. கோவை நகரத்தில் 6 பாலிடெக்னிக் பள்ளிகள் இருக்கின்றன. திருச்சியில் 2 இருக்கின்றன; சென்னை மாநகரில் 5 பாலிடெக்னிக் பள்ளிகள் இருக்கின்றன; 8 ஸ்பெஷல் இன்ஸ்டிடியூட்கள் இருக்கின்றன. ஆனால் மதுரை நகரில் ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று இரண்டு பாலிடெக்னிக் பள்ளிகள்தான் இருக்கின்றன. மதுரையிலும் மதுரையை சுற்றிலும் இன்றைக்கு ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்ற காரணத்தால் மதுரையில் இருக்கிற இந்த ஒரு பாலிடெக்னிக் பள்ளியில் ஏகப்பட்ட போட்டி இருக்கிறது. 500-க்கு 400 மார்க் எடுத்த மாணவர்களுக்குக் கூட இடம் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 300 மார்க் எடுத்தால் கூட இடம் கிடைக்கிறது. இதற்குக் காரணம் மதுரையில் இருப்பது ஒன்றேஒன்றுதான். ஆகையால் மதுரையில் மற்றொரு பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற பாலிடெக்னிக் பள்ளியில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 200 ஆகத்தான் இருக்கிறது. அதை 400 என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வசதி படைத்தவர்கள் வீட்டுக் குழந்தைகளை எந்த ஊரில் இருக்கிற பாலிடெக்னிக் பள்ளிக்கு வேண்டுமானாலும் அனுப்ப முடியும். அவர்கள் குழந்தைகளை ஆஸ்டலில் சேர்க்க முடியும்; செலவழிக்க முடியும்; ஆனால் வசதியற்றவர்கள், ஏழை எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை வேறு இடங்களுக்கு அனுப்ப முடியாது. வசதியற்றவர்கள் மதுரை நகரில் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மதுரை நகரில்தான் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க முடியும். இதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு மதுரை நகரில் இன்னொரு பாலிடெக்னிக் பள்ளியை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.



ஐ.டி.ஐ பள்ளியைப் பொறுத்த வரையில் அரசு கொள்கை ரீதியாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஐ.டி.ஐ. பள்ளிகள் இப்போது இருப்பது போதாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஐ.டி.ஐ. நிறுவனங்கள் எம்பிளாய்மென்ட் அன்ட் டிரெயினிங் என்ற அந்தத் துறையிலே வருகின்றன. ஆகவே, அந்தத் துறையில் அதைப்பற்றி விரிவாகப் பேசினால் நல்லது.

**திரு. ப. நெடுமாறன் :** ஆர்ட்ஸ் காலேஜ் ஆரம்பிக்கின்ற நேரத்தில், தென் மாவட்டங்களில் அரசு சார்பிலே பல கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும். அரசு கலைக் கல்லூரி மதுரை மாவட்டத்தில் தற்போது ஒன்றுதான் இருக்கிறது. அது மேலூரில் இருக்கிறது. அரசு கலைக் கல்லூரி என்றால் சம்பளம் இல்லை; ஏழை எளிய மாணவர்கள் படிக்க வசதி இருக்கும். தென் மாவட்டங்களில் அரசு கலைக் கல்லூரிகள் அதிகமாக இல்லை. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இரண்டு, மூன்று தான் இருக்கின்றன. ஆகவே, ஏழை எளிய மாணவர்களுக்கு சிரமமாக இருக்கிறது. அதனால் அரசு புதிதாக அமைக்கிற கலைக் கல்லூரிகளில் சிலவற்றை தென் மாவட்டங்களில் அமைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் நான் இரண்டு விஷயங்களை இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு கல்வி சலுகை அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அதை அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசு ஊழியர்களாக ஏற்று இந்த அரசு அறிவித்திருப்பதை இதயப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அதைப்போல மாநகராட்சி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும். இந்த வித்தியாசம் இருப்பது சரியல்ல. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை என்றைக்கு அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொண்டார்களோ அன்றைக்கே மாநகராட்சி, நகராட்சி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மதிய உணவைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கி, ஏழை எளிய குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்

[திரு. ப. நெடுமாறன்] [1982 மார்ச் 16

போவதாக அறிவித்திருக்கிறது. அது வரவேற்கத்தக்கது என்றாலும் கூட ஏற்கெனவே அமுலில் இருக்கிற மதிய உணவுத் திட்டம் அரசாங்கம் அளிக்கிற 15 காசு மானியத்தில் சரியாக செயல்படுத்தப்பட முடியாமல் இருக்கிறது. ஆசிரியர்கள் எப்படி எப்படியோ செய்து, இந்த உணவை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் அளிக்க முடியாமல் அரைகுறையாக இந்தத் திட்டம் செயல்படுகிறது. ஆகவே, இதை 30 காசாக உயர்த்தி ஒருவேளை உணவு ஏழை எளிய குழந்தைகளுக்கு கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் ; இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும் ; செம்மைப் படுத்தி முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்திலே மீண்டும் அமைதி இல்லாத நிலைமை உருவாகி இருப்பதை அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சரவர்கள் முன்னிலையிலேயே ஆசிரியர்களுக்கும் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது 14—10—1980-லே. அமைச்சரவர்கள் அதிலே அக்கறை கொண்டு அவர்களுடைய முயற்சியாலேதான் அது ஏற்பட்டது என்பதைச் சொல்ல வேண்டும். அமைச்சரவர்கள்தான் அவ்வாறு ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்குரிய வழிவகையினைச் செய்தார்கள். 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் அன்று யூனிவர்சிட்டி சிண்டிகேட் இதை ஏற்றுக்கொண்டு ரேட்டிஃபை செய்திருக்கின்றது. ஆனாலும் அமைச்சரவர்கள் முன்னிலையிலே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அமல்படுத்த நிர்வாகம் பிடிவாதமாக மறுக்கின்றது. இன்று வரை பல கோரிக்கைகள் அமல் நடத்தப்படவில்லை. ஏதோ ஒன்றிரண்டை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களே தவிர முக்கியமான கோரிக்கைகளை அமல் நடத்த மறுக்கிறார்கள். பழிவாங்கப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பொறுத்தவரையிலே அவர்கள் பிடிவாதமாக மறுக்கிறார்கள். டைம் பவுண்ட் ப்ரமோஷன் என்பதை அமல் நடத்தவில்லை.

அடுத்து ஹையர் ஸ்டார்ட் 1,500 ரூபாய் என்ற இந்த கோரிக்கையின்படி முன்பு சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்றது. ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்திலே இது 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் அளிக்கப்படும் என்று 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ஆம் நாள் அன்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் 25. 30 பேர்களுக்குத்தான் பலன் கிடைக்கும். ஏராளமான மற்ற ஆசிரியர்களுக்கு இந்தப் பலன் கிடைக்காது. அரசியல் சட்டப்படி இது தவறு. ஈக்குவல் வேஜஸ் டு ஈக்குவல் ஓர்க் என்ற



1982 மார்ச் 16] [திரு. ப. நெடுமாறன்]

இந்திய அரசியல் சட்டத்தின் கருத்திற்கு இது விரோதமானது. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பல்கலைக் கழக நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்வதற்கு பிடிவாதமாக மறுக்கின்றது.

மதுரைப் பல்கலைக் கழகத்திலேயே ஆராய்ச்சித்துறை என்றாலே அவர்களுக்கு வேப்பங்காயாக கசக்கின்றது. ஏன் அந்த நிர்வாகம் இப்படிப்பட்ட ஒரு நிலையினை எடுக்கின்றது என்பது என் போன்றவர்களுக்குப் புரியவில்லை. இந்த ஆண்டு கல்வியாண்டு முடியப் போகின்றது. ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்காகப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் பற்றி இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. அது அப்படியே உறங்கிக்கொண்டிருக்கின்றது. யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் ஆராய்ச்சிக்காகத் தரக்கூடிய மிகப்பெரிய தொகைகள் கொஞ்சமும் செலவழிக்கப்படாமல் மூட்டை கட்டி வைக்கப்பட்டு அதற்குப் பின்னாலே திருப்பி அளிக்க வேண்டிய நிலைமை அந்தப் பல்கலைக் கழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது. கடந்த 10 மாத காலமாக எந்த ஆராய்ச்சி மாணவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படவில்லை. அது ஒன்றும் பல்கலைக் கழக நிர்வாகம் கொடுக்கின்ற தொகை அல்ல. அப்படி யு.ஜி.சி. கொடுக்கின்ற தொகை 10 மாத காலமாக எந்த மாணவருக்கும் அளிக்கபப்டாமல் இருப்பதன் காரணத்தால் அந்த மாணவர்கள் மிகப் பெரிய சோர்வை அடைந்திருக்கிறார்கள்.

டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ச்சிக் கட்டுரை, ஆய்வுரை ஆகியவற்றைச் சமர்ப்பித்தால் 3 வருடங்கள் ஆகியும் அதற்கான முடிவுகள் அறிவிக்கப்படாமல் அங்கே அப்படியே வைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல. பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டிய நிலையங்களாக வளரும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் வற்புறுத்துகிறார். ஆனால் ஆராய்ச்சிக் கருத்தரங்கு என்றாலே பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள்ளே வரக்கூடாது என்று அவர்கள் தடுக்கிறார்கள். ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் எதையும் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளே நடத்துவதற்கு அண்மைக்காலமாக பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி தர மறுத்துவருகின்றது. அரசியல் விஞ்ஞானக் கருத்தரங்கு, இண்டியன் சையின்ஸ காங்கிரஸ் கருத்தரங்கு, அனைத்து மொழியியல் மன்றக் கருத்தரங்கு, இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகக் கருத்தரங்கு போன்ற பல்வேறு புகழ் பெற்ற, உலகப்புகழ் பெற்ற நிறுவனங்கள் தங்களுடைய கருத்தரங்குகளை மதுரைப் பல்கலைக் கழக வளாகத்திற்குள்ளே நடத்த வேண்டும் என்று அவர்கள் எழுதினாலும் கூட 'எங்களுக்கு அதற்கான வாய்ப்பு இல்லை, வசதி இல்லை' என்று பல்கலைக் கழக நிர்வாகம் அதை நிராகரிக்கின்றது. அதற்கான செலவினைத் தருவதற்கு இந்த உலகப்புகழ் பெற்ற நிறுவனங்கள் முன் வந்தாலும் கூட அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்

கள், இது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. புகழ்பெற்ற அறிஞர்கள் பல்கலைக் கழகத்திற்கு அதுபோன்ற நிகழ்ச்சிகளுக்காக வருவதன்மூலம் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அந்த அறிஞர்களோடு தொடர்பு ஏற்படும், அதன்மூலம் அறிவு வளர்ச்சி ஏற்படும்.

(மாலை 5.20)

ஆனால் பல்கலைக் கழகம் அறிவு வளர்ச்சியிலே நம்முடைய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எந்த வித முன்னேற்றமும் இருக்கக்கூடாது என்று நினைக்கிறதா என்ற ஐயம் தான் ஏற்படுகிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஒரு முக்கியமான விஷயமாக கருதி, இதிலே தலையிட்டாக வேண்டும். மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஏன் இந்த நிலை நீடிக்கிறது. அங்கே என்ன குறை? இப்படிப்பட்ட நிர்வாக சீர்கேடுகள் ஏன் ஆராய்ச்சிக்கு எதிரான மனோபாவம் அந்த நிர்வாகத்திற்கு எதனால் இருக்கிறது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் நேரிடையாகவே தலையிட்டு, அதைச் சரி செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அமைச்சர் அவர்கள் பெரிய பெரிய முதலைகளை எல்லாம் ஒடுக்கியவர். பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாக ஊழல்களை எல்லாம் துணிகரமாகத் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தவர் நீங்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திற்குள்ளே இது போன்ற சீர்கேடுகள் தொடர்ந்து நடைபெற்றும் கூட, ஆசிரியர்கள் போராடி, மாணவர்கள் போராடி, உங்களுடைய தலையீட்டின் காரணமாக ஆசிரியர்கள், மாணவர்கள் போராட்டம் நிறுத்தப்பட்டது. ஆனால் உங்கள் முன்னிலையிலே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அந்த நிர்வாகம் கொஞ்சமும் மதிப்புக் கொடுக்காமல் கிழித்து எறிந்துவிட்டப் பிறகும் கூட நீங்கள் மௌனம் சாதிப்பது சரியல்ல. முற்றிலும் சீர்கேடுகள் அந்தப் பல்கலைக் கழகத்தை ஆட்கொள்ளுவதற்கு முன்னாலே, நீங்கள் இதில் தலையிட்டு சரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் முற்றிலும் சீர்படுத்த முடியாத நிலைமைக்கு அந்தப் பல்கலைக் கழகம் ஆளாகும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பதிவாளர் பதவிகளை சுழல் முறையில் செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதைப்போலவே ஸ்பெஷல் ஆபிசர் என்ற பதவி ஒன்று பல்கலைக் கழகங்களில் இருக்கிறது. அதையும் சுழல் முறையில் அமைத்து பேராசிரியர்களை முறைப்படி நியமிக்க வேண்டும் என்ற யோசனையைச் சொல்லி, அதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அங்கேயும் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி, அமைச்சர் அவர்களின் முயற்சிகளினாலே ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் அங்கே மதிக்கப்படவில்லை. பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. பல பேராசிரியர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக நான் ஒருவரைச் சொல்லி சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டாக்டர் திரு. ஆர்.எம். சுந்தரம் என்ற மொழி இயல் துறையிலே இருந்த ஒரு பேராசிரியரை—அவர் ஐரோப்பிய நாடுகளிலே பணியாற்றியவர். அவரை இவர்களாகவே வரவழைத்தார்கள், வேலை போட்டுக் கொடுத்தார்கள்—ஆனால் அவரை ஒரு காரணமும் இல்லாமல், 3 ஆண்டுகளாக பணிபுரிந்தவரை, அந்த நிர்வாகம் பதவீ விலக்கியிருக்கிறது. காரணம், ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு அவர் ஆதரவாக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக. ஆனால் அந்த ஒப்பந்தம் செய்யப்படுகிற நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முன்னாலேயே அந்த துணை வேந்தர் சொன்னார்.

On my honour I will reinstate Dr. R. M. Sundaram.

என்று சொன்னார்கள். பகிரங்கமாக சொல்லி இத்தனை மாதங்கள் ஆகியும் கூட இன்னும் அவருக்கு வேலை அளிக்கப்படவில்லை.

அதேபோலவே தமிழ் துறையிலே இணைப் பேராசிரியராக 27 ஆண்டுகள் பணிபுரிந்த திருநாவுக்கரசு என்பவர் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதியிலே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுபோன்று பல ஆசிரியர்கள் பதவி நீக்கம் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறார்கள். ஆசிரியர் பகுதி நேர ஆய்வு செய்து, எம்.ஃபில் பட்டம் பெறுவதற்கு இதுவரையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சலுகைகள் அளிக்கப்பட்டுவந்தது. ஆனால் இப்போது ஆசிரியர்களெல்லாம் ஒன்றுபட்டு எதிர்த்து போராடுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்தச் சலுகையை பல்கலைக் கழகம் ரத்து செய்திருக்கிறது. இது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்? ஆசிரியர்கள் ஆராய்ச்சித் துறையிலே ஈடுபட்டு, தங்கள் தகுதியை அதிகப்படுத்திக் கொள்வதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய வேண்டும். அரசு அவர்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்யும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. அப்படிப்பட்ட நிலையில் எதிர்மறையான முறையிலே அங்கேயிருக்கக்கூடிய நிர்வாகம் செயல்பட்டுவருகிறது. அதை ஏன் என்று தட்டிக் கேட்பதற்கு இயலாத ஒரு நிலைமை ஏற்பவதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன். அதைப் போலவே, கல்லூரி முதல்வர்களைப் பற்றியும் சில விஷயங்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கல்லூரி முதல்வர்களுக்கு பல்வேறு பொறுப்புகள் உள்ளன.

ஆனால், அதே நேரத்திலே அவர்களுக்கு மிக முக்கியமான பொறுப்புகள் இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மற்ற ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்கப்பட்டதைப்போல் அவர்களுடைய ஊதிய விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டாக வேண்டும்.

பட்ட மேற்படிப்புக் கல்லூரி முதல்வர்களுக்கு பழைய ஊதிய விகிதங்கள் அப்படியே நீடிக்கின்றன. அதை மேலும் அதிகமாக்க முயற்சி எடுக்க வேண்டும்.

முதல்வர்களுக்கு அலவன்ஸ் ரூபாய் 250 அளிக்க வேண்டுமென்று ஜி.ஓ.போட்டும் கூட அந்த ஜி.ஓ. அமுலாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதையும் அமலாக்குவதிலே கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பி. லிட். கல்லூரிகள் பத்தே பத்துத்தான் இருக்கிறது. இந்தப் பத்துக் கல்லூரிகளும் கலைக் கல்லூரிக்குச் சமமானவை என்று அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் மற்ற கல்லூரி முதல்வர்களுக்கும், பி.லிட். கல்லூரி முதல்வர்களுக்குமிடையே ஊதிய விகிதத்திலே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. மற்ற கல்லூரி முதல்வர்களுக்கு மாதம் ரூபாய் 1,900 வரை ஊதியம் அளிக்கப்படுகிறது. ஆனால் பி.லிட். கல்லூரி முதல்வர்களுக்கு ரூபாய் 1,600 தான் அளிக்கப்படுகிறது. ரூபாய் 300 வித்தியாசம் இருக்கிறது. பத்துக் கல்லூரிகள் தான். மிகப் பெரிய தொகை இல்லை. 30,000 ரூபாய் வரைதான் வரும். ஆகவே இதையும் அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு அவர்கள் குறையையும் போக்க வேண்டும்.

ஆசிரியர்கள் நியமனம் செய்வதிலே சில முறைகேடுகள் எல்லா மட்டங்களிலும் இருக்கிறது. இதற்காக ஒரு யோசனை நான் இந்த அரசின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். ஆசிரியர் வேலைக்குப் படித்தவர்கள் பட்டத் தரத்திலே உள்ள ஆசிரியர்களாக இருந்தாலும், மற்ற மட்டத்திலே இருக்கிற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அவர்கள் கல்வி இலாகா டைரக்டருக்கு மனு செய்ய வேண்டும். அந்த மனுக்களை, இலாகா பரிசீலனை செய்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு டி.ஈ.ஓ. மூலமும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சி.ஈ.ஓ. மூலமும் உத்தரவு அனுப்ப வேண்டும். எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் எடுப்பதால் என்ன முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றால், 1975 ஆம் ஆண்டிலே பதிவு செய்தவர்கள் இன்னும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டிலே பதிவு செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கிறது.



அதை மாற்றி, 1975-லே. பதிவு செய்தவர்களுக்கு முதலிலே வேலை கொடுத்துவிட்டு, பின்னாலே 1976, 1977, 1978 மற்றும் 1979-லே பதிந்தவர்களுக்கு ஆண்டு வாரியாக பதிவு செய்த முன்னுரிமையிலே வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆகவே இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

மாவட்டங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளி, மேலநிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வு திட்டம் 1968 ஆம் ஆண்டு முதல் அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்தத் திட்டத்திலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டுக்கு மேற்பட்ட மருத்துவர்கள், மற்ற உதவியாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். 1968 ஆம் ஆண்டிலேயிருந்து இந்தத் திட்டம் செயல்பட்டும் கூட இத்தனை ஆண்டுகள் ஆகியும், இந்தத் திட்டத்தின்படி வேலை பார்க்கக் கூடியவர்கள், மருத்துவர்கள் ஆனாலும், மற்ற உதவியாளர்கள் ஆனாலும், யாராக இருந்தாலும் அவர்கள் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. இன்னும் வேலை நிரந்தரமாக்கப்படாத நிலையிலே அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு முறையான ஊதிய உயர்வு இல்லை. ஏனையப் பணியாளர்களுக்கு இருக்கக் கூடிய சம்பள விகிதங்களை அவர்கள் வாங்க முடியாத நிலை இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் மட்டுமே இந்தப் பணிகள் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் நிரந்தரமாக்கப்படவில்லை. 7, 8 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு பி.எப். போன்ற வசதிகள் அளிக்கப்படவில்லை. எனவே இதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து இந்தப் பணியாளர்களின் வேலையை நிரந்தரமாக்குவதற்கு உதவ வேண்டும்.

தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம், 15 முதல் 35 வயது வரை உள்ள கிராமத்திலுள்ள, ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு எழுத்தறிவிப்பதற்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(மாலை 5.30)

இந்தத் திட்டத்தைத்தான் தமிழக அரசு 1980ஆம் ஆண்டிலே முதற் கட்டமாகவும், 1981ஆம் ஆண்டிலே இரண்டாவது கட்டமாகவும், 1982 ஆம் ஆண்டிலே மூன்றாவது கட்டமாகவும் போடும்போது, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதிலே 183 பட்டதாரி ஆசிரியர்கள் மேற்பார்வையாளர் என்ற பெயராலே வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும்,

தகுதியிலே அல்லது மற்ற எந்த விதத்திலும் ஏற்றத் தாழ்வு இல்லை. அதேபோல், அவர்கள் பட்டம் பெற்று வேலை வாய்ப்பு இல்லாததால், இதிலே சேர்ந்து கிராமம் கிராமமாக சென்று அரசாங்கத்தின் திட்டத்தை அவர்கள் அமுல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டம் முடிவடைந்து விட்டது, அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் தீர்ந்துவிட்டது என்று காரணம் காட்டி, அவர்கள் 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் வேலை பார்த்தும் கூட, அவர்களை வேலையிலிருந்து விலக்குகின்ற அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சரியல்ல. மேலும், அவர்கள் ஏற்கெனவே இந்தத் திட்டத்தின்படி வேலையிலே சேர்ந்துவிட்ட காரணத்தால், எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலே அவர்கள் பெயர்கள் அடிக்கப்பட்டு விடுகின்றது. அவர்களை பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆட்கள் எடுக்கும் போது அவர்கள் பெயர்கள் பரிசீலனை செய்யப்படுவதில்லை. அதற்குப் பின்னால் அவர்கள் பெயர்கள் வேலைக்கு சேர்த்துக்கொள்வதில் பரிசீலனை செய்யப் படாத ஒரு பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இன்று அந்தப் பதவி முடிவடைந்து விடுமானால், அவர்களை மற்ற கல்வித் துறைப் பணிகளிலே ''அப்சார்வ்'' செய்து கொள்வதற்கு முன் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இறுதியாக, விளையாட்டுத் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விளையாட்டுத்துறை, இளைஞர் படை, நேசிய மாணவர் படை ஆகியவற்றிற்கு கிட்டத்தட்ட ரூபாய் 3.32 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இது போதாது என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதிலும் தமிழகத்திலே உள்ள மாணவர்கள் மத்தியிலே அமைதியின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள் எல்லாம் அதிகமாக ஒரு பக்கம் வளர்ந்து வருகின்ற நிலையிலே, அவர்களின் சிந்தனையை, அவர்களின் கவனத்தை வேறு ஆக்கரீதியான காரியங்களிலே செலுத்தினால்தான், அவற்றைக் குறைக்க முடியுமே தவிர, வேறு நடவடிக்கைகளின் மூலம் குறைக்க முடியாது. தமிழக மாணவர்களை வீர விளையாட்டுக்களிலே, நுண்கலை பயிற்றுவிப்பதிலே ஈடுபடச் செய்வதன் மூலமாகவும், அதே நேரத்திலே தேசிய மாணவர் படையிலே அவர்களைச் சேர்த்து சிறப்புப் பயிற்சியை அளிப்பதன் மூலமாகத் தான் அவர்களை நாம் சிறந்த மாணவர்களாக உருவாக்க முடியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

அண்மையிலே நான் ஈழ நாடு சென்றபோது, அங்கே இருக்கின்ற ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளிகளிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், விளையாட்டுக்களிலும் சரி, இசை போன்ற



நுண்கலைப் பயிற்சியிலும் சரி, அவர்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட ஆர்வம் அவர்களுக்கு ஊட்டப்படுகிறது. சின்னஞ்சிறிய குழந்தைகள் கூட, தொடக்கப் பள்ளியிலே இருக்கக்கூடிய சிறிய குழந்தைகள் கூட, அருமையான இசை ஆர்வம் கொண்டவர்களாக, இசையைப் பற்றி அறிந்து கொள்வதிலே ஆர்வம் காட்டக்கூடிய ஒரு காட்சியை நான் பல்வேறு ஊர்களிலே பார்த்தேன். அங்கே ஆரம்பப்பள்ளி முதற்கொண்டு, அவர்கள் ஏதாவது ஒன்றிலே ஆர்வம் காட்டுகிறார்கள். இசைப் பயிற்சி அல்லது விளையாட்டு அல்லது நுண்கலை ஆகிய ஒன்றில் நிச்சயமாக அவர்கள் பாடம் பெற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளிலேயும் இதே போன்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அந்த மாணவர்கள் சிறந்த கலை ஆர்வம் உடையவர்களாக, விளையாட்டிலே ஆர்வம் கொண்டவர்களாக உருவாக்க முடிகிறது. இந்தக் காரியத்தை அதிகமாக தமிழகத்திலே நம்முடைய இளைஞர்கள் சமுதாயத்திலே சரியாகப் பயன்படுத்தவில்லை. குறிப்பாக அவர்கள் மத்தியிலே வீர விளையாட்டுக்களிலே அதிக ஆர்வம் ஏற்படச் செய்வதோடு, பல்வேறு விழாக்கள் அரசு நடத்த முன்வர வேண்டும். டெல்லியிலே இத்தகைய விழா நடக்கிறது. ஆனால், தமிழகத்திலே அரசாங்கத்தின் சார்பிலே பொங்கல் விழா இங்கே நடைபெற்றாலும், இன்னும் விரிவான முறையிலே எல்லா மாவட்டங்களையும் சேர்த்து, சென்னை தலைநகரிலே இதுபோன்ற விழா நடத்தி, மாணவர்களின் திறமையை வெளிப்படுத்த வழிவகைகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அதற்கு இந்தத் தொகையை இன்னும் பல மடங்கு அதிகமாக்குவதன் மூலமாகத்தான் அதைச் செய்ய முடியும். இது ஒரு ஆரம்பம் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே, வருகிற ஆண்டிலாவது அமைச்சர் அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்தி இந்த விளையாட்டு போன்றவற்றில மாணவர்கள் அதிகமாக ஈடுபடுகிற அளவிற்கு உரிய வழிவகைகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி. பொன்னம்மாள் அவர்களுக்கு மெட்றாஸ் ஐ என்று நினைக்கிறேன். ஏற்கெனவே தங்களுக்கு மெட்றாஸ் ஐ வந்துவிடுப்பில் அனுப்பியிருக்கிறார்கள். அது எல்லோருக்கும் பரவக் கூடியது. அதைப் பற்றி ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நானே ஒரு தடவை மெட்றாஸ் ஐ வந்து போயிருக்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** அதுதான் ஓரமாக உட்கார்ந்து இருக்கிறேன். ஊசி போட்டுக் கொண்டு, மாத்திரைகள் எல்லாம் சாப்பிட்டு இப்போது அது போய்விட்டது. இருந்த போதிலும் இருக்கட்டும் என்று கண்ணாடி அணிந்திருக்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்ற குறளுக்கேற்ப மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அருமை அண்ணன் அரங்கநாயகம் அவர்களிடம் கல்வித் துறையை ஒப்படைத்து உள்ளார்கள். அவர்கள் கல்விக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள் என்றால் அது மிகையாகாது. தமிழ் நாட்டில் பல் வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பினும், கண்களைப் போன்றது கல்வி மானியம். ஒரு சிற்பி நல்ல முறையில் ஒரு சிற்பத்தை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளான். ஒரு சிற்பத்தைச் செய்யும்போது அதற்கு சரியாக கண்களை வைத் தால்தான் அந்தச் சிற்பம் முழுமையடைகிறது. பெருமை அடை கிறது. அதேபோல் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கல்விக் கூடங்கள் இல்லாத கிராமங்களே தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது என்று எல்லாயிடங்களிலும் தலைசிறந்த கல்விக் கூடங்களை நிறுவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விச் சாலைகள் அமைதியாக நடந்தால்தான் நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமைய முடியும். இன்று நம் மாநிலத் தில் மேல்நிலைக் கல்வி மேல்நிலைப் பள்ளிகள் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேபோல் இன்றைக்கு 1,000 இடைநிலை ஆசிரியர்களையும், 150 உடற் பயிற்சி ஆசிரியர்களையும், 500 தமிழ் ஆசிரியர்களையும், 50 தலைமை ஆசிரியர்களையும், 30 பட்டதாரி ஆசிரியர்களையும், 100 பகுதிநேர கைத்தறி ஆசிரியர்களையும் முழுநேர ஆசிரியர் களாக ஆக்கும்வகையில் இன்றைக்கு தமிழக அரசு நியமிக்க ஆயத்தமாக இருக்கிறது என்று அறிவித்துள்ளார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இரண்டு பெண்கள் ஆய்வாளர்களையும், 25 மகவட்ட கல்வி நேர்முக உதவியாளர்களையும் நியமிக்க இருப் பதைப் பாராட்டுகிறேன்.

இன்று 4,433 நர்ஸரிப் பள்ளிகள் துவங்கப்பட உள்ளன என்று அறிவித்துள்ளார்கள். அதைப் பாராட்டுகிறேன். காரணம், பல பெரியவர்கள், மிட்டா மிராசுதார்கள், எல்லாம் டான்பாஸ்கோ, க்ரிஸ்டியன் பள்ளிகள் போன்றவற்றில் எல்.கே.ஜி, யு.கே.ஜி. க்கு இடம் பிடிக்க அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அவலநிலையை போக்கி, ஏழை எளிய பாட்டாளி மக்களும்



கல்வியில் மேம்பாடு அடைய, கல்வித்தரத்தை உயர்த்திக் கொள்ள இன்று கல்லூரிகள், பள்ளிகள் துவங்கப்பட இருக்கின்றன என்று கோடிட்டுக்காட்டியுள்ளார்கள்.

நண்பகல் உணவுத் திட்டம் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அன்றையதினம் கல்வி இயக்குநராக இருந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களால் கொண்டு வரப்பட்டது. அதற்காக திரு. நெடுமாறன் அவர்கள் குறிப் பிட்டதுபோல் இன்று ஒரு பிள்ளைக்கு 15 காசுதான் கொடுக்கப் படுகிறது. அதை கூடுதலாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-40)

இதேபோன்று, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களிலே ஏழை எளிய பாட்டாளி மக்களின் இல்லங்களிலே ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்ற குழந்தைகளுக்கு, உதவுவதற் காக 100 கோடி திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். இதைக் கல்வித் துறை மேற்கொண்டு, நல்லமுறையில் இந்தக் குழந்தைகளுக்கு கொடுத்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் ஏறத்தாழ 107 என்ற அளவிலே கொடுக்கப்பட்டு இன்றையதினம் சிறப்பாக செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் வெம்பக் கோட்டையில் 27 புதிய பள்ளிக் கட்டிடங்களும், சிவகாசியில் 19 பள்ளிக் கட்டிடங்களும் ஆரம்பித்துக் கட்டி முடிக்கப்பட் டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, 1—6—1982 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள் என்று அறிவித்துள்ளார்கள். அவர் கள் அன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவர்கள் ஆணையாளர் மூலம் 3 உதவியாளர்களோடு சிறப்பான முறையில் அந்தக் காரியங் களையும், மற்றப் பணிகளையும் செய்து கொண்டிருந்தார்கள். இன்றையதினம் மாவட்ட கல்வி அதிகாரி அலுவலகத்திலே ஒரு உதவியாளர் மூலம் அந்தப் பணிகள் எல்லாம் செயல்படுகின்றன. அவர்களுக்கு ஒரு உதவியாளர், ஒரு தட்டெழுத்தர் மட்டும் கொடுத்தால் அது போதாது. அதை மேலும் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கென்று ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு சாதல்வார் செலவு கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுத்துதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

118 உயர்நிலைப் பள்ளிகள் கடந்த ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்டது. என்னுடைய தொகுதியிலே இரண்டு பள்ளிகள் கொடுக்கப்பட்டது. அதற்காக இந்த நேரத்திலே எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே நூலகர் நியமிக்கப்பட வெண்டும். அவர்களுக்கு தலைமை ஆசிரியர்களுக்கு கொடுத்துள்ளதுபோல், ஒரு உதவியாளரை கொடுத்துதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடக்கச் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல், சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி , தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் என்ற சீரிய முயற்சியை எடுத்து, இன்றையதினம் இந்த மூன்று திட்டங்கள் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்ட இருக்கின்றன. கல்விச் சாலைகள் அமைதியாக நடந்தால்தான் இந்த நாட்டின் எதிர்காலமே சிறப்புறும் என்ற வகையிலே இந்த அரசு செயல்பட்டு வருவது பாராட்டுவதற்குரியது.

நேற்றையதினம் செய்தித் தாளில் நான் படித்தேன். டெல்லியிலே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்கழகக் கூட்டத்திலே, பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இங்கே ஆரம்பப் பள்ளிகளிலே சேர்க்கப்படுகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்து இருப்பதாகச் சுட்டிக்காட்டியபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவ்வாறு இல்லை ; தவறான தகவல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறி, இங்கே ஏறத்தாழ 91.47 கோடி மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று எடுத்துச் சொல்லியிருப்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முறை சாராக் கல்வி மையங்கள் சிவகாசி தொகுதியிலே ஏறத்தாழ 30 நடைபெறுகின்றன. சிவகாசி தொழில் நிறைந்த பகுதியாகும். அது ஒரு லேபர் சென்டராகும் ; அங்கே குழந்தைகள் தொழிலிலே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த தொழில் மையங்களிலே வேலைசெய்யும் குழந்தைகளுக்கு அவர்களுடைய ஏழ்மையைப் போக்கவேண்டுமென்ற நல் எண்ணத்தோடு, அவர்களுடைய வசதிக்காக இப்படி ஏறத்தாழ 30 மையங்கள் நடத்தப்பட்டு வருவதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இதேபோன்று, சாத்தூர், ஏழாயிரம்பண்ணை போன்ற பகுதிகளிலே துவக்கிக் கொடுக்க வேண்டும். அதே போல், பள்ளி சாராக் கல்வி மையங்கள் 988 ஏற்படுத்தி, அவைகள் நல்ல முறையிலே நடைபெற்று வருகின்றன. அந்த இரவு நேரங்களிலே, ஊராட்சிப் பள்ளிகளிலே உள்ள அந்த ஆசிரியர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசு அதிலே அதிக ஆர்வம் காட்டிவருவதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், பொது மக்களுக்காக விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்தி, அதிலே பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு, நல்ல முறையில் நடப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், இந்த பயிற்சியாளர்கள் பகுதி நேரமாக பயிற்சி தருகிறார்கள். அதனால், அவர்களால் அதிகமான அளவுக்கு பயிற்சி கொடுக்க முடியாது. ஆகவே, அவர்களை முழு நேர பயிற்சியாளராக நியமித்தால், அதன்மூலம் பயிற்சி அளிப்பதும் அதிகமாகும். உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்ததாகும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

1—6—1982 முதல் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், அவர்களைப் போன்ற உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும் அந்த ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டு என்னுடைய தொகுதியில், சிவகாசி நகரில் பல தொழில் பயிலகம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அதே போல இந்த ஆண்டு முகவை மாவட்டத்திலே சிவகாசியில் அரசு மேல் நிலைப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு புதியதாக கட்டிடம் தேவைப்படுகிறது. அந்த கட்டிட வசதியைப் பெறுவதற்கு தயவு செய்து அமைச்சர் அவர்கள் உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். அங்கே பிற்பட்ட மாணவர்களுக்காக விடுதி ஒன்றும் இயங்கி வருகிறது. அது வாடகைக் கட்டிடத்திலே இருந்து கொண்டிருப்பதால் அதற்கான கட்டிடத்தையும் கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு இல. பலராமன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தினால் கொண்டுவரக்கூடிய கல்வி வளர்ச்சி மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக கூற விழைகிறேன். கல்வி என்பது சமுதாயத்திலே மிக புனிதமாக கருதக்கூடிய ஒன்றாக நாமெல்லாம் ஏற்றுக் கொள்கிறோம். சமுதாயம் பின்தங்கிய சமுதாயமாக இருந்தாலும் அந்த மக்கள் மேம்பட வேண்டுமென்றால் கல்விதான் அவர்களுக்கு அந்த உயர்வை

தரமுடியம் என்ற நிலைமையை நாம் உணர்ந்திருக்கிறோம். அடிமை பட்டுக் கிடந்த நாட்டிலே கல்வி மிகவும் தேவையென்ற உணர்வுடன் தமிழ்நாட்டை ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சி, அதனுடைய தலைவராயிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர் ஆட்சிக் காலத்திலே பொற்காலமாக ஆக்கினார்கள். அந்த பொற்காலத்திற்கு முத்து வைத்தாற்போல இருப்பதுதான் இந்தக் கல்வி என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்காக 300 பேர்கள் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு ஆரம்பப்பள்ளி என்ற நிலையையும் 5 மைல்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியும் என்றும், தாலுக்காவிற்கு ஒரு கல்லூரி என்று திட்டமாக வகுத்து ஆங்காங்கே கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினார்கள். அவர்கள் சமுதாயத்திற்கு மிகவும் தேவையான ஐ. டி. ஐ. மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களையும் ஏற்படுத்தினார்கள். இவைகள் எதிர்கால சந்ததிகளுக்கும் இந்தியாவின் வளர்ச்சிக்கு தேவை என்ற பல நோக்கு எண்ணத்தில் ஏற்படுத்தினார்கள். தமிழ்நாடு இந்தியாவிலேயே கல்வியில் மிகவும் சிறந்து விளங்கி முன்னணியில இருந்தது. ஆனால் இன்றைக்கு அவைகள் எல்லாம் மாறுபட்ட நிலையில் ஓரளவிற்கு பின்தங்கி இருக்கிறது என்று தான் கூற முடியும். மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் போராட்ட நிலை இருந்து வருகிறது. என்றைக்கு இந்தப் பிரச்சினை தீரும் என்று தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் எண்ணி வருகிறார்கள். எப்போது போராட்டம் நடக்கும், எப்போது முடியும் என்ற நிலையில் நடந்திச் செல்வது நலலதல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து ஒரு ஒப்பந்தத்தை கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள். நிரந்தர பரிகாரம் காண்பதுதான் சமுதாயத்தில் அவர்களுக்கு நல்ல வழி முறையாக இருக்கும். எதிர்கால சந்ததிகளிடம் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் உருவாக்குவது நமது கடமை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு நல்ல வழி முறையை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள்தான போராட்டம் செய்கிறார்கள். என்றால் ஆசிரியர்களும் போராட்டம் செய்கிறார்கள். எந்த நேரத்திலே அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்பதே தெரியவில்லை. அவர்கள் செய்கிற தொழிலை ஒரு தொண்டாக கருதாமல் தொழிற்சங்க பிரதிநிதியாக மாறிவருகிற சூழ்நிலைதான் இருக்கிறது. இதற்கு யாரையும் பொறுப்பாக கூற முடியாது. அமைச்சர் அவர்கள் மட்டும் பொறுப்பில்லை, மாறிவருகிற சமுதாயமே பொறுப்பாக இருக்கும். இந்த நிலையில் சமுதாயத்தை மாற்றுவது அமைச்சர் அவர்களின் கடமையாக இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். ஆசிரியர்கள் இன்னும் ஒருவாரம் அல்லது 10 நாட்களில் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். கூறிக்கொண்டிருக்கிறார்கள். என்றைக்குமே போராட்டமா என்ற ஒரு நிலை சமுதாயத்திலே இந்தத் துறைக்கு இருக்கக கூடாது என்பதை நான வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.





(மாலை 5.50)

அமரர் காமராஜ் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்தி அவைகளிடத்திலே ஆரம்பகல்வியை விட்டார்கள். 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டப்படி முதன்மையாக கல்வியை ஏற்றுக் கொண்டு அதற்கென அதிலே சில துறைகளை இணைத்தார்கள். அந்தத் துறை விரிவுபடுத்தப்படுகிறது. இன்றைக்கு ஆசிரியர்களை நாம் வைத்திருக்கிறோம், பள்ளிக் கட்டிடங்களை அவர்கள் வைத்திருககிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே ஒன்றியங்களிடத்திலே ஆசிரியர்கள் விடப்பட்டதற்குக் காரணம் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக கிராமங்களிலே அவர்களைக் கண்காணிக்கின்ற முறையிலே தலைவர்களுக்கு ஆசிரியர்களும் பயந்து நடக்கக்கூடிய முறையிலே தலைவர்களும் ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுக்கக்கூடிய முறையிலே நல்ல வகையிலே இருக்கவேண்டுமென்ற முறையிலே தான் ஒன்றியங்களிலே விடப்பட்டது. ஆனால் அந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு அந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியதனால் என்ன லாபம் என்பதே எனக்குப் புரியவில்லை. 1958 ஆம் ஆண்டு சட்டத்தை மாற்றம் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஏதோ நிர்வாகத்திற்காக ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக மாற்றியிருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நீதிமன்றத்துக்குச் சென்றிருப்பதாக பத்திரிகையிலே என்னால் பார்க்க முடிந்தது. கடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலே பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள் என்று எனக்கு முன்னால் பேசிய நண்பர் கூடக் குறிப்பிட்டார். தமிழ்நாட்டிலே குழந்தைகள் பள்ளிகளிலே சேர்க்கப்படுவதிலே அகில இந்திய சராசரியை விட தமிழ்நாட்டில் மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இது அவர்களாகவே கூறியுள்ள கணக்கல்ல, தமிழ்நாட்டிலே இருந்து கொடுத்த கணக்கை வைத்துத்தான் அவர்கள் கூறியிருப்பார்கள் என்பதை யூகிக்க முடிகிறது. அது எந்த அளவுக்கு தாழ்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிற போது வருத்தமாக இருக்கிறது. ஏதோ மேடைப்பிரசங்கம் அல்ல, அது அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கூறிய வார்த்தை. இதை இந்தத் துறை தீவிரமாக கவனித்து ஏழை எளிய குழந்தைகள் சாதாரண குழந்தைகள் படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கூட ஒரு கணக்கை கொடுத்திருக்கிறார்கள். 6 முதல் 11 வயது வந்த குழந்தைகள் 67.62 லட்சம் என்றும் அதிலே பள்ளிகளிலே சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை 64.07 லட்சம் என்றும், அதிலே பெண்கள் 29.10 லட்சம் என்றும் இருக்கிறது. எந்த அளவுக்கு பெண்களிலே சேர்க்கப்படாதவர்கள் இருக்கிறார்கள் என்றால் ஏறத்தாழ 3.55 லட்சம் இருக்கிறார்

கள். அதைப் போலவே 11 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் மொத்தம் 30.43 லட்சம் இருக்கிறார்கள் என்றும் அவர்களிலே பள்ளிகளிலே சேர்க்கப்பட்டவர்கள் 19.64 லட்சம் என்றும் அதிலே பெண்கள் 10.79 லட்சம் பேர்கள் பள்ளிகளிலே சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதே போன்று 14 முதல் 17 வயது வரை மொத்தக் குழந்தைகள் 17.25 லட்சம் இருக்கிறார்கள். என்றும் அவர்களிலே பெண்கள் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டவர்கள் 2.57 லட்சம் என்றும் பள்ளிகளிலே சேர்க்கப்படாதவர்கள் ஏறத்தாழ 6 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் பள்ளிக்கு படிக்கச் செல்லாமல் இருக்கக்கூடிய வயது இடைக்காலமாக உள்ள 11 முதல் 14 வயது உள்ள குழந்தைகள் தான். அமரர் காமராஜ் அவர்கள் ஆரம்பக் கல்வியை கட்டாய கல்வியாக மாற்றினார்கள். 6 முதல் 11 வயதுள்ள குழந்தைகள் கட்டாயமாக பயில வேண்டுமென்ற ரீதியில் அதற்கென ஒரு குழுவை அமைத்தார்கள். நீங்களும் தாய்க் குலத்திற்கு அதிகமாக மரியாதை தரக்கூடிய அனைத்திந்திய அண்ணா தி. மு. க. இந்தப் புள்ளி விவரத்தின் படி பார்த்தால் பெண்கள் அதிகமாகப் படிக்காத நிலையும் ஏழை எளியவர்கள் அதிகமாகப் படிக்காத நிலையும் பார்க்கிறோம். நகர்ப்புறங்களிலே எப்படியோ படிக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள குழந்தைகள் குழந்தைகளை வைத்துக் கொள்வதற்கு ஆடு மாடுகளை கவனிப்பதற்கு விவசாய வேலைகளைச் செய்வதற்கு வேண்டியிருப்பதால் பள்ளி செல்ல முடியாத சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. அதற்காக என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். அந்த நிலையில் தான் நீங்கள் ஆரம்ப கல்வியை கட்டாயக் கல்வியாக மாற்றாமல் காற்றில் போட்டீர்கள். அதற்காக போடப்பட்ட குழு இயங்குகிறதா; பஞ்சாயத்துத் தலைவரையும் மற்ற அங்கத்தினர்களையும் கொண்ட குழு இருந்து எத்தனை பிள்ளைகள் சேர்ந்தார்கள். இந்த வீட்டில இவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டுச் சொல்வதற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் குழு இருந்தது; மாவட்ட அளவிலும், ஒரு குழுஇருந்தது; மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் ஒட்டுமொத்தமாகக் கணக்கிடும் முறை இருந்தது. இன்றைக்கு அந்தக் குழுக்கள் இருக்கின்றனவா என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. மேற்போக்கான புள்ளி விவரங்களைத்தான் கூற முடிகின்றதே தவிர பிரதம அமைச்சர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொல்லியது மாதிரி ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் தரவில்லை; அடிப்படைக் கல்விக்கு ஊக்கம் தரவில்லை என்ற குற்றத்தைக் கூற முடியும்.





மேலும் வருகைப் பதிவேடுகளைப் பொறுத்தவரையிலேயும் கூட, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பையனைச் சேர்த்து விட்டதாகக் கூறி, ஒரு நாள் அந்தப் பையன் வருகை தந்தாலும் கூட ஒரு மார்க்கையும் இட்டு மற்றைய நாட்களை விட்டுவிடுவது என்பது ஏதோ கணக்குக்காகப் புள்ளி விவரங்களைத் தருகிறார்களே தவிர அது உண்மையாக, நடைமுறைக்கேற்றதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பக் கல்வியை நல்ல முறையில் கண்காணிக்கவில்லை. ஏறத்தாழ 299 கோடி அல்லது 300 கோடி ரூபாய் செலவழிக்கும் நிலையில் இருக்கிறீர்கள். அந்தச் செலவு நல்ல முறையில் இருக்க வேண்டும். நாட்டு மக்களுக்குப் பயன் படும் வகையில் இருக்க வேண்டும். கல்விதான் நம்மை வாழவைக்கும், எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் என்ற முறையில் ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தினால் மட்டும்போதாது; ஆரம்பக் கல்வி எந்த அளவிற்கு ஒழுங்காகவும் சீரும் சிறப்புமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு நாடு நலம் பெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஆக்கப்பூர்வமான பணிகளை இனிமேலாவது நீங்கள் செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டிடங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளரிடம் ஆரம்பக் கல்விக்கான கட்டிடங்களை விட்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு அதில் என்ன உற்சாகம் இருக்கப் போகிறது. ஆசிரியர் நிர்வாகம் வேறு, கட்டிடம் வேறு என்றால் அங்கே நல்ல நிலைமை ஏற்படுமா என்று பார்த்தால் ஏற்படாது என்ற உணர்வுதான் எனக்கு ஏற்படுகிறது. தங்கள் நிறைவுத் திட்டத்திலே தேவையான கட்டிடங்களை முடித்து விட்டாலும், வளரும் சமுதாயத்தில் தேவைகள் அதிகமாகப் பெருகிக் கொண்டேதான் இருக்கும். இன்னும் முழுவதும் முடிக்கப்படாமல் பல பள்ளிகள் இருக்கின்றன. அதை என்றைக்கு நிவர்த்தி செய்யப் போகிறீர்கள் கிராமப்புறங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் அதிகமாக இருக்கிறதா என்றால் அதுவும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

ஏதோ பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் அவர்கள் பெறுகின்ற சம்பளம், ஊதியம், மெடிக்கல் அலவன்ஸ் ஆகியவைகளை அரசு கொடுக்கிறதா என்றால் இல்லை.இதுவரையில் பி. டி. ஓ. பொறுப்பில்தான் அவைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இவைகளை என்றைக்குத் தீர்க்கப்போகிறீர்கள். என்றைக்குத் தீர்க்க முடியும் என்பதையெல்லாம் நீங்கள் யோசித்துப் பார்த்து அன்றைக்கு அமரர் காமராஜ் அவர்கள் எந்த நோக்கோடு இதைப் பஞ்சாயத்து யூனியனிடம் விட்டார்களோ அந்த நிலைக்கு மீண்டும் இட்டுச்

செல்ல வேண்டும்; அங்கேயே விட வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையாகவும் என கருத்தாகவும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில்கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குநேர் முகமாகச் சம்பளம் தருவோம் என்று கடந்த ஆண்டு அறிக்கையில் அறிவித்தீர்கள். அப்படி அறிவித்துவிட்டு, இன்று வரையில் அதை நடைமுறைப் படுத்தாத நிலைமைதான் இருக்கிறது. என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது உங்களுடைய கொள்கையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குழந்தைகளுக்கு மதிய உணவு என்ற புனிதமான திட்டத்தை அமரர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த நிலையிலே இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு உயர்ந்திருக்கின்ற விலைவாசியில் 20 பைசாவைக் கொண்டு சோறு எப்படிப் போட முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதை உயர்த்த வேண்டுமென்று இன்று பலரும் கேட்டாலும் கூட அவைகளெல்லாம் இன்றுவரையில் நிவர்த்திக்கப்படாத நிலையில் தான் இருக்கிறது. அந்த 20 பைசாவிலும் கூட, 5 பைசாவிற்கு விறகு மற்ற நிலைகளுக்குச் சென்றுவிட்டால் மீதியுள்ள 15 பைசாவில் சோறு போட முடியுமா ஏதோ போடுகிறோம் என்ற நிலைக்குத்தான் ஆளாகிறீர்கள். புதிதாக 100 கோடி ரூபாய்க்கு திட்டம் என்பது கடந்த இருபது நாட்களில் பல ரூபங்களில் சொல்லப்படுகிறது. அதில் என்ன செய்யப் போகிறீர்கள். இந்த 100 கோடி ரூபாயை கிராமப்புற மாணவர்களுக்கே 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது நிறைவான வகையில் உணவு.கொடுக்கும் திட்டமாக வகுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகவும், வேண்டுகோளாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். அந்த வகையில் நீங்கள் ரூ. 100 கோடி திட்டத்தை அமுலாக்க வேண்டும்.

(மாலை 6–00)

பாலவாடிப் பள்ளிகளை நாங்கள் ஆரம்பிக்கின்றோம் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். அவைகள் மத்திய அரசாங்கத்தினுடைய திட்டமாக இருந்தாலும், அவைகளை நல்ல முறையில் செயல்படுத்தி, எல்லா ஒன்றியங்களுக்கும் சமமாகப் பங்கிட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மைய அரசு திட்டத்தை நல்ல முறையில் அமுல் படுத்துவது மாநில அரசாங்கக் கடமையாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளிலே இன்றைக்குப் பல பள்ளிகளிலே கட்டிடம் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலை என்றைக்கு மாறுமோ என்பது கேள்வி குறியாகத் தான் இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய போளூர் வட்டத்திலே கூட, அனந்தபுரம் பகுதியிலே ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டு காலம் ஆகியும் கட்டிடமே இல்லாத வெறும் ஒலை வேய்ந்த இடத்திலேதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று பல கட்டிடங்கள் இருக்கின்றன அவற்றிற்கு எல்லாம் எப்பொழுதுதான் உண்மையான கட்டிடங்கள் வருமோ தெரியவில்லை. அதேபோல் வட ஆற்காடு மாவட்டத்திலே கணியம்பாடி என்ற உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லை. அதுபோல், மேநிலைப்பள்ளியைப் பழுது பார்க்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக கூறியும் இன்றையவரையில் பழுதுபார்க்க முடியாத நிலை இருக்கிறது. இப்படிப் பரவலாக இருக்க கூடிய நிலையை என்றைக்குப் போக்கப் போகிறீர்கள்? மாணவர்கள் உட்கார்ந்து படிக்க என்றைக்கு வசதி செய்யப் போகிறீர்கள் என்பதைத்தான் நான் இன்றைக்குக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளை நல்ல முறையில் பழுதுபார்க்க வேண்டுமென்று நான் கூறிக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளிலே பகுதி நேர டி. எம். இ., டி. இ. அக்ரி. போன்ற ஆசிரியர்களுக்கு ரூ. 150 ஊதியம் கொடுத்து, வாரத்தில் 10 மணி நேரம் வேலை வாங்குவதை நீக்கி, அவர்களுக்கு நிரந்தரமான பணி கொடுக்க வழியிருக்கிறதா என்பதை நீங்கள் ஆராய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஐ. டி. ஐ. பாலிடெக்னிக் போன்றவைகளை விரிவுபடுத்த ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா? என்று பார்த்தால் இல்லை. அவற்றை விரிவுபடுத்தினால் அதனைப் படிக்க விரும்பும் இலட்சோப இலட்சம் மாணவர்களுக்கு அக்கல்வி கற்க ஒரு வாய்ப்புக் கிடைக்கும். வேலூரில் பகுதி நேர — மாலை நேர வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, அவற்றை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்தி போளூர் தலைமையிடத்திலே ஒரு ஐ. டி. ஐ. பள்ளியைத் திறக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு கொள்ள ஆசைப்படுகிறேன்.

போளூர் பெண்கள் பள்ளியில் இட வசதி வேண்டுமென்று கோரி, இங்கே அரசு ஆணைக்கு அனுப்பி, கோவில் நிலத்தை எடுத்து கொள்ளலாம் என்ற ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அதையும் அரசு ஆராய்ந்து, அந்தப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு இடவசதி ஏற்படுத்தி உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

செல்ல வேண்டும்; அங்கேயே விட வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையாகவும் என் கருத்தாகவும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில்கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குநேர் முகமாகச் சம்பளம் தருவோம் என்று கடந்த ஆண்டு அறிக்கையில் அறிவித்தீர்கள். அப்படி அறிவித்துவிட்டு, இன்று வரையில் அதை நடைமுறைப் படுத்தாத நிலைமைதான் இருக்கிறது. என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது உங்களுடைய கொள்கையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குழந்தைகளுக்கு மதிய உணவு என்ற புனிதமான திட்டத்தை அமரர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த நிலை யிலே இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு உயர்ந்திருக்கின்ற விலைவாசியில் 20 பைசாவைக் கொண்டு சோறு எப்படிப் போட முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதை உயர்த்த வேண்டுமென்று இன்று பலரும் கேட்டாலும் கூட அவைகளெல்லாம் இன்றுவரையில் நிவர்த்திக்கப்படாத நிலையில் தான் இருக்கிறது. அந்த 20 பைசாவிலும் கூட, 5 பைசாவிற்கு விறகு மற்ற நிலைகளுக்குச் சென்றுவிட்டால் மீதியுள்ள 15 பைசா வில் சோறு போட முடியுமா ஏதோ போடுகிறோம் என்ற நிலைக்குத்தான் ஆளாகிறீர்கள். புதிதாக 100 கோடி ரூபாய்க்கு திட்டம் என்பது கடந்த இருபது நாட்களில் பல ரூபங்களில் சொல்லப்படுகிறது. அதில் என்ன செய்யப் போகிறீர்கள். இந்த 100 கோடி ரூபாயை கிராமப்புற மாணவர்களுக்கே 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது நிறை வான வகையில் உணவு கொடுக்கும் திட்டமாக வகுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகவும், வேண்டுகோளாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். அந்த வகையில் நீங்கள் ரூ. 100 கோடி திட்டத்தை அமுலாக்க வேண்டும்.

(மாலை 6–00)

பாலவாடிப் பள்ளிகளை நாங்கள் ஆரம்பிக்கின்றோம் என் றெல்லாம் கூறியிருக்கிறார்கள். அவைகள் மத்திய அரசாங்கத்தி னுடைய திட்டமாக இருந்தாலும், அவைகளை நல்ல முறையில் செயல்படுத்தி, எல்லா ஒன்றியங்களுக்கும் சமமாகப் பங்கிட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மைய அரசு திட்டத்தை நல்ல முறையில் அமுல் படுத்துவது மாநில அரசாங்கக் கடமையாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.



ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளிலே இன்றைக்குப் பல பள்ளி களிலே கட்டிடம் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலை என்றைக்கு மாறுமோ என்பது கேள்வி குறியாகத் தான் இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய போளூர் வட்டத் திலே கூட, அனந்தபுரம் பகுதியிலே ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டு காலம் ஆகியும் கட்டிடமே இல்லாத வெறும் ஓலை வேய்ந்த இடத்திலேதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று பல கட்டிடங்கள் இருக்கின்றன அவற்றிற்கு எல்லாம் எப்பொழுதுதான் உண்மையான கட்டிடங் கள் வருமோ தெரியவில்லை. அதேபோல் வட ஆற்காடு மா வட்டத்திலே கணியம்பாடி என்ற உயர்நிலைப் பள்ளிக்கு கட்டி டம் இல்லை. அதுபோல், மேநிலைப்பள்ளியைப் பழுது பார்க்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக கூறியும் இன்றையவரையில் பழுதுபார்க்க முடியாத நிலை இருக்கிறது. இப்படிப் பரவலாக இருக்க கூடிய நிலையை என்றைக்குப் போக்கப் போகிறீர்கள்? மாணவர்கள் உட்கார்ந்து படிக்க என்றைக்கு வசதி செய்யப் போகிறீர்கள் என்பதைத்தான் நான் இன்றைக்குக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளை நல்ல முறையில் பழுதுபார்க்க வேண்டுமென்று நான் கூறிக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளிலே பகுதி நேர டி. எம். இ., டி. இ. அக்ரி. போன்ற ஆசிரியர்களுக்கு ரூ. 150 ஊதியம் கொடுத்து, வாரத்தில் 10 மணி நேரம் வேலை வாங்குவதை நீக்கி, அவர் களுக்கு நிரந்தரமான பணி கொடுக்க வழியிருக்கிறதா என்பதை நீங்கள் ஆராய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஐ. டி. ஐ. பாலிடெக்னிக் போன்றவைகளை விரிவுபடுத்த ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா? என்று பார்த்தால் இல்லை. அவற்றை விரிவுபடுத்தினால் அதனைப் படிக்க விரும்பும் இலட்சோப இலட்சம் மாணவர்களுக்கு அக்கல்வி கற்க ஒரு வாய்ப்புக் கிடைக்கும். வேலூரில் பகுதி நேர — மாலை நேர வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, அவற்றை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்வலியுறுத்தி போளூர் தலைமையிடத்திலே ஒரு ஐ. டி. ஐ. பள்ளியைத் திறக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு கொள்ள ஆசைப்படுகிறேன்.

போளூர் பெண்கள் பள்ளியில் இட வசதி வேண்டுமென்று கோரி, இங்கே அரசு ஆணைக்கு அனுப்பி, கோவில் நிலத்தை எடுத்து கொள்ளலாம் என்ற ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக் கிறது. அதையும் அரசு ஆராய்ந்து, அந்தப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு இடவசதி ஏற்படுத்தி உத்தரவிட வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழில் டெலி பிரிண்டர் கொண்டு வரும் பணி என்ன நிலையில் இருக்கிறது? ஏதோ, தமிழை அதிகமாக விரிவாக்க வேண்டுமென்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் எல்லாம் கொண்டு வந்து விட்டோம் என்று கூறுபவர்கள் இதற்காக என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. தமிழில் டெலிபிரிண்டர் போன்றவைகளை கொண்டு வர நம் அரசு முயற்சிக்க வேண்டும்.

பழங்கால ஓலைச் சுவடிகளை மைக்ரோ பிலிம் எடுப்பதற்கான திட்டம் ஏதோ இருப்பதாக கூறிக் கொண்டிருக்கிறீர்கள். அதை அமுல்படுத்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியில் அதியமான் என்ற அரசனுடைய கல்வெட்டுகள் போன்றவைகள் இருப்பதனால், அப்பகுதியிலே ஒரு மியூசியம் ஏற்படுத்துவது நலம் என்று உணரவேண்டும். திருக்கோவிலூரில் கூட பழமையான நாடு தமிழ்நாடு என்பதை விளக்குவதற்கான கல்வெட்டுக்கள் கிடைத்திருப்பதாக அறிகிறேன். அங்கும் ஒரு மியூசியம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

வடாற்காடு, தர்மபுரி, சேலத்திலுள்ள நடு கற்கள் எல்லாம் புராதானமான கற்கள். அவைகள் மூதாதையர்களுடைய வரலாற்றை காண்பிக்கக்கூடிய நடு கற்களாக இருக்கின்றன. அதற்கெல்லாம் மியூசியம் தேவை. அந்த மியூசியம் அமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் (மணி அடிக்கப்பெற்றது)

*திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை கூற விழைகிறேன். கல்விக்காக ஒதுக்கப்பட்ட 291 கோடி ரூபாயில் பள்ளிக் கல்விக்கும் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட கல்விக்கும் ரூபாய் 239 கோடி, ஒதுக்கிய அந்தப் பணத்தில் முதற்கண் நர்சரிப் பள்ளி துவங்க அதற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியமைக்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிப்படைக் கல்வியை மாணவர்கள் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்று சொன்னால் தமிழகத்திலே இப்போது 4,433 குழந்தைகள் நல மையங்கள் பால்வாடிகள் துவங்கியதைப் போல அந்தப் பால்வாடி மையங்களிலேயே நர்சரிப் பள்ளி





களைத் துவங்க வேண்டும், என்று சென்ற ஆண்டு சொன்னதை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படி நர்சரிப் பள்ளிகளை ஆரம்பித்தாலும் அந்த பள்ளிகளைத் துவங்க ஒரு கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று சொன்னால், அந்தப் பால்வாடிகளை கிராமங்களிலே நடத்துகின்றவர்கள் அதை ஒழுங்கான இடத்தில் நடத்த முடியவில்லை. ஏதோ ஒரு சிறிய இடத்தில் குழந்தைகளுக்கு வசதி இல்லாமல் அந்த இடங்களிலே பால்வாடிகளை நடத்திக் கொண்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த இடங்களில் நர்சரிப் பள்ளிகளை நடத்துவது என்பது சாத்தியமாக அமையாது என்பதைத் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நர்சரிப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிற இடங்கள் குழந்தைகளுக்குச் சௌகரியமாக இருக்கின்ற இடங்களில், காற்றோட்டம் உள்ள இடங்களில், விளையாட்டு மைதானங்கள் உள்ளடங்கிய இடங்களில் இந்த நர்சரிப் பள்ளிகளை அமைக்கவேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நர்சரிப் பள்ளி துவங்குவதன் காரணமாக, ஆரம்ப காலத்திலேயே பிள்ளைகள் தாங்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கவும் மேலும் அந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள பெற்றோர்களுக்கு அதிக வேலை இருக்கின்ற காரணத்தினாலே, அந்தச் சிறிய குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காக, பெரிய குழந்தைகள், ஆரம்ப பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் சிறிய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள அனுப்பும் நிலைமை இருக்கின்றது. ஆனால் இந்த நர்சரிப் பள்ளிகளை நாம் ஆரம்பிக்கின்ற காரணத்தினாலே அந்தச் சிறு குழந்தைகள் நர்சரி பள்ளிக்குப் போகின்ற நிலையில், பெரிய குழந்தைகள் தங்களுடைய பள்ளிக்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது.

மேலும் முறை சாராக் கல்வியையும், முதியோர் கல்வியையும் ஒழுங்காகத் துவங்கி செயல்படுத்துவோமேயானால், பிற்காலத்தில் அதற்கான நிதியைத் தனியாக ஒதுக்கும் நிலை அங்கே இல்லாத நிலை உருவாகும் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் ஆரம்பப் பாடசாலைகளில், உயர் நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளிகளில் இங்கே கொடுக்கப் பட்ட விகிதாசாரப்படி 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை உருவாக்கி இருப்பதாக தெரிவித்து இருக்கிறார்கள். அந்த நிலை மாறவேண்டும். 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியராக இருந்தால்தான் அந்த ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மாணவர்களைக் கவனித்து, இப்போது இருக்கின்ற பாட சுமைகளை அந்தக் குழந்தைகளுக்கு நேரடியாக எடுத்துச் சொல்லி கண்காணிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு இரா. சண்முகம்] [1982 மார்ச் 16

அடுத்து டிராப் ஹோல்ஸ் ஆகின்ற மாணவர்கள் 1973-லே 1974-லே 51 விழுக்காடுகளைப் பெற்றிருந்தது. ஆனால் இப்போது 1980–81-லே அதை 30 விழுக்காடாக நாம் குறைத்திருக்கிறோம்.

இப்படி உயர்நிலைப் பள்ளிக் கல்விக்காக மொத்தம் 239 கோடி ரூபாய் செலவழிக்கின்ற வகையில் 2,168 பள்ளிகளை நாம் இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிறோம். அப்படி நடை பெற்றுக்கொண்டிருக்கின்ற அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு பள்ளிக் கட்டிடங்கள் சரியான முறையில் இல்லாத நிலையில் பல பள்ளி களுக்கு 1957-லே, தொடங்கப்பட்டபோது அந்தப் பள்ளி களுக்கு எந்த அளவுக்கு பள்ளிக்கட்டிடங்கள் இருந்தனவோ அதே நிலையில் பூரணமாக கட்டிட வசதி இல்லாமல் இருக் கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் திருத்தணித் தொகுதியில் ஆர்க்காடு குப்பம் என்ற ஊரில் 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்றும் தொடங்கிய அந்த குடிசையிலேயே செயல்பட்டு வருகிறது. அந்தப் பள்ளிக்கு என்று தனியாக் கட்டிடம் இல்லாத சூழ்நிலை இருக் கிறது.

(இரவு 6.10)

அதைப்போல கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கொப்பூர் என்ற ஊரில் இருக்கும் பள்ளிக்கு புதிய கட்டிடம் இல்லை. ஆரம்பத்தில் இருந்த அதே கட்டிடத்தில அன்று இருந்த நிலையிலேயே இருக்கிறது. அதைப்போல மணவாள நகரில் முதன் முதலாக ஆரம்பப்பள்ளி தொடங்கப்பட்டபோது எந்த கட்டிடம் இருந்ததோ அதே கட்டிடம் தான் 'உயர்நிலைப் பள்ளியான பின்னாலும் இருக்கிறது ; புதிய கட்டிடம் இல்லை.

இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளி களும் தொடங்கப்பட்ட பிறகு அந்தப் பள்ளிகளிலே வயது வந்த பிள்ளைகள் 15, 16 வயது உள்ள மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். அவர்களுக்கு சுகாதார முறைப்படி அமைக்கப் பட்ட கழிப்பிடங்கள் இல்லாததால் பல பிரச்சனைகள் வரு கின்றன: புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டும்போது நாம் இப்போது விஞ்ஞான ஆய்வுக் கூடங்களுக்கான கட்டிடங்களையும் சேர்த்துக் கட்டித்தந்துக்கொண்டிருக்கிறோம் அதே நேரத்தில் அங்கே படிக் கின்ற மாணவமாணவிகளுக்கு சுகாதார முறையில் அமைந்த கழிப் பிடங்களையும் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்:

இப்போது மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளி களிலும் பல பிரச்சனைகள் அதிகமாகத் தோன்றுவதகு காரணக் காப்புப் சுவர் இல்லாததுதான். அதன் காரணமாக பிரச்சனைகள் எழுகின்றன அதைத் தடுக்க, நாம் காப்புச் சுவர்களை நிச்சயமாக அமைத்தாக வேண்டும்



1982 மார்ச் 16] [திரு. இரா. சண்முகம்]

மேலும் நாம் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தொழில் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்களுடைய தேர்வு சான்றி தழை வழங்கும் போது அதிலே பார்ட் 1, பார்ட் 2, பார்ட் 3 என்று மதிப்பு எண்களைப் போட்டுக் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் விரும்பி ஏற்றுக் கொள்கிற பாடத்தின் மதிப்பு எண் களை தனித்தனியாகக் குறித்துக் கொடுத்தால் அவர்கள் அந்தத் தொழிலை கற்றுக்கொண்டதற்கு இணங்க மேல் படிப்புக்குச் செல்வதாக இருந்தாலும், இந்தப் பணிக்குச் செல்வ தாக இருந்தாலும்மிகவும் உபயோகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மேல்நிலைப் பள்ளியை முதன் முதலாகத் தொடங் கும்போது அதற்கு வேண்டிய பி.ஜி. படித்த ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பி.டி. படித்த ஆசிரியர்கள் 10 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால் அவர்களை அந்தப் பள்ளியில் ஆசிரியர் களாக நியமித்து, அதற்காக மாதம் 50 ரூபாய் அவர்களுக்கு கூடுதலாக ஊதியம் கொடுக்கிறோம். இப்படி இன்டக்டிங் டீச்சர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள் பட்டம் பெற்ற பாடத்தில் தன்னை முழுமையாகத் தயார்செய்துகொண்டு, அந்த மாணவர்களுக்கு அதைக் கற்றுத்தருகின்ற நிலையில், அந்த நிலையில் மாணவர்கள் அந்தப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பு எண்கள் பெற்று தேர்வு பெறுகின்ற அளவில் இருக் கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் மாணவர்களைத் தயார் செய்கிறார்கள் ; தகுதி பெறச் செய்கிறார்கள். அதே சமயத்தில் பி.ஜி. ஆசிரியர்கள் தயார் செய்கின்ற அந்த அளவுக்கு மாண வர்களை பி. டி. ஆசிரியர்கள் தயார் செய்கிறார்கள். ஆனால் இந்த இன்டக்டிங் டீச்சர்களுக்கும் பி.ஜி. டிச்சர்களுக்குப் சம்பளத்தில் 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையில் வித்தியா சம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை சீர் செய்ய வேண்டும்.

அதைப் போல இந்த பி.டி ஆசிரியர்கள், இன்டக்டிங் டீச்சர் களாகப் பணியாற்றியவர்கள் நிலை என்ன ஆகுமோ என்ற ஒரு திகைப்பில் தற்போது இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாண்டுகள் பணியாற்றிய பின்னாலும் அவர்கள் நிலை என்ன என்று தெரியவில்லை. அவர்கள் பி.ஜி. தேர்ச்சி பெற வேண்டுமென்றாலும் நம்முடைய கல்வித்துறை அவர்களுக்கு தனியாக 5 அல்லது 6 மாதத்திற்கு ஒரு பயிற்சியை அளித்து, எந்த பாடத்திலே அவர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்களோ அந்தப் பாடத்தில் பயிற்சி கொடுத்து, பி.ஜி. ஆசிரியர்களாக அவர்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கேள்விக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது 8 வது வகுப்பை உயர்நிலைப் பள்ளியிலே சேர்ப் பதற்கான வாய்ப்பை இந்த அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். 8 வது படிக்கின்ற மாணவர்களுக்கு பாதிக்கின்ற திறமை படைத்த ஆசிரியர்கள், இடைநிலை

ஆசிரியர்களாக அதிகம் பேர் இருந்தாலும், அவர்களுக்கு அந்தப் பாடத்தின் சுமை அதிகமாக இருப்பதால் அந்த அளவுக்கு அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் பி. டி. பட்டப்படிப்பு படித்து ஆசிரியர்கள் அதிகம் பேர் வேலை இல்லாமல் இருப்பதால் 8 வது வகுப்பை உயர்நிலைப் பள்ளியில் சேர்த்து அந்த 8 வது வகுப்புக்கு இந்த பி. டி. ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் பி. டி. ஆசிரியர்கள் இரண்டாண்டுக் காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக 500 ரூபாயும் 60 ரூபாயும் சேர்த்து ஆக மொத்தம் 560 ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்கள் முழுநேர ஆசிரியர்களாக வருவதற்கான தகுதியைப் பெறாமல் இங்கே அவர்கள் மேர்ப்பார்வையாளர்களாகப் போடப்பட்டு இரண்டாண்டுகளாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு பி. டி. சம்பளம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று இத்தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளியிலே நேர்முக இன்டர்வியூ நடக்கின்ற போது அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் முன்னுரிமை வழங்க வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களை நாம் அரசு ஊழியர்களாக எடுத்து கொண்டோம். ஆனால் மின் கட்டணங்களைப் பொறுத்தவரையிலே ஒன்றிய ஆணையாளர்களின் பராமரிப்பிலே விட்டு வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கான மின் கட்டணங்களை மாதா மாதம் செலுத்தாமல் ஆணையாளர்கள் அதனை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதனாலே மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட காணத்தால் அங்கே மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஆகவே தனியாக உத்தரவுகள் ஆணையாளருக்குக்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் திரும்பவும் கொடுப்பதற்கு நான் கேட்டுக் கொள்கிறேன் என்று இத்தருணத்திலே

அடுத்து திருத்தணித் தொகுதியிலே ஸ்ரீ சுப்பிரமணிய சாமி தேவஸ்தான அறங்காவல் துறையின் மூலமாக ஒரு பாலி டெக்னிக் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இத்தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செங்கை மாவட்டத்தின் வட பகுதியில் விவசாயக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டும். அந்தப் பகுதியிலே அதிகப்படியான விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பு பெற்றிருப்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அவர்களுடைய குழந்



தைகளை மேல் படிப்புக்கு அனுப்புவது என்றால் வெகுதூரம் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருப்பதால் அந்தப் பகுதியிலே விவசாயக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டும்.

அடுத்து காஞ்சிபுரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களாலே துவங்கப்பட்ட அதாவது அவர்கள் நாடகம் நடத்தி துவங்கப்பட்ட சுப்பராய முதலியார் உயர்நிலைப்பள்ளி இன்று சீர் கெட்ட நிலைமையிலே இருக்கின்றது. அண்ணா அவர்கள் நாடகம் நடத்தி நிதி சேர்த்து அதன் மூலம் அமைக்கப்பட்ட அந்தப் பள்ளியிலே நிர்வாகம் இல்லாததற்குப் பிறகு தலைமை ஆசிரியர் நிர்வாகத்தை ஏற்று நடத்தி வருகிறார்கள். நிர்வாகம் சரியில்லாத காரணத்தால் அந்தப் பள்ளி இன்றைக்கு சீர் கெட்ட நிலமையிலே இருக்கின்றது. அந்தப் பள்ளியினை அரசே ஏற்று நடத்த வேண்டும் மேலும் அந்த உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கி காஞ்சிபுரத்திலே உள்ள மக்களுக்கு அது பயன்படுகின்ற அளவிலே அமைத்துத் தர வேண்டு மென்று நான் இத்தருணத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாரதப்பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தமிழகம் இன்றைக்குக் கல்வியிலே அதிக அக்கறை காட்டவில்லை என்ற ஒரு தகவலை இந்திய மக்களுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையிலே நாம் எட்ட வேண்டிய விழுக்காட்டை எட்டி இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கடைசியாக ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

உடற்பயிற்சி கட்டணத்தைப் பொறுத்தவரையிலே உயர்நிலைப் பள்ளியிலும் மேல் நிலைப் பள்ளியிலும் ஏறக்குறைய $1\frac{1}{2}$ ரூபாய் இரண்டு ரூபாய் வசூலிக்கிறார்கள். ஆனால் உடற்பயிற்சி சாமான்கள் இன்று அதிகமான விலையில் விற்கின்ற காரணத்தால் வாங்க முடியவில்லை. கல்லூரியிலே படிக்கின்ற போது 10 ரூபாய் 15 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள். ப்ளஸ் டூ மாணவர்களைப் பொறுத்தவரையிலே குறைந்தது 5 ரூபாய் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றசூழ்நிலையிலே அந்த உடற் பயிற்சிக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் இல்லையென்றால் வசூலிக்கிற பணத்திற்குப் பதிலாக அரசே மானியமாகக் கொடுத்து உடற்பயிற்சிக்கான பொருட்களை வாங்கிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தணியிலே சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியிலே இந்த ஆண்டு நிச்சயமாக எம். ஏ., பி. காம் படிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு தந்த அவையின் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு க. அன்பழகன் : மதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய 1982–83 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின் மீது நடைபெறும் விவாதத்திலே நானும் கலந்து கொள்ள வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ச்சியடைகிறேன்.

(இரவு 6·20)

பல ஆண்டு காலமாக தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் கல்விப் பணி எந்த வகையில் நடைபெற்று வருகிறது என்பதை கவனிக்கக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கிற நான் இந்த ஆண்டு ஒதுக்கப்பெற்ற தொகை கடந்த ஆண்டைவிடச் சற்றுக் குறைந்து போய்விட்டது. என்பதற்காக அதிக வருத்தப்படவில்லை. ஆனாலும் தேவையினுடைய அளவை எண்ணிப் பார்க்கிறபோது, ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவானது என்பதை நான் நினைவூட்டாமல் இருக்க முடியாது. அப்படிச் செலவழிக்கப்படுகின்ற தொகை எந்தெந்தப் பிரிவுக்கு எந்தெந்த அளவுக்குச் செலவிடப்படுகிறது என்பதை முதற்கண் கவனிக்கிறபோது, ஆரம்பக் கல்விக்கு ஏறத்தாழ 132 கோடி என்ற அளவுக்கும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு 80 கோடி என்ற அளவுக்கும், மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு 24 கோடியும் கல்லூரிக் கல்விக்கு 29½ கோடியும் என்று இப்படிச் செலவழிக்கின்ற போது, தொழில் நுட்பக் கல்விக்கு 13.21 கோடி என்ற அளவுக்குத்தான் செலவழிக்கப்படுகிறது என்பதை தனியாக கவனித்துப் பார்க்க வேண்டும். அதைப் பற்றி ஆராய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

கல்வி நாட்டிலே வளர்கிறது என்பது பொதுவான உண்மை தான் என்று சொன்னாலும், தரம் குறைகிறது என்பதும் மற்றொரு வகையிலே பொதுவான உண்மை. கல்வி பரவுகிறது என்ற உண்மையைச் சொன்னாலும், கல்வியைக் கொண்டு வாழ்கிற வாய்ப்பு மங்குகிறது என்பது மற்றொரு உண்மை. பொது மக்களிடத்திலே பொது அறிவு வளர்ச்சியடைய கல்வி அவசியம் என்பது உண்மைதான் என்று சொன்னாலும், பொதுமக்கள் மத்தியில் வாழ்வதற்கு அவசியமான பயிற்சி பெறுகிற, ஒரு நேரிடையான பயிற்சி தரும் கல்வியாக அது ஆகிற சமயத்தில் தான் எதிர்காலத்தில் ஏற்படுகிற இடர்பாடுகளை ஓரளவிற்குக் களைய முடியும் என்ற காரணத்தால், தொழில் நுட்பக் கல்வி மிகவும் அவசியம் . நான் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகத்திற்காக என்று வாதாட வரவில்லை, அந்தப் பல்கலைக் கழகமோ அல்லது பாலிடெக்னிக் என்று வழங்குகின்ற தொழில் நுட்பப் பயிற்சி வழங்குகின்ற கல்லூரிகளோ இன்றைக்கு இருக்கிற எண்ணிக்கையில் இரண்டு மடங்காக ஆக்கத்தக்க முறையில் மேல்நிலைக் கல்விக்கும்,



கல்லூரிக் கல்விக்கும் செலவழிக்கப்படுகிற 55 கோடியில் ஏறத்தாழ பாதி அளவுக்காவது, 27½ கோடி அளவுக்காவது, இந்த தொழில் நுட்பக் கல்விக்காகச் செலவழிக்கிற ஒரு புதிய முயற்சியை அரசு மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.

அடுத்து, இந்த அறிக்கையைப் பார்க்கிற போது எனக்குச் சற்று கண் வலி ஏற்பட்டது. இங்கே அங்கத்தினர் ஒருவருக்கு ஏற்பட்டிருக்கிற கண் வலி போன்றது அல்ல. அறிக்கையை அச்சடிக்கிறபோது இத்தனை பக்கங்களுக்குள் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று அச்சடித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். கடந்த ஆண்டு 80 பக்கங்கள் அளவில் இருந்த இந்த அறிக்கை, இந்த ஆண்டு 70 பக்கங்களில் அடக்கப்பட்டிருக்கிறது. அதிகமான அளவில் விளக்கங்கள் இருந்தால் வீணான பிரச்சினைகள் வரும் என்ற காரணத்தால், அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று துறையினர் குறைத்திருந்தாலும் கூட, ஒரு பக்கத்தில் 35 வரிகள் இருக்க வேண்டிய இடத்தில், 44 வரிகள் அளவிற்கு அச்சடித்ததன் குறை காரணமாக சுலபமாகப் படிப்பதற்கு இயலாத நிலைமையை ஏற்படுத்துகிறது என்பதை, இது கல்வி மான்யம் என்ற காரணத்தால் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று கல்வித் துறை தான் தமிழ் ஆட்சி மொழியாகப் பல்வேறு துறைகளில் வளர்வதற்கான பொறுப்பை ஏற்றிருக்கிறது என்ற காரணத்தால், கல்வித் துறையின் ஃபெர்பாமென்ஸ் பட்ஜெட் இனியாவது தமிழிலே வரக் கூடிய முதல் முயற்சியை மேற் கொள்ள வேண்டும். அந்த வகையிலே புள்ளிக் குறிப்புகளிலே தவறு இருக்குமானால் கூட வருத்தப்பட மாட்டேன். ஆகவே இனியாவது அதைத் தமிழிலே கொண்டு வரக் கூடிய அளவுக்கு முதல் முயற்சியினை மேற் கொண்டு அடுத்த ஆண்டிலேயிருந்தாவது நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு வேளை ஆங்கிலத்திலே வெளி வந்தால் தான் நல்ல முறையில் வரும் என்ற கருதுவார்களேயானால், இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற ஆங்கில அறிக்கையிலேயே ஃபெர்பாமென்ஸ் பட்ஜெட்டிலேயே சில தவறுகள் இருக்கின்றன. இந்த பட்ஜெட்டிலே 12-வது பக்கத்திலே, 1970-71 ஆம் ஆண்டிலேயிருந்து, ஏறத்தாழ 160 கல்லூரிகளுக்கு செலவழித்த தொகையை கணக்குகளை காட்டுகிறபோது, அமெளன்ட் ஸ்பென்ட் என்ற காலத்தில் 78.36 கோடி என்று காட்டியிருக்கிறார்கள். 1976-77-ல் கல்லூரிகள் 189, ஆனால் செலவழிக்கப்பட்ட தொகையாக கொடுக்கப்பட்டிருப்பது 13·55 கோடி என்று இருக்கிறது. அதே போல 1977-78-ல் அதே 189 கல்லூரிகளுக்குப் பதில் 188 என்று போட்டு விட்டு, செலவழிக்கப்பட்ட தொகை 18.66 கோடி என்று போட்டிருக்கிறார்

கள். புள்ளி வைப்பதிலே விட்டு விட்டார்கள் என்று தோன்று கிறது. புள்ளி தானே என்று விட்டிருக்கலாம். எனவே இந்தப் புள்ளி விவரங்கள் கூடக் குழப்பம் ஏற்படுத்தக் கூடாது என்று நினைவு படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் எடுத்துச் சொன்ன அடிப்படையில் ஓரளவிற்குச் சில விவரங்கள் தரப்பட்டிருக்கிறது, அதற்கு நன்றி. கடந்த ஆண்டு பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் பல ஆண்டுக் காலமாக தொடர்ந்து நடந்ததை எடுத்துக் காட்டி அதன் மூலம் பல கோடி ரூபாய் அளவுக்கு, பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூல் ஆவது போல ஒரு புள்ளி விவரம் தரப்பட்டிருந்தது. அது சரியான விவரமாக இருக்கவியலாது என்று எடுத்துச் சொன்னேன்.

கோடிக்கும் இலட்சத்திற்கும் வேற்றுமை தெரியாத அளவிற்கு சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு தெளிவாக, 50 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடந்ததாகவும், அதில் 63 இலட்சம் அளவிற்கு பொது மக்களிடமிருந்து நன் கொடை பெறப்பட்டது. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 1,33,000 அளவிற்கு ஏறத்தாழ பெறப்பட்டிருக்கிறது என்ற கருத்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் தெளிவாக இருக்க வேண் டும்.

''தமிழகக் கல்வி'' என்று ஒரு ஏடு வெளிவருவதாகக் குறிப் பிடப்பட்டிருந்தது. அதில் வரும் கருத்துக்களைச் சட்டமன்ற உறுப்பினர்களும் கூடத் தெரிந்து கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் அந்த ஏடு சட்டமன்ற உறுப்பினர் களுக்கு அனுப்பப்படுவது நல்லது என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வியினுடைய உயர்ந்த நோக்கம் எண்ணும் எழுத்தும் பயில்வது மட்டும் அல்ல. அந்த எண்ணும் எழுத்தும் அறிவை வளர்த்து அறிவை வளர்க்கிற காரணத்தால் ஒரு சிந்தனை ஏற்பட்டு, சுய சிந்தனை அவர்களிடத்திலே உருவானால், பகுத்தறிவு சிந்தனை மலர்ந்து ஒழுங்கும் ஒழுக்கமும் உள்ளவர் களாக மாணவர்கள் உருவாக வேண்டுமென்று அந்த நோக்கத் தோடு கல்வித் துறையினர் பணியாற்ற வேண்டும். அந்த நோக்கம் பரவலாக இடம் பெற்றால் தான் ஆரம்பப் பள்ளியி லிருந்து கல்லூரி வரையில் ஆசிரியர்கள் ஆற்றுகிற பணியோடு கலந்து இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த குறிக்கோள்கள் இளைஞர் களிடத்தில் ஊட்டப்பட்டால்தான் அந்த இளைஞர்கள் எதிர் காலத்தில், சமுதாயத்தில் ஏற்படக் கூடிய எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையில் தங்களைப் பொறுத்த வரையில்



நம்மானம் உள்ளவர்களாக, தகுதி உள்ளவர்களாக, சமுதாயத் திற்கு ஏற்றவர்களாக, சிறப்பான பணியாற்றுகிறவர்களாக, தங்களை ஆக்கிக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு கல்வித் துறையின் மூலமாக இந்தக் கருத்துக்கள், இந்தக் கருத்துக்களை இன்னார் கருத்துக்கள் என்று நான் சொல்வது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால், மாணவர் களுடைய சுய சிந்தனையை வளர்ப்பதற்கான வழி வகைகளை ஏதாவது ஒரு வகையில் திட்டமிட்டு பாடத் திட்டத்தில் இன்ன பாடம் என்று இல்லாவிட்டாலும் அந்த நோக்கம் உள்ளத்தில் இடம் பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அண்மையிலே செய்தித் தாள்களிலே ஒரு செய்தி வந்தது. மத்திய அரசின் சார்பிலே இந்திய நாட்டினுடைய வரலாற்று ஏடுகளிலே காணப்படும் கருத்துக்களைச் சீர்திருத்தம் செய்யப் பட வேண்டும். அப்போதுதான் ஒருங்கிணைப்பு முயற்சி அல்லது அந்த நோக்கம் நிறைவேறும் என்பதற்கு அந்தந்த பகுதி வரலாற்றிலே குறிக்கப்படுகிற தனிப்பட்ட சிறப்புகள், அந்தச் சிறப்புகள் காரணமாக இன்னொரு பகுதியோடு ஏற் பட்ட மோதல்கள் இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் அடியோடு கைவிடப்பட வேண்டுமென்று ஒரு கருத்து ஏற்பட்டுள்ளதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி ஒரு கருத்து இருக்குமே யானால் அது இளைஞர்களுக்கு ஊக்கம் தராது. வரலாற்றைப் படிக்கிற போது அதிலே ஒரு சுவை ஏற்பட வேண்டுமானால் ஏற்கனவே விளைந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அந்த வரலாற்று ஏட்டிலே இருந்தால்தான் அந்த நிகழ்ச்சிகளாலே வரலாறு தெளிவாகும். அந்த நிகழ்ச்சிகளில் முறைகேடான நிகழ்ச்சிகள் எதுவும் இருக்குமானால், வரலாற்றுச் சான்றுகள் இல்லாமல் இருக்குமானால் அவற்றை நீக்கலாம் பல ஆண்டுகளுக்கு முன்னர் வங்காளத்திலே இருந்த சுராஜ் உத்தௌலாவை காட்டிக் கொடுத்தவர் மீர் ஜாபர் என்ற கருத்துப்பட நாட்டிலே பிரச் சாரம் நடைபெற்றது. அதற்குப் பின்னாலே அறிஞர் அண்ணா அவர்கள்தான் வரலாற்று மாணவராக இருந்து வெளியிலே அரசியலிலே இடம் பெற்ற காரணத்தால் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள், காட்டிக் கொடுத்தவன் மீர்ஜாபர் அல்ல, ஓலர் சந்த் என்று, மீர் ஜாபருக்கும், ஓலர் சந்துக்கும் இடையே என்னென்ன வேற்றுமைகள் என்பதை நான் வேறு விளக்கமாக சொல்லாமலே பெயர்களைக் கொண்டே உணர்வீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அளவிற்கு உண்மைகள் வெளிவரச் செய்வதற்கு, வரலாற்று ஏடுகளிலே இடம் பெறுவதிலே எந்த ஒரு தடையும் இருக்கக் கூடாது. அதற்குத் த. ட ஏற்படுத்தக் கூடிய முயற்சிகளுக்கு இடம் தரக்கூடாது.

தமிழகத்தினுடைய வரலாற்றை முழு அளவிற்கு, முழு வடிவிலே உருவாக்க வேண்டுமென்பதற்கு ஒரு குழு ஏற்படுத்தப் பட்டது.

'தொல் பழங்காலம்'' வெளி வந்து அதற்குப் பின்னாலே சங்க காலப் பகுதி வெளி வரக் கூடிய கட்டத்திலே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ''தொல் பழங்காலம்'' ஆவது ஆராய்ச்சி முறையில் தோண்டி எடுக்க வேண்டிய காலம். சங்க காலம் ஏடுகளைக் கொண்டு செப்பனிட வேண்டிய காலம். அதற்குப் பிற்பட்ட காலம் வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாக இருக்கின்ற காலம். அந்த வரலாற்று ஏடுகள் வருவதிலே ஏற்படுகிற தாமதத்தைக் காண்கிறபோது ஒரு ஆர்வம் இல்லை அத்துறையினுடைய பொறுப்பிலே இருக்கிறவர்களுக்கு, என்று நான் ஐயுறுகி றேன். அது விரைவில் வெளிவரவேண்டுமென்று சொல்வதற்கு காரணம், வரலாற்று மூலமாகத்தான் ஒரு சமுதாயத்தைத் தெளி வைக் கொடுக்க முடியும். சமுதாயத்திலே ஏற்பட்ட சீரழிவு கள், பல்வேறு வரலாற்று காலகட்டத்திலே நம்முடைய மரபு, நம்முடைய பண்பாடு, நம்முடைய இனத்தினுடைய நாகரிகம், நமக்கே உரித்தான இலக்கியங்களுடைய பெருமை இவற்றாலும் இவற்றையெல்லாம் இருப்பதற்கு இருந்த காரணங்களை இளைஞர்கள் அறியமுடியும்.

உலகத்திலே தலை சிறந்த மொழி தமிழ் மொழி என்று கோபுரத்திலே ஏறி இருந்து நான் கத்துவதற்கு தயாராக இல்லா விட்டாலும் மேல்நாட்டு அறிஞர்கள், ஜப்பான் நாட்டு அறிஞர்கள் போன்றவர்கள் தயாராக இருந்தாலும்கூட, அந்தத் தமிழ் மொழியை விட வடமொழிக்கு ஒரு தனி செல்வாக்கு தமிழ் நாட்டிலே ஏற்படுத்தக் கூடிய மத ஆதிக்கம் உ வாவதைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் எண்ணிப்பார்க்கக் கூடிய அளவிற்கு வடமொழியை வெறுக்காவிட்டாலும்கூட வடமொழிக்குத் தமிழ் மொழி தாழ்ந்தது என்கின்ற எண்ணம், அந்த எண்ணத்தின் அடிப்படையிலே வடமொழியிலே சொல்லப்பட்டதெல்லாம் உயர்வு என்று ஒரு தவறான கருத்தும் ஏற்பட வாய்ப்பளிக்கக் கூடாது.

(இரவு 6.30).

வட மொழி வாதம், வட மொழி அர்ச்சனை, வட மொழி வழிபாடு என்பவையெல்லாம் அறநிலையத்துறையினராலே கூட மறைமுகமாக காப்பாற்றப்படக்கூடிய அளவிற்கு ஆதரிக்கக் கூடிய அளவிற்கு இழிவான நிலைமை தமிழகத்திலே ஏற்ப டுகிறபோது. ஏற்கனவே ஏற்படுத்தி விட்ட இழப்பை துடைப்பதற்காக, வரலாற்று அறிவு மக்களுக்கு கிடைப்பதற் காக, இந்த வரலாற்று நூல் தொகுப்பை எழுதுகிற கடமையை ஏறத்தாழ ஒன்று அல்லது இரண்டு ஆண்டு காலத்தில் நிறை வேற்ற வேண்டும். இதை நிறைவேற்ற முடியாவிட்டால் அதற்கான ஒரு குழுவை— அது ஒரு பெரிய குழுவாக இல்லா



விட்டாலும் —ஒரு சிறிய குழுவையாவது அமைத்து விரைந்து நிறைவேற்றி இந்த வரலாற்று ஏடுகளை வெளி வரச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல பல்கலைக்கழகங்கள் சென்னைப் பல்கலைக் கழ கம், அண்ணாமலை பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல் கலைக்க கழகம் முதலான அந்தப் பல்கலைக் கழகங்களுக்கு அரசு மானியம் வழங்குகிற காரணத்தால் அவைகளைப் பற்றி பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்தப் பல்கலைக் கழகங்களில் உள்ள குறைகளைக் குறித்து பேசப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. அப்படித்தான் நானே பேசியிருக்கிறேன். பல் கலைக் கழகங்களுக்குரிய உரிமைகள், பணிகள், அவைற்றைப் பற்றி ஒரு அறிக்கையை, அகடாமிக் பீல்ட் என்று சொல்லக்கூடிய துறைகளில் பல்கலைக் கழகம் இன்னின்ன துறைகளில் இன்னின்ன ஆராய்ச்சி ஏடுகளை வெளியிட்டிருக்கிறது, இன்னின்ன வகை யான கடமைகளைச் செய்கிறது. என்று ஒவ்வொரு பல்கலைக் கழகமும், கல்வி மானியம் விவாதிக்கிறபோது அந்த நாளுக்கு முன்னதாக ஒரு அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பி ஏறத் தாழ 20 பக்கம், 25 பக்கம் கொண்ட ஒவ்வொரு பல்கலைக் கழக நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பு, அதுபோல உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆற்றுகிற கடமையைப்பற்றிய குறிப்பு தமிழ் பல்கலைக் கழகம் உருவாகி இருக்கிறதே, அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவான காலத்தில், அண்மையில் என்ன நோக்கத்தில் செயல்படுகிறார்கள் என்பதற்கான குறிப்பு, அரசின் தமிழ் வளர்ச்சித் துறை எப்படித் தன் கடமையை ஆற்றுகிறது. அந்தக் கடமைகளில் என்னென்ன இடையூறுகள் வருகிறது என்பதை விளக்குவதற்கான குறிப்புகள், இந்தக் கொள் கைக் குறிப்பிலே இடம் பெறக்கூடிய அறிக்கைகள், தனித்தனியாக வைக்கலாம் அல்லது அந்த நிறுவனங்களை நடைமுறையிலே செயல்படுகிற முறைகளை, அவற்றை விளக்குகின்ற கருத்துக் களை இடம்பெற செய்வதற்குரிய ஒரு முயற்சியை செய்ய வேண் டும் என்று நான் விரும்புகிறேன். ஏறத்தாழ 318 கோடி ரூபாய் வரவு செலவு ஆகிற கல்வித் துறையைப் பற்றி இந்த 70 பக்கத்தில் அடங்கி விடுகிறது என்று எண்ணிக்கொண்டு, இந்த 70 பக்கத்தில் ஒரு விளக்கம் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல தமிழ்நாட்டில் திருக்குறளை தேசிய நூலாக ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும் என்ற வேண்டுகோள் மத்திய அரசிடத்தில் அவ்வப்போது தமிழ்நாட்டில் உள்ள பல அறிஞர்களால் தெரிவிக்கப்படுகிறது. அப்படித் திருக் குறளை தேசிய நூலக ஏற்றுக்கொள்வார்களானால் என்னை விட மகிழ்ச்சி அடையக் கூடியவர்கள் மற்றவர்கள் யாரேனும் இருந்தால் கூட அவர்களை விட நான் குறைவான மகிழ்ச்சி அடையமாட்டேன், ஆனால் தமிழ்நாட்டில் திருக்குறள் தேசிய

நூலாயிற்றே—தேசியம் என்ற சொல்லோடு நாம் இணைத்துக் சொல்லக் கூடாது என்றால்கூட தமிழ்நாட்டில் கல்வித் துறையில் திருக்குறளுக்குத் தரக்கூடிய முக்கியத்துவம் தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறாரா என்று கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் பயிலுகின்ற மாணவர்கள், ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் பயிலுகின்ற மாணவர்கள் கூடத் திருக்குறள் பயில வழி காண வேண்டும். 3-வது வகுப்பில் பயிலுகின்ற மாணவர்களுக்கு 10 குறளும், 4-வது வகுப்பில் பயிலுகின்ற மாணவர்களுக்கு 20 குறளும், 5-வது வகுப்பில் பயிலுகின்ற மாணவர்களுக்கு 30 குறளும், அதுவும் தேர்ந்தெடுக்கப்பட்ட எளிய நடையிலே உள்ள குறளை வள்ளுவர் குரல் என்பதற்காக, அந்த மாணவர்கள் பயிலுகின்ற ஒரு நிலையினை உருவாக்க வேண்டும். 6, 7, 8-வது வகுப்புகளிலே ஒரு ஆண்டுக்கு 3 அதிகாரம், அடுத்த ஆண்டு 5 அதிகாரம், அதற்கு அடுத்த ஆண்டு 10 அதிகாரம் படிக்கின்ற நிலைமையினை ஏற்படுத்த வேண்டும். ஏறத்தாழ திருக்குறளில் உள்ள காமத்துப் பாலில் உள்ள கருத்துக்கள் மிக ஆழமுடைய கருத்துக்கள் என்ற காரணத்தினால் அவற்றை உணரக்கூடிய அளவிற்கு பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பு இல்லாத மாணவர்களுக்கு பொருட்பால் கருத்துக்கள் அறத்துப் பால் கருத்துக்கள் ஆகிய கருத்துக்கள் அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய கருத்துக்கள் ஆதலால் 10-வது வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் குறைந்தது ஒரு 600 குறளாவது படிக்கக் கூடிய முறையினை இங்கே இந்த கல்வித் திட்டத்திலே இடம்பெறச் செய்வது அவசியம். மாரல் இன்ஸ்ட்ரக்ஷன் என்ற பெயரில் நடத்துகிற பாடத்துடன் அதை இடம்பெறச் செய்தாலும் நான் வரவேற்கிறேன். இந்த வகையில் ஏறத்தாழ 1,330 குறளில் ஒரு 600 குறளையாவது படித்துவிட்டு வெளியேறுகிற மாணவர்கள் குறளைப்பற்றி அறியும் அளவிற்கு இந்தத் துறையில் இடம் பெறச் செய்ய வேண்டும். அது திருக்குறளின் முக்கியத்துவத்தை உலகம் அறியச் செய்வதற்கு மட்டுமல்ல, தமிழ் மக்கள் அறியச் செய்வதற்கு ஏற்றதாகும்.

அடுத்து, நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் கலைக் களஞ்சியத்தைக் குறித்து கடந்த ஆண்டே நான் தெரிவித்தேன். இந்த ஆண்டும் அமைச்சர் அவர்கள் அதுபற்றி தெரிவித்திருக்கிறார்.

அந்தக் கலைக் களஞ்சியத்தின் மறுபதிப்பு வெளிவரும் என்று சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் நான் அமைச்சர்அவர்களிடம் வற்புறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், கலைக்களஞ்சியத்தைப் பொறுத்தவரையில் மேல் நாடுகளில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ரீ பிரிண்ட் செய்யக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ரீ ப்ரிண்ட் செய்கிறார்கள். அது என்ஸைக்ளோபீடியா ப்ரிட்டானிக்காக ஆக இருந்தாலும் சரி அல்லது வேறு என்ஸைக்ளோ



பீடியாக்களாக இருந்தாலும் சரி, இண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதில் திருத்தங்கள் இடம்பெறகின்றன. அடிஷன்ஸ் வருகின்றன. ஐந்தாண்டுகள் அல்லது ஏழு ஆண்டுகள் வரையில், முன்னால் வாங்கிய என்ஸைக்ளோபீடியாவை வைத்திருப்பவர்களுக்கு அதில் சேர்க்கப்படாததை அச்சடித்து, ஏற்கனவே அதைப் பதிவு செய்தவர்களுக்கு அடிஷன்ஸ் என்ற முறையில் அது அனுப்பப்படுகிறது. நாம் கலைக்களஞ்சியம் தயாரிக்கிறபோது தமிழ் மறுமலர்ச்சி உருவாகாத காலம். அப்போது அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டபோது தமிழைப் பற்றி இன்று எண்ணிக் கொண்டிருக்கிற வகையில் எண்ணப்படாத காலம். அந்த முயற்சியை ஆர்வத்தோடு வரவேற்றாலும் அது நிறைவு இல்லாத ஒரு குறையுள்ள கலைக்களஞ்சியமாக இன்று ஆகிவிட்டது. மறுபடியும் அச்சிடவே இன்று 10,12 இலட்சம் ரூபாய் செலவிடும் நிலைமை ஏற்படும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதை எண்ணிப்பார்த்து செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதை அப்படியே அச்சிடுவதை நிறுத்தி, நிறுத்த முடிந்தால் நிறுத்தி மறுபடியும் அந்தக் கலைக்களஞ்சியத்தை ரிவைஸ்ட் எடிஷன் என்ற முறையில் இன்றுள்ள உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற ஓர் அமைப்பிடம் ஒப்படைத்து அந்தக் கடமையைச் செய்யுங்கள். அல்லது பல்கலைக் கழகத்திடம் அந்தக் கடமையை ஒப்படையுங்கள். அல்லது அதற்கான ஒரு குழு அமைத்து அந்தக் கடமையை நிறைவேற்ற முயலுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியே அச்சிடுவது என்பது எனக்குத் தெரிந்த அறிவில் சொல்கிறேன், அது தமிழ்நாட்டில் உள்ள தமிழ் அறிஞர்கள் பலரைப் புறக்கணித்துவிட்ட அளவிற்குள்ள சூழ்நிலையை அது திரும்பவும் காட்டும். அந்த நிலை இன்றைக்குமா? தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, மற்றும் பல அறிஞர்கள் பற்றிய குறிப்புகள் அதிலே இல்லை. விஞ்ஞான கருத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான விளக்கங்கள் அதில் இல்லை. அதில் பல நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இன்று இடம் பெறவேண்டிய பல கருத்துக்கள் விடப்பட்டிருக்கின்றன.

அதேபோல் குழந்தைகளுக்காக என்று ஒரு கலைக்களஞ்சியம் வந்திருக்கின்றது. அதையும் அவ்வப்போது மறு பதிப்பு செய்ய வேண்டும். அந்தக் கடமையைத் தொடங்குங்கள். அந்தக் கடமையைத் தேவைப்படும்போது நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் சுருக்கெழுத்து என்பது தமிழ் மொழி வளர்ச்சிக்கு மிக முக்கியமானதொன்று. இன்று பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் டெலிப்பிரிண்டர் தமிழில் இயங்க என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். டெலிப்பிரிண்டரை விட, சுருக்கெழுத்து தமிழில் இன்றைக்கு வந்திருக்கிறது என்று சொன்னாலும் கூட, அந்தச் சுருக்கெழுத்து முறையான வகையில் அமைக்கப்பட்டிருந்தால்தான் நாளைய வளர்ச்சிக்குப்

பயன்படும். இந்தச் சுருக்கெழுத்து பற்றி கடந்த ஆண்டே நான் எடுத்துச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் அந்தக் கோணத்தில் அதைக் கவனிக்கவில்லை. அரசு ஒரு சுருக்கெழுத்து அகராதியை வெளியிட்டிருக்கிறது. அது ஒரு தனிப்பட்ட மனிதருடைய முயற்சி. அது தனி மனிதர் முயற்சி என்பதற்காகப் பாராட்டலாம். ஆனால் சுருக்கெழுத்து சுருங்கிப் போய் விடுகிறது. சுருக்கெழுத்து என்பது அதிலே போடப்படுகிற ஸ்ட்ரோக்ஸ் அதில் வருகின்ற புள்ளி, அதில் வருகிற நெடுங்கோடு இவைகள் அத்தனையும் ஒவ்வொரு எழுத்தையும் சொல்லையும் பிரதிபலிப்பதாக இருப்பதால் அவற்றில் ஏராளமான குறைகள் இருக்கின்றன என்று சுருக்கெழுத்தாளர்கள் சங்கத்தினுடைய கூட்டத்தில் பேசி இருக்கிறார்கள். இந்தச் சுருக்கெழுத்து அகராதி மிகுந்த குறைபாடுடையது என்று விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

எனக்கு அதில் இன்னொரு கருத்தும் உண்டு. தமிழில் வழங்காத சொற்கள், ஏறத்தாழ 35 சதவீதம் தமிழில் வழங்காத சொற்கள் அதில் இடம் பெற்று, வடமொழிக்கும் சேர்த்துத் தயாரான சுருக்கெழுத்து என எண்ணக்கூடிய அளவிற்கு அந்தச் சுருக்கெழுத்து அகராதி தமிழுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தைத் தரவேண்டிய முறையில் தரவில்லை. தமிழில் வழங்குகின்ற பல சொற்கள் அதில் இல்லை. வழங்காத சொற்கள் பல இருக்கின்றன. யாரோ அவர்கள் வீட்டில் பேசுகிற மொழி என்று எண்ணிக்கொண்டு அந்தச் சுருக்கெழுத்து அகராதியை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தச் சுருக்கெழுத்து அகராதியை வெளியிட்டவருக்கு வேண்டுமானால் நீங்கள் பாராட்டு தெரிவியுங்கள். ஆனால் அந்தச் சுருக்கெழுத்தை முறைப்படி கொண்டுவருவதற்காக அரசாங்கத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களில் தலை சிறந்தவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமியுங்கள். மேலும் அரசுக்கு வெளியே இருக்கிறார்கள் பல்வேறு விற்பன்னர்கள். இந்த சுருக்கெழுத்து அகராதியைக் குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி போன்றவற்றில் கண்டனம் வெளி வந்திருக்கின்றது. எனவே சுருக்கெழுத்து முறையைத் தவறாக வெளியிடக்கூடாது. ஆண்டுக்கு 5,000 அல்லது 10,000 பேர்கள் பயிற்சிபெற்றுவருகிறார்கள் அதோடு ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள் அதைத் திரும்பி நோக்கி, அதைப் பயன்படுத்தியாக வேண்டும். அந்த அவசியம் அவர்களுக்கு இருக்கின்றபோது அந்தத் தவறான ஏட்டையே நீங்கள் மறுபதிப்பு செய்வதாக நான் கேள்விப்பட்டேன். மறுபதிப்பு செய்யக்கூடிய தகுதிபெற்ற ஏடு அல்ல அது என்பதை மிக அழுத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பாவாணரின் அகரமுதலி. அகரமுதலி வெளிவருகிற முயற்சி தொடர்கிறது என்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அந்த முயற்சியில், பாவாணர் அவர்கள் மொழிக் கொள்கைப்படி தொடர்ந்து நடத்த வல்லவர் இரண்டு மூன்று பேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள் அதில் இடம் பெற்றிருப்பார்கள் என நம்புகிறேன். பாவாணர் முறையில் தேர்ச்சி பெற்றவர் பலரையும் குறிப்பிட்டுச் சொல்ல நேரமில்லை. இருந்தாலும் அந்த அகரமுதலி பணி என்பது '' பிலாளஜி '' மொழி நூல் முறையில் பாவாணர் வழி ஒரு தனித்தன்மையுடையது. பிலாளஜியில் வேறு சில முறைகளைக் கையாளுகிறவர்கள் இருக்கிறார்கள். அமெரிக்கன் மெதேட் இருக்கிறது. ஒலியை வைத்து ஏற்படுத்துகின்ற முறைகள் இருக்கின்றன. இதில் பாவாணர் முறைபற்றி அறிந்தவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அவர்களுக்குத் துணையாக அமைக்கவேண்டும்.





(இரவு 6.40)

பாவாணர் முறையிலே ஈடுபாடு உடையவர்களை அந்தக் கருத்தை ஒத்துக்கொள்பவர்கள் 8 பேர்கள் அல்லது 10 பேர்கள் தமிழ்நாட்டிலே கிடைப்பார்களானால், அவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தால் தான் இதைச் செய்ய முடியும். அகர முதலியின் முதல் பகுதியே இன்னும் வெளிவருகின்ற வேலை நடைபெறவில்லை. இருந்தாலும் 6, 7 பகுதிகள் அதிலே வெளிவர வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தப் பணி குறைபாடு இல்லாமல் நடைபெறுவதற்கு, ஒரு தனி அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையிலே உருவாக்கப்படுவதைப் பற்றி அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சிதான். உலகத் தமிழ்ச் சங்கம் வந்துவிட்டதற்குப் பின்னர், தமிழ்மொழிக்குக் குறையே கிடையாது அல்லவா ? என்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்படத்தான் செய்யும். ஆனால், உலகத் தமிழ்ச் சங்கம் என்பதை இன்றைக்கு நான் வரவேற்கக் கடமைப்பட்டவனாக உள்ளவன் என்று சொன்னாலுங்கூட, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் என்று நீண்ட காலமாக வழங்கி வந்திருக்கின்ற அந்தப் பெயர், இதை நான் மதுரை நகரத்திற்காகச் சொல்லவில்லை. முத்தமிழை வழங்கிய அந்தப் பெருமை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு இருக்கிறது என்பதுடன், நான்காவது சங்கத்தை ஒரு குறுநில மன்னரான முகவை சேதுபதி அவர்கள் உருவாக்கியதும் மதுரையிலேதான். அந்த மதுரை தமிழ்ச் சங்கம் என்ற பெயருக்கு முக்கியத்துவம் இருக்குமா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தமிழ்ச் சங்கம், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சையிலே உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் இவைகளுக்கு எல்லாம் அப்பாலே, சென்னையிலே, தமிழ்த் துறையுடன் திருவள்ளுவரின் திருக்குறளை ஆராய்வதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் அவர் வழங்கிய நன்கொடையைக் கொண்டு நடைபெறுகின்ற திருக்குறள் ஆராய்ச்சி, கல் வெட்டு ஆராய்ச்சி நிறுவனம், அதைப்

போல் ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் நிறுவனங்கள், இவைகளுக்கிடையே ஒரு ஒருங்கிணைப்பு அமைந்திருக்கிறதா என்பதை எண்ணிப் பாருங்கள். அப்படி எண்ணிப்பார்த்தால் இல்லை என்பது விளங்கும். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செய்கின்ற அதே கடமையை, தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளாமல் இருக்கிறதா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை என்றாலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் ஆராய்ச்சி மையங்களை இணைக்கின்ற முறையிலே, அந்த மையங்களின் தலைவர்களும், மற்றவர்களும் கலந்து பேசி, அவரவர்கள்—The project of the particular institution இன்னது என்ற முறையில் செயற்பட வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கம்ப இராமாயணத்தை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டால், சென்னைப் பல்கலைக்கழகம் சீவக சிந்தாமணியை வெளியிடவேண்டுமே தவிர, அதுவும் கம்ப இராமாயணத்தை வெளியிடக்கூடாது. அப்படி வெளியிடுவதில் பயனில்லை; எனவே, allocation of work and the sbuject of research எவை எவை என்று தீர்மானிக்கும் முறையில் இவைகளைப் பற்றி கலந்து பேசுகின்ற முறையில் அந்த நிறுவனங்களின் தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவை தமிழ் மொழி ஆராய்ச்சி வளர்ச்சிக் குழு என்ற பெயரிலே அமைப்பதற்கு வழிவகை காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தினுடைய கல்வித் துறை எந்த அளவுக்கு வளர்ந்திருந்தாலும்கூட, நிதி அதற்காக ஒதுக்கப்பட்டாலும்கூட, அந்த நிதி உரிய பலனை விளைவிக்கின்ற அளவிற்கு முயற்சி இருக்கிறதா என்று ஐயுறுகின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை எண்ணிப் பார்த்தால் 10, 12 இடங்களிலே பாலிடெக்னிக் தேவை; 4 இடங்களிலே நுண் பொறியியற் கல்லூரி தேவை; கலைக் கல்லூரிகூட இன்னும் பல இடங்களில் தேவை; இருக்கின்ற கலைக் கல்லூரிகளில் மேல் பட்டப் படிப்பு அதாவது எம். ஏ., எம். எஸ்.ஸி, எம். காம். போன்றவை தேவை. அவைகளைப் போலவே மேல் நிலைப் பள்ளிகள் ஏறத்தாழ 60 இடங்களிலே தேவை என்று கூறப்பட்டுள்ளது.

பெண்களுக்கென்று தனிப்பட்ட பாலிடெக்னிக் தேவை; பெண்களுக்கென்று மேல்நிலைப் பள்ளிகள் தேவை; பெண்களுக்கென்று இன்னும் கல்லூரிகள் பல இடங்களில் தேவை என்று தெரிவித்திருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளிகளில் பல இடங்களில் கட்டிடங்கள் தேவை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் வந்தாலும்கூட, பின் தங்கிய பகுதிகளிலே வாழ்கின்ற அந்த மக்கள் இவைகளை மேல்லா மேலும் கேட்பார்கள்.



தவிர, உயர்நிலைப் பள்ளிகளிலே ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடங்கள் பழுதாகி, இடிந்து விழுந்து விடுகின்ற நிலையிலே நடக்ககூடிய பள்ளிகளும் இருக்கின்றன. அப்படி இடிந்து விழுகின்ற நிலைமையினிலே கட்டிடங்கள் அது பள்ளிக்கூடத்திலே இருந்தாலும் சரி, கல்லூரியிலே இருந்தாலும் சரி, அந்த நிலைமையை நாம் நீடிக்க விடக்கூடாது. அப்படி இடிந்து விழக்கூடிய பள்ளிக்கூட கட்டிடத்திலே படிப்பதைவிட, மரத்தடியிலே பள்ளியை நடத்தலாம் என்ற நிலைமைக்கு போக வேண்டி வரும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் இந்த அரசுக்குத்தான் இருக்கிறது. ஒரு தனியார் பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து விழுந்து, நூற்றுக் கணக்கான பிள்ளைகள் உயிருக்கு ஆபத்து வந்ததை நான் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே அறிந்திருக்கிறேன் என்பதால் சொல்ல விரும்புகிறேன். எனவே, இடிந்து விழுகின்ற கட்டிடங்களில் பள்ளிக்கூடத்தை நடைபெறாமல் தடுப்பது முதற் கடமை. இடிந்து விழுகின்ற நிலைமையிலே உள்ள கட்டிடங்களுக்கு மாற்றுக் கட்டிடங்கள் கட்டுவது அடுத்த கடமை. வேறு பல இடங்களிலே கட்டிடம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் குறிப்பாக இராமநாதபுரத்தில் ஒரு தொகுதியிலே, மரத்தடியிலே பிள்ளைகள் படிக்கிற காரணத்தால் எங்களுக்கு வகுப்பறை கட்டித் தாருங்கள் என்று கேட்கப்படுவதை ஒத்த இடங்களில் கட்டித் தருவதும் அவசியமுமாகும். அப்படி கட்டிடங்கள் கட்டுகிற அந்த கடமைகளை பற்றி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 100 கோடி இருந்தால் தான் உயர்நிலைப் பள்ளி, மேல் நிலை பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும். அந்த 100 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு வாய்ப்புள்ள ஒரு அமைப்பு எது என்று தேடிக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு ஆண்டிற்கு 20 கோடி 25 கோடி என்று கடன் பெற்று 5 ஆண்டு காலத்திலே நிறைவேற்றுகிற அடிப்படையிலே தான் நிறைவேறும் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அமைச்சர் அவர்கள் 100 கோடி என்று சொல்கிறபோது, முதலமைச்சர் அவர்கள் 100 கோடி என்று சொன்னதை நான் எண்ணிப்பார்க்கிறேன். ஆளுக்குப் பாதியாக சொல்லி இருக்க கூடாதா என்று கவலை வருகிறது. இருந்தாலும் கூட இந்த 100 கோடி ரூபாய் தேவை என்று சொல்லி அதற்கு எந்த முயற்சியை எடுப்பதற்கு அரசு முனைந்து இருக்கிறது என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படவில்லை. இந்த கடன் கிடைக்குமா? அப்படி கிடைக்காவிட்டால் கட்டிடங்கள் எதுவும் வராது. இன்னும் சொல்லப் போனால் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கே கட்டிடங்கள் பல இடங்களில் தேவை. அதற்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகையை பார்த்தால் ஏறத்தாழ 100 லட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். 100 கோடி தேவை, 1 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். நாட்டு மக்கள் இன்னும் ஒரு பத்து ஆண்டுகள் கழித்து இந்த 100 கோடி தேவை என்பதற்குப் பதில் 200 கோடி தேவை என்ற நிலைக்குத் தான்

வருவார். அதே நேரத்தில் ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடங்களைப் பயன்படுத்திக்கொள்வதிலாவது இந்த அரசு திறமையாக இருக்கிறதா என்றால், அரசு என்றால் அமைச்சர் மட்டும் இல்லை. அமைச்சருக்குப் பின்னாலே இருக்கிற அந்தந்த துறை அதிகாரிகளுந்தான். அவர்கள் கவனித்தார்களா, அமைச்சரிடத்திலே அனுமதி பெறுவதற்கு முயற்சித்தார்களா என்பது எனக்குத்தான் தெரியாது. ஆகவே அரசாங்கம் 1974லே குடந்தைக் கல்லூரிக்கு 6 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு எம். எஸ், ஸி. கெமிஸ்ட்ரி எம். எஸ். ஸி. பிசிக்ஸ் இப்படி இரண்டு பாடங்களுக்கு அல்லது வேறு ஒரு பாடத்திற்குக் கட்டிடம் கட்டப்பட்டு 1975-76 ஆம் ஆண்டு அந்த கட்டிடம் முடிக்கப்பட்டு இது வரையில் அந்த வகுப்புகள் திறக்கப்படவில்லை. எம். எஸ். ஸி. கெமிஸ்ட்ரி என்பது தேவையான பாடம் என்பது அரசுக்குத் தெரியும். கட்டிடம் கட்டி 4 ஆண்டு, 5 ஆண்டு காலமாகியும் பயன்படாமல் இருப்பது அரசாங்கத்திற்கு இழப்பு இல்லையா? ஏன் அந்த முயற்சி தொடரவில்லை? அந்த முயற்சிக்கு ஆக்கம் தரவில்லை என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து இங்கே குழந்தைகளுக்குப் பகல் உணவு திட்டம் என்பது அரசாங்கத்திலே இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேயிருந்து தொடர்ந்து நண்பகல் திட்டம் பள்ளிச் சிறார்களுக்கு, 1 முதல் 8 வகுப்பு வரை, 5-லிருந்து 13 வயது வரையில், மொத்தம் 60 லட்சம் பேர் படிக்கிறார்கள் என்று சொன்னால் ஏறத்தாழ 20 லட்சம் குழந்தைகளுக்கு மூன்றிலே ஒரு பங்கு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. அதற்கு இந்த அரசு ஒருவராவது உணவுக்குச் செலவு செய்வது 15 காசு, ஆசிரியர்கள் பொறுப்பிலே 5 காசு அல்லது 10 காசு, ஆக 25 காசு, கேர் நிறுவனத்தின் மூலமாக கிடைப்பது 15 காசு, 20 காசு மதிப்புள்ள உணவு; இதெல்லாம் சேர்ந்து 45 காசு மதிக்கத்தக்க உணவு அந்த குழந்தைகளுக்குப் போய் சேர்கிற போது, அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 40 காசு 45 காசு உணவும் குழந்தைகளுக்குப் போய் சேருவது இல்லை. 45 காசு செலவாகிறதே தவிர 30 காசு, 25 காசு உணவு தான் போய்ச் சேர்கிறது. காண்ட்ராக்ட் முறையிலே போடுகிற இடங்களிலே நான் யாரையும் பெயரை சொல்லி, வருத்தப்படுத்த விரும்பவில்லை. யாரோ சிலர் செல்வாக்கு மிக்கவர்கள் இந்த காண்ட்ராக்ட் உணவு கொடுக்கிறவர்களிடத்திலே தொடர்பு வைத்துக் கொண்டு, அவர்களிடத்திலே பணம் பெற்று கொள்கிறார்கள். அந்த குழந்தைகளுக்கு போடுகிற உணவை எந்த அளவிற்குத் தரமுடியுமோ அந்த அளவிற்கு அவர்களுக்கு தரப்படவில்லை. அப்படி ஒரு குறைபாடு இருக்கிறது. அப்படியும் மொத்தம் கணக்கிட்டு பார்த்தாலும் ஒரு ஆண்டிற்கு 5 கோடி 6 கோடி ரூபாய் தான் அரசு செலவிடுகிறது. கேர் நிறுவனம் 4 கோடி ரூபாய் செலவிடுகிறது. ஏறத்தாழ 10 கோடி அல்லது 9 கோடி ரூபாய் செலவாகிறது. அது ஏறத்தாழ 20 லட்சம்



பிள்ளைகளுக்கு. இந்த 20 லட்சம் பிள்ளைகளுக்கு ஆங்காங்கு பள்ளிகளில் ஒரு இடத்திலே கூடுகிற வாய்ப்பு இருக்கிற இடத்திலே நாம் வழங்குகிறபோது செலாவகிற சனக்கு ஒரு ஆண்டிற்கு 10 கோடி தான. கேர் நிறுவனம் ஆண்டுதோறும் தருகிற உதவியை நிறுத்திவிடும் என்ற காரணத்தால் 45 லட்சம் இந்த ஆண்டு இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மேலும் 45 லட்சம், அதற்கு அடுத்த ஆண்டு 43 லட்சம், இப்படி ஏறத்தாழ $3\frac{1}{2}$ கோடி அரசு மேலும் ஒதுக்கினாலும் $9\frac{1}{2}$ கோடி. இரண்டு வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, இளம் சிறார்களுக்கு பள்ளிக்கூடம் நடத்தபோகிறோம் என்று சொல்கிறீர்களே, ஒருவேளை 3 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளை அந்தப் பள்ளிகளிலே சேர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கக் கூடும். இளம் சிறாருக்கு பள்ளியிலே 100க்கு 50 பேர்கள் உணவு அளிக்க நேரிடும். அப்படி அளித்தால் 10 லட்சம் குழந்தைகள் அளவுக்கு மூன்று ஆண்டுகள் கழிந்து வரும். ஆனால் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதை போல 4,000, 4,500 இடங்களிலே இளம் சிறார் பள்ளிகளை உடனே கொண்டு வரமுடியாது. நடைமுறையிலே வர ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு ஆகலாம். பால்வாடியிலே வழங்குவதற்குத் தனியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படிச் செய்தாலும் அந்த குழந்தைகளுக்கு உணவு அளிக்கிற வாய்ப்பு இருக்கிறது என்று கருதினாலும் 2 வயதிற்கு மேற்பட்டு $3\frac{1}{2}$ வயதுள்ள குழந்தைகள் அங்கே வரமாட்டார்கள். எனவே 4 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அங்கே தரலாம். அப்படி தரக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அது ஒரு பத்து லட்சம் குழந்தைகள் என்று வைத்துக் கொண்டாலும் 5 கோடி ரூபாய் அளவு செலவு ஆகும்.

(இரவு 6.50)

அதைப்போலவே வீட்டிலே இருக்கின்ற பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு நூதன திட்டம் போட்டு, ஏதோ ஒரு வகையில் தாய்மார்களைக் கொண்டு செய்யப்போகிறோம் என்று முதலமைச்சர் சொன்னதைப் போல் செய்தாலும்கூட ஒரு 10 கோடி ரூபாய் தான் ஆகும். ஆகவே உங்களால் செலவழிக்கப்படக்கூடிய தொகை 15 கோடி, 20 கோடிக்கு மேல் போகாது, தவறுகளோடு நடைபெற்றாலும்கூட இந்த ஆண்டு மொத்தச் செலவு அதற்காக 15 கோடி 20 கோடிக்கு மேல் போகாது. ஆனால் நிதி நிலை அறிக்கையில் 100 கோடி ரூபாய் செலவழிக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டது. அந்த 100 கோடி ரூபாயிலே 25 கோடி ரூபாய் ஒதுக்கி—கேர் நிறுவனத்தினர் கைவிடுகிற அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்யலாம் அல்லவா? மைய சமையல் கூடங்கள் கட்டுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை அல்லவா? கடந்த ஆண்டு தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இங்கே 5 இடங்கள் அங்கே பல இடங்களில் கட்டப் போவதாகச் சொல்லி அதற்குப் பின்னர் அனுமதி கிடைக்காத காரணத்தினால்,

10 இடங்கள் கைவிடப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள 5 இடங்கள் மட்டுமே கட்டப்படும் என்னும் நிலையை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் இந்த ஆண்டு அறிக்கையிலே அந்த இடங்கள் கட்டப்பட்டதாகவே வரவில்லை. அந்த மையஙகள் கட்டப்படவில்லையென்று சொன்னால் ஒவ்வொரு மையத்திலேயும் ஏறத்தாழ 15 ஆயிரம், 10 ஆயிரம் பிள்ளைகளுக்கு உணவு அனுப்பக்கூடிய வாய்ப்பு உண்டு. அந்த மையங்கள் கட்டப்பட்டு இருக்கக்கூடும், ஆனால் அறிக்கையில் இல்லை. இவைகளையெல்லாம் பார்க்கிறபோது அரசாங்கம் சிறுவர்களை மாணவர்களை பள்ளிக்கூடத்திலே கொண்டு வந்து வளர்ப்பதற்காக எப்படியோ அவர்களைக் கல்வியிலே ஈடுபடச் செய்யத் தருகிற உணவை வீட்டிலேயே தருகிறோம் என்று கூறும் நிலை ஏற்படுமானால், அதன் மூலமாக பிள்ளைகள் 5 வயது வரையிலே வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்படுமானால் செய்யமுடியுமா ? என்னைக் கேட்டால் அதை ஒழுங்காக செய்யவே முடியாது. செய்யலாமா என்றால் செய்யலாம். ஆசை தான் எனக்கும். ஆசை இருக்கிறதே தவிர நிறைவேற்றுகிற வாய்ப்புக் குறைவு. அப்படியே செய்தாலும் வேறு வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதிலே 20 கோடி ரூபாய் ஒதுக்கி இப்போது கேர் நிறுவனம் உதவி செய்கிற முறை மெல்லக் குறைந்து வருகிறபேபது எல்லா மாவட்டங்களிலேயும் மைய சமையல் கூடங்கள் ஏற்படுத்துகிற ஒரு முறை இருக்குமானால் இப்போது ஏற்படுகின்ற குறைபாடுகள் ஓரளவுக்குக் குறையும் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளை எல்லாம் அரசே மேற்கொண்டு அரசாங்கத்தின் மூலமாக நடத்துகிற முயற்சிக்கு வந்து இருப்பது ஒரு கொள்கை அடிப்படையில் நியாயமானது —அரசாங்கத்தின் மூலமாக நடக்குமானால் அந்த ஒன்றியப் பள்ளிகள் மேலும் சீர்பெறும் என்ற ஒரு எண்ணத்தாலே சொல்லியிருக்கக்கூடிய கருத்து. எனக்குக்கூட அப்படிப்பட்ட ஒரு கருத்து ஏற்கெனவே இருந்தது. ஆசிரியர்கள் விரும்புகிற காரணத்தினாலே எனக்கு அதிலே மாறுபாடு கிடையாது. ஆனால் அதிலே என்ன என்ன குறைபாடுகள் வரும் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன், ஒன்றியம், இந்த அமைப்புக்கள் முழு சுய ஆட்சி மன்றமல்ல என்றாலும் ஓரளவிற்கு, சுய ஆட்சி மன்றம். அந்த மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அந்த வட்டாரத்திலே உள்ள பிள்ளைகளினுடைய கல்வி நலனில் அக்கறையுள்ளவர்களாக இருந்து அதைக் கவனிக்கக்கூடிய நிலைமை மாறுகிறது. அப்படி மாறுகிறபோது ஒவ்வொரு ஒன்றியத்திலும் கல்வித் துறையில் ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவார் என்ற கருத்து இடம் பெற்றிருக்கிறது. இளநிலை கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர் 76 ஒன்றியங்களிலும் நியமிக்கப்படுவார்கள் என்று சொல்லப்



படுகிறது. அது கட்டாயமாக தேவை. ஆனால் அதற்குமேல் மாவட்டக் கல்வி அதிகாரிகளிடத்திலே இந்தப் பொறுப்பு இணைக்கப்படுகிறது. அவருக்கு உதவியாக தட்டச்சரோ, எழுத்தரோ நியமிக்கப்படுவார்கள். ஒரு டி. இ. ஓ.—வால் அத்தனை ஒன்றியங்களிலேயும் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிக்கூடங்கள்—எல்லாப் பள்ளிகூடங்களிலும் இல்லாவிட்டாலும் நான்கு பள்ளிக்கூடங்களுக்கு ஒரு பள்ளிக்கூடத்தையாவது கண்காணிக்கமுடியும் என்று அமைச்சர் நம்புகிறாரா ? அங்கே உதவி நிலையிலே இருக்கின்ற கல்வித் துறையைச் சேர்ந்த உதவிக் கல்வி அலுவலர்கள் அந்தப் பள்ளிக்கூடத்து தலைமையாசிரியரோடு அவ்வப்போது தொடர்பு கொள்ளக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால் நேரடித் தொடர்பு இல்லாத ஒரு மேல் அதிகாரி அந்தப் பள்ளிக்கூடங்களில் 10 பள்ளிக்கூடங்களில் 2 பள்ளிக்கூடங்களைத் திடீரென்று மேற்பார்வை செய்வதன் மூலம் பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றனவா அல்லவா என்பதைப்பற்றிய தெளிவு ஏற்படமுடியும். பல பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றனவா என்பதைப்பற்றிய சந்தேகம் இருக்கிறது. பள்ளிக்கூடம் இருக்கிறது, முறைப்படி, நடைபெறவில்லை, சொல்லப்பட்ட முழு நேரம் நடைபெறவில்லை. மாணவர்கள் வந்ததாக பதிவேட்டிலே இடம் பெறுவதாக சொல்லப்படுகிற அந்தக் கருத்து, பதிவேட்டிலே இடம் பெறுகிறதே தவிர பள்ளிகளில் மாணவர்கள் இடம் பெறவில்லை என்று கூறப்படுகிறது.

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கனவே தவறான ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே மாணவர்கள் பால் அவுட் எந்த அளவுக்கு இருந்ததோ, அடுத்த மேல் வகுப்பிலே சேருகிற மாணவர்களின் எண்ணிக்கையில் ஆண்டு தோறும் எந்த அளவுக்கு குறைவு இருந்ததோ அந்த விகிதாசாரத்தை நாங்கள் குறைத்து விட்டோம், அப்படிக் குறையாததற்குக் காரணம், அவர்களுக்குத் தேர்வுகள், முடிவுகள், எக்ஸாமினேஷன்ஸ், ரிசல்ட்ஸ் கிடையாது. ஆகவே அந்த மாணவர்கள் தொடர்ந்து படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்வு இல்லை என்று சொன்னால் அட்டென்டன்ஸ் இருக்கிறதே அதை மட்டும். ஏன் கவனிக்கப் போகிறார்கள். பள்ளிக்கூடத்திற்குக் தினந்தோறும் செல்ல வேண்டுமென்ற அக்கறை சாதாரண வீட்டுப் பிள்ளைகளுக்கு எப்படி வர முடியும் ? எனவே தேர்வை நீக்கியது என்னுடைய கருத்துப்படி தவறு. தேர்வை நடத்தி, 100 பேர்களுக்கு 70 பேர்களுக்குத்தான் தேர்வு என்று சொன்னால் ஆசிரியராக இருக்கின்ற அந்தப் பொறுப்பினை நிறைவேற்றவில்லை என்று கருதலாம். 100-க்கு 90 பேர்கள், 95 பேர்களுக்கு தேர்வு அளிக்க வேண்ம். ஆனால் தேர்வு முறைப்படி நடக்க வேண்டுமென்றால்தான் கல்வியிலே ஒருவிதமான ஊக்கத்தை ஏற்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டவர்களாக ஆவோம். பரிட்சையே இல்லையென்றால் பிள்ளை வீட்டை விட்டுக் கிளம்பி, பள்ளிக்கூடத்திற்குப் போய் விட்டு வந்தேன் என்று சொல்லிக் கொண்டு எங்கேயாவது புளிய

மரத்தடியிலே நின்று விட்டுப் போனால்பிள்ளைஅந்தகூட ப்யப் பற்றிப் பெற்றோரும் கவனிக்க மாட்டார்கள். ஆசிரியர்களுக்கும் கவனிக்க வேண்டிய கடமை கிடையாது. ஆகவே தேர்வு என்பது ரிஜிட் எக்சாமினேஷன் என்ற முறையில் இல்லாவிடினும், ஒப்புக்காவது அவர்களைத் தேர்விலே உட்கார வைக்கின்ற முறையும் அதற்குப் பின்னர் பெரும்பாலோருக்கு வெற்றி கிடைகின்றயையும், அடியோடு வகுப்புக்கு வராத மாணவர்கள் அல்லது படிக்காத குழந்தைகள் ஆகிய அந்தக் குழந்தைகளுக்கு ம ', ஆண்டு பயிற்சி தருகின்ற முறையையும் ஏற்படுத்தினால்தான் பிற்பட்ட வகுப்போ, தாழ்த்தப்பட்ட வகுப்போ அவர்கள் கல்வியிலே நாட்டம் செலுத்துவதற்கு வழி வகுப்பதாக ஆகும். இந்தக் கடமையச் செய்ய இந்த ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்காகவே ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி என்று தனியாக ஒருவரை நியமித்தால்தான் இந்தக் கடமை நிறைவேறும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அறிவியல் கல்வி வளர்ந்தால் தவிர எதிர் காலத்தில் நம்முடைய கல்வியால் கிடைக்கும் பலன் குறைந்துவிடும் என்பதை அரசாங்கம் அறியும். அந்தக் கல்வி வளர்வதற்கு பல பள்ளிக்கூடங்களிலே சோதனைக் கூடங்கள் இல்லை என்பது ஒரு பெரிய குறை. சோதனைக்கூடங்கள் இல்லாத 42 கல்வி மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது. இந்த நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி வாரத்திலே ஒருநாள் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருநாள் ஒரு பள்ளிக்கூடத்திற்குச் செல்லக்கூடும். ஆனால் விஞ்ஞானக் கல்வியிலே ஒரு அக்கறையை ஏற்படுத்த வேண்டுமானால் இந்த வண்டி சென்று வந்தால் மட்டும் போதாது. மாவட்ட மையத்தில் விஞ்ஞானக் கண்காட்சி ஏதோ இரண்டு மூன்று மாவட்டங்களில் கடந்த இரண்டாண்டுகளிலே நடைபெற்றிருக்கிறது. திருநெல்வேலி, மதுரை, கோவை போன்ற இடங்களில் நடைபெற்றிருக்கின்றது. ஆனால் தர்மபுரியாக இருந்தாலும், இராமநாதபுரமாக இருந்தாலும் ஒவ்வொரு மாவட்ட மையத்திலேயும் ஒருமுறையாவது அப்படிப்பட்ட கண்காட்சி ஆண்டுதோறும் நடைபெறுவதன் மூலமாகத்தான் எதிர் காலத்திலே அந்த பிள்ளைகளுக்கு ஒரு இம்பரஷன் மனத்திலே ஏற்பட்டு விஞ்ஞானக் கல்வியைப்பற்றி ஆர்வம் ஏற்படுவதற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும். அப்படி நடைபெறுகின்ற அந்தக் கண்காட்சியிலே பள்ளி மாணவர்களெல்லாம் வந்து போகின்ற வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். அதுவும் சோதனைக் கூடங்கள் இல்லாத பள்ளியில் பயிலும் பிள்ளைகள் அங்கு வருகின்ற ஒரு கட்டாயமான ஒரு தேவையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பள்ளி மாணவர்கள் சேர்க்கப்பட்ட எண்ணிக்கையைப்பற்றி புள்ளி விவரம் இந்த ஆண்டும் தரப்பட்டுள்ளது. புள்ளி விவரம் சரிதான் ; அதிலே தவறு இல்லை. ஆண் பிள்ளைகள்,



சிறுவர்கள், ஆரம்பப் பள்ளியிலே ஐந்து வயது முதல் 11 வயது வரையில் படிக்க வேண்டியவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துப் பார்க்கும்பொழுது அந்த பிள்ளைகளின் எண்ணிக்கையைவிட அதிக அளவிற்குப் பள்ளிக்கூடத்திலே சேர்ந்திருக்கிறார்கள். அதாவது அந்த ஆண் குழந்தைகள் எவ்வளவு பேர் என்று புள்ளி விவரத்திலே 82-வது ஆண்டு புள்ளி விவரத்தின்படி நம்மாலே கணக்கிட முடிகிறதோ அதைவிட 2 சதவீதம் அதிகம் படிக்கிறார்கள் என்று தரப்பட்டிருக்கிறது. அது ஒருவேளை ஆல் இந்தியா ஸ்டேட்டிஸ்டிக்கிற்காகத் தேவை என்ற காரணத்தால் இப்படித்தான் புள்ளி விவரம் தர வேண்டிய ஒரு பரிதாபமான நிலைமை இருக்கலாம். மொத்தம் இருக்கும் ஆண் பிள்ளைகளைவிட அதிகப் பிள்ளைகள் எப்படி அந்தப் பள்ளிக்கூடத்திலே படிப்பார்கள் என்று கேட்பது பொது அறிவுக் கேள்வி. இதைத் தந்தை பெரியாரிடத்திலே சொன்னால் என்னென்ன சொல்லிப் பதில் சொல்லுவார் என்று அமைச்சர் அரங்கநாயகம் யோசித்துக் கொள்ள வேண்டும். 100 பேர்தான் மொத்தம் பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள் ; 102 பேர் படிக்கிறார்கள் என்று சொன்னால் அவர் உடனே கேட்பார், இது என்ன தேவலோகத்திலேயிருந்து குதித்தார்களா, அல்லது இரு பிறப்பாளரா என்ற கேள்விகளெல்லாம் வரும். எனவே, அப்படிப்பட்ட அளவிற்கு இந்த விகிதாசாரத்தை ஏன் அப்படியே தர வேண்டும்? ஒன்று, ஆண் குழந்தைகளுடைய எண்ணிக்கை தவறாக இருக்க வேண்டும், அல்லது படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை தவறாக இருக்க வேண்டும். இப்படியொரு குறிப்பதைத் தர வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுது அதிலே ஒரு குறிப்பை எழுத வேண்டும். எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஃபிகர் சரி அல்ல என்றாவது எழுத வேண்டும். கிடைத்திருக்கிற ஃபிகர், அதுவும் 71ஆவது ஆண்டு என்ன விகிதாசாரத்திலே ஆண் குழந்தைகள் இருந்தார்களோ அதே விகிதாச்சாரக் கணக்குப்படி 82வது ஆண்டு புள்ளி விவரத்திலே கணக்கு எடுத்தபொழுது பள்ளியிலே படிக்கும் பிள்ளைகளைவிட அந்த வயதிலே இரண்டு இலட்சம் குழந்தைகள் குறைவாக இருக்கிறார்கள் என்றால் அது எப்படி ஒரு சரியான கணக்காகும்? இது கல்வித் துறை என்கின்ற காரணத்தினால் அதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே நான் தெரிவிக்க விரும்புவது, உடற்பயிற்சியின் கல்வியிலே இந்த அரசுக்கு அக்கறை இருப்பதாகவும் ஏற்கனவே உடற்பயிற்சிக் கல்விக்காக ஒரு தனி அமைச்சரேகூட பொறுப் பேற்றுக் கொள்ளப் போவதாகவும், அந்தச் சடுகுடு விளையாட்டெல்லாம் அமைச்சர் முன்னிலையிலே நடக்கப் போவதாகவும் அந்தக் கருத்துக்களெல்லாம் இங்கே இடம் பெற்றன. எனக்குத் தெரிந்தவரையில் உடற்பயிற்சிக்குத் தேவையான ஒரு சூழல் உருவாக்கப்படவில்லை. மாரல் இன்ஸ்ட்ரக்ஷனுக்கு எப்படிப்போதுமான அளவிற்கு அந்தக்கண்ணோட்டத்தில்பிள்ளை

களிடத்தில் உருவாக்கப்படவில்லையோ அதே நிலைதான் உடல் பயிற்சிக் கல்வியைப் பொறுத்தவரையில் இருக்கிறது. இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர்கள்கூட உடற்பயிற்சித் துறையைப் பொறுத்த வரையில் இன்னும் அதிகக் கவனம் செலுத்துவதற்குப் பலயிடங்களிலே மைதானங்கள் தேவை; பலயிடங்களிலே ஃபிசிகல் டைரக்டர் தேவை; பலயிடங்களிலே பெண்கள் படிக்கின்ற பள்ளிக்கூடங்களுக்குப் பெண்களுக்காக இன்ஸ்டக்டரஸ் தேவை என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த இயக்கத்தில்—டைரக்டரேட்டில் அங்கே நிர்வாக அலுவலர்கள், ஒரு இயக்குனரும், மூன்று உதவி இயக்குநர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 79வது ஆண்டு அக்டோபர் மாதம் வழங்கப்பட்ட துணை இயக்குநர்பதவி இந்த இரண்டரை ஆண்டுக் காலமாக இன்னும் நிரப்பப்படவில்லை ஒரு துறையைச் செம்மையாக நடத்துவது என்று சொன்னால், அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்து, ஒரு அதிகாரியை நியமிக்க விரும்பியிருந்தால் அந்த ஆணையின்படி ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டு அந்த இடத்திலே அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், அந்தப் பதவிக்கான அட் ஹாக் ரூல்ஸ் இன்னும் தயாரிக்கப்படவில்லை. தற்காலிகமான விதிமுறை கூட தயாரிக்கப்படாமல், எப்படி அந்தப் பதவிகளிலே உள்ளவர்களுடைய குறைகளை நீக்கக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு ஏற்படும்.

(இரவு 7·00)

இன்னொன்று தெரிவிக்கிறார்கள். அந்த இயக்குநரே நேரடியாகச் செலவு செய்யும் நிலைமையில் அவரே நேரடியாக வங்கியில் பணம் வாங்கும் உரிமையும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தால், நேரடியாக எந்த இயக்குநராக இருந்தாலும் அவர்களே பணம் பெறுவது என்பது அவ்வளவு சரியாக இருக்காது. அதைக் கவனிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் விளையாட்டு மன்றத்திலுடைய பொதுச் செயலாளர் முதலானவர்கள் நியமிக்கப்படுவதிலும் அவர்களுக்கு ஊதியம் நிர்ணயித்திருப்பதிலும் சில குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நீக்குவதற்கு அமைச்சர் முயற்சிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புகிறேன், இங்கே நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதிலும் மைய அரசால் கொடுக்கப்படுகிற அந்த மலிவு தாளில் வழங்கப்படுகிறது. அதைத் தயாரித்து வழங்குவதற்கு தனிப்பட்ட ஏஜெண்டுகள், கான்ட்ராக்ட் எடுப்பவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தும் இருக்கிறது போதுமான அளவுக்கு எழுதும் தாள்கள் மைய அரசாலே ஒதுக்கப் படவில்லையென்ற குறையும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால்,



அந்த நோட்டு புத்தகங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு விற்பனை செய்வதற்கு வழங்கப்படுவதாகத்தான் கருத்து இருக்கிறது. நான் தெரிவிக்க விரும்புகிறேன். பள்ளிக்கூடத்து நிர்வாகத்தை நடத்துகிறவர்களுக்கு ஒரு பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்ற முறையிலேயும் ஒரு ஊக்கம் தருகின்ற முறையிலேயும் பள்ளிக்கூட கோவாப்பரேடிவ் சொஸைட்டீஸ் மூலம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், 300 மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளிக்கூடம் எதுவாக இருந்தாலும், அதிலே கோவாப்பரேடிவ் சங்கங்கள் ஏற்படுத்தி, அந்தப் பள்ளித் தலைமையாசிரியர், இன்னொரு ஆசிரியர், மற்றும் மாணவர் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, அதன் மூலமாக வழங்குகிற ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அதைப் போல், தனியார் பள்ளிகளை மொத்தமாக அவை தேவை இல்லை என்று ஒதுக்க முடியவில்லை. ஏராளமான தனியார் பள்ளிக்கூடங்கள், நல்லமுறையிலே நிர்வாகம் நடத்துகிற பள்ளிக்கூடங்களாக இருக்கின்றன. எனக்குத் தெரிந்து விருதுநகர் பகுதியில், சிவகாசி பகுதியில், இன்னும் கிறிஸ்துவ மிஷின்கள் நடத்துகிற பள்ளிகளில்—ஒருவேளை கட்டணம் அதிகமாக இருக்கலாம் — எந்த அளவுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒழுங்கு முறை காப்பாற்றப்பட வேண்டுமோ, அந்த அளவு காப்பாற்றப் படுகிற, மாணவர்களின் முழு ஒத்துழைப்பு பெறுகிற, இன்னும் சொல்லப்போனால், ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்கிற அந்தத் தன்மை வளர்க்கக்கூடிய முறையில் இயங்குகிற பல தனியார் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதனாலே, தனியார் பள்ளிக்கூடங்கள்தான் தேவை என்று நான் வாதாடவில்லை. அந்தத் தனியார் பள்ளிக்கூடங்களிலே இருக்கிற ஆசிரியர்களுடைய சம்பளத்தையெல்லாம் அரசாங்கம் தீர்மானித்து விட்டு, அந்த மொத்தச் சம்பளத்திலே 4 சதவிகிதம்தான் பள்ளி நிர்வாகத்திற்கு வழங்குவது என்று ஓர் ஆண்டிற்கு முன்னாலே எடுத்திருக்கிற கொள்கையின் காரணமாக, ரூ. 60,000-க்கு மேலே ஆசிரியர்களுடைய சம்பளமாக யாரும் விநியோகிக்கப்படுகிற பள்ளிக்கூடத்தில் வெறும் ரூ. 4,000-தான் நிர்வாகத்திற்குக் கிடைக்கிறது. ரூ. 4,000-ல் குடிதண்ணீர் வசதி செய்வது, தோட்டி வேலை செய்கிறவருக்கு ஊதியம் தருவது, பள்ளிக்கூடத்தைச் சுத்தப்படுகிறவருக்கு ஊதியம் தருவது. பள்ளிக்கூடத்தைப் பழுது பார்க்கிற கடமை இவற்றை தனியார் பள்ளிக்கூடத்தில் நிறைவேற்ற முடியாது. அந்தப் பள்ளிக்கூடம் ஒழுங்காக கவனிக்கப் பட வேண்டுமென்று சொன்னால். தனியார் பள்ளிக்கூடம் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணியுங்கள்; அந்தப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகப் போவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அந்தப் பள்ளிக்கூடத்து நிர்வாகத்தை அரசாங்கமே ஏற்று நடத்தினால் என்னவாகும் என்பதைக் கவனித்து அதிலே 75 சதவீதமாவது அந்தப் பள்ளிக்

கூடங்களுக்கு வழங்குவதன் மூலமாகத்தான் அந்தத் தனியார் பள்ளிகளை ஆர்வத்தோடு இயங்கச் செய்ய முடியும். இன்னும் சொல்லப்போனால், தனியார் பள்ளி களிலே காட்டப்படுகிற ஆர்வம், மாநகராட்சிமன்றப் பள்ளிகளிலே காண முடியாது. ஒரு வெட்டுத் தீர்மானத்திலே ஒரு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார், கிராமத்துப் பள்ளிக்கூடங்களையெல்லாம் நகரத்துப் பள்ளிக்கூடங்கள் நிலைக்கு உயர்த்துங்கள் என்று கேட்டிருக்கிறார். உயர்த்தினால் அவ்வளவுதான். கிராமப் பள்ளி கூடங்கள் சரியாக இயங்கவில்லையென்பதற்கு இருக்கின்ற காரணங்கள் பல. நகரப் பள்ளிக்கூடங்கள் சரியாக இயங்க முடியாத அளவுக்கு இருக்கின்றன என்பதற்கு வேறு பல சூழ்நிலைகள் இருக்கின்றன. இவை இரண்டுக்கும் இன்றைக்கு அரசாங்கம் பொறுப்பு. அவை ஒழுங்காக இயங்கச் செய்வதற்கான ஆற்றல் நம்மிடத்திலே எப்படியோ இல்லை. எனவே எல்லாப் பள்ளிகளையும் ஒழுங்காக இயங்கச் செய்யும் அந்தப் பொறுப்பை தக்க நிதி உதவி மூலம் அரசாங்கம் செய்யலாம். தனியார் பள்ளிக்கூடத்தை நடத்த அனுமதிக்கிற பொழுது, அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கு எந்த வகையில் அரசாங்கத்தினுடைய மானேஜ்மென்ட் கிரான்ட் எந்த அளவுக்கு வழங்கப்பட வேண்டுமோ அதை மறுபரிசீலனை செய்து வழங்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழங்கினால்தான் அந்தப் பள்ளிகள் சிறப்பாக இயங்கும். அதேபோல நர்சரி பள்ளிக் கூடங்கள் ஆங்கிலத்திலே நடைபெறுவதால் ஒரு மாறுபட்ட உணர்வு நமக்கு ஏற்படுவது உண்மைதான். ஆனால் ஆங்கிலத்திலே நடைபெறுகிறது என்பதற்காக மாறுபட்ட உணர்வு ஏற்பட்டாலும் அங்கே தமிழிலேயும் சொல்லித் தருகிறார்கள். சிறந்த பயிற்சியை வழங்குகிறார்கள். அதிலே சில பள்ளிக்கூடங்களில் முறையற்று 'ராபிள்ஸ்கீம்'' கூட வைத்திருக்கிறார்களாம். சில பள்ளிக்கூடங்களில் இப்படி ராபிள்ஸ்கீம் நடத்துவதாக எனக்குப் புகார் கூட வந்திருக்கின்றது. ராபிள் டிக்கட் விற்பது, சிட் பண்டு நடத்துவது போன்ற நடவடிக்கைகள் எல்லாம் முறைகேடானவை. ஆனால் அதே நேரத்தில் நர்சரி பள்ளிக் கூடத்திற்கு போய் வருகிற ஒரு பிள்ளையையும், மாநகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளிக் கூடத்திற்குப் போய் வருகிற ஒரு பிள்ளையையும் கவனித்துப் பார்க்கிறபோது, ஏற்றத்தாழ்வு புலனாகும். மாநகராட்சி மன்றப் பள்ளிக் கூடத்திலே எண்ணிக்கை மிகுதியாகவும், கவனிக்கின்ற வாய்ப்பு குறைவாகவும் உள்ள காரணத்தினால் இப்படி உள்ளது. ஆசிரியர்களைக் கூட நான் குற்றம் சொல்லமாட்டேன். அவர்கள் மீது கூட தவறு இல்லை. ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது என்று கேட்டால் அந்தப் பிள்ளைகளுக்குக் கல்வியிலே உள்ள நாட்டம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால் இந்த நர்சரி பள்ளிக்கூடங்களில் கல்வியி நாட்டம் மிகுதியாக இருக்கின்றது. எனவே நர்சரி பள்ளிக்கூடங்கள் கூடாது என்று சொல்வதைவிட, ஒழுங்காக



தமிழுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தை அந்தப் பள்ளிக்கூடங்கள் தருவதற்கான ஏற்பாட்டை செய்வதற்கு, முறை கடந்து கட்டணம் வசூலிக்கிற முறையைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை எண்ணிப் பார்த்து இந்த அரசு நடந்து கொள்வதன் மூலமாக நர்சரிப் பள்ளிகள் உண்மையாகவும், நர்சரி என்ற அந்த சொல்லுக்கு என்ன பொருள் இருக்கிறதோ, அப்படிப்பட்ட நாற்றங்காலாக அந்தப் பள்ளிக்கூடங்கள் பயன்டும். அவற்றை அடியோடு நிறுத்திவிட்டால் அந்தப் பிள்ளைகளுக்கு, இதுபோன்ற பள்ளிக்கூடங்களை சென்னை நகரிலே கூட வேறு முறையில் ஏற்படுத்த முடியாது. எப்படியோ தனிப்பட்ட அக்கறையிலே ஒரு வீட்டை பிடித்து சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்து, 4 அறைகள் இருக்கின்றனவா என்று பார்த்து தனியார் நடத்துகிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் அதிகாரிகளிடம் கொடுத்து அந்தப் பள்ளிக்கூடங்களை நீங்கள் எடுத்து நடத்துங்கள் என்று சொன்னால், நம்முடைய அதிகாரிகளுக்கு அப்படி எந்த வீட்டையாவது பிடித்து வாடகை கொடுத்து நடத்துவதற்கு அக்கறை வராது, அது முடியாது. அது அரசாங்க இயந்திரத்தினுடைய பொதுவான தன்மை. எனவே, அந்தப் பள்ளிக்கூடங்களை ஒரு ஒழுங்கு படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அதை விதிமுறைகளின் மூலம் ஒழுங்கு படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரசு தேர்வுகள் நடத்துவது பற்றி இந்த ஆண்டு சென்னையையே மத்திய நிலையமாக வைத்து நடத்துகிற அந்த முறையை மாற்றி கோவை, மதுரை, திருச்சி போன்ற ஏதோ 3 மையங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். ஆனால் நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு பிளஸ்-டு தேர்வு எழுதியவர்களுக்கும் அந்த தேர்வுகள் முடிந்ததற்குப் பின்னாலே இன்றுவரை, சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்படாதவர்கள் ஒரு 3,000 பேர்கள் இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். கடந்த ஆண்டு பிளஸ்-டு தேர்வு எழுதி இன்னும் சர்ட்டிபிகேட்டுகள் அவர்களுக்குப் போய் சேராத நிலைமை இருக்குமானால், அது வருந்தத் தக்கது.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகள் இன்றையதினம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றது என்று கேட்டால், 2,75,000 மாணவர்கள் அதிலே படிக்கின்றார்கள். அதைத் தொடங்குகிறபோது எப்படிப்பட்ட எண்ணம் இருந்தது என்றால், ஏதோ ஒரு லட்சம் பேர், 2 லட்சம் பேர்கள் படிப்பார்கள் என்ற எண்ணம் இருந்தது. இன்னும் அடுத்த ஆண்டு ஒரு 3 லட்சம் $3\frac{1}{2}$ லட்சம் ஆகும், வளரும்; அப்படி வளர்கிறபோது அதிலே தொழில்கல்வியை 58,520 பேர்கள் பயிலுகிறார்கள் என்று இருக்கின்றது. ஏறத்தாழ 5 பேர்களுக்கு ஒருவர் என்ற வகையில் 21 சதவிகிதம்தான் தொழில் கல்வியைப் பயிலுகிறார்கள்.

இந்த மேல்நிலைக் கல்வியை மேற்கொண்டு பி.யு.சி. கல்வி
யினாலே பயன் இல்லை என்று நாம் மேற்கொண்டபோ
வெறும் சிலபசுக்காக அல்ல, பாடதிட்டத்திற்காக அல்ல. அந்தப்
பாடதிட்டத்தைப் பல்கலைக் கழகக் கல்வி முறையிலேயே
பி.யு.சி.யோடு இன்னொரு ஆண்டை இணைத்து நிறைவேற்றி
இருக்க முடியும். முஆனால் இதைக் கொண்டுவந்ததன் நோக்கம்
மேல்நிலைக் கல்வியைப் பயிலுகிற மாணவர்கள், பெரும்பாலான
மாணவர்கள் அவரவர்கள் ஏதாவது ஒரு தொழில் பயின்று
கொண்டு, தொழில் பயின்ற காரணத்தினால் மேலும் கல்லூரி
யிலே பயிலவேண்டிய கட்டாயமான தேவையில்லாமல், ஒருசுமை
யாக இல்லாமல் அவர்கள் வெளியேறுவார்கள். அவர்கள் சமுதாயத்
திற்குப் பயன்படுவார்கள். வேலையில்லா திண்டாட்டம் வள
ராது என்று அத்தனை குறிக்கோளாடு அது உருவாக்கப்பட்டது.
இன்றைக்குத் தரப்படுகிற பயிற்சி அந்த மேல்நிலை கல்வியிலே
மனையியல், வணிகத் துறை, வேளாண்மை பொறியியல்,
தொழில் நுட்பவியல், உடல் நலம், பலவகை, இந்தப் பலவகை
யில் படிக்கின்றவர்கள் 66 மாணவர்கள், 97 மாணவிகள் மட்
டுமே. பலவகை என்றால் எதெதோ படிப்பது என்று பொருள்
அல்ல. காரணம் அதற்குத் தேவையான கருவிகள். சோதனை
கூடங்கள், வாய்ப்புகள், வசதிகள் பயிற்சியைத் தரமாகத் தரக்
கூடிய நிலைமை இல்லை. பட்டுப்பூச்சி வளர்க்கிற தொழில் கூட
மேல் நிலை பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு வழங்கப்படும்
என்று நான் ஏற்கனவே கடந்த ஆண்டு அல்லது அதற்குமுன்
ஆண்டு படித்துப் பார்த்தேன். நல்லவேளையாக பட்டுப் பூச்சி
அவர்களை விட்டுப் போய்விட்டது. அந்தப் பட்டுப்பூச்சி வளர்க்
கிற தொழிலுக்கு முக்கியத்துவம் இருப்பதாகக் கூட அன்றைக்கு
கூறப்பட்டது. எனவே சொல்லப்பட்ட தொழில்கள் பல தொடங்
கப்படவில்லை. தொடங்கிய தொழில்கள் பலவற்றுக்குப் போது
மான பயிற்சி வாய்ப்பு வசதிகள் இல்லை. பொருளாதார நெருக்
கடியிலே அமைச்சர் தத்தளிப்பார் என்பது எனக்குத் தெரியும்.
அமைச்சரைக் குறைகூறுவதற்காக நான் சொல்லவில்லை.
பர்ப்பஸ் ஆப் ஹையர் செகண்டரி, என்னவாகச் சொல்லப்
பட்டது. இன்றைக்கு நடைமுறைக்கு எப்படி வந்திருக்கின்றது
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

(இரவு 7.10)

மற்றொன்று. இன்றைக்குப் பார்த்தாலும் கூட மறுபடியும்
தொடக்க நிலைப் பள்ளிக்கூடமாக இருந்தாலும், தொடக்கநிலை
வகுப்பாக இருந்தாலும் டீச்சர், பீப்பிள் ரேஷீயோவை எடுத்துக்
கொண்டால் 1:39 என்று இருக்கிறது. நடுநிலைப் பள்ளியை
எடுத்துக்கொண்டால் அந்த ரேஷீயோ 1:32 அல்லது 1;33 என்ற
அளவில் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் 1:28 என்று
இருக்கிறது. மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 20 மாண
வர்கள் இருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களாக இருந்தால்



ஒருவருக்கு ஏறத்தாழ 12 மாணவர்கள் என்ற விகிதாச்சாரம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த விகிதாச்சாரம் தலைகீழாக இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 20 அல்லது 25 மாணவர்கள் இருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் இருக்க வேண்டும். கல்லூரியில் ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் இருக்க வேண்டும். எம்.ஏ., அல்லது அதைப்போன்ற மேல் படிப்பு என்கிறபோது ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்கலாம். இந்த முறையில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் அமைய வேண்டும். எதிர் காலத்திலாவது இப்போது இருக்கிற விகிதாச்சாரத்தை நான் குறிப்பிட்டமாதிரி தலைகீழாக (வைஸ்-வர்ஸா) மாற்றியமைக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கல்வி நிலையில் ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் குறைத்து, மேலே போகப்போக ஆசிரியர் எண்ணிக்கைப் பெருகி குறுகலான அஸ்திவாரத்தில் மேலே போக போக அகலமான கட்டிடத்தைக் கட்டுவதைப் போல—அந்தக் கட்டிடம் எவ்வளவு உறுதியாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும் குதுப்மினார் போல இல்லாமல் கோபுரம் போல இருக்க வேண்டும். சம அளவில் இருந்தாலே ஆபத்து. ஆகவே, தமிழ்நாட்டு கோபுரம் அடித்தளம் அகலமாக இருந்து, மேலே போகப்போக கோபுரம் குறுகிக்கொண்டு போவதைப்போல, பிரமிட் கோபுரங்கள் மாதிரி ஆசிரியர்கள் மாணவர் விகிதாசார எண்ணிக்கை ஆரம்பகட்டத்தில் அதிகமாக இருந்து மேல்நிலைக்குப் போக போக குறைந்துகொண்டே இருக்க வேண்டும்; அந்த அளவில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் அமைய வேண்டும்; இப்போது இருக்கிற விகிதாசாரத்தை மாற்ற அரசு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர் மன்றத்தினுடைய அல்லது ஆசிரியர்களுடைய அமைப்புக்களுக்கு நிர்வாகிகளாக ஆசிரியர்கள் இருந்தாலும், ஆசிரியர் அல்லாதவர்களாக இருந்தாலும் அதிலே பெரிய தவறு ஒன்றும் இல்லை. ஆசிரியராக இருந்தாலும், என்.ஜி.ஓவாக இருந்தாலும் அவர்களுடைய குறைகளைத் திரும்பத் திரும்ப எடுத்துச்சொல்லி, உரிய பரிகாரம் தேடிக்கொள்வதில் தவறில்லை. ஏதோ மேலவை உறுப்பினர்கள் இரண்டு, மூன்று பேர்கள், ஆசிரியர் பிரதிநிதிகள், ஆசிரியர் அமைப்புகளின் நிர்வாகிகளாக இருக்கிற காரணத்தால், அவர்கள் அரசாங்கத்திற்கு குறைகளை எழுதினால், அவர்களுக்குப் பதில் எழுதத் தேவையில்லை; அது அங்கீகாரம் இல்லாத அமைப்பு; அங்கீகாரம் இல்லாத அமைப்புகளுக்கு

பதில் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்று ஒரு உத்தரவை நீங்கள் போட்டிருப்பது மிகவும் தவறான ஒரு செயல். அதன் மூலம் நீங்களே சங்கங்களுக்குள் போட்டியை ஏற்படுத்துகிறீர்கள். அந்த மேலவை உறுப்பினர்கள் அந்த அமைப்புகளின் நிர்வாகிகளாக இல்லாமல் மேலவை உறுப்பினர் என்ற முறையில் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினால் அதற்கு நீங்கள் பதில் எழுதமாட்டீர்களா? பதில் எழுத தேவையில்லை என்று சொல்லி விடுவீர்களா? அங்கீகாரம் இல்லாத அமைப்புகளுக்கு பதில் அனுப்பத் தேவையில்லை என்று அரசாங்கம் ஒரு ஆணையின் மூலம் தெரிவிக்குமானால் அது ஜனநாயக நெறி முறைகளுக்கு விரோதமான செயல். ஜனநாயக அமைப்பில் அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. அவர்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்காக ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதில் எழுத கூடாது என்பது சரியல்ல. மேலவை உறுப்பினர் என்ற முறையில் கடிதம் வந்தால் நீங்கள் பதில் எழுதமாட்டீர்களா? சட்டமன்ற உறுப்பினர் கடிதம் எழுதினால் பதில் எழுதமாட்டீர்களா? ஆகவே, அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட வேறுபாடுகள் தேவையில்லை; அதனால் அரசுக்கு எந்தப் பயனும் இல்லை.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்க ஊழியராக இருந்தாலும், ஆசிரியராக இருந்தாலும், பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம் கலைஞர் ஆட்சியில் இருந்து தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த 10,000 ரூபாய் அலுவலர்கள் இடையிலே இறந்து விட்டால் தரப்படுகிறது; ஆனால் இறுதிவரையில் பணியாற்றி ஓய்வுபெற்றால் இல்லை என்று சொல்கிறீர்களே, இது நியாயமா என்று கேட்கிறார்கள். ஒருவர் இடையிலே இறந்து விட்டால், 10,000 ரூபாய் கொடுத்து, அவர் உயிரோடு ஓய்வு பெற்றால் கொடுக்கவில்லை என்றால் பொதுவாக ஒரு எண்ணம் தோன்றும். அவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரே என்று சிலர் எண்ணுகிற அளவுக்குப் போய்விடும். எனவே, அவர் இறந்துவிடுகிறபோது 10,000 ரூபாய் உதவித் தொகை கொடுப்பது என்று இருக்கிறபோது, அவர் பணியாற்றி ஓய்வு பெறும் நிலையிலும் அந்த உதவித் தொகையைக் கொடுக்கலாம். அதனால் அரசுக்கு ஒன்றும் பெரிய இழப்பு இல்லை. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக, அரசாங்க பள்ளி ஆசிரியர்களாக ஏற்றுக்கொண்ட பிறகு அங்கே இருந்த வேறு சில ஊழியர்களை கைவிட்டுவிட்டார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆசிரியர்களை எப்போது அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொண்டீர்களோ அப்போதே அந்த



மற்ற ஊழியர்களையும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இப்போதாவது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் அடிப்படை பணியாளர்களுக்கு 200 ரூபாய் தான் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால் அதே தரத்தில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் அல்லது அரசாங்கத்தில் இருக்கிற அடிப்படை ஊழியர்களுக்கு 250 ரூபாய் முதல் 350 ரூபாய் வரையில் அடிப்படைச் சம்பளம் தரப்படுகிறது. தனியார் துறைப் பள்ளி ஊழியர்களுக்கும் அந்த அளவுக்குச் சம்பளத்தை உயர்த்தித்தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்களை நியமிக்கிறபோது ஏற்கெனவே ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் அல்லது நடுநிலைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் ஆசிரியர்களுக்குள்ள தகுதியோடு பணியாற்றிக்கொண்டிருந்தால் அவர்களுக்கு தமிழாசிரியர்கள் சம்பளம் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை. ஏற்கனவே தமிழ்ப் புலவர்களுக்குப் படித்து, ஆரம்பப் பள்ளியில் பணியாற்றியிருந்தால், 5 ஆண்டு, 6 ஆண்டு பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு தமிழாசிரியர்களுக்கு வழங்கும் சம்பளத்தை தரலாம் என்று விதியைத் திருத்த வேண்டும்.

நடுநிலைப் பள்ளியில் 8-வது வகுப்பு வரையில் செக்கண்டரி கிரேடு டீச்சர்ஸ் தமிழ் கற்றுக் கொடுக்கலாம் என்ற ஒரு தவறான முறை இருக்கிறது. தமிழ்மொழி வளர்ச்சியிலே அக்கறை உள்ளதாகச் சொல்கின்ற அரசு இந்த 8-வது வகுப்பு, 7-வது வகுப்பு என்ற அந்த மிடில் கிளாசிலேயும் தமிழ் ஆசிரியர்களைக் கொண்டுதான் தமிழ் பயிற்றுவிக்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள கல்லூரி முதல்வர்களுக்கு யு.ஜி.சி.யாலே தரப்பட்ட சம்பளம் ஏறத்தாழ 1,500 ரூபாய். மற்றவர்களுக்கு எல்லாம் யு.ஜி.சி. சம்பளம் தருவதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர்—நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள்—கல்லூரி முதல்வர்களுக்கும் அவர்கள் முதல்வர்களாக இருந்து ஆற்றுகின்ற பணிக்காகத் தரப்படவேண்டிய சிறப்பூதியம் எதுவும் தரப்படவில்லை. அது ஒரு அனாமலி என்று நான் சொல்கிறேன். முதல்வரை மற்றவர்கள் மதிப்பதற்குக் கூட அது கட்டாயமாகத் தேவை. எனவே, அந்த வகையிலே முதல்வர்களுக்கு யு.ஜி.சி. சம்பளம் என்ற ஒன்று இருக்குமேயானால் அதைத் தரவேண்டும். இல்லை என்றால் உயர்

நிலைப்பள்ளியிலேயும், நடுநிலை பள்ளியிலேயும் ஹெட்மாஸ்டர் பொறுப்பிலே உள்ளவர்களுக்குச் சிறப்பூதியம் எப்படி வழங்கப் படுகிறதோ அந்த முறையிலே கல்லூரி முதல்வர்களுக்கும் ஊதியம் வழங்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

மற்றொன்று. அரசாங்கத்திற்குச் சொல்லப்படுகிற வேண்டுகோள்களைக் கவனித்துச் செயலாற்றுகின்ற முறை இல்லை. மதுரையிலே தோன்றிய செந்தமிழ் கல்லூரி ஒன்று, அந்தக் கல்லூரியிலே பி.லிட் வகுப்பு தொடங்கி 5, 6 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. எம்.ஏ. வகுப்பு தொடங்கப்பட்டுவிட்டது. அக்கல்லூரி தொடங்கிய போது புலவர் கல்லூரி, செந்தமிழ் கல்லூரியாக விளங்கிய அந்தக் கல்லூரியில் எம்.ஏ. வகுப்பு நடத்துகின்ற இந்த நிலைமையிலே அந்தக்கல்லூரியின் முதல்வர் எம்.ஏ. படித்தவர் 30ஆண்டுகளுக்கு முன்னாலே அவருக்கு அவ்வளவு தகுதி இருந்துக் கூட அவருக்குத் தரப்படுகின்ற ஊதியம் சாதாரண புலவர் கல்லூரியின் முதல்வருக்குத் தரப்படுகின்ற ஊதியம் தானே தவிர எம்.ஏ. வகுப்பு நடத்துகின்ற ஒரு கல்லூரியாக அதை ஏற்றுக்கொண்டு தரப்பட வேண்டிய ஊதியம் தரப்படவில்லை என்ற குறையை அவர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைகளை உடனடியாக நீக்கவேண்டும். இன்னொரு கருத்தையும் நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இன்றைக்கு கல்வி வளர்ச்சியிலே அரசாங்கம் அக்கறை செலுத்துவதற்கு ஏற்ற கடமை த்ரு இன்ஸ்பெக்ஷன் என்ற அந்த முறையிலேதான். தமிழகத்தின் இந்தத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற இன்ஸ்பெக்ஷன் அதாவது பள்ளிக் கூடங்களைப் பார்வையிடுதல், ஒழுங்கு படுத்துதல், சீர் படுத்துதல் ஆகியவை சரியாக நடை பெறவில்லை. அந்த இன்ஸ்பெக்ஷன் துறையினை வளர்ப்பதன் மூலமாகத்தான் இதை ஊக்கப்படுத்த முடியும். இந்தக் கருத்துக்களை எல்லாம் ஏதோ சட்டமன்றத்திலே பேசுவதற்காகவும், சொல்வதற்காகவே நாங்கள் பேசுவதாக எண்ணிக்கொள்ளக்கூடாது. இந்தக் குறைகளை எல்லாம் பட்டியல் போட்டுப்பாருங்கள். வெட்டுத் தீர்மானத்தின் மூலமாகவும் வேண்டுகோள்கள் மூலமாகவும் சொல்லப்பட்ட அந்தக் குற்றம் குறைகளை எல்லாம் பட்டியல் போட்டுப் பார்த்தால் எந்த அளவுக்கு எதிர்காலத்திலே கடமையைச் செய்தால் இந்தக் குறைகளைப் போக்க முடியும் என்பது விளங்கும். அந்த வகையிலே குறைகளை நீக்குகின்ற முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலேயும், மாலையிலேயும் மாண்புமிகு பேரவையின் உறுப்பினர்கள் அவையிலே வைக்கப்பட்ட கல்வி மானியக் கோரிக்கையின் மீது தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.



இளஞ்சிறார் பள்ளி, தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப்பள்ளி, கல்லூரி, தொழில் நுட்பக் கல்வி, பல்கலைக் கழகம், தமிழ் வளர்ச்சி, தமிழ் பண்பாடு, விளையாட்டுத்துறை, ஆவண காப்பகம், தொல்பொருள் ஆய்வுத் துறை, வயது வந்தோர் கல்வி, அருங்காட்சியகம் போன்ற பல்வேறு துறைகளில் தங்களது கருத்துக்களைத் தெரிவித்து அவர்களுக்குப் பட்ட குறைபாடுகளை எடுத்துச் சொல்லி கல்வித் துறைக்குத் தங்களது ஒத்துழைப்பையும், தங்களது உதவியையும் செய்திருப்பதற்கு நான் என்னுடைய நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையின் மூலமாக நாம் காணவிரும்புகின்றமாறுதலை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்வித்துறையின் மூலமாக நம்முடைய குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும், நல்ல அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அறிவு வளர்ச்சி என்பதே சிந்திக்கின்ற தொழிலின் மூலமாகத்தான் நடைபெறமுடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் விளைவாகத்தான் நாம் எடுக்கின்ற பல்வேறு நடவடிக்கைகள் அது தமிழ் வகுப்பாக இருந்தாலும் சரி, கணித வகுப்பாக இருந்தாலும் சரி அந்தப் பாடத்தை எந்த ஆசிரியர் போதித்தாலும் குறைந்தது ஒவ்வொரு மாணவனுக்கும் இரண்டு மூன்று சிந்திக்கின்ற சந்தர்ப்பங்கள் கிடைக்கவேண்டும் என்பதைத்தான் நாம் வலியுறுத்தி வருகிறோம். நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். ஆகவே, நம்முடைய குழந்தைகளுடைய அறிவு வளர்ச்சியிலேயும் அவர்களிடத்திலே மறைந்து கிடக்கின்ற ஆற்றலை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் கல்வித்துறை மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றது. இன்றைக்கு நாட்டிலே காணப்படுகின்ற வறுமைக்குக் காரணங்கள் எவை எவை என்று நாம் தேடிக்கொண்டிருந்தாலும் அதற்கு என்ன காரணம் என்றால் நம்முடைய குழந்தைகளிடத்திலே இருக்கின்ற இளைஞர்களிடத்திலே இருக்கின்ற ஆற்றல்களை வெளிக்காட்டாததுதான்.

அது மட்டுமல்லாமல் ஒரு சமுதாயத்திற்கு தேவையான பலவகையான ஆற்றல்களை வளர்க்கவும், அதற்குத் தக்க பயிற்சிகளை தருவதுமான ஒரு நடவடிக்கைகளை எடுக்காததும்தான் காரணம் என்பதை நாம் மனப்பூர்வமாக உணர்ந்துதான் அந்த அடிப்படையிலே பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறோம். ஆகவே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற கோரிக்கை மானியத்தில், அதன் மூலமாக வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்க உரையில், நீங்கள் காணுகிற பல்வேறு செய்திகள் இந்த நோக்கத்தோடு தான் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7·20)

இங்கே பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருந்தாலும், இதிலே ஆரம்பத்தில் நிதி ஒதுக்கத்தைப் பற்றி ஒரு கருத்து பேசப்பட்டது, மாநில அரசு வருவாய்க் கணக்கில்

செய்யும் செலவில், கல்வி மானியத்தின் கீழ் செய்யும் நிதி ஒதுக் கும், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் ஏறத் தாழ 22 விழுக்காடு அளவுக்கு இருந்து வருகிறது. கடந்த காலத் தைப் பார்ப்போமேயானால் 1955—56-ல் 52 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு 11 கோடி ; அதாவது 21·0 பெர்சன்ட். 1965—66-ல் 181 கோடியில் 36 கோடி 20·90 பெர்சன்ட். 1975—76-ல் 558 கோடியில் 123 கோடி, அதாவது 22 பெர்சன்ட் என்று வந்துள்ளது. அண்மை ஆண்டுகளை எடுத்துக் கொண் டால் 1980—81-ல் 1152 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் 232 கோடி அதாவது 20·1 பெர்சன்ட். 1981—82-ல் திருத்திய மதிப்பீட்டில் 1298 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு 262 கோடி, அதாவது 21·9 பெர்சன்ட். 1982—83 பட்ஜெட் மதிப்பீட்டில் 1370 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு 291 கோடி, அதாவது 21·3 பெர்சன்ட் என்பது நிலவரம் ஆகும். சில ஆண்டுகளுக்குமுன் ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டி டங்களுக்கான செலவு கல்வி மானியத்தின்கீழ் காட்டப்பெற்றது. இப்போது சமுதாயவளர்ச்சி மானியத்தில் காட்டப்பெறுகிறது அவ்வகையில் 1981—82 1982—83-ஆம் ஆண்டுக்கு 9½ கோடி அளவிலான செலவைக் கணக்கில் கொண்டால், கல்விக்கான செலவு 22 பெர்சன்ட் அளவில் இருக்கும் என்பதை நான் இங்கே எடுத்துக்கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

அதிலே 1982—83-ஆம் ஆண்டில் 4433 ஆயிரம் சிறார் பள்ளி வகுப்புகளை தொடங்க இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றார்கள். கிராமப்புறங்களில் தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கு இத்திட்டம் உறுதுணையாக இருக்கும். அது மட்டும் அல்ல நான் இந்த அவையிலே கூறியதைப் போல இன் றைக்கு பல்வேறு பகுதி மக்கள், கல்வியிலே பின் தங்கியிருப் பதற்கு காரணமே, குறிப்பிட்ட பகுதியிலுள்ளவர்கள் தங் களுடைய குழந்தைகளுக்கு, இந்த இளம் சிறார் பள்ளிகளுக் கான கல்வியை தருவதும், அதை ஏழை எளிய வீட்டு குழந் தைகள், அல்லது பின் தங்கிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆதிதிராவிடர் ஜாதியைச் சேர்ந்த குழந்தைகள், அந்த வாய்ப்பு கிடைக்க முடியாத காரணத்தால் அந்தக் கல்வியை பெற முடி யாமல் போவதும்; ஆனால் 3 வயதிலிருந்து 5 வயது வரையில் இருக்கிற குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்று அறிஞர்கள் கூறுகிற காரணத்தாலும், இந்த 3 வயதி லிருந்து 5 வயது வரையில் ஏற்படுகிற வித்தியாசம் தொடர்ந்து அவர்களுக்கு இருந்து வருகிறது என்கிற காரணத்தாலே தான், மிகவும் பின் தங்கிய ஜாதியினர் அதிகமாக மார்க்குகள் பின்னா லே எடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. என்பதையும் நாம் உணர்ந்து தான் அத்தகைய வேறுபாட்டை போக்க நாம் வேறு பல வழிகளிலே முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும், அறிவு ரீதியாக நாம் அந்த வேறுபாட்டை போக்குவதற்கு, இந்த நட



வடிக்கையும் மிக மிக தேவை என்பதை உணர்ந்துதான், இன் றைக்கு இந்த ஆயிரம் சிறார் பள்ளிகளை, இந்தியாவிலேயே நம்முடைய அரசுதான் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு நடவடிக் கையை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1982—83-ஆம் ஆண்டுகளில் ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளி களுக்கும் சேர்ந்து 150 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்ந்து 500 தமிழ் ஆசிரியர்கள் பதவிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர்கள் பதவிகள், உயர்நிலை பள்ளிகளுக்கு 300 பி.எட். தர ஆசிரியர்கள் பதவிகள் ; ஆக மொத்தம் 2,000 கூடுதலாக ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் பதவிகள் 100 முழு நேர பதவி களாக உயர்த்தப்படும் என்ற விவரம் பல்வகையான ஆசிரி யர்களுக்கும் ஒரு மகிழ்ச்சியை உண்டாக்கும் என்று நான் கருது கிறேன். ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் பற்றி இங்கே கருத்துக்கள் சொல்லப்பட்டன.

தொடக்கப் பள்ளிகள் தற்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய ஆசிரிய மாணவர் விகிதம் பற்றிய கல்வித்துறை நிலை ஆணை எண். 250 நாள் 29—2—1964-ன் படி, 1981—82-ம் ஆண்டில் 1—10—1981 அன்று ஆசிரிய மாணவர்கள் விகிதம் பற்றிய மாநில முழுமைக்குமான நிலைமை, தொடக்கப் பள்ளிகள் 1—5 வகுப்புகள் 44.72 லட்சம் மாணவர்கள், 1,13,036 ஆசிரி யர்கள்; ஆசிரியர் மாணவர் விகிதம் 1:39.

நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 25·40 லட்சம் மாணவர்கள், 66,221 ஆசிரியர்கள். ஆசிரி யர் மாணவர் விகிதம் 1:38.

உயர்நிலைப் பள்ளிகள்/மேல்நிலைப் பள்ளிகள் (மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் படித்த 2·66 லட்சம் உட்பட) 23·63 லட்சம் மாணவர்கள், 92,030 ஆசிரியர்கள். ஆசிரியர், மாணவர் விகி தம் 1:24, 1:27.

மாநில முழுமைக்குமான மேற்படி கணக்கு உண்மை நிலை மையை உணர்த்துவதன்று. ஏனெனில் ஒவ்வொரு பள்ளிக்கும் தனியாகவும், ஒவ்வொரு பள்ளிக்கும் கூட ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுடைய வகுப்பு ஒவ்வொன்றுக்கும் தனியாகக் கணக்கிட வேண்டும். எனவே இவ்வாறு ஒவ்வொரு பள்ளிக்குத் தனித்தனி யாக கணக்கிட்டால்..........(குறுக்கீடு)

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, 13—3—1982-ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு புளியந்தோப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமச்சந்திரன் என்பவர், திரு சோமன் என்பவரை ஜீப்பில் அழைத்துக் கொண்டு சென்றார். நாட்களாகின்றன. அவர் எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. அரசுக்கு இதுபற்றிய ஏதாவது தெரியுமா? ஐ.ஜி. அவர்களைக் கேட்டோம், அவர் சொன்னார் இராணிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் இருந்தார் என்று. ஆனால் அதே இராணிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் இருந்துதான் அந்த இன்ஸ்பெக்டர் இராமச்சந்திரன் திரு. சோமன் என்பவரை ஜீப்பில் அழைத்துச் சென்றிருக்கிறார். அது பற்றிய அரசு தரப்பிலே என்ன சொல்லப்போகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதோ கல்வித்துறை மானியத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னையை உறுப்பினர் அவர்கள் எழுப்பப் போகின்றார்கள் என்று எதிர்ப்பார்த்தேன். அவர் இப்பொழுது கூறியது இந்த மானியத்திற்குச் சம்பந்தமில்லாதது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர் ஏதோ கல்வித்துறை மானியத்தைப் பற்றித்தான் கேட்கப்போகிறார் என்றுதான் நானும் நினைத்தேன். உறுப்பினர் கேட்ட பிரச்சனை பற்றி அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தற்போதுள்ள ஆசிரியர் மாணவர், விகிதம். இணைப்பில் குறித்துள்ள ஆணைகளின்படி அனுமதிக்கத்தக்க லட்சிய விகித அளவு இராது. ஆசிரியர்கள் எண்ணிக்கை லட்சிய விகிதத்தின்படி அனுமதிக்கத்தக்கதைவிட மிகக் குறைவாகத்தான் உள்ளது.

இதில் முக்கியமான கருத்து என்னவென்றால் மேற்கண்ட ஆசிரியர்—மாணவர் விகித ஆணைகளின்படி பள்ளி நிர்வாகத்தினர் தாமாகவே கூடுதல் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள இயலாது. மேற்கண்ட விகிதம் அமைய வேண்டிய லட்சியம் ( optimum ratio ) தான். உடனடியாக இந்த லட்சியத்தை அடைய மாநில அரசு நிதி நிலைமையும் இடந்தராது. உடனடியாக ஆசிரியர்—மாணவர் விகிதத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமாயின் 1977–78 ஜூலையிலேயே உடனடியாக செகண்டரி கிரேடு பதவிகள் மட்டும் சுமார் 23,000 கூடுதலாக ஏற்படுத்த வேண்டியிருக்கும் என பள்ளிக் கல்வி இயக்குநர் கணக்கிட்டுத் தெரிவித்து இருந்தார். 1978–79 1979–80, 1980–81 ஆகிய மூன்றாண்டுகளில் 6—11, 11—14 வயதுத் தொகுதியினருள் கூடுதலாக பள்ளிகளில் சேர்க்கப்



பட்ட 3 லட்சம் மாணவர்களுக்கு மொத்தம் 10,000 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த வேண்டியிருக்க அந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 3,000 பதவிகள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டனவாகையால் ஆசிரியர் பதவித் தேவை (1977–78-லேயே மிக அதிகமாக இருந்தது). இப்பொழுது மேலும் வெகுவாக கூடியிருக்குமே ஒழியக் குறைந்திருக்காது.

ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை இடம் தருவதற்கேற்ப கூடுதலாக சில ஆயிரம் பதவிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவ்வெண்ணிக்கைக்குள்ளாகவே வெவ்வேறு பள்ளிகளின் தேவைக்கேற்ப பள்ளிக் கல்வி இயக்குநர் கூடுதல் ஆசிரியர் பதவிகளைப் பள்ளிகளுக்கு பகிர்ந்து அளிக்கிறார். எனவே உண்மையில் பல பள்ளிகளில் ஆசிரியர்—மாணவ விகிதம் அரசாணையில் விதித்த விகிதத்தைவிட அதிகமாகவே இருக்கும். எனினும் ஆண்டுதோறும் சில ஆயிரம் கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படுவதால் ஒவ்வொரு ஆசிரியரும் கவனிக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை மேலும் குறையும் நிலை ஏற்படும். இந்நிலைமையை ஆண்டுகள் செல்லச் செல்ல மெதுவாகவே சீர்திருத்த முடியும். உடனடியாக விகிதத்தை லட்சிய விகித அளவுக்குக் குறைத்திட அரசு நிதிநிலைமை இடந்தராது.

(இரவு 7-30)

31—12—1982 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு அற்றவர்களாக பதிவு செய்திருந்த (செல்லுபடிப் பதிவேட்டில் இருந்த) ஆசிரியர்கள் எண்ணிக்கை வருமாறு :

| | |
|---|---|
| 1. பட்டதாரி ஆசிரியர்கள் .. .. .. | 12,843 |
| 2. இடைநிலை (செகண்டரி கிரேடு) .. | 14,515 |
| 3. இளநிலை (ஹையர் கிரேடு) .. .. | 495 |
| 4. தமிழாசிரியர்கள் .. .. .. .. | 4,138 |
| 5. பிறமொழி ஆசிரியர்கள் .. .. | 247 |
| 6. உடற்பயிற்சி ஆசிரியர்கள் .. .. | 3,293 |
| 7. கைத்தொழில் ஆசிரியர்கள் .. .. | 5,732 |
| ஆக மொத்தம் .. | 41,263 |

சுமார் 1970 ஆம் ஆண்டிலிருந்தே வேலை வாய்ப்பற்ற ஆசிரியர்கள் தொகை பெரும் எண்ணிக்கையில் தான் இருந்து வந்துள்ளது. ஆசிரியர் வேலை வாய்ப்பின்மைப் பிரச்னையைத் தீர்க்கும் நோக்கத்துடன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் குறைந்த அளவு எண்ணிக்கையிலேயே சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

ஆசிரியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது குறித்து தமிழ்நாடு விட்டு வசதி வாரியத்துடன் விவாதித்து ஆவன செய்ய பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நேரடியாக ஊதியம் வழங்கப்படுகிறது. தற்சமயம் தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தனியார் பள்ளிகளில் சம்பளம் பட்டுவாடா செய்வதில் சில முறைகேடுகள் நடந்து வருவதாக அரசிற்கு அவ்வப்போது புகார் வந்தன் பேரிலும், மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நேரடி ஊதியம் வழங்கக் கோரியுள்ளதன் அடிப்படையிலும், அரசு மேற்படி தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்குவது குறித்து பரீட்சார்த்தமாக ஒரு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி, அதன் அடிப்படையில் மாநிலம் முழுவதும் அமுல் நடத்துவது குறித்து நிதித் துறையுடன் பரிசீலித்து வருகிறது.

தொழிற் கல்வி கூடங்கள் பல்வேறு ஊர்களுக்கு (பாலிடெக்னிக்) வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்சமயம், இம்மாநிலத்தில் 50 பல் தொழில் பயிற்சிப் பயிலகங்கள் (பாலிடெக்னிக்குகள்) இயங்கி வருகின்றன. மாணவர்களிடையே தொழில் நுட்பக் கல்வியின் ஆர்வத்தை உண்டாக்கும் பொருட்டும், சுயவேலைத் திட்டத்தை உருவாக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு அரசுப் பல்தொழில் பயிற்சி பயிலகமாவது இருக்க வேண்டும் என்பதே அரசின் தற்சமயக் கொள்கை. இக்கொள்கையின்படி, இப்பொழுது நீலகிரி மாவட்டத்தை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அரசு பாலிடெக்னிக்குகள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் ஓர் பாலிடெக்னிக் ஏற்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதிநிலையைக் கருதி மேலும் அரசு பாலிடெக்னிக்குகள் இப்பொழுது துவக்க உத்தேசம் இல்லை.

பெண்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே 3 அரசு மகளிர் பாலிடெக்னிக்குகளும், 4 தனியார் மகளிர் பாலிடெக்னிக்குகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பாரதியார் நூற்றண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எட்டையபுரத்தில் பெண்களுக்கென ஓர் அரசு பாலிடெக்னிக் ஆரம்பிக்கபடும் என அறிவித்தார். அந்த அறிவிப்பு ஆளுநர் உரையிலும் இடம் பெற்றுள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.



இந்திய அரசு, புதிய பாலிடெக்னிக்கு துவக்க சில விதிமுறைகளை நிர்ணயித்துள்ளது. அதன் படி, பின்தங்கிய இடங்களிலும் புதிய புதிய துறைகளிலும், தொழில் நுட்ப மனித சக்தி தேவைக்கு ஏற்பவும், அமைக்கப்பட வேண்டும். ஒரு புதிய பாலிடெக்னிக் ஏற்படுத்த ரூ. 110 இலட்சம் வரை மூலதனச் செலவு செய்ய வேண்டும். இந்தச் செலவில் தனியார் நிறுவனம் 66-2/3-ம் அரசு 33-1/3-ம் பகிர்ந்து கொள்ளும். இதைத் தவிர தொடரும் செலவில் 90 சதவீதம் அரசும், 10 சதவீதம் தனியார் நிறுவனமும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

அரசு தற்போது பாலிடெக்னிக்கு மற்றும் பொறியியல் கல்லூரிகள் ஏற்படுத்த சாத்தியக் கூறுகளை ஆராய ஓர் செயற்குழு அமைக்க உத்தேசித்துள்ளது என கூறிக்கொள்கிறேன்....

**திரு. துரை முருகன்:** ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தாங்கள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். மானிய கோரிக்கையின் மீது அங்கத்தினர்கள் பேசியதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள். ஏதாவது சில குறிப்புகள் வைத்து மட்டும் பதில் சொல்வார்கள். ஆனால் அங்கத்தினர்கள் படிப்பது போதாது என்று, அமைச்சர் அவர்களும் பக்கம் பக்கமாக படிக்க ஆரம்பித்தால் இது எங்கு கொண்டு போய் முடியும் என்று தெரியவில்லை.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களிடத்திலே நிறைய குறிப்புகள் இருக்கின்றன. அந்தக் குறிப்புகளின் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய விளக்கங்கள் கிடைக்குமே தவிர வேறல்ல.

**திரு. ப. நெடுமாறன்:** இப்போதுள்ள நிதி நிலைமையில் புதிய பாலிடெக்னிக்களை ஆரம்பிக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் மதுரையிலுள்ள பாலிடெக்னிக்கில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைப் பற்றி பிறகு பரிசீலித்துக் கொள்ளலாம்.

ஒரு பாலிடெக்னிக் பற்றி, ஒருவிவகாரம் பற்றிப் பேசும்போது ஒரு பக்கம் எழுதிவைத்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இப்போது ............

**திரு. துரைமுருகன்:** அவர் ஒரு ராங் இன்பர்மேஷன் கொடுக்கிறார்கள். நான் பார்த்துப் படிக்கிறவன் அல்ல. குயிலுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1961–62-ல் ட்ராப் அவுட்ஸ் 51.27 ஆக இருந்தது 1980-81-ல் 30.67 ஆக குறைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அண்மையில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பின் தங்கிய மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதே போல் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் 102, 110 சதவீதம் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். ஆகவே அதைப் பற்றி ஒரு விளக்கம் தரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்ற காரணத்தால் அதை விளக்கமாக இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் 6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதியினரைச் சேர்ப்பது குறித்து ஆறாவது, ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1984-85-ல் இந்தியா அனைத்திலும் எய்த வேண்டும் என்று குறித்திருக்கும் இலக்குகள் 6 முதல் 11 வயதுத் தொகுதியில் 95 சதவீதம், 11 முதல் 14 வயதுத் தொகுதியில் 50 சதவீதம் ஆகும். 14—3—1982 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள் உரையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் மேற்சொன்ன இலக்குகளுக்குக் குறைவான அளவே பள்ளிகளில் அவ்வயதுத் தொகுதி மாணவ, மாணவியரை சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகமும் சேர்க்கப்பட்டிருந்தது. இது சரியல்ல என்பதும், தமிழகம் ஏற்கனவே அந்த இலக்குகளை எய்திருப்பதும், 1984—85-லும் அந்த இலக்குகளுக்குக் கூடுதலாகவே சாதனை செய்யும் என்பதும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அக் கூட்டத்திலேயே தெளிவாக்கப்பட்டது. இது குறித்து நிலைமையை நான் சற்று தெளிவாக்க விரும்புகிறேன்.

மாணவ மாணவியர் சேர்ப்பு விகிதம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. 6—11 வயதுத் தொகுதியினரை எடுத்துக் கொண்டால் அவ்வயதுத் தொகுதியில் உள்ள மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட வயதுத் தொகுதிகள் ஐந்தை அதாவது 6 வயது முடித்தவர்கள், 7 வயது முடிந்தவர்கள், 8 வயது முடிந்தவர்கள், 9 வயது முடிந்தவர்கள், 10 வயது முடிந்தவர்கள் ஆகியோர் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். பின்னர் அந்த வயதுத் தொகுதியினர் பயிலக்கூடிய வகுப்புகளாகிய 1—5 வகுப்புகளில் பயில்வோர் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ள வேண்டும். மொத்த எண்ணிக்கையில் அவ்வாறு பயில்வோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு என்று கணக்கிட்டு. ''பள்ளிகளில் சேர்ந்தோர் விழுக்காடு'' கண்டுபிடிக்கப்படுகிறது.



1—5 வகுப்புகளில் பயில்வோர் எண்ணிக்கைப் பற்றி யாதொரு பிரச்னையும் இல்லை.

ஆனால் 1—5 வகுப்புகளில் பயில்வதற்குரிய வயதுத் தொகுதியினர் எண்ணிக்கையைக் கணக்கிடுவதில் இவ்வரசு இது வரை பின்பற்றியுள்ள முறைக்கும், மைய அரசு பின்பற்றும் முறைக்கும் வேறுபாடு உண்டு. மைய அரசு பின்பற்றும் முறையை மேலே சொல்லியிருக்கிறேன்.

தமிழகத்தில் 5 வயது முடிந்தவர்கள் முதல் வகுப்பில் சேர்க்கப் படுகின்றனர். இந்த அடிப்படையில் 6—11 வயதுத் தொகுதியினர் மொத்த எண்ணிக்கையை கணக்கிட இவ்வரசு இதுவரை, 5 வயது முடிந்தவர்கள், 6 வயது முடிந்தவர்கள், 7 வயது முடிந்தவர்கள், 8 வயது முடிந்தவர்கள், 9 வயது முடிந்தவர்கள், 10 வயது முடிந்தவர்கள் ஆக வயதுத் தொகுதிகள் ஆறின் எண்ணிக்கை கூட்டப்படுகிறது.

இதிலிருந்து மைய அரசு கணக்கிடும் முறைப்படி 1981—82-ல் தமிழகத்தில் 6—11 வயதுத் தொகுதியினரில் பள்ளியில் சேர்ந்தோர் விழுக்காடு 53.21 இலட்சம் பேர்களில் 64.07 இலட்சம் பேர் அதாவது 120 சதவீதம் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விட்டனர் என்று ஆகும். இருப்பதோ 53 இலட்சம், எப்படி 64 இலட்சம் பேர் சேர்த்தீர்கள் என்று கேட்பது நியாயம். இந்தப் புதிர் கணக்குக்கான விளக்கம் மைய அரசு கல்வித் துறை தயாரித்துள்ள இரண்டாவது அனைத்திந்திய கல்வி நிலைக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே தரப்பட்டுள்ளது வருமாறு :—

6—11 வயதுத் தொகுதிக்கு பள்ளியில் சேர்க்கப்பட்டோர் விழுக்காடு 75 சதவீதம் என்றால் பொதுவாக அனைவரும் தப்பர்த்தம் செய்துகொள்வது போல், 6—11 வயதுத் தொகுதியினரில் 75 சதவீதம் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்பதல்ல அர்த்தம். பள்ளிகளில் 1—5 வகுப்புகளில் பயில்வோருள் 6-க்கு குறைந்தவர்களும் இருப்பர் ; 10-க்கு மேற்பட்டவர்களும் இருப்பர்.

(இரவு 7·40)

ஒரு பகுதியில் 6 முதல் 11 வயதுவரை உள்ள தொகுதியினர் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட்டு விட்டனர் என்ற நிலை எய்த வேண்டுமானால், 6 வயதிற்குக் குறைந்தவர்கள். 10 வயதிற்கு அதிகமானவர்கள் ஆகியோருள் 1 முதல் 5 வகுப்புகளில் பயில்வோர் இருப்பார்களாதலால், மாணவர் சேர்க்கை அதிகமாக இருக்கும், எடுத்துக்காட்டாக, 1965-ல் கேரளத்தில் 6 முதல் 11 வயதுத் தொகுதிக்கு பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம் 117 சதவீதம் ஆக இருந்தது.

இதனைப் புரிந்துகொண்டால், முன் சொல்லியபடி தமிழகத்தில மைய அரசு கணக்கிடும் முறைப்படி 6 முதல் 11 வயதுக்குப் பள்ளிகளில் சேர்ந்தோர் சதவீதம் 1981–82-ல் 120 சதவீதம் ஆக இருந்தது என்பது வியப்புக்குரியதல்ல. இதே கணக்கீட்டு முறைப்படி, 1984–85-ல், 6 முதல் 11 வயதுத் தொகுதியில் மொத்தம் 51·61 லட்சத்திற்கு எதிராக 68·43 இலட்சம் பேர்—அதாவது 133 சதவீதம் பள்ளிகளில் சேர்ந்திருப்பார்கள். இது அகில இந்திய 6-வது திட்ட முடிவு இலக்கைவிட அதிகம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், எப்படி தமிழக அரசு பின்பற்றும் முறைப்படி 6 முதல் 11 வயதுத் தொகுதியில் 1981–82ல் பள்ளியில் சேர்ந்தோர் விழுக்காடு 95·76 சதவீதம் ஆக இருக்கிறதென்றால், 5 பிளஸ் முதல் 10 பிளஸ் முடிய 6 வயதுத் தொகுதியினர், மொத்த எண்ணிக்கை 67·62 இலட்சத்தில் பள்ளிகளில் .சேர்ந்த 64·07 லட்சம் பேர் என்பது 94·76 சதவிகிதம் ஆக இருக்கிறது, 1984–85-ல் நமது கணக்கு முறைப்படி, மொத்தம் 5 பிளஸ் முதல் 10 பிளஸ் முடிய 6 வயதுத் தொகுதியினர் மொத்த எண்ணிக்கை 72 இலட்சத்தில் 68·43 லட்சம் பேர் என்பது 93·5 சதவீதமாக இருக்கும். மற்ற எல்லா மாநிலங்களும், மைய அரசும் பின்பற்றி வரும் முறையின்படி கணக்கிட்டால், தமிழகத்தில் 6 முதல் 11 வயதுத் தொகுதியில் பள்ளியில் சேர்ந்தோர் எண்ணிக்கை இப்பொழுதே 95 சதவிகிதத்துக்கு மிக அதிகமாக இருக்கிறது என்பதும், 6—வது திட்ட இறுதியிலும் அவ்வாறே மிக அதிகமாக இருக்கும் என்பதுதான் உண்மையான நிலைமையாகும். 11 முதல் 14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்த வரையிலும் நிலைமைகள் இது போலத்தான் உள்ளன.

இங்கே மார்க் லிஸ்டைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைப்பற்றி விளக்கம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது குறிப்பாக ஹையர் செகண்டரி பள்ளிகளிலே நடைபெறுகின்ற 12 வது வகுப்புத் தேர்வில் பெறுகின்ற அந்த மார்க்கை வைத்துக்கொண்டு, என்ஜினியரிங் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் நாம் இடம் தந்து கொண்டிருக்கிறோம். இப்போது மைய முறையிலே விடைத்தாள்களைத் திருத்துவதன் மூலமாக எந்த ஆசிரியர் விடைத்தாளைத் திருத்துகிறார் என்பதைத் பார்த்து அங்கே போய் பணம் கொடுப்பதோ, வேறு செல்வாக்கைப் பயன்படுத்துவதோ, அப்படி மார்க்கைத் திருத்துவதற்கான ஒரு வாய்ப்பை நாம் எடுத்து விடுகிறோம். அதைப்போலவே, அந்த மார்க்குகள் அனைத்தையும் கம்ப்யூட்டரிலே போட்டு, கம்ப்யூட்டர்தான் அந்த ரிசல்ட்டை போடுகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால், வேறு வகையிலே மார்க்கைத் திருத்துவது கூடுமான வரையில் குறைத்திருக்கிறோம். ஆகவே, அடுத்து





இப்படிப்பட்டவர்கள் இந்த சிஸ்டத்தில இந்தத் துறையின் கீழ் விடைத் தாள்களை திருத்துவதற்கான நிலையில்லாத காரணத்தால், சாப்பி அடிக்கின்ற முயற்சியிலே ஈடுபடுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சமுதாய விரோதிகள அவ்வப்போது இருந்துகொண்டிருக்கிற அடிப்படையிலே தான், நாங்கள் இந்தத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த வாய்ப்புகளைப் போக்குகின்ற அளவிலே அதற்கான பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டுகூட, நம்முடைய திட்டத்தின்படி, நாம் எடுத்துக் கொண்ட பணியில அவர்கள் ஏதும் செய்ய முடியவில்லை என்றாலும் கூட, அவர்களாகவே ஒரு மார்க் லிஸ்டை, அதைப் போலவே தயாரித்துக் கொண்டு, சேரக் கூடிய வாய்ப்பு இங்கேயும் செய்ய முடியும். வெளி மாநிலத்திலேயும் காட்டி சேர முடியும் என்கிற நிலைமை இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, அதற்கான முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறோம். யார் எந்தக் கல்லூரியில சேர்ந்தாலும், அவர்கள் இந்த தேர்வுத் துறைக்கு அந்த மார்க் லிஸ்டை அனுப்பி, வெரிபை செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரு முறையை நாம் அடுத்த ஆண்டு கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு நாம் பரீட்சார்த்தமாக, நம்முடைய பொறியியல் கல்லூரி மார்க் லிஸ்டை மறுபடியும் இந்தத் தேர்வுத் துறையோடு ஒப்பிட்டுப் பார்த்ததிலே, அந்த மார்க் லிஸ்டைப் பொறுத்த வரையில் எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை என்பதை அவர்கள் .சொல்லியிருக்கிறார்கள். அதிலே யாரும் எந்தத் தவறான முறையிலும் சேர்க்கப்பட்டதாக எந்தவிதமான தடையமும் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த முறையை அடுத்த ஆண்டு முதல் எல்லாக் கல்லூரிகளிலும் கொண்டு வருவதன் மூலம் இதை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இத்தகைய முயற்சியை தோல்வியடையச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே உடல் பயிற்சித் துறையைப் பற்றி கருத்துக்கள் சொல்லப்பட்டன. விளையாட்டுத் துறைக்கு துணை இயக்குநர் நிரப்பப்படுவதில் தாமதம் ஆவதற்குக் காரணம், புதிய தொரு துறையாதலால், தகுதி வாய்ந்தவர்களை, கலவி, விளையாட்டு, அனுபவம் முதலிய அடிப்படைகளில் சரியானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதேயாகும். அட்டாக் விதிகள் இந்த பணியிடங்களுக்கு இன்னும் முடிவு செய்யப்படாவிட்டாலும், தாற்காலிகமாக உதவி இயக்குநர்கள நியமிக்கப்பட்டுள்ளனர். அட்டாக் விதிகள் ஏற்படுத்துவதற்கும், புதியதொரு துறையில் உள்ள பணியிடங்களுக்கு பொருத்தமான விதிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலையே தாமதத்திற்குக்காரணமே தவிர வேறல்ல. எச்சரிக்கையுடன் தகுதியான தகுதி முறையை விதிக்க .வேண்டியுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 16

இயக்குநரே பில்களை முதலானவற்றில கையெழுத்திட வேண்டிய நிலை இருக்கிறது என்பது சரியல்ல; மூன்று உதவி இயக்குநர்களும், ஒரு முது நிலை கணக்கு அலுவலரும் 1981 ஜூலையிலிருந்து பணியாற்றுகிறார்கள், (குறுக்கீடு).

**திரு அ. ரகுமான்கான் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற ''நியூ காலேஜ்'' கடந்த இரண்டு ஆண்டு காலமாக மூடி கிடக்கிறது. எப்போது திறக்கப்படும் என்பது தெரியாமல் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மையோர் நடத்துகின்ற அந்த கல்லூரி மூடப்பட்டிருக்கிறதால் மாணவர்களின் எதிர்காலம் மிகவும் பாதிக்கப்படும். அதை திறப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு கிடைத்திருக்கிற தகவல்படி நேற்றைய தினம் அது திறக்கப்பட்டிருக்கவேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் சென்ட்ரல் கிச்சனை குறித்து ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 மத்திய சமையல் கூடங்கள் கட்டப்பெற்று வருகின்றன. இந்த சூன் மாதத்திலே முடிக்கப்பெற்று செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது, தர்மபுரியிலேதான் சமையற்கூடங்கள் கட்டப்படவில்லை. மத்திய அரசு அதற்கு அனுமதி தரவில்லை.

மூன்றாவது வரைக்கும் சிறு குழந்தைகளுக்கு நாம் வெற்றி. தோல்வி என்ற அடிப்படையிலே, பெயில் ஆகிவிட்டார்கள் என்ற நிலைமை இருக்ககூடாது என்று மாறுதல் செய்திருக்கிறோம். தேர்வு உண்டு, பரிட்சை உண்டு, ஆனால் டிடென்ஷன் கிடையாது. எல்லோரும் பரிட்சைகளை எழுத வேண்டும். ஆனால் அவர்கள் பெயில் ஆகமாட்டார்கள் என்ற நிலமையை தான் சிறு குழந்தைகளுக்கு உருவாக்கியிருக்கிறோம்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவா அவர்களே, பரிட்சை எழுத வேண்டும் ஆனால் வெற்றி தோல்வி என்று கிடையாது என்று சொன்னார்கள். தேர்வே எழுதவில்லை என்றால் அந்த மாணவனுக்கு வெற்றியா தோல்வியா ?

**மாண்புமிகு திரு செ அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பரிட்சை எழுத வேண்டும். எழுதாவிட்டால் மேல் வகுப்புக்கு போக முடியாது. சயன்ஸ் எக்சிபிஷனை பற்றி கருதது தெரிவித்தார்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் விஞ்ஞானக்



1982 மார்ச் 16] [திரு. செ. அரங்கநாயகம்]

கண்காட்சி உண்டு. அவற்றில் சிறந்தவை மாநில அளவில் என்று ஒவ்வொரு ஆண்டும் உழைத்துக்கொண்டிருக்கிறோம். தமிழகக் கல்வி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அது இனி அனுப்பப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு நமக்கு 100 கோடி தேவைப்படுகிறது என்ற நிலையை எடுத்து கூறியிருக்கிறோம். எல்.ஐ.சி. நிறுவனத்திடம் கிடைக்குமா என்று முயற்சி செய்ததில் மத்தியில் ஆட்சியில் இருக்கிறவர்கள் இந்த ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலே எந்த எந்தமுறையிலே பணத்தை செலவு செய்யவேண்டுமென்று சொல்லி. முடிவு செய்து விட்டபடியால் பணம் தரக்கூடிய நிலையிலே எல்.ஐ.சி. நிறுவனம் இல்லை. தேசீய வங்கிகளை சந்தித்து அவர்களுடைய உதவியை கேட்டபோது அவர்கள் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். நாம் இப்போது எந்த வட்டி விகிதம் வைக்கலாம் என்பது பற்றி இப்போது ரிசர்வ் வங்கியுடன் பேசிக்கொண்டிருக்கிறோம்.

பாடப்புத்தகத்தில் பகவத்சிங் மற்றும் பாலகங்காதர திலகர் போன்ற தேசியத் தலைவர்களின வாழ்க்கை வரலாறுகளை பாடப் பகுதிகளிலேயிருந்து நீக்கப்பட்டதைப்பற்றி ஒரு புகார் சொன்னார்கள். அவர்கள் பாடத்தைப் படிக்கக் கூடாது என்பதல்ல நம்முடைய நோக்கம். ஆகவே இருக்கின்ற பாடங்களில் சுமையைக் குறைக்கவேணடுமென்று முயற்சியை நாம் எடுக்கிறபோது இதேபோன்ற தலைவர்களுடைய பாடங்கள், வேறு தலைவர்களுடைய பாடங்கள் இருக்கின்ற காரணத்தினாலே நீக்கியிருக்கிறோம். அப்படிப் பார்க்கிறபோது சுப்பிரமணிய சிவா, காந்தியடிகள், நேரு, படேல் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் பாடநூல்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆகவே அவற்றைப் படிக்கின்ற குழந்தைகள் மேலும் ஆர்வம் தூண்டப்பெற்று அவர்களாகவே மற்றத் தலைவர்களைப்பற்றி படித்துக்கொள்ள வேண்டுமே தவிர நாமே எல்லா தலைவர்களைப்பற்றிய பாடங்களைப் பாடப்புத்தகங்களில் இடம்பெற வேணடுமென்று விரும்புவோமானால் பிறகு பாடப் புத்தகம் தலைவர்களைப்பற்றித்தான் இருக்குமே தவிர வேறு எந்தப்பொருளைப் பற்றியும் இருக்காது.

(இரவு 7·50)

கலைக்கல்லூரி முதல்வர்களுக்கு இப்போது ரூ. 1,200—1,900 என்ற விகிதத்தில ஊதியம் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி வழங்கப்படுகிறது, முதல்வர்களுக்கு ரூ. 250 சிறப்பூதியம் வழங்க அரசு ஆணையிட்டது. ஆனால் தங்களது ஊதிய விகிதத்தை உயர்த்தவேண்டுமென்று முதல்வர்கள் கோரியிருந்ததால் அதனைப் பரிசீலிக்க வேண்டி சிறப்பூதியம் தராது நிறுத்திவைக்கப்பட்டது. இதுபற்றிப் பரிசீலிக்க ஒரு நபர்க் குழு மாணவர் எண்ணிக்கை 750-க்கு மேல் உள்ள அல்லது முதுகலைப்படிப்பு பயில்விக்கும் கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 150-ம் மாணவர் எண்ணிக்கை 750-க்கு கீழுள்ள கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 100 ம் சிறப்பூதியம் தரப் பரிந்துரைத்தது. இது அரசின தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

இங்கே சிறுபான்மை இனத்தவரால் நடத்தப்படுகிற கல்வி நிறுவனங்கள் பற்றி பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டன.

இம்மாநிலத்தில் உள்ள அரசுமானியம் பெறும் அங்கீகரிக்கப் பட்ட தனியார் பள்ளிகளின் நிர்வாக மேற்பாட்டிற்காகவும் அவைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பிற் காகவும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் அதன் கீழ் விதிகள் இயற் றப்பட்டன. இந்தச் சட்டத்தினையும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் தங்கள் பள்ளிகளுக்குப் பொருந்தாது எனக் கோரி 1,300க்கும் மேற்பட்ட ரிட் மனுக்களை சென்னை உயர்நீதி மன்றத்திலே தனியார் துறை நிர்வாகங்கள் கொடுத்தன. இதனை பரிசீலித்த உயர்நீதி மன்றம் தனது 17—12—1975 நாளிட்ட தீர்ப்பில் மேற்கூறிய சட்டம் மற்றும் அதன் விதிகளில் உள்ள பெரும்பான்மையான பிரிவுகளை மொழி மற்றும் மத அடிப் படையிலான சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறு வனங்களுக்குப் பொருந்தாது எனக் கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பின் காரணமாக அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் என்ற பதத்திற்கு சட்ட ரீதியான விளக்கம் தேவைப்படுவதாலும் பள்ளிகளின் முறையான நிர்வாகத்தைக் கருதி ஆணைகள் பிறப்பிக்க அரசு தன் அதிகாரத்தை உபயோகப் படுத்தும்போது அரசிற்கு எந்த அளவு அதிகாரம் உண்டு என்றும் எப்போது உத்திரவுகள் அரசியமைப்புச் சட்டத் தில் உள்ள சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரண்பாடக, கருத இடமுண்டு போன்ற அடிப் படை சட்ட விளக்கங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் விளக்கங் கள் கோருவதற்காக உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய இவ்வரசு தீர்மானித்து உச்ச நீதிமன்றத்தின் தனிமுன் அனுமதி பெற்று 86 மேல் முறையீடுகள் உச்ச நீதிமன்றத்தில்



1979 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன உயர்நீதி மன்றத்தின் 17—12—1975 நாளிட்ட தீர்ப்பிற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரும் மனு ஒன்றும் உச்ச நீதி மன்றத்தில் 1980 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன. வழக்குகளின் முக்கியத்துவம் கருதி இவைகளின் விசாரணையை துரிதப் படுத்துவதற்கு ஒரு மனுவும் எக்ஸ்பெடிஷன் பெட்டிஷன் பதிவு செய்வதற்கு அரசு முடிவெடுத்து மனு தயாரிக்குமாறு சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். விரைவில் மனு தயாரிக்கப்பட்டு உச்ச நீதிமன்ற திலே தாக்கல் செய்யப்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் குமாரபாளையம் எஸ்.எஸ். மாரி செட்டி பல்தொழில் பயிலகம் பற்றிக் குறிப்பிட்டார்கள் 17—7—1979 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 1236-ல் எஸ். எஸ். மாரி செட்டியார் அறநிலையை நிறுவனத்தினர் வேண்டுகோளுக்கிணங்க குமாரபாளையத்தில் ஒரு பல்தொழில் பயிற்சிப் பயிலகம் அமைக்க அரசு ஆணை வெளியிட்டது. இந்த ஆணை வெளியிட்ட நாளன்று அமுலில் உள்ள அரசு நிபந்தனை களின்படி இந்த பல்தொழில் பயிலகம் அமைக்கும் மூலதனச் செலவில் 1/3 பங்கை அரசும் மற்ற 2 பங்கை அந்த அறக் கட்டளையும் ஏற்கவேண்டும் என்று உத்திரவிடப் பட்டது. இந்த அறக்கட்டளை 1977 ஆம் ஆண்டிலேயே தாங்கள் புதிய பல்தொழில் பயிலகம் ஆரம்பிக்க அரசுக்கு விண்ணப்பத்திருந்தனர் என்றும், அதனால் அந்த ஆண்டில் அமலிலிருந்த நிபந்தனைகளின்படி அரசு மூலதனச் செலவில் 75 விழுக்காடு ஏற்கவேண்டுமென்றும் இதனை அரசு ஏற்கா விட்டால் இந்தப் பல்தொழில் பயிலகம் திறக்க அறக் கட்டளையினால் முடியாத காரியம் என்று கூறினர். அறக்கட்டளையின் வேண்டுகோள் நியாயமாகப் பட்டதால் அரசு உத்தரவை மாற்றி ஆணை வெளியிட்டது. பெரியார் நூற்றாண்டு விழா பல்தொழில் பயிலகம் அறக்கட்டளையின ரால் 20—1—1980 இல் அதாவது 66 2/3 : 33 1/3 விழுக் காடு பங்கு முறை அமுலில் வந்த பிறகுதான் பல்தொழில் பயிலகத்தை அமைக்க அரசின் அனுமதி கோரினர். எனவே அவர்களுக்குப் புதிய நிபந்தனைகளின்கீழ் அனுமதி வழங்கப் பட்டது.

இது பெரியார் நூற்றாண்டு விழா பாலிடெக்னிக் மட்டுமல்ல, அதற்குப்பிறகு திறக்கப்பட்ட ஏறக்குறைய ஏழெட்டு பயிலகங் களுக்கும் இதே முறையைதான் நாம் தந்திருக்கிறோம். இவர் களுக்குத் தரக்கூடாது என்பது அல்ல நம்முடைய கருத்து. பழைய நிபந்தனைகளின்படி அவர்களுக்குத் தந்திருக்கிறோம். அதைப் போல இவர்களுக்கு நாம் தர வேண்டுமென்கின்ற முயற்சியிலே ஈடுபடுவோமேயானால் புதிய பாலிடெக்னிக்குகளைத் திறப்பதில் நம்முடைய முயற்சிகள் குந்தகப்படும்.

ஆகவே, எந்தப் பாலிடெக்னிக்கைத் திறந்தாலும் நான் ஒன்றை இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்: தனியார் துறையினர் பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள். கல்லூரிகளை நடத்துகிறார்கள்; பாலிடெக்னிக், என்ஜினியரிங் கல்லூரிகளை நடத்துகிறார்கள். ஆனால் தனியார் துறையினர் கல்லூரி நடத்துவதற்கும், பாலிடெக்னிக் நடத்துவதற்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது. பாலிடெக்னிக் நடத்துகின்றவர்கள் ஒரு கவர்னிங் கவுன்சிலை அமைத்துக்கொள்ளவேண்டும். அதிலே மெஜாரிட்டி உறுப்பினர் அரசாங்கத்தினுடைய சார்பானவர்களாகத்தான் இருப்பார்கள். அதுமட்டுமல்லாது அங்கே அனுமதிக்கப்படுகின்றவர்கள். மாணவர்கள் மார்க்கின் அடிப்படையிலேதான் அனுமதிக்கப்பட வேண்டும். 10 சதவீதம்தான் அந்த மேனேஜ்மென்ட் கோட்டாவாகும். அதைத்தான் அவர்கள் இஷ்டப்படி அனுமதிக்கொள்ளலாமே தவிர மற்ற 90 சதவீதம் மாணவர்களை அவர்கள் இஷ்டப்படி நியமித்துக்கொள்ள முடியாது. ஆசிரியர்களை இஷ்டப்படி நியமித்துக் கொள்ள முடியாது. ஏறக்குறைய ஒரு பாலிடெக்னிக் நடத்துவது அரசாங்கத்தின் சார்பாகப் பாலிடெக்னிக் நடத்துவதாகத்தான் இருக்குமே தவிர வேறல்ல, ஆகவேதான் பாலிடெக்னிக்கிற்கு அனுமதி தருவதிலேயும், அவர்களுக்குப் பணம் தருவதிலேயும் நாமாக விரும்பி எந்தத் தடையையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு அதிகமான பயிலகங்களை ஆரம்பிக்க நாம் உதவி செய்ய வேண்டுமென்று கருதியிருக்கின்ற காரணத்தினால்தான் இந்தச் சங்கடங்கள் வருகின்றனவே தவிர வேறல்ல என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : ஒரு கொள்கை அரசின் சார்பில் கடைப்பிடிக்கப்படும்பொழுது நடைமுறைக்கு வந்த பிறகு எந்தக் கொள்கை கடைப்பிடிக்கப் படுகிறதோ அந்த அடிப்படையிலேதான் சலுகை அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியில்லாமல் தனிப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம், பெரியாரின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கின்ற நிறுவனத்திற்கு இல்லாமல் இன்னொரு நிறுவனத்திற்கு மாத்திரம் அரசு 75 சதவீதம் என்று ஏற்றுக்கொண்டது எப்படி முறையாகும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் அனுமதி கேட்டபொழுது இருந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேநான் இப்பொழுது நாம் தந்திருக்கிறோம். அனுமதி கொடுக்கின்ற நேரத்தில் அந்த நிபந்தனைகள் இல்லையே தவிர அவர்கள் அனுமதி கேட்டபொழுது இருந்த நிபந்தனைகளின்படிதான் இப்பொழுது அனுமதி தந்திருக்கிறோம்.



ஆனால் நான் ஒன்றைச் சொல்லிக் கொளள விரும்புகிறேன். மாரிச் செட்டியார் அறக்கட்டளையால் நடைபெறுகின்ற பாலிடெக்னிக்கிற்கு எதிராக பெரியார் அறக்கட்டளை நிறுவனத்தை கொண்டு வந்து நிறுத்துவது சரியானதல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. காரணம் இன்னுமொரு 9 பாலிடெக்னிக்குகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம்; ஆரம்பிப்பதற்கு உதவி செய்திருக்கிறோம். ஆகவே, 10 பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது நாம் ஒன்றுக்குத் செய்த உதவியை அதோடு நாம் நிறுத்துக்கொண்டதால் இப்பொழுது 10 ஆரம்பிப்பதற்கான ஒரு நிதியைத் தரக்கூடிய ஒரு சக்தி நமக்கிருக்கிறது. ஆகவே, மறுபடி அவர்களுக்குத்தான் சலுகை என்று நீட்டிக்க ஆரம்பிப்போமேயானால் அதிகமான பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பிருக்காது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

டாக்டர் மு. கருணாநிதி : மற்றும் 9 நிறுவனங்களுக்கு இப்பொழுதுள்ள குறிப்பைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த மாரிச் செட்டியாருடைய பாலிடெக்னிக்கிற்குப் போடப்படுட்ள்ள உத்தரவில் இது முன் மாதிரியாக ஆகக்கூடாது என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது ஒரேயொரு நிறுவனத்திற்கு மாத்திரம்தான் அரசின் சார்பாக 75 சதவீதம் மற்ற நிறுவனங்களுக்கு இல்லையென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் பெரியாரையும் அல்லது மாரிச் செட்டியாரையும் நான் மோத விடவில்லை. பல நிறுவனங்களுக்கு அல்லாத ஒரு சலுகை இதற்கு மாத்திரம் ஏன் அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைக்வரவர்களே, இதற்கு மாத்திரம் என்பதிலேயும் ஒரு தவறு இருக்கிறது. அதுவரையிலும் கொடுக்கப்பட்டிருந்த அதுவரையியிலேயும் ஆரம்பிக்கப்பட்ட எல்லாப் பயிலகங்களுக்கும் இதைத் தந்திருக்கிறோம். மாரிச்செட்டியார் அறக்கட்டளையின் சார்பாக ஆரம்பிக்கப்பட்ட பயிலகம் கடைசியாகப் போய்ச் சேர்ந்திருக்கின்றது. ஆகவே, அது கடைசியாக இருக்க வேண்டும் என்பதுதான் உத்தரவின் பொருளே தவிர மற்றல்ல.

மற்றபடி மற்றப் பயிலகங்களுக்குக் தனியாகக் கொடுக்கக்கூடாது என்கிற கருத்தும் அல்ல; அவர்கள் அரசை மீறிச் செய்யக்கூடிய நிலையிலே எந்தப் பயிலகங்களும் இல்லை. ஆகவே இவர்களுக்கு ஒன்று, அவர்களுக்கு ஒன்று செய்ய வேண்டி ஒரு எண்ணம் இல்லை; மற்றக் கல்லூரிகளுக்குச் சொல்வதைப்போல இதற்குச் சொல்ல முடியாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். யார் பாலிடெக்னிக் ஆரம்பித்தாலும் அதனுடைய முழுக் கட்டுப்பாடும் அரசின் கையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 8·00)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த மாரிச் செட்டியார் டிரஸ்ட் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிககப் போகிறோம். அனுமதி தாருங்கள் என்று எந்தத் தேதியில் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார்கள் ? அந்தத் தேதியிலே அரசு விதித்த நிபந்தனைகள் என்ன ? அதற்குப் பிறகு எந்தத் தேதியிலிருந்து புதிதாக இந்த நிபந்தனைகள் அமுலுக்கு வந்தன என்பதை அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைத்தான் நான் ஆரம்பித்திலே படித்துக் காட்டினேன். 1977 ஆம் ஆண்டிலேயே இந்த விண்ணப்பம் போட்டிருககிறார்கள். அப்பொழுதிருந்த அந்தச் சலுகைகளைத்தான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

திரு துரைமுருகன் : அதுதான் நான் கேட்கிறேன், அவர்கள் 1977 ஆம் ஆண்டிலே விண்ணப்பித்தார்கள் என்று அமைச்சர் சொல்கிறார், 1977 ஆம் ஆண்டிலே என்ன, என்ன நிபந்தனைகளை அரசு விதித்தது / எப்பொழுது மாற்றப்பட்டது ? அந்தத் தேதியை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் விண்ணப்பித்தபொழுது இருந்த நிபந்தனை 75 விழுக்காடு மூலதனச் செலவை அரசு ஏற்க வேண்டும், 25 விழுக்காடு அந்தத் தனியார் துறையிடம் இருக்கவேண்டும். அதுதான் முதலிலே இருந்தது. அதுவரைக்கும் ஆரம்பிக்கப்பட்ட அந்த பாலிடெக்னிக்குகளுக்கு அந்தச் சலுகைகள் தரப்பட்டன.

திரு. துரைமுருகன் : நான் அமைச்சரிடத்திலே தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே கேட்கிறேன். 1977–ஆம் ஆண்டு மாரிச்செட்டியார் என்ற பெயராலே பாலிடெக்னிக் ஆரம்பிக்க விண்ணப்பித்திருக்கிறார்கள். 1977–ஆம் ஆண்டு என்று சொல்கிறார்களே, எந்த தேதியிலே அவர்கள் அப்ளை செய்தார்கள். என்பதை அறிவியுஙகள். பிறகு இந்த நியூ ரூல் எப்போது அமுல் ஆனது என்பதை அறிவியுஙகள். அதற்கு இடைப்பட்ட காலத்தில் எப்போது மாற்றப்பட்டது என்பதை அறிவியுங்கள்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : 1977ஆம் ஆண்டு விண்ணப்பித்தார்கள் என்ற விபரம்தான் இருக்கிறது. அதற்குப் பிறகு, மாற்றப்பட்டதற்குப் பிறகு, 20–1–1980 தான் பெரியார் நூற்றாண்டு விழாப் பயிலகத்தினர் விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்த விபரம்தான் இஙகே



தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து கொள்ள விரும்பினால் பின்னர் சட்டசபையிலே கூறுவேன்.

திரு. துரைமுருகன் : அதைத்தான் நான் சொன்னேன். முதலில் அவர்கள் விண்ணப்பித்தார்கள். விண்ணப்பித்ததற்குப் பிறகு, நடைமுறையில் இருக்கிற சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு 66 சதவீதம் 33 சதவீதம் ஏற்றுக்கொண்டுதான் நீங்கள் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தரவு போடுகிறீர்கள். அதற்குப் பிறகு மறுபடியும் அந்த உத்தரவு போட்டதற்குப் பிறகு, அந்த எஸ்.எஸ் மாரிசாமி செட்டியார்—அந்த நிறுவனத்தினர் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள். வேண்டுகோள் விட்டதற்குப் பிறகுதான் இந்த அரசு அந்த மனுவின் மீது மறுபரிசீலனை செய்து பின்னர் ஒரு ஆர்டரை நீங்கள் பாஸ் செய்கிறீர்கள். அப்பொழுதுதான் தெரிவிக்கிறார்கள், நாங்கள் 75 சதவீதம் ஏற்றுக்கொள்கிறோம், 25 சதவீதம் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். ஆகவே, இந்த முறை ஏன் மற்றவர்களுக்கு வரவில்லை. இதற்கிடையிலே என்ன அடிப்படையில்.............

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நானே விளக்கமாகச் சொன்னால் தவறு வந்துவிடுமோ என்றுதான் எழுதிப் படித்துக் கொண்டிருக்கிறேன். 1977–ல் அப்பொழுது அந்தச் சலுகை இருந்த காலத்திலே 75 சதவீதம் 25 சதவீதம் இருந்தபொழுது அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, 66 சதவீதம் அவர்களும், 33 சதவீதம் அரசும் என்று உத்தரவு வந்ததற்குப் பிறகுதான் அவர்களுக்கு அனுமதி தரப்படுகிறது. அந்த அனுமதி தருகிறபொழுது அப்பொழுது நடைமுறையிலிருந்த அந்தச் சலுகையை சொல்லி நாம் தருகிறோம். ஆனால், அவர்கள் நம்மிடத்திலே கேட்டது நாங்கள் விண்ணப்பிக்கும் போது இருந்த சலுகைகள் எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டார்கள், அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பெரியார் நூற்றாண்டு விழா பாலிடெக்னிக்கும் மற்ற 9 பாலிடெக்னிக்களும் அந்த 66 சதவீதம் 33 சதவீதம் என்ற விகிதம் வந்ததற்குப் பிறகு, விண்ணப்பித்தார்கள். ஆகவே, அவர்களுக்குத் தர முடியவில்லை. இதுதான் இருக்கிற விபரம்.

டாக்டர் மு. கருணாநிதி : அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல் அதில் இல்லை. அதாவது 17–7–1979 போடப்பட்டுள்ள ஜி.ஓ. நெம்பர் 1236–ல்

. . . . Total non-recurring cost of opening of the Institute should be shared between the private Management and the Government in the ratio of 66-2/3 per cent and 33-1/3 per cent respectively.

என்றுதானிருக்கிறது. அதற்குப் பிறகுதான் மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 1977 என்கிற அந்த அடிப்படையிலே போடப்பட்டிருந்தால் 75 சதவீதம் சர்க்கார் தரும் என்று போட்டிருக்கலாம். முதலில் அவர்கள் எப்படி பெரியார் டிரஸ்டுக்கும் மற்றவர்களுக்கும் போட்டார்களோ அதைப் போல 66 2/3 சதவீதம் என்றும் 33 1/3 சதவீதம் என்றும் போட்டுவிட்டு பிறகு சர்க்கார் 75 சதவீகிதம் தருவதாக பிறகு தான் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன், 1977—லே தேதி கிடைத்துவிட்டது-- 16–9–1977—லே அவர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அப்போது 75 சதவிகிதம் அரசும் 25 சதவீதம் அந்தத் தனியார் அறக்கட்டளை என்கிற அந்த நிபந்தனை இருக்கிறது. மறுபடி 3–3–78—ல் அந்த நிபந்தனையை நாம் மாற்றுகிறோம். 66 2/3சதவிகிதம் தனியார் அறக்கட்டளை என்றும் 33 1/3 சதவீதம் அரசு என்றும் நாம் மாற்றுகிறோம். அவர்கள் 16–9–1977—லே விண்ணப்பிக்கிறார்கள். 1978—க்குப் பிறகு தான் அனுமதி தரப்படுகிறது. ஆகவே, 1978க்குப் பிறகு அனுமதி தரப்படுகிறது காரணத்தால் அப்பொழுது இருக்கிற அந்த உத்தரவின்படி 66:33 என்கிற அந்தச் சலுகையைத் தான் நாம் தரமுடியும் என்று சொல்கிறோம். ஆனால் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால் நாங்கள் விண்ணப்பிக்கின்ற போது இருந்த அந்த சலுகையை எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் விண்ணப்பிக்கின்ற போது 75:25 சதவீதம் தான் இருந்தது. ஆகவே அதை நாம் தந்திருக்கிறோம். இதிலே எந்த வித மான குழப்பத்திற்கும் இடமில்லை. மிகத் தெளிவாக நான் இங்கே சொல்லி இருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு சட்டம் இருக்கிறது. அந்த நேரத்திலே அவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். இடையிலே அந்தச் சட்டம் மாற்றப்படுகிறது. மாற்றப்பட்டு அமலுக்கு வந்து மற்றவர்களுக்கு எல்லாம் புதிய சட்டத்தின் அடிப்படையிலே நியாயங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் முன்னாலேயே நாங்கள் போட்டிருக்கிறோம். எனவே அந்த அடிப்படையில்தான் எங்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்று கேட்பது எந்த நீதியினுடைய நேச்சரல் ஜஸ்டிஸ் ஆகாது. ஆனால் வலிந்துபோய் அந்தச் சலுகையை ரெட்ராஸ்பெக்டிவ்





எபக்ட் கொடுத்து பழைய உத்தரவை அமல் செய்வோம் என்று சொல்வது வளைந்து, நெளிந்து யாரோ சிலருக்கு சலுகைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த சர்க்கார் திட்டம் இட்டு நடத்தி இருக்கின்றது. * * தவிர, இதிலே குற்றச்சாட்டு உள்ளதே தவிர, அமைச்சர் சொல்வது போல ஏதோ அவர்கள் கேட்டார்கள், நாங்கள் கொடுத்தோம் என்பதிலே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்லுகின்ற நேரம் அல்ல இது. * * என்ற வார்த்தையைத் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, * * என்ற வார்த்தையை நீக்குவதை நானும் ஆதரிக்கிறேன். ஆனால் நான் அமைச்சரிடம் தெரிந்து கொள்ள விரும்புவது அல்லது அரசிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, இனிமேல் இப்படிப்பட்ட எந்த சலுகைகளாக இருந்தாலும் விண்ணப்பம் போட்ட தேதியிலே உள்ள நிலையைத்தான் வைத்து அந்த அடிப்படையிலே இந்த சலுகைகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகால் நிர்வாகத்தைப் பற்றி சில செய்திகள் இந்தியன் எக்ஸ்பிரஸ், பிலிட்ஸ் போன்ற பத்திரிகைகளிலே வந்தது. அதைப்பற்றி விரைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதி, அதைப்பற்றிய இந்த விபரங்களைச் சொல்கிறேன்.

பல்வேறு ஓலைச்சுவடிகளும் விலைமதிப்பில்லாப் புத்தகங்களும் ஓவியங்களும், கலைப்பொருட்களும் காணாமல் போயுள்ளன. இது செய்தி. மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது நிர்வாகத்தில் இருப்பவரிடம் இருந்து வந்த பதில் என்னவென்றால், 1979, 1981 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இருப்பு கணக்கு சரிபார்த்தலின்படி 313 நூல்கள் காணாமல் போயிருந்தன. அவைகளில் 154 திருப்பிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவைகளை (159) திருப்பக் கண்டுபிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இன்னொரு செய்தி என்னவென்றால், புத்தகங்கள் இரவலாக வழங்கப்படக்கூடாது என்ற விதியையும் மீறி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட 17,18, 19 ஆம் நூற்றாண்டு புத்தகங்களை எடுத்துச் சென்றுவிட்டனர்.

இதற்கான விளக்கம் என்னவென்றால், இச்செய்தி சரியல்ல. மன்னர் சரபோஜியினால் சேகரிக்கப்பட்ட பழைய புத்தகங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கோ, நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கோ கொடுக்கப்படுவதில்லை. சமீப கால புத்தகங்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

இன்னொரு செய்தி; இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் எழுப்பினார். நாராயண தீர்த்தரால் எழுதப்பட்ட பக்தி 'பீமாம்ச பாஷ்யம்' என்ற பனை ஓலைச் சுவடியும், இராமாயண கையெழுத்துப் பிரதியின் மேல் அட்டையில் உள்ள இரண்டு அரும்பெருங் காட்சிப் படங்களும் காணாமல் போயுள்ளன.

இதற்கு அவர்கள் தந்துள்ள விவரம் என்னவென்றால், பத்தி பீமாம்ச பாஷ்யம் என்ற காகிதக் கையெழுத்துப் பிரதி (13 ஏடுகள்) 1979—ம் ஆண்டிற்கு முன்பே காணாமல் போயுள்ளது. மற்றக் கட்டுகளோடு கலந்து இருக்க வாய்ப்புள்ளதால், தேடிப்பார்க்க முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளன. இராமாயண கையெழுத்துப் பிரதியின் மேலட்டைக் காட்சிப் படங்கள் காணாமல் போகவில்லை.

(இரவு 8.10)

இன்னொரு செய்தி, இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரைப் பதிப்பில் செய்தி வெளிவந்த பின்பே மராத்திய மன்னர்களின் படங்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன என்று சொன்னார்கள். அது சரியல்ல. செய்தி வெளியாகும் முன்பே அவை பாதுகாப்பான நிலையில்தான் வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பை முன்னிட்டு வெளியார் பார்வைக்குப் வைக்கப் படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு செய்தி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மராத்திய கலைப்பொருளான ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பாலகிருஷ்ணா சிற்பமும் இதர இரண்டு சிலைகளும் காணாமல் போய்விட்டன என்பது. மொத்தம் மூன்று உலோகச் சிலைகள். அவை சரஸ்வதி மகால் நூலகத்தைச் சார்ந்தவை அல்ல. அருகிலுள்ள கலைக்கூடத்தைச் சார்ந்தவையாகும். கலைக்கூட ஊழியர்கள் அப்பொழுது நூலக உடனாளராக பணியாற்றிய திரு. சற்குணம் என்பவரிடம்



அவைகளை கொடுத்து வைத்திருந்தனர். அவைகளுள் ஒன்று காணாமல் போய்விட்டது. அதைக்குறித்து 1971 ஆம் ஆண்டில் காவல் துறையில் புகார் செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதைக் கண்டுபிடிக்க இயலவில்லை என்று காவல் துறையினர் 1972 மார்ச் மாதம் தெரிவித்தனர். துறை நடவடிக்கை எடுத்து சம்மந்தப்பட்ட ஊழியர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மீதி உள்ள இரண்டு உலோகச் சிலைகளும் கலைக்கூடத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1977 ஆம் ஆண்டு பாலகிருஷ்ணா ஓவியம் திருட்டுபோனது. இது குறித்து உள்ளூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. திருட்டை கண்டுபிடிக்க இயலவில்லை என்று 29—12—77-ல் காவல் துறை தெரிவித்தது என்ற பதிலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தி, 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கலை நுட்பம் பொருந்திய வெண்கலக் குத்துவிளக்குக்கு மாற்றாக தற்போது சமீப கால குத்துவிளக்கு வைக்கப்பட்டுள்ளது என்பது.

நூலகத்தில் கலை நுட்பம் பொருந்திய குத்துவிளக்கு ஏதும் இல்லை; திருட்டு ஏதும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலக அச்சகம் தவறாக பயன்படுத்தப்படுகிறது. 1971 முதல் 1981 முடிய 160 தணிக்கைத் தடைகளுக்குப் பதில் அளிக்கப்படவில்லை என்பது இன்னொரு செய்தி.

அதற்கு அச்சகம் நூலகப் பதிப்புகளை மட்டும் வெளியிட பயன்படுத்தப்படுகிறது; 1971-72 முதல் 1979-80 வரையிலான 130 தணிக்கைத் தடைகளில் 111 தடைகள் நீக்கப்பட்டுள்ளன. 1981ஆம் ஆண்டைச் சேர்ந்த 28 தடைகளுக்கு பதில் தயாராகிக் கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு செய்தியையும் சொன்னார்கள். சரஸ்வதி மகால் நூலகம் தேசிய நூலகமாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக ஒழுங்கீனங்கள் குறித்து புகார்கள் வந்தமையால் மானியங்களை முறையாகப் பயன்படுத்த மத்திய அரசு ஒரு குழுவை அனுப்பியது என்ற செய்தி வந்தது.

அதற்கு என்னுடைய பதில்——மத்திய அரசு அதுபோல குழு ஏதும் நியமிக்கவில்லை. [illegible] அரசே ஒரு குழு நியமித்து பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்காக ஆலோசனைகள் வழங்குமாறு கோரியுள்ளது. தேசிய முக்கியத் [illegible] ந்த ஒரு நூலகமாக அது மத்திய அரசால் ஏற்றுக்

கொள்ளப்படவில்லை என்றாலும் அதிகப்படியான மானியம் கிடைக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் நாம் இப்போது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் கீழே அதைக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், மன்னார்குடி அரசாங்க கல்லூரியில் மாணவர் தகராறு—தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் பிற்பட்ட மாணவர்களுக்கும் தகராறு ஏற்பட்டதன் காரணமாக அந்தக் கல்லூரி விடுதியை நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரிடம் இருந்து இன்றைக்கு கிடைத்திருக்கிற தகவல்படி ஏப்ரல் மாதத்திற்குப் பிறகுதான் அந்த விடுதி திறக்கப்படும் என்று தெரிகிறது. தவறு செய்த மாணவர்கள் யாராக இருந்தாலும், அது தாழ்த்தப்பட்ட மாணவராக இருந்தாலும் அல்லது பிற்பட்ட வகுப்பு மாணவராக இருந்தாலும், அவர்களை நீக்கிவிடுங்கள். அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. அவர்களுக்காக மற்ற மாணவர்களும் கஷ்டப்பட்ட வேண்டியதில்லை. தவறு செய்தவர்களை நீக்கிவிட்டு மற்ற மாணவர்கள் முன்னேற்றத்திற்கு நம்முடைய அமைச்சரவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் இடையிலே ஒரு கருத்தைச் சொன்னாலும் இப்போது கல்லூரி மாணவர்களுக்கு இருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சனை என்ற காரணத்தால் நான் ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கல்லூரிகளில் இருந்துவருகிற போக்கெல்லாம் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களில் ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒரு பிரிவாகவும் மற்ற மாணவர்கள் ஒரு பிரிவாகவும் இருந்து ஜாதி உணர்வுகளுக்கு ஆட்பட்டு இப்படிப்பட்ட தகராறுகள் நடைபெறுகின்றன என்று பல்வேறு கல்லூரிகளில் இருந்து செய்தி வந்திருக்கிறது. நாம் இந்த மாமன்றத்திலே கூட அரசியல் கட்சிகள் மாணவர்கள் பிரச்சனைகளில் தலையிடாமல் இருந்தால் நல்லது; அவர்களுடைய தலையீட்டால்தான் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன என்ற கருத்தைச் சொல்லிவந்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நடைமுறையைப் பார்க்கும்போது அரசியல் கட்சிகளின் ஆதிக்கம், செல்வாக்கு மாணவர்கள் மத்தியிலே குறைந்திருக்கிறதா இல்லையா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். ஆக இன்றைக்கு இந்த பிரச்சனை மன்னார்குடி கல்லூரியில மட்டும் அல்ல: கிண்டி தொழில் நுட்பக் கல்லூரியில் கூட இந்தப் பிரச்சனை இருக்கிறது. இந்த உணர்வுகளை நாம் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜாதி அடிப்படையிலே அந்த உணர்வுகள் எந்தப் பிரிவு மாணவர் உள்ளத்திலேயேயும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை நம்மைப்போன்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



இது கட்சிக்கு அப்பாற்பட்ட ஒன்றுதான். அந்த அடிப்படையில்தான் மாணவர்கள் வளர்க்கப்படவேண்டும். முற்போக்கான கருத்துக்கள், சமுதாய ஒற்றுமைக்கான கருத்துக்கள், தேசிய ஒருமைப்பாட்டுக்கான கருத்துக்கள், நல்ல சமுதாய வடிவு தரக்கூடிய கருத்துக்கள் மாணவர்கள் மத்தியிலே ஆக்கமும் ஊக்கமும் பெறுவதற்கான முயற்சியிலே ஈடுபடவேண்டும். ஆகவேதான் நாம் இத்தகைய மாணவர்கள் பிரச்சினையை பொறுத்தவரையில் எல்லா கட்சியினரையும் கூப்பிட்டு அவர்களுடைய கருத்துக்களை கேட்டு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு இரண்டு கூட்டங்களை நடத்தி நாம் சில நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாகத்தான் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆகவே இது போன்ற பிரச்சினைகளை அடுத்து வருகின்ற கூட்டங்களிலே நாம் விவாதித்து தக்க முடிவுகளை எடுப்பதன்மூலமாக நிரந்தரமான ஒரு பரிகாரத்தை கல்லூரிகளிலே ஏற்படுத்த முடியும்.

மற்றபடி மன்னார்குடி கல்லூரி மற்ற தனிப்பட்ட கல்லூரி பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலே தனியாக அதுபற்றி கவனித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி மூடப்பட்டிருக்கின்றது என்றால் கலவரம் அதிகமாக ஆகக்கூடாது, மாணவர்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற காரணத்தால்தான் கல்லூரியை மூடுகிறார்களே தவிர ஏதோ விளையாட்டாக மூடிக்கொண்டிருக்கவில்லை. ஆகவே சேதம் அல்லது பாதிப்புகள் அதிகமாக ஆவதைத் தடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் கல்லூரிகளை மூடுகிறார்கள். நிலைமை திருந்திய உடனே திறந்துவிடுவார்கள். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டம் 1973 மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள், 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளிகள் உரிய விதிகளைப் பின்பற்றாவிட்டால் அவற்றுக்கு மானியம் தர பள்ளிக் கல்வித்துறை மறுத்துவிடலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது. தனியார் கல்லூரிகள் தனியார் தொழில் நுட்ப நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் இது விரிவாக்கப்படுகிறது.

தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் ஒரு கல்லூரியிலிருந்து மற்றொருகல்லூரிக்கு முழுப்பணி உரிமைகளுடன் மாற்றுதலில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. இதே சலுகை தனியார் பள்ளிகளுக்கும் தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. இது இப்போது புதிதாக ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற சலுகையாகும்.

1—6—1981 முதல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சம்பளப் பட்டுவாடா முறையைச் சீரமைத்து 1—4—1982 முதல் அந்தந்த வட்டார உதவிக் கல்வி அதிகாரியின் பெயரில் தொடங்கப்படும் வைப்புக் கணக்கு அதாவது பெர்சனல் டெப்பாசிட்டிலிருந்து அவர்களுக்குச் சம்பளப்பட்டுவாடா செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

1980—81 முடிய தொடங்கிய 563 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கும் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூட கட்டட வகையில் இதுவரை ரூ. 10 கோடி அளவில் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1981-82-ல் தொடங்கிய அரசு மேல் நிலைப் பள்ளிகள் 67-க்கும் மொத்தம் ரூ. 1·68 கோடி செலவில் கட்டட வேலைகள் 1982-83-ல் ஏற்பளிக்கப்படும்.

அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட தளவாடங்கள் வகையில் இதுவரை ரூ. 5 கோடி செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அத்தொகைக்கும் மேலாக ரூ. 76.50 லட்சம் தளவாட வகையில்—அதாவது 1980-81-ல் தொடங்கிய 86 அரசு மேல்நிலைப் பள்ளிகளின் இரண்டாமாண்டு மேல்நிலை வகுப்புத் தேவைக்கும், 1981-82-ல் தொடங்கிய 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளின் முதலாண்டு மேல்நிலை வகுப்புத் தேவைக்கும் சேர்த்து ஏற்பளிக்கப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக ஆண்டுதோறும் புதிய உயர்நிலைப் பள்ளிகளை அரசு தொடங்கிவந்துள்ளது. எனினும் அவற்றிற்குரிய கட்டடம், மற்ற வசதிகள் தேவையான அளவுக்கு இல்லை. கட்டட வசதிக்கு மொத்தம் ரூ. 100 கோடி அளவில் தேவைப்படும். அரசு பட்ஜெட்டில் இவ்வகையில் ஆண்டுதோறும் ஓர் அளவுக்கு நிதி ஒதுக்க இயலுகிறது. 1982-83ஐ எடுத்துக்கொண்டால் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டட வேலைகளுக்கு ரூ. 62 இலட்சமும் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டட வேலைகளுக்கு ரூ. 221 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளின் கட்டடத் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய வங்கிகள் போன்றவற்றிடமிருந்து கடன் பெற்று ஒரு பெரிய திட்டத்தை மேற்கொள்ள இயலுமா என்பது ஆய்வு செய்யப்படுகிறது. கழிவறை போன்ற அடிப்படை சுகாதார வசதிகளை யாவது உடனடியாக அரசு உயர்நிலைப் பள்ளிகளில் அதுவும்



குறிப்பாக மகளிர் பள்ளிகளில் இவ்வரசின் நிதியிலிருந்து செய்து தர அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 1982-83—ல் ரூ. 1.50 கோடி செலவில் ஒரு பெரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேல்நிலைப்பள்ளிக் கல்வித் திட்டம் 1978-79 முதல் அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை ஆய்வு செய்து மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை 'மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு' இயக்குநர் மூலம் தயாரிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மேல் நிலைப்பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புக்கான அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும், தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன், மேல் நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கான 1982 சனவரியில் அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

ஆதி திராவிட மாணவ மாணவியருக்கு 8, 9, 10 வகுப்புகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1981—82-ல் 500 உயர்நிலைப் பள்ளிகளில் செயல் படுத்தப்பட்டது. அது தொடரும். மேலும் 1982-83 இல் இத்திட்டம் 300 மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கும் விரிவாக்கப்படும். பொறியியல் மருத்துவம் போன்ற கல்லூரிகளில் சேரும் மாணவர்களைப் பற்றி இது குறித்து நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன்......... (குறுக்கீடு.)

(இரவு 8-20)

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் அவர்கள் அரிசன குழந்தைகளுக்கு.............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையிலே பேசியவர்கள் தங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு விளக்கம் கேட்பதுதான் முறை. நீங்கள் மானியத்திலேயும் பேசவில்லை, ஆனால் ஒவ்வொன்றிற்கும் எழுந்து சந்தேகம் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கட்சியில் கேட்டு நீங்கள் பேசியிருக்க வேண்டும். நாளைக்கு மானியம் வருகிறது. அதிலே பேசலாம்,

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே ஆதிதிராவிட மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட சலுகைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி கொடுக்கப்படவேயில்லை; ஆதித்திராவிட நலத்துறையினாலும் கொடுக்கப்படவில்லை, கல்வித்துறையினாலும் கொடுக்கப்படவில்லை......................

**(மணியடிக்கப் பெற்றது).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சரி மாண்புமிகு உறுப்பினர் அதை எழுதித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தரமான பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுதல்; மலிவு விலைத் தாளைக்கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுதல் ஆகிய பணிகளுடன் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்காகப் பின்வரும் பணிகளையும் ஆற்றி வருகிறது.

1 முதல் 3 வகுப்புகளில் இலவசப் பாடநூல் வழங்க ஆண்டுக்கு ரூ. 67 லட்சம் செலவிடுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிட வேலைகளுக்கு 1981-82-ல் ரூ. 28 லட்சம் தந்தது. வரும் ஆண்டில் ரூ. 25 லட்சம் தரும்.

இந்நிறுவனம் தற்பொழுது தனியார் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இதற்குச் சொந்தமாகச் சென்னையில் பல மாடிக் கட்டிடம் ஒன்று கட்ட ரூ. 115 லட்சம் செலவில் இந்நிறுவனம் ஒரு திட்டத்தை மேற்கொண்டு, ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி விரைவில் திறக்கப்படும்.

ஊரக தொழிற் சார்ந்த எழுத்தறிவிப்புத் திட்டம் தற்பொழுது 12 மாவட்டங்களில் செயல்படுகிறது. 1982–83-ல் அதை மேலும் ஒரு மாவட்டத்தில் செயல்படுத்த மைய அரசு நிதி உதவி அளிக்க இசைந்துள்ளது. இது பெரியார் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்.

ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவிப்புத் திட்டத்தின் கீழும் மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டத்தின் கீழும் பயன்பெறுபவர்களின் சுமார் 45 சத வீதம் ஆதி திராவிடர்களாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அண்மையில் மாநில முதியோர் கல்வி திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் மூன்றாவது கட்டமாக துவங்கப்பட்டுள்ள 500 முதியோர் கல்வி மையங்களும் ஆதி திராவிடர்களுக்காகவே துவங்கப்பட்டிருப்பதும், அவற்றில் பயிலுவோரில் கணிசமானவர்கள் ஆதி திராவிட பெண்களாக இருப்பதும் ஒரு சிறந்த சாதனை எனலாம். இதிலே நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, முதியோர் கல்வி திட்டத்தில் படிக்க வருகிறவர்கள், அவர்களாக இஷ்டப்பட்டு படிக்க வந்தால் தான் அந்த வகுப்புகள் நடைபெறும். ஆகவே அந்த வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகிறது என்றால் இஷ்டப்பட்டு வருகிறார்கள் என்று பொருள். ஆகவே, ஆதி திராவிடவகுப்பைச் சேர்ந்தவர்கள் இதற்காக இஷ்டப்பட்டு வருகிறார்கள் என்பது, அந்த சமுதாயத்திலே இப்போது தோன்றியுள்ள பெரும் மாறுதல்களைத் தான் எடுத்துக் காட்டுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





மைய அரசு நிதியுதவியுடன் தொழிலாளர் கல்வி நிலையம் த்த ஆண்டிலிருந்து சென்னையில் தொடங்கப்படும். தொழிளர்களுக்கு தொழிற்சாலை வேலை நேரத்திலேயே ஒரு மணிரம் எழுத்தறிவு புகட்ட வேண்டுமென்பது இத்திட்டத் நோக்கமாகும். முதியோர் கல்விமையங்களை தனியார் வனங்களுக்கு மைய அரசு மானிய உதவி தந்து வந்த திட்டம் 80-ல் நிறுத்தப்பட்டது. அத்திட்டத்தைப் புதுப்பிக்க வேண் என்று இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது, கோரிக்கைக்கு மைய அரசு இணங்கி அண்மையில் அத்திட்த்தை மீண்டும் புதுப்பித்துள்ளது. அனைவருக்குமான அஞ்சல் றப்பள்ளி (ஓப்பன் ஸ்கூல்) தொடங்குவதற்கான ஆலோசனை அமைத்துள்ள குழுவின் அறிக்கை வந்ததும் இப்பள்ளியை டங்கி உயர்நிலைப்பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வி யை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களை எடுத்துக்ண்டால், பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு கோவையிந்து மருதமலை போகும் வழியில் சுமார் ஆயிரம் ஏக்கர் மும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்துக்கு திருச்சிராப்பள்ளி லுக்கா சூரியூர் கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் நிலமும் யகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. காரைக்குடியில் கப்பா கல்வி அறக்கட்டளையின் கீழுள்ள கல்வி நிறுவனங்களை ணைத்து, பல்கலைக் கழகமாக நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய மைச்சரவைத் துணைக் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ய பல்கலைக் கழகங்கள் அனைத்திற்கும், கட்டிடங்கள் கட்டுல், வளாக மேம்பாடு செய்தல், வரைபடங்கள் தயாரித்தல் யவற்றைத் திட்டமிட்டு செய்ய வளாக மேம்பாட்டுக் குழுக்கள் மைக்கப்பட்டுள்ளன. பாரதியார் நூற்றாண்டு விழாவில் ல்வர் அவர்கள் அறிவித்தபடி தமிழ்நாட்டில் பெண்களுக் ன தனியே மகளிர் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு வல்லு குழு ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

கல்லூரிகளில் மாணவர்கள் அமைதியின்மை என்பது தற்து மிகப் பெரிய சமுதாயப் பிரச்சினையாக உருவாகிடது. மாணவர்களின் அமைதியின்மைக்கான பல்வேறு காரங்களை ஆராய்வதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் ரண்டு 15—5—1981 அன்றும் 30-6—1981 அன்றும் கூட்பட்டன. கல்லூரி முதல்வர்கள் மாணவர் பிரதிநிதிகள் யோருடனும் கலந்து பேசினோம். "ராகிங்" போன்ற யல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடுமையான நடக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 16

கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான பொதுவான நெறிமுறைகள் எடுக்கப்பட்டு கல்லூரிகட்கு அனுப்பப்பட்டது. இதன் விளைவாக மாணவர் பேரவைத் தேர்தலின் போது நடைபெற்றுக் கொண்டிருந்த வன்முறைச் சம்பவங்கள் இவ்வாண்டு வெகுவாகக் குறைந்துள்ளன.

சட்டக்கல்லூரிகள் : 1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட ரூ. 10 லட்சமும், மதுரை சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட ரூ. 5 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாலை நேர சட்டக் கல்லூரிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அகில இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. வேறு பல மாநிலங்களிலே அகில இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதியைக் கேட்காமலேயே மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அதே அடிப்படையிலே இங்கேயும் நடத்த வேண்டும் என்று பல உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே நாமும் மாலை நேர வகுப்புகளை நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே அகில இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதியைக் கேட்டிருக்கிறோம்.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில், 1982—83-ல் செயல்படுத்தவிருக்கும் "மிக இளமையில் தெரிந்திடு" (Catch them young) என்ற புதுமையான திட்டம் விளையாட்டில் ஆர்வம் கொண்ட குழந்தைகளை நர்சரி பள்ளிப் பருவத்திலிருந்தே தெரிந்தெடுத்து ஊக்குவித்து விளையாட்டு வீரர்களாக/வீராங்கனைகளாக உருவாக்க உதவும்.

மாணவர்களல்லாத இளைஞர்களுக்கு விளையாட்டு வசதிகளை செய்து கொடுப்பதில் இத்துறை போற்றத்தக்க விதத்தில் செயல்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூரில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய இளைஞர் விளையாட்டு மையம் ஒன்று மிகச் சிறந்த முறையில் செயல்படுவதை நானே நேரடியாகக் கண்டறிந்தேன். பிற மையங்களும் இவ்வாறு நற்பணி செய்தால் இளைஞர் சமுதாயம் நல்ல முறையில் உருவாகிட வழி பிறக்கும்.

இத்துறை அடுத்த ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் வேறு சில புதிய பணிகள்—குழந்தைகளுக்கும் மாணவரல்லாத இளைஞர்களுக்கும் பயனளிக்கும் வகையில் மாவட்ட விளையாட்டுக் குழுக்களுடன் இணைந்த விழையணி (ஹாபி) மையங்கள் எட்டு அமைத்தல், தனியார் விளையாட்டுக் குழாம்கள் நிறுவனங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் வாங்கிட மானியம் அளித்தல் முதலியனவாகும்.



1982 மார்ச் 16] [திரு. செ. அரங்கநாயகம்]

தமிழ்நாடு சாரணர்-சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியம், 1981—82 ஆம் ஆண்டு முதல் ரூ. 30,000-லிருந்து ரூ. 3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாரணர்-சாரணியருள் வசதிக் குறைவான குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்குவதற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ 5 லட்சம் செலவிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மாநில மட்டத்தில் சாரணர்-சாரணியர் அவ்வப்போது முகாம் நடத்திக் கொள்வதற்காக 21 ஏக்கர் நிலப்பரப்பு ஒன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆலத்தூர் என்னுமிடத்தில் மாநில அரசு வழங்கியுள்ளது. மாவட்டங்களிலும் முகாம் நடத்துவதற்காக இத்தகைய இடங்கள் ஒதுக்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 1·42 லட்சம் சாரணர்-சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அளவில் உள்ள சாரணர்-சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். குடியரசுத் தலைவரின் 20-வது சாரணர்-சாரணியர் பேரணி வெகு சிறப்பாகச் சென்னையில் அண்மையில் நடைபெற்றது. அவ்வமயம் சாரணர்-சாரணியர் இயக்கத்தின் தலைசிறந்த வெள்ளி யானை விருது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாநில முதல்வர்களுள் நமது மாநில முதல்வருக்கே இவ்விருது முதற்கண் கிடைத்துள்ளது என்பது பெருமைக்குரியது.

தேசியப்பணித் திட்டம் : இந்தியாவிலேயே தேசியப் பணித் திட்டம் முதலில் தமிழகத்திலேதான் மேல்நிலைப் பள்ளி மட்டத்திலும் தொடங்கப்பட்டது. தற்பொழுது மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 10,000 பேர் இதில் பங்கேற்கின்றனர். 1982—83-ல் மேலும் 10,000 பேர் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுவார்கள்.

பொது நூலகத்துறை : 1981—82-ல் சென்னையில் வட்டார நூலகங்கள் 3-க்கு கட்டடங்கள் கட்டப்பட்டன. வரும் ஆண்டில் மேலும் 3 வட்டார நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும். கிளை நூலகங்கள் 3-க்கு இவ்வாண்டு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 6 கிளை நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 30 கிளை நூலகங்களுக்கு வரும் ஆண்டில் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

1981—82-ல் திருச்சி மாவட்ட மைய நூலகத்துக்கு கட்டடப்பணி தொடங்கப்பட்டது. 1982—83-ல் தருமபுரி, மற்றும் பெரியார் மாவட்ட மைய நூலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணியும் மாவட்டங்களில் கிளை நூலகங்கள் 50-க்கு கட்டடம் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரும் ஆண்டில் மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்கப்படும்.

நிதிநிலைமை நன்றாக உள்ள நூலக ஆணைக்குழுக்களின் எல்லைக்குள், 5,000-த்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊர்களில் 1982—83-ல் 100 கிளை நூலகங்கள் திறக்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவும் (ரூ. 19 லட்சம்) நூலக ஆணைக்குழுக்களின் நிதியிலிருந்து ஏற்கப்படும்,

ஆவணக் காப்பகம் : தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் நுண்நிழற்படக் கருவி ஒன்றை ரூ. 6½ இலட்சம் செலவில் நிறுவும் பணி முடிவடைந்துள்ளது. மின் அணுமுறை மூலம் படி பெருக்கும் கருவி ஒன்றும், சென்னை ஆவணக் காப்பகத்தில் நிறுவப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது.

புதிதாக ஏற்படுத்தியுள்ள மதுரை, சிதம்பரம், மற்றும் கோயம்புத்தூர் வட்டார ஆவணக் காப்பகங்கள் இயங்கத் தொடங்கிவிட்டன.

அருங்காட்சியகம் : சென்னை அருங்காட்சியகத்திலுள்ள படிமக்கூடத்தில் அண்மையில் சிலைகள் திருட்டு போனதை யொட்டி, தடுப்பு நடவடிக்கையாக படிமக் கூடத்திற்கு வரும் பார்வையாளர்கள் அனைவரும் பதிவேட்டில் கையொப்பம் இட வேண்டும் என்ற முறை தொடங்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகம் அருகில் புறங்காவல் நிலையம் ஒன்று அமைக்கவும், படிமக் கூடம் போன்ற இடங்களில் பாதுகாப்பை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் பல்கலைக் கழகம் : பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15-9-1981 அன்று தஞ்சாவூரில் தொடங்கப்பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், நூலகம் அமைக்கவும், மற்றும் இதர கருவிகள் வாங்கவும் முதற்கட்டமாக ரூ. 45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்காக கையகப்படுத்தப்படும் நில விலைக்காக ரூ.32 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது. கட்டிடங்கள் கட்டும் பணியினை உடனடியாகத் தொடங்க தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தில் கீழ் 4 உட்கோட்டங்கள் நிறுவப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இரவு 8.30)

அனைத்து துறைகளிலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் 1981-82-ல்–17 துறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைகளில் 80-லிருந்து 90 விழுக்காடு நடவடிக்கைகள் தமிழிலேயே நடத்தப்படுகின்றன. வரும் ஆண்டில் இது மற்ற எல்லாத் துறைகளுக்கும் விரி





வாக்கப்படும். 1983-84-ல் தலைமைச் செயலகமும் பொதுத்துறை நிறுவனங்களும் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டம் செம்மையாக நிறைவேற வேண்டிய அளவு தமிழ் தட்டச்சுகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் ஆட்சிச் சொல்லகராதியின் மறு பதிப்பையும் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ச் சுருக்கெழுத்துப் பாட நூல் மறுமதிப்பு அச்சிடும் பணியை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. விரைவில் இது வெளிவரும். இது குறித்து எதிர் கட்சித் துணைத்தலைவர் அவர்களின் கருத்துக்கள் மனதிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் படகர்கள் மொழிக்குப் பொருத்தமான வரி வடிவம் ஒன்றை நிர்ணயிக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்கு நமது அரசு மிகுந்த முக்கியத்துவம் தந்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் மானியக் கோரிக்கை விளக்க நூலில் விளக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சி, கடந்த சில ஆண்டுகளில் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகிறது. தொழில் நுட்பக் கல்விக்காக 1976-77-ல் ஆன செலவு ரூ. 5.72 கோடி 1982-83-ல் தொழில் நுட்பக் கல்விக்கு மொத்த நிதி ஒதுக்கம் எறத்தாழ மும்மடங்காக உயர்ந்து ரூ. 15.66 கோடியாக இருக்கிறது. அண்ணா பல்கலைக் கழகம் 1978-ல் அமைக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 11 பல்தொழில் பயிலகங்கள், 4 மகளிர் பயிலகங்கள் உட்பட, ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1964-க்குப் பிறகு முதன்முதலாக, புதிதாக ஒரு தொழில் பொறியியற் கல்லூரி இவ்வாண்டு தான் தொடங்கப்பட்டுள்ளது. அப்புதிய கல்லூரி திருநெல்வேலியில் தொடங்கிய பொறியியற் கல்லூரியாகும்.

இரண்டு பல்தொழில் பயிலகங்களில் இவ்வாண்டு ஷிப்டு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

பாரதியார் நூற்றாண்டு விழாவில் முதல்வர் அறிவித்தபடி எட்டையபுரத்தில் ஒரு மகளிர் பல்தொழில் பயிலகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாலிடெக்னிக்குகளில் பயிலும் மகளிருக்கான உதவிப்பணம் மாதம் ரூ. 50-லிருந்து ரூ. 75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பல்தொழில் பயிலகங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிமக்களுக்கு ஒதுக்கியுள்ள 18 விழுக்காட்டிற்கு மேலாகவே அவர்கள் சேர்க்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

பொறியியற் கல்லூரி பாலிடெக்னிக்குகளில் 1-1-1975 வரைபதவி உயர்வு பெற்றவிரிவுரையாளர்களுக்கும் ரூ.1,100 ஆரம்பச் சம்பளமாக அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தில், 'தொலை உணர் மையம்' (ரிமோட்சென்சிங் சென்ட்டர்) அமைப்பதற்கு வரும் 4 ஆண்டுகளில் அரசு ரூ. 76 இலட்சம் மானியம் தர இசைந்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு மேற்கு ஜெர்மனியிலிருந்தும் உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகத்தின் வழியாகவும் சுமார் ரூ.1.30 கோடி நிதியுதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வளர்ச்சிப் பணிகளுக்கான திட்ட மானியமாக இவ்வரசு 1981-82-ல் ரூ. 6 இலட்சம் மானியம் தந்தது. 1982-83-ல் ரூ. 6.2 இலட்சம் தரப்படும்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பெரும் முதலீட்டில் நிறுவ இருப்பதும் அறிவியல் வளர்ச்சியில் இவ்வரசு காட்டும் ஆர்வத்தின் ஒரு எடுத்துக்காட்டாகும்.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு 'கல்வி பயிலும் சமுதாயத்தை நோக்கி' என்னும் வெளியீட்டில் கல்வியின் பொதுவான குறிக்கோள்களாகக் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:—

குழந்தைப் பருவத்திலிருந்தே சமுதாயத்தில் பயனுள்ள உறுப்பினராக முழுமை வாய்ந்த உடல் நலன் மற்றும் மன நலன் வாய்ந்தவர்களாக வளர வழி வகுத்தல், மாநிலத்தின், நாட்டின், உலகத்தின் பண்பாடு மற்றும் வரலாற்றை உணர்ந்து, அறிதல், நாட்டின் ஒழுக்கம் மற்றும் ஆன்மிக கோட்பாடுகளின் ஈடுபாடு; அறிவியல், தொழில் நுட்பவியல் மற்றும் வாழ்க்கைத் தொழிலியல் அறிவை முழுமையாக பெறுதல், அறிவியல் எல்லைகளை விரிவாக்கவும், மாநிலத்தையும் நாட்டையும் எதிர்நோக்கியுள்ள தொழில் நுட்பவியல் மற்றும் வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், கல்வியைப் பரவலாக்குதல், பல்வேறு நிலைக் கல்விகளுக்குமான வளர்ந்துவரும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மாநிலத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாடும் பெரும்பான்மை மக்கள் கல்வியின் பயனை பெறும் விதத்தில் ஊக்குவித்தல்.





மேற்கண்ட நோக்கங்களின் அடிப்படையில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலுக்கு அனைத்து மட்டங்களிலும் உரிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்று அடிப்படையில், கல்வித் துறையில் அறிவியல், தொழில் நுட்பவியல் பகுதிகளின் தலையாய பங்கைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும், தலைமைச் செயலகக் கல்வித் துறையின் பெயர், ''கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை'' என்று மாற்றி இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துக்களுக்கும், அரசு எடுத்திருக்கிற பல்வேறு நடவடிக்கையின் அடிப்படையிலும் நான் இதுகாறும் சொன்ன செய்திகளிலிருந்து கல்வித்துறை முன்னேற்றத்திற்கு எப்படி பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று நம்புகிறேன். அந்த அடிப்படையில் இந்தக் கல்வி மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுக் கொண்டு இந்தக் கல்வி மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** ஒரே கல்லூரியில் ஹரிஜன் ஹாஸ்டல், பின் தங்கிய வகுப்பினருக்கான ஹாஸ்டல், முற்பட்ட வகுப்பினருக்கு ஒரு ஹாஸ்டல் என்று ஏன் அரசு ஏற்படுத்த வேண்டும்? இப்படி ஒரே கல்லூரியில் மூன்றுவித ஹாஸ்டல்களில் ஏற்படுத்துவதால், செலவு அதிகமாகிறது? அதை விட ஏழை மாணவர்கள் இல்லம் என்று வைத்து எல்லா சமுதாயப் பிள்ளைகளையும் சேர்த்து வைத்து நடத்தும் முறையில் ஒரே ஹாஸ்டலை ஏன் வைத்திருக்கக் கூடாது? அதனால் அரசுக்கும் செலவு மிச்சப்படும். ஜாதி உணர்வுகளுக்கும் ஏற்படாத நிலை ஏற்படும்; இதை திராவிட முன்னேற்றக் கழகக் காலத்திலும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். இதுவரை அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு சில மாணவர்கள் செய்கிற காரணமாக அரசாங்கத்தால் நடத்தப்படுகிற விடுதி மாதக் கணக்கில் மூடப்படுகின்ற நிலையில் நிரபராதிகளான மாணவர்கள் படிக்கமுடியாததொரு அவலநிலை ஏற்படுகிறது. அதனால் மாணவர்கள் வேறு இடங்களில் தங்க வேண்டிவருகிறது. அவர்கள் படிப்பும் வீணாகிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

தென் ஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏழைகளுக்கு இலவசப் புத்தகங்கள் கொடுப்பதாகச் சொல்லியும் இதுவரையில் கிடைக்கவில்லை. ஸி. ஈ. ஓ. டி. இ. ஓ. வை. வைக் கேட்டால் ஆதி திராவிட நலத் துறையைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்களிடம் கேட்டால், கல்வித் துறையில்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 16

கேளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே கால காலத்தில் இந்த மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல கல்லூரிகளில் ஜாதிப் பெயரால் ஹாஸ்டல்கள் இல்லை. அங்கும் இப்படிப்பட்ட கலவரங்கள் நடக்கின்றன. மருத்துவக் கல்லூரியில் கூட (இருக்கிற ஜாதி குறுக்கீடுகள்) ஜாதியின் பெயரால் பண ஒதுக்கீடு செய்யப்படுகிறவரையில் அதை மாற்ற இயலாது. நாங்கள் தான் ஒரு மாறுதலைச் செய்தோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் உணர்வுகளை ஒப்புக்கொள்கிறேன். இப்போது மத்திய அரசு ஒரு ஜாதிக்கு மானியம் தருகிறார்கள். மாநில அரசு ஒரு ஜாதிக்கு மானியம் தருகிறார்கள். ஆகவே தனித்தனியாக விடுதிகள் கட்டவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க மாணவர்கள் விடுதியில் இவ்வளவு ஆதிதிராவிடர்கள் இருந்தால் 25 சதவீதம் பிற்படுத்தப் பட்ட வகுப்பு மாணவர்கள் இருக்கவேண்டும் என்று சேர்ந்து வாழும் முறை தமிழ்நாட்டில் ஒன்றில்தான் இந்தியாவிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு சமுக சூழ்நிலை ஏற்பட பத்தாண்டுகள் ஆகும். இரண்டு பேர்களும் படிப்பில் இப்போதுதான் முன்னேறுகிறார்கள். இப்போதுதான் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கிறார்கள். பிற்பட்டவர்களானாலும் சரி ஆதிதிராவிடர்களானாலும் சரி, ஆகவே ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு போய் சேர்ப்பது கடினமான காரியம். அந்த கடினமான காரியத்தைத்தான் அரசு ஈடுபட்டிருக்கிறது. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூடித்தான் இதற்கு பரிகாரம் காணவேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 17-கல்வி தலைப்பின் கீழ் ரூ. 290,78,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".



1932 மார்ச் 16]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை, 17—3—1982-ம் தேதி காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## (9) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

141. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் 1980-81ஆம் ஆண்டிற்கான 10-வது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619.அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

142. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு சிறு தொழில் — குடிசை தொழில் கடன் — உதவித்தொகை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 27—8—1981 ஆம் தேதியிடப்பெற்ற தொழில் துறையின் 1212 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1922 ஆம் ஆண்டு மாநிலத் தொழில் உதவிச் சட்டத்தின் [தமிழ் நாடு சட்டம் 5/1923 19(டி) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

143. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பெற்ற வெளிநாட்டு சாராவி விதிகளில் (மொத்தமாக வழங்குதல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து 21—8—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 196 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

106. கோரிக்கை எண். 17 — தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்க குறிப்பு — 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

107. பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம்—1982-83 (ஆங்கிலம்).

## இணைப்பு 1.

விடை—

(875 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 482-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம். திரைப்பட நிதி உதவி நிறுவனம் ( The Tamil Nadu Film Finance Corporation ) ஏற்படுத்தும் வகையில் 28—8—1981-ம் தேதியிட்ட அரசு ஆணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிதி நிறுவனம், முறைப்படி செயல்படுத்துவதற்கான, பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) மத்திய அரசு அமைத்துள்ள திரைப்பட அபிவிருத்திக் கழகம், மற்றும் கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ள திரைப்பட அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் அமைப்பினைப் போல தமிழகத்திலும் "தமிழ்நாடு திரைப்பட நிதி நிறுவனம்" அமைக்கும் வகையில் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும். ஒவ்வொரு பங்கும் ரூபாய் நூறு மதிப்புள்ள இரண்டு லட்சம் பங்குகள் கொண்ட ரூபாய் இரண்டு கோடி ஒப்பிய முதல் (Authorised Capital) மற்றும் ரூபாய் ஐம்பது லட்சம் நடை முதலுடன் (Working Capital) இந்த நிறுவனம் இயங்கும். இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நிறுவன அமைப்பு விதிக் குறிப்புகள் ( Memorandum of Association ) நிறுவன விதிகள் ( Articles of Association ) ஆகியவை அச்சிடும் பணி தனியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கழகம் பதிவு பெறுவது சம்பந்தமான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பதிவு பெற்றதும், ஆரம்ப விழாவிற்குப் பிறகு, முறைப்படி செயல்பட ஆரம்பிக்கும். நல்ல படங்களை உருவாக்கும் திறமையிருந்தும் நிதி வசதியின்மை காரணமாக, தரமான படங்களைத் தயாரிக்க முடியாத நிலையில் இருக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு உதவிநிதி அளிப்பது இந்தக் கழகத்தின் நோக்கமாகும்.



## இணைப்பு II

### கோரிக்கை எண் 17.

### கல்வி—கொள்கை விளக்கக் குறிப்பு.

(927-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1 தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1982-83 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி"-ன்கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 291 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370 கோடியில் 21.3 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1982-83 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1982-83 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு. | 63 | .. | 63 |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 1,27,95 | 4,32 | 1,32,27 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 76,53 | 3,33 | 79,86 |
| 3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 14,44 | 9,93 | 24,37 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 26,39 | 3,12 | 29,51 |

| (1) | திட்டமில்லாத செலவினம் (2) | திட்டச் செல்வினம் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | 1982-83 வரவு-செலவு மதிப்பீடு | | |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 5. சிறப்புக் கல்வி-முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 85 | 3,14 | 3,77 |
| 6. விளையாட்டும் இளைஞர் நலனும் மற்றும் தேசிய மாணவர் படை. | 2,04 | 1,28 | 3,32 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. .. | 8,78 | 4,43 | 13,21 |
| | 2,56,98 | 29,55 | 2,86,53 |
| 278. கலை, பண்பாடு— | | | |
| நுண் கலைக் கல்வி .. | 29 | 7 | 36 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு. | 6 | 37 | 43 |
| தொல்பொருளாராய்ச்சி. | 15 | 15 | 30 |
| ஆவணக்காப்பகமும் அருங்காட்சியகங்களும் | 43 | 13 | 56 |
| பொது நூலகங்கள் .. | 1,60 | 22 | 1,82 |
| | 2,53 | 94 | 3,47 |
| 283. சமூகப் பாதுகாப்பும் நலனும் .. .. | 16 | .. | 16 |
| பெருமொத்தம் : | | | |
| மானியக் கோரிக்கை 17—கல்வி .. .. | 2,60,30 | 30,49 | 2,90,97 |



3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1982-83-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | திட்டமில்லாத செலவினம் (2) | திட்டச் செலவினம் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | 1982-83 வரவு-செலவு மதிப்பீடு | | |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 9.—265 ஏனைய நிருவாகப் பணிகள்— மாவட்ட விவரச் சுவடிப் பிரிவு | .. | 3 | 3 |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் .. | .. | 9,50 | 9,50 |
| சமூகக் கல்வி .. .. | .. | 8 | 8 |
| நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியம் .. | .. | 25 | 25 |
| கோரிக்கை 37—பொதுப் பணி— அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் | [illegible] | [illegible] | 6 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | [illegible],28 | .. | [illegible],28 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவுகள் | | | |
| 459. அலுவலகக் கட்டடங்கள் | .. | 11 | 11 |

1982-83 வரவு-செலவு மதிப்பீடு

| (1) | திட்டமில்லாத செலவினம் (2) | திட்டச் செலவினம் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவுகள் அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றுக்கான கட்டிடங்கள். | 5 | 6,42 | 6,47 |
| 677. கடன்கள்— தேசிய கடன் படிப்புதவித் தொகைகள் .. | .. | 45 | 45 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்கள் .. | .. | 12 | 12 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன் .. | 7 | .. | 7 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள் | 71 | .. | 71 |
| மொத்தம் .. | 10,15 | 16,98 | 27,13 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982-83-ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 318 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது ஆதிதிராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள்; ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவை கல்விகளுக்காகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.



1982-83 ஆம் ஆண்டில், கல்விப் பணிக்கான திட்டச் செலவு—

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277, கல்வி; 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு, கடன் முதலியன) கல்விக்கான 1982-83 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு.— ('' + '' குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பெறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.)

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1982-83-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி. | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) .. | 16,95 +2 | 3,53 | 20,48 +2 |
| 2. முதியோர் கல்வி .. | 1,11 +77 | 4 | 1,15 +77 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 3,17 +48 | 71 | 3,88 +48 |
| 4. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் | 78 +60 | 21 | 99 +60 |
| 5. தமிழ் வளர்ச்சி கல்வித் துறை .. | 1,08 | .. | 1,08 |
| தமிழ்க் கலைத்துறை | .. | 8 | 8 |
| 6. கட்டட வகையில் பொதுப்பணித்துறைச் செலவு. .. | 81 | .. | 81 |
| | 23,90 1,87 | 4,57 | 28,47 +1,87 |

| | பொறுப் பேற்ற செலவினம் | 1982-83-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| தொழில் நுட்பக் கல்வி | 4,87 +10 | 1,12 | 5,99 +10 |
| கலைப் பணிகள்— | | | |
| கல்வித்துறை .. | 48 | 26 | 74 |
| தமிழ்க் கலைத் துறை .. | 26 | 17 | 43 |
| பெரு மொத்தம் .. | 29,51 +1,97 | 6,12 | 35,63 +1,97 |

## II பள்ளிக் கல்வி

### (i) பொது.

1. 1982–83 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 291 கோடியில் பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 239 கோடியாகும். 1981 அக்டோபர் 1ஆம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல் நிலைப் பள்ளிகள் 27,767. நடுநிலைப் பள்ளிகள் 5,556. உயர் நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 137 பள்ளிகளும்—79 உயர்நிலைப் பள்ளிகளும் 58 மேல் நிலைப் பள்ளிகளும் —மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.71 இலட்சம். பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 93.75 இலட்சம். பள்ளிகளின் நிர்வாக வாரியான விவரங்களை இணைப்பில் காணலாம்.





2. 1982–83 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர்கள் பதவிகள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 300 பி. எட். தர ஆசிரியர் பதவிகள ஆகியவை ஏற்படுத்தப்படும். நடு நிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.—

3. இவ்வாண்டில் (1981–82) டிசம்பர் 1981 வரை நடத்தப் பெற்ற 50 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் ரூ. 63 இலட்சம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. பொது மக்களின் நன் கொடையைக் கொண்டு அதே காலக் கட்டத்தில் 49,378 மாணவர்களுக்கு சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கல்வித்துறை நிர்வாகம்.—

4. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 16; மாவட்டக் கல்வி அலுவலர்கள் 51; பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் 12; உதவிக் கல்வி அலுவலர்கள் 366; பள்ளித் துணை ஆய்வாளர்கள் 453 (பள்ளித் துணை ஆய்வாளர் சரகங்களின் பொறுப்பில் 411 பேர்களும், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகளின் பொறுப்பில் மற்றவர்களும்) உள்ளனர். 1982–83 ஆம் ஆண்டில் பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் மேலும் இரண்டு புதிதாக ஏற்படுத்தப்படும். 1982–83-ல் மாவட்டக் கல்வி அலுவலர்கள்/பெண்கள் பள்ளி ஆய்வாளர்களுடைய நேர்முக உதவியாளர் பணியிடங்கள் 25 கூடுதலாக ஏற்படுத்தப்படும். இத்துறைக்காக ஒரு உள தணிக்கைப் பிரிவும் அமைக்கப்படும். " தமிழகக் கல்வி " என்னும் காலாண்டு இதழினைப் பள்ளிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

### (ii) இளஞ்சிறார் கல்வி.

தமிழக அரசு முதன் முறையாக 1982–83-ல் இளஞ்சிறார்கள் கல்விக்கென பெரிய அளவிலான ஒரு திட்டத்தினை தொடங்கவிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப் போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி, தங்கையரைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச் சிறுமியர் பள்ளி

செலவதற்கும் உறுதுணைபுரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982–83-ல் தொடங்கவிருக்கும் இத்திட்டத்தின் முதற் கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால் வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரி பிரிவுகளுக்கான பாடத் திட்டங்களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 1982–83-ல் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### (iii) தொடக்கக் கல்வி

1. வகுப்புகள் 1—5-க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94.76 விழுக்காட்டினரும் வகுப்புகள் 6—8 க்குரிய 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 64.55 விழுக்காட்டினரும் இது வரை (1981–82) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984–85-க்குள்) இந்தியா அனைத்திலும் 6—11 வயதுத் தொகுதியினரில் 95 சதவீதத்தினரும் 11—14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6—11 வயதுத் தொகுதியைப் பொறுத்த வரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டிருப்பதும், 11—14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தவரை அந்த இலக்கை மிஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் 1.83 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1981–82 ஆம் ஆண்டில் இருந்த 33,323 தொடக்கப்பள்ளிகளின் முதல் நிலைப் பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,767 நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5,556 ஆகும். படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 70.12 இலட்சமாகும். பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,257 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர் மாணவர் விகிதம் 1:39 ஆகும்.

2. பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5 ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிடுவோர் விழுக்காடு 1973—74 ஆம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது. 1980–81-ல் 30 சதவீதமாகக் குறைந்து உள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத்திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகளை வழங்கும் திட்டம், 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை (1977–78 முதல் அமுலாக்கப்பட்டது) போன்றவை வரவேற்கத்தக்க இம் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்களாகும்.



நண்பகல் உணவுத் திட்டம்.

3. முதல் நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.51 இலட்சம் மாணவர்கள் நணபகல் உணவு பெறுகின்றனர். ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவர்களும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். செங்கல்பட்டு வடாற்காடு, தென்னாற்காடு, ஆகிய மாவட்டங்களிலுள்ள மைய சமையற்கூடப் பகுதிகளில் செயல்படும் 97 சமையற் கூடங்கள் மூலம் 4.46 இலட்சம் பேரும் பிற்பகுதிகளில் மற்றவர்களும் நண்பகல் உணவு பெறுகின்றனர். 1982–83 ஆம் ஆண்டில் நண்பகல உணவுத் திட்டத்திற்காக ரூ 5.63 இலட்சம் செலவிடப்படும். சென்னையிலும் தூத்துக் குடியிலும் இரண்டு கிடங்குகள் கட்ட ரூ. 8 இலட்சம் உட்பட. (மேற்கண்ட 20.51 இலட்சம் மாணவர்களைத் தவிர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 60,000 மாணவர்களும் நண்பகல் உணவு பெறுகின்றனர்.)

4. மைய சமையற் கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்த வரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக் கப் பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது. இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு "கேர்" நிறுவனத்திலிருந்து ஆண்டுதோறும் கிட்டும் இலவச ரவையும் மதிய உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. 1980–81 வரை கேர் நிறுவனம் ஆண்டுதோறும் சுமார் 20,000 டன் உணவை தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அளித்து வந்தது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில் 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும் 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணெயும் "கேர்" இலவச உணவு மூலம் பெறப்பட்டு வந்தது. மீதி 100 நாட் களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்கு ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும். ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்பட்டு வந்தது. நண்பகல் உணவுத் திட்டத்திற்காக "கேர்" இலவச உணவினைப் பெற்று வரும் அனைத்து மாநிலங்களுக்குமே 'கேர்' தந்து வரும் உணவின் அளவினை 1981–82 லிருந்து படிப்படியாக குறைத்து வர 'கேர்' நிறுவனம் கொள்கை முடிவு செய்து அதை அமுலாக்கி வருகிறது. இவ்வாறு கேர் உணவு படிப்படியாகக் குறைந்து 1985–86-ல் பெறும் கேர் உணவு 1980–82-ல் பெற்றதில் பாதி அளவே

இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது வழங்கப்படும் நண்பகல் உணவின் அளவினைத் தொடர்ந்து இதே அளவில் வழங்க, அரசு தன் நிதியிலிருந்து இனி வரும் ஆண்டுகளில் கூடுதலாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 1981–82-ல் 'கேர்' உணவின் அளவில் ஏற்பட்ட குறைவை ஈடு செய்ய ரூ.45 இலட்சம் கூடுதல் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

இலவசப் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல்.

5. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்புகளில் பாடப் புத்தகங்களும், இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73 ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் இப்பொழுது ஆண்டு தோறும் ரூ. 67 லட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டு இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டு தோறும் அரசு சுமார் ரூ. 7 இலட்சம் செலவிடுகிறது. 4—10 வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சுமார் 8 லட்சம் பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக இலவசப் பாட புத்தகங்களை பெற்று வருகின்றனர்.

புத்தக வங்கிகள்.

6. ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1–10–81 நிலவரப்படி 32,630 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இவ்வங்கிகளில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 22 இலட்சத்திற்கும் அதிகமாகும். அவற்றின் மதிப்பு ரூ. 32 இலட்சத்திற்கும் அதிகமாகும். பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



அறிவியல் கல்வி.

7. 1981–82-ல் அறிவியல் கருவிகளை வாங்குவதற்காக பள்ளிக்கு ரூ. 3,750 வீதம் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாக நிதி அல்லது பெற்றோர் ஆசிரியர் நிதியிலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ்வகையில் செலவிட வேண்டும். இதே போன்று 1982–83-லும் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு இவ்வசதி அளிக்கப்படும்.

8. தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே சுகாதாரக் கல்வி புகட்ட ''கேர்'' நிறுவன உதவியுடன் திட்டம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் செயல் பட்டு வருகிறது.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்.

9. 1982–83-ல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 10 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக ''சமுதாய வளர்ச்சி'' மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 9.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூ. 22 லட்சமும் அரசு தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 6 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகள்,

10. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1–6–81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதும் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு உதவிக் கல்வி அலுவலர் வீதம் 366 உதவிக் கல்வி அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலம் இப்பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறை நிறுவகித்து வருகிறது. ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் ஒரு இளநிலை உதவியாளரும் ஒரு தட்டச்சரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் வேலைப்பளுவைச் சமாளிக்க ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் ஒரு உதவியாளர் பணியிடமும், ஒரு தட்டச்சர் பணியிடமும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்காகப் பள்ளிக் கல்வி (கூடுதல்) இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய இம்மாபெரும் மாற்றம், தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கும், விரிவாக்கத்திற்கும் உறுதுணையான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

[1982 மார்ச் 16

நகராட்சி, மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள்.

11. 1981—82-ல், நகராட்சிகளும், சென்னை, மதுரை கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1508 ஆகும். (1,107 முதல் நிலைப் மற்றும் 401 நடுநிலைப் பள்ளிகள்). நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக் காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையினை அரசே ஈடு செய்து வருகின்றது.

(IV) உயர் நிலைப் பள்ளிக் கல்வி.

1981--82-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.25 இலட்சம் பேர்களுள், 41 விழுக்காடாகிய 7.13 இலட்சம் பேர் உயர் நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1981—82-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடை பெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிக் குலேசன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்ற வற்றோடு இணைந் தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள். | 2,089 | 79 | 2,168 |
| மேல் நிலைப் பள்ளிகள். | 1,347 | 58 | 1,405 |
| மொத்தம் .. | 3,436 | 137 | 3,573 |



1982 மார்ச் 16]

1981--82-ல் மேற்கண்ட 3,573 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| | மாணவர் களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) (இலட்சத்தில்.) |
| 8-ஆம் வகுப்பும் கீழும் .. .. .. .. | 13.75 |
| 9—10 வகுப்புகள் .. .. .. .. | 7.13 |
| 11—12 வகுப்புகள் .. .. .. .. | 2.75 |
| மொத்தம் .. | 23.63 |

2. 1981-82-ல் அரசுப் பள்ளிகள் 97, நகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 19, ஆக மொத்தம் 118 உயர் நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. சிறுபான்மையினரால் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எண் ணிக்கை இதில் சேரவில்லை.

அறிவியல் கல்வி.

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத் தின்கீழ் 1981-82 முடிய 1,068 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப் பள்ளிக் கல்வி இயக்கு நரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு 1981-82 வரை அளிக்கப்பட்ட பள்ளிக்கு ரூ. 18,000 என்ற தொகை, 1982--83-ல் ரூ. 20,000 ஆக உயர்த் தப்படும். 1980--81-லிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இத்திட்டத்தின்கீழ், ஆய்வுக்கூட கட்டட வகை யில் ஒரு பள்ளிக்கு ரூ. 80,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டிடச் செல வில் 60 விழுக்காடு அல்லது ரூ. 48,000 இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் பெறுகின்றன. 1982--83-ல் மேலும் 25 உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக் கூட வசதியினைப் பெறாத, கிராமப் புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப் பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 42-ல் ஒவ்வொன் றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது. மீதியுள்ள கல்வி மாவட்டங்களுக்கு, மேலும் 9 ஆய்வுக்கூட வண்டிகள், வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5. மாநில அளவில் ஆண்டு தோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சி 1978-ல் மதுரையிலும், 1979-ல் கோவையிலும் 1980-ல் திருநெல்வேலியிலும், 1981-ல் திருச்சிராப்பள்ளியிலும் நடத்தப்பட்டது. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந்தரத்தினை மேம்படுத்துவதும் இக் கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.

நூலகவசதி,

6. உயர்நிலைப் பள்ளிகளின் நூலக வசதிகளைப் பெருக்குவதற்காக 1982-83-ல் ரூ. 2 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது.

ஒலி-ஒளிக் கல்வி.

7. 1982-83-ல் பள்ளிக் கல்வி இயக்கத்திலுள்ள மாநிலத் திரைப்படச் சுருள் சேமிப்பதற்கு ரூ. 48,000 செலவில் கூடுதலாகக் கல்வித்திரைப்படங்களும், திரைப்படச் சுருள்களும் வாங்கப்படும் ; 30 தொடக்கப் பள்ளிகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் ; ஒலி-ஒளிக் கல்வி தொலைக் காட்சிக் கல்வி பற்றிய கருத்தரங்குகள், பணிக்களரிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்த ரூ. 1,86,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்.

8. 1982--83 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கானநிதி ஒதுக்க விபரங்கள் வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம். | | 3 |
| நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம்— | | |
| "277. கல்வி" இன் கீழ் .. .. .. | 2 | |
| "284. நகர்ப்புற வளர்ச்சி" இன் கீழ் .. | 25 | 27 |
| அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள்— | | |
| சிறு பணிகள் .. .. .. .. | 3 | |
| புதிய பணிகள் .. .. .. .. | 25 | |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1982--83-ல் நிதி ஒதுக்கம். | 29 | |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டடங்களின் மராமத்துப் பணிக்காக. | 5 | 62 |
| மொத்தம் .. | 89 | 92 |





மேலும் 1982--83-ல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காகத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ரூ. 25 இலட்சம் வழங்க இருக்கிறது (அந்நிறுவனம் இதற்காக 1981--82-ல் ரூ. 28 இலட்சம் வழங்கியுள்ளது).

9. அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கடந்த பல ஆண்டுகளாக கவனிக்காது விடப்பட்டு வந்துள்ள கட்டட வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெருந் தொகையாகிய ரூ. 100 கோடி தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தேவையைப் படிப்படியாகவாவது நிறைவேற்றுவதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிறுவனங்களிலிருந்து கடனுதவி பெற இயலுமா என்பது குறித்த முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள் :

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும், இதரவசதிகளையும் ஆதி-திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித்தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர்.

11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981--82 ஆம் ஆண்டில் 500 உயர் நிலைப் பள்ளிகளில் 8,9,10, வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள் தோறும் மொத்தம் 1½ மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு சுமார் 37,600 மாணவர் பயன் பெற்றனர். இந்த முன்னோடித் திட்டம் 1982--83-லும் தொடர்ந்து செயல்படும்.

12. இந்த சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982-83-ல் 300 மேல் நிலைப் பள்ளிகளில், மேல் நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு விரிவாக்கப்படும்.

## V. பள்ளிப்பாடங்கள், பாடத்திட்டம், பாட நூல்கள்.

பள்ளிப்பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களை தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டு வருகிறது.—

பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வரும் வகுப்புகள்.

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| 1981–82 | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982–83 | 5, 8, 10 | 5, 7, 9 | 5. 7, 9 | 5, 7, 9 |
| 1983–84 | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |
| 1984–85 | .. | .. | .. | .. |

| ஆண்டு. | ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம். | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| 1981–82 | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982–83 | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983–84 | 5, 7, 9 | 5, 7, 9 | 7, 9 | 7 | 9 |
| 1984–85 | 8, 10 | 8, 10 | 8 | 8 | 8, 10 |

2. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் 6-ம் வகுப்பிலிருந்து அனைத்து உயர் வகுப்புகளுக்கும் ஒழுக்கம் மற்றும் சமூகக் கல்விக்கான பொருத்தமான பாடத்திட்டம் ஒன்றை வகுக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

3. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் வட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் 52-ன் மூலம் மாநிலம் முழுவதும் 119 விநியோக மையங்கள் வழியாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் 1—12 வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களைத் தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்கிறது.



நோட்டுப் புத்தகங்கள்—

4. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக்கொண்டு, நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியினையும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே செய்து வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள 224 பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலம் மலிவுத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. சமூக நலத்துறையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கும், ஊனமுற்றோர் பணிபுரியும் நிறுவனங்களுக்கும் இதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இம் மாநிலத்திற்கு ஆண்டுதோறும் மொத்தம் 9,200 டன் மலிவு விலைத்தாள் தேவைப்படுகிறது. ஆனால் மைய அரசு ஆண்டுக்கு 5,300 டன் மலிவு விலைத் தாள் மட்டுமே ஒதுக்கீடு செய்கிறது. எனவே மாணவர்களுக்குத் தேவையான மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் தேவையில் 60 சதவிகிதத்தை மட்டுமே தற்பொழுது பூர்த்தி செய்ய முடிகிறது.

## (VI) ஆசிரியர் பயிற்சி.

பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களிடையே வேலையில்லாத திண்டாட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாணவர்கள், அதுவும் குறைந்த எண்ணிக்கையில் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1981–82-ல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு) இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் 5 மாத அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி ஒன்றினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் பயன்பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982–83-லிருந்து 5,000-லிருந்து 10,000 ஆக உயர்த்தப்படும்.

3. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் தமது பணியினை பயனுள்ள வகையில் 1981–82-லும் தொடர்ந்து செய்து வருகின்றன. இவ்வாண்டு 6—8 மற்றும் 9—10 வகுப்பு ஆசிரியர்கள் 1,350 பேர்களுக்கு இம் மையங்கள் ஆங்கிலம் கற்பித்தலில் 3 அல்லது 4 வார பயிற்சிகள் நடத்தின.

## (VII) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்கத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பணியில் தொடர்ந்து முக்கிய பங்கினை ஏற்று வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்—வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சியை நடத்தி வருவதுடன் இந்நிறுவனம் 1—3 வகுப்பு ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் போன்றவர்களுக்கான சிறப்பு மறுபயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் ஆசிரியர்களுக்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்தவும் கல்வியாராய்ச்சிகளை மேற்கொள்ளவும் 1982–83-ல் ரூ. 9.62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது:—

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| (i) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல. | 130 தொடக்கப்பள்ளிகள். |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி. | 5 மாவட்டங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல). | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |

இம்மூன்று திட்டங்கள் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்படும் பாங்கினைச் சாலச் சிறந்தது என தேசிய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் பாராட்டியுள்ளது.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி—

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயபடுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு



ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடும். தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் இத்திட்டத்தினை நிறைவேற்ற முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு மையங்களுக்கும் சென்று ஆசிரியர்களுக்கு மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி பற்றி போதிக்க வேண்டிய வலலுநர் குழாமுக்கு பயிற்சியளிக்கப்பட்டு விட்டது. அனைத்து வகுப்புகளுக்குமான மக்கள தொகைக் கட்டுப்பாட்டுக் கல்விப் பாடத் திட்டங்களும் வகுக்கப்பட்டு விட்டன.

4. மேலும் தேர்வு முறைச் சீர்திருத்த ஆராய்ச்சி, சென்னையிலும், வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன்பெறுவதற்கான தொடர் கல்வி மையங்களை நடத்துதல் ஆகிய பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி—

5. உயர்நிலைப் பள்ளிநிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி (Open School) ஒன்றை உருவாக்குவது பற்றி ஆலோசனை கூற குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலை செய்து வருபவர்கள், இல்லத்தரசியர் போன்றோருள் 8-வது தேறியவர்கள் இப்பள்ளி மூலம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பினைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

## (viii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்—

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது. ஆசிரியர்கள் சமுதாயத்தில் ஒரு பெரும் பகுதியினர் எய்திய முக்கியமான ஒரு நன்மையாகும்.

2. இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலைகளிலான ஆசிரியர்களுள் 20 ஆண்டு தத்தம் நிலையில் திருப்திகரமாக பணியாற்றுபவர்களுக்கு, அவர்கள் தம் பதவிக்குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும்கூட சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1-6-1981 முதல் அமுலாக்கப்பட்டுலல்து.

3. இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் எட்டாம் வகுப்பு/எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பின்னர், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு 1—6—1982 முதல் அவர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

4. ஒவ்வொரு உயர்நிலை மேல்நிலைப் பள்ளியிலும், பள்ளித் தலைமையாசிரியரும், ஒரு இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியை சார்ந்தவராகக் கருதப்படுவர் என அறிவிக்கப் பட்டுள்ளது. விடுமுறையில்லாத பணிக்கான ஈட்டிய விடுப்பு வசதிகளை அவர்கள் பெறலாம்.

தனியார் பள்ளிகள்—

5. தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப் படுத்துதல்) சட்டம், 1973 மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள், 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக, பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் வல்லுநர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒய்வுக்கால வசதிகள் இலவசமாக மூக்குக் கண்ணாடி மற்றும் காது கேட்கும் கருவிகள் பெறுதல், அரசு நிதியிலிருந்து பல்வேறு முன்பணங்கள் பெறுதல் போன்று ஏறத்தாழ எல்லாக் காரியங்களிலும் அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களைப் போலவே சலுகைகளைப் பெறுகின்றனர்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி—

7. ஆசிரியர்களும் அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது, இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆசிரியர்களின் பிள்ளைகளில் பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் துறைகளில் மேற்படிப்பைத் தொடருபவர்களுக்கு ஆண்டுதோறும் 80 புதிய படிப்புதவித் தொகைகள் வீதம் 1977-78 முதல் இந்நிதியிலிருந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

8. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுடைய பிள்ளைகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்துக் கொண்டிருப்பவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த ''ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி'' யிலிருந்து நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டத்தை செயல்படுத்த அரசு ஏற்பளித்துள்ளது.

மாநில விருதுகள்—

9. அனைத்து நிலையிலுள்ள பள்ளி ஆசிரியர்களுள் சிறந்த பணி ஆற்றுபவர்களுக்கு மாநில அரசு விருது வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது.



## III. மேல்நிலைப்பள்ளிக் கல்வி.

1981-82 இல் செயல்பட்டு வந்த 1347 மேல் நிலைப் பள்ளிகளின் விபரங்கள் பின்வருமாறு (1981-82 ஆம் ஆண்டு மேல் நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 106 பள்ளிகள் உட்பட) :—

| பள்ளியின் வகை. | எண்ணிக்கை |
|---|---|
| எஸ். எஸ். எல். சி. | 1,274 |
| ஆங்கிலோ—இந்தியன் | 26 |
| மெட்ரிகுலேசன் | 33 |
| தொழில் நுட்பப் பள்ளிகள் | 14 |
| மொத்தம் | 1,347 |

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 58 மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மேற் கண்ட 1,347 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்பட வில்லை).

1981-82-ல் இந்த 1,347 பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளி வகுப்புக்களில் பயின்று வந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | மாணவர். | மாணவியர் | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதலாம் ஆண்டு வகுப்பு | 87,525 | 57,083 | 1,44,608 |
| இரண்டாம் ஆண்டு வகுப்பு. | 82,424 | 48,364 | 1,30,788 |
| | | | 2,75,396 |

கூடுதல் பணியாளர்கள்.

2. 1978-79-ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில்பெரும் பகுதி, மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத்தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளி வருப்புகள் நடத்த 'உட்படுத்தியும்' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல் நிலைப்பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 200-ம், ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணிவிதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு 1-7-1978-லிருந்து ஐந்தாண்டுகளுக்குள் பட்டமேற் படிப்புத் தகுதி அடைய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் பெற்று வந்த சிறப்பூதியம் 1-9-1981 முதல் ரூபாய் 25-லிருந்து ரூபாய் 40 ஆக உயர்த்தப்பட்டது. இவ்வாசிரியர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்று முழுமையான தகுதி பெற உதவும் வகையில் அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. அவர்களுடைய (பட்ட மேற்படிப்பிற்கான) படிப்புக் கட்டணத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றுக் கொள்கிறது. மேலும் பள்ளி விடுமுறைக் காலங்களில் பட்டமேற்படிப்பு வகுப்புகளில் கலந்து கொள்ள இந்த ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் தம் குடும்பங்களை விட்டு அயலிடத்தில் தங்குவதற்கும் ஏற்படும் செலவை ஈடுகட்ட இவர்களுக்கு ஆளுக்கு ரூபாய் 1,000 கடனாகவும் தமிழ்நாடு பாடநூல் நிறுவன நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்.

4. 1981-82-ல் மொத்தம் 1,014 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,602 ஆகும். 1981-82-ல் மேல்நிலைப் பள்ளிகளில்





பயின்று வந்த 2·75 இலட்சம் மாணவர்களில் 58,520 பேர் (அதாவது சுமார் 21 சத வீதத்தினர்) பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர் :—

| தொழிற்பாட வகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 4,561 | 35 | 4,596 |
| 2. மனையியல் .. .. | 73 | 2,818 | 2,891 |
| 3. வாணிகத்துறை .. | 20,884 | 10,617 | 31,501 |
| 4. பொறியியலும் தொழில் நுட்பவியலும். | 15,037 | 86 | 15,123 |
| 5. உடல் நலம் .. | 327 | 3,919 | 4,246 |
| 6. பலவகை .. .. | 66 | 97 | 163 |
| மொத்தம் .. | 40,948 | 17,572 | 58,520 |

5. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரின் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் வெளிநபர்களும் ஆக சுமார் 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் (மாதம் ரூபாய் 150 ஊதியத்தில்) தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

6. மேல்நிலைப் பள்ளித் தொழிற் பாட மாணவர்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன் மேல் நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக, 1982 சனவரியில் உயர்மட்டக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

கட்டடங்களும் தளவாடங்களும்.

7. 1978-79, 1979-80 மற்றும் 1980-81 ஆகிய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 563 அரசு மேல் நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட பெருந்தொகையான ரூ. 10 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 1981-82-ல் தொடங்கிய அரசு மேல்நிலைப்பள்ளிகள் 67-க்கும்

மொத்தம் ரூ. 1·68 கோடி செலவில் கட்டிடம் கட்டித் தர 1932-83-ல் ஏற்பளிக்கப்பட்டு, அவ்வாண்டு அவ்வகையிலான செலவு ரூ. 1·34 கோடி அளவுக்குள் அடக்கப்படும். முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ள மேல் நிலைப்பளளிக் கட்டிட வேலைகளுக்காக 1982–83-ல் ரூ. 87 லட்சம் ஓதுக்கப்பட்டுள்ளது.

8. இது வரை தொடங்கியுள்ள அரசு மேல் நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூட தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 5 கோடி செலவிடப்படுகிறது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ் நாடு அரசு நிறுவனமான தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப் பட்டு, பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச்சாமான் கள் வாங்குவதற்காக ரூ. 24 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப் பட்டுள்ளது.

9. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்க வும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் மானிய உதவிக்கு சுமார் 525 அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனு மதிக்கப்பட்டுள்ளன. 1982–83-ல் இத்திட்டத்தின்கீழ் மேலும் பல பள்ளிகள் பயன்பெறும். இததிட்டத்திற்கென அடுத்த ஆண்டு ரூ. 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. கலலூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் பயன் படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் "கல்லூரி இணையங்களும் பாலிடெக்னிக் இணையங்களும்" இயன்ற இடங்களில் எலலாம் அமைக்கப்பட்டுள்ளன,

11. மேலநிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 42 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

12. மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு அரசு செய்யும் செலவினம் மிகுபயன் விளைவிப்பதாக அமைவதற்கும், அக்கல்வியை மேலும் விரிவாக்குவது குறித்த வரன் முறைகளை நிர்ணயிப்பதற்கும் "மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு" இயக்குநர் மூலம் மேலநிலைப் பள்ளிக் கல்வியை விரிவாக ஆய்வு செய்ய அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.



## IV. அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுத்துறை 1975 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. மாநிலமனைத்துக்கும் நடைபெறும் முக்கியமான இரண்டு தேர்வு களான உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) மேல்நிலைத் பள்ளித் தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளை நடத்தும் பெரும் பணியில் மதுரையிலும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ள இத்துறையின் வட்டார அலுவலகங்களும் பங்கு பெறுகின்றன. அவ்விரு தேர்வுகளுடன் தொழில் கல்வி, ஆசிரி யர் பயிற்சி முயலிவற்றைச் சார்ந்த வேறு 38 தேர்வுகளையும் இத்துறை நடத்தி வருகிறது. 'ஆண்டுதோறும் இந்த தேர்வுகள் அனைத்தையும் எழுதுபவர்கள் மொத்த எண்ணிக்கை 7 இலட்சம் ஆகும். மதுரை, கோயம்புத்தூர் வட்டார அலுவலகங் கள் தத்தமது வட்டாரங்களில் 1981 எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை சிறந்த முறையில் நடத்தியுள்ளன. 1982-83ல் இத்துறைக்கு மற்றொரு வட்டார அலுவலகம் திருச்சிராப்பள்ளியில அமைக்கப் படும்.

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| தேர்வு. | 1981 மார்ச் ஏப்ரல். தேர்வு எழுதியோர். | 1981 மார்ச் ஏப்ரல். தேறியோர் விழுக்காடு. | 1981 அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1982 மார்ச் ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர். (தோராயமாக.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி.— | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 3,10,389 | * | 91,664 | 3,50,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் .. .. | 2,59,613 | 58 | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | 2,500 | 83 | 492 | 3,000 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | 2,469 | 88 | 299 | 3,000 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு— | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 1,45,974 | * | 44,018 | 1,64,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் .. .. .. | 1,23,757 | 61 | .. | .. |

* பகுதி முறைத் தேர்வு காரணமாக, மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) எழுதுவோரில் தேறியோர் சதவீதம் கணக்கிட்டுத் தர இயலவில்லை.



மேல்நிலைப் பள்ளித் தேர்வு—

3. மேலநிலைப் பள்ளித் தேர்வைப் பொதுக் கல்விப் பாடங்கள் 27-க்கும் தொழிற்கல்விப் பாடங்கள் 66-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பலவேறு பாடங்களின் தொகுப்புகள் 254 ஆகும். இவையனைத்துக்கும் தேர்வுகளை நன்முறையில் நடத்த சீரான ஒழுங்குமுறை வகுக்கப்பட்டுள்ளது, தொழிற் பாடங்களில செயல்முறைத் தேர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தேர்வு முறை திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

4. எஸ்.எஸ்.எல்.சி. தேறியுள்ளவர்களுள் 18 வயது முடிந்தவர்கள், 1981 ஏப்ரல் மேல்நிலைப் பள்ளித் தேர்விலிருந்து தொழிற்பாடம் இல்லாத கலைப் பாடங்களில் (அதுவும் செயல் முறைத் தேர்வு இல்லாத பாடங்களில்) தனிப்பட்ட முறையில் மேல்நிலைப் பள்ளித் தேர்வை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1982 அக்டோபர் முதல் எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளை தனிப்பட்ட முறையில் எழுதுவோர் நுழைவுச் சீட்டில் அவரவர் நிழற்படம் இருக்கும். தேர்வு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன் அவர்கள் நுழைவுச் சீட்டுக்கள் 150 விநியோக மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் அம்மையங்களிலிருந்து தேர்வு எழுதுவோர் அச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி வங்கி முறை —

5. எஸ்.எஸ். எல். சி. தேர்வில் கேள்வி வங்கி முறையைச் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் கல்வித்தர மதிப்பீட்டுக் கோட்பாடுகளுக்கேற்ப ஆழ்ந்த யோசனைகளுடன் கேள்வித்தாள்களை தேர்வுக்காக வகுக்கவும், மாணவர்கள் தாம் பயின்றவற்றில் நம்பிக்கையுடன் தேர்வைச் சந்திக்கவும் இம்முறை வழிவகுக்கும்.

பிற தேர்வுகள்—

6. இத்துறை நடத்திவரும் பிற தேர்வுகளுள் முக்கியமானவை ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பு (டிப்ளமா), மர வேலை, நெசவு, தையல் வேலை போன்ற தொழில் தேர்வுகள் ஆகியவையாகும். 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்டமுறையில் கலந்துகொள்ளும் வகையில் நடத்தப் பெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. 1981 டிசம்பரில் நடந்த இத்தேர்வில் சுமார் 2,800 பேர் கலந்து கொண்டனர்.

## V. முதியோர் கல்வியும் பள்ளிசாராக் கல்வியும்.

முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1982–83 நிதி நிலை அறிக்கையில் ரூ. 1·95 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### முதியோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகிறது:—

| சென்சஸ் ஆண்டு. | தமிழ்நாடு. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1971 .. .. .. | 51·78 | 26·36 | 39·46 |
| 1981 .. .. .. | 57·19 | 34·12 | 45·78 |

| சென்சஸ் ஆண்டு. | இந்தியா. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1971 .. .. .. | 39·51 | 18·44 | 29·34 |
| 1981 .. .. .. | 46·74 | 24·88 | 36·17 |

3. முதியோர் கல்வி மையங்களுள் பெரும்பாலானவை மைய அரசின் ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணியின் கீழோ அல்லது மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டத்தின் கீழோ செயல்படுவனவாகும்.

### ஊரக (தொழிற்சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.

4. மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தின் சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,600 மையங்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளனர். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள் சிவில் இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு முதியோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இம் முதியோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. இம்மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புக்களை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் இரண்டு தொகுதியினருக்கு நடத்தி முடித்து விட்டு, இப்போழுது மூன்றாவது தொகுதியினருக்கு எழுத்தறிவித்து வருகின்றனர், ஒவ்வொரு தொகுதி (10 மாத) வகுப்புகளையும் நடத்த சுமார் ரூ. 65 லட்சம் செலவாகிறது.



### மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டம்.

5. இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் 1980 பெப்ரவரி—மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 முதியோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்குவதன் மூலம் ஒரு பெரும் முதியோர் கல்வித் திட்டத்தை தொடங்கி வைத்தது. இம் மையங்களும் இரண்டு தொகுதியினருக்கு வகுப்புகள் நடத்தி முடித்துள்ளன. 1982 மார்ச் மாதம் மூன்றாவது தொகுதியினருக்காக வகுப்புகள் தொடங்க இருக்கின்றன. ஒவ்வொரு தொகுதி (10 மாத) வகுப்புக்களையும் நடத்த சுமார் ரூ. 1·23 கோடி செலவாகிறது. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுப் பணித் திட்ட மையங்களைப் போன்றே மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டமையங்களும் செயல்படுகின்றன.

6. மேற்கண்ட இரு திட்டங்களின் கீழும் இதுவரை நடந்துள்ள எழுத்தறிவுப்புப் பணியின் விபரம் வருமாறு :—

எழுத்தறிவு பெற்ற முதியோர் எண்ணிக்கை.

| (1) | ஆடவர். (2) | மகளிர். (3) | மொத்தம். (4) | மொத்த எண்ணிக்கையில் சேர்ந்துள்ள ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| (1) ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புத் திட்டம். | | | | |
| 1-வது தொகுதி வகுப்புகள் 1979 ஜூலை—1980 அக்டோபர். | 95,000 | 27,000 | 1,22,000 | 40,000 |
| 2-வது தொகுதி 1980 நவம்பர்—1981 ஆகஸ்டு. | 63,000 | 62,000 | 1,25,000 | 55,000 |
| 3-வது தொகுதி 1981 நவம்பர்— .. .. | 35,000 | 67,000 | 1,02,000 | 54,000 |
| (2) மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டம். | | | | |
| 1-வது தொகுதி வகுப்புகள் (1980) .. .. | 97,000 | 96,000 | 1,93,000 | 78,000 |
| 2-வது தொகுதி (1981) .. .. .. | 77,000 | 1,21,000 | 1,98,000 | 1,06,000 |

இவ்விரண்டு திட்டங்களின் கீழும் பயன்பெறும் மகளிர் எண்ணிக்கையையும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கையையும் வர வர அதிகரிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.



பிற அமைப்புக்களின் எழுத்தறிவிப்புப் பணிகள்.

7. தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள், 34, மைய அரசுப் பண உதவியுடன் நடத்திய 1,710 முதியோர் கல்வி மையங்களின் முதல் தொகுதி வகுப்புகளில் 68,000 பேர் எழுத்தறிவு பெற்றனர் அவ்வகுப்புகள் 1980-ல் முடிவு பெற்றன. இரண்டாவது தொகுதி வகுப்புக்களைத் தொடங்கி நடத்த மைய அரசுப் பண உதவி நீடித்தால் அவை தொடங்கும்.

8. ஏனைய அமைப்புக்கள் நடத்தி வரும் முதியோர் கல்வி மையங்களில் எழுத்தறிவு பெறுவோர் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

| (1) | மையங்கள் எண்ணிக்கை. (2) | பயில்வோர். (3) |
|---|---|---|
| கல்லூரி மாணவர்கள் .. .. | 600 | 17,000 |
| நேரு இளைஞர் மையங்கள் .. .. | 226 | 6,000 |
| உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி களிலுள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள். | 295 | 7,000 |

தொடர் கல்வி மையங்கள்.

9. முதியோர் கல்வி நிலையங்களில் எழுத்தறிவு பெற்றவர் களுக்கு எழுத்தறிவுக்கு மேலான தொடர் கல்வி அளிப்பதற் கான மையங்களும் தன்னிறைவு வட்டாரங்கள் 61-ல்தொடங்கப் பட்டுள்ளன. 1981—82-ல் 100 மையங்கள் தொடங்கப்பட்டன 1982—83-ல் மேலும் 122 மையங்கள் தொடங்கப்படும். அம் மையங்களில் அவர்களுக்குத் தகுந்த புத்தகங்களும் இதழ்களும் வழங்கப்படும்.

பிற திட்டங்கள்.

10. இத்துறையில் அமைக்கப்பட்டுள்ள, வெளியீட்டுப் பிரிவு மாத இதழ் ஒன்றையும், முதியோர் கல்வி, பள்ளி சாராக் கல்விப் பாட நூல்களையும் தயாரித்து வெளியிட இருக்கிறது. முதி யோர் கல்வி பயிலுபவர்களுக்கு உதவக் கூடிய கல்வித் திரைப் படங்களைக் காட்டக் கூடிய வலம் வரும் உந்து வண்டி ஒன்று (ஒலி-ஒளி சாதனங்களுடன்) மதுரை மாவட்டத்தில் செயல் பட இருக்கிறது.

தொழிலாளர் கல்வி நிலையம்.

11. அண்மையில் மைய அரசுப் பண உதவியுடன் இவ்வரசு தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பளித்துள்ளது நகர்ப் புறங்களிலும் பிற தொழிற் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கல்விப் பயிற்சிகளையும் பிற நடவடிக்கைகளையும் அது திட்டமிட்டு மேற்கொள்ளும். கல்வி அமைச்சர் தலைமையில் அமைந்த ஆளுகைக் குழு ஒன்று இந்நிலையத்தின் பணிகளை நிருவகித்துவரும்.

பள்ளி சாராக் கல்வி.

12. பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்கு கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1981—82-ல் செயல்பட்ட இம்மையங்களின் எண்ணிக்கை 988 ஆகும். அவற்றில 748 மையங்கள் 1980—81-லும், 240 மையங்கள் 1981—82-லும் தொடங்கப்பட்டன. 1982—83-ல் மேலும் 50 மையங்கள் தொடங்கப்படும். இம்மையம் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு வேலை செய்யும். பத்து மாத வகுப்புகள் மூன்றை நடத்தும்— ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் சுமார் 30 மாணவர் பயில்கின்றனர்.

13. மேற்கூறிய 988 மையங்களுக்கும் மேலாக இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1981—82-ல் தொடங்கப்பட்டன.

## VI. கல்லூரிக் கல்வி.

1. தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்பொழுது 187 ஆக உள்ளது. அவற்றில் பயில்வோர் எண்ணிக்கை 1980—81-ல் 1,54,700 பேர் ஆக இருந்தது. 1981—82-ல 1.77,100 ஆக அதிகரித்து உள்ளது. கல்லூரிக் கல்வி இயக்குநரின்கீழ் செயல்பட்டு வரும் இந்த 187 கல்லூரிகள், மற்றும் பிற கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.





2. இத்துறையில் 1979—80-ஆம் ஆண்டு முதல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் ஐந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும், ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார். 1982—83 ஆம் ஆண்டில் இவ்வலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் மேலும் ஒரு உதவி இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படும்.

3. அண்மையில் பாரதியார் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்ட நிலையில் பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 187 கல்லூரிகளின் விவரம் வருமாறு :—

| பல்கலைக் கழகம். | நிருவாக வரம்பிற் குட்பட்ட மாவட்டங்கள். | கலை, அறிவியல் மற்றும் வணிகவியல கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னைப் பல்கலைக் கழகம். | சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி .. | 44 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி | 33 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப் பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக் கோட்டை. | 33 |
| மதுரை காமராஜ் பல் கலைக்கழகம். | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி .. | 77 |
| | | 187 |

4. புதிய பல்கலைக்கழகங்கள் இரண்டுக்கும் தேவையான நிலத்தை கையகப்படுத்துவதற்கும் மற்றும் தேவையான பல்வேறு வசதிகளைச் செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

5. இவ்வாண்டில (1981–82) நிறுவப்பட்ட மூன்றாவது பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகும்.

6. காரைக்குடியில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து அமரர் அண்ணா உறுதி அளித்தவாறு பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்பல்கலைக் கழகத்திற்கான தேவைகளைக் கண்டறிய ஏனாக அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது தமிழ் நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றும் நிறுவப்பட இருக்கிறது.

7. 1981–82-ல் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள 3 கல்லூரிகளையும் சேர்த்து இம்மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக்கல்லூரிகள் நாமே பாடத்திட்டங்களை வகுக்கும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.

தொடர் கல்வி.

8. மாலை நேர வகுப்புகளை நடத்தி வரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33—மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் சட்டக் கல்லூரிகளும் உட்பட, இம் மாலை நேர வகுப்புகளில் பயில்வோர் சுமார் 8,000 பேராவர். மேல்நிலைப் பள்ளிகளில் பணி புரியும். "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 1981–82-ல் "கோடை விடுமுறைக்கால வகுப்பு மற்றும் அஞ்சல் வழிக் கல்வி" தரும் முனைப்புத் திட்டம் ஒன்றின் கீழ் கணிதம், இயல்பியல், வேதியியல். விலங்கியல், தாவர இயல், மனையியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பட்ட



மேற்படிப்பு வகுப்புகள் கல்லூரிகளில் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 172 ஆசிரியர்கள் "எம். ஏ."-வும், 731 ஆசிரியர்கள் 'எம்.எஸ்.சியும்' பயின்றனர். 1982–83-ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதல மற்றும் புதிய மாலை நேர வகுப்புகளை துவங்குவதற்காக ரூபாய் இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. தற்போது மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல் முறை வகுப்புகளை நடத்திவருகின்றன. 1981–82-ல் மொத்தம் 90,000 பேர் அவற்றில் பயின்று வந்தனர். மேலும், முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்திவந்த "அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக" வகுப்புக்களில் ஏறத்தாழ 14,000 பேர் பயின்று வந்தனர்.

கலவித் தர மேம்பாடு.

10. முன் ஆண்டுகளிற் போல 1981–82-லும், கல்லூரிகளில குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள கல்லூரிகளில், பல இடங்கள் காலியாக இருந்தன. ஆங்கிலப் பாடமொழி வகுப்புகளில் 7,350 இடங்களும் தமிழ்பாட மொழி வகுப்புகளில 2,670 இடங்களும் ஆகமொத்தம் 10,020 இடங்கள் இவ்வாண்டு காலியாக இருந்தன. இந்த நிலை கல்லூரிக் கல்வி வசதிகளை மேலும் விரிவாக்க பொதுப்படையாகத் தேவை இல்லை. என்பதைக் காட்டுகிறது. எனவே கல்லூரிக் கல்வி மட்டத்தில், தர உயர்விலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

11. கடந்த 4 ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில புதிதாக 104 பட்ட வகுப்புகளும் 28 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1982–83-ஆம் ஆண்டில புதிதாக பட்ட வகுப்புகள தொடங்க ரூ. 10 இலட்சமும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

12. அண்மை ஆண்டுகளில் அரசுக கலலூரிகளில் பட்ட வகுப்பு' மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை கூடியுள்ளதற்கேற்ப பெஞ்சு முதலிய மரச் சா

மான்கள் வாங்க 1982—83-ல் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகளைப் பெருக்க அண்மை ஆண்டுகளில் ரூ. 21 இலட்சம் செலவிடப்பட்டது. 1982—83-ஆம் ஆண்டில் இதற்காக மேலும் ரூ. 3 இலட்சம் செலவிடப் படும். அரசுக் கல்லூரிகளில் மாணவர்களுக்கான பாடப்புத்தக நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரசுக் கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேல்படுத்தவும் விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் 1982—83-ல் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. வரும் 1982—83-ம் ஆண்டில் கல்லூரிக் கட்டடங்கள் மாணவர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கும், மாணவர் வசதிக்கான உணவருந்தும் இடம், சிற்றுண்டிச் சாலை மிதி வண்டி நிறுத்துமிடம், கழிவிட வசதிகள் பிற சிறு கட்டப் பணிகள் போன்றவற்றுக்கும் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இக் கட்டடப் பணிகளுக்காக 1982—83-ல் ரூ. 62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது—(புதிய வேலைகளுக்காக ரூ. 25 இலட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள வேலைகளுக்காக ரூ. 37 இலட்சமும்).

14. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந்தர உயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சி படிப்பிற்கு அனுப்புவதற்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்தின் கீழும் மாநில அரசே செயல்படுத்தும் திட்டத்தின் கீழும் ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்பிற்கு அனுப்பபடுகிறார்கள். மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1979—80- 494 ஆசிரியர்களும், 1980—81-ஆம் ஆண்டில் 132 ஆசிரியர்களும் எம். பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 29 பேர் இதுவரை முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர். தற்பொழுது அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் சுமார் 280 பட்டதாரி பயிற்றுநர்கள் விளக்குநர்கள் உள்ளனர். அவர்களை ஆண்டுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை வீதம் பட்ட மேற்படிப்புக்கு அரசின் செலவில் முகாமையில் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. 1981-82ம் ஆண்டில் அவ்வாறு 30 பேர் அனுப்பப்பட்டனர்.



15. கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் இரண்டாம் பிரிவு பொது ஆங்கிலம், மூன்றாம் பிரிவும்-சிறப்பு ஆங்கிலம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பவர்களுக்கும், எம். ஏ. (ஆங்கிலம்) ஆசிரியர்களுக்கும் 1981-82-ல் மறுபயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம் 1982-83லும் தொடரும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கும் இது விரிவாக்கப்படும்.

### படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

16. கல்லூரிக் கல்வித் துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமானவற்றின் கீழ் பயன் பெறுவோர் விவரம் வருமாறு :—

| திட்டம். | 1981-82ல் புதிதாகத் தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை | 1981-82ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) எண்ணிக்கை | 1982-83ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் லட்சத்தில் |
| (மேல் நிலைப் பள்ளி வகுப்புகளில் தரப்பட்டவை உட்பட) | | | |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் .. | 1,700 | 5,205 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் .. .. | 1,397 | 6,590 | 45 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை .. .. | 70 | 225 | 4 |

17. 1977-78-லிருந்து பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல

இயக்குநர் துறை அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகளை அளிக்கிறது. பிற்பட்டவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து கிடைக்கின்றன. மேலும் ஆண்டுதோறும் ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுள் மேல் நிலைப் பள்ளித் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப் பணம் வழங்கப் படுகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி.

18. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவி பணம்/புத்தகப்படியாக ரூ. 180 தரப்பட்டு வருகிறது. 1980-81-ல் 18,040 பேர்களும் 1981-82-ல் 20,695 பேர்களும் இவ்வுதவிப் பணம் பெற்றனர். இத் திட்டத்திற்காக 1982-83-ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. ரூ. 50 இலட்சம் விலை மதிப்புள்ள புத்தகங்கள் கல்லூரிகளிலுள்ள புத்தக வங்கிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத் திட்டத்தை மதிப்பீடு செய்யவும் வருங்காலத்தில் புதிய வெளியீடுகள் பற்றித் திட்டமிடவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகள் சுமுகமாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகள்

19. கல்லூரிகளில் ஆசிரியர்கள், பிற பணியாளர், மாணவர்கள் ஆகியோரின் நலனைக் கவனித்துவர நலக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர் அமைதியின்மையைக் குறைப்பதற்கு ஆக 1981 மே, ஜூன் மாதங்களில் அனைத்துக் கட்சிகளின் கூட்டங்கள் இரண்டு கூட்டி விவாதிக்கப்பட்டது. கல்லூரி பேரவைத் தேர்தல்களை அமைதியாகவும் குறுகிய காலத்திலும் நடத்திட வழிமுறைகள் வகுக்கப்படுகின்றன.





கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

20. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள வீதங்களை அளித்தது ; தகுதி பெற்ற பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது ; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை 1-4-1980 முதல் பேராசிரியர்களாக உயர்த்தியது. உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக சம்பளம் வழங்கியது ; மற்றும் ஓய்வூதியம், விடுப்பு, குழு ஈட்டுறுதித் திட்டம் ஆகிய விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியது ஆகியவையாகும். கல்லூரி ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர்களைப் போற்றுவதற்காக 1979-80 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு அதன் கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள் 10 பேருக்கு ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு, வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் ஆகியவை அடங்கிய விருதுஅளிக்கப்படுகிறது.

சட்டக்கல்வி.

21. 1981—82-ல் சட்டக் கல்லூரிகளில் பயின்று வந்தோர் எண்ணிக்கை வருமாறு :—

| சட்டக் கல்லூரியின் பெயர் | முறையான பட்ட வகுப்புகள் — மொத்த மாணவர் | முறையான பட்ட வகுப்புகள் — அவர்களுள் தமிழில் பயின்றவர்கள் | மாலை நேர பட்ட வகுப்பு | பட்ட மேற் படிப்பு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. | 1,045 | 114 | 444 | 106 |
| மதுரை .. .. | 707 | 48 | 80 | .. |
| கோயம்புத்தூர் .. | 360 | .. | .. | .. |
| திருச்சிராப்பள்ளி .. | 360 | .. | .. | .. |

22. அண்மை ஆண்டுகளில் கோயம்புத்தூரில சட்டக் கல்லூரிக்கு கட்டடம் மற்றும் மாணவர் விடுதி கட்டுவதற்காக ஏற்பளிக்கப்பட்டது. மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவியர் விடுதி ஒன்று கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1982–83-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ. 10 இலட்சமும் மதுரை சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட ரூ. 5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## VII. தொழில நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1982–83-ல் சுமார் ரூ. 15.6 கோடி (கட்டிடங்கள், கடன்கள் அண்ணா பலகலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் 50 பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் ஏழும், தனிர் தொழில் பட்டய-டிப்ளமோ-கல்வியகங்கள் எட்டும் உட்பட), 14 தொழிற்பாட மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன.

2. இவற்றில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில (திருச்சிராப் பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கலலூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேரப் பட்ட வகுப்புகளில் 1,470 பேர்கள் ; பல் தொழில் நுட்ப பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில 6,800 பேர்கள் ; மற்றும் தொழிற் பாட மேல் நிலைப் பல்லிகளில் 840 பேர்கள். பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு, பின்வருமாறு புதிய பல் தொழில் நுட்பப் பயிலகங்களையும் திறந்துள்ளதால் அப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது :—

| ஆண்டு. (1) | புதிதாகத் திறந்த பல் தொழில் பயிலகங்கள். (2) |
|---|---|
| 1979–80 .. .. | 1 |
| 1980–81 .. .. | 5 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1981–82 .. .. | 6 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |



அண்ணாமலை பல்தொழில் பயிலகம், செட்டிநாடு, மற்றும் முத்தையா பல்தொழிற் பயிலகம் அண்ணாமலை நகர் ஆகிய பயிலகங்களில் 1981–82 முதல் ஷீப்டு முறை புகுத்தப்பட்டது. அவற்றில் இம்முறை செயல்படும் பாங்கைக் கவனித்த பின்னர் மற்றும் சில நிறுவனங்களுக்கும் இம்முறை விரிவாக்கப்படும். 1981–82 இல் திருநெல்வேலியில் புதிதாக ஒரு அரசு பொறியியற் கல்லூரி தொடங்கப்பட்டது.

பல்கலைப் பாடப் பிரிவுகளைத் தொடங்குதல்.

3. எந்தெந்தப் பாடங்களில் பயிற்சி பெற்றவர்கள் தற் போது தொழில் துறையில் தேவையோ அதைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆண்டுதோறும் பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் வேலை வாய்ப்புக்கு இசைந்த புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படுகின்றன. 1980–81, 1981–82 ஆண்டுகளில் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப்பட்டன :—

பட்டய மேற்படிப்புகள் :

- வார்ப்படப் பொறியியல்.
- கட்டட அமைப்புத் தொழில் நுட்பவியல்
- தொழில் முறை மின்னணுவியல்
- இயந்திரப் பராமரிப்பு.
- உற்பத்திப் பொறியியல்.

பட்டயப் படிப்புகள் :

- குளிர்ப்பதன முறை மற்றும் குளிர் வசதி முறை.
- உற்பத்திப் பொறியியல்.
- மின்னணுவியல்.

விருப்பப் பாடங்கள் :

- நவீன வேளாண்மைக் கருவித் தொழில் நுட்பவியல்.
- தொழில் முறை மின்னணுவியல்.
- கருவியியல்.

4. 1982–83-ல் பல்தொழிற் பயிலகங்களில் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப்படும் :—

பட்டய மேற்படிப்புகள் :

| | |
|---|---|
| மைய பல்தொழில் பயிலகம், சென்னை. அரசு பல்தொழில் பயிலகம், வேலூர். | கருவி நுட்பவியல். வார்ப்படப் பொறியியல். |
| நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி. | தொழில்முறைப் பொறியியல். |

பட்டயப் படிப்புகள் :

| | |
|---|---|
| பக்தவத்சலம் பல்தொழில் பயிலகம், காஞ்சிபுரம். | மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்புப் பொறியியல். |
| அரசு பல்தொழில் பயிலகம், நாகர் கோவில். | இயந்திர வடிவமைப்பு மற்றும் இயந்திரப்பட வரைவு (மகளிருக்கு) |

விருப்பப் பாடங்கள் :

| | |
|---|---|
| இராசகோபால் பல்தொழில் பயிலகம், குடியாத்தம். | பவர் சிஸ்டம். |
| பி.ஏ.சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசபாளையம். | தொலைக்காட்சி பற்றிய அடிப் படைத்தொழில் நுட்பமும் பராமரிப்பு முறைகளும். |

பல்தொழில் பயிலகங்களுக்குக் கூடுதல் வசதிகள், அவற்றின் தரத்தை உயர்த்துதல்.

5. சென்னை மையப் பல்தொழில் பயிலகத்தில் 1982–83-ல் மைக்ரோ பிராஸசர் அடிப்படையில் அமைந்த மின் கணக்கிட்டுப் பொறி ஒன்று அமைக்கப்படும். காரைக்குடி, அழகப்பா பல்தொழில் பயிலகத்திற்குப் கூடுதல் கட்டிடமும் மதுரை, தமிழ்நாடு பல்தொழில் பயிலகத்தின் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டுக் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்



தொட்டியும் கட்டப்படும். பல்தொழில் பயிலக பாடத் திட்டங்களை வகுக்கும் மையம் ஒன்று 1982–83-ல் தொழில் நுட்ப கல்வி இயக்கத்தில் தனியாக அமைக்கப்படும். பெரியார் மாவட்டம், அத்தானியிலுள்ள சக்தி தொழில் நுட்பப் பயிலகத்தில் மாணவர், விடுதி கட்ட 1982–83-ல் ரூ. 2 இலட்சம் கடனாக வழங்கப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள் :

6. 1982–83-ல், பொறியியற் கல்லூரிகளில் பின்வரும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்படும்.

| | |
|---|---|
| அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, கரைக்குடி. | நுண் அலை, மற்றும் ஒளி அலை பொறியியல். |
| அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர். | செயல்முறை வேதியியல். |
| கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர். | கணக்கீட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு. |

7. கணக்கீட்டுப் பொறிகளை பயன்படுத்தும் பொருட்டு மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சியளிப்பதற்காக 1982–83-ல் சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ. 4.50 இலட்சத்தில் ஒரு சிறிய கணக்கீட்டுப் பொறி அமைக்கப்படும். ஒரு கல்லூரிக்கு ரூ. 1 இலட்சம் என்ற விகிதத்தில் செலவிட்டு 3 தனியார் பொறியியற் கல்லூரிகளின் நூலக வசதிகள் மேம்படுத்தப்படும். 1982–83-ல் கோவை அரசினர் பொறியியற் கல்லூரிக்கான மாணவர் விடுதி கட்டப்படும். மேலும் காரைக்குடி ஏ. சி. தொழில் நுட்பக் கல்லூரிக்கான குடிநீர் வசதியை மேம்படுத்தும் பணியும் 1982–83-ல் மேற்கொள்ளப்படும். அரசினர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு நவீன பயிற்றுங் கருவிகள் வழங்க 1982-83-ல் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக் கழகம் :

8. பொறியியலிலும் தொழில் நுட்பத்திலும் தரமான உயர் கல்வி தரும் ஒரு சிறந்த மையத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் 4—9—1978 அன்று அண்ணா பல்கலைக் கழகம்சென்னை

யில் நிறுவப்பட்டது. பொறியியல் கல்லூரி, கிண்டி; ஏ. சி. தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த சென்னைப் பல்கலைக் கழகத் தொழில் நுட்பத் துறைகள்; அப்பல்கலைக் கழகக் கட்டிடக் கலை—நகர்ப்புறத் திட்டப் பள்ளி; சென்னை தொழில் நுட்ப நிறுவனம், குரோம்பேட்டை ஆகிய நான்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்து அண்ணா பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 3,900-க்கும் அதிகமாகும். அவர்களில் பட்ட வகுப்புகளில் 3,255 பேரும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் 686 பேரும் பயிலுகின்றனர். இவ்வெண்ணிக்கையில் 300 மாணவியரும் அடங்குவர். இப்பல்கலைக் கழகத்தில் 21 பட்ட வகுப்புப் பாடமுறைகள், 31 பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள், 7 பட்ட மேற்படிப்புக்கு உயர்ந்த நிலையில் பட்டயப் படிப்பு பாடமுறைகளும் உள்ளன. கணிதம் இயல்பியல், வேதியியல் ஆகியவற்றில் எம்ஃபில், படிப்பதற்கான வசதிகளும், பொறியியல், தொழில் நுட்பம், அறிவியல் ஆகிய துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன. நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் ''எத்தனால்'' ஐக் கொண்டு தானியங்கி உந்து வண்டிகளை இயக்குதல் போன்றவற்றில்—ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சக்திவள ஆதாரங்கள் கட்டிடத் தொழிலியல் ஆகிய துறைகளில் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக் கழகத்துக்கு திட்டமல்லாத மானியமாக ரூ. 180 லட்சம் வழங்க 1982-83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியையும் பெற்று, மேலும் பல வளர்ச்சிப் பணிகளை அண்ணா பல்கலைக் கழகம் மேற்கொள்ள வகை செய்யும் பொருட்டு திட்ட மானியமாக ரூ. 62 இலட்சம் தரவும் 1982—83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வரசின் நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக் கழகம் ''தொலைவிலுணரும் ஆராய்ச்சி நிலையம்'' (Remo e Sensi g Cen re ) அமைக்க அரசு ஏற்பளித்துள்ளது. பூமியிலுள்ள பல வகையான கனிமம் போன்ற மூலப் பொருட்களை ஆய்வு



செய்து கண்டறிந்து, கணக்கெடுத்து, வகைப்படுத்தி பயன் படுத்தும் பணிகளுக்கு இந்நிலையம் உதவி புரியும். இதனால்வேளாண்மை, கனிமப் பொருள்களைக் கண்டு பிடித்துக் கணக்கெடுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் இம்மாநிலத்தில் உள்ள மூலப் பொருள் ஆதாரங்களை மிகு பயன் விளையும் வகையில் பயன்படுத்த இயலும்.

இதர நிறுவனங்கள் :

10. திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியற் கல்லூரிக்கு மானியமாக ரூ. 28 இலட்சமும், சென்னையில் உள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1982-83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் அமைந்துள்ள உணவுத் தொழில் பயிற்றகம் 1981—82 லிருந்து செயல்பட்டு வருகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங்கள் :

11. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங்கள் குறித்த திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கவும் அவற்றை அமைக்கும் பணியினை ஒருங்கிணைத்துக் கண்காணித்து வரவும் 1982 சனவரியில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

12. தேசிய அறிவியல் அருங்காட்சியகக் குழு இந்தியாவில் மொத்தம் அமைக்கவிருக்கும் மாவட்ட அறிவியல் மையங்கள் ஐந்தில் ஒன்றினை திருநெல்வேலியில் அமைப்பதற்கு இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. திருநெல்வேலியில் மாவட்ட அறிவியல் மையம் நிறுவுவதற்குத் தேவையான செலவினத்திற்கு இவ்வரசு தன் நிதி வளத்திலிருந்து ஏற்பளித்தும் உள்ளது.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

(1) விளையாட்டும், உடற்பயிற்சிக் கல்வியும் :

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1982—83ல் ரூ. 139 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்திற்கும் மாவட்ட விளையாட்டு அலுவலகங்களுக்கும் 1982—83-ல மேலும் சிலகூடுதல் பணியிடங்கள ஏற்படுத்தப்பட்டு அவை வலுவாக்கப்படும்.

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும் :

2. 1980–81ஆம் ஆண்டில் சென்னை (ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி, கோயம்புத்தூர் (பெரிய நாய்க்கன் பாளையம் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி) அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி) ஆகிய மூன்று இடங்களில் தொடங்கப்பட்ட விளையாட்டுப் பள்ளிகள் நன்கு செயல்பட்டு வருகின்றன. அவை மூன்றிலும் சேர்த்து ஆண்டு தோறும் மொத்தம் சேர்க்க அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 175 ஆகும். 1982–83-ல் கோயம்புத்தூர் (பீளமேடு) பி.எஸ். ஜி. ஆர். பெண்கள் உயர்நிலைப்பள்ளியைச் சார்ந்து மாணவியர் விளையாட்டுப் பள்ளி ஒன்று புதிதாகத் தொடங்கப்படும். அப்பள்ளியில் 50 மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

3. 1980–81-ல் மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களில் விளையாட்டுகளில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 30 பேர்கள் பயன் பெறுகின்றனர், 1982–83ல் இவ்விடுதிகள் ஒவ்வொன்றிற்கும் பயிற்றுநர்கள் இருவர் வீதம் நியமனம் செய்யப்பட்டு இவ்விடுதிகள் வலுப்படுத்தப்படும்.

விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :

4. இராமநாதபுரம், நீலகிரி ஆகிய மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்த வெளி விளையாட்டரங்கங்கள் ஏற்கனவே உள்ளன. அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1982–83-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் ஒன்று அமைப்பதற்கு அரசு மானியம் அளிக்கப்படும். வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1982–83-ல் மேலும் ஒரு மாவட்டத் தலைமையிடத்தில் நீச்சல் குளம் கட்ட மானியம் தர ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



விளையாட்டில் சிறந்த இளஞ்சிறாரைத் தேர்ந்தெடுத்தல் பயிற்றுதல்.

5. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர் சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமான பயிற்சியளித்து அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை ஏற்கனவே ஒரு திட்டத்தினை நடத்தி வருகிறது. 1982–83-ல் இத்திட்டம் இளஞ்சிறார் நிலைக்கும் விரிவாக்கப்படும். அதன் மூலம் விளையாட்டில் ஆர்வம் மிக்க இளஞ்சிறார்களை பாலர் பள்ளி நிலையிலேயே தெரிந்தெடுத்து, அவர்களுடைய விளையாட்டுத் திறன் பேணி வளர்க்கப்படும். இக்குழந்தைகள் பின்னர் பள்ளிகளில் சேரும்பொழுது விளையாட்டில் சிறந்த மாணவர்களாக கருதப்பட்டு தொடர்ந்து ஊக்குவிக்கப்படுவர்.

6. 1982–83-ல் இத்துறை செயற்படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் சில பின்வருமாறு :— ஊரக விளையாட்டு மையங்கள் தொடங்குதல் ; குழந்தைகளுக்கும் மாணவரல்லாத இளைஞர்களுக்கும் பயனளிக்கும் வகையில் மாவட்ட விளையாட்டுக் குழுக்களுடன் இணைந்த விழைபணி (Hobby) மையங்கள் எட்டு அமைத்தல், தனியார் விளையாட்டுக் குழாம்கள் நிறுவனங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் வாங்கிட மானியம் அளித்தல் முதலியனவாகும்.

(i) சாரணர்—சாரணியர்

7. தமிழ்நாட்டில் தற்போது 1·42 இலட்சம் சாரண சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண—சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். குடியரசுத் தலைவரின் 20-வது சாரண—சாரணியர் பேரணி வெகு சிறப்பாகச் சென்னையில் அண்மையில் நடைபெற்றது. அவ்வமயம் சாரண—சாரணியர் இயக்கத்தின் தலைசிறந்த விருது தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாநில முதல்வர்களுள் நமது மாநில முதல்வருக்கே இவ்விருது முதற்கண் கிடைத்துள்ளது.

8. தமிழ்நாடு சாரண-சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியம், 1981–82-ஆம் ஆண்டு முதல் ரூ. 30,000-லிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாரண—சாரணியருள் வசதிக்குறைவான குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இலவசமாகச் சீருடை வளங்குவதற்காக 1981-82-ல் ரூ. 5 இலட்சம் செலவிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மாநில மட்டத்தில் சாரண—சாரணியர் அவ்வப்பொழுது முகாம் நடத்திக்கொள்வதற்கான 21 ஏக்கர் நிலப் பகுதி ஒன்றை செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆலத்தூர் என்னுமிடத்தில் மாநில அரசு வழங்கியுள்ளது. மாவட்டங்களிலும் முகாம் நடத்துவதற்காக இத்தகைய இடங்கள் ஒதுக்கப்படும்.

### (iii) தேசிய மாணவர் படை.

9. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்கத் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு :

| | பிரிவுகள்/ படைகள். | அலுவலர்கள். | மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு— | | | |
| மாணவர் .. .. | 45 | 218 | 17,370 |
| மாணவியர் .. .. | 5 | 43 | 3,680 |
| இளநிலைப் பிரிவு— | | | |
| மாணவர் .. .. | 616 | 616 | 61,650 |
| மாணவியர் .. .. | 51 | 51 | 5,200 |
| மொத்தம்.. | 717 | 928 | 87,900 |

1982-83-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 138 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள்—அமைச்சுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.



### (iv) தேசியப் பணித் திட்டம்.

10. 1981-82 நிலவரப்படி, தமிழ்நாட்டிலுள்ள தேசியப் பணித் திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :

| | பங்கு பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. .. | 40,000 | 20,000 |
| மேல்நிலைப் பள்ளிகள் (மேல் நிலைப்பள்ளி வகுப்புகள்). | 10,000 | 5,000 |
| மொத்தம்.. | 50,000 | 25,000 |

தேசியப் பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 60-ம் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ரூ. 80-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1982-83-ல் மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும்.

11. 1982-83-ல் இத்திட்டத்தினை மேலும் 10,000 கல்லூரி மாணவர்களுக்கும் மேலும் 10,000 மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் விரிவாக்குவதற்கு மைய அரசு ஏற்பளித்துள்ளது.

12. மாணவர்கள் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு, அதன் மூலம் சமுதாய வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினைத் தேசியப்பணித் திட்டம் நல்குகிறது. முதன் முதலாக 1980–81-இல் இத்திட்டம் மேல் நிலைப்பள்ளிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. தேசிய மாணவர் படை சாரண-சாரணியர் இயக்கம் ஆகியவற்றோடு இத்திட்டமும் தமிழ்நாட்டு மாணவர்கள் சமுதாயத் தொண்டில் பங்கேற்கும் வாய்ப்புக்களை நல்ல வண்ணம் அளித்து வருகிறது.

## IX நூலகங்கள், ஆவணக் காப்பகம், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை.

### (ix) பொது நூலகங்கள்.

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3.34 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. இதன் உறுப்பினர்கள் சுமார் 15,590 பேராவர். அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி, இந்நூலகம் நவீனமாக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் வசதிக்காகத் தனியாக பாட புத்தகப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புத்தகம் பழுதுபார்த்தல் கட்டடஞ் செய்தல் ஆகியவற்றுக்கான பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந் நூலகத்திற்கு புத்தகங்கள் மற்றும் மரச் சாமான்கள் வாங்குவதற்கும், பிரதி எடுக்கும் நிழற்படக்கருவி ஒன்று வாங்குவதற்கும் சேர்த்து 1982–83-இல் மொத்தம் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. 1977 ஆகஸ்ட் முதல் நாகர்கோவிலில் உள்ள கவிமணி நிலைய நூலகமும், பொது நூலக இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டம் தவிர, பிற மாவட்டங்கள் அனைத்திலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 15 நூலக ஆணைக் குழுக்கள் உள்ளன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 15 மாவட்ட மைய நூலகங்களும், 1,459 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட நூலக ஆணைக்குழு 1981 செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் நூலக ஆணைக்குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும். தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகம் ஒன்று அமைப்பதற்காக 1982–83-இல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. நூலக ஆணைக் குழுக்களின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களிலும் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 85 இலட்சமாகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 9.35 இலட்சம். உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இந்நூலகங்களிலுள்ள நூல்களைப் பயன்படுத்தலாம். நூலகப் பணியிலுள்ளவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3,500 ஆகும்,



5. 1980–81-இல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்[illegible] மேல் வரியாக ரூபாய் 127 இலட்சம் பெற்றன (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூபாய் 30 இலட்சம் உட்பட), சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்கு சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. 1980–81-இல் நூலக ஆணைக் குழுக்களுக்கு அவ்வாறு வழங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு ரூபாய் 16 இலட்சமாகும்.

6. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மேற்கொண்டுள்ள கட்டிட அமைப்புத் திட்டத்தின் கீழ், வட்டார நூலகங்கள் 3-க்கும் கிளை நூலகங்கள் 3-க்கும் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சேலத்தில், மாவட்ட மைய நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், மாவட்ட மைய நூலகத்திற்காக ஒரு பலமாடிக் கட்டிடம் கட்டப்படும். 1981–82-இல் ஒதுக்கிய ரூபாய் 5 இலட்சம் அரசு மானியத்தையும், 1982–83-இல் ஏற்பளிக்க இருக்கும் ரூபாய் 5 இலட்சம் அரசு மானியத்தையும் பயன்படுத்தி, மாவட்டங்களிலுள்ள 20 கிளை நூலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தர, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. ஓய்வூதியம் மற்றும் குழு ஈட்டுறுதித் திட்டச் சலுகைகள் ஏற்கெனவே நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

8. அண்மையில் நூலகத்துறை மேற்கொண்டிருக்கும் புதிய பணிகளில் ஒன்று சென்னையில் வட்டார நூலகங்களிலும் மாவட்டங்களில் மாவட்ட மைய நூலகங்களிலும் மாதந்தோறும் குழந்தைகளுக்கேற்ற சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தலாகும். மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களின் பணியை (படிக்கும் போதே பணம் ஈட்ட வகை செய்யும் நோக்குடன்) பயன்படுத்தி மாவட்ட மைய நூலகங்கள் புத்தகங்களை நூலக உறுப்பினர்களுக்கு கட்டண அடிப்படையில் வாரம் ஒரு முறை அவரவர் வீட்டிற்குச் சென்று கொடுத்துத் திரும்பப் பெறும் திட்டம் மற்றொரு புதிய பணியாகும்.

### (ii) ஆவணக்காப்பகம்.

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணக் தொகுப்புக்களைக் கொண்ட நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிர்வாகத்திற்கும் பயன்படுகிறது. அதனுடைய பாதுகாப்பில் அரசு ஆவணங்கள், துறைத் தலைவர்கள் சிலர் ஆவணங்கள், பிற ஆவணத் தொகுப்புகள் ஆகியவை உள்ளன. இந்த ஆவணங்களில் ஒரு பகுதி மூன்று நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவையாகும். நவீன முறைகளின்படி ஆவணங்கள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. ரூபாய் 6.50 இலட்சம் செலவில் நுண் நிழற்படக் கருவி ஒன்றினை நிறுவ 1981—82-இல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில், ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வட்டார ஆவண மையங்கள் .—

2. வரலாற்று நிர்வாகச் சிறப்பு மிக்க பல ஆவணங்கள் பல்வேறு மாவட்ட அரசு அலுவலகங்களில் உள்ளன. அவற்றை ஆங்காங்கு வட்டார மையங்களில் சேகரித்து விஞ்ஞான முறையில் பாதுகாத்து வரும் நோக்குடன் முதற்கண் மதுரை, சிதம்பரம், கோயம்புத் தூர் ஆகிய இடங்களில் வட்டார மையங்கள் அமைப்பதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டார ஆவணங்கள் தென்னிந்திய வரலாறு, மாவட்டங்களில் மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்து எழுத பெரிதும் உதவும்.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.—

3. 1973ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று, சமுதாய விஷயங்கள் குறித்த ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் (இரண்டாண்டு கால) ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் நான்கினை வழங்கி வருகிறது. 1981—83-ஆம் ஆண்டுகளுக்கான இப்பணியிடங்கள் விரைவில் வழங்கப்படும்,



விவரச் சுவடிப் பிரிவு.—

4. மாவட்ட விவரச் சுவடிகளைத் திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான விவரச் சுவடிகள் பிரிவு இத்துறையின்கீழ் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடி அச்சு வேலை முடியும் தருவாயில் உள்ளது. தர்மபுரி மாவட்ட விவரச் சுவடியின் இறுதி வடிவம் விரைவில் அச்சுக்கு அனுப்பப்படும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான விவரச் சுவடி வரைவுகளின் இறுதி வடிவங்கள் ஆயத்தமாகின்றன.

பயிற்சி.—

5. அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த 15 நாள் பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை 11 பயிற்சிகள் நடந்து (50 அலுவலகங்களைச் சார்ந்த) 164 பேர் பயன்பெற்றுள்ளனர். இப்பயிற்சி 1982—83-லும் தொடர்ந்து நடைபெறும்.

வெளியீடுகள்.—

6. ஆவணக்காப்பகத்தின் வெளியீட்டுப் பணியின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்புக்கள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. '' சிறைகளிலிருந்து வெளிவரும் கைதிகளுக்கு உதவுவதற்கான மாநிலச் சங்கம் '', '' நீல் சிலை நீக்க மறியல் போராட்டம் '', '' கல்வி '', '' திருநெல்வேலிக் கலவர சதி வழக்கும் ஆஷ் கொலையும் '', '' இந்தியாவில் வழக்கறிஞர் சங்கங்கள் '', '' நிதி '' ஆகிய பொருள்கள் பற்றிய ஆவணத் தொகுப்புக்களை அச்சிட்டு வெளியிடும் பணிகள் பல்வேறு நிலைகளிலுள்ளன.

ஆவணக் காப்பக நூலகம்.—

7. தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம், நிறைய புத்தகங்களையும் ஆவணங்களையும் கொண்ட மாபெரும் நூலகங்களில் ஒன்றாகும். மற்ற பொது மற்றும் கல்லூரி/பல்கலைக் கழக நூலகங்களைப் போன்று அல்லாமல் புத்தகங்கள் மட்டுமின்றி ஆவணக் காப்பக நூலகத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் வெளியீடுகள்—சென்சஸ் அறிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், நிருவாக அறிக்கைகள் போன்றவை—ஏராளமாக தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந் நூலகத்தில் நாள்தோறும் சுமார் 100 புத்தகங்கள் வரப்பெற்று வகைப்படுத்தப்பட்டு, பட்டியலிடப் பெறுகின்றன.

(iii) அருங்காட்சியகங்கள்

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றுமாக, 1982–83-இல் மாவட்ட அருங்காட்சியகங்கள் மேலும், இரண்டு அமைக்கப்படும்.

2. சென்னையில் ரூபாய் 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் கட்டும் பணியும் சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக்கூடத்துக்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன.

(iv) தொல்பொருள் ஆய்வுத்துறை.

மாநில தொல்பொருள் ஆய்வுத்துறை பண்டைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் காட்சியகங்கள் அமைத்தல்; தமிழகத்தின் பண்டைய வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்தல்; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாய்வு செய்தல்; பண்டைய தமிழ் ஓலைச் சுவடிகளைச் சேகரித்து பாதுகாத்து வெளியிடுதல் ஆகிய தனது பணிகளை முனைப்புடன் செய்து வருகிறது.

2. அண்மையில் கோவாவிலுள்ள ''தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு'' இணைந்து இத்துறை காவிரிப்பூம்பட்டினத்திற்கு அப்பாலுள்ள கடலுக்கடியில் நடத்திய தொல்பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளை தந்துள்ளது. தரங்கம்பாடி வரை நடந்த இந்த ஆய்விலிருந்து பூம்புகார் வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும் மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

3. பண்டைய வரலாற்றுச் சின்னங்களை பழுதுபார்த்து பேணி வரும் பணி தொடர்ந்து விரிவாக மேற்கொள்ளப்படும். கங்கை கொண்ட சோழபுரம், கோவலன்பொட்டல் ஆகிய இடங்களில் இத்துறை மேற்கொண்டுள்ள அகழ்வாய்வுகள் தீவிரமாக்கப்படும். வரும் 1982–83 ஆம் ஆண்டில் இத்துறை பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டியுள்ளது—அதாவது ஆசிரியப் பெருமக்கள் 200 பேர்களுக்கு கல்வெட்டு, பண்டைய வரலாறு ஆகியவை குறித்து பயிற்சி அளித்தல்; அண்மையில் அகழ்வாய்வு மற்றும் கல்வெட்டுக்கள் மூலம் வெளியாகியுள்ள



வரலாற்றுச் செய்திகளை அறிஞர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் மாவட்டக் கருத்தரங்குகள் நடத்துதல்; சுற்றுலாத்துறையுடன் இணைந்து செஞ்சிக் கோட்டை போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சுற்றுலா மையங்களாக மாற்றுதல்; தமிழக வரலாறு பற்றிய புதிய கண்டு பிடிப்புகளை அறிஞர்கள் ஆராய்ந்து கல்வித் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்தல்; கல்வெட்டு ஆராய்ச்சியை தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேலும் விரிவாக மேற்கொள்ளுதல்; தமிழக கோயில்களிலுள்ள பண்டைய ஓவியங்களை வேதியியல் முறையில் தூய்மைப்படுத்தி பாதுகாக்கும் முயற்சிகளை விரிவாக்குதல்—ஆகிய இந்த புதிய பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் இத்துறையிடம் இருந்து வரப்பெற்று ஆய்வில் உள்ளன.

X. தமிழ் வளர்ச்சி.

தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981–82 ஆம் ஆண்டில் 17 துறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அது மேலும் பல துறைகளுக்கு விரிவாக்கப்படும்.

2. 1867—1935 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 19 தொகுதிகளாக இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. 1935-க்குப்பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி, தொடருகிறது.

3. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. 1981–82-ல் இத்திட்டத்தின் கீழ் 7 புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி தரப்பட்டது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின் கீழ் 1978—80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில், சிறந்தவற்றுக்கு 1982 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று (ஜனவரி 15) விருதுகள் அளிக்கப்பட்டன.

தமிழ்நாட்டு வரலாறு.

5. தமிழ்நாட்டு வரலாற்றில் தொல் பழங்காலத்தைப்பற்றிய முதல் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும்.

மொழி பெயர்ப்புப் பணி.

6. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின் கீழ் இதுவரை மொழி பெயர்ப்பு நூல்கள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும். மேலும் நூல்கள் மொழி பெயர்ப்புக்கு எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

7. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று ; சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கிறித்துவ இலக்கிய வளர்ச்சிக்கு அறக்கட்டளை ஒன்று ; சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக ஒன்றும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக ஒன்றுமாக இரண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் '' விருது '' ரூபாய் 10,000, இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ். டி. சுந்தரம், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு. வி. க. விருது, ரூபாய் 10,000 இதுவரை திருவாளர்கள் நாரண துரைக் கண்ணனுக்கும், அ. கி. பரந்தாமனாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்.

8. மாத வருமானம் ரூபாய் 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூபாய் 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 120 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.



பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

9. பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24-க்கு தமிழில் பகுதிநேர பட்டய வகுப்புகள் தொடங்குவதற்காக இதுவரை நிறுவனத்துக்கு ரூபாய் 15,000 வீதம், மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள '' திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி '' யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மானியம் தரப்பட்டுள்ளது.

10. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் கற்றுக் கொள்ளப் பயன்படுத்தக்கூடிய பாடங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வெளியிடும் பணியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி.

11. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல், மடலத்தின் முதற் பகுதி—மொழியியலறிஞர் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்தது—விரைவில் வெளியிடப்படும். அவ்வகர முதலியின் மற்றப் பகுதிகளைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

12. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 19 ஆராய்ச்சி. அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதி நேர மாணவர்கள், ஆகியோர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை இந் நிறுவனம் வெளியிட்டு வருகிறது. வெளிநாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் இவ்வாண்டு தமிழ் கற்றுத் தந்தது. தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திர கருத்தரங்குகளுடன் இந்நிறுவனம் இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச்செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981—82-ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 44 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந் நிறுனத்தில் ''சுவடியியல்'', ''மொழிபெயர்ப்பியல்'' எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

13. இவ்வாண்டு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு புலங்களுடனும், துறைகளுடனும் செவ்வனே செயல் படுகிறது. அண்மையில் வெளியீட்டுப் பிரிவு ஒன்று தொடங்கப் பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் இப்பல்கலைக் கழகத்துக்காக, கையகப்படுத்தப் பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வேலை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது.

உலகத் தமிழ்ச் சங்கம்.

14. மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்படும். இச்சங்கம் நிறுவுவதற்கான நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணி புரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச்சங்கம் நிறுவ 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

XI. தமிழ்க் கலைகளும் பண்பாடும்.

தமிழ்நாட்டின் கலைகளை ஊக்குவிக்கவும், மேம்பாடு அடையச் செய்யவும், அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1981 ஜூலை மாதம் அரசு தலைமைச் செயலகத்தில் செய்தி, சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத்துறை என்று ஒரு துறை உருவாக்கப்பட்டது. அத்துறையின் மேற்பார்வையில் தமிழ் பழங்கலை இயக்ககம் என்ற பெயரில் ஒரு புதிய துறையும் உருவாக்கப்பட்டு ஒரு தனி இயக்குநரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்.

2. கடந்த 26 ஆண்டுகளாக, இயல் இசை, நாடகம், நாட்டியக் கலைகளுக்குத் துணையாக இருந்து நல்ல பல திட்டங்களைத் திட்டிச் செயல்பட்டு வரும் இம்மன்றம் இவ்வாண்டும் (1981–82) தனது முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தியது. இவ்வாண்டு கலைத் துறையில் புகழ்பெற்ற 33 பெரு



மக்களுக்கு கலைமாமணி விருது அளித்து கௌரவித்தது. இளங்
கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சுமார் 80 கலை
ஞர்களின் நிகழ்ச்சிகளை 16 சபாக்களில் நடத்த உதவி அளித்
தது.

3. இம்மன்றத்தின் பணியினை மேலும் பரவலாக்கும்
வகையில் மாவட்டந்தோறும் கலை மன்றங்கள் அமைக்க அரசு
கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இதன் நோக்கம் அந்
தந்த மாவட்டத்தில் உள்ள கலை வடிவங்களை ஆய்ந்து,
தேர்ந்தெடுத்து, அவை அழியாவண்ணம் பேணிக் காப்பதும்
மாவட்டங்களிலுள்ள இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பதும்
ஆகும். இப்பணிக்கு ரூ. 1.50 இலட்சம் வரும் நிதியாண்டில்
செலவிடப்படும்.

தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு.

4. தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு தனது வழக்க
மான திட்டங்களுடன் இவ்வாண்டு பின்வரும் முக்கியத் திட்டங்
களையும் செயல்படுத்தியது.—

(1) பள்ளிகளில் உள்ள ஓவிய ஆசிரியர்களுக்கு இன்றைய
ஓவியச் சூழலில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களைத் தெரியப்
படுத்தும் வகையில், தமிழ்நாடு கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறு
வனத்துடன் சேர்ந்து நடத்தி வரும் ஓவிய ஆசிரியர் மறு பயிற்சித்
திட்டம் குறிப்பிடத்தக்கது. இதுவரை சென்னை, வேலூர்
மற்றும் கோயம்புத்தூர் கல்வி மாவட்டங்களில் சுமார் 110
ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்
டில் மேலும் பல மாவட்டங்களில் உள்ள ஓவிய ஆசிரியர்
களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

(2) மாநிலங்களிடையே கலைக் கண்காட்சிகள் நடத்
தும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கலைக் கண்காட்சி இராஜஸ்
தானில் ஜெய்ப்பூரிலும், ஒரிஸ்ஸாவில் புவனேஸ்வரத்திலும் நடத்
தப்பட்டது. இக்கண்காட்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

(3) குழுவின் காலாண்டு இதழ் ''நுண்கலை'' வெளியிடப்
பட்டது.

(4) ''ஓவியர் உதவி நிதி'' ஒன்றை நிறுவ அரசு
ரூபாய் ஒரு லட்சம் குழுவிற்கு மானியமாக அளித்துள்ளது.

(5) ஓவியம் நுண்கலைக் கண்காட்சிகளை மாவட்டத்
தலைநகரங்களிலும் சிறிய நகரங்களிலும் நடத்துவதற்காகத்
தக்க வசதிகள் கொண்ட ஒரு பேருந்து தயார் செய்யும் திட்ட
மும் மேற்கொள்ளப்படும். இதற்காக வரும் நிதியாண்டில்
ரூ. 3.90 இலட்சம் ஒதுக்கப்படும்.

## இசைக் கல்லூரிகள்.

6. சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகளும். திருவையாற்றில் உள்ள ஓரியண்டல் கல்லூரியின் இசைப் பிரிவும் இசையையும் பரத நாட்டியத்தையும் பயிற்றுவித்து வருகின்றன. சென்னை இசைக் கல்லூரியில் இட நெருக்கடியைத் தீர்க்க ரூ. 6 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் ஒன்று 1982-83-ல் மேற்கொள்ளப்படும்.

7. அரசு இசைக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் முறை நவீனப்படுத்தப்படும். இசை, நாட்டியக் கலைகளின் நுணுக்கங்களை மாணவர் உணரும் வகையில் இத்துறைகளில் உள்ள மேதைகளைக் கொண்டு அக்கல்லூரிகளில் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளும், விரிவுரைகளும் நடத்தப்படும். அத்தகைய மேதைகள் கலை நுணுக்கத்தை உணர்த்தும் ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள் தயாரிதது அவற்றின் மூலமும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேவார, திருவாசக இசை நிகழ்ச்சிகளையும் இசை மேதைகளைக் கொண்டு நிருபணமாக இசைக் கல்லூரி மாணவர்கள் முன் நடத்துவிக்கவும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.

8. புதியதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பழங் கலை இயக்ககத்தின் முக்கிய குறிக்கோள்கள்—(1) தமிழ்ப் பழங்கலைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து வெளியிடுதலும்; (2) அக்கலைகள் அழியாமல் பாதுகாத்தலும் ஆகும்.

9. மேற்கூறிய குறிக்கோள்களின் அடிப்படையில் 1982-83-ல் இவ்வியக்ககம் கீழ்க்கண்ட புதிய பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:—

(1) மாவட்டம் தோறும் கிராமங்களில் பழக்கத்தில் இருக்கும் அரிய கிராமியக் கலைகளைக் கண்டு ஆராய்ந்து அவற்றின் விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து தமிழக கிராம மக்களின் வரலாறு, கலாசாரம் இவற்றை விளக்கும் கலைக்களஞ்சியமாக வெளியிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கண்டு பிடிக்கப்படும் தொன்மையான கலைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக வரும் நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) பழங்காலத் தமிழ்ச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆயுகிவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தலும், வெளியிடுதலும்.



(3) தமிழ்நாட்டு கிராம இசையோடு தமிழ்ப் பண்முறையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இசைப் பேரறிஞர்களின் இசை நிகழ்ச்சிகளை நாடாவில் பதிவு செய்யும் திட்டம் (டேப் ரிகார்டிங்).

(4) தமிழ்நாட்டின் விலைமதிப்பற்ற கலைப் பொருட்களும், தமிழ் ஓலைச் சுவடிகளும் பிற நாடுகளிலுள்ள பல கலைக்கூடங்களிலும், அரும் பொருட் காட்சியகங்களிலும் இருக்கின்றன. அவற்றைத் திரும்பக் கொணர அல்லது அவ்வோலைச் சுவடிகளை நுண்படம் எடுத்தும், கலைப் பொருட்களுக்கு மாதிரிப் படிவங்கள் பெற்றும் அந்த நுண்படங்களையும் படிவங்களையும் திரும்பக் கொணர நடவடிக்கை எடுக்கப்படும்.

## வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்.

10. வறுமையால் வாடும் ஏறத்தாழ 1,000 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 150 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறுபவர் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிலையைப் பொறுத்து, இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதிய வகையில் மொத்தம் ரூ. 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டில் மேலும் 200 கலைஞர்களுக்குப் புதிதாக நிதியுதவி அளிக்கப்படும்.

11. அரசுக் கலைஞர்களை நியமிக்கும் திட்டமொன்றை இவ்வரசு 1979 முதல் செயற்படுத்தி வருகிறது. 1981 அக்டோபர் முதல் மேலும் பன்னிருவர் அரசு கலைஞர்களாக மூன்றாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இளமையிலேயே நல்ல தேர்ச்சி பெற்றுத் தனக்கென கலைத்துறையில் ஓர் இடத்தினைப் பிடித்துள்ள சிறந்த கலைஞர்களுக்கும் ஊக்க மளிக்கும் வகையில் ''அரசு இளங் கலைஞர்கள்'' மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இணைப்பு 1.

## பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்

(மாணவர்கள் இலட்சத்தில்)

| (1) | 1973-74 (2) | 1976-77 (3) | 1980-81 (4) | 1981-82 (5) |
|---|---|---|---|---|
| **க. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—** | | | | |
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | |
| சிறுவர் .. .. .. | 30.45 | 31.93 | 33.69 | 34.19 |
| சிறுமியர் .. .. .. | 29.79 | 31.23 | 32.95 | 33.43 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 66.64 | *67.62 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 13.71 | 14.37 | 15.16 | 15.39 |
| சிறுமியர் .. .. .. | 13.40 | 14.05 | 14.83 | 15.04 |
| மொத்தம் .. | 27.11 | 28.42 | 29.99 | *30.43 |
| **வயதுத் தொகுதி 14—17/14—16 (1980-81லிருந்து)** | | | | |
| சிறுவர் .. .. .. | 11.31 | 11.86 | 8,54 | 8,74 |
| சிறுமியர் .. .. .. | 11.07 | 11.60 | 8,33 | 8,51 |
| மொத்தம் .. | 22.38 | 23.46 | 16,87 | 17,25 |

* 1981-82-ல் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக்கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-இலும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **உ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—** | | | | |
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | |
| சிறுவர் .. .. .. | 30.64 | 32.02 | 34.80 | 34.97 |
| சிறுமியர் .. .. .. | 23.74 | 25.50 | 28.66 | 29.10 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 63.46 | 64.07 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 11.48 | 12.03 |
| சிறுமியர் .. ... .. | 5.09 | 5.76 | 6.94 | 7.61 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 18.42 | 19.64 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1980-81லிருந்து) | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5.34 | 4.45 | 4.56 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2.68 | 2.28 | 2.57 |
| மொத்தம் | 7·39 | 8.02 | 6·73 | 7·13 |

இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—

| | | | | |
|---|---|---|---|---|
| வயது தொகுதி 6— 11 | | | | |
| சிறுவர் .. .. .. | 100·6 | 100·3 | 103·30 | 120.29 |
| சிறுமியர் .. .. .. | 79·5 | 81·7 | 86·97 | 87·05 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. | 90·2 | 91·7 | 95·22 | 94·76 |
| வயதுத் தொகுதி 11—14 | | | | |
| சிறுவர் .. .. .. | 66·3 | 67·7 | 75·73 | 78·18 |
| சிறுமியர் .. .. .. | 37·9 | 41·0 | 46·79 | 50·60 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52·3 | 54·4 | 61·42 | 64·55 |
| **வயதுத் தொகுதி 14—17/14— 16 (1980–81-லிருந்து)—** | | | | |
| **சிறுவர்** .. .. .. | 43·0 | 44·9 | 52·07 | 52·26 |
| **சிறுமியர்** .. .. | 21·8 | 23·1 | 27·40 | 20·17 |
| **சிறுவரும் சிறுமியரும்** .. .. | 33·0 | 34·1 | 39·90 | 41·36 |

## இணைப்பு 1— தொடர்ச்சி.

பள்ளிக் கல்விபற்றிய விவரங்கள்— தொடர்ச்சி.

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1980–81. (4) | 1981–82. (5) |
|---|---|---|---|---|
| **ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—** | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 26,726 | 27,306 | 27,648 | 27,767 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 5,773 | 5,730 | 5,658 | 5,556 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,030 | 2,069 | 2,168 |
| மேல்நிலைப்பள்ளிகள் .. | .. | .. | 1,300 | 1,405 |
| மொத்தம் .. | 35,322 | 36,066 | 36,675 | 36,896 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10-ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1980–81. (4) | 1981–82. (5) |
|---|---|---|---|---|
| **உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | | |
| முதல் நிலைப் பள்ளிகள் .. | 1,06,332 | 1,11,033 | 1,11,071 | 1,13,036 |
| நடுநிலைப்பள்ளிகள் .. | 66,843 | 67,846 | 69,516 | 66,221 |
| உயர்நிலைப்பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 32,427 | 33,280 |
| மேல்நிலைப்பள்ளிகள் .. | .. | .. | 53,843 | 58,750 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,66,857 | 2,71,287 |

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1980–81. (4) | 1981–82. (5) |
|---|---|---|---|---|
| **ஊ. ஆசிரியர்— மாணவர் விகிதம்—** | | | | |
| (1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 40 | 39 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 33 | 33 | 36 | 38 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 24 | 24 | 23 | 24 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 27 | 27 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 33 | 38 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 31 | 32 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 24 | 24 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 20 | 20 |

1981–82-ல் (1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளிவிவரங்கள்..

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்கள். (இலட்சத்தில்.) (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் : | | | | |
| அரசு .. .. .. .. | 1,445 | | | |
| நகராட்சி .. | 1,107 | 27,767 | 44·72 | 1,13,036 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 20,270 | | | |
| | 4,945 | | | |
| டுநிலைப் பள்ளிகள் : | .. | | | |
| ுரசு .. .. .. .. | 190 | | | |
| ;கராட்சி .. .. .. | 401 | 5,556 | 25.40 | 66,221 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,015 | | | |
| தனியார் .. .. .. .. | 1,950 | | | |
| மொத்தத் தொடக்கப் பள்ளிகள் .. | | 33,323 | 70.12 | 1,79,257 |
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம். | | | | |
| அரசு .. .. .. .. | 1,547 | | | |
| நகராட்சி .. .. .. | 69 | 2,021 | 7.23 | 30,180 |
| தனியார் .. .. .. .. | 405 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 18 | 0.12 | 398 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 50 | 0.22 | 821 |
| சி·பி.எஸ்.ஈ. முதலியன .. .. | | 79 | 0.37 | 1,88 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் .. | | 2,168 | 7.94 | 33,280 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மேல நிலைபள்ளிகள்—சாதாரணம்: | | | | |
| அரசு .. .. .. .. | 639 | 1,288 | 14.45 | 53,734 |
| அரசு (தொழில் நுட்பம்) .. .. | 14 | | | |
| நகராட்சி .. .. .. | 60 | | | |
| தனியார் .. .. .. .. | 575 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 26 | 0.28 | 891 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 33 | 0.31 | 1,252 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் | | 58 | 0.65 | 2,873 |
| மொத்தம்—மேல்நிலைப் பள்ளிகள் | | 1,405 | 15.69 | 58,750 |
| மொத்தம் — உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள். | | 3,573 | 23.63 | 92,030 |
| மொத்தம்—(அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து). | | 36,896 | 93.75 | 2,71,287 |

மாணவர் ... .. .. 53.36 இலட்சம்.
.. .. 40.39 இலட்சம்.

நிருவாகவாரியாக, 1981–82-ல் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விபரங்கள்.

| பள்ளிகளின் வகை. | அரசு. அரசுப் பள்ளிகள். | அரசு. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம் | ஆசிரியர் விபரங்கள். ஆண். | ஆசிரியர் விபரங்கள். பெண். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 6,884 | 67,395 | 9,136 | 29,621 | 1,13,036 | 69,806 | 43,230 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,205 | 27,025 | 7,035 | 28,956 | 66,221 | 34,281 | 31,940 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 21,808 | .. | 1,455 | 10,017 | 33,280 | 21,492 | 11,788 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 25,503 | .. | 3,293 | 29,954 | 58,750 | 36,530 | 22,220 |
| மொத்தம் .. | 57,400 | 94,420 | 20,919 | 98,548 | 2,71,287 | 1,62,109 | 1,09,178 |

# இணைப்பு II.

## கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1973–74. | 1976–77. | 1980–81. | 1981–82. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை.— | | | | |
| (1) புதுமுக வகுப்பு .. .. | 72,646 | 84,257 | .. | .. |
| (2) பி.ஏ. .. .. .. | 51,698 | 44,697 | 53,903 | 58,902 |
| (3) பி. எஸ்.சி. .. .. | 49,057 | 48,110 | 65,980 | 72,934 |
| (4) பி. காம். .. .. .. | 14,859 | 19,195 | 23,834 | 26,400 |
| (5) பட்ட மேற்படிப்பு .. .. | 6,993 | 7,043 | 10,994 | 12,904 |
| மொத்தம் .. | 195,253 | 2,03,302 | 1,54,711 | 1,71,140 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை.— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. .. | 2,969 | 3,733 | 3,857 | 4,031 |
| (2) தனியார் கல்லூரி சென்னை | 7,090 | 7,883 | 8,713 | 8,775 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,570 | 12,806 |



| | | | | |
|---|---|---|---|---|
| கல்லூரிகள் எண்ணிக்கை.— | | | | |
| (1) அரசு .. .. .. | 51 | 51 | 51 | 52 |
| (2) தனியார் .. .. .. | 127 | 138 | 136 | 135 |
| மொத்தம் .. | 178 | 189 | 187 | 187 |

* சிவகங்கை ஆர்.டி.எம். கல்லூரியை 1–7–1981 முதல் அரசு ஏற்றுள்ளது.

### பிற கல்லூரிகளுக்கான 1981–82 ஆம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) கல்வியியற் கல்லூரிகள் .. | 7 | 16 | 2,935 | 231 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 3 | 330 | 33 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,665 | 143 |
| (4) சமுதாயப் பணிப் பள்ளி .. | .. | 2 | 240 | 18 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம். | .. | 1 | 623 | 76 |
| (6) இசைக் கல்லூரிகள் .. .. | 2 | .. | 479 | 43 |
| மொத்தம் .. | 9 | 37 | 6,272 | 544 |

## இணைப்பு III.

### 1981–82 இல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. (2) | மொத்த மாணவர் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| **1.** பொறியியற் கல்லூரிகள்.— | | |
| (1) அரசு .. .. .. | 4 | 8,197 (for (1) and (2)) |
| (2) தனியார் .. .. | 3 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. | 7 | 7,300 |
| **2.** பாலிடெக்னிக்குகளும், சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்.— | | |
| (1) அரசு .. .. .. | 20 | 21,366 (for (1) to (3)) |
| (2) தனியார் .. .. .. | 29 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. | 1 | |
| **3.** தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்.— | | |
| (1) அரசு .. .. .. | 11 | 1,660 (for (1) and (2)) |
| (2) தனியார் .. .. .. | 3 | |
| மொத்தம் .. | 78 | 38,543 |

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 43D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jeyakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

8
392
R. F
116 RV

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.